T.D.R.C No 2412
R.R. No 201-1-1876
119927

T.D. R.C No 2412

R.R. No 207-1.76

ஸ்ரீ

ஸ்ரீராமஜயம்.

ஸ்ரீசீதாசமேதஸ்ரீராமசந்திரபரப்பிரம்ஹணேநமஃ.

# ஸ்ரீமத்கம்பராமாயணவசனம்.

பாலகாண்டம், அயோத்தியாகாண்டம், ஆரணியகாண்டம்,

கிஷ்கிந்தாகாண்டம்,

சுந்தரகாண்டம், யுத்தகாண்டம், உத்தரகாண்டம்

இவைகள்

தமிழ்ச்சங்கத்தலைமைப்புலமைத்

திருச்சிற்றம்பலதேசிகரவர்களாற்செய்த

வசனத்திற்கிணங்கப்பரிசோதிக்கப்பட்டு

செ. செங்கல்வராயநாயகரவர்களால்

பால்குரிகி

குமாரையரவர்களது

சென்னைக்

கலாநிதி அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

யுவவருஷம்-கார்த்திகைமாதம்.

1875.

207 1-76 ௭௫௪.௧௧௮ 3412

O-,1 FKA,R:9
M75

11967

ஸ்ரீ
ஸ்ரீராமஜயம்.

# ஸ்ரீமத்கம்பராமாயணவசன கதையினட்டவணை.


| கதை. | பக்கம். |
|---|---|
| **பாலகாண்டம்.** | |
| நூன்முகம். | உ. |
| திருவவதாரம். | அ. |
| கையடை. | ௰. |
| தாடகைவதை. | ௰க. |
| கோமுதி கௌசிகை என்கிற ஆறுகளின் வரலாறு. | ௰ச. |
| மாவலிகதை. | ௰ரு. |
| விஸ்வாமித்திரர்வேள்வி. | ௰சா. |
| தூருவாசன்கதை. | ௰எ. |
| கங்கையின்வரலாறு. | ௰அ. |
| அகலிகையின்வரலாறு. | உ௰. |
| மிதிலைநகரத்தின்காட்சி. | [illegible] |
| காமுகம். | உஎ. |
| எழுச்சி. | உகூ. |
| சந்திரசயிலத்தின் காட்சி. | ஙக. |
| பூக்கொய்தல். | ஙஉ. |
| நீர்விளையாடல். | [illegible] |
| உண்டாடல். | ஙங. |
| எதிர்கொளல். | ஙச. |
| உலாவியல். | ஙரு. |
| கோலங்காணல். | ஙஎ. |
| கடிமணம். | ஙஅ. |
| பரசுராமப்படலம். | சக. |
| **அயோத்தியாகாண்டம்.** | |
| சக்கிரவர்த்தி முடிசூட ஸ்ரீராமனை வேண்டுதல். | சங. |
| மந்திர ஆலோசிக்குதல். | சசா. |
| கைகேசிசூழ்வினை. | சகூ. |
| நகர்நீக்குதல். | ருங. |
| தைலம் ஆட்டுதல். | சாஉ. |
| கங்காநதியைக்காணல். | சாரு. |
| வனம்புகுதல். | சாஅ. |
| சித்திரகூடம். | சாகூ. |
| பள்ளி அடைதல். | எக. |
| ஆறுகாணல். | எரு. |
| குகன்பாதுகைக்காணல். | எஎ. |
| நிலைகண்டுநீக்குதல். | எகூ. |
| **ஆரணியகாண்டம்.** | |
| விராதன்வதை. | அரு. |
| சரபங்கர்வரலாறு. | அஅ. |
| தண்டகாரண்யம். | அகூ. |
| அகஸ்தியனைக்காணுதல். | கூ௰. |
| சடாயுவைக்காணுதல். | [illegible] |
| பஞ்சவடிதீர்த்தத்தைக்காணுதல். | [illegible] |
| சூர்ப்பனகியின்சூட்சி. | [illegible] |
| கரன் தூஷணன் திரிசிரசன் வதை. | ௱. |
| கரன்வதைப்படலம். | ௱எ. |
| சூர்ப்பநகிசூட்சிப்படலம். | ௱கூ. |
| மாரீசன்வதைப்படலம். | ௱௰எ. |
| சடாயுவதைப்படலம். | ௱உக. |
| அயோமுகிப்படலம். | ௱ஙங. |
| கவந்தப்படலம். | ௱ஙஎ. |
| சபரிப்படலம். | ௱ச௰ |
| **கிஷ்கிந்தாகாண்டம்.** | |
| பம்பாநதிப்படலம். | ௱சக. |
| அநுமப்படலம். | ௱சங. |
| நட்புப்படலம். | ௱சரு. |
| மராமரப்படலம். | ௱சஅ. |
| து[illegible]ப்படலம். | ௱சகூ. |
| களன்காண்படலம். | ௱ரு௰. |
| வாலிவதைப்படலம். | ௱ருஉ. |
| அரசியற்படலம். | ௱சாஉ. |
| சரற்காலப்படலம். | ௱சாங. |
| கிஷ்கிந்தப்படலம். | ௱சாசா. |
| வானரத்தானைகாண்படலம். | ௱எங. |
| நாடவிட்டப்படலம். | ௱எரு. |
| பிலம்நீக்குபடலம். | ௱எகூ. |
| ஆறுசெல்படலம். | ௱அஉ. |
| சம்பாதிப்படலம். | ௱அச. |
| மகேந்திரபடலம். | ௱அஅ. |
| **சுந்தரகாண்டம்.** | |
| கடல்தாவுபடலம். | ௱கூ௰. |
| ஊர்தேடுபடலம். | ௱கூரு. |
| காட்சிப்படலம். | உ௱ங. |
| நிந்தனைப்படலம். | உ௱௰. |
| உருக்காட்டுபடலம். | உ௱௰ச. |
| சூடாமணிப்படலம். | உ௱உங. |
| வனபங்கப்படலம். | உ௱உஎ. |
| கிங்கரர்வதைப்படலம். | [illegible] |
| ஜம்புமாலிவதைப்படலம். | உ௱ஙச. |
| பஞ்சசேனாபதிகள்வதைப்படலம். | உ௱ஙஎ. |
| அட்சயகுமாரன்வதைப்படலம். | உ௱ச௰. |
| பாசப்படலம். | உ௱சச. |
| பிணிவீட்டுப்படலம். | உ௱சஅ. |
| ஊர்சுடுபடலம். | உ௱ருஎ. |

என்னுந்திருவிருத்தத்தையும், மற்றுஞ் சிலவிருத்தங்களையும் வாசித்து,

கவி.

ஆழியான்பள்ளி யணையேயவன்கடைந்த
வாழிவளைமின் மணித்தாம்பே - யூழியான்
பூணையுரமெரித்த பொற்சிலையிற்பூட்டுகின்ற
நாணேயகல நட. (௧)

எனவும்.

மங்கையொருபாகன் மார்பிலணியாரமே
பொங்குகடல்கடைந்த பொற்கயிறே - இங்கனையும்
இறைதன்மேலூருந் தெய்வத்திருநாணே
ஏறியபாம்பே யிறங்கு. (௨)

எனவும்.

பாரைச்சுமந்த படவரவேபங்கயக்கண்
வீரன்கிடக்குறங்கு மெல்லணையே - சாமதிச்
செஞ்சடையான்பூணுந் திருவாபரணமே
நஞ்சுடையாய்நூர நட. (௩)

எனவும்.

நூதனமாக மூன்றுவெண்பாவையும்பாடி எல்லாப்பாம்புகளுக்கும் அரசனாகிய திருவனந்தாழ்வானைப் பிரார்த்தித்தவுடனே ஒருசர்ப்பம் அதிவிரைவாய்வந்து யாவரும் பார்த்துக்கொண்டிருக்கும்போதே அக்குழந்தையைக்கிட்டி முன்புகடித்தவாயில் மறுபடியுங்கடித்துத் தலைக்கேறின விஷத்தை மீட்டுக்கொண்டு திரும்பிச் சிலதூரம்போயிறந்தது. பின்பு இறந்துகிடந்த குழந்தை உயிர்பெற்று நித்திரைசெய் தெழுந்தாற்போல எழுந்தது. இவ்வற்புதத்தைக்கண்ட தில்லைமூவாயிரவந்தணர்களும் மற்றவர்களும் கம்பநாடருடைய தெய்வப்புலமையைக் குறித்து அதி ஆச்சரியமானவர்களாகி அவர்களில் சிலர் இவர்திருவனந்தாழ்வான்மீது கண்வளர்கின்ற கோவிந்தராஜப் பெருமானுடைய திவ்வியகருணையைப் பூரணமாய்ப் பெற்றவரென்றும், சிலர் இவர் விஷகண்டகனாகிய சாட்சாது ருத்திரபகவானேயிப்படி மானிடவுருவங்கொண்டு வந்தாரென்றும் மனப்பூர்வமாகச்சொல்லிப் பலவாறுதுதித்தார்கள். எக்காலத்திலும் எவர்களையும் மதியாத செருக்கொண்ட தில்லையில்வாழ்கின்ற அந்தணர்கள் மூவாயிரவர்களும், கம்பநாடனைத் தெய்வப்புலமையுள்ளவரென்று உள்ளபடியே யறிந்து முன்தெரியாமல், இவர் விஷயத்தில் அபசாரப்பட்டோமேயென்று மிகுதியும் அநுதாபப்பட்டுத் தங்கள் தங்களால் இயன்றமட்டும் உபசரித்துப்பூசித்தனர்கள்.

பிறகு மரித்தபிள்ளைக்காக மசானத்தில் அடுக்கிய காஷ்டத்தின்மேல் அப்பாம்பைக்கொண்டுபோய்த் தகனசஞ்சயனமுடித்துவந்து, கம்பநாடரிடத்திலிருந்த ராமாயணபுத்தகத்தைத் தாங்களேவாங்கி அவிழ்த்துத் தனித்தனியே அனைவரும் பார்வையிட்டுச் சொல்நடை பொருள்நடை கற்பனை கருத்துச்சுவை ஓசைமுதலானவைகளையும் விசதமாக ஆராய்ந்தறிந்துதமிழில் இப்பெருங்காப்பியத்தைப்போல ஒருநூலுமுண்டோ? பெருங்காப்பியமில்லையென்று தமிழுக்கு இதுபரியந்தம் உண்டாயிருந்த குற்றமும் ஒழிந்ததென்றுசொல்லி வியந்து தங்களுக்குள்ளே பிரமானந்தமடைந்து, நம்மிடத்தில்வந்தமட்டும் நாம் நன்றுமிருக்கிறதென்று அங்கீகரிப்பதே இத்தப்பெருநூலுக்கும் நமக்கும் பெருமையாகாது முன்னாலே அகத்தியமுனிவர் தொல்காப்பியத்தில் சில ஆட்சேபஞ்செய்ததுபோல நாமும் சில ஆட்சேபஞ்செய்து பின்பு அங்கீகாரமாவதேநலமென்று தெய்வக்கவிஞரைநோக்கிச் சிலகேள்விகள் கேட்கத் தலைப்பட்டார்கள்.

கவி.

நாடியபொருள்கைகூடு ஞானமும்புகழுமுண்டாம்
வீடியல்வழியதாக்கும் வேரியங்கமலைநோக்கும்
நீடியவரக்கர்சேனை நீறுபட்டழியவாகை
சூடியசிலையிராமன் தோள்வலிகூறுவோர்க்கே.

என்னும்பாடலில் நாடியபொருள்கைகூடும் என்றவாக்கியத்திலேயே பின்கூறுவனவெல்லாம் அடங்கியிருக்க, ஞானமும் புகழுமுண்டாமென்று மிகைபடக் கூறியதென்னையெனு, கம்பநாடர் பொருள் என்பது ஒருபொருள், இருபொருள், முப்பொருள், நாற்பொருள், ஐம்பொருள், முதலியவாகப் பலவகைப்படும். அவற்றுள், ஒருபொருள்-மோட்சம், இருபொருள்-கல்வி-செல்வம், முப்பொருள்-சித்து-அசித்து-ஈசுரன், நாற்பொருள்-அறம்-பொருள்-இன்பம்-வீடு, ஐம்பொருள்-ஸ்வஸ்வரூபம்-பரஸ்வரூபம்-புருஷார்த்தஸ்வரூபம்-உபாயஸ்வரூபம் - விரோதிஸ்வரூபம்-ஆம். உலகத்தார்யாவரும் பிரதானமாக நாடும்பொருள் கல்வி-செல்வம் இரண்டுமேயாதலால் இந்த அவ்விருபொருளையுமேகருதி-நாடியபொருள்கைகூடுமென்றும், அவற்றுள் கல்வியால் ஞானமும், செல்வத்தால் கைங்கரியமும் உண்டாதல்பற்றிச் சாதனசாத்தியமுறையாக அவற்றின்பின் ஞானமும் புகழுமுண்டாம் என்றும், (கைங்கரியத்தைப் புகழெனக் காரணத்தைக் காரியமாக வுபசரித்தனர்,) இவ்விரண்டும் ஒருசேர உண்டானவிடத்தும் தன் புருஷகாரத்தால் நிரதிசயானந்த முத்தியைத்தரும் பெரியபிராட்டியார் கடாட்சிப்பாரதுபற்றி அவற்றின்பின் 'வீடியல் வழியதாக்கும் வேரியங்கமலைநோக்கும்,' என்றும், இப்பயனைத்தும் உள்ளன்போடு ராமசரித்திரத்தைக் காலக்ஷேபஞ் செய்வோர்க்காதலால், நகரத்திலிருந்த அரக்கர்களும் அவர்களுடைய சேனையும் நீறுகி நாசமடையும்படிவென்று வெற்றிமாலையைத் தரித்த கோதண்டராமபிரானுடைய திருத்தோள்களதுபராக்கிரமத்தைப் படனஞ்செய்வோர்க்கே என்பதுதோன்ற, 'நீடியவரக்கர்சேனை நீறுபட்டழியவாகை, சூடியசிலையிராமன் றோள்வலிகூறுவோர்க்கே,' என்றும். சொல்லினும் என்றார். பின்னும் அவர்கள், சூடியசிலையிராமன் றோள்கைதகூறுவோர்க்கே யெனின் உமதுகருத்தின்படி ராமாயணமெனப்படுங்கும் அப்படிகூறுது தோள்வலியென்ற தென்னையெனா, தெய்வக்கவிஞர், தாடகையைச்சங்கரித்து, கௌரு வைக்கொன்று, கௌசிகமுனி வேள்வியைக்காத்து, மிதிலையில் சிவனது வில்லை ஒடித்து, சீதாபிராட்டியைத் திருமணமுடித்து, அயோத்திக்கு மீண்டுவருகையில் பரசுராமனைவென்று, வனத்தில் விராதன்றோளைச்சரித்து, கரதூஷணதியரை அதமாக்கி, மாயமானைக்கொன்று, கவந்தனைமாய்த்து, மராமரத்தைத்தொளைத்து, வாலியைவதைத்து, சுக்கிரீவனுக்கு அரசளித்து, வருணனைவாட்டி, மகராட்சனைமடித்து, கும்பகருணனைச்சேதித்து, மூலபலத்தைமுடித்து, ராவணுதி ராட்சசர்களையெல்லாம் கருவறுத்து, விபீஷணனுக்கு முடிசூட்டியது தாரமகிராவாக்கியனுடைய புஜபலமேயாதலால் ஆதிதொடங்கி அந்தமட்டும் அவன் தோளாற்றலைச்சொல்வதே ராமாயணமெனை ஆராய்வோர்க்கு நன்குவிளங்குதற்பொருட்டுத் தோள்வலியென்றும், என்றார்.

மேலும்பற்பலவாறு அவர்கள்விதுவிய வினாக்களுக்கெல்லாம் மகாகவியாகிய கம்பநாடர் தக்கவாறு விடைகூறக்கேட்டு, இவருடைய தெய்வப்புலமைக்கு நம்முடைய கல்வி எம்மாத்திரமெனத் தங்களையிகழ்ந்து கொண்டு அவரைவாயாரப்புகழ்ந்து சுந்தோஷப் பட்டு நாடியபொருள்கைகூடுமென்னுந் திருவிருத்தத்தில் நீறுபட்டழியவென்றதற்குநீர் எத்தப்பொருளைச் சொல்லிக்கொள்ளினும் சொல்லிக்கொள்ளும் அந்தாகைச்சேனைகள், நீர்தரித்திருக்கும் திருமண்பட்டின்றே ராங்கள்தரித்த



நீறுபட்டுத்தானே அழிந்தது என்றுசாதுரியமாகச்சொல்லி இவ்விதிகாச சிரேஷ்டத்தைப்பாட நீரேதகுந்தவர் என்றுமெச்சி அந்தங்களில் தலைவராயினோ ரொருவர்செய்த அதிகவியோடுகையொப்பங்கொடுத்தனர்கள்.

கவி.

மெய்ச்சிட்டர் பொதுநோக்கிற்சிர்துக்கிக் கம்பனெனுமேதக்கோன்றன், உச்சிட்டமுலகிதுள சடறக்கற்றுயர்புலவருருற்றியாப்பில், வைச்சிட்ட சொற்பொருளேக் கனிமுதலவென்பர்தனி மிதிலைக்காந்தை, விச்சிட்ட மணவாளன் புகழெனின்மற் றிதன்றகைமை விளம்பற்பாற்றே.

இச்செய்யுளையுங் கையொப்பத்தையும் கொண்டுபோய் நம்பெருமான்சந்நிதியிலுள்ள பரமவைதிக மார்க்கத்தாருக்குக்காட்டி நடந்தசெய்தியெல்லாம் சொல்ல அவ்வந்தணர்கள் அதிசயப்பட்டுத் திருநறுங்கொண்டையென்னும் தலத்திலுள்ள சைனர்களில் அநேகர் தமிழிற் பெயர்பெற்றவித்துவான்களும் சமயதுவேஷிகளுமாயிருக்கிறார்கள். ஆகையால் அவர்கள்வாயை அடக்கும்படி அவர்களிடத்திலும் கையொப்பம் வாங்கிவந்தால் யுக்தமாயிருக்குமென்றார்கள்.

இவர் நல்லதென்றுபுறப்பட்டு அவ்விடத்துக்குப் போனபொழுது அவர்கள் ஸ்ரீமத்ராமாயணத்தைத் தமிழில் பெருங்காப்பியமாகச்செய்து, தில்லைமூவாயிரவர் முன்னிலையில் அராத்தீண்டப்பட்டுஇறந்தபிள்ளையையுயிர்ப்பித்து, அரங்கேற்றியதெய்வப்புலமைக் கம்பநாடர் வந்தாரென்கிற செய்தியைக் கேள்விப்பட்டவுடனே என்றுங் காணாத பொருளைக் கண்டவர்கள்போலப் பரமசந்தோஷமடைந்து எதிர்கொண்டழைத்துப்போய் உபசரித்து எங்களிடம்வந்ததென்னையென, கம்பநாடர் யாம்பாடின ராமாயணத்துக்கு உங்களுடைய கையொப்பம் வாங்கவந்தோமென்றனர். உம்முடைய தெய்வப்புலமையையும், தில்லையில் பிரத்தியட்சமாகநடந்த ஸ்ரீமத்ராமாயணத்தினதுதெய்வத்தன்மையையும் நோக்கும்போது எங்களுடைய கையொப்பம் எம்மாத்திரம்? தமிழில் வித்துவான்களாயிருக்கிற தில்லைமூவாயிரவர்களுடைய கையொப்பமும் பெற்றுக்கொண்டீர் அப்படியிருந்தும் நீர் எங்களுடைய கையொப்பம் வேண்டுமெனவந்து எங்களைப்பெருமைப்படுத்தினீரென்று சொல்லி, ஸ்ரீராமாயணத்தைவாங்கி ஆங்காங்குப் பார்வையிட்டுச் சொற்சுவை பொருட்சுவை முதலியவற்றைநோக்கி அதியாச்சரிய மானசிகர்களாய் ஒருவரை ஒருவர் நோக்கித் தமிழிலுள்ள சிந்தாமணி, சிலப்பதிகாரம், வளையாபதி, மணிமேகலை, குண்டலகேசி என்னும் பஞ்சகாவியமுதலிய நூல்களும், மற்றுஞ் சிலசங்கச்செய்யுள்முதலிய நூல்களும் இந்நூல்போலப் பெருங்காப்பியத்தினிலக்கணம்முற்றும்பெற்றுவந்து, சொன்னேக்கம், பொருணேக்கம்முதலிய நோக்கமுடையனவாயாவது உண்டோ? இவரைத்தெய்வக்கவிஞரென்பதற்கு யாதொரு ஐயப்பாடும் இல்லையெனக்கூறி, இவருடையபுலமையை யாவருக்கும்புலப்படுத்தவேண்டுமெனத் தாங்களும் சிற்சில இடங்களில் ஆட்சேபஞ்செய்யவேண்டுமென்று பலகேள்விகள் கேட்டனர்கள். அவற்றுள்சிலவருமாறு.

கவி.

உலகம்யாவையுந் தாமுளவாக்கலும்
நிலைபெறுத்தலு நீக்கலுநீங்கலா
அலகிலாவிளை யாட்டுடையாரவர்
தலைவரன்னவர்க் கேசரணங்களே.

"என்றபாடலில்,, எப்பொருட்கும் இறைவன்செயலை விளையாட்டென்றதென்னை? ஒப்பாரும் மிக்காரும் இல்லாதகடவுள் விளையாடுவாரானல் அவரைச் சிறுவனென்றன்றோநினைக்கவேண்டிவரும் என்றும், முன்றுசெய்யுளால் கடவுள்வணக்கஞ்செய்யவேண்டியதென்னை ஒரு செய்யுளால் செய்தலே அமையாதோவென்றும் கேட்டார்கள். அம்மூன்று கேள்விக்குங் கம்பநாடர் சகலாண்ட சராசரங்களையும் ஆக்கலும்-காத்தலும்-அழித்தலும் சர்வசக்தியுடைய அவர்க்கு இச்சாமாத்திரத்தில் எளிதில்கழ்வனவென்பதும், அவரது விளையாட்டுச்செய்கையே இப்படிப்பட்டதாயின், அவர் வேண்டுமெனக் கன்றூன்றிச்செய்யும்செய்கை எப்படிப்பட்டதாயிராது, இதனிலும் பெருஞ்செய்கையாயிருக்குமென்பதும்தோன்ற, அவற்றை விளையாட்டென்றும் வஸ்துநிச்சயம்பண்ணுமிடத்து நாமரூபகிரியைகளை ஆவசிகமாகச் சொல்லவேண்டுமாதலால் அவற்றுள் ஸ்ரீசர்வேசுரனுடைய கிரியை (உலகம்யாவையுந் தாமுளவாக்கலும்) என்றபாடலாலும், குணம், சிற்குணத்தர் தெரிவருநன்னிலை யென்றபாடலாலும், நாமம், (ஆதியந்தம ரீஇயெனயாவையும்) என்றபாடலாலுஞ் சொல்லப்பட்டனவென்றும், நாமகிரியைகளைச் சொன்னவளவில் உருவம் தானேயமைதலால் அதனை யொழித்து அவனது அனந்த கல்யாணகுணக் கடலிலாடுதல் ஆன்றோர்ஒழுக்கமாதலால் குணங்கூறப்பட்டனவென்றுங் கூறினர். அதுகேட்டுச் சைநர்கள் சாசுவதியமிசமாகிய உமதுவல்லமைமைநாங்கள்கூற எம்மாத்திரமென்றுகூறி ஐயா தெய்வக்கவிஞரே இப்பெருங்காப்பியத்துள் எங்களுக்கு ஏதாவது ஆதாரம் உண்டோவென்றுவினவ, உண்டென்று உயுத்தகாண்டத்தில்—இந்திரசித்துவதைப்படலத்தில்—வில்வீரர்களுக்குளெல்லாம் சிறந்த இந்திரசித்து இறந்தமாத்திரத்தில் அந்த ராவணனுக்கு அரசாட்சியானது இனிச் செல்லமாட்டாதென்று களிப்படைந்த தேவர்களெல்லாரும், ஆடுத்தவாடையையும் மேலுத்தரீயத்தையும் ஒக்க உரிந்து சுருட்டி மேலேசெல்லும்படிவீசி ஆநந்தத்தால் ஆரவாரித்தபோது கொல்லாவிரதிகளாகிய சமணர்களுடைய உபாசனதேவர்களாகிய அருகர்கூட்டம்போல இருந்தனர்கள். என்னுங்கருத்தை உட்கொண்டு,—

கவி.

வில்லாளராஞர்ச்செல்லாமேலவன்விளிதலோடும்
செல்லாதவ்விலங்கைவேந்தற்கரசெனக்களித்ததேவர்
எல்லாருந்துகிலெடுத்தார்த்தபோது
கொல்லாதவிரதத்தோர்தங்கடவுள்கூட்டமொத்தார்.

என்ற பாடலைச்சொன்னார், அதையவர்கள் கேட்டு வியந்து, அவர்களுக்குள் தலைவராயினோர் ஒருவர்.

கவி.

பாரோர்துபடவரவப்பெரும்பாயன்மிசைத்துயிலும் பரமன்கீர்த்திச், சீரோர்துபெருங்காப்பியந்தமிழிற் புனைந்துலகஞ்சிறக்கவிந்தான், நீரோர்துகடலாடைநிலத்திற் றலைக்கொப்புரிகழ்த்தவொன்னைப், பேரோர்துநற்றெய்வப்புலமைபெறு கம்பனெனும்பெரியனம்மா.

எனக்கூறிய அதிகவியொன்றுங் கையொப்பமுங் கொடுத்தனர்கள்.

அச்செய்யுளையுங் கையொப்பத்தையுங்கொண்டுபோய்க்கோயிலிலுள்ள ஸ்ரீவைஷ்ணவர்களுக்குக்காட்ட இம்மட்டிலேபோதுமென்று மாவண்டூரிற் சிரேஷ்டபண்டிதனாகிய ஒருகருமானிருக்கின்றான் அவனுடைய கையொப்பமும் வாங்கிக்கொண்டு வாருமென்றார்கள். அப்படியே புறப்பட்டு மாவண்டூருக்குப்போய் அந்தக்கருமானுக்குத் தமதுவரவைத்தெரிவிக்க, அப்புலவன் எதிர்கொண்டுசென்று அதிகமரியாதையோடு உபசரித்து என்னையும் ஒருபொருள்செய்து தாம் வரவேண்டுமோ தங்களுடையநூலிலுள்ள செய்யுளின்கருத்தை யுண்மையாக உணரவல்லவர்களுமுண்டோ அப்படியிருந்தும் தாங்கள் தில்லைமூவாயிரவர்களிடத்தும் திருநறுங்கொண்டைச் சமணர்களிடத்தும் மிகையாகக் கையொப்பம்வாங்கினீர்கள். இனிநானுந்தாகேன்

ளத்தில்மூழ்கிவிட்டது. அதன்மேலிருந்த புலவர்களெல்லாம் தத்தித்தடுமாறி எழுந்து மெல்ல நீந்திக் கரைசேர்ந்து பார்க்கும்போது அமிழ்ந்தபலகை குபீரென்று கிளம்பித் தண்ணீட்டதில் வைத்த திருமுறையைமாத்திரம் ஏந்திக்கொண்டு மிதந்தது. அவர்கள் திருநகரைக்கையெடுத்து "கண்ணன்கழலிணைகள், நண்ணு மனமுடையீர், எண்ணுந்திருநாமம், திண்ணநாரணமே,, இத்திருவாய்மொழியை வாசித்ததிருக்குமிழ்ச்சிறுமுறிக்கு இடங்கொடுத்த சங்கப்பலகை இதனோடு நமக்கும் ஒக்க இடங்கொடுக்குமா! கொடாததலால் நம்மை அகற்றி விட்டதென்றும், ஆழ்வாருடைய அருளிச்செயல் உண்மையாகவே வேதமென்றும் அறிந்து முன்னே தாங்கூறியது மடமையென்று துக்கித்து, மற்றும் திருவள்ளுவர், ஔவை, இடைக்காடர், ஒருவரையொருவர் சந்தித்தபோது வள்ளுவரைநோக்கி நீர்செய்த நூல் எப்படிப்பட்டதென்று மற்ற இருவருங்கேட்டதற்கு "ஒருமுனிவன் முத்தமிழுமென்குறளுநங்கைதிருமுனிவன்வாய்மொழியின்சேய்,, என்று சொன்னதையும் அதுகேட்டு ஔவை உம்முடைய குறளும் அகஸ்தியமுனிவரால் வெளியிடப்பட்ட முத்தமிழும், நங்கைப்பிராட்டியினுடைய புத்திரராயவதரித்தபொழுதே இருவகைப்பற்றும் மற்றுந்துறந்த திருமுனியாகிய சடகோபசூரி அருளிச்செய்த தமிழ்வேதத்திற்குப் புத்திரஸ்தானமென்றது சரியே. அந்தத்திராவிடவேதத்துக்கு அவ்வளவுசொல்வதேபோதாதென்று "ஐம்பொருணாற்பொருளுமுப்பொருளும்பெய்தமைத்த, செம்பொருளையெம்மறைக்குஞ்சேட்பொருளைத்- தண்குருகூர்ச், செம்மொழியதென்பர்சிலரியானிவ்வுலகின், தாய்மொழியதென்பேன்றகைந்து. என்று சொன்னதையும்.

இதன்பொருள்.—ஐம்பொருளும்-அர்த்தபஞ்சகத்தையும், நாற்பொருளும்-சதுர்விதபுருஷார்த்தங்களையும், முப்பொருளும்-சித்து - அசித்து - ஈச்வரனிவைகளையும், பெய்தமைத்த-திரட்டியமைத்த, செம்பொருளை - உண்மைப்பொருளை, எம்மறைக்கும்-எவ்வகைப்பட்ட வேதங்களுக்கும், சேட்பொருளை-சம்மதமாகிய மேலானபொருளை, சிலர்- அதன்றன்மையுணராதவர், தண்குருகூர் - குளிர்ந்ததிருக்குருகூரில் அவதரித்த, செம்மொழியது-பிறந்தபொழுதே அறந்தகுழந்தையினதுசொல், என்பர் - என்று சொல்லுவார்கள், தகைந்து - அவர்களைத்தடுத்து, யானோ, இவ்வுலகின் - இந்த அண்டங்களுக்கு, தாய்-தாயுமாய் நின்ற ஸ்ரீமந்நாராயணன்பிரமனுக்கு உபதேசித்த,மொழியதென்பேன்- மொழியாகிய வேதமேயென்றுசொல்வேன்.—எ-று.

அதுகேட்ட இடைக்காடர். திராவிடவேதத்திலிடத்துத் தமக்குண்டாகிய ஆதராதிசயத்தால்.

கவி.

செய்மொழியோதாய்மொழியோசெப்பினிரண்டுமொன்றாய் வாய்மொழியையாருமறையென்பவாய்மொழிபோல், ஆய்மொழிகள்சாலவுளவெனினுமம்மொழியின். சாய்மொழியதென்பேன்றகைந்து. என்று சொன்னதையும், நினையாமற் போனோமே யென்றனர்.

இதன்பொருள்.—செப்பின் - சொல்லுமிடத்து, செய்மொழியோ - திராவிடவேதமும், தாய்மொழியோ - வடமொழி வேதமும், இரண்டும் ஆகிய - இவ்விரண்டும், ஒன்று - வேற்றுமையில்லாமல், ஒருபொருளையேசொல்லுதலால்-ஒன்றேயாம், (அக்காரணத்தால்) அவ்வாய்மொழியை-அத்திருவாய்மொழியை, யாரும் - மேலோர்யாவரும், மறையென்ப - வேதமேயென்று சொல்லுவார்கள், வாய்மொழிபோல் - திருவாய்மொழிபோல், ஆய்மொழிகள் - தெரிந்தெடுத்த மொழிகளாய் அமைந்த நூல்கள், சாலவுளவெனினும்-மிகுதியும் உண்டெனினும், தகைந்து-அதைத்தடுத்து, அம்மொழியின் - அத்திருவாய்மொழியினது, சாய்மொழியது - சாயையாகச் செய்யப்பட்ட நூல்களாகும், என்பேன் - என்றுசொல்லுவேன்.—எ-று.

அப்படியிலையாலிடியும் பூர்வமொருகாலத்தில்தாமிரபருணிநதியின்வடகரையிலிருந்த யோகியொருவனொருத்திக்கொண்டிருந்து நாயானது தென்கரையிலுள்ள ஆழ்வார் திருநகரிக்குப் பிரதினமும் மத்தியான வேளையிற்போய் வீதியில் வைஷ்ணவர்களுடைய உச்சிஷ்டத்தைத்தின்று வயிற்றை நிரப்பிக்கொண்டு வருவதுண்டு. ஒருநாள்போய்த் திரும்பிவரு கோப் பட்டதுறைல் நாயின்னும் வராமலேயெனக் கருணையாலே ஆற்றோரத்தில் வந்து பார்க்கும்போது அந்நாய் நட்டாற்றில்வருகையில் மேல்வெள்ளம்வந்தபடியால் நீந்திக்காலோய்ந்து அந்நீரில் அமிழ்ந்து மேலெழும்பிற்று. அப்போது, அதன் கபாலம்வெடித்து ரந்திரத்தின் வழியாய் நாயின் ஆத்மாவானது ஜோதிமயமாய் விமானத்தின்மேல்சென்றது. தாம்செய்துவந்த யோகபலத்தால் யோகியானவர் பிரத்தியட்சமாகக்கண்டு பண்பிறப்புள்ளாரயும் எம்மையொத்தவர்களும் பெறுதற்கரிய பேறுபெற்றதே இதென்ன சாதனத்தையுடையதாயிருந்தது ஒன்றுமில்லையே. ஆழ்வார் திருநகரியிலுள்ள வைஷ்ணவர்களுடைய உச்சிஷ்டத்தைப் புசித்ததிறலல்லவா இப்பேறுபெற்றதென்று ஆராமையோகி கண்ணீர்விட்டு மனமுருகி அவர் "வாய்க்குங்குருகைத் திருவீதியெச்சிலைவாரியுண்ட, நாய்க்கும்பரமபதமளித்தாயக்காயெடுத்தப் பேய்க்குமணித்தாற்பழுதோபெருமான்மகிழ்மாறன்மடம், நாய்க்கும்படிக்குக்குருசொல்லுஞானத்தமிழ்க்கடலே,, என்று கூறியது முத[illegible] தோத்திரித்த பாடல்களை யாவதுநினைத்து அபசாரப் படாமலிருப்போமாக! இல்லையேல் அநுதாபப்பட்டு அவ்வபசாரத்தை ஆழ்வார் க்ஷமிக்கும்பொருட்டு,

கவி.

சேமங்குருகையோசெய்யதிருப்பாற்கடலோ
நாமம்பராங்குசனோநாரணனோ - தாமம்
துளவோவகுளமோதோளிரண்டோநான்கும்
உளவோபெருமானுனக்கு.

இதுமுதலிய பாடல்களைத் தனித்தனி ஒவ்வொருவரும் பாடித்துதித்தார்கள்.

சங்கப்புலவர்கள்யாவரும் பாடநினைந்தபோது ஒருசொல்லாவது ஒரெழுத்தாவது அவைகளின் தின முதலியவைகளில் ஏதாவது சிறிதும் பேதப்படாமல் இந்த ஒருசெய்யுளே எல்லாருடைய வாக்கினின்றும் பிறந்ததென்று சொல்லுவாருமுண்டு. பின்பு அவர்கள் ஆழ்வாருக்கு அன்றுமுதல் திருவுகூறல் முதலியவைகளும் முன்னிலும் அதிகமாய் நடக்கும்படி செய்தார்களென்பதாம்.

இப்படியே இக்கம்பநாடர் பூர்வதசையில் தென்மதுரையில் முந்நூறு தமிழ்ப்புலவர்களோடு சங்கப்பலகை ஏறியிருந்தகாலத்தில் மதுரகவிகளுடைய திருவம்சத்தில் திருவவதரித்த மதுரகவிகளென்னுந்திருநாமமுடையவரும், மதுரகவிகளுடைய வமிசோற்பவருமாய் விளங்கிக்கொண்டிருந்த வைஷ்ணவரொருவர்மதுரகவிகளுடையஏற்பாட்டின்படி அர்ச்சாரூபமாயெழுந்தருளியிருக்கின்ற ஆழ்வாருக்கு நித்தியபட்சமாசம்வற்சரோச்சவங்களெல்லாங் குறைவறநடத்திக்கொண்டு மகோச்சவங்கண்டருளப்பண்ணி வேதந் தமிழ்செய்த பெருமான்வந்தார். திருவாய்மொழிப் பெருமான்வந்தார். திருநகரிப்பெருமான்வந்தார். திருக்குருகூர்நம்பிவந்தார். காரிமாறன்வந்தார். நாவீரன்வந்தார். சடகோபர்வந்தார். பராங்குசர்வந்தார். எனப்பலவின்னம்பணிமாற, அதுகேட்டுக் கம்பநாடரிடத்திருந்த சிலதமிழ்ப்புலவர்கள்வந்து எங்கள் கம்பநாடரோடு தருக்கித்தச்சங்கப்பலகை ஏறுமொழிய வேதந் தமிழ்செய்த பெருமானென்று விருதுகூறவொட்டோமென்று தடுக்க, மதுரகவிகளும் அ[illegible]ஞாயமாம். எங்கள் ஆசாரியர் எங்கும் எழுந்தருளார். அவருடைய திவ்ய ஸந்நிதிக்குச் சங்கப்பலகை இடங்கொடுத்தாகில் அவருக்குமிடங்கொடுத்ததாமேயென்றுசொல்லி ஒருசிறுமுறியிலே "கண்ணன்கழலிணையென்னும்பாசுரத்தை எழுதி இச்சிறுமுறியைச் சங்கப்பலகையின் மேலேவையுங்கோளென்று அவர் கையிலே கொடுத்தனர். அவர்களும் போய்க் கம்பநாடருக்குச் சொல்லி அச்சிறுமுறியைச்சங்கப்பலகையின்மேலேவைக்க, கம்பநாடரோடுசேர ஏறியிருந்த முந்நூறு தமிழ்ப்புலவர்களையும் இவரையும் அச்சங்கப்பலகைகவிழ்த்துப்போட்டுஆழ்வார்திவ்விய ஸூக்திச்சிறுமுறியொன்றையுமே தரித்துக்கொண்டிருந்தது. இதைக்கண்டுகம்பநாடர் பயந்து,

கவி.

ஈயாடுவதோகருடற்கெதிரே யிரவிக்கெதிர் மின்மினியாடுவதோ. நாயாடுவதோ வுறுவெம்புலிமுன்னரியாடுவதோநரகேசரிமுன், பேயாடுவதோவழகூர்வசிமுன் பெருமான்வகுளாபரணன்னருள்கூர்ந், தோவாதுரையாயிரமாமறையின்னொருசொற்பொருமோ வுலகிற்கவியே.

எனவும்.

நீயேயநிலைவினைதகத்தேதிற்குருகேயியங்கை
ஆயேயதியுமற்றுதிவாரடியேங்களுக்குத்
[illegible]பொருநற்றிருக்குருகூர்த்தமிழ்க்காரிபெற்ற
சேயேயினதுதிருவாய் மொழியின்செம்பொருளே.

ஆழ்வார் விஷயமாகக் கவிசொல்லி அபராதக்ஷாபணம் பண்ணிக்கொண்டார். அங்கிருந்த மற்ற தமிழ்ப்புலவர்களும் தனித்தனியே கவிசொல்லி அபசாரம் க்ஷமிப்பித்துக் கொண்டார்கள் இது ஆறுயிரப்படிக் குருபரம்பரா பிரபாவத்திற் கண்டெழுதியது.

இதுநிற்க. கம்பநாடர், சடகோபரந்தாதி பாடிமுடித்தவுடனே ரங்கநாதன் சந்நிதியில் பெரிய ஆயிரக்கால்மண்டபத்தில் சதுசாஸ்திர பண்டிதர்களாகிய வடமொழிப்புலவர்களிலும், முத்தமிழிலும், புலமைநிரம்பிய தமிழ்ப்புலவர்களிலும், உபயகவிகளிலும், வைதிக சம்பிரதாயத்தையுடைய ஸ்மார்த்தர், மாத்துவர், வைஷ்ணவர் என்னும் பிரசித்தமாகிய திரிமதஸ்தர்களிலும், மற்றுஞ்சில நவீனசூத்திர மதஸ்தர்களிலும், அரசர்கள் பிரபுக்கள் முதலானவர்களிலும்வெகுபேர்திரண்டு நிறைந்திருக்க, பிரபந்நிஷ்டாபரராகிய ஸ்ரீமந்நாதமுனிகளது திருவோலக்கத்தில் தெய்வப்புலமைக்கம்பநாடர் தெய்வவணக்கஞ் செய்து அவையடக்கமுங்கூறிக் கிரமமாக ராமாயணத்தை அரங்கேற்றினார்.

அரங்கேற்றும்பொழுது வைஷ்ணவர்களில் சிற்சிலர் பற்பல ஆட்சேபங்களைக் கூறக் கம்பநாடர் பலசற்றிற்குத் தாம்சமாதானஞ்சொல்லியதுமன்றித் தம்முடைய புத்திரராகிய அம்பிகாபதியினுடைய புலமைத்திறம் அங்குள்ள கற்றுயர்ந்தோருக்கும் புலப்படும்படி சில ஆட்சேபங்களுக்கு அவனைக்கொண்டும் சமாதானஞ்சொல்வித்தனர். அரங்கேற்றல் அப்படிநடந்துவருகையில், ஆரணியத்தில் சூர்ப்பநகை மூக்கறுபட்டு இராவணனை நினைத்துக்கொண்டு புலம்பியதைச் சொல்லியபாடல்களில் ஒன்றாகிய,

கவி.

உருப்படிவமன்மதனை யொத்துளரேயாயினுமுன்
செருப்படியிற்பொடியொவ்வாமானுடரைச்சீறுதியோ
செருப்படையிற்பொதிசிதற நின்றமதத்திசையானை
மருப்பொடியப்பொருப்பிடியத்தோணிமிர்த்தவலியோனே.

என்பதை வாசிக்கக்கேட்டு, அதில் உன்செருப்படியிற் பொடியொவ்வா மானுடரை என்பதைக்குறித்து அங்குள்ள வைஷ்ணவர்களில் ஒருவர் கம்பநாடரைநோக்கி ஸ்ரீமஞ்சும் சர்வேசுரனுடைய சக்கரவர்த்தித் திருமகனார் விஷயத்திலும் சுமித்திரா சிங்கத்தின் விஷயத்திலும் செருப்படியிற் பொடியொவ்வாமானுடரென்றுகூறி அபசாரப்படுகிறீரென்று வினவ, கம்பநாடர் பக்கத்திலிருந்த அம்பிகாபதி அவருக்குத் தண்டஞ்சமர்ப்பித்துக் கும்பகருணன் இறந்தசெய்தியை அறிந்த இராவணன் தன்னைக்கண்டோர்யாவரும் புலம்பியழத் தானும் அழுதானென்று சொல்லுதல் அவனுடைய வீரத்துக்குக் குறைவாமென்றெண்ணி, தான்தேடிக்கொண்ட தீமையால் தன்னையும் மற்றவர்களையும் அழுவித்தானென்னும் பொருள்பட, "பண்டைத்தன்மைத்தின் காரணத்தைப் பாரித்தானென்றுசொன்னவர், பகவான்விஷயத்திலும் அவனடியார்விஷயத்திலும் அபசாரப்படுவாரோ என்ன, ஸ்ரீமந்நாதமுனிகள் புன்னகைகொண்டு அந்த வைஷ்ணவரைநோக்கி, கவிகூறுங்கூற்றன்றி அரக்கி கூறுவது சொல்லிய உன்செருப்படியிற் பொடியொவ்வாமானுடரென்றதற்கு, ராமலட்சுமணர்கள் அவள் இஷ்டப்படி நடவாமையாலும். மூக்கு முதலிய அவயவத்தைச் சேதித்தமையாலும், அவள் இப்படியே தூஷிப்பாளாகையால் இதுவொரு கருத்தும், செரு - படி எனப்பிரித்து உனது யுத்தபூமியில் ஒருவருக்கும் ஒப்பாகாத மானுடரென வேறொரு கருத்தும் படும்படி சிலேடையாகச்சொன்னது வித்வசாமர்த்தியமேயல்லது அபசாரமன்றென்று அருளிச்செய்தனர். அதுகேட்டு யாவரும் ஆநந்தித்தார்கள்.

இரணியவதைப்படலம் வாசிக்கப்படும்போது உபயகவிகளில் வல்லவர்களுக்குள் சிலர், ஸ்ரீமத்ராமாயணத்தில் எங்கும் இரணியவதைப்படலம் சொல்லப்படவில்லையே. இதேது நவீனமாயிருக்கிறதென்று வினவினார்கள். கம்பநாடர் இது புராணாந்தரமென்ன. அவர்கள் இது புராணாந்தரமாயினும் வடமொழியில் வான்மீகிமுனிவர்முதலிய முனிவர்களால் சொல்லப்படாததை நீர்சொன்னமையால் எவ்விதத்தில் ஒப்புக்கொள்வது. இப்படலத்தைக்குறித்து இங்குள்ளயாவரும் ஒப்புக்கொள்ளும்படி ஏதேனும் ஒருதிட்டாந்தம் காண்பிக்கவேண்டும். அதாவது இது சிங்கப்பெருமான் திவ்விய சரித்திரமாதலால் இதைத் திருவரங்கம் பெரியகோயிலில் எழுந்தருளியிருக்கும் மேட்டழகிய சிங்கரானவர் சிரக்கம்பம் கரக்கம்பஞ்செய்து திருவுளம் உவந்தருளுவதுதானென்றார்கள். இதுவிஷயத்தில் முக்காலமும் நிகழ்ச்சியும் உணரவல்ல மெய்ஞ்ஞானச்செல்வராகிய ஸ்ரீமந்நாதமுனிகள் ஒன்றும் வார்த்தைசொல்லா திருந்தனர். கம்பநாடர் இக்காவியத்தை ஆரம்பித்தநாள்முதல் இடையூறு சம்பவித்தபடியே யிருக்கிறது இவையெல்லாம் ராமபிரானுடைய சங்கற்பந்தான் வேறன்றென்று துணிந்து, அவ்விரணிய வதைப்படலத்தில் இரணியன், பிரகலாதனுழ்வானைநோக்கி, நீ சொல்லிய ஹரியென்பவன் எவ்விடத்தி லிருப்பானென்று கேட்டதற்கு பிரகலாதாழ்வான், அந்தப்பரஞ்சுடர் அகண்டிதனாகையால் இன்ன இடத்தில் இருப்பான் இரானென்று கண்டிதப்படுத்திச் சொல்லவும், அவனுடைய அனந்தவ விபூதிவ அதிசயங்களை இன்னபடியென் றறியவும், வேதங்களாலும் முடியாது. ஆயினும் ஒருவாறு சொல்லுகிறேன். அவன், சாணளவாகிய பொருளிலு மிருப்பான், அணுவை யொருநூறுகூறுகளாகச் செய்த சிற்றணுக்களிலும் தனித்தனியிருப்பான். பெரியமேருமலையிலுமிருப்பான். இங்கே நிற்கின்ற தூணிலுமிருப்பான். அவனெங்கே யுண்டென்று நீ கேட்ட சொல்லிலுமிருப்பான். அவனில்லாத இடங்கிடையாது. இப்படி யவனிருப்பதைச் சீக்கிரமாக ஆராய்ந்து பாரென்று சொல்லியருளினர். இரணியன்நல்லதென்றொன்னும் பொருள்தரும்.

கவி.

சாணிலுமுளனோர்தன்மை யணுவினைச்சதகூறிட்ட
கோணிலுமுளன்மாமேருக் குன்றிலுமுளனிந்நின்ற

அணிநுமுளன்முன்சொன்ன சொல்லினுமுளனித்தன்மை காணுதிவிரைவினென்று னன்றெனக்கனகன்சொன்னன்.

என்னும்பாடலையும்.

தேவர்களென்போர் யாவர்க்கும் உனக்கும் ஒருதன்மையாய்நின்று, இந்த அண்டங்களெங்கும் வியாபித்திருப்பவனை,இத்தூணினிடத்து நான்காணும்படி காட்டு. நீ காட்டாவிட்டால், பெருத்தமத்தகத்தையுடைய யானையைச் சிங்கமானது கொன்றாற்போல உன்னைக்கொலைசெய்து உன்னுடைய செம்புருக்குப்போன்ற உதிரத்தை நிரம்ப உண்டு உனதுதேகத்தையும் தின்பேனென்று சொன்னனென்னும் பொருளமைந்த,

கவி.

உம்பர்க்குமுனக்குமொத்திவ் வுலகெங்கும்பரந்துளானைக், கம்பத்தின்வழியேகாணக் காட்டுதிகாட்டிடாயேல், கும்பத்தின்கரியைக்கோண்மாக் கொன்றெனநின்னைக்கொன்றுன், செம்பொத்தகுருதிதேக்கி யுடலையுந்தின்பேனென்றான்.

என்னும்பாடலையும்,

அவ்விரணியன் சொன்னதைக்கேட்ட பிரமஞானியாகியபிரகலாதனுழ்வான், இரணியனைநோக்கி, சர்வேசுரனுக்குத் தாசனாய்நிற்கின்ற எனதுயிரை உன்னால் கொலைசெய்வதற்கு அவ்வளவு எளியதாகிய ஒருபொருளல்ல. நான்முன்சொன்ன ஸ்ரீஹரி, இந்தத் தூணொன்றுமேயல்ல நீ தீண்டின தீண்டின இடங்களிலெல்லாம் தோன்றுமற்போனால், என்னுயிரை நானே மாய்த்துக்கொள்வேன். அதன்மேலும் உயிர்வாழ்தலை விரும்புவேனானால், அந்த ஸ்ரீஹரிக்கு அடியே னல்லேனென்று னென்றபொருளமைந்த,

கவி.

என்னுயிர்நின்னாற்கோறற் கெளியதொன்றன்றியான்முன்,
சொன்னவன்றொட்டதொட்ட விடந்தொறுந்தோன்றுனாயின்,
என்னுயிர்யானேமாய்ப்பல் பின்னும்வாழ்வுகப்பலென்றிவ்வ அன்னவற்கடியேனல்லேனென்றன னறிவின்மிக்கான்.

என்னும்பாடலையும்,

இப்படிப் பிரகலாதனுழ்வான் பிரதிக்கினையை இரணியன்கேட்டவுடனே இப்பிரதிக்கினையினுண்மையைக் காணவேண்டுமென்கிற விருப்பமானது வெளியேதோன்றும் வண்ணம் கோபத்தோடு நன்று நன்று என்றுசொல்லிச் சிரித்து, விசையோடு இடியானது விழுந்தாற்போல எதிரே நின்ற ஒருதூணினை வெற்றியும் கீர்த்தியும் தங்கிய வலக்கரத்தாலே அறைந்தான். அறைந்தமாத்திரத்தில் சர்வாந்தரியாமியாகிய சிவந்தகண்களையுடைய சிங்கப்பெருமான் திக்குகளும் அண்டமும் பிளந்துபோம்படி கலகலவென்று சிரித்தனர் என்னும்பொருளமைந்த,

கவி.

நசைதிறந்திலங்கப்பொங்கி நன்றுநன்றென்னநக்கு
விசைபிறந்துருமுவீழ்ந்த தென்னவோர்தூணின்வென்றி
இசைபிறந்தமர்ந்தகையா லெற்றினனெற்றலோடும்
திசைதிறந்தண்டங்கீறிச் சிரித்ததுசெங்கட்சீயம்

என்னும்பாடலையும்,

சர்வேசுரன் நாரசிங்கத்திருவுருக்கொண்டு பிரசன்னமாய்ச் சிரித்ததைக்கண்ட மெய்ஞ்ஞானச் சிறுவராகிய பிரகலாதனுழ்வான் ஆனந்தத்தால் ஆடிப்பாடிக் கண்ணீர்சொரிந்து தொழுதுசொல்லிய,

கவி.

நாடிநான்றருவெனென்ற நல்லறிவாளனும்
தேடினன்முகனுங்காணச் சேயவன்சிரித்தலோடும்
ஆடினனழுதான்பாடி யரற்றினன்சிரத்திற்செங்கை
சூடினன்றொழுதாேனுடி யுலகெலாந்துகைத்தான்றுள்ளி.

என்னும்பாடலையும் வாசித்தார்.

வாசிக்கும்போதே மோட்டழகிய சிங்கப்பெருமான் தமதுதிருக்கரங்களை நீட்டித் திருமுடியைத் துளக்கிப் பவளம்போலும் சிவந்தவாயைத்திறந்து கடகடவென்று அந்தமண்டபமும் அதிர, அங்குள்ள சகல மஹாஜனங்களும் நடுங்கச்சிரித்து ஆர்ப்பரித்தார். அப்பொழுது எல்லாரும் அதிசயித்துத் திருச்சித்திரகூடத்தில் தில்லைமூவாயிரவர் பின்னை பாம்புகடித்து இறந்தது. அது நாகபாசப்படலத்தில் சிலகவிகளை வாசிக்கப் பிழைத்தது. இங்கே இரணிய வதைப்படலத்தில் சிலகவிகளை வாசிக்கச் சுதைவடிவாயெழுந்தருளியிருக்கின்ற மோட்டழகிய சிங்கப்பெருமான் திருவுளமுகந்து அவ்வுகப்பு யாவர்க்கும் தோன்றும்படி சிரக்கம்ப கரக்கம்பமோடு அட்டகாசமுஞ்செய்தனர். ஆதலால் இப்பெருங்காப்பியம் தெய்வீகமுடையதென்றும், இத்தெய்வீகம் யாவர்க்கும் தோன்றவேண்டுமெனத் திருவுளத்தெண்ணியல்லவோ இந்நூலில் அந்தந்தச் சந்தர்ப்பங்கண்டு அதற்குத்தக்கவாறு விசேஷார்த்தஞ்சொல்லிச் சமர்த்தித்துவந்த பரமயோகியாகிய ஸ்ரீமந்நாதமுனிகளும் இதுவிஷயத்தில்மாத்திரம் வார்த்தைசொல்லாமல் மௌனமாயிருந்தனரென்றும், தங்கள்தங்களுக்குள் எண்ணிக் கம்பநாடரைக்குறித்து மிகவும் மெச்சிக்கொண்டாடினர்கள்.

அதற்குமேலும் அச்சபையிலுள்ள அறிவிற்சிறந்தோர் அங்காங்குக் கேட்டகேள்விகளுக்கெல்லாம் ஏற்றபடிசமாதானஞ்சொல்லி, ராமாயணம் முழுவதும் வாசித்து முடித்தபின்பு ஸ்ரீமந்நாதமுனிகள் இந்தப்பெரு[illegible]யம் இவ்வளவு சிறப்புடையதாக இயற்றப்பட்டும் பாலில்விஷங்கலந்தாற்போல இடையிடையே நரஸ்துதிபண்ணப்பட்டதனால் வைஷ்ணவர்கள் தில்லைமூவாயிரவர் முதலானோர்களுடைய கையொப்பம்வாங்கிவரும்படி இவரைப் பலவிடங்களிலு ஓடியுழலச் செய்தார்களென்று திருவுளத்தில் உய்த்துணர்ந்து, கம்பநாடரைநோக்கிச் சிறையிருந்தவ ளேற்றஞ்சொல்வதாகிய இந்த இதிகாச ச்ரேஷ்டத்தில் நரஸ்துதிசெய்தது யாதுகாரணமென்ன வினவினர். கம்பநாடர் அந்தப்பரம யோகீந்திரருக்குத் தண்டன்சமர்ப்பித்து நின்று, சிறுவயதுமுதல் அடியேனைத் திருவெண்ணெய்நல்லூர்ச் சடையப்பவள்ளலானவர் ஆதரித்தனர். அவருடைய எத்தினத்தால்தான் அடியேன் திருவெண்ணெய் நல்லூரில் இந்நூல்செய்தது. இவையும் அன்றி, அம்பிகாபதி விவாகத்தில் பாதபூஜைநடக்கும்போது, அரசர்களும், மற்றும் மகாசனங்களும் வந்துநிறைந்திருக்கும் கலியாணவாசலில் மேற்படி வள்ளலானவர்வந்து, தாம் இருக்க இடமில்லாமைபால் அங்குள்ளவர்களில் பலர் எழுந்து இங்கேவரலாம் இங்கேயிருக்கலாமென்று உபசரிக்கா நிற்கையில் நீங்கள் எழுந்திருக வேண்டாமென்றுகூறி ஒருவரும் நிற்பதற்கும் யோக்கியமன்றி ஒழிந்திருந்த அங்கணத்தின் வரம்பின்மேல் நின்றுகொண்டிருப்பதைக்கண்டு தேவரீருடைய அடியான் சகியாமல் பரிதபித்து இத்தனைசனங்களுக்கும் இங்கே இடமிருக்க எங்களண்ணு அவர்களுக்குமாத்திரம் அந்த அங்கணமோ கிடைத்ததென்றுகேட்க, உன்தமையனை இந்த இடத்திலே யாவைக்கிறது, நான்வைக்குமிடத்தில் வைக்கிறேனென்றுசொல்லிய சொல்லுமுண்டு. இவற்றையெல்லாம் கருதித் தான் அந்தவள்ளலுடைய பெயரைப் பலவிடங்களிலும் அவருடைய தம்பிமார்களாகிய கண்ணன், சரராமன் என்பவர்களுடைய பெயர்களை இரண்டொரு இடத்திலும் இதிற்சொல்லி வைத்தேனென்று அதிவிநயத்தோடு சொல்லிக்கொண்டனர்.

அதுகேட்டருளியஸ்ரீமந்நாதமுனிகள் இது உபகாரஸ்மிருதியாமெனத் திருவுளங்கொண்டு கம்பநாடரைநோக்கி நீர்சொல்வதெல்லாம் சரிதான்நீர்செய்த இப்பெருங்காப்பியத்தில் நூற்றுக்கொன்று வீதமாக அவ்வள்ளலுடைய பெயரைச்சொல்லியிருக்கின்றீரோ மகாகாவியத்தில் அப்படி அடிக்கடிச்சொல்வது தகுதியன்று. ஆயிரத்துக்கொன்று வீதமாக இருந்தாற்போது[illegible]



றனர். கம்பநாடர் அதற்கு மனம்வருந்தப்படாமல் சுவாமி! மகாபாக்கியம். அந்தவள்ளலுடைய குணாதிசயம் அடியேனுடைய சிற்றறிவுக்கு எட்டாமையால் ஆற்றுக்கொன்றாகமதித்தேன் தேவரீர் ஆயிரத்துக்கொன்றாக மதித்தது விசேஷமேயென்று வணக்கமாகக்கூறினர். ஸ்ரீமந்நாதமுனிகள் திருவுளமகிழ்ந்து இருவைகூர்ந்து கம்பநாடருக்குக் கவிச்சக்கரவர்த்தியென்றும்,தெய்வக்கவிஞரென்றும்,ஆழ்வார்பக்கல்இக்கம்பநாடருக்குஉண்டாயிருக்கும்பிரவண்ணியத்தைநோக்கி ஆழ்வாரென்றுந் திருநாமமிட்டு, அவர்பாடின ராமாயணத்துக்கு அங்கிருந்த வித்வஜன ச்ரேஷ்டர்களில் சிலர்சாத்துக்கவிகொடுக்கவும், அவரால் இரு[illegible]வையைப் பாடுவித்துத் திவ்விய பிரபந்தத்தோடு சேர்க்கவும், அந்தத்திவ்வியதேசத்தில் நடக்கும் உச்சவாதிகளில் அழகியமணவாளன் திருவீதிப் புறப்பாடாகித்திரும்பிக் கோயிலுக்குட்செல்லும்போதெல்லாம் கம்பநாடர் கட்டுவித்தமண்டபத்தில் எழுந்தருளப்பண்ணித் திருவந்திக்காப்பு நடப்பிக்கவும், சடகோபரந்தாதியில் இரண்டுபாடலைத் திருக்குருகூரில் ஆழ்வார்சந்நிதியில்நித்தியப்படியாகச்சேவிக்கவும் வேண்டுமெனக் கட்டளையிட்டுத் தமதுகோஷ்டியிலுள்ளவைஷ்ணவர்களைநோக்கி [illegible] கம்பநாடராகிய கவிச்சக்கரவர்த்திக்குப்பெருமாள்சேவை பண்ணுவித்து சடகோபமுதலானவைகளும் பிரசாதியுங்கொ[illegible]ண்டதாகவியயித்தருளினர்.

அந்நியமனப்படி அவர்கள் கம்பநாடரை அழைத்துப்போய் நம்பெருமாளுக்குத்திருமஞ்சன முதலானவைகளுஞ் சமர்ப்பித்துப் பிரணவாகார விமானத்தில் திருக்கண்வளர்கின்றபிரணவப்பொருளாகிய ரங்கநாதனையும், ரங்கநாயகியாரையும் அவர்சேவிக்கும்படிசெய்து ஸ்ரீமத்ராமாயணத்தைச்சுவாமியினுடைய பொன்னடிகளில் சமர்ப்பித்து, அவருக்குத்திருமாலை தீர்த்தம் பிரசாதம்சடகோப முதலானவைகளுஞ் சாதிப்பித்து,விசேஷமரியாதைநடப்பித்தார்கள். அவைகளைக்கம்பநாடர்பெற்றுக்கொண்டு "அன்றுநான்பிறந்திலேன்,, எனத்திருமழிசைப்பிரான் அருளிச்செயலின்படி இப்போன சன்மங்களைத்தும்அறிவின்றி அவலமாய்க் கழித்ததனால் அப்பொழுதெல்லாம் அடியேன்பிறந்தேனல்லேன். இப்பொழுது சன்மசாபல்யமாகிக்கிருதார்த்தனும்படி ஆசாரிய கட[illegible]சம் வாய்க்கப்பெற்றமையால் இந்தச்சன்மமே உத்கிருஷ்ட[illegible]ான சன்மம் என்றுநெஞ்சங்குளிர்ந்து சரீரம்புளகித்துக்கண்[illegible]ளில் ஆனந்த[illegible]ம்பெருகப்பரவசமாயினர்.

கவி.

[illegible]ண்ணியசகாத்தமெண்ணூற் [illegible] ரேழச்சடையன்வாழ்வு,
[illegible]ண்ணெய்நல்லூர் [illegible] லேகம்பநாடன்
பண்ணியவிராமகாதை பங்குனி[illegible]
கண்ணியவரங்கர்முன்னே கவியரங்கேற்றினனே.

இத்ராமாயணம்பாடினஇடத்தையும்,அரங்கேற்றியதையும், காலத்தையும் குறித்துக்கோயிலிலுள்ள வைஷ்ணவர்களில் ஒருவர்பாடியது.

கவி.

அம்பிகேசின்னையாட்டி யமரர்கன்றழுதமீந்த
தம்பிரானென்னத்தானுந் தமிழிலேதாலைநாட்டிக்
கம்பநாடுடையவள்ளல் கவிச்சக்ரவர்த்திபார்மேல்
நம்புபாமாலையாலே நரர்க்குமின்றமுதமீந்தான்.

இது. கவிச்சக்ரவர்த்தியென்னும் பட்டப்பெயரைக்குறித்து மற்றொருவர்பாடியது.

கவி.

இம்பர்நாட்டிற்செல்வமெலாமெய்தியரசாண்டிருந்தாலும், உம்பர்நாட்டிற் கற்பகக்காவோங்குநீழலிருந்தாலும், செம்பொன்மேருவனையபுயத் திறல்சேர்ராமன்திருக்கதையில், கம்பநாடன் கவிதையிற்போற் கற்றோர்க்கிதயங்களியாதே.

என்பதுமுதலாச் மற்றுஞ் சிலர்பாடியசெய்யுள்களை ஸ்ரீமத்ராமாயணத்தின் பாயிரத்திற்காண்க.

இப்படி எல்லாமரியாதையும் பெற்றபின்பு கம்பநாடர் ஸ்ரீமந்நாதமுனிகளையும் மற்றுமுள்ள பிரபன்னர் முதலானவர்களையும் சேவித்து அவர்களிடத்தில் நியமனம்பெற்றுக்கொண்டு கோயிலிலிருந்து திருவெண்ணெய் நல்லூருக்குவந்து சடையப்பவள்ளலைக்கண்டு அரங்கேற்றிய செய்திகளையெல்லாம் விவரித்து அவர் உபசரிக்கப்பெற்று அங்கிருந்து உறையூருக்குப்போய்க் குலோத்துங்கச்சோழனைக்கண்டு நடந்தசெய்திகள்யாவும் ஆதியந்தமாகச்சொல்லினர். அரசன் அப்படியாவென்று ஆச்சரியப்பட்டு இதுவிஷயத்தில் வெகுபிரயாசப்பட்டீர். பட்டாலும்உமக்கும் காவியத்திற்கும் மிகுந்த சிறப்பேயென்றுசொல்லிச் சந்தோஷப்பட்டு இவ்விடத்தில் நானும் மற்ற அரசர்களும் சடையப்பவள்ளலும் உம்முடைய வாக்காலே ஒருமுறை இராமாயணமுழுதும் கிரமமாக உபநியசிக்கக் கேட்க வேண்டாவோவென, அப்படியே செய்பலாமென்றனர். உடனே சோழராஜன், பாண்டியன், சேரன், முதலானவர்களுக்குப்பத்திரிகைமூலமாக இது சங்கதியைத்தெரிவித்து வரவழைத்து ஒருபெரிய மகாவித்வ சபை கூட்டுவித்தனன். அரசர்களும் கற்றுவல்லோர்களும் கூடிய பெருஞ்சபைநடுவில் கம்பநாடர் எழுந்தருளியிருந்து கற்றுச்சொல்லிக் கையேடுபிடித்து வாசிக்கத் தாம் உபநியசிக்கத் தலைப்பட்டார்.

வரைக்காட்சிப் படலத்தில்-கவி.

பாத்தயானையிற்பதங்களிற்படுமதநாறக்,காத்தவங்குசங்கிமிர்ந்திடக்கால்பிடித்தோடிப், பூத்தவேழிலம்பாலையைப்பொடிப்பொடியாக்கிக்,காத்திரங்களாற்றலத்தொடுந்தேய்த்ததோர்களிறு.

என்னுந் திருவிருத்தத்தை உபநியசிக்கும்போது குடகதேசாதிபதி, கம்பநாடரைநோக்கித் தெய்வக்கவிஞரே! யானைகளின் சாதி[illegible]குணம், பிறக்கு[illegible]டம், முதலானவைகளையும் ஆராய்ந்தறிந்துவரும் பெருவழக்கமுடைய எங்களுக்கு இந்நாள்வரையும் எழிலம்பாலை யானை மதநாற்றம் நாறுகிறதென்றும் அதனால்அம்மதயானைக்கு விரோதியா யிருப்பதென்றும் தெரியாது. அது விஷயத்தைத் தாங்கள் அறிந்திருப்பதைக்குறித்து நானென்ன சொல்லுவேன்.

ஆந்திரபாஷையில் "ரவியெருகனிதாவுகவியெருகுனு,, என்பது வாஸ்தவந்தானென்று சொல்லிக் கம்பநாடரைமெய்ச்சிஅவருக்கு அதற்காக ஒரு கடகம் யானை வெகுமதிசெய்தான். (கடகம் பன்னிரண்டுயானை) எழிலைப்பாலை எழிலம்பாலை யென்மரீயது. இது வடமொழியிற் சப்தபர்ணமென்னப்படும்.

அப்பால் "தெருண்டமேவலர்சிறியவர்ச்சேரினுமவர்தம், மருண்டபுன்மைமை மாற்றுவதொருதலைவழக்கே, உருண்டவாய்தொறும்பொன்னுருநுழைத்துழைத்தோடி, இருண்டகல்லையுந்தன்னிறமாக்கியவிரதம்,, என்னும்பாடலை உபநியாசஞ் செய்யும்போது கற்றறிந்த மேலோர் கல்லா மூடமதிகளைச் சேரார் சேர்ந்தால் அவர்களுடைய பேதைமையைமாற்றித் தங்களைப்போல அறிவுடையவர்களாகச் செய்துகொள்வார்களென்ற இது உம்மிடத்திலேதான் கண்டேனென்று சோழன்சொல்லினன். கருணாகரபாண்டியன் அஃதென்னவென்று கேட்கச் சடையப்பமுதலியார் சொல்லத்தொடங்கினர்:

ஒருகாலத்தில் தன்பெண்சாதி அளவில்லாத புலவர்கள் சோழராஜன்மேல் கவிபாடிப் பரிசுபெற்று அநாயாச சீவனம்பண்ணுகிறார்களே நீயும் ஒருகவிபாடி அப்படிப் பரிசுபெறலாகாதாவென்று சொல்லக்கேட்டு விறகுதலைய னொருவன் அவனை நோக்கி எனக்குப் பாடத்தெரியாது இதோகற்றுக்கொண்டு வருகிறேனென்று போய் வீதியில் சிறுபிள்ளைகள் விளையாடுகையில் சொன்ன "மண்ணுணிமாப்பிள்ளையே,, என்பதைக் குறப்படுத்திக்கொண்டு அப்புறம் செல்லுகையில் ஒரு காகம் கா வென்று கத்தக்கேட்டுக் காவிறையேயென்றும், சோலையில் குயில்கூவக்

க்கவேண்டும். என்னென்று புலம்பி யிருக்கவேண்டுமென்று ப லவாறாக எண்ணி அப்பிராட்டிபக்கல் விசேஷ பக்தியுடையவ ர்களாதலால் தங்கள்மனங்குழைய முகம்வாட மெய்சோரக் கண்ணீர்பெருக அலறி அழுதார்கள். அதுகண்டருளிய கம்பநா டர் கற்றுச்சொல்லியை மருத்துப்படலமெடுத்துவாசிக்கச்சொ ல்லி, திருவடி சஞ்சீவிகொண்டு வந்தாரென்றும் அந்தவாடைப ட்டு இறந்தவர்களெல்லாம் உயிர்பெற்றெழுந்தார்க ளென்றும் உபந்யாசஞ்செய்தனர். அழுதவர்கள்யாவரும் துக்கமாறிக் க ளிப்படைந்தனர்கள்.

சோழராஜன் இவ்வதிசயம் குலசேகராழ்வார் ஸ்ரீமத்ராமா யணகாலக்ஷேபஞ் செய்தவாறுயிற்றென்றுசொல்லி நகைத்தா ன். சபைதியுள்ளும் அரசன் அது எவ்வாறென்றுவினவ, கம்ப நாடர் குலசேகராழ்வாரென்பவர் ஸ்ரீமத்ராமாயண காலக்ஷே பம் செய்துவருகையில், ஆரணியகாண்டத்தில் சூர்ப்பநகி மூக் கறுப்புண்டு கரதூஷணதியரிடத்திற்போய் முறையிட்டுக்கொ ள்ள, அதி உக்கிரமாய் எண்ணிறந்த துஷ்டசேனைகளைக் கூட்டி க்கொண்டு எதிர்த்தனர்கள். அந்தசமயத்தில் தமக்கொருவருந் துணையில்லாமல் சுவாமியும் அவர்களை எதிர்த்தனரென்று சொ ல்லக்கேட்டு ராமபிரான்பக்கல் அதிபக்தி பாரவசியராகையா ல், நெடுநாளைக்குமுன் நடந்தசரித்திரம் அன்றுநடக்கிறதாக எ ண்ணிச் சுவாமி தனித்திருக்க இளையபெருமாள் எங்கேசென் றனரென்றுகேட்க, பௌராணிகர் ஐயா? பிராட்டியாரொழுந் தருளியிருக்கும் பர்ணசாலையண்டை காவலாயிருக்கும்படி ரகு நந்தனர் நியமித்தனர், அந்நியமனத்தின்படி அவர் அங்கு இரு ந்தனரென்று சொல்லக்கேட்டவுடனே மந்திரிகளுடைய தந்தி ராலோசனையால், இரண்டு வைஷ்ணவர்கள் ஆழ்வாருக் கெதி ரேவந்து, சுவாமிபாதசாரியாயும், தனித்தவராயும், இருக்கிறு ரென்று அறுதயித்து உக்கிராகாரமாய்த்தமது சேனையைப்ப டையெடுக்கும்படி கட்டளையிட்டுத் தாமும் போர்க்கோலம்பூ ண்டு, அச்சேனைகளுக்குப் பின்னேசெல்லுகையில் ஸ்ரீ ராமபிரா னானவர் கரதூஷணதியர்களையும் அவர்களுடைய சேனைகளையு ம் ஜயித்துத் தேவர்கள் புஷ்பமாரிபெய்யப் பர்ணசாலைக்கு மீ ண்டுவந்தாரென்ற சுலோகங்களை எடுத்துக் கூறினர்கள். ஆழ் வார் அதுகேட்டுக் கோபாவேசமாறித் தெற்குநோக்கிப்போன ஸ்தோமத்தைத் திரும்பிவரும்படி நியமித்தாரென்றுகூற, சபை பதி குலசேகராழ்வாருக்கு சர்வேசுரன்பக்கல் பரமபக்தி தலை யெடுத் திருக்கவேண்டும், அது அவருக்கும். "அன்புபெருகை யரும்பேறெனக்கென்றுன்,, என்ற பிரகலாதாழ்வானுக்குமன் றி மற்ற ஆருக்குண்டென்று மனநெகிழ்ந்து புளகமுற்றான்.

இவ்வாறு சிறையிருந்தவளேற்றஞ் சொல்வதாகிய ராமாய ணத்தைத் தெய்வப்புலமைக் கம்பநாட்டாழ்வார் உபந்யாசஞ் செய்து முடித்தபின்னர், சோழன் கம்பநாடருக்கு விலையேறப் பெற்ற ஆடையணிகளையும் நிலங்களையும் வெகுமதிசெய்து,

கவி. தராதலத்திலுள்ள தமிழ்க்குற்றமெல்லாம்
அராவுமரமாயிற்றன்றே - இராவணன்மேல்
அம்புநாட்டாழ்வா னடிபணியுமாதித்தன்
கம்பநாட்டாழ்வான் கவி.

என்றதிகவியுமொன்று பாடித்தந்தனன். கருணாகரபாண்டி யன், தானும் அவ்வாறு நல்லவெகுமதிகள்செய்து,

கவி. தரலாற்றுங்கவிச்சக்கரவர்த்திசெய்படாலும்முடைமை கோக்கி, வலாற்றுமுறையினியற்றியமூணர்ந்தமுதியோரு மற் றுனோரும், முரலாற்றுங்கடற்பாரிற் கம்பநூற்கிரமுதுசொன் மொழிபவன்ளேற, கொலாற்றுமால்சங்கமொக்குமெனின் யா ம்வெறுப்பேம்பலாமால்.

என்றதிகவியுங் கொடுத்தான். ஔவைமுதலிய வித்வஜன ர்களும் ஆதிகவிகள் பாடிக்கொடுத்தனர்கள்.

இவ்விதந்தங்கசோழன் ராமர்பட்டாபிஷேக மகோற்சவத் தை ஒருபடத்தில் எழுதுவித்துத் தன்னரண்மனைக்குச் சமீபத் தில் பட்டாபிஷேகமண்டபமென ஒருமண்டபங் கட்டுவித்து, அதைச்சுவர்க்கம்போலச் சிங்காரஞ்செய்து நடுவில் பதமராக பீடத்தின்மேல் அப்படத்தை யெழுந்தருளப்பண்ணுவித்து, ஸ்ரீ வைஷ்ணவர்களைக்கொண்டு ஆராதித்து, ஸ்ரீமத் கம்பராமாய ணத்தைப் படத்தின் சமீபத்தில்வைத்துச் சகந்தபுஷ்பஞ்சாத் தி பின்புபொன்மயமாகிய தண்டிகையின்மேல்வைத்துச்சோ டச உபசாரத்தோடு முன்னேகொண்டு செல்லப் பின்னேசுவி ச்சக்கரவர்த்திக்கு உயர்ந்தபட்டாடை தரித்துச் சங்குசக்கராங்க த்தகளும், நவரத்தினகண்டியும்,வச்சிரபதக்கமும், முத்துமாலை யும், தங்கக்காப்புக்கொலுசுமிட்டுச் சந்தனபுஷ்ப தாம்பூலமுங் கொடுத்துச் சப்த லட்சண முடைய பட்டத்துயானையின்மேல் பொன்னம்பாரிவைத்து அதன்மீது அவரை ஏற்றி காளுவிதவா த்தியங்கள் முழங்கத் தன்மந்திரி பிரதானியர்கள் சாமரம் போ டச்சிறப்பாகக் கிராமபிரதட்சிணம் செய்வித்து அவருக்குச்சுவ த்திரம்,சாமரம், திருச்சின்னம், முதலிய அநேகவிருதுகளுங் கொடுத்து,

கவி.

வாழ்வார்திருவெண்ணெயீ நல்லூர்ச்சடையப்பன்வாழ்த்து பெ றத், தாழ்வாருயரப்புலவோரகவிருடானகலப், போழ்வார் தி ரி ஞதித்தெய்வப்புலமைக்கம்பநாட், டாழ்வாரடியைச்சிந்தி ப்பவர்க்கியாது மரியதன்றே.

என்றதிகவியுஞ் செய்துவாசித்துப்பிராமணர்களுக்குக்கோ தான பூதானங்களும் கவீசுரர்களுக்குப் பலவித வெகுமானங் களுஞ்செய்து அரசர்கள் முதலானவர்களுக்குத்தக்கவாறு மரி யாதைபண்ணி விடைகொடுத்தனன். அவர்களுக்குள், சிற்சிலர் போம் பொழுது ஸ்ரீமத்கம்பராமாயணத்தைப் பார்த்து ஒவ்வொ ருபிரதி எழுதுவித்துக்கொண்டுபோனார்கள்.

கம்பநாடர் ஜீவந்தவராயிருந்தகாலத்தில் எப்பொழுதாவ து எவ்விடத்துக்காயினும் போகவரவேண்டியிருந்தால் முன் போலக் கால்நடையாகப் போகாமல், ராமாயணத்தை உபந் யாசஞ்செய்தபோது ஆகந்தித்துக் கருணாகரபாண்டியன்கொடு த்த தந்தத்தாற்செய்த தண்டிகையின்மேல் ஏறி, நுலோத்துங் கச்சோழன் வியந்துகொடுத்த சுவேதசந்திரவகவிக்கவும், சா மரம்வீசவும், திருச்சின்ன முதவும், மற்றும்பற்பல விருதுகள் பிடிக்கவும், குடகதேசாதிபதி கொடுத்தயானைகளும், மாறுவா டித் தேசத்தரசன்கொடுத்தஒட்டகங்களும், சிந்துதேசத்திறை வன் கொடுத்தகுதிரைகளும், ஆந்திரதேசாதிபதி கொடுத்தகண் டவாள எருதுகளுஞ் சேர்ந்துமுந்து அபுலவர்களும், கர் ்நாடதங் களுக்கு ஆதுரானவாகனங்களின் மேலேறிக்கொண்டுபெருங் கூட்டமாகச் சூழ்ந்துவருதல் அரசனுடைய தண்டுவருவது போல வாரப்பிரயாணம்பண்ணுவதுண்டு. இந்தக்கூட்டம்போகிற சூரு திரமார்க்கங்களில் இவைகளுக்குவேண்டிய ஆகாரங்களை அநேக ங்குள்ள சோலைகள், தோப்புகள், கொல்லைகள், கழனிகளில்வே ண்டியமட்டும்பெற்றுக்கொள்வதற்குத் தடையில்லை. அந்தஅஷ் டத்தை வருஷவாரியில் அந்தந்தத்தேசத் தரசர்கள் தங்களுக் குவருஷமேல்வாரத்தில் கம்பநாடர் போனவழிகண்டுகழித்து இவ்வளவென்று கழித்துக் குடிகளுக்குக் கொடுப்பது பெரு வழக்கமாயிருந்தது.

முத்தமிழுணர்ந்தமெய்த்தகைப்புலவரும்
பிடுகெழ்இயகீடுவான்செல்வரும்
திரமெற்பொறுக்குஞ்செழுமலரெனவும்
கற்போர்காமுறுங்கற்பகமெனவும்
விளங்கிச்சென்னைக்கல்விச்சங்கத்தில்.

தமிழ்ப்புலமைநடாத்தும், இயற்றமிழாசிரியராகிய அஷ்டாவ தானம், வீராசாமிசெட்டியாரவர்கள் எழுதியவினோதரசமஞ் சரியென்னும்நூலில்இச்சரித்திரம்சுருக்கமொழியக்காணலாம்.

**ஸ்ரீராமாயண அரங்கேற்றற் சுருக்கம் - முற்றிற்று.**

கம்பநாட்டாழ்வார் திருவடிகளேசரணம்.

ஸ்ரீராமஜெயம்.

ஹரிஹரஹிரண்யகர்ப்பேப்யோநமஃ.

ஸ்ரீசீதாலட்சுமண பரதசத்துருக்ந அநுமத்சமேத
ஸ்ரீராமசந்த்ர பரப்பிரம்ஹணே நமஃ.

# ஸ்ரீமத்கம்பராமாயணவசனம்.

## பாலகாண்டம்.

### காப்புகள்.

தருகைநீண்ட தயாதன்றுன்றரும், இருகைவேழத் திராகவன்றன்கதை......................*
திருகைவேலைத் தரைமிசைச்செப்பிடக், குருகைநாதன்குரைகழல்காப்பதே..............(௧)

அஞ்சிலே யொன்றுபெற்று னஞ்சிலே யொன்றைத் தாவி, அஞ்சிலேயொன்றுருக வாரியர்க்காகவேகி, அ ஞ்சிலேயொன்றுபெற்ற வணங்கைக்கண் டயலாரூரில், அஞ்சிலேயொன்றைவைத்தா னவனெம்மையளித்துக் காப்பான்..................................(௨)

பொத்தகம்படிகமாலை குண்டிகை பொருள்சேர் ஞா ன, வித்தகந்தரித்தசெங்கை விமலையை யமலைதன்னை, மொய்த்தகொந் தளகபார முகிழ்முலைத் தவளமேனி, மைத்தரு கருங்கட்செவ்வா யணங்கினை வணங்கல்செ ய்வாம்..................................(௩)

பயன்.

நாடியபொருள்கைகூடும் ஞானமும்புகழுமுண்டாம்..*
வீடியல்வழியதாக்கும் வேரியங்கமலைநோக்கும் .......*
நீடியவரக்கர்சேனை நீறுபட்டழியவாகை..................*
சூடியசிலையிராமன் தோள்வலிகூறுவோர்க்கே.....(௧)

வேறு.

நன்மையுஞ்செல்வமும் நாளும்நல்குமே ................*
தின்மையும்பாவமுஞ் சிதைந்துதேயுமே....................*
சென்மமுமரணமு மின்றித்தீருமே......................*
இம்மையேராமவென் றிரண்டெழுத்தினால்.........(௨)

வடகலைதென்கலை வடுகுகன்னடம்.........................*
இடமுளபாடையா தொன்றிலாயினும்......................*
திடமுளரகுகுலத் திராமன்றன்கதை.......................*
அடைவுடன்கேட்பவ ரமரராவரே......................(௩)

வென்றிசேரிலங்கையானை வென்றமால்வீரமோத ...*
நின்றராமாயணத்தில் நிகழ்த்திடுகதைகட்மில் ...[மும்
ஒன்றினைபடித்தோர்தாமு முரைத்திடக் கேட்டோர்தா
நன்றிதுவென்றோர்தாமும் நரகமதெய்திடாரே....(௪)

இராகவன்கதையி லொருகவிதன்னில் .........*
பாதத்தினை யுரைப்போர்...................*
பாராவருமலரோ னுலகினிலவனும் ............*
பன்முறைவழுத்தவீற் றிருந்து....................*
புராதனமறையு மண்டர்பொற்பதமும் .........*
பொன்றுநாளதனினும் பொன்று.............*
அராவணயமல னுலகெனும்பரம..............*
பதத்தினையணுகுவ ரன்றே..................(௫)

வேறு.

இறுவாம்பினிராமவென்றிருமபர ..........................*
திறுவரென்பதுநிசயமாதலான்.............................*
மறுவின்மாக்கதைகேட்பவர்வைகுந்தம்.................*
பெறுவரென்பதுபேசவும்வேண்டுமோ ..............(௬)

அன்னதான மகிலநற்றானங்கள்..........................*
கன்னிதானங் கபிலையின்தானமே.......................*
சொன்னதானப் பலமெனச்சொல்லுவர் ...............*
மன்னிராம கதைமறவார்க்கரோ!....................(௭)

வேறு.

ஆதியரியோகம நராயணர்திருக்கதை............*
அறிந்தனுதினம் பரவுவோர்.....................*
நீதியனுபோகநெறி நின்றுநெடுநாளதி.........*
னிறந்துசெக தண்டமுழுதுக் ..................*
காதிபர்களாயரசு செய்துளம்நினைத்தது .........*
கிடைத்தருள் பொறுத்துமுடிவில்.........*
சோதிவடிவாயழிவில் முத்திபெறுவாரென....*
வுரைத்தசுருதித் தொகைகளே...........(௮)

வேறு.

இனையநற்காதைமுற்று மெழுதினோர் வியந்தோர்கற் றோர், அனையதுதன்னைச்சொல்வோர்க் கரும்பொருள்

கொடுத்துக்கேட்போர், களைகடற்புடவிமீதே காவலர்க்கரசாய்வாழ்ந்து, வினையமதறுத்துமேலாம் விண்ணவன் பதத்திற்சேர்வார்.......................... (௯)

## சிறப்புப்பாயிரம்.

உலகம்யாவையுந் தாமுளவாக்கலும்....................*
நிலைபெறுத்தலு நீக்கலுநீங்கலா....................*
அலகிலாவிளை யாட்டுடையாரவர்....................*
தலைவரன்னவர்க் கேசரணங்களே.................... (௧)
சிற்குணர்ந்தர் தெரிவருநன்னிலை ....................*
எற்குணர்ந்தரி தெண்ணியமூன்றனுள்....................*
முற்குணத்தவ ரேமுதலோரவர் ....................*
நற்குணக்கட லாடுதலன்றரோ.................... (௨)
ஆதியந்தமரியென யாவையும் ....................*
ஓதினாரல கில்லனவுள்ளன....................*
வேதமென்பன மெய்நெறிநன்மையன் ....................*
பாதமல்லது பற்றிலர்பற்றிலார்.................... (௩)
ஓசைபெற்றுயர் பாற்கடலுற்றொரு ....................*
பூசைமுற்றவு நக்குபுக்கென....................*
ஆசைபற்றி யறையலுற்றேன்மற்றிக் ....................*
காசில்கொற்றத் திராமன்கதையரோ.................... (௪)
நொய்தினொய்யசொன் னூற்கலுற்றேனெனை ....................*
வைதவைவின் மராமரமேழ்தொளை....................*
எய்தவெய்தவற் கெய்தியமாக்கதை....................*
செய்தசெய்தவன் சொன்னின்றதேயத்தே.................... (௫)
வையமென்னை யிகழவுமாசெனக் ....................*
கெய்தவும்மிதி யம்புவதியாதெனில் ....................*
பொய்யில்கேள்விப் புலமையினோர்புகல் ....................*
தெய்வமாக்கவி மாட்சிதெரிக்கவே.................... (௬)
தேவபாடை யினிக்கதைசெய்தவர் ....................*
மூவரானவர் தம்முளுமுந்திய ....................*
நாவினாருரையின்படி நான்றமிழ்ப்....................*
பாவினாலிதுணர்த்திய பண்பரோ.................... (௭)
துறையடுத்தவிருத்தத் தொகைக்கவிக்....................*
குறையடுத்த செவிகளுக்கோதில்யாழ்....................*
நறையடுத்தவசுணநன் மாச்செவிப் ....................*
பறையடுத்தது போலுமென்பாவரோ.................... (௮)
முத்தமிழ்த்துறை யின்முறைபோகிய ....................*
உத்தமக்கவிகட் கொன்றுணர்த்துவென் ....................*
பித்தர்சொன்னவும் பேதையர்சொன்னவும் ....................*
பத்தர்சொன்னவும் பன்னப்பெறுபவோ.................... (௯)
அறையுமாடரங் கும்மடப்பிள்ளைகள் ....................*
தறையிற்கீறிடிற் றச்சருங்காய்வரோ ....................*
இறையுஞான மிலாதவென்புன்கவி ....................*
முறையினாலுணர்ந் தாருமுனிவரோ .................... (௰)
நடையினின்றுயர் நாயகன்றோற்றத்தின் ....................*
இடைநிகழ்ந்த விராமாவதாரப்போர்த் ....................*
தொடைநிரம்பிய தோமறுமாக்கதை....................*
சடையன்வெண்ணெய் நல்லூர்வயிற்றந்ததே...... (௰௧)

பாயிரமுற்றும்.

## நூன்முகம்.

திருவயோத்தியாபுரியில் தசரதசக்கரவர்த்தி இராச்சியபாரம் செய்கிறகாலத்தில் மேகமானது, விபூதிமயனாகிய சிவனைப்போல வெளுத்தநிறமாய் ஆகாயத்தின்கண் பரவி சமுத்திரத்திலிறங்கி பானஞ்செய்து, ஸ்ரீமகாலக்ஷுமிபதியாகிய மகாவிஷ்ணுவைப்போல கறுத்தநிறமாய்த் திரும்பியது, சிவனுடைய மாமனாகிய இமயபர்வதராஜன் சூரியனால் வெப்பத்தை யடைந்தனனென்று நினைத்து குளிர்ந்த ஜலத்தினால் அபிஷேகஞ்செய்துவைக்க வெழும்பினதுபோல வெழுந்து விசாலம்பொருந்திய அப்பர்வதத்தின்பேரில் மழைகளைப்பொழிந்தது எப்படியிருந்ததென்றால், தியாகிகள் தங்களிடத்திலிருக்கிற திரவியங்களெல்லாம் நாளைக்கு வேணுமென்று வைத்துக்கொள்ளாமலெப்படி வுதாரத்துவமாய்க் கொடுப்பார்களோ அப்படிப்போல தாரைகளை வருவித்தன. அந்தமழையின் பிரவாகமானது மாறுபிமானமிக்கு தருமத்தைநோக்கி மனுநீதி வழாது செங்கோல் செலுத்திய அரசனுடைய கீர்த்தியைப்போலவும், இயானத்தையுடைய பெரியோர்கள் காதினால்வழங்குந் தானம்போலவும், தழைத்து அப்பர்வதத்தினுச்சிதவிர மைற்றுள்ள வஸ்துக்களையெல்லாம் வாரி இழுத்துக் கொண்டு வருவதைப்பார்த்தால் விலைமாதரை யொத்திருந்தது. அவ்வெள்ளமானது ரத்தினமும் - முத்தும் - பொன்னும் - மயிலிறகும் - யானைக்கொம்பும் - அகிற்கட்டையும் - சந்தனமும்-இன்ன மனேகவிதவஸ்துக்களையுமேந்திக்கொண்டு வருவதினால் வர்த்தகரைப்போலவும், புஷ்பமும்-மகரந்தமும் - தேனும் - யானையின் மதமும் - பொற்சுண்ணங்களும் பொருந்தி வருவதை யோசிக்கில் ஆகாயத்தின்கண் பொருந்திய வில்லைப்போலவும், மலைகளையும் - மரங்களையும் - பறித்துக்கொண்டு இலைமுதற் பொருளனேகங்களை யேந்தி வருவதைப்பார்த்தால் கடற்கு அணைகட்டப் புறப்பட்ட வெற்றிபொருந்திய வானரக்கூட்டம்போலவும், ஈக்கள் - வண்டுகள்மொய்க்க அத்துகடந்து வலிமிகுந்து தெளிவில்லாமல் கலங்கலாய் தேக்கவிட்டுக்கொண்டு வருவதால் கட்குடியர்களைப் போலவும், யானையும் பலவிதமணிதர்களையும் கொடிகளையும் இழுத்து ஆர்ப்பரித்து ஆன்றுக்கொண்டு வருவதால் சமுத்திரத்தின்மேல் சண்டைசெய்யப் போகிறதுபோலவு மிருந்தது. இவ்விதவெள்ளமானது சூரியகுலத்திற்பிறந்த அளவில்லாத வேந்தர்களுடைய நல்லவொழுக்கத்தின்படி பெயர்கொண்டு சகலஜீவராசிகளுக்குந் தாய் ஸ்தானத்தை வொற்றிராநின்ற சரயுநதியில் அதிகோஷத்துடன் வந்து பிரவேசித்து குறிஞ்சிநிலப் பெண்களிடித்த குங்குமம்-வாசனைப்பண்டம்-ஏலம்-சந்தனம்- கஸ்தூரிமுதலிய பொடிகளின் பரிமளத்தோடு வேடர்கள்வாழும் பாலைநிலத்திற்பரவ அந்நிலத்து ஸ்திரீகள் வோடத்தக்கதாக அவ்வேடர்களுடைய வில்லும்-அம்புமுதலியதை இழுத்துக்கொண்டு வருகிறதன்மையினால் குறுநிலமன்னர்போலவும், முல்லைநிலத்திற்பரவி அவ்விடத்திலிரா



னிற பால்-வெண்ணெய் - நெய்-உறி - முதலிய ஆயர் மாதருடைய வஸ்திரங்களையும் வாரிக்கொண்டு வருதலால் காளிங்கனடனஞ்செய்த கண்ணனைப்போலவும், மதமழையையுடைய யானைபோலவும் மருதநிலத்தில் வந்துசேர்ந்தது.

குறிஞ்சி-முல்லை-மருதம்-நெய்தல்-இந்நான்கு நிலங்களிலும் உற்பத்தியாகிய எண்ணிறந்த பொருள்களெல்லாம் இடம்விட்டு இடத்திலிருப்பதால் கதிக்குச்செல்லவொட்டாத வினைபோலவும், ஒருகால்வாயிலிருந்து பிரிந்த கூட்டம்போலவும், மலையினிடத்திற்பிறந்து கடலினிடத்திற்சேர்ந்த வெள்ளம்வரம்பற்ற வேதங்களால சொல்லுதற்கரிதாகிய பொருளின்னதென்று பூர்வத்திலொன்றாகவிருந்து, பலசமையஞ் சொல்லுங்கடவுளைப்போல, எங்கும்வியாபித்து மகரந்தங்களை சிந்தும் சோலைகள், சண்பகக்காடுகள், தடாகங்கள், வயல்கள், தேகங்கள்தோறும் பொருந்திய வுயிர்போலவும் பரவியிருந்தது.

இச்சரயுநதிசூழ்ந்த கோசலநாட்டிலுள்ள பள்ளர்களும் பலவாறாக அந்நதியின் ஜலத்தை கட்டிக் கொண்டு கழனிகள்தோறும் உழுதுவிளையை விளைத்துநாற்றுநட்டு பலன்படுதற்கு முன்னமே - மஞ்சள் - இஞ்சி - முதலிய இரசகந்தாய பயிர்களைச் செய்துகொண்டுதங்கள்தங்கள் வீட்டில் சேர்த்துக் கொண்டதல்லாமல், ததியில்மேற்பலனையும் போர்கட்டிவண்டியின் பேரிலேற்றிக்கொண்டு களஞ்சியங்களில் சேகரப்படுத்தி வைத்துக்கொண்டு - தேவாலயம் - பிராமணர் - அதிதிகள்-வித்வான்கள் - யாசகர்முதலிய பலருக்கும் உபயோகமான கைங்கரியங்களை செய்துகொண்டும், விருந்துமுதலிய உபசாரங்களும் செய்துகொண்டு தங்கள் தங்கள் பந்துஜனங்களோடு வாழ்ந்திருப்பார்களாதலால் அந்நாட்டில் வறுமை, பகைவர், பொய்யுரை இவைகளுக்கிடமில்லாத பலசெல்வங்களை யுடையவர்களா யிருந்தார்கள். அந்நாட்டின் ஸ்திரீகளினுடைய கற்பினாலும் அன்பினாலும் தர்மம் ... மழையும் குறைவில்லாமல் நடந்துவந்தது.

இவ்வளவு சிறப்போடுகூடிய கோசலை நாட்டினுடைய அயோத்தியாபுரியானது - ஸ்ரீபூமிதேவிக்குத் திருமுகமண்டலம் போலவும், திலகம்போலவும், கண்போலவும், திருமங்கலம்போலவும், மார்பிலசையாநின்ற முத்தாரம்போலவும், உயிரிருக்கிற இருதயஸ்தானம்போலவும், ஸ்ரீமகாலக்ஷுமி வாசமாயிருக்கும் பொற்றாமரைக் கமலம்போலவும், ஸ்ரீமகாவிஷ்ணுவினுடைய கவுஸ்துவாபரணம் வைத்திருக்கும் பொற்பெட்டிபோலவும், உலகத்துக்கெல்லா மேலாகிய ஒரு உலகம்போலவும், ஊழிகாலப் பிரளயத்தில் சகலஜீவகோடிகளும் வந்து சேர்ந்திருக்கிறதற்கு வொருவீடுபோலவும், பிரகாசித்துக்கொண்டு மிகுந்தவுயர்ச்சியும் விஸ்தீரணமும் பொருந்தியகோட்டையும், பாதாளமட்டு மாழ்ந்திருக்கிற அகழும், அனேக மாட மாளிகை கூடகோபுரங்களுடனே கோடி சூரியப்பிரகாசம்போல் விளங்கிக்கொண்டு பலபல விதங்களான வஸ்துக்களும் நிறைந்திருக்கிற கடைவீதிகளும், சகலவேத சாஸ்திரபண்டிதரான பிராமணவீதிகளும், வீராதிவீரரான ராஜவீதிகளும், குபேரனுக்குச் சமதையான வைசியவீதிகளும், அனேகஞ் சாம்பிராச்சியங்கள் உண்டான சூத்திரவீதிகளும், வித்தியாரம்ப ஸ்தானங்களும், ஆனைகளிருக்கிற கூடங்களும், குதிரைத்திரள்கள் கட்டியிருக்கிற பந்திகளும், நாடகசாலைகளிதுமுதலான சம்பிரமசிங்காரங்கள் நிறைந்து நாலுவேதங்கள்போல நாலுவாயிலுண்டாய் பிரகாசித்திருக்குந் தேவேந்திரனுடைய அமராவதியும், குபேரனுடைய அளகாபுரியும் மிந்த அயோத்திமாநகரத்துக்குச் சமானமாகமாட்டாமல் வெளுத்துப்போயிற்றென்று லங்காபட்டணத்துக்கு நிகரான பட்டணம் வேறே யெங்கேயிருக்கின்றது. உப்பரிகைகள்தோறு மனேகவர்ணமுள்ள கொடிகளும், பூரணகும்பங்களும், மகரதோரணங்களும், நிறைந்திருக்கும். வீடுகள்தோறும் மங்கலகீதங்களும், பேரிகை முதலான மேளவாத்தியங்களும், சின்னங்கள்-பூரி-காளமுதலான ஆர்ப்பரிப்பு மிகுந்திருக்கும். பராபரவஸ்துவான ஸ்ரீராமன்முனே மஹாலக்ஷுமியுடனே யனேககாலங் கூடியிருந்து ராச்சியபாரம் பண்ணிக்கொண்டிருந்த ஸ்தலம் இதுவானதற்கு சிங்காரமும் பெருமையும் மகிமையும் பிரமதேவனாலேயுஞ் சொல்லக்கூடாத பிரதாபங் கொண்டிருக்கிற பட்டணத்தினுடைய சிங்காரத்தைப் புத்தியினால அடியேன் எவ்வளவு சொல்லப்போகிறேன். சுவர்க்கம் மத்தியம் பாதாளம் மூன்றுலோகத்திலேயும் சமானமில்லாத சுந்தரத்தையுடைய நகரமாகவிருந்தது.

இந்நகரத்துக் கரசனானவன் இராஜாதிராஜன். அவன்றன்செங்கோலினுடைய பிரஸ்தாபமேழுலோகமுஞ் செல்லும்படியான கீர்த்தியை யுடையவன். இக்காவியத்திற்குக்கர்த்தாவாகிய ஸ்ரீராமனைப் பிள்ளையாகப்பெற்றதர்ம மூர்த்திசுரூபன், அறிவு-கிருபை-தருமம்-பொறுமை-பலம்-சவுரியம்-உதாரத்துவம் . இவை முதலிய உத்தம குணங்களியாவற்றையு மடைந்தவன். யாகாதிகிரியையெல்லாம் செய்து முடித்தவன். உலகத்திலுண்டாகிய உயிர்களுக்கெல்லா மன்பில்தாயைப்போலவும் நன்மையில் தவத்தைப் போலவும் நற்கதிக்குச்செலுத்துவதால் பிள்ளைபோலவும் வியாதிகட்கு மருந்துபோலவும் நுட்பமாகிய கேள்விகளைக் கேட்குங்காலவரவர்கள் அறிவு போலவு மிருந்தான், தரித்திரக்கமென்கிற சமுத்திரத்தைத் திரவியம் கொடுத்தே விலக்கினான். கியானசமுத்திரத்தை யறிந்தேவிட்டான். பகையென்கிற சமுத்திரத்தை வாளினால்கோபித்தேயொழித்தான். சம்பத்தென்கிற சமுத்திரத்தை அனுபவித்தே மூழ்கினான். வெள்ளமும் - பக்ஷியும் - மிருகமும் - ஜீவியருடைய மனமும் ஒருவழியாய் செல்லும்படி சக்கரந்தனை யுத்தினவன் உயிர்களுக் கெல்லாம் தானொரு சரீரம்போலவிருந்து ரக்ஷித்துக் கொண்டு நிகாவசிரோமணியா யிருக்கிறவன். பரராஜர்கள் திறைகொண்டு காணவருகிறபோது அவரவர்கள் சாஷ்டாங்கமாகத் தெண்டனிடும்போது அவர்கள் கிரீடசிகரங்கள்பட அதிஞ்சே

துலங்கியிருக்கிற வீரகண்டாமணி தரித்திருக்கிறபாதாரவிந்தனை மகானுபாவனுடைய நாமதேய மென்னவெனில் தசரதமஹாராஜன்.—இவனிவ்வளவுபிரதாபத்துடனே உலகத்தை வேலிபோல காத்து ராச்சியபாரஞ்செய்து வருதான்.

இந்த தசரதமகாராஜன் ஒருநாள் தன்னுடைய குலகுருவானவசிஷ்ட மகாமுனியைச் சாஷ்டாங்க மாகச் சேவித்து ஸ்வாமி அடியேன் ஒருவிண்ணப்பஞ் செய்கிறேனது கேட்டருள வேணுமென்று பயபக்தி யுடனே சொல்லுகிறான். ஸ்வாமி யென்னுடைய குலத்துக்குத் தாயுந்தந்தையும் தவமும் தெய்வமும் சகலமும் நீரே எங்களுடைய பெரியோர்கள் சூரியனுடைய பிரகாசத்துக்குச் சமானமான கீர்த்தியோடு ராச்சியபாரம் பண்ணிக்கொண்டு வந்தார்கள். அடியேனும் உம்முடைய கிருபையினாலே இதுவரைக்கு மப்படியே அறுபதினாயிர வருஷம் ராச்சியபாரம் செய்துக்கொண்டு வந்தேன். ரிஷிகளும், பிராமணரும், வருத்தமில்லாமலே சுகமாய் வாழ்ந்துவந்தார்கள். எனக்குப் பின்பு இவர்கள் வருத்தப்படுவார்களே யென்கிற கிலேசம் என்மனதிலே மிகவும் உண்டா யிருக்கின்ற தென்று தசரதமகாராஜன் சொல்ல பிரம புத்திரனாகிய வசிஷ்டபகவா னிருதயத்தில் முன்னடந்த ஒரு தேவரகசியத்தை நினைந்தா ரது என்ன வெனில் பூர்வத்திலே தேவேந்திரன் முதலான தேவர்கள் ராக்ஷதராலே வெகு உபத்திரப்பட்டு அந்த வுபத்திரந் தாளமாட்டாமல் காளகண்டனை சிவனுடனே சொல்லிக்கொண்டார்கள். அதை சிவன்கேட்டு அந்த ராக்ஷதரை நாம் சங்கரிக்கிற தில்லையென்று சொல்லி தம்மிடத்திற்குவந்த தேவர்களை யழைத்துக்கொண்டு பிரமதேவ னிடத்திற்குப்போய் தெண்டஞ்செய்து ராக்ஷதரால் தேவர்களுக்கு நேரிட்டிருக்கும் வருத்தத்தைச்சொல்ல அவரும் இவருக்கு உபசாரஞ்செய்து தானுங்கூடப் புறப்பட்டு மகமேரு பர்வதத்தி னுச்சியி லிருக்கிற நவரத்தினலங்கிருத சுவர்ன்ன மண்டபத்திற்போய்ச் சேர்ந்தமாத்திரத்தில் தேவேந்திரன் தன்னை முன்னொருகாலத்தில் இந்திரசித்து பாசக்கயிற்றினால் கட்டி இலங்காபுரிக்குக் கொண்டுபோனபோது பிரமதேவன் தன்னைமீட்டுக்கொண்டுவந்த சங்கதியைப் பார்வதி சமேதனாகிய சிவனுடைய திருவுளத்திற் படிக்குச் சொன்னான். அதற்கு இருபது கரங்களையும் பத்துத்தலையையுமுடைய இராவணன் பலத்தை யொடுக்கிறதற்கு எங்களா லாகமாட்டாது. ஆனால் திருப்பாற்கடலில் நீலமேக சாமள ரூபத்தோடு திருக்கண் வளர்ந்தருளும் கிருபாசமுத்திரமான ஸ்ரீமன் நாராயண னந்த ராக்ஷதரை சங்கரித்து நம்மிட இடர்களைத் தீர்க்கவேணுமே யல்லாமல் வேறே யுபாய மில்லையென்று பிரமதேவனுஞ் சிவனும்சொல்ல, அப்படியே திருப்பாற்கடலிலே யோகநித்திரை செய்கிற மரகத சுரூபனை தேவாதிதேவனை மனதில் நினைத்து அனேக விதமாக ஸ்தோத்தியஞ்செய்ய அப்போது பாகதியை இச்சித்தவர்கட்கு அருளும் ஸ்ரீமன் நாராயண ஸ்வாமி யெழுந்திருந்து பொற பர்வதம்போல பிரகாசித்திருக்கும் கருடவாகனரூடனாய் நீலமேக (சாமள) ரூபமான திருமேனியுமாய் மார்பிலே மின்னல்கொடிபோல மகாலக்ஷ்மியு மனேக செந்தாமரைக்காடு பூத்தாற்போல கரசரணாதிகளும் பிரகாசிக்க சூரிய சந்திரருக்குச் சமானமான சங்குசக்கரங் கையிலேந்திக்கொண்டு கரகமலங் குவித்துக்கொண் டிருக்கிற சிவ பிரமாதிகளுக்குப் பிரசன்னமானாரப்போதவர்கள் தேவர்களோடு வெழுந்திருந்து எதிரேபோய் திருவடிகளை சேவித்து அனேக விதமாகத் தோத்திரஞ்செய்து சந்தோஷ மென்கிற சாகரத்தில் மூழ்கினவர்களாய் தொழுகிறபோதெல்லாம் ஆனந்தக்களிப்பை யடைந்து நிருத்தஞ்செய்து அந்த பகவானுடைய மகிமைகளைப் பலவிதமாகச் சொல்லி துதிசெய்யும்பொழுது ஆனந்த மென்கிற வெள்ளப்புசித்து சகிக்கமாட்டாமல் இராக்ஷத நிறந்தாரகவென்கிற சந்தோஷப்பெருக்கினால் திருத்துழாய் பொருந்திய திருவடிகளைக் கிரமப்படிக்குத் தங்கள் தங்கள் சிரசில் தரித்துக்கொண்டார்கள் அப்பொழுது மகமேரு பர்வதத் துச்சியினின்று கருத்தமேக மிறங்கிவருவதுபோல் அப்பரமமூர்த்தி என்னை யடிமையாக வுடைய ஸ்ரீகருடபகவான் தோளைவிட்டிறங்கி சுவர்ன்னலங்கிருத மண்டபத்தின் மத்தியில் வைரத்த கசித ஜோதிமயமான சிங்காசனத்தி லெழுந்தருளிய பின்பு பிரமனோடு முனிகளும் சிவனோடு தேவேந்திரன் முதலிய தேவரும் சேர்ந்து அதிசயத்தோடு இருபுறத்திலு மிருந்து பகவானைப் பார்த்து மகாகொடிய பாவிகளாகிய இராக்ஷதர் செய்கிற உபத்திரவ துன்பத்தை பலவாறினுஞ்சொல்லி ஸ்ரீமகா லக்ஷ்மிபதி பத்துசிரசையுடைய இராவணன், அவன் தம்பி கும்பகர்ணன் முதலான இராக்ஷதரால் பூமியிலு மாகாயத்திலும் நடாத்தி வரா நின்ற யாகாதிகள் முதலிய தவங்க ளிளைக்கப்பட்டன. இனி பிழைக்குந் திறமு மில்லையென்று பெருமூச்செறிந்து சொல்லுகிறதாவது ஓ, ஸ்வாமி நாங்கள் கொடுத்த பலவரங்களினா லவ்விராக்ஷதர் [illegible]கம்மத்தி பாதல மென்கிற திரிலோகங்களையும் வசப் படுத்திப் போட்டார்கள். இத்தகியில் தங்களுடைய கிருபாநுக்கிரக மில்லாவிடி லோர் கணப்பொழுதி லிவ்வுலகத்தைப் பக்ஷித்துப் போடுவார்கள். எங்களா லக்கொடியபாவிகளாகிய வரக்கரை நாசப் படுத்துகிறதற்கு கூடமானதாகவிருக்கவில்லையென்று சிந்தாகுலராக விருந்தார்கள். அப்போது மிகுந்த பரிமளங்கமழும் துளபமாலை தாரனை ஸ்ரீமந் நாராயணமூர்த்தி சிவபிரமாதிகள் முதலிய தேவர்களைநோக்கி நீங்கள் பயப்படவேண்டாம், அந்த கபடவஞ்சகராகிய ராக்ஷதரை சங்கரித்து உங்களுடைய துன்பங்களைக் களைந்து ரக்ஷிக்கிறோ மென்று திருவாய் மலர்ந்தருளிய பின்னும் ஓர் வசனம் அநுக்கிரகஞ் செய்ததாவது, தேவர்கள் முதலிய நீங்களும் பூமியின்கண்போய் வனங்களிலும் — மலைகளிலும் — தடாகங்களிடத்திலும் — வானரங்களாகச் சேனையோடு பிறந்து சஞ்சரித்துக்கொண் டிருங்கள், கொடுமை யொத்த வானுடைய வரத்தையும் அவ்வரத்தினால்செருக்கடைந்த இராக்ஷதருடைய வாழ்வையும் பங்குராணஞ்செய்ய



நானும் — சங்கு — சக்கரம் — சேஷன் — இவர்கள் தம்பியர்களாக ரதகஜதுரக பதாதியையுடைய அயோத்தியா புரியையாளும் தசரத சக்கிரவர்த்தியின் புத்திரராக திருவவதாரஞ் செய்கிறோமென்று திருவாய் மலர்ந்தருளி ஆக்கியாபித்த கட்டளையை சிவபிரமாதிகள் முதலிய தேவர்கள்கேட்டு அதிகசந்தோஷ சாகரத்தில் ஸ்நானஞ்செய்தவர்களா யானந்த நிர்த்தஞ்செய்தனர்கள். மங்கல கீதங்கள் பாடினார்கள் இன்றையதினம் நம்மை ரக்ஷித்தனரென்கிற அதிக சந்துஷ்டியால் சுராதிபனாகிய தேவேந்திரன் எனது மனக்கிலேசம் தீர்ந்ததென்றான். சிவபிரமாதி இருடிகள் முதலிய தேவர்கள் எங்களுடைய சிரமம் இன்றே வொழிந்த தென்றார்கள். அந்த ஸ்வாமியும் ஸ்ரீகருடபகவான்மேலெழுந்தருளியபோனபின்பு, பிரமதேவன் தேவர்களைப் பார்த்து பூலோகத்தில் நான் முன்னமே சாம்புவந்தனாகப் பிறந்திருக்கின்றனன். ஆதலால் நீங்களும்போ யவ்வாறாக வுதித்திருங்க ளென்று சொன்னமாத்திரத்தில் தேவேந்திரன் நான் சத்துருக்களுக்கு வேரிடிபோல் வாலியாகவும் அவன்மகன் அங்கதனாகவும்பிறக்கிறேனென்றான். சூரிய னந்த வாலியினுடைய தம்பி சுக்கிரீவனாகப் பிறக்கின்றேனென்றான். அக்கினி எனது அம்சம் நீலனென்றான். வாயுநான் அநுமந்தனாகஜனிக்கிறேனென்றான். மற்றை தேவர்களெல்லாம் நாங்கள் வானரங்களாய் பிறந்திடத் தீர்மானித்தோ மென்றார்கள். திரிபுராந்தகனான பரமசிவன் நான் வாயுவின் மைந்த னநுமனென்றார். இவ்வாறாக விவர்களே அவதரிப்பார்களாகில் மற்றைதிக்கி லுள்ளோர்க்கு நாசமுண்டா? இராது — கிருபாநிதியான! ஸ்ரீமன் நாராயணன் நியமனப்படிக்கு பிரமதேவனும் காளகண்டனாகிய சிவனும் தேவர்களும் அந்தந்தப்பிரகாரமாய் பூமியில் இருண்டவனத்தில்வானரராக வவதரித்தார்கள். இவைகாரியங்களுக்கு கர்த்தாவாயிருந்தவர்க ளெவரிடம்போய்ச் சேர்ந்தனரென்கிற தேவரகசியத்தை யூக்கி யறிந்த வசிஷ்டபகவான் தசரத சக்கிரவர்த்தியை தமது கிருபாநோக்கத்தால் நோக்கி ஒரு வசனஞ் சொல்லுகிறார். ஓ, இராஜாதிராஜனே நீர் வருத்தப் படவேண்டாம் இவ்வீரேழு பதினான்கு லோகங்களிலும் செங்கோல்செலுத்தி அரசுசெய்யும் புதல்வனைப் பெறுவீர் ஆதலால் ஐயா! புத்திரகாமேஷ்டியாகஞ்செய்வீராகில் உமது மனவியாதி தீருமென்று சொன்னார். அதைக்கேட்டு ராஜாதிராஜனாகிய தசரதமகாராஜன் அதிக வானந்தத்தையடைந்து வசிஷ்டபகவானுடைய உபய சரணாரவிந்தங்களைச் சேவித்துக்கொண்டு ஸ்வாமி உம்மையேயடைந்த யெனக்குத் துன்பம் வருமா, வரமாட்டாது. ஆதலா லந்யாகத்தை நிறைவேற்றுதற்குவேண்டிய காரியங்களை அடியேனுக்கு அநுக்கிரகஞ்செய்தாலப்படியே நடந்துக்கொள்ளுகிறேனென்றனன். அதற்குவசிஷ்டபகவான் குற்றமற்றதேவர்களோடு மற்றோர்களையும்பெற்ற காசிபமகாரிஷியினுடைய புத்திரர்விபாண்டகருடைய பிள்ளையான, கங்காதரனையீசனும் புகழ்தற்கொத்த, கலைக்கோண்டு மகாரிஷியென்பவர், பின்னும் வேதசாஸ்திர பாண்டியத்துவத்தில் தனது பிதாவுக்கு நிகரானவர், மனுநீதி நெறி வாய்மை இவைகளில் பிரமதேவனுக்கு சமமானவர். மேலு மிவ்வுலகவாழ்க்கையின் தன்மையறியாத உத்தமசிரேஷ்டர் கலைமான் முகமாய் ஓர் கொம்புடனே பிரகாசித்திருக்கின்ற சிரசையுடைய மகாநுபாவர். ஆதிசேஷனால் தாங்கு மிவ்வுலகத்திலுள்ள மாந்தர்களை யிருகண்ணென்று நிர்மானித்தவர், மஹாதவத்தையுடையவர் பிரமதேவனும் சிவனும் புகழ்தற்கொத்த சாந்தசில குணமுடையவராதலா லவரா லிவ்வேள்வி முற்றுப்பெறுமாகில் புதல்வருண்டாமென்றனர். இதைக்கேட்ட ராஜாதிராஜனான தசரதசக்கிரவர்த்தி முனிசிரேஷ்டராகிய வசிஷ்டபகவானுடைய திருவடிகளிற் சேவித்து ஸ்வாமி அந்த குற்றமற்ற தவசிரேஷ்டர் எங்கேயிருக்கின்றனர். அவரிங்கு வருதற்கு வேண்டிய யான், செய்யுங்காரியம்யாது? தேவரீ ரருளவேண்டுமென்று கேட்க, சொல்லுகின்றார். கொடிய துன்பமுதலிய யாவற்றும் தலைக்காட்டா தொளிக்கும்படி இந்தலோகத்தை யாளும்படியான சத்தாகிய குணத்தையும் கிருபைபொருந்தியவனையும் — யாது சம்பந்தத்திலும் விலக்குதற்குக் கூடாதவனையும் — மனுகுலத்தி லுதித்தவனுமா யிருந்த உத்தானபாதனென்னும் ராஜனுடையகுமாரன் ரோமபாதனென்பவன் இவ்வுலகத்தில் ராச்சியபாரஞ் செய்துவருங்காலத்தி லந்நாட்டி லனேககாலம் மின்னலோடு கூடிய மேகம் — மழை யில்லாமையால், சகலஜீவராசிகளும் வருத்தமுற்று துன்பத்தையடைந்து ரோமபாதனென்கிற ராஜன்னவன் வேதசாஸ்திர பாண்டித்துவத்தையுடைய அனேக முனிவருக்கும், பிராமணோத்தமருக்கும், அபரிமிதமான சகலவித தானங்கள்கொடுத்தும் மழைபெய்யாமையைக்கண்டு அரசன் மனதில் மிகக்கிலேசத்தைக்கொண்டு திரிகாலங்களையு முணர்ந்திரா நின்ற மஹாத்துமாக்களான பெரியோர்களை ஸ்தௌத்திய முதலான அர்ச்சியங்கள்செய்து சேவித்து மழைபெய்கிறதற்கு யாதுகாரணமென்று வருந்திகேட்கையில், இப்போது நாம் உமக்குச்சொன்ன சிருங்கியான கலைக்கோட்டு மகாரிஷி வருவாராகில்வேண்டியமழைபெய்யுமென்று அப்பெரியோர்கள் சொன்னார்கள், அதைக்கேட்டு ரோமபாதமகாராஜன் சகலரையு மிருகமென் றெண்ணியிருக்கிற, அந்த மஹாநுபாவனை எவ்விதமா யிவ்விடம் கொண்டுவருகிறதென்று கவலையோடு எண்ணங்கொண் டிருக்கிற சமையத்தில் அச்சபையிலிருந்த நாடகப்பெண்களிருவ ரெழுந்திருந்து சேவித்து ஸ்வாமி அந்த மகாரிஷியை நாங்க ளிங்குக்கொண்டு வருகிறோமென்று சொல்ல அந்த விசேஷத்தைக்கேட்டு, உரோமபாத மஹாராஜன், சந்தோஷித்து அந்தப்பெண்களுக்கு திவ்விய வஸ்திராபரணங்கள் முதலியவைகளை வெகுமானஞ் செய்து மூன்றும் பிறையைப்பழிக்கும் நெற்றியையும் பாரித்த மூங்கில்போன்ற தோளையையும் உண்டோ வில்லையோவென்று ஏங்கும் இடையையும் — பாரித்தனமும் — இருண்ட அளகபாரமும் — மருட்சியையுடைய நேத்திர

முகி – இலவம்பூபோன்ற செவ்வந்த வாயையு முடைய பெண்களே! அந்த மகாரிஷியை அழைத்து வாருங்களென்று உபசாரத்துடனே அனுப்ப, அவர்களும் அந்த மஹாராஜாவைச் சேவித்து இரதத்தின்மீதி லேறிக்கொண்டுபோனார்கள். அனேகயோசனைதூரஞ் சென்று இன்னுமோர் யோசனைதூரத்தில் இருக்கும் கலைக்கோட்டு மகாரிஷியினுடைய ஆசிரமம் தெரிந்து தங்கள் ரதத்தைவிட்டிறங்கி அவ்விடத்திலோர் திவ்வியமான பன்னகசாலை செய்துகொண்டு மகாரிஷிகள்போல் திருவேடம்பூண்டு அவர் தந்தையாகிய விபாண்டகரில்லாத தருணம்பார்த்து அந்த மகாரிஷியின் சமீபத்திற்போய் கண்டார்கள். இவர்களை, அந்த மகாரிஷிபார்த்து, பெரியோர்களென் றெண்ணி உபசாரஞ்செய்து அர்க்கியத்தோடு ஆசனங்கொடுத்து யிருக்கச்சொல்லி நல்வார்த்தைகள் சிலசாழிவசனித்துக் கொண்டிருந்து திடீரென் றெழுந்திருந்து அந்தமகாமுனியைத் தொழுது தங்களுடைய பன்னகசாலையில்வந்து சேர்ந்தார்கள். இந்த ஸ்திரீகளிதேரீதியாக சிலநாள்கள்கழிந்தபின்பு, பலா–வாழை–மாங்கனிகள் முதலிய மற்றகனிகளும் தேங்காய் திருகலும் அவருக்குக்கொடுத்து புசிக்கச்சொன்னார்கள். இந்தப்பிரகாரம் சிலநாள் கழிந்தபின்பு அந்த மகாரிஷிக்குத் தங்களிடத்தில் அன்பும்விசுவாசமும் அதிகமானதையறிந்து இத்தவவேடங்கொண்ட ஸ்திரீகள் குற்றமற்ற அந்த மகாரிஷியை நோக்கி ஸ்வாமி தாங்கள் தயைசெய்து அடியேங்களுடைய குச்சுக்கு எழுந்தருளவேண்டுமென்று பலவாறாக ஸ்தௌத்தியஞ்செய்து சேவித்த ஸ்திரீகள் பிறகேவந்தார். இந்த ஸ்திரீகளும் மிகுந்த சந்தோஷ சாம்பிராச்சிய சாகரத்தில் மூழ்கினவர்களாய் தாங்களெண்ணிய வெண்ண மின்று ஈடேறித் தென்று உளங்களித்து அதிதப்பட்டவராய் அந்த கலைக்கோட்டு மகாமுனியை தங்களோடுகூட வழைத்துக்கொண்டு வருகையில் அவரெவ்வளவு தூரமென்று வினவ, இதோவிருக்கின்றதென்று தாங்கள் முன்னும் அவர் பின்னுமாக தங்கள்மனம்போலவே மருள்வார்த்தைகளால் நெடுந்தூரங் கால்நடையாகவே அவரை தங்கள் சுதேசத்துக்கு அழைத்துவரும்போது அந்நகரம்வந்து சேருதற்குமுன்னமே ஆகாயத்தின்கண் மேகமானது சிவனுடைய கண்டத்தைப்போலக் கறுகறுத்து மின்னலோடு குமுறலும் ஆர்ப்பரித்து கெற்ஜித்துக்கொண்டு சளசளவென்று மழைக் கால்களைவிட்டுப் பெய்தன. அதனால் நதிகள் – குளங்கள் – ஏரிகள் – மடுக்கள் – அடைந்திருந்த தரித்திரம்விட்டுநீங்கி குறைதீர்ந்து செந்நெல் கரும்பு முதலிய பயிர்களுக்கும் பாய்ந்து செழுமையோடு வளர்ந்தோங்கியிருப்பதையும் ஆகாயத்தின்கண் யிடைவிடாமல் மேகமான தெழும்பி மழைபெய்ந்து வருவதையுமறிந்து உரோமபாத மகாராஜன் ஆச்சரியத்தையுடையவனாய் – காமம் – வெகுளி – மயக்கமென்கிற மூன்றையுங் கைவிட்ட அம்முனிசிரேஷ்டர், கோவைக்கனிக்குச் சமமானவாயையும் தாமரைமலர்போன்ற திருமுகத்தையும் முத்துபோல் பளபளப்பையுடைய தந்தங்களும் அகில் சந்தன முதலிய வாசனை திரவியங்களின் புகையோடமைந்த அளகபாரத்தையுடைய ஸ்திரீகளின் யுத்திதந்திர வுபாயத்தால் இவ்விடம்வந்துவிட்டாரோ? யாது, இவ்வித மழைபெய்ந்து நமது தேசமுழுமையும் செழித்து சந்தோஷத்தி லிருக்கின்ற தென்று ஆலோசித்தவனாய் மிகுந்த வானந்த சந்தோஷத்தோடு தன்சபையில் வீற்றிருந்த வேதபாராயண முனீஸ்வரர் பிராமணோத்தமர் – மந்திரிகள் – சாமந்தர் – பிரதானியர்–ரத–கஜ–துரகபதாதிகளாகிய நால்வகைச்சேனையும், சூழத்தக்கதாய் பட்டணத்தைவிட்டு இரண்டியோசனைதூரம்வரைக்கும் எதிர்கொண்டுபோய, அந்தஸ்திரீகள் மத்தியில் வாரானின்ற மகாரிஷியை கண்களாரத் தரிசித்து, புஜபலபராக்கிரமசாலியாகிய ரோமபாதமஹாராஜன், அவருடைய உபய சாரணாவிந்தங்களில் நீர்க்கொண்டுஞ் சமர்ப்பித்து கண்களி லானந்தநீர் பெருகத்தக்கதாய் நிற்கின்ற அரசனுக்கு அந்த ஸ்திரீகள் அதிபயபக்தி வினயவந்தனத்துடனும் வணங்கி நின்றார்கள். இப்படித் தொழுதுநிற்கின்ற ஸ்திரீகளை யரசன்நோக்கி நீங்கள்போய் இந்த மஹாநுபாவராகிய முனிசிரேஷ்டரை இவ்விடம் கொண்டுவந்தது யான்படும் துன்பத்தினை லல்லவாவென்று அவர்களை உபசாரவார்த்தைகளால் திருத்திசெய்து நிற்கின்றதையும், ரிஷிகள்முதலான சேனைகளையும் கலைக்கோட்டு மஹாரிஷிபார்த்து, நம்மை கபடவஞ்சனையா லிவ்விடத்திற் கழைத்துவந்தார்களென் றெண்ணியமாத்திரத்தில், சுவர்க்கவாசிகளாகிய தேவேந்திரன் தேவர்கள் மிகுந்த பயங்கரமடைந்து, யாது காரணம் இனிலோகாலோகங்கள் என்னகதியாமோ நாமென்னசெய்வோம், நமக்கார்கதி! இதென்ன விபரீதமென்று பலவாறாக அச்சங்கொண்டு நடுநடுங்கி யிருக்கும்போது, ரோமபாதமகாராஜன் சீக்கிரத்தி லந்தமகாரிஷியை வணங்கி, ஸ்தோத்திரஞ்செய்து, ஸ்வாமி அடியேனைரட்சிக்கவேண்டுமென்று தானடைந்திருந்த துன்பமியாவற்றும்சொல்லி முறையிட்டுக்கொண்டு ஐயனே? கிருபாநுக்கிரகஞ் செய்தருள வேண்டு மென்று பலவாறாக வேண்டிக்கொண்டதின்பேரில், அந்தமகாமுனியாகிய கலைக்கோட்டுமகாரிஷி தாம்கொண்ட கோபத்தை ஒருவாறாகக் கரையைமோதாத அலையையுடைய கடல்போல க்ஷமித்துக்கொண்டு இவ்வரசன் யாவரையும் ரக்ஷிக்கும்பொருட்டு இப்படிக்கு யத்தனித்தனனென்றறிந்து பயந்திருந்த அரசனுக்கு ஆசிர்வாதஞ் செய்து சந்தோஷமானார். அப்போது அரசனானவன் அந்த கலைக்கோட்டு மகாரிஷியை ரத்நமய வலங்கிருதரதத்தின்மீது லேற்றிக்கொண்டு தனது பட்டணத்தை வலங்கரித்து அனேக முனீஸ்வரரும் பிராமணோத்தமரும் சூழ்ந்து நெருங்கத்தக்கதாய் நகரத்திற் பிறவேசித்து தனது அரண்மனைக்கு வழைத்துப்போய் நவரத்தின கசிதமயமான வலங்காரத்தோ டமைந்த பொற்சிங்காதனத்தில் எழுந்தருளச்செய்து அர்க்கியமுதலிய கடமைக ளியாவற்றுஞ்செய்து, அடியேன் முறையிட்டுக் கொள்ளவேண்டிய தொன்றுமில்லையென்று, மகாவழகும் –



சாந்தமும் – பொருந்திய பொற்பதுமையைப் போன்ற தனது புத்திரியாகிய சாந்தையை இருக்குவேத விதிவின்படிக்குப் பாணிக்கிரகணஞ் செய்துக் கொடுத்தான். அன்னாட்டில் வறுமைநோய் திரத்தக்கதாய் மேகமானது மழைபெய்ந்துக்கொண்டு காலந்தப்பாமல்நடந்து வருவதால் அன்னாட்டிலுள்ள க்ஷாமம் முதலிய துன்பங்களியாவற்றும்நீங்கி சகலஜீவராசிகளும்சௌக்கியத்தோடுவாழ்வடைந்த அந்தமகாபட்டணத்தில் கற்பின்மிக்காளாகிய சாந்தையினால் ஏவல்முதலியவியாவற்றுமியற்றத்தக்கதாய் அந்த மகாமுனியாகியகலைக்கோட்டு மகாரிஷி எழுந்தருளி யிருக்கின்றனரென்று வசிஷ்ட பகவான் சொன்னார்.

இதைக்கேட்ட மாத்திரத்தில் ராஜாதிராஜனாகியதசரத சக்கரவர்த்தி வசிஷ்ட பகவானுடைய திருவடித்தாமரைகளைச் சேவித்து ஸ்வாமி இப்பொழுதே அந்த மகாத்துமாவாகிய கலைக்கோட்டு மகாரிஷியை இவ்விடத்திற்கு அழைத்துக்கொண்டு வருகிறேனென்று தனது பிரதானமந்திரியாகிய சுமந்திரன் முதலிய அமைச்சரோடு அழகு பொருந்திய தேரின்மீதி லேறின மாத்திரத்தில் தேவர்கள் முதலியயாவரும் இப்பொழுதே எங்களுடைய துன்பந் தீர்ந்ததென்று மலர்மாரியை இடைவிடாமல் சொரிய பலபலவாத்தியங்கள்முழங்க கடல்கோஷ்டத்தைப்போல வேதகீதங்கள்பாட – வேதோத்தமர்கள் வாழ்த்த மதுரம்போல வசனத்தையுடைய ஸ்திரீகள் பல்லாண்டுகள்கூற கடலைப்போல ஸ்தோமங்கள் சூழ, சூரியனைப்போல நெடுந்தூரங்கடந்து ரோமபாதராஜாவினுடைய திருநகரத்தைப் பார்த்தமாத்திரத்தில் வேவுக்காரர்கள் ராஜாதிராஜனாகிய தசரதசக்கரவர்த்தியின் வரவையு மவருடைய கீர்த்தியையும்ரோமபாதமகாராஜனுக்குச்சொல்ல, அந்த ராஜனானவன் மிகுந்த சந்தோஷத்தோடு வீரகண்டா மணியையுடைய ராஜாதிராஜனை எதிர்கொண்டு காணும்பொருட்டு ஓர்யோசனைதூரங்கடந்து வருகின்றவனைக்கண்டு ராஜாதிராஜனாகிய தசரதசக்கரவர்த்தி தமது தேரிலிருந்திறிந்து அவனைச்சேவித்துக்கொண்ட மாத்திரத்தி லவ்வரசன் மிகுந்த வன்புடனே இவனை வாரியெடுத்து மார்புற ஆலிங்கனஞ் செய்துக்கொண்டு சொல்லுகிறான். தாங்கள் இவ்வளவுதூரம் விஜயஞ்செய்தது யான்செய்த தவமோ? அல்ல திவ்வுலகஞ்செய்த தவமோ? அல்லது யாதோ, யென சந்தோஷ வார்த்தையோடு அழகு பொருந்திய ரதத்தின்மீ தேற்றிக்கொண்டு தனது திருநகருக்கு அழைத்துக்கொண்டு போனவ னியாரெனில், சத்துருக்களுடைய தேசத்தை இரணமாகச்செய்ய வேலாயுதத்தையுடைய ரோமபாத மகாராஜனென்பவன், ராஜாதிராஜனை தனது சிங்காரம்பொருந்திய திருமாளிகையில் ரத்னமண்டபத்திலிருத்தி அழகுபொருந்திய ஸ்திரீகள் பல்லாண்டுபாட செய்யவேண்டிய கடமைகளியாவற்றுஞ் செய்து விருந்து செய்துவைத்து தாம்பூலம் – புஷ்பம் – சந்தனம் – ஜவ்வாது – அத்தர் – புனுகுமுதலிய வாசனை திரவியங்களியாவற்றும் கொடுத்து தேவேந்திரனுக்கு நாட்டையளித்த ராஜாதிராஜனைப் பார்த்து தாங்கள் இவ்விடம்வந்த காரியத்தை அடியேனுக்குச் சொல்லவேண்டுமென, நடந்த காரியங்களியாவற்றையும் ராஜாதிராஜனாகிய தசரதச்சக்கிரவர்த்தி ரோமபாத மகாராஜனுக்குச்சொல்ல, அவரப்படிக்கே அந்த மகாமுனியை அவ்விடத்திற்கு யான்கொண்டுவந்து விடுகிறேனென்றுசொல்லி ராஜாதிராஜனாகிய தசரதமகாராஜன் செலவுபெற்றுக்கொண்டு தமது திருநாடாகிய அயோத்தியில் வந்துசேர்ந்தார். பின்பு ரோமபாதமகாராஜன் அந்த கலைக்கோட்டு மகாரிஷியினுடைய திருமாளிகைக்குள் பிறவேசித்து அவருடைய இரண்டு சரணாவிந்தங்களையும் தன்னுடைய திருமுடிமேலணிந்துக்கொள்ள அவர் நீ ரிவ்விடத்திற்கு வரவேண்டியதென்னவென்று கேட்க, வதற்கு அடியேனுக் கொருவரம் தேவரீர் கொடுக்கவேணும் ஸ்வாமியென, அவ ரதென்னவென்றுகேட்க சொல்லத்தொடங்கியதாவது. ஒரு புறாவுக்காகத் தனது சதையைக்கறித்து தராசில்வைத்துக்கொடுத்த பெருங்கீர்த்தியையுடைய சிபிச்சக்கரவர்த்தி வம்சத்தில் பிறந்தவர் தருமச்சிந்தையை யுடையவர் தேவர்களுக்கு வருத்தத்தைத்தரும் ராக்ஷதருடைய பலத்தைப்புசித்த வேலாயுதத்தையுடையவர். தசரதனென்கிற திருநாம தேயத்தையுடையவர் இவ்வளவு கீர்த்தியோடு செங்கோல்செலுத்தி அரசுசெய்யும் இராஜாதிராஜனுடைய திருநகராகிய அயோத்திவரைக்கும் தாங்கள் விஜயஞ்செய்து இவ்விடம் எழுந்தருளவேண்டுமென்று சொன்னபோது அப்படிக்கே அவ்வரம் கொடுத்தோம் ரதங்கொண்டுவாருமென்று சொன்னமாத்திரத்தில் அந்தமகாரிஷியைத்தொழுது ராஜாதிராஜனுடைய அலவல்தீர்ந்து சிறப்படைந்தனனென்று ரதத்தைக்கொண்டுவந்து அதனில் இருந்த கலைக்கியானியாகிய முனியையும், அவர்பத்தினியையும், எழுந்தருளும்படி கேட்க, அப்படிக்கே அனேகமுனிகளும், பிராமணோத்தமரும், சூழத்தக்கதாய் வேத சுரூபியாகிய கலைக்கோட்டு மகாரிஷியும், பத்தினியும், ரதாரூடராய் மார்க்கத்தைதொடர, தருமதேவதையும், தேவர்களும், பொலலாங்காகிய வினையைத்தொலைக்க சத்தியதேவதை வந்துபிறக்க அருள்செய்வாரென்றெண்ணி ஆகாயத்தின்கண் துந்துமிமுழங்க, பரிசுத்தமாகிய புஷ்பமாரியைப் பொழிந்து மிகவும் களித்தனர்கள். அவ்வழியி லிருந்த தூதுவர் அயோத்திக்குப்போய் இராஜாதிராஜனாகியதசரத சக்கரவர்த்தியின்முன் அந்தகலைக்கோட்டுமகாரிஷி எழுந்தருளிவருவதைச்சொன்னபோது அந்த ராஜாதிராஜன் ஆசையென்கிற அளவற்றகடலில் மூழ்கினவனாய் சீக்கிரத்தெழுந்திருந்து இரதமேறின மாத்திரத்தில் தீவினையானது வேரோடற்றதென்று மலர்மழைபொழிந்தது. பலவாத்தியத்தோடு முரசு சப்தித்தது. என்மனக்கிலேசம் நீங்கிற்றென்று ராஜாதிராஜனாகிய தசரத சக்கரவர்த்தி மூன்றுயோசனைதூரத்தில் தவரூபமாயும் மாவுரியை யுடையவராயும், மான்றுபம் போன்றமூர்த்தியாயும், கமண்டலம், குடை, யோகதண்டோடு பிர

காசித்துவரும் அந்த மகாமுனியை கண்களாரத்தரிசித்து ரதத்தைவிட்டிழிந்து இரண்டுசரணாரவிந்தங்களில் சேவிக்க அவர்க்கம்முனி ஆசீர்வாதம்செய்தார். பக்கத்திலிருந்த முனிவரும் ஆசிகூறினார்கள். மேகத்தைப்போல கொடுக்கும் கரத்தினால் ரோமபாத மகாராஜன் தொழுது சிருங்கமகாரிஷியையும், அவர்பத்தினியையும் கொணர்ந்தனனென்று சொல்ல, அந்த ராஜாதிராஜனாகிய தசரதசக்கரவர்த்தி அந்த கலைக்கோட்டுமகாரிஷியோடு கமலம்போல முகத்தினையுடைய ஸ்திரீகள் பல்லாண்டிசைக்கத்தக்கதாய் தனது அயோத்திமாநகரத்தில் ஓர் க்ஷணத்தில் வந்துசேர பொல்லாங்காகிய தொழில்பொருந்தி திருடர்போலவுழலும் அசட்டர்களாகிய பஞ்சயிந்திரியங்களையும் வென்ற வசிஷ்டபகவானும் தேவரூபியாகிய கலைக்கோட்டு மகாரிஷியும் அந்த மகாராஜாவினுடைய சபை பிரகாசிக்க எழுந்தருளி யிருந்தார்கள்.

## திருவவதாரம்.

அப்போது தசரத சக்கரவர்த்தியானவர் வசிஷ்டபகவானைநோக்கி ஸ்வாமி தங்களுடைய கிருபா அநுக்கிரகத்தால் மகாரிஷியும் வந்துசேர்ந்தார். தங்களுடைய திருவடியை ஆர்ச்சித்த யெனக்கு யாதுகுறைவு, அடியேன் தவமுடையவனானேனென்பதற்கு யாதொருசந்தேகமு மில்லையேயென்று சொல்லி கைகூப்பிக் கொண்டிருக்கும் இராஜாதிராஜனை கலைக்கோட்டுமகாரிஷிநோக்கி பிரமபுத்திரரான இந்த வசிஷ்டமகாமுனி உம்மிடத்திலேயே சார்வகாலமும் குடியாயிருக்கச்சே உமக்கு என்ன குறையிருக்கின்றது, ராஜாக்களிலே உமக்குசமானமானபேர் யாரிருக்கிறார்களென்று மிகுந்த அன்புடனே சொன்னார். அதற்கு தசரதமகாராஜா சகலமுந்தங்களுடைய ஆசீர்வாதமகிமையென்று பின்னையுமொருவார்த்தைச்சொல்லுகிறார். ஸ்வாமி! அனேககாலம் யாதொரு துன்பமில்லாமல் ராச்சியபாரஞ் செய்துக்கொண்டுவந்தேன். இதுவரைக்கும் புத்திரசந்தானமில்லாதபடியால் எனக்கு பிற்பாடு இந்த ராச்சியபாரஞ் செய்கிறதற்குத் தகுதியான புத்திரர்கள் உண்டாகக் கிருபைசெய்ய வேண்டுமென்று ராஜாசொல்ல, அதற்குமுனி அரசனே! நீர் வருத்தப்படவேண்டாம், இவ்வுலகமொன்றல்ல பதினாலுலோகங்களையும் ஆளத்தக்க பிள்ளைகள் உண்டாகும் இத்தினமே நீர் யாகத்துக்கு யத்தனம் செய்யுமென்று மகாரிஷிசொன்னார். அந்தக்ஷணமே யாகத்துக்குவேண்டிய வஸ்துக்கள் யாவற்றுஞ் சேகரித்துக்கொண்டு யாகசாலையுங்கட்டி யாகத்துக்கு ஆரம்பித்து அனேகரிஷிகளும், பிராமணோத்தமரும், சூழ்ந்திருக்க சிருங்கமகாரிஷியும், வசிஷ்டமகாமுனியும், இருவருமிருந்துக்கொண்டு வேதநெறியின்படிக்கு காருகபத்தியம், தக்ஷிணாக்கினி, ஆகவனீயம், என்கிற மூன்று அக்கினியும் வளர்த்து ஆகுதிகள் கொடுத்து பன்னிரண்டு மாதம் இந்தப்படி யாகம் செய்துவந்தார்கள். தேவதுந்துமி முழங்கிற்று ஆகாயத்திலே தேவர்களெல்லாருங்கூடி நிறைந்து புஷ்பமாரி பொழிந்தார்கள். அந்தசமயத்திலே புத்திரர் உண்டாகிற மந்திரத்தைச் சொல்லி மகாரிஷி ஆகுதிகொடுத்தார். அப்பொழுது அந்த ஓமகுண்டத்திலிருந்து செவந்தமயிரும் அக்கினிக்கண்ணுமாக கையிலே வொரு பொற்றும்பாளத்தில் அமிர்தத்துக்கு சமானமான திவ்வியான்னம் வைத்துக்கொண்டு ஓர் பூதம் புறப்பட்டது. அந்த அன்னத்தை பூமியின்கண்வைத்து மறுபடியும் அந்த வோமகுண்டத்திற் புகுந்து மறைந்தது அப்போது மகாரிஷியானவர் அந்த சாதத்தை எடுத்து தசரதமகாராஜன் கையில் கொடுத்து உம்முடைய பட்டஸ்திரீகளுக்கு கிரமமாகக்கொடுமென்று ஆக்யாபித்தார். ராஜா அதிகசந்தோஷத்துடனே அதைவாங்கிக்கொண்டு சங்கத்தொனி சப்திக்க முதல் ஸ்திரீயாகிய கௌசலைதேவியின் கரத்தில் ஒருபாகமும், கைகேசிக்கு ஒருபாகமும், இளையவளாகிய சுமித்திரைக்கு ஒருபாகமுங்கொடுத்தார். அத்தட்டிலிருந்த மற்ற மிகுதியை எல்லாஞ் சேர்த்து அந்த சுமித்திரைக்கே கொடுத்தார். அவர்களு மதிக சந்தோஷத்தோடு வாங்கி புசித்தார்கள். அப்பால் பூரணாகுதி கொடுத்தபின் யாவரும் ஸ்துதிக்கத்தக்கதாய் ராஜாவானவர் எழுந்திருந்து, சரயுநதியில் அபிவிரததீர்த்தமாடி பிராமணோத்தமருக்கு சோடச மகாதானங்கொடுத்து சபைக்குவந்து ராஜராஜாக்களுக்கு வஸ்திரம் – ஆபரணம் – ரதகஜதுரகங்கள் முதலிய வெகுமதிசெய்து அனுப்பியபின்பு அனேக வரசர் சூழத்தக்கதாய்ச் சபையில் எழுந்தருளியிருக்கும் பிரமதேவனுக்குச் சமமாகிய முனியீஸ்வரருடைய திருவடிகளிற் சேவித்துநிற்கும் மஹாராஜாவைப்பார்த்து வசிஷ்டமகாமுனி ஆக்யாபிக்க அப்பிரகாரமே அவரும் கலைக்கோட்டு மகாரிஷியைச் சேவித்துக்கொண்டு அனேகமாய் ஸ்தௌத்திரஞ்செய்து ஸ்வாமி அடியேன் பிழைத்தேன் இனியான் பெறுவதியாது, ஐயனே, உமது கிருபாநுக்கிரகத்தால் யானடைந்த துன்பத்தை ஒழித்தேனென்று சொன்னமாத்திரத்தில் அந்த மகாரிஷி சந்தோஷித்து மிகுந்த ஆனந்தத்தினால் அன்புடனே ஆசீர்வாதம்செய்து தாமு மவரது பத்தினியும் தேரேறிக்கொண்டுவந்த மாதர்களோடு ஆசிரமத்திலேபோய் சேர்ந்தார்கள். தசரதமகாராஜாவும் சிங்காசனத்திலிருந்து ராச்சியபாரம் செய்துக்கொண்டு வந்தார். அப்படிக் கிருக்கிறகாலத்தில், கௌசலை, கைகேசி, சுமித்திரை என்கிற மூன்றுபேரும் கருவுண்டாகி கர்ப்ப சின்னங்களோடு பொருந்தி யிருந்தார்கள். பத்துமாதமும் ஆனவுடனே சித்திரைமாதம் நவமிதிதி புனர்பூசநக்ஷத்திரம் கர்க்கடகராசி இப்பேர்ப்பட்ட சுபலக்கினத்தில் தேவர், சித்தர், இயக்கர், விஞ்சையர், முதலாகிய காந்தருவரும், பண்களோடு பலவாறாக அதிக சந்தோஷத் துடனே ஆனந்த நிர்த்தமாட பூர்வத்தில் அகிலாண்ட கோடி பிரமாண்டங்களை யெல்லாம் தமது நாபிக்கமலத்தினால் பெற்றருளிய நீலமேகசாமள ரூபனாகிய கர்த்தவியத்தை கௌசலை நாயகி பெற்றாள். பூசநக்ஷத்திரம் மீனராசியில் தேவர்கள் சந்தோஷிக்க கைகேசி ஒருபுத்திரனைப்பெற்றாள். ஆயிலியநக்ஷத்திரம் கர்க்கடகராசியில் தேவேந்திரன் முதலான தேவர்கள்சந்தோஷிக்க சுமித்திரை ஒருபுத்திரனைப்பெற்றாள். பின்னையும் சுமித்திரை மக நக்ஷத்திரத்தில் சிங்கராசியில் சகலஜீவராசிகளும் சந்தோஷிக்கத்தக்கதாக ஒருபுத்திரனைப்பெற்றாள். இப்படிநாலுபுத்திரரும் பிறக்கவே தேவலோகத்திலுள்ள அரம்பையர்களாடினார்கள். கின்னரர்கள் பலபலவாத்தியங்களைவாசித்தார்கள். தேவர்களெல்லாம் ராக்ஷதரிறந்தார்களென்று சந்தோஷப்பெருக்கினால் வோடிவோடியாடினார்கள். இவ்விடத்தில் தாதிகள்மகாராஜாசமுகத்திற்குப்போய் புத்திரர்கள் பிறந்த சந்தோஷவார்த்தைகளைச்சொல்லிதங்கள்சரீரம் தங்களுக்குத்தோன்றாமலானந்தக்கூத்தாடினார்கள். அனேகம் பிராமணர்கூடி சாதகங்கள்பார்த்து கிரகங்களிருக்கிறகிரமங்களறிந்து மஹாலோகோத்திரமானசாதகங்களென்று சொன்னார்கள். சக்கரவர்த்தியும் அதிக சந்தோஷத்துடனே அனேக மேளவாத்தியங்கள் முழங்க [illegible] சம்பிரமஅலங்காரத்துடனே வசிஷ்டமகாமுனியோடு சரயுநதிக்குப்போய் ஸ்நானஞ்செய்து விதைமுதலியபொருள்களோடு அனேக தானதருமங்கள் செய்து புத்திரர்களுடைய திருமுகங்களை தரிசித்து சபைக்குவந்துபொக்கிஷக்களஞ்சியத்தின் கதவைத்திறந்துவிட்டு யாசகர்கள்முதலிய சகலமானபேரும் அவரவர்கட்கு வேண்டியமட்டும் சந்தோஷ திருத்தியடையவாரிக்கொண்டு போங்களென்று சொல்லி ஆனையின்பேரில் பேரிகைவைத்து அடிக்கச்சொல்லி ஆக்யாபித்தார். அந்தப்படிபேரிகைமுழக்கினார்கள். அந்தமுழக்கங்கேட்டுபட்டணத்திலுள்ளஜனங்கள்யாவரும்தங்கள்தங்கள் வீட்டிலேபுத்திரோச்சவ சந்தோஷத்தைப்பார்க்கிலும்பதின்மடங்கு அதிகமாய் புத்திரர்கள்பிறந்தசேதிசொன்னபேருக்கெல்லாம், சுவர்ன்னம் ஆபரணம் வஸ்திரம் முதலானதுகள்கொடுத்து சந்தனம் புஷ்பம் புனுகு சவ்வாது கதம்பம் கஸ்தூரி சம்பங்கி தயிலங்கள் முதலான பரிமளதிரவியங்கள் ஒருத்தருக்கொருத்தர் மேலேவீசி எறிந்துக்கொண்டு தங்கள் சரீரஸ்மரணம் தங்களுக்குத் தோற்றாத பரவசானந்தமானார்கள். (இதையோசிக்கில் அவரவர்கள்மனது சாக்ஷாத்கார பிரமமென்று அறிந்ததுபோலவு மிருந்தது.) தேவாலயங்களுக்கு திருவிழா திருப்பணிகள்செய்வித்து சோடச உபசாரங்களும் நடப்பித்தார். மகாராஜாவின் தரிசனத்துக்குவந்திருந்த தேசதேச ராஜாக்களுக்கு ஆனை குதிரை வஸ்திரம் பூஷணம் முதலான வெகுமதிகள்கொடுத்து அவரவர்கள் தேசத்துக்கு அனுப்பிவைத்தார். வேதசாஸ்திர சம்பன்னராயிருக்கிற பிராமணோத்தமருக்கு அனேக அக்கிராரங்கள்முதலிய சுவர்ன்னதானம் கோதானம் பூதானங்கள் செய்தார். இவ்வாறாகப் பன்னிரண்டுநாள் அதிக சந்துஷ்டியாய் அனேக சம்பிரமானந்தத்துடனே வேறொரு சிந்தையுமில்லாமல் ஆனந்தபரவசராய் சகலஜனங்களும்மகிழ்ந்திருந்தார்கள். அந்தபன்னிரண்டாநாள் வசிஷ்டமகாமுனி பிள்ளைகளுக்கு நாமகரணஞ் செய்கிறதற்கு ஆரம்பித்து வேதசாஸ்திரவிதிப்படிக்கு செய்யவேண்டிய கிரமங்களெல்லாஞ் செய்து (பூர்வத்தில் முதலையானது கஜேந்திரனென்கிற யானையின்காலைக் கவ்விப்பிடிக்க அகப்பட்டுக்கொண்டு அதனால்மெலிந்து அனேககாலம் பிரயாசைப்பட்டு கடையில் யானையானது வேறுகதியில்லையென் றறிந்து இந்தவிடத்தை தீர்க்கவேணும் சேஷசயனா அநாதரக்ஷகா–ஆபத்பாந்தவா–அடியார்க்கெளியா – அன்பர்க்கன்பா–ஆதிமூலமே யென்றுகூப்பிட அந்தக்ஷணமேவந்து முதலையை சங்காரஞ்செய்து அந்தயானையினுடைய ஆபத்தைத்தீர்த்து ரக்ஷித்த மெய்ப்பொருளாகிய) கௌசலையாதேவியின் புத்திரனுக்கு இராமனென்று பெயரிட்டார். சகலவேதசாஸ்திரங்களையும் கரதலாமலகமாக தெரிந்திருக்கிற அந்த வஸ்துவினுடைய சக்கராயுதம்வந்து அவதரித்திருக்கிற கைகேசியின்பிள்ளைக்கு பரதன் என்று பெயரிட்டார். வஞ்சகராகிய ராக்ஷதர்களை சங்கரித்து தேவர்களை ரக்ஷித்து பூமிபாரத்தைதீர்க்கிற நிமித்தமாக அவ்வஸ்துவினுடைய ஆதிசேஷன்வந்து அவதரித்திருக்கிற சுமித்திரையின் முதற்புத்திரனுக்கு லக்ஷ்மணனென்று பெயரிட்டார். லோகவிரோதிகளான சகலபிராணிகளையும் சங்கரித்து தருமத்தை நிலைநாட்டும் பொருட்டு வெண்தாமரைப்போல திருமேனியையுடைய அவ்வஸ்துவின் பாஞ்சசன்னியம்வந்து பிறந்திருக்கிற சுமித்திரையினுடைய இரண்டாவதுபிள்ளைக்கு சத்துருக்கனென்று பெயரிட்டார். இந்நான்குபுத்திரர்களில் செந்தாமரைக்கமலம்போலவும் நீலோற்பலபுஷ்பம்போலவும் திருமேனியையுடைய பிரதமைபோல அழகுபொருந்திய ஒப்பற்ற ஸ்ரீராமனை தசரதமகாராஜா தன்னுடைய பிராணனும் அறிவும் அவனேயல்லது வேறில்லையென்று தன்னுடையமனதிலே யெண்ணிக்கொண்டு அதிகசந்தோஷத்துடனே யிருந்தார். புத்திரர் நான்குபேரும் தவழ்ந்து விளையாடிக்கொண்டு வருவதையும் மழலைவார்த்தை தளர்நடைமுதலியயாவற்றையும் கண்களிக்கப்பார்த்து சந்தோஷமாய் அன்னப்பிராசனம், சவுளம், உபநயனம், முதலானதும் செய்து நால்வரும் நான்குவேதம்போல வளர்ந்துவந்தார்கள். வசிஷ்டமகாமுனியினிடத்தில் வித்தையாரம்பமாய்வேதசாஸ்திர சகலகலைக்கியானமும் அறிந்தார்கள். வில்வித்தைமுதலான ஆயுதவித்தைகளும் யானை குதிரை ரதமுதலான பரீக்ஷாதி வித்தைகளும்கற்று பூமியினுடைய துயரங்களெல்லாம் தீரவளர்ந்தார்கள். ரிஷிகளும்தேவர்களும் அந்தப்பட்டணத்திலுண்டாகிய மகாஜனங்களும் நம்முடையவினைகளெல்லாம் தீர்த்து மோக்ஷசாம்பிராச்சியத்தை கொடுக்கிறவஸ்து இவனென்று ஒருக்ஷணப்போதும் பிரியாமல் சார்வதாதரிசனம் செய்துக்கொண்டிருப்பார்கள். ஸ்ரீராமனும் லக்ஷ்மணனும் கூடிக்கொண்டு பிரியாமல் சிங்காரத்தோட்டங்கள் குளம் நதிகள்முதலான யிடங்களிலேபோய் விளையாடி வருவார்கள். பரதனும் சத்துருக்கனும் கூடிக்கொண்டு பிரியாமல் அந்தராமலக்ஷ்மணனைப்போலவே விளையாடி

க்கொண்டிருப்பார்கள். அந்தப்பட்டணத்திலிருக்கிற ஜனங்களெல்லாம் கௌசலை தசரத சக்கரவர்த்தியைப் போலவே ஸ்ரீராமனிடத்தில் மிகுந்த அன்பாயிருந்தார்கள். இவர்களும் சிங்காரச் சோலைகளுக்குப்போய் வரும்போது காண்கின்ற அவ்வூர்ஜனங்களைப்பார்த்து நீங்களும் உங்களுடையபுத்திரரும் சுகமே இருக்கிறீர்களாவென்றுகேட்க, அவர்களும், ஐயா! உம்மை மகாராஜாவாக பெற்றிருக்கின்ற எங்களுக்கு என்னகுறையிருக்கின்றது. சகலமானபேரும் உம்முடைய கிருபையினாலே சுகமேயிருக்கிறோமென்று சொல்லுவார்கள். இப்படி பட்டணத்து ஜனங்களெல்லாம் சந்தோஷிக்கத் தம்பிமார் மூவரும் நிழல்போல சூழ்ந்திருக்க மும்மூர்த்திகளுக்கு முதல்வனாக ஸ்ரீராமனிருந்தார். இராஜாதிராஜனாகிய தசரதமகாராஜா தனதுசெங்கோல் செலுத்தி ஆசாரவாயலில் இடைவிடாமல் பேரிகை சப்திக்க ஒப்பற்ற குடையையுடையவராக ஆண்டுக்கொண்டு சந்தோஷமென்கிற சாகரத்தில் மூழ்கியிருந்தார்.

## கையடை.

இப்பெரிய சந்தோஷத்திலிருக்கிற நாள்களில் ஒருநாள் நவரத்ந கசிதமயமான சிங்காசனத்தையுடைய சபையில் அனேக அலங்காரத்தோடு மஹாராஜா கொலுவீற்றிருந்தார். அப்போது ஆகாயத்தில் திரியாநின்ற தேவலோகத்துச் சாரணர் இதை தெய்வலோகமென்றெண்ணி சமீபத்தில் நெருங்கிப்பார்த்து ராஜாவுக்கு ஆயிரங்கண்ணில்லாததனால் தேவேந்திரனல்லவென்று ஐயந்தீர்ந்துபோய் விட்டார்கள். இவ்வளவு இந்திரபோகபாக்கியத்துடனே யிருக்கின்ற தசரதமகாராஜாவின் சபைக்கு (சகலஜீவராசிகளையும் லோகங்களையும் பிரமதேவன் முதலிய தேவர்களையும் இதோ சிருட்டிக்கிறேனென்று தொடங்கிய) கௌசிகராகிய விஸ்வாமித்திரர் அச்சபைக்கு எழுந்தருளினார். அப்போது ராஜாதிராஜனாகிய தசரதமகாராஜன் தன்மார்பி லணிந்திராநின்ற ரத்னாபரணங்கள் சூரியனுடைய பிரகாசம்போல ஜொலிக்க (பிரமதேவன்வரக்கண்ட தேவேந்திரனைப்போல) எழுந்திருந்து அவருடைய உபயசரணாரவிந்தங்களில் சாஷ்டாங்கமாக நமஸ்காரஞ்செய்து, ரத்னசிங்காசனத்தில் எழச்செய்து அர்க்கியமுதலிய கடமைகளைத் தகுந்த உபசாரத்தோடுசெய்து, ஸ்வாமி இன்றையத்தினம் என்னுடைய வினைதீர்ந்ததென்றுசொல்லி, ஐயனே! தேவரீர் பிரத்தியக்ஷமானது இப்பூமிசெய்த புண்ணியமோ? அல்லது அடியேன் செய்த தவமோ? அல்லது இந்நகரில் யான் சேவிக்கத்தக்கதாய் என்முன்னோர்கள் பூர்வத்தில் செய்த தவமோ வென்று பலவாறாக சந்தோஷத்துடனேசொல்ல, அதற்கு விஸ்வாமித்திர மகாரிஷி சொல்லுகிறார், இராஜாதிராஜனாகிய தசரதச்சக்கரவர்த்தியே! என்னைப்போலொத்த ரிஷிகளுக்கும், தேவர்களுக்கும், ஒருதுன்பம் நேரிடுமானால் கைலாயமும், திருப்பாற்கடலும், சத்தியலோகமும், அமராபதியும், இந்த அயோத்திமாநகரமும், அல்லாமல் சொல்லிக்கொள்ளுகிறதற்கு வேறோர் இடமுண்டோ? பூர்வத்தில் தேவேந்திரன் அசுரருக்குத்தோற்றுதன்னுடைய ராஜ்ஜியமிழந்து உம்மிடத்தில் சொல்லிக்கொள்ள அப்போது நீ அந்த அசுரரையும் அவர்களுக்குத் தலைவனாகிய சம்பரனையும் சங்கரித்து தேவேந்திரனுக்குப் பட்டாபிஷேகஞ் செய்தனைத்த அரசல்லவா? இப்போது தேவேந்திரன் ஆண்டுக்கொண்டு வருகின்றது. அப்பேர்க்கொத்த சாமர்த்தியத்தையுடைய உமக்குச் சமானமான ராஜாக்கள் இந்த பதினான்கு லோகத்திலேயும் உண்டோவென்று மிகுந்த சந்தோஷத்துடன் சொல்ல, அதுகேட்டு ராஜாதிராஜன் மிகவும் களிப்படைந்து இதுவரையில் யான் ராச்சியபாரஞ் செய்துக்கொண்டு வந்தபலன் இன்றைக்கு சித்தியாயிற்று இனி நான் நடந்துக்கொள்ள வேண்டியகாரியம் தேவரீர் ஆஞ்ஞாபித்தால் அந்தப்படி நடந்துக் கொள்ளுகிறேனென்று சொன்னார். அதற்கு மஹாரிஷியானவர் சொல்லுகிறார். கேளும் மகாராஜாவே! தருக்கள்சூழ்ந்த ஆசிரமத்தில் யான்செய்யும் தவமுதலிய யாகத்துக்கும் மற்றோர்கள் தவத்துக்கும், இடையூர் செய்யும் காமக்குரோதாதிகள் இடையில்வந்து விகாதம்செய்வதுபோல ராக்ஷதர் விகல்பம்செய்துக்கொண்டு வருகிறார்கள். அப்படிக்கு நேரிடாமல் என்யாகத்தைக்காத்து நிறைவேற்றுகிறதற்கு உம்முடைய நான்குபிள்ளைகளில் முதல்வனாகிய நீலமேகசுருபனை யெனக்குக் கொடுக்க வேணுமென்று உயிரைக்கேட்கிற பொல்லாத யமனைப்போல கேட்டார். அக்கேள்வியானது மார்பிலுருவும் வேல்பட்ட ரணக்குழியில் அக்கினி நுழைந்தா லெப்படியோ அப்படிபோல இருசெவியில் நுழைந்தமாத்திரத்தில் சஞ்சலமானது பிடித்திழுக்கவும், பிராணனானது ஊசலாடவும், கண்ணில்லாதவன் இலகான், கண்ணுண்டாயிருந்தும் பின்பு அதை இழந்து எப்படி துன்பப்படுவானோ அப்படி துன்பப்பட்டு அத்துன்பத்தை ஒருவாறாகத் தேற்றிக்கொண்டு ஸ்வாமி, அவன் அறியாதவன். இன்னம் ஆயுத பரீக்ஷைகளில் நன்றாய்ப்பழகாதவன் காரியம் இதுவானால் யான்வருகிறேன். அந்த ராக்ஷதர்க்குத் துணையாய் சிவபிரமாதி தேவேந்திரன்வந்தாலும் அவர்களையெல்லாம் தும்சப்படுத்தி உம்முடைய யாகத்துக்கு யாதொரு விக்கினம் வராமல் காக்குறேன் ஸ்வாமி, எழுந்திருங்களென்று தசரதசக்கரவர்த்தி சொல்ல, அதுகேட்டமாத்திரத்தில் விஸ்வாமித்திர மகாரிஷி அதிக கோபத்தோடெழுந்தார். அதுகண்டு தேவர்கள்பயந்து இன்றைக்கு ஊழிகாலமென்று சந்தேகித்து நடுங்கினார்கள். சூரியனும் ஒளித்துக்கொண்டான். சராசரங்களுக்கெல்லாம் அதிக பயமுண்டாயிற்று விஸ்வாமித்திருடைய கோபாக்கினியினாலே புருவங்கள் நெற்றியிலேறின, நகைப்பும் வந்தது. கண்கள்செவந்தன. திசைகளெல்லாம் இருளடைந்தன. இவ்வளவு கோபங்கொண்ட விஸ்வாமித்திரருடைய எண்ணந் தெரிந்த வசிஷ்டமகாமுனி அவரை பொறுத்துக் கொள்ளுமென்று தணிவு சொல்லி இராஜாவைப்பார்த்து உமது புத்திரனுக்கு உ



முத்தலாகிய உறுதிவருங்காலத்தை மறந்தீரோவென்று சொல்லுகிறார். (மழையினால்பெருகும் வெள்ளங்களியாவற்றும் ஒருங்காக சமுத்திர னிடமாகச் சேர்வதுபோல) மஹாராஜாவே உமதுவின்னை அளவில்லாத விர்த்தையை யடைகிறதற்கு சம்பவித்தகாலத்தை மறந்தீரோவென்று சொன்ன குருவினுடைய வாக்கியத்தை மகாராஜா சிரமேல்தாங்கினவராய், லக்ஷ்மிபதியாகிய ஸ்ரீராமனை அழைத்துவாருங்களென்று ஆக்கியாபித்தார். தக்ஷணமே அறிவில்மிகுந்த ஸ்ரீராமனும் அருகில்வந்து சேர்ந்தார். வந்த ஸ்ரீராமனையும், தம்பி லக்ஷ்மணனையும், விஸ்வாமித்திரருக்குக் காட்டி, ஸ்வாமி, இவர்கட்குத் தாயுந்தந்தையும்நீரே, தந்தேன் உமக்கு யுக்தமானபடி செய்துக்கொள்ளுமென்று சொன்னார். அப்போது விஸ்வாமித்திரர் கோபந்தணிந்து அதிக சந்தோஷத்தோடு அநேக ஆசிர்வாதஞ்செய்து ஸ்ரீராம லக்ஷ்மணரை அழைத்துக்கொண்டு யாகத்தைமுடித்துக் கிறைவேற்றுவோமென்று சபையைவிட்டுப் புறப்பட்டார். உ[illegible]க்கைத்தாங்கின ஸ்ரீராமன் அரையில் வாள் விசித்துக் [illegible]டிக்கொண்டு அம்பறாத் தூணியும், தரித்துக்கொண்டு தோளிலொரு வில்லையும், தாங்கிக்கொண்டார். தம்பியும் அதேரீதியாக ஆயுதபாணியாகி பின்வர, தசரதமகாராஜாவினுடைய பிராணனே துணையாக வருகிறதுபோல விஸ்வாமித்திர மகாரிஷியின் பின் நடந்து அயோத்தியாபுரியைவிட்டு நீங்கி மிகுந்தசிறப்போடோங்கிய சரயுநதியென்கிற ஆற்றில் இறங்கி நடக்கும்போது அநேக சிங்கார வலங்காரத்தோடு நெருங்கி யிருக்கும் சாலைகள் - நந்தவனங்கள் - கழனிகள் முதலானதுகளையும், பார்த்துக்கொண்டே அவ்வாற்றின் கரையேறினார்கள். சூரியனும் அஸ்தகிரி யென்கிற வரைபோயினன். அப்பால் வேதகோஷமும் யாகாதிகள் செய்யும் புகைகளும் சூழ்ந்திருக்கிற ஒரு திவ்வியமான சோலையைக்கண்டு யாவர்க்கும் மேலான ஸ்ரீராமன் விஸ்வாமித்திரரைப் பார்த்[illegible]வாமி, இந்த சோலையாது இதனுடைய விர்த்த[illegible]யேனுக்கு அருக்கிர கஞ் செய்ய. வே[illegible] விஸ்வாமித்திரர் சொல்லத்தொ[illegible]

கேளும்[illegible] ராமசிவன்[illegible] தார். அ[illegible] த்தினி[illegible] ப்புவி[illegible] ஞ்செ[illegible] திரத்[illegible] ஒ[illegible] அ[illegible] ள[illegible] ம[illegible]

அக்காரணத்தினாலேயே இதற்கு காமாச்சிரமமென்னும் பெயர். ஓ, வேதசுரூபியே! மனதினின்கண் பொருந்திய ஆசைமுதலிய பற்றினால்வினையும் பிறவியின் வேர்பகையைப்போக்கி மோக்ஷ சாம்பிராச்சியத்தையடைய பரிசுத்தமான பேரறிவினை செலுத்துதற்குரிய கடவுளாகிய பரமசிவனே இங்கிருந்து யோகஞ்செய்தாரென்றால் இதனுடைய பரிசுத்தத்தை அளவிட்டுச்சொல்லக்கூடுமானதாவென்று சொன்னமாத்திரத்தில் ஸ்ரீராமனும், அதிசயித்து சந்தோஷித்து அவ்விடத்தி லெழுந்தருளியிருக்கிற தபசிகளோடு அன்றைக் கங்கிருந்து மற்றுநாள் சூரியோதயத்தி லெழுந்திருந்து கடூரமான ஒரு பாலைநிலத்திற்கு வந்தார்கள். அந்நிலம் எப்பேர்க்கொத்ததென்னில், சூரியன் அந்நிலத்தினுண்டாகிய சரப்பசையைக் கிரகிக்கும் பொருட்டு விருதுகொண்டிருக்கிறாப்போல சார்வதா அந்நிலையல்லாமல் வெறுபகுதியில்லாமையால், சூரியன் அந்நிலப்பசையை கிரகிப்பானாகில் உள்ளம்வேம். கண்ணினால் பார்ப்பானாகில் கண்களும் வெந்துபோகும். அந்நிலத்தின் கொடிதாகிய வெப்பத்தைச் சொல்லவேண்டுமானால் சொல்லுகின்ற நாவும், இருளும், அண்டகடாகத்தின் முகடும், வெயிலும், மேகமும், மின்னலும், இடியும், வெந்து போகுமானால் வேவாதது யாது, பாவிகளுடைய வஞ்சனையினாலே ஓர் தருமபுருஷன் அகப்பட்டுக்கொண்டு அவமானப் பட்டால் அவனுடைய மனது எப்படிக்கு ஆறுமல் வேர்த்துக்கொண்டிருக்குமோ அப்படிக்காறுதவெப்பத்தையுடைத்தாயிருக்கும். அதில் பேய்போல தலைவிரித்துக்கொண்டிருக்கும் பெருங்கள்ளியின் வேர்பிளந்து சிந்திகிடக்கவும், அகில்களும், தழையில்லாத மூங்கிலும் வெடித்து உதிரும்படியான முத்துகளும், விஷத்தையுடைய பாம்பின்வாய் கிழிந்து கக்காநின்ற ரத்தமும் பொருந்தியிருக்கும். அந்நிலத்தில் நிறுத்திருக்கக் கூடாமையால் மற்றொரு நிலத்தின் வஸ்துவானது வரமாட்டாது. அதில் வாசஞ்செய்யும் காளியும் ஓடிக்கொண்டே யிருக்கவேண்டியது. தப்பி நின்றால் வெந்துபோவாள். அந்நிலத்திற்குச்சரியாய், ஆகாயத்தில் சூரியன் தேரும், மேகமும், ஓடமாட்டாது. நேரில் பெருங்காற்றும் ஓடமாட்டாது. அந்நிலத்தின் கொடிதாகிய [illegible]ரிய வெப்பத்தை சகிக்காமல் நாகராஜன் கண்க[illegible]ளுக் கக்காநின்ற விஷச்சுவாலையானது மேக[illegible]த்தைக் கிழித்துக்கொண்டு பிரகாசிக்கும். மின்[illegible]த்த பல ரத்நங்கள் அப்பூமி வெடிப்பில் பிர[illegible]ன்றது. எத்தன்மையெனில், பூமிதேவியினுடை[illegible]ல் வெடித்து அப்புண்ணி லுண்டாகும் ரத்தம்[illegible]லவு மிருக்கும். மிகுந்த பசியோடு புழுங்கி பாம்[illegible]கொண்டு வாயை ஆவென்று திறந்துக்கொண்டிருக்[illegible]. மலைப்பாம்பினுடைய வாயில், இந்நிலத்தின் வெ[illegible]பத்தைத் தாளமாட்டாமல் யானையானது நிழல்தேடிக்கொண்டு தானேவந்து புகுந்துக்கொள்ளும். இப்படிக்கு அக்கினியே அரசாகவிருக்கின்ற காட்டினில் [illegible]க்கைகளும், யானைகளும், கருகி வடவா முகாக்கினியா

ல் நீய்ந்த மேகம்போலவும் வீழ்ந்துகிடந்தன. இவ்வித காட்டில் சஞ்சரிக்கும் பிசாசின் தேர்க்கூட்டமானது தானிருக்கு மிடத்திலிருந்து யெழும்பும் வெப்பமானதுமின்றி, மேலோங்குமாகில் ஆகாயம் வெந்துபோகுமென்று தேவர்களுக்காக பச்சியாதாபத்துடனேசூழ்ந்து கொண்டிருக்கிற நீர்போல விருக்கும். இவ்வளவு கொடிதாகியநிலத்தைக்காக்கும்கோடையென்கிற அரசன் கொலுவிருக்கச்செய்த அக்காட்டி னிடத்திலுநித்த கானல்தேர் பொன்கால்களை யுடையப் பளிங்கு பீடம் போலயிருக்கும்.

நல்வினை தீவினையென்கிற இரண்டையும் விட்டு மூவகைப் பகையாகிய பைசாசு - உலகு - உடல் - என்கிறகாவலைக்கடந்து முத்திக்கு ஏதுவாகிய கிரியைச்செய்கிறவர்களுடைய மனம்போலவும், விலைமாதருடைய உள்ளம்போலவும், அந்நிலம் பசையற்றிருந்தது அவ்வளவு கொடிதாகிய நிலத்திலுள்ளப்பருக்கைக்கல்கள் அவ்வெப்பத்தினால்பொரிந்துவிழ, அதனால் அந்நிலம்வெடித்துப் பெரிதாகிய வழிபோலத் தோன்றுகிறபடியால் அவ்வழியில் சூரியன் உத்தேசித்துநாகலோகத்திலும்சஞ்சரிக்கும்படியாயிற்று. இப்பாலைநிலம் இவ்வளவுதீக்ஷணியத்தோடு விளங்குவதாயிருந்தபோதிலும் ஸ்ரீராமலக்ஷ்மணன் அதிக வலியுடையவர்களாயிருந்தாலும், புஷ்பத்தைப்பார்க்கிலும் மிருதுவாகிய பாதத்தை யுடையவர்களாகையால் கொஞ்சம் வருத்தமுறுவார்களென்று, விஸ்வாமித்திரர் மனதில்நினைத்து அவர்கள்முகத்தைப்பார்க்க, அப்பார்வை இன்னதென்றறிந்த சக்கரவர்த்தியின் புதல்வர்கள் விஸ்வாமித்திரருடைய திருவடியினிடத்தில் கிட்ட, விஸ்வாமித்திரர் பூர்வத்தில்பிர்மாவினாலுண்டாக்கியிருந்த மந்திரமாகிய - பலை - அபலை - என்கிற இரண்டு திருமந்திரங்களையும் அவர்களுக்குபதேசித்தார். அவர்களும் அம்மந்திரத்தை உச்சரித்துக்கொண்டு செல்லவே, ஊழித்தீயை ஏளனம்செய்யும் இப்பாலையின் தீயானது குளிர்ச்சிபொருந்திய ஜலம் போலயிருக்கச் சக்கரவர்த்தியின் திருமகன் விஸ்வாமித்திரரைச்சேவித்து, ஸ்வாமி! இந்தபூமி சிவனுடைய நெற்றிக்கண்ணினால் வெந்ததோ! அல்லதுயாது! இவ்வளவு வெப்பத்தை யடையும்படிக்காயிற்று குற்றமற்ற சக்கரவர்த்தியினுடைய திருநாட்டில் இப்படிக் கிருக்கும்படியானகாரணம் தேவரீர்அநுக்கிரகஞ்செய்யவேணுமென்று கேட்க, ஸ்ரீராமமூர்த்தியைப் பார்த்து விஸ்வாமித்திரர்சொல்லுகிறார் கேளும் ஸ்ரீராமா? ஒருராக்ஷஸி இவ்விடத்தில் வாசஞ்செய்துக் கொண்டிருக்கிறாள் அவள் எப்பேர்க்கொத்தவளெனில், சகலஜீவராசிகளையும் கொன்று புசிக்கத்தக்க தன்மையை யுடையவள் யமனை ஒத்தவள். மதம்பொருந்திய ஆயிரம்யானையினுடைய பலத்தையுடையவள். பின்னும் எப்பேர்க் கொத்தவளெனில், இப்பூமியைப் பேர்க்கவேணுமென்றாலும், சமுத்திரத்தை வாரவேணுமென்றாலும், ஆகாயத்தை இடிக்கவேணுமென்றாலும், செய்யத்தக்கவலியையுடையவள். மேலும் உலகத்திலுண்டாகிய பாபங்களெல்லாம் ஒருங்காகக் கூடி ஒரு பெண்சுருபங் கொண்டதுபோல இருக்கிறாள். அவளுடைய தேகமோவெனில், இரண்டு பர்வதமும்-விஷமும்-இடியும்-ஊழித்தீயும் - இரண்டிறையும் பொருந்தி ஒருசமுத்திரமுண்டா யிருக்குமாகில் அவளுக்குச்சமானமாக இருக்கும். பாம்பைவளையலாகவுடைய சூலம்பொருந்திய கரத்தையுடையவள். சுடுகாட்டில் சஞ்சரிக்குந் தன்மையையுடையவள். புருஷான் இச்சிக்குந் தோளையுடைய ஸ்ரீராமா? அவளைப் பார்த்தவர்கள் தாடகையென்று சொல்லுவார்கள். பிரமதேவனால் சிருஷ்டிக்கும்படியான சகலஜீவ கோடிகளையும் வாரி வாயிற்போட்டுக்கொண்டு தன்னுடைய இளிப்பாகிய உயிரைவளர்க்கும் கொடூரத்தையுடைய நமனையொத்தவள். அவள்யாரென்று கேட்பாயாகில் சொல்லுகிறேன் கேளும், ஸ்ரீராமாவென்று விஸ்வாமித்திரர் சொல்லத்தொடங்கினார்.

கந்தருவ குலத்தில் சற்சரனென்று ஒரு அரசனிருந்தான். அவனுக்கு சுகேது வென்று ஒருகுமாரன், அவன் புத்திரனில்லாமல் பிர்மாவை நோக்கி அநேககாலம் தவஞ்செய்தான், பிர்மதேவன் பிரசன்னமாய் உனக்குஎன்னவேணு மென்றுகேட்க, ஸ்வாமி ? எனக்கு ஒருபுத்திரனை அநுக்கிரகஞ்செய்ய வேணுமென்றுசொல்ல, ஆனால் உனக்கு புத்திரர் கிடைப்பதரிது. ஆயிரம் மதயானை பலத்தோடும், அழகோடும் ஒருகுமாரத்தியுண்டாகுமென்று சொல்லி தமது பிர்ம லோகத்துக்குப்போய்விட்டார். அப்படியே சுகேதுக்கு ஒருபெண்பிறந்தது. அப்பெண் மிகுந்தசௌந்தரியம் பொருந்திய ரூபலாவண்ய வலங்காரத்தோடு வளர்ந்துவர, அதுகண்டு இப்பெண்ணுக்குத் தகுதியான புருஷன் யாரென்று தன்னுடைய பந்துவர்க்கத்தில் சோதித்து சுந்தனென்பவனுக்கு பாணிக்கிரகணம் செய்துக் கொடுத்தான். அவர்களிருவருங் காமனும், ரதியும்போலகூடி சந்தோஷ சாகரத்தில் மூழ்கியிருந்தார்கள். இப்படிபலகாலங்கழிந்து அவள்வயிற்றிலே புவனங்க ளெல்லாம் நடுநடுங்கும் படியாய் மாரீசன் என்றும், சுவாகுவென்றும், இரண்டுபிள்ளைகள் பிறந்தார்கள். அவர்கள் மாயங்களும், வஞ்சனைகளும், மிதமில்லாதபலங்களும் தாயைப்பார்க்கிலும் அதிகபலசாலிகளாகி உலகத்திலே சஞ்சரித்துக்கொண் டிருந்தார்கள். சுந்தனானவன் தன்னுடைய பிள்ளைகள் பலத்தைக்கண்டு கர்வித்துத்தானும் அதர்மமார்க்கத்திலே திரிந்துக்கொண்டிருந்து ஒருநாள் அகஸ்திய மகாமுனி ஆச்சிரமத்துக்குவந்து அவடத்திலுண்டாகிய விருக்ஷங்களையெல்லாம் பிடுங்கியெறிந்துமான்-கடம்பை முதலிய மிருகங்களையெல்லாம் கொன்று புசித்து உபத்திரவப்படுத்தினான். அப்போது அகஸ்திய மகாமுனி அதிகோபத்துடனே பார்க்க அவன்சாம்பலாய்ப்போனான். அவன்மடிந்தசேதி பிள்ளைகளுந்தாயும் கேட்டு அதிக கோபத்துடனே புறப்பட்டு அந்தமகாரிஷியை கொல்லுகிறோமென்று இடியும், சிங்கமும், சண்டமாருதமும்பயப்பட, தேவர்களும் சந்திரசூரியாளும் மேகங்களும் நடுங்க அண்டங்கள் அதிரக்கெர்ஜித்



துக்கொண்டு வந்தார்கள். அகஸ்தியமகாமுனி இவர் களைப்பார்த்து நீங்கள் ராக்ஷத கிர்த்தியம் செய்கிற படியினாலே ராக்ஷதர்களாகக்கடவதென்றுசபித்தார். அந்த க்ஷணமே காந்தர்வ ரூபம்போய் கோர தந்தங்களும், செம்மயிர்களும், கறுத்த சுருபங்களையு முடையராக்ஷதரா யானார்கள். அகஸ்தியமகாமுனியைபதிலுக்கு ஜெயிக்கிறதற்கு இவர்களாலாகாதபடியினாலே அப்போது சுமாலியென்பவனிடத்திற்குப்போய் அவனைக்கண்டு உனக்கு நாங்கள் பிள்ளைகளென்று உறவுகொண்டாடி அவனுடனே அனேககாலம் பாதலத்திலே இருந்து இப்போது ராவணனுக்கு மாதுலர் இவர்களென்று சொல்லத் தக்கதாக இலங்கையிலே திரிலோககண்டகராய் சலிகைகொண்டு தாயும் பிள்ளைகளும் உலகங்களெல்லாம் சஞ்சரித்துக்கொண்டு உபத்திரவம் செய்துக்கொண்டு வருகிறார்கள், அந்த தாடகையானவள் தன்பிள்ளைகளைவிட்டு அகஸ்தியருடைய கோபத்தைக் கருதி, இவ்வனத்தில்பிரவேசித் திருக்கின்றனள், சொல்லுதற் கரிதாகிய குணங்களை உலோபகுணம் அழிப்பதுபோல கொடிய [illegible]மருதநிலத்தையழித்து மாற்றினாள். இலங்கைக் கதிபனாகிய ராவணனுடைய ஊழியத்திலமர்ந்து மிருகத்தைப்போல வலிபெற்று எனது யாகத்துக்கு விக்கினஞ்செய்துக்கொண்டு வருகிறாள். ஓ, ஸ்ரீராமா, அவளிங்குண்டாகிய சமஸ்தஜீவராசிகளையும் கொன்று தின்கிறதல்லாமல் தனக்கு ஆகாரம் என்று நினைத்திருக்கிறாள். இனிபலவார்த்தை சொல்லவேண்டியதென்ன, சகல பிராணிகளையும் இன்னம் சிலநாளையில் வாரிவயிற்றில் போட்டுக் கொள்வாளென்று விஸ்வாமித்திரமகாரிஷிசொல்ல, ஸ்ரீராமன்கேட்டுதிருமுடியை அசைத்து இத்தனை பாவியாய் அக்கிரமம் செய்கிறவள் எங்கே யிருக்கிறாளென்று கேட்க, இந்த பர்வதத்தின் பேரில்தா னிருக்கிறாளென்று சொன்னார். அப்படிசொல்லிக்கொண்டிருக்கிற சமயத்தில் ஒரு கறுத்த பர்வதமானது நெருப்புச் சுவாலையுடனே வந்ததுபோல வந்தாள். கோரதந்தங்களுடனே யிருக்கிற வாயைமடித்துக் கொண்டு புருவங்கள் துடிக்க நிறைந்தசமுத்திரத்தில் இரண்டு வடவாமுகாக்கினிப்பிரவேசித்தாற்போல இரண்டுகண்களிலேயும் நெருப்புப்பறக்கமகாகடூரமாய் விழித்துப் பார்த்துக்கொண்டு வருகிறவேகத்தில் பர்வதங்கள் விருக்ஷங்க ளெல்லாம் கூடப்பின்தொடர்ந்துவர கால்கள் பெயர்த்துவைக்கிறயிடங்க ளெல்லாம் சமுத்திரம்போல ஜலம் ஊற்றாகவர, இவளுடையகோரசரீரத்தைப்பார்த்துகூற்றுவனும் பயந்து பாதலத்திலே ஓடிப்பதுங்க யானைகளை துதிக்கையோடுதுதிக்கைசேர்த்து மார்பிலே தாவடமாலைகளாக தரித்திருக்கிற மகாபலத்தையுடையவளா இப்படிக்குவந்ததாடகைதேவர்கள்முதலாகபதினாலுலோகத்தாரும்நடுங்க இடியும்பயப்பட ஒருகெர்ஜிப்புகெர்ஜித்துஇவர்களைப்பார்த்து நகைத்துதன்கையிலிருக்கிறசூலத்தைப்பார்த்து உதட்டைக்கடித்து குகைபோல இருக்கிற வாயைத்திறந்து இடிக்கிற மேகம்போல ஒரு வார்த்தைசொல்லுகிறாள். ஒருவராலேயும் ஜெயிக்கக்கூடாத பலத்தை உடைய என்னுடையகாவலில் இருக்கிற இந்த ஆரணியம் இதிலே யிருக்கப்பட்ட ஜீவஜெந்துக்களையெல்லாம் கருவறுத்துப் போட்டேன். உங்கள் சரீரத்தி லிருக்கிற மாங்கிச ருசியைநான் அறியவேணுமென்றுவந்தீர்களோ ? உங்கள் விதிதானேதள்ளிக்கொண்டு வந்ததோவென்றும்மிகுந்த கோபத்துடனே சீக்கிரத்துக்கு வந்தகாரியத்தை சொல்லுங்களென்றுசொல்லிசூலத்தை இவர்கள்பேரில் திருப்பினள். ஸ்ரீராமன், அவளையும் அவள் வார்த்தையையும் கேட்டு சூலத்தைத் தங்கள்பேரில் செலுத்துதற்குத் திரும்பியதையும் பார்த்து விஸ்வாமித்திரமகாமுனி அவளைக் கொல்லவேணுமென்று மனதில் பற்றி யிருக்கிற எண்ணத்தை அறிந்திருந்தும், வில்லிலே அம்பை ஏற்றிடாமல் ஸ்திரீஜாதி என்கிறதையே தமது திருவுளத்தி லெண்ணி சும்மாயிருந்தார். அவர் ஸ்திரீஜாதியென்று அவள் பேரில் அஸ்திரபிரயோகஞ் செய்யாமலிருப்பதை விஸ்வாமித்திரமகாரிஷி அறிந்து ஸ்ரீராமா, இவளை ஸ்திரீஜாதியென்று நினைக்கவேண்டாம், எல்லாத்தீமைகளையுஞ்செய்தவள். எங்களைப்புளிக்கோதுஎன்கிறதாகப்புசிக்கயில்லைஇதுதான்குறை இந்தகொடிதாகிய பாவியை யாதென்றெண்ணுவது, இவளை ஸ்திரீஜாதியென்று எண்ணலாமா, ரத்னாபரணத்தையுடையவனே, இவளுடையபேரைச்சொன்னால் சௌரியவந்தரான ஆண்பிள்ளைகளெல்லாம் நடுநடுங்கிப் போவார்களாகில் அப்போது ஆண்பிள்ளைத்தனம் யாரிடத்திருக்கின்றது. மேலும் இவளுடன் எதிர்த்து நிற்கமாட்டாமல் தேவேந்திரன் ஓடிப்போய் விட்டான். தேவர்கள் அசுரர்கள் முதலியவரும் இவளுக்கு முன்னிற்கமாட்டாமல் இளைத்துப்போய் விட்டார்கள். இவளுடைய ஆண்மையை என்னவென்றுசொல்வது, சக்கரவர்த்திகளாயிருக்கிற ராஜாக்கள்முதலிய பலரைக்கொன்று தருமத்தைக்கெடுத்தவள். இதன்றியில், இன்னஞ் சிலதுசொல்லுகிறேன் கேளும் ஸ்ரீராமா ? பூர்வத்தில் ஸ்ரீமகாவிஷ்ணு பிருகுமகாரிஷியின் பத்தினியினிடத்தில் ஒருகுற்றங்கண்டு அவளை சங்கரித்துவிட்டார். மகாபாவியான ராக்ஷஸியாகிய குமதி என்பவள், இவ்வுலகின்கண்ணுள்ள ஜீவராசிகளை தனக்கு ஆகாரமாக வெண்ணியிருந்தாள். அவளை வச்சிரதரனாகிய தேவேந்திரன்சங்கரித்தான். ஆதலால் இவர்கட்கு யாவராலும் புகழும்படியான கீர்த்திவந்ததேயல்லாமல் அகீர்த்தி வந்ததுண்டா ? இல்லையே ! சொல்லும், மகரந்தங்கள் பொருந்திய மாலையையுடைய ஸ்ரீராமா ! இவ்வுலகத்தை ஆக்கியாச்சக்கரத்தினா லாண்டுவந்த சக்கரவர்த்திகளின்வழியில் அவதரித்தபெரியோய், பெரியவாளோடுகூட ஜீவராசிகளைக்கொன்று தருமங்கெடச்செய்யும் இவள்விஷயத்தில் யாதொருபச்சாதாபம் நினைக்கக்கூடுமா ? கூடாது. உலகத்தில் மாந்தர்கட்கு நியமித்தகாலத்தைக்கழித்து பாவபுண்ணியங்களை யறிந்து மோக்ஷசாம்பிராச்சியத்திற்குச் செல்லுகிறதுண்டு, இவளைப்போல மானிடஸ்பரிசம் பட்டமாத்திரத்தில் புசிக்கயிச்சிக்கும் ஓர்யமனுண்டோ ? யமன்வழுலும்படியான வே

லாயுதத்தையுடைய ஸ்ரீராமா! சொல்லும். இவ்வளவு துர்க்கிர்த்தியங்களைச் செய்துகொண்டிருக்குமிவளை ஸ்திரீஜாதியென்று நினைக்குந்தன்மை எளியபக்ஷமாக விருக்கின்றது. தருமசாஸ்திரப்படிக்குச் சொல்லுகின்றேனல்லது, அவள் கோபவுக்கரத்தோ டிருப்பதைப்பார்த்துச் சொல்லுகின்றதல்ல, ஆதலால் இவளைக் கொல்வதனால் பாவமில்லை. தருமமேயல்லது வேறொன்று மிராதென்று விஸ்வாமித்திரமகாரிஷிசொல்ல, ஸ்ரீராமன் அதுகேட்டு ஸ்வாமி! தாங்கள் சொல்லுவது தருமமல்லாதேபோனாலும், அல்லது தருமமாகவேயிருந்தாலும், இதுசெய்யென்று நியமித்தாலதையே வேதவாக்கியமாகக்கொண்டு செய்கிறதல்லவா, தருமம் என்று அங்கீகரித்தார். இச்சம்பாஷித்தலை அந்த அரக்கியாகிய தாடகைக்கேட்டுத் தன்கையிலிருந்தசூலத்தைமிகுந்த உக்கிரபார்வையோடு அக்கினிபறக்க ஸ்ரீராமன் திருமேனியைப்பார்த்தெறிந்தாள், புதியமலைப்போலகோபித்தெறிந்தசூலமானது அந்தமகாரிஷியின்வாக்கியத்தைவேதவிதியாக்கொண்டுநிற்கின்ற, ஸ்ரீராமன்மேல்சந்திரன்பேரில்வருகிற ராகுபோலவந்தது ஸ்ரீராமன்அதைக்கண்டுவாளைத்தொட்டதும் அழகுபொருந்தியவில்காலைவளைத்ததும்,பார்த்தவர்களில்லை. ஆனால் அச்சூலமானது இரண்டுதுண்டாக முறிந்துவிழுந்ததைமாத்திரங்கண்டார்கள். அக்கியானம்போன்ற நிறத்தையுடைய இந்த அரக்கியானவள் அதுகண்டுசொல்பொழுதில்கடலை அடைப்பதுபோல மலைகளையே மழைபோல எறிந்தாள். அதுகளை ஸ்ரீராமன் தனது வில்மழையால்விலக்கிவிட்டு சொல்லைப்பார்க்கிலும் மிகுந்த வேகத்தையுடைய ஒரு அம்பை ஸ்ரீராமமூர்த்தியானவர் அந்த கரியநிறத்தோடுங்கூடிய தாடகையின்பேரில் பிரயோகஞ்செய்த மாத்திரத்தில், அவளுடையபர்வதாகாரமான மார்பைத்துளைத்துக்கொண்டு உருவிப்போயிற்று எத்தன்மையெனில், கல்லாத மூடர்களாகிய பாமரர்களுக்குப் பெரியோர்களால் உபதேசிக்கும் மந்தரார்த்தம் எப்படிக்கு மனதில்தங்காது நீங்குமோ! அப்படிபோலபோயிற்று. ஸ்ரீராமபாணமாகியபிரளயகாலசண்டமாருதம் அடிக்கவே ஊழிகாலத்தில் பெய்யாநின்ற மேகமானது மின்னல் இடிமுழக்கத்தோடு ஆகாயத்தி லிருந்து வீழ்ந்ததுபோல இந்த தாடகையானவள் பூமியின்பேரில் விழுந்தாள். பூமியெல்லாம் ரக்தப்பிரவாகமாக நிறைந்தது. அந்த தாடகைவிழுந்தது ராக்ஷதகுலத்துக்கு அபஜெயகாலம் உண்டாகப்போகுதென்று முன்னுதாக அவர்களுடைய வெற்றிக்கொடி முறிந்து விழுந்ததுபோல யிருந்தது. இப்படிக்கு அவள் மார்பில்பட்ட அம்பினுடைய வாய்வழியே ஒழுகிவருகிற ரக்தவெள்ளமானது அக்காடெல்லாம் பரவிய தெத்தன்மையெனில், அந்திமாலையாகிய செவந்தவானம் அடியோடு அற்றுவிழுந்ததுபோல யிருந்தது விஸ்வாமித்திரருடைய வார்த்தையைமறுக்காமல் போர்செய்த காகுத்தனாகிய ஸ்ரீராமன் இந்த ஸ்திரீயினுடைய யுத்தத்தில் ராக்ஷதர்களுடைய ஜீவனை உண்கிறதற்குப் பயப்பட்டிருந்த கூற்றுவனும் கிஞ்சிற்று ருசியறிந்தான்

பின்பு தேவர்கள் நரங்களும் எங்களுடைய வாசஸ்தலத்தையடைந்தோம். உமக்கும் ஒருதுன்பமுமில்லை. இனியிந்த சக்கரவர்த்தி திருமகனுக்கு தெய்விகமாகிய அஸ்திரங்களைக் கொடுமென்று அந்த விஸ்வாமித்திர மகாரிஷிக்குச்சொல்லி, ஸ்ரீராமன்பேரில் புஷ்ப வருஷம் வருஷித்து வாழ்த்திப் போனார்கள்.

---

## கோமதி - கௌசிகை என்கிற
### ஆறுகளின் வரலாறு.

பின்பு விஸ்வாமித்திரர், இவ்வுலகத்தில் வறுமை என்கிற நோய்கொண்டவர்களுக்கு அமிர்தம்போலயிருந்த வெண்ணெய் நெல்லூர் சடையப்பமுதலியாருடைய சொல்லை ஒத்த அஸ்திரங்களைக் கொடுத்தார். அந்த அஸ்திரங்களெல்லாம், பூர்வத்தில்செய்த நல்வினைக்குத்தக்க பிரயோசனங்கள் மறுஜெனனத்தில் தேடிவருவதுபோல மிகுந்த சந்தோஷத்துடனே சக்கரவர்த்தி திருமகனிடத்தில்வந்து, ஐயனே! அடைந்தோம் இனிபிரியமாட்டோம், இளையபெருமாளைப்போல ஏவின தொழிலைச்செய்துக்கொண் டிருப்போமென்று சொல்ல, சக்கரவர்த்தி திருமகன் நல்லதென்றுசம்மதித்தார். இவைகள் நிறைவேறியபின்பு, மும்மூர்த்திகளுக்குச் சமானமான இந்தமூன்றுபேரும் இருகாதவழி நடந்தார்கள். அவ்விடத்தில் ஓர்நீர் கோஷ்டம்தோன்ற, சக்கரவர்த்தி திருமகன் விஸ்வாமித்திரமகாரிஷியைநோக்கிசுவாமி! இந்த சந்தடியாதென்றுவினவ, விஸ்வாமித்திரர் சொல்லுகின்றார். கேளும் ஸ்ரீராமா? மானசமடுவில்பிறந்துசரயுநதியென்று பேர்பெற்று தேவர்களால் ஸ்மரிக்கத்தக்க மேலானதீர்த்தமாகி, கோமதி என்கிற தீர்த்தத்தில் வந்து விழுகிறதினுடைய கோஷ்டமென்று சொல்லி, அப்பால் நடக்கும்போது பாவத்தைப்போக்கும் ஓர்திவ்விய நதியைப்பார்த்து இதன்வரலாறு என்னவென்று சக்கரவர்த்தி திருமகன்வினவ,விஸ்வாமித்திரமகாமுனிசொல்லுகிறார். தாமரை புஷ்பத்தில்பொருந்திய பிர்ம்மதேவனுக்கு குசனென்று ஒருபிள்ளையுண்டு, அவர் தனது செங்கோன்மைக்குப் பழுதுறாமல் பாதுகாத்துவந்தார். அவருக்கு – குசன் – குசநாபன் – அதூர்த்தன் – வசு – என்கிற நான்குபிள்ளைகள் பிறந்தார்கள். இவர்களில் குசநாபன் என்பவனுக்கு மகாசுந்தரத்தையுடைய லக்ஷணத்தோடு நூறு பெண்கள்பிறந்தார்கள். இவர்கள் மகா செல்வத்தோடு வளர்ந்து யவ்வனத்தை அடைந்தவர்களாய், ஒருநாள் தங்கள் பிதாவினுடைய சிங்காரவனத்திற்கு விளையாடும்பொருட்டு போனார்கள். அவ்விடத்தில் வாயுபகவான்வந்து இவர்களைப்பார்த்து இச்சைகொண்டு அந்தப்பெண்களைநோக்கி, விலாசம்பொருந்திய கண்களையுடைய பெண்களே! மன்மதனால் யான் வருந்த முறுகிறபடியால் என்னை விவாகஞ்செய்துக் கொள்ளுங்களென்று கேட்க, அவர்கள் தங்கள் பிதாவினிடத்திற்சொல்லி விவாகஞ்செய்துக் கொள்ளுமென்றுசொல்ல கேட்டமாத்திரத்தில் தனது ஸ்பரிசத்தால் அவர்கள்முதுகை ஒடித்து கூனாக்கிவிட்டு அப்பால் போனபிற்பாடு



அவர்கள் தவழ்ந்துக்கொண்டேபோய் தங்கள்பிதாவோடு சொன்னார்கள். அதுகேட்டு அவனும், கிலேசித்து பெண்களுக்கு தயிரியஞ்சொல்லி தேற்றி சூளிமகாரிஷிபுத்திரனான பிரமதத்தருக்கு நூறுபெண்களையும் கலியாணம் செய்துக்கொடுத்தார். அந்தமகாரிஷிகைகளால் தீண்டவே அந்த கூன்களெல்லாம் பரிஷ்காரமாகநீங்கி, எப்போதும்போல நல்ல சுரூபமானார்கள். அந்த குசநாபனுக்குப் புத்திரரில்லாத படியால் ஓர்யாகம்செய்தான். அந்த யாகத்தில் காதிவந்து பிறந்தார். அந்த காதிக்கு இராச்சிய பட்டாபிஷேகஞ்செய்து குசநாபன் தெய்வலோகமடைந்தான். பிற்பாடு அந்த காதிமகாராஜனுக்கு நானும், கவுசிகை என்கிற ஒருபெண்ணும் பிறந்தோம். அந்தப்பெண்ணை பிருகுமகாரிஷியினுடைய புத்திரரான இருசிகனென்பவருக்கு கலியாணம்செய்துக்கொடுத்தார். அவரும், அவளும், அனேக காலங்கள் தர்ம்மார்த்த காமங்களை அனுபவித்து பிர்ம்ம லோகத்துக்குப் போகவேணுமென்று இருசிகமகாரிஷி ஆகாயமார்க்கமா நடந்தார். அப்போது கவுசிகை அவரைப் பிரிந்திருக்கமாட்டாமல் [illegible]னுடைய பதிவிரதாதர்ம்ம மகிமையினால் இவளும் ஆகாயமார்க்கமாய் தொடர்ந்தாள். இப்படிக்குப் பாதிவழி போய்க்கொண்டிருக்கையில், இருசிக மகாரிஷி அவளைத்திரும்பிப்பார்த்து என் உத்தரவுயில்லாமல் வந்தது என்னவென்றுசொல்லி நீபோய் பூலோகத்தில் நதியாய்ப்பிறவேசித்து யிருந்து சகலருக்கும் பாவவிமோசனம் செய்துக்கொண் டிருக்கக்கடவாயென்று சொல்லி ஆக்யாபித்து, அவர்பிர்ம்மலோகம்போய்ச்சேர்ந்தார். என்தமக்கையான கௌசிகை இப்படி கோமதி நதியாகப் பிரகாசித்தாளென்று விஸ்வாமித்திரர் சொல்லக்கேட்டு மிகவும், அதிசயசித்தராகி அப்பால் நடந்தார்கள்.

---

## மாவலி கதை.

சக்கரவர்த்தி திருமகனும், இளையபெருமாளும், சில தூரங்கடந்தபின்னர் அவ்விடத்தில் அனேக அலங்காரத்தோடு கூடிய ஒரு சிங்காரச்சோலையைகண்டு இதனுடைய விர்த்தாந்தம் என்னவென்றுகேட்க, விஸ்வாமித்திரமகாரிஷி சொல்லுகிறார். இந்தச்சோலை மகாதுல்லியமானது தங்களுடைய நாயகர்தவிர வேறே தெய்வமும் அவர்கட்கு ஏவல் உபசாரஞ் செய்கிறதைவிட வேறே தவமும் இல்லையென்றிருக்கிற பதிவிரதைகளுடைய இருதயத்தைப்போல மகத்துவமும் பெற்றது ஸ்ரீராமா? அது யாதுகாரணத்தினாலெனில், எங்களுடைய நான்கு வேதத்துக்கும், தேவர்க்களுடைய அறிவுக்கும், சிவபிரமாதிகளுடைய தியானத்திற்கும், எட்டுதற் கரிதாகிய ஸ்ரீமகாவிஷ்ணு பூர்வத்தில் இவ்விடத்தி லிருந்து செய்யவேண்டிய தவங்களைச்செய்தது அன்றியில் பூமியிலும் ஆகாயத்திலும், ஆசைமுதலிய பற்றற்று ஸ்மரிக்கிறது அவருடைய நாமதேயம். அவர்செய்கிற மாயையாகிய பெரும்பிணக்கை ஒருங்காகத்தேர்கிறவர்கள் யாரையெனில், அந்தபரிசுத்தமாகிய கடவுளென்றறியக்கடவாய், அவர் நினைப்பதை அறிகிறதற்குக் கூடாது: அப்பேர்க்கொத்த கடவுள் இவ்விடத்தில் நூறு ஊழிகாலம் தவமுதலியதைச்செய்து யாவர்க்கும் அறிவித்தனர். இப்படிக்கிருக்கின்ற காலத்தில் மாவலியென்கிற அசுரன்பூமியும், தேவலோகமும், தன் வசப்படுத்திக்கொண்டு சகல சாம்பிராச்சிய வந்தனாயிருந்துக்கொண்டு பிராமணருக்கு சகலதானமுங் கொடுக்கிறதாக சங்கல்ப்பித்துக்கொண்டு அனேக தான தர்மம் செய்துக்கொண்டு வந்தான். அப்போது தேவர்கள் அசுரனானவன் இப்படிக்கு அபரிமிதமான தர்ம்மத்தைச் செய்துவருவதால்,தங்களுக்குத் துன்பம்வந்து சம்பவிக்குமென்று எதுவோ ஒன்றைதேவர்கள் எண்ணிப்பயந்து இவ்விடத்தில் வாசம் செய்துக்கொண்டிருந்த ஸ்ரீமகாவிஷ்ணுவின் சந்நிதிக்கு வந்து வணங்கி ஸ்வாமி! இதை தீர்க்கவேணுமென்று சொல்லிக்கொண்டார்கள். அப்படியே அவரும் செய்கிறேனென்று அவர்களை அனுப்பிவிட்டு திரிகால நுட்பங்களையும் அறிந்திருக்கிற காசிபமகாரிஷிக்கும், அவர் பத்தினியாகிய அதிதிக்கும், ஒரு பிள்ளையாகப் பிறந்து கறுத்த நிறத்தோடுங் கூடிய திருமேனியுமாய் ஆலவிதைபோல குறுகின சுரூபமுமாய் அந்த மாவலியினிடத்துக்கு வந்தார். அந்தவாமன சுரூபன்வரவே,மாவலி எதிர்கொண்டு தீர்க்கதண்டஞ்செய்து பிராமணோத்தமரில் உமக்குச் சமான மானபேர் உலகத்தி லில்லை. உம்மைதரிசித்து என்னைப்போல் கிருதார்த்தனானவர்கள் வேறொருவருமில்லையென்று அதிக சந்தோஷத்துடனே சொன்னான். அதுகேட்டு, வந்திருக்கிற ஸ்ரீமன் நாராயணமூர்த்தி சொல்லுகிறார் யார்யார் என்னத்தை கேட்கிறார்களோ அவர்கட்கு அந்தப்படியே கொடுத்து நீண்டகரத்தை யுடையவனே ! உன்னிடத்துக்கு வருகிறவர்கள் பெரியவர்களே யல்லாமல் வேறல்ல வென்று சொன்னார். அதுகேட்டு மாவலி மிகவுஞ் சந்தோஷித்தனாகி உமக்கு என்னவேணும் சொல்லும் அந்தப்படி கொடுக்கிறேனென்று சொல்ல, எனக்கு மூன்றடி மண் கொடுத்தால் மனது திருத்தியாகுமென்று வாமனசுருபன்சொல்ல அப்படியே கொடுத்தேன் வாங்கிக்கொள்ளுமென்று கெண்டிகையி லிருக்கிற ஜலத்தை தாரைவார்க்க ஆயுத்தப் பட்டபோது, அவனுடைய குருவாகிய சுக்கிரபகவான் தம்முடைய சிஷனான மாவலியைப்பார்த்து இந்தசுரூபம்கபடநாடகமாக வந்திருக்கின்றது இது மேக நிறத்தோடுகூடிய வாமனரூபமென்று எண்ணாதே! இந்த அண்டகடாகங்களை எல்லாம் பூர்வத்தில் ஒரு கவளமாகப் புசித்த மகாவிஷ்ணு இது அறிந்துக்கொள்ளக்கடவாய்! ஆகையால் இவருக்கு அந்த பூதானம் கொடுக்க வேண்டாமென்று சொல்ல, அதற்குமாவலிசக்கரவர்த்தி சொல்லுகிறான். அப்படியானால்மெத்தவும் உத்தமமாயிற்று. ஸ்ரீயப்பதியாகிய அந்தமகாவிஷ்ணுவினுடைய கைகீழும் என்கை மேலுமாகக்கொடுக்கிறது உத்தம மல்லவா ? அல்லது கொடுக்கிறவனுக்குப் கையாளியென்றுண்டா ? இராது. அதிலும் சத்பாத்திரமானவர், தாமே வலிய வந்து கேட்க கொடுக்கிறதற்கு

சந்தேகமென்ன! தன்பிராணனானாலும் கொடுக்கிறது நல்லது வாங்குகிறதுபொல்லாது, ஒருவன் பிராணனோடிருந்து மற்றொருவன்கையில் வாங்கிக் கொள்ளுகிறவன் செத்தவனுக்குச்சமானம். கொடுக்கிறவன் செத்துப்போனாலும், ஜீவனோடிருக்கிறவனுக் குண்டான கீர்த்தியும், புகழும், போலவே யிருக்கின்றது. பெரியோர்கள் சொல்லியிருக்கிற சாஸ்திரங்களிலெல்லாம் உலோபத்தை விடுங்களென்று சொல்லியிருக்கின்றது. அப்படியிருக்க நீர் கொடுக்கவேண்டாமென்று சொல்லுகிற வயணம்யாது! ஒருத்தன் கொடுக்கிறபொழுது அதைக்கொடுக்கவேண்டாமென்று தடுத்து, அந்தகொடுக்கிற தாதாவை இகபரங்களுக்கு ஆக ஒட்டாமல் செய்கிறவன் சகாயனுகமாட்டான். அதுவும் அல்லாமல் கொடுக்கிறத்தைவிலக்கிறவன் அவனும் அவனுடைய பந்துஜென முதலிய சந்ததியார் உடுக்கிறதற்கு வஸ்திரமும், உண்கிறதற்கு அன்னமும் கிடையாமல் தரித்திரத்தி லழுந்தி விநாசத்தை யடைவார்களென்று தருமசாஸ்திர மிருக்கின்றதே. இப்படிக்கெல்லாம் செப்பியிருக்க, நீர் இவ்விதமாகச்சொல்லி தடுக்கலாமாவென்று அந்த சுக்கிரபகவானை பலவாறுகவெறுத்து கண்டித்து இந்தவாமனசுரூபனைப் பார்த்து நீர் உம்முடையகாலினாலே மூன்றடியும் அளந்துக்கொள்ளுமென்று கையிலிருந்த கெண்டிகையைச்சாய்த்தார். அப்பொழுது சுக்கிரன் அந்த கெண்டிகையினுடைய துவாரத்தில் காமரூபியாய் நுழைந்துக்கொண்டு ஜலத்தைவிழ ஒட்டாமல் தடைசெய்தான். அதையறிந்து வாமனசுரூபமாய் வந்திருக்கிறவர் ஒருதர்ப்பைபுல்லையெடுத்து அந்தகெண்டிகை துவாரத்தில் குத்தினர். அப்பொழுது சுக்கிரனுக்கு ஒருகண்பழுதாகி ஒதுங்கிப்போய்விட்டான். அப்போது ஜலம் கரத்தில்வந்து விழுந்தது, விழுந்தவுடனே பகவானுடைய திருமேனி நல்லவர்கட்குச்செய்த உதவியைப்போல் அண்டகடாகமட்டுக்கும்உயர்ந்ததுபூமியில்நின்றஒருபாதம்பூமியெல்லாம் நிறைந்து போதாமல் பாதம் அதிகமாயிருந்தது, ஒருபாதம் தேவலோகமெல்லாம் நிறைந்து அங்கும் அப்படியேபோதாம லிருந்தது. மற்றொரடிக்கு மாவலி சக்கரவர்த்தியின் தேகமென்று அறியக்கடவாய். ஸ்ரீராமா ? ஆலின் விதைபோல் குறுகின ரூபமாய்வந்த பகவான் இவ்விதமாக அளந்து இந்த லோகங்களை வாங்கிக்கொண்டு தேவேந்திரன் வசம்செய்துதிருப்பாற்கடலில் ஸ்ரீமகாலக்ஷ்மி திருவடிகளை வருடிக்கொண்டிருக்க யோகநித்திரைசெய்துக்கொண்டிருந்தார். ஆகையினாலே இந்தசோலைக்கு சமானமானது வேறே கிடையாது. இந்த மகாஸ்தலத்தை தரிசனம் செய்தவர்களுக்கு மறுஜெனனமில்லை, வேதசாஸ்திரப்படிக்கு யாகம் செய்யவேணுமென்கிற எனக்கும் இதுதவிர வேறே ஸ்தலமில்லை. நான் இவ்விடத்திலிருந்து யாகம் ஆரம்பித்துச்செய்கிறேன் இவ்விடத்தில் ராக்ஷதாள் வருவார்கள் அவர்களை வரவொட்டாமல் பார்த்துகாத்துக்கொண்டிருங்களென்று சொல்லித் திட்டப்படுத்தி தாம் அந்த சோலை நடுவேபோ யிருந்துகொண்டு யாகஞ்செய்யத் தொடங்கினர்.

## விஸ்வாமித்திரர் வேள்வி.

பூமியைக்காக்கும் சக்கரவர்த்தியின் பிள்ளைகள் விஸ்வாமித்திரமகாரிஷியின் வேள்விக்கு யாதொருதுன்பம் நேரிடப்போகு தென்கிறதாக கண்ணினைக்காக்கும் இமைபோல ஆறுதினங் காத்திருந்தார்கள். ஒருவரும் வராதபடியால் ஸ்ரீராமன் விஸ்வாமித்திர மகாமுனியின் சமீபத்தில்போய் ஸ்வாமி! மூர்க்காளாகிய ராக்ஷதர் வருவார்களென்று செப்பியிருந்தீர்களே அவர்கள் என்றைக்கு வருவார்களென்றுகேட்க, அவர் தந் தேகநிஷ்டையி லிருந்தபடியால், யாதொரு உத்தரவும் கிடையாததுகண்டு திரும்பிவருங்காலையில் ஆகாயத்தைப்பார்த்தார் பார்த்தமாத்திரத்தில் ராக்ஷதாள் மாயைரூபமாக பருவத்தையுடைய மேகம்போல ஆகாயமெல்லாம் நிறைந்து, இடியைப்போல கெர்ஜித்துக்கொண்டு அனேகபாணங்களும், வேல்களும், பர்வதங்களும், விருக்ஷங்களும், அக்கினிமழையும், இன்னம் பலவிதமான ஆயுதங்களும் பிரயோகஞ்செய்துக்கொண்டு சமுத்திரமானது ஆகாயத்தில் பரவியதுபோலவும் ஊழிகாலத்து மழைபோலவும் திரண்டுவந்தார்கள். இதைப்பார்த்து தம்பி லக்ஷ்மணா! இதோ அனேகம்பேர் கோரதந்தங்கள் – செவந்தமயிர்கள் – அக்கினி நேத்திரங்களோடு நிறைந்து வந்திருக்கிறார்கள். இவர்களைத்தான் விஸ்வாமித்திரமகாமுனி சொன்னதென்று காட்டினபோது, லக்ஷ்மணனும் அவர்களைப்பார்த்துகடைக்கண்களில் அக்கினிப்பொரிபறக்கதம்முடையவில்லைப்பார்த்துதேவதேவா இதோவந்தராக்ஷதாகளெல்லாம்துண்டம்துண்டமாகவிழுந்து மடியப்போகிற வேடிக்கையைதாங்கள்பார்த்துக்கொண்டிருங்களென்று சேவித்துச்சொல்லி வில்லை வளைத்தார் அப்போது ஸ்ரீராமன்புகைபோன்ற இந்தராக்ஷதாளுடைய தினங்களும், ரத்தங்களும், விஸ்வாமித்திரருடைய வேள்வியின் ஓமாக்கினியில்விழுமென்று எண்ணிப்பார்த்து பாணங்களினாலே ஒருகூடமாகக்கட்டினார். அவ்விடத்தி லிருந்த ரிஷிக்கணங்களெல்லாம், வந்த ராக்ஷத கூட்டங்களைக்கண்டு பயந்து நடுநடுங்கி பூர்வத்திலே ஆலகால விஷம்பிறந்தபோது தேவர்களெல்லாம் பயந்து சந்திரசேகரனை ருத்திரமூர்த்தியினிடத்தில் வந்ததுபோல ஸ்ரீராமனிடத்திலே அபயமென்று ஓடிவந்தார்கள். அவர்களுக்கெல்லாம் அபயஸ்தங் கொடுத்து, கோதண்டத்தை கையில் வாங்கிக்கொண்டு வளைத்து காதளவுமிழுத்து அஸ்திரங்களைப் பிரயோகஞ்செய்தார். ராக்ஷதாளுடைய சிரசுகளெல்லாம் பர்வதம்போல அற்றுவிழுந்தது. பூமியெல்லாம் ரத்தசமுத்திரமாயிற்று. அப்பால் ஒருபாணத்தை யெடுத்து தாடகையின் பிள்ளையாகிய இருவர்பேரிலும் விட்டார். அது ஒருவனை யமபுரத்தில் சேர்த்தது. மற்றொருவனாகிய மாரீசனை துரத்திக்கொண்டேபோய் சமுத்திரத்தில் சேர்த்தது. மற்றுமுண்டாகிய ராக்ஷதாள், ஸ்ரீராமபாணம் ஒருக்ஷணப்பொழுதில் ஆகாயத்தை மறைத்துக்கொண்டு பிணக்காடாகச் செய்ததைப்பார்த்து, இனியிவர்கள் பிணமலைமே லேறிவந்து, நம்மையும் பிடித்துக்கொள்



வார்களென்று நினைத்து, ஒருவர்பின் ஒருவர் ஓடத் தலைப்பட்டார்கள். இப்படிக்கு ஓடிய ராக்ஷதாளை ஸ்ரீராமபாணம் துரத்திப்பிடித்துத் தலைகளையறுத்து வீழ்த்திற்று. அறுந்துவிழுந்த கபந்தங்கள் எழுந்திருந்து நடனஞ்செய்தது. அனேகம் பூதபசாசுகள் மாங்கிச ரத்தங்களை பானம்செய்து சந்தோஷித்தது. ஸ்ரீராமனுடையசவுரியத்தைக்கொண்டாடிப்பாடி ஆடித்தது. கழுகுகள் – கூளிகள் – பருந்துகள் – காகங்கள் – முதலான பறவைகள் ராக்ஷச மாங்கிசம் ஆகாயத்திலே பந்தரிட்டாப்போலநெருங்கிநிறைந்துயிருந்தது. அப்போதுதேவர்கள் புஷ்பமாரி பொழிந்தார்கள். அந்தப் புஷ்பமாரி பக்ஷிப்பந்தரைக் கிழித்துக்கொண்டு வந்தது. விஸ்வாமித்திர மகாரிஷியும் யாகத்தை முடித்து எழுந்திருந்து ரணக்களத்தையும் சரக்கூடத்தையும்பார்த்து, மிகவும் சந்தோஷித்து ஸ்ரீராமா ! இப்போது நீர்செய்த காரியம் எனக்கு அதிசயமே? ஏனெனில் புவனங்களை உண்டாக்கி அதுகளைவயிற்றிலே அடக்கி காக்கிற நீர் ஒரு வேள்வியைக் காத்தினென்று சொல்வது அதிசய மல்லவென்று சொல்லி அன்றையத்தினம் அவ்விடத்தி லிருந்த ரிஷிகளோடு யிருந்தார்கள். மற்றுநாள் காலமே ஸ்ரீராமன் விஸ்வாமித்திரரை சேவித்துக்கொண்டு ஸ்வாமி ! இன்றைக்கு நான்செய்யவேண்டிய காரியமென்னவென்றுகேட்க, ஸ்ரீராமா எந்தகாரியம் சொன்னாலும் அது உமக்கு அருமையாயிராது சிறுது பெரியகாரியங்களுண்டு அவைகளைப் பின்பு முடித்துக் கொள்வோம். இங்கே மிதிலாபுரி பட்டணத்தில் ஜனகமகாராஜா யாகம்செய்கிறார் அதைப்பார்த்துவருவோம் வாருமென்று ஸ்ரீராம லக்ஷ்மணனை அழைத்துக்கொண்டு விஸ்வாமித்திரமகாரிஷி மிதிலையைநோக்கி நடந்தார்.

---

## துருவாசன் கதை.

நடந்து வருகிறவழியில் அனேக சிறப்பும் அலங்காரமும் பொருந்திய சோணநதியினிடத்தில் வந்துசேர்ந்தார்கள். சூரியனும், ஸ்ரீராம லக்ஷ்மணன் மற்றுநாள் குளிர்ச்சியடைந் திருக்கும்படிக்கு, தன்னுடைய வேகத்தை தணித்துக்கொள்ளும்பொருட்டு கடலில் மூழ்கிறவன்போல் அஸ்தமித்தான். பின்பு இவர்கள் வாசனை பொருந்திய ஓர் சோலையினிடத்தில் பிரவேசித்தார்கள் அப்போது ஸ்ரீராமமூர்த்தியானவர் அந்தசோலையைப் பார்த்து ஸ்வாமி இந்த சோலையின் விர்த்தாந்தம் என்னவென்றுகேட்க, விஸ்வாமித்திரர் சொல்லுகிறார்.

பூர்வத்தில் காசிபமகாரிஷியின் பெண்சாதி திதியென்கிறவள் புத்திரர் நிமித்தியம் இவிடத்தில் இருந்து தவம்செய்தாள். அந்த விர்த்தாந்தத்தை உமக்கு விசிதமாகச்சொல்லுகிறேன் கேளும், அண்டகோளகைக்கு அப்புறத்திலிருக்கும் ஸ்ரீமன் நாராயணன்மார்பிலே வாசமாயிருக்கிற ஸ்ரீமகாலக்ஷ்மியை ஒருவித்தியாதர ஸ்திரியானவள் மிகுந்த அன்புடனே நமஸ்காரஞ்செய்து பாடினள். அதுகேட்டு ஸ்ரீமகாலக்ஷ்மி சந்தோஷித்து ஒரு புஷ்பமாலையைக் கொடுத்தாள். அந்தமாலையை அதிக சந்தோஷத்துடனேவாங்கி தனது வீணையின் சிரசில் கட்டிக்கொண்டு பிரமலோகத்துக்கு வந்தாள். அவ்விடத்திலே துருவாசமகாமுனி இந்தவித்தியாதர ஸ்திரீயைக்கண்டு என்தாயாராகிய ஸ்ரீமகாலக்ஷ்மியின் சந்நிதியில் வீணை வாசித்துப் பாடும்படிக்கு பாக்கியம்செய்தவளென்று பத்தியுடனே அவளைச் சாஷ்டாங்கமாக நமஸ்காரம்செய்து அனேகவிதமாய் ஸ்துதிசெய்தார். அப்போது அவள் சந்தோஷித்து அந்தமாலையை அவர்கையில் கொடுத்தாள். அந்த மகாமுனி மாலையை வாங்கிக்கொண்டு இந்த லோகங்களை உண்டாக்கி உண்டு உமிழ்ந்து ரக்ஷிக்கிற ஸ்ரீமகாவிஷ்ணுவி னுடைய மார்பிலிருந்து சகலபிராணிகளையும்பெற்ற ஸ்ரீமகாலக்ஷ்மியின் சிரசில் தரித்திருந்த மாலை எனக்குக் கிடைக்கிற தற்கு என்னதவம் செய்தேனென்று, சந்தோஷித்து ஆனந்தகீர்த்தமாடி அந்தமாலையை சிரசிலேதரித்துக்கொண்டு தேவலோகத்துக்குவந்தார். அப்போது தேவேந்திரன் ஐராபதமென்கிற வெள்ளையானையின்பேரி லேறிக்கொண்டு ஆயிரங்கண்களும், தாமரைப்புஷ்பங்கள்போல பிரகாசிக்க சூரியனைப்போல கிரீடம் ஜொலிக்க, நிலமேகசுரூபத்துடனே ரம்மை, மேனகை, திலோத்தமை, ஊர்வசி முதலான ஸ்திரிகள் நடனம்செய்துவர, இருபக்கங்களிலேயும் வெண்சாமரைவீச, பூரணச் சந்திரனைப்போல வெள்ளைக்குடைபிரகாசிக்க, பேரிகை முதலான வாத்தியங்கள்முழங்க, மங்கல கீதங்கள்பாட, அதிக சம்பிரமத்துடனே திருவோலக்கம் வருகிறதைக்கண்டு துருவாசமகாமுனி சந்தோஷித்து அந்தமாலையை தேவேந்திரனுக்குக்கொடுத்தார். அந்த மாலையை அங்குசத்தினாலேவாங்கி யானையினுடைய கழுத்திலேபோட்டான். அந்த யானையானது அந்த மாலையைத் துதிக்கையினால் இழுத்து அறுத்து கால்களால் தேய்த்தது. அதைக்கண்டு துருவாசமகாமுனிக்குக் கண்களில் கோபாக்கினி எழும்பிற்று. அதுகண்டு தேவர்கள் பயந்து அண்டகூடமும் சாம்பலாய்ப் போமென்று ஓடிப்போனார்கள். சந்திர சூரியர்கள் நடக்கப்பயந்து திரும்பி விட்டார்கள். லோகா லோகங்களெல்லாம் சுழன்று இருள்மூடிக்கொண்டது. துருவாசருக்கு சுவாசம் விடும்போதெல்லாம் புகைகளெழும்பிற்று. திரிபுராந்தகனைப்போல நகைப்புண்டாயிற்று. இப்படி கோபங்கொண்ட துருவாசர் இந்திரனைப்பார்த்து சொல்லுகிறார். ஓ? இந்திரா கேளும், பஞ்ச பூதத்திற்கும் பூமிதேவிக்கும், வேதத்திற்கும், நாயகனான ஸ்ரீமன் நாராயணனுடைய திருமார்பில் வாசமாயிருக்கின்ற ஸ்ரீமகாலக்ஷ்மியின்சிரசிலேதரித்திருந்த புஷ்பமாலை நான்செய்த எதுவோ ஒரு தவம்நிமையினால் எனக்குக் கிடைத்தது. அந்தமாலையை உன்னுடைய வைபவத்தைக்கண்டு உனக்குக் கொடுத்தேன். அதை நீ இகழ்ச்சிசெய்தது உனது பாக்கியத்தினுடையகேர்வத்தினாலே யல்லவா! ஆதலால் உன்னுடைய பாக்கியமெல்லாம் சமுத்திரத்திலேபோய் விழுந்துவிடக் கடவது நீயும் வருத்தத்தை யடையக் கடவாயென்று சபிக்

தார். தக்ஷணமேகர்ப்பகவிருக்ஷம்-நவநிதி-காமதேனு-அமிர்தம்-ரம்பைகள் – ஐராபதம்-உச்சிரவ மென்கிற குதிரை இவைமுதலான பிரதானபாக்கியங்கள்சகலமும் நாதாவாகிய வென்னெய்நல்லூர் - சடையப்பமுதலியாருடையசத்ராதிகள் எப்படிபயந்து ஓடிப்போனார்களோ அப்படிக்குசமுத்திரத்தில் முழுகி விட்டது. இந்ததுர்வாசமகாமுனியின்கோபத்தினால்தேவலோகத்திலும், இவ்வுலகத்திலும், வருமை நோயினால் வருத்த முண்டாகவே, தேவர்களும் - சிவனும் - பிரமதேவனும் கூடிக்கொண்டு ஸ்ரீபப்பதி யாகிய மகாவிஷ்ணுவி னிடத்திற்குப்போய்இந்தமகாமுனியால்விளைந்த காரியங்களைச் சொல்லி, உமதுதிருவடியன்றி வேறுதிக்கில்லையென்று சேவிக்க, அவரும் பயப்படாதேயுங்கள் என்று தேறுதலைசெய்து சொன்னதாவது. மந்தரகிரியை மத்தாகவும், வாசுகியை கடைகிற கயிறாகவும், சந்திரனை தூணாகவும் வைத்துக்கொண்டு தேவர்களும் அசுரர்களும் கூடி ஓட்டிகொடுத்து பால்சமுத்திரத்தை கடையுங்கள்நாமும் அவ்விடத்திற்கு வருகிறோமென்று சொல்லி யனுப்பினார். அப்போது தேவர்கள் சந்தோஷித்து மந்தரகிரியைப்பிடுங்கி வாசுகியைத் தாம்பாகவைத்துக் கொண்டு சந்திரனை தூணை நட்டு, தேவர்களும் அசுரர்களும் கூடி ஓட்டி கொடுத்து பால் சமுத்திரத்தைக் கடைந்தார்கள். அப்போது பூமி நெளிந்தது. அந்த வேளையில் ஸ்ரீமகாவிஷ்ணு கூர்மாவதாரமான ஆமைரூபமெடுத்து அந்தமந்தரகிரி பர்வதத்தை தம்முடைய முதுகிலே சுழலும் படிதாங்கினார், இப்படி கடைகிறபோது முன்னே முழுகிப்போய்விட்ட பொருள்களெல்லாம் திரும்பியுண்டாயிற்று அமிர்தத்தின் நிமித்தம் தேவர்களுக்கும். அசுரர்களுக்கும் விரோதமுண்டாய் கோபங்களுண்டாயிற்று. அப்போது பகவான் ஜெகமோகினி ரூபமெடுத்து அசுரர்களைமயக்கினார். அவர்களும் மயங்கி இறந்தார்கள். தேவர்கள் அமிர்தம் சாப்பிட்டார்கள் ஆலகாலவிஷமும் இளம்பிறைச் சந்திரனையும் ரிஷபவாகனனான சிவனுக்குக் கொடுத்துமற்றதை அவரவர்கள் யோக்கியதைக்குத்தகுதியாகக்கொடுத்து கர்ப்பகவிருக்ஷமுதலான வஸ்துக்களையெல்லாம் தேவேந்திரனுக்கு கொடுத்து அந்தசமுத்திரத்திலே பிறந்த லக்ஷுமியையும் கௌஸ்துவாபரணத்தையும் தாம்தரித்துக் கொண்டார் அப்போது அந்த அசுரர்களுடைய தாயாகிய திதி என்பவள் தன்பிள்ளைகள் தேவர்களுடைய வஞ்சனையினாலே அமிர்தம்கிடையாமல் உயிர்த்தியஞ்செய்து மடிந்துபோனார்களென்று துக்கித்து தன்னுடைய நாயகனை காசிபமகாரிஷியைச்சேவித்து, தேவர்களை செயிக்கிறதற்கு அதிக பலசாலியாக ஒரு புத்திரனை அநுக்கிரகம் செய்யவேண்டு மென்று கேட்க. அப்படியே கொடுத்தோம் அந்த கெற்பத்துடனே பூலோகத்திலே ஆயிரம் வருஷகாலம் தபசுசெய்யென்று ஆக்கியாபித்தார் அப்படியே திதி என்பவள் இந்தசோலையினிடத்தில் தவம்செய்துக் கொண்டிருந்தாள். அதுதேவேந்திரன்அறிந்துசிறியதாயாரான திதியினிடத்திற்குவந்து அம்மாவுனக்கு கைங்கரியம்செய்துக்கொண்டிருக்கிறேனென்று சொல்லியிருக்க ஒரு நாள் நித்திரைசமயம் பார்த்து அணுரூபமாய் அவள் வயிற்றில் புகுந்து அங்கேவளருகிற பிள்ளையை தன்கைவச்சிராயுதத்தினாலே ஏழுதுண்டமாக்கி அந்த பிள்ளைகளுக்கு மருத்துக்களென்று பேருமிட்டு தேவேந்திரன் போய் விட்டான். இப்படி நடந்தஸ்தலம் இதுவென்று சொல்லி, சந்திரசேகரனை சிவனுக்குப்பிறந்துவாயுவுங்கங்கையும்பொறுக்கமாட்டாதபலமுடைய சுப்பிரமணியர்வளர்ந்தசரவணஸ்தல மென்னும்காட்டிச்சொன்னார். அதுகேட்டு ஸ்ரீராமன்மிகவும் சந்தோஷமானார். அப்போதுசூரியனுதயமானான். மும்மூர்த்திகளுக்குச்சமானமான இந்தமூவரும்மூழ்கிருந்து கடந்தார்கள் அப்படி நடக்கும்போது கரணிக்குச்சமானமான கங்காநதியைக்கண்டார்கள்.

## கங்கையின்வரலாறு.

அப்போது ஸ்ரீராமன் இந்த நதியினுடையவரலாறும் மகிமையும் தெரியச் சொல்லவேணுமென்று கேட்க, விஸ்வாமித்திர மகாமுனி சொல்லுகிறார், எனையாளாக்கொண்ட குழந்தாய்-ஸ்ரீராமா கேளும், உம்முடையவம்சத்தில் பிறந்தவனாகிய சகரனென்கிற ராஜன் இந்த அயோத்தியி லிருந்துக்கொண்டு ராச்சிய பரிபாலனம் செய்துக்கொண்டிருந்தான் அவனுக்கு விதர்ப்பையென்றும், சுமதியென்றும், இரண்டு ஸ்திரிகளுண்டு, அதில் விதர்ப்பை என்பவளுக்கு போசனென்று ஒருகுமாரன் பிறந்தான் அவனுக்கு அஞ்சுமானென்று ஒருகுமாரன்பிறந்தான். பக்ஷிராஜனுக்கு இளையவளாகிய சுமதி என்கிறவளுக்கு அறுபதினாயிரம் பிள்ளைகள்பிறந்தார்கள், அந்தசகரமகாராஜனும் பிள்ளைகளுடைய சாமார்த்தியங்களைக்கண்டு சந்தோஷித்து அஸ்வமேதயாகம் செய்யவேணுமென்று ஆரம்பித்து கோலக்ஷணமுள்ள குதிரையை சிங்காரித்து சாஸ்திரப்படிக்கு பூசஞ்சாரத்துக்கு விட்டு அதன்பின்னே அஞ்சுமானென்கிற பேரப்பிள்ளையோடு அனேகம் சேனைகளைக்கூட்டி அனுப்பினான். அந்தசெய்தி தேவேந்திரன் கேட்டு காமரூபியாய்வந்து அந்தக்குதிரையைப் பிடித்துப் பாதாலலோகத்தில் தபோகத்தியானஞ் செய்துக்கொண்டிருந்த கபிலமகாமுனிக்குப் பிறகேகட்டி ஒளித்துவைத்துப்போனான். அஞ்சுமான் குதிரையைக் காணமல் பூமியெங்கும் தேடித்திகைத்து திரும்பிவந்து பாட்டனாகிய சகரராஜருடனே சொன்னான். அதுகேட்டு சகரராஜன் தன்பிள்ளைகளுடனே சொன்னான். அந்தபிள்ளைகள் அறுபதினாயிரம்பேரும் வெகு கோபாக்கினியோடு பூமியெல்லாம்போய்த் தேடிக் காணமல் பூமியைப் பன்னமாக நூறுயோஜனை அகலமும் ஆழமுமாகத் தோண்டி பேதித்து அந்தமண்ணையெல்லாம் தின்றுக் கொண்டேபோய் பாதாலலோகத்தில் தவம்செய்கிற கபில மகாமுனிபிறகே குதிரையைக்கண்டு வெகுகோபத்துடனே அக்கினிபோல அவரைச்சீறி வைது அடித்து உபத்திரவம் செய்தார்கள். அந்தகபிலர் மிகுந்தகோபத்துடன் பார்க்கவே சிவனுடைய நகையினாலே திரிபுராதிகள் எப்படியானார்களோ அப்படி அறுபதினாயிரம்பேரும் சாம்பலாய்ப்போனார்கள். அந்தசெய்தி தூதர்சொல்ல சகரராஜன்கேட்டு பேரனாகிய அஞ்சுமானையழைத்து அவர்கள்தான் இறந்துபோனார்களே யாகத்தையும் இழந்துவிடுகிறதாவென்றுசொல்ல, அந்தக்ஷணமே அஞ்சுமான் பாதாலலோகத்துக்குவந்து தன்னுடைய தந்தைகளிறந்து சாம்பலாய்ப்போனதைக்கண்டு திடுக்கிட்டு அப்பால் கபிலமகாமுனி பாதாரவிந்தத்திலே சேவித்துநின்றான். அவரும் இவனிடத்திலே கிருபையுள்ளவராய் அவர்கள்மடிந்த செய்திகளையும் சொல்லிகுதிரையையும்கொடுத்து கொண்டுபோவென்றுசொன்னார் அப்படியே குதிரையைக்கொண்டுவந்து பாட்டனார்முன்னேவிட்டு சேவித்துக்கொண்டான். அந்தசகரராஜனும் யாகத்தைமுடித்து அஞ்சுமானுக்கு ராச்சியபட்டாபிஷேகஞ் செய்துவைத்து தேவலோகஞ்சேர்ந்தான். சகரரால் தோண்டப்பட்டபடியால் சாகரமென்று இந்தமகாவாருதிக்கு ஒருபேராயிற்று. அந்த அஞ்சுமான் ராச்சியபாரம் செய்துக்கொண்டிருந்தான் அவனுடைய வம்சத்திலே பகீரதனென்கிறவன் பிறந்தான். அவன் மனுநெறிப்படி ராச்சியபாரம் செய்துக்கொண்டிருக்கிறகாலத்தில், ஒருநாள் குலகுருவாகிய வசிஷ்டரைச் சேவித்து பூர்வகதைகளைக் கேட்டுக்கொண்டுவரச்சே சகரர்சமாசாரம்கேட்டு ஸ்வாமி ? என் தாதைகளான சகரர் கபிலமகாமுனி கோபாக்கினியினாலே மடிந்து போனார்களே அவர்களுக்கு நல்லகதிகிடைக்கவேண்டியதற்கு அடியேன் என்ன உபாயம் செய்யலாம் தேவரீர் ஆக்கியாபிக்கிறபடிக்கு நடந்துக்கொள்ளுகிறேன் ஒரு உபாயஞ்சொல்லவேணுமென்று கேட்க, அதற்கு பிர்மாவைநோக்கி அனேககாலம் தவம் செய்தால் அவர்களுக்கு நல்லகதியுண்டாகுமென்று குருசொல்ல. அப்போதே ராச்சியமெல்லாம் சுமந்திரன்வசம் செய்து இமோர்க்கிரி பர்வதச்சாரலிலேபோய் பிரமாவைநோக்கிப் பதினாயிரம் வருஷந் தவம் செய்தான் அப்போது பிர்ம்மா பிரசன்னமாய் உன்னுடையதவத்துக்கு சந்தோஷமானோம், உன்னுடைய தாதைகள் கபிலமகாரிஷியினுடைய கோபாக்கினியினாலே சாம்பராய்ப்போனவர்களானபடியால் அந்தசரீரங்களினுடைய எலும்புகள் சாம்பல்களின்பேரில் ஆகாயகங்கைவந்து விழுமானால் நற்கதிபெறுவார்கள். அந்த ஆகாயகங்கை பூமிக்குவரச்சே மகாவேகமாயிருக்கும் அந்தவேகத்தை சகிக்கிறதற்கு திரிநேத்திரனை சிவனேயல்லாமல் மற்றொருத்தராலும் ஆற்றமாட்டாது ஆகையால் பார்வதிசமேதனை சிவனைநோக்கி தவசுசெய்யுமென்று சொல்லிப்போனார். அப்படியே சிவனைநோக்கிப் பதினாயிரம் வருஷம் தவசுசெய்தான். அப்போது அக்கினி சுரூபனான சிவன்வந்து பிரசன்னமாய் உன்மனது தெரிந்தது உன்மனதின்படிநடப்பிக்கிறோமென்றுசொல்லிப்போனார். பின்பு ஆகாயகங்கையைநோக்கி ஐயாயிரம் வருஷம் தவம்செய்தான் அப்போது கங்கை ஒரு ஸ்திரீ ரூபமாகவந்து ஓ ! ராஜாவே நீர் தவம்செய்கிறீரே அந்தகங்கை பூலோகத்திற்கு வந்தால் அவளுடைய வேகத்தைப் பொறுக்கத்தக்கவர்கள் யாரிருக்கிறார்கள் உன்னுடனே சிவன் விளையாட்டுக்குச் சொல்லிப்போனார் அதை இன்னம் நன்றாய் அறிந்து பாரென்று சொல்லிப்போனாள். அப்பால் ஜடாதரனைசிவனைநோக்கி இரண்டாயிரத் தன்னூறு வருஷம் தவம்செய்தான் அப்போது அந்தருத்திரமூர்த்தி நேரில்வந்து திரும்பியும் ஏன் தவம்செய்கிறாயென்று கேட்டார். ஸ்வாமி ! கங்கை இப்படிக்குச்சொன்னாளென்று சொன்னான். நீ பயப்படவேண்டாம் அந்தகங்கை எத்தனைவேகமாய்வந்தாலும் ஒருதுளிகூட புறம்பிலேபோகாமல் காக்கிறேனென்று சொல்லிப்போனார். அப்படியே கங்கையை நோக்கி இரண்டாயிரத் தன்னூறுவருஷம் தவம் செய்தான். இப்படி ஏககாலத்தில் முப்பதினாயிரம் வருஷம் ஜலம்-சருகு-வாயு-சூரியகிரணம் இவைகளை ஆகாரம் செய்துக்கொண்டு தவம்செய்தான். பின்பு பிரமலோகமும் இந்திராதியருடைய லோகமும் பயந்து நடுநடுங்க இரைச்சலிட்டுக்கொண்டு பிரவாகமாக ஆகாயகங்கைவந்தது. அப்போது பார்வதிசமேதனை சிவன் தனது ஒருசடையில் புல்லின் நுனியில் தங்கும் பனித்துளிபோல அடக்கினார். இப்படிக்கு ஓர்சடையில் அடங்கின கங்கையைப் பகீரதன்கண்டு திகைத்து சிவன்முன்னேநின்றான். அப்படி நின்றவனைப்பார்த்து நீபயப்படவேண்டாம் கங்கை நம்மிடசடையில் இருக்கிறாள். இதோவிடுகிறேனென்று கொஞ்சம்விட்டார். அந்தகங்கை பூமியிலே பிரவாகமாகவரச்சே முன்னேபகீரதன் நடந்தான். அப்படி நடக்கிறபோது ஜாநவ மகாரிஷியாகம் செய்துக்கொண்டிருக்கிற யாகசாலையின்பேரில் வருகிறதைக்கண்டு அந்தரிஷி கோபமானவராய் வருகிற கங்கையை உள்ளங்கையினால் அடக்கிச்சாப்பிட்டார் அதுகண்டு பகீரதன் அவரைச்சேவித்து பூர்வம் நடந்தகதிகளெல்லாம் சொன்னான். அதுகேட்டு ஜாநவமகாரிஷி கிருபைசெய்து அந்தகங்கையைக் காதுவழியாகவிட்டார் அப்போது கங்கை அதிவேகத்துடனேபோய் சகரர்மடிந்த எலும்பின் தூள்களின்பேரில் சேர்ந்தாள் அனேககாலமாய் நரகத்திலழுந்தியிருந்த சகரர்களும் நற்கதியடைந்தார்கள். தேவர்கள் புஷ்பமாரிபொழிந்தார்கள் பேரிகைமுதலான வாத்தியங்கள்முழங்க பகீரதனும் அயோத்தியாநகரம் வந்துசேர்ந்தான். ஸ்ரீராமா ? அண்டகோளத்துக்கு அப்பாலும் அனந்த ஸ்ரீமன்நாராயணனுடைய பாதாரவிந்தத்தில் பிறந்து பிரமதேவன் செய்த பூசை தீர்த்தமாய் சிவன்சிரசில் கொள்ளப் பகீரதன் தவத்தினால் பூலோகத்திற்குவந்தது. பகீரதன்கொண்டுவந்தபடியால் பாகீரதி என்றும் ஜாநவமகாரிஷி சாப்பிட்டுக் காதினாலே விட்டபடியால், ஜாநவி என்றும் பெயருண்டாயிற்று. இப்படிக்கொத்த மகத்துவம்பெற்ற கங்காநதியாக்கும் இதுவென்று விஸ்வாமித்திர மகாமுனிசொல்ல, அதுகேட்டு ஸ்ரீராமமூர்த்

தி அதிக சந்தோஷசித்தராய் அந்த நதியைவிட்டு அப்பால் நடந்தார்கள். அவ்விடத்தில் விசாலதேசத்துராஜன்வந்துகண்டு அனேக உபசாரம் செய்தான் அவனுடனே இனியவார்த்தைகள்பேசி, அவ்விடம்விட்டு அப்பால் நடந்தார்கள்.

## அகலிகையின் வரலாறு.

அனேக சிங்காரம்பொருந்திய கழனிகளில் இராகின்ற தாமரைபுஷ்பத்தில் நித்திரைசெய்து எழுந்திருந்தநாரைகள், கழனிகளில் களைபறிக்கிற பள்ளஸ்திரிகளுடைய நீண்ட கண்ணிழல்களை ஜலத்துக்குள்கண்டு கயல்மீனென்று எண்ணி மூக்கினால் குற்றிப்பார்த்து வெட்கிப்போயிற்று. எருமைகளுடைய முழக்கங்கள் மத்தளமாகவும் அசோக புஷ்பங்கள் விளக்குகளாகவும் வண்டு தன் நாதத்தை சுதியாகக்கொண்டு பாடவும், மயில் நடனம் செய்தது. தாமரைதடாகங்களிலே ஸ்திரீகளிறங்கி தங்கள் கைவளைகள் சத்திக்க மூழ்கிறது திருப்பாற்கடலில் லக்ஷ்மி இப்போதுதான் பிறந்தெழுந் திருக்கிறுப்போலவும் இன்னம் பலபல அதிசய சிங்காரங்களும் விநோதங்களும் உண்டாகிய மிதிலாபுரி பட்டணத்தின் சமீபத்தில் வந்துசேர்ந்தார்கள். அவ்விடத்தில் ஒரு ரிஷிபத்தினி கருங்கல்லாய் வழியிலே கிடந்தாள். அந்தக்கல்லின்பேரில் ஸ்ரீராமனுடைய பாதாரவிந்தத்தினலெழும்பின தூள்கள் பட்டது. பட்டமாத்திரத்தில், அந்த ஸ்ரீராமனுடைய பாதாரவிந்தத்தை மெய்யாகநம்பி யிருக்கிறவர்களுடைய அக்கியானம்போய் எப்படி ஞானபுருஷாளாவார்களோ அப்படிபோல அந்தக் கல்லுருவமாறி பூர்வப்படிக்கு ரிஷிபத்தினியாகி நின்றாள். அதுகண்டு விஸ்வாமித்திரமகாரிஷி ஸ்ரீராமனைப் பார்த்து ஆகாயத்திலே இருந்த கங்கையைப் பூலோகத்திற்குக்கொண்டுவந்த மகாநுபாவனுடைய வம்சத்தில்பிறந்த புருஷோத்தமா! மகாசந்தோஷத்துடனே மின்னல்போல ஒதுங்கி நிற்கின்ற இந்தப்பெண் தேவேந்திரனுக்கு ஆயிரங்கண் உண்டாக்கின கௌதம மகாரிஷியினுடைய பத்தினி இவள்பெயர் அகலிகையென்று சொன்னார். அதுகேட்டு ஸ்ரீராமன் வியப்புற்று ஸ்வாமி இந்த அம்மாளுக்கு சாபம்வந்த வரலாறு செப்பவேணுமென்று கேட்க, விஸ்வாமித்திரர் சொல்லுகிறார். ஓ! ஸ்ரீராமா ஒருநாள் தேவேந்திரன் இந்த அகலிகையைக்கண்டு காமவிகாரங்கொண்டு மன்மதபாண உபத்திரவத்தினால் அடியுண்டு அக்கௌதமரில்லாத வேளைபார்த்து அவரைப்போல உருவங்கொண்டு வந்துசேர்ந்திருந்தான். அப்போது கௌதமமகாரிஷி வந்துபார்த்து அதிககோபமானார் தேவேந்திரன் பூனை ரூபமெடுத்து அப்பாலோடிப்போகிறபோது அந்தமகாரிஷி ஸ்ரீராமா உம்முடைய பாணத்துக்குச் சமானமான அவருடைய வாக்கினாலே ஆயிரம் ஸ்திரீகளுக்குரிய குறி உன்சரீரத்தில் உண்டாகக் கடவதென்று சபித்தார். அந்த க்ஷணமே ஒருநிமைப்பொதில் அவனுடைய சரீரமெல்லாம் அக்குறிகள் நிறைந்தது. வெகு நாணத்துடனே தேவேந்திரன்போன பிற்பாடு அகலிகையைப்பார்த்துவேசிக்குச்சமானமான நீயும் கல்லாகக்கடவதென்றுசபித்தார். அப்போது அவரைச்சேவித்து, ஸ்வாமி அடியேன்செய்த குற்றத்தைப் பொறுத்து ரக்ஷிக்க வேணுமென்று கேட்க, மகாரிஷி கிருபைசெய்து தசரத ராமன் பாதாரவிந்தத்தின் தூள் உன்பேரில் படுமாகில், இந்தசாபம் விமோசனமாகுமென்றுசொன்னார். அந்த அருவையரூபத்தோடிருக்கிற தேவேந்திரனைக்கண்ட, பிரமன்முதலியதேவர்கள் கௌதமரிடத்திற்குவந்து வேண்டிக்கொள்ள, அவரும் கோபம்தீர்ந்து அவைகள் அவனுக்கு ஆயிரங்கண்களாக இருக்கும்படி அநுக்கிரகம்செய்தார். பின்பு அவரவர்கள் இடத்திற்போய்ச்சேர்ந்தார்கள். இவளும்கல்லாய்ச்சமைந்தாள். இது பூர்வம்நடந்தது. ஸ்ரீராமா ! இனி இந்த உலகத்திற்கு யாதொரு விபத்துமிராது, அங்கு அந்த தாடகையினுடையபோரிலே உமது கரத்தினுடைய மகிமையையும், இங்கு உமது காலினுடைய மகிமையையும்கண்டேன். குற்றமில்லாத உதவிசெய்த திருவடியையுடைய ஸ்ரீராமன், விஸ்வாமித்திரர் சொன்னதெல்லாம்கேட்டு, அந்த முனியீஸ்வரருடைய அநுக்கிரகம் இருக்கும்போது யாதொருதுன்பமும் அணுகமாட்டாது! அம்மாபோமென்று திருவடியைச் சேவித்துக் கொள்ள, அவளும்போயினள். இவர்களும் அந்த கௌதமருடைய ஆசிரமத்திற்குப்போகவே, அவர் எதிர் வந்து கண்டு அழைத்துக்கொண்டுபோய் செய்யவேண்டிய கடன்முறை யாவற்றும்செய்தார். அவரை விஸ்வாமித்திரமகாமுனி நோக்கி, இந்த நீலமேக சுருபனுடைய திருவடிகளின் தூள் படுதற்கு முன்னமே பழைய சுருபங்கொண்டு நின்றாள். ஆதலால நீர் அழைத்துக்கொள்ளுமென்று சொன்னமாத்திரத்தில், பிரமதேவனுக்குச் சமதையாகிய அந்த கௌதமரும் அங்கீகரித்துக் கொண்டார். ஸ்ரீராமனும் அவரைச் சேவித்துக்கொள்ள, அவரும் இவருக்கு ஆசிகள்கூற, அகலிகையை அவர்கையில் ஒப்புவித்து விஸ்வாமித்திரமகாமுனியின்பின் மிதிலையைநோக்கி நடந்தார்கள்.

## மிதிலைநகரத்தின்காட்சி.

அந்த மிதிலைநகரமானது, ஸ்ரீராமன்வருகிறதைப்பார்த்து, ஸ்வாமி, தாமரைக்கமலத்தில் வீற்றிருக்கும் ஸ்ரீமகாலக்ஷ்மி நான்செய்த தவத்தினால் என்னிடத்தில்பிறந்துவளர்ந்திருக்கிறாள், நீர் கலியாணம் செய்துக்கொள்ளுகிறதற்கு சீக்கிரமாய் வாரும்வாருமென்று தனது கொடிச்சீலைகளாகிய கைகளைக்காட்டியழைக்கிறதுபோல அசைந்துக்கொண்டும், மிகுந்த அழகையுடைய சீதையை விவாகம்செய்யும் பொருட்டுத், தரும்தேவதைகளே தூதுபோய் வருகின்றார்களென்று அரம்பையாஸ்திரீகள் ஆகாயத்திலாடும் ஆட்டத்தைப்போலவும் சூரியன்மறைய ஆகாயம் பால்சமுத்திரம்போல தோன்றும்படி நீண்டுபரவிய கொடிச்சீலைகள் மேகத்தில் படும்தோறும் நனையவும், ஸ்திரீகளினுடைய அளகபாரத்திற்கு ஊட்டும் அகில்புகைகளால் உலரவும் இராகின்ற நகரத்தில் சீதைவாசமாயிருக்கிறபடியால் ஸ்ரீமகாலக்ஷ்மி வாசம்செய்கிற பொற்றாமரைக் கமலம்போலவும், தோன்றுகின்ற அந்த மிதிலாபுரி பட்டணத்துக்குள் பிரவேசித்தார்கள். அப்பட்டணத்திலுள்ளஸ்திரீபுருஷாள்சம்பிரமமாக இருக்கிறபோது ஒருவர்க்கொருவர் ஊடல் நேரிட்டு அதனால் அந்த ஸ்திரீகள் அணிந்தெரிந்த ஆபரணங்கள் வீதிகளில்வீழ்ந்து பிரகாசித்துக்கொண் டிருந்தன. ராஜவீதிகளில்பந்திபந்தியாய்ப்போகிறயானையினுடைய மதஜலங்கள் ஒரு ஆறாகவும், குதிரைகளினுடைய வாயிலிருந்து ஒழுகாநின்ற நுரைகளால் அந்த ஆறு அழிந்து சேறாகவும், தேர்க்கூட்டங்கள் மேலும் மேலும் ஓடுகிறதினால அந்தசேறு தூள்களாகவும், இப்படிவேறுவேறு விநோதமாக இருந்தன. அங்கநாத்து மாந்தர்கள் இராபோஜனம் புசித்தபின்பு கலவிப்போரில் மெலிந்த ஸ்திரீகளைப்போல அவர்களுடைய ஊடல் முதிர்ந்து அளகபாரத்தில்சூடி எறிந்த புஷ்பத்தில் வண்டோடு தேனும்பொருந்தி யிருந்தன. அந்தப்பட்டணத்திலுள்ளவர்கள் யானைபோடு யானையைச் சண்டைக்குவிட்டு வேடிக்கைப் பார்க்கிறவர்களும், ஸ்திரீகள் தடாகங்களில் இறங்கி விளையாடுகிறதும், பந்துகளானது வேசிகள் மனதைப்போல் கைகளில் வரும்போது செவந்தும் கண்ணால்பார்க்கிறபோது கறுத்தும், வேறுவேறுவிதமாய்க்காணும்படி விளையாடுகிறவர்களும், இவ்வித அலங்கார வேடிக்கையோடிருக்கிற மிதிலாபுரிபட்டணத்தின் மத்தியில் ஜனகமகாராஜனுடைய அரண்மனைக்குச்சமீபத்திலுண்டாகிய நானாவித வேடிக்கைகளைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அப்படி விஸ்வாமித்திரர் முன்னும், ஸ்ரீராமன் இடையிலும், லக்ஷ்மணா பின்னுமாகப் பார்த்துக்கொண்டே நடக்கிறபோது, அவ்விடத்தில் கன்னிகாமாடத்தில் அனேக மின்னல் கூட்டத்தில் நடுவே ஒருவித மின்னல் பிரகாசித்துக்கொண் டிருக்கிறாப்போல அனேகம் ஸ்திரீகளின் மத்தியில் சீதாலக்ஷ்மி பிரகாசித்துக்கொண்டிருந்தாள். அந்த லக்ஷ்மியினுடைய சௌந்தரிய அலங்காரத்தை அடியேன் எவ்வளவு புகழப்போகிறேன் பிரமன் முதலாகியபேரும ஒரு ஸ்திரீக்கு உவமானம் சொல்லவேண்டுமென்றால் ஸ்ரீமகாலக்ஷ்மிக்குச் சமானமாகச்சொல்வதே யல்லாமல் வேறில்லை. அந்தமகாலக்ஷ்மிதானேவந்து அவதரித் திருக்க அவளுக்கு உவமானம் யாரைத்தேடிச் சொல்லமாட்டுவேன். பார்வதிக்குச் சமானமான ஸ்திரீகள் நமஸ்காரஞ்செய்கிறதற்குயோக்கியதையையுடைய அந்தசீதையினழகென்கிறசாகரத்துக்கு வரம்பற்றதாக இருந்தது. பூலோகத்தார் அவ்வழகைப் பார்க்கிறதற்கு இமையாதகண்கள் நமக்குக்கிடையாமற்போயிற்று என்பார்கள். தேவர்கள் இரண்டுகண்கள் நமக்குப் போதாதென்பார்கள். பால் சமுத்திரத்துக்கு ஆதாரமான அமிர்தம்போல பிரம்மசிருஷ்டிக்கு ஆதாரமான ஸ்திரீ இந்த சீதையேயல்லாமல் வேறில்லை. இப்பூமியில் சீதைபிறந்து அவள் திருமேனியைக்கண்டபின்பு தேவலோகத்து மேனகைமுதலான ஸ்திரீகள் சூரியப்பிரகாசத்துக்குமுன் சந்திரப்





பிரகாசம் எவ்வளவோ அவ்வளவு ஆனார்கள். இவ்வளவு சுந்தரத்தோடும்கூடிய சீதாலக்ஷ்மியை அனேகம் ஸ்திரீகள் சூழ்ந்து நமஸ்காரஞ்செய்துவர, விசாலநேத்திரத்தோடு விளங்கிய திருமுகமண்டலத்தைக்கண்டு மரங்களும் - கல்லும் - புல்லும் - மற்றதுகளும் - உருகும் - சூழ்ந்து இருக்கிற ஸ்திரீகளும் தாங்களே அவ்வழகைப் பார்த்து மயங்கித் தியங்குவார்கள். இப்படி அழகு என்கிற கீர்த்தியையே சர்வாபரண பூஷிதையாகப் பெற்று நின்றாள். ஸ்ரீராமன் அவளைப்பார்த்தார். சீதையும் ஸ்ரீராமனைப்பார்த்தாள். சீதையினுடைய பார்வை என்கிற வேலானது ஸ்ரீராமனுடையதோளிலுருவிற்று. ஸ்ரீராமனுடைய பார்வை சீதாலக்ஷ்மியினுடைய தனத்திலுருவிப்பாய்ந்தது. பார்வை என்கிற அவாவினாலே இருவரும் ஒருவர்க்கொருவர் இருதயகமலங்களில் தழுவிவைத்துக்கொண்டார்கள். இவ்விதபார்வையில்நின்ற இருவர்கண்களும், ஒன்றோடொன்று கவ்விக்கொண்டு பிரிகிறதற்குக் கூடாமல் நெடுநேரம் இந்நிலையைப் பெற்றுயிருந்தன. இரண்டுசரீரமும் ஒரே ஜீவனைப்பெற்று நின்றதுவெனவில்திருப்பாற்கடலில்கூடியிருந்தவர்கள்பிரிந்து இப்போது கூடினால் அதை யின்னதென்று சொல்லக்கூடுமோ கூடாது. ஆதலால் சீதைமயங்கிச் சித்திரப் பிரதமைபோல ஸ்தம்பித்துநின்றாள். ஸ்ரீராமனும்மயங்கி சீதையினுடைய மனதும் நிறையும் தன்னைத்தொடர்ந்துவர, விஸ்வாமித்திரமகாமுனியின்பின் நடந்தார் இப்படி நடக்கிறபோது சீதையின்மனமென்கிற மதயானை நிறையென்கிற அங்குசத்தில் அடங்காமல் மீறி அவர் பின்னேசென்றது. கண்வழியாகவந்த ஆசையாகிய பாலுக்கு புளை குத்தினதுபோல சரீரமெல்லாம் பரவி விரகாக்கினி உண்டாய் பூசியிருந்த - சந்தனம் - கதம்பம் - கஸ்தூரிகள் - கரிந்து உதிர்ந்தன. அதுகண்டு தாதிகள்முதலிய மற்றவர்கள் மிகவும் கிலேசப்பட்டு இது என்னவென்று பயந்து திருஷ்டி பரியாயங்களும் தெய்வப் பிரார்த்தனைகளும்செய்தார்கள். ஆலவட்டம், விசிறி, வெண்சாமரை முதலியவைகளினாலே விசிறினார்கள் அது அக்கினிக்கு விசிறினதுபோல மிகவும் வெப்பம் கொடுத்து பொற்பிரதமைபோல உருகினள். இருள் அவர்சிகை என்றும், மரகதரத்னம் - அவர்தோளென்றும், கமலம் - அவர்கண்ணென்றும், இந்திரதனுசுடனே பூமியிலிறங்கிய மேகம் அவருடைய நிறமென்றும்சொல்லுவள். என்மனதுக்குள்ளே புகுந்து என்னுடைய நிறையையும், பெண்தன்மையையும், உயிரையும், உருக்கி உண்டுபோனவர் காமனோவென்றால் கையில் கருப்பு வில்லில்லை என்றும், கண்வழியால் என்மனதுக்குள் புகுந்து கலத்தைப்பறித்தவர் கள்ளனாகவேணுமென்றும். சந்திரனைப்போலிருக்கிற முகமும்அஜானவாகுவும்அழகுபொருந்திய தோள்களுக்குமுன் அவர்குஞ்சிரிப்பானது என் உயிரை உண்குதென்றும் தேவனோவென்றால் கண்கள் இமைக்கிறபடியினாலே தேவன் அல்ல கையில் வில்லும் மார்பில் பூணூலும் இருக்கிறபடியால் ராஜகுமாரனாகவேணுமென்றும் என்னுடையமனதை இப்படி

க்கைாத்துகன்னிகை என்கிறமதிலைக்கடந்துபோன அந்தபுருஷனை இன்னமொருதரம் கண்ணினுல்பார்த்து ஜீவனைவிடலாமென்றும் உருவெளிதோற்றத்தினுல். இவர்தானென்றும் இப்படி பலவாருகச் சொல்லிச் சொல்லி நினைந்து நினைந்து உருகிக்கொண்டிருக்கிறசமையத்தில் இந்த சிதையினுடைய விரகாக்கினி தன்னையும் சுடுமென்பதைநினைத்து தாளமாட்டாமல் நீண்ட கதிர்களாகிய கைகளை ஒடுக்கிக்கொண்டு சூரியன் ஓடி முன்னுதாக மேற்சமுத்திரத்தில் மூழ்கினன். பின்பு தென்றல்காற்றும் இருளுந்தோன்றியபடியால் அக்கினியைச்சொரிகின்ற அந்திமாலையானது கறுத்தநிறமும் செவந்தமயிருங்கையிற்பாசக்கயிறுங்கூடிய யமனைப்போலதோன்றிற்று. தென்றலானது தடாகங்களென்கிறஅக்கினியில் மூழ்கி வாசனைபொருந்திய புஷ்பத்தில் விஷம் ஊட்டிக்கொண்டு காமபாணம்பட்டபுண்வழியாய் நுழைந்ததால் அறிவும்அழகும்கொலைந்துச்சோர்ந்தவளுயிருண்ணப்பிரகாசிக்கும் அந்திவானத்தைப்பார்த்து இதுதானே கூற்றவனுடைய வடிவென்று சொல்லுவள், கடலோ, மேகமோ, ரத்நமோ, காயாம்பூவோ, குவளையோ, நீலோற்பலமோ, என்னுடைய உயிரை உண்பதுயாது ! என்கிறதாக தளர்ச்சியடைந்தவளுக்கு முன் ஸ்ரீராமனைப்போலமாலைப் பொழுது தோன்றிற்று. அந்தமாலைப் பொழுதைப் பார்த்து என்னை ஏன்பகைக்கிறாய் ! எய்கிறவனுடையசரங்களா ஓயவில்லை. இருக்கிற உயிரா ஒன்றல்லது வேறில்லை. ஆதலால் இப்பழியை நீ அடைதற்கு உன்னுடனெனக்குப்பகையுண்டா ! என்றுபின்னையும் சொல்லுகிறாள். ஆலகாலவிஷம் உலகெல்லாம் பரவியதோ ? அல்லது அந்தமகாபுருஷனுடைய நீலத்திருமேனியையாவரும் நினைக்கநினைக்க அதுவேவ்யிப்படிக்கு நிரம்பியதோ ? அல்லது கூற்றவனுடைய நிறத்தை மையுடனே கலந்து குழைத்து ஆகாயத்திலும் பூமியிலும் மொழுகியிருக்கின்றதோ ! இவ்விதமாகொடிய இருள்உண்டாயிற்றென்று தரிசனமானவர் மறைந்துபோய் விட்டாரோ ? விலக்குகிறவர் ஒருவரையும் காணேன், பெண்ணென்றெண்ணி மனதிரங்காயோ ! இருட்டிலே ஒளித்துக்கொண்டு அம்பை எய்யும் மன்மதனா உனக்குஇந்த யுத்திசொன்னீரோ ! அல்லது என்னுடைய பொல்லாத காலத்தினாலே அன்றில்பக்ஷியாய் நீயுங் கூவிக்கொல்லப் புறப்பட்டாயோ ? என்று பலவாருக மிகவும் வருத்தப்பட்டுக் கொண்டு இருக்கிறபோது ரத்நமயமாகிய திருவிளக்கினால் இருட்டைப் பகலாகச்செய்தார்கள். பூர்வத்தில்க்ஷீராப்தியைக் கடைந்தபோது வந்தபொற்கலசத்தில் உதித்தது போலச் சந்திரோதய மாயிற்று. தாமரைப்புஷ்பங்கள் குவியவும், அல்லிப்புஷ்பங்கள் மலரவும், இருள் நீங்கவும், தனது கிரணங்களோடு புறப்பட்ட சந்திரோதயம் எப்படியிருந்ததெனில் தாதாவாகியவெண்ணெய்நல்லூர்ச் சடையப்பமுதலியாருடைய கீர்த்தியைப்போல் உலகமெல்லாம்வியாபிற்றது. ஸ்ரீமன்நாராயணனுடைய உந்திக்கமலத்தினிடத்தில் பிறந்த இந்த அண்டம் பழசாய்ப் போயிற்றென்று புதுக்குகிறவனைப்போல தன்னுடைய கிரணங்களால் எங்கும் பிரகாசிக்க இருந்தனன். அப்படி புறப்பட்ட சந்திரனைப் பார்த்து உலகங்களை விழுங்கிக் கொண்டுவந்த கருநெருப்புக்கு நடுவேபுறப்பட்டவெண்ணெருப்பேயும் கூடவந்தாயோ ஆ ! சந்திரா, நீபொல்லாதவனல்லவே அமிர்தத்துடனே ஒருபெண்ணோடு கூடப்பிறந்தநீ, இப்படிசுடலாமா அந்தசந்திரகிரணங்கள் தனங்கள்பேரில் படுவதால்நெருப்பிலே விழுந்த அன்னப் பக்ஷியைப்போல பஞ்சணைமெத்தையின்பேரில் பதைத்துப்புழுங்குவள். புஷ்பமெத்தைகள் சரீரவெப்பத்தால் கருகிக்கருகிப்போக அவைகளை தாதிகள் அன்போடு அடிக்கடி மாற்றிக்கொண்டேயிருப்பார்கள். இப்படி சீதாலக்ஷ்மி ஸ்ரீராமனுடையதிருவழகை நினைத்து நினைத்து விரகதாபப் பட்டுக்கொண்டிருந்தாள்.

இப்படியிருக்கிற சீதாலக்ஷ்மியினுடையதிருவழகைக்கண்டு மிகுந்த ஆசையுடனேநடந்த ஸ்ரீராமன் விஸ்வாமித்திரமகாமுனியின் பிறகேதம்பியுடனே கூட நடந்துபோய்ச் சனகராஜனைக்காண, அவர்மிகுந்த சந்தோஷத்துடனே உபசாரஞ் செய்து, போகபூமிக்குச் சமானமான ஒருவிடுதிமாளிகையை திட்டம்செய்ய அதிலிருந்தார்கள். அப்போது ஸ்ரீராமனுடைய பாதாரவிந்த மகிமையினலே சாபவிமோசனமான அகலிகையினுடைய புத்திரனாகிய சதானந்தர் அவ்விடத்துக்குவந்தார். ஸ்ரீராமர் அந்தமஹாநுபாவனை நமஸ்காரம் செய்துக்கொண்டார். அந்தரிஷிமிகுந்த அன்புடனே ஆசீர்வாதம்செய்து, விஸ்வாமித்திரமகாமுனி முகத்தைப் பார்த்து — ஐயா, நீர்இவ்விடத்திற்கு வருகிறதற்கு இந்தபூமி என்னதபம்செய்து இருந்த தென்று கேட்க, கேளும் சதானந்தரே, இந்த ராஜகுமாரன் தாடகையையும், என்னுடைய வேள்வியையும், உமது தாயினுடைய சாபத்தையும் முடித்து என் மனக்கிலேசத்தையும் ஒழித்தவனென்று விஸ்வாமித்திரர்சொல்ல, சதானந்தர் அதிக சந்தோஷத்தோடு கேட்டு ஐயா, உம்முடையகிருபை அவரிடத்தில் பரிபூரணமாயிருக்கச்சே அவருக்கு எந்தகாரியம்அருமையாயிருக்கப் போகுதென்று சொல்லிஸ்ரீராமனுடைய திருமுகத்தைப்பார்த்து சதானந்தர்சொல்லுகிருர். இராஜகுமாரரேகேளும், இந்தமஹாநுபாவானவிஸ்வாமித்திரர் பூர்வத்தில் அனேககாலம் ராச்சியபாரம்செய்துக் கொண்டிருந்தார். அப்படியிருக்கிறகாலத்திலே ஒருநாள் வேட்டைக்குப் புறப்பட்டு ஆரணியத்துக்குப் போனார். அவ்விடத்தில் வசிஷ்டமகாமுனி இவரைக்கண்டு இராஜாவந்தாரேயென்று சந்தோஷ வார்த்தை சொல்லி பின்பு உமக்கு விருந்துசெய்விக்கிறேன் போஜனம்செய்து போமென்றுசொல்லி, காமதேனுவை அழைத்து இந்தராஜாவுக்கும் கூடவந்திருக்கிற சேனைகளுக்கும் அதிகசந்தோஷ திருத்தியாகும்படி அறுசுவைபதார்த்தங்களும் திவ்வியான்னமும் பொழியும்படி ஆக்கியாபித்து சகலமானபேருக்கும் போஜனம்செய்துவைத்து புஷ்பம், சந்தனம், தாம்பூலவர்க்க முதலியவைகளும் கொடுத்தார். அதுகண்டு ஆசசரியப்பட்டு, நீர் ஆ



சனம்விட்டு எழுந்திருக்கவேயில்லை எனக்கும் என்சேனாசமுத்திரத்திற்கும் இஷ்டான்னமுதலிய விருந்துசெய்து திருத்திசெய்தீர். ஆனால் இப்போர்க்கொத்த பசு உம்மிடத்தில் இருக்கிறதினால் யாதொரு பிரயோஜனப்படமாட்டாது இது இராஜர்களிடத்தில் இருக்குமாகில் அதிகபிரயோஜனமாயிருக்கும் மேலும் ரிஷிகளுடைய பொருளுகளெல்லாம் ராஜாக்களுக்குரியதென்று சாஸ்திரமிருக்கிறபடியினலே உமக்கிந்த காமதேனு தகாதென்று சொல்லி இந்தப்பசுவை எனக்குக்கொடுமென்றுகேட்க அதற்குவசிஷ்டர் சிலகடிகையேசாமல் மௌனமாகயிருந்து பின்பு அவரைப்பார்த்து இந்தபசு நம்மிட ஆதீனமல்ல நான்கொடுக்கமாட்டேன் அல்லது அதுவருமானல் அழைத்துக்கொண்டு போமென்று சொல்ல அதுகேட்டு அப்படியேசெய்கிறேனென்று எழுந்திருந்து சேனாசமுத்திரத்துடனே அந்தபசுவை வளைத்துப்பிடித்து கயிறுகளைப்போட்டு கட்டினார்கள். அப்போது காமதேனு அந்தகயிறுகளையெல்லாம் சின்னபின்னமாக அறுத்துவிட்டு வசிஷ்டர்முன்பாக வந்து ஸ்வாமி ? ராஜாவுக்கு என்னைநீர் கொடுத்தீரோ வென்று கேட்க நான்கொடுக்கவில்லை இராஜன் தாமேபிடித்துப் போகிறானென்று சொல்ல பசு மிகுந்த கோபத்தோடு இந்தராஜாவினுடைய சேனையை எல்லாம் மடித்துப் போடுகிறேனென்று மயிர்களை சிலிர்த்தது, அந்தமயிர்களிலிருந்து அனேகம் பப்பாரும் வேடரும் சீனருமாக உற்பவித்து இராஜாவின் சேனைகளெல்லாம்மடிய அடித்தார்கள். அப்போது இராஜாவின் குமாரர்கள் கோபித்துக்கொண்டு இது பசுவின் தன்மையல்ல, இந்தரிஷியின் வஞ்சனை என்று எண்ணிக்கொண்டு அவருடையசிரசை வெட்டிப்போடுகிறோமென்று ஆயுதபாணிகளாய் வசிஷ்டர் சமீபத்தில் அக்கினிபோல வந்தார்கள். அப்போது அவர்கோபத்துடனே அவர்களைப்பார்க்க அந்தகுமாரர்கள் நூறுபேரும் மடிந்துபோனார்கள். அதுகண்டு மகாகோபத்துடனே ராஜன் ரதமேறிக்கொண்டு வில்லைவளைத்து சரமாரியாய் வசிஷ்டர்பேரில் பொழிந்தார். அவரதைக்கண்டு தமது யோகதண்டை எதிர்க்கும்படி ஆக்கியாபித்தார். அதை இராஜனறிந்து சிவனை நோக்கி ஸ்துதிசெய்தார். அவர் ஒரு அஸ்திரங்கொடுத்தார் அந்த அஸ்திரத்தை வாங்கி வசிஷ்டர்பேரிலே விட்டார். அது அக்கினிச் சுவாலையாய் சமீபத்திலே வந்தது. அதைக்காத்திஞல்பிடித்துச் சாப்பிட்டுவிட்டார் அதிலிருந்த அக்கினிசுவாலைகளெல்லாம் மயிர்க்கால்களில் புறப்பட்டு பொறிகளாய்ப் போய்விட்டது அதுகண்டு ஆச்சரியமாய் சகலசாமர்த்தியங்களும் ரிஷிகளுக்கேயல்லாமல் வேறொருத்தருக்கு மில்லை என்று அறிந்து துணிவுகொண்டு தாமும் தபசுசெய்வோமென்று நினைத்துப் புறப்பட்டு கிழக்குத்திசையில்போய் வசிஷ்டர்செய்த மகிமையை மனதிலே நினைத்து தபசுசெய்துக் கொண்டிருந்தார். அந்தச்செய்தி தேவேந்திரன்கேட்டு திலோத்தமை என்கிறபெண்ணை அவருடையதபசை பின்னம்செய்ய அனுப்பினார், அந்ததேவரம்பையின் ரூபத்தைக்காணவே மனங்கலங்கி விரகமிருந்து அவளைச்சேர்ந்து அனுபவித்து உடனேதெளிந்து இது இந்திரனுடைய தந்திர உபாயமென்று அறிந்து அந்ததிலோத்தமையை பூலோகத்து ஸ்திரீயாகக்கடவதென்று சபித்து அவ்விடம்விட்டு தெற்குத்திசையேபோய்ச்சேர்ந்து பின்னையும் அதிகமானதபசு செய்தார். அப்போது அயோத்தியாபுரியிலே திரிசங்குமகாராஜா தன்னுடைய குருவான வசிட்டரைவணங்கி நான் சரீரத்துடனே சுவர்க்கலோகம்போக அநுக்கிரகம் செய்யவேண்டுமென்றுகேட்க, சரீரத்துடனே போகக்கூடாதென்றுசொன்னார். அப்படி உம்மாலாகாவிட்டால் என்மனதுக்குச் சம்மதியானவர்களைத்தேடி அதற்குத்தக்கயாகஞ்செய்துக் கொள்ளுகிறேனென்று ராஜாசொல்ல, குருவைநிந்தித்து வேறே ஒருகுருவைச் சம்பாதித்துக் கொள்ளுகிறேனென்று சொன்னபடியால் நீ நீச்சனாகக்கடவதென்று சபித்தார். அந்தக்ஷணமே சூரியப்பிரகாசம்போலிருந்த திரிசங்குமகாராஜாவின் சரீரம்கெட்டு முகஅழகும் இழந்து ரத்நகஜிதமான ஆபரணங்களெல்லாம் இரும்பாகி சரீரங் கறுகறுத்து சகலரும்பார்த்து இகழ்ச்சிசெய்யத்தக்க ரூபம் அமைந்தது அந்தரூபத்தோடு ஆரணியஞ்சேர்ந்து சஞ்சாரஞ் செய்துக்கொண்டிருக்கச்சே அவ்விடத்தில் தபஞ்செய்துக்கொண்டிருந்த இந்தகௌசிகனைக்கண்டு தன்னுடைய செய்தியெல்லாம் விசிதமாகச்சொல்ல, அதுகேட்டு இவ்வளவுகாரியந்தானோ வென்று நகைத்துயாகஞ்செய்து அப்படியேசரீரத்துடன் உம்மைசுவர்க்கத்துக்கு அனுப்புகிறேனென்று நிறுத்திக் கொண்டு அங்கு சமீபத்தில் இருந்த ரிஷிகளை எல்லாம் அழைப்பித்துக்கொண்டு வசிஷ்டர்பிள்ளைகளையும் — வரச்சொல்லிச் சொல்லியனுப்பினார். அவர்கள் ஒருராஜன் ஒருபுலையனுக்குசுவர்க்கம்கொடுக்கப் போகிறானும் அதற்கு நம்மைவரச் சொல்லுகிறது நன்றாயிருக்கின்றதென்று பரியாசகஞ் செய்தார்கள், அதுகேட்டுகோபித்து அவர்களை கிராதகளாகக்கடவதென்று சபித்தார் அப்படியே அவர்கள்வேடுவராய்க்காடுகளிலே திரிந்தார்கள் இவர்யாகத்தைஆரம்பித்துநிறைவேற்றிய பின்புசாபவிமோசனம்செய்யும்பொருட்டு அவர்களைவரச்சொல்லிச்சொல்லியனுப்பினார் அப்போதுமுன்சொன்னபடியேசொல்லிவராமல்நின்றுவிட்டார்கள். அப்பால் இவர்திரிசங்குமகாராஜனை அழைத்து விமானத்தில் ஏற்றிதேவலோகத்திற்கனுப்பினார். தேவர்கள்கோபித்து நீச்சன் இங்குவரக் கூடாதென்றுதள்ளிவிட்டார்கள், பின்பு அந்த திரிசங்குமகாராஜன் ஸ்வாமி ! சரணம்சரணமென்று திரும்பி பூலோகத்திற்குவந்து சேர்ந்தான் அதுகண்டு இந்தகௌசிகர் நம்மிட ஆக்கினையை இகழ்ந்த தேவர்களையும் தேவலோகத்தையும் வேறே சிருஷ்டிக்கிறேன் — சந்திர சூரியனை தெற்கு வடக்காக வரச்செய்கிறேன் என்று கோபித்து அந்தப் படியேசெய்ய ஆரம்பித்தார், தேவேந்திரன் முதலானதேவர்களும் பிரம்மாவும் சிவனும் இவர் எதிரே வந்து கோபத்தைப் பொறுத் தருளும், திரிச்சங்குக்கு நக்ஷத்திரபதவி கொ

டுக்கிறோம், நீரும் ராஜரிஷியாகயிருமென்று சமாதான அநுக்கிரகஞ்செய்து அவரவர்கள் யதாஸ்தானம் போய்ச் சேர்ந்தார்கள். கௌசிகரிஷியும் மேற்கிலிருந்து தபசுசெய்துக் கொண்டிருந்தார். அவ்விடத்தில் அம்பரீஷமஹாராஜன் புருஷமேதயாகஞ்செய்ய வேண்டுமென்று ஓர் யோசனை செய்துக்கொண்டு ஒருபிள்ளையைவிலைக்குவாங்க அனேக திரவியங்கட்டிக் கொண்டு ஆரணியத்தில்வந்த விடத்தில், இருசிகரிஷியைக்கண்டு வந்த செய்தியைச்சொல்ல, அவர்கேட்டு எனக்கு மூன்றுபிள்ளைகளிருக்கின்றது. அதிலே மூத்தப்பிள்ளை எனக்கு வேணுமென்று சொன்னார். பெற்றவள் தனக்கு இளையப் பிள்ளை வேணுமென்று சொன்னாள் அப்போது இடைப்பிள்ளை ராஜாவைப்பார்த்து என்னைப்பெற்று எடுத்து வளர்த்தவர்களுக்குத் தரித்திரந்தீர திரவியத்தைக்கொடும நான் உம்முடனே கூட வருகிறேனென்றுசொல்லி, தாய் தகப்பனிடத்தில்செலவுபெற்றுக்கொண்டுசந்தோஷித்துராஜனோடு கூட, ரதமேறிக்கொண்டு போனான். உச்சிகாலமானபோது அம்பரீஷமகாராஜன் தனதுகாலக்கடமைகளை முடிக்கிறதற்கு ரதம்விட்டிறங்கி ஒருதடாகத்துக்குப்போனார். தேரிலிருந்த இந்தபிள்ளை கௌசிக மகாரிஷியைக்கண்டு சமீபத்தில் வந்துசேவித்துக் கொண்டு நடந்தசெய்தியைச்சொல்லிக்கொண்டான். அதைக்கேட்டு மைத்துனனும் தமக்கையும் செய்தகாரியத்திற்கு மிகவும் வருத்தமுள்ளவராய் நீபயப்படவேண்டாம் உன் பிராணனை ரக்ஷிக்கிறே னென்றுசொல்லி, முன் வசிஷ்டர் கோபத்திலே அகப்பட்டுமடியாமல் தப்பியிருந்த தன்நான்குபிள்ளைகளையுமழைத்து நீங்கள் ராஜன்பிறகே போங்களென்று சொன்னார். அவர்கள் அவ்வார்த்தையைக் கேளாமல் மறுத்தார்கள். அதின்பேரில் கோபித்து கிராதராய் போகக்கடவீரென்றுசபித்தார். அப்பால் மருமகனையழைத்து இரண்டு மந்திரம் உபதேசஞ்செய்து நீ இந்த ராஜன்பிறகேதானேபோய்யாகசாலையின் யூபஸ்தம்பத்தடியிலிருந்து இந்தமந்திரத்தை உச்சரித்துக் கொண்டிருப்பாயாகில் உன்பிராணனுக்குச்சேதம்வராதென்றுசொன்னார். அப்படியே செய்கிறேனென்று சொல்லி நமஸ்கிரஞ்செய்து அந்தராஜன் பிறகேபோய், யாகசாலையில் யூபஸ்தம்பத்தின் அருகிலிருந்து அந்தமந்திரத்தைச் சபித்தான் அப்போது - பிர்ம்மா - விஷ்ணு - ருத்திரன் - மும்மூர்த்திகளும் இந்திரன்முதலியதேவர்களும்பிரசன்னமாகி அம்பரீஷமகாராஜனுடைய அபீஷ்டவரங்களெல்லாம் கொடுத்து இந்தப்பிள்ளைக்கும் உயிர்ச்சேதம் வராமல்காத்தார்கள். அப்பால்கௌசிகமஹாரிஷிவடக்குத்திக்கில் சென்று ஓமொழுத்து மந்திரத்தை உச்சரித்துக்கொண்டு பிராணயாமம் என்கிறபிராணவாயுவை, இரேசக - பூரக - கும்பகம் செய்துக்கொண்டு, காருகபத்தியம் தக்ஷிணாக்கினி-ஆகவனீயம் என்கிறமூன்று அக்கினியையும் மூட்டி, அனேக வருஷகாலம் தபசு செய்தார். அப்போது மூலாக்கினியினால் கபாலம் வெடித்து அந்த, ரந்தரத்தினாலுண்டாகியபுகைவாலையும்-புகையும் எங்கும்பரவி சூரியசந்திரர்கள் அஷ்டதிக்குப்பாலகர் முதலிய சராசரங்களினுடைய கண்களைவிழிக்க வொட்டாமல் மூடிக்கொண்டு சூரியனுடைய - ரதம்போகமாட்டாமல் திருப்பிக்கொண்டது, தேவர்களெல்லாம் திக்குமுக்கிட்டு நடுநடுங்கினார்கள். பின்பு அம்சத்தின்பேரில்பிர்ம்மாவும் - கெருடன்பேரில் விஷ்ணுவும் - ரிஷபத்தின்பேரில் சிவனும்மற்றதேவதைகளும் தேவேந்திரனுங் கூட, கௌசிகமகாரிஷியின் முன்பாகவந்து உமக்குச்சமானமாகிய ரிஷிகளில்லை என்றுசொன்னார்கள். இவரும் எழுந்திருந்து அவர்களைச் சேவித்துக்கொண்டு நம்முடைய வினைபோய் விட்டதென்று சந்தோஷித்து ரிஷிநல்லியரானார் இப்படிக்கொத்த மகானுபாவர் உம்மிடத்தில் பரிபூரணமாயிருக்கச்சே உமக்கெந்தகாரியம் அருமையென்று சதானந்தர்சொல்ல, ஸ்ரீராமன்கேட்டு சந்தோஷமாய் அவரைச் சேவித்துக்கொள்ள, அவரும் அன்புடனே இவர்க்கு ஆசிர்வாதமசெய்து அவரவரிருக்குமிடம்போய்ச் சேர்ந்தார்கள். விஸ்வாமித்திரமகாமுனியும் லக்ஷுமணரும் தங்களுக்கு யோக்கியமானவிடங்களில் சயனித்துக்கொண்டார்கள். ஸ்ரீராமன் தனியே இருந்தபடியால் கன்னிகாமாடத்தில்கண்ட கன்னிகையை, நினைத்து நினைத்து, ஆகாயத்தில் பிரகாசிக்கிற மின்னல் ஒரு பெண் ரூபமெடுத்து வந்ததோ! என்மனதை மயக்கிக் கண்ணொதிரேயும், இருதயத்திலேயும், நீங்காமலிருக்கின்றதே! இருதய கமலத்தில் பொருந்தியபடியால் தாமரைக்கமலத்தில்வாசமாயிருக்கின்ற லக்ஷுமியேயாகவேணும், எந்த வஸ்துவைப்பார்த்தாலும் அவள் சுரூபமாய்த் தோன்றுகின்றதே! அவள் இடையாவிட்டாலும், இளநிலாப் பிரகாசம்போல குஞ்சிரிப்போடு மருவியிருக்கிற செவந்தவாயையும், பூரணச்சந்திரனுக்குச் சமானமான அவளுடைய திருமுகத்தையும், இன்னமொருதிரம் காணக்கிடைக்குமா! மேலோ பாணத்தோடுகூடிய ஓர்தேரும், வாளைப்போல இரண்டுகண்களும், பாரித்த இரண்டுதனமும், நல்நகைப்பும், யாவராலும் எண்ணும்படியிருக்கிற மன்மதனுக்கு இத்தனையும்வேண்டுமா! மன்மதனுடையகருப்புவில்லிலிருந்து புறப்படுகிற புஷ்பபாணங்கள் என்னையே இப்படி துளைத்துவதைக்குமானால் இனி தைரியமென்கிறது யாரிடத்திலிருக்கும், பாற்கடல்போல . புறப்பட்டச் சந்திரன் என் உயிரைத்தொலைக்கின்றானே! உலகத்தில் வெள்ளைவிஷமு முண்டோ! அந்தப் பெண்ணிடத்தில வாளைப்போலிருக்கிற இரண்டுகண்களும், வச்சிரக்கிண்ணங்கள்போலிருக்கிற இரண்டு தனங்களும், உயிரை உருக்குகிறசிறுநகையுமேபோதாதோ! கூற்றுவனுக்கு இத்தனைகோலமும்வேணுமா! ஆ ! என்மனது நல்வழியிற்போகுமே யல்லது துர்வழியில் செல்லமாட்டாதே! ஆனாலப்பெண் கன்னிகையாக இருக்கவேண்டும், இதற்குச்சந்தேகமிராது என்று இப்படி பலவாறாகச் சந்தேகப்பட்டுக்கொண்டிருக்கிற சமையத்தில் இரவென்கிற அரசனுடைய குடைவிழுந்தாப்போலச் சந்திரன் மேற்கு சமுத்திரத்திற்போய் விழுந்தான். சூரியன், ஸ்ரீராமன் வருந்தப்படுகிறானென்று இருள்களைக்கடிந்து தாமரைக்கமலங்கள்மலரதேவர்களும், ரிஷிகளும், நமஸ்காரஞ்செய்ய



கின்னரர்கள் இசைபாட - லோகங்களெல்லாம் ஸ்துதிக்க - சமுத்திரகோஷ்டம் மத்தளம்போல அதிர - ஆகாயமென்கிற சபையிலே சிவன்சடைகளை விரித்துக்கொண்டு நடனஞ்செய்வதுபோல தானும் தன்கிரணங்களை விரித்துக்கொண்டு பிரகாசித்தான். கரத்தில் தரித்திருந்த சக்கரத்தைநீக்கி கோதண்டத்தைத் தரித்துவந் திருக்கிற மேகசுரூபனான ஸ்ரீராமனை சூரியன் தன்னுடைய இளங்கிரணமாகிய கரங்களினாலே திருவடிகளைப்பிடித்து நித்திரையையெழுப்ப,ஓர் ஊழிகாலம்கழிந்தாற்போல அவ்விரவென்கிற சமுத்திரத்திற்குக் கரைகண்டு (நித்திரைசெய்து எழுந்திருந்த மதயானையைப்போல) எழுந்திருந்து காலக்கடமைகளை முடித்துக்கொண்டு விஸ்வாமித்திரருடனே தம்பியோடு தானும் ஜனகமகாராஜாவினுடைய யாகசாலையிற்போய்ச் சேர்ந்தார்கள். ஜனகமகாராஜனும் தன்யாகத்தைமுடித்து பேரிகை முதலான மேளவாத்தியங்களார்ப்பரிக்க, சந்திரமண்டலமட்டும் அளாவியிருக்கிற தம்முடைய சபாமண்டபத்தில்வந்துசேர்ந்தார் இராமலக்ஷுமணரோடு விஸ்வாமித்திரமகாரிஷியும் சமீபத்தில்எழுந்தருளியிருந்தார். ஜனகமகாராஜன்இந்த ராமலக்ஷுமணருடைய சுந்தரங்களைநேத்திரானந்தமாகப்பார்த்து விஸ்வாமித்திரரைச் சேவித்து ஸ்வாமி! இந்தப்பிள்ளைகள் யார் எனக்குத் தெரியச்சொல்லவேணுமென்றுகேட்க, உமக்கு விருந்தாகவந்தவர்கள். அன்றியில் நீர் செய்கிற யாகமும் பார்க்கவந்தார்கள். உம்மிடத்தி லிருக்கிறவில்லையும் பார்க்கத்தக்கவர்கள்தான். அனேகங்கீர்த்திபொருந்திய தசரதமகா ராஜாவினுடைய புத்திரர்களென்றும் சொல்லி, பின்னையும் விஸ்வாமித்திரர் அவர்கள்பிரதாபத்தைச் சொல்லுகிறார்.

கேளும் ஜனகமகாராஜனே சூரியவம்சத்தில் மநுவென்கிற மகானுபாவனை யறியாதவர்கள்உலகத்திலில்லையே! உகைத்திலிருக்கிற ஜீவராசிகளெல்லாம் பசியினாலே வருந்தாமல் பூமிதேவி முலை சுரந்து சகலதானியங்களும் விளையும்படியாய் சாதித்த மகாபுருஷனும் இவர்குலத்திலேபிறந்தவன் அனேக பிர்ம்மாவைநோக்கி தபசுசெய்து அவரது ஆராதனை ரங்கநாதனை நாம் யாவருந்தரிசிக்க பூலோகத்திற்குக் கொண்டுவந்த மகாராஜனு மிவர்குலத்திற் பிறந்தவன். அசுரர்கள் உபத்திரவம் பொறுக்கமாட்டாமல் தேவேந்திரன் வந்து முறையிட்டு ரிஷபவாகனமாயிருக்க, அதன்பேரிலேறிக்கொண்டுபோய் அசுரர்களைச் சங்காரஞ்செய்து ஜெயித்து இந்திரனுக்குப் பட்டங்கட்டி வைத்தவனும் இவர்குலத்திற் பிறந்தவன். மந்தரகிரியை சமுத்திரத்திலே போட்டுக்கடைந்து இந்திராதி தேவதைகளுக்கு நரைதிரை மூப்பு மரணங்கள் வராமல் அமிர்தங் கொடுத்தவனும் - புலியும் - பசுவும் - ஒரு துறையில் ஜலங்குடிக்கும்படியாய் ராச்சியபாரம் செய்தவனும், தேவர்களும், அசுரர்களும், போர்செய்கிற நாளையில் தேவலோகத்தில் தருமசிந்தையா யிருந்து ராஜரீகம் செய்தவனும் - ஒருபக்ஷியினுடைய பிராணனுக்குத் தன்பிராணனைக்கொடுத்தவனும் - தானயாகஞ்செய்தவனும் இவர்குலத்தில் பிறந்தவர்கள்தான். சமுத்திரத்தைத்தோண்டினவர்கள் இவர்களானால் வேறேபெருமை சொல்லவேண்டிய தென்ன. அவர்கள் பெருமையை அனந்தனாலும் சொல்லக் கூடாமையாயிருக்க. நானெவ்வளவுசொல்லப்போகிறேன். கொன்றை மாலைதரனான சிவனையுங்கண்டு ஆகாய கங்கையைப் பூமிக்குக் கொண்டு வந்தவனுமிவர்குலத்திற்பிறந்தவன். சந்திரனை வென்று ருத்திரனைஜெயித்து துந்துவென்கிற அசுரனை அக்கினியாஸ்திரத்தினால் கொன்று கீர்த்திவகித்த இந்திரனை ஜெயித்து அஷ்டதிக்குகளையும் தன்வசம் செய்துக்கொண்டு ராச்சியபாரம் பண்ணிக்கொண்டிருக்கிற ரகுவென்கிறராஜனைத்தான் நீர் அறியீரோ, அந்தவம்சத்தில் அஜமஹாராஜனென்கிறவன் ராஜகூட்ட மென்கிற சமுத்திரத்தைவில்லென்கிற மந்தரகிரியினால் கடைந்து லக்ஷுமிக்குச்சமானமான இந்துமதியென்கிற கன்னிகையைமகா விஷ்ணுவைப் போலமார்புக்கு ஆபரணமாகவைத்துக் கொண்டான். அந்த அஜனுடைய புத்திரனாகிய தசரதசக்கரவர்த்தியை இவ்வுலகத்தில் அறியாதவர்யாரிருக்கிறார்கள். அவருடைய குமாரர்களான இவர்களுடைய பிரதாபங்களைக் குறித்துச் சொல்லுகிறதற்கு பிர்ம்மாவுக்கும் அருமையாயிருக்கும் நானறிந்த மட்டிலுஞ் சொல்லுகிறேன் கேளுமென்று ஜனகமகாராஜாவைப் பார்த்து விஸ்வாமித்திரமகாரிஷிபின்னையுஞ் சொல்லுகிறார். அந்ததசரத மகாராஜன் - சூரியன் - பனிகளைத்தகிக்கிறதுபோல பகையாளிகளை ஜெயித்து ஏகசக்ராதிபத்யத்தை ஒருமசிந்தையோடு மநுசட்டப்படிக்கு ராச்சியபரிபாலனஞ் செய்துக்கொண்டுவந்தார், அவர் தனக்குப்புத்திரர்க ளில்லாமையைகுறித்து கிலேசித்து, கலைக்கோட்டு மகாரிஷியை யழைப்பித்து சேவித்துக்கொண்டு ஸ்வாமி ? எனக்குபபிற்பாடு இந்தராச்சிய மாளுகிறதற்குப் புத்திரருண்டாகும்படி அநுக்கிரகஞ்செய்ய வேணுமென்று கேட்க, அதுகேட்டு கலைக்கோட்டு மகாமுனி சந்தோஷித்தவராய் பதினான்குலோகமும் ஆளத்தக்கின பிள்ளைகள் பிறக்கப்போகிறார்கள். நீர் கிலேசிக்கவேண்டாம். ஆதலால், நீர் யாகத்துக்குவேண்டிய சாமக்கிரியைகள் வருகிறதற்கு உத்தரவு செய்யுமென்று சொல்ல, அப்படியே வரவழைத்தார். அந்த ரிஷிசிரேஷ்டர் அவ்விடத்திலிருந்து புத்திரகாமேஷ்டியாகத்தை முடித்தார். அப்போது அந்த ஓமகுண்டத்திலிருந்து ஒரு ராஜபூதம் பொற்கும்பாளத்தில் அமிர்தத்துக்குச்சமானமான திவ்வியான்னங்கொண்டுவந்தது அதை அந்த மகாரிஷி ஆக்கியாபித்தப்படிக்குத் தசரதமகாராஜன் தன்னுடையதேவிகள் மூவருக்கும் நாலுபங்காக்கிக்கொடுத்தார். தருமஞ்செய்த தருமத்தினாலும் பாவஞ்செய்த பாவத்தினாலும் கற்கடகலக்கனத்தில் இந்தபுருஷோத்தமனை கௌசலையென்கிற புண்ணியவதிபெற்றாள், இவனைப்போலேதானே குணமும் சுந்தரமுமுண்டானபரதனென்கிறவனைக் கைகேசி யென்கிற பாக்கியவதிபெற்றாள். மகம்மேருபர்வதமும் கைலாயபர்வதமும்போல சுந்தரத்தையுடைய இந்தலக்ஷுமணனையும் சத்துரு

ருக்கனென்கிறவனையும் இளையவளாகிய சுமித்திரையெ
ன்கிற பாக்கியவதிப்பெற்றாள். சகலசாஸ்திர பாண்டித
ராய் தனுர்வேதங்களெல்லாமறிந்து சந்திரோதயத்தை
க்கண்ட சமுத்திரம்போல நான்குவேதத்துக்குச் சமா
னமான இந்தநாலுபேரும் வளர்ந்தார்கள். தசரதமகா
ராஜாவின் பிள்ளைகளென்கிற பெயர்மாத்திரமே யல்ல
து உபநயனம் வித்தியாரம்ப முதலானதுகளுஞ் செய்
து வளர்த்தவர் வசிஷ்டமகாமுனியென்று நீர் அறியக்
கடவீர். இவர்களால் என்னுடைய யாகத்துக்கு விகாத
ம்செய்துவருகிற ராக்ஷதர்களைக்கொல்ல வேணுமென்
று இவர்களை அழைத்துக்கொண்டு ஆரணியத்துக்குவ
ந்தேன், வருகிறதற்குமுன்னமே தாடகைதலைப்பட்டா
ள், ஜனகராஜனே கேளும், இந்தராமனுடைய புஜபல
பராக்கிரமத்தை நன்றாய் நீர் எண்ணிப்பாரும். அந்த
தாடகைபேரில் ஒரேபாணம்வாங்கிவிட்டார், அது அ
க்கினிநேத்திரங்களுடனேவந்த தாடகையினுடைய மா
ர்பிலும் ஆகாயத்திலும் பூமியிலும் உருவிப்போயிற்று.
பின்பு அனேகராக்ஷதர்களுடனே அந்ததாடகையின்பி
ள்ளைக ளிருவரும்வந்தார்கள். அந்த ராக்ஷதருடைய
தலைகளெல்லாம் அற்று மலைமலையாய்க்குவிந்தது. அவ
ர்களில் ஒருவன்மடிந்து போனான், ஒருவன் இன்ன வி
டம்போனானென்று தெரியாது. நானும் யாகத்தைமுடி
த்தேன். என்னிடத்தில் தேவர்கள் வைத்திருந்த ஆயுத
ங்களெல்லாம் கொடுத்தேன், கொடுத்த எனக்குக்கூட
ஆச்சரியமாகும்படியாய் அந்த ஆயுதங்கள் இவருக்கு
ஏவல்செய்துவருகின்றது. உம்முடையகுருவான கௌ
தமமகாரிஷி பத்தினி அகலிகைக்கு சாபவிமோசனம்
செய்து முன்ரூபத்தைக்கொடுத்தது இவருடைய திரு
வடித்தூளென்றால் வேறேமகிமைசொல்ல வேணுமா!
இவரிடத்தில் எனக்கு என்னுடைய பிராணனைப்பார்க்
கிலும் அதிகமான அந்தக்கரண பேட்சையுமுண்டென்
று விஸ்வாமித்திர மகாரிஷிசொன்னார்.

இவ்வார்த்தைகளெல்லாஞ் ஜனகமகாராஜன் கேட்டு
ஆச்சரியசித்தனாகி, அதிகசந்தோஷத்தோடு ஸ்வாமி ?
நானென்ன சொல்லப்போகிறேன் ஒருவில்லல்லவா எ
ன்னுடைகுதோத்து இருக்கும்படிக் கிருக்கின்றது அந்
தவில்லை இவர்வளைப்பாராகில் கிலேச சாகரத்தில்மூழ்
கி இருக்கிற என்னைக் கரையேற்றினதாக யிருக்கும். சீ
தையும் தவம்செய்தவளே என்று, விஸ்வாமித்திரருட
னேசொல்லி எதிரேநிற்கிற தன்மனுஷரைப்பார்த்து சீ
க்கிரத்துக்கு அந்தவில்லைக் கொண்டுவாருங்களென்று
ஆக்கியாபித்தார் அந்தக்ஷணமே நாலுபேர்கள் வில்லி
ருக்கிற சாலைக்குப்போய் அங்கிருக்கும் காரியஸ்தரோ
டு சொன்னார்கள் தக்ஷணமே அதிகபலசாலிகளாய் பர்
வதங்கள்போன்ற தோள்களை உடையவர்களாய் அறுப
தினாயிரம் பேர்களெழுந்து வில்லைத் தூக்கித் தூலிகளிட்
டு தண்டுகளினாலே தாங்கித் தாங்கிக்கொண்டு பூமிதே
வி முதுகாற்றத்தக்கதாய் மகம்மேருவும் நாணும்படியா
யிருக்கிற வில்லை எடுத்துக்கொண்டுவரச்சே ? அந்தநக
ரத்திலிருக்கிற ஜெனங்கள் யாவரும் சமுத்திரம்போல
வந்துநிறைந்து இறைந்துக்கொண்டு பார்த்தார்கள். அ
ப்படிபார்க்கிற ஜெனங்கள் வில்லை ஏனெடுக்கிறார்கள்,
கையில் சங்குசக்கரம் தரித்திருக்கிற விஷ்ணுவானால் இ
த்தையெடுத்து வளைக்கலாமேயல்லது மற்றொருவரா
லாகமாட்டாது, சீதைக்கும் கலியாணமாகப்போகுதா
வென்று சொல்லுகிறவர்களும் இதுவில்லல்ல, மகம்
மேருபர்வதம் என்கிறவர்களும் பூர்வத்தில் யார் இந்த
வில்லை நாரியேறிட்டு அம்பெய்தவரென்றும், பிர்ம்மதே
வன் தன்னுடையபிரதாபம் தெரிகிறதற்கு தன்னுடை
யகையினால் செய்ததென்றும் இந்தவில்லிலே நாரி ஏறி
ட்டு அம்புயெய்தால் அதற்குலக்ஷயமென்ன இருக்கின்
றதென்றும் இந்தவில்லா, அந்தசீதையின்விவாகத்துக்
கு விகாதமாக வரவேணுமென்றும் இந்தவில்லை விஷ்
ணுவானாலுந் தாலெடுக்க மாட்டுவாராவென்றும் இது
விதிச்செயலென்றும்-மகம்மேருவைத்திரட்டி வில்லாக
ச்செயதார்களோவென்றும்-சர்ப்பங்களுக்கெல்லாம் இ
ராஜனான ஆதிசேஷனோ வென்றும்- பூர்வத்தில் சமுத்
திரத்தைக்கடைந்த மத்தென்றும்-ஆகாயத்திற் காணுகி
ன்ற இந்திரதனுசாகிய பச்சைவில்லு பூமியில் விழுந்த
தோவென்றும் - என்ன ! இதைக்கொண்டுவரச்சொன்
னாரென்றும் - இப்போது ராஜாக்கள் தெரிந்தவர்களி
ருக்கிறார்களாவென்றும்-ஊழ்வினையை யாராலே கடக்
கலாகுமென்றும்-இந்தவில்லையும் சீதைகண்ணாலே பா
ர்ப்பாளோவென்றும் -இப்படிக்குப் பலபலவிதமாக நக
ரத்துஜெனங்கள் சொல்லிக்கொள்ள, அந்தவில்லைராஜ
னுக்கு எதிராகக்கொண்டுவந்து பூமியில்வைத்தார்கள்.
அப்போது பூமிக்கு முதுகு கனக்கி மிகவும் தாழ்ந்த
து. அந்தசபையிலிருந்த ராஜாக்களெல்லாம் பார்த்து
இதைவளைக்கிறவர்கள் யாரிருக்கிறார்களென்று கையை
ப்பிசைந்தார்கள். ஜனகராஜன் ஸ்ரீராமனையையும், மன
திலே வேதனையைக்கொடுத்திருக்கிற, அந்தவில்லையையு
ம்பார்த்து தம்முடைய குமாரத்தியையும் மனதிலேநினை
த்து சும்மாயிருந்தார். அவருடையமனைவி கௌதமரி
ஷிபுத்திரரான சதாநந்தர் அறிந்து விஸ்வாமித்திர மகா
ரிஷியினுடைய முகத்தைப்பார்த்துச்சொல்லுகிறார். பூ
ர்வத்தில் மகம்மேருவை வில்லாகப்பிடித்த பரமசிவன்
பாகத்திலிருக்கிற உமையை அவள்தகப்பனான தக்கன்
இகழ்ந்துபண்ணி யாகம்செய்தான். அதற்கு சிவன் கோ
பாவேசனாகி இந்தவில்லைக் கையில் பிடித்துக்கொண்டு
போய் அந்தயாகசாலையில் புகுந்து மிகவும் கோபத்து
டனே தேவர்களுடைய கைகளை சிதைத்தும் சிலருடை
ய பற்களைப்பேர்த்தும் பலவாறாக சின்னபின்னம் செய்
தார் தேவர்க்களெல்லாம் ஓடிப்போனார்கள். தக்கன் ஆ
ரம்பித்தயாகம் விச்சின்னமாய்நின்று போயிற்று. அப்
போது சிவன்கோபமாறி கையிற்கொண்டுவந்த வில்லை
இந்தஜனகமகாராஜனுடைய வம்சத்தில் ஓர் அரசனிட
த்தில்வைத்தார். அந்தவில்லினுடையபலமும் பெருமை
யும் நாம் சொல்லவேணுமா அந்தச் சிவனுக்குச் சமா
னமான நீரேயறிந்துகொள்ளக் கடவீரென்று சொல்லி
இந்தவில்லுக்குச் சம்பந்தமான சீதை, பிறந்தவிர்த்தா



ந்தம் சொல்லுகிறேன்கேளும் என்றுபின்னையும் சொல்
லுகிறார். முன்னாலே யாகம்செய்கிற நிமித்தம் பூமியை
ப் பொற்கலப்பைக்கு வச்சிரக்கொழுபூட்டி உழுதோம்
அந்தகொழுமுகத்தில் சூரியன் உதித்தாற்போல ஸ்ரீம
காலக்ஷ்மியும் நாணத்தகுந்த அதிக சுந்தரத்தோடு
பெண்சிகாமணியாகிய சீதைபிறந்தாள். அவளுடைய
உத்தமகுணங்களை என்னாலேசொல்லிமுடியாது. அழ
கென்றதே தபஞ்செய்து அவளைப்பெற்றது அந்தசீதை
பிறந்தபிறகு அதிக சுந்தரமான தேவகன்னிகைகள் மு
தலானயாவரும் (ஆகாயகங்கை பூமிக்குவந்தபிற்பாடு,
மற்ற ஆறுகளெல்லாம் எப்படியாச்சுதோ அப்படி) ம
கிமை இழந்துபோனார்கள். விதிவழிகள் வேறுவேறி
ருக்க, பூர்வத்தில் அமிர்தத்தில் பிறந்த லக்ஷ்மியை
தேவர்களெல்லாம் அபேக்ஷித்ததுபோல அனேகராஜா
க்கள்வந்து எனக்கெனக் கென்று சேனைசமுத்திரம்போ
ல வந்திறங்கினார்கள்.

---

## கார்முகம்.

இவர்கள் வெகு கூட்டங்களானபடியால் நாங்களொ
ரு யோசனைசெய்து சிவசாபத்தையுடைய இந்தவில்லை
யாதாமொருத்தர் வளைத்து நாரி ஏறிடுகிறாரோ அவரு
க்கு இந்தப்பெண்ணைக் கலியாணம்செய்துக் கொடுக்கி
றோமென்று சொன்னோம். அந்த ராஜாக்க ளிந்தவில்
லையு மெடுக்கமாட்டாமல் மன்மதனுடைய கரும்பு வில்
லுக்கும் தாளமாட்டாமல், விவேகஹீனராய் கோபத்து
டனே சண்டைக்குவந்தார்கள். அவர்களுடைய சேனா
சமுத்திரத்திற்கு முன்னே எங்கள் சேனாசமுத்திரமும்
நின்று எதிர்த்தது. சிவனுடைய வில்லை இவர்கள் வைத்
திருக்கிறபடியினாலே தேவாநுகூலமும் உண்டாயிருக்கி
ன்றதென்று அவர்கள் எண்ணிப்பயந்து இரவில் கூகை
யைக்கண்டோடும் காகங்களைப்போல ஒருவர் பின்னால்
ஒருவர் ஓடிப்போனார்கள். அன்றுமுதலிற்றைவரைக்கு
ம் இந்தவில்லைக்குறித்து ஒருவரும் வந்ததில்லை. ஓடிப்
போன ராஜாக்களுந் திரும்பிவரவுமில்லை இனி கலியா
ணமு மில்லையென்றே யிருந்தோம். இன்றைக்கு இந்த
ப்பிள்ளை இந்தவில்லை எடுத்து நாரி ஏற்றினால் சீதையி
னுடைய இளமையும் அழகும் பழுதாகாதென்று சதா
னந்தர் சொன்னார். அதை விஸ்வாமித்திர மகாமுனிகே
ட்டு அவருடைய மனோபாவமும் அறிந்து தம்முடைய
சடைமுடியை அசைத்து சிங்கம்போல எதிரேயிருக்கிற
ஸ்ரீராமனுடைய திருமுகத்தைப்பார்த்தார். ஸ்ரீராமனும்
விஸ்வாமித்திரர்நினைத்ததைதமதுகோசரவிவேகத்தால்
அறிந்து அந்த வில்லைப்பார்த்தார். பார்த்து ஓமாக்கினி
யில் நெய்யாகுதிவிட்டால் அந்த அக்கினிஜுவாலை எப்ப
டி எழும்புமோ அப்படிபோல அதிசீக்கிரமாக எழுந்தி
ருந்தார். தேவர்களெல்லாரும்பார்த்து வில்லுமொடிந்தது
ஒடிந்தது என்றார்கள். மகாரிஷிகளெல்லாம் ஆசிர்வாத
ம்செய்தார்கள். இப்படிக்கு எழுந்திருந்த ஸ்ரீராமன் வி
ல்லைவளைத்து ஒடிக்கிறதற்கு முன்னமே அவடத்திலிரு
ந்து ஸ்ரீராமனுடைய சுந்தரத்தைப்பார்க்கும் ஸ்திரீகூட்
டங்களின்பேரில் மன்மதன்புஷ்பபாணம் எய்யும்அவச
ரத்தில் ஆயிரங்கருப்புவில்லொடிந்தது. அந்தஸ்திரீகள்
இந்தவில்லு மகாபலமானது இதை இந்த ராஜகுமாரன்
வளைக்காமற்போனால் சீதைக்கு வாழ்வில்லை என்பாரு
ம், கரங்களைக்கூப்பிக்கொண்டு கண்களிலே ஜலம்பெரு
க, இந்தராஜகுமாரன் இதை வளைக்காவிட்டால் சீதை
யும் நாமும் அக்கினியில் மூழ்கக்கடவோமென்பாரும்,
இந்த ராஜகுமாரன் கலியாணம் செய்துக் கொள்ளுகிற
தற்கு சம்மதித்தால் சீக்கிரமாய் பெண்ணைக் கலியாண
ம்செய்துக் கொடுத்துவிடவேணுமேயல்லாமல் இந்த
வில்லைக்கொண்டுவந்து இந்தச் சிறுபிள்ளை முன்பாகப்
போட்டால் புத்தியீனமென்பாரும், இந்தக்கியானியாகி
ய முனீஸ்வரனுக்குக் கொஞ்சமாகிலும் விவேக மில்லை
யென்பாரும், நம்மிட ராஜாவைப்போல பொல்லாதவர்
கள்வேறேயில்லையென்பாரும், இந்தப்பிள்ளைவில்லைவளை
க்காமற்போனால் சீதை பாக்கியவதி யல்லவென்பாரும்
இப்படியாக அந்த ஸ்திரீகூட்டங்கள் சொல்லிக்கொள்ள
பெரியோர்கள் சகலருமகிழ, தேவர்கள் சந்தோஷிக்க,
சிங்கமும், மதயானையும், ரிஷபமும், பர்வதமும், வெட்
கிப்போம்படியாக நடந்து, ஸ்ரீராமன் மகம்மேருவுக்கு
ச்சமானமான அந்த வில்லை, சீதை தன்னுடைய மார்பி
லேதரிக்க எடுக்கும் பூமாலையைப்போல கரத்தினாலெடு
த்தார். எடுத்து அந்தவில்லின் நுனியில் பாதத்தினுடை
ய பெருவிரலை ஊன்றிக்கொண்டதும், நாண் ஏறிட்டது
ம், ஒருகையால் வில்லைவளைத்ததும், அங்கிருந்த ஒருவ
ரும் பார்த்ததேயில்லை, கையில்வில்லை எடுத்ததும், ஒடி
ந்த சத்தமுமாத்திரமுமே கேட்டார்கள். அதைக்கேட்
ட தேவர்களெல்லாம் பிர்ம்மாண்டம் பிளந்ததென்றஎ
ங்கி பயந்து யாரிடத்திற்போவோமென்று நடுங்கினார்க
ளென்றால், பூலோகத்தார் பட்டபாடு சொல்லவேண்டி
யதென்ன ! இந்தபூமியைத் தாங்கிக்கொண்டு வேர்போ
லகிடக்கிற அனந்தன் இடிவிழுந்ததென்று ஏங்கி பயந்
து நடுநடுங்கினான். தேவர்கள் உடனேதெளிந்து புஷ்ப
மாரி பொழிந்தார்கள். மேகங்கள் பொன்மழை பொழி
ந்தது. சமுத்திரம் முத்துகளைத்தூவி ஆர்ப்பரித்தது. ம
காமுனிகளெல்லாம் ஆசிர்வாதம் செய்தார்கள். ஜனக
மகாராஜனும் நாம்செய்த புண்ணியம் இன்றைக்கு பலி
த்ததென்று சந்தோஷித்தான். பட்டணத்திலுள்ளஜெ
னங்களெல்லாம் சந்தோஷபரவசராகி புஷ்பமாலை சந்
தனம், கந்தம், முத்து, பொன், ரத்தினம், இவைமுதலி
ய யாவற்றும், ஒருவர்பேரில் ஒருவர் வீசிக்கொண்டியா
ழ், வீணைகள் வாசித்துக்கொண்டு பேரிகை, முதலான
மேளவாத்தியங்கள் முழங்க, சந்திரனைக்கண்டசமுத்திர
ம்போலப்பொங்கி மகிழ்ந்தார்கள். நாட்டியப் பெண்க
ள் மேகத்தைக்கண்ட மயில்கள்போல பரதநாட்டியம்
செய்தார்கள். ஊடலினாலே புருஷனோடுபிணங்கிக்கோ
பித்திருந்த ஸ்திரீகளெல்லாம் இந்த சந்தோஷத்தினால்
அக்கோபம்தீர்ந்து புருஷனைத் தழுவிக்கொண்டார்கள்.
ஸ்ரீராமமூர்த்தி வில்லிறுத்த சந்தோஷம் பார்க்கவந்த
தெய்வரம்பைகள் இந்தப்பட்டணத்து ஸ்திரிகளைத் தழு

விக்கொண்டார்கள். ரூபம், நடத்தை பாடல் இவைமுதலிய செய்கைகளினாலே மானிடரென்று வித்தியாசம் காணமாட்டாமல் கண்கள் இமைக்கிறதைக்கண்டுநாணி மயங்கி நின்றார்கள். தசரதன் மதலை யென்பாரும், தாமரைக்கண்ணனென்பாரும், மேககரூபனென்பாரும், காயாம்பூவண்ணனென்பாரும், மனுஷனல்ல வென்பாரும், விஷ்ணுதானென்பாரும், இவரைப்பார்க்கிறதற்கு சீதைக்கு ஆயிரங்கண்வேணுமென்பாரும், சீதையைப்பார்க்கிறதற்கு இவருக்கும் ஆயிரங்கண்வேணு மென்பாரும், தம்பியைப் பாருங்களென்பாரும், இந்த நகரம் அனேகபுண்ணியம் செய்ததென்பாரும், இவரை யிவடத்துக் கழைத்துவந்த முனிவரை நமஸ்காரஞ் செய்யுங்களென்பாரும், இப்படி பலவாறாகச்சொல்லி சந்தோஷித்திருந்தார்கள். இப்படியிருக்க ஸ்ரீராமனைக்கண்ணினாலே கண்டு விரகதாபப் பட்டுக்கொண்டிருந்த சீதையைத் தாதிகள் தாமரைத்தடாகத்தின் ஓரத்தில் சந்திரகாந்தக் கல்லினாலே சதிரிச்சுக் கட்டியிருக்கிற சீதள மண்டபத்திலே புட்பமெத்தையின்பேரில் வளர்த்தி அனேக சயித்தியோபசாரங்கள் செய்துக்கொண்டிருந்தார்கள். சீதை அந்த தாமரைத் தடாகத்தைப்பார்த்து ஆ! தடாகமே! நான்கண்ட ராஜகுமாரனுடைய சரீரம்போலத் தாமரையிலைகளையும், அவர் திருநேத்திரங்களைப்போல புஷ்பங்களையும் வைத்துக்கொண்டிருக்கிற நீ அவரை எனக்குக்காட்டி என்பிராணனை ரக்ஷிக்கப் போகாதா! கையில்வில்லும், அம்பறாத்தூணியும், மார்பில்பூணூலும் உடைய மேககரூபனை இன்னமொருதரங் காணுவேனா! பச்சைவில்லோடுவந்த மேகத்தின்கண்கள் என் உயிரைப் புசிக்கின்றதே மன்மதபாணங்களால் அடிப்பட்டு நொந்து சஞ்சலப்படுகிற ஸ்திரீகளைபயப்படாதேயென்று நேரில்வாராமலிருப்பது ஆண்பிள்ளைத்தனமா! என்று. இப்படி பலவிதமாக இராமுழுதும் பிரலாபித்து விடிந்தபின்பும் அப்படியே நினைந்து நினைந்து யாதனைப்பட்டுக்கொண்டிருக்கிற சீதைக்கு, ஸ்ரீராமன்வில்லொடித்த செய்தி சொல்லும்பொருட்டு ஓடிவந்த நீலமாலை என்கிற தாதியானவள் எதிரேநின்று சரீரஸ்மாரகம்தெரியாமல் சந்தோஷமயக்கத்தினால் நமஸ்காரங்கூடச் செய்யா[illegible]ம்செய்தாள் யாது அதிக சந்தோஷத்துடனே வந்தாப்போலிருக்கின்றது. இவ்வளவு மகிழ்ச்சிவர நடந்தசெய்தியென்ன சொல்லென்று சீதைகேட்க அவள் நமஸ்கரித்துச் சொல்லுகிறாள். அம்மா அனேக ராஜ்ஜியங்களைப் பரிபாலனம் செய்துவருகிற தசரத மகாராஜாவின் புத்திரன் மன்மதனைப்பார்க்கிலும் அதிக சுந்தரமும், நீலம்போலத் திருமேனியும், கமலம்போல நேத்திரமு முடையவர். பார்த்தால் அந்த ஸ்ரீமகாவிஷ்ணுவென்றே சொல்லவேணும். அவருக்கு ஸ்ரீராமனென்றுபேர். அவர் தம்பியோடு ஒருரிஷிபிறகே நேற்று இந்தப்பட்டணம்வந்துசேர்ந்தார். அந்த வில்லையும்பார்க்கிறதற்காகவந்ததாய் அந்த ரிஷிசொல்ல, நம்முடைய ராஜா அவ்வில்லை அழைப்பித்தார். அந்தராமன் அந்த மகாவில்லை ஒரு துளிமையை எடுக்கிறப்போல சோறுசமாயெடுத்து நாரியேற்றினார். அவருடைய பலத்துக்குப்போதாமல், சபையிலிருந்த ராஜாக்களும், தேவர்களும், நடுநடுங்க, அவ்வில்லுமுறிந்து விழுந்தது தேவர்கள் புஷ்பமாரி பொழிந்தார்களென்று சொன்னாள். அந்த வார்த்தையைச் சீதைகேட்டு ஒரு ரிஷிபிறகேவந்தவனென்றும், மேககரூபனென்றும், கமலநேத்திரனென்றும், இவ்விதமாக அடையாளம் சொல்லுகிறபடியால் நாம்கண்ட புருஷோத்தமனாகவே யிருக்கவேணுமென்று மிகவும் சந்தோஷமானாள். ஆனால் ஒருவேளை அவரல்லாமல் வேறொருத்தர் வில்லொடித்திருந்தால் பிராணனை ஒழிக்கிறதே தகுதியென்று நிச்சயம் செய்துக்கொண்டிருந்தாள். வில்முறிந்த சத்தத்தைப் பார்க்கிலும் அதிகசந்தோஷத்தை உடைத்தாயிருக்கிற விஸ்வாமித்திர மகாமுனியை ஜனகமகாராஜாபார்த்து, ஸ்வாமி! உமது திருமகனுக்குத் திருக்கலியாணம் இன்றைக்கே முடித்துக்கொள்ளுகிறதற்குத் தேவரீர் திருவுளமோ தசரதசக்கரவர்த்தியையும்வரவழைத்து முடித்துக்கொள்ளதிருவுளமோவென்று கேட்க, அவரும்வந்தால்சர்வோத்தமமென்றுசொல்லி தசரதமகாராஜாவுக்கும் தக்ஷணமே ஓலையெழுதி தூதனையனுப்பினார்கள். அவன் வாயுவேகமாயோடி அயோத்தியாபுரிசேர்ந்து, ராஜகூட்டங்கள் நெருக்கத்தினால் கிரீடத்தோடு கிரீடம் இழைகிற ஆசாரவாசலின் சந்நிதானத்தில் நின்று தசரதமகாராஜாவைக் கண்டு சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து மங்கலவார்த்தை சொல்லி ஓலையைமுன்னேவைத்தான். அந்தஓலையைவாசிக்கச்சொல்லி இராஜா ஆக்கியாபிக்க, ஓலைவாசிக்கிறகருணீகன் வாங்கிப்பிரித்துவாசித்தவயணம்யாதெனில், கௌசிகமகாமுனி ஓலை - தசரத மகாராஜாவுக்கு தெரிவிப்பது உம்மைவிட்டு நாங்கள் புறப்பட்டபின்பு ஆரணியத்திலே தாடகையானவள் பர்வதாகாரமாக நேரில்வந்தாள்—அவள் ராகவனுடைய பாணத்தினாலே மடிந்தாள் அப்பால்நான்யாகம் செய்தேன் அதையழிக்கிற நிமித்தியம், அந்ததாடகையின் பிள்ளைகளிருவரும் அனேகராக்ஷதாளுடனே வந்தார்கள். ஸ்ரீராமனுடைய பாணத்தினால் ஒருவன்மடிந்தான் மற்றொருவனோடிப்போய் சமுத்திரத்திலே மூழ்கினான். வந்தராக்ஷதாளெல்லாரும்லக்ஷ்மணன் பாணங்களினால் மடிந்தார்கள். என்னுடையயாகமுங் குறைவில்லாமல் நிறைவேறிற்று. அப்பால் கௌதமர்பத்தினியான அகலிகையின் சாபத்தை ஸ்ரீராமன் நீக்கினான். மிதிலைக்குப்போனோம் அவ்விடத்தில்சிவனுடைய வில் இருக்கிறது நீர் அறிவீரே, அந்தவில்லையெடுத்து நாரியேற்ற அதுபொறுக்காமல் முறிந்துவிழுந்தது. அதின்பேரில் ஜனகமகாராஜா சந்தோஷித்து தன்குமாரத்தியாகிய சீதையை ஸ்ரீராமனுக்குக்கொடுக்கிறதாகச் சம்மதித்திருக்கிறார். ஆதலால் இந்தஓலைகண்டதக்ஷணம் நீர்குடும்பசமேதராய் இவ்விடம் வந்துசேரவேண்டியது என்று ஓலையை வாசித்தான் அதுகேட்கவே! தசரதமகாராஜாவின் சரீரம் பூரித்து வாகுவலையங்கள்பூட்டுகள் விட்டது. மிதிலையிலே ஸ்ரீராமன்வில்லையொடித்தசத்தமா! இங்குகேட்டதென்று சரீராதியந்தம்



புளகிதராய் சந்தோஷித்து, வசிஷ்ட மகாமுனி - ராஜாக்கள்-சுமந்திரன் முதலிய மந்திரிகள் ஸ்ரீராமனுடைய தாய்மாருக்கும் இந்தசந்தோஷ வார்த்தைகளைச்சொல்லி, ஓலைகொண்டு வந்தமிதிலாபுரி தூதருக்கு ஆயிரங்கோடிதிரவியமும் வஸ்திராபரணங்களுங்கொடுத்தார்.

---

## எழுச்சி.

தசரத மகாராஜன் மிகுந்த சந்தோஷத்தோடுசேனைகளாகிய - ரத - கெஜ - துரக - பதாதிகளுடனேபட்டணத்திலுள்ள யாவரும், சக்கர வர்த்தியின் திருமகனுடைய திருக் கலியாண மஹோச்சவத்திற்குப் பிறையாணமாகும்படி, யானையின்பேரில் பேரிகை வைத்துப்பறை சாற்றும்படி ஆக்யாபித்தார். அப்படியே சர்வஜெனங்களும் கேட்க, வள்ளுவன் (பூர்வத்தில் விஷ்ணு வாமனவதாரமாகி பூதானம் வாங்கின் உடனே, திரிவிக்கிரமாவதாரமாய்திருவடியினால் பூமியும்ஆகாயமும் அளந்தபோது, சாம்பவந்தரான மகாவிருத்தர் எப்படி பூமிப்பிரதக்ஷணம் செய்தாரோ அப்படி) கனகமயமான அயோத்தியாபுரி பட்டணத்தைச் சுற்றிபேரிகையடித்தான். மகானுபாவரான ஸ்ரீராமனுக்குத் திருக்கலியாண மென்கிறசத்தம் பட்டணத்து ஜனங்கள் கேட்டு, அதிக சந்தோஷமாயெங்கும்பரவி, இனிபூமியில் இடமில்லையென்று சொல்லத் தக்கதாய் - யுகாந்தகாலச் சண்டமாருதம்போல அடிக்க, சமுத்திரத்திலுள்ள ஜலமெல்லாம் பூமியிலேபரந்து பொங்கிவருகிறது போல புரவித் திரள்களும் - யானைத்திரள்களும் - இரதத்திரள்களும் - பதாதித்திரள்களும் வெகு விசித்திரமானகொடிகளோடுகூடியகுடைகளும் நெருங்கிபுறப்பட்டன. இவர்களுடைய திருமார்பிலணிந்தசந்தனம் - கதம்பம்-கஸ்தூரி, முதலிய திரவியங்கள் வியர்வையினால் கரைந்து, இந்த சேனைகள் நடக்கிற வழியில் அனேகளாகவிழுந்து யிருந்தன, உயர்த்தியில் தொங்குகிற வெள்ளைக்கொடிகளானது ஆகாயம் தொளுரித்து தொங்குகிறது போலவும் - பின்னும் மேகங்கள். யானைசேனையைச் சமுத்திர மென்றெண்ணி ஜலபானம் செய்கிறதற்கு யிறங்கினதுபோலவுமிருந்தன. வில்லு - கத்தி - கட்டி முதலிய ஆயுதங்களோடு நடக்கிறவர்களும், யானை குதிரை இரதங்களின்பேரில் ஸ்திரீகள் சமேதராய் போகிறவர்களும் முத்துப்பல்லக்குகளின்பேரில்சிலஸ்திரீகள் ஏறிக்கொண்டு சமீபத்தில் யிருதையானந்தமாக புருஷாள் வாகனுநடராய்வரப் போகிறவர்களும், இப்படி பல பல அலங்காரத்தோடு நடக்கிற போது, வழியில் தாமரைத் தடாகங்களில் வாசம் செய்கிற அன்னங்கள் இவர்களைக்கண்டு இவர்கள் நடைக்கு நாம் தோத்தோமென்று ஓடுகிறபாவனைபோல சத்தித்துக்கொண்டு ஆகாயமார்க்கமாயெழும்பிப்போயிற்று, யானைகளுடைய கர்ன - கபோல - பீஜ - மதங்கள் ஒழுகி ஆறுகளாக ஓடி ஏரிமடைகளை யெல்லாமுடைத்து ஏகப்பிரவாக மாயிற்று. பாதசாரியாய்போகிற ஒரு நாயகி அந்த யானைமதச் சேற்றுநீரைப் பார்த்துப் பயந்து நடக்கமாட்டாமல் தியங்க. அவள் நாயகன் கைலாகு கொடுக்க நடந்தாள். ஒரு நாயகி நாயகனைப் பார்த்துச் சிந்தை மகிழ்வோடு தடாகத்திலிருக்கிற புஷ்பங்களைகொய்துத் தாச் சொல்லி நமஸ்காரஞ்செய்தாள். ஒரு நாயகிதான் ஏறிவருங் குதிரை நடையினால் நழுவி விழுகிறபோது அவள் தனங்கள் தன்மார்பில் அழுந்தும்படியாய் அவள் நாயகன் தழுவிப்பிடித்து, கண்களிலே ஆனந்த ஜலம்பெருக பூமியில் விழாமல் தாங்கிக்கொண்டிருந்தான், மதயானைகள் அஷ்டகெஜங்களையும் திக்கையிலே தழுவிக்கொண்டு நடந்தது. திருபாதியான தசரதச்சக்கரவர்த்தி சிங்காசனம் விட்டு இன்னம் எழுந்திருக்கவேயில்லை. ஆனால் சேனாசமுத்திரத்தினுடைய துளியானது மிதிலாபுரி பட்டணத்தின் மதிலை எட்டிற்று. வண்டிகளில் சிலஸ்திரீகள் ஏறிக்கொண்டுபோகிறது தாமரைத்தடாகம் நடக்கிறது போலவும். குதிரைகளின் பேரிலேறிப்போகிற ஸ்திரீகள் சமுத்திர அலைகளின் பேரிலேறிவருகிற அன்னப்பக்ஷிகள்போலவும், பெண் யானைகளின்பேரில் ஏறிக்கொண்டு போகிற ஸ்திரீகள் மேகங்களில் மின்னல்கள் பிரகாசிக்கின்றனபோலவுமிருந்தன. பேரிகைமத்தளம், டம்மாரம், முதலானவைகள் ஆர்ப்பரிக்கிறது. சப்த மேகங்களுங் கூடி முழங்குகிறது போலவும். திருச் சின்னம் - எக்காளம் - தவளச்சங்க முதலியவைகள் சப்தசமுத்திரம் கோஷிக்கிறது போலவும். சத்திக்க, ரிஷபவாகனரூடரான சிவனுடைய நேத்திரத்தினால் எரிந்து போகாத மன்மதனுடைய ரூபம் போன்ற இராஜகுமாரர்களும் மந்திரிகளும் வாகனரூடராகிப் பொற்குடைகள் பிரகாசிக்க நடந்தார்கள். மிதிலாபுரிபட்டணத்தில் ஸ்ரீராமன்வில்லிறுத்தசமாசாரம் பேசிக்கொண்டு போகிற, புருஷகூட்டங்களைக்கண்டு, அந்தசுபவார்த்தைகளை விசிதமாய் கேட்கத்துடர்ந்து நடக்கும் ஸ்திரீகளினுடைய திருவாபரணங்கள்கூல தலைமயிர்கள் அவிழ்ந்து சரிய வஸ்திரஞ்சோர இவைகளைப்பாராமல் அன்புடனே துரிதமாய் நடக்கிறவர்களும் கும்பல் கும்பலாய்போகிற ஸ்திரீகளினுடைய பாதச்சிலம்பு தண்டை சதங்கை சத்திக்கிற சத்தங்களும், அயிராவதத்துக்குச் சமானமான யானைதன்னை[illegible]றதும் ரதம் வண்டிகளினுடைய சத்தங்[illegible] கடகடென்று சத்திக்கிறதும், இவ்விதமாகிய பலவித சத்தங்களினால் ஒருவர் பேசுகிறது ஒருவருக்குக் கேளாததினால் ஊமைகள் போலப் பேசாமல் நடந்தார்கள், ஒருவன் தன் நாயகியினுடைய தனத்தின் பேரில் வைத்த கண்ணையும் மனதையும் திருப்பாமல் பார்த்துக்கொண்டேபோய் தனக்கெதிரே நிற்கின்ற மதயானையின்பின்வாயில் முட்டிக்கொண்டான் சதாநிகளுக்கு ஒரு சிங்கபோலயிருக்கிற ஒருபுருஷன் தன்கையில் பிரகாசித்துக் கொண்டிருக்கிற வேலாயுதத்தைப்பார்த்து, தன் நாயகியினுடைய பார்வையவ்வளவு கூர்மையிதற்கில்லையென்றான். ஓரொருமதயானை அங்குசங்களுக் கடங்காமல் உண்டைவில்லினாலும் கட்டியினாலும் கவண்கல்லினாலும் எறிந்து அதட்டிக்கொண்டு போகிறவர்க

ளும்யானைகள் பர்வதங்கள்போல மதாங்காரத்தினாலோடிவருகிறபோது, குதிரையை விட்டிறங்கிவழியிலே நிற்கிற ஸ்திரீகள் வஸ்திரத்தையும் ஒருகையால் தாங்கிக்கொண்டு யானைவந்ததென்று பயந்தோடினார்கள். ஸ்திரீகளினுடையகண்களென்கிற வேலுகள் புருஷாளுடைய மனங்களில் தைத்துக்கொண்டு அதனால் உயிர் ஊசலாடிக்கொண்டு போகிறதினாலே அந்தசேனாசமுத்திர மானது யுத்தகளம்போல இருந்தது. குடைகளும் கொடிகளும் மிகவும் நெருங்கி யிருக்கிற மகரதோரணங்கள் ஆலவட்டங்கள்முதலானதுகள் ஆகாயமார்க்கமெல்லாம் நெருங்கி நிறைந்து யிருக்கிறபடியினாலே, இருண்டராத்திரிபோலவும், ராஜாக்களுடைய கிரீடம்வாகுவலேயமுதலான ஆபரணங்களும் ஆயுதப் பிரகாசங்களுஞ்சூரியனைப்போல தகதகென்று பிரகாசிக்கிற படியினாலே, பகல் போலவும் இப்படிக்கு க்ஷணத்திற்கு க்ஷணம்இரவும் பகலும் மாறிமாறியிருந்தன இந்தவிதமாகயானைகுதிரை தேர் பதாதிகளினுடைய காலிலெழும்புகிற தூள்கள், மேகத்துவாரங்களைப்போயடைத்தது. இவ்வளவு சம்பிரமத்தோடு சேனாசமுத்திரம் நடக்க, தசரத மகாராஜாவின் அரண்மனையிலிருந்து ஸ்திரீ கூட்டங்கள் நவரத்தினாலங்கிருத வாகனங்களின்மீது புறப்பட்டார்கள். தாமரைக்கமலங்களிலிருக்கிற அன்னங்கள்போல நவரத்தினகசிதமான அனேகசிவிகைகளில், வராநின்ற ராஜஸ்திரீகள் தோழிமார் சூழ்ந்துவர, யாழ்வீணை தண்ணுமை பொருந்திய பாடல்கள் முழங்க, மிகுந்தபிரதாபத்தை யுடைய கைகேசி கோடிசூரியப்பிரகாசமானசிவிகையின்பேரில் புறப்பட்டாள். அனேக சேனாச்சமுத்திரம்சூழ, தெய்வரம்பை களுக்குச் சமானமான தோழிமார்கள் அருகிலே இரண்டாயிரங்குதிரையின் பேரில் சூழ்ந்துவர சுவர்ணரத்தினத்தினாலலங்கரித்த பல்லக்கில் சுமித்திரைநாயகி அனேகஸ்திரீகள் கீதங்கள்பாடிவர ஆலவட்டங்குடைமுதலானது ஆகாயத்தில் நெருங்கிவரப் புறப்பட்டாள் மூவாயிரத்தன்னூறுஸ்திரீகள் தெய்வகன்னிகைகள், போலே சூழ்ந்துவர, தேவர்கள், ரிஷிகள்முதலானபேர் ஸ்துதிக்க, சுவர்ணரதத்தின்பேரில் ஸ்ரீரா[illegible]னைப்பெற்றகௌசலை நாயகிப்புறப்பட்டாள், பவழத்தினாலும் முழுமரகதத்தினாலும் முத்தினாலும்-அபரஞ்சிப்பொன்னாலும் - புதுக்கின இரதங்களின்பேரில் மகாராஜாவினுடைய அந்தப்புறத்து ஸ்திரீகள் அறுபதினாயிரம்பேர் போயினார்கள். இந்த ஸ்திரீகூட்டத்தைச் சூழ்ந்து அனேக சுத்தவீரர்கள் கையில்பிரம்புப் பிடித்துக்கொண்டு, என்னேரமும் நேத்திரங்களில் அக்கினிப்பொறிகள் இடைவிடாமல் சொலிக்க நிலையங்கியோடு குதிரைகளின் பேரிலும், பாதசாரியாயும் நெருங்கி அதிக எச்சரிக்கையோடு காத்துக் கொண்டு போனார்கள். அனேகஆணிமுத்துக்களினாலும்,சுவர்ணத்தினாலும் செய்த கூடுகளில் நானாவித பக்ஷிகளும் வெள்சாமரை-பொற்பாவை-பந்து - அம்மான்காய் - முதலியவைகளும் அனேகர் எடுத்துக்கொண்டு இனிப்பூமியில் ஸ்திரீகளில்லை என்னும்படி நெருங்கி நடந்தார்கள் வசிஷ்டமகாமுனியும் மிகுந்த சந்தோஷத்தோடு யாகாதிகிரியைகள் செய்யத்தக்க பிராமணோத்தமரும், ரிஷிகளும், அனேகம்பேர்சூழ, தாவள்ளியமான முத்துச்சிவிகையின்பேரி லேறிக்கொண்டு (பிர்ம்மாவைப்போல) எழுந்தருளினர், யானை - குதிரை - தேர் - பதாதிகள் முதலிய சேனாசமுத்திரம்சூழ, அனேகம் தோழிமாருடனே விஜயலக்ஷ்மி பொருந்தியிருக்கும் திருமார்பையுடைய பரத சத்துருக்க ரிருவரும் கையில் வில்லுடனே ரத்தினகசிதமான ரதத்தில் முன் விஸ்வாமித்திரர் பிறகேநடந்த இராமலக்ஷ்மணரைப்போல வசிஷ்டர்பிறகே நடந்தார்கள். தசரதச்சக்கிரவர்த்தியும் நித்தியநியமங்கள் முடித்துக்கொண்டு ஸ்ரீரங்கநாதரைச் சேவித்துக்கொண்டு, அனேகம் பசுவும்-ரத்தினமும்-பொன்னும் பூமிகளும்-மிகுதியாகப் பிராமணர்களுக்குத் தானஞ்செய்து நல்லசுபமுகூர்த்தத்தில்ரதமேறினார். என்னாயிரம்பிராமணர் ரத்னகசிதமான பூரணகலசங்களேந்திக்கொண்டுவேதகோஷ்டியுடன் எதிரேவந்தார்கள். ஒருகோடி சுமங்கலிகள் பல்லாண்டுபாடிக்கொண்டு எதிரேவந்தார்கள். அனேகராஜகூட்டங்கள் வந்துநெருங்கிற்று. ராஜா என்னைக்கண்டாரென்கிறபேரும், காணவில்லையென்கிறபேரும்காதுகுண்டலம்விழுந்ததென்கிறபேரும், நெருக்கமிகுதியானபடியினாலே சமீபத்திலபோகிறதுஅருமையென்கிறபேரும்இப்படியாகத்தேசதேசத்துராஜாக்களும்நெருங்கிவர, ராஜாபுறப்பட்டாரோஇல்லையோவென்றும் தவளச்சங்கின் தொனி கேட்டபடியால் புறப்பட்டாரென்றும் சொல்லிக்கொண்டு நெருங்கி மருங்கில் மயங்கித் திகைத்துச் சூழ்ந்துவர, அனேகம் ஸ்திரீகள் சுவர்ணரதத்திலேயும், குதிரையின்பேரிலேயும், கூட்டங் கூட்டமாய்ச் சூழ்ந்துவர (வேறொரு சூரியன்புறப்பட்டதுபோல) இரத்தின கசிதமான கிரீடம் - வாகுவலயம்-பதக்க-முதலான ஆபரணங்கள் பிரகாசிக்க. சுவர்ணமயமான ரதத்தின்பேரிலேறி நடந்தார். இப்படிப் புறப்பட்ட சேனாசமுத்திரத்தினுடைய பாததூள் ஆகாயமெல்லாம்பாவி மூடிக்கொண்டு ஒருவர்முகம் ஒருவருக்குத் தெரியாமல் எங்கும் நிறைந்தது. சமுத்திரத்தில் சில தூளிகள் விழுந்து அனேகவிடங்களில் திட்டுதிட்டாகத் துத்துப்போட்டது. பொன்னுலகமான தேவலோகத்திலும் இத்தூள் படிந்தபடியால் மண்ணுலகமாயிற்று சங்கம் - பேரிகை - கொம்பு - தாளம்-எக்காளம்-மத்தளம்-முதலான பலபலவாத்தியங்கள் முழங்குகிற சத்தங்கள் மேககர்ஜனையை எவ்வளவென்று ஆரத்திவிட, கொடிகள் - குடைகள் - ஆலவட்டங்கள் - மயில்பிஞ்சங்கள் - மகரதோரண - முதலானதுகள் வெய்யிலை யோட்டிவிட,இராஜாவினுடையதனிக்குடையைக்கண்டு பூரணச்சந்திரன் வெட்கி யோடிப்போக, தேவர்கள்பார்த்து பிர்ம்மிக்கநடந்தார். ஏககாலத்தில் இவ்வளவு சுமையை பூமிதேவி பொறுக்கமாட்டாமல் சற்று முதுகை நெளித்தாள். இவ்விதமாக இரண்டு யோசனை தூரம் போனார்கள்.



## சந்திரசயிலத்தின் காட்சி.

அவ்விடத்தில் சந்திரசயிலமென்கிற ஒருபெரிய பர்வத மிருந்தது. அத்தைக்கண்டு, அதின்சாரலில் இறங்கினார்கள். சந்தனம் - தேவதாரி - அகில் - தேக்கு - ஆச்சா - முதலிய பலவிருக்ஷங்களில் மேகங்களைப் பிடித்துக் கட்டுகிறதுபோல யானைகளைக் கட்டினார்கள். ஒவ்வொரு மதயானை அந்தவிருக்ஷங்களை வேரோடு அலைத்துப்பிடுங்கிக்கொண்டு பர்வதம்போலநடந்ததுஒவ்வொருயானை பாகனென்னமாய் மறுக்காலும் மதிபடாமல் மந்திரி ஆலோசனையைக் கேளாத இராஜனைப்போல கர்வித்து முகம்விட்டவாக்கே நடந்தது. சகல கல்விகளும் கற்றுத்தேறின பெரியோர்களிடத்தில் ஒரு மூடன் சேர்வானாகில் அவனை அவர்கள் எவ்வளவு பரிசுத்தனாச்செய்வார்களோ அதுபோலவே பொற்றேரினுடைய சக்கரம் கருங்கல் பாறையின் பேரிலோட, அப்பாறை பொன்னிறமாயிற்று. குதிரைப்பந்திகள் பூமிதேவிக்கு வர்ணமாலைபோல வரிசை வரிசையாய்க் கட்டினார்கள். சிலகுதிரைகள் பூமியில் புரண்டு எழுந்திருந்து, நல்லவர்கள் பொல்லாதவனுடைய சிநேகத்தை விடுகிறது போல உடம்பை உதறிக்கொண்டு போய்விட்டது. யானை ஆற்றில்குளித்துக் கரையிற்புரண்டு எழுந்திருந்துப் போவதைப்பார்த்தால் அரி - அரனைப்போலவு மிருந்தது. அனேககூடாரங்கள் - புஷ்பபந்தல்கள் - கடைவீதிகள் - அங்கங்கே நிறைந்துயிருந்தன. பல்லக்கிலேறிவந்த ஸ்திரீகள் தாமரைக் கமலத்தைவிட்டுத் திருமாளிகையில் பிரவேசிக்கும் லக்ஷ்மியைப்போல கூடாரங்களில் பிரவேசித்தார்கள். மேகத்திலிருக்கிற மின்னல்கள் பூமியிலிறங்கிறதுபோல அனேகம் ஸ்திரீகள் யானையைவிட் டிறங்கினார்கள், சமுத்திரத்தின் அலைகள்போல அங்கங்கே திரைகள்போட்டார்கள், அங்கங்கே சமுத்திரம்போல் நிறைந்திருக்கிற கடைவீதிகளில் யாவற்றும் நிறைத்துவைத்தார்கள். பர்வதங்களிலிருந்து சிங்கங்களிறங்கிறதுபோல புருஷாள் வாகனங்களைவிட்டு இறங்கினார்கள். ஸ்திரீகளுடைய சரீரங்களிற் படிந்திருக்கிறத் தூள்களைப் புருஷாள் நல்ல தாவள்ளியமான வஸ்திரங்களினாலே துடைக்கச்சித்திரங்களைப்புதுக்கினதுபோல அந்தஸ்திரீகள் பிரகாசித்தார்கள். சமுத்திரத்தினிடையிலே சந்திரோதயமானதுபோல ஸ்திரீகளுடைய திருமுகங்கள் அந்தந்தக் கூடாரங்களில் பிரகாசித்தது. அம்மானாடுகிற ஸ்திரீகளுடைய கண்கள் கூடாரமென்கிற சமுத்திர அலையிலே கயல்மீன்கள் குதிக்கிறதுபோல யிருந்தது. மடப்பளிக ளுடையப் புகைகள் மேகங்கள்வரைக்கும் தாவியிருந்தன. இப்படியாக அனேக சம்பிரமத்துடன் இறங்கின இராஜகுமாரர்களும் அவரவர்கள் ஸ்திரீகளும் கூடிக்கொண்டு அந்த சந்திரசைலமென்கிற பர்வதத்தின் பேரிலேறி அங்கேயிருக்கின்ற சிங்கார அலங்காரங்களைப் பார்த்தார்கள். அந்தவரையின்மீது யிருக்கிற யானைகள் தேவலோகத்து கர்பகவிருக்ஷத்தைத் துதிக்கையினாலெட்டி வளைத்துப் பிடிக்கக் கழைகளையொடித்துப் பெண்யானைக்குக் கொடுக்கிறதும் வண்டுகள் நக்ஷத்திரங்களைப் புன்னைப் புஷ்பமென்றெண்ணி மொய்த்துக்கொள்ளுகிறதும், சூரவர்கள் ஆகாயகங்கையை பாய்ச்சல்செய்து தினைமுதலான பலதானியங்களைப் பயிரிடுகிறதும், சந்திரனென்கிற கண்ணாடியில் ரம்பைகள் அழகு பார்க்கிறதுபோல குரத்திகள் இந்தப்புறத்தில் அழகுபார்க்கிறதும், யானைக்குட்டியும், பன்றிக்குட்டியும், குரத்திகளுடைய குழந்தைகளும், இளம்பிறையானச் சந்திரனும், ஒன்றாய்த்தவழ்ந்து விளையாடுகிறதும், விஞ்சைய ஸ்திரீகள் பாடுகிறதும், பொன்னூசல் போட்டு தேவரம்பைக ளாடுகிறதும், தேவகன்னிகைகள் புருஷர்மீது கோபமாய்க் கழட்டியெறிந்துபோட்ட ஆபரணத்தைப்பெண்குரங்குகள் எடுத்துப் பூட்டிக்கொள்ள, அதைப்பார்த்து மந்திகள் சந்தோஷப்படுகிறதும், அந்தபர்வதத்தி லுண்டாகிய பலவித சம்பிரமங்களைப் பார்த்துக்கொண்டு ஸ்திரீகளும் புருஷாளும் திரிகிறபோது, * இவர்களுடைய மார்பினும், தலையிலும், யிருக்கிற புஷ்பமாலைகளில் பொருந்திய வண்டுகளும்கூடி புணர்ச்சிசெய்யக்கண்டு சந்தோஷித்தும், தண்ணீர்த் தடாகங்களைப் பளிங்குப்பாறையென்றெண்ணி ஸ்திரீகள் அதிலேநடக்க அதில் விழுந்து கட்டியிருக்கிற வஸ்திரங்கள் நனைய அதைக்கண்டு புருஷாள் கைகொட்டி நகைத்து விளையாடவும், பளிங்குப்பாறையைத் தண்ணீர்த்தடாகமென்றெண்ணித் தொங்கக் கட்டியிருக்கிற வஸ்திரங்களைத்தூக்கி யொதுக்கிக்கொண்டு யிறங்க, அதைக்கண்டுநகைத்துவிளையாடுகிறதும், மலைசத்திக்கிறதைக் கேட்டுத் திரும்பத்திரும்ப அதினுடனே கூவிக்கொண்டும், குயில்களோடு கூடக்கூவியும், இப்படி பலபலவிதங்களாக விளையாடிக்கொண் டிருக்கிற ஸ்திரீபுருஷாள் அந்தப் பர்வதத்திலே விஞ்சையஸ்திரீகளும். புருஷாளும், படுத்திருந்த புஷ்பமெத்தைகளும், இந்திரகோபம்போலச் செவந்திருக்கிறத் தம்பலங்களும், பொன்னரி மாலைகளும் அவர்கள் அந்த மலைத்தேன் சாப்பிடுகிற பொன் வட்டில்கள் தாசிகள் இனியிவனிடத்தில் ஒன்றுமில்லையென்று எண்ணி கைவிட்டுவிட்ட புருஷாளைப்போலப் பசையற்று அங்கங்கேவிடக்கிறதும், வேடிக்கையாகப் பார்த்துக்கொண்டு யிருக்கிறபோது, காந்தள் புஷ்பத்தைப் பார்த்து பாம்பென்று பயப்படுகிற ஸ்திரீகளும், வச்சிரப்பாறையில் புஷ்பத்தினுடைய நிழல் தெரிகிறதைப்பார்த்து விதைப்பயிர்த்துக்கொடுமென்று தங்கள் நாயகனைத் தொழுகிறவர்களும், கனைநீர், கதம்பம், கஸ்தூரி, மஞ்சள், குங்குமம், சந்தனமுதலிய இவைகளினாலே, செவந்து குழம்புமபடியாய் ஸ்நானம் செய்கிற ஸ்திரீகளும், இப்படி அனேகம்யாழிகை விளையாடிக்கொண்டிருக்கும் காலையில் சூரியன் அஸ்தகிரியுற்றது. எப்படிக் கிருந்ததெனில், அந்த சூரியனென்கிற சிங்கம் அந்தப் பர்வதமென்கிற யானையின்பேரில் பாய, அந்தயானையினுடைய சரீரத்திலிருந்துப் பெருகின ரத்தம்போல வானமுழுதும் செவந்தது. அப்போது தசரதமகாராஜாவினுடைய சேனாசமுத்திரத்தில் அனேக செந்தாமரைப்புஷ்பம் புஷ்பித்த

துபோல அநேக ரத்னமயமாகிய தீபங்கள் பிரகாசித்தன. அநேகநக்ஷத்திரங்களுடனே ஆகாயத்தில் சந்திரனும் பிரகாசித்தான். ஆகாயத்தில் ஒரு சந்திரன் பிரகாசிக்க இந்தச்சேனை சமுத்திரத்தில் அநேகம் ஸ்திரீகளினுடைய முகமாகிய சந்திரன் பிரகாசித்தது. பேரிகை மத்தளம் - தாளம் - வீணைகள் - முதலான அநேகம், வீதிக்கு வீதி ஆடல்பாடல்களு மிகுந்து தெய்வலோகத்தைப் பார்க்கிலும் அதிகமாகவேயிருந்தன. ஓர்புறத்திலே மதயானைகளை அதட்டிக் கட்டுகிறவர்களுடைய சத்தங்களும், மதுபானஞ்செய்து குளறுகிறவர்களுடைய சத்தங்களும், நடனஞ்செய்கிற பெண்களுடைய மேகலாபரணச் சத்தங்களும், இவைமுதலிய அநேக சத்தங்களெங்கும் நிறைந்து யிருந்தன. ஓர்புறத்தில் பலநூல்களைக் கற்றுத் வசனிக்கிறவர்களுடைய தொனியும், ஸ்திரீகளுடனே கூடி சம்பிரமமாகப் பேசிக்கொண் டிருக்கிறவர்களுடைய தொனியும், யாழ் - வீணைவாசிப்பினுடைய சத்தங்களும், இவ்வாறாக இராமுழுதும் அநேக சம்பிரமாநந்தத்துடனே கழித்தார்கள். பின்பு சூரியன், நக்ஷத்திரங்களை பலகளாகவும், ராத்திரியைத் தேகமாகவும், உடைய இரணியாசுரனை, உதயகிரி யென்கிற பொன்தூணி லுதித்துக் கிரணமென்கிற கைகளை நீட்டிக்கொண்டு, கோபிக்கும் உக்கிர நரசிங்க மூர்த்தியைப்போலப் புறப்பட்டார். அப்போது தசரதமகாராஜன் தனது நித்தியநியமங்களை முடித்துத் தேரின்பேரி லேறிக் கொண்டு சேனை முத்திரம் சூழ்ந்து வரச் சோணமா நதியைப் போய்ச் சேர்ந்தார். காலமும் மத்தியானமாயிற்று.

## பூக்கொய்தல்.

அவ்விடத்தில் ஸ்திரீகளும் புருஷாளும் கூடிக்கூடிக்கொண்டு சோலைகளில் புஷ்பங்கள் பறித்துவிளையாடும்படி பிரவேசித்தார்கள் அந்த சோலையிலிருந்த மயில்களெல்லாம் இந்த ஸ்திரீகளின் புருவமென்கிற வில்லைவளைத்துக் கண்ணென்கிற அம்புகளினால் எய்வார்களென்று பயந்துப் போய்விட்டது அன்னங்கள்இவர்கள் நடையைக்கண்டு வெட்கிப்போய் விட்டது. குயில்கள் இவர்களுடைய சாரீரத்தைக்கேட்டு சங்கூசப் பட்டுக்கல்விமானுக்குமுன் மூடன் வாயடங்கி யிருக்கிறது போலப் பேசாமல் அடங்கி யிருந்தன. ஸ்திரீகள் புஷ்பித்திருக்கிற கிளைகளை வளைக்க, அதுகள் வளைந்து யிவர்கள் பாதத்தில் புஷ்பங்களைச் சொரிந்து வணங்கவும், மரங்கள் தானே அவர்கள்கையில் அகப்பட்டுக் கொண்டு வணங்கி உபசாரம் செய்யுமானால் ஸ்திரீகளுக்கு வணங்காதபுருஷாளுமுண்டோ! ஐம்புலனோடு கூடிய புருஷாள் ஸ்திரீகள்கையி லகப்பட்டுக் கொண்டு, அவர்களுக்கு உபசாரம்செய்துக்கொண்டு, அவர்கள் மனதின்படி நடந்துக்கொள்ளுகிறவர்களா யிருந்தால், ஓரறிவோடுகூடியமரம்வளைந்துக்கொடுக்குமென்பதற்குச் சந்தேகமுண்டா அவர்களுடைய முகங்களையும்-கண்களையும் - தாமரைப் புஷ்பங்களும்-நீலோற்பல புஷ்பங்களுமாக எண்ணி, வண்டுகளானது புதியபுஷ்பங்கள் மலர்ந்ததென்று களித்து பறந்துவந்து சூழ்ந்துசுழல்வதை, ஓட்டினாலும்போகாமல் புதுமைபார்க்கிறவர்கள்போல மிகவும் நெருங்கி மொய்த்துக்கொண்டே யிருந்தன. சிலபுஷ்பமரங்கள்புருஷாளுடனே பிணங்கிக் கோபமா யிருக்கிற ஸ்திரீகள் போல வளைக்கவளைக்கவளையாம லிருந்தன. சிலமரங்கள் சந்தோஷமா யிருக்கிற ஸ்திரீகள்போல வளைந்து புஷ்பங்களைக்கொடுத்தன. மரத்திலிருந்த புஷ்பமெல்லாம்பறித்துக்கொள்ள, அந்தமரமானது முன்போல அழகாயிராமல் வெறுமரமா யிருந்ததைக்கண்டு, தன்புருஷன்உன்னைக்கண்டால் இகழ்ந்துவிடுவானே யென்றுசொல்லி ஸ்திரீகள் தங்களுடைய ஆபரணங்களை அதற்குப்பூட்டி அழகு பார்த்தார்கள். பளிங்குப் பாறையில் தன்னிழல் புஷ்பத்துடன் காண அதைப்பார்த்துயிந்தப்பெண் தன்நாயகனுக்கு அந்தரங்க மானவளென்று கோவித்துக்கொண்டாள் ஒருஸ்திரீ தன்புருஷனுடனேபிணங்கிக் கோபமாய்ப் பேசாமலிருக்கிறவள், புஷ்பந்தன்கைக்கு எட்டாத படியால், அவனுக்குக்கேட்கும் படியாய் ஒரு குயிலைப்பார்த்து எனக்கந்த புஷ்பத்தைப் பறித்துக் கொடுவென்று கும்பிட்டுச் சொன்னாள். ஒருபுருஷன் செவ்விள நீரைப்பார்த்து இது ஸ்திரீகள் தநத்துக்குச்சமானமா யிருக்கின்றதென்றுசொன்னான். அதுக்கவனுடைய நாயகிகோபித்துக்கொண்டு எந்தஸ்திரீ தனத்துக்குச்சரியாகயிருக்கின்றது சொல்லும் சொல்லுமென்று மகாகோரமாய்ச் சொன்னாள். ஒருபுருஷனுடையநாயகி அவனுக்குப்பின்புறமாகவந்துகண்ணைமூடினாள் அவன்யாரென் கண்ணைமூடினதென்று கேட்கவே ! நெருப்புப்போலச்சீறிக்கோபித்துக்கொண்டாள். ஒருபுருஷன் மறதியாய்ப் பின்னொருத்திப் பேரைச்சொல்லி யழைத்து புஷ்பம் கொடுத்தான், அதைக்கோபத்துடன்வாங்கி முகந்தாள். அந்தப்புஷ்பம் கருகிப்போயிற்று. ஒருவன் புஷ்பம்பறித்துத்தனது இரண்டுஸ்திரீகளுக்கும் சரியாய் பங்கிட்டுக்கொடுக்க, ஒருத்திப்புஷ்பத்தை இறைத்துப் போட்டுக் கண்கள் செவந்தாள். ஒருத்தித் தன்னைப்போல நடையும்சாயலுமாயிருக்கிற அன்னப்பக்ஷியைக்கண்டு எனக்குத் தோழியென் றுறவுகொண்டாடி, அதுவஸ்திரமில்லாம லிருப்பதைக்கண்டு, கண்டவர்களிகழ்செய்வார்களே யென்று தன்வஸ்திரங் கொடுக்கயெத்தனமானாள். இந்தப்படியாக அந்தச்சிங்காரச் சோலையிலே அநேகநாழிகைவிளையாடிக்கொண்டிருந்து அப்பால் தாமரைத்தடாகத்தி லிறங்கிவிளையாட உத்தேசித்து ஒரு பெரியதடாகத்திலே (தேவர்களும் தேவரம்பைகளும் பூர்வத்தில் தூறுவாச மகாரிஷி கோபத்தினாலே சமுத்திரத்தி லெந்தப்படி யிறங்கினார்களோ அந்தப்படி) இறங்கினார்கள்.

## நீர்விளையாடல்.

ஸ்திரீகளும் புருஷாளும் அநேகம்பேர் அத்தடாகத்திலிறங்கி ஒருவர்பேரி லொருவர் தண்ணீரை வாரியிறைத்துக் கொண்டு விளையாடுகிற போது அதிலே ஒரு



தாமரைக்கொடி காலில் பிறிபடவே ஒருத்திமிகவும் பயந்து புருஷனைத்தழுவிக்கொண்டாள், ஓர்ஸ்திரீவாளைமீன் துள்ளுகிறதைக்கண்டு பயப்பட்டு புருஷன்தோளைப்பிடித்துக்கொண்டு லக்ஷுமியைப்போலப் பிரகாசித்தாள். ஓர்ஸ்திரீதன்னுடைய தநத்தில் பூசியிருந்தக்கலவைச் சந்தனங்கரைந்து, நிகக்குறிகளில் ப[illegible]துயிருக்கிறசந்தனமாத்திரங் கரைந்துபோகாமல் பொற்கலசத்தில்நூல் சுத்தியிருக்கிறது போலப் பிரகா[illegible]க்கண்டு புருஷன் பேரில் மிகுதியும் கோபமானாள். ஒருத்திக்கு காமாக்கினியால் [illegible] வென்னீர்போல சுடுகையாயிருந்தது ஒருத்தி[illegible]கத்தில் புருஷன் தண்ணீரையிறைத்தான், அதுசகண்டு பொறுமல் அவள்கண்களில் ஜலம்பெருகுவதால் தேகமாதியந்தம் நிறைந்தது. ஒவ்வொருஸ்திரீதன்வாயில்நீரைக்கொப்பளித்துத் தன்தன்புருஷன்பேரில் உமிழ்ந்துக்கொண்டிருக்கிறதும், ஒவ்வொருஸ்திரீ கயல்மீன்களைக்கண்டு தடாகத்துக்கெல்லாங்கண்களுண்டாயிருக்குமோவென்று புருஷனைக்கேட்கவும் தண்ணீரிற் றெரிகிற தன்னிழலைக்கண்டு நான்நகைத்தால் இவளுங்கூடநகைக்கிறாள் இவள் நமக்குத் தோழியென் றெண்ணி சந்தோஷிக்கவும், தங்கள்மேகலாபரணம் விழுந்துகாலில் சுத்திக்கொள்ளப் பாம்புசுத்திக்கொண்ட தென்று பயந்து கண்களைக்கையினால் மூடிக்கொண்டு வாய்குழறிக்கூவுகிறதும். இப்படியாக அநேகம்பேர் விளையாடுகிறபோது ஸ்திரீகளுடைய முலைகளும் புருஷாளுடைய புஜங்களும் அநேகம்நெருங்கி நிறைந்த படியினாலே தடாகத்திலிருந்த ஜலம்மிகுந்து கரைமேலேவழிந்து பெருகிற்று ஸ்திரீகளினுடைய செவந்த அதரங்களெல்லாம் வெளுக்க, கண்கள்செவக்க வஸ்திரங்கள் விழுந்துபோகத் தண்ணீரில் விளையாடின படியினால் அந்ததடாகமும் புருஷனுக்குச்சமானமாக யிருந்தது, (நல்லவர்களுடனேசேர்ந்த மூடனும் ஞானவானாகிறதுபோல) ஸ்திரீகளினுடைய கதம்பம் - கஸ்தூரி - மஞ்சள் - குங்குமம் - சந்தனம் - அத்தர் - புனுகு - ஜவ்வாது - பன்னீர் - முதலியகலவையின் பரிமளங்களினால் அத்தடாகத்தி லிருக்கின்ற கயல் மீன்களும் பரிமளித்தன. இப்படிக்கு விளையாடிய இவர்களெல்லாம் குச்சுப்பிடித்த ரத்தினங்கள்போலப் பிரகாசித்தார்கள். இவர்கள் கரையேறிவந்து வெவ்வேறுவஸ்திரங்கள் தரித்துக்கொண்டு ஆபரணங்களைப்பூண்டுக் கொண்டார்கள். இவர்கள் அதிலே விளையாடிக்கொண்டிருந்து வெளியேவந்து விட்டது. அதிலிருந்ததாமரைப் புஷ்பங்களெல்லாம்குடிபோய் விட்டது போலத் தடாகத்தின் அழகு இழந்து போயிற்று. இவ்விதநீர்விளையாடலைப் பார்த்துச் சூரியன்தானும் நீர்விளையாடவேணுமென்று மேற்கு சமுத்திரத்திற்போய் குதித்தான். அப்போது சந்திரன், (அதிக சாமர்த்தியத்தோடும் வெதிராளிகளுடனே எதிர்த்துத் தோத்துப் போன ஒருவன் திரும்பவும் நாணமில்லாமல் வந்ததுபோல) ஸ்திரீகளுடைய முகத்துக்குச் சமான மாகாமல்போய் விட்டவனும் அன்றைக்குவந்துப் பிரகாசித்தான். அந்தச்சந்திரனுடைய பிரகாசம் பூமியெல்லாம் நிறைந்துப் புருஷனோடு கூடியிருக்கிற ஸ்திரீகளுக்குக் கள்ளுபோலவும் பிரிந்திருக்கிறவர்களுக்கு விஷம்போலவும் - பிணங்கி ஊடலோடிருக்கிறவர்களுக்கு ஒரு தூதுபோலவுமாகப் பிரகாசித்தது. அந்தநிலவினுடைய கிரண காந்தியின் வெண்மையினால், உலகத்தில் இருக்கிற ஆறுகளெல்லாம் கங்கையைப்போலவும் - சமுத்திரம் திருப்பாற்கடல் போலவும்-பர்வதங்களெல்லாம் கைலாயம் போலவும்-வெளுத்துயிருந்தது. அப்போது ஸ்திரீகள் முத்துப்பந்தலிலேயும் - கூடாரங்களிலேயும்-புஷ்பப் பந்தல்களிலேயும் பிரவேசித்தார்கள்.

## உண்டாடல்.

பொழுதுபோனபின்பு புஷ்பவாசனை நீங்காத அளகபாரத்தையுடைய அந்தஸ்திரீகள், படுக்கையின் இன்பத்தை அடையும் பொருட்டுப் பொற் கிண்ணத்தில் தேன்களைவிட்டுப் புசித்தார்கள். தேனோடு மலர்ந் திருக்கிறபுஷ்பங்களில் தேனைவார்க்கிறது போல செவ்வல்லிப் புஷ்பத்துக்குச் சமானமான அவர்கள் வாயில் தேன்களைவிட்டுக் கொண்டார்கள். பால்போல வெளுத்திருக்கிற கள்ளும் - அதைக் கொண்டிருக்கிறப் பளிங்குவட்டிலும் ஸ்திரீகளுடைய கைக்காந்தியினாலே செவந்துக்காட்டிற்று. இவ்விதபானத்தினால் வாள்போன்ற அவர்கள் கண்கள்செவந்தது. அவர்கள்காமம் என்கிற அக்கினிக்கு, கள்ளென்கிற நெய்போய்விழவே மிகவும் அக்காமத்தீமீண்டது. பொன்வள்ளத்தில் யிருக்கிற கள்ளை ஒருத்திப்பார்க்க, அதிலே தன்னுடையமுகத்தின் நிழல் தோற்ற, அதைச் சந்திரனென்றெண்ணி இராகுவென்கிற பாம்புக்குப் பயப்பட்டுவந்து ஒளித்துக்கொண்டாயோ! ஓ! சந்திரனே! நல்லது நான்புருஷனுடனேபிணங்கியிருக்கிற நாளையிலே, நீ எனக்கு வெப்பத்தைத்தராமல் குளிர்ந்திருக்கிறதானால் உன்னை அப்பாம்புதீண்டாமல் காத்து, இந்தக்கள்ளும் உனக்குக் கொடுக்கிறேனென்றாள். ஒருத்தி மாணிக்கக் கிண்ணத்திலிருக்கிற கள்ளில் தன்னிழல்தெரிய, அதை தோழியென்றெண்ணி இந்தக்கள்ளுக்கு ஆசைகொண்டு பார்க்கிறாயோ, நீயே சாப்பிடென்றாள். ஒருத்தி இந்த ஜாடியில் கள் நிறைந்திருக்க, நீ இந்த உச்சிஷ்டமானதைப்புசிக்க, நினைவுகொண்டு வந்தாயோவென்று மிகவும் நகைத்தாள். ஒருத்திச் சந்திரனுடைய கிரணத்தைப் பளிங்குவள்ளத்தில்கண்டு அதைக் கள்ளென்று வாயினிடத்தில் வைத்துக்குடிக்க, ஒன்றுமில்லாமையைப்பார்த்துநாணினள். ஒருத்திவெறும் வள்ளத்தில் கள்ளிருக்கின்றதென்று எண்ணியோடினாள். ஒருத்தி தன்னுடைய கண்ணிழல்கள் கள்நிறைந்த ஜாடியில்தெரிய அதைவண்டுகளென்றுஎண்ணியோடினாள். ஒருத்தி மிகுந்த மயக்கத்தினால் அரையில் உடுத்தியிருந்த வஸ்திரமுதலியதை அவிழ்த்துப் போட்டு புஷ்பமாலையை அரையிற்கட்டிக்கொண்டு அவ்வஸ்திரத்தைத் தலையில் தரித்துக்கொண்டாள். ஒருத்திப் பளிங்குவள்ளத்திலிருக்கிற கள் கவழ்ந்து போனது தெரியாமல் அதையெடுத்து வாயிலே வார்த்துப்பார்க்க, அதிலொ

ன்று மில்லாததினால் பின்பக்கத்திலே யிருக்குமென்றெண்ணி வள்ளத்தைத்திருப்பி 'வாயிலேவைத்தாள். ஒருத்தித் தன்னுடைய இருதயத்திலிருக்கிற நாயகன் கள்குடிக்கிற தில்லையேயென்று தானும்குடியாமல் கிளியுடனே பேசிக்கொண்டிருந்தாள். இப்படியாக ஸ்திரீகூட்டங்கள் கள்ளினுடைய மயக்கத்தினால் கண்கள்செவக்கவும் புருவங்களை நெறித்துக்கொண்டும் பல்லுகளினால் உதட்டைக்கடித்து கைகளையசைத்துக்கொண்டும் ஆடுகிறபடியினால் அபிநயம் பிடிக்கிறவர்கள்போல் பிரகாசித்தார்கள். ஆதண்டங்கனிபோல செவந்திருக்கிற அவர்கள்வாய் ஈறுகளில் நீருற்றுவர, முலைக்கச்சின்முடிக ளிற்றுப்போக, கட்டியிருக்கிற வஸ்திரங்கள் விழுந்துபோக, தலைமயிர்சரிய, இவ்விதகோலாகலமாக, அந்தக்கள் செய்தபடியால் அக்கள்ளும் நாயகனைப்போலவே யிருந்தது. சரீரங்களில் வெயர்வைகாணுகிறது குடித்தகள் வெளியில் புறப்படுகிறதுபோல யிருந்தது. ஒருத்தித் தன்னுடைய நாயகனை யழைத்துவரச்சொல்லி தூதியையனுப்பினாள். அவள் உடனே அழைத்துவாராதபடியால் பின்னும் சிலதாதிகளை மேலும்மேலும் அனுப்பினாள். அவர்கள் திரும்பிவருகிறமட்டுக்கும் மனம் தாளாமல் தானும் புறப்பட்டு நடந்தாள். ஒருத்தியின் வள்ளத்திலிருக்கிற கள்ளில் ஈகள் மொய்த்துக்கொண்டிருக்கிறபடியால் செங்கழுநீர் கொடியினால் அதை உறிஞ்சிக் குடித்தாள். ஒருத்தித்தோழியைப் பார்த்து என்வருத்த மெல்லாம் என்னுடைய நாயகனுக்குச்சொல்லி அழைத்து வருகிறையா! அல்லவென்று என்மனதைப்போல அவனிடத்தில்தானே மயங்கிக்கிடக்கிறையா! சொல்லென்றாள். அதுகேட்டு நகைத்து உடனே கண்களில் முத்துமுத்தாய் ஜலத்தைவிட்டாள். ஒருத்தி ஒரு நாயகனிடத்திற்குத் தூதனுப்பியிருந்தாள். அவன்வருகிறானென்கிறசெய்தி தெரிந்து கத்தைச் சாத்திக்கொண்டு தன்மனதில் எதுவோ ஒன்றை நினைத்துத் தன்கண்கள் செவக்கயிருந்துவிட்டாள். ஒருத்தி புருஷன்வரவே கோபித்துக்கொண்டு செம்பஞ்சு ஊட்டிய தன்காலினாலுதைத்தாள். அதுபடவே அவன் சரீரமெங்கும் காமவிளைவிளைத்து முளைகள் புறப்பட்டதுபோல மயிர்க்கூச்சிட்டு புளகாங்கிதனானான். ஒருத்தித் தன்நாயகன் சீக்கிரமாய் வராதபடியால் அவன்பேரைச் சொல்லிக்கொண்டிருக்கிற கிளியைச் சீறிக் கோபித்துப்பார்த்தாள். ஒருத்தி புருஷன்வரவே புஷ்பமாலையையெடுத்து அவன் தோள்களை யிறுகக்கட்டினாள், அவன் மகாபலசாலியா யிருந்தும் அந்தக்கட்டை யறுக்கமாட்டாமல் அக்கட்டிலேயே அகப்பட்டுக்கொண்டிருந்தான். ஒருத்தித் தன்புருஷன்வருகிற வழியைப் பார்த்துப்பார்த்துத் திரும்பக் கூடாரத்திலே வந்து மேகத்திலே மின்னல் பிரகாசிக்கிறதுபோல அடிக்கடி வெளியிலே பிரகாசித்தாள். ஒருத்தித் தன்நாயகன் வரவே எழுந்திருந்து சேவித்தாள். அவன் இதேது ஒருநாளுமில்லாத விநயம் இன்றைக்கு நூதனமாக வருவானேனென்று ஆச்சரியப்பட்டு மிகவும் பயந்தான். ஒருத்தித் தன்புருஷன்வரவே மார்பிலுதைத்தாள். அவன் தன் மார்பிலிருக்கிற முத்தாரமுதலிய பதக்கங்கள் அவள்காலில் உறுத்துமென்று கையினாலே மூடிக்கொண்டான், அதுகண்டு அவள் உன் இருதயத்திலிருக்கிற ஸ்திரீயின்பேரில் உறைப் படுமென்றல்லவா மூடிக்கொண்டீர் என்று முன்னிலும் அதிககோபமானாள். ஒருத்திப் புருஷனோடு கோபித்துக்கொண்டு உறக்கமாய்ப்படுத்திருந்தாள். அவன் அதுகண்டு பயந்து இவளை யிப்போது தொட்டால் மிகுந்தகோபம் கொள்வாளென்று பேசாமல் ஓர்புறத்தில் படுத்திருந்தான். அப்போதவள் கலவியை அபேக்ஷித்து திடுக்கிட்டுப் பயந்தவள்போல புருஷனைக் கட்டிக்கொண்டாள். இவ்வண்ணமாக அன்றையத்தினம்யாவரும் அதிகமயக்கத்தால் விரகமீறியிருந்தபடியால் மன்மதனுங் கள் குடித்ததுபோல இருந்தது. அன்றுராத்திரி ஸ்திரீகளும் புருஷர்களும் அனேக சம்பிரமத்துடனே இஷ்டமான போகயின்பத்தை யநுபவித்துக்கொண்டிருந்தார்கள்.

## எதிர்கொளல்.

அப்போது சந்திரன்தருமச்சிந்தையில்லாதவனுடைய பாக்கியம்போலே பிரகாசமுதலியதில்லாமல் ஒளிமழுங்கிப்போனான். உடனே சூரியன், ஸ்ரீமகாவிஷ்ணுவினுடைய கௌஸ்துவாபரணம்போல உதையகிரியிலே பிரகாசித்தான் தசரதமகாராஜன் எழுந்திருந்து தனதுசேனாசமுத்திரத்துடனே புறப்பட்டு கங்காநதிவந்துசேர்ந்தார். அந்தகங்கை பாதாளலோக மட்டுக்கும் ஆழமாகத் தண்ணீர்நிறைந்துப் பிரவாகமாக யிருக்கிறதில் இந்தசேனாசமுத்திரம் இறங்கி ஜலம் சாப்பிடவே சமுத்திரசங்கமுகத் துவாரமும் நீரில்லாமல் வரண்டுபோய் விட்டது. அதினாலந்த சமுத்திரத்திலிருந்துவருகிற இந்தகங்காநதி தீர்த்தத்தைச் சாப்பிட்டுக்கொண்டிருந்த ஜீவஜெந்துக்களும் ஏக்கற்று ஆசையுடனே மயங்கிற்று அந்தகங்கையைக்கடந்து மிதிலாபுரி பட்டணத்தின் சமீபத்தில்போய்ச் சேர்ந்தார்கள், இப்படிக்கு இவர்கள்வருகிற சமாசாரம் ஜனகமகாராஜன் கேள்விப்பட்டு அதிக இஷ்டத்துடனே மிகுந்த சந்தோஷமாக யானை-குதிரை-தேர்-காலாள்-முதலிய சேனாசமுத்திரத்துடனே அனேக சங்கீத மேளவாத்தியத்தோடு சம்பிரமமாக ரதாரூடனாகப்புறப்பட்டுச் சூரியனைச்சந்திக்கிறச் சந்திரன்போலவந்தான். அப்போது அந்தசேனையுடனே இந்தசேனையுங்கலந்தது. ஸ்ரீமகாலக்ஷ்மியைப்பெற்ற க்ஷீராப்தியானது மற்ற உப்பு-நன்னீர்-தயிர்-நெய்-தேன்-கருப்பஞ்சாறு-என்றுசொல்லப்பட்ட அறுவகை சமுத்திரமுங்கூடிவருகிற பிரவாகத்தில்கலந்து இருக்கிறதுபோலக் கூடிற்று. முரசு-பேரிகை-முதலான மேளவாத்தியங்கள் முழங்கவும், யானைகள்வீரிடுகிறவோசையும், குதிரைகள்கனைக்கிறசத்தமும், ரதவண்டில்களினுடையமுழக்கங்களும், மனுஷர்களுடையசந்தோஷசத்தங்களும், அனேகசமுத்திரங்கூடிசத்திக்கிறதுபோலசத்தித்தது. குடைகளும்-கொடிகளும்-ஆலவட்டங்களும்-மயில்ப்பிஞ்சங்களும்-மகரதோரணங்களும்-ஆகாயமெல்லாம்நிறைந்தது. அவ்வி



டத்தில் பாக்கியலக்ஷ்மி நிர்த்தமாடினாள். ஜனகமகாராஜன் தேர்விட்டிறங்கி தசரதமகாராஜாவின்சமீபத்துக்குவர, அதுகண்டு அவரும்அதிக இஷ்டத்துடனேகைலாகுதந்து தம்மிடரதத்திலேற்றிக்கொண்டு மிகுந்த ஆனந்தசந்தோஷத்துடனே மார்புறத்தழுவிக்கொண்டு உம்முடைய பந்துவர்க்கத்தார்யாவரும் சுகமோவென்றுவினாவி சிலநாழிகைவசனித்துக்கொண்டிருந்தபிற்பாடு ஜனகமகாராஜாவை முன்[illegible]ச்சொல்லி ஆக்கியாபித்தார். அவரும் அ[illegible]யேநடந்தார் ஸ்ரீராமனும்லக்ஷ்மணருட[illegible] அனேகம்சேனாசமுத்திரத்தோடு புறப்பட்டு வி[illegible]லிருந்த தசரதமகாராஜாவினுடைய பிராணன் வந்[illegible]கூடினதுபோலச் சமீபத்திற்குவந்தார். அந்த சேனாசமுத்திரங்களெல்லாம் அதிக சந்தோஷத்துடனேபார்த்து தம்மைச்சேவிக்கத் தாம் தனது தகப்பனாரைச்சேவித்துக்கொண்டார். அவர் அதிக பிரியத்துடனே தமதுமார்பில் ஸ்ரீராமனுடையதிருமேனி மறையும்படியாய்த்தழுவிக்கொண்டு அதிகசந்தோஷமானார். அப்போதுபரதன் ஸ்ரீராமனைக்கண்டுகண்களிலானந்தபாஷ்பம்பெருகப்பெருகச்சேவித்துக்கொண்டார், ஸ்ரீராமன் தன்னைத்தகப்பனார் எவ்வளவு அன்போடு தழுவிக்கொண்டாரோ அவ்வளவுஅன்போடு இவனைத்தழுவிக்கொண்டு அதிகசந்தோஷமானார், லக்ஷ்மணர் தசரதமகாராஜாவையும் பரதனையுஞ்சேவித்துக்கொண்டார். சத்துருக்கன் ஸ்ரீராமனையும் லக்ஷ்மணனையும் சேவித்துக்கொண்டார். அவர் அவர்கள்மிகுந்தசந்தோஷம் அடைந்து இருந்தார்கள். தசரதமகாராஜாவின் நான்குபிள்ளைகளும் இருக்கு-தைத்திரியம்-சாமம்-அதர்வணமென்கிறநான்கு வேதங்கள்போல எதிரேயெழுந்தருளியிருக்க, வீற்றிருந்த தசரதமகாராஜா ஸ்ரீராமனைப்பார்த்து அப்பா குழந்தாய் முன்னேநடவென்று ஆக்யாபிக்க அவரும் அப்படியே ரதமேறிக்கொண்டு தம்பிமார்மூவரும் குதிரைகள்பேரிலேறிக்கொண்டு தம்மைச்சூழ்ந்துவர, அனேககிதவாத்தியங்கள்முழங்க சேனாசமுத்திரத்துடனே புறப்பட்டுமுன்னேநடந்தார். மிதிலாபுரிபட்டணத்துவீதியில் நடக்கிறபோது அப்பட்டணத்திலுள்ளராஜகன்னிகைகள் முதலானவர்கள் யாவரும் தேவாதிதேவனாகிய ஸ்ரீராமனேஎழுந்தருளியபடியால் அவர்திருமேனியைத்தரிசிக்கும்பொருட்டு வீதியினிடத்தில்வந்தார்கள்.

## உலாவியல்.

அந்தஸ்திரீகள் மான்கூட்டங்கள்வருகிறதுபோலவும் மயில்கூட்டங்கள்நிற்கிறதுபோலவும், மின்னல்கூட்டங்கள் பிரகாசிக்கிறது போலவும், அளகபாரம் அழகுபெறமுடித்திருக்கும் புஷ்பவாசனைநிமித்தம் விருந்தாகவந்திருக்கிற வண்டுகளெழும்பிப்பறக்க ரூபலாவண்ணியத்தோடு நெருங்கிமொய்த்துக்கொண்டும் அளகபாரம் அவிழ்ந்து விழுகிறதைப்பாராமலும் மேகலாபரணங்கள் அறுந்துசிந்துகிறதைப்பாராமலும், வஸ்திரம்சரிந்துப்போகிறதைப்பாராமலும், தனங்களுடையபாரத்தினாலே மெலிந்தயிடை தடுமாறுகிற வருத்தமும்பாராமல், நெருங்கிவந்துவிலகுங்கள் எனத் தேனைவண்டுகள்மொய்த்துக்கொள்வதுபோல ஸ்ரீராமனைமொய்த்துக்கொண்டு ஆசையென்கிறவஸ்துவைக் கண்ணினாலே காணக்கிடைத்தது. பெண்சரீரமெடுத்ததற்குப்பலன் இன்றல்லவாகிடைத்ததென்று ஸ்திரீகளனைவரும் அனேககாலம் மழை யில்லாமல் தண்ணீர் கிடையாத காலத்திலே மிகுந்த தாகத்தோடு அவாகொண்டு யிருக்கிற மான்கூட்டங்கள் ஜலத்தோடு நிரம்பி யிருக்கிற ஒரு தடாகத்தைக்கண்டு மேன்மேலும் போய் விழுகிறது போல நிறைந்து நெருங்கினார்கள். கால் சிலம்பு முதலானதுகள் சத்திக்க, இளைத்திருக்கிற இடைகள்நோகத், துரிதமாய்நடந்து அவரிடத்திற் போயிருக்கிறமனதை யோடிப்பிடிப்போமென்று போகிறவர்கள்போல ஓடிதொடர்ந்தார்கள். அகலிகையின்சாபத்தை விமோசனம்செய்த பாதாரவிந்தத்தையும், சீதைநிமித்தமாக வில்வளைத்து ஒடித்த சௌந்தரியமாகிய தோள்களையும், பார்க்கவேணுமென்கிற அபேக்ஷையினாலே, பள்ளத்திற்பாய்கிற நீர்போல சீக்கிரத்தில்வந்து மொய்த்துக்கொண்டார்கள். வீதியில் நடக்கிறவர்போலக் காட்டி, ஸ்திரீகளுடைய கண்கள்வழியாய்ப்புகுந்துமனதுக்குள் பிரவேசித்தபடியால் தம்முடைய (கண்ணனென்கிற) திருநாமத்தைச் சகலருக்கும் இன்னதென்று தோன்றும்படி செய்தார். இப்படியாகவந்த அனேகம் ஸ்திரீகளில் ஒருத்தி இத்தனைபேர்களுடைய கண்களிலேயும் அகப்படாமல் போகிற இந்தப்புருஷனைத் தன்கண்ணுக்குள் அடங்கும்படியாய்ச் செய்துக்கொண்ட சீதையல்லவோ பெரியவளென்று பெருமூச்செறிந்தாள் ஒருத்தி வஸ்திரம் வளையல்-அழகு-இளமை-நாணம்-சிந்தை-தேயல்-வச்சிரகஜிதமான ஆபரணம்-நாணம்-நிறை-இத்தனையும் ஒழிந்துபோயும் தன்பிராணனைமாத்திரந் தாங்கிக்கொண்டிருந்தாள். அனேகம் ஸ்திரீகளினுடைய கறுத்தகண்களினால் பார்த்தபடியால் அக்கண்ணொளிகளெல்லாம் ஸ்ரீராமனுடைய திருமேனியிற்பாய்ந்து கறுத்ததோ! அல்லது ஸ்ரீராமனுடைய கறுத்ததிருமேனியே அந்த ஸ்திரீகூட்டங்களின் பார்வையில் பாய்ந்துகறுத்ததோ! அதுதான் தோன்றவில்லை. மாந்தளிருக்குச்சமானமான சரீரத்தையும் மூன்றாம்பிறைச் சந்திரனைப்போலநெற்றியையுமுடைய ஒருஸ்திரீ மன்மதன்[illegible]திரோ நின்று புஷ்பபாணங்கள் பொழிகிறதை[illegible] கண்ணினால்கண்டு நம்முடைய ராஜாவினுடைய ஆக்கினையையும் பாராமல் அவருக்கு மருமகனாகிய இந்தவீரனுடைய சாமர்த்தியத்தையும் பாராமல் இவன் ஆரோ ஒருவன் ஸ்திரீகள்பேரிலே இப்படி அம்புகளைப்பொழிகிறானே என்றாள். வில்லுகள்போலே புருவங்களை உடைத்தாயிருக்கிற ஒருத்தி ஸ்ரீராமனைப்பார்க்கிற அபேக்ஷையினாலே மறந்துவேறொருவருங் காணாதபடியால் தனியே தானாய்ப்போகிறொன்றாள். மையைப்போல கூந்தலும் சிவந்தவாயையுமுடைய ஒருத்தி ஸ்ரீராமனைப்பார்த்து மனதுருகி இந்தவஞ்சகன் மனதுக்குள்ளே புகுந்துக்கொண்டான் அவன்திரும்பிப் போகாதபடியால் கண்களென்கிற வா

யிலே மூடிக்கொண்டேன், தோழி! என்னைக்கொண்டுபோய் படுக்கைமெத்தையில் சேரென்றுசொன்னாள். ஒருத்தி மன்மதனுடைய பாணம் சரீரமெல்லாம் துளைக்கிறதையும் பாராமல், கட்டிக்கொண்டிருக்கிற வஸ்திரம் கலைந்துப்போவதையும் பாராமல் ஸ்ரீராமனுடைய திருமேனியைப்பார்க்கிற மற்றஸ்திரீகளையெல்லாம் கோபத்துடனே கண்ணில்நெருப்புப்பொறிபறக்கப் பார்த்தாள். களித்து-மதர்த்து-நீண்டு-கள்ளத்தை ஒடுக்கிக்கொண்டு-செவந்து-வெளுத்து-கறுத்து வேல்போன்ற கண்ணையுடைய ஒருவள் ஸ்ரீராமன்வருகிற பவனிபார்க்கிறதற்கு அதிகசந்தோஷத்துடனே மனங்குளிர்ச்சியாய்வந்தாள். அவருடைய சுந்தரத்தைப் பார்த்து ஆச்சரித்து மன்மதபாணப் பிரயோகத்தினால் காமாக்கினியெழும்பி மனவெறுப்புடனே திரும்பி வீட்டுக்குப்போய்விட்டாள். ஒருத்தி ஸ்ரீராமனுடைய திருமேனியைப்பார்க்கிறதற்கு முன்னே ஸ்திரீ கூட்டங்கள் வந்துநெருங்கிப் போனபடியினால், அவர்களுடைய இடைகளின் சந்துகளில் தன்கண்களைவைத்துப் பார்த்தாள். அவர்களுடைய ஆபரணங்களும் - மேகலைகளும் - புஷ்பங்களும், வெயர்வையினால் கரைந்து விழுந்துகிடக்கிற சந்தனம்-கதம்பகஸ்தூரிகளும்-கைவளைகளும் அந்தவீதியெல்லாம் இறைந்து நிறைந்துக்கிடந்தன. ஸ்ரீராமனுடையதோள்களைக்கண்டபேர் அந்த அழகிலேதனேமூழ்கி அந்தத்தோளைத்தானே பார்த்துக்கொண்டிருந்தார்கள். கைகளைக்கண்டபேர்கள் அந்தக்கைகளையே பார்த்துக்கொண்டிருந்தார்கள். செந்தாமரைப் புஷ்பம்போலுமிருக்கிற அவருடைய உபய சரணாரவிந்தங்களைக்கண்டபேர் அவைகளையேபார்த்துக்கொண்டிருந்தார்கள். இவர்களில் ஒருத்தியாகிலும் ஸ்ரீராமனுடைய திருமேனியை முழுதுங்கண்டு தரிசித்தவர்களல்ல ஏனெனில் உலகத்திலுண்டாகிய அறுசமயங்களுக்கும் ஒரேகடவுளாக யிருந்தும் அந்தந்தசமயங்களுக்குப் பலவாறுகத் தோன்றுகிறதுபோல ஸ்ரீராமமூர்த்தித் தாம் ஒருவராகவேயிருந்தும் பார்ப்பவர்களுக்குப் பலவாறுகவே தோன்றினார், ஒருத்தி மேகலாபரணங்களும் பாதச்சிலம்புகளும் சத்திக்க வெகுதுரிதமாகவந்தாள் ஆனால் திரும்பிப்போகையில் தாதிகள் கைலாகுகொடுக்கப்போனாள். தாமரையின் மொக்கைப்போலத் தனங்களையுடைய ஒருத்தி ஸ்ரீராமனைப்பார்த்[illegible]ன்மனது யிரும்பு ஆயினும் ஒருஸ்திரீ ஸிழித்தம் பர்வதம்போலிருந்த வில்லையொடித்த புண்ணியபுருஷா! இந்தமன்மதனுடைய கரும்புவில்லையொடித்து என்னை ரக்ஷிக்காயோ என்றாள். ஒருத்தி தேரின்பேரில் போகிறவன் அதைவிட்டு எதிரேநிற்கின்றான் இதென்ன மந்திரசத்தியோ! அல்லது நான் கினவுகாண்கிறேனே! ஆ! இதென்னவென்று உருவெளிதோற்றத்தைக்கண்டு சொன்னாள். ஒருத்தித் தன்மனதைத்தானே அவரிடத்தில் தூதனுப்பியதாக யெண்ணிநினைத்து யோசனைசெய்து சிந்தைசெய்தபுண்ணியமென்றாள். தங்கப்பிரதமைபோல சௌந்தரியமான ஒருத்தி தன்பாங்கியைக்கும்பிட்டு இந்தமகாபுருஷனை மன்மதனைக்கொண்டு படத்திலே எழுதலாமா வென்றாள். ஒருத்திமனிதனுக்கு இத்தனை லக்ஷணங்களுமுண்டாயிருக்குமா? இராது. ஸ்ரீமகாவிஷ்ணுவேயிவர். இது உங்களுக்குப்பின்பு தெரியுமென்றாள். ஒருத்தி இந்தபுருஷன் இந்தப்பட்டணத்துக்குவந்தது ஜனகராஜாக்கள் இதுவரைக்குஞ்செய்த தவப்பலத்தாலே என்றாள். ஒருத்தி இந்தபுருஷன் தனியே ஒருநாளைக்கு என்கினவிலேயாகிலும் வருவாறுவென்றாள். ஒருத்தி இத்தனைஸ்திரீகளாசையுடனேப[illegible]ங்க, இவன் கொஞ்சமாகிலும் மனதிலெண்ணிப்பாராம[illegible]ாகிறானே இருபை என்கிறதைக்கண்டு மறியான்-மகாக[illegible]ன்-ஆசையென்கிறதும் அறியானென்றாள். இவ்வாறு[illegible] ஸ்ரீராமனைப்பார்க்கிறவர்கள் மிகமில்லை. ஆனால் அவருடையதிருவழகுக்கும் மிதமில்லை. மன்மதன் தன்னுடைய அம்பறாத்தூணியிலிருந்த அம்புகளும் கையம்பும் செலவுசெய்துவிட்டு அப்பால் என்ன செய்யப்போகிறான். அரையிற்கட்டியிருக்கிற வாளின்பேரிலேயும் கையைவைத்தான். அன்றையத்தினம் மன்மதன் எய்தபாணம் பூமியெல்லாம் நிறைந்து தெய்வலோகத்துக்கும் போய் தெய்வரம்பைகளுடைய மார்பிலேயும் தைத்தது. ஒருத்தி ஸ்ரீராமனுடையதேர் போகிறதும் திரும்பிவருகிறதும் திரும்பிப்போகிறதுமா யிருக்கிறதைப்பார்த்து கால்செவக்க ஊசலாடுகிறவள்போலவே உழன்றுதிரிந்தாள். ஒருத்தி ஸ்ரீராமனைப்பார்த்து வருகிறவர்களைக்கண்டு யென்மனது அங்குபோயிற்று அதை நீர் கண்டீராவென்று நாணமில்லாமல் வினவினள். ஒருத்தி இவனுடைய வம்சத்தாரில் ஒருவர் ஒரு ஜீவனுக்காகத் தன் ஜீவனைக் கொடுத்து ரக்ஷித்தார். இவன் நம்முடைய ஜீவனை நமக்குக் கொடுக்கிறதாகவு மிருக்கவில்லையே, இந்தக் கடூரபுத்தி இவனுக்கு எங்கேயிருந்து உண்டாயிற் றென்றாள். ஒருத்தி இவன் அந்த பெரிய வில்லை யொடித்தது, சீதையின்பேரி லாசையினாலல்ல, ஆனால் தான் அடைந்திருக்கிற கல்வி சாமர்த்தியம் எல்லாருக்கும் தெரியவேணுமென்று ஒடித்தானென்றாள். ஒருத்தி அதிகசோபத்துடனேமயங்கி இந்த சாமர்த்தியன்முன்னே பயமில்லாமல் பாணங்களைத்தொடுத்து நம்மைக்கொல்லுகிறானே இந்த மன்மதனைப் பார்க்கிலும் ஆர்பலவந்த ரென்று சொன்னாள். இவ்விதமாக ஸ்திரீகளாசையினால் சோர்ந்து மயங்கியிருக்க, ஸ்ரீராமன், வசிஷ்டரும், விஸ்வாமித்திரரும்-எழுந்தருளியிருக்கின்றதிருமண்டபம் போய்சேர்ந்து அவர்களிருவரையும் சேவித்துக்கொண்டு, அவர்கள்அருளிச்செய்ய, தம்பிமார்கள் நிழல் போலச்சூழ்ந்திருக்க ஒருரத்தின சிங்காசனத்திலே திருக் கோலத்தோ டெழுந்தருளியிருந்தார். அப்போது தசரதமகாராஜன் அனேகராஜகூட்டத்தோடு நக்ஷத்திரங்களுடனே வருகிற பூரணச்சந்திரனைப்போல வந்து சேர்ந்து, வசிஷ்டர் - விஸ்வாமித்திரர் இருவரையுஞ்சேவித்துக்கொள்ள, தேவர்கள் புஷ்பமாரிபெய்ய சபாமண்டபத்தில் (தேவேந்திரன் திருவோலக்கம்போல) ஒரு சிங்காதனத்தில் எழுந்தருளியிருந்தார்.



## கோலம்காணல்.

அந்த சபையிலே கங்கர் - குலிங்கர் - சிங்களர் - சேரலர் - பாண்டியர் - அங்கர் - வங்கர் - வங்கியர் - வங்கர் - மாளுவர் - கொங்கணர் - சேதியர் - முதலான ராஜகூட்டங்கள் பின்னையுஞ் சோழர் - மராடர் - மாகதர் மச்சர் - மிலேச்சர் - லாடர் - விராடர் - சீனர் - கொங்கணர் - சிந்துனர் - [illegible] - துருக்கர் - குருக்கர் - முதலான ராஜா[illegible]ரும் சூழ்ந்திருக்க ஸ்திரீகூட்டங்கள் வெண்சாமரைவீச, அனேகம் ஸ்திரீகள் பல்லாண்டுபாட, அனேகம் ஸ்திரீகள் யாழ் - வீணை - முதலியவைகள்வாசி[illegible]க, பூரணச்சந்திரனைப்போல முத்துக்குடை பிரகாசி[illegible], அனேக சம்பிரமத்துடனே இராஜாதிராஜனான த[illegible]ரதமகாராஜன்வீற்றிருந்தார். அப்போது வசிஷ்டமகா[illegible]முனி ஜனகமகாராஜனைப்பார்த்து உமதுகுமாரத்தியாகிய சீதையை அழைப்பியுமென்று சொன்னார். அதைக்கேட்டு நமஸ்காரம்செய்து அதிக சந்தோஷத்துடனே எதிரே நிற்கிற ஸ்திரீகளைப்பார்த்து ஸ்திரீரத்தினமான சீதையை அழைத்துவாருங்களென்று ஆஞ்யாபித்தார். அவர்கள் மிகுந்த சந்தோஷத்துடனே வேகமாகவோடி சீதாலக்ஷ்மியின் தாதிகளுடனே சொன்னார்கள். அவர்கள் சந்தோஷசித்தராய் அமிர்தத்துக்கு ருசியுண்டாக்குகிறவர்கள்போல ஆபரணங்கள் திருமேனியை மறைக்குமென்கிறது தெரியாமல்சிங்காரம்செய்தார்கள். அந்த சீதாலக்ஷ்மி ஸ்ரீராமனை வருகிறபோது கண்டு அவருடைய திருமேனிநிறத்தைத் தன்மனதிலே பதியவைத்திருக்கிறபடியினால் அதுசரீரமெல்லாம்பொங்கிப்பொங்கி மேல்நோக்கி சிரசிலேயிருந்து அந்தநிறம்வடிந்து அனேகம்கொடிகளாயோடி உலகமெல்லாம் பரவியதுபோலயிருக்கிற கூந்தலில் மேகத்தில் பிரகாசிக்கிற சந்திரனைப்போல முல்லை - ஜாதிமல்லிகை முதலான சுகந்தபரிமள புஷ்பங்களைமுடித்தார்கள். இளம்சந்திரனுக்குச் சமானமான நெற்றியிலே ரத்னச்சுட்டிப்பிரகாசிக்க அளகபந்திபூட்டினார்கள். சீதையினுடைய இருதயகமலத்தில் சிவனுடைய வில்லை யொடித்தவீரன் அன்றையத்தினம் நாம்கண்டபுருஷனே அல்லவோவென்று எண்ணி மனது அசைகிறதுபோல அசைந்துக்கொண்டிருக்கிற ரத்தினக்குழைகளைக் காதில்பூட்டினார்கள். பாஞ்சசன்னிய சங்கத்துக்குச் சமானமான திருக்கழுத்தில் ஹாரம் - பதக்கம்-சரப்பளி - முதலான ஆபரணங்களைத் தரித்தார்கள். ஸ்திரீஜாதிகளுக்கெல்லாம் கழுத்துக்கு மங்கிலியமாகயிருக்கிற இந்தலக்ஷ்மிக்கு அழகுபிறக்கும்படியான ஆபரணங்களென்னபூட்டப்போகிறார்கள். கல்வியறியாதவனும் தெரிந்தவர்களைச்சேர்ந்தால் தெரிந்தவனாகிறதுபோல திருமேனியினுடையகாந்தியினாலே வெண்முத்துஞ்செவந்து காட்டிற்று. காந்தளுக்கு ஸ்ரீராமனுடையகைகளாகியதாமரைக்கமலங்களை ராத்திரியிலும் குவியாமல் எந்தவேளையும் அலர்ந்துக்கொண்டே யிருக்கச்செய்கிற சூரியனைப்போலப் பிரகாசிக்கும் ரத்தினமயமான கடகமிட்டார்கள். பராபரவஸ்துவைப்போல உண்டோ இல்லையோவென்கிற யிடைக்குப் பாரமாகிய தனங்களிலே கதம்ப - கஸ்தூரி - கந்தமுதலிய பரிமள திரவியாதிகளைப் பூசினார்கள். பாதங்களிலே பொற்சிலம்புமுதலான ஆபரணங்கள் பூட்டினார்கள். விஷமும் அமிர்தமும்கூட்டிச் செய்ததுபோலயிருக்கிற விசாலமான நேத்திரங்களுக்கு மையிட்டார்கள். சுவர்க்கம்மத்தி பாதாளமென்கிற திரிலோகங்களிலும் சஞ்சரிக்கிற ஸ்திரீகளுக்கெல்லாம் திலதமான சீதைக்கு ஓர் திலதமுமிட்டார்கள். பிரகாசம்பொருந்தியபீதாம்பரம்தரித்து ரத்தினகஜிதமான மேகலாபரணமு மிட்டார்கள். பஞ்சவர்ன்னக்கிளிபோல பாஷிக்கிற சீதையினுடைய திருவழகைப்பார்த்து சிங்காரித்த ஸ்திரீகளே மெய்சோர்ந்து மயங்கித் திகைத்துப் போனார்கள். புருஷஜாதிக்கும் ஸ்திரீஜாதிக்கும் மனமென்கிறது ஒருஜாதியாக யிருக்கிறபடியினாலும் லோகங்களிலிருக்கிற அழகுகளெல்லாம் ஓரிடத்தில்வந்து கூடியிருக்கக்கண்டபடியினாலும் அந்த ஸ்திரீகள் அப்படிமயங்கிச் சோர்ந்தார்கள். கருப்பூரதீபமுதலிய திருஷ்டிபரிகாரம்செய்துதெய்வப்பிரார்த்தனைகளும்செய்து பிராமணர்களுக்கும் தானங்கள்கொடுத்து இராஜசபைக்கு அழைத்துக்கொண்டு வருகிறபோது அந்தசீதையினுடைய ஆபரணங்களிலே கஜிதமாயிருக்கிற நவரத்தினத்தினுடைய காந்திகள் பூமியிலே பற்றிப்பாய்ந்து பிரகாசிக்கிறது இந்தபூமிதேவியானவள் தன்குமாரத்தியினுடைய பாதங்கள்நடக்கிறபோது வருந்துமென்று புஷ்பங்களும் தளிர்களும் விதம்விதமாய் பரப்பினதுபோல யிருந்தது. அன்னப்பக்ஷிகள் அம்மா உம்முடையநடைக்குத்தோத்துப்போனோம் இனி உம்முடைய பாதாரவிந்தமேகதியென்று வணங்கிச்சேவித்துக்கொண்டு வருகிறதுபோல இருபக்கத்திலும் ஸ்திரீகள் வெண்சாமரைவீச, ஒருமயில்போல நடந்தாள். இந்த சீதையினுடைய அழகைப்பார்க்கிற நிமித்தம் ஆகாயத்தில் பிரகாசிக்கிற அருந்ததி அனேக நக்ஷத்திரங்களுடனேகூட வந்திருக்கிறதுபோல போட்டியிருக்கிற முத்துப்பந்தலின் நிழலில்வந்துசேர்ந்தாள். ஆபரணங்களினுடைய பிரகாசமும் புஷ்பங்களினுடைய வாசனையும், சந்தனத்தினுடைய சீதளமும், மின்னல்போல பிரகாசிக்கிற திருமேனியினுடைய ஒளியும் பிரகாசிக்க, அன்னமும் - ரம்பைகளும் [illegible] அமிர்தமும் நாண, இராஜாக்களிருக்கிற ச[illegible]ழ்ந்[illegible]வந்து சேர்ந்தாள். அச்சபையிலிருந்த ராஜாக்களும், [illegible]திரீகளும், சீதையைக்கண்டு ஆச்சரியசித்தராய் கண்க[illegible]மையாமலும் ஸ்வாசம் விடாமலும், சித்திரப் பதுமை [illegible]லத் திகைத்துப்பார்த்தார்கள். ஸ்ரீராமனும்நாம்வருகிறபோது கன்னிகாமாடத்தில்கண்டோமே அந்த ஸ்திரீயோ அல்லவோ என்று ஐயத்திலிருந்தவர் சீதையைக் காணவே அந்த ஸ்திரீ ரத்னந்தானென்று ஐயந்தீர்ந்து இனி நமக்குப் பிராணனிருக்குமென்றெண்ணி பூர்வத்திலே அமிர்தத்தைக்கண்ட தேவேந்திரனைப்போல சந்தோஷத்தையடைந்திருந்தார். அக்கன்னிகை நம்மிடமனதிலிருந்தும் வெளியிலும் தோற்றுவாளோவென்று தாமே நி

லைத்துக்கொண்டிருந்தார். வசிஷ்டமகாமுனி நாம்செய்த தவத்தினுலே ஸ்ரீமன் நாராயணன் ஸ்ரீராமனுக அவதரித்து அரசாகயிருக்கிறபடியினுலே இந்த சீதையும் அச்செந்தாமரைக்கமலத்தில் வாசமாயிருக்கிற ஸ்ரீமகாலக்ஷுமிதானென்று ஐயமறச் சந்தோஷமானுர். சக்கிரவர்த்தியாகிய தசரதமகாராஜன்கண்டு நாம் இதுவரைக்கும் ஏகச்சக்கிரேஸ்வரனுக உலகத்தையாண்டுக்கொண்டிருந்தபோதிலும் இன்றைக்கல்லவா லக்ஷுமி விலாசத்தைப்பெற்று பாக்கியவந்தனுனேமென்று யெண்ணி மிகவும் சந்தோஷமானுர். விஸ்வாமித்திர மகாரிஷியும்பார்த்து, இந்த ரூபலாவண்ணியமான கன்னிகை தனக்கு அகப்படுகிறது ஸ்ரீராம னுயிந்திருந்தால் அந்த வில்லே மாத்திரமா ஒடிப்பான். சத்தகுலா பர்வதங்களையும் ஒடித்துப்போடுவானென்றுயெண்ணி அதிகசந்தோஷமானுர். இப்படியாக சகலமானபேரும் பார்த்து அதிக சந்தோஷ மானுர்கள். அப்போது அந்த மகாரிஷிகளும் ஸ்ரீராமனும் ராஜாவும்தவிர மற்றஜெனங்களெல்லாம் நமஸ்காரம்பண்ணினுர்கள். சீதை மகாரிஷிகளைச் சேவித்துக்கொண்டு ராஜாதிராஜனுன தசரதமகாராஜாவையும்சேவித்து சந்தோஷசாகரத்தில் மூழ்கியிருக்கின்ற தன்தகப்பனுருடைய சிங்காசனத்தில்விற்றிருந்தாள். கன்னிகாமாடத்திலிருந்து தான்பார்த்த இராஜகுமாரன்றுனே அல்லவோவென்கிறசந்தேகத்தை நிவர்த்திசெய்துக்கொள்ளவேணுமென்று தன்கைவளையலைத் திருத்துகிறபாவனையாகக் கடைக்கண்ணினுலே ஸ்ரீராமனைப்பார்த்து அவர்தானென்று அறிந்து (அக்கியானம்போய்க் கியானமுண்டானவர்களைப்போல) நித்தியானந்தமானுள். இப்படியிருக்கிற சமையத்தில் வசிஷ்டமகாமுனி விஸ்வாமித்திர மகாமுனியைப்பார்த்து கல்யாண முகூர்த்தம் என்றைக்குப் பார்த்திருக்கிறீ ரொன்றுகேட்க நாளையதினமென்று விஸ்வாமித்திர மகாமுனிசொல்ல, அதுகேட்டு தசரதமகாராஜா மிகவும் சந்தோஷமாய் ராஜாக்களெல்லாம்வணங்க எழுந்திருந்து சங்கத்தொனிமுதலான மங்கலவாத்தியங்கள் முழங்க, தம்முடைய விடுதியில் வந்துசேர்ந்தார். ஜனகமகாராஜாவும் சீதையை யழைத்துக் கொண்டு அரண்மனையேபோய்ச் சேர்ந்தார். ரிஷிகளும், பிராமணுளும், மந்திரி முதலானவர்களும், அவரவர்கள் ஸ்தானம்போய்ச் சேர்ந்தார்கள். ஸ்ரீராமனும் சீதைபிரிந்[illegible] தானும் எழுந்திருந்து தம்முடையதிரு[illegible]ளிகையிற்போய்ச்சேர்ந்தார். சூரியனும் மகம்மேருவின் சாரலில்போய் மறைந்தான்.

---

## கடிமணம்.

தசரதமகாராஜன் முதலிய சர்வத்திராளும் ஜனகமகாராஜன் உபசாரத்தோடு செய்வித்த விருந்தினுடைய சம்பிரமத்தினுல், சரீரத்துடனே சுவர்க்காதிபோகம்அநுபவிக்கிறவர்கள்போல பரவசாநந்தத்தில் மூழ்கியிருந்தார்கள். சீதை, ஸ்ரீராமனைச் சபையிற்கண்டபோது, (அதிகதாகங்கொண்டு தண்ணீர் தடாகத்தைக்கண்டும் அதிலிறங்குகிறதற்கு வழிகாணுமல் அலேந்து ஐயமுறுகிறதுபோல) மிகவும் இளைசித்து விரகதாபத்தினுல் சிலவசனம் தானே சொல்லிக்கொண்டதாவது. ஓ! இரவே! கேள் சூரியன்வாவே என்னை யடிமையாகவுடைய நாயகனும் என்னிடத்திற்கு வருவார், நீ மிகவும்பொல்லாத கொடியன் போய்விடு, கறுத்த சூரியனைப்போல திருமேனியையுடைய அந்நாயகன் பாதத்தின் பிறகே போய்விட்டையே! ஓ மனதே! அவர்வரும்போது கூடவருகிறதற் கிருக்கிறுயோ! ஒருதிரமாகிலும் வந்து விசாரிக்கலாகாதா! பனி[illegible]ம் அன்றில்பக்ஷியே! சத்த சமுத்திரம் போல ராத்திரி பெருகிறது விடிய விலேயே! பிரிந்திருக்கிற வருத்தமும் உனக்குத் தெரியுமே? எதுக்கு நீயுங்கூவிப் பழிசம்பாதித்துக் கொள்ளுகிறுய். ஓ! சந்திரனே! நீ! நெருப்பைப்போல சுடுகிறையே! இப்படி செய்கிறதினு லல்லவா! உன்சரீரம் நாளுக்குநாள் தேய்ந்துபோகின்றது? ஓ! தென்றற்புலியே! நீயும்இரைதேடிக்கொண்டுவெளிப்பட்டாயோ! உருவெளியைக்கண்டும் இப்படிக்கு எதிரோதிற்கிறது நல்லதோ! கன்னிகைகளிருக்கிற வீட்டத்தில் ராஜாக்கள் வரலாமோ! இந்த ராத்திரி ஓர் ஊழிகாலம்போலயிருக்கின்றதே! குழலோசையும் நிற்கிறதில்லை! பகலானதும்வருகிறதில்லை! ராத்திரியும் போகிறதில்லை! மனோவியாதியும் தீருகிறதில்லை! பிராணனும் போகிறதில்லை! கண்களோநித்திரையும் கொள்கிற தில்லேயே! ஐயோ! இப்படியாக நமக்குவந்து சம்பவிக்கவேணுமா! ஓ! சமுத்திரமே! என்னைப்போலவே நீயும் உறங்கவில்லை! எழுந்தெழுந்து படுக்கிறுய்! மன்மதபாணத்திற்கு பயந்திருக்கிறதற்கு என்னைப்போல நீயும் ஒருகன்னிகைதானே என்று இப்படிபலவாருகச் சொல்லிச் சொல்லிச்சோர்ந்து மயங்கி யிருந்தாள். ஸ்ரீராமனுமப்படியே விரகதாபத்தினுல் அந்தக்கன்னிகையை முன்கண்டது மல்லாமல் இன்றையதினம் கண்டும் ஆசைக் கடலுக்குக்கறை காணுமற் போனேம். மின்னலைப்போல தானே! அம்மின்னலைக் கண்டறிந்தவர்களு முண்டோ! ஓ! விதியே! சந்திரனே! நீ என்மனதில் குடியாயிருக்கிற ஸ்திரீயினுடைய நெற்றியைப்போல் இருந்துக் கொண்டு! காமவினைப்புக்கு எருபோல யிருக்கிறநீ! என்னுடனேயுறவாகவில்லேயே! அந்த ஸ்திரீயினுடைய கண்ணைப் போல கறுத்து விசாலமாய்வளர்ந்திருக்கிற ஓ! இருளே! அக்கன்னியின்பின்னே போயிருக்கிற! ஆ! என்மனமேகேளாதவர்கள் அண்டையிலும் இருக்கலாமோ விடைவரய்க் கொண்டு வந்துவிடலாகாதோ! எனைமறந்துப் போய்விட்டாயோ ஓ மனமே ஆலகாலவிஷம் பாம்பினிடத்தி லென்பது, பூர்வகாலமாக யிருக்கவேணும் இப்போது என்மனதிலும் கண்ணிலும் இடைவிடாமல் நிற்கிற அந்த ஸ்திரீயினுடைய கண்களில் தானந்த விஷமிருக்கின்றது. அனேக மாளிகையும் – சோலையும் – நந்தவனங்கள்முதலானதுகளுமிருக்க, அதுகளில்விளையாடாமல் கல்போ லிருக்கிற என் மனதிலேயா அக்கன்னிகைவிளையாடவேணும் என்று பலவாருகச் சொல்லிச் சொல்லித் துயரத்தில் அழுந்தியிருக்கிற சமயத்தில்,



நாளையத்தினம் சீதைக்குத் திருக்கலியாணமுகூர்த்தம், ஆதலால் பட்டணத்தை அலங்காரம் செய்யுங்களென்று யானையின்பேரில் பேரிகைவைத்து அடித்தார்கள். அந்தபேரிகை சத்தம்கேட்கவே, பட்டணத்திலுள்ளபாலியர் விருத்தர்முதலிய யாவரும் அதிகசந்தோஷத்துடனே இராத்திரியென்கிற சமுத்திரத்திற்குக் கரைகண்டார்கள், அப்போது சூரியபகவான் நீலமேக சுரூபனை புருஷோத்தமனும் ஸ்ரீமகாலக்ஷுமியும் நாளையதினம் சேருவார்களென்கிற செய்திகேட்டு அந்தமணவாளன்கோலத்தை தரிசனஞ்செய்கிற நிமித்திய மொருதேரின்பேரில் ஏறிக்கொண்டு அதி சீக்கிரமாகவந்தார். சூரியவுதயமாகவே பட்டணத்துஜெனங்கள் தங்கள் தங்கள் மாளிகைகளைச் சிங்காரித்து மகரதோரணங்கள் நாட்டுவாரும் இரத்தினகஜிதமான தூண்களுக்குத் தாவளியமான சீலைகளைச்சுற்றுகிறவர்களும் உப்பரிகைகளின்பேரிலே சொர்ன்னகலசங்கள் அதிகபிரகாசமாகவைப்பாரும் பலபலவர்ன்ன விதங்களான துவஜங்கள் கட்டுவாரும் பிராமணபோசனத்துக்கு அறுசுவை பதார்த்தத்துடனே சமையல்செய்து வைப்பாரும் அன்னங்கள்போல ஸ்திரீகள் நடந்துவருகிறதும் ரிஷபங்கள்போலப் புருடர்கள் நடந்துவருகிறதும் முத்து-சுவர்ன்னம்-ரத்னம்-இவைகளால்செய்த ஆபரணங்களை அணிந்துக்கொள்ளுகிறவர்களும், வாழை கமுகம் கரும்பு முதலானவைகளை பந்தல்களுக்கு அலங்காரம் செய்கிறவர்களும், சந்தனம் அகில் முதலிய பரிமளதிரவியங்கள் வீதிகளிலே யிறைக்கிறவர்களும் சுகந்த புஷ்பங்களைச் சொரிகிறவர்களும், பளிங்கினுலே திண்ணைகள் பந்திபந்தியாகச் செய்து அகண்ட தீபங்க ளமைத்துப் பாலிகைகள்வைக்கிறவர்களும், வீதிகளிலேயும், முற்றங்களிலேயும், முத்துப்பந்தல் போடுகிறவர்களும், தேவேந்திரனுடைய சபைகூட இதற்குச் சமமாக, மாட்டாதென்று சொல்லும்படியாய் மேல்கட்டு முதலானதுகள்கட்டிப் பந்தல்கள் சிங்காரிப்பாரும், ரதத்தின்பேரி லேறிவருகிறபேரும், புஷ்பங்கள் கொண்டுவருவாரும், தாம்பூலங்கொண்டு வருகிறவர்களும், குண்டலம்பிரகாசிக்கக் குரவை பிணைந்தாடுவோரும், மதயானைகளை சிங்காரிப்பாரும், வச்சிரப் பிரகாசமான மேடைகளிலே தீபங்கள்கொண்டு வந்து வைக்கிறவர்களும், கொடிகள் நடுகிறவர்களும், ஸ்திரீகள் சிங்காரித்துக் கொள்ளுகிறபோது, தப்பிவிழுந்துபோன ஆபரணங்களும், தங்கவளைகளும், ஸ்திரீபுருஷாள் பிணக்கினுலே விட்டெறிந்துபோட்ட ஆபரணங்களும், கந்தம்-கதம்பப்பொடி புஷ்பதூளிக ளிதுகளை க்குப்பையாக வாரியெடுத்து அப்பாலே போடுகிறவர்களும், இராஜாக்கள் வருகிறதும், பிராமணகூட்டங்கள் நிறைகிறதும், யாழ்வீணைகள் கேட்கிறவர்களும், முகூர்த்தவேளை யணுகுதாவென்று நாழிகை பார்க்கிறவர்களும், தாசிகள் கூட்டங் கூட்டமாய் வருகிறதும், வித்தியாப்பிரசங்கம் பண்ணுகிறவர்களும், இராஜகூட்டங்கள் மிகவும் நிறைந்து நெருங்கி கிரீடங்களுடனே கிரீடங்க ளுரைபட்டு ரத்தினத்துடனே பொன்பொடிகள் விழுந்து மலைமலையாய்க் குவிந்திருக்கிற ஆசாரவாசல்களிலே பிராமணுள் வருகிறதும், அனேக இராஜகுமாரர்கள் விஞ்சையர் குமாரர்கள்போலச் சுந்தரத்துடனே ஆயுதபாணிகளாய்த் திரிகிறவர்களும், நாடகசாலைப் பெண்கள் அங்கங்கே நடனம்செய்கிறதும், தேவகன்னிகைகள் தங்கள்லோகமென்றும், மிதிலாபுரியென்றும், வேற்றுமை தெரியாமல் மயங்குகிறதும், இந்தப்பட்டணத்துஸ்திரீகள் உப்பரிகையின்பேரிலேறி தேவலோகஞ் சமீபமானபடியினுலே அதைத் தங்கள் பட்டணமென்று மயங்கிப்பார்க்கிறவர்களும், சந்தன குதம்ப கஸ்தூரி பூசுகிறவர்களும், ஆபரணங்கள் பூட்டிக்கொள்ளுகிறவர்களும், தலைமயிர் முடிக்கிறவர்களும், கண்ணுடிபார்த்து கிரீடமுதலான ஆபரணங்களைத் திருத்தித் தரித்துக்கொள்ளுகிறவர்களும், புஷ்பமாலை தரிக்கிறவர்களும், சித்திரவஸ்திரங்கள் தரித்துக்கொள்ளுகிறவர்களும், வாளைப்போலவும்-விஷம்போலவும்-கண்களையுடைத்தான ஸ்திரீகளும், அமிர்தம்போல வார்த்தையை யுடைத்தானவர்களும், பர்வதம்போல ரூபாகாரங்களை யுடைத்தானவர்களும், முத்துப்போல தந்தங்களையுடைத்தானவர்களும், செவ்விளநீர் பர்வதம்போல தனங்களை யுடைத்தானவர்களும், நாவிழைபோலே யிடையும் நடையும் உடைய ஸ்திரீகள் எங்கும்நிறைந்து நெருங்கினுர்கள். அன்றையதினம் அந்த மிதிலாபுரி பட்டணம் (தேவேந்திரனுக்குப் பட்டாபிஷேக மாகிறபோது அமராபதிபட்டண மிருந்ததுபோல) அனேக சிங்கார அலங்கார சம்பிரமத்துடனிருந்தது. கலியாணமண்டபம் சுவர்ன்னத்தினுலே செய்து, பர்வதம்போல உயர்ந்து நவரத்னகஜித கோடிசூரியப்பிரகாசமாகப் பிரகாசித்துக்கொண்டு விஸ்தீர்ண மிவ்வளவென்று ஒருவராலுங் காணக்கூடாத விதமாக அமைத்திருக்கிற, அந்தமண்டபத்துக்கு ராஜாதிராஜனுன தசரதமகாராஜன் புறப்பட்டு மங்கலபேரிகைகள் மேககெர்ச்சனைபோல முழங்க, தவளச்சங்கம் முதலானதுகள்சத்திக்க, தேவபிராமணுள்வேதபாராயணஞ்செய்ய, முத்துக்கொடை பிரகாசிக்க, அனேகராஜாக்களும் ரிஷியீஸ்வரர்களும் வந்தார்கள். தேவர்களும் வந்தார்கள். ஜனகமகாராஜாவும் பந்துஜனங்கள் மந்திரிகள் ராஜாக்கள் முதலானபேர்களோடு வந்துசேர்ந்தார். அனேக ஸ்திரீகூட்டங்களும்வந்து நிறைந்தது. இவ்வித அலங்காரங்க[illegible]ந்தியிருக்கிறபடியினுலே, அந்தமண்டபம் மகாமேரு பர்[illegible]ம்போலவும், பிரமாண்டம்போலவும், ஸ்ரீமகாவிஷ்ணுவி[illegible]டைய வயிறுபோலவும், பிரகாசித்திருந்தது. அப்போ[illegible] ஸ்ரீ[illegible]மன் சத்தசாகரத்தினுடைய தீர்த்தமும். கங்கைமு[illegible]லான சத்தநதியினுடைய தீர்த்தமும்ஆடி, தங்கள்[illegible]ரைச்சேவித்து வழிபட்டுவருகிற ஸ்ரீரங்கநாதனைச்சேவித்து வணங்கி பிராமணுளுக்கு அனேக கன்னிகாதானங்கள்பண்ணி, கிருபாநிதியாய் சிற்பசாஸ்திரமறிந்த சித்திரக்காரனுலும் எழுதுகிறதற்கு அருமையான சுந்தரத்தோடு அமைந்திருக்கிற திருமேனியில் புஷ்பமாலைதரித்து, சீதையினுடைய மனோபாவத்தை சந்தி

ரகுரியர் திருச்செவியில் சொல்லுகிற பாவனைபோல
இரண்டுசெவிக்கும்குண்டலந்தரித்து, கிற்றுச்சந்திரனை
ப்போல வீரபட்டமுங் கட்டி, கண்டத்தில் (சீதையி
னுடைய நகைப்பானது யிருதயத்திலிருந்து திருமே
னியின் மேல் புளகிக் கிறதுபோல) முத்துமாலையைத்
தரித்து வாசுகிபோல ரத்ந சஜிதமான தோள்வலயம்
பூட்டி, திரிலோகங்களுக்கும் முதல்வன் இவன்தானெ
ன்று குறியிட்டு வைத்தது போல ஏகரத்ந கஜிதமான
பாகுமத்தியாபரணம்தரித்து, கர்ப்பகவிருக்ஷம்போலிரு
க்கிற திருக்கைகளில் ரத்தினகடையங்களிட்டு, திருமா
ர்பில் நவரத்தின கஜிதமான பதக்கத்தோடு கூடியஹா
ரம் முதலானவைகளும் தரித்து, பரமஞானிகளின் மந
ம்போல தாவள்ளியமான உத்தரீகம் பிரகாசிக்க, மும்
மூர்த்திகளும் தானென்றுயாவருக்கும்தோன்றமுப்புரி
நூல் விளங்க, வேமெரு அண்டமும் பிர்ம்மாவும் இரு
க்கிறதுபோல உதர பந்தனமும் பூட்டி, கருங்கடலைத்தி
ருப்பாற்கடல் தழுவினது போல் வெண்பட்டு வஸ்திர
மும் தரித்து, மகம்மேருவைப் பிரதக்ஷணம்வருகிற சூ
ரியனைப்போல அரையில் வாளுங்கட்டி, அந்தவாளென்
கிற சூரியனுடைய பிரகாசம்போலக்கச்சினுடையதொ
ங்கல்தொங்க, பூரணச்சந்திரனைப்போல திருமுகத்தினு
டைய அழகும் பாலசந்திரப் பிரகாசம் போலச் சிறுந
கையின் ஒளிவீச, பாதாரவிந்தத்தி லிருக்கும் சிலம்புஇ
னிமே லெப்படி உலாங்சளை அளந்து பார்ப்போமென்
று திருவடிகளைவளைத்துக்கொண்டதுபோலபிரகாசிக்க
பிர்ம்மாமுதலான சராசரங்களினுடைய அக்கியானங்க
ளைப்போக்கடித்து மோக்ஷ சாம்பிராச்சியத்தைக்கொடு
க்கிற தம்முடைய திருநாமத்தைத் தாமும் சாத்திக்கொ
ண்டு, தேவர்களுக்குள் தம்முடைய சுரூபமெப்படிஅதி
சயமோ? அப்படி அதிசெயமாகச் சிங்காரித்துக் கொ
ண்டு அழகிய மணவாளத்திருக்கோலமானார். மும்மூர்
த்திகளுக்கும் முதல்வனான ஆதி மூலத்தையும், தாசபூத
னுமாய் சகலஜீவகோடிகளுக்குள்ளும் விளங்கா நின்ற
சுரூபனையும், தனக்குத்தானே சமானமான அந்தப்பர
மபுருஷோத்தமனையும், அடியேனெவ்வளவு வர்ன்னித்
துச் சொல்லப்போகிறேன். ஸ்ரீராமன் அனேகம் பசுக்
களும் சுவர்ன்னங்களும் பூமிகளும் ரத்தினங்களும்பிரா
மணோத்தமருக்[illegible]த்தானம் செய்து அவர்களாசிகூற, ஒ
ரு ரதத்தின்பே[illegible]. அது பொன் வெள்ளி ரத்ந
ம் வச்சிரம் [illegible]யவைகளால் அனேக சிங்காரத்துட
னே செய்திருந்தது. அதில் ஸ்ரீராமனெழுந்தருள, பர
[illegible]ன ஆனந்தத்துடனே அருணனைப்போலகரத்தி
ல் [கோ]ல்பிடித்துக் கொண்டு, ரத சாரதியாய் நடாத்த,
[illegible]தம், சத்துருக்கரும்இருபக்கத்திலும் வெண்
[சா]மரைவீச கலியாணமண்டபம் நோக்கிப்புறப்பட்டா
ர். அப்போது அவருடைய சுந்தரத்தைப் பார்க்கவந்த
சகலமான பேரும் மிகுந்த சந்தோஷத்துடனே தேவ
ர்போல நிமைகொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தா
ர்கள். தேவர்களும் இனி ராக்ஷசகூட்டம் நசிக்கப்போ
மென்று, தங்களுடைய தேகம் தங்களுக்குத் தோன்றும
ல் பரமாநந்தத்திலிருந்தார்கள் அந்த தேவர்கள் அரம்
பையா ஸ்திரீகளுடனே கூட நடனமும் பண்ணினார்கள்
லோகநாதனான ஸ்ரீராமனை வீதிகளிலே பார்க்கவந்த ஸ்
திரீகளினுடைய சகலாபரணங்களும் தனக்குத் தானே
பூமியிலேநழுவிவிழுந்துபோக நிற்கிறவர்களையோசிக்கில்
கையிலுண்டாகிய பொருள்முதலியயாவற்றும் கொடுத்
துப் பின்பு அணிந் திருக்கும் திருவாபரண முதலிய
தையும் கொடுக்கும் தியாகிகளைப் போல யிருந்தது, ஸ்ரீ
ராமன், அனேகராஜகூட்டம் சூழ்ந்துவர ராஜாதி ராஜ
னான தசரதமகாராஜன் வீற்றிருக்கிற, கலியாணமண்ட
பத்தில், மகாமேருவைச் சேரும் சூரியனைப்போலச்சே
ர்ந்து, பரதலக்ஷ்மணனிருவரும் இருபாரிசத்திலிலகை
லாகுகொடுக்க. தேவாதிதேவனான ஸ்ரீராமன் ரதமவிட்
டிறங்கி, மஹாரிஷி யீஸ்வராளையும் தயாநிதியோடு கூ
டியதமது பிதாவையும் சேவித்துக்கொண்டு, அ[illegible]த்தி
ல் ரத்தினாசனத்திலெழுந்தருளியிருந்தார். (மகாலக்ஷ
மியானவள் பூர்வத்தில் திருப்பாற்கடலில்பிறந்து, பின்
பு பூமியில் அவதரித்து மறுபடியும் மலையில் பிறக்கிற
பாவனைபோல) சீதையானவள் அந்த திருக்கலியாண
மண்டபத்தில் அனேகம் பாங்கிகளோடுவந்து சேர்ந்தா
ள் சுவர்க்கம் மத்திய பாதாளம் என்கிற மூன்றுலோகத்தி
லுமுள்ள வஸ்துக்களினுடைய அழகு, இந்த லக்ஷ்மியி
னுடைய அங்கிசையாகயிருக்குமாகில் இத்திருக்கலியா
ணத்தினுடைய அழகு இன்னபடியிருக்குமென்று அடி
யேன் சொல்லத்தரமோ? சகிதாளுகிய சிவன் பார்வ
தியோடும், இந்திரன் சசியோடும், பிரமதேவன் சரஸ்
வதியோடும்வந்து, இந்த மகாலக்ஷ்மியினுடையதிருவ
ழகைக்கண்டு அந்தரத்திலேயே யிருந்து விட்டார்கள். ச
முத்திரம் போல பிராம ணோத்தமரும் இருஷிகளும்
சூழ்ந்துவர, வசிஷ்டமகாமுனி இந்த திருக்கலியாண ம
ஹோச்சவத்திற்கு வேண்டிய தருப்பை சமிதை முத
லியதோடுவந்து சேர்ந்து, தண்டிலம் பரப்பி தருப்பை
சாத்திவேதசாஸ்திர விதிப்படிக்குமண்டலாகாரமாகச்
செய்து ஓமாக்கினியை மூட்டி, ஆவினெய்யை ஆவுதி
யாகவிட்டு மிகுந்த அன்புடனே ஓமம்வளர்த்தினார் அப்
போது ஸ்ரீராமனும் சீதாலக்ஷ்மியும் ஏகாசனத்திலெ
ழுந்தருள, இருபக்கத்திலும் ஸ்திரீகள் வெண்சாமரைவீ
ச, முனிசிரேஷ்டர்கள் ஆசிகூற, யோகமும் போகமும்
ஒன்றாகக்கூடினதுபோல ஒத்து வீற்றிருந்தார்கள். ஜன
கமகாராஜன் ஸ்ரீராமனெதிரே வந்து சந்தோஷத் துட
னே, (ஸ்ரீமகாவிஷ்ணுவும் லக்ஷ்மியையும்போல) என்
னுடைய குமாரத்தியாகிய சீதையோடு கூடிவாழ்ந்திரு
மென்று ஆசிர்வதித்துத்தாரைவார்த்தார், அத்தருணத்
தில், தேவர்கள் புஷ்பமாரி பொழிந்தார்கள், பிராமணு
ளும் மகாரிஷிகளும் ஆசீர்வதித்தார்கள் ஸ்திரீ கூட்டங்க
ள் பல்லாண்டிசைத்தார்கள் தேசதேசத்து ராஜாக்கள்
நமஸ்காரஞ் செய்து தோத்திரம் செய்தார்கள். பேரி
கை முதலிய பவைாத் தியங்கள் சமுத்திர கோஷ்டம்
போல முழங்கிற்று, தேவர்கள் பொழிந்த புஷ்ப மா
ரியும், - நவரத் தினமும் - பொன் - புஷ்பங்களும் -



பூலோகத்தார் சொரிந்ததும் - அந்த - விசாலமானபூ
மியெங்கும் நிறைந்து, நக்ஷத்திரங்கள் பிரகாசித்துக்
கொண்டிருக்கிற ஆகாயம்போலயிருந்தது. மகாரிஷியா
கிய வசிஷ்டபகவான் ஆக்கியாபித்தபடிக்கு ஸ்ரீராமன்
ஓமாக்கினிக்கு சகல ஆவுதியும் கொடுத்து, கோடான
கோடி பிராமணாளுக்கு சோடசதானங்களும் செய்து,
மாந்தளிர்போன்ற சீதையினுடைய திருக்கரத்தைத் தா
மரைக் கமலம்போலிருக்கிற தமது திருக்கரத்தினால் பி
டித்துக்கொண்டு உயிருமுடலும்போல ஸ்ரீராமன்முன்
னும் சீதாலக்ஷ்மி பின்னுமாக ஓமாக்கினியைப் பிரத
க்ஷணம்வந்து அக்கினிதேவனை வணங்கிப் பொரிசிந்தி
அம்மியுமிதித்து எதிரில்நின்ற அருந்ததியையும் பார்த்
து செய்யவேண்டிய யாவற்றும்செய்து, மகாமுனி யீஸ்
வரரையும் தசரதமகாராஜாவையும் சேவித்து மகாசந்
தோஷத்தோடு திருமாமகளாகிய சீதாபிராட்டியின் தி
ருக்கரத்தைப் பற்றிக்கொண்டு பேரிகை - சங்கம் - முத
லிய வாத்தியங்கள் ஆர்ப்பரிக்க, நான்கு வேதங்களும்,
சாஸ்திரங்களும், சப்திக்க, தேவர்கள் பல்லாண்டிசைக்
க, திருவோலக்கத்தோடு திருமாளிகையிற்போய்ச் சே
ர்ந்து தாயைப்பார்க்கிலும் மிகுந்த அன்போடு கைகேசி
யினுடைய உபய சரணாரவிந்தங்களையும் பின்பு தன் அ
ன்னையாகியகௌசலையையும், சுமித்திரையையும், சேவித்
துக்கொண்டார். சீதாபிராட்டியாரும் அவ்வாறே அவ
ர்களைச் சேவித்துக்கொண்டாள். அவர்கள்அதிகசந்தோ
ஷ பிரியத்துடனே மருமகளைத் தழுவிக்கொண்டு மிதமி
ல்லாத வாஞ்சல்லியத்துடனே நம்முடைய ஸ்ரீராமனுக்
கு இயற்கையான ஸ்திரீ இவளைப்போலுலகத்தில்கிடை
யாதென்றுசொல்லி கண்களித்து மனங்குளிர்ந்து பார்
த்து அனேகம் ஆசிகள்கூறி, அனேக திருவாபரணங்க
ள் - திரவியங்கள் - ஸ்திரீகூட்டங்கள் - பட்டுவஸ்திரங்
கள் - ராச்சியங்கள் - ரத்தினங்கள் - அபரிமிதமாக அ
ளித்தார்கள். கிருபாநிதியான தசரதராமனும் ஸ்ரீமகால
க்ஷ்மியான சீதையும் திருப்பாற்கடலுக்குச் சமமான
பள்ளி அறையிற்சேர்ந்து அதிக சம்பிரமமாய்க் கூடியி
ருந்தார்கள். பங்குனி உத்தரத்திலே வசிஷ்ட மகாமுனி
மங்கலாக்கினி செய்துவைத்தார், ஜநகமகாராஜன் தசர
தமகாராஜாவின் சமீபத்துக்குவந்து என்குமாரத்திகள்
மூன்றுகன்னிகைகளிருக்கின்றார்கள். அவர்களை உம்மு
டைய குமாரர்களாகிய மற்ற மூவருக்கும் திருக்கலியா
ணம் செய்யவேணுமென்றுமிகுந்த அன்புடனேசொல்
ல, அவரும் அதைக்கேட்டு அதிக சந்தோஷத்தோடுவ
சிஷ்டர் விஸ்வாமித்திரர் முதலானவர்களுடனேயுஞ்
சொல்லி, அந்தப் பெண்களையும் பார்த்து, மிகுந்த சந்
தோஷத்துடனே, பரதனுக்கு மாண்டவியென்கிற கன்
னிகையையும், லக்ஷ்மணனுக்கு ஊர்மிளையென்கிற கன்
னிகையையும், சத்துருக்கனுக்கு சுதகீர்த்தி என்கிற க
ன்னிகையையும் கலியாணம்செய்தார் ஜனகமகாராஜனு
ம் அவருடையதம்பி குசத்துவஜனும் அதிக சந்தோஷ
மாய் இருதயானந்தமானார்கள். அனேககோடி பிராமணா
ளுக்குத் தானமுதலியதும் கொடுத்து, அதிகசந்தோஷ
த்துடன் இருந்தார்கள். ஸ்ரீராமனும் சீதையும் பேரின்
பத்துடனே வீற்றிருந்தார்கள். தசரதமகாராஜன் முத
லிய சகலமானபேரும் மிகுந்த இஷ்டத்தோடு சிலநாள்
மிதிலாபுரிபட்டணத்தி லிருந்தார்கள். அப்போது விஸ்
வாமித்திர மகாமுனி இமாசலத்திற்குப் போகிறதாய்
ஸ்ரீராமன்முதலிய யாவருக்கும் ஆசீர்வாதம் செய்துப்
போய்விட்டார். பின்புசிலநாள்சென்றுஒருநாள்தசரதம
காராஜன் அயோத்தியாபுரிக்குப்போகும்படிபிரையாண
மாகிபிள்ளைகளும், மருமக்களும், பந்துசனங்களும், சேனை
சமுத்திரம்போல மிதிலை சனங்களும்தொடர்ந்துவர, தே
ரின்பேரிலேறிக்கொண்டுநடக்கும்போதுவழியிலேகாதம
இடமும், மயில் வலமுமா யிப்படி சிறுது தடையான
சகுனத்தை தசரதமகாராஜன்கண்டு, இவ்விடத்தில் என்
னமோ இடையூறுவர யிருக்கின்றதென்று எண்ணித்
தேரை நிறுத்தினார்.

## பரசுராமப்படலம்.

இப்படிக்கிருக்க சகுனபரீக்ஷை யறிந்த ஒருவனை
யழைத்து இச்சகுனம் நன்மையோ தீமையோவென்று
கேட்க அவனிந்த க்ஷணத்திலேதானே ஒருயிடையூறுவ
ரும் ஆனால் அதுஉடனே நன்மையாகுமென்று சொன்
னான், இதைக்கேட்டுக்கொண் டிருக்கிற சமயத்திலொரு
மஹாபுருஷன் ஆகாயத்திலுள்ள இருளைக்கிழித்துப்பிர
காசிக்கிற மின்னல்போல் சடையும்-கையில் மழுவாயுத
மும் - கண்களில்பொறிபறக்க மஹம்மேருபர்வதம்போ
ல யெதிரே வந்தான். அவன்வருகிறபோது பயப்பிராந்
தியினாலே பூலோகமெல்லாம் (கடலிலேகப்பல் சுழலு
கிறதுபோல) சுழல, அஷ்டகஜங்களும்மனம்தளர, அஷ்
டதிக்குப்பாலகர்களும் நடுநடுங்கியோட, ஒரு பர்வதம்
போல வில்லுந் தரித்துக்கொண்டு, இந்த பிர்ம்மாண்ட
த்தைக் கீழ்மேலாய்ச் செய்யத்தக்க கோபத்துடனே ம
ழுவாயுதம் புகையெழும்ப, சூரியனும் பயந்தொதுங்க,
சமுத்திரத்தி லிருக்கிற வடவாக்கினி பூமியிலெரிந்துக்
கொண்டு நடந்துவருகிறதுபோலவர், புஜங்கள் திக்குக
ளெல்லாம்நிறைய, சடாமண்டலம் ஆகாயத்தைமுட்ட,
அங்கிருக்கிற அர்த்தசந்திரன் அச்சடையின்பேரில்தோ
ன்ற பிரளயகால ருத்திரனைப்போல வந்தான் அவர்யா
ரெனில் பூர்வத்தில் ஓ ராசன் குற்றஞ்செய்ய அதற்கு
மற்ற அரசர்களை இருபத்தொரு தலைமுறைகருவறுத்து
அவர்க ளிரத்தத்தில் ஸ்நானம் செய்தவர் மகாபலவந்த
னை கார்த்தவீரி யார்ச்சுனனுடைய ஆயிரந்தோள்களை
யும் மழுவாயுதத்தினாலறுத்து ஜெயங்கொண்ட மகாபி
ரதாபத்தை யுடையவர். அவர் நாமதேயம் பரசுராமன்
அவர்வரவே தசரதமகாராஜன் கண்டு பயந்து இந்தக்க
ரோன் இப்போது வரவேண்டிய காரியமென்னவென்று
நினைக்கிறசமயத்தில் அவர் சேனாசமுத்திரத்தின் மத்தி
யில்விழுந்து புருவங்களை நெறித்துக்கொண்டு கண்களி
ல் அக்கினிப்பொறிகள் பறக்க, யுகாந்தகால இடியைப்
போல சத்தித்துக்கொண்டு, ரதத்திலிருக்கிற ஸ்ரீராமன்
சமீபத்தில் போனார். அவரும இவனைப்பார்த்து இவ
ரார்ரோவென்று நினைக்கிறவேளையில், தசரதமகாராஜன்
அதிசீக்கிரமாக பரசுராமனெதிரேவந்து, சாஷ்டாங்கமா
கச்சேவிக்க, அதைப்பாராமல் பிரளயகாலாக்கினிபோ
ல ஸ்ரீராமனைப்பார்த்து கோபங்கொண்டு ஒருவார்த்தை
சொல்லுகிறார். பூர்வத்தில் ஊனமான வில்லையொடித்தா
யே அதனுடைய நிறுவாகம் நானறிவேன் உன்னுடைய
நிறுவாகத்தை நான் அறியவேணுமென் றிருக்கின்றேன்
மேலும் நெடுங்காலமா யென்னுடனெதிர்ப்பாரில்லாமல்
புஜங்கள் தினவுகொண் டிருக்கின்றன. அந்தத்தினவை

த் தீர்த்துக்கொள்ள இவ்விடத்துக்கு வந்தேனென்று
சொல்ல, அவ்வார்த்தையை தசரதமகாராஜன்கேட்டு மி
கவும்பயந்து ஸ்வாமி! நீர் பூலோகத்திலிருந்த ராஜாக்
களை எல்லாம் ஜெயித்து பூலோகத்தை பிராமணருக்கு
த் தானம்பண்ணினீர், உம்முடனே எதிர்க்கிறதற்கு அ
ந்தச்சிவனுலேயும், பிர்ம்மாவினுலேயும், ஆகாதே, மனு
ஷன் எவ்வளவு அதிலும் இவன் மிகவுஞ் சிறுபிள்ளை ஆ
தலால் இவனும் என்னுடைய பிராணனும் உமக்கு அ
டைக்கலம் உமக்குச் சமமானபேருடனே கோபம்செய
யவேணுமேயல்லது ஏழைகள்பேரில் சோபம்செய்வதி
ல் யாதுபயன்பூர்வத்தில்ராஜாக்களிடத்தில்கோபித்தது அ
க்கோபமாறி அநுக்கிரகஞ்செய்ததேவரீரோ திரும்பக்கோ
பம் செய்வது தருமமல்ல, தருமத்துடனேவந்த ஜெய
மே ஜெயம் அதர்மத்திலேவருகிற ஜெயமுஞ்ஜெயமல்ல
பலமும் பலமல்லவே! என்மகனே! இன்னம் ஆயுதப்பி
க்ஷையே யறியான், அவனுடைய பிராணனை நீர்கொடு
க்கவேணும் அதவர் அவனுக்கொரு அபாயம் நேரிடுமா
னல் நான் என்குலத்துடனே மடிந்து போவனேயல்லா
மல் வேறில்லை! உம்முடைய அடியனாகிய, என் குலத்
துடனே மடிந்துபோகாமல்கிருபைசெய்து அவன்பிரா
ணனைக் கொடுக்கிறேன் என்கிறவரம் எனக்குக்கொடுக்
கவேணுமென்று கைபேந்தி, வருந்தி, திரும்பவும் சாஷ்
டாங்கமாகவிழுந்து சேவித்தார். இப்படிக்குச் சரணாகதி
யாகிய தசரதமகாராஜனை அவர்நோக்காமல் இகழ்ந்செய்
து அதிககோபத்துடனே ஸ்ரீராமனைப்பார்த்தார். அப்
போது தசரதமகாராஜன் நம்மால் யாதொரு செயலும்
இல்லையென்று மின்னலைக்கண்ட நாகம்போல நடுநடுங்கி
ச் சோர்ந்துபோனார். பரசுராமன் ஸ்ரீராமனைநோக்கி
நீ ஒடித்தவில் ஊனமானது அதனுடைய விர்த்தாந்தம்
சொல்லுகிறேன் கேளும், பூர்வத்தில் மகம்மேரு பர்வ
தத்தின் பேரில் ஒரு மகாரிஷியின் தபோபலத்தினால் ஒ
ரு மூங்கில்முளைத்தது அதை இரண்டு வில்லாகச்செய்
து அதிலொன்றை பார்வதிசமேதரான சிவன் எடுத்து
க்கொண்டார். மற்றொன்றை ஸ்ரீயப்பதியாகிய மகாவிஷ்
ணு எடுத்துக்கொண்டார். தேவர்கள் இவைகளில் எது
பலமானவில்லென்று பிர்ம்மதேவனைக்கேட்க அவர்தே
வர்கள் வில்லைநோக்கி பலாபலமறியக் கேட்கிறார்கள் எ
ன்று அறிந்து இருவருக்கும் சண்டையுண்டாக்கி வைத்
தார். அவர்கள் அவ்வில்லுகளை எடுத்துக்கொண்டு உலக
ங்களும், திக்குகளும், அக்கினிஜ்வாலை எழும்பும்படி யு
த்தஞ்செய்தார்கள். சிவன்கையிலிருந்த வில்லுநெரிந்து
ம் போர்செய்ய யத்தனம்செய்யவே, பிர்ம்மாவும், தே
வர்களும், பயந்துவிலக்கி தேவேந்திரன் கையையிட்டு,
அவன்கையில் சிவன் தனதுவில்லைக் கொடுத்துவிட்டா
ர். ஸ்ரீமகாவிஷ்ணுவும்தம்மிடகையிலிருந்தவில்லை மகாத
பசியாகிய இருசிகமகாரிஷிகையிற்கொடுத்தார். அவரெ
ன்பிதாவாகிய ஜமதக்கினி மகாரிஷிக்குக் கொடுத்தார்.
அவர் எனக்குக் கொடுத்தார். அதுதான் இது இதை நீ
நாரியேற்றிவளைப்பாயேயாகில்இராஜாக்களிலுனக்குச்ச
மமானவர்களில்லை. உன்னுடன் போருஞ் செய்வேன்.
மேலும் இன்னமொன்று சொல்லுகிறேன் கேளும், அ
ந்த ஊனவில்லை ஒடித்தோமென்கிற கர்வம்வேண்டாம்.

என்தகப்பனை ஓரரசன்கொல்ல, அது நிமித்தம் இக்
தமழுவாயுதத்தினால்ராஜ்ஜியத்திலுண்டாகிய இராஜாக்க
ளையெல்லாம் வேரறக்களைந்துக்கொன்று அவர்கள் உதி
ரத்திலேமூழ்கி என்தகப்பனுக்குதியத் திலோதக வா
சோதகமாக அதைவிட்டுத் தணிந்தேன். பிறகு ஒரு
பர்வதச் சாரலிலேபோய் தபம்செய்துக்கொண் டிருந்
தேன். அவ்விடத்தில் நீ அந்தவில்லை யொடித்த சத்தம்
நான்கேட்டு கோபத்துடனே புறப்பட்டுவந்தேன். நீசா
மர்த்தியனானால் உன்னுடனே போருஞ் செய்கிறேன்.
உன்னாலாமாகில் இந்த வில்லை நாரியேற்றுமென்று பர
சுராமர்சொல்ல, அதுகேட்டு ஸ்ரீராமன் குஞ்சிரிப்பாக ந
கைத்து ஸ்ரீமன் நாராயணனுடைய வில்லைக்கொடுமென
அதைப் பரசுராமன்கொடுக்க, ஸ்ரீராமன்வாங்கி ஓர் க்ஷ
ணத்தில்வளைத்து நாரியேற்றி அஸ்திரத்தைப்பூட்டி இ
ழுத்துவாங்கி நிறுத்துக்கொண்டு ஒருவார்த்தைசொல்
லுகிறார். கேளும் ஓ! பரசுராமா! நீர் பூலோகத்து ரா
ஜாக்களையெல்லாம் கொன்றவராயிருந்தாலும் வேதவித்
தாயிருக்கிற பிராமணனுடைய பிள்ளையாக யிருக்கிறீர்.
அன்றியில் விரதம் பூண்டிருக்கிறீர் ஆதலால் உம்மைக்
கொல்லலாகாதே! நான்விடுகிறபாணமோவீணைகப்போ
கிறதல்லவே! ஆனபடியினாலே சீக்கிரமாக இதற்கு ஒரு
லக்ஷியம் சொல்லுமென்றுகேட்க, பரசுராமன் பயந்து
ஆச்சரியித்தனாகி ஸ்ரீராமா! கோபஞ் செய்யாதேயும் நீ
ர் சகலத்திற்கும் ஆதியான வஸ்துவென்று நானறியாம
ற்போனேன். உம்முடைய பலத்துக்கு சிவனுடைய வி
ல்லுநிலைநிற்காமலொடிந்தது. நீரே அந்த ஸ்ரீமன்நா
ராயணன் ஆனதாலிப்போது நான் கொடுத்த உம்முடைய
வில்லும் உமது பலத்துக்குப்போதாது, நீர் செலுத்து
ம் பாணமும் பழுதுபோகாது, ஆகையால் நீர் என்னு
டையத் தபோபலத்தின்பேரில் அதைசெலுத்துமென,
அப்படியே ஸ்ரீராமன்செலுத்த அது பரசுராமனுடைய
தபோபலன்கள் யாவற்றையும் கிரகித்துக்கொண்டு வந்
துவிட்டது. பரசுராமன் ஸ்ரீராமா! நீர் நினைத்தபொரு
ளெல்லாங் கைகூடக் கடவதென்று அன்புடனே ஆசீர்
வாதம்செய்து விடைபெற்றுக்கொண்டு தொழுது போ
னார். ஸ்ரீராமன் தம்பிட நிமித்தம் மூர்ச்சையாய் துயர
சாகரத்தில் மூழ்கிக்கிடக்கிற தகப்பனாரிடத்தில் வந்து
அன்புடனே தழுவிக்கொண்டு அக்கினயனைத்தீர்த்தார்,
அவரும் மூர்ச்சை தெளிந்து, க்லேசந்தீர்ந்து மனங்கு
ளிர்ந்து அதிகசந்தோஷத்துடனே பரசுராமன் கையிலி
ருந்தவில்லை வாங்கி அவனுக்கு அபஜெயம்பண்ணினவை
த்த ஸ்ரீராமனைமார்போடு தழுவிக்கொண்டு உச்சியைமு
கர்ந்து தம்முடைய கண்ணீராலே ஸ்நானம் செய்துவை
த்தார் இக்காரியம் யாராலேயாகும்! இம்மை மறுமை
இரண்டுக்கும் இந்த ஸ்ரீராமனேகதியென்று தசரதமகா
ராஜன் தம்முள் எண்ணி சந்தோஷித்தார். தேவர்கள் பு
ஷ்பமாரி பொழிந்தார்கள். ஸ்ரீராமன் வருணதேவனை ய
ழைப்பித்து அந்த பரசுராமன்கையில் வாங்கிய வில்லை
அவனிடத்திற் கொடுத்து நீ இதை வைத்துவையுமென்
று ஆக்கியாபித்தார். அப்பால் சேனைசமுத்திரத் துட
னே அனேகசம்பிரமமாய் அயோத்தியா புரி பட்டணத்
திற் சேர்ந்தார்கள்.

**பாலகாண்டம் முற்றிற்று.**

---

ஸ்ரீராமஜெயம்.

ஹரிஹரஹிரண்யகர்ப்பேப்யோநமஃ.

ஸ்ரீசீதாலட்சுமண பரதசத்துருக்ந அநுமத்சமேத
ஸ்ரீராமசந்த்ர பரப்பிரம்ஹணே நமஃ.

# ஸ்ரீமத்கம்பராமாயணவசனம்.

## அயோத்தியாகாண்டம்.



### காப்பு விருத்தம்.

வானின்றிழிந்து வரம்பிகந்த மாபூதத்தின் வைப்பெங்கும்............................*
ஊனுமுயிரு முணர்வும்போ லுள்ளும்புறத்து முளனென்ப............................*
கூனுஞ்சிறிய கோத்தாயுங் கொடுமையிழைப்பக் கோற்றுறந்து............................*
கானுங்கடலுங் கடந்திமையோ ரிடுக்கண்காத்த கழல்வேந்தை............................*

:0:

### க்கிரவர்த்தி முடிசூட ஸ்ரீராமனை வேண்டுதல்.

தசரதமகாராஜன் மிகுந்த சந்தோஷ ஆனந்தத்தோ
டிருக்கிற நாளையில் ஒருநாள் பரதனையழைத்து ஐயா!
கைகைய தேசாதிபதியாகிய உன்முதாதை உன்னைப்பா
ர்க்கவேணுமென்கிற அபேக்ஷைகொண்டுசொல்லி அனு
ப்பியிருக்கிறார். ஆதலால் நீ கைகைய தேசத்துக்குப்
போய்வாவென்று ஆக்கியாபித்தார். ஸ்வாமி! அப்படி
யே போய்வருகிறேனென்று அவரைச் சேவித்துக்கொ
ண்டு ஸ்ரீராமரிடத்திற்குப்போய் அவரையும் சேவித்து
ய்திகளைச்சொல்லி, உத்தரவுபெற்றுக்கொண்டு (ஜீவ
விட்டுப்போகிற சரீரம்போல) பிரயாணமாய்ச் சத்
ருக்கனனுடனே வாகனரூடராய் புறப்பட்டு ஏழுநாள்வ
ழியில்தங்கி கைகையதேசத்தில்ச்சேர்ந்து முதாதைமுத
ய யாவரையும்கண்டு அதிகசந்தோஷத்துட னிருந்தா
ர் இங்கு சிலகாலத்திற்குப்பின்பு ஒருநாள் தசரதசக்கர
வர்த்தியானவர் ஆலோசனைச் சித்திர மண்டபத்திற்குப்
போனார். அவ்விடத்திலிருந்த பந்துவர்க்கத்தார் முதலி
ய ராஜகூட்டங்களுக்கும் செலவு கொடுத்து அனுப்பி,
ம் உலகத்தை இரக்ஷிக்கும் வஸ்துவைப்போல ஒருவ
க யிருந்துக்கொண்டு தம்முடைய குருவையும், மந்தி
ரிகளையும், அழைப்பிக்கும்படி ஆக்கியாபித்தார். அப்ப
யே மும்மூர்த்திகளோடு நால்வரென்று சொல்லத்த
க வசிஷ்டமகாமுனி அச்சபைக்கு எழுந்தருளினார்.
லத்தின் பழமையும், சாஸ்திர சாம்பிரதாய கேள்வியி

ன் சாரமும், வருத்தம் வந்தவேளையிலும், தருமம் தவி
ராத மனதையுடையவர்களாகவும், மானத்தில் கவரிமா
னைப்போலவும், காலதேசவர்த்தமானங்களை தெய்வானு
கூலக் குறிப்பினால் அறிந்து நடக்கவேண்டிய காரியங்க
ளை நிறைவேற்றி இராஜனுக்குக் கீர்த்தியைவருவிக்கத் த
க்கவர்களாகவும், தங்கள் பிராணனுக்கு ஆசைவையாம
ல் ராஜனுக்கு இடித்துச்சொல்லும் நீதியில் கைபோ ய
வர்களாகவும், பூத பௌஷிய வர்த்தமானங்களை யுணர்ந்
தவர்களாகவு மிருந்த மந்திரிகள், அறுபதினாயிரம்பேர்
சமுத்திரம்போலவந்து சூழ்ந்து வசிஷ்டமகாமுனியை
ச் சேவித்துக்கொண்டு தங்கள் இராஜாவையும் நமஸ்கா
ரம் செய்துக்கொண்டார்கள். அந்தமந்திரிகளையும் தம
முடைய குருவான வசிஷ்டமகாமுனியையும்பார்த்து த
சரதமகாராஜன் ஒருவசனஞ்சொல்லுகிறார். சூரிய குல
த்திற்பிறந்த எங்கள் பெரியோர்கள் தருமம் தப்பாமல
ராஜ்ஜியபரிபாலனம் செய்துக்கொண்டு வந்தார்கள். யா
னும் அப்படியே உங்கள் பலத்தினாலே அறுபதினாயிரம்
வருஷம் ராஜ்ஜியபாரம் செய்துக்கொண்டுவந்தேன். இ
துவரைக்கும் ராஜ்ஜியத்திலுள்ள சகல ஜீவனுக்கும் உ
றுதியாகிய தருமம் கைகொடுக்கச் செய்துவந்தேன். இ
ப்போது என் ஜீவனுக் குறுதிபிறக்கவேண்டிய யோச
னை செய்திருக்கின்றேன். அதென்ன வென்பீர்களோ!
மூப்பென்கிறது சமீபித்த படியால் ஆதிசேஷனும் அ
ஷ்ட கெஜங்களாலும், பரித்துக்கொண் டிருக்கிற இந்த
பூமிபாரத்தை நான் சுமக்கமாட்டேன். எங்கள் பெரி

நினைக்க வேணும் இது உன்னிடத்தில் பெற வேண்டிக்கொள்ளுகிறேனென்று சொல்ல, ஸ்ரீராமன் சம்மதிக்கவுமில்லை சம்மதியாமற் றடுக்கவுமில்லை, ஏனெனில்பிதா சொல்லுகிறபடி கேட்கிறதல்லவா ! நமதுகடமை, அதல்லவா நமக்கு நீதியும் தருமமும்மென நினைத்துப் பேசாமலிருந்தார், பிள்ளையினுடைய மனதையறிந்த தசரதமஹாராஜன் ஐயனே ! எப்படியும் இந்தவரம் கொடுக்கவேணுமென்று மார்புடனே தழுவிக்கொண்டு சந்தோஷித்து மந்திரி பிரதானிகள் சூழ தம்முடைய மாளிகையிற் போய்ச் சேர்ந்தார். ஸ்ரீராமனும் சுமந்திரன் தேரிலேறிக்கொண்டுதம்முடைய திருமாளிகையிற்போய்ச் சேர்ந்தார். அப்போது சகல இராஜர்களையும் அழைப்பித்து ஸ்ரீராமனுக்குப் பட்டாபிஷேகம் செய்கிறதற்கு வேண்டியவைகளையழைப்பியுங்களென்று ஆக்கியாபித்தார், அப்போது வசிஷ்டர் சந்தோஷத் துடனே ரதமேறிக்கொண்டு அனேகப் பிராமணாள் சூழ, இராஜனிடத்துக்குவந்தார். அப்போது தசரதமஹா ராஜன் சமீபத்திலிருந்த ராஜகூட்டங்களையும் பார்த்து, ஸ்ரீராமனுக்குப் பட்டாபிஷேகம் செய்யவேணுமென்றெண்ணி அப்படிக்கே உத்தரவுசெய்தேனென்றுசொல்ல, அதையவர்கள்கேட்டு மிகுந்த சந்தோஷசித்தராய்சரீரத்துடனே சுவர்க்கலோகம் போனவர்களைப் போல ஆனந்தமடைந்து, நல்லகாரியம் செய்தீர்களென்றுசொல்லி, ராஜாவைச்சேவித்துக்கொண்டு, ஸ்வாமி ! நம்முடைய ராஜகூட்டத்தை, இருபத்தொருதலை முறையாய் கருவறுத்து வந்த பரசுராமனுடைய மதத்தை ஒடுக்கிய ஸ்ரீராமனுக்குப் பட்டாபிஷேகம் செய்கிறது மகா உத்தமமே அதுவே தருமமென்று சொன்னார்கள், சகலராஜாக்களும் இவ்வளவுசந்தோஷத்தோடு சொல்லுவதைக் கேட்டு, தம்முடையசந்தோஷத்தை மனதில் அடக்கிக்கொண்டு வேறொருவிதமாகசொல்லத் தொடங்கிய தாவது நான் பிள்ளையினுடைய ஆசைமயக்கத்தினாலே மயங்கி ராச்சியத்தைக்கொடுக்கப்போகிறேனென்று சொன்னால், நீங்களென்னுட னித்தனை நாள்பழகி யிருந்தும் என்னிடத்தி லன்புவையாமல் அவனுக்குத்தானே ராச்சியத்தைக்கொடுக்கச்சொன்னீர்களே! நீங்கள் சந்தோஷத்தினாற் சொன்னீர்களா ! அல்லது என்மனோ பாவமறிந்து சொன்னீர்களா ! அந்தவயணம் தெரியச்சொல்லுங்களென்று கேட்டார். அதற்கு - அவர்கள் சொன்னதாவது. தானம் - தருமம் - தன்மை - ஞானம் - கல்வி-ஒழுக்கம் - பொறுமை-முதலிய உத்தமகுணங்கள்யாவற்றும் அவனிடத்தி லிருக்கின்றது. சகலஜீவனுக்கும் அவனிடத்தி லிருக்கிற அன்புஒருவராலே சொல்லக் கூடாது; அவருக்கு பாக்கியம்வருகிறது யெப்படியெனில், ஊருக்குச்சமீபத்திலிருக்கிற குளம் நீர்நிறைகிறதுபோலவும், உள்ளூரில் சாரமுள்ள கனியிருப்பதுபோலவும் மேகமானது மழைபொழிகிறதுபோலவும், கழனிகளுள்ளவிடத்திலே ஆற்றுநீர் வருகிறதுபோலவு முதலியானபடியினாலே, அக்காரியத்திற்குத் தடைசொல்லுகிறவர்கள் யாரிருக்கிறார்கள். ஸ்ரீராமனோ, சகலஜீவகோடிகளையும் தம்முடைய ஜீவனைப்போலவே யெண்ணியிருக்கிறார். சகலஜீவகோடிகளும் ஸ்ரீராமனையே தங்கள் ஜீவனாக யெண்ணிக்கொண் டிருக்கிறார்களென்று சொன்னார்கள். அக்கேள்வியினால் உண்டாகிய சந்தோஷமானது மறைத்துச்சொன்னமனதைக்கூட தள்ளிக்கொண்டு வெளியிலேபொங்கி மகிழ்ந்து கண்களில் ஆனந்தபாஷ்பம்வர, இராஜா ஒருவார்த்தை சொல்லுகிறார். நீங்கள் தருமம்-நீதி-ஒழுக்கம் இவைகளில் மிருக் வர்கள். ஸ்ரீராமன் என்மகனென்று எண்ணிவந்தீர்களே ! ஆதலால் இன்றுமுதல் அவன் உங்கள் பிள்ளை உங்களுக்கடைக்கலமென்றுசொல்லி, அச்சபையைவிட் டெழுந்திருந்து வித்துவான்களோகூட அழைத்துக்கொண்டு சத்காலக்ஷேபம்செய்ய ஒருமண்டபத்தில் வீற்றிருந்தார். அப்போது இந்தசமாசாரம் அறிந்தாதிகள் நாலுபேர், அவர்கள் கௌசலையினுடைய திருமாளிகைக்கு ரவிக்கைகள்பூட்டவிர, தலைமயிர் அவிழ, வஸ்திரங்கள் நெகிழ ஓடி, கௌசலைக்கெதிரில் நின்று ஆனந்த நிர்த்தத்தோடு பாடி எதிரில் நின்றவர்களையெல்லாம்சேவித்து சந்தோஷாவேசத்தினாலே வாய்குளறினார்கள். அப்படிவந்த ஸ்திரீகளை கௌசலை நாயகிபார்த்து மிகுந்தசந்தோஷத்தோடு வந்தீர்களே, உங்களுக்கவ்வளவு சந்தோஷம்வருகிறதற்குக் காரணமென்னவென்று கேட்க, அம்மா உமது திருமகனுக்கு இந்தராச்சிய பட்டாபிஷேகம் மகாராஜா செய்யப்போகிறாரென்று சொன்னார்கள். அதுகேட்கவே மகனுக்கு பாக்கியம் வருகின்றதென்று மிகவுஞ் சந்தோஷ சமுத்திரம்போல யிருந்தாள். ஆனால் உடனே ராஜா துறவறத்தை இச்சிப்பாரென்கிற கிலேசம் அந்தக்கடலின் வடவாமுகாக்கினிபோ லிருந்தது. ஆகிலும் சந்தோஷசெய்திசொன்ன ஸ்திரீகளுக்கு ஆடைகளும்-ஆபரணங்களும்-திரவியங்களும் கொடுத்து, மிகுதியும் அன்பையுடைய சுமித்திரைக்கு இச்சந்தோஷவார்த்தையைச்சொல்லி, அவளோடுகூட ஸ்ரீரங்கநாதன் கோயிலுக்குப்போய், உபயநாச்சிமாரோடு பள்ளிகொண்டிருக்கிற ஸ்ரீரங்கநாதனைச் சேவித்து ஸ்வாமி ! நீரென்பிள்ளைகளுக்குக் கொடுத்த பாக்கியங்களியாவற்றும் உமதுதானென்றுசொல்லி, ஆராதனைமுதலிய யாவற்றும் செய்து அனேக கோதானம்-பூதானம்-கன்னிகாதானம்-சுவர்ன்னதானங்களும், சந்தனம்-புஷ்பம்-வஸ்திரம் அனேகம் பிராமணருக்குக்கொடுத்து, ஸ்ரீரங்கநாதனைச் சேவித்துக்கொண்டு கோயிலைப் பிரதக்ஷணம் செய்து தனது திருமாளிகைக்கு வந்துசேர்ந்து. அதற்குச்செய்யவேண்டிய விரதங்களை அனுசரித்துக்கொண்டிருந்தாள்.

---

## மந்தரை ஆலோசிக்குதல்.

அப்படிக்கிருக்க தசரத மகாராஜனுடைய சமூகத்திற்கு வசிஷ்டமகாமுனிவர் வந்து, ஓ!ராஜாவே ! ஸ்ரீராமனுக்குப் பட்டாபிஷேகம் செய்கிறதற்கு நாளைக்கு கல்ல முகூர்த்தமாக விருக்கின்றதென்றுசொல்ல, அதுகேட்டு மிகுதியுஞ் சந்தோஷமாய், ஸ்ரீராமனிடத்துக்குத் தாங்களே எழுந்தருளி தருமம்-நீதி-முதலியதுகள் சொல்லவேணுமென்று பிரார்த்திக்க, அப்படியே வசிஷ்டரும் ஸ்ரீராமனிடத்துக்குவந்தார். அவரைக்கண்டு ஸ்ரீராமனெழுந்திருந்து சேவித்துக்கொண்டார். ஸ்ரீராமா ! நாளையதினம் உனக்குப் பட்டாபிஷேகம் செய்யப்போகிறார். ஆதலால் நான் ஒருநீதியை சொல்லுகிறேன் அதைக்கேட்டு மனதில் உறுதியாய் வையென்றுசொல்லுகிறார், ஸ்ரீமகாவிஷ்ணு-சிவன்- பிரம்மா-இவர்களிலேயும் பிருதிவி-அப்பு-தேயு-வாயு - ஆகாயமென்று சொல்லப்பட்ட ஐந்துபூதங்களிலேயும் பெரியவர்கள் அந்தணர்களென்று, மனதிலேவைத்துப் பூஜிதைசெய், அவர்கள் கோபம்பண்ணினாலும் - கிருபைபண்ணினாலும்-பலிக்குமாகையால்; அவர்களுடைய பெருமையை ஒருவராலுஞ்சொல்லி முடியாது, ஆதலால் அவர்களைச்சேவித்துக்கொண்டு ஸ்துதிபண்ணி நல்ல வசனஞ்சொல்லி அவர்களேவினது செய்துகொண்டிரும், ஆகிறதும் அழிகிறதும் அவர்களால், ஆனபடியால் மும்மூர்த்திகளிலும் அவர்களுயர்ந்தவர்கள். பிரம்மா - விஷ்ணு-ருத்திரன்-இம்மும் மூர்த்திகளுக்கும் தருமமும்-நன்மையும்-அருளும் வேண்டி யிருக்கிறபோது மற்றபேருக்கு அதுகள் அவசியம்வேணுமென்கிறது சொல்லவேண்டுமோ! அதுமுதலான தூர்நடத்தைகள்தான் உம்மிடத்தில் இல்லையே ! ஆனாலும்பெரியோர்கள் குற்றமென்றுசொல்லுகிற காரியங்களில் ஒன்றானாலும் உன்னிடத்தில் வாவொட்டாமல் ஒருத்தரோடும் பகை கொள்ளாமல் இருக்கவேணும். இப்ரவரோடும் பகை கொண்டால் பகைஒடுங்காது வளர்ந்தேவரும். ஆகையால் ராஜாவுக்குக் காரியம் வேரோடே கெட்டுப்போம், மும்மூர்த்திகளுக்குச் சமமான ராஜக்களானாலும் மந்திரி சொல்லுகின்ற வழியே நடந்துக் கொள்ளுகிறதே பலம் சகல ஜீவனிடத்திலேயும் அன்பு வைத்திருந்தால் அதற்கு மிஞ்சினபலன் வேறில்லை. சகல ஜீவனையும் தன்ஜீவனாகவும், தான் ஒருசரீரமாகவும், எண்ணி தருமத்தோடு நடத்துகிற இராஜன் வேறே ஒருயாகம் செய்ய வேண்டிய தில்லை. ராஜனுக்குநல்லவார்த்தையும்சந்தோஷமும்யோசனையும்-நீதியும்தருமமும் உண்டா யிருக்குமாகில் அவனுக்கொருபோதும் அழிவுவாமாட்டாது. பொல்லாதுகளைத தள்ளி பொன்னிருக்கிற தராசுபோல சமமான மனதோடு இராச்சியபாரம் செய்துகொண்டு அன்போடிருந்தால் அவனுக்குச் சத்துராதிகளை செயிக்க வேறு ஆயுதம்வேண்டியதில்லை. பூமியில் தூமகேதுபோல பிறந்திருக்கிற வேசிகளுடைய காமம் விட்டிருந்தால் கேடென்கிற பேருமில்லை, நரகமுமில்லை. இப்படியாக ஸ்ரீராமனுக்கு அனேக நீதிகளைச்சொல்லி இருவரும் ஸ்ரீரங்கநாதன் கோயிலுக்குப்போய் திருவாராதனமும் செய்துவைத்துச்சேவித்துக்கொண்டு ராஜாவினிடத்திற்குவந்து நடந்த சமாசாரமெல்லாம் வசிஷ்டமகாமுனி சொன்னார். இராஜா சந்தோஷித்து பட்டணத்தைச் சிங்காரிக்கச் சொல்லி ஆக்கியாபித்தார். அப்போது வள்ளுவன் யானையின்பேரில் பேரிகைவைத்து ஸ்ரீராமனுக்கு நாளையதினம் பட்டாபிஷேகம் ஆதலால் பட்டணத்தை அலங்[illegible] ளென்று தேவர்களும்கேட்டு சந்தோஷிக்க பேரிகை [illegible] ந்தான். அந்த சமாசாரம் பட்டணத்திலிருக்கிற செய்தின் காதனுமிர்த மாகக் கேட்டு, அதிக சந்தோஷத்தோடு களித்து ஆடி, பாடி, சரீரம் புளகாங்கிதமுற்று தசரத மகாராஜனை ஸ்தோத்திரம் செ[illegible] இந்த்தின் ர சொல்லுகிறவர்களுக்கெல்லாம் [illegible] ஆங்கை நமகாரணம்கொடுத்து இந்தையானந்த[illegible] கைளின்பேனுடையமார்பிலே யிருக்கிறகௌஸ்துப[illegible] பட்டணத்துக்குப்பட்டத்தினத்தைக்குச் சுப்பிடித்தாப்போல பட்டணமெல்லாம் அலங்காரமாகச் சிங்காரித்தார்கள். உப்பரிகைகளுடையில் பறக்கிற பஞ்சவர்ன்னக்கொடிகள் ஸ்ரீராமர் முத்து பட்டாபிஷேகமாகிறதைப் பார்க்கப் [illegible] கின்றன பல ஆகாயத்தில் பறக்கிறதுபோலிருந்தது. [illegible] போலிய துடைகள்போலிருக்கிற வாழைமரங்களைகரியுங்க சங்கள்போலிருக்கிற கமுகமரங்களையுங்கட்டு சிகையடி[illegible] லுகள்போலிருக்கிற முத்துமாலைகளாலேபல சங்[illegible] ட்டு அவர் தனங்கள்போ லிருக்கிற பொற்றோரணங்களையும் வைத்தார்கள். சூரியன் வேறொரு ரூபமெடுத்து பிரகாசிக்கிறதுபோலத் தோன்ற மகாதோரணங்கட்டினார்கள். பவழத் தூண்களுக்கெல்லாம் மெல்லிய வஸ்திரங்களினால் கௌசனை செய்தது சிவனுடைய சரீரம்போல பிரகாசித்தது. முத்தினாலே நிலாவும் ரத்தினத்தினாலே வெய்யிலும் நீலரத்தினத்தினாலே இருட்டு முண்டாகிய ஒருநாள்போலப் பட்டணம் பிரகாசித்தது. தேர்களெல்லாம் தேவர்கள் விமானம் போலவும், விரபட்டங் கட்டியிருக்கிறயானைகள் சூரியனுடனெதிர்க்கிற உதயகிரிபோலவும், நானாவீதிகளில் திரிந்தன. புஷ்பங்களும்-பன்னீரும்-சந்தப்பொடியும்-மனுஷ நெருக்கத்தினால் விழுந்த முத்தும், பொன்னாபரணங்களும், வீதியெல்லாம் நிறைந்தன. ஆண்யானைகள் பின்னே பெண்யானைகள் ஸ்திரீகள் நடக்கிறதுபோல நடந்தன. இந்த பட்டணத்தினுடைய அழகைப்பார்த்து தேவலோகத்தி லிருக்கிற தேவர்க்கள் இதிலேவாசம்செய்ய நமக்குக் கிடைக்காமற்போயிற்றென்று ஏக்கமுறும்படி தேவலோகத்தைப்பார்க்கிலும் அதிகமாய் சிங்காரித்திருந்தது. இராவணனுடைய பாவமே ஒரு ரூபமெடுத்ததுபோல மாகொடுமையையுடைய கூனியென்கிற ஸ்திரீ பூர்வத்தில் ஸ்ரீராமன் உண்டைவில்லெறிந்த பகையை நினைத்துக்கொண்டு மனம்துடிக்க, கண்களில் அக்கினிப்பொறிபறக்க, உடம்[illegible] டியான வார்த்தையோடு அதிசீக்கிரமாக, கைகேசியினிடத்திற்குப்போனாள். அப்போது கைகேசி பால சமுத்திரத்தின்பேரில் பவழகொடி படர்ந்திருக்கிறதுபோல மெத்தையின்பேரில் நித்திரைசெய்துகொண்டிருந்தாள் கூனி தனகரங்களின் அவளுடைய பாதாரவிந்தத்தைக் கூனி தனகரங்களினாலே பிடித்தாள். பிடிக்கவே கைகேசி நித்திரை தெளிந்து அவளைப்பார்க்கவே கூனி கொடுமையான வார்த்தை சொல்லுகிறாள், பிராணம்நீண்டி யிருக்கசெயும் சந்திரன் பிரகாசிக்கிறதுபோல யிருக்கலாமா ஆபத்து வந்த போதுகூட நித்திரைசெய்யலாமாவென்றுசொல்ல,

ன். ஸ்ரீ[illegible]ளைகள் மகாதர்ம்மபுருஷரா யிருக்கச்சே எ பேச்சுச் [illegible]ப்த்தேன் வருகின்றது. ராச்சியத்திலொரு பிள்ளைப்பெற்றவர்கள் கிலேசந்தீர்ந்தோ மென்றிருக்கடது. ரெமனைப்பெற்ற எனக்கு ஆபத்துவருமா! என்னய பாக்கி சொல்லுகிறாயென்று சொல்ல; உன்னுடையகு ராஜாபோ[illegible] ராக்கியங் கிழேவிழுந்துபோய் விட் என்னைப்[illegible]ளசதீ [illegible] ஸ்வரியத்தினாலே வாழ்வுண்டோவென்று பவதி [illegible] அலெனன்று கூனிசொன்னாள். அதற் தன்னுன்றிராஜனு[illegible] புருஷனும் பரதன் பிள்ளையுமிருக்க கிரீயை ஆர்க்கிலும் அவனுக் கதிகமான வாழ்வென்ன டாயிதே கைகேசி சொல்ல, புருஷாடு எல்லாம் நகைக்கநு கூனிமைக்கு அபகீர்த்திவர, நாடகையென்கிற ஸ் கைகேதியும்பினாலே கொன்ற ஸ்ரீராமனுக்கு நாளை பட் அபி[illegible] இதுதான் கௌசலைக்கு அதிக வாழ்வென்று கேகி பின்னும். அந்த வார்த்தையைக் கேட்கவே, [illegible]னக்கு கௌசலைக்கு எவ்வளவு சந்தோஷமாயிற்றோ அவ்வளவு சந்தோஷ மென்கிற சாகரம் மேன்மேலும் [illegible]ராங்கிபொங்கி வழிய, சூரியப்பிரகாசம்போலத் தன் முத்து விளங்காநின்ற ஓர் ரத்தினாரத்தைவாங்கி அவள் கழுத்திலேபோட்டாள். போடவே கூனிக்கண்களில் நெருப்புப் பறக்க அதட்டி விழித்துப் பார்த்து வைது பெற்றுச்செறிந்து அழுது தன்கழுத்திலேபோட்ட ஆரத்தைக் கழட்டி தரையிலெறிந்துகோபத்துடன் ஒருவார்த்தை சொல்லுகிறாள். கைகேசி நீ பேதை உன்வயிற்றிலிறந்த பரதன் ஒரு பயித்தியக்காரன் நீங்களிருவரும் கிலேசப்பட உன்சக்களத்திக்கு நான் ஏவல் செய்துக்கொண்டிருக்கமாட்டேன். சீதையும், இராமனும், சிங்காதனத்திலிருக்க, பரதன் தரையிலிருக்கக் காலமிருக்கச்சே நீ சந்தோஷமாய் ரத்தின ஆரம்கொடுத்தவயணமென்ன! கௌசலை தனக் குறுதியான காரியத்தை மறவாமல் இருதயத்தில் வைத்திருந்து சமையம் பார்த்து தன்பிள்ளைக்குப் பட்டங்கட்டுகிறதற்குத் திட்டம் செய்துக்கொண்டாள் உன்வயிற்றில் பிறந்தபரதன் முழுமையும் பாக்கியமினனுன். அவனிருந்தால் என்ன அல்லது இறந்தால் என்ன அவனுக்கு என்ன தைரிய மிருக்கப்போகின்றது. அவனை நீ பெற்றதினால் அவன் பூமியிற் பிறந்தும் பிறவாதவனுனன். இந்தராச்சியமெல்லாம் இராமன் தம்பியுடனேகூட ஆள, பரதனும், தம்பியும், பட்டணத்தைவிட்டுத் தபசுசெய்யப் போகவேணுமே யல்லாமல் வேறில்லை. அனேககோடி ராஜாக்களுக்கு முன்னே பரதனிப்படி எளியவனாயிருக்கிறதிலும் இறந்துபோகிறதே உத்தமம் பரதனைப் பாட்டனார் வீட்டுக்குப் போகச்சொல்லி இராஜா அனுப்பினது இப்போதல்லவா எனக்குத் தெரியவந்ததென்று சொல்லி அப்பா பரதா! உனக்குத் தாயும் பொல்லாதவள், தகப்பனும் பொல்லாதவன், நீ என்னசெய்வாய் என்று சொல்லித் திரும்பி கைகேசியைப் பார்த்து நீ ராஜன்வீட்டில் பிறந்தும், ராஜன்வீட்டில் வளர்ந்தும், ராஜன்வீட்டில் புகுந்தும், உனக்கு இவ்வளவு தெரியாதா ! ராஜரீகம் உன்னுதாக்கச் செய்துக்கொள்ளத் தேவையில்லையா! துக்க சாகரத்தில் விழுயிருக்கிறையோ! சொன்னாலும் கேட்கவில்லை! உனக்குந்தெரியவில்லை! கல்வியும, பலமும்வீரமும், இளமையும், நல்லகுணங்களும், பரதனுக்குண்டாயிருக்கிறது புல்லில் ஊற்றிய அமிர்தம்போலாயவிட்டது ஐயோ! என்று அழுது அடித்துக்கொண்டேயிருக்கிற கூனியாகிய மந்திரையைப்பார்த்து ஓமாக்கினியில் நெய்விட்டாற்போல கோபமேமூண்டெழும்பிக் கண்கள்சிவக்க கைகேசி சொல்லுகிறாள். சூரியகுலத்திற்பிறந்த ராஜாக்கள் தங்கள் ராச்சியத்திலேகூட தருமம் தப்பாமல் நடத்திக்கொண்டு வருகிறதாச்சதே கவசிமானுக்குச் சமானமான மானத்தையுண்டான மனுக்குலத்துக்குக் குற்றமானபேச்சை எப்படி வாயினாலே சொல்லத்துணிந்தாய் நீ எனக்கும் நல்லவளல்ல, என்மகன் பரதனுக்கும் நல்லவளல்ல, நீ சொல்லுகிற வார்த்தையோ பாபத்துக் கேதுவாகவிருக்கின்றது, மேலும் உனக்குப் புத்தியில்லாமல் மனதுக்குத் தோன்றியபடியினாற்றுகிறாய் பிறந்திருக்கிற சரீரத்துக்குக் கீர்த்தியானே சம்பாதிக்கவேணும் மனுசாஸ்திரத்தில் சொல்லியிருக்கிற நீதியைத் தள்ளக்கூடுமா! என்னெதிரில் நில்லாதே போய்விடு நீ இவ்வார்த்தை சொன்னதற்கு உன்நாக்கை அறுக்கவேணும் நீ எங்கள் தாய்வீட்டுத் தாதியானபடியால் மனம் பொறுத்துக்கொண்டேன் புத்தியில்லாதவளே இனிமேல் அப்படிக்குப் பேசாதேயென்று கைகேசிசொன்னாள். அதற்கு மந்தரைபயந்து அப்பால் போகாமல் நின்று இதெல்லாம் என்னத்திற்காகச் சொல்லுகிறேன் உறுதியான காரியம் செய்யவேணுமென்றல்லவா மனதில் நன்று யூன்றிக்கேளென்று சேவித்துப் பின்னையுஞ் சொல்லுகிறாள். உன்மனதில் மூத்தவனிருக்க இளையவனுக்குப் பட்டம் வரமாட்டாதென்றல்லவோ நினைக்கிறாய் இப்போது ராச்சியபாரம் செய்துவருகிற ராஜா பெரியவரல்லவா சின்னவனை ராமனுக்குப் பட்டங்கட்ட சம்மதித்திருந்தால் பரதனுக்குப் பட்டங்கட்டுகிறதற்குத் தடையாது! தருமசிந்தையா யிருக்கிற விஷிஸ்வாரருக்கு மிகவும் பாக்கியம்வந்தால் புத்திவேறே திருப்பிப்போம். இப்போது ராமனையும் கௌசலையையும் நல்லவர்களென்றல்லவோ யெண்ணியிருக்கிறாய் அவர்கள்தான் நாளைக்கு மிகுந்த துயரம் நமக்கு வரத்தக்கதாய்செய்யப்போகிறவர்கள் அப்போதைக்குங்கொசலை கொடுக்க வாங்கிக்கொண்டு தானே நீயும் உன்மகனுஞ் சாப்பிடவேணும் அப்போது உன்னிடத்தில் யாராவது தரித்திரான்வந்து ஏதாகிலுங் கொடுவென்று கேட்டால் அப்போ தவர்களைக்கேட்டு வாங்கிக் கொடுப்பாயோ! வெட்கிப்போவாயோ! இந்த கிலேசத்திலேயே மாண்டுபோவாயோ! இல்லையென்று சொல்லுவையோ! உனக்குப் புத்தி இப்படி திகைத்துப்போனது என்னத்தினாலேயோ! இன்னந்சிலநாளையில் தரித்திரமும் ஏழ்மையுமவர, அதினாலே நீ பிசையாசைப் பட்டுக்கொண்டு இருக்கிறவேளையில் உன்தாய் தகப்பனார்வந்து உன்சக்களத்தி பாக்கியத்தை யல்லவோ பார்த்துவிட்டுப் போகவேணும் அதுவும் அல்லாமல் உன்புருஷனுக்குப் பயந்து சீதைதகப்பன் உன்தகப்பன் ராச்சியத்தைகட்டிக்கொள்ளாம லிருக்கின்றனே அந்த பயமுந் தீர்ந்தது. அவன் மருமகனுக்கு ராச்சியமானால் உன்தகப்பனார்வீடு சுத்தமாய் முழுகிப்போய்விடும் அப்போது உனக்குத்தான் மிகுந்த வருத்தமாயிருக்கும் நீ கெடுகிறதுமல்லாமல் உன்தகப்பன் வீட்டையுங் கெடுக்கிறாய் ! ஸ்ரீராமனுக்குப் பட்டமானால் அவனுக்கும் அவன் தம்பியாகிய லக்ஷ்மணனுக்குமே யல்லாமல் பின்னையாருக்கு சவுக்கிய முண்டாகப்போகுது என்று இப்படியாக மகாபாவியான கூனிசொல்ல, நல்ல மனதை யுடைய கைகேசிக்கு (தேவர்கள்பண்ணியபுண்ணியத்தினாலும் இராக்ஷதர்கள் செய்த பாவத்தினாலும்) மனது திரும்பிற்று அப்போது அந்தவார்த்தையைக் கேட்ட, கைகேசி கூனியைச் சந்தோஷத்துடனே பார்த்து பரதன் எனக்குப் பிள்ளையான படியினாலே உனக்கும்பிள்ளையாமே சகி அவனுக்குப் பட்டாபிஷேகமாகும்படி உபாயஞ்சொல்லென்று கைகேசிசொல்ல, அதுகேட்ட கூனி இப்போ தென்தோழி சம்மதி சம்மதி என்று தொழுது நான் சொல்லுகிறபடி நீ கேட்டியானால் உன் பிள்ளைக்கு இப்போதுதானேபட்டங்கட்டிவைக்கிறேனென்றுசொல்லி பின்னையும் அவள் ஒரு வார்த்தை சொல்லுகிறாள். முன்னாலே சம்பாரனென்பேரில் யுத்தத்துக்குப்போனபோது நீ சாரதியாயிருந்து தேர்விட அவனைச் செயம் பண்ணினபோது உனக்குஇரண்டுவரம்கொடுக்கிறேனென்று சொல்லியிருக்காரே, அந்தவரங்களிலொன்று பரதனுக்குப் பட்டங்கட்டவும் மற்றொன்று இராமனை ஆரணியத்துக் கனுப்பவும் ராஜாவைக் கேட்டால் பூலோகமெல்லாம் உன்மகன் வசமாகும். இதுதான் அதற்கு உபாயமென்று சொன்னாள். அப்படிசொன்ன கூனியை மார்புடனே தழுவிக்கொண்டு ரத்தின ஆரங்களும்திரவியங்களும் கொடுத்து என்மகனுக்கு ராச்சிய மெல்லாங் கொடுத்து ராஜாவாகச்செய்தாய் அந்தராஜாவுக்கு நீதான் தாயென்றுசொல்லி, இந்த இரண்டுவரமும் ராஜா கொடாவிட்டால் அவர் முன்பாகவே என்பிராணனைவிட்டுக் கொள்ளுகிறேன் அதற்குத் தடையில்லை நீ போவென்று சொன்னாள் கூனி அதிகசந்தோஷத்துடனே தன் வீட்டுக்குப்போனாள். அவள் போனபிற்பாடு கைகேசி புஷ்பமெத்தையைவிட்டிறங்கி கூந்தலில் இருக்கிற புஷ்பமாலைகளெல்லாம் (மேகத்திலடங்கிய சந்திரனை இழுத்து வெளியில்போட்டதுபோல) வண்டுகளெல்லாம் எழும்பிப் பறக்க இழுத்து எறிந்து (தன்கீர்த்தியினுடைய கொடிகளை யறுக்கிறது போல) தன்மேகலாபரணத்தைக் கிண்கிணிகளோடு அறுத்துப்போட்டு சந்திரனில் இருக்கிற களங்கத்தைத் துடைத்தாற்போல திலதப்பொட்டையழித்து கைவளை ரத்தினாபரணங்களை யெல்லாம் கழட்டி எறிந்துப்போட்டு தலைமயிர் பூமியின்மேல்புரள, விரித்துக்கொண்டு கண் மை கரைய அழுதுக்கொண்டு (பூவுதிர்த்த கொம்புபோல) தரையிலேவிழுந்துபுரண்டாள். தோகையை யுதிர்த்தமயில்போலவும் இனி லக்ஷ்மியாகிய சீதை ஆரணியத்துக்குப்போவாளென்று அயோத்தியாபுரியில் அவள் தமக்கையாகிய மூதேவி வந்து பிரவேசித்தது போலவும் விழுந்துக் கிடந்தாள்.

---

## கைகேசி சூழ்வினை.

இவ்வாறில் கைகேசியிருக்க, அஸ்தமித்தவுடனே தசரதமகாராஜன் இராஜாக்களெல்லாரும் கும்பிட்டுவெளியிலேநிற்க, அவள் வீட்டுக்கு வந்தார் அந்த புரத்தில் போய் கைகேசியைக்கண்டு இப்படி வரவேண்டிய காரியமென்னவென்று பார்த்து (மதயானையானது துதிக்கையினாலேமானைத்தூக்கி எடுக்கிறாப்போல) தூக்கியெடுக்க, கைகேசி ராஜாவினுடைய கையைப்பிடித்து தள்ளிப்போட்டு மின்னல் துவளுகிறாப்போல புரண்டு ஒன்றும் பேசாமல் துக்கத்துடனே கோபாவேசமாக இருந்தாள். அப்படியிருக்கிற தன்பிராணநாயகியைக்கண்டு அஞ்சி உனக்கிப்படி தீங்கம்வரும்படி செய்தவர்கள் யார். அதை நீசொன்னால் அவர்கள் படுகிறபாடும் நான் செய்கிறகாரியமும் பிறகு தெரியுமென்று மிகுந்த அன்புடனேசொல்ல, அந்த வார்த்தையைக்கேட்டு கைகேசி கண்ணிலிருந்து ஜலத்தை முத்து முத்தாய் தனங்கள்பேரில்விழ, என்னிடத்தில் இவ்வளவு தயை யிருக்கின்றதா! நான் சொல்லுகிறதற்கென்றுசொன்னாள், அவ்வார்த்தையைக்கேட்டுநகைத்து உன்பேச்சுக்குத்தடையுண்டோ! நீயென்னசொல்லுகின்றையோ அதை உன்மகனாகிய ஸ்ரீராமன் ஆணைப்படிக்குச் செய்கிறேன், சொல்லென்று ராஜாகேட்க, அதைக்கேட்டு இனிமறுக்கமாட்டாரென்று தைரியமாய் அவ்வளவு தயை என்னிடத்தில் உண்டானால் தேவர்கள் சாக்ஷியாக பூர்வத்தில் எனக்கு நீர்இரண்டுவரங்கொடுத்திருந்தீரே அதைஇப்போது கொடுமென்று சொல்ல, அதற்கித்தனைச் சந்தேகமென்ன! இன்றைக்கே வாங்கிக்கொள், அதைக்கேளென்று கபடமில்லாத மனதையுடைய ராஜன்சொல்ல, கைகேசி சொல்லுகிறாள், அந்த இரண்டுவரத்தில் ஒன்று என்பிள்ளை பரதனுக்குப் பட்டாபிஷேகம்செய்யவும், மற்றொன்று சீதை நாயகனான ஸ்ரீராமன் காட்டுக்குப்போகவும் இப்படியாக அந்த இரண்டுவரத்தையும் கொடுமென்று துணிந்துச்சொல்லி எதிரே நின்றாள். அப்போது அந்த வார்த்தையைக்கேட்ட ராஜன் (விஷம்தீண்டி அவ்விஷத்தினால் சரீரம்வெந்து கிழேவிழுந்த ஒருமதயானையைப்போல) பூமியில் விழுந்து புரண்டு மிகவுந் துக்கித்துத் துணிந்து இப்படி யார் சொல்லுவாரகளென்றுமனவேதனையோடு கருமாறுலையில் எழும்பும் அக்கினிபோல பெருமூச்சுவிட்டு காவலர்ந்து கண்களில் ரத்தம்போக, ஐம்புலாதிகளும் சோர்வுற சரீரத்தைவிட்டுப்போகிற ஜீவனைப்போல மனம்புழுங்க எழுந்திருந்து சுவாச மில்லாத சித்திரம் திரும்பி பூமியிலேவிழுந்து வருந்தி வருந்தி இத்தப்பாவி போலத் திகைத்து மிகவும்வருந்தி வருந்தி இத்தப்பாவியைப்பிடித்து அடித்துக்கொல்லுவேனாமாவென்று கிளைத்துச் சந்தேகமென்கிற விஷம் தலைக்கொண்டு வருந்தியும் ஸ்திரீ அத்தி ஆகாதேயென்றுப் பழிக்கு நாணியும்,

அடிக்கடிப் பெருமூச்சுவிட்டும் அவளைக் கண்ணால் அடிக்கடிப்பார்த்தும்வேலாயுதத்திலகப்பட்டயானைபோல உழைத்துக்கொண்டு துக்கித்தார். இப்படி துக்கிக்கிறதற்கு தேவர்க்கள்கூட கிலேசித்து ஊழிகாலம் வந்தது போல நடுங்கினார்கள். கைகேசி அப்படியே பார்த்துக்கொண்டிருந்தாள். பிராணநாயகனாகிய மகாராஜன் இப்படி கிலேசித்து பிராணனை விடுகிற சரீரம்போலப் பதைக்கிறதையும் பார்த்துக் கொஞ்சமாகிலும் இரக்கம் நாணம் இல்லாமலிருந்தாள். இதனாலல்லவா பெரியோர்கள் ஸ்திரீ ரூபத்தை வஞ்சனைவேடமென்று விலக்கினார்கள். இப்படிக்கு எதிரில்நிற்கிற கைகேசியை தசரதமகாராஜன்பார்த்து நீ ஏதாகிலும் புத்திமயங்கி சொன்னாயோ! பின்னை எந்த பாவிகளாவது சொல்லக் கேட்டுச் சொன்னாயோ! இந்த இரண்டிலொன்று என்னாணையின்படிக்கு நீ நிஜத்தைச் சொல்லென்று ராஜாகேட்க, நான் புத்திமயங்கிக் கேட்டது இல்ல, எனக்கு ஒருத்தர் சொன்னதுமல்ல, முன் நீர் கொடுத்தவரந்தான் இப்போது கொடுத்தால் வாங்கிக்கொள்ளுகிறேன். இல்லையென்றால் உமக்கு அபகீர்த்திவர உம்மெதிரில் என்பிராணனை விட்டுக்கொள்ளுகிறேனென்று சொன்னாள். அவ்வார்த்தைக் காதில்விழுந்தும்விழாமலும் இருக்கையில்தானே வெந்தபுண்ணில் வேல்விட்டதுபோல மனம்நொந்து, சுழன்று, திகைத்து, ஸ்ரீராமனையே தன்பிராணனாகத் தீர்மானித்து யிருந்த இராஜன் கீழேவிழுந்து அடிபாவி! பாவி! என்பிராணன் போகின்றதே! போகின்றதே! ஐயோ! தருமம் பொல்லாது! பொல்லாது! சொன்னபேச்சுத் தப்பினாலும்தப்பு, என்று நாவெழாமல் சரீரம் தள்ளாடினவராய் இனிப் பூமியிலே ஸ்திரீகளென்கிற பூண்டில்லாமல் வாளினாலேவெட்டி அக்கும்பலிலே நாமும் பிராணனை விட்டுக் கொள்வோமாவென்று நினைத்து கையோடு கைபிசைந்து உதட்டைக்கடித்து, மெய் பொல்லாதாய்விட்டதே! என்ன செய்வோமென்று மனம்புழுங்கி, விம்மிநெருப்பில் நெய் விட்டதுபோல மனது எரிந்தெரிந்து சோர்ந்திருக்கிற ராஜன் ஒரு யோசனை செய்தார். இவள் இப்படிதானே நம்முடைய பிராணனை வாங்கினாலும் பேச்சை மறுத்தாலும் ராஜா சொன்னப்பேச்சுத் தப்பினானென்று அபவாதம் வந்தாலும் வரட்டும் இவள் பிராணனைவிட்டுக்கொண்டாலும் சரி; இவளை நல்ல வார்த்தையினால் இரந்து கேட்டுக்கொள்வோமென்று நினைத்து இவள்பேரில் என்னகுற்ற மிருந்தாலு மிருக்கட்டும், நாம் நல்லபேச்சுப்பேசி காரியத்தைக் கைக்கொள்வோமென்று தைரியம் செய்துகொண்டு ஒருவார்த்தை சொல்லுகிறார். பெண்ணே! உன்மகன் பட்டாபிஷேகம் செய்துகொள்ளுகிறதற்குச் சம்மதிக்கான், சம்மதித்தாலும் ராச்சியங்கொள்ளாது, உலகத்தார் இகழ்ச்சிசெய்வார்கள் கீர்த்தியுண்டாகாது, இப்படி அபவாதம் சம்பவிக்கிறதினால் உனக்குத்தான் என்னசார மிருக்கின்றது, ராஜாக்கள் இவ்வார்த்தையைக்கேட்டால் பிராணனை விட்டுவிடுவார்கள், மற்ற பிரஜைகள் சமாசாரம் சொல்லவேண்டியதென்ன! நீ பிறகு ஆரைக்கொண்டு ராச்சியம் ஆளப்போகிறாய் இப்போது பட்டாபிஷேகத்துக்குச் சம்மதித்த ஸ்ரீராமன்தானே உன்மகனுக்குராச்சியத்தையெல்லாம் கொடுப்பான். என்னுடைய பிராணனைக்கேட்டாலும் இந்தக்ஷணம் கொடுக்கிறேன் யிருந்த தாதாவாயிருக்கிறகைகயதேசத்துஇராஜாவின்பெண்ணே? இந்த ராச்சியத்தைமாத்திரம் கேளாமல் மறந்துவிடு நான் வாயினாலேசொல்லி அந்தப்பேச்சைத் திரும்பிமறுக்கிறதில்லை, என்பிராணன் போய்விடத்தக்க கிலேசமான வார்த்தைகளை யினிமேல் சொல்லாதே! பொல்லாதபேயானாலும் கேட்டவர்களுக்கு வேண்டியதைக் கொடுக்கும், இவ்வளவு நான் கேட்டது நீ கொடுப்பாயாகில் அதனால தப்புவராதென்று மிகவும் வருந்திச்சொன்னார். இப்படியாகச்சொன்ன ராஜாவைப்பார்த்து கைகேசிகொஞ்சமாகிலும் மனது தடுமாறாமல் முன்னே கொடுத்தீர் உடனே கொடாமலிந்தனை கோபமுண்டானால் இனிபூமியில் உம்மைப்போல சத்தியசந்தர்கள் யாரிருக்கிறார்களென்று சொன்னாள். அவ்வார்த்தை கேட்கவே ராஜனுடையபிராணன்புழுங்கி, அசந்து பொய்யென்கிறதே அறியாத அந்தச்சக்கிரவர்த்தி அப்பேச்சையும் பொறுத்துக்கொண்டு விஷாக்கினிதான் பெண்ரூபமெடுக்கிறதென்று நினைத்து பின்னும் இரந்து ஒருவார்த்தைசொல்லுகிறார். உன்மகனும் இராச்சியமாள்வான், நீயும் ஆள்வாய், ராச்சியமும் உன்வசமாகும், சுகமாயாள், நான் சொன்னபேச்சுத் தப்புகிறதில்லை. ராச்சியம்கொடுத்தேன். என்மகன் – என்கண் – என்னுயிர் – மற்ற வுயிர்களுக்குக் கிருபாநிதியாயிருக்கிற ஸ்ரீராமனை மாத்திரம் இந்த ராச்சியத்தைவிட்டு அப்பால் போகாமல் தயைசெய்யென்று சொல்லி, பின்னையும் ஒருவார்த்தைசொல்லுகிறார். உண்மையாய்ச் சொல்லுகின்றேன். சமுசார சாகரத்தைத் துறந்து, நான் நற்கதியடையவேணுமென்று நினைத்திருக்கின்றேன் எனக்கு மூப்புமாயிற்று. இந்த வேளையில் அவன் என்னைநீங்கி ஆரணியத்துக்குப்போனால் நான் பிழைக்கேன், ஆதலால் என்பிராணன் உன் அடைக்கலம் காப்பாற்றி ரக்ஷித்துக்கொள்ளென்று இனிய வார்த்தைகளைச் சொன்னார். அதையும் கேளாமல் அவருடைய கோபத்துக்கும் அஞ்சாமல் மரம்போல மனதையுடைய கைகேசி நீர் சொன்னவார்த்தையைத் தள்ளிப்போட்டால் அதுமாத்திரம் நல்லதருமமா! நீரே சொல்லுமென்றுசொன்னாள். இராஜன் எப்படியும் ஸ்ரீராமன் ஆரணியத்துக்குப்போவான். அவன்போனால் நம்முடைய பிராணன் போய்விடுமென்று இடிவிழுந்த பர்வதம்போலகுன்றி பூமியில்விழுந்து துக்கமென்கிற சமுத்திரத்தில் அழுந்தி அதற்கு ஒரு கரைகாணாமல் வாய்ப்பேச்சினால் நம்மிடபிராணனை வாங்கினாளேயென்று நினைத்து நினைத்துப் புரண்டு அடிபாவி! உலகத்தில் ஸ்திரீகள் தங்கள் புருஷன் செத்தும் சாகாத்துக்கு முன்னே தங்கள் பிராணனை விட்டுக்கொள்ளுகிறார்கள். இப்படி உன்னைப்போல புருஷனைக்கொல்லுகிறபாவி ஒருத்தரையும்கண்டதில்லை. குற்றம்வருமென்றும் பார்க்கயில்



லை தருமத்தையும் நினைக்கையில்லை. கடூரமான கோபத்தினால் அருளைக்கொன்று வாய்மொழியின் அம்பினால் என்பிராணனை வாங்கினாய் இப்பேர்ப்பட்ட நீ எந்த ஜீவனை ரக்ஷிக்கப்போகிறாய்! ஸ்திரீகளுக்கு நாணம் அச்சம் என்கிறது ஆபரணமென்று சொல்லுவார்கள். நீ ஸ்திரீயானால்லவா உன்னிடத்தில் அதுகளிருக்கப்போகின்றது. இந்தகாரியத்திற்குப் புருஷர்கள்கூட வெட்கப்படுவார்களே! பூமியிலிருக்கிற ராஜாக்களில் பலத்திலேயும் விவேகத்திலேயும் எனக்கொருத்தரும் சமானமில்லை என்று மகாபெரியோர்களெல்லாம என்னைப் பிரக்கியாதியாகச் சொல்லுவார்கள். யானும் தேவருலகமட்டுக்கும்போய் அனேக யுத்தங்கள் செய்து அசுரர்களைஜெயித்தேன். இப்படிக்கொத்த நான் ஒருமனையாட்டியினாலே மாண்டுபோனேனென்கிற அபவாதம் உண்டாகவேணுமா! எனப் பலவாறாகச் சொல்லிச் சொல்லி இரங்கியிருந்த துக்கத்துடனே தசரதமகாராஜன் கிலேசப்பட்டு பூமியிலே புரளுகிறபோது கைகேசிபார்த்து எதுவாகிலும் வரவேண்டிய விதியிருந்தால் தப்பாதே! நீர் அந்த வரங்கொடுத்தால் என்பிராணனை வைத்துக்கொண்டிருக்கிறேன் இல்லையென்றால் உம்மெதிரில் என் பிராணனை விட்டுக்கொள்ளுகிறேன். பூர்வத்தில் உங்கள் பெரியோர்களில் ஒருவர் வாய்ப்பேச்சு நிமித்தம் தன் சரீரத்தை அரிந்துக்கொடுக்கயில்லையா! நீர் வாக்குத்தந்து இப்போது அதுக்கா சரிக்கிறது உத்தமமாவென்று சொன்னாள். இவளுடைய மனதை நன்றா யறிந்து இவள்தான் நம்மைக் கொல்லுகிற நமனென்று எண்ணி அந்த இரண்டுவரமும் உனக்குக்கொடுத்தேன். நானும்தேவலோகம்போய்ச் சேருகிறேன். நீ உன்மகனுடனே ராஜ்ஜியம் ஆண்டுக்கொண் டிருவென்றுசொல்லி அதுவே ஒரு வாளாயுதம் போலத் தசரதமகாராஜன் மனதையறுக்க துக்க மென்கிற சமுத்திரத்திலே முழுகி மூர்ச்சாக்கிராந்தராய் நித்திரைபோனார், (இரவு என்கிற ஸ்திரீயானவள் இந்த கைகேசியின் புருஷனாகிய தசரத மஹாராஜன் மிகவும் வருந்தி வருந்திச் சொல்லி மூர்ச்சையடைந்தும் கொஞ்ச மாகிலும் இரக்கமில்லாமலிருக்கிறதைக் கண்டு, அவளைப்போல நாமும் ஸ்திரீயாகையால், ஸ்திரீகளெல்லாம் கொடியர்களென்கிறதா யாவரும் சொல்லுவார்க ளென்று வெட்கி. புருஷர் முன்னே நிற்கமாட்டாமல் போய்விட்டாள்.) பொழுது விடியக் காலமாயிற்று. ராஜாவினுடைய துயரத்தைப்பார்த்துக் கோழிகளும்சிறகென்கிற கைகளினாலேவயிற்றிலே அடித்துக் கொண்டு அழுகிறதுபோல கூப்பிட்டது. உடனே மற்ற பக்ஷிகளெல்லாம் கைகேசியை வைகிறதுபோல சப்தித்துக்கொண்டு புறப்பட்டது. காட்டிலிருக்கும் யானைகள் ஸ்ரீராமனுக்கு ராச்சியமில்லாதபடியால், நாம் இப்பூமியை விட்டுப் போய்விடுவோமென்று எழுந்ததுபோலப் புறப்பட்டது. நக்ஷத்திரங்க ளெல்லாம் (ஸ்ரீராமனுக்குப்பட்டாபிஷேகமில்லாதபடியால் போட்டிருந்தமுத்துபந்தரைப் பிரித்ததுபோல) மறைந்தது. பட்டணத்திலுள்ள ஸ்திரீகளெல்லாம் இன்றையதினம் ஸ்ரீராமனுக்குப் பட்டாபிஷேகம் ஆகப்போகுதென்று முழக்கினபேரிகைசத்தங்களைக்கேட்டு, மேகத்தைக்கண்ட மயில்கள்போல சந்தோஷித்தெழுந்திருந்தார்கள் ஸ்ரீராமனுடைய பட்டாபிஷேகம் பார்க்கிறதற்குஒருராத்திரிநடுவே வந்து கெடுத்ததென்று அந்தராத்திரியை ஊழிகாலம்போலத் தள்ளினவர்களாய்த். தாமும் லோகாதி லோகங்களும் சுகப்படுகிறநாள் இன்றைக்கென்று புருஷரெல்லாம் சந்தோஷத்துடன் எழுந்திருந்தார்கள். மாளிகைகள் தோறும் வைத்திருந்த தீபங்களெல்லாம் கைகேசியினாலே தசரத மஹாராஜாவுக்கு ஐம்புலாதிகளும் எப்படி ஒடுங்கியதோ அப்படி போல பிரகாசங்கள் மழுங்கிவெளுத்துப் போயிற்று. அல்லிப் புஷ்பங்களெல்லாம் கைகேசியி னுடைய நடத்தைகளைக் கேட்ட. ஸ்திரீகள் எப்படி வாயை மூடிக்கொள்ளுவார்களோ, அப்படி குவிந்தது. சூரிய பகவான், தன்னுடைய வம்சத்திலே பிறந்தபேரனாகிய தசரதமஹாராஜனுடைய பிராணன் ஒழியும் படிசெய்த, கைகேசியைக் கோபித்துக்கொண்டுப் புறப்படுகிறதுபோல இருளைக்கடிந்து மிகவும் செவந்த ரூபமாக உதயகிரி பர்வதத்தில். உதயமானார். மூவராயும், மூவரில் முதல்வராயும், ஆதிமூலமாயும், லோகமாயும், அந்த தேவாதி தேவனாகிய சாம்பசிவ மூர்த்தியினுடைய, வில்லை ஒடித்தவராயுமிருக்கிற ஸ்ரீராமனுக்கு இப்பூமியை காக்கும்படி பட்டாபிஷேகம் செய்யப்போகிற வேடிக்கையைப்பார்ப்போமென்று அவாகொண்டிருக்கிற அங்கரத்து ஸ்திரிகளுடைய முகம்போல தாமரைகள் முன்னுதாகமலர்ந்தன. எக்கும்பேரிகை மத்தளம் தாளம்முதலான வாத்தியங்கள் முழங்கிற்று. யாழ் வீணைகள் வாசித்தார்கள். யானை-குதிரை-ரதங்களுடைய சத்தங்கள் மேகமெற்ஜனைபோல சத்தித்தது. ஸ்ரீராமனுக்குஇன்றைக்குப் பட்டாபிஷேகமென்று, பட்டணத்திலுள்ள ஜெனங்கள்யாவரும் அதிகசந்தோஷத்துடனே அலங்காரம் செய்துக்கொண்டார்கள் ராஜகுமாரர்களெல்லாம் ஸ்ரீராமனுடைய தம்பிமார்போல சந்தோஷித்துக்கொண் டிருந்தார்கள். பதிவிருதா சிரோமணியாகிய ஸ்திரிகள் கௌசலையைப்போல சந்தோஷித்திருந்தார்கள். பிராமணோத்தமர்கள் வசிஷ்டரைப்போல சந்தோஷித் திருந்தார்கள். சாது ஜெனங்களாயிருக்கிற புருஷரெல்லாம் தசரதமகாராஜாவைப்போல சந்தோஷித்திருந்தார்கள். மற்றராஜகூட்டங்களெல்லாம் அமிர்தம்சாப்பிடுகிறதற்குக்கூடியதேவகோஷ்டிகள்போல ஸ்ரீராமனுடைய பட்டாபிஷேகதரிசனஞ்செய்ய மிகுந்த அன்போடு கூடினார்கள். வீதிகள்தோறும் ஸ்திரீபுருஷர் நெருங்கி நடவுங்கள் நடவுங்களென்று சொல்லிக்கொண்டு போனவர்கள் திரும்பிவருகிறதற்கு மிகவும் பிரயாசமாய் நெருங்கிநிறைந்தார்கள். ராஜகூட்ட மதிகமென்பாரும், பிராமணாள் அதிகமென்பாரும், ஸ்திரீகூட்ட மிகுதியென்பாரும், புருஷாளே அதிகமென்பாரும், இப்படியாகச் சொல்லிக்கொண்டவர்களே அல்லாமல் ஒருவராகிலும் முழுமையும் தெரியக் கண்டவர்களில்லை, அன்றையத்தினம் ஸ்ரீ

ராமனுடைய பட்டாபிஷேகத்துக்கு இலங்கையிலுள்ள இராக்ஷதரும்-அஷ்டகெஜங்களும் தவிர மற்ற உலகத்திலுள்ள யாவரும் வந்துநிறைந்தார்கள். ராஜாக்களெல்லாம் அனேகங்கோடி சந்திரோதயம்போல முத்துக்கொடைகள் பிரகாசிக்க, அன்னப்பக்ஷிகள் பறக்கிறதுபோல வெண்சாமரை இருபக்கத்திலும் வீச, ஒவ்வொருவர் ஒவ்வொரு இந்திரனுக்குச் சமானமாக, சகலரும் பட்டாபிஷேக மண்டபம் வந்து சேர்ந்தார்கள். மகாரிஷிகள் தங்கள் கிரகாசிரமத்தில் தங்கள் தங்கள் பிள்ளைகளுக்குப் பட்டங்கட்டினால் எவ்வளவு சந்துஷ்டியாயிருக்குமோ! அவ்வளவு சந்தோஷத்துடனே வந்துகூடினார்கள். தேவர்க்கள் ஆகாயமெங்கும் நிறைந்தார்கள். பூலோகத்தார் யாவரும் எல்லாத்திக்கிலும் நிறைந்தார்கள். மங்களபேரிகை முழங்கினார்கள். ராஜாக்களுடைய கிரீடம்-வாகுவலயம்-பதக்கம்-சரப்பளி முதலிய திவ்விய ஆபரணத்தின் காந்திகள் தேவலோகவளாக்கும் பிறவேசித்து, இமையாநாட்டம் பொருந்திய தேவர்க்களுடைய நேத்திரங்கள்கூசி-நிமைக்கும்படியாய்ப் பிரகாசித்தது. வசிஷ்டமகாமுனி அனேகம் பிராமணாள்சூழ, பட்டாபிஷேகத்துக்குவேண்டிய வஸ்துக்களும், கங்கை முதல் கன்னியாவரையிலுள்ள தீர்த்தங்களும் பூரித்துவைத்து, சிங்காதன முதலானதுகளுஞ் செய்வித்தார். ஜோசியாள் வசிஷ்டருடனே ஸ்வாமி! முகூர்த்தகாலம் சமீபித் திருக்கின்றதென்றுசொல்ல! அப்போது வசிஷ்டர் சுமந்திரனுகிய மந்திரியைப்பார்த்து, நீபோய் சீக்கிரத்துக்கு ராஜாவை அழைத்துக்கொண்டு வாருமென்றுசொன்னார். அப்படியே சுமந்திரன்மிகுந்த அன்புடனே நடந்து சபாமண்டபம்போனார். ராஜாதிராஜனை அவ்விடத்திற் காணாதபடியால், அவ்விடத்தி லிருக்கிறவர்களைக்கேட்டுக்கொண்டு கைகேசிவீட்டுக்குப்போய் தாதிகளுடனேசொல்லி அனுப்புவித்தார். அந்தச்செய்தி தாதிகள்சொல்ல, கைகேசிகேட்டு இராமனை இவ்விடத்துக்கு அழைத்துவரச்சொல்லென்று சொன்னாள். அதைச்சுமந்திரன்கேட்டு அதிகசந்தோஷத்துடனே வீதிகளைத்தாண்டி அதிசீக்கிரமாய் ஸ்ரீராம வீட்டத்துக்குப்போய், கண்டுதொழுது வாய்புதைத்துக்கொண்டு சொல்லுகிறார். ஸ்வாமி! ராஜாக்களும் மகாரிஷிகளும் மற்றஜெனங்களும் அதிகசந்தோஷத்துடனே வந்து நிறைந்திருக்கிறார்கள். தேவரீருடைய சிறியதாயாரும் தம்முடைய அரண்மனைக்கு அழைத்துவரச்சொல்லி ஆக்கியாபித்தார்கள். கிரீடந்தரித்துக்கொள்ளுகிறதற்கு சீக்கிரமாய் வாருமென்றுசொல்ல, ஸ்ரீராமனும் அந்தவார்த்தையைக்கேட்டு ஸ்ரீரங்கநாதனைத் தொழுதுக்கொண்டு அனேக ராஜகூட்டங்கள் சூழ்ந்துவர, தேவகீதங்கள்பாட தேவர்க்கள் சந்தோஷிக்க அனேக ஸ்திரீகூட்டங்கள் வந்து மொய்த்து நிறைந்துக்கொண்டு பார்க்க, ரதத்தின்பேரிலேறி நடந்தான். பட்டாபிஷேகம் செய்துக்கொள்ளுகிறதற்கு ஸ்ரீராமர்போகிறாரென்று ஒருத்தருக்கொருத்தர் முந்தி ஓடிக்கொண்டு ஆசையுடனே ஸ்திரீகூட்டங்கள் நிறைந்துபார்த்தார்கள். (கைகேசியின்) கொடியவார்த்தையினால் பட்டாபிஷேகம் நின்று ஆரணியம் போகிறதற்கு முன்னமே ஸ்திரீகளுடைய தோளென்கிற மூங்கிலும் - கண்ணென்கிற வேலும் - முலையென்கிற மலைகளும் நெருங்கியிருக்கிற இந்தக்காட்டில்நடந்தார்) சந்தனமும்-புஷ்பமும்-கதம்பப்பொடிகளும் வீதிகளில் தூவவேணுமென்று வந்தஸ்திரீகள் ஸ்ரீராமனைக்கண்டு மயங்கிசோர்ந்து மேகலாபரணத்தையும் வளையல்களையும் நாணத்தையும் நழவிப்போட்டு நிற்கிறவர்களும், நம்மிடத்தில் அவருக்கு அன்பில்லையே இவருக்கு ராச்சிய பட்டாபிஷேகமு மாகுமா! வென்கிறவர்களும், சிவந்தகண்ணும் கறுத்ததிருமேனியும் தேருமா யெங்குங்காண்கின்றதே! என்று பலவாறாக ஸ்திரீகளெல்லாம் இரைந்து நிறைந்து மொய்த்துக்கொண்டார்கள். பின்னையுமிருக்கிற ராஜாக்கள் பட்டணத்து ஜெனங்கள் சகலரும் தேரின்பேரில்போகிற ஸ்ரீராமனைப் பார்த்து இனிமேல் உலகம் பிழைத்ததென்பாரும், அனேகம் ஊழிகாலம் நீர்க்கமாக யிருக்கவேணுமென்பாரும், என்னுடைய ஆயுசும் நீர்பூட்டிக்கொண்டு சுகமாயிருமென்பாரும், நாங்கள்செய்த தபோபலமெல்லாம் உமக்குச் சித்திக்கக்கடவதென்பாரும், நீர் நல்லவரானபடியினாலே நல்லகாரியம் பலித்ததென்பாரும், இவருடைய திருநேத்திரங்களுக்குச் செந்தாமரை புஷ்பத்தையும் திருமேனிக்கு மேகத்தையும் உவமானம் சொல்லத்தக்கதாகஅவைகளென்ன புண்ணியம் செய்ததோ வென்பாரும், இந்த ராமனைப்பெற்று நமக்கு நேத்திரானந்தமாகக் காட்டின தசரதமகாராஜாவுக்குப் பதில் உபகாரம் என்னசெய்யப்போகிறோமென்பாரும், பூர்வத்தில் முதலையின் வாயில் அகப்பட்ட யானை ஆதிமூலமே யென்றழைக்க ஓடிவந்து அம்முதலையைச் சக்கரத்தினால் சங்கரித்து அந்த யானையை ரக்ஷித்த ஸ்ரீமன் நாராயணனுக்குச் சமானம் இவருடைய கிருபையென்பாரும், ஸ்ரீராமனைப் பாதாதிகேச வரையிலும்பார்த்து காரணமில்லாமல் இருக்கச்செயும் கண்ணீர்வழிய நிற்கிறவர்களும், இவருடைய அறிவும்-குணமும்-சீலமும் - தேவர்க்களுக்குந் தானுண்டாவென்பாரும், பராபரவஸ்துவே யிவனென்பாரும், பூர்வத்தில் இவர்கள் வம்சத்தில் கங்கையைப் பூமிக்குக்கொண்டுவந்தவனும் தேவர்க்கள் நிமித்தம் அசுரர்களைச் செயித்தவர்கள் முதலானபேரும் இவனிகிர்த்திக்குப் பின்னிட்டவர்களென்பாரும், அனேக ஆபரணங்கள்-திரவியங்கள்-யானை-குதிரைகள் முதலானதுகளைக்கொண்டு வந்து ஸ்வாமி! இதை வாங்கிப் பிராமணுளுக்கும் தரித்திராளுக்கும் கொடுமென்று சொல்லுவாரும், தான்பெற்ற இளங்கன்றுவர பசுவானதுகண்டு மனதுருகிறதுபோலவும், உருகி நைந்து பரிவுடனே நிற்பாரும், இவனைப்போல உலகத்திலே பிள்ளைகளுண்டாவென்பாரும், நம்மிடவீதியைவிட்டுந் தூரிதமாய்ப் போய்விடுகிறாரென்று அநேக ஆபரணத்தினாலேயும்-திரவியத்தினாலேயும்-வீதியைத்தூர்த்து மேடாக்கிப்போடுவோமென்று நினைத்துச்சொரிவாரும், இந்தப்பிள்ளை தாய் கையிலே வளரயில்லை கைகேசியே வளர்த்தாள்.



இப்போது பட்டமும் கைகேசியே கட்டிவைக்கப்போகிறாள். அவளுடையமனதையும் சந்தோஷத்தையும் ஒருவராலே சொல்லிமுடியாதென்பாரும், பாவமும் துக்கமும் இனி வேர்பறிந்து போமென்பாரும், பூமி பொதுவென்று சொல்லுகிறதை இன்றுமுதல் சொல்லக்கூடாது. இனி யிவரதுதானென்பாரும், தேவர்க்களுடைய பகையாளிகளையெல்லாம் இவர்ஜெயிப்பா ரென்பாரும்; இவர்சொன்னபடிகேட்டு ராச்சியபாரம் செய்கிற ராஜாக்களுடைய பாக்கியமே பாக்கியமென்பாரும், இப்படி சகலரும் சொல்லிக்கொண்டு சந்தோஷிக்க, ஸ்ரீராமன் வீதிகளெல்லாம் தாண்டி சபாமண்டபத்திற்குப்போனார். அவ்விடத்தில் தகப்பனாரைக்காணாதபடியால், சிறியதாயார் அரண்மனைக்குப்போனார். (அங்கேயிருக்கிற ராஜாக்கள்) பிதாவைச் சேவித்துக்கொண்டு பின்பு பட்டாபிஷேகம் செய்துக்கொள்ளுகிறதாய் வந்தார் அதுவும் உத்தமந்தானென்று சொல்லிக்கொண்டார்கள். ஸ்ரீராமன் தகப்பனாரிருக்கிற அரண்மனைக்கு வருகிறதைக் கைகேசிகண்டு, (இராஜா நமது வாயினாலே சொல்லமாட்டார்.) நாம்தானே சொல்வோமென்று துணிந்து எழுந்திருந்து, தனியே நேரில் ஒருயமன்போல வந்தாள். ஸ்ரீராமன் அந்திகாலத்திலகண்ட பசுங்கன்றைப்போல மனம்களித்துச் சாஷ்டாங்கமாகச்சேவித்து நின்றார். அப்படிநின்ற ஸ்ரீராமனைப்பார்த்து இரும்பைப்போலவலியமனதையுடைய கைகேசி, அப்பா! உன்தகப்பனார் உனக்கு ஒருவார்த்தைச்சொன்னாரென்று சொன்னாள். அம்மா தகப்பனார் உமக்குச்சொல்ல, அதை நீர் எனக்குச்சொல்ல, நான் அதைக்கேட்க எவ்வளவு புண்ணியம் செய்தேன். இவ்வளவு கிடைத்ததனால் எனக்குச் சமதையானவர்கள் யாரிருக்கிறார்கள். இதிலும் நான் செய்கிற தவத்தில் அதிசய முண்டோ! தகப்பனும் தாயும் நீரே கிருபைசெய்து சொல்லுமென்று ஸ்ரீராமன் வணங்கிக்கேட்க, கைகேசி சொல்லுகிறாள். சமுத்திரம் சூழ்ந்த பூலோகமெல்லாம் பரதன் ராஜரீகம் செய்யவும், நீ - ஜடாதாரனாய் தவவேடம்பூண்டு ஆரணியத்துக்குப்போய், புண்ணிய தீர்த்தங்களாடிப் பதினாலு வருஷம் சென்றபின்பு வரச்சொல்லி ராஜாசொன்னாரென்றாள். அப்போது ஸ்ரீராமனுடைய திருமுகமண்டலம் அப்பொழுதலர்ந்த செந்தாமரைக் கமலம்போல பிரகாசித்தது முன்தகப்பனார் சொன்ன வார்த்தையைத் தள்ளலாகாதென்று ராச்சியமென்கிற கிலேசத்திற்குச் சம்மதித் திருந்த படியினாலே, வண்டியிற் கட்டிய ரிஷபத்தைப் பூட்டுத்தறித்து விட்டுவிட்டாலெப்படியோ அப்படிபோல கைகேசி வார்த்தைக்குச் சந்தோஷித்தார். அம்மா! இராஜன் சொல்லாம லிருந்தாலும் உம்முடைய வார்த்தையை நான்மறுப்பேனா! தம்பிக்குவந்த பாக்கியம் அடியேனுக்குவந்ததல்லவா! அப்படியே தம்முடைய வார்த்தையைச் சிரமேல் வகித்துக்கொண்டேன். இதோ ஆரணியத்துக்கு நடக்கிறேன் நீர்-விசனப்படாதே என்று சாஷ்டாங்கமாகச் சேவித்து அங்கிருந்த படியே தகப்பனு ரிருக்கிறத் திக்கை நோக்கித் தொழுது நமஸ்கரித்து (பூமிதேவியும் லக்ஷ்மியும் அங்கலாய்க்க) கௌசலையினுடைய திருமாளிகைக்குவந்தார்.

## நகர் நீங்குதல்.

பட்டாபிஷேகம் செய்துக்கொண்டு வருவாரென்று எதிர்பார்த்திருந்தகௌசலைக்குமுன்பாகவெண்சாமரை குடை-முதலானதுகளில்லாமல் தம்முடைய ஆதிசங்கற்பம் முன்னேநடக்கத், தருமம்பின்னே அழுதுக் கொண்டுவர, தனியேவந்தார். வந்தமகனைக்கண்டு கிரீடந்தரித்துக் கொள்ளாமல் திருமஞ்சனமும் ஆடாமல் வந்ததென்னமோ! என்று ஐயமுற்றக்கௌசலையம்மனைச்சாஷ்டாங்கமாகச் சேவித்தார். சேவித்த மகனை அன்புடனே வாழ்த்தி, அப்பா? பட்டாபிஷேகத்துக்கு ஏதாகிலும் விகாதமுண்டாயிற்றோ எனக்கேட்க! ஸ்ரீராமன் கரங்களைக் கூப்பிக்கொண்டு அம்மா! உம்முடைய குமாரன் என் தம்பி பரதனுக்குப் பட்டாபிஷேகமாகுதென்று சொன்னார். அந்த வார்த்தையைக்கேட்டுகௌசலை அப்பா! முறைமையல்லவென்கிறது ஒன்றல்லாமல்உன்னிலும்பரதன் நல்லவன் அப்படியே ராஜாசொன்னபடி உன்னுடைய தம்பிக்கு ராச்சியத்தைக்கொடுத்து அனேககாலம் கூடியிருந்து வாழுங்கடவீர்களென்று சொன்னாள்! ஸ்ரீராமன் தாயாருடைய குணநிசயத்தைக்கண்டு சந்தோஷித்து அம்மா! இராஜா யெனக்கு ஒருகாரியம் சொல்லி யிருக்கின்றாரென்று சொன்னார். அப்பா! அதென்னவென்றுகேட்க, பதினாலுவருஷம் ஆரணியத்தில் ரிஷிகளோடு வாசம்செய்து வரச்சொல்லி யிருக்கிறாரென்று ஸ்ரீராமன் சொன்னார். அவ்வார்த்தையென்கிற தீ - கௌசலையின் காதில்விழுந்தும் விழாததற்கு முன்னமே மனம்திகைத்து விம்மி - அழுது - பூமியில்விழுந்து - அப்பா! உன்னைப்பட்டம் கட்டிக்கொள்ளச்சொல்லி ராஜாசொன்னது வஞ்சகமோ! அல்லது அவ்வார்த்தைவிஷமோ! யாதோ! என்பிராணன் இனிமேலிராதே! என்னுயிர் நடுங்குதே! என்று சொல்லி கைகளை நெரித்துத் தன்பிள்ளையிருந்த (ஆலந்தளிருக்குச்சமானமான) வயிற்றைத் தங்ககடகமிட்டக் கரங்களினாற் பிசைந்து பெருமூச்சுவிட்டு, மனம்புழுங்கி, விம்மி, இராஜாவினுடைய கிருபை நன்றாயிருந்ததென்று நகைத்து, மகனை நன்றாய்ப்பார்த்து அப்பா! நீ, ஆரணியத்துக்கு என்றைக்குப் போகிறதென்றுசொல்லி திரும்பியும் பூமியில் விழுந்து சீவனைவிடுகிற சரீரம்போலப் பதைபதைத்து கிருபாநிதியான ராஜாவுக்கு நீ என்னபிழைசெய்தாயென்றுசொல்லி, ஏங்கி! மிகுந்த தாரித்திரனுக்கு அதிக திரவியம் அகப்பட்டு உடனே அதையிழந்தாலெப்படியோ! அப்படிபோல கிலேசித்து தருமமென்கிறது என்னிடத்திலில்லையோ! ஆ! தெய்வங்களே! என்னிடத்தி லெப்படியா செய்தீர்களென்று பலவாறாகச் சொல்லித் துக்கித்துக் கன்றைப்பிரிந்த பசுபோல மனம்நொந்து கலங்கினாள். ஸ்ரீராமன் அம்மா! என் தம்பி ராச்சியமாள, தகப்பனாரைப் பொய்யில்லாதவராக்கி ஆரணியவாசம் செய்யும்படியா யெனக்குறுதியுண்டாயிற்

று. சரீரமெடுத்ததற்கு இதைப்பார்க்கிலும் பாக்கியம்
வேறென்ன விருக்கின்றது. ஆகாயம் – பூமி – சமுத்திர
ம்-மற்ற ஐம்பூதங்கள் அழிந்துபோனாலும் இராஜாவினு
டைய வார்த்தையை நான் மறுக்கப்போகுமா ! ஆதலா
ல் அம்மா ! நீர் கிலேசிக்கவேண்டாமென்று தேறுதலை
ச்சொன்னார். அதற்குக் கௌசலை ஆனால் அப்பா ! ரா
ஜாவினுடைய ஆக்கினையின்படி நீ போகவேண்டாமெ
ன்று நான் சொல்லவில்லை, உயிரை விடமாட்டாமல் தா
ங்கிக்கொண்டிருக்கிற என்னையும் கூட அழைத்துக்கொ
ண்டு போவென்றுசொல்ல, அம்மா ! ராஜா என்னைப்பி
ரிந்து துக்கசாகரத்தில் அழுந்தி யிருக்கிறவரோடுகூட நீ
ர் யிருந்து அவருக்குத் தயிரியஞ் சொல்லிக்கொண்டி யி
ருக்கவேணுமல்லாமல் ஆரணியத்துக்குவர நினைக்கிறது
உத்தமமா! நீர் தருமம் பார்க்க யில்லையா! என் தம்பி !
இந்த ராச்சியத்துக்கு ராஜாவான பிற்பாடு ராஜாதிராஜ
னானவர் இல்லறத்தைவிட்டுத் துறவறத்தையடுத்துத் த
வஞ்செய்கிற நாளையில் நீரும்கூட யிருந்து விரதங்களை
யனுசரிக்கவேண்டு மாதலால் நீர் கிலேசித்து மனம் தி
கைக்க வேண்டிய காரியமென்ன தேவர்களும் தபம்
செய்தல்லவோ பெரியவர்களானார்கள். ஆகிலும் இந்தப்
பதினாலு வருஷமும் பதினாலு பகலல்லவா! முன்னாலே
கௌசிகமகாரிஷியின் பிறகே, மகாராஜா ஆக்கினையின்
படிக்குப் போனதினாலல்லவா! அனேக மந்திரங்களும்
சிரேஸ்கரங்களும் உண்டாயிற்று. அதை நீர் மறந்து
போனீரா ! ரிஷி யீஸ்வரானுக்கு மனதுவர நடந்துக்
கொண்டு அவர்கள் அநுக்கிரகமும் பெற்றுக்கொண்டெ
ன்னிடத்திலதேவர்களுக்கும் அபேக்ஷையுண்டாகும்ப
டியாய் வருகிறேன். அதுவும் இருந்துப்பாரும் முன்னா
லே சகரான் பிதாவார்த்தையைக்கேட்டு இந்த சமுத்தி
ரத்தைத்தோண்டி தங்கள் சரீரங்களைத் தியாகம்செய்தா
ர்கள். அந்த கீர்த்தி இன்னமிருக்கின்றதே. கையில் மழு
வாயுதம்பிடித்த பரசுராமனும் தகப்பன் பேச்சைக்கேட்
டுத் தாயாரை சங்கரிக்கயில்லையா! என்று இப்படியாக
த் தாயாருக்குத் தயிரியம் பிறக்கும்படியான அனேகம்
தேறுதலையை ஸ்ரீராமன்சொல்ல, இவன் எப்படியும் ஆ
ரணியத்திற்குப்போகிறதற்கே, சித்தமாயிருக்கிறான். ஆ
தலால் ராச்சியம் பரதனைவும் இவன் காட்டுக்குப்போ
காமல் பட்டணத்தி லிருக்கவும் இராஜாவுக்குச்சொல்லு
வோமென்று கௌசலை எண்ணிக்கொண்டு தக்ஷணமே
ராஜாயிருக்கிற யிடத்துக்குப்போனாள். அப்படி போகி
ற தாயாரையும் நமஸ்கரித்து சுமித்திரை யிவளுக்கும் த
யிரியஞ் சொல்லுவனென் றெண்ணி நினைத்து அவள்
அரண்மனைக்கு ஸ்ரீராமன்போனார். கௌசலை கைகேசி
யின் அரண்மனைக்குப்போய் அவ்விடத்தில் ராஜன் மூர்ச்
சையாய் பிரக்ஞைதப்பி யிருக்கிறதைப் பார்த்து, ஜீவன்
போய்விட்ட சரீரம்போல பூமியில்விழுந்தாள். விழுந்
து ஸ்வாமி! பிரிந்துப் போகிறீரா! பிரிந்துப் போகிறீ
ரா! பெரியவர்களுக்கு இதுயுக்தமமா ! நீதியா ! அடியே
னை நினைக்கயில்லையா ? ஆ ! என்னுடைய அறிவே ! ப
லமே ! நீர் இப்படி ஆகிறது அழிந்துதானோ! பிள்ளைக்
குப் பட்டங்கட்ட வேணுமென்று யோசனை செய்தீர் !
ராஜாதிராஜனே ! தரித்திரானுக்குத்தனமே ! பூலோக
த்தாருக்குத்தவமே ! பாக்கியத்துக்கு பாக்கியமே ! க
ல்விக்கடலே ! வேதசாரமே ! கருணாலயமே ! இப்படி
யழுகிற என்னை ஏனென்றுதான் கேட்கலாகாதா ! இது
உமக்கழகா ! ஜீவனில்லாத சரீரம்போல வரவேண்டிய
காரணந் தெரியச்சொல்லலாகாதா ! ஐயோ ! எனக்கு
ம் தெரியவில்லையே ! ஐயோ ! மகனே ! தகப்பனுருடை
ய கதியைப் பார்க்கிறதற்காகிலும்வராயா ! என்று அழு
கிற சத்தங் கேட்டவர்கள் வெளியிலே சொல்ல, சபை
யிலே கூடியிருந்த ராஜகூட்டங்கள்கேட்டு வசிஷ்டமகா
முனியைச்சேவித்து ஸ்வாமி ! என்னமோ ! அதிசயம்
உண்டா யிருக்கிறதுபோல காண்கின்றது ? தாங்கள் வி
ஜயம்செய்து அறியுங்களென்று சொல்ல, அந்தக்ஷண
மே அவர் கைகேசியின் வீட்டுக்குவந்து ராஜாவைப்பா
ர்த்து ராஜா யிறந்தவரல்ல, இறவாமலிருக்கிறவருமல்ல
இப்போது மூர்ச்சையாயிருக்கிறாரென்றுதெரிந்துக்கொ
ண்டு கைகேசியின்முகம் துக்கமில்லாம லிருக்கிறதையு
ங்கண்டு இவள் ராஜாவினிடத்திலிருந்த அன்னியோன்
னியத்தை யோசித்துப் பார்த்தால் இப்போது இவள்
ஜீவனை விட்டுக்கொள்ளவேணுமே ! இவள் கடின சித்
தமா யிருக்கவேண்டிய காரணம்யாதென்று ஆலோசித்
துஒருவர்மனது ஒருவருக்கு எப்படித்தெரியுமென்றெ
ண்ணி அங்கலாய்த்துக்கொண்டிருக்கிற கௌசலையைப்
பார்த்து தம்மைச்சேவித்த கைகேசியை நோக்கி இரா
ஜாவுக்கு இப்படி வந்ததென்னவென்று கேட்க, தன்னா
லேவந்த செய்திகளெல்லாம் வசிஷ்டருக்குத் தெரியச்
சொன்னாள். அதுகேட்டுத் தாமரைக் கமலம்போலிருக்
கிற தம்முடைய கைகளினாலே இராஜாவை வாரியெடுத்
து நீர் தெரிந்தவராச்சுதே ! நீர் இப்படி கிலேசிக்கலா
மா ? அவள் உன் பிள்ளைக்கு ராச்சியங் கொடுப்பாள்
துயரப்படாதேயுமென்று சொல்லி சரீரத்தைத் தடவி
க்கொடுத்து சந்தனம் – பன்னீர் – முதலியவைகளை வி
சரச்சொல்லி ஆக்கியாபித்து தம்முடைய மார்பிலே ய
ணைத்துக்கொண்டு யின்சொல்லாகச்சொல்ல, கைகேசி
வார்த்தையென்கிற விஷமேறி மயங்கிக்கிடந்த தசரதர்
பிள்ளையான ஸ்ரீராமனை நினைத்துக்கொண்டே யிருந்தப
டியினாலே அந்தவிஷம்திரும்பி ஜீவனைக்கண்டார். அது
கண்டு வசிஷ்டமகாமுனி ராஜாவே ! துயரப் படாதே
யும், துயரத்தைவிட்டுவிடும். உன்பிள்ளை ராமனை ராச்
சியபாரம் செய்யும்படி கைகேசிகொடுப்பாள். அவன்
மகுடஞ் சூடாமற்போனால் நாம் ஆரிருக்கப் போகிறோ
மென்று சொல்ல, அதுகேட்டு ராஜா ஸ்வாமி ! அடி
யேனுக்கு சரீராகித்தியம்வந்தது யிந்தவேளையில் அவ
னுக்குப் பட்டங் கட்டுகிறேனென்று அவனை ஆரணிய
த்துக் கனுப்பும்படியாயிற்று. என்வார்த்தையும் பிசகா
மல் லோக அபவாதமும் வாராமல் என் பிராணனையுங்
காத்துக்கொள்ளுமென்று ராஜாசொல்ல, வசிஷ்டமகா
முனி அன்புடனே கைகேசியைப்பார்த்து மகாலக்ஷ்மி
க்குச் சமானமானவளே உன் பிள்ளைக்கு ராஜரீகமும்



உலகத்துயிர்களுக்குப் பிராணனும் உன்புருஷனுக்கு ஜீ
வனும் கொடுத்து கீர்த்தி சம்பாதித்துக்கொள் ளென்று
சொன்னார். அந்தவார்த்தையைக்கேட்ட கைகேசி விம்
மி – அழுது – கீழேவிழுந்து – ராஜாபேச்சுத் தப்பினால்
நான் பூமியில் ஜீவனுட னிருக்கிறதில்லை, அவர்பேச்சுத்
தப்பினாலும் நான்பேச்சுத்தப்புவேனா ! பிராணனை விட்
டுக் கொள்ளுகிறேனென்றுசொன்னாள். அப்போது வ
சிஷ்டமகாமுனி சொல்லுகிறார். புருஷன் சாவானெ
ன்றும் இந்தவார்த்தை உலகத்தாருக்குச் சம்மதிப்படா
தென்றும், அபகீர்த்தி வருமென்றும் எண்ணிப்பார்த்து
யிந்தகாரியத்தை நீ விடவில்லை. சொன்னாலுங் கேட்கிற
தில்லை. நானினிமேல் உனக்கென்ன சொல்லப் போகி
றேன் புருஷன்போய் விடுகிறானென்கிற இரக்கமும் கி
லேசமும் யில்லாம லெப்படி சொல்லுகிறையே ! நீ யெ
ன்ன னெருப்பா ! விஷமா ! பேயா ! பாவி ! ராஜாவு
க்கு நீயென்ன பகையாளியா ! இப்படி நிஷ்கண்டகமாய்
ராஜா சொல்லாததற்குமுன்னே ஸ்ரீராமனை ஆரணியத்
துக்குப் போகச்சொன்னாய். அவன் அந்தக்ஷணமே புற
ப்பட்டான் உனக்குமிஞ்சின பொல்லாதவர்கள் ராச்சி
யத்திலே ஒருவரையும் காணேனென்றார். அந்தவார்த்
தை தசரதமகாராஜன்கேட்டு கண்ணைவிழித்து கைகேசி
யைப்பார்த்து பாவி ! என்மகனை காட்டுக்குப் போகச்
சொல்லி சொல்லி விட்டாயா ! அவனும் போனானே !
என்கண்ணான ஸ்ரீராமனை ஆரணியத்துக்குப் போகும்ப
டியாய்ச் செய்தால் உன்பிள்ளைக்குப் பட்டங் கட்டுகிற
போது அவனுக்குக் கையிலே கங்கணங்கட்டவேணுமே
அதற்கு உன் தாலிக் கயிற்றைத்தான் கட்டவேண்டியதா
ய்வரும். அனேகநாள் உன்வாயினுடைய விஷத்தைப்பு
சித்துவந்தேன் ஆகையாலது என் பிராணனை வேரோ
டே விழுங்கிவிட்டது. பூர்வத்தில் நான் உன்னை அக்கி
னிசாக்ஷியாய்ப் பெண்சாதியாகத் தேடிக்கொண்டது ஒ
ருகூற்றுவனைத் தேடிக்கொண்டதுபோ லாயிற்றென்று
சொல்லிப் பிரலாபித்தார். இதைக்கண்டும் கொஞ்சமா
கிலும் இரங்காமலிருந்த கைகேசியை இராஜாபார்த்து
வசிஷ்டமகாமுனியைநோக்கி ஸ்வாமி! இந்தபாவி ! எ
னக்கு ஸ்திரீயுமல்ல, ராச்சியம் ஆளவருகிற பரதன் எ
னக்குப் பிள்ளையுமல்ல, அவன் என்னுடைய உரிமை
யான அபரகருமங்களுக்குப் பாத்திரனல்லவென்றுசொ
ல்லி தம்மிட சமீபத்தில் அழுதுக்கொண்டிருக்கிறகௌ
சலையைப்பார்த்து,என்னைக்கண்டுக்கொள்ளாமற்போன
வன் உன்னையும் காணவில்லையோ ! என்றுக் கண்களில்
தாரை தாரையாய் ஜலத்தைப் பெருகவிட்டுத் துக்கித்
தார், கௌசலைப் பிள்ளையைப் பிரிகிற துயரத்தையும்
புருஷனுடைய வருத்தத்தையும் கண்டு ஆலோசித்து
இந்த வஞ்சனை கைகேசி செய்ததென்று தீர்மானித்துக்
கொண்டு, மகாராஜா கொடுத்த வரத்தைத் தப்பமாட்
டாமல் வருந்தி மூர்ச்சித் திருக்கிறாரென்று அறிந்து,
ராஜாவுக்குத் தேறுதலைச் சொல்ல நினைந்தவளாய், ஸ்ரீ
ராமன் திரும்பினானென்று சொல்லாமற் போனால் இ
ராஜன் தேறுகிற தில்லை. அல்லது அப்படிக்கே சொன்
னால் அபத்தமாகின்றதென்று எண்ணி மனம் சோர்ந்
து, ஸ்வாமி ! மகனுடைய வாஞ்சையினாலே சத்தியத்
தை விட்டு இப்படி கிலேசிக்கிறது தேவரீருடைய பிர
தாபத்துக்கும், கீர்த்திக்கும், தருமமா ! உலகம் சம்மதிக்
குமா ! மகன் திரும்புவான் நீர் வருந்த வேண்டாமெ
ன்று கௌசலை சொல்ல, அவ்வசனத்தைக் கேட்ட த
சரத மகாராஜன் மிகுந்த ஆவலுடனே கண்களை விழி
த்துப் பார்த்தார். அப்போது இவருடைய வருத்தத்
தையும் இவர் பிள்ளையின் பேரில் வைத்திருக்கிற வாஞ்
சையையும், நன்றாய் கௌசலை தெரிந்துக் கொண்டு
அவ னுடைய எண்ணத்தைப் பார்த்தால் ஆரணியத்
துக்குப் போகாமல் இருக்கிற தில்லை. இவருடைய
நிறு வாகத்தைப் பார்த்தால், இறந்து போகாம லி
ருக்கிற தில்லை, ஆ ! இதென்ன – தெய்வமே ! இ
ப்படியாக வந்து மீண்டதென் றெண்ணிக் கொண்டாள்,
(தம்முடைய நிமித்தியம் கௌசலை தயிரியமாய்ச் சொ
ல்லுகிறாளென்று) இராஜன் அக்கருத்தின்குறியை யறி
ந்து எப்படியும் ஸ்ரீராமன் ஆரணியத்துக்குப்போய் வி
டுவா னென்றெண்ணி, மகனே ஸ்ரீராமா, என்னுடைய
சரீரம் நீராயுருகிபூமியில் விழுந்துக் கிடக்கிறேன். இ
ந்தக் கண்ணீரையாகிலும் வாரி எனக்கு உண்ணும் உதக
மாய்விட்டு உன்கடனைக் கழித்து நீ காட்டுக்குப்போகா
யா – அப்பா மகனே – ராஜாக்களை மூவேழு இருபத்
தொரு தலைமுறை கருவறுத்த மழுவாளியாகிய பரசு
ராமனை ஜெயித்த உனக்கு முடிசூட்டு கிறேனென்று
சொன்னபாவிநான், உடனே உனக்குச் சடைமுடித்தரி
ப்பித்த பாவியென்று யிந்த விருதாப்பிய காலத்திலென்
னை வெறுத்து விட்டுப் போய் விடுகிறையோ!மகனே !
அப்பா ? இனி நான் ஜீவனை வைத்துக் கொண்டிரேன்.
திரிபுராதிகளை தகனம் செய்த சாம்பசிவ மூர்த்தியினு
டைய வில்லையொடித்த ஸ்ரீராமா ! கீர்த்தியையுடையவ
னே ! மெய்க்கு மெய்யானவனே ! என்கண்முன்னே நீ
வனத்துக்குப்போக நான் தாளமாட்டேன் ! உனக்குமு
ன்னே இதோநான் தேவலோகம் போகிறேன், நான்மிக
வும் இளநெஞ்சன், உன்னுடைய ஆசையினாலே ஆவிக
ழன்றுபோகிற சரீரத்தை உடைத்தா யிருக் கின்றேன்,
நான் உன்னைப்போல தயிரியஸ்தனல்ல ! ஜனகன்குமா
ரத்தியைப் பாணிக்கிரகணம் செய்துக்கொண்டு. அவள்
கரத்தைப் பிடித்துக் கொண்டு போகக்கண்ட என் கண்
ணினாலே நீ–ஆரணியம்போகப் பார்க்க மாட்டுவேனா–உ
ன்னைப்பிரிகிறதற்கு உலகஞ் சம்மதித்தாலும், தேவர்க
ள்சம்மதித்தாலும், என்னுடைய கீர்த்தியும் என்னுயிரு
மான ஸ்ரீராமா ! உன்னைப்பெற்ற அருமைநான் அறிவே
ன் ஆதலால் நான்சம்மதிக்கேன்-பிழைக்கேன், ராஜ்ஜிய
மும் ராஜரீகமும் திரவியமுதலானதுகளை, கள்ளியாகிய
கைகேசிக்கு கொடுத்து கீர்த்தி சம்பாதித்தபிரதாபம் எ
ன்னுடையபிராணனை வாங்குகின்றதே! அந்தரம்! சுவர்க்
கம் – பாதாளமென்கிறமூன்று லோகத்திலேயும் உன்னை
யே தோத்திரம் செய்கிறார்க ளென்றும் பரசுராமனை
ஜெயித்தவனை யார்தான் தோத்திரஞ் செய்யா தவர்க

ளென்றும் நீ காட்டுக்குப் போகுயென்று கேட்டுஞ் சா
காமலிருப்பேனுகில் என்னைப் போலவன் கண்ணர் யா
ரிருக்கிருர்களென்றும் நீ காட்டுக்குப்போக, இந்த கை
கேசியையும் கொல்லாமல், நானும் இந்தப்பூமியி லிருந்
தா லென்னுடையகீர்த்திதானென்னவென்றும், மகால
க்ஷுமியும் - பூமியும் உன்னைப் பிரிந்து பிழைக்க மாட்
டார்களென்றும், நான்சாகாமல் உன்னைவிட்டுப்பிரிந்தி
ருந்தே னுனல் இந்த கைகேசியைப்போல நானும்பாவி
யாய்ப்போவேனென்றும், ஆபரணங்களும், கிரீடமும்.
ரத்தினசிங்காசனமும், முத்துக்குடையும் கொடுத்து,
கண்களால்பார்க்க யிருந்தநான், நீ - மரவுரியும் - மான்
தோலுமாகப் போவதைக் காணும்ல் போய் விடுகிறதுக
ல்லதல்லவா ! என் கண்ணே ! கண்ணே ! கண்மணியே
என்று பலவாருகச் சொல்லிச் சொல்லி மனம்நொந்து
கண்களில் நீர்பெருக்க் கிலேசித்திருக்கிற ராஜாவை வ
சிஷ்டமகாமுனி பார்த்து, நீர் வியசனப் படவேண்
டாம், நான் ஸ்ரீராமனிடத்திற்குப்போய், அவனுக்கு
த்தெரியச்சொல்லி ஆரணியத்துக்குப் போகவொட்டா
மல் நிறுத்துகிறேனென்று எழுந்திருந்து நடந்தார். அ
தைக்கேட்டு இராஜன் தன்னுயிரைச் சற்றுநிறுத்தி, இ
வர்போய்ச்சொன்னல் எப்படியும் கேட்பானென்று த
ன்னைமறந்து நித்திரைசெய்தார். கௌசலை அதுகண்டு
இராஜன் இறந்துபோனுரோவென்று துக்கித்து, ஸ்வா
மி ! இராஜாதிராஜனே ! இதுதருமமா ! இப்படி சோர்
ந்துப் பிராணனை விடுகிறது யுத்தமமா ! வசிஷ்டர்போ
னபடியால் ஸ்ரீராமன்வந்தாலும் வருவானென்றுசொல்
லி, அழுதுக்கொண்டு தன்கரத்திறுலே இராஜாவினு
டைய முகத்தையும் - மார்பையும் - திருவடிகளையும்-
வருடினுள். அப்போது இராஜன் கொஞ்சம் மயக்கம்
தெளிந்து கண்களைவிழித்து கௌசலையைப்பார்த்து ம
கன் வருவானே வென்றுசொல்லி, இந்தபாதகியான
கைகேசி கூனியின் வார்த்தையைக் கேட்டுக்கொண்டு
தன்னுடையபேச்சிறுலே என்பிராணனை வாங்குகிறத
ற்குத் துணிந்தாள். அன்றியில் தானும் தன்மகனும் ரா
ஜ்ஜியபாரம் பண்ணுகிறதற்காக என் நன்மகனைக் காட்டு
க்குப்போவென்று சொன்னளே ! என்று சிந்தாக்கிரா
ந்தராய் கௌசலையைப்பார்த்துப் பின்னையும் ஒருவசன
ம் சொல்லுகிருர், ஸ்ரீராமன் ஆரணியத்துக்குப் போகா
மலிரான், என்பிராணனும் போகாமலிராது, ஏனெனி
ல் பூர்வத்தில் ஒருமகாரிஷியின் சாபம் நேரிட்டிருக்கின்
றது. அதின் வரலாற்றைச் சொல்லுகிறேன்கேள்கௌ
சலையே என்று தசரதமகாராஜா சொல்லுகிருர். பூர்வ
த்தில் நான் ஆரணியத்தில் யானைவேட்டைக்குப் போ
யிருந்து, யானைகளைத்தேடிக்கொண்டு கையில் அம்பும்
வில்லுமாக ஒருநதியின்தீரத்தில் மறைவாகயிருந்தேன்.
அவ்விடத்தில் ஒருரிஷியும் அவர்பத்தினியும் நேத்திரம
ற்றவர்களாய் மிகவும் விர்த்தராய்த் தபஞ்செய்துக்கொ
ண்டிருந்தார்கள். அவர்களுடைய குமாரனெருவன் அ
வர்கட்கு ஜலம்நிமித்தமாய் அந்தநதியில் வந்து கமண்
டலத்திறுல் ஜலம்மொள்ளுகிற சத்தம், யானை - ஜலம்

சாப்பிடுகிறதுபோலத்தோன்ற, உடனே ஓர் அஸ்திரத்
தைப் பிரயோகஞ் செய்தேன், அது அந்த ரிஷிபுத்திர
ன்பேரில்பட, அவர் பூமியில்விழுந்து பதைபதைக்கிற
து மனிதசத்தம்போலக் கேட்கவே, நான் மிகவும்பய
ந்து நடுநடுங்கி அந்தப்பிராமணப் பிள்ளையினிடத்தில்
போய் அவரைப்பார்த்து என்கரத்திலிருந்த அம்பையு
ம் வில்லையும் பூமியிலெறிந்துவிட்டு நானும்விழுந்து அ
ங்கலாயிற்று எழுந்திருந்து, நீர் ஆரையாவென்றுகேட்க
அந்த ரிஷிகுமாரன் (கேளும் மஹாராஜனே ! நான்சது
ர்முகனல் சிருட்டிக்கப்பட்ட நால்வகை வருணத்திலும்
முதன்மையாகிய பிரமகுலம், அந்த பிரமதேவன்வழி
யில் அவதரித்த சாபிபருடைய மைந்தர் விருத்தசன
ன், அவருடையபுதல்வன் ஜலபோசன், அவருடையபி
ள்ளையாகிய யான் சுரோசனன், என்தாயும் தகப்பனும்
கண்ணில்லாதவர்கள் விர்த்தர்கள் அவர்கட்கு ஜலம்கொ
ண்டு போகிற நிமித்தம் இவ்விடம் வந்தேன் வந்த இட
த்தி லிப்படியாயிற்று. நீர் தெரியாமல் யானையென்று எ
ய்தீர் என்னுடைய விதியும் இப்படிக் கிருந்ததென்று)
சொல்லி, என் தாய்தந்தைகள் நான் வரும்போதே மிக
வும் தாகமாயிருந்தார்கள், அவர்கட்கு இந்தஜலத்தைக்
கொண்டுபோய்க் கொடுத்து என்னுடைய ஆபத்தும்-ம
ரணமும்-நமஸ்காரமும்-நீர் சொல்லுமென்றுசொன்னு
ர். உடனே தேவர்க்கள் அவர் எதிரில்வந்து அழைக்க
அவரும் தெய்வலோகம்போய்ச் சேர்ந்தார். பின்னை தா
கத்துக்குச் சலங்கொண்டு வருவானென்று எதிர்பார்த்
துக்கொண் டிருக்கிறவர்களிடத்திற்கு நான் அந்தக்கம
ண்டல நீர்த்தத்தைக் கொண்டுபோய்க் கொடுத்தேன்.
அவர், அப்பா ! மகனே ! இன்னேரமேனென்று கேட்
டு, உன்னைக்காணுமல் மிகவும் மனம்நொந்தேன் உன்
னைத்தழுவிக் கொள்ளவேணும் சமீபத்தில் வாவென்ற
ழைத்தார். அப்போது நான் மிகவும்பயந்து, ஐயா ! நா
ன் ஒரு அரசன் - அயோத்தியிலிருக்கிறது - யானையின்
வேட்டைநிமித்தம் ஆரணியத்துக்கு வந்தேன் உம்மு
டைய புத்திரன் நதியிலிறங்கித் தண்ணீர் மொண்டார்.
அந்தச்சத்தத்தை யானையென்றெண்ணி மறைந்திருந்த
யான், கண்ணுல்பாராமல் அம்பைவாங்கி விட்டுவிட்டே
ன் அதுபட்டு அவர் அலறுகிறபோது, இது யானைக்கு
ரலல்லவே ? என்னபாவம் வந்து சம்பவித்ததென்று
ஓடிவந்து, பார்த்து அங்கலாயிற்று நீர் ஆரென்றுகேட்
டேன் அவர்கிருபையுடனே தங்களுடைய சமாசாரஞ்
சொல்லி உங்களுக்கு நமஸ்காரமும் செய்தார். அப்
போது அவரைத் தேவர்கள்வந்து அழைத்துப்போனு
ர்கள். சரீரம் பூமியில் விழுந்தது. நான் கண்ணுற்பாரா
மல் கமண்டல ஜலசத்தத்தைக்கேட்டு யானையென்று
அம்புயெய்தேன் அடியேன்பேரிற் கோபஞ் செய்யாமற்
பொறுத்து ரக்ஷியுங்களென்று சேவித்துக் கொண்டே
ன். அவ்வார்த்தையைக் கேட்டமாத்திரத்தில் பூமியில்
விழுந்து அழுது புரண்டு இன்றைக்குத்தான் கண்ணிழ
ந்தோமென்று துக்கசாகரத்தில் மூழ்கி ஐயா ! ஐயா !
நீ தெய்வலோகம்போனது நாங்களறியோம், ஆதலால்



இதோ வந்தோம் வந்தோமென்று வெகுவாய் பிரலா
பித்தார்கள். அப்போது நான் சேவித்துக்கொண்டு இ
ன்றுமுதல் உங்களுக்கு நான்பிள்ளை நீங்களிட்ட ஏவலை
செய்துக்கொண் டிருக்கிறேன். ஒன்றுக்கும் நீங்கள் வி
லேசிக்கவேண்டாம் துயரத்தை விட்டு விடுங்களென்று
மிகவும் சொன்னேன், அதற்கு அந்தரிஷி, இராஜாவே!
கேளும் என்பிள்ளைபோயும் என்பிராணனை ஆசரித்து
காப்பிட்டுக்கொண்டிருந்தால், உலகத்தார் என்னசொ
லலுவார்கள். நாங்களும் தெய்வலோகம்போய்ச் சேரு
கிறோம். நீர் இவ்வளவுகண்ணுல் பார்த்தறிந்து அம்பு எ
ய்யாதபடியால் நீரும் எங்களைப்போலவே பிள்ளையைப்
பிரிந்து அந்த சோகத்திறுலே தெய்வலோகம்போய்ச்
சேருவீரென்றுசொல்லி அவர்களிறந்துபோனுர்கள். ஆ
தலால் அந்தமகாரிஷியின் வாக்கியமும், ஸ்ரீராமன் ஆ
ரணியத்துக்குப்போவதும், என்பிராணன் தெய்வலோ
கம் அடைவதும் தப்பாதென்றுச் சொல்லிக்கொண்டி
ருக்கையில், வசிஷ்டமகாமுனி அங்கிருந்து புறப்பட்டு
இராஜசபைக்கு வந்தார். அவடத்தி லிருந்த இராஜாக்க
ள்-மந்திரிகள் முதலானபேரும் வசிஷ்டரைக்கண்டு இரா
ஜா என்னகாரணத்தினுல் வெளியில் வரயில்லை - அழு
குரல் கேட்கின்றது. எதாவது அதிசயங்க ளுண்டோ!
தேவரீர் தெரியச்சொல்ல வேணுமென்று கேட்க, பூர்வ
த்தில் இராஜா கைகேசிக்கு இரண்டுவரம் கொடுத்திரு
ந்தாரே அவைகளில் ஒன்று பரதனுக்குப் பட்டாபிஷே
கம்செய்யவும் ஒன்று ஸ்ரீராமன் ஆரணியத்துக்குப்போ
கவும், கைகேசிகேட்டுக்கொண்டு உத்தரவுசெய்தான்.
இராஜாவினுடைய வார்த்தையினுலேயே கைகேசி புத்
திரனுகிய பரதன் ராச்சியபாரம் செய்யப்போகிறதாக,
ஸ்ரீராமன் ஆரணியத்துக்குப் போகுமென்று வசிஷ்டர்
சொல்ல, அதுகேட்டு அந்தராஜாக்களும்-மந்திரிகளும்
மற்றுமுள்ள வேதவேதியர்களும்-ஸ்திரீகளும் தசரதம
காராஜாவைப் போலவே பூமியில்விழுந் தழுதார்கள்.
எங்கும் அழுகுரலோசை மிகுந்தது. புண்ணில் விரலி
ட்டதுபோல மனம் பதைத்து, திகைத்து, கண்ணீர் ஓ
ராறுபோலோட அழுதார்கள், ஸ்திரீ ஜாதிகள் பூண்டி
ருக்கிற ஆபரணங்களைத் திருமங்கிலியத்தோடு கழட்டி
யெறிந்துப்போட்டுத், தலைமயிர்கள் அவிழ்ந்துவிழ, கண்
கள்சிவக்க, பதைபதைத்துப் பெருங்காற்றடிக்கத்துவ
ண்டு அலங்கோலமாய் விழும்பசுங் கொடிகள்போலவி
ழுந்தார்கள். புருஷாள் சக்கரவர்த்தி கிருபையில்லாதவ
ரென்றும், இனிகாமும்தருமங்களைக்கை விடுவோமென்
றும், சொல்லிக்கொண்டு ஏங்கிச் சண்டமாருதக் காற்ற
டிக்கச் சாய்ந்து விழும் மரங்கள்போல விழுந்தழுதார்க
ள். பக்ஷிகள் மிருகங்கள் முதலியவைகளழுதது. (பருவ
ம்அடையாதபிள்ளைகள் ஸ்ரீராமன்வனத்திற்குப் போகி
றசெய்திகேட்டு அழுதார்களென்றுல்,மற்றவர்கள்பட்ட
பாடு யானென்னசொல்லப் போகிறேன்.) ஆனுல்ஸ்ரீரா
மனை ஆரணியவாசம் செய்யும்படி கேட்ட கைகேசியும்
அந்தக்கூனியும் அழவில்லை. இந்தப்பூமிபண்ணினபாவ
மென்பாரும் - பாக்கிய லக்ஷுமிபண்ணியபாவம் பெரி

தென்பாரும், நம்முடையமனதைப் புண்ணுகப் பண்ணி
னுவிதியென்பாரும், உலகத்தார் கண்கள்செய்தபாவ
மென்பாரும், தேரோடும் வீதியில் கண்ணீரோடும் படி
துயரம் வந்திருக்கச்சே, நம்முடைய பிராணன் போகா
ம லிருக்கின்றதே நம்மைவிடகல்மனதை யுடையவர்கள்
யாரென்பாரும், பரதன்ராச்சிய பாரம் செய்யா னென்
பாரும், ஸ்ரீராமன் ஆரணியத்துக்குப் போகாமல் இனி
திரும்பா னென்பாரும், நமக்கு விதிபொல்லா தென்பா
ரும், இந்தபட்டாபிஷேகம் ஒருவிஷமாயிருந்ததென்பா
ரும், கைகேசி மயக்கத்திலே அகப்பட்டுக்கொண்டு ரா
ஜா புத்தியீனரானு னென்பாரும், சீதைநாயகனை ஸ்ரீ
ராமன் ஆரணியத்துக்குப்போனல் நாம் அக்கினிப் பிர
வேசமாவோமென்பாரும், கரங்களால் கண்ணீரினுலே
பூமியை மொழுகித் தடவு வாரும், கௌசலைப் பிராணனை
னைவைத்துக்கொண்டிராளென்று பெருமூச்சு விடுவா
ரும், அப்பாலக்ஷுமணு ! நீ மனது தாள மாட்டுவையா
வென்பாரும், நெருப்பிலே நெய்சொரிந்ததுபோல இப்
படி மனது அழன்று பட்டணத்து ஜெனங்களெல்லாம்
அழுதார்கள். தன்பிள்ளைக்கு ராச்சியம்வேணுமென்றெ
ண்ணி யிப்படி லோகங்களுக்கெல்லாம் விபரீதமான விப
த்தைத் தந்த கைகேசியினுடைய செய்தியைக் கேட்ட
வேசிகள்கூட கைகேசி, மனதில்கொஞ்சமாகிலும்பசை
அன்பில்லாதவளென்று சொல்லிக்கொண்டு மிகவும் அ
ழுதார்கள், நம்முடையராஜா இல்லம் துறந்து தபசுப
ண்ணுகிறதற்காகவோ அல்லவென்று பூமியிலிருக்கிற
ஜெனங்களையெல்லாங் கொன்றுபோடவோ இப்படிகை
கேசிக்கு வரங்கொடுத்ததென்றும், ராச்சியம் வாங்கிக்
கொண்ட கைகேசிக்கு ராச்சியத்தை விட்டுவிட்டு எல்
லாரும் ஸ்ரீராமன் பிறகே காட்டுக்குப்போய் அந்தக்கா
ட்டையெல்லாம் கொஞ்சநாளையில் நாடாக்குவோ மெ
ன்று யென்னமோ ! என்ன ! ராஜாவினுடைய யோச
னை ! முத்தப் பிள்ளைக்குப் பட்டங் கட்டுகிற மென்றுச்
சொல்லி, உடனே அவன்தம்பிக்குப் பட்டங் கொடுக்கி
ருேமென்று சொன்னல், தருமம்தப்பாதா வென்பாரு
ம், ஸ்ரீராமனுக்குக் கொடுத்தபூமியைப் பின் ஒருத்தர்
அனுபவிக்கக் கூடுமா ! வஞ்சனைசெய்த கைகேசிப் பிள்
ளையை, ஸ்ரீராமன் பின்னேபோகிற பூமிதேவி திரும்பி
ப்பாராளென்பாரும், ஒருவேளைச் சீதாபிராட்டி ஸ்ரீரா
மனைப்பிரிந்தாலும் ஸ்ரீமஹாலக்ஷுமிப் பிரியா ளென்பா
ரும், ஸ்ரீராமனுடைய நீலத் திருமேனியையும் கமலநே
த்திரங்களையும் நாம் எப்படி - காணும லிருக்கப் போகி
ருேம், ஐயோ ! விதியே ! யென்று சகல ஜெனங்களும்
அழுது பிரலாபிக்கிறசமாசாரம் இளைய பெருமாள் கே
ட்டு, யாதெனத் திடுக்கிட்டு விசாரிக்குமளவில், தம்மு
டைய தமையனை ஆரணியத்துக்குப்போகிறதற்குக் கை
கேசியான சிறியதாயார் வரம்வாங்கினசெய்திகேட்கவே
பிரளயகாலாக்கினி போலக் கோபம் பிரவேசித்துக்க
ண்களிலே நெருப்புப்பறக்கப் புருவங்கள் நெற்றிமட்டு
க்கு மேற, மத்தியானச் சூரியனைப்போல அதிக வக்கி
ரமாய் சரீரம் வியர்க்க கோபா வேசத்திறுலே கடூரமா

ன் சுவாசம்பிறக்க, ஆதிமூர்த்திபோலெழுந்திருந்தொரு ராஜசிங்கத்துக்கு வைத்திருந்த ஆகாரத்தை ஒரு நாய்க்குட்டிக் கிரையாக்கிறதற்கு யத்தனம்பண்ணினு ளல்லவாளா! நன்றாயிற்று; நன்றா யிற்றென்று கைகளைக் கொட்டி நகைத்து, அரையிலே வாள்விசித்துக் கட்டிக்கொண்டு, கையில் வில்லேந்திக் கொண்டு, அம்பறாத்தூணி தோளிலேதரித்து, கவசம்மார்பிலே தரித்துக், காலில் வீரகண்டாமணி யணிந்துக்கொள்ள அந்தசமுத்திரகோஷம்போலச்சத்திக்க; வில்லினுடைய குணத்தொனி ப்பிரளயகால மேககெற்ஜனைக்கு மூன்றுபங் கதிகமாய்ச் சத்தித்து முழங்க, இந்த பூமியினுடைய பாரந்திர வெதிர்த்து வந்தவர்களை யெல்லாம் அடித்து மலைமலையாய்க் குவிக்கிறதற்கும் என் நாயகனான — ஸ்ரீராமனுக்குப் பட்டாபிஷேகம் செய்விக்கிறதற்குமாக நிற்கிறேன், எல்லாரும் பாருங்கள் தேவலோகத்தார் — பூலோகத்தார்—விஞ்ஞையர் கூடி அந்த மும்மூர்த்திகளுடனே கூடவந்து காத்தாலும் பெண்டுகளென்கிற பூண்டு ராச்சியத்தி லில்லாதபடிக்குச் செய்துப்போட்டு ஸ்ரீராமனுக்குப் பட்டாபிஷேகம் பண்ணுவேனென்று பாலசூரியனைப்போலப் பிரகாசித்துக்கொண்டு, பூர்வத்தில் க்ஷீராப்தியில் மந்தரகிரிபருவதஞ்சுழன்றுதிரிந்ததுபோல, அயோத்தியாபுரி பட்டணத்தின்நடுவேலக்ஷ்மணர் ஆக்குரோஷத்துடனே திரிந்தார். அந்த வேளையிலே ஸ்ரீராமன் சுமித்திரையின் திரு மாளிகைக்குப் போய் நடந்த சமாசாரம் சொல்ல, அந்தம்மாள் கேட்டுமிகவும் அங்கலாய்க்க அவளுக்கு என்ன தேறுதலைச் சொன்னாலும் தெளியாமலிருக்கிற அந்த சமயத்தில், லக்ஷ்மணனுடைய வில்லின் குணத்தொனியைக் கேட்டு, அந்தக்ஷணமே எழுந்திருந்து அதிசீக்கிரமாக நடக்க ஆபரணதிகளெல்லாம் பிரகாசிக்க, வார்த்தை என்கிறமழைத்துளிகளைப்பொழிந்துக்கொண்டு (லக்ஷ்மணருடையகோபமென்கிற அக்கினியை யாற்றுகிறதற்கு) நீலமேகம் வந்ததுபோல அவர்க்குச் சமீபத்தில் வந்து தம்பி நீ தேவதைகளைப்போலொற்றபலவந்தாள் பேரிலல்லவோகோபம்பண்ணவேணும், அதற்கிங்கே காரணங்காணேமே. என்னநிமித்தம், உயித்திய சன்னகமாய் வில்லெடுக்க வேண்டிய காரணமேதென்று கேட்க, அப்போது லக்ஷ்மணர்கோபாக்கினியடங்கி, சுவாமி! சத்தியத்தை விட்டு முறைமைதப்பிசெய்த அந்தப் பாவியானவளுக்கு முன்னே உனக்குப் பட்டாபிஷேகஞ் செய்ய நினைத்து, இதுநிமித்தம்தேவதைகள் வந்தெதிர்த்தாலும்என்னுடைய அஸ்திரங்களினாலே அதம்செய்துப் போடுகிறதாகத் துணிந்திருக்கிறேன். என்கையில் வில்லிருக்கச்சே அந்ததேவதைகள்வந்துவிலக்கமாட்டார்கள்ஒருவேளைவந்துவிலக்கினாலும் என்சைபாணத்தினால் அவர்களையும் சங்கரித்து இந்தப்பட்டாபிஷேகமும் நான்உமக்குச் செய்துவைக்கிறேனென்று லக்ஷ்மணர் சொல்ல, ஸ்ரீராமன்அதைக்கேட்டு, லக்ஷ்மணா! நீதியும் — சன்மார்க்கமும் — உன்னிடத்தில் நிலையாயிருக்க, தருமம் கெடக்கோபம்விளையாத நிலத்தில், உனக்கு எப்படி விளைந்ததென்றுகேட்க, லக்ஷ்மணர் நகைத்து ஸ்வாமி! உம்முடைய தகப்பனார் உம்முடைய ராச்சியத்தை யுமக்குக் கொடுத்திருக்க; அதை நடுவில் பகையாளியினு விழுந்து நீர்—ஆரணியத்துக்குப் போகிறீரென்று கேள்விப்பட்டால் அடியேனுக்குக் கோபம் வருகிறது அதிசயமா! உம்மிடத்தில் அன்பில்லாதவள் உம்மை ஆரணியத்துக்கனுப்ப யென்னுடைய சரீரத்தை வைத்திருப்பேனு! அப்படியிருப்பதற்கு, முன்னே உமக் கிராச்சியங்கொடுத்துப் பிறகில்லையென்று சொன்னவன் கண்ணராளராஜாவா! நான்—என்று லக்ஷ்மணர் சொன்னார் அதற்கு ஸ்ரீராமன் நீ—இந்த ராச்சியத்தை யாளென்று ராஜா சொல்லவே, அதற்குச் சம்மதித்த யென்பேரில் என்னகுற்ற மிருக்கின்றது. நதியில் ஜலம்வராமற்போகிறது நதியினுடைய குற்றமா — நம்மிட தகப்பனா ரிடத்திலும் குற்றமில்லை. நம்விடவிதியின் குற்றமே யல்லாமல்வேறல்ல! அதற்குக்கோபித்துக்கொண்டாகவேண்டியதென்ன! என்று சொல்ல ஸ்வாமி! கருமானுலையி லெழும்புகிற அக்கினிபோல என்மனதில் எழும்புகிற கோபம் எப்படி யாவும் இப்படிசெய்தவளுடைய புத்திக்குப் புத்தியாயும், தேவர்க்களுக்கும் விதிக்கும் விதியாகவு மிருக்கின்ற என்கைவில்லினுடைய தொழிலைப் பார்த்துக்கொண்டிருமென்று லக்ஷ்மணர் சொல்ல, ஸ்ரீராமன், அப்பா நீ — வாயில்வந்ததைச் சொல்லலாமா! வேத சாஸ்திரங்களெல்லாம்நீ—ஒருவருக்குக் கொடுத்தாலுண்டு அப்படிக் கொத்த நீ—தாய் தந்தைகளின் பேரில் கோபித்துக் கொள்ளலாமாவென்று சொல்ல, அதற்குத் தந்தையும் நீரேஎன்னைவயிற்றில் வைத்திருந்து பெற்றதாயும்நீரே சகலமும்நீரேயல்லாமல் வேறில்லை, நான்செய்கிறகாரியத்தைப் பாருமென்று கையையசைத்து ஆக்குரோஷத்துடனே பிரளயகால ருத்திரனைப்போலநிற்கிற லக்ஷ்மணரைப்பார்த்து, வரம்கொடுத்தவர் தகப்பனார், வரம்வாங்கிக் கொண்டவள் தாயார், ராச்சிய மாளுகிறவன் தம்பி, நமக்குக் கிடைத்தது தவமானால் இதைப் பார்க்கிலும் நமக்கு மேலான நலமென்ன யிருக்கின்றது. நீ—ஏன்கோபம் செய்கிறாயென்று ஸ்ரீராமன் சொல்ல சத்திராதிகள் சொல்லுகிற பேச்சையும் சுமந்து, பர்வதம் போலிருக்கிற தோள்களிலே அம்பறாத் தூணியும்—வில்லும் — வீணாய்ச் சுமக்கப் பிறந்த நான், கோபித்து ஆகவேண்டிய தென்னவென்று இலக்குமணர்சொல்ல, அப்பா! என்னைப்பெற்றுவளர்த்தவர் சொன்னப் பேச்சைத்தட்டி ராஜரீகம் செய்கிறது எனக்கு யுத்தமமல்ல, என்பேச்சைத் தட்டினால் அதினா லுனக்கென்ன குறை யிருக்கின்றது மிகவும் அன்பனான தம்பியோடு போர்செய்துக் கொன்றும் பெரியவர்க ளெல்லாம் புகழத்தக்க தகப்பனை ஜெயம் செய்தும், பெற்றதாயைக் கொன்றுமல்லவா இந்தக்கோபம் தணியவேண்டி யிருக்கின்றதென்று ஸ்ரீராமன் சொல்ல, அந்தக்ஷணமேகோபம் போய் எதிர்த்து உத்தரஞ் சொல்லுகிறதுமின்று, அந்தஸ்ரீராமனுடைய ஆக்கினையினாலே (சமுத்திரம் அத்துத்தப்பாமல் யெப்படியிருக்கின்றதோ அப்படி) லக்ஷ்மணர்கோபந்தணி



ந்து நின்றார் அப்போது ஸ்ரீராமர்சந்தோஷத்துடனேதம்பியைத் தழுவிக்கொண்டு (ஸ்ரீமஹாவிஷ்ணுவும்அவர் பாகத்தி லிருக்கிற சிவனும்போல) இருவரும் சுமித்திரையின் அரண்மனையே வந்தார்கள். வருகிற இரண்டு பிள்ளைகளையும் சுமித்திரைக்கண்டு, ஆரணியத்துக்குப் போய் விடுவார்களே என்கிற துக்கத்தினாலே மிகவும் நொந்து பூமியில் விழுந்து புரண்டு துக்கசாகரத்திலே விழுந்து கரைகாணாமல் அழுகிறவளை ஸ்ரீராமன்தொழுது எடுத்து அம்மா! இப்படியும் அங்கலாய்ப்பார்களா! ராஜாவைப் பொய்யனாக்கலாகாதே! ஆரணியத்திலே போனாலும்—சமுத்திரத்திலேபோனாலும்—தேவலோகத்திலேபோனாலும்—அதுகளெல்லாம் உங்கள் ஆசீர்வாதத்தினாலே யெனக்கு அயோத்தியைப்போலிருக்க, என்னையார் உபத்திரவப்படுத்துகிறவர்கள் அப்படியிருக்க என்னநிமித்தம் நீங்கள் அங்கலாய்க்கவேணுமென்று மிகவும் தேறுதலையாய் ஸ்ரீராமன்சொல்லத், தேறமாட்டாமல், ஸ்ரீராமனைப்பார்க்கிறபோதெல்லாம் மனதும் கண்ணும் நீராய்க்கரைய சுமித்திரை அங்கலாயித்துக்கொண்டிருந்தாள். அத்தருணத்தில் கைகேயியம்மன் தாதிகள்கையில் மாவுரிகொடுத்தனுப்ப, அவர்கள் அதைக் கொண்டுவந்து தங்கள் சிறியதாயார் இதைக்கொடுத்து வரச்சொன்னார்களென்று சொல்லி, அங்கலாய்த்தார்கள். லக்ஷ்மணர் அந்ததாதிகளைப்பார்த்து ராச்சியமும் இழந்து, கொடுத்ததெல்லாம்வாங்கித் தரித்துக்கொள்ளுகிறதற்கு அநேகாயிருக்கிறார். கையிலொரு வில்லும் வைத்துக்கொண்டு அதையெல்லாம் பார்த்துக்கொண்டிருக்கிறதற்குப் பிறந்த நானும் இதோ யிருக்கிறேன். ஆனால் கொண்டுவந்ததைக் காட்டுங்களென்று சொன்னார். ஸ்ரீராமன் சுமித்திரையைப்பார்த்து, அம்மா! எங்கள்தாயார் செலவுகொடுத் தனுப்பி வித்தார்கள். இதுவே எனக்கு விடையென்று சாஷ்டாங்கமாகச் சேவித்துக்கொண்டார். சுமித்திரை லக்ஷ்மணரைப் பார்த்து, அப்பா! ஸ்ரீராமன்போகிற ஆரணியம் உனக்கு அயோத்தி, உன்னுடைய தகப்பன் ஸ்ரீராமன், அந்த சீதை உன்தாய், இப்படியாக மனதில் வைத்துக்கொண்டு கூடப்போகட— இனி யிங்கே யிருந்தாலும் குற்றம்வருமென்று சொல்லி, பின்னும் ஒருவார்த்தை சொல்லுகிறாள். மகனே! இவன்பிறகே போகிறபோது, தம்பியென்கிறதை ப்பாவிக்காமல் அடிமையைப்போல ஏவல்செய்துக்கொண்டிருந்து, அவன் வருகிறபோது கூடவரக்கடவாய். போனவிடத்தில் எதுவாகிலும் ஆபத்து வருகிறதாயிருந்தால் முன்னே உன்பிராணனைக் கொடுத்துவிடென்று சொல்லி தனங்களிலே பால்சுரக்க அன்புடனே அங்கலாய்க்கிற சுமித்திரையை, இருவரும் சாஷ்டாங்கமாக விழுந்துச் சேவித்துக்கொண்டு நடந்து, கைகேயி அனுப்பின மாவுரியை ஸ்ரீராமன் தரித்துக்கொண்டார். அது கண்டு லக்ஷ்மணரும் மாவுரிதரித்துக்கொண்டார். இதைப்பார்த்து ஸ்ரீராமன் ஒருவசனம் சொல்லுகிறார். தம்பி! உனக்கோர் உறுதிவசனம் சொல்லுகிறேன், கேள், நம்முடையதாய்களும், இராஜாவும் முன்னையைப்போலல்ல மிகவும் துயரத்தில்மூழ்கி யிருக்கிறார்கள். என்னைப்பிரிகிறவருத்தம் உன்னால் தீரவேணும் என்னிமித்தியம் நீ தயைசெய்து யிங்கிருக்க வேணுமென்று சொல்ல, அதுகேட்டு லக்ஷ்மணர் தோள்களெல்லாம் நடுங்க விம்மி — அழுது, ஸ்வாமி! அடியே னென்ன தப்பிதம் செய்தேனென்ன! ஜலமிருக்கிறமட்டும் நீலோற்பலமும் — மச்சமும் இருக்கும் பூமியிருக்கிறமட்டும் செடிகொடிகளும் — அதற்குப் பிறக்கிற குஞ்சுகளும் இருக்கும். அப்படி போல, நீர் — இவ்விடம் விட்டு அப்பால் போனால் இவ்விடத்தில் யாரிருக்கிறார்களென்று சீதையும் அடியேனும் இருக்கப் போகிறோம். ஒருத்திப் பேச்சைக் கேட்டு இந்த பூமிகூட நடுங்கும்படியாய் காட்டுக்குப்போவென்றுசொல்லிப் பிராணனைவைத்திருக்கிற ராஜாவினுடைய மகனென்று யென்னையல்லவா! என்னை இந்தப்பேச்சுச்சொன்னீர். நீர் ஆரணியத்துக்குப் போகிறீரென்று கேட்டு எனக்குவந்த ஆக்ரோஷத்தையும் கோபத்தையும் விட்டுவிடச்சொல்லி சொன்னவார்த்தையைப் பார்க்கிலும் இந்தவார்த்தை மிகவும் கொடியதா யிருக்கின்றது. சகல பாக்கியத்தையும் விட்டுப்போகிற நீர் என்னையும் விட்டுப்போகிறதற் காயிற்றல்லவா! என்று கண்களிலேதாரைதாரையாய் ஜலம்பெருக எதிரேநின்றார். அதற்கு ஸ்ரீராமன்வேறேயாதொரு உத்தரவும் சொல்லாமல் இருந்தார். அந்தசமையத்தில் ராஜசபையிலிருந்து புறப்பட்ட வசிஷ்டமகாமுனி வந்துசேர்ந்தார். அவரை இவர்கள் இருவரும் நமஸ்காரம் செய்துக்கொண்டார்கள். ஸ்ரீராமனுடைய திருமுக மண்டலத்தையும் மாவுரியையும்பார்த்து துயரத்தினாலே தம்முடைய தேகஸ்மரணைத் தெரியாமல் தத்துவநெறிகளையறிந்த மகாஞானியான வசிஷ்டமகாமுனிமயங்கித் திகைத்துநின்றார் உலகத்திலே சகலருக்கும் சகல பாக்கியங்களைக்கொடுக்கிற ஸ்ரீராமன்றானே இப்படி ஊழ்வினையினால் மாவுரிதரித்தால் பிர்ம்மாவினாலும் அந்த ஊழ்வினையைத் தள்ளக்கூடாதே! இந்தபுருஷனுக்கு அந்த பாவியான கைகேயி என்னபொல்லாங்கு செய்தாலும் அதுவருமா! என்னவினையினாலேயோ! அல்லது தேவர்களுடைய ரகசியமான யோசனையோ! இப்படிவந்ததென்று நினைத்து இது பின்பு தெரியுமென்றெண்ணி வராய் ஸ்ரீராமனைப்பார்த்து ஸ்ரீராமா! நீர் ஆரணியத்துக்குப்போனால் ராஜாவினுடைய பிராணன் இருக்கமாட்டாது, ஆதலால் நீர் ஆரணியத்துக்குப் போகவேண்டாமென்று சொன்னார். அதற்கு ஸ்ரீராமன் ஸ்வாமி! அவர்பேச்சை சிரசாவகித்துக்கொண்டு அந்தப்படி நடந்துகொள்ளுகிற என்னுடையகடன் தருமநீதியுமல்லவே, சரியென்று சொல்ல, அதற்கு வசிஷ்டர் பூர்வத்தில் ராஜா அசுரனை ஜெயம் பண்ணினபோது இப்படியாக இரண்டுவரம் கொடுக்கிறேனென்று சொன்னாரா வென்று சொல்ல ஸ்வாமி! என்தாயார் அந்த வரம் இப்படியாகக் கேட்டுக்கொள்ள தகப்பனார் அந்தப்படியே கொடுக்க, அடியேன் மாதா பிதுர்வாக்கியப் பரிபாலனம்செய்ய வேணுமென்று சிரசாவகித்துக்கொண்டு நா

ன்வெளியே புறப்பட்டிருக்க சகல சாஸ்திரங்களும் அறிந்த தாங்கள் இதைத்தடுத்து தருமம் தப்பச் சொல்லலாமாவென்று ஸ்ரீராமன்சொல்ல, வசிஷ்டர் அதைக்கேட்டு வேறொரு உத்தரவுஞ் சொல்லுகிறதற் கில்லாமல் கண்களில் ஜலம் தாரை தாரையாய்வழிய நின்றார். அப்படிநின்றவசிஷ்டரைச்சேவித்துக்கொண்டு ராஜாவினுடைய ஆசாரவாசல்மட்டும் நடந்துபோனார். அரையிலே மரவுரியும் பின்னாலே தம்பியுமாகப்புறப்படுகிறதைக்கண்டு, அப்பட்டணத்திலுள்ள வேதவேதியர்களும்-ரிஷிகளும் - இராஜாக்களும் - பிரஜைகளும் - துக்கத்தினாலே மனம்நொந்து புழுங்கினார்கள். அவர்களை யென்னவென்று சொல்லலாம், இந்தகாரியம் தங்களுக்கு உறுதியென்றறிந்திருக்கிற தேவர்க்களும் இவரைப்பார்த்துத் தாளமாட்டாமல், மனதுநொந்து மிகவும் பிரலாபித்தார்கள் ஸ்ரீராமனைக்கண்ட ஸ்திரீகளெல்லாம், தாமரைக் கமலம்போலிருக்கிற கைகளினாலே வயிற்றிலறைந்துக்கொண்டார்கள். தங்கள் தங்கள் சரீரஸ்மரணை தெரியாமல் மூர்ச்சையாய் பூமியில் விழுந்து சுவாசமில்லாமல் (தசரத மகாராஜாவுக்கு முன்னே) தேவலோகம் போய்ச் சேருகிறவர்கள்போல இருந்தார்கள். சிலர் துக்கத்திலேயே அழுந்தினார்கள் சிலர் நெருப்பில் விழுந்த பூங்கொடிகள்போலக் கருகிவாடித் துயரப்பட்டார்கள். சிலர் பூமியில் விழுந்தார்கள். சிலர் விம்மி! விம்மி! அழுதுக்கொண்டு எழுந்திருந்தார்கள். சிலர் கண்ணீரினாலே மூழ்கினார்கள். சிலர் கண்ணிலே தண்ணீரும் வராமல் அதிக துக்கத்தினாலே மயங்கி இரும்பைப்போல மனமுடையவர்கள்போலவும் மிகுந்த பொருளை யிழந்தவர்களுக்குச் சமானமாகவும் திகைத்துநின்றார்கள்: (சிலர்சரீரமெல்லாம்ஒடுங்கிஜீவன் இந்தக்ஷணமேபோய்விடும், போய்விடும் என்னும்படியாய்க்) கண்களிலே தண்ணீர் வடியக் கிடந்தார்கள். சிலர் ஆடிசாய்ந்து விழுந்தார்கள் சிலர்குரிக்கத்தினாலேகண்ணைக்குற்றிக்கொண்டார்கள் ஸ்திரீகளுடைய ஆபரணங்கள் மேகலாபரணமற்று விழுந்து கிடக்கிற பிரகாசமும், பல்லுகளுடைய பிரகாசமும், எங்கும் உண்டான படியால் சந்திரனுக்குத் தோத்துக் கண்டது. தசரதமகாராஜாவினுடைய மகாபதிவிரதைகளாகிய அறுபதினாயிரம் ஸ்திரீகளும் ஸ்ரீராமனைக் கண்டு கண்களிலே ஜலம்பெருக (சமுத்திரமெனைச்சலைப்போல) இரைந்து அழுதுக்கொண்டு தொடர்ந்துவந்தார்கள். மயில்களும் - குயில்களும் - அன்னங்களும் - சிறகுபோய் பூமியில் கிடக்கிறதுபோல யிருந்தன. இந்த இராமனல்லாமல் வேறே புத்திரனைப் பெறாதவர்களானபடியால் அந்த ஸ்ரீராமன் ஆரணியத்துக்குப் போகிற கிலேசத்தினாலே பகலில் அலர்ந்த செவ்வல்லிப் புஷ்பக் கூட்டங்கள்போலத் தங்கள் தங்கள் வாய்களைத்திறந்து அதிக துக்கத்துடனேயழுதார்கள். அவர்கள் கண்ணில் பூசியிருக்கிற-சந்தன-கதம்ப-கஸ்தூரிகளையும்-கரைத்துக்கொண்டு வஸ்திரங்களையும் நனைத்துக்கொண்டு பூமியெல்லாம் பெருகிற்று. அந்த ராஜாவினுடைய ஸ்திரீகளை ஒருநாளும் காணாத சூரியனும்கண்டார். தேவர்களாயிருந்தாலும் ஆபத்துவந்தவேளையில் என்னதான் வராது. இப்படியாக அழுதுக்கொண்டுவருகிற தாய்மாரும் பந்து ஜனங்களும் ஸ்னேகிதர் முதலானபேரும் மிகுந்த துக்கத்துடனே வாசலில்வந்து மொய்த்தார்கள். இவர்களுடைய இரைச்சல் சமுத்திர கிளைச்சலிலும் அதிக சத்தமானதால் ஒருத்தர்சொல்லுகிறதும் கேளாமல் தாம்சொல்லுகிறதும் அவர்களுக்குக் கேளாமலிருக்க ஸ்ரீராமன் தம்முடைய அரண்மனை நோக்கி நடந்தார். அப்போது ஸ்ரீராமனை அங்கிருக்கிற ஜெனங்களெல்லாம் கண்டு முன்னாலே பட்டாபிஷேகம் செய்துக்கொள்ளுகிற நிமித்தம் அநேகஞ் சம்பிரமத்துடனே திருவாபரணங்கள் பிரகாசிக்கத் தேரின்பேரில் பவனி வந்தவர் உடனே மரவுரி தரித்துக் கொண்டு வீதியில் வரக் கண்ட நம்முடைய மனது பிளந்து போகாமல் கல்பாறைபோ லிருக்கின்றதே! ஆ! நம்முடைய அன்பு நன்றாயிருக்கின்றதென்றும், பட்டாபிஷேகம் செய்துக்கொண்டு வருவாரென்று வழிபார்த்திருந்த நம்முடைய கண், ஆரணியத்துக்குப் போகிறதாய் புறப்பட்ட கோலத்தைப் பார்க்கிறதற்காகவா யிருந்தது, ராச்சியத்திலே கன்றுடனே பிறக்கிறது பொல்லாதென்றும், ஏழைகளாயிருக்கிற ராஜர்க்களை ரக்ஷியாமல் விட்டுவிட்டு ஆரணியத்துக்குப் போகிற படியினாலே இவரும் கைகேசிக்குச்சமானந்தானென்பாரும், ஸ்ரீராமன் ஆரணியத்துக்குப் போகிறேனென்று எழுந்திருந்து நடக்கச்சே நாமும் ஜீவனுடனிருந்துக்கொண்டு அழுகிறோமல்லவா! என்பாரும் இந்த ஊரில் ஸ்ரீராமனைப்போல மரவுரி உடுத்திக்கொண்டு தொடர்ந்துபோகிறதற்கு லக்ஷ்மணன் ஒருவன்தானோ! அவனுக்கு உற்றவிற வென்பாரும், கல்பாறைபோலிருக்கிற நம்மிடமனதை மழுவாயுதத்தினாலே பிளந்துப் போடுவோமென்று சொல்லிக்கொண்டு கண்ணீரோடினச் சேற்றிலே சறுக்கிவிழுவாரும், ஆபரணங்களைக்கழட்டி யெறிந்துப்போடுகிறதும், தரித்திருக்கிற வஸ்திரங்களைக்களைந்து கந்தைவஸ்திரங்களைக் கட்டிக்கொள்ளுகிறதும், இந்த ராஜவம்சத்திலே ஒரு பக்ஷிக்காகப் பிராணனைக் கொடுத்தார்கள். இந்த ராஜகுமாரன் ஆரணியத்துக்குப்போனாலும்போகட்டும் வார்த்தை தப்பலாகாதென் றிருக்கிறாரோ இந்தராஜன்மனது இரும்பென்பாரும், இந்தப்பிள்ளையைக் காட்டிலேதுரத்தி விட்டுத் தானும் தன்னுசைமகனும் ராச்சியமாள யிருக்கிறாளென்பாரும், தலையின்பேரில் கையைவைத்துக் கொண்டு புஷ்பித்திருக்கிற கொடிகள்போல ஒதுங்கி அழுகிறவர்களும், உப்பரிகைகளின்பேரிலிருக்கிற ஸ்திரீகளும் (பர்வதங்களில் இருக்கிற மயில்கள்போல) அழுதார்கள். சிலர் மாளிகைகளிலிருந்து ஜன்னல்களைத் திறந்துப்பார்த்து, கூண்டிலிருக்கிற கிளிகளைப்போல அழுதார்கள். உப்பரிகைகளிலிருந்து அழும் கண்ணீர் விழுகிறது ஸ்ரீராமனைப்பார்த்து அந்த உப்பரிகைகள்கூட அழுகிறதுபோ லிருந்தன. மக்களைத் தாய்கள் மறந்தார்கள். பிள்ளைகள் தாய்போனவிடம் அறியவில்லை. உப்பரிகைகளி லிருக்கிற ஸ்திரீகள் வீதியில்வந்துவிட்டபடியால் அ



வ்வுப்பரிகைகள் லக்ஷ்மியைவிட்ட தாமரைக்கமலங்கள்போல யிருந்தன. ஸ்திரீகள் அம்புப்பட்டமான்கள்போல் உயிர்பதைத்தார்கள். மாளிகைகளெல்லாம் கொடிகளில்லாமலும் ஆசாரவாசல்களெல்லாம் பேரிகை - மேளவாத்தியங்க ளில்லாமலும் அழுகிற கண்ணீராலே வீதிகளில் புழுதியில்லாமலும் அடங்கிப்போயிற்று. சமையல், அட்டில்கள், உப்பரிகைகள் அகில்புகை முதலியதில்லாமல்போயிற்று. கிளிகளும் பால் அருந்தில் இழந்தன. குழந்தைகள் தொட்டில்களிலே சோர்ந்து யிருந்தன. மற்ற ஜீவன்களுடைய முகங்கள் ஒளியில்லாமல் ஜீவன்போன சரீரம்போல அமங்கலமாயிருந்தன. மேகங்கள் - மழையும், யானைகள் - கவளமும், வண்டுகள் - களிப்பும், கொடைகள் - நிழலும், அற்றிருந்தது. ஸ்திரீகள் அளகம் புஷ்பங்களையும், புருஷாள் பாதங்கள் வீரகண்டாமணியையும், துறந்து யிருந்தது. காமபாணங்களுக்குச் சுருக்கும்போய்விட்டன. அன்னப்பக்ஷிகளும் ஆண்பெண் சோடுகூடி யிராமல் பிரிந்தது. அசுவங்கள் சதங்கை மாலைகள் நீங்கிற்று. தெருவுகளில் தேரோடுதல் யாழ் - வீணை - சத்தமும், தேவர்கள் திருவிழாமுழக்கங்கள்முதலிய தும்கின்று ரோதனங்களே மிகுந்தன. சோலைகள் - தடாகங்கள்தோறும் பக்ஷிகள் சத்தமும், வண்டுகளுடைய சத்தமும், அடங்கிற்று. கழனிகள் ஜலம் அற்றுயிருந்தன. ஓமாக்கினிகள் நெய்யில்லாமல் இருந்தன. வேதோத்தமர்கள் வேதங்களைமறந்தார்கள். ஞானிகள் மெய்யறிவை விட்டார்கள். நாற்கால் ஜீவன்கள் புசிப்பு ஜலமுதலியதை விட்டுவிட்டது பக்ஷிகளும் குஞ்சுக்கிரை தேடாமல் விட்டுவிட்டது. கன்றுகளும் பசுவை ஊட்டயில்லை. பசுவும் ஊட்டக்கொடுக்கயில்லை. ஸ்திரீகளுடைய தனங்களும் புருஷாளைச் சேராமல் சோர்வடைந்தன. நல்வினை தீவினையென்கிற இரண்டையும் சமானமாய் நினைக்கிற பரமயோகிகளும் ஆழ்ந்த துயர்க்கடலில் அழுந்தினார்கள். அந்த அயோத்தியாபுரிபட்டணம் இவ்வித அல்லோல கல்லோலத்தில் அழகற்றதன்றி, எல்லாச்சத்தங்களும் அடங்கி தசரதமகாராஜாவைப்போல மூர்ச்சையினால் ஜீவனை விடுகிறது போலிருந்தது. இவ்வாறாக பட்டணத்து ஜனங்களெல்லாம் அழுது துயரப்பட்டுக்கொண்டு கூடவர, சகலஜீவனுக்கும் ஜீவாதாரமாயிருக்கிற அந்தப்பிரம மாகிய ஸ்ரீராமன் மிகுந்த சுந்தரத்தையுடைய சீதாபிராட்டியின் திருமாளிகைக்குப் போனார். தாய்மார்களும், பிராமணரும், ரிஷிகளும், ராஜாக்கள் முதலானபேரும் அழுதுக்கொண்டு பூமியில்விழுந்து புழுதிபடிந்த சரீரங்களோடுகூடவர, மாவுரி தரித்துக்கொண்டு வந்த தன் பிராணநாயகனைச் சீதாபிராட்டியார் பார்த்து, மனம் திடுக்கிட்டு எழுந்திருந்தாள். அப்படி எழுந்திருந்த பிராட்டியாரை மாமிமார்கள் கட்டிக்கொண்டு பிரலாபித்து, கண்ணீரால் சரீரமெல்லாம் ஸ்நானம் செய்துவைத்தார்கள். நடந்த வர்த்தமானம் ஒன்றும் அறியாத சீதாபிராட்டியின் கண்களில் ஜலம்வடிய ஸ்ரீராமனைப் பார்த்து ராஜாவுக்கேதாகிலும் அதிசய முண்டோவென்று சரீரமெல்லாம் பதைபதைக்க, நடுக்கத்துடனேகேட்க. ஸ்ரீராமன் சொல்லுகிறார். இந்த பூமி என்தம்பி யாளும்படி எங்கள் தாய்தந்தையினிடத்தில் உத்தரவுபெற்றுக்கொண்டு ஆரணியத்துக்குப்பிரயாணமானேன். போய்வருகிறேன் நீ அங்கலாய்க்காமல் இருவென்றுசொன்னார். அப்போது பிராட்டியார் தன்நாயகன் ராச்சியமிழந்து ஆரணியத்துக்குப் போகிறேனென்று சொன்னதற்கு மிகவும் வருந்தி அழயில்லை, ஆனால் நான்போய்வருகிறேன் நீ அங்கலாய்க்காமல் இருவென்று சொன்ன வார்த்தைக் காதில் அக்கினிபாணம்போலசுட, அதற்கழுதாள். திருப்பாற்கடலில் சேர்ந்திருந்தவர் அயோத்தியில்வந்து பிறந்திருக்கத் தான் பிரிந்திருக்க மாட்டாமல் தானும் பிறந்து கூடி யிருக்கிற ஸ்ரீமகாலட்சுமி எப்படிப்பிரிந்திருக்கப் போகிறாள். அப்படிக் கொத்த ஆதிலட்சுமியான பிராட்டி ஸ்ரீராமனைப் பார்த்து, ஸ்வாமி, தாய் தகப்பன் சொன்னபடி நடக்கவேண்டியதுசரி - உத்தமமே என்னை இங்கு யிருக்கச்சொன்னவயணமென்னவென்று நினைத்து நினைத்து அழுதுக்கொண்டு கேட்க, பெண்மணி! உன்னுடைய திருவடியானது மிகவும் மிருதுவு ஆரணியத்தில் அரக்குகளை உருக்கிவிட்டதுபோல சிறுகல்லுகளும் மணல்களும்இருக்குமே அதைப்பொறுக்குமாவென்றுசொன்னேனென்று ஸ்ரீராமன்சொல்லஸ்வாமி உம்மைப் பிரிந்திருக்கிற காலாக்கினியைப்பார்க்கிலும் அந்த ஆரணியம் அக்கினியாயிருக்குமாவென்று சீதை சொல்ல ஸ்ரீராமன்சீதையினுடையமனோபாவத்தைஅறிந்துவிட்டுபோகலாமென்றுநினைத்தவர்இவள்இப்படிஅங்கலாய்க்கிறதைக்கண்டு என்ன செய்யலாமென்று எண்ணிக்கொண்டிருக்கிறபோது, சீதை ஓர் அறைக்குள் போய் மரவுரிதரித்துக்கொண்டு அதிசீக்கிரமாய்ஸ்ரீராமன் பிறகேவந்து கையைப்பிடித்துக்கொண்டாள். சீதையைப்பார்த்து சகலரும் கிலேசித்தார்கள் தாய்மார்கள். தாதிகள் - தோழிகள் ஸ்ரீராமன் பிறகேவந்தசகலமான பேரும் சீதையினுடைய செய்கையைக்கண்டு அக்கினியிலே விழுந்தவர்கள்போலப் பதைத்தழுதார்கள் ஸ்ரீராமன் சீதையைப்பார்த்து, பெண்ணே! நீயோசிக்கிறதில்லை, கூடவருகிற தாய் பிரயாணமானாய், ஆனால் நீ - ஆரணியத்திலிருக்கு துன்பத்தை அறியப்பாயென்றுசொல்ல, சீதை கோபித்துக் கொண்டு துயிலைப்போற் சீறினென்னைப் பிரிந்திருக்கிறது உமக்கிஷ்டமா வென்று சொல்ல, ஸ்ரீராமன்பின்னையொன்றும் சொல்லாமலிருக்க, அங்கேயிருக்கிறஸ்திரீகளும் [illegible]களும் துயரத்துடனே விழுந்தழ வீதியிலேவந்தார் மரவுரிதரித்துக்கொண்டுபெண் சாதிபிறகேவர கையில் வில்லோடு தம்பி முன்னே நடக்க, மேககருபனான ஸ்ரீராமன் நடக்கிறதைக் கண்டு, அப்பட்டணத்து ஜனங்கள் பட்ட துயரங்கள் ஒருவராலும் சொல்லிமுடியாது சகல ஜனங்களும் அழுகிறதைவிட்டுத் துணிந்து இவர்களுக்கு முன்னே நாமும் ஆரணியத்துக்குப் போவோமென்று இவர்களைச் சுற்றிக்கொண்டு கூட நடந்தார்கள். அப்போது ஸ்ரீராமன் தகப்பனுடைய ஆசாரவாசலுக்குச் சமீபமாய்வர, கூடவந்த ஜ

ய்மார்களைப்பார்த்து அம்மா நீங்கள் ராஜாவினிடத்திற்குப்போய் அவருக்குத் தேறுதலை சொல்லி ஆற்றுங்களென்று சொன்னார். அந்த வார்த்தையைக்கேட்டு அழுது விழுந்து மயங்கி மகனையும் மருமகளையும்வாழ்த்தி இளைய பிள்ளையை ஸ்தோத்திரம் செய்துக் கொண்டாடி தெய்வங்களே! இவர்களைக்காத்துக்கொள்ளுங்களென்று சொல்லி நாவுகள் தழும் பேறும்படி அழுது நடுங்கினார்கள். அவர்களை விட்டு அப்பால் நடக்கிற போது எதிரேவசிஷ்டனைக்கண்டு நமஸ்காரம் செய்துக்கொண்டு, அப்பால் ஒரு ரதம் கொண்டுவரச்சொல்லித் தாமும்தம்பியும் ஸ்ரீமகாலக்ஷுமியான சீதையுமஏறிக்கொண்டு பட்டணத்தைத் தாண்டி நடந்தார்கள்.

## தைலம் ஆட்டுதல்.

அப்பால் பட்டணத்திலுள்ளச் சித்திரப்பாவைகள் தவிர மற்றஜனங்களும் தசரதமகாராஜாவினுடைய ஸ்திரீகள். தவிர மற்ற ஸ்திரீகளும் புருஷாளும் நடந்தார்கள். கண்ணீர் வெள்ளமா யோடுகிற படியினாலே அந்த வெள்ளத்திலே ஸ்ரீராமனுடைய தேர்போகிறது சமுத்திரத்தில் தெய்வீகமா யிருக்கிற திமிங்கலமென்கிற மீன்போலப் பிரகாசித்தது. அப்போது சூரியன் ஸ்ரீராமனுக்கு வந்தவிபத்தின் துன்பத்தைப்பார்த்து மனம்தாளமாட்டாமல் அவருக்கு முன்னே ஆரணியத்துக்குப் போகிறவர்போலமேற்குசமுத்திரம்போய்சேர்ந்தார்தாமரைகளெல்லாம் இந்தப்பட்டணத்து ஸ்திரீகளுடைய முகங்கள் அன்றையதினம் எப்படியிருந்ததோ அப்படிபோல அழகுயிழந்து போயிற்று. கைகேசியி னுடைய மனது மந்தரையான கூனியினுடைய வார்த்தை யென்கிற விஷத்தினால் எப்படியிருண்டதோ அப்படி போலயெங்கும் இருள்வந்துமூடிக் கொண்டது. பூர்வத்தில் கௌதமமஹாரிஷியினுடையசாபத்தினாலே தேவேந்திரனுக்குச் சரீரமெல்லாம் கண்கள் உண்டானது போல ஆகாயமெங்கும் நக்ஷத்திரங்கள் பூர்த்தன, ஸ்ரீராமன் பட்டணத்துக்கப்பால் இரண்டுயோசனை தூரம்போய் ரதத்தைவிட்டிறங்கி ஒரு ...லையில் ரிஷிகளுடனேகூட யிருந்தார், பிரகேபோன சி..ல ஜனங்களும் ஏழுயோஜனை விஸ்தீரணம் ஓர் எள்ளு... இடமில்லாமல் அந்த சோலையைச்சுற்றிஸ்ரீராமனைவி...படமெறங்கினார்கள், அவர்கள் நதிகள்-வாய்க்கால்கள் - ...ப்புகள் - எங்கும்நிறைந்து ஆகாரமுதலிய நித்திரைஇல்...மல் அழுது விம்மினார்கள். அனேகம் ஸ்திரீகள் ... வஸ்திரத்தையே படுக்கையாகப் போட்டுப் படு...கொண்டார்கள். சிலர் தாதிகளுடைய மடியி லுறங்...ள். யானைகள்கொட்டாரங்களி லுறங்கிறது போலப் ...ருஷாளெல்லாமுறங்கினார்கள். ஸ்திரீகளொருபக்கமும் புருஷா ளொருபக்கமுமாயத் துயரத்துடனே படுத்தார்கள். சிலர்மரத்தடியிலும் மணல்மேட்டுகளிலும் மயில்போலவும் அன்னங்கள்போலவு முறங்கினார்கள். சிலர் தண்ணீர்த் துறையிலே பவழக்கொடிகள் போலப் படுத்திருந்தார்கள். குங்குமமலையிலே பனிக்குமிழி எழும்பி இருக்கிறது போலத்தனங்களிலே தூளிகள்படிய நித்திரை போனார்கள். சிலர் கரங்களையே தலையணையாக வைத்துக்கொண் டுறங்கினார்கள். சிலர்புருவங்கள் துவளக் கல்லுகளின் பேரில் படுத்துக்கொண்டவர்களும் உடுத்த வஸ்திரத்தின்மேல் முந்தானியின்பேரில் தூங்கினவர்களும் தரைகளின்பேரில் தூங்கினவர்களும் இப்படியாகச் சகலஜனங்களும்சரீர வருத்தங்களினாலும் துக்கத்தினாலும் இளைத்துப் பதைத்து அசைந்துறங்கினார்கள். ஸ்ரீராமன் சுமந்திரனை அழைத்து ரகசியமாக ஒருவசனஞ் சொல்லுகிறார். இந்தஜெனங்கள் என்னிடத்தில் வைத்திருக்கும் மிகுந்தஅன்பினாலே அல்லவா! அதிகதுயரத்துடனே வந்து சுற்றிக் கொண் டிருக்கிறார்கள். அவர்களைப்போகச் சொல்லி எவ்விதமாய்ச் சொன்னாலும் போகார்கள். ஆகையால்; நீர் அயோத்தியாபுரிபட்டணத்துக்குப் போனால அதைப்பார்த்துத் தேர்திரும்பிற்றென்றும், நாமும் பட்டணத்திற்கு வந்துவிட்டோ மென்றும் எண்ணிச் சகலரும் பட்டணம்போய்ச் சேருவார்கள். நீரவ்வளவு உபகாரம் என்னைப் பற்றிச் செய்யவேண்டு மென்று ஸ்ரீராமர் கேட்க, சுமந்திரன் அதிக துயரத்துடனே பிரலாபித்து ஸ்வாமி! உம்மிடத்தில் மிகுந்த அன்புடையவன் போல உம்மைக் கொண்டுவந்து ஆரணியத்தில் விட்டு விட்டுப் பட்டணத்தில்போய் அந்த துக்கங்களைப் பார்க்கிறதற்கு நானேஏற்படவேணும், இரும்புபோல நெஞ்சையுடைய நான்மகாராஜாவினுடைய சமுகத்துக்குப்போய், ஸ்ரீராமனைக் காட்டிலே விட்டுவந்தே னென்று சொல்லவா! எங்கள் ராஜாவை அழைத்துக் கொண்டு வந்தேனென்று சொல்லவா! அனேகநாளாய்ப் பழகி யிருக்கிறநான், வாக்கினாலே எங்கள்ராஜாவுடனே நீர் அனேகம் தபசுசெய்து பெற்றபிள்ளையையும், புஷ்பத்திலும் மிருதுவான பாதத்தையுடைய ஸ்திரீயுடனே தம்பியையும், ஆரணியத்தில் விட்டு, என்பிராண னுக்குத் தீங்கில்லாமல் வந்து சேர்ந்தே னென்று சொல்லுவேனோ! அனேகஜெனங்கள் போயிருக்கிற படியால் எப்படியும் அழைத்து வருவார்களென்று வழிபார்த்து, உருகிக்கொண்டிருக்கிற ராஜாவுக்கு, உம்முடையசெய்தியைச் சொல்லுவேனோ! அல்லவென்று எமதூதனாகப் போவேனோ! இப்போதிந்தச்செய்தி ராஜாவுக்கு நான்போய் சொல்லுவேனாகில், உடனே அவர்பிராணன் போய்விடுமே! இப்படிப்போய்ச்சொல்லுகிற என்னிலும்கைகேசிநல்லவளாய்க் காண்கின்றதே! என்று பலவாறாக இடியோசைகேட்டபாம்புபோல, நடுங்கி பயந்து-அழுது-துயரத்துடனே சேவித்து, பூமியில் விழுந்துப் புரண்டான் அப்படி விழுந்து பிரலாபிக்கிற சுமந்திரனை ஸ்ரீராமன்கரங்களால் வாரிஎடுத்து, மார்பிலேதழுவிக்கொண்டு, கண்ணீர்களைத்துடைத்து, மெய் - வாய் - கண் - மூக்கு- செவி - என்கிறபொறி ஐந்துக்கும், மநம் - புத்தி - அகங்காரம்-சித்தம்-என்கிற கரணம் நான்குக்கும் அப்புறப்பட்ட கியானத்துக்குத்தோன்றும் காக்ஷியை யுடைய ஸ்ரீராமன் சொல்லுகிறார், பூமியில் சரீர மென்கிறதைக் கொண்டுப் பிறந்தால் வரவேண்டிய தெல்லாம்வருமென்றே தெளிந்திருக்கிற விவேகத்தையுடைய நீர்இப்படி



தருமத்தைமறந்து கிலேசப்படலாமா! முன்னே கீர்த்தியைக்கொடுத்துப் பின்னேஉறுதியைக்கொடுக்கிற தருமமென்கிற பேரின்பம் வருகிறதாயிருக்கச்சேநடுவேகொஞ்சம் துன்பம்வந்தால், அதற்குப்பயந்து அந்தபெரிய காரியத்தை விட்டுவிடுவார்களா! யுத்த சன்னதமாய்ப் புறப்பட்ட சூரன் ரணக்களத்துக்குப் பயப்பட்டு நிற்கலாமா! இந்தசூரியகுலம் தருமம் தப்பாமல்நடந்துவந்தது, இதில்நான்பிறந்து தருமம் தப்பிப் போயிற்றென்கிற பேர்வரலாமா! ராஜாவினிடத்தில் வனத்திற்கொண்டுபோய் விட்டுவந்தேனென்று சொல்லுகிறது அவர்வாக்குப் பிசகாமல் நடந்ததானபடியினாலே, அவருக்கும் அது தவமே அன்று ...வறல்ல, அவர்வார்த்தையைச்சிரசாக வகித்துக்கொண்டு ஆரணியத்துக்குப்போகிறது, எனக்கும் அதுவேதவம். ஆகையால் நீர் என்ன நிமித்தியமாய் அங்கலாய்க்கிறீர், நீர்போய்ச் சேர்ந்தவுடனே, முன்னே வசிஷ்டமகாமுனிக்கு என்னுடைய வந்தனைசொல்லி, அவரையும் அழைத்துக்கொண்டு ராஜாவினிடத்திற்குப்போய் என்னுடையசமாசாரம் அவரைச்சொல்லச்சொல்லும். அதுவுமல்லாமல் வசிஷ்டமகாமுனியுடனே என்தம்பி பரதன்வந்தவுடனே அவனுக்குச் சகலதரும சாஸ்திரங்களுஞ்சொல்லி தேவாலயம் பிர்ம்மாலயங்களுக்கு யாதொருகுறைவில்லாமல் பூசைநைவேதனங்கள் நடக்கும்படி செய்யச்சொல்லியும், என்னைப் பிரிந்திருக்கிறேனென்று அங்கலாய்க்கப்போகிறான் அவனுக்குத் தயிரியஞ்சொல்லி, வைத்திருக்கச்சொல்லும். தன்தாயாரால் இப்படிநடந்ததென்று அவள்பேரில் கோபம்பண்ணப்போகிறான், என்னிடத்தில் எத்தனை அன்பாயிருக்கிறானோ அந்தப்படி தாயாரிடத்திலும், பயபத்தியா யிருக்கச்சொல்லி இவ்வளவு வரம் நான் கேட்டுக்கொண்டே னென்று சொல்லச்சொல்லும், நீரும் பரதன் வந்தவுடனே இவ்வாறாகவே அவனுக்குச்சொல்லும், நீர்வசிஷ்டருடனேகூட ராஜாவினிடத்துக்குப்போய் அவருடைய கிலேசந்தீர தேறுதலைச் சொல்லிப் பின்பு பதினாலுவருஷ மானவுடனே வந்து சேவித்துக் கொள்ளுகிறேனென்று சொன்னானென்று சொல்லி, வசிஷ்டனைக்கொண்டு மனம்தேறப்பண்ணிக் கொண்டிரும். என்தாய்மார் மூன்றுபேருக்கும் என்னுடைய தெண்டன் சொல்லிராஜாவைக்கிலேசப்படவொட்டாமல் தேற்றிக்கொண் டிருங்களென்று சொல்லும், என்று இப்படியாக ஸ்ரீராமர் சொல்ல, அவர் வார்த்தைக்கு மறுவார்த்தை சொல்லலாகா தென்கிறதினாலே, ஊழ்வினை இதுதா னென் றெண்ணி சேவித்துக் கொண்டு சீதையைப்பார்த்து நமஸ்காரம் பண்ணினான். அப்போது மந்திரியைப்பார்த்து மகாராஜாவுக்கும் அத்தைமாருக்கும் என்னுடைய தெண்டன் முன்னே சொல்லும் என்தங்கைமாருடனே நான்வளர்த்த கிளியையும் பூவையையும் பார்த்துப்போஷியுங்களென்று சொல்லுமென்று சீதைசொன்னாள். அதுகேட்ட சுமந்திரன் விம்மிவிம்மி அழுது, இவ்வளவு பேதைமைதனமுண்டாயிருக்கிற இந்தமகாலக்ஷுமியா! ஆரணியத்துக்குப் போகிறதென்று, தேம்பித் தேம்பி (ஸ்ரீராமன்தேற்றினாலும்) தேறும லழுதுசோர்ந்து பின்பு ஒருவாறாகத் தேறினவன்போல, ஸ்வாமி விடைகொடுத் தருளுமென்று தொழுதுக்கொண்டு, லக்ஷுமணனைப்பார்த்து தாங்களேதாகிலும் ஆக்கியாபிக்கிறீர்களாவென்று கேட்க, லக்ஷுமணர்சொல்லுகிறார். என்னுடையராஜாவுக்குக்கொடுத்த ராஜ்ஜியத்தை ஒருஸ்திரீக்குத் திரும்பக்கொடுத்த சத்தியவந்தனை ராஜாவென்றெண்ணி, இன்னஞ் சிலவார்த்தைச்சொல்லுகிறதற்க்கூட இருக்கின்றதா? மகன்காட்டில்போய் காய்கனிசாப்பிட, தாம் நல்ல திவ்வியான்னங்கள் சாப்பிட்டுக்கொண்டு ஜீவனுடனே இன்னம் தேவலோகம் போகாமலிருக்கும்படி சரீரத்தை நன்றாய்க் காப்பாத்தச்சொல்லும். பரதமகாராஜனுக்கு ஒரு வார்த்தை. அதாவது, அந்தராஜாதிராஜன் இந்தராஜாவுடனே கூடப்பிறந்தவரானால் இவருடைய ராச்சியத்தைப்பிடுங்கிக்கொண்டு ஆள்வாரா! ஆகையால் தன்னுடனே நான் பிறந்தவனல்லு! எனக்குத் தம்பியுமில்லை! என்னுடனே பிறந்த நான்சுகமே யிருக்கிறேனென்று சொல்லுமென்று லக்ஷுமணர் சொல்ல, ஸ்ரீராமன் அதைக்கேட்டு, அப்பா! நீ இப்படியாகப் பலனில்லாதவார்த்தைகளை ஏன்சொல்லுகிறாயென்றார். பின்பு சுமந்திரன் லக்ஷுமணரையும் வணங்கிக்கொண்டு, ரதத்தை அலங்கிருதஞ் செய்துக்கொண்டு, தன்னுடைய வித்தியா சாமர்த்தியத்தினாலே ஒருத்தருக்குந் தெரியாமல் பட்டணத்தைநோக்கித் தேரைவிட்டான். ஸ்ரீராமனும், சீதையினுடைய பதிவிருதாதருமமும் - தம்பியும்-தம்முடைய கிருபையும்-வாக்கும்-உணர்வும்-தகைமையும்-கோதண்டமும்-இதுகளேயே தமக்குச் சேனைகளாகக்கொண்டு அன்றிராத்திரியில் அப்பால் நடந்தார். ஸ்ரீராமன் ஆரணியத்துக்குவந்தால், ராக்ஷதாளை சங்காரம் பண்ணுவாரென்று அவாள்செய்கிற பாவம்போலிருக்கிற இருட்டு நடந்துபோகிறதைத் தடுக்கிறதுபோல மூடிக்கொண்டிருந்தது. அந்த இருட்டைக் கெடுக்கிற நிமித்தம் ஆகாயம் கைவிளக்குப் பிடிக்கிறதுபோல சந்திரனுதயமானான். தருமமானது தன்னை மனதிலே நன்றாயூன்றி வைத்துக்கொண்டு பாபங்களை எல்லாம் எரித்துப்போடுகிற ஸ்ரீராம லக்ஷுமணனை சந்தோஷத்துடனே பார்க்கவந்த, அந்த தருமத்தி னுடைய முகம்போல சந்திரன் பிரகாசித்தான். நிலவினுடைய பிரகாசம், இவர்களுடைய பாதார விந்தங்கள் ஆரணியத்தில் நடக்கிறபோது உறுத்துமென் றெண்ணி பூமியெல்லாம் பஞ்சுகளை பரப்பி வைத்ததுபோல, வெள்ளைநிறமாய்ப் பிரகாசித்தது. ஸ்ரீராமனுடைய வருத்தத்தைப் பார்த்து செங்கழுநீர்ப் புஷ்பமும், அல்லிப் புஷ்பமும், மலராமல் முகங்குவிந்துசேர்ந்துப்போயிற்றென்றால் மற்ற புஷ்பங்கள் மலர்ந்ததென்று சொல்லக் கூடுமா! மகா மிருதுவான பாதத்தை யுடைத்தான சீதையும், ஸ்ரீராமன் பிறகே அந்த இருட்டில் பாதங்கள் கொப்பளித்ததும் தெரியாமல் தொடர்ந்து நடந்தாள். மனதில் அன்பென்கிறது ஒன்றுண்டானால் எந்தவருத்தமும்

தெரியாதல்லவா ! இப்படியாக நடந்து சூரிய உதயமாகிறதற்கு முன்னே தெற்குத்திசையில் இரண்டுயோஜனைதூரம் நடந்தார்கள். அழுதகண்ணுடனே ரதமேறிக் கொண்டுபோன சுமந்திரன் இரண்டு நாழிகையில் அயோத்தியா புரியைப்போய்ச்சேர்ந்து வசிஷ்டரைக்கண்டு சேவித்துக்கொண்டு நடந்த சமாசாரமெல்லாம் சொன்னான். சகலமுந்தெரிந்த வசிஷ்டர் கேட்டு, ராஜாவினுடைய ஆயுளுமுடிந்ததுமுடிந்ததென்றார். ஸ்ரீராமனுக்கு நானும் வேண்டியதெல்லாஞ் சொன்னேன். அவர் தருமத்துக்கே உறுதிபார்த்தார். விதியை யார் வெல்லுவார்களென்று விசனித்து சுமந்திரனையுங்கூட அழைத்துக்கொண்டு ராஜாவினிடத்திற்குப்போனார். ஸ்ரீராமன் ரதத்தின்பேரில் வந்ததாக அங்கிருந்த ஜெனங்களெல்லாம் எண்ணி ராஜாவைச்சுற்றிக்கொள்ள, ஸ்ரீராமனைக்காணுமல் சுமந்திரனுடையமுகக்குறிப்பைப்பார்த்துவரயில்லையென்று நிச்சயம் பண்ணிக்கொண்டு கண்களிலே தண்ணீர் பெருக அழுதுக்கொண்டே இருந்தார்கள். சகலரும் தேர்வந்தது வந்ததென்று சொல்லிக்கொண்ட வார்த்தையைத் தசரதமகாராஜன்கேட்டு ஸ்ரீராமன் வந்தானென்கிறதாய் மயக்கந்தீர்ந்துக் கண்ணைவிழித்துப்பார்த்து வசிஷ்டரைநோக்கி ஸ்வாமி ! ஸ்ரீராமன் வந்தானுவென்றார். வசிஷ்டர் வரவில்லையென்று சொல்லமாட்டாமல் மனந்தேங்கி சும்மாயின்றார். அவர்முகக்குறியைப்பார்த்து வரயில்லையென்கிறதாய் திரும்பிச்சோர்ந்தார். அதுகண்டு வசிஷ்டர் இந்த துக்கத்தை நான்கண்ணினுல் பார்க்கமாட்டேனென்று அவ்விடம்விட்டம்புறம்போனார். பின்பு ஒருதரம் ராஜாகண்ணைத்திறந்துபார்த்துச் சுமந்திரனைக்கண்டு மகன் தூரப்போய்விட்டானே ! கிட்ட இருக்கிறானேவென்று கேட்க, ஸ்வாமி ! லக்ஷ்மணரும் சீதையுங்கூடத்தொடர, ஸ்ரீராமன் ஆரணியத்துக்குப் போனுனென்று சுமந்திரன் சொன்னான். அதுகேட்ட மாத்திரத்தில் ராஜாவுக்குப் பிராணன் போய்விட்டது. தேவேந்திரன்முதலான தேவர்களும், சந்திரனுக்குச் சமானமானவிமானத்தைத் தாங்கிக்கொண்டுவந்து நம்முடைய தந்தைக்குத் தந்தை வந்தாரென்று மனஞ் சந்தோஷத்துடனே அந்தவிமானத்தி லெழுந்தருளப் பண்ணிக்கொண்டு பிரமலோகத்துக்கும் உயர்ந்த மீளாதலோகமாகிய பரமபதமென்கிற திருநாட்டிற் கொண்டுபோய்ச்சேர்த்தார்கள். இவ்விடத்தில் ராஜாவுக்குச் சுவாசமில்லையென்றும் சரீரம் பதைத்துக் கொண்டிருந்ததும் காணுமென்றும் கௌசலை, சரீரமெல்லாம் தொட்டுப்பார்த்துப் பெருமூச்சுவிட்டுப் பிராணன்போய்விட்டதென்று தெரிந்து துக்கித்துக்கொண்டு, பூமியில்விழுந்து கோடைகாலத்து வெய்யலில் அகப்பட்ட எலும்பில்லாத ஜீவஜெந்துவைப்போல துக்காக்கினியில்வெந்தாள். பிரமன் முதலான பிரபஞ்சங்கள்முதலிய யாவற்றையும்பெற்ற ஸ்ரீமந்நாராயணனைப்பெற்றெடுத்த கௌசலை, துணைபிரிந்த அன்றில் பக்ஷியைப் போலவும் மாணிக்கமிழந்த நாகம்போலவும் தேவாமிர்தத்தை வைத்திருந்து இழந்ததுபோலவும் துயரத்துடன் விம்மியழுகிறாள். கைகேசி உன்புத்திரனுலே ராச்சியம்வேணுமென்று பிடித்து வரம்வாங்கிக்கொண்டல்லவா? இப்படிமுடித்தாயென்றுசொல்லி, ராஜாவினுடைய மார்பிலே மின்னல்போல விழுந்துப்புரண்டு ராஜாவானவர் ஆயுதங்களாலேயு மாளாமல் பிள்ளைகளாலே மாண்டாரோ கொஞ்சமாகிலு மிரக்கமில்லாதவளிப்படி விட்டுப்போட்டு ஆரணியத்துக்குப் போனானே என்று சொல்லிக்கொண்டு, தண்ணீர்வற்றிப்போன குளத்து மச்சத்தைப்போலச் சரீரந்தடுமாறி பதைத்துத் துடித்து மெலிந்தாள். லோகத்தில் பிள்ளைகள்வேணுமென்கிறது தன்னை ரக்ஷிக்கவேணுமென்றும் நல்லகதியிற் கொண்டுபோய் விடவேணுமென்று மல்லவா ! கோருகிறது. இந்த சமயத்துக்கு வந்து பயப்படாதே என்றுசொல்லவில்லையே ! மகனே ! பிதாவைக்கொன்றான்கொன்றானென்று சொல்லி, ஆவிகுலைந்தாள். பூர்வத்தில் தேவதைகள் நிமித்தியஞ் சம்பராசுரனை ஜெயஞ்செய்தீரோ அதினாலல்லவா தேவர்கள் நிலைத்தார்கள். அவர்களுக்கு இப்போது விருந்தாகப் போனீரோ ! போனீரோ ! என்று ஒரு கஜேந்திரனைப்பிரிந்த பிடியானையைப்போல அலறி அழுதாள். யாகாதிமுதலியதுகள் அனேகம் பண்ணினீரே ! அந்த புண்ணியபலன்க ளனுபவிக்கிறீரோ ! சத்தியவாக்கியத்தினுடைய புண்ணியபலன்களை அனுபவிக்கிறீரோ ! மனுக்கியான சாஸ்திரப்படிக்கு ராச்சியபாரம் பண்ணிக் கொண்டு வந்தீரோ அந்த புண்ணியபலன்களை அனுபவிக்கிறீரோ ! என்றுசொல்லிச்சொல்லி தேவர்க்கள்முதலான சகலஜெனங்களும் கேள்விச்செல்வம் அனுபவிக்கும்படியாய் ஸ்ரீராமனைப்பெற்ற கோசலைதேவி இவ்வாறாக அங்கலாய்த்தாள். சக்கிரவர்த்தியினுடைய பெருந்தேவி, இப்படிசொல்லி அங்கலாய்க்க அவளுக்குத் தோழியான சுமித்திரையு மப்படியே உருகிக்கரைந்து துடித்துப்பதைத்து அங்கலாய்த்தாள். மற்ற அறுபதினாயிரம் ஸ்திரீகளும் சமுத்திரம்போல இரைந்துக்கொண்டு மயில்கூட்டங்கள்போல வந்து ராஜாவைச் சுற்றிக்கொண்டார்கள். மேலும் விஷந் சாப்பிட்டவர்கள்போல மயங்கிநடுங்கியின்று ராஜாவைத் தேவலோகத்திலும்போய்த்தொடருவோமென்று வன்கண்களால் அழாமலிருந்தார்கள். காளுஅப்பிரவாகம்வரப் பர்வதத்தைச் சுற்றிக்கொண்டிருக்கிற புஷ்பக் கொடிகள்போல ராஜாவைச் சுற்றிக்கொண் டிருந்தார்கள். பொல்லாத சொல்லினாலே உயிரிழந்துபிள்ளைகள்பிரியப் பிராணன் போய்விட்ட சத்தியவந்தனான ராஜாவினுடைய சரீரத்தைப் பிடித்துக்கொண்டுவிடாமல் மயக்கமென்கிற சுறாமீன்களிருக்கிற பிறவியென்னும் சமுத்திரத்தைத்தாண்டுகிறதற்கு ஒருதரம்போய் திரும்பிவந்திருக்கிற ஓடத்தைக் காத்துக்கொண்டிருந்து தாமும் போகிறவர்களாயிருக்கிறவர்கள்போல இருந்தார்கள். அப்போது சுமந்திரன் வசிஷ்டமகாமுனியி னிடத்துக்குப்போய் ராஜாசெய்தியைச்சொல்ல, அவரந்தக்ஷணமேவந்து விதிசெய்த காரியத்தைப்பார்த்து விம்மி மனதுதளர்ந்து வரங்கொடுத்து மகனைக் காட்டுக்கனுப்பினவன் கண் மைந்தர்



ந்துக்கொண்டாயா ! அப்பா ! என்றெண்ணி இரங்கிசமுத்திரத்திலே கப்பலுடைய அதிலிருந்த எஜமானும் மாண்டுபோக அதெல்லாம் பார்த்துக்கொண் டிருக்கிற மீகாமனைப்போல மனது விசனித்தார். ராஜாவுக்கு நடக்கவேண்டிய காரியங்களுக்குப் பிள்ளைகளொருத்தரும் சமீபத்திலில்லையே ! கைகேசியின் பிள்ளைவந்தால் நடக்கவேண்டியது நடக்குமென்று ஸ்திரீ கூட்டங்களுக்கு நடுவேகிடந்த ராஜாவினுடைய சரீரத்தை வாசனை பொருந்திய தயிலத்திற்சேர்த்தார். அப்போது வசிஷ்டரானவர் ராஜாவினுடைய அறுபதினாயிரம் ஸ்திரீகளைப்பார்த்து அவர்கள் நினைத்திருக்கிற மனோபாவமுந்தெரிந்து ராஜாவுக் குரிமைசெய்கிறநாளையில் நீங்க ளக்கினிப்பிரவேசம் பண்ணுங்களென்று சொல்லி அனுப்பிவிட்டு கௌசலை சுமித்திரை இருவரையுந்தேற்றி அவர்களைத் திருமாளிகைக்குப் போகச்சொல்லி அனுப்பிவிட்டு, பரதனுக்கு ராஜன் ஓலையாக ஒரு ஓலை எழுதிக்கொடுத்து சிக்கிரமா யழைத்துக்கொண்டு வாருங்களென்று தூதர்களைக் கேகயதேசத்துக் கனுப்பினார். இவ்விடத்தில் ராஜரீககாரியம் [illegible]தன் வருகிறவரைக்கும் மந்திரியாகிய சுமந்திரன் பார்த்துக்கொண்டு வருகிறதாய் திட்டம்பண்ணி வசிஷ்டமகாமுனி தம்முடைய திருமாளிகையேபோய்ச்சேர்ந்தார். இவர்கள் சமாசாரம் இப்படியிருக்க, சூரியன் சமுத்திரசத்தமான பேரிகைமுழங்க, தேவர்களெல்லாம் தோத்திரம்பண்ண பூலோகத்தாரெல்லாம் நமஸ்காரஞ்செய்ய, கிரணங்கள் என்கிற ஆயுதங்கள் பிரகாசிக்க ரத்னகசிதமான தேரின்பேரி லேறிக்கொண்டு என்னுடைய மகனால் பரமபதமடைந்தான், அவன்பிள்ளைகளா துலைவிலேபோய் விட்டார்கள். அவர்கள் வருகிறமட்டுக்கும் நானே இந்த உலகத்தைக் காத்துக்கொண்டிருக்கிறேனென்று அதிவேகமாய் புறப்பட்டதுபோலப் புறப்பட்டார். அந்தசோலையில் துயரத்தோடு படுத்திருந்த பிரஜைகள் ஸ்ரீராமரிருக்கிறாரென்கிறதாய் நித்திரையைவிட் டெழுந்திருந்துப்பார்க்க, கிருபாநிதியான ஸ்ரீராமனைக்காணுமல் திடுக்கிட்டுப் பெருமூச்செறிந்து அதிக துக்கத்தையடைந்து உறங்காத கண்கள் உறங்கி, நம்முடைய பிராணனை மாளப் பண்ணிக்கொண்டோமென்று விழுந்து, புரண்டு எட்டுத் திசைகளுமோடித் தேடி, விழுந்தெழுந்திருந்து, ஐயோ ! நம்மை துக்க சமுத்திரத்தில் விட்டுப்போய் விட்டாரோ ! என்கிறவர்களும், ஸ்ரீராமருடைய காரியத்தைப்பார்த்தால் பொல்லாதவராய் காண்கின்ற தென்கிறவர்களும், தண்டகாரணியம் பூமியிலேதானே இருக்கின்றது. ஆகட்டும் விடுகிறோமாவென்றும் இவ்விதமாகச் சொல்லிச்சொல்லி ஓடித்திரிந்து தடுமாறுகிறபோது, ரதத்தினுடைய சக்கரத்தின் அடி பட்டணத்துக்குச் செவ்வையாய்ப் போயிருக்கிறதைக்கண்டு, யாவருக்கும் ஜீவன்வந்து ஒருத்தரும் பயப்படாதேயுங்களென்றும், ஸ்ரீராமன் அயோத்திக்கேபோய்ச் சேர்ந்தாரென்றும்சொல்லிக்கொண்டு மேககர்ஜனையும் சமுத்திர கோஷமும்கூடி சத்தித்தது போல சந்தோஷத்துடனே ஆர்ப்பரித்தார்கள். (பாம்பினுலே கடிபட்டவர்கள் அதின்விஷத்தினுல் மயங்கி பிராணன்போய் அதிலேதானே ஓர் அமிர்தமுண்டாய் அவ்விஷம் தீர்ந்துப் பிராணன் வந்தவர்கள்போல) சகலருஞ் சந்தோஷத்துடனே பட்டணம்நோக்கி ஓடிப்பார்த்து அந்த தேர்ச்சுவடு திரும்பாமல் பட்டணத்துக்குத்தானே போனதைக்கண்டு மிகுந்தசந்தோஷத்துடனே சமுத்திரம்பொங்கிப் பூமி எல்லாம் வெள்ளம் பெருகி ஓடிப் புரண்டு சமுத்திரத்தில் அடங்கினதுபோலச் சகலரும் அயோத்தியாபுரியேபோய்ச் சேர்ந்தார்கள். அப்படிச்சேர்ந்தவர்கள் ராஜன் பரமபதம் அடைந்த சமாசாரங்கேட்டு மனங்குன்றி பிராணன் போய்விடுகிற சரீரங்கள்போலப் பதைத்துவிழுந்து அழுததை நம்மால் சொல்லிமுடியுமா ! உடனே ஸ்ரீராமன் ஆரணியத்திற்குப்போன சமாசாரங்கேட்டார்கள் அப்படி கேட்டவர்கள் பிராணன் உடனே போய்விடும் ஆனால் அவரவர்களுக்கு ஆயுள் ஏற்பட்டிருக்கிறபடியினாலே சகலருந்துக்குத் துயிராய் விழுந்துப் புரண்டுச் சோர்ந் தழுதார்கள். அப்போது அந்த ஜெனங்களை வசிஷ்ட மகரிஷி பார்த்து இந்த அபவாதத்துக்குப் பயந்துத் தானே நானும் பிராணனை வைத்துக்கொண் டிருக்கிறேன் நடக்கவேண்டியது நடந்தது. நீங்கள் துயரப்படவேண்டாமென்று தேறுதலைச்சொல்லி அவர்களுடைய மனதின் பதபதப்பை நீக்கினார். வசிஷ்டமகாமுனியின் வசனங்களினாலே வடவானலுக்குப்பயந்துச் சமுத்திரம் அந்தமீறாமல் எப்படியிருக்கின்றதோ அப்படிபோலச் சகலஜனங்களும் பதப்படங்கி இருந்தார்கள். இப்பால் பிதாவாக்கியத்தினாலும், தேவதைகள் தவத்தினாலும், இந்நிலநடந்த கோதண்டபாணியாகிய ஸ்ரீராமனுடைய செய்கையைச் சொல்லுகிறோம்.

---

## கங்காநதியைக்காணல்.

மை - ரத்தினம் - நீலம் - இவைகளைப்போல திருமேனியையுடைய ஸ்ரீராமர், தம்முடைய சரீரத்தினுடைய காந்தியினாலே சூரியனுடைய பிரகாசமழுங்க, மிகவும் சிறுத்த இடையையுடைய சீதாபிராட்டியும், தம்பியும், கூடவர, வழிகளில்பெண்ணன்னங்களும்-ஆண் அன்னங்களும் கூடிக்கூடி விளையாடுகிறதைக் கண்டார். அவ்விடத்திலிருக்கிற தாமரைக்கமலங்களெல்லாம், ஸ்ரீராமனுடைய பாதத்துக்குச் சமானமாக மாட்டாமல் பிரகாசமழுங்கி இருக்கிறதைச் சீதைகண்டாள். மேகமானது மின்னலுடனே வருகிறதுபோலவும் மதயானைப்பிடியுடனே வருகிறதுபோலவும் நடந்தார்கள். கழனி வெளிகளில் ஸ்திரீகளுடைய கண்கள்போலிருக்கிற நீலோற்பல புஷ்பங்களைக்களையாகப்பறித்து எறிந்துகிடக்கிறதைக்கண்டார். அனேக சிங்காரங்களும், பூஞ்சோலைகளும், கரும்பு ஆலைகள் முதலானதுகளையுங்கண்டு ஸ்ரீராமனுடனே விளையாடிக்கொண்டு சீதைநடந்தாள்: சந்தனமரமுதலான விருக்ஷங்களும், மணற்குன்றுகளும், நதிகளும், எருமைகள் செந்நெற்கதிர்களை மேய்ந்து கடைவாயில் ஒழுகும் பால் தண்ணீரில் போய்விழ, அதிலிருந்த க

யல்மீன்கள் துள்ளி எழும்புகிறதையும் அதிலிருக்கும் அன்னப்பக்ஷிகள்போல ஸ்திரீகளிறங்கி விளையாடுகிற நாடுகளையுந்தாண்டி கங்காநதிபோய்ச்சேர்ந்தார்கள். அந்த கங்காதீரத்தில் வாசமாய் தபசுசெய்துக்கொண்டிருக்கிற ரிஷீஸ்வரரெல்லாம் மிகவும் காக்ஷியுடனே நாம்போய்ச்சேருகிற பரமபதம் தானே நமக் கெதிரில்வந்ததென்று சந்தோஷித்து ஸ்ரீராமனையும், சீதாபிராட்டியையுங்கண்டு ஆனந்தபரவசராய்களித்து எதிர்கொண்டு வேதகோஷ்டத்துடனே ஆநந்தநிர்த்தமாடி தங்கள்பிள்ளைகள் தூரதேசம் போயிருந்து அனேகநாள் காணாமல் நினைத்து விசாரப்பட்டுக்கொண்டிருக்கிற சமையத்தில் அவர்கள் வந்தால் எத்தனை சந்துஷ்டியாமோ அத்தனை அன்பும் சந்தோஷமுமாய்த் தங்கள் பன்னசாலைக் கழைத்துக்கொண்டுபோய் தங்கள் கண்களினுடைய ஆனந்தபாஷ்பத்தினாலே நீராட்டி இன்சொல்லென்கிற புஷ்பம்சூட்டி; அன்பென்கிற அமிர்தத்தை ஊட்டி, வழிநடந்து வந்த வருத்தந்தீர, பலவித உபசாரஞ்செய்து ஸ்ரீராமா! காயும், கனியும், கிழங்குகளும், நல்லதாய்ப் பார்த்துக்கொண்டு வந்திருக்கிறோம், கங்கையிலே ஸ்நானஞ்செய்து நியமநிஷ்டை முடித்துக்கொண்டு அமுதுசெய்யுமென்று சொன்னார்கள். அப்போது ஸ்ரீராமன் ஸ்திரீ ரத்தினமான சீதையின் கரத்தைப் பிடித்துக்கொண்டு தேவர்களும் கண்டு சந்தோஷிக்க பூர்வத்தில் தம்முடைய பாதாரவிந்தத்தில் பிரமதேவன் ஆராதித்த கங்கையிலே ஸ்நானம்பண்ணினார். அதற்குக் கங்கை அதிகசந்தோஷமாய் சகலலோகத்தி லிருக்கிறவர்களுடைய பாவங்களை எல்லாம் போக்கடித்துக்கொண்டிருந்தேன். இன்றையத்தினம் என்பாவத்தையும் போக்கடித்துக்கொண்டேன். எனக்கும் நல்லகதி கிடைத்ததென்று சந்தோஷித்தாள். ஸ்ரீராமனுடைய சடாமகுடத்திலே கங்கை பிரகாசிக்கிற படியினாலேயும், ஸ்திரீ எதிரே இருந்துப்பார்க்க, நீராடுகிறபடியினாலேயும் சந்திரசேகரனான பரமசிவனைப்போலப் பிரகாசித்தார். பின்னையும் பாலசமுத்திரத்தில் தாம் ஸ்ரீமகாலக்ஷ்மியுடனே யோகநித்திரைநீங்கி எழுந்திருந்த பாவனைபோலவும் பிரகாசித்தார், அங்கே இருக்கிற புஷ்பக்கொடிகளெல்லாம் சீதையைப்பார்த்து நாணிவணங்க, அன்னங்கள் நடைக்குத்தோத்துப்பயந்து ஒதுங்கிப்போகத் தாமரைக்கமலங்கள் பாதத்துக்குநாணித் தண்ணீரிலொளிக்க, கயல்மீன்கள் கண்களுக்கு நாணிவிலகிப்போக ஸ்நானம்பண்ணினள். அந்தகங்கைக்குத் தேவனான சிவனுடைய சடையிலே இருக்கிற எருக்கலர் - கொன்றை-முதலான துகளுடைய வாசனை அடைந்திருந்ததுபோய், சீதையினுடைய கூந்தலின்பரிமளமான சவ்வாது முதலான துகளுடைய வாசனை புதிதாயுண்டாய் பரிமளித்தது. சீதை தனியே வந்திருக்கிறளென்று நுரை என்னும் நகைக்கூந்தலை உடைய கங்கையாகிய செவிலித்தாய் அலை என்கிற கரங்களினாலே ஸ்நானம்பண்ணிவைத்தாள். சீதையினுடைய அளகம் அந்தகங்காஜலப் பிரவாகத்தில் நீண்டு கறுத்துப் பிரகாசிக்கிறது யமுனைநதியினுடைய கறுத்தஜலம்வந்து சங்கமமாய்க்கலந்துப்பிரவாகமாகிறதுபோலப் பிரகாசித்தது. அந்த கங்காஜலத்திலே சீதை ஸ்நானம்பண்ணி எழுந்திருந்தது பூர்வத்தில் திருப்பாற் கடலில் அவதாரம்பண்ணி எழுந்திருந்ததுபோலப் பிரகாசித்திருந்தாள். அந்தகங்காநதி பூர்வத்தில் இந்த ஸ்ரீராமனுடைய திருவடியைத் தீண்டிக்கொண்டு பிரவாகமாய் பூமிக்குவந்து சகல லோகத்தாருக்கும் சகலபாதகங்களைத் தீர்த்துக்கொண்டு விளங்கியிருந்தது. இப்போது அவருடைய பாதாதிகேசவரைக்கும் தோய்ந்தபடியால் இனி இவ்வுலகத்தார் யாவரும் நரககதி அடையார்களென்று சொல்லவேணுமல்லவா! இப்படியாக் கங்கையிலே ஸ்நானம்பண்ணி பூர்வத்திலே தாமே பிரயாசைப்பட்டுத் திருப்பாற்கடலைக்கடைந்து அதில்வந்த அமுதத்தைதேவர்களே நீங்கள் சாப்பிடுங்களென்று கொடுத்தவர், அன்றையத்தினம் ரிஷிகளிடத்தில் காய் - கனி - கிழங்குகளை விருந்தாக உண்டார்.

இப்படியாக ஸ்ரீராமன் அவடத்தில் இருக்கும்போது அந்தகங்காநதியில் ஓடம் விடுகிறவனாயும் ஆயிரம் ஓடத்துக்கு நாயகனுயும், பர்வதம்போல தோள்களும், கையில் வில்லும், கொம்பு, துருத்தி, பம்பை, முதலானது சத்திக்க, யானைகள்போலக் கிராதகர் அனேகம்பேர் அனேகம் வேட்டைநாய்களோடு சூழ்ந்துவர, மகாபலமான தொடைகளும், அந்த கங்கையினுடைய ஆழமட்டுக்கும் நீண்ட உயர்ச்சியும், செந்தோல் வஸ்திரமும், புலிவால்கச்சையும், கால்லிலேசெருப்பும், கோடை இடி போலக் கூற்றுவனும், பயப்படத்தக்ககுரலும், பலகைகளால் கட்டிய வீரகண்டாமணியை உடையக் காலும், இருளைப்போல கறுத்திருக்கிற தலைமயிரும், யாளிபோல நெறித்திருக்கிற புருவங்களும், பனங்காடுபோல முன்கைமயிர்களும், எண்ணெய்யுண்ட இருளைப்போல மிகவும் கறுத்திருக்கிற மேனியும், அரையிலே வாளும், பாம்பைப்போல பார்வையும், பயித்தியக்காரனைப்போல வார்த்தையும், வச்சிராயுதம்போல இடுப்பும், மச்சநாற்றமுடைய சரீரமும், நகைப்பில்லாத முகமும், கோபமில்லாமலிருக்கிறகண்களில் நெருப்புப்பொறிபறக்கிற பார்வையும், இவ்விதசுரூபத்துடனே இருக்கிறவனாகிய குகனென்பவன், அந்தகங்கைக்கரை ஓரத்தில் சிரிங்கிஎரி என்கிற நகரத்தில் வாசம்செய்கிறவன் அவன் ஸ்ரீராமனைக் காணவேணுமென்கிற அவாவினாலே தேனும் மீனும் காணிக்கை கொண்டுவந்து கூடவந்த கிராதகரை எல்லாம் அப்பால் நிறுத்தி கையிலிருந்த வில்லையும் அரையிற்கட்டியவாளையும், வாங்கிவைத்து நிஷ்கபடமான மனதோடு ஸ்ரீராமனிருக்கிற இடத்துக்குவந்து வாசற்படியில் நின்றான். அவன் அழையாததற்குமுன்னே லக்ஷ்மணர் நீ யாரென்றுகேட்க, அவன் நமஸ்காரம்செய்து ஸ்வாமி! உம்மைச்சேவிக்கவந்தேன். நான் இந்த கங்கையில் ஓடம் விடுகிறவன் தங்கள் அடியனென்று சொன்னான். அப்போது லக்ஷ்மணர் அவனை அவ்விடத்தில் நிறுத்தித் தான் ஸ்ரீராமனிடத்திற்குப்போய் தொழுது, ஸ்வாமி! தேவரீரைக் காணுகிறநிமித்தம் இந்த கங்கை



யில் ஓடம்விடுகிறவர்களுக்கு எஜமானுகிய ஒருவன் அனேக கூட்டத்துடனேவந்திருக்கிறனென்று சொல்ல, ஸ்ரீராமனும் இங்கே அழைத்துவாவென்று ஆக்கியாபிக்க, லக்ஷ்மண ரழைத்துக்கொண்டுவந்தார். அந்த குகன் ஸ்ரீராமனைக் கண்களால் தரிசித்து மனதுகளிந்து தலைமயிர்களெல்லாம் பூமியிலேபடியசாஷ்டாங்கமாகச்சேவித்து எழுந்திருந்து பயபத்தியுடனே, கையினால் வாய் புதைத்துக்கொண்டு நின்றான். அப்படி நின்ற குகனை ஸ்ரீராமன் பார்த்து இவடத்தில் இரு என்றுசொல்ல, இராமல் அவன் நின்றபடியே ஸ்வாமி! தங்களுக்குக்காணிக்கை - தேனும் - மீனும் - கொண்டுவந் திருக்கிறேன், தங்கள் திருவுள மென்னமோ தெரிய இல்லை என்று சொல்ல, அதுகேட்டு ஸ்ரீராமன் அங்கிருக்கிற மகாரிஷிகளைப்பார்த்து நகைப்புடன் ஒருவார்த்தைசொல்லுகிறார், யாராகிலும் அன்புடன் கொண்டுவந்தது எதுவாக இருந்தாலும் அதை அமிர்தத்திலும் அதிகமாகக்கொள்ளவேண்டியது. எப்போது பரிவுடன் கொண்டுவந்தானே அப்போது அந்த வஸ்து பவித்திரமாயிற்று. அதை நாம் அங்கிகரிக்கவேண்டியதுதானே சாப்பிட்டதற்கும் சமானமென்று சொன்னார். அப்பால் குகனைப்பார்த்து இன்றைக்கு நாங்களிவ்விடத்தி லிருக்கிறோம், நாளைகாலமே அப்பால் போகவேணும் ஆகையால் நீ இன்றைக்கு உன் கூட்டத்துடன் உன்கிராமத்துக்குப்போய் நாளை உதயத்துக்கு ஓடம்கொண்டுவாவென்றுசொன்னார். அப்போது ஸ்வாமி! உம்மை இப்படியாகச் சேவித்த என்கண்களைப்பிடுங்கி எறிந்துப்போடவேணும் அப்படிபிடுங்கிப்போடமாட்டாமலிருக்கிற கள்ளனான் என்கிராமத்துக்குத் தேவரீரைவிட்டுப்போகமாட்டேன் தங்கள் பாதத்தண்டையிலிருந்து அடிமைத்தொழில்செய்வேனென்றுசொல்ல, அவ்வார்த்தையை ஸ்ரீராமன்கேட்டு சீதையினுடையமுகத்தையும், தம்பியினுடைய முகத்தையும்பார்த்து இவன் நம்மிடத்தில் மிகுந்த அன்புடையவனென்றுசொல்லி, குகனைநோக்கி நீ எனக்கு அன்பானதம்பிதான் அப்படியே நம்மிடத்தில் இருவென்று ஆக்கியாபித்தார். குகன் சாஷ்டாங்கமாகத் தெண்டம் சமற்பித்து மிகுந்த சந்தோஷத்துடனே தன்சேனைகளை அழைத்து அந்தப் பன்னகசாலையைச்சுற்றி இருக்கச்சொல்லி திட்டப்படுத்தித் தான் கையில் வில் எடுத்துக்கொண்டு அரையிலே வாள்விசித்துக்கட்டிக்கொண்டு அதிசாக்கிறதையாய் இடியுடனேகூடி இருக்கிற மேகம்போலக் காத்திருந்தான். அப்போது தாங்கள் பட்டணம்விட்டு வந்தசெய்தி எல்லாம் விபரமாய்த் தெரியும்படி வயணமாக லக்ஷ்மணர்சொல்ல, குகன்கேட்டு மிகுந்தபரிவுடனே கிலேசித்து கண்களிலே மழை அருவிபோலத் தண்ணீர்வர, இந்தநாயகனை நாயகனுகப்பெருகிறதற்கு பூமிதேவி பாக்கியம்செய்யாமற் போனாளல்லவாவென்று மிகவும் வருந்தித்துக்கித்துக்கொண்டிருந்தான் அப்போது ராச்சியங்களிலுள்ளபகைகளைவென்று ஏகச்சக்கிராதிபதியாய் ராச்சியபாரம் செய்து சகலருடைய இருதயத்திலும் இருக்கிற தசரதமகாராஜாவைப்போல சூரியனும் மறைந்துப்போனார். ஸ்ரீராமன் சந்தியாவந்தனைமுதலானநியமங்களைமுடித்துக்கொண்டு அமிர்தத்துக்குச்சமானமான சீதையுடனே தருப்பைப் புல்லினாலே அமைத்திருக்கிறப் படுக்கையில் வந்திருந்தார். லக்ஷ்மணர் கையில் வில்லைப் பிடித்துக்கொண்டு பொழுதுவிடிகிற பரியந்தம் கண்ணிமைக்காமல்காத்துக்கொண்டுநின்றார். அப்போது நித்திராதேவி எப்போதும் போலவர, நாம்திரும்பி அயோத்தியாபுரிக்குவந்தபிறகு வா! அதற்குமுன் வாராதேயென்று ராமாநுஜரான லக்ஷ்மணர் ஆக்கியாபித்தார். நித்திராதேவி சேவித்துக்கொண்டு ஸ்வாமி! அப்படியே அயோத்திக்குவந்துசேர்ந்தபிறகு தேவரீரிடத்திற்கு வருகிறேனென்று போய்விட்டாள். லக்ஷ்மணர், ஸ்ரீராமனும், சீதாபிராட்டியும், எளியவர்கள்போலத் தருப்பாசனத்தில் படுத்திருக்கிறதைக்கண்டு, மிகுந்த வியசனத்துடனே கண்களில் அருவிவடிய, சித்திரம்போல வில்லை ஊன்றிக்கொண்டே நின்றார். குகன் யானைக்கூட்டங்கள்போல அனேகம் வேடர்கள்சூழ, கையிலேவில்லைவாங்கிக்கொண்டுமனதுவெம்பி புழுங்கி, கண்களில்தண்ணீர்வர, தம்பிநிற்கிறதையும் ஸ்ரீராமன் படுத்திருக்கிற எளிமையையும் பார்த்து அருவியோடி இடிந்த பர்வதம்போல நின்றபடி இருந்தான். அப்போது சூரியன் தேவலோகமுதலான உலகங்களிலிருக்கிறவர்கள்யாவரும் இப்படித்தான் இறந்துபோகிறதென்றுகாண்பிக்கிறதுபோல முந்நாள்மறைந்துபின்பு இப்படித்தான் பிறக்கிறதென்று காண்பிக்கிறதுபோல உதையமானார். தாமரைக் கமலங்களெல்லாம் சூரியனைக்கண்டு மலர்ந்தது. ஸ்ரீராமனைக்கண்டு சீதையினுடையமுககமலம்மலர்ந்தது. ஸ்ரீராமன் காலக்கடன்முதலியவைகளை முடித்துக்கொண்டு ரிஷீஸ்வரர்கள் தொடர்ந்துநிற்க, குகனைப்பார்த்து ஓடங்கொண்டுவாவென்று ஆக்கியாபித்தார். அவ்வார்த்தையைக்கேட்கவே குகன் தனது கண்களில் ஜலம் தாரைதாரையாய்வழிய, மிகவும் பதைத்து சீதையுடனேகூட ஸ்ரீராமனை சாஷ்டாங்கமாகச் சேவித்துக்கொண்டு ஸ்வாமி! அடிமைகளாகிய நாங்கள் பொய் என்கிறது அறியோம் நாங்கள் வாசம்செய்கிறது ஆரணியமேயல்லது பட்டணமல்ல, நாங்கள் மிகுந்தபாவிகள், தாங்கள் இட்ட ஏவல்செய்யத்தக்கவர்கள், தாங்கள் கிருபைசெய்து எங்கள் நகரத்திலேதானே இருக்கவேணும் இவடத்திலே தேன் - தினை - தேவர்களுக்கும் யோக்கியமான மாங்கிசம் இவைகள் மிகுதியா இருக்கின்றன. துணைக்கு நாங்களிருக்கின்றோம், விளையாடுகிறதற்கு ஆரணியம் இருக்கின்றது. ஸ்நானத்துக்குத்தான் கங்கை இருக்கின்றதே, என் சரீரமிருக்கிற மட்டுக்கும் தாங்களிவ்விடத்திலேயே வாசம்செய்யவேணும் வஸ்திரங்கள் போலத்தோல்கள், கட்டில் மஞ்சங்கள் போலப், படுத்துக் கொள்ளுகிறதற்குப் பரணுகள், வாசம் செய்கிறதற்குக் குடிசைகள் முதலியவைகளிருக்கின்றன தேவலோகத்து வஸ்துக்கள் வேணுமென்றாலும் அதிசீக்கிரத்துக்குக் கொண்டுவரத்தக்கதாக நாங்களிருக்கின்றோம், பதினாயிரம்

வேடர்கள் - தேவர்களுக்குச் சமானமானபலசாலிகள் தங்களுடைய ஏவலுக்கு ஆளாக இருக்கிறார்கள். தாங்கள் ஒருநாளைக்கு எங்கள்குடிசையி லிருந்தால் அதைப் பார்க்கிலும் மிகுந்தபாக்கியம் எங்களுக்கொன்றுமில்லை என்று, மிகுந்த அன்புடனே குகன் சொல்லுகிற வார்த்தைகளை ஸ்ரீராமன் கேட்டு, மிகுந்த கிருபையுடனே குஞ்சிரிப்பாக நகைத்து, இத்தகங்காநதி முதலான நதிகளிலே ஸ்நானம்செய்து மகாரிஷிகளைச் சேவித்துக்கொண்டு இன்னம் சிறுநாளையில் திரும்புவோம் அப்போது உன்னிடத்திற்கு வருகிறோமென்று சொல்ல, அந்த வார்த்தையைக்கேட்டு மனோபாவம் அறிந்துகொண்டு, அந்தக்ஷணமே ஓடத்தைஅழைப்பித்தான். ஸ்ரீராமர் அந்த மகாரிஷிகளை எல்லாம்பார்த்து, விடை பெற்றுக்கொள்ளுங்களென்று சொல்லிக்கொண்டோரும் - சீதாபிராட்டியும் - லக்ஷ்மணருமாக ஓடத்தின் பேரிலே ஏறிக்கொண்டு, ஓடத்தைவிடச்சொல்லி ஆக்கியாபிக்க, அப்படியேகுகன் ஓடம்விட்டான். அந்த ஓடமானது அன்னம் நடக்கிறது போலச் சென்றது. அந்த ரிஷியிலவோரும் அக்கினியில்விழுந்த மெழுகுபோல மன துருகி நின்றார்கள், ஸ்ரீராமரும் - சீதையும் ஓடத்திலிருந்து தண்ணீர் இறைத்துவிளையாடிக்கொண்டுவர அந்த ஓடமானது தண்ணீரிலே தெண்டுபோல அதிசீக்கிரமா யோடிற்று. மனற்குன்றுகளென்கிற தனங்களையுடைய அந்த கங்காநதி என்னும் ஸ்திரீ, ரத்தினங்களைக் கொழிக்கும் அலையென்கிற தன்கரங்களினால் ஏந்திதாங்கிக்கொண்டு அக்கரையிற் சேர்த்தாள். கரைஏறின மாத்திரத்தில் ஸ்ரீராமர் தன்சினேகிதனாகிய குகனைப்பார்த்து, சித்திரகூடபர்வதத்துக்குப் போகிறவழி எவ்வாறெனக் கேட்க, குகன்மிகுந்த பரிவுடனே சாஷ்டாங்கமாகச் சேவித்து, புருஷோத்தமா! அடியேன் ஒருவிண்ணப்பம் பண்ணிக்கொள்ளுகிறே னென்று சொல்லுகிறான், ஸ்வாமி அடியேன் இவ்விடத்துப் பாதைகளெல்லாம்நன்றாயறிவேன். காய்கனி - கிழங்குகள் - தேன் - தினை - முதலியதுகள்தேடிக்கொண்டு வரத்தக்கினவன் இறங்கினவிடங்களில் திவ்வியமான வீடுகள்கட்டுவேன் ஒருகொடிப்பொழுதாகிலும் தங்களைப்பிரியாமல், பாதார விந்த சாயலிலேகாத்திருப்பேன். பொல்லாதஜீவ ஜெந்துக்களை எல்லாம் திசாதிசைகளில்துரத்தி, வாசம்செய்கிறதற்கு நல்லாஞைகள் செய்துவைப்பேன் எந்த காலங்களிலெந்த வஸ்து வேண்டுமோ அதைக் கொண்டுவருவேன். ஒன்றுக்கும் பயப்படுகிறவ னல்ல இரவும் - பகலும் தங்களுடைய திருவடிகளைப்பிரியாமலிருப்பேன். தாங்கள் ஆக்கியாபித்தால் என்சேனையும் கூடக் கொண்டு வருகிறேன் சத்துருக்களாராகிலும் வந்தால், மாண்டு போவாரல்லாமல் என்முன்னே மீண்டுபோகமாட்டார்கள். ஆகையால் அடியேனும்கூடவருகிறேனென்றுசொன்னான். அந்தவார்த்தையைக் கேட்டு, ஸ்ரீராமர் சொல்லுகிறார், நீ-என்பிராணன், உன்னுடையதம்பி லட்சுமணன், இந்தப்பெண் உனக்குமதனி, நாங்கள் இதுவரைக்கும் நால்வராக இருந்தோம் இன்றுமுதல் உன்னோடு ஐந்துபேரானோம், ராச்சியமெல்லாம் உனது, நீ சொல்லுகிறபடிக்கு நடக்கிறவன் நான், எதுவும் முன்னே பிரயாசைப்பட்டாலல்லவா! பின்னே சுகம் தெரியும். நானபிரிந்துபோகிறேனென்றுநீ விசேசப்படவேண்டிய காரணமென்ன! நான்தான் நீ உன்பேச்சைத் தட்டுகிறதில்லை, நான்வடக்கேதிரும்பிவருகிறபோது, உன்னிடத்திற்குவருகிறேன். அயோத்தியாபுரிகாரியத்துக்கு, உன்தம்பி இருக்கின்றான். இவ்விடத்து காரியத்துக்கு வேறொருத்தருமில்லையே! உன்னுடைய பந்துஜனங்களெல்லாம் என்பந்து ஜெனமல்லவா! இவர்களைப்பிரிந்து விசேசப் படலாமா! இதுமுதல் என்னுடைய பந்துஜெனங்களானபடியால் நீ இவ்விடத்திலே தானே இருந்து காத்து ரக்ஷித்துக்கொண்டிரு, இது உத்தமமான காரியமென்று ஸ்ரீராமர் சொல்ல, குகன் அவரது வார்த்தையைத் தள்ளமாட்டாமல், துயரத் தோடுகூடவே விடைபெற்றுக் கொண்டு திரும்பினான். அப்போது ஸ்ரீராமரும் - பிராட்டியும் - தம்பியும் - ஆரணியத்தைத்தொடர்ந்து நடந்தார்கள்.

## வனம்புகுதல்

புத்திரினர்கள் சேரும் வேசிகள் மனம்போலப்பசையற்றுவரண்டு இருக்கிற பூமி, ஸ்ரீராமன் வரவே, மழைபெய்ந்து குளிர்ந்திருக்கிற பூமிபோ லிருக்க, சூரியகிரணம் சந்திரனைப்போல குளிர்ச்சியைக்கொடுக்க, பட்டுப்போனமரங்களும் தளிர்கொண்டு விழுதுண்டாக, மேகங்களும் மழைத் தாரைகளைத் துளிக்க, புஷ்ப வாசனையோடு சிறுகாற்றுகள் வீச, மயில்கள் நடனம் செய்கிற ஆரணியத்தில் நடந்தார்கள். ஸ்ரீராமன் சீதையைப்பார்த்து, வாசனைபொருந்திய அளக பாரத்தையும், மயில் போல் சாயலையுமுடைய பெண்ணே! இந்திரகோபங்கள் கும்பல்கும்பலாய்க்கூடி இருக்கிறதும் கொன்றைப்புஷ்பங்கள் நெருங்கி குவிந்திருக்கிறதும், பொன்போலவும் காசுகளத்திலைங்கள் போலவு மிருக்கிறதைப் பாரும். மயில்களெல்லாம் தோகைகளை விரித்துக் கொண்டு நடனம்பண்ணுகின்றது அதுகளுடைய அனேக கண்களாலேயும் உன்னுடைய அழகைப் பார்க்கிறதற்கு வந்ததுபோலவு இருக்கின்றது பாரும். வேல்போலக் கண்களையுடைய சீதா! உன்னுடைய சாயலையும் கண்களையும் பார்த்துத் தன்னினமென் றெண்ணி, மயில்களும் மான்களும்சமீபத்திலே வருகின்றதைப் பாரும். ஒரு ஆண்மயில், வாசனையை உடைய புஷ்பமரத்தடியிலே படுத்திருந்து, அந்தவாசனையுடன்வர, அந்தப் பெண்மயிலைக்கண்டு புதுவாசனை வருவானேனென்று நினைக்கிக் கோபித்துக்கொண்டு திரிகிறதைப்பாரும். அருந்ததிக்குச் சமான மானவளே! அமிர்தத்திலும் இனிமையான பெண்ணே! காந்தள்புஷ்பத்தின்பேரில் கிளிஏறிக் கோதிக்கொண்டிருக்கிறது உன்கையிலே கிளிவைத்துக்கொண் டிருக்கிறாப்போ லிருக்கிறதைப்பாரும். சித்திரக்காரர் கையினலே எழுதுகிறதற் கருமையான சுந்தரத்தையுடைய சீதா! ஒருமயில் காந்தள்புஷ்பத்தின் மொக்கைக்கண்டு, பாம்



பென்றுஎண்ணி அதைக்கண்டிருக்கு பெண்மயில் பரியாசமாக நகைக்கின்றதைப்பாரும். சிங்கக்குட்டியும் யானைக்குட்டியும் இந்த யாகவர்வீட்டுக் குழந்தைகளும் கூடிவிளையாடுகிறதைப்பாரும். அகில்வாசனை பொருந்திய அளகபாரத்தை உடைய பெண்ணே! புஷ்பித்திருக்கிற கொம்புகள், நதிகளிலே அலையினாலே தோய்ந்து தோய்ந்து முழுகுகிற ஸ்திரீகள்போல் இருக்கின்றதைப் பாரும். வில்லைப்போல புருவங்களை உடைய பெண்ணே! கோங்குபுஷ்பத்தின்மேலே வண்டுகள் நித்திரைபண்ணுகிறது, பொற்றட்டிலே நீலரத்தினம் பதித்திருக்கிறதுபோல் இருக்கிறதைப்பாருமென்று இப்படியாக அந்த ஆரணியங்களிலே இருக்கிற சிங்காரங்களை சீதைக்குக் காட்டி விளையாடிக்கொண்டு நடந்தார். அப்போது சாயங்காலமாயிற்று. அவ்விடத்தில் பாரத்துவாசமுனி இவர்வருகிற சமாசாரம்கேட்டு எதிர்கொண்டு அழைத்துப்போகிற நிமித்தம் வந்தார். அவருடைய குண்டிகையும் தண்டும் சடையும் மான்தோலும் மரவுரியும் சரீரமெல்லாம் ரோமமும் கல்லாடத்தையும் ஒருக்கும் வேதபாராயணம் செய்கிற நாவையும் உடையவர். அவர் அக்கினிதேவனுடைய புத்திரன். சகலஜீவனையும் தன்னுயிரைப்போல எண்ணி அருளும் கிருபையை உடையவர். அவர்வரவே, ஸ்ரீராமன் அவரைக்கண்டு புஷ்பங்களினாலே அருச்சனைசெய்து சேவித்துக்கொண்டார். அந்தமகாமுனிஸ்வரனும் அதிக அன்புடனே இவரைத்தழுவிக்கொண்டு, அப்பா! நீ இந்த ரூபத்தோடு வரக்காணப்பெற்றேனென்று மனம்நொந்து, கண்ணீர் பெருகப்பார்த்து, நீ இராஜ்ஜியத்தி லிருந்துகொண்டு ராஜரீகம் பண்ணிக்கொண்டிராமல், இப்படி தம்பியுடனே வரவேண்டிய காரணமென்னவென்று கேட்க, ஸ்ரீராமர் நடந்தசெய்தி எல்லாம்சொல்ல அதுகேட்டு விதிகாரணத்துக்கு என்னசெய்யலாமென்று விசேசித்து, பூமிதேவி பாக்கியம் பண்ணினவ ளல்லவென்று சொல்லி, என்சினேகிதான தசரதமகாராஜன் உன்னை இப்படி ஆரணியத்துக்கு அனுப்பி விட்டு எப்படி ஜீவனுடனிருக்கிறானென்று சொன்னார். அதற்கு ஸ்ரீராமர், அவர் செய்த புண்ணிய பாவத்தால்ருதக்கதாய் சுகதுக்கமுண்டாகுமே அல்லாமல்வேறில்லையே! தாங்கள் அதிற்குக்கிலேசிக்கவேண்டியதென்னவென்று சொல்ல, அவர்மிகுந்த சந்தோஷத்துடனே மார்பிலே அணைத்துக்கொண்டு, ஸ்ரீராமனைத் தம்முடைய பன்னசாலைக்கு அழைத்துக்கொண்டுபோனார். அவ்விடத்தில் காய் கனி முதலியது கொடுத்து, தன்பிள்ளைகள் வந்திருக்கிற சந்தோஷம்போல மகிழ்ச்சியாயிருந்தார். ஸ்ரீராமனும் அப்படியே சந்தோஷமா இருந்தார். பாரத்துவாசர் ஸ்ரீராமனைப்பார்த்து ஐயா, இவ்விடத்திலேதானே எங்களுடனே கூட இருந்து, காய் - கனி - கிழங்குகளை சாப்பிட்டுக்கொண்டு தபம்செய்துகொண்டிருக்கலாம், இவ்விடத்திலே கங்கையுடனேகூட யமுனையும் சரஸ்வதியும்சங்கமமாகுகிற இடமானபடியினாலே ஸ்ரீமந்நாராயணன்வாசமா இருக்கிறார் என்னைப்போ லொத்தவர்களுக்குமடைக்கிறது அருமையாயிருக்கிற இடம் இது, ஆகையால், இவ்விடத்திலேதானே வாசம்செய்துகொண்டிருமென்று பாரத்துவாசர் மிகுந்த அன்புடனே சொல்ல, ஸ்ரீராமன் தாங்கள் சொல்லுகிறது உத்தமமே, ஆனால் அயோத்தியாபுரி இவ்விடத்திற்குச்சமீபமானபடியால், ஜனங்கள்வந்து மிகவும்வருத்துவார்களென்று சொல்ல, அதுவும் உள்ளதுதான். இவ்விடத்திற்குப் பத்துயோஜனைதூரம் தெற்கேபோனால் சித்திரகூடபர்வதம் இருக்கின்றது, அதில்வாசம்செய்ய யோக்கியமானபடியால் அவ்விடத்திலே போய் சேருங்களென்று விடைகொடுக்க, ஸ்ரீராமன் சேவித்துக் கொண்டு, அப்பால் நடந்து காளிந்தி நதியைக்கண்டார். அப்போது அந்திநியமனவேளை ஆயிற்று, அந்நதியிலே ஸ்நானம்செய்து காய்-கனி கிழங்குகள் சாப்பிட்டு ஜலபானம்பண்ணி, இந்தநதியைத் தாண்டுகிறது எப்படியென்று ஸ்ரீராமன் யோசனைசெய்ய, அப்போது லக்ஷ்மணர்மூங்கில்களைவெட்டிமாலைக்கொடியினாலே தெப்பம்கட்டினார். அதிலே ஸ்ரீராமனும் சீதையும் எழுந்தருளி இருக்கத், தம்முடைய இரண்டு கரங்களினால் அக்கரைசேர்த்தினார். இவருடைய தோளாகிய மந்தரகிரி அச்சலத்தில் திரியவே, அது மேல் சமுத்திரத்தில் எதிர்த்துப்பாய்ந்தது. இப்படியாக அக்கரையே போய்சேர்ந்து நடக்கிறபோது, கருவர்க்கமுதலிய யாவரும் வெந்து-தீய்ந்து - படுதூரணமாயிருக்கிறதாயும் நினைக்கும் நெஞ்சையும் சுடும்படியானதாயும் இருக்கிற ஒருபாலை நிலத்தைக் கண்டார். இதில் ஜானகி நடக்கிறது பிரயாசை என்று ராகவனினைக்க, சூரியன் சந்திரனைப்போலக் குளிர்ச்சியைக் கொடுத்தான். பட்டுபோன மரங்களும்தளிர்விட்டது. காட்டாக்கினி சீதளத்தை உடைய தாமரைக்காடுகள்போலக் குளிர்ந்திருந்தது. வறுத்து விளைத்தவிளைகள்போல இருக்கிற மணியாம் பருக்கைகள் புஷ்பங்கள்போலக் குழைந்து குளிர்ந்திருந்தன. அறுந்து உலர்ந்துபோன கொடிகளெல்லாம் வேருன்றி தளிர்த்தது. பாம்பினுடைய விஷங்களும் அமிர்தங்கள்போலாயிற்று மேகங்கள் முழங்கி மழைத்துளிகளை விட்டன. மகாக்ரூரமானவேடரும் மகாரிஷிகள்போல சகலஜீவனிடத்திலும் கிருபையானார்கள் சகலஜீவராசிகளும் பசிருசிலாவதில்லாமல் சந்தோஷத்திலேயே இருந்தன. புலியினுடைய முலைகளை மான்குட்டிகளுண்டது. புருஷனைப்பிரிந்த ஸ்திரீயினுடைய மனம்போலப்புழுங்கி-வெந்து-சொறிந்துக்கொண்டிருந்த அந்த ஆரணியமானது, புருஷன்வந்தால் எப்படி குளிர்ந்திருக்குமோ அப்படிபோல குளிர்ச்சியை அடைந்திருந்தது. இவ்வித பாலைநிலத்தோடும் கூடிய ஆரணியத்தைத்தாண்டி, நடந்து மகா உயரமானச் சித்திரகூடப்பர்வதத்தைக் கண்டார்கள்.

## சித்திரகூடம்.

தேவர்களுக்கும் நமக்கும் ஒத்து ஒருவழியாகின்ற சகஸ்திரநாமத்தை உடைய ஸ்ரீராமன், அந்த சித்திரகூடப்பர்வதத்தினுடைய அழகெல்லாம் ஜானகிக்குத் தெரி

விக்கிறார். வாளைப்போலவும் வேலைப்போலவும் கண்களை உடைத்தாகிய ஓ! சீதா! இந்தப்பர்வதத்தின்மேலிருக்கிற யானையும் - அதற்குச் சமீபத்தில்திரிகிற மேகமும் வேற்றுமை தெரியாம லிருக்கிறதைப்பாரும். வரையாடுகள் குதிக்கிறபோது அதின்பேரில் மரகதக் கல்லினுடைய காந்திப்பிரகாசிக்க, அதுகள் பச்சைக்குதிரைகள்போலத்தோன்றுகின்றதைப்பாரும். மலைப்பாம்பின் தோல்கள் அயோத்தியாபுரி பட்டணத்துக் கொடிகள்போல அங்கங்கே தொங்குகிறதையும் கவரிமான் மயிர், அருவித்தண்ணீர்க ளோடுகிறதுபோலக் கிடக்கிறதையும், மூங்கிலில் கிடந்தமுத்துகள், சிங்கம் கொன்றுபோட்ட யானையினுடைய ரத்தத்திலேதோய்ந்துகிடக்கிறது, ஸ்திரீகளுடைய மார்பின் குங்குமக்குழம்பிலே தோய்ந்திருக்கிற முத்துமாலைபோ லிருக்கிறதையும், அருவிநீர் வருகிறது சிவனுடைய ஜடாபாரத்தில் கங்காஜலம் வருகிறதுபோல இருக்கிறதையும்பாரும், பெண்யானைகளை வருந்தாமல். மதயானைகள் துதிக்கையினால் தூக்கிக்கொண்டிருக்கிறதையும் சந்தனச்சோலை நெருக்கத்திலே சந்திரன் நுழைந்துபோகிறதையும்-மதயானைகள் தழை ஒடித்து ஈக்களை ஓட்டிவிட்டுத் தேனிருலைப் பிடுங்கிக் கர்ப்பமா யிருக்கிறபெண்யானைக்குக் கொடுக்கிறதையும்-மலைத்தேனுகள்விழுந்து குறவர் கிழங்குதோண்டின பள்ளங்களி லெல்லாம் நிறைந்துகிடக்கிறதையும் பெண்குரங்குகள் அருவித்தண்ணீரை வாரி இறைக்கமந்திக்குரங்குகள் மேகத்துத் தண்ணீரைபதிலுக்கு உதிர்க்கிறதையும்-மாணிக்கப்பாறைகள் சூரியனைப்போலப் பிரகாசிக்கிறதையும் - தினைப்புனங்களிலே வேடுவஸ்திரீகள்கவுண்கல் வைத்தெறிகிறமாணிக்கங்கள் நக்ஷத்திரங்கள்போல விழுகிறதையும் - காறுகளிலே- ரத்தினங்கள் நக்ஷத்திரங்கள் போலப் பிரகாசிக்கிறதையும்- ரிஷியீஸ்வராளுடைய ஓமப்புகைகள் பர்வதத்தினுடையசிகரங்கள்போல் எழும்பிப் பிரகாசிக்கிறதையும்விஞ்சையாஸ்திரீகளுடைய செம்பஞ்சு தோய்ந்திருக்கிற காலடிகள் மாணிக்கப்பாறையில் பிரகாசமறைந்து மர்கதப்பாறையில் பிரகாசிக்கிறதையும் தேவலோகத்துக் கன்னிகைகள் கழித்துப்போட்ட பாரிஜாதமாலைகள் அருவிபோலக் கிடக்கிறதையும்-தினைப்புனம் காவல் காக்கிறவர்கள் வைத்திருக்கிற சிறுபறைகளை மந்திகள் எடுத்து அடித்து முழங்குகிறதையும்-குறத்திகள் சந்திரப்பிறையைக் கையினாலெட்டி இழுத்து நடுவே இருக்கிற களங்கத்தைத் துடைக்கிறதையும் - குருக்கத்திப்புதரில் அரம்பைகள் படுத்திருந்த புஷ்பமெத்தைகளையும் - குறத்திகள் பாடுகிறபாடலைக்கேட்டு அசுணங்கள் ஓடிவருகிறதையும்-சுனைகளிலிருக்கிற நண்டுகள் தேவரம்பைகள்வந்து ஸ்நானம்பண்ணுகிறபடியினாலே அதுவும் பாரிஜாதபுஷ்ப வாசனையாய் பரிமளிக்கிறதையும்-சூரியன் அந்தப்பர்வதத்துக்குக் கிரீடம்போலப் பிரகாசிக்கிறதையும்-மாணிக்கப்பாறையிலே மூங்கில்முத்துகள் செம்மானத்திலிருக்கிற நக்ஷத்திரங்கள்போலக் கிடக்கிறதையும் புஷ்பித்த முருக்கமரங்கள் விடுகள் பத்திக்கொண்டதுபோலப் பிரகாசிக்கிறதையும் -- காட்டானைகள் அருவித் தண்ணீர்களைத் தும்பிக்கையினாலே கொண்டுவந்து. ரிஷிகளுடைய கமண்டலத்திலே சொரிகிறதையும் மகாவிருதாப்பியமாய் நரைதிரையினாலே கண்கள்கூட நெருங்கித் தெரியாமலிருக்கிற ரிஷியீஸ்வராளுக்கு மந்திகள் வாலை அவர்கள் கையிலேகொடுத்து வழிகாட்டிக்கொண்டு போகிறதையும், கிளிகள் தினைக்கதிர்களையும், மூங்கிலரிசிகளையும், ரிஷிகளுடைய பன்னசாலைகளில்கொண்டுபோய்ப் போடுகிறதையும், மலைப்பாம்புகள் கற்றறிந்தவர்கள்போல அடங்கி மகாரிஷிகளுக்கு நடக்கிறதற்குப் படிக்கல்களாகக் கிடக்கிறதையும் தபம்செய்கிறவர்களை அழைத்துப்போகிறதற்குத் தெய்வவிமானங்கள் வருகிறதையும், போகிறதையும், பாருமென்று இவ்விதவேடிக்கை அலங்காரங்கள் அடங்கிய அந்தச்சித்திர கூடத்தின் பெருமைகளெல்லாம் சீதாபிராட்டியாருக்குச் சந்தோஷத்துடனே ஸ்ரீராமன் காண்பித்து, அவ்விடத்திலிருக்கிற ரிஷிகளெதிரேவா, சேவித்துக்கொண்டு அவர்கள் விருந்துசெய்ய சந்தோஷத்துடனேசக்கிரவர்த்தித்திருமகனுன ஸ்ரீராமன்காய்-கனி-கிழங்கு-சாப்பிட்டுக்கொண்டு சம்பிரமமாக இருந்தார்.

சூரியன் (ஸ்ரீமகாவிஷ்ணு காலநேமிபேரில் பிரயோகம்பண்ணின சக்கரம்போல) அஸ்தமானகிரியில் பிறவேசித்தார். அந்தசக்கரம் போய்ப்படவே காலநேமியினுடைய சரீரத்திலிருந்து ரத்தப்பிரவாகம் வந்ததுபோல எங்கும் செம்மானம்பரவிற்று. அவனுடையகோரப்பல் உதிர்ந்து பிரகாசித்ததுபோலப் பாலசந்திரோதய மாயிற்று. தாமரைப்புஷ்பங்களெல்லாம் குவிந்தது. அல்லிப்புஷ்பங்கள் மலர்ந்தன. மந்திகளும், கடுவன்களும், மரங்களைநோக்கி நடந்தன. மதயானைகளும், பிடிகளும், தடாகங்களைநோக்கி நடந்தன. பக்ஷிகளும், தன்தன்கூடு நாடிப் பறந்தன ஸ்ரீராமர் அப்போது சந்தியா வந்தனை நியமமுடித்துக்கொண்டு சீதையுடனேகூட லக்ஷ்மணர் கட்டிவைத்த பன்னசாலையிலே பிறவேசித்தார். அந்த பன்னசாலை மூங்கில்களைத் தறித்து நிறுத்தி முகடுசேர்த்து தேக்கிலையினாலே மேலேமூடி, நாணற் புல்களாலே கூரை சேர்த்து, மூங்கில்பத்தைகளினாலே சுவர் செய்து, அதின் பேரிலே மண்பூசி தண்ணீர்கொண்டு நித்தி அதிலேவேறே ஸ்ரீராமருக்கும் சீதைக்கும் பள்ளி அறை உண்டாக்கி, குங்குமச்சேற்றினாலெமெழுகி, ரத்தினமும் பொற்சன்னமுமேலே அப்பி மயில்இறகினாலே விதானங்கட்டி. மூங்கிலாலே தூங்குமஞ்ச சங்கிலிகள் செய்து, புஷ்பமெத்தைகளுண்டாக்கி இருக்கிற அந்தபன்னசாலையைப்பார்த்து, ஸ்ரீராமன்சந்தோஷித்து சீதையுடனேகூட கிரகப்பிரவேசமாய் (மாய்கைநீங்கி இருக்கிற சிந்தையும், திருப்பாற்கடலும், வைகுந்தமும்போல அமைத்திருக்கிற அந்த பன்னசாலையில்) அதிகசந்தோஷத்தோடு இருந்து, ஆரணியத்திலே சீதைபாதமும் நடந்தது, தம்பி கையும் பன்னசாலைசெய்தது, ஒன்றுமில்லாதவர்களுக்கு என்னதான் இசையாதென்று நினைத்து தம்பி! இது எப்போது கற்றுக்கொண்டா என்று



சொல்லிக் கண்களிலே ஜலம்பெருக, அப்பா! நான் பிதாவாக்கியம் தள்ளாமல் பரிபாலனம் செய்தேனென்று கீர்த்தி பூண்டுக்கொண்டேன் பிரயாசத்தை உனக்குக் கொடுத்தேனென்றுசொல்ல, லக்ஷ்மணர் நொந்தமனதுடனே தமையனார் திருமுகத்தைப்பார்த்தார். அப்படிக்கு நோக்கிய தம்பியைப்பார்த்து பின்னையும் ஸ்ரீராமர் சொல்லுகிறார். அப்பா! பிரயாசத்துக்கு இப்போதான் முளைகாண்கின்றது. ஆகிலும் பாக்கியத்துக்கு ஒரு கரையுண்டு, இதற்கு ஒருநாளும் கெடுதிவருகிற தில்லை, இதினாலுண்டாகிற இன்பமும், கீர்த்தியும் ஆற்றுமலாபமல்லவா என்று தம்பியைத்தேற்றி தேவர்க்கள் நமஸ்காரம்செய்ய அந்தச் சித்திரகூடப் பர்வதத்திலே எழுந்தருளி யிருந்தார்.

## பள்ளி அடைதல்.

அயோத்தியாபுரி பட்டணத்தில் இருந்து வசிஷ்ட மகாமுனி ஆக்கியாபித்தபடிக்கு தூதுவர்கள் ராத்திரி பகலாய்நடந்து கேகயதேசம்போய்சேர்ந்து பரதரிருக்கிற அரண்மனைவாயலில்நின்று வாசற்காப்பாருடனே தாங்கள் வந்தசெய்திசொல்லி அனுப்ப, அவர்கள் பரதரிடத்தில்போய் ஸ்வாமி! உங்கள் தகப்பனாரிடத்திலிருந்து தூதர்வந்திருக்கிறார்க ளென்றுசொல்ல, அவ்வார்த்தையைப் பரதர்கேட்டுமிகுந்த ஆசையுடனே சந்தோஷமாயிங்குவாசசொல்லென்று ஆக்கியாபிக்க க்ஷணமே தூதர்கள்வந்து சேவித்து நின்றார்கள். அவர்களைப் பார்த்து ஐயா! சுகமா இருக்கிறாரா! என்று பரதர்கேட்க, சுகமா இருக்கிறாரென்றுசொன்னார்கள். அதுகேட்டு சந்தோஷமாய் தம்பியுடனேகூட என்நாயகனாகிய ஸ்ரீராமன் சுகமா இருக்கிறாரா என்றுகேட்க, சுகமாயிருக்கிறாரென்று தூதர்கள்சொல்லவே திக்குநோக்கி தீர்க்கதெண்டம் சமர்ப்பித்து மற்றவர்களை எல்லாம் வகைவகையாய் விசாரித்து சந்தோஷித்தார். கொண்டுவந்த திருமுகத்தை எதிரேவைத்தார்கள். அந்த திருமுகத்துக்கு நமஸ்காரம்செய்து எடுத்து சிரசிலே வைத்துக்கொண்டு கட்டுகளைப்பிரித்து, முடக்குகளை நிமிர்த்துப்பார்த்துக்கொண்டு வந்த தூதர்களுக்கு அனேக திரவியம்கொடுத்து சந்தோஷ நகைப்புண்டாய் சரீர புளகாங்கிதமாய் மிகுந்த ஆசையுடனே அவ்விடத்திலே காலதாமசம் செய்யாமல் தமயனைப் பார்க்கவேணுமென்கிற அபேக்ஷையுடனே பிரயாணபேரிகை அடிக்கச்சொல்லி ஆக்கியாபித்து கேகயதேசாதிபதியான பாட்டனரைச் சேவித்துவிடைபெற்றுக்கொண்டு தம்பியுடனேகூட தேரேறினார். அனேகம்யானை - குதிரை - தேர் - பதாதிகள் - ஆயுதபாணிகளோடு நெருங்கிவர, பேரிகை சமுத்திர இரைச்சல்போல சத்திக்க, கொடிகள் - குடைகள் - ஆலவட்டங்கள் - ஆகாயத்திலே நெருங்கிவர, பிடியானைகள் பேரிலே அனேகம் ஸ்திரீகளேறிவர, பண்டிகளில் அனேகர் ஏறிவர, அனேக சம்பிரமத்துடனே ஏழுநாள் வழியிலேகங்கி கோசலதேசம் வந்துசேர்ந்தார். அந்ததேசத்திலும் கிராமங்களிலும், கழனிகளில் ஏர்கட்டி உழுவாரில்லை, பயிருக்கும் ஜலம் கட்டுவாரில்லை, பழுத்தநெற்கள் நீர் வற்றிப்போயிற்று, எங்கும் லக்ஷ்மீகாம்வாங்கி அந்தகாரப்பட்டு அறுப்பறுக்கிறசமையத்தில் அறுப்பறுக்கிறவர்களில்லாமல் கதிர்களுடன் முளைத்துப்போனதும், புஷ்பங்கள் பரிப்பாரில்லாமல் உதிர்ந்துகிடக்கிறதும் பள்ளஸ்திரீகள் ஆடல்பாடல்களில்லாம லோய்ந்துகிடக்கிறதும், ஜலம் நிரம்பிய ஏரியின் கீழ் இருக்கிற பயிர்களுக்குத் தண்ணீர்விடுவா ரில்லாததினாலே லோபிகள் வீட்டுவாசலில் காத்திருக்கிற தரித்திரர்போல் உலர்ந்துகிடக்கிறதும், கிளிகள் பேசாமலிருக்கிறதும், ஒருத்தரிடத்திற் கொருத்தர் போக்குவருத்தில்லாமலிருக்கிறதும், பேரிகை மத்தளமுழக்கங்களில்லாமல் தெருவுகள் பாழாய்க்கிடக்கிறதும், உப்பரிகைகள்கவர்ன்னகலசமில்லாமலும், யாழ் - வீணை - பாடல் - இல்லாமலிருக்கிறதும், சகலருக்கும் முகத்திலே நகைப்பில்லாம லிருக்கிறதும், உப்பரிகைகளில் அகிற்புகைகளில்லாமலிருக்கிறதும், ஸ்திரீஜாதிகள் அளகபாரங்களிலே புஷ்பமில்லாமலிருக்கிறதும், இப்படியாக அந்ததேசம் பிராணன்போய்விட்ட சரீரம்போல அழுங்கலமாக இருக்கிறதைப் பரதன்கண்டு, கிலேசித்து நடந்த சமாசார மொன்றும் தெரியாமல் திகைத்து நாம் என்னமோ பொல்லாதவார்த்தைகேட்க இருக்குறோம் என்று பெருமூச்சுவிட்டு தம்முடைய தேரின் வேகத்துக்குமுன் மனது ஓட அதிகவேகமாய் நடக்கிறபோது, அயோத்தியாபுரி தெரிந்தது அந்தப்பட்டணத்தினுடைய உப்பரிகைகளிலே கொடிகளுமில்லாமல், முரசின் சத்தங்களும் கேளாமல் வித்துவஜனங்கள் பிராமணாள்-யானை-குதிரை-தேர்-முதலானவெகுமானங்கள் வாங்கிக்கொண்டுகோபுரவாயலுக்கு வெளியே புறப்படுகிறவர்களைக்காணமல் யாழ்வீணைகள் எங்கும் சத்தியாமலிருக்கிறதும் ரதங்கள் - யானை - குதிரை - சிவிகை - முதலான வாகனங்களேறி வருவாருமில்லாமல் வெள்ளம் அற்ற ஆறுபோல வீதிகள் பாழடைந்திருக்கிற தங்கள் பட்டணத்தையும் பார்த்து, சத்துருக்கனைநோக்கி தம்பி! ராஜாக்களிருக்கிறபட்டணம் இப்படி இருக்குமா! ஸ்ரீமகாவிஷ்ணுவும் மகாலக்ஷ்மியும் பிரிந்திருக்கிற திருப்பாற்கடல்போலக் காண்கின்றதென்றுசொல்ல, சத்துருக்கனெழுந்து சேவித்துக்கொண்டு ஸ்வாமி! என்னமோ ஒருவிதத்தில் மகாலக்ஷ்மி பட்டணத்தைவிட்டுப் போயிருக்கிறதாகத் தோன்றுகின்றதென்றுசொன்னார். அந்த சமையத்தில ரதமானது கோட்டைவாயலில் வந்துசேர்ந்தது. சக்கிரவர்த்தி குமாரனான பரதன் அதிசீக்கிரமா இறங்கிவிட்டு தகப்பனார் இருக்கிற அரண்மனைக்குப்போய் அவரைக்காணாமல் மனதில் ஐயமாய் நினைத்து கிலேசத்துடனே கௌசலையின் அரண்மனையைநோக்கிநடந்தார். அப்போது கைகேசிதாதியை அனுப்ப, அவள்வந்து ஸ்வாமி? அம்மா! அழைக்கிறார்கள் என்றுசொன்னாள். அப்படியேவந்து தாயாரைச்சேவிக்க, மனது சந்தோஷத்துடனே மகனைத்தழுவிக்கொண்டு அப்பா? எங்கள் தாய் - தகப்பன் - தமக்கை - தங்கை - சகலரும் சுகமா இருக்

கிருர்களா என்று கேட்டாள். யாவரும் சுகமே இருக்கி
ருர்கள் என்றுசொல்லி தகப்பனைச் சேவித்துக்கொ
ள்ளவேணுமென்று மிகவும் அபேக்ஷயாக வந்தேன்
ஆகையால் அவர் எங்கே இருக்கிருர் சொல்லவேணு
மென்று தொழுதான், அதுகேட்டு கைகேசி இலேசமி
ல்லாத மனதுடனே, தானவர்களை ஜெயித்த உங்கள் பி
தா தேவர்கள் நமஸ்காரஞ்செய்ய தேவலோகம்போய்
ச்சேர்ந்தார் நீ அங்கலாய்க்க வேண்டாமென்று சொன்
னுள். அந்த வார்த்தைகேட்கவே, இடியினுல் முறிந்து
விழுந்த மராமரம்போல பூமியில்விழுந்து சுவாசமில்
லாமல் மூர்ச்சைபோய் வாய்குளற கண்களிலே தண்ணீர்
பொழியத் தாயைப்பார்த்து ஆ! நெருப்பு சுவாலையைக்
காதில்வைத்ததுபோல இந்தவார்த்தைசொன்னீர். நீர்
அல்லாமல் பின்னெருவர் இப்படிசொல்லுகிறதற்கு ம
னதிலும் நினைக்கமாட்டார்களென்றுசொல்லி ஏங்கி இ
ரங்கி மறுபடியும் பூமியில்விழுந்து பெருமூச்சுவிட்டு ம
னமழிந்து அழுது ஸ்திரீகள்போல சொல்லிச் சொல்லி
ப் புலம்பத்தொடங்கினுர். ஐயா! தருமத்தை வேரறுத்
து அருளைக்கொன்று பாக்கியலக்ஷ்மியினுடைய அழ
கை அழித்து இறந்துபோய்விட்டீரா! இப்படி இறந்
து போனுல் நீதிதப்பிப் போகாதா! பகையாளிகளைச்
ஜெயித்து ரிஷிஸ்வரர்கள் பிராமணுள் முதலானபேர்க
ளை ஆதாரணைசெய்துகொண்டு உங்கள் பெரியவர்களைப்
போல ராஜ்ஜியபாரம் செய்துக்கொண்டுவந்த நீர் தபசு
பண்ணத்தான்போய்விட்டீரோ! உங்கள் பெரியவர்களு
டைய கீர்த்தியைப்பார்க்கிலும் அதிகமான கீர்த்தியுண்
டாக திரிநேத்திரதானுன் சிவனுடைய வில்லை ஒடித்த
உமது குமாரனைவிட்டு எப்படிபிரிந்துபோனீர்! இவட
த்திலே ராஜாக்களும் வித்துவான்களும் மிகவும் சினே
கிதமாயிருந்த உமக்கு அவடத்திலேயும் சினேகிதர்களு
ண்டோ! அல்லது தேவலோகம் ஆளவேணுமென்று
ஆசைகொண்டு போனீரோ! ராஜாதிராஜனே! முன்
போல தேவர்கள்வந்து தங்கள் குறைகளைச் சொல்லி
அழைத்துக்கொண்டு போனுர்களோ! சம்பராசுரனைப்
போல அசுரர்கள் இன்னம் தேவலோகத்தில் இருக்கினு
ர்களோ! அவர்கள்பேரிலே யுத்தியத்துக்குப் போனீ
ரோ! யாகாதிகள் பண்ணியிருக்கிறவரல்லவே, அவ
டத்திலேதானே சம்மானிருக்கலாமா! அஸ்வமேதயா
முதலான்துகள்செய்கிறதற்காகிலும்வரலாகாதா! ஸ்ரீ
மகாவிஷ்ணு சக்கரத்தைக் கொடுத்துவிட்டு வெறுங்கை
யுடன் இருக்கிருரென்று நினைத்து அவர் சக்கரத்தை அ
வருக்குக் கொடுத்து விடுவோமென்று போனீரோ! ஐ
யா! தபம் செய்து பெற்ற பிள்ளைக்குப் பட்டாபிஷே
கம் செய்து கண்குளிரப் பார்க்கிற தற்கு உமக்குக் கி
டையாமற் போச்சு தல்லவா! என்று இப்படியாகச்
சொல்லிச் சொல்லி, மிகவும் மனம் உருகி கண்ணிலே
ஊற்றுனற்றாய் ஜலம்வர அழுதார். அப்படி அழுகிறபர
தனை கைகேசி தேற்றகொஞ்சம் தேறினவரா எழுந்திரு
ந்து, எனக்குத் தாயும் - தகப்பனும் - நாயகனும் - தம
யனும் ஸ்ரீராமனே ஆகையால் அவரிடத்திலே போய்,

அவருடைய பாதாரவிந்தத்திலே விழுந்து சேவித்துக்
கொண்டா லல்லது என் துயரம்தீரா தென்று நடக்க,
கைகேசி அப்பா! அவன்பெண்சாதி யுடனேயும் தம்பி
யுடனேயும் ஆரணியத்துக்குப் போனு னென்று சொல்
ல, அவ்வார்த்தைச் செவியில்விழவே, நெருப்பைவிழு
ங்கினவன்போல வெந்து, இன்னம் யாதுகேட்க இருக்
கிருேமோ! இதைப் பார்க்கிலும் என்ன துன்பம்தான்
இருக்கப் போகு தென்று சோர்ந்து, ஏங்கி, விம்மிக்
கொண்டு, அவர் ஆரணியத்துக்குப் போனது பொ
ல்லாத காரியங்கள் செய்து போனுரா! அல்லது
தெய்விகமாய் நடந்ததா! விதியினுல்வந்ததா! ஸ்ரீராம
ன் பொல்லாதகாரியம் செய்கிறவ ரல்லவே! ஆனுலும்
தகப்பனுர் விழுந்து போன பிறகு ஆரணி யத்துக்குப்
போனுரோ பிராணனுடன் இருக்கச்சேதானே போனு
ரோ சொல்லும் அம்மாவென்று பரதன்கேட்க, அப்ப
டிக்கு யாதொன்றினுலும்போக இல்லை, இராஜா சுகமா
இருக்கச்சேதானே ஆரணியத்துக்குப் போனுனென்று
கைகேசிசொன்னுள். அதற்குபரதன், குற்றமில்லாமலு
ம் கோபத்தினுல் ஒருவர் ஒன்று சொல்லாமலும், தெய்
வத்தினுல் ஒன்று நேரிடாமலும், பெற்ற தகப்பனிருக்க
ச்சே ஆரணியத்துக்குப் போகவேண்டியகாரிய மென்
ன! அது எனக்குத்தெரியச் சொல்ல வேணுமென்று
கேட்க, கைகேசி சொல்லுகிருள்: அப்பா! பூர்வத்திலே
எனக்கு இரண்டுவரம் கொடுக்கிறேமென்று ராஜாசொ
ல்லியிருந்தார். அதிலொன்று உனக்குப் பட்டாபிஷேகம்
செய்யவும் மற்றென்று அவர்மகன் ஆரணியத்துக்குப்
போகவும் பெற்றுக் கொண்டேன். அதுசகிக்காமல் ரா
ஜன் தன்பிராணனை விட்டுக்கொண்டாரென்றுசொல்ல.
கும்பிட்டபடி தலைமேலே வைத்திருந்த கரங்க ளாலே
காதுகளை மூடிக்கொண்டு புருவங்கள் துடிக்கவும் மயி
ர்த்துவாரங்கள் தோறும் நெருப்புப் பொறியும் புகையும்
பிறக்க அதரங்களைமடித்துகடித்துக்கொண்டு இரண்டுக
ரங்களினுலும் இடி விழுந்ததுபோல பூமியை அடித்து,
சமுத்திரத்தில் கப்பல் சுழலுகிறதுபோல இவருடைய
கோபத்துக்கு பயந்து மகமேருவும், பூமியும் சுழல,தே
வர்கள் அசுரர்கள் முதலானபேர்மாண்டுபோனவர்போ
ல அயர்ந்துசோர்ந்து சோர்ந்துபோக, அஷ்ட கஜத்தி
னுடைய மதத் துவாரங்கள் நின்றுபோக, சூரியனும்ந
டக்கிறகதிதிரும்ப, யமனும் பயந்துகண்களை மூடிக்கொ
ள்ள, இப்படியாக யிருந்த கோபாவேசத்துடனே அக்
கினிஹோத்திரம்போல கொதித்து, தாய்பொல்லாதவ
ளென்றெண்ணினுல், தமயனுர் கோபம் செய்வா ரென்
று பயந்துநின்று ஒருவார்த்தை சொல்லுகிருர். உன்னு
டைய வாய்மொழியினுலே ராஜாவும் மாண்டு, தமயனு
ம் ஆரணியத்துக்குப் போயிருக்க, அதைக் கேட்டு உன்
வாயைக்கிழிக்காமல் எப்போ சும்மா இருந்தேனே, அ
ப்போதே ராச்சியத்தை ஆசையுடன் ஆண்டதற்குச் ச
மானமே நீயும் இன்னம் சுகமா இருக்கிருய், நானும் எ
திரேதிற்கிறேன். ஒருகணத்தி லுன்னைக் கொன்றுப்போ
டுவேன், என்கொல்ல இல்லை எனில் என் தமயன் என்



பேரில்கோபம் பண்ணுவாரென்று பயந்திருக்கிறேனல்
லாமல், தாயாச்சதே என்றல்ல, ஆ! கொடும்பாவி!வஞ்
சகியான தாய்வார்த்தையைக்கேட்டுமகாகீர்த்தியுடனே
வருகிற குலத்தினுடைய சன்மார்க்கத்தை, பரதன் கெ
டுத்துப் போட்டா னென்கிற பழியைச் சம்பாதித்துக்
கொண்ட எனக்குக் கிரமமென்கிறதும் வேண்டுமா! ச
க்கியத்துக்கு மாண்டுபோகிறதற்கு ஒருராஜாவு மிருக்க
அவர்பேச்சைத் தள்ளலாகாதென்று ஒருசவுரியவந்தா
ஆரணியத்துக்குப் போனவரு மிருக்க, ராச்சியம் ஆளு
கிறதற்குப் பரதனும் இருக்கிருனென்கிற விசேஷமிரு
ராச்சியத்தி லுண்டானுல், அதைப்பார்க்கிலும் தருமவ
ழிவேறென்ன இருக்கின்றது. உன்னை மகத்தான பாக்கி
யத்துடனே விட்டிலே வைத்திருந்த ராஜாவை, வேர
றுத்து இந்தவரம் வாங்கின நீ, இன்ன மென் னென்ன
செய்வையோ, தெரியாதே! கொஞ்ச மாகிலும் உன்ம
னதிலே இலேசத்தைக்காணேமே! உன் புருஷன் பிரா
ணனைத்தின்று போட்டாயே, பாவி? நீ பேயுமல்ல, இ
ன்னம் ஜீவனுட னிருக்கின்றையே, சாக லாகாதா. ஒரு
நாளும் விலகாத பழியைக்கொடுத்தாய், மூலைகொடுத்து
வளர்த்ததாயேநீஇன்னம் எனக்கென்னகொடுப்பாயோ!
தெரியாதே! புருஷனை வாயினுலே ஜீவனுடனேதின்று
விட்டு தீராதபழியைச் சம்பாதித்துக்கொண்டு பாக்கிய
த்துடன் வாழ்கிறத்துக் காசைப்பட்டாயே! இந்தப்பிர
பஞ்சத்து ஜனங்களெல்லாம் தாயை இழந்த கன்றுபோ
ல தடுமாறி அழுகிறதைப்பார்த்தும் இன்னம் நீ பிராண
னுடன் இருக்கின்றையே! நாம் கொடுத்த வரத்துக்குத்
தப்புவரலாகாதென்று தகப்பனுர் இறந்துபோக அவரு
டைய குமாரன் அவர்பேச்சுத் தள்ளலாகாதென்று ஆர
ணியத்துக்குப்போக தாயார் உபாயத்தால் சம்பாதித்த
ராச்சியத்தை அவனேடே பிறந்தவன் ஆளுகிருனென்
கிற கீர்த்தி எனக்குக் கிடைக்கத்தக்கதா! தகப்பனுர் இ
றந்துபோவா ரென்கிறத்தையும் எண்ணுமல் இப்படிரா
ச்சியத்தைப் பறித்துக்கொள்ளுகிற உபாயத்துக்கு பரத
தன் கூட யோசனைதானென்றும் அவன் ஆளுவானென்
றும் எண்ணியல்லவா இந்த ராஜரீகத்துக்குக் கர்த்தனு
னவர் திரும்பாமற்போய்விட்டார். மகத்தான சாஸ்திர
ங்கள் ஓதி கற்றும் சாத்துவீககுணம் பிரசன்னமாக இரு
ந்தும் மகா உத்தமனுகவும் இருந்த உன்தமயன் மனதில்
இப்படி தம்பி அக்கிரமமானயோசனை ஏன் பண்ணினு
னென்று நினைத்தால் அது எனக்குப்போதாதா! என்
தாயார் எனக்குச் சம்பாதித்துக்கொடுத்த காரியத்தை
என்னசொல்லப்போகிறேன். இன்னம் பிராணனுடன்
இருக்கிறேன். என்னுடன்கூடப்பிறந்த தமயனை - இலை
யும் - காயும் - புசிக்கும்படி ஆரணியத்துக்கு அனுப்பி
நல்ல திவ்வியான்னங்களை அமிர்தத்துக்குச் சமானமாய்
சாப்பிட்டுக்கொண்டிருக்கிற நிமித்தியம் நின்றிருந்தால்
என்னைப்பெரியோர்கள் என்ன நினையார்கள். ஸ்ரீராமன்
ஆரணியத்துக்குப் போனுரென்றுகேட்கவே, தகப்பனு
ர் பிராணனைவிட்டார். விஷம்போலிருக்கிற இந்த மகா
பாவியைக் கொல்லாமல் நானும் சாகாமல் மிருந்தபழி

யைச் சம்பாதித்துக்கொண்டு அன்புள்ளவன்போல அ
ழுகின்றேன். ராச்சியத்து ஜெனங்களுக்கு இக்காரியம்
சம்மதியா திராது, நானே பிராணனை வைத்துக்கொண்
டு இந்தபழி பூண்டுக்கொள்ளமாட்டேன். இதுமாந்திர
மா! பட்டணத்திலே லக்ஷ்மி இரான் இப்படி இருக்க
நீ யாரோடுயோசனைசெய்து இவ்விதமாக வரம்வாங்கி
வேரோடே குடிகெட்டுப்போகும்படிக்கு உபாயம்பண்
ணினுய், என்தகப்பனை உன்வாயைக்கொண்டு கொன்ற
வன்யார்! நான்தான் அநுமாத்திரமா! ராச்சியத்துக்கு
அதிபதியானவனைக் காட்டிலே துரத்திவிட்டு ராச்சிய
ம் ஆளுகிறதற்கும் சம்மதித்திருந்தேன், உன்னிடத்தில்
தப்பென்ன, பழிதானென்ன இருக்கின்றது. இப்பழியை
என்றைக்காகிலும் தீர்த்துக்கொள்ளுகிறதற்கிடம் உண்
டா! ஆ! ஆ! இக்காரியம் பொன்னுட்டவரிலும் இன்
னுட்டவரிலும் யாராவது சம்பாதிப்பார்களா! வீண்பழி
பூண்டுக்கொண்டேன், உன்னுமல் விஷம் கொல்லாதெ
ன்கிறதை நினைத்தல்லவோ இன்னம் ஜீவனுடன் இருக்
கின்றேன். பாவியான உன் கும்பிவயிற்றிலிருந்துத்திரா
த பாதகத்தைச் சம்பாதித்துக்கொண்டேன். தருமசா
க்ஷியாய் மூன்றுலோகமும் அறிய நானே தபம் செய்யப்
போகிறேன். பெரியோர்கள்சொல்லத்தக்கினவார்த்தை
களெல்லாம் சொன்னேன். அவைகளை எல்லாம் நீ மற
ந்து இந்தப்படிசெய்தாய். இப்போது பிராணனைவிட்டு
க் கொள்வையேயாகில் உலகத்துக்கு நல்லவளா இருப்
பாய். அதுதான் நீ உலகத்திலே பிறந்ததற்கு லபிதம்.
இதுதவிர உனக்கு வேறுகதி இல்லை என்று பலவாறுக
ச்சொல்லி இந்தப்பாவியின் முகத்திலே முழித்துக்கொ
ண்டு எதிரே இருக்கமாட்டேனென்று திரும்பினுர்.

இந்த துயரம்தீர கௌசலையின் இடத்திற்குப்போய்
சேவித்துக்கொள்ளவேணுமென்று எழுந்திருந்துகௌ
சலையின் சமீபத்தில்போய் பூமிவெடிக்கும்படி விழுந்து
அவளுடைய பாதாரவிந்தத்தைத் தன்கரத்தினுல் பிடித்
துப்புலம்பி அழுதுக்கொண்டு அம்மா! எங்கள் தகப்ப
னுர் எங்கே இருக்கிருர், என்தமயன் எங்கே! நான் ஓடி
வந்தது இந்த துயரங்களைப் பார்க்கிறதற்காகவா! என்
சஞ்சலத்தைத் தீரும் அம்மா என்று தேவர்களும், அழு
துசோர, துயரத்துடன் அழுதுக்கொண்டுஜயாவினுடை
ய பாதத்தைக்காணேன். அவர் இராச்சியத்தை விட்டுப்
போகிறவரா! போகாமல் பிடித்து வைத்துக்கொண்டி
ருந்தீர்களா! என்னகுற்றம் செய்தீர்களென்று உடம்பி
ல புழுதியடைய பூமியில்புரண்டு சிந்தாக்கிராந்தனுய் இ
ந்தப்பாவிவயிற்றிலேபிறந்த நான் என்னசெய்யப்போகி
றேன். என்துயரம்தீர என்பிராணனை விட்டுக்கொள்ளு
கிறேன். நம்முடைய குலஸ்தர்கள் சூரியனைப்போல கீர்
த்திவகித்துவருகிற பாரம்பரியமானகுலத்தில் ஒருபரத
ன்தோன்றி பழி உண்டாயிற்றல்லவா! என்றும் இராச்
சியபாரம் செய்கிற இராஜன் தெய்வலோகம்போக, அ
வருடைய திருமகன் காட்டுக்குப்போக கண்ணிழந்து
உழலுகிற ஜீவனைப்போல இந்தராச்சியத்திலே நானு து
க்கத்துடன் இருக்கவேண்டுமென்று புலம்பி அழுகிற ப

ரதனுடைய துக்கத்தையும், அன்பையும், கௌசலைகண்டு இவனிடத்திலே கொஞ்சமாகிலும் அந்த நினைப்பைக்காணேனென்று அறிந்து ஒருவார்த்தை சொல்லுகிறாள். அப்பா! குழந்தாய்! கேகயராஜாவின் குமாரத்தி செய்தகாரியத்தை நீ அறியாயா! உன்மனதைப் பார்த்தால் யாதொன்றும் அறியாதவன்போல் இருக்கின்றதென்றுசொல்ல, அந்தவார்த்தை பரதன்கேட்டு அதிகமான துக்கத்துடனே கோபிற்சிக்கிய சிங்கம்போலகுமிறி விம்மி தருமதேவதையும் நடுங்கச் சத்தியமாகச் சிலவசனம்சொல்லுகிறான். அம்மா! இந்த சமாசாரம் நான் எவ்வளவேனும் அறியேன், அல்லது அறிந்து நடந்து இருப்பேனாகில் தருமம் தப்பி நடந்தவன் கிருபையில்லாத மனதையுடையவன், ஒருஸ்திரீயை அபகரித்தவன் சகலரையும் சீறிவைகிறவன், சகலருக்கும் இதம்செய்து வாழ்கிறவன், துறந்த பெரியோர்களுக்குத் துக்கம் உண்டாக்குகிறவன் ஸ்திரீ அத்தி செய்தவன், ராஜத்துரோகம் செய்தவன், எதிரிக்கு முதுகுகாட்டி ஓடினவன் ஸ்மிருது முதலிய சாத்வீகபுராணங்களால் நிச்சயித்திருக்கிற துளபமாலைதரனான ஸ்ரீமன் நாராயணனைப்பரத்துவம் அல்லவென்று சொன்னவன், பிர்ம்ம ரிஷிகளுக்கு அபசாரம்செய்தவன், வேதங்களைத் தூஷித்தவன், தாய் பசித்திருக்கத் தன்பாழ்வயிற்றை நிரப்பிக்கொண்டவன், எசமான் ரணக்களத்திலே விழுந்துபோகத் தன்பிராணனைத் தப்பித்துக்கொண்டுவந்தவன், இவ்விதபாவிகள் விழுகிற நரகத்திலே விழக்கடவேன். அடைக்கலமென்று வந்தவர்கட்கு ஓர் உபத்திரவம்வர அதற்கு அவர்களைக் காட்டிக்கொடுத்துத் தூரநிற்கிறவன், கள்குடியன், பொய்சாக்ஷி சொன்னவன், அடைக்கலப்பொருளை அபகரித்தவன், இளைத்த வேளையிலே உபத்திரியம் செய்தவன், அக்கிராரங்களை அழித்தவன், பிள்ளைகளைக்கொன்றவன், ஓரவழக்குச் சொன்னவன், தேவர்களை இகஷிபண்ணினவன் கன்னுக்குப்பால்விடாமல் கறந்தவன், ஒருத்தருடமையைப்பறித்து அபகரித்தவன், செய்தநன்றியை மறந்தவன், இப்படிப்பட்டவர்கள் சேருகிறநரகத்திலே விழக்கடவேன். வழியிலேவந்த ஸ்திரீகளை கள்ளர்வந்துபறிக்கத் தன்பிராணனைத் தப்பவைத்துக்கொண்டு ஓடினவன், பசியுடன் பதைத்துக்கொண்டு இருக்கிறவர்களைப்பார்த்துத் தான்சாப்பிட்டவன், சத்திராதிகளுடனே உபித்தியம்செய்கிறதற்குப்பயந்து அவர்களை நண்பாக்கிக்கொண்டு, வஞ்சனைசெய்துகொன்று அவர்களின் திரவியத்தை அபகரித்துக்கொண்ட ராஜன் இவர்கள் விழுகிற நரகத்திலே விழக்கடவேன். நல்ல வம்சத்திலே பிறந்து ராச்சியபாரம் பண்ணிக்கொண்டு அக்கிரமங்களான காரியங்களைச்செய்து தருமத்தை மறந்து பழிசம்பாதிக்கிற ராஜன், கன்னிகையைக் கட்டழித்தவன், குருபத்தினியை இச்சித்துப் பார்த்தவன், கள்ளன் ஒருதேசத்தில்வந்துசேர அதற்கு அஞ்சி ஓடிப்போன குடிகளுடைய பொருளைக் கைக்கொண்ட ராஜன் குற்றமில்லாத குலங்களுக்கு குற்றமுண்டாக்குகிறவன், ஏழைகளுடைய ஆகாரத்தைச்சிந்திப்போட்டவன், புதுமையான வஸ்துக்களைக்கிட்ட இருக்கிறவர்களுடைய நாவில் நீருறும்படி சாப்பிட்டவன், சாப்பிடுகிறதுக்கு யோக்கியமில்லாத வஸ்துக்களை நாய்போலத்தின்கிறவன், ஆண்சாதி - பெண்சாதி - என்கிற நாணமில்லாதவன், அதினாலே நரகமுண்டென்றுசொன்னால் அதுமெய்யென்று கேளாதவன், பிறருடைய பழிகளைச்சொல்லிக் கொண்டே திரிகிறவன், வில் வாள் முதலான ஆயுதவித்தைகளைப் புல்லிலேபோட்டுவிட்டு சரீரத்தை சிலநாள்காப்பாற்றுவோமென்று தன்னைச்சீறின சத்திராதிகள் வீட்டில் கவளம்வாங்கிச் சாப்பிட்டவன், தன்னைவந்தொருபொருள் கேட்டவர்களுக் குண்டில்லை என்று சொல்லாமல் பலநாள் அலைச்சல்கொண்டவன், இவர்கள்விழும் நரகத்திலே விழக்கடவேன். சரீரத்துக்கு ஆசைப்பட்டு வெறுங்கையுட னிற்கிறவனை இழுத்துக் கொண்டுபோய் பெண்டுகளுக்கு முன்னாகக் காட்டி அவனைக்கொல்லுகிறவன் தன்ராச்சியத்தைச் சத்திராதி பிடுங்கிக்கொள்ள ஜீவனைவைத்துக்கொண்டு விலங்குக்காலோடே அவன் முகத்தில் விழித்துக்கொண் டிருக்கிறவன், வட்டிக்குவட்டிகட்டிவாங்குகிறவன் இத்தியாதிபாவிகள்எந்தநரகத்தில் விழுவார்களோ அதிலேவிழக்கடவேனென்று சொன்ன பரதனைப்பார்த்து; ஆரணியத்துக்குப் போனமகன் வந்ததுபோல உருக்கத்துடனே கட்டிக்கொண்டு அழுது, ராஜாவினுடைய செய்தியும், தாயார்செய்தகாரியமும், தெரியச்சொல்லி, தன்தனங்களில் பால்சுரக்க விம்மி விம்மி அழுது அப்பா! உன் குலத்திலே முன்பிறந்தவர்களிலே உனக்குச் சமானமானவர்கள் யாரிருக்கிறார்களென்று சொல்லி வாழ்த்தி நினைந்து, நினைந்து, மனம் உருகி மகனே! உங்கள் தகப்பனார் இறந்துபோய் ஏழுநாள் ஆயிற்று பிள்ளைகள் செய்யவேண்டிய கடமை யாதோ! அதை நீ செய்யென்று சொன்னாள். அதைக் கேட்டு அழுதுக்கொண்டு பரதனிருக்க, வசிஷ்டமகாமுனி அவடத்துக்குவந்தார். அவரைக்கண்டுசேவித்து ஸ்வாமி! தாங்கள் கட்டளை இடவேணுமென்று அழுதார் அப்போது வசிஷ்டர் பரதனைமார்பில் அணைத்துக்கொண்டு தாமும் அங்கலாய்த்து நடக்கவேண்டிய காரியம் கடந்தது, இனி அங்கலாய்த்து ஆகவேண்டியது என்னவென்று மனம் தேறச்சொன்னார். அப்போது தாயார் சொன்னபடிக்கு வசிஷ்டமகாமுனியுடனேகூடப்போய் தகப்பனாருடைய தரும சுரூபமான சரீரத்தைக்கண்டார் கண்டவுடனே பூமியிலே விழுந்து அலறி கட்டிக்கொண்டு அழுது தயிலத்திலே ஊறின சரீரத்தைத் தன்கண்ணிராலே கழுவினார். அப்போது அனேகம் வேதவேதியர்கள் - ராஜாக்கள் - மந்திரிகள் - பிரதானிகள் - முதலிய யாவரும் வந்து கண்டு பரதன் தன்கரங்களினாலே கழுவிக்கொண்டிருக்கிற ராஜாவினுடைய சரீரத்தைப் பிடித்துவாங்கி நடக்கவேண்டிய காரியங்களெல்லாம் செய்து, அனேகம் மேளவாத்தியங்கள் முழங்க பொன் விமானத்திலேற்றி, சுமந்திரன்முதலானசகலரும்புடைசூழ, பட்டணத்து ஜனங்களெல்லாம் தலையிலேகையை வைத்துக்கொண்டு அழுது இரைந்துக்கொண்டு சூழ்ந்துவர, சங்கு, சின்னம், பேரிகை, முதலானது ஸ்திரீகள்போல அழுதுக்கொண்டுவர, தேர் - குதிரை - யானை - முதலியவைகள் முன்னே கும்பல் கும்பலாய்நடக்க, அறுபதினாயிரம் ஸ்திரீகளும் கூடவர, சரயுநதியே போய் சேர்ந்தார்கள். அவடத்திலே நடக்க வேண்டிய காரியங்களைச் சாஸ்திரப்படி பிராமணர்செய்து முடித்துப்பரதனைப்பார்த்துத் தகப்பனாருக்குச்செய்யவேண்டிய காரியம்செய்யுமென்றுசொன்னார்கள் அதுகேட்டுபரதன் எழுந் திருக்க வசிஷ்டர் அப்பா! பரதா! உன்தாயார் செய்த பொல்லாங்கினாலே உன்னைப்பிள்ளையல்லவென்றும் நீ பிறந்து தங்கள் குலதருமந்தப்பிப்போயிற்றென்றும் முன்னமே இராஜன் உன்னைத் துறந்ததாகச் சொன்னாரென்றுசொல்ல, அவ்வார்த்தையை பரதாழ்வான் கேட்டு பெருமூச்சுவிட்டு நன்றாயிருந்தது நன்றாயிருந்ததென்று நகைத்துப் பரதன் இடிவிழுந்த பாம்பு பதைக்கிறதுபோலப் பதைத்து ஒருவராலும் தடுக்கிறதற்குக் கூடாமையான துயரத்திலே சரீரம் துடிதுடிக்க விம்மி அழுதுச்சொல்லுகிறான். சூரியகுலத்துராஜாக்களில் என்னைப் போலயாரிருக்கிறார்கள். பெற்ற தகப்பனுக்குப் பிரேத பூசை செய்கிறதற்குக்கூடயோக்கியமில்லாமற்போனநான் ராஜரீகம் செய்கிறதற்கு மாத்திரம் முதற்பக்ஷமானேன். மநுமாந்தாதிமுதலாக இத்தவம்சத்திற் பிறந்தவர்களெல்லாம் தருமநிதியாய் நடந்துகொண்டு தேவர்களானார்கள். அந்த வம்சத்தில் நான்பின்னையாகப் பிறந்து லபிதமில்லாமல் தென்னங்குலையிலே பதரானதுமைத் தேங்காய்போலானேன். என்னைப்பெற்றவளைத்தந்தாயார் எனக்கழகுசெய்துவைத்ததுஎன்னமாயிருந்ததென்றுசொல்லிஅழுது, அக்கசாகரத்திலே மூழ்கியிருக்க, அப்போது வசிஷ்டர் அவர்தம்பியானசத்துருக்கனுடைய கரங்களினாலே. செய்யவேண்டியகிரியைகளெல்லாம் செய்வித்தார். அறுபதினாயிரம் ஸ்திரீகளும் ஆபரணங்களோடு வஸ்திரங்களும்பிரகாசிக்க (புஷ்பித்திருக்கிற முருக்கங்காட்டிலே மயில்கள்நுழைகிறது போல) அக்கினியிலே மூழ்கினார்கள். அவர்கள் மகாபதிவிரதைகள் அடையும் பதவியில் சேர்ந்தார்கள். வசிஷ்ட மகாமுனி முதலியயாவரும் அவடத்தில் செய்யவேண்டிய காரியங்களெல்லாம் செய்து, முடித்து அரண்மனைக்கு வந்து சேர்ந்தார்கள். இப்படியாகப் பத்துநாளும் பத்து ஊழிகாலமாகத் துக்கத்துடனிருந்து, பதினாலுநாள் செய்யவேண்டிய காரியங்களும்செய்து முடித்தார்கள். பின்னர் சுமந்திரன் முதலான மந்திரிகளும் ராஜ கூட்டங்களும் பரதனிடத்தில் வந்து சூழ்ந்திருந்தார்கள்.

---

## ஆறுகாணல்.

சுமந்திரன் என்கிறமந்திரி பரதனுடைய மனதை அறிந்து, வசிஷ்டமகாமுனி முகத்தைப் பார்த்தார். அந்தக்குறிப்பை வசிஷ்டர் தெரிந்து பரதனைப் பார்த்து, உன்னிடத்திலே பிராமணரும் - பெரியவர்களும் - இராஜாக்களும் - மந்திரிப் பிரதானிகளும் வந்தது என்னத்துக்காகவென்றால், ராச்சியத்துக்கு இராஜன் இல்லாமல் அவர்கள் இருக்கிறது நல்லதல்ல வென்றெண்ணியாக்கும். ஆதலால் நீதியையும் - தருமத்தையும் - நிலைநிறுத்த, நீர் பட்டாபிஷேகம் செய்துக் கொண்டு தருமத்தைப்பரிபாலனம் செய்துக்கொண்டு வாரும், அந்நிப்பரமிரண்டையும்கொடுக்கும், நீர்நன்றாய்த்தெரிந்தவர். ராஜன் இல்லாமல் இருக்கிறது. (சூரியனில்லாத பகல் போலவும் சந்திரன் இல்லாத இரவு போலவும் - ஜீவனில்லாத சரீரம் போலவும் இருக்கின்றது) தேவலோகத்திலும் அசுரலோகத்திலும், மற்றெங்கும் இராஜாக்களில்லாமல் யாதொரு காரியமும நடவாது. பிரமன் முதல் இதுவரைக்கும் ராஜனிருந்து அரசுசெய்ததே அல்லாமல் சும்மாயிருந்த நாளில்லை உன்பிதாவும் இறந்து போனார், தமயனும் இராஜ்ஜியத்தைத் துறந்து விட்டுவிட்டார். தாயாரினுடைய வரத்தினாலே ராச்சியம் உனக்குண்டா இருக்கின்றது. நீர் - ராச்சியபாரம்செய்ய எனது மனதிலே நினைத்து, அதுவேயோசனையாய்ச் சொல்லவந்தேனென்று வசிஷ்டமகாமுனி சொல்ல, அதைக் கேட்டு பரதன் விஷத்தைச் சாப்பிடச் சொன்னால் எப்படி நடுங்குவார்களோ அதிலும் அதிகமாய்ப்பயந்து, அசந்து கண்களிலே அருவிபோல நீர்ததும்பி, நாக்குளறி ஸ்திரீகள்போல அழுது உயிர்போகிற சரீரம் போலச்சோர்ந்து, அறிவு அழிந்து கைகொடுக்க ஒருவாருமற்ற தெளிந்து, தன் மனதிலே இருக்கிறது அந்த ராஜசபைக்குத் தெரியும்படி சொல்லுகிறார்.

அந்தரம் - சுவர்க்கம் - பாதாளம் - மூன்று லோகத்துக்கும் நாயகராய், எனக்கு முன்பிறந்தவராயும் ஸ்ரீராமன் இருக்க, என்னை முடிசூட்டிக் கொள்ளும்படி பெரியோர்களா இருக்கிற தாங்கள் தானே இப்படி சொன்னால், என்னை ஈன்றவள் பேரில் குற்றத்தைக்காணேமே! என்தாய் பேச்சைத்தானே ஸ்தாபித்து, சகலமும் அறிந்த தங்கள் இது நல்லகாரியமென்றுசொல்லுகிறதற்கு, இன்னம் இடையில் இரண்டியுக மிருக்கின்றதே! அதைவிட்டு என்போய் கடையில்வருகிற கலிகாலமா! இது சபையிலிருக்கிறவர்களே! சகலரும் கேளுங்கள், பிர்ம்மாமுதலானவர்கள், உலகத்திலே பிறந்தவர்கள், இவர்களில் முன்பிறந்தவனிருக்க, இளையவன் ராச்சியபாரம் செய்ய யாராகிலும் கண்டதுண்டா! அதுதருமந்தானா? ஆயினும் நான் இந்த சரீரத்துடனே ராச்சியபாரம் செய்கிறதில்லை, என்தமையன்போயிருக்கிற இடத்துக்கு நான் போய் அவரை அழைத்துக்கொண்டு வந்து அவருக்குப் பட்டாபிஷேகம் செய்துவைக்கிறேன், அதையும் நீங்கள்தான் பார்க்கப்போகிறீர்கள். ஒருவேளை என்தமையனார் வரமாட்டேனென்றால் நானும் கூட இருந்து தபசு செய்வேன். அதற்கும் அவர் சம்மதியாவிட்டால் என் பிராணனைப் போக்கிக்கொள்வேன். இதுயாவர் மனதிலும் கெட்டியா இருக்கட்டும் என்றுசொல்ல, அதைக் கேட்டு அந்தசபையிலிருந்தவர்களெல்லாம் சந்தோஷித்து ஸ்வாமி! ராஜாவுமிருக்கத் தமையன் கொடுத்துப்போன ராச்சியமுமிருக்க அதை பட்டாபிஷேகஞ் செய்

னுக்கொள்ளாமல் இப்படி மறுத்துச்சொல்லுகிற தங்கலைவிட, ராஜாக்களில் யாரிருக்கிறார்கள். ராச்சியபரிபாலனஞ்செய்து கீர்த்திசம்பாதிக்க வேணுமா! பதினான்குலோகத்திலும் உம்முடைய கீர்த்திப் பிரகாசமாயிற்றென்று, சகலரும் சொல்லி வாழ்த்தினார்கள். அப்போது பரதாழ்வான் தம்பியை அழைத்து, அப்பா! இந்த பட்டணத்து ராஜாவை அழைத்து வருகிறதற்குப் பட்டணத்திலிருக்கிற யாவரும் புறப்படப் பேரிகை அடிக்கச்சொல்லித் திட்டஞ்செய்யென்றார். அந்த உத்தரவின்படியே சுமந்திரனும் சொல்லிப் பட்டணத்திலே பரதமகாராஜன் தம்முடைய தமயனை அழைத்துக்கொண்டுவந்து பட்டங்கட்டுகிறதற்குப் பிரயாணமாகிறார். சகலரும் புறப்படுங்களென்று சொல்லி, வள்ளுவன் பேரிகை முழக்கினான். ஜீவன்போய்விட்ட சரீரம்போலிருந்த, அங்கஙோர் இதைக்கேள்விப்படவே அமிர்தம் காதில் விழுந்துபிழைத்ததுபோல, சகலரும் சந்தோஷத்துடன் எழுந்திருந்து, ரிஷீஸ்வரர் முதலான சகலஜீவகோடியும் ஸ்ரீராமன் பட்டாபிஷேகம் செய்துக்கொள்வாரென்கிற சந்தோஷத்தினாலே களித்துச் சந்திரனைக்கண்ட சமுத்திரம்போலே பொங்கி வழிந்து, சப்தசமுத்திரமும் ஊழிகாலத்திற் பொங்கி வருகிறதுபோலப் புறப்பட்டார்கள். அந்தக் கைகேசியின் அவா என்கிற ஆசையையொழித்ததுபோலவே சகலருடைய துயரங்களையும் ஒழித்துவிட்டது. யானை-குதிரை-இரதம்-பதாதிகள் முதலியவைகள் பூமி எங்கும்நிறைந்தது. கொடிகள் ஆகாசவீதி எல்லாம் நிறைந்தது. இப்படி புறப்பட்ட சகலஜனங்களுடைய கால்தூளிகள், பிரம்மாண்டமட்டுக்கும்போய் பிரம்மதேவனுடைய நேத்திரங்களையும் மறைத்தது. சகலருக்கும் ஸ்ரீராமனைப் பார்க்கலாமென்கிற ஆசையினாலே சப்தமேகங்களும் கூடி மழைபெய்கிற சத்தம்போல இரைந்துக்கொண்டு புறப்பட்டார்கள். அந்த சேனாசமுத்திரத்திலே (சீதையுடனே கூட நடந்த ஸ்ரீராமனைப்போல) பிடியானைகளுடனே மதயானைகள் சோடுசோடாய் நடந்தன. அநேகம் ஸ்திரீகள் பெண்யானையின்பேரிலேறிக்கொண்டு போகிறது அவர்கள் நடைக்குத்தோத்து அவர்களைச் சுமக்கிறதுபோல இருந்தது. அனேகம் கொடிகள் மேகமண்டலத்தை அளாவி மழைகளை உதிர்த்துக்கொண்டு, ஸ்ரீராமனைக்காணும் விருப்பமுள்ள ஸ்திரீகள்போலத் துவண்டு தொங்கியிருந்தது. அனேகம் ராஜகுமாரர்கள் சரீரகாந்தியுடனே யானையின்பேரிலேறிக்கொண்டு குடைகள் அவாவடைந்த (சூரியனானவன் அனேகமூர்த்தியாய் உயர்ந்த சொரூபங்கொண்டு, மேலே சந்திரன்பிரகாசிக்க வாகனத்திலேறிக்கொண்டு போகிறதுபோல) இருந்தது. அனேகம் ராஜகுமாரர்கள் தேரின் பேரிலேயும் அனேகம் ராஜகுமாரர்கள் குதிரையின்பேரிலேயும் புறப்பட்டு நடந்தார்கள். தாரை-சங்கம்-எக்காளம்-கொம்பு-பம்பை-துடி-பேரிகை-மத்தள-முதலியவைகள் சத்திக்காமல் (விற்பத்திக்கியானமில்லாதவர்களுடைய கூட்டத்தில் சிக்கிக்கொண்ட விற்பத்திக்கியானமுடையவர்களைப் போல) மௌனமாய்வந்தது. ஸ்திரீகளெல்லாம் ஆபரணங்களைக் கழட்டிப்போட்டு புஷ்பம் உதிர்ந்த கொம்புகள்போல தேவதைகளும் பார்த்து மயங்கும்படி நடந்தார்கள். அநேகம் குடைகள் ஆகாயமெல்லாம் நிறைந்துவந்தது. வந்தாலும் ராஜாவினுடைய குடை வராததினாலே சந்திரனில்லாத ராத்திரிபோல இருந்தது. அன்றையத்தினம் புறப்பட்ட சேனாசமுத்திரத்தைத் தாங்கிக்கொண்டிருந்த பூமிதேவியை மெல்லியளென்று சொல்லுகிறது தெரியாதத்தனமென்றே சொல்லவேண்டும். ஸ்திரீகள்-சந்தனம்-கஸ்தூரி-குங்கும முதலியவைகள் தனங்களில் பூசிக்கொள்ளாமல் முத்துமாலை முதலான ஆபரணங்களும் தரித்துக்கொள்ளாமல் போகிறது, இளநீர் காய்கள்போலத் தோன்றிற்று. புருஷாளுடைய தோள்களும் சந்தனம்-புனுகு-பன்னீர் - ஜவ்வாது முதலிய புஷ்பவாசனைகளில்லாமல் போகிறபடியினாலே, அதுகள்-செடிகள்-நிறைந்த பர்வதங்கள்போலிருந்தன. ஸ்திரீகளுடைய கண்கள் மை இல்லாமலிருக்கிறது ரத்தக்கறைகளை ஒழித்தவேல்கள்போல இருந்தன. மேகலாபரணம் - சிலம்புகளினுடைய சத்தமில்லாமல் போகிறது மணிகள் கட்டாத தேரும் வண்டுகள் சத்திக்காத கமலமும்போல இருந்தது. கைகேசி வரம்வாங்கிக் கொண்டது ஸ்திரீகளுடைய இடைகளுக்கு மாத்திரம் உபகாரமாயிருந்தது. அதேதெனில், அந்த சஞ்சலத்தினால் ஆபரணங்களைக் கழட்டி எறிந்தபடியினாலேதான். அந்த சேனா சமுத்திரம் போகிறது, ஸ்ரீராமன் ஆரணியத்துக்குப் போனதினாலே, லக்ஷ்மியும் தபசு செய்யப்போய்விட்டாள். மன் மதனும் துக்க சாகரத்தில் முழுகினதுபோல யாதொருசம்பிரமமும் இல்லாமல் நடந்தார்கள் அன்றையத் தினம் புறப்பட்ட சேனா சமுத்திரத்தை; லோகங்களை விழுங்குகிற வெள்ள மென்று சொல்லுவது அற்பம். பின்னையாதெனில். பிரம்மாவினுடைய கண்ணுக்கும் மனதுக்கும் அடங்காத சேனையாக இருந்தது. அந்தசேனா சமுத்திரத்தின் கால்தூள் சப்தசமுத்திர ஜலங்களைக் குடித்துப் போடுகிற படியினாலேயும், பர்வதங்களை பூமியிலே அழுந்திப்போக மிதித்துநடக்கிறபடியினாலேயும், திராவிடத்தை உண்டாக்கிய கும்பமுனிக்குச் சமானமாக இருந்தது. யாவரும் அயோத்தியாபுரி பட்டணத்தை விட்டுப் புறப்பட்டபடியால் அது அகஸ்தியர் சமுத்திரத்தைச் சாப்பிட்டபோ தெப்படியிருந்ததோ அப்படி யிருந்தது. வழியிலே நதிகள், வயல்கள், மரங்கள். மலைகள் முதலானதின் பேரிலும் இந்த ஜனங்கள் நெருங்கிமென்மேலும் நடந்து போகிறபடியினாலே அயோத்தியாபுரியின் வீதிகளுக்குச்சமானமாக இருந்தது. புஷ்பமாலைகள் சந்தனமுதலியதினுடைய பரிமளம் ஒன்றுமில்லாமல் நடந்தார்கள். யானைகள் மதங்க ளில்லாமல் நடந்தன. மத்தளை முதலானதுகள் சத்திக்காமலெடுத்துக் கொண்டு போகிறது, சித்திரங்க ளெழுதினதுபோ லிருந்தது. ஸ்ரீராமன் காட்டுக்குப்போனது புருஷாளுடைய மார்பிலே ஸ்திரீகளுடைய கண்ணாகிய வேல்கள் படாமல் கவசம் போலாயிற்று. இப்படியாக சேனாசமு



த்திரம் நடக்க, பரதன் மரவுரியும் சடைமுடியும் தரித்துக்கொண்டு தம்பியுடனேகூட மிகுந்த துன்பத்துடனே தேர்மேலேறி நடந்தார். அப்போது தாய்மாரும் ரிஷிகளும் தகப்பனுக்குச் சமானமான வாஞ்சல்யமுடைய மந்திரிகளும், மற்ற மந்திரிகளும், பந்துஜனங்களும், பிராமணோத்தமரும் தொடர்ந்துவர கோட்டைவாயிலேவந்தார். அப்போது மந்தரை என்கிறகூனியும் வழிநடக்கிறவர்களுடனேகூட நடந்தாள். அவளைச் சத்துருக்கன்கண்டு மிகுந்தகோபத்துடனே ஓடி அவளைப்பிடித்துக்கொண்டு தூக்கி அறைந்துப்போட வேணுமென்று ஆயுத்தப்பட, அதுகண்டு பரதர் விலக்கிச்சொல்லுகிறார். அப்பா! தம்பி! இந்தபாவிப்பேச்சைக் கேட்டுத்தான் இப்படிக்கொற்றகாரியங்கள்சம்பவித்தது. இந்தப்பாவியை நான் சின்னபின்னமாய் வெட்டிக் கோபக்கிறேனு தமையனார் கோபித்துக்கொண்டு நம்மைத் துறந்துவிடுவாரோ என்று பயந்து கொல்லாமலிருந்தேனல்லாமல் தாயென்று எதாகிலும் பார்த்திருப்பேனா! இந்தக்கூனியின்பேரில் கோபித்துக்கொண்டாலும் அவர்மனதுக்குச் சம்மதிப்படாது. என்று விலக்கிநடந்தார். சேனாசமுத்திரத்துடனே ஸ்ரீராமன் முன்னாலே இறங்கினசோலையில் அன்றையத்தினம் இறங்கினார்கள். ஸ்ரீராமன் இறங்கியிருந்த இடங்களெல்லாம் பரதாழ்வான் பார்த்துக் கண்களில் தண்ணீரருவிபோலவர, காய் கனி-கிழங்குகள் கூட சாப்பிடாமல் ஸ்ரீராமன் படுத்திருந்த புல்மெத்தையின்கீழே புழுதியில்தானும்படுத்திருந்து அவ்விடத்திலிருந்துபுறப்பட்டு, ஸ்ரீராமன் கால்நடையாக நடந்துபோனாரென்று தெரிந்து அவர் நடந்தவழியே ரதகெஜதுரகபதாதிகளுடனே தானும்கால்நடையாக நடந்துபோனார்.

## குகன்பரதனைக்காணல்.

பரதாழ்வான் நாடுகளை எல்லாம் கடந்து கங்காநதி தீரத்தில்வந்துசேர்ந்தார். அந்த கங்கையிலே எண்ணிறந்த யானைகளிறங்கினதில் அதுகளுடைய மதங்கள் மிதமில்லாமல் ஒழுகியபடியால் அந்த ஜலம் ஸ்நானத்துக்கும் பானத்துக்கும் யோக்கியப்படாமலிருந்தது. அனேகம் குதிரைகள் தண்ணீர்குடித்தும், நீந்தியும் நின்றும் மணலிலே புரண்டுக்கொண்டும் இருந்ததுகள். சமுத்திராகாரமாகிய அந்தகங்கை இந்த சேனாசமுத்திராகாரமாக இருந்தது. அன்றையத்தினம் பரதர்கூடவேவந்த சேனாசமுத்திரம் அறுபதினாயிரம் அக்குரோணி இது அந்த கங்காநதிதீரத்திலேவரவே, அங்கிருக்கும் குகன் ஸ்ரீராமன்பேரிலே யாரோ படை எடுத்துவந்தார்களென்றெண்ணி அச்சேனா சமுத்திரத்தைப்பார்த்துகோபத்துடனே நகைத்து கண்களில் நெருப்புப்பறக்க, புகை சுவாசத்தோடு புருவங்கள் வளைந்துதிமிர சுற்றுவளைப்போலக்கொக்கரித்துக்கொண்டு தனதுசேனாசமுத்திரத்தைக்கூட்டிக்கொண்டு கையிலேவில்லேந்தி அரையிலேசுரிகை கட்டிக்கொண்டு பற்களை நறநறென்று கடித்துக்கொண்டு அதிக உதட்டியோடி அடிமுழக்கங்கள் முழங்க, கொம்புகளூத தோளுகள்பூரித்து இந்த சேனாசமுத்திரமெல்லா மொரு சவி சமனொரு பாம்பென்று சொல்லிக்கொண்டு தன்னுடைய சேனைகளெல்லாம் புலிகள்போல் ருழ்க்குதிற்க, அந்த கங்கா நதியின் தென்தீரத்திலிருந்து அட்டகாசஞ்செய்து ஊழிகாலத்து இடிபோலச் சத்தத்துடனே சப்தமேகங்களும் கூடி இருக்கிறதுபோல யுத்தசன்னதமாய் தன்னவர்களைப்பார்த்து ஆரேர்வருகிறதே இந்த சேனைகளை எல்லாம்சங்கரித்து என்தமையனை ஸ்ரீராமனுக்கு ராச்சியபாரஞ் செய்துவைக்க இருக்கின்றேன். நீங்களும் யுத்தசன்னதங்களாக இருங்கள் ஒருத்தரும் ஓடங்கள்விடத் தேவையில்லை, சளைபோறாமாய்வந்தவர்களை பிடித்தடியுங்கள். கிலமேல் தருடனை என் பிராணநாயகன் ஆளுகிறதுக்கில்லாமல் வஞ்சனையினாலே ராஜரீகம் சம்பாதித்த ராஜாவும் வந்தானல்லவா! என்பாணம் ராஜாக்கள்பேரில் தைக்காதா!. இவர்களைப் பிராணனுடனே விட்டேனானால் என்னை நாயென்று சொல்லார்களா! எவ்விதத்தில் இந்த ஆறுதாண்டிப் போகப்போகிறார்கள். யானையும்-சேனையும் கண்டு நான் பயப்படுகிறவனா! தோழனென்று அவர்சொன்னது ஒரு சொல்லல்லவா! எழை வேடன் பிராணனை யாகிலும் விட்டுக் கொள்ளலாகாதாவென்று உலகத்தார் சொன்னார் எசார்களா! தமையனென்று பாராமல்இப்படி யுத்தத்துக்குப் புறப்பட்டவன் நடுவே அவர்தம்பி நானிருக்கிறேனென்று கேட்டானானா என் இககூரியா இவன்வந்ததென்ன! இவன் சாமர்த்தியமெல்லாம் இந்த எல்லைகடந்துபோயல்லவா! பாவமும், பழியும், பகையும், சினேகிதமும், குற்றமும் ராஜாக்களெண்ணிப் பார்க்கிறதில்லை யல்லவா! ஆகிறதொன்று, போகிறதொன்று, என்னுடைய தோழன்பேரிலே இவன் யுத்தத்துக்குப் போவது என்சேனையும்நானும் மாண்டபிறகல்லவா! என்தமையன் ஆரணியம்போய் தவஞ்செய்ய இவன் ராச்சியபாரமாளுகிறதா! என் ஜீவனைக்குமருந்தா? கீர்த்தி சம்பாதித்துப் பிராணனை விடுகிறேன் அவர்பிறகே நான் போகாமலிருந்தது நல்லதாயிற்று. என்னுடைய கடன் இன்றைக்குக்கழிக்கிறேன். இந்தயானையும்குதிரையும் இராஜாக்களும் இந்த கங்கையைத் தாண்டி யல்லவோ போகவேணும். என்னுடைய சேனைக்கும் எனக்கும் வருகிற சேனாசமுத்திரந்தான் போதுமா! இன்னம் அவர்களுடனே தேவர்கள் கூடிவந்தாலும் அஸ்திரங்களைப் பிரயோகஞ்செய்து சேனைகளை எல்லாந் துண்டந் துண்டமாய் அறுத்துச்சாய்த் தென் சினேகிதருக்குத் மாவுரிகொடுத்தவர்களை என்னுடையபாணத்தினாலே கொன்றுப்போட்டு அந்தப்பிரேதங்களாலே கங்கையைத் தூர்த்துப்போடேனா! ஒருவேடன் ராச்சியம் வாங்கிக்கொடுத்தானென்று கீர்த்திச் சம்பாதித்து இந்தப்பரதனுக்கு அந்த நாடுகொடுக்கிறேன் ஆரணியத்துக்குப்போன என் தமையன் எதாகிலும் கோபஞ்செய்வாரென்று பார்த்தாலே பார்த்தேன், அதுபாராமல் அடுத்தேனு விந்தசேனை பஞ்சபஞ்சாயல்லவோ பறந்துபோகுமென்று பலபலவிதமாகச்சொல்லி இரும்புபோல சரீரங்களையுடைய அனேக வேடருடனேகூட வில்லைப்பிடித்துக்

கொண்டு ஸ்ரீராமனுக்குச் சினேகிதனான் குகன்நின்றான் இதுகண்டு சுமந்திரன் பரதருடனே சொல்லுகிறார். ஸ்வாமி ! இந்த கங்காநதியின் இருகரைக்கு மதிகாரியானவன் அனேக ஓடங்களுக்கு நாயகன் உங்கள் குலத்துக்கு நாயகமாய் அவதரித்திருக்கிற ஸ்ரீராமனுக்குப் பிராணசினேகன். சிங்கத்துக்குச் சமானமான பலத்தையுடையவன். அனேகம் வில்க்காரர் சமுத்திரம்போல சூழயிருக்கிறவன். குகனென்கிற பெயரை உடையவன். கல்லுபோல சரீரபலத்தை உடையவன். ராத்திரியைப்போல அழகையுடையவன். தங்களைக் காணவேணுமென்கிற அபேக்ஷையினாலே எதிரேவந்து அக்கரையிலே நின்றான் என்று சொன்னான். என் தமையனுக்குச் சினேகிதனானால் நான் முன்னேபோய் காண்கிறேன் என்று எழுந்திருந்து தம்பியுடனேகூட மிகுந்த ஆசையுடனே நடந்து கரையின் ஓரத்தில்போய்நின்றார். அப்படி நின்ற பரதாழ்வானைக் குகன் தன்கண்களார அவருடைய இளைத்த திருமேனியையும், சடையையும்,மரவுரியையும், கண்ணில் கலங்கும்நீரையும்கண்டு திடுக்கிட்டுகையிலிருக்கிற வில் நழுவிவிழ விம்மி, அழுது, நின்றுவிட்டான். என்தம்பியானபரதனைப்பார்த்தால் அந்த ஸ்ரீராமனைப்போல்வே இருக்கின்றது. கூடவந்த தம்பியோ ! அந்ததம்பியைப்போலவேஇருக்கின்றது.தவவேஷந்தரித்திருக்கிறான். இவன் துன்பத்துக்கு ஒரு முடிவுமில்லை திக்குநோக்கித் தொழுதுக்கொண்டே இருக்கிறான். எம்பெருமானாகிய ஸ்ரீராமனுடனே கூடப்பிறந்தவர்கள். தப்பிதமாய் நடப்பார்களா ! என்று சொல்லி தம்பிடவர்களை அழைத்து, என் தமையன்கொண்ட வேஷமே தானும்கொண்டு வந்திருக்கிறான். மிகுந்த அன்பையுடையவன்போலக் காண்கின்றது. அந்தக் குறிப்பெல்லாம் நான் நன்றாய்க்கண்டறிந்துவருகிறேன், நீங்களிருக்கிறவிடத்திலேயே ஜாக்கிறதையாக வழிகட்டிக்கொண்டிருங்களென்று திட்டம்செய்து தானொருத்தனாக ஓடத்தின்பேரி லேறிக்கொண்டுவந்துதொழுத குகனை பரதர்வணங்கினார். வணங்கின பரதரைக் குகன் சாஷ்டாங்கமாகச்சேவித்தான். அப்படி சேவித்த குகனை பரதர்சந்தோஷத்துடனே மார்பிலே தழுவிக்கொண்டார். அப்படி தழுவிக்கொண்ட பரதரைத் தானும் தழுவிக்கொண்டு நீரேதுஇப்போது புறப்பட்டதென்றுகேட்டான். அதற்கு பரதாழ்வான் சொல்லுகிறார் ராச்சியமெல்லாம் ஒருகுடையில் ஆளுகிற தகப்பனார் அவர்கள் சுவர்க்கலோகம்போய்ச்சேர்ந்தார். அந்த ராச்சியத்தை ஆளும் யோக்கியதையை உடைய ராஜன் இவடத்துக்கு வந்துவிட்டாரே ! அவரை அழைத்துக்கொண்டு போகிற நிமித்தம் வந்தேனென்று சொன்னார். அவ்வார்த்தையைக்கேட்ட வேடருக்கெல்லாம் ராஜாவான குகன் பூமியில் விழுந்து விம்மி, அழுது, தெளிந்து, சந்தோஷத்துடன் எழுந்திருந்து பரதருடைய உபயதிருவடிகளையும் சேவித்துக்கொண்டு ஒருவார்த்தை சொல்லுகிறான். தாயார்வார்த்தையைக்கேட்டு தகப்பனார்கொடுத்த ராச்சியத்தைப் பொல்லாதென்றுதள்ளி உமது மனதுக்கியல்பாக நடந்துக்கொள்ளுகிறபடியினாலே ஆயிரம் ராமனானாலும் உமக்குச்சமானமாகுமா ! உம்முடையகீர்த்தியை ஏழைவேடனாகிய அடியேன் என்ன புகழப்போகிறேன். சூரியன் தன் கிரணத்தினாலே மற்றபிரகாசத்தை எல்லாம் மழுங்கச்செய்து தன்பிரகாசமே பிரகாசிக்கச்செய்கிறதுபோல உங்கள் குலத்தாருடைய கீர்த்தியை எல்லாம் உம்முடைய கீர்த்தியாக்கிக்கொண்டீரென்று இனியவார்த்தைகள்சொல்லி அவருக்கு மிகுந்த அன்பு பிறக்கும்படியாய் நடந்துக்கொண்டான். அப்படியிருக்கிற குகனைப்பார்த்து தெற்குத்திசையைநோக்கிக் கும்பிட்டு, தமையனார் இங்குவந்தபோது எவடத்தில் எழுந்தருளியிருந்தாரென்றுகேட்க, அவரிருந்த இடம் நானே காட்டுகிறேன் என்று அழைத்துக்கொண்டுபோய் கல்லின் பேரிலேசார்புல்மெத்தையில் ஸ்ரீராமன்பள்ளிகொண்டிருந்த இடத்தைக்காட்டினான். அதைப்பார்த்து பரதாழ்வான் பதைத்து பூமியிலேவிழுந்து அக்கசாகரத்தில்முழுகிகண்ணீராலே பூமியெல்லாம் நனைய அழுது, ஸ்வாமி! என்னால் உமக்கு இத்தனை பிரையாசம்நேரிட்டு இறங்கும் காயும் சாப்பிட்டு புல்லின்பேரில் படுத்திருந்தீரென்று கேட்டும் இன்னம் என்பிராணனை விட்டுக்கொள்ளாமலிருக்கிறேன். அப்படிக்கொத்த பாவியானநான் பட்டாபிஷேகம் பண்ணிக்கொள்ளுகிறபாக்கியமும் அங்கீகரிக்கத் தக்கவன் தானோவென்றுசொல்லி அழுது பின்னையும் ஒருவார்த்தைசொல்லுகிறார். கூடவந்ததம்பிஎங்கே இருந்துபொழுது போக்கினானென்றுகேட்க, குகன்சொல்லுகிறான். ஸ்ரீராமனும், சீதையும், இந்தப் புல்லுமெத்தையில் நித்திரைபண்ணிக்கொண்டிருந்தார்கள். தம்பி வில்லை ஊன்றிக்கொண்டு நின்றபடியே பெருமூச்சு விட்டுக்கொண்டு கண்களிலே தண்ணீர்சோர பொழுது விடியுமட்டும் கண்ணிமையாமல்நின்றபடி இவடத்திலிருந்தானென்று காட்டினான். அதுகண்டு பரதாழ்வான் மனதுருகி அழுது அவருடையதம்பிமாருக்குள் நான்தீராத துன்பத்தைக் கொடுக்கிறத்துக் கேதுவானேன் ! அங்கே நிற்கிறதற்கு அவனிருந்தான். எனக்குக்கிடைத்த இன்பமும் அடிமையும் என்னசொல்லப்போகிறேன், என்று சொல்லி துக்கித்து அன்றிராத்திரி அப்புழுதியில்கிடந்துவிடிந்தவுடனே குகனைப்பார்த்து இந்த கங்கையைத்தாண்டி அக்கரைபோய் சேரும்படிசெய்தால் இத்துக்கசமுத்திரத்தைக் கடந்ததுபோலாகுமென்று சொல்ல அப்படியே செய்கிறேனென்று குகன் தம்பிடவர்களை அழைத்து ஓடங்களைக்கொண்டுவரச்சொல்லி ஆக்கியாபித்தான் அப்படியே அவர்களும் கயிலாசபர்வதமும் மகம்மேருபர்வதமும் குபேரனுடைய புஷ்பகவிமானமும், பலபலரூபங்கள் எடுத்துக்கொண்டு வந்ததுபோல ஸ்திரீகளுடைய நடையைப்போல கங்கையும் இடம்போதாதென்று சொல்லும்படி அநேக ஓடங்கள்வந்தன. குகன் பரதரைப் பார்த்து ஐயா ! ஓடங்கள் வந்தன தாங்கள் எப்படி சொல்லுகிறீர்களோ அப்படிநடந்துக் கொள்ளுகிறேனென்று சொல்ல. பரதன் சுமந்திரனைப்பார்த்து, ஐயா இந்த சேனா சமுத்திரங்களை எல்லாம் ஓடங்களி லேற்றி



அக்கரை சேருமென்று ஆக்கியாபித்தார். அப்படியே வரிசைக் கிரமமாக ஓடங்களி லேற்றி யானைகளும் குதிரைகளும், ரதங்களும், காலாள்களும், கணக்கில்லாத சேனைகள் ஓடமேறிநடந்தன. அனேகம்யானைகள் துதிக்கையை உயர எடுத்துக் கொண்டு, கப்பல்கள் நீந்துகிறதுபோல போயிற்று. அனேகம்யானைகள் தண்ணீரிலிறங்கி நீந்திக்கொண்டு போகிறது அந்தத் தண்ணீரும் ஸ்ரீராமனைப் பார்க்கவேணுமென்கிற ஆவலோடுகூடுகிறது போல கரை புரண்டு தெற்கே வெகுதூரம்வெள்ளமோடிற்று. ரதங்களினுடைய கொடிஞ்சித் தட்டு, அச்சு, வண்டில், கொடி முதலானதுகளைக்கழட்டி ஓடங்களி லேற்றிக் கொண்டு நடந்தார்கள். எட்டு கோடி வெள்ளைக் குதிரைகள் சேல் கெண்டைகள் போலத் துள்ளிப் பயத்துடனே நீந்திற்று. பின்னையும் வாயுவேகமாய் நீந்திக் கொண்டு அனேகம் குதிரைகள் அக்கரை சேர்ந்தன. ஸ்திரீ கூட்டங்கள் ஓடங்களில் ஏறுகிற போது, நெருக்கங்களினாலேயும், ஓடங்களினுடையபாய்ச்சலினாலேயும், பயந்து ஒருத்தரையொருத்தர் தனங்களோடு தனங்க[illegible]முழுக் கட்டிக் கொண்டார்கள் யானைகளுடைய ம[illegible]கங்கள் ஜலத்தின்பேரில் தெரிகிறது கங்கையினுடைய தனங்கள்போல் இருந்தன. ஸ்திரீகள் ஏறிப்போகிற ஓடம்ஒன்றோடொன்று தட்டுபடப்பயந்து மிரக்ஷியாய்ப் பார்க்கிறபடியினாலே, அவர்கள் கண்கள் அங்கும் இங்கும் கயல்மீன்கள் குதித்துப் பாய்கிறது போல இருந்தன. ஓடம் துழாவுகிற துடுப்புகளினாலே தண்ணீர் தெறித்து ஸ்திரீகளுடைய வஸ்திரங்கள் நனைந்தன. அதுகண்டு புருஷர்களுக்குக்கிஞ்சித் கிலேசத்தாக்கியாயிருந்தது இக்கரையிலிருந்துபார்த்துடனேபோய், அக்கரையிலிருந்து வருகிறபோதுவெறும் ஓடமானதால் மேகமானது சமுத்திர ஜலத்தைக் கொண்டுபோய்ப் பெய்து திரும்பு காலையில் இருக்கும் வெண் மேகம் போலிருந்தது. குடைகளும், ஆலவட்டமும், மயில் பிஞ்சங்களும் கொடிகள் முதலானது ஓடத்திலேறிக்கொண்டு போகிற படியினாலே, பாம்புகள் சட்டையைப் போல அதிக சுருக்காய் நடந்தது. ஸ்திரீகளேறிக் கொண்டு போகிற ஓடங்கள் தேவாம்கனைகளேறிப்போகிற விமானங்கள் போலப் பிரகாசித்தன. துழாவுகிற துடுப்பு, பத்மினி ஸ்திரீகளுடைய பாதங்களின், பரிசம்பட்டு அதற்கு ஜீவனுண்டாய் இரண்டு காலினால் நடக்கிறதுபோல பிரகாசித்தன. வசிஷ்டர் முதலான ரிஷிகள் ஓடத்திலேறுதவர்களாதலால் அவர்கள் தவ மகிமையினாலே கேசரிமார்க்கமாகப்போய் அக்கரை சேர்ந்தார்கள். ராஜ்ஜியத்திலுள்ள ராஜாக்களுடைய கீர்த்திகளைப்பார்க்கிலும், மேம்பாடுடைய கீர்த்தியையுடைய பரதன், குகனுடனே கூட ஓடமேறிநடந்தார். அப்போது கௌசலையைக் குகன்பார்த்து இந்தம்மாள் ஆரென்று வினவ, ராஜாக்களெல்லாம் நிறைந்திருக்கிற ஆசாரவாசலையுடைய மகாராஜாவினுடைய முதல்தேவியார், இந்தமூன்றுலோகத்தையும்பெற்ற, அந்த ஸ்ரீராமனென்னும் புருஷோத்தமனைப்பெற்று சகலபாக்கியமுண்டாயிருந்தும் நான்பிறந்ததினாலே அதைத்துறந்த என்தாயாரென்று சொன்னார். அதுகேட்டு குகன் அந்தம்மாளை சாஷ்டாங்கமாகச் சேவித்துக்கொண்டான். அவனைக்கௌசலைபார்த்து இவனாரப்பாவென்று பரதனைக்கேட்க அம்மா ! ஸ்ரீராமனுக்கினியவன், எனக்கும்-லக்ஷ்மணருக்கும்-சத்துருக்கனுக்கும் மூத்தவன் குகன் என்கிறபெயரையுடைத்தானவனென்று பரதன்சொல்ல கன்றைப்பிரிந்த பசுவைப்போல துயரத்துடனிருக்கிற கௌசலை, அப்பா ! மகனே ! நாட்டைவிட்டு அவர்கள் காட்டுக்கு வந்தது நலமேயாயிற்றல்லவா ! இந்தத்தம்பியுடனே கூடக்கலந்து, நீங்கள் ஐந்துபேரும் ஒருவனைப்போலவே இருந்து அனேககாலம் ராச்சியத்தை ஆளுங்களென்று வாழ்த்திச் சொன்னாள். அவளுக்கடுத்தாப்போ லிருக்கிற சுமித்திரையைப்பார்த்து, இந்தம்மா ளாரென்றுகேட்க, பிராணன்போனாலும். பேசுதப்பலாகாதென்றிறந்துபோன மகாராஜாவினுடைய பெண்சாதி, ஸ்ரீராமனோடு கூடப்பிறந்தவர்களு மொன்றென்று சொல்லும்படியாய், பிரியாமல் கூடப்போன லக்ஷ்மணனைப்பெற்ற பாக்கியவதியென்று பரதர் சொன்னார். அதுகேட்டு அந்தம்மாளையும் சேவித்துக்கொண்டான். அப்பால் புருஷன் மசானம்போய், மகன் துயரமென்கிற சமுத்திரத்திலேமுழ்க, ஸ்ரீராமன் ஆரணியத்துக்குப்போக, இந்த உலகமெல்லாம் தானொ னினைத்து தன்கொடுமையைப் பூமியெல்லாம் நிறையச் செய்த கைகேசியைப்பார்த்து, இந்தம்மா ளாரென்றுகேட்க, பரதர்சொல்லுகிறார். மிகுந்த அபகீர்த்தியைச் சம்பாதித்து பழியை வளர்த்து உலகத்து ஜீவகோடிகளெல்லாம் உயிர் இழந்துபோகும் சரீரம்போல பதைக்கச்செய்த பாவி, இவள் வயிற்றிலே அனேககாலம் கிடந்த எனக்கும் உயிர் தேயும்படி துயரத்தைக்கொடுத்தவள். பூலோகத்திலே இவளுக்குச் சமானமானவர்கள் வேறேகிடையாது. முகத்திலே கொஞ்சமாகிலும் விசனமென்கிறதில்லாமலிருக்கிறாளே அதினாலே யாகிலும் உனக்குத்தெரிய இல்லையா ! அப்பா ! என்று சொன்னார். இப்படியாகச்சொல்லக்கேட்ட அந்த கைகேசியையும் தாயைப்போலெண்ணி, குகன் நமஸ்காரஞ்செய்தான். ஓடங்கள் பெண் அன்னம் நடக்கிறதுபோல நடந்து அக்கரைசேர்ந்தன. இப்படியாக அநுபதினாயிரம் அக்குரோணிசேனையும் பட்டணத்து ஜனங்களும் பாலவிருத்தர்களும், ஸ்திரீகூட்டங்களும் அக்கரையிலேபோய்ச் சேர்ந்தார்கள். தாய்மார் முன் ஓடம்விட்டிறங்கி சிவிகைகளிலேறிக்கொண்டுவர [illegible]தகண்ணீருடனே பரதர் நடந்துபோனார் அவடத்திலே குகன் தனித்திருக்க மனம்தாளாமல் பரதருடனே கூடத் தானே நடந்துபோனான். அனேகதூரம்நடந்து பாரத்துவாச மகாமுனி ஆசிரமத்துக்குச் சமீபத்தில் போனார்கள். அந்தமகாமுனி அனேக ரிஷிகளோடுடனே எதிரே வந்தார்.

---

### குகனைகண்டு நீங்குதல்.

அப்படிவந்த பாரத்துவாசரைப் பிதாவாக எண்ணி

பாதாசேவித்தார். சிவனுக்குச் சமானமான அந்தமகாரிஷியு மிருந்த சந்தோஷத்தோடு ஆசிகள்கூறி அப்பா! உனக்குவந்த ராச்சியத்தை அங்கீகரித்து ராச்சியபரிபாலனஞ்செய்யாமல், சடைமுடியும் மரவுரியுமாய் வரவேண்டிய காரணமென்னவென்று கேட்க, அதற்கு பரதர் மிருந்தகோபத்துடனே எனக்கு யுக்தமானகாரியஞ்செய்ய இல்லை என்றிப்படிவந்தால், தேவரீர் இப்படிகேட்கிறது உத்தமமல்லவே! ஸ்வாமி யென்றுசொல்லி, அந்தவேத நாயகனை ஸ்ரீராமனுக்கு நான் இளையவனல்லவா! அப்படியிருக்க நான்முடிசூட்டிக்கொள்ளலாமா! கூடாது ஆதலால் அந்தசமாசாரம் அவருக்குச்சொல்லி அழைத்துவரப்போகிறேன், அதற்கு அவர் சம்மதித்துவராவிட்டால், நானும்கூட ஆரணியத்திலே வாசஞ்செய்கிறேனென்று பரதன்சொல்ல, அந்தவார்த்தையை பாரத்துவாசர் முதலான. ரிஷிகளெல்லாம் (சந்தனங்கொண்டுவந்து அப்பினதுபோல) கேட்டு சரீரம்புளகாங்கிதமானார்கள். பின்பு பாரத்துவாசர் பரதனைத்தம்முடைய பன்னசாலைக்கு அழைத்துப்போய் சேனாசமுத்திரத்துக்கெல்லாம் விருந்துசெய்து வைக்கிறேனென்றுசொல்லி ஓமகுண்டத்திலே மந்திரயுக்தமாய் ஆகுதிபண்ணினார். அப்போது தேவலோகத்து சாம்பிராச்சியமெல்லாம் அவ்விடத்தில் வந்தது. இந்தசேனாசமுத்திரத்து ஸ்திரீபுருஷாள் சகலரும்பிறந்து வேறே ஒருலோகஞ் சேர்ந்தவர்கள்போலத் தங்களுடைய சஞ்சலங்கள் முதலியவைகளைமறந்து, சந்தோஷமானார்கள். புருஷாளுக்கெல்லாம் தங்கள் தங்கள் ஸ்திரீகள்போல, தேவரம்பைகள் மிருந்த அன்புடனேதிருமாளிகைக்கழைத்துக்கொண்டுபோய்சவ்வாதுபரிமளமுதலிய ஆகாயகங்கைதீர்த்தத்தினாலேஸ்னானஞ்செய்வித்துகற்பகவிருக்ஷம் நவநிதிகள்கொடுத்த வஸ்திராபரணங்களை உடுத்திப் பொன்பாத்திரங்களில் தேவேந்திரன் சாப்பிடுகிற அமிர்தம்போலப் பரிமாறினார்கள். அதிகசந்தோஷத்துடனே அவர் அவர்கள் சாப்பிட்டபின்பு, பஞ்சணைமெத்தையின்பேரில் மனோ இஷ்டமாய் நித்திரைசெய்தார்கள். ராஜாக்கள்முதலான சகலஜெனங்களுக்கும் வரிசைதப்பாமல் தேவர்களைப் பூஜிதம்பண்ணுகிறதுபோல தேவரம்பைகள் பூஜித்தார்கள். பாரிஜாதபுஷ்ப வாசனையுடனே மந்தமாருதம்வந்து வீசிற்று. யானைகளெல்லாம் கற்பகவிருக்ஷத்தினுடைய தளிர்களைச்சாப்பிட்டது. ஆகாயகங்கையாகிய தீர்த்தத்தைப் பானம் செய்தது. [illegible] ன்றாவரும் தங்களுக்குத் தெய்வகன்னிகை[illegible]. தாதிமார்போல ஏவல் உபசாரஞ்செய்ய, திருத்தி அடைந்தார்கள். இப்படியாக சகலரும் இந்திராதிபோகம் அநுபவித்திருந்தார்கள். பரதன் காயும் கிழங்கும் சாப்பிட்டு புழுதியிலே படுத்துக்கொண்டு ராப்பொழுதைப்போக்கினார். பொழுதுவிடியவே சகலரும் கனவுகண்டதுபோல எழுந்திருந்தார்கள். தருமச்சிந்தை யில்லாதவன் பாக்கியம்போல அந்தபாக்கியம்போய்விட்டது. அதற்குமனம் வருந்தாமல் முன்ஜனன மெடுத்தவர்கள்போல வாகிநடந்தார்கள். இந்த சேனாசமுத்திரத்தினுடைய கால்தூளிகள், சூரியப்பிரகாசத்தையுமறைக்க, இது சமுத்திரமல்ல சேனைதானென்று தேவர்களுக்குத் தெரிய, சோலைகளும் பர்வதங்களும் பொடிகளாகமிதித்துக்கொண்டு பாலைநிலம்போய் சேர்ந்தார்கள். அவ்விடத்திலே யானைமின்மதங்களினாலே காடுகளெல்லாம் சேறுகளாய், நடக்கிறவர்களுக்கு நடைகொடாமலிருக்க, குடைகள்-கொடிகள்முதலானதுகள் ஆகாசமெல்லாம் பந்தல்போல கவிந்திருக்க, அந்தபாலைநிலத்தைக் கங்கையாகக் கடந்துபோனார்கள். இந்த ராச்சியமெல்லாம் நீயாவென்று கொடுத்துத் தாயைக்கோபித்துக் கொண்டுவருகிற பரதனைக்கண்டு, அங்கே இருக்கிறகல்லுகளும் கனிந்து உருகிற்று. பட்டுப்போனமரங்களெல்லாந் தளிர்விட்டது. அந்தபாலைநிலத்தை மருதநிலம்போல குளிர்ச்சியாகவேநடந்து அப்பால் சித்திரகூடப் பர்வதம்போய் சேர்ந்தார்கள். உயிரைப்பார்க்கிலும் ஒழுக்கம் நல்லதென்று இறந்துபோன மகாராஜாவினுடைய சேனை இப்படியாகவந்தபோது கால்தூளிகள் குதிரையினுடைய சத்தங்கள் யானையினுடையமுழக்கங்கள் முதலானதுகளினாலே, ஏதோ சேனைக்கூட்டம் வருகின்றதென்று, லக்ஷ்மணர் அறிந்து அதிசீக்கிரமாய் ஒருகுன்றின்மேலேறி சமுத்திரம்போல வருகிற தங்கள் சேனைகளைப் பார்த்தார். இந்தபரதன் சேனாசமுத்திரத்தைக் கூட்டிக்கொண்டு மனதிலே இருக்க கறுவினாலே ஸ்ரீராமன்பேரிலே யுத்தத்துக்கு வருகிறானென்று நிச்சயமாக எண்ணி மிருந்தகோபத்துடனே குன்றிலிருந்து பூமியிலேகுதித்து, வழியிலிருக்கிற குன்றுகள் பாறைகள் நீறாய்ப்போக நடந்து ஸ்ரீராமன் சமீபத்துக்கு அதிசீக்கிரமாய்க்கொஞ்சமாகிலும் மனதிலே நினையாமல், உம்முடையபேரிலே யுத்தத்துக்குச் சேனாசமுத்திரத்துடனே வந்தானென்று சொல்லி, அதிசீக்கிரமாய் அரையிலே வாள்கட்டிக்கொண்டு, வீராண்டாமணி அம்பறாத்தூணி தரித்துக்கொண்டு, கவசம் பூட்டிக்கொண்டு, கையிலே வில்லை எடுத்துக்கொண்டு, ஸ்ரீராமனுடைய பாதத்தைத்தொட்டு வணங்கிச்சேவித்துக்கொண்டுசொல்லுகிறான், இப்பரம் இறந்த அந்தபரதனுடைய புஜபலமும், ராஜன்படைத்த சேனைகளுடைய பெருமையும், உம்முடைய தம்பியான என்னுடைய ஒருமையும், இன்றைக்குத் தாங்கள்பார்த்து சந்தோஷப்படுவீர்கள். வருகிற யானைக்கூட்டங்களை எல்லாம் உருட்டிக்கொண்டு தேர்களை எல்லாம் இழுத்துக்கொண்டு கடல்செல்லாம் நிறைத்துக்கொண்டு இரத்த ஆறுகள்பெருகிச் சமுத்திரத்திற்போய் கலக்கிறதைப் பார்த்துக்கொண்டிரும். அநேகங்கள் எதிர்வரும் அவர்கள் கைகளிலும் கவசம்பூண்ட அவர்கள் மார்புகளிலும் என்னுடைய பாணங்கள்தைத்து அவர்கள் உயிர்களைக்குடித்து இரத்தத்திலே தோய்ந்து, அஷ்டதிக்கெஜங்களும் இடுக்கிட்டு பயந்தோட என்னுடையபாணங்கள் திரிகிறதைப் பார்த்துக்கொண்டிரும், குதிரைகள்கட்டி இருக்கிற ரதங்களெல்லாம்பேய்கள்போலத் தலைகத்தி ஆடவும், பூமிதேவியானவள் முதுகாற்றவும், இரத்த ஆறுகளில் மிதக்கும் கவந்தங்



கள்-கூளிகளும், பேய்களும், சந்தோஷித்து பந்தாடவும் உமக்கு ராச்சியமாயிற்றென்று அதுகள் துள்ளித்துள்ளிப் பார்க்கப்போகிறதையும் பாரும், ஒருபிள்ளையினுடைய ராச்சியத்தை மற்றொருபிள்ளையாகிய பரதனுக்கு ராஜாகொடுத்தாரே அதை ஆளாமல் இன்றைக்கே என்னுடைய பாணத்தினாலே நரகபூமியை அவர்கள் ஆளப் பாரும், உமக்கு ஆரணியவாசத்தைக் கொடுத்து அதற்கு அங்கலாய்க்கிற உமது தாயாருடைய துயரத்தைப்பார்த்து, சந்தோஷித்துக்கொண் டிருக்கிற கைகேசி, இனி பூமியில் விழுந்துபுரண்டு அழப்போகிறதைப்பாரும், இந்தசேனாசமுத்திரத்தை எனது ஒருபாணத்தினாலே (முப்புராதிகளைக்கருவருத்ததுபோல நாம்சப்படுத்திவிடு[illegible]லோகம்ஸ்ரீக்கப்போகிறதைநீர்பாரும்) என்றிப்படிசொல்லுகிறலக்ஷ்மணனை ஸ்ரீராமன்பார்த்து லக்ஷ்மணா! இந்தபதினான்குலோகத்தைநினைக்கிப்போடுகிறேனென்று நினைத்தால்அதைஒருத்தராலேவிலக்கக்கூடுமோ! அந்தஅருமைதான்அதைக்குறித்துசொல்லவும்வேணுமா! நான்ஒருவார்த்தைசொல்லுகிறேன்கேள்.அப்பா! நம்முடையகுல[illegible]ல்பிறந்தவர்களிலேயார்தருமம்தப்பிநடந்தார்கள்[illegible]தனுடையஅந்தரங்கபக்தியை ஒருவராலேசொல்லக்கூடுமோ! அவன் அப்படிக்கொத்தவனல்ல அது உனக்குத் தெரிந்தும் நீ என்னிடத்திலவைத்திருக்கிற ஆசையினாலே அதை உணரயில்லை, பரதன் வருகிறானென்றால் ராஜா அனுப்பவேணும், அல்லது அவன்பிறால் வரவேணும், அல்லது ராச்சியத்தை நம்மிடவசம் கொடுக்கிறதாய் வரவேணும், இப்படி நாம் யோசனைசெய்யவேணுமே அல்லாமல், சேனைகளும் கூட்டிக்கொண்டு அதிலும் என்னுடன் யுத்தம் செய்கிறதற்கு வருகிறானென்று இவ்வாறுசொல்லலாமா! தருமத்துக்கு ஒரு அறிவாகவும் நன்மைக்கு ஓர்வயிர ஆணிபோலவும் நடந்துக்கொள்ளுகிற பரதனை இப்படிசொல்லலாகாது, அவன்வருகிறது என்னைப் பார்க்கிறதற்கு அல்லாமல் வேறல்ல, அதுவும் நீ பார்க்கப்போகிறாய் என்று தம்பிக்குச் சொல்லிக்கொண்டிருந்தார். அப்போது பரதனும் சேனாசமுத்திரத்தை எல்லாம் பின்வரும்படி உத்திரவுசெய்து [illegible]றியாத தம்பியோடு தான் முன்னே நடந்துவந்தா[illegible]வந்தவர் இரண்டுகரமும் சிரசின்பேரில் வைத்துக்கொண்டு சேவித்தபடியே மிகவும் துக்கித்துக்கொண்டு (து[illegible]மென்பதே ஓர் ரூபமெடுத்துவருகிறது போல) நெருங்கிவருகிற பரதனை ஸ்ரீராமன் பார்த்து லக்ஷ்மணா! பரதன் உயிர்த்தியத்துக்குவருகிறவேஷத்தை நன்றாய்ப்பாரென்றுகாட்டினார். அப்போது லக்ஷ்மணர் அவனைப்பார்த்து வைத்துக்கொண்டிருந்த வார்த்தையையும், கோபத்தையும், தன்புத்தியும் சோர்ந்து கையிலிருந்த வில்லும் கண்ணீரும் பூமியிலேவிழ மிகுந்த துயரத்துடனே நின்றார். ஸ்ரீராமனைப் பிரிந்த மகா லக்ஷ்மியானவள் மிகவும் வேதனை அடைந்து அனுப்பின தூதன்போல பரதன் தொழுதுக்கொண்டேநடந்து வரச்சே ஸ்வாமி! தருமத்தையும் நினையாமல் திருடையையும்விட்டு, நீதியையும்துறந்து, இப்படி வந்து விடலாமாவென்று சொல்லிக்கொண்டே சரீரஸ்மரணை தெரியாமல் இறந்துபோன பிதாவைக்கண்டதுபோல அன்போடு ஓடிவந்து, பாதார விந்தத்திலே விழுந்தார். அப்படி விழுந்த பரதனுடைய வேஷத்தையும், துயரத்தையும் கண்டு உருகி, பிராண னிருக்கின்றதோ! போய்விட்டதோ! என்று திருவுளத்திலே எண்ணி இரண்டுகரங்களாலும் வாரி எடுத்துத் (தயை என்பது தருமத்தைத் தழுவிக்கொண்டதுபோல) தம்பியைத் தனது அகண்டமார்புடனே தழுவிக்கொண்டு தமது கமலநேத்திரங்களால்பெருகிற [illegible]த்தினாலே பரதனுடையசடைமுடி நிறைந்து வழிந்தது. ஸ்ரீராமன் பலதரம் பரதனுடைய வேஷத்தைப் பார்த்துப் பார்த்து உருகி, அப்பா மிகவும் கிலேசத்திலே முழுகியிருக்கிறாய் ஐயா சுகமாயிருக்கிறாரென்று கேட்க, அதற்கு பரதன், ஸ்வாமி! நீர் பிரிந்திருக்கிற மனோவியாதியினாலும் என்னைப்பெற்றவளுடைய வரமென்கிற கூற்றுவனாலும்சத்தியத்தைப் பூமியிலே நிலைநாட்டவேண்டுமென்றும்தேவலோகம் போய்ச்சேர்ந்தாரென்றுசொல்லும் அவ்வார்த்தை புண்ணில்வேல்விட்டதுபோல மனம்நொந்து கண்ணும்மனமும் காந்துபோல சுழல, தேவாதிதேவனான ஸ்ரீராமன்பூமியின்பேரில்விழுந்து,ஸ்வாசமில்லாமல்இடிவிழுந்தநாகம்போலபிறக்கினையதப்பிகிலநேரம் ஸ்தம்பித்திருந்துபலபலவிதமாய்ச்சொல்லி துயரத்தினாலே, பிரலாபிக்கிறார்.

சூரியகுலத்துக்கு அகண்டதீபமே! பூலோகத்தாருக்குத் தகப்பனே! தருமத்துக்குத்தாயே! தயைக்கு ஓர் இருப்பிடமே! ஐயா! சத்துராதிகளுக்கொரு சிங்கமே! இறந்துபோனீரோ! ஐயோ! இனி பூலோகத்துக்கும், சத்திரியத்துக்கும், ஆதரவாகயாரிருக்கிறார்கள் அநேகதவமகிமையுடைய மகாரிஷிகளாலே அருமையான யாகஞ்செய்து என்னைப்பெற்றது உம்முடைய உயிர் இப்படி போகிறதற்காகவா! ராச்சியத்திலிருக்கிற சகலஜீவராசிகளையும் ரக்ஷிக்கிறபாரம் நான்சுமக்க மாட்டேன், அந்தபாரத்தை இறக்கிவிட்டுத் தவம்செய்ய நினைத்தது இதுதானோ! ஆ! உம்முடைய உயிருக்குக் கூற்றுவனானேனா! நான் ராச்சியபாரத்துக்கு சம்மதித்தது இந்தராஜீகத்துக்குச் சம்மதித்து பூமியிலிருக்கிற சகலஜனங்களுக்கும் துயரத்தைக்கொடுத்த அடியேன் மாண்டுபோகவேணுமல்லவா! மாயமே யிந்த சரீரத்துடனே பதினாலுவருஷமும்போய் திரும்பிவருகிறபோது யார்முகத்தைப்பார்ப்பேன், அடியேன்காட்டுக்குப்போனேனென்று கேட்டவுடனே மாண்டுபோனீர். நீர் மாண்டுபோனீரென்று கேட்டும் என்பிராணன்போகாமல் வாழ்வை இச்சித்தின்னமிருக்கிறேனல்லவா! சம்பராசுரன் முதலான பகையாளிகளை ஜெயித்து சந்திரனைப்பார்க்கிலுமிகுந்த குளிர்ச்சியை உடைய ஒருகுடையின்கீழ் ஏகச்சக்கிரேஸ்வரனாய் ராச்சியபரிபாலனம் பண்ணின மகாராஜாவே! வண்மையும், மானமும், தேவர்களாலே சக்தியில்லாத பலமும், நீதியும், மெய்யும், இவைகளெல்லாங் கூடத்தானே கொண்டுபோய்விட்டீரோ! ஐயோ! என்று பலவாறுகப்பிரலாபிக்கிற ஸ்ரீராமனைத் தம்பிமா

ரும் அப்போது வந்துசேர்ந்த ராஜாக்களும் எடுத்துத்
தாங்கினார்கள். வசிஷ்டமகாமுனி தேற்றினார். பாரத்து
வாசர் முதலான ரிஷிகளும், தேசதேசத்துராஜாக்களும்
மந்திரிகளும், படைத்தலைவரும், பின்னையும், வரத்தக்க
பேரெல்லாம்வந்தார்கள். அவர்களைக்கண்டு பின்னும் பு
ரலாநிக்கிற ஸ்ரீராமனை வசிஷ்டமகாமுனிபார்த்து ஒரு
வார்த்தைசொல்லுகிறார். ஸ்ரீராமா ! சகலத்தையும் து
றந்து விடுகிறதும் தருமஞ்செய்கிறதும் இது இரண்டுந்
தவிர வேறேயொன்று இல்லாது. ஜீவனுக்குப் பிறக்கிற
தும், இறக்கிறதும், சுபாவம் மறந்துபோனதோ ! ஐய
னே வேதமுடிவைக் கரைகண்டிருக்கிற தீரச்சுதே ! அ
னேககோடிபிறவி எடுத்த உயிர்களைத் தருமமாய் தரும
ங்களை விசாரித்து ரக்ஷித்தவனென்று கூற்றுவன்விட்டு
விடுவானோ ? கருப்பத்திலிருந்து உற்பத்தி யாகிறதற்
கு முன்னமேதானே உயிரிறந்து போகிறவர்களையும்பா
ர்த்திருக்கிறீரோ, அனேக போகபாக்கியத்துடனே அறு
பதினாயிரவருஷகாலம் ராச்சியபாரஞ்செய்து வாழ்ந்து
உண்டு சுகாபத்தில் இருந்தவர் இறந்தால் அவருக்கா
க நீர் அங்கலாய்க்கலாமா ! ஸ்ரீராமா ! கேளும் பிர்மா
விஷ்ணு ருத்திரர் என்கிற திரிமூர்த்திகளாலும் காலமெ
ன்கிற வலையைத்தாண்டிப் போகக்கூடுமா ? கண்ணுக்கு
க்ஷாயங்கிறதாயிருக்கிற ரூபங்களுக்கெல்லாம் தலைமையா
ன பஞ்சபூதங்களுக்கும் அழிவுண்டாயிருக்கின்ற தெ
ன்று சொல்லச்சே மற்ற உயிர்களுக்குச் சொல்லவே
ண்டுமா ! ஸ்ரீராமா ! புண்ணியமென்கிற நெய்யிலே கா
லமென்கிற திரியைப்போட்டு விதியென்கிற சோதிபிர
காசித்திருக்கிற தீபத்தினுடைய நெய்யுந்திரியுமாண்டு
போனால் அதுநின்றுபோகிறதற்குக் கேட்கவேணுமா !
இவ்வுலகத்தில் உயிரானது சரீரமெடுத்தால் இலேசங்க
ளிலேகிடந்து உழன்று அவ்வுலகத்தில் சென்றால் அங்
கும் நரகத்திலே அழுந்தி செய்தவினைகளை அநுபவித்து
பலயோனிகளின்வழியே அவதரித்து இருக்கின்றதைக் க
ணக்கிட்டு சொல்லக்கூடுமா ! ஸ்ரீராமா ! உன்னுடையபி
தாவாகிய அந்தமகாராஜன் பிர்மாண்டத்துக்குமப்பா
ல் விஷ்ணுலோகம்போய் சேர்ந்து விளங்கி இருக்கிறார்
அதைப்பார்க்கிலும் நீர் அவருக்கு வேறு உதவிசெய்ய
வேணுமா ! நீர் இப்படி நீர்க்குமிழிபோல் கண்டு மறை
கிற சரீரத்துக்காக அங்கலாய்க்கிறது யுத்தமல்லவே !
ஸ்ரீராமா ! இப்போது நீர்செய்யவேண்டிய கடனை உம்
முடையதிருக்கரங்களினாலேசெய்துமுடியுமென்றுசொ
ல்லிகண்களைத்துடைத்துத்தேறுதலைசெய்தார். அப்போ
து அனேக ராஜகூட்டங்களோ ஸ்ரீராமமூர்த்தியைத்தழுவி
க்கொண்டுவர, வசிஷ்டரும் கூடவரத் தடாகத்துக்குப்
போய்ச் சேர்ந்து ஸ்ரீராமன் ஸ்நானஞ்செய்து எழுந்திரு
ந்து வசிஷ்டமகாமுனி சடங்குகாட்ட சாஸ்திரப்படிசக
லஜீவன்களிலும்கலந்து இருந்த ஆகாரம் கொடுக்கிறச
ர்வாந்தரியாமியான ஸ்ரீராமன் தகப்பனுக்கு மூன்று
கை ஜலம்விட்டார். பின்னையுஞ் செய்யவேண்டிய காரிய
ங்களெல்லாம்செய்து ஸ்ரீராமன் தம்பிமார்படைத்தலைவ
ர் ராஜாக்கள் முதலானபேர்சூழ ஜானகி இருக்கிறசாலை
க்குப்போனார். அவ்விடத்தில் சீதை தனியே பரிதேவி
யைப்போ லிருக்கிறதைப் பரதன்கண்டு கரங்களினாலே
கண்களில் மோதிக் கொண்டு பாதார விந்தத்தில் வி
ழுந்து அழுதார். அவர் அழுகிறதைக் கண்டு ஜன
னும் அறியாத சீதையும் விம்மிவிம்மி அங்கலாய்க்க, ஸ்ரீ
ராமன் பரதனைத்தாங்கி எடுத்து சீதையைப்பார்த்து ஓ!
சீதா ! தம்பிட ராஜா நாம் பிரிந்தவருத்தினால் இறந்து
போனாரென்று சொன்னார். அந்தவார்த்தையைச் சீதா
பிராட்டிகேட்டு மனது நடுக்கிட்டு நடுங்கி கண்களிலே
நீர் பிரவாகம்வர பூமியின்பேரிலேகையைவைத்துக்கொ
ண்டு யாழ் வீணைகள்போலிருக்கிற மிருதுவான வசன
ங்களினாலே பன்னிப்பன்னிப் பிரலாபித்தாள். ஸ்ரீராமன்
பிறகே இந்த ஆரணியமும் அயோத்தியாபட்டணம்
போலவே எண்ணி நடந்துவந்த சீதாபிராட்டி ராஜா இ
றந்துபோனாரென்கிற பேச்சினாலே துக்கசாகரத்திலே
காலைவைத்தாள். அப்போது அனேகம் ரிஷிபத்தினிகள்
சீதையைத்தழுவித் தாங்கிக்கொண்டுபோய் ஸ்நானஞ்செ
ய்துவைத்து தேறுதலைசொல்லி தேற்றி ஸ்ரீராமன் சமீ
பத்தில்கொண்டுவந்து சேர்த்தார்கள். பின்பு தாய்மார்க
ள் அனேகமந்திரிகளோடு சுமந்திரனோடு ஸ்ரீராமன் எதி
ரேவந்து தொழுதுக்கொண்டு நின்றான். பிரமதேவ
னைப்பெற்ற ஸ்ரீராமன் தாய்மார்களைக்கண்டு ஐயா ! எங்
கே சொல்லுங்களென்று அவர்கள் பாதாம்புயத்தில்வி
ழுந்து பிரலாபித்தார். அவர்கள் மிகுந்த துயரத்துட
னே அலறி எடுத்து தழுவிக்கொண்டு அழுதார்கள். அந்த
துயரத்தை ஒருவராலேயுஞ்சொல்லி கரைகாண முடி
யாது பின்னாலேவந்த சேனாசமுத்திரமும் ஸ்திரிகளும்,
நெருப்பிலேவிழுந்த மெழுகுபோல உருகித் தேம்பித்
தேம்பி அழுதார்கள். தாய்மாரும், ஸ்திரிகளும், சீ
தையைக் கட்டிக்கொண்டு துக்கசமுத்திரத்திலே விழுந்
து அழுந்தி அழுதார்கள். சேனாவீரரும், பட்டணத்து
ஜனங்களும், தேசதேசத்து ராஜாக்களும், அந்தஜ
ங்களும், மற்றுமுண்டான பேர்களும், தங்கள் ராஜாவா
ன ஸ்ரீராமனைக்கண்டு திகைத்தார்கள். அந்தருணத்தி
ல் சூரியன் சேஷசாயான இந்த ஸ்ரீராமன் தன்குலத்தில்
பிறந்த நாயகனைப்படியினாலே இறந்துபோன மகாராஜா
வுக்குத் தானும் நீர்க்கடன்செய்கிறவன்போல மேற்சமு
த்திரத்தில் மூழ்கினான். அன்றுபோய்மறுநாள் ராஜகூ
ட்டமும், மகாரிஷிகளும், பந்துஜனங்களும், தம்பிமா
ரும்சூழ, ஸ்ரீராமன் வீற்றிருந்தார். ஸ்ரீராமன் பரதனைப்
பார்த்து தம்பி ! தகப்பனார் இறந்துபோயிருக்க அவரு
டைய ஆக்கினையினாலே ராஜ்ஜியமும் உன்னுடைத்தா ! இருக்
க முடி சூட்டிக் கொள்ளாமல் விரதமாய் மரவுரியும்,
சடையும் தரித்துக்கொண்டது யாது நிமித்தமென்றுமி
குந்த அன்புடனே வினவ, அவ்வார்த்தையைப் பரதன்
கேட்டு மனம்பதைத்து எழுந்திருந்து கரங்குவித்துதொ
ழுது நின்று. ஸ்ரீராமனை நன்றாய்த்தரிசித்து, ஸ்வாமி, த
ருமவழி நடக்கிற தற்குத் தங்களை அல்லாமல் வேறு
யாரிருக்கிறார்கள். அப்படிக்கிருக்க. அதைத் திரும்பிதா
ங்கள் மாறுபடச் சொல்லலாமாவென்று உசாவி, பின்



னும் சொல்லுகிறார். இல்லறத்திற்கு யோக்கிய மில்லா
தவள், வரத்தினாலே உம்மையும் உமக்கு யோக்கியமில்
லாத காரியத்தையும் செய்வித்து மஹாராஜாவையும்
கொன்றுலோக முள்ளவரைக்கும் மறைக்கக்கூடாத இ
ழிவான பழியைப் பூண்டவளுடையமகனை அடியேன்
தவத்திற்கு யோக்கியமாவேனா ! ஆகவுமாகமாட்டேன்,
இந்த லோகத்தை எல்லாம் கோசப்பண்ணின பாவிவ
யிற்றிலே பிறந்தநான், இறந்துபோகமாட்டாமல்தானி
ருக்கிறேன். தவமும் செய்யாமற் போனால் இந்தபாவம்
எப்படிதான் ஒழியும். பதிவிருதாதருமம் இல்லாதஸ்திரீ
யும்-பொறுமை இல்லாததபசும் – அருளில்லாத தரும
மும் – பூர்வாபூர்வம் நடந்த முறையைவிட்டுச் செய்கி
ற ராஜரீகமும் [illegible] மாகுமா ! உம்முடனே கூடப்
பிறந்த அடியேன் நீர் பிரிந்து தருமம் தப்பி – துறந்து
விட்டு – தபசுக்குத் தடங்கினேனென்றால், அதை நான்
மறந்து நீதிதப்பி நடக்கிறவனைப் போல தருமத்தைக்
கொன்று தின்று அந்த ராஜரீகம் ஆள்வேனா ! உம்மிட
த்தி லிருந்த அன்பினாலே ராஜா இறந்துபோக, நீர் மகா
க்கிரமான ஆரணிய த்தில்வந்துசேர, இதுதான் சம
யமென்று நா டிய மாள்கிறதற்கு, நான் என்னப
கையாளியா ! உங்கள் தகப்பனார் செய்த இமையும்தாயி
ன் பாவமும் தும்படி தேவரீர் பட்டணத்துக்கு எழு
ந்தருளிவந்து ராஜ்ஜிய பாரஞ் செய்ய வேண்டிய தென்
று, தன்மனோபாவம் நன்றாய்த்தோன்றச்சொன்னார். அ
ந்தவார்த்தையை ஸ்ரீராமன்கேட்டு இவ்வளவுதானா இவ
ன்மனதென்று திருவுளத்தில் எண்ணித்தம்பி ! நான் ஒ
ன்று சொல்லுகிறேன் அதைஉய்த்துக்கேளென்று சொ
ல்லுகிறார். நீதியும்வாய்மையும்முறைமையும் வேதமும்
மேன்மையும் தருமமும் இவைமுதலிய வைகளும் மகா
ரிஷிகளான பிராமணராலே உண்டாகும்கேள்வியுஞா
னமும் – சீலமும் – காலமேன்மையும் தேவரும்சகலமு
ம் பெரியவரென்றே மனதிலே – வை, அந்தபெரியவர்க
ளாரென்று ருய்யோசனை செய்து பார்த்தால் தகப்
பனும் தாயுமே அல்லாமல்வேறல்ல, அப்படிக் கொத்
த தாய், வரம் வாங்கிக்கொள்ள தகப்பனு ராக்கியாதித்
த படிக்கு, நம்ட – குலதருமம் தப்பாமல் ஆரணியத்து
க்கு வந்தேன் இவ்வாறில் வந்தான், நீவருந்திச் சொ
ல்லுகிறவாறு திரும்பி அந்ததருமங்களை விட்டு வந்து
விடுகிறது, தமா ! பிள்ளைகளானவர்கள் தாய் தகப்
பனைப் பூஜித்து அவர்கள் மனதுக்கு இசைந்தபடி நடந்
துக்கொள்ளுகிறதா ! அல்ல வென்று அவர்களுக்கு அ
னேககால மட்டும் பழியுண்டாகும்படி செய்துதானும்
பழிசம்பாதித்துக் கொள்ளுகிறது நல்லதா ! நம்முடை
ய தகப்பனார் இதிலே பொய் சொன்னாரென்று பழியு
ண்டாய் அவடத்தில் எந்தப் பிராப்தி யாகுமோ ! நா
ன் ராச்சியத்திலே வியாபித்து இஷ்டானுபோகம் அநு
பவித்துக்கொண் டிருக்கிறது, உங்கள் தகப்பனார் கொ
டுத்த வாக்கினாலே ராஜ்ஜியமும் உன்னுதான படியினா
லே, நீபோய் ராஜ்ஜியபாரம் செய்ய வேண்டியது அம்
முறைமையின்படியே நீபட்டாபிஷேகம் பண்ணிக் கொ
ண்டு ராச்சியபாரஞ் செய்யவேண்டிய தென்று ஸ்ரீராம
ன்சொல்ல, அதற்கு ஸ்வாமி ! நீர் முன்னே பிறந்தவர்–
இந்த மூன்று லோகத்துக்கும் நாயகமானவர் – இவ்வுல
கம் உம்மதுதான் அந்த ராச்சியத்தை என்ன தென்று
சொல்லுகிறீர், அப்படியே என்னதானாலும், நான்இன்
றைக்கு உமக்குக்கொடுத்தேன் நீர்வந்து மகுடம் சூட்டி
க்கொள்ளும், ராச்சியமெல்லாம் வருந்திஇலேச சமுத்
திரத்திலே விழுந்து கிடக்க, நீரும் உம்முடைய மனது
க்குச் சரிப்போனபடி செய்கிறது யுத்தமமா ! இப்படி
யாக ராச்சியம்வருந்தி கலங்கிப்போகாமல் காத்தாருளு
மென்று பரதன் சாஷ்டாங்க மாகச் சேவித்து உபய
சரணார விந்தங்களையும் தன்கரங்களால் பிடித்துவேண்
டிக் கொண்டான். அதற்கு ஸ்ரீராமன் அப்பா ? என்னி
டத்திலே உனக்கு உண்டாகிய பத்தி விசுவாச அன்பி
னாலே ராஜ்ஜியத்தை என்வசம்பண்ணினால் அது உத்த
மமா ! நியாயமா ! அபவாதத்திற்குப் பயப்பட்டு. பிரா
ணனை விட்டுக் கொண்ட தகப்பனார் சொன்ன பதினான்
கு வருஷமும் இன்றோடாய்விட்டதா ! இல்லையே, அ
ப்படிக்கிருக்க அவர்சொன்னபடி பதினாலுவருஷமும் ஆ
ரணியத்திலே இருந்து வாசம்செய்து நான்வருகிறேன்
அதுவரைக்கும் நீ நான்சொன்னபடிக்கு ராச்சியபாரம்
செய்துக்கொண்டிரு ராஜா சுகமாயிருக்கச்சே முன்னே
என்னை அழைத்து நீ பட்டாபிஷேகம் பண்ணிக்கொள்
ளென்று சொன்னார். அவர்பேச்சுக்குப் பயப்பட்டு அ
ஞ்சி அதற்குச் சம்மதித்தேன், அதை நினைத்துப்பார்த்
து நீயும் அப்படியே என்வார்த்தையை மறுக்காமல், நா
ன்சொன்னபடியேகேள் துயரப்படாதே என்று இப்ப
டிக்கெல்லாம் ஸ்ரீராமன்சொல்ல, அப்போது வசிஷ்ட
மகாமுனி பரதனைப்பார்த்து நீர் சும்மாயிருமென்றுகை
அமர்த்தி, புருஷோத்தமனை ஸ்ரீராமனைப்பார்த்து ஒரு
வார்த்தை சொல்லுகிறார், பிரளயகாலத்திலே சமுத்தி
ரம்பொங்கிப் பிரபஞ்சமெல்லாம் மூழ்கிப்போகும்போ
து ஸ்ரீமந்நாராயணன் ஆதிவராக ரூபமெடுத்து இந்த
பூமியைத் தம்முடைய கொம்பின் இளம்பிறையிலேகள
ங்க மிருக்கிறதுபோலப் பிரகாசிக்க, தாங்கினார். அப்
போது ஐந்துபூதமும் மறைந்தது சகலமும் போய்விட்
டபின்பு, மறுபடி சிருஷ்டிக்கவேணுமென்று உந்திக்கம
லத்திலே பிரம்மாவை உண்டாக்கினார். அந்தபிரம்மா
பிரபஞ்சமுதல் சராசரங்களை எல்லாம் சிருஷ்டிக்க, மு
ன்னே உன்குலத்து ராஜாக்களில் மநுமாந்தாதிமுதலா
னபேரைச் சிருஷ்டித்தார். அவர்முதற்கொண்டு ரா
ஜாக்கள் இதுவரைக்கும் முறைதப்பிநடந்தவர்களில்லை.
ஆதலால் ஸ்ரீராமா ! உனக்கு நான் ஒன்று சொல்லுகி
றேன் கேளும் வேதத்திலே பெரியவர்களென்றுசொல்
லி இருக்கிறதில் இம்மையுமறுமையும் இரண்டையும்
கொடுக்கிறதுவித்தை, அந்தவித்தைச்சொல்லி கம்பித்
தவனே பெரியவனென்று சொல்லுவார்கள். நான் உம
க்கு சகலவித்தையும் உண்மையாகச்சொல்லி இருக்கி
றேன் ஆதலால் என்பேச்சை நீர்தள்ளலாகாது, ராச்சி
யம் உம்மதுதான், நீர்வந்து ராச்சியபாரம் பண்ணுமா

ன்றுசொன்னர். அப்படிசொன்ன வசிஷ்ட மகாமுனி யை ஸ்ரீராமன் செந்தாமரைக் கமலம்போலிருக்கிற கரங்களினலேதொழுது, ஸ்வாமி ! அடியேன் ஒருவிண்ணப்பம் பண்ணிக்கொள்ளுகிறேன் அதை க்ஷமித்துக் கேட்டருளவேணுமென்று சொல்லுகிருர். சர்வக்கியான பெரியோர்களாகட்டும்-பொய்யன்-புலையன்-முதலான பெயராகட்டும் இன்னது செய்கிறேனென்று வாக்கினலே சொன்ன பிற்பாடு, அந்தவாக்கைமறுத்துக் கடக்கிறது உத்தமமல்லவே, தாயார்சந்தோஷத்துடனே ஆக்கியாபித்தது தகப்பனு ரப்படியே செய்யென்று ஏவின தற்குச் சம்மதித்து, அந்தவார்த்தையை சிரசாய்வகித்துக்கொள்ளாத புலையனைப்பார்க்கிலும் கிரமந்தெரியாதாயென்று திரிகிறது கல்லதல்லவா, முன்னுதாகச் சொன்ன தாய்தகப்பனுடைய வார்த்தையை நான் சிரசாகவகித்துக்கொண்டு அப்படியே செய்கிறேனென்று வெளிப்பட்டு வந்துவிட்டேன், இப்போது தேவரீர் இப்படிக்குச்சொன்னல் இந்த இரண்டில் நான் எந்தகாரியத்தைச் செய்யலாம்? தேவரீர்தானே யோசனைசெய்து அடியேனுக்குக்கட்டளை இடுங்களென்று ஸ்ரீராமன்சொல்ல, அந்தவார்த்தையை கேட்டு வசிஷ்டர் இனி நாம் என்னசொல்லப்போகிறோம், சொல்லுகிறதற்கு இடமில்லையென்று சும்மாயிருந்தார், அப்போது பரதன்ராச்சியம் ஆளுகிறவர்கள் யாராகிலும் ஆளட்டும் அடியேன் ஆரணியத்துக்குக்கூட வருகிறது நிச்சயமென்று சொன்னர். அதை தேவர்க்கள் யோசனைசெய்து இப்படியாக பரதன் ஒருபிடியா பிடித்துக்கொண்டு ஸ்ரீராமனைத்திரும்ப அயோத்திக்குக் கொண்டுபோனல், நம்முடைய காரியங்கள் கைக்கூடிவராதென்றெண்ணி அசரீரிவாக்கியமாக ஸ்ரீராமன் தகப்பன்பேச்சுத்தள்ளாமல் பதினன்குவருஷமும் ஆரண்ணியத்திலிருந்துவாசஞ்செய்யவேணும், பரதமகாராஜனே ராச்சியம் ஆளவேணும் என்று இப்படியாக தேவர்கள் சொல்லவே ஸ்ரீராமன் பரதனைப்பார்த்து அப்பா, தேவர்கள்சொன்ன அசரீரிவாக்கியம் தள்ளாரைகாது, அதுவும் அல்லாமல் உன்னைநான் இரந்துக்கேட்டுக்கொள்ளுகிறேன், நான் சொன்னபடியே பதினலுவருஷமும் ராச்சியபாரம் பண்ணென்று ஸ்ரீராமர் பரதனுடைய கைகளைப்பிடித்துக்கொண்டார். அதற்கு பரதர் துக்கித்து அழுது ஒருவார்த்தை சொல்லுகிருர். ஸ்வாமி ஆனல் இந்த பதினலுவருஷமும் கழித்த உடனே நீர் அயோத்திக்குவந்து ராச்சியபாரம்பண்ணுமல் போனல் உம்மிட ஆணைப்படிக்கு நான் அக்கினியிலேவிழுந்து பிராணனை விடக்கூடவேன் என்றுதுணிந்துசொன்னர். அப்படிசொன்னபரதனை மார்பிலே அணைத்துக்கொண்டு அன்புடனே பார்த்து மனதுருகி அப்படிதானே ஆகட்டுமென்று சொன்னர். பரதன் விம்மி அழுது வேறே ஒன்றும் செய்கிறதற்கு இல்லாதபடியினலே எப்படி பிழைத்திருப்போமென்றெண்ணி ஸ்வாமி ! உம்முடைய திருப்பாதுகைத்தைக் கொடுமென்றுகேட்க, அப்படியே இரண்டுபாதுகையும் கொடுத்தார், அதைவாங்கிக்கொண்டு, அழுதகண்ணுடனே இதுதான் எனக்குக் கிரீடமென்று சிரசிலே வைத்துக்கொண்டு சாஷ்டாங்கமாகச்சேவித்து பரதன் திரும்பி நடந்து போனுர். மகாரிஷிகளும் தாய்மார்க்ளும் முதலியயாவரும் வசிஷ்டர்முதலிய பாரத்துவாசரும் பட்டணத்திலவந்து சேர்ந்தார்கள். ஸ்ரீராமர் விடைகொடுக்கக் குகனும் நடந்தான். பரதன்பாதுகைத்தைச்சிரசிலேவைத்துக்கொண்டு கங்கையைத்தாண்டி அயோத்தியாபுரியைப் போகாமல் ராத்திரி நித்திரையைவிட்டு நந்திக்கிராமத்திலே போயிருந்துக் கொண்டு ஐம் புலாதிகளையும் ஒடுக்கிக்கொண்டு இந்தப்பாதுகைதான் இந்த ராச்சியத்துக்கு அதிகாரியென்று எண்ணிக்கொண்டு ராத்திரிபகல் ஓயாமல் கண்களிலே தண்ணீர் பெருக்தெற்கு திசையைப் பார்த்துக்கொண்டே இருந்தார். சித்திரகூடத்திலே இருந்த ஸ்ரீராமரும் இவடத்தில் இருந்தால் இன்னம் வந்து வலிவு செய்வார்களென்று எண்ணித் தம்பியும் சானகியுமாக தெற்கு திசையை நோக்கி நடந்தார்.

## அயோத்தியாகாண்டம்

முற்றிற்று.





ஸ்ரீராம்ஜெயம்.

ஹரிஹரஹிரண்யகர்ப்பேப்யோகம:.



ஸ்ரீசீதாலட்சுமண பரதசத்துருக்ந அநுமத்சமேத ஸ்ரீராமசந்த்ர பரப்பிரம்ஹனே நம:.

# ஸ்ரீமத்கம்பராமாயணவசனம்.

## ஆரணியகாண்டம்.

### காப்பு விருத்தம்.

...பாதுதியிர்பேதஉருவட்பிறந்கலா, சோதியோதிஉணருந்தொழும்உணர்ச்சிஉதவும்*
வேதவேதியர்விரிஞ்சன்முதலோர்தெரிகலா, ஆதிதேவரவரொம்மதிவிஞக்கதிவரோ......*

### விராதன்வதை.

மூத்துக்களை இருத்திப்பதித்து இருக்கிறது போலத் தந்த பந்திகளை புடைய, சீதாலக்ஷ்மி புடனே வில்வீரான ஸ்ரீராமலக்ஷ்மணர் சித்திரகூடபர்வதம் விட்டுத்தண்டகாரணியம் சேர்ந்து, காமம் - வெகுளி - மயக்கம்- என்கிற மூக்குற்றங்களையும் கடிந்து திரானின்ற அத்திரிமஹாரிஷியின் ஆசிரமத்துக்குபோய் அவரைச் சேவித்துக் கொண்டார்கள்அவரும்மிகுந்தசந்தோஷமாகஇவர்கட்கு ஆசீர்வாதம் செய்து, மகாதுபாவர்களான நீங்கள் இவடத்தில், எங்களுக்குத் தரிசனம் கொடுக்க வந்தது எளிதோ ! தேவர்களும் மற்றஉலகத்தி லுள்ளவர்களும் வந்ததுபோ லல்லவா ! இப்படி நீங்கள் வரும்படி எங்களியார் தவம்செய்தோ மென்று மனதுருகிப் பக்துவர்க்கங்கள் வந்தால் எவ்வளவு சந்துஷ்டியாகுமோ அவ்வளவு சந்துஷ்டி யானர்கள். அந்த அத்திரி மகாரிஷியின் ஆசிரமத்தில் அன்றையத்தின மிருந்து, அந்த ரிஷிபத்தினியாகிய அநசூயை சீதைக்கு ஆபரணங்களும் வஸ்திரங்களும, சந்தன புஷ்பங்களும் கொடுக்க ஸ்ரீராமன் ஆக்கியாபிக்க அவைகளெல்லாம் வாங்கித் தரித்துக்கொண்டாள். அந்த ஆசிரமத்தில் அன்றிருந்து மறுநாள் உதயத்தில் எழுந்திருந்து, தண்டகாரணியம் நோக்கி நடந்தார்கள். இப்படிக்கு இவர்கள் போகும்போது, ஒருராக்ஷதன் அறுபத்துநாலுமதயானைகளையும். நாற்றிருபத்தெட்டுசிங்கத்தையும் பதினறு யாளிகளையும் ஒருகையிலே சேர்த்துப் பிடித்துக்கொண்டு, ஒருகையிலேசூலம் பிரகாசிக்க, அக்கினி கொழுந்துகள்போலே செவந்தமயிர்களும், ஆலகாலவிஷம்தானே ஒருருபமெடுத்துநடந்து வருகிறதுபோல வருகிற வேகத்தி லுடைய காற்றிலே, பர்வதங்களெல்லாம பஞ்சுபோல பறக்க, புண்கள்போலசெவந்திருக்கிறகண்கள் நெருப்புப்பொறிகள் சிதற, ஆகாயம் நடுங்க சப்தகுல பர்வதங்களும் குலுங்க, குபேரனும் பயந்துமெதுவாகநடக்க, பூமிநடுங்க யமனும்திக்கிட்டுமனம் தளர காதினுடைய துவாரங்களிலே சிங்கங்கள் வாசமாயிருந்து முழங்க, மகம்மேருபர்வதமும் சிகரங்கள் குழைந்துபோக, எதிரில் அகப்பட்டவர்களுடையரத்தங்கள் தோய்ந்து செம்மானம் போலே பிரகாசிக்கிற செச்சையும் ஆயுதங்க ளுடனே விராதினென்பவனையும், யானைகளையும் குதிரைகளையும் தேர்களையும்சிங்கங்களையும் புலிகளையும் அகப்பட்ட மற்றவஸ்துக்களையெல்லாம்வாரி மலைப்பாம்புகளாலே மாலையாய்த் தொடுத்து மார்பிலேபோட்டுக்கொண்டு, பர்வதங்கள் போலிருக்கிற மதயானைகளை ஒன்றோடொன்று சேர்த்துஒருகை போலிருக்கிறவாயில் கொடுத்துக் கொண்டே வர, அத்தைமென்றுதின்றுக்கொண்டே அடங்காத பசியுடனேயும், நாகலோகத்தார் சிரோரத்தினங்களையும், தேவர்களுடைய விமானங்களையும் இடையிலேவைத்துப் பாம்புக ளாலே சேர்த்தன்னல், மின்னலான விரதவடங்கள் மார்பிலே பிரகாசிக்க, தேவேந்திர னுடையயானையின் நெற்றியில் கட்டியிருந்த விரபட்டத்தைப் பிடுங்கி, தன்நெற்றியிலே கட்டிக்கொண்டு. அதினுடைய தந்தங்களிலேபோட்டிருந்த ரத்தினகிம்புரிகளைபாகுவல்யங்களாகப்பிரகாசிக்கத் தரித்துக்கொண்டு,கொடுமையானதுபுருவத்தி எழும்பி அதிக இருட்டாகிய விராதினென்

வைமேலே பூசிக்கொண்டு வருகிற கலிகாலத்தைப்போலகன்னங்கரேலென்று கொடிய புலித்தோல்களாலே தட்டி அடைமும் யானைத்தோல்களாலே உத்தரீயமும் அஷ்டகெஜங்களுடைய மணிகளைப் பிடுங்கிப்பாம்பினாலே சேர்த்து அரையிலே கணகண என்கிறசத்தத்துடனேகச்சுக் கட்டிக்கொண்டு, சலஞ்சல முதலான சங்கங்களைக்கோத்துகையிலே கங்கணமாகக்கட்டிக்கொண்டு, மகமேருபர்வதம் கைலாயபர்வதம் இவைகளுக்குச்சமானமான அநேகபர்வதங்களைப்பந்துகளாகக்காலினாலேஆடிக்கொண்டு பூமியிலேசஞ்சரித்துக்கொண்டிருக்கிறவனுமிருந்தாலும் தேவலோகத்திலே இருக்கிற தேவர்களுடையகண்களிலும்மனதிலும்என்னேரமும்பயப்பிராந்தியைக்கொடுத்துக்கொண்டிருக்கிறசாமார்த்தியன்.பஞ்சபூதங்களும் ஓர்ருபமெடுத்ததுபோலபலமும்,பிரளயகாலத்துஇடிபோலகுரல்சத்தமும்,உண்டானவனுய்வரசமீபத்திலே வந்து விலங்கி அவடத்திலே இருக்கிறபர்வதங்களும் விருக்ஷங்களும் வேரோடேபிளந்து பொடி பொடியாக வளர்ந்து கடந்து வந்த விராத னென்கிற பெயரை உடைத்தான கடோராக்ஷதன், பின்னல்போலே பல்லுகளும் அதினுடைய சந்துகளிலே அனேகபிணங்களு[illegible]ருந்தி மலைக் குகைபோலிருக்கிற வாயைத் திறந்து வில்லும் வில்லுங்களென்று சொல்லிக்கொண்டு ஸ்ரீமகாலக்ஷுமிக்குச்சமானமான சீதையை ஓர்நிமிஷத்தில் ஒருகையாலே தூக்கி எடுத்துக்கொண்டு, ஆகாசமார்க்கமே போனான். ஸ்ரீராம லட்சுமணர்கண்டு அதிககோபமுற்று தோள்களி லிருக்கிற வில்களை இடது கையிலே வாங்கிக்கொண்டு, ஆடா! நீஎங்கே போகிறாய் திரும்பிவாரும் பென்று பூமியில்கடந்து அதட்டி சொல்லிக்கொண்டு தடர, அதுகண்டு விராதன் நீங்கள் வெகுசவுரத்தியமாய்த் தொடர்ந்து வருகிறீர்கள், நான் ஆதிபிரம்மாவினுடைய வரமுண்டானவன் ஒருத்தராலேயும் சாகிறவனல்ல எந்த ஆயுதங்களாலும் என்னை ஒன்றும் செய்யமாட்டாது. உலகத்திலுள்ள யாவரும் கூடி வந்தாலும் கண்நிமிஷமாத்திரத்திலே சங்கரித்துப் போடுவேன், என்னாலாகாதது ஒன்றுமில்லை, இந்தஸ்திரீயை நீங்கள் கொண்டுவந்த படியினாலே அந்த உபகாரத்தை [illegible]னி உங்களை எடுத்துத்தின்று போடாமல் பிராணனோடு விட்டு விட்டேன், [illegible] தப்பிப்போய் விடுங்களென்று சொன்னான். அந்தவார்த்தையைக் கேட்டு ஸ்ரீராமர் புன்சிரிப்பாகச்சிரித்து, இவனெவ்வளவு இவனுடையபலமும் ரூபமும் முடிந்து போகும்படியாய் அஸ்திரப்பிரயோகம் செய்யவேணுமென்று வில்லைக் குணத்தொனிபண்ணினார், அந்தகுணத்தொனி சமுத்திரங்கள் - பர்வதங்கள் - பூலோகம் நாகலோகமுதலிய இவைகளின்பேரில் இடிவிழுந்ததுபோல பயந்து அல்லோலகல்லோலப்பட்டது. அப்போது பூவையைப்பட்ட [illegible] சீதாலக்ஷுமியை விராதன்பூ[illegible] பயங்கவனைப்போலே திடுக்கிட்டு [illegible] நின்று, இதைத்து ஸ்ரீராம னெதிரேவந்து [illegible] கையிலே இருந்த சூலாயுதத்தைத் திருப்பினான், அந்த சூலாயுதம் எப்பேர்க்கொத்ததென்னில, அனேகருஞ் சிவன்களைக்கொன்று ரத்தம் தோய்ந்து வடவாமுகாக்கினியின் சுவாலையைக் கக்கிக்கொண்டு சூரியன் ரதத்தில் கட்டி இருக்கிற குதிரைகளாயமட்டும்போய் திரும்பிவந்தது. அந்த சூலாயுதத்தை ஸ்ரீராமர்பேரில் பிரயோகம்செய்தான் அப்போது ஸ்ரீராமர் மகமேரு பர்வதம்பே லிருக்கிற தம்முடையகோதண்டத்திலே ஒரு அஸ்திரத்தைத்தொடுத்து வாங்கிவிட்டார், அது அந்த சூலாயுதத்தை இரண்டுதுண்டமாகக்கண்டித்தது அந்த துண்டங்கள் ராக்ஷதகுலமெல்லாம் இன்றைக்கே அற்றுப்போகிற விபரீதகாலத்துக்குப் பகலிலே எரிந்துவிழுகிற நக்ஷத்திரம்போலப் பிரகாசத்துடனே பூமியிலேவிழுந்தது. தேவர்களை ஜெயித்த அந்த சூலாயுதம் இற்றுப்போயிற்றென்று கொஞ்சமாகிலும் யுத்தம் ஒடுங்காமல் அதிககோபத்துடனே மனம்புழுங்கி.விராதன் அங்கே இருக்கிற பெரியபர்வதங்களை எல்லாம் வேரோடேபிடுங்கி இதுஇதென்று சுழட்டி வீசிவிட்டான். அதற்கு ஸ்ரீராமர் வயிரக்கூர்[illegible] அமைந்தபாணங்களைப் பிரயோகம்செய்ய, அந்தபாணங்கள் அந்தபர்வதங்களைத் தள்ளிக்கொண்டேபோய் அவனுடைய சரீரமெல்லாம் புண்களாகும்படி அவன்மேனிலேயேவிழுந்தது, அப்பால் விராதன்ஒருமராமரத்தை வேரோடே பிடுங்கிக்கொண்டு அதினாலடித்து போடுவோமென்று ஓங்கிவருகிறபோது, ஸ்ரீராமர் நாலுபாணம்விட்டு அந்தமரத்தை அறுத்துப் பனிரெண்டுபாணத்தை அவன்மார்பிலேயும் தோளிலேயும் அழுந்தும்படிப் பிரயோகம்பண்ணினார். அந்தபாணங்கள் அவன்சரீரங்களில் சன்னல்பின்னலாகத் தைத்துக்கொள்ளவே,அவைகளை முள்ளம்பன்றி முள்களை உதறுகிறதுபோல உதறிவிட்டு நின்றான். பின்னையும் ஸ்ரீராமர் அக்கினியாஸ்திரம் பிரயோகம் பண்ணினார். அந்தபாணங்கள் சரீரத்தில் தைத்து அருவிபாய்கிற பர்வதம்போல ரத்தப்பிரவாகம் சொரிய மூர்ச்சையாய் நின்றான். அப்போது ஸ்ரீராமர் இவன் மிருத்தவரம் பெற்றவன் பின்னொரு ஆயுதங்களினால் சாகிறவனல்லவென்று தானும்தம்பியும் வாள்களை உருவிக்கொண்டு அவனுடைய இரண்டுதோள்களையும் வெட்டித்துணித்து விடுவோமென்று அதிசீக்கிரமாக அவன் சமீபத்துக்குப்போய், அவனுடைய உயர்ந்த இரண்டுதோள்களின்பேரில் இவர்களிருவரும் ஏறிக்கொண்டார்கள். அவன் மூர்ச்சை தெளிந்து தோளின்பேரிலிருக்கிற இருவரையும் பார்த்துக் கைகளினாலே சேர்த்துப் பிடித்துக்கொண்டு, முன்போலவே அண்டகடாகமட்டுக்கும் எழும்பிகுதித்து உடலில் இருந்த ரத்தவெள்ளம்பெருக பூமி எல்லாம் சாரியாகத் திரிந்தான். ஸ்ரீராம லட்சுமணர் மகாமேருவைப் பிரதக்ஷிணம் வருகிற சந்திரசூரியனைப்போல பிரகாசித்தார்கள், அந்தராக்ஷதன் (ஸ்ரீமகாவிஷ்ணுவை பிரம்மாவுடனேகூட ஒருகாலங்களிலே தாங்கிக்கொண்டுவருகிற) கருடனுக்குச்சமானமானான். சீதாதேவி தன்பிராண நாயகனை ஸ்ரீராமன் ராக்ஷதன்கையில் அகப்பட்டுக்கொண்டு போ



கிறதைக்கண்டு, திலேகித்து-வாயுலர்ந்து-முறிந்துவிழுந்த பாரிசாதகபுஷ்பக் கொம்புபோல (பிடியுண்டசேவலைப்பிரிந்த பெண்ணன்னம்போல) பூமியிலேவிழுந்து மிகுந்ததுயரத்துடனே சிக்கிரமாகப் பூமியிலேதொடர்ந்து நடந்து, ராக்ஷதா!சகலஜீவனிடத்திலும் தாய்போல அன்புவைத்திருக்கிற அவர்களை, விட்டு என்னை எடுத்து விழுங்கிப்போடு விழுங்கிப்போடென்று சொல்லிக்கொண்டு, விழுந்து எழுந்திருந்து - அழுது-வாய்குளறி - சித்திரப்பிரதமைபோல தேகஸ்மரணை தெரியாமல் ஸ்தம்பித்துநின்ற சீதாலக்ஷுமியை லக்ஷுமணர்கண்டு தமயனைப்பார்த்து ஸ்வாமி ! தேவியார் மிகவும் துயரப்பட நீர் விளையாடுகிறது நல்லதாவென்று சொல்ல, அதற்கு ஸ்ரீராமர் லக்ஷுமணா ! இந்தராக்ஷதன் இந்த எல்லைகடந்து அப்பாலேபோகிறதற்கு இருக்கிறானென்று தெரியச்சொல்லி, தம்முடைய பாதாரவிந்தத்தினாலே அவனை உந்தித்தள்ளினார் அவன் பூமியிலேவிழுந்தான். விழுகிறதற்கு முன்னமே இரண்டுதோள்களையும் இரு[illegible]ரினாலே வெட்டித்துணித்து பூமியிலே குதித்தார்கள். இவர்கள் பிறகே அந்ததோள்கள் தொடர்ந்துவருகி[illegible]றதன்மையதெனில் சந்திரசூரியா லிருவரையும் இராகுகேது என்கிற இரண்டும் தொடர்ந்து வருகிறதுபோல இருந்தன. அறுபட்டதோள்களி லிருந்து பெருகிய இரத்தப்பிரவாகம் பூமி எல்லாம்பெருகிற்று. ஆகாயமார்க்கம்போகிற என்னத்தைவிட்டு பூமியிலே விழுந்த விராதனைக்கண்டு, லக்ஷுமணா ! இவனைப் பூமியிலே புதைக்கவேணுமென்று ஸ்ரீராமர்சொல்ல, அப்படியே லக்ஷுமணர் பூமியிலே அனேகம் விஸ்தீரணம் ஆழமாகக் குழிவெட்டினார் அன்புடனே நினைத்தபத்தருக்கு பரமபதம் உதவுகிற ஸ்ரீராமர் தமதுதிருவடியினாலே அவனுடைய சரீரத்தை உதைத்து அந்தப் பள்ளத்திலேதள்ளினார். அந்த திருவடிபட்டமாத்திரத்தில் பூர்வத்திலே அவனுக்குவந்திருந்த சாபம்விட்டு, அந்தகடையான சரீரமும்போய், பிரம்மாவைப்போலே பிரகாசித்து, அண்டத்தை யுண்டாக்கித் தானு மதிலே வந்து பிறந்திருக்கிற ஸ்ரீராமரைபூர்வக்கியானவாசனையினாலே, ஸ்தோத்திரம்பண்ணுகிறான்.

வேதங்களாலே சொல்லப்பட்ட பிரமமே ! உலகமெல்லாம் உமது திருவடி விரிந்து நிறைந்ததென்றால் உம்முடைய சுருபம் இவ்வளவென்று சொல்லக்கூடுமோ ! அப்படிக்கொத்த நீர் பஞ்சபூதங்களிலும் நிறைந்திருக்கிறதானால் அது உம்மைப் பொறுக்கமாட்டுமோ ! கொடிதாகிய முதலையானது யானையைப்பிடித்துக்கொள்ள அது துதிக்கையை உயர எடுத்துக்கொண்டு மெய்கலங்கி திசைகளெல்லாம்கேட்க, மிகுந்த துயரத்தினால் ஒப்பில்லாத ஆதிமூலமே ! பரமே ! பரம்பொருளே ! என்னை ரக்ஷியுமென்று ஓர் யானை கூப்பிட சொல்லவா ! அன்றைக்கு அதின் எதிரேவந்துநின்று ரக்ஷித்தது. புறத்திலும் அகத்திலும் முகத்தினுடைய அருள்நோக்கம்காணத்தாமரைக்கண்ணையுடைய ஓ ! எம்பெருமா ! நீர்தானு தருமத்தைரக்ஷிக்கிறதற்கு இப்படிகாலத்துபோலே இருந்துவருந்துகிறது உமக்குக்கடனோ ! பிறவிவேண்டாமென்று துறந்து உம்மை நினைந்தால் அவர்களுக்குப்பிறவி இல்லாமற்செய்து பரமபதத்தைக்கொடுக்கிற நீர் பிறந்து இறக்கிற விளையாட்டை இன்பமாக இச்சித்தீரல்லவா ! பிறவி என்கிற சமுத்திரத்தைக்கடக்க அந்தந்த சமயவாதிகள் அந்தந்த சமயநூலின்படிக்கு அநுஷ்டித்து நன்றென்று சொல்லத்தக்கதாய் (ஒப்பற்ற தத்துவத்தினுடைய மூர்த்தி நீராக இருந்தால்) முதல்தேவராய் இதுவரையி லிருந்தவர்கள் என்னத்தைக்கொண்டு அவர்கள் பிறவியை நீக்குவார்கள். பிரமன்முதலியயாவர்க்கும் தேவர்க்கும் மன்னுயிர்க்கும் முதற்பிதாவாக நீர் இருந்தால் பிரமமா ! நன்றெடுத்த தாயா வாரியார் ஓ ! ஒருமகருபியே ! ஆதியாகிய பரப்பிரம்மமே? உலகங்கள் உமமது சமயங்களும் உம்மதே வேறல்ல பொல்லாதவர்கள்போல ஒளித்துக்கொண்டிருக்கிற நீர் வெளியில்வந்துநின்றால் அதனால் உமக்கென்ன பொல்லாங்கு உண்டோ ! உமக்கு மாய்கை என்கிற ஒருவிளையாட்டும் வேண்டுமோ ! உலகத்திலே தாயை அறியாதகன்றுகளில்லை கன்றுகளைத்தாயும் அவ்வாறே அறியும் அப்படி இருக்க சகல உயிர்களையும்பெற்ற நீர் அவைகளை அறிகிறீர். அதுகள் உம்முடையகிலை அறியாதமாயமென், வராமல்வந்த வஸ்துவே ! பிரமன்முதலிய மற்றதேவதைகளுக்கும் நீர் அல்லாமல் வேறே தெய்வமில்லாம லிருக்கிறது தத்துவநெறியிலே நிற்கிறவர்கள் நினையார்களா ! சமையங்களிலே சொல்லுகிற தேவர்களெல்லாம் வினையுள்ளவர்கள்போலத் தபசுசெய்கிறார்கள். நீர் ஒரு வினையுமில்லாமல் திருப்பாற்கடலிலே யோகநித்திரைசெய்கிறீர். இந்த பூமியை நீர் அனந்தனாகி சுமக்கிறீர். ஆதிவராகருபமாய் ஓர் கொம்பினால் ஏந்துகிறீர். ஒருவாயினால விழுங்குகிறீர். ஓரடியினால் இப்பூமியை மறைக்கிறீர். இப்படிக்கெல்லாம் பூமிதேவிக்கு உபகாரஞ்செய்தால் மார்பிலிருக்கிற ஸ்ரீமகாலக்ஷுமி கோபஞ்செய்யாளல்லவா உண்மையை அறிந்து நீருண்டாக்கின ஜீவகோடிகள் பிழைத்தாலாகாதா ! அதினாலுமக்குக் குறைவு உண்டா! நீரொன்னமாய் மறைந்திருந்தபோதிலும் முன்னாலே நீர் சிவனுக்குப் பிட்சை இட்டு கையிலிருந்த பிரமகபாலம் விட்டு நீங்கினதை தேவலோகத்தாரிலும், பூலோகத்தாரிலும், அனேகர் சந்தேகம்தெளிந்து உம்மை அறிந்து இருக்கிறார்கள். முன்னாலே அம்சருபமாய் வேதங்களைப் பிரம்மாவுக்கு உபதேசஞ்செய்தீரோ அவ்வேதங்களை உமக்கு முன்னே யார் சொல்லிக்கொடுத்தவர்கள் அவர்கள் எல்லாரும் செத்துப்போனார்களா ! ஒரு ருபமாயிருந்து சகல ரூபங்களிலேயும் நிறைந்து பிரிந்தும் பிரியாமல் இருக்கிறீர். இது என்னமாயம் பூர்வத்திற்செய்த பாபத்தினாலே இந்த ராக்ஷததேக மெடுத்திருந்தேன் தப்பலத்தினால் உம்முடைய திருவடி என்சரீரத்திலேபட்டது, இப்போது நான் என்பிரவிராக்ஷதத்தைக் கடந்தேன். இனி பிறக்கிறதில்லை, கலவினை, இருவினை, இரண்டும் தப்பறவிட்டு ஒழிந்ததென்று சொல்லி நிற்கிறானாக ஸ்ரீராமர் கண்டு நீயார் உன் விர்த்தாந்தம் என்ன

சொல்லென்றுகேட்க, அவன் சொல்லுகிறான். கள்ளமாகிய மாயவேடமென்கிற வாழ்வு எல்லாம்நீக்கி ஞானத்தைக்கொடுக்கிற திருவடியை உடைய ஓ! ஸ்வாமி! தெய்வலோகத்தில் வீணைவாசிக்கிற தும்புருவன் நான் ஒருநாள் அரம்பை ஆடுகிறபோது அவளுக்குப் பிணக்குவந்து என்னுடனே வாக்குவாதம் செய்தாள். அந்த ரம்பை நிமித்தியமாய்க் காமவியாதியில் அழுந்திய என்னிடத்தில் தேவேந்திரன் முதலிய தேவர்கள் கொஞ்சமாகிலும் இரக்கமில்லாமல் இப்படி ராக்ஷஸனாகும்படி சபித்தார்கள். அப்படியே தேவலோகத்தைப் பத்திரப்படுத்துகிற விராதன் மகனாய்ப்பிறந்தேன். இந்தசாபம் உம்முடைய பாதாரவிந்தத்தினாலே தீருமென்கிறதாய் அனுக்கிரகமும்செய்தார்கள். அன்றுமுதல் இன்றையவரைக்கும் நல்லதுபொல்லாது தெரியாமல் திரிந்தேன். இப்போது வேதத்தினுடைய முடிவிலிருக்கிற உம்முடைய பாதாரவிந்தம் தீண்டவே என்னுடைய சாபவிமோசனமாய் பூர்வக்கியானமும் தெரிந்தேன் கடத்தேறினேன், அக்கியானத்தினாலேதேவரீரைபலவாறுகவைதேன். ஆதலால் அவைகளைப் பொறுத்து ரக்ஷியுமென்று சொல்லிக்கொண்டே போய்விட்டான். ஸ்ரீராமர், இவன் மாண்டுபோனானென்று சீதாபிராட்டியுடனேகூடலக்ஷ்மணரும்பெரியோர்கள் (வேதாத்தியாயனத்துடன் வாசஞ்செய்துக்கொண்டு வீற்றிருக்கும் ஒருசோலை போய்ச் சேர்ந்தார்கள்.) சூரியனும் அஸ்தமானான்.

## சாபங்கர்வரலாறு.

மற்றுநாள் அந்த சோலையைவிட்டு சாபங்கமகாரிஷி தபசுசெய்கிற மிகுந்த பரிமளமான வனத்துக்கு ஸ்ரீராமலக்ஷ்மணர் சீதையுடனேகூட நடந்தார்கள். அந்த சரபங்கருடைய ஆசிரமத்துக்குச் சமீபத்தில்வருகிறபோது அவ்விடத்தில் தேவேந்திரன் வந்திருந்தான். அவன் எப்படிக்கொத்தவனென்றால் ஆயிரம் செந்தாமரைக்கமல மலர்ந்ததுபோல கண்கள் பிரகாசிக்க இரண்டு பக்கத்திலும் மிகுந்த சுந்தரமான ஸ்திரீகள் மின்னல்போல பிரகாசிக்கிற வெண்சாமரை (அசுரானுடைய கீர்த்தியை வேரோடேபிடுங்கிவீசுகிறதுபோலவீச) அனேகம்தேவரம்பைகள் கண்களென்கிற வண்டுகள் படிந்திருக்கிறபாரிஜாத புஷ்பமாலையைத் தரித்திருக்கிற மார்பும், நாரதமகாமுனி வாசிக்கிற யாழ்வீணையின் இசைக்கீதங்கள் [illegible] பெவர் தேவர்களுக்கெல்லாம் ராஜன் பெருமைபொருந்தியநூறு அஸ்வமேதயாகம் மனதின்படிசெய்து முடித்திருக்கிற மஹாதபாவர் அந்த மும்மூர்த்திகள்தவிர மற்றதேவர்களெல்லாம் சாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்கிறபோது அவர்கள் கிரீடங்களபட்டு துலங்கிப் பிரகாசித்திருக்கிற வீரகண்டாமணி தரித்திருக்கிற பாதாரவிந்தத்தை உடைத்தானவர் செந்தாமரைக்கமலத்தில் வாசமாயிருக்கிற அந்த ஸ்ரீமகாலக்ஷ்மிக்குச்சமானமானசசிதேவியுடனேகூடமும்மதமும்பொழியும்ஐராபதமென்கிற வெள்ளையானையின்பேரி லேறிவருகிறபோது (பார்வதி சமேதனானவர்) கைலாய பர்வதத்தின்பேரில் வருகிறதுபோலே பிரகாசிக்கிறவர் பூரணச்சந்திரன் உயர்ந்து பதவிபெற்றதுபோல பிரகாசித்திருக்கிற சவேதச் சத்திரமான தனிக்குடையை உடையவர் பரிவேடத்துடனே பிரகாசிக்கிற சூரியனைப்போலே கிரீடம்தரித்திருக்கிறவர் மகாவிஷ்ணுவின்மார்பில் மகாலக்ஷ்மி யிருக்கிறதுபோல பிரகாசிக்கிற பரிமளமான பாரிஜாதமாலையைத் தரித்திருக்கிறவர் ரத்தினச்சுடர் பிரகாசிக்கிற அஞ்சுகியும் விஜயலக்ஷ்மியினுடைய நகைபோல பிரகாசிக்கிற பாகுவலயமும் தரித்திருக்கிறவர். நவரத்தினங்கள் அனேகம்கூடி பலபலவர்ணமாய்ப் பிரகாசிக்கிறபடியினாலே தம்முடைய பச்சை வில்லுடனேகூடப் பிரகாசிக்கிற நிலமேகம்போல சரீரகாந்தியை உடையவர். தேவரம்பைகள் கண்கள்போலகூர்மையானவாளை இடையிலே கட்டிக்கொண்டு இருக்கிறவர் பூர்வத்தில் இராவணனை ஜெயிக்கவேணுமென்கிற ஆசையினாலே அவன்பேரில்வச்சிராயுதத்தைவிட அது அவனுடைய தேகத்தில் தெள்வால்கூட அறுக்க இல்லை. ஆனால் அதின்கூர்மை [illegible]மடிந்து இருக்குமோவென்றில் அப்படி மடியாத வச்சிராயுதம் பிடித்திருக்கிறவர். இப்படி அநேகப்பிரதாபங்களை உடைத்தான தேவேந்திரன் அந்த சரபங்கமகாரிஷி ஆசிரமத்துக்கு வந்தபடியால் அவர் எதிர்கொண்டு செய்யவேண்டிய உபசாரம்செய்து தேவராஜனே! நீர் இவ்விடம்வந்தகாரியம் என்னவென்று சரபங்கர்கேட்க, தேவேந்திரன் சொல்லுகிறான். நீர் செய்ததபசு பிரம்மதேவர் அறிந்து அந்த தபோபலத்தை தம்மால் சொல்லுகிறதற்கு அரிதென்று சொல்லி உம்மைத் தம்மிடத்திற்கு அழைத்துவரச்சொன்னார். இந்த உலகங்களையும் சகல உயிர்களையும் பெற்ற பிரம்மதேவர் வாசமாயிருக்கிறபதவி உமக்குக் கொடுத்திருக்கிறார். நீர்வந்தா லுமக்கெதிரேவருவார், சகலலோகத்துக்கும் பிரம்மலோகமுயர்ந்ததாமே! ஆனபடியால் உம்முடைய ஸ்திரீயுடனேகூட நடவுமென்று சொன்ன தேவேந்திரனைப்பார்த்து சரபங்கமகாரிஷி சொல்லுகிறார். ஓ! அனேக கீர்த்தியை உடைய தேவேந்திரமகாராஜனே! அனேக காப்பகாலம் தபம் பண்ணினேன். நீரும் அறிந்திருப்பீர் நானேதாகிலும் ஒருபிரயோசனத்தை எண்ணி தவம் செய்தவனல்லவே! நீர் இப்படி அழைக்கிறது உத்தமமல்லவென்று [illegible] பெறுவதி, அ[illegible]த்திற்குப் பலவார்த்தை, [illegible]வந்தபடியினால் என்னுடைய தவமும் முடிந்தது. சிறுகாமல், பெருகாமல், நிலைபோகாமல், குறுகாமல், நெடுகாமல், குணம் வேறுபடாமல், பஞ்சபூதங்கள் இறந்துபோனாலும், இறும்பாமல் தானே தானா இருக்கிற மோக்ஷமென்கிற சேருவேனென்று இப்படியாக சொல்லிக்கொண்டிருக்கிற சமையத்திலே, ஸ்ரீராம லக்ஷ்மணன் அந்த ஆசிரமத்துக்குச் சமீபத்தில் வந்தவர்கள் இங்கே என்னமோ சத்தமாக இருக்கின்றதென்று யோசனைசெய்து சீதையையும், லக்ஷ்மணனையும், அவ்விடத்தில் நிறுத்தி புருஷசிங்கம்போல ஸ்ரீராமர்மாத்திரம் தனியே அந்தக்ஷியின் ஆ



சிரமத்திலே பிரவேசித்தார். அப்போது தேவேந்திரன் தன்னுடைய ஆரவிந்த மலர்போன்ற ஆயிரங்கண்களாலும், சதுர்வேதத்தின் கனியாகிய ஸ்ரீராமனை, பூமியிலே இருக்கக்கண்டான். கண்டு மனம்நொந்து சர்வதா தான் சேவித்துக்கொண்டிருக்கிற, பகவான் இப்படி அவதாரஞ்செய்து பிரயாசைப் படுகிறாரென்றும், தங்களுடைய சத்ராதிகளை ஜெயித்தும், வேதசா காங்களைக் கற்பித்தும், கருமவழிகளிலே விட்டும், பாக்கியத்தைக் கொடுத்தும், மோக்ஷத்தைஅளித்தும், தங்களுக்குஉபத்திரவமில்லாமல் ஸ்வசமாய் - உயிராய் - கண்ணாய் - தவமாய்ஞானமாய் இருந்து, காத்துரக்ஷிக்கிற அந்தபகவானை, நினைத்தைந்து அறியாதவன்போலே அறிந்த தெல்லாம் சொல்லித்தோத்திரம் செய்கிறான்.

சகலபொருள்களிலேயும் இருந்தும் நிராமலிருக்கிற பரஞ்சுடரே! பாசம் விட்டவர்களுடைய பந்துஜெகமே கிருபைக் கெல்லாம் இருப்பிடமே! வேதமார்க்கத்தை ஆய்ந்து அறிந்த அறிவுக்கறிவே! பூர்வத்திலே அடியங்களை ராக்ஷதர்களாலே அலைச்சல்பட்டுதோத்திரஞ் செய்யும்போது கொடுத்தவரந்துக்காகவா! இப்படி பூமியிலே [illegible]வித்தங்கள் உருத்தடைந்துவந்தீர், பகை-உறவு-[illegible] இருள் - மேல் - கீழ் - இம்மை - மறுமை - ஆதி - அந்தம் முன் - பின் - இவைக ளொன்று மில்லாமலிருக்கிற வஸ்துவானநீர் இப்படிகையிலேவில்லேந்திக்கொண்டு பாதங்கள்நோவ பூமியிலே திரிந்து எங்களைக் காக்கவிட்டால், உமக்குப் பழிவருமோ! சமுத்திரத்திலே வந்து படுத்திருந்ததற்கு பதிலுபகாரஞ் செய்கிறீரோ! நீர் உந்திக்கமலத்திலேபெற்ற சதுர்முகப்பிரம்மா, தானே அனேகஊழிகாலம் சொன்னாலும் சொல்லக்கூடாத, கல்யாணகுணத்தைஉடையஓ, புருஷோத்தமா! முன்னாலே பூமி தாழியாக, தண்ணீர் தயிராக, பர்வதம் மத்தாக, சமுத்திரத்தைத் திருக்கரங்களினாலே கடைந்து, எங்களுக்கு அமிர்ததைக்கொடுத்தீரே! அந்த அசுரர் உமக்கடிமை அல்லவா! அவர்களுக்குக்கொடாமல் எங்களுக்குமாத்திரம் கொடுத்ததென்ன ஒன்றாய்-ரூபங்கள்பலவாய்-வசனமாய்-உயிராய் - மற்றுமாய்-ஊழிகாலங்கள்-முடிகிறகாலத்திலே அதனிலையாகி, உலகமும் தாங்கி நின்ற ஞானக்கொழுந்தே எங்கள்குற்றங்களை நீக்கிற காயகமே! நல்வினை செய்கிறவர்களைக் காத்து தீவினைசெய்கிறவர்களைத் தெண்டனைபண்ணுகிறீரே! அந்த தீவினையும் நீருண்டாக்கின தல்லவே! பூர்வத்திலே சகலரும் வரம்பு இல்லாத மாயத்தில் மயங்கிக்கிடந்து பின்புதெளிந்து இறைவனென்ற ஆதிவஸ்து நீர்தானென்று அறிந்து, சப்தரிஷிகளும் சத்தியமாய் நிச்சயம் செய்தபோது, அவர்கள்மனதிலிருந்த ஐயங்களை யெல்லாம் தீர்த்து, மெய்யறிவுகொடுத்து தெரியப்பண்ணினவரும் நீரல்லவா! ஸ்வாமி என்று இப்படி பலபலவிதமாகத் தோத்திரம்செய்து, பின்பு சரபங்களைப்பார்த்து, நீர் பிரம்மலோகத்துக்கு வருகிறதில்லை என்கிறீரோ நான்போய் வருகிறேனென்று, தேவேந்திரன் ஆகாயமார்க்கமே போனான். அப்போது ஸ்ரீராமனைக்கண்டு சரபங்கர் எதிர்கொண்டுவந்தார். அவரை ஸ்ரீராமர்சேவித்துக்கொள்ள, அவரும் மிகுந்த அன்புடனே தழுவிக்கொண்டு தம்பியும் சீதையும் கூடவர, தம்முடைய ஆசிரமத்துக்கு ஸ்ரீராமனை அழைத்துக்கொண்டு போனார். அந்த ஆசிரமத்தைத் திருப்பாற்கடல்போலெண்ணி மகிழ்ந்திருந்தார். அன்றிராத்திரி அவ்விடத்திலிருந்து வாசம்பண்ணிக்கொண்டிருக்கிறபோது, பொழுது விடிகிறநேரத்திலே ஸ்ரீராமருக் கெதிரே சரபங்கர் வந்து, ஸ்வாமி! நான் அக்கினிப்பிரவேசம் செய்யவேணுமென்று மனதில் ஒருதெளிவை வைத்திருக்கிறேன், நீர் விடைகொடுக்கவேண்டுமென்றுகேட்டு, மிகுந்த அக்கினியையுண்டாக்கினார். அப்போதுஸ்ரீராமர்சரபங்கரைப்பார்த்து என்னசெய்கிறீர், பயனமென்ன! சொல்லுமென்றுகேட்க, லக்ஷ்மிபதி! இருவினைகளும் அற்றுமோக்ஷம்சேர நினைக்கிறேன், கிருபைசெய்து அருளுமென்றுசொல்ல, நான்வந்த வேளையில் இதுசெய்யவேண்டிய தென்ன! மஹாது பாவராசரபங்கரிஷியே என்று ஸ்ரீராமர்கேட்க, மன்மதனை ஜெயித்த சரபங்கமஹாரிஷி! சரீரம் விடுகிற சந்தோஷத்தினாலேஉத்தரவுசொல்லுகிறார். சகன்திரமுகமானதபசுநீர் இவ்விடத்துக்குஎழுந்தருளிவீரென்றெண்ணி, செய்துக்கொண்டிருந்தேன் நீர்வந்தீர்உம்முடையதரிசனமாகவேஎன்னுடையவினை போய்விட்டது இந்திரன்வந்து பிரம்ம தேவர் பிரம்ம லோகம் உமக்குக் கொடுத் திருக்கிறார், வாரு மென்று சொல்லி அழைத்தார். நான் அதற்குச் சம்மதியாமல் ஒருநாளும் அழியாத பதவி சேரவேணுமென்கிறமுயற்சியினாலே இருந்தேன், அந்தபதவி கொடுமென்றுசொல்லிக்கொண்டே தம்முடைய பத்தினியுடனேகூட அக்கினியிலே மூழ்கிவேதமும் அறிகிறதற்கு அரிதாயிருக்கிற திருமாமணிமண்டபமென்கிற பரமபதம் சேர்ந்தார் அண்டமும் அகிலமும் ஒருகவளமாக உண்ட அந்தபுருஷோத்தமனுடைய அனந்ததிருநாமசங்கீர்த்தனைகளில் ஒன்றாகிய ராமகீர்த்தனை செய்கிறவர்கள் பெறுகிறபதவி, மாணைத்ததில் பிராட்டியாருடனே கூடப்பிரத்தியக்ஷ தரிசனம் செய்த இந்தமஹாரிஷிக்குக் கிடைக்கிறது அருமையா! எளிதிலே அவர் அந்ததிருமா மணிமண்டபம்சேர்ந்தார்.

## தண்டகாரண்யம்.

சரபங்கமஹாரிஷியும், அவர்பத்தினியும், அக்கினிப்பிரவேசமானது ஸ்ரீராமலக்ஷ்மணர்கண்டு, மனதிரங்கி அவ்விடம் விட்டு சீதையுடனே நடந்து, மலைகளும் - மரங்களும் - நதிகளும்-அருவிச் சாரல்களும் - நெருங்கிய சோலைகளும் வனங்களும் தடாகங்களும் கடந்து, தண்டகாரணியம் சேர்ந்தார்கள். அவ்விடத்திலே பாலகில்லியரும்-முண்டரும் - மௌனர்முதலிய ரிஷீஸ்வரான்அனேகர், ஸ்ரீராமனைக்கண்டு, கண்களும் - மனதும் - களித்து, (கோபாக்கினி மிகுந்த ராக்ஷதர்கள் உபத்திரவத்தாக்குத்தங்களால் வேறொருகாரியம் செய்[illegible]ல்லாமல், வெதும்பிக்கொண்டு அக்கினியினாலே வெந்து

கருகின மரத்துக்கு அமிர்தம் சொரிந்து. தளிர்விட்டது போல) சந்தோஷித்தார்கள். சார்வதாராக்ஷதாள் உபத்திரவமே பட்டுக்கொண்டு அவர்களுடையபேர்களையே வாயினாலே சொல்லிக்கொண்டு பயந்து கிலேசித்து மறுகி இருந்ததுயரம்நீங்கி, பிரிந்து அப்பாலே போயிருந்த தாயை, வரக்கண்ட கன்றுகள்போலே களித்தார்கள். கருங்கடலிலே அழுந்திப் போகிறவர்களுக்கு ஒருகப்பல் வந்ததுபோல துயரம் தீர்ந்தார்கள், தாங்கள்செய்ததவம் பலித்து மெய்யறிவு கைகொடுக்க அனேக காலமாய் பிடித்திருந்த பிறவித் துயரமான சிறை விட்டு மோக்ஷானந்தம அடைந்தவர்கள்போல, ஆனந்தமடைந்தார்கள். வேண்டினதை வேண்டினவர்களுக்குக் கொடுக்கிற தபசை உடையவர்களாயிருந்தும் அந்தராக்ஷதாளாலே கோபம் போகாமல் பொறுமையும்வராமலிருந்தவர்கள், மிகுந்த ஆனந்தத்துடனே எழுந்திருந்து, நீலமேக கோமள சுருபனான ஸ்ரீராமரை அதிகஅன்புடனேவந்து சுற்றிக்கொண்டு. அவர் சேவிக்கிறபோதெல்லாம் ஆசீர்வாதம் செய்து, மனோ உல்லாசமாயிருக்கிற ஒருசோலையிலே அழைத்துப்போய் அங்கிருக்கச் சொல்லி, தங்கள் ஜாகைகளிலே தாங்கள் போய் சேர்ந்து, மற்றுநாள் பின்னையுமிருக்கிற ரிஷிகளை எல்லாரையும் அழைத்துக்கொண்டு, ஏககூட்டமாய்த் தங்கள் கிலேசத்தைச் சொல்லிக் கொள்ள வேணுமென்று, ஸ்ரீராமரெழுந்தருளி இருக்கிறசாலைக்குவந்து சேர்ந்தார்கள். அப்படிவந்த ரிஷிகூட்டங்களை ஸ்ரீராமர் சேவித்துக்கொண்டு ஸ்தோத்திரம்பண்ணி, சகலருமிருந்தருளுங்களென்று தாமுமிருந்தருளினார். அப்போது ரிஷிகள் சக்கிரவர்த்தி திருமகனே! நாங்கள் வந்தகாரியத்தைக் கேளுமென்று சொல்லுகிறார்கள். தருமசிந்தையும் இரக்கமுமில்லாத நெஞ்சரான ராக்ஷதாள், சிலபேர் இவடத்திலிருந்துகொண்டு எங்களை நெருக்கி உபத்திரியப்படுத்துகிறபடியினாலே தபம்செய்கிற மார்க்கத்தை விட்டுவிட்டோம். அனேகம் புலிக்கூட்டங்கள் சஞ்சரிக்கிற ஆரணியத்திலே மான்கள்போலே இராத்திரிபகல் நொந்து இரங்கி பயந்து நடுங்கி அதினால் தருமசிந்தைகளில்லாமல்போய்விட்டோம். எங்களுக்கு மோக்ஷந்தான் கிடைக்குமா! தபசு நடக்க இல்லை, வேதசாஸ்திரங்களை ஓதுகிறதில்லை, வாசிக்கத்தக்கவர்களுக்கு சொல்லிக்கொடுக்கிறதற்கில்லை, ஓமாக்கினி வளர்க்கிறதற்கில்லை. ஆகையால்பிரமனுமலாமற்போனும் இந்திரனாலும் அந்தராக்ஷதாளைவுகிறஎவ்வமனதிலேயும் தலையிலேயும்சுமந்துசெய்தக்கொண்டுதன்பிராணனைத்தப்பித்துக்கொண்டு திரிகிறுன்இப்படியானால்இனியாரெங்கள்வருத்தத்தைநீக்குகிறவர்கள், நாங்கள்பூர்வத்திலேசெய்திருந்ததபபலத்தினாலேநீர்வந்தீர்ஒருசக்கரத்தினாலேஉயிர்களைஎல்லாம் ரக்ஷித்தராஜாதிராஜனுடையபுத்திரரோ துயரமென்கிறதுட்டினிருந்து அலைகிற எங்களுக்குச்சூரியனாகத்தோன்றினீர், நாங்கள் [illegible]வரும்உமக்கடைக்கலமென்று மிகவும் [illegible] அன்பத்துடன்சொன்னார்கள். அவ்வார்த்தையை ஸ்ரீராமர்கேட்டு நீங்களொன்றுக்கும் அஞ்சவேண்டாம். இந்த அண்டத்துக்குள்ளும் புறம்பிலும் அந்தராக்ஷதாளிருந்தால், என்னுடைய பாணங்களினாலே மடிந்து விழுவார்களென்று சொல்லிப் பின்னையும் சொல்லுகிறார், ராஜா இறந்துபோகவும் - தாயார் கிலேசப்படவும்-என்தம்பிவருந்தவும்-பட்டணத்துஜெனங்கள் துயரமாகவும்-நான் ஆரணியத்துக்கு வந்தது என்புண்ணியபலத்தினாலே அல்லவா! தருமம் தப்பாமல் நடக்கிற அந்தணரான உங்களுடையமகிமையும் - பெருமையும்- தெரியாமல் உபத்திரவம்செய்கிற, அந்தபுத்தினரான ராக்ஷதாளை சங்கரியாமல் விடுகிறதில்லை, அந்தராக்ஷதாளாலே என்சரீரம்போனாலும் உத்தமமே, நான்பிறந்து பெறுகிறபாக்கியம் இதைப்பார்க்கிலும் வேறல்ல! நீங்களும் இருந்து பார்த்துக்கொண்டிருக்க, கபந்தங்கள் நடனம் செய்யும்படியாய், அந்தராக்ஷதாளுடனே யுத்தியம் செய்யப்போகிறதைப்பாருங்கள், வில்லும் அம்பராத்துணியும் சுமந்த என்தோள்கள், பாரமும் தீரும் பசுவுக்காகவும்-பிராமணர்களுக்காகவும்-தேவர்களுக்காகவும் - சகாயமாய் பிராணனை விடுகிறவர்கள், [illegible] தேவரானார்கள். சூரசங்கார சுப்பிரமணியரும் [illegible]ந்தகரான ருத்திரமூர்த்தியும்-சக்கிரபாணியாகிய ஸ்ரீமஹாவிஷ்ணுவும், அந்தராக்ஷதருக்காகவந்து [illegible]ம், தாமமைழிநடவாத அந்த ராக்ஷதர்களை வேரறுத்து உங்களை ரக்ஷிக்கிறேனென்று ஸ்ரீராமர்சொல்ல, அந்த ராமவாக்கைக்கேட்டு ரிஷிகள்சந்தோஷித்து மிகுந்தஆசையுடனே ஜலம் தீர்த்தவர்களாய் வேதங்களை ஓதி ஆனந்தகீர்த்தமாடிச் சொல்லுகிறார்கள். ஸ்ரீராமா! நீர் வேணுமென்றால் இந்தமூன்றுலோகத்தைப்போல முப்பதுகோடி லோகம் வந்தெதிர்த்தாலும், உமக்கெதிரல்லவென்று சொல்லுகிறதற்கு [illegible] நானமேசாக்ஷி, நா[illegible] ஆசையுடனே நிட்டமிட்டு அநுப்பினவருக்கெல்லாம் இவடத்திலேதானே இருந்துகொண்டு எங்கள்மனக்குறையைத் தீர்த்துக்கொண்டிருமென்று அதிகவர்ஞ்சனைப்பத்துடனே சொல்ல, அவர்களைச் சேவித்து ராஜாதிராஜனான தசரதமகாராஜாவினுடைய குமாரர் அப்படியே அவடத்திலே வாசமாக இருந்தார். அவர்களும் பத்துவருஷம் வருத்தமில்லாமல் சுகமாயிருந்தார்கள். அந்தரிஷிகள் ஒருநாள், ஸ்ரீராமரைப்பார்த்து அகஸ்தியமகாமுனி மகாபெரியவர் அவருடைய ஆசிரமத்துக்கு நீர்போய் அவரைத்தரிசனம்செய்து வரவேணுமென்றுசொல்ல, அப்படியே அதிபலசாந்திரனைப்போல கேற்றியை உடைத்தா இருக்கிற தோசிராட்டியுடனே ஸ்ரீராமர் லக்ஷ்மணனுடன் நடந்தார்கள்.

## அகஸ்தியனைக்காணுதல்.

அனேகவிருக்ஷங்களும், மூங்கில்களும், வெடிப்புகளும் நெருங்கிய அந்தகாட்டின்பாதையை மெள்ளமெள்ள நடந்துநடந்து, ஜோதிப்பிரகாசமான அகஸ்தியமகாமுனி வாசமா இருக்கிற சோலையிலேபோய சேர்ந்து, சூரியப்பிரகாசம்போல பிரகாசித்துக்கொண்டிருக்கிற அந்த மகாமுனியைச் சேவித்துக்கொண்டார்கள். அவர்



இவர்கட்கு ஆசிகூறி அவ்விடத்திலிருக்கச்சொல்லி உபசாரம்சொல்ல, அப்படியே அந்தசோலையிலிருந்தார்கள். இப்படி இருக்கிறபோது அந்தமகாரிஷி அவர்களுக்குச்செய்யவேண்டிய உபசாரங்கள் யாவற்றும்செய்து நீங்கள் இவடத்துக்கு வரும்படியாய நான் என்னதபம் செய்தேனென்று சொன்னார். ஸ்வாமி, பிரமாவினிடத்திலே உற்பத்தியான பெரியோர்களிலே தபோமகிமையிலே உமக்குச் சமானமானவர்கள் யாரிருக்கிறார்கள். உம்முடைய கிருபை உண்டானால் என்னைப்பார்க்கிலும் கிருதார்த்தர் யாரிருக்கிறார்களென்று மிகுந்தஅன்புடனே ஸ்ரீராமர்சொல்ல, அதற்கு அகஸ்தியமகாமுனி ஸ்ரீராமா, என்னுடையசெல்வமெல்லாம் நீர் இருந்தாலுண்டாகுமென்று அன்புடனேசொல்ல, ஸ்ரீராமரானவர், ஸ்வாமி, சகல தவமகிமையும் கொடுத்தீர் இருக்கிறீரென்று சொல்லிப் பின்னும் ஒரு வார்த்தை சொல்லுகிறார். ஐயனே! அகஸ்தியமகாமுனியைச் சேவித்துக் கொள்ளவேணுமென்று மனதிலே கொஞ்சம் குறைவா யிருக்கின்றதென்று சொல்ல, கல்லாயிருந்தபேர் நாளும் அது சொல்லவேணுமென்றுதான் [illegible]ன்றுக்கிறீர்கள். நீர் அவடத்திலே போயச் சேர்ந்தால் உமக்கு [illegible]கெல்லாம் உண்டாகும். அதுவும் அல்லாமல் நீர் தண்டகாரணியத்தில் வந்திருக்கிற சமாசாரம் கேட்டு நீர் வருவீரென்று அவரகொண்டு சந்தோஷத்துடனே இன்றையவரைக்கும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார் சீக்கிரமாய் அவரிடத்தில்போய சேர்ந்தால் மிகவும் நல்லது தேவர்களுக்கும் நல்லதென்று வழியும் சொல்லி அனேக ஆசீர்வாதமுஞ்செய்தார். அவரை ஸ்ரீராமர் சேவித்துக்கொண்டு நடந்து அருவிச்சாரலை உடைய அந்தச்சோலைக்குச் சீக்கிரத்துக்குப்போய்சேர்ந்தார். இப்படியாக ஸ்ரீராமர் தம்மிடத்துக்கு வருகிறதை அறிந்து அகஸ்தியமகாமுனி மிகவும் சந்தோஷத்துடனே சமுத்திரம்போலக் கெல்லாம் பரவ எதிர்கொண்டுவந்தார். அவர் எப்பேர்க்கொத்தவரென்றால் [illegible] விடமென்கிற பாதையைப் பூமியிலே உண்டாக்கினவர், சத்தமிடுகிறதேவலோகமெல்லாம் அனைத்தவர், அசுரர்ன்சமுத்திரத்திலேயுங்கஅவர்கள் அதிலிருக்கிறமட்டுக்கும் சாவதில்லை என்று தேவர்கள்வந்து தம்மிடத்திலே முறையிட, அந்த சமுத்திர ஜலத்தை ஒருகையால்வாரி சாப்பிட்டவர் திரும்பவும் உமியச்சொன்னால் உமிழ்ந்தவர் வாதாபி என்கிறவன் சகலரையும் வஞ்சனை சூதினாலே கொன்று தின்றுகொண்டிருந்தான். அவன் சரீரத்தை உண்டு ஜீரணம்பண்ணிக்கொண்டு உடனத்திறனுடைய தம்பி [illegible]க்களைத்தீர்த்தவர் மேருபர்வதத்தைப் பார்க்கிலும் உயர்ந்து மிகுந்த சூரியகதிநடக்கின்றபொழுதுபடியாய் வளர்ந்த விந்தியகிரிபர்வதத்தைப் பாதாளத்திலே அழுந்தினவர், வடபாரிசத்திலே காலாபர்வதனை சிவனிருக்கிறதுபோல தென்பாரிசத்திலே சகிரவானகிரியிலேகாமிருந்து பூமியைசமானமாக இருக்கச்செய்தவர், நாலுவேதத்திலேயும், தர்க்கசாஸ்திரத்திலேயும், அறிவிலேயுமிகுந்த சூரியபகவான்கொடுத்த தமிழை உண்டாக்கினவர் தேவலோகத்திலேயும், பூலோகத்திலேயும், மற்றலோகங்களிலேயும், மனதிலேயும், வேதத்திலேயும், அந்தவஸ்து இருப்பானென்று மனதிலெண்ணி இருக்கிறநாம் இப்போ கண்ணினாலேபார்க்கக் கிடைக்குதே! என்று சந்தோஷிக்க மனதுண்டானவர் நாலுவேதமும், வேதாந்தம், வைசேஷிகம், பாட்டம், பிரபாகரம், பூர்வமீமாம்சை, உத்தரமீமாம்சை என்கிற ஆறுசாஸ்திரங்களும்ஞானமுண்டாகிறகல்வியும்கொண்டு அநேகநான் [illegible] ஸ்ரீமன்நாராயணன்தான் வந்து [illegible] சந்தோஷிக்கிறதிக்கையை [illegible]டையவர். தேவதைகளெல்லாரும்விழுந்தார்கள். ரிஷிகளெல்லாரும் மனத்துயரங்கள் நீங்கினார்கள். ராக்ஷதாளை வேரோடறுக்கிறதற்கு மனுஷ்யவனான ஸ்ரீராமன் வந்தாரென்கிற அதிக சந்தோஷத்துடனேவந்து கண்டுநேத்திரங்களிலே ஆனந்தபாஷ்பம் பொழிகின்றார். எட்டு திக்கையும், சத்தலோகங்களும், சகலபிராணிகளும் பிழைக்கும்படியாய் கமண்டலத்திலே காவேரியைக் கொண்டுவந்த அந்த அகஸ்தியமகாரிஷியை ஸ்ரீராமர் சேவித்துக்கொண்டார். அன்புடனே அவரும் இவரைத்தழுவிக்கொண்டு ஆனந்தபாஷ்பம் பொழிய, நீர்வந்தது மகாநல்லதென்று பலபல உபசாரங்கள்சொல்லி அனேக பிராமணோத்தமர்கள் வேதபாராயணம்செய்து கமண்டலத்திலே இருக்கிற தீர்த்தத்தினாலே புரோக்ஷித்து அனேக பலவகை புஷ்பங்களிறைக்க அதிகசந்தோஷத்துடனே தம்முடைய சோலைக்கு அழைத்துக்கொண்டுபோய். அவ்விடத்தில் ஸ்ரீராமருக்கு விருந்துமுதலானது செய்வித்து அகஸ்தியர் ஸ்ரீராமா! என்னுடையதிரகதத்துக்கு நீர்வந்து என்னுடைய தபசைமுடித்தீர், கிருபாநிதியே! என்றுசொல்ல, அதற்கு ஸ்ரீராமர் நமஸ்காரம்செய்து தேவர்களும், ரிஷீஸ்வரர்களும், பெரியோர்களானவர்களும், மற்றவர்களும், சிறந்து உம்முடைய கிருபையினாலல்லவா! அப்படி மகிமையானார்கள். உம்முடைய கிருபை எனக்கு இன்றைக்குக் கிடைத்தது. இனி எனக்கு என்னகுறை சகலலோகத்தையும் ஜெயம்கொண்டேனென்றுசொல்ல அதுகேட்டுசந்திரசேகரனுக்கு சமானமான அகஸ்தியமகாமுனி சொல்லுகிறார். நீர் தண்டகாரணியத்திலே வந்திருக்கிறீரென்று சமாசாரம்கேட்டேன். எப்படியும் இவடத்துக்குவருவீரென்று சந்தோஷித்திருந்தேன். அப்படியே குறைவில்லாமல் நீர்வந்து தரிசனம் கொடுத்தீரென்று சொல்லி பின்னும் ஒருவார்த்தை சொல்லுகிறார். இவடத்திலே இன்னும் ஒருவார்த்தை நீர் செய்யவேண்டியது காலே வாசமாயிருக்கிறானால் நீர் செய்யவேண்டியது [illegible] செய்வீர், ராக்ஷதாள்வந்தால் அவர்களை எல்லாம் ஜெயித்து எங்கள் மனதிலேசங்கையும் தீர்ப்பீர். அதினாலே வேதமும், கீர்த்தியும், தருமமும், வாழ்ந்து விர்த்தியாகும் தேவர்கள் உயர்வார்கள், அசுரர் தாழ்வார்கள் சக்கிரவர்த்தி திருமகனான ஸ்ரீராமா! இந்தவார்த்தை சத்தியமாய்ச் சொல்லுகிறேன் இந்த மூன்று லோகமும் வாழும், நீ இவடத்திலேதானே வாசமா இருமென்று சொன்னார், அதைக்கேட்டு ஸ்வாமி! நீர் சொல்லுகிற

ராக்ஷதரை எல்லாம் கொன்று ஜெயம் கைக்கொள்கிறதாய் நிர்மாணித்திருக்கிறேன், நான் இவ்விடத்தி லிருக்கிறதைப்பார்க்கிலும் அக்தப்ரபிகள் வருகிறவழியிலே இன்னம் சற்று தெற்கேபோயிருக்கிறது நலமா! எனக்குத்தோன்றுகின்றதென்று ஸ்ரீராமர் சொல்ல, நல்ல காரியம்சொன்னீர். அப்படியேபோயிருக்கிறது மகாஉத்தமமென்று சந்தோஷத்துடனேசொல்லி, இந்த வில்லும் அம்பராத்தூணியும் பூர்வத்திலே ஆதிமுதல்வனுனவஸ்து என்னிடத்திலே வைத்திருந்தார். இந்த மூன்றுலோகமும் நாளும் இதைப் பூசை பண்ணிக்கொண்டு வந்தோம், ஆதலால் இதை நீ வாங்கிக்கொள்ளுமென்று கொடுத்து அக்கினி சுருபனை திரிபுராந்தகன் பூர்வத்திலே மகாமேருபர்வதத்தைவில்லாகவளைத்து அதில் பூட்டி எய்த பாணமும்கூடகொடுத்து கோதாவரி தீர்த்தத்திலே அனேகமரங்களும், மலைகளும், மணல்குன்றுகளும், புஷ்பசோலைகளும் சூழ்ந்துமிருக்க அழகா இருக்கிற ஒருபர்வதச்சாரலிலே பஞ்சவடியென்று ஓர் ஜாகையிருக்கின்றது அவ்விடத்திலே வாழைப்பழம், செந்நெல், தேன், காவேரிக்குச் சமானமான நதிமுதலானதுகளும் இருக்கின்றது. சீதையுடனேகூட விளையாடுகிறதற்கு அனேக அன்னப்பக்ஷிகள் முதலானதுகளும் இருக்கின்றது. அவ்விடத்திலேபோய்வாசம்பண்ணிக்கொண்டிருங்களென்று அகஸ்தியமகாமுனிசொல்ல, அப்படியே மேகவர்ன்னனை ஸ்ரீராமர் சேவித்து விடைபெற்றுக்கொண்டு கரும்பு பாகைப்போல வசனத்தை உடைய சீதையும், தம்பியும் கூடவர அகஸ்திய மகாமுனி மனதுபிறகே தொடர்ந்துவர சிக்கிரத்துக்கு அப்பால் நடந்தார்கள்.

## சடாயுவைக்காணுதல்.

இப்படி ஸ்ரீராமலக்ஷுமணாள் நதிகளும், பர்வதங்களும் விருக்ஷங்களும், சேர்ந்து நெருங்கி இருக்கிற ஆரணியத்திலே சிலதூரம் நடந்துபோகிறபோது கழுகுகளுக்கெல்லாம் இராஜாவாகிய ஜடாயுவைக்கண்டார்கள். அந்த ஜடாயு எப்படிக்கிருக்கிறானெனில் ஒருகரிய மலையிலிருக்கிற சந்திரனைப்போலவும், பூர்வத்தில் சமுத்திரத்தில் நட்ட மந்தரகிரியைப்போலவும், சூரியனைப்போலபிரகாசமும், ஆகாயமெல்லா மறைகிற சிறகுகளை உடையசரீரமும், செவந்தகால்களும், நீலகிரியின்பேரில் பவழக்கொடி படர்ந்ததுபோலவும், சகலசாஸ்திரங்களும் கற்ற கேள்வியும், வாய்மையும், புத்தி கூர்மையும், அறிவும், யோசனையும், நிறைந்தவர்போலவும், பிறுகண்களினுடைய அழகும், அசுரரை எல்லாம் சங்கரித்து அவர்களுடைய உயிர்களைக் கூற்றுவனுக்கு விருந்திட்டு மீந்ததைத் தான் சாப்பிட்டு எந்தவேளையும் நீட்டிக்கொண்டு இந்திரன்வாகனமாகிய அயிராவதத்தினுடைய அங்குசம்போலத்தேய்ந்து பிரகாசித்திருக்கிற மூக்கும், நவக்கிரகங்களான ஆதித்தன்-சோமன்-அங்காரகன்-புதன் -பிரகஸ்பதி-சுக்கிரன்-சனி-ராகு-கேது-என்று சொல்லப்பட்ட ஒன்பதும்கூடி சக்கிராகாரமாக இருக்கிறதுபோல மார்பிலே நவரத்தின ஆரமும், சூரியப்பிரகாசம்போலே கிரீடமும், அதிககீர்த்தியை உடைய அருணனுடைய புத்திரராகி அனேக கற்பகாலங்கள் கண்டிருக்கிறவர்போலவும், ஒருபர்வதத்தின்பேரில் மற்றொருபர்வதம் ஏறி இருக்கிறதுபோல பாரம் பொறுக்கமாட்டாமல் பூமியும் தாழும்படியா இருக்கிறவர் அவரை இவர்கள்கண்டு ஐயமுற்று இவனென்னராக்ஷதனோ! அல்லவென்று அந்தகருடனோ! என்று நினைத்து உக்கிரதிருஷ்டியாய்ப் பார்த்தார்கள். அவரும் இவர்களைப்பார்த்து ஐயமுற்று, ரிஷிகளோ! கையில் வில்லுவைத்திருக்கிறார்கள். ஆகையால் அல்ல, சடைமுடி தரித்திருக்கிறார்கள். தேவர்களோ! தேவேந்திரன்முதலானபேரை சார்வதாபார்த்திருக்கிறோம்; மகாவிஷ்ணுவும், பிரமாவும், மழுவாயுதம், தரித்திருக்கிற சிவனும் நமக்கு ஒளித்திருக்கிறவர்களல்ல, எப்போதும் நாம் கண்டுகொண்டேஇருக்கிறோம், அவர்களல்ல; மன்மதனோ! அவனையும் அந்தகாலத்திலே ரூபத்தோடேபார்த்திருக்கிறோம், கமலநேத்திரரான் இத்தவீரனுடைய கால்தூளிக்கும் [illegible]வன் சமமாகமாட்டான். இந்த மூன்றுலோகத்தையும் தன்னரசாகநி யாக்கிக்கொள்ளுகிற வயலக்ஷணமுடைய திருமேனியை உடைத்தா இருக்கிறார்கள், ஸ்ரீமகாவிஷ்ணுவுக்குச் சமமான இந்த வீரியுடனேவந்த இக்கிருவர்யாரோ தெரிய இல்லை, நீலகிரி மேருகிரிபோலவும் இருக்கிறார்கள், இவர்கள் சாயலைப்பார்த்தால் நம்முடைய பிராணனேசரான தசரதமகாராஜாவைப்போலேகாணுது என நினைத்து அன்புடனே நீங்கள்யார் தெரியச் சொல்லுங்களென்று கேட்டார். அப்போது இவர்கள் நாங்கள் சக்கிரவர்த்தியாகிய தசரதமகாராஜாவின் புத்திரர் என்றார்கள். அவ்வார்த்தை செவிபடவே சந்தோஷமானது பெருகி, தானிருந்தமலையைவிட்டுக் கீழே இறங்கி அவர்களைத் தழுவிக்கொள்ள வேணுமென்கிற ஆசையுடனே சமீபத்திலேவந்து ராஜாசுகமா இருக்கிறாராவென்று கேட்டார். அதற்கு ஸ்ரீராமர் தம்முடைய சத்தியத்தை நிலைநிறுத்திசுவர்க்கம்போய்சேர்ந்தாரென்று சொல்ல, அதுகேட்ட ஜடாயு தன்ஜீவன் போனதுபோல பதைத்துத் துடித்து ஏங்கி - புத்திகலங்கி - நித்திரை செய்கிறவன்போலச் சோர்ந்து பூமியிலே விழுந்துவிட்டார். அப்படிவிழுந்தவரை ஸ்ரீராமலக்ஷுமணாள் இருவரும் தழுவிவாரி எடுத்துத் தங்கள் கண்களில் வருகிறநீராலே அவர்முகத்தைக் கழுவினார்கள். அப்போது போன பிராணன்வந்து மிகவும்களைத்து அழிந்த நெஞ்சுடனே பிரலாபிக்கத் தொடங்கினார்.

ஐயோ! அப்பா! கொடுக்கிற கொடைக்கும், தனிக்கொடைக்கும், பொறுமைக்கும், தோற்றிருக்கு கற்பகமும், சந்திரனும், பூமியும், கவிழ்ந்துவாழ. பொய்க்குப்பகையாய் மெய்க்கு ஆபரணமாய் கீர்த்திக்குவாழ்வா இருந்த நீர் தவிர்ந்தீராளும். தருமமும், நானும், எண்ணமாய்ப்போவோமென்றுவிட்டுப்போய்விட்டீர். ஏகச்சக்கிரவர்த்தியாய் ராச்சியபாரம் செய்கிறதைவிட்டு என்னுடைய சினேகிதத்தைசோதித்துப்பார்க்கிறதற்குத்தான்



போய் விட்டீரோ! நான் விலங்கு ஜாதியிலே சேர்மானமானபடியால் உம்முடைய மரணம்கேட்டும் இன்னம் என்பிராணனைவிலக்காமல் வைத்துக்கொண்டிருக்கிறேன். தயிரை பின்னபின்னம் செய்கிற மத்தைப்போல சம்பராசுரனுடன் யுத்தம்செய்து ஜெயம்கொண்ட ஆயுதம் பிடித்த சௌரியவந்தரோ! இந்தபூமியிலிருக்கிறவர்கள் அறிய நான் சரீரம் நீர் ஜீவனென்றுசொல்லி இருந்தீரே அந்த சத்தியவசனமாகிய உயிர் பூமியிலேகிடக்க புத்தி இல்லாத கூற்றுவன் உடலைக்கொண்டு போனானே! என்று மிகவும் பிரலாபித்து இந்தக்ஷணமே நெருப்பிலேவிழுந்து பிராணனைக்கொன்று கீர்த்தி உண்டாக்குவனே அல்லாமல் ஸ்திரீகள்போல பூமியிலேவிழுந்து அழுவேனோ! என்று எழுந்திருந்து ஸ்ரீராமலக்ஷுமணனைப்பார்த்து ஒருவார்த்தைசொல்லுகிறார். பிள்ளைகளே கேளுங்கள், பூர்வத்திலே தக்ஷப்பிரஜாபதிக்கு அறுபது பெண்கள் பிறந்தார்கள், அதிலே பதிமூன்றுபெண்களை காசிபமகாரிஷி கலியாணம்பண்ணிக்கொண்டார். அதிலே அதிதி என்கிறவள் முப்பத்துமுக்கோடி தேவர்களையும், வாமனாவதாரமான விஷ்ணுவையும் பெற்றாள். திதி என்கிறவள் அறுபத்தாறுகோடி அசுரரைப்பெற்றாள். தநு என்கிறவள் தானவர்முதலானவர்களைப்பெற்றாள். மநுவென்கிறவள் மனுஷனையும் அவர்கட்டியல்பாகிய வருணமுதலியவைகளையும்பெற்றாள். காபி என்கிறவள் பசுக்களையும், சராசரங்களையும் பெற்றாள். குரோதவசை என்கிறவள் கழுதை-கடம்பை-ஒட்டகம் இவைமுதலியவைகளைப்பெற்றாள். வினதை என்கிறவள் காற்று-இடி-மின்னல்-அருணன்-கருடன்-கூகை-பருந்து-பட்சி-இவைமுதலியவைகளையும் பெற்றாள். தாம்பிரை என்கிறவள் வக்குருவி - கௌதாரி - காடைமுதலியவைகளைப்பெற்றாள். கழை என்கிறவள் [illegible]களையும், செடிகளையும், பெற்றாள். கத்துருவை என்கிறவள் பலபல சிரசுகளை உடைய சர்ப்பங்களைப் பெற்றாள். சுரசை என்கிறவள் நாகங்களைப் பாம்பு முதலானதுகளைப் பெற்றாள். அரிஷ்டை என்கிறவள் ஓணன்-உடும்பு - அரணில்-முதலியவைகளைப் பெற்றாள். இழை என்கிறவள் ஜலசரமுதலியவைகளைப்பெற்றாள். இப்படியாக அதிதி-திதி-தனு-மநு-காபி-குரோதவசை-வினதை-தாம்பிரை-கழை-கத்துருவை-சுரசை-அரிஷ்டை-இழை என்றுசொல்லப்பட்ட இந்தப்பதிமூன்று ஸ்திரீகளாலே ஆதியில் உலகமுண்டாயிற்று. இவர்களிலே வினதைபுத்திரனான அருணன் அரம்பையைச்சேர்ந்தான். அவனுக்குச் சம்பாதியும், நாமும்பிறந்தோம். என்பிதாவான அருணன் சஞ்சரிக்கிறஇடமெல்லாம்கூடத்திரிவேன் அப்போது தசரதசக்கிரவர்த்திக்குஇன்னுயிர்த்துணைவனாக இருந்தவன், அவருக்கும் எனக்கும்கொஞ்சமாகிலும்பேதமிராது, வர்ணாசிரமம் விதிக்கிறபோதுதானே பிறந்தவன் நான் கழுகுக்கூட்டங்களுக்கெல்லாம்ராஜாவாகிய ஜடாயுவென்றுபேருடையவன்நானே என்றுசொன்னான் அவ்வார்த்தைகேட்டுஸ்ரீராமலக்ஷுமணன் அருசலிவந்தாய்மிகுந்த ஆர்த்தியுடனேயும்துயரத்துடனேயும்கண்களிலேதண்ணீர் சொரிய, கீர்த்தியைப் பூமியில்நாட்டி தேவலோகம் போன பிதாதிரும்பிவந்ததுபோல ஜடாயுவை இவர்கள்கண்டு அதிகபிரியமானார்கள் இவர்களிருவரையும்ஜடாயுதன் சிறகினாலே தழுவிக்கொண்டு. மக்களே! எனக்குச் செய்யவேண்டிய கடன்களைச் செய்யுங்கள் இரண்டு சரீரத்துக்கும் ஒருஜீவனாக இருந்தோம். அவர் பிரிந்து போயும்நான் சரீரம்வைத்துக் கொண்டிருக்கலாமா! அக்கினியில்விழுந்திறந்து அந்தத்துயரம் தீருகிறேனென்று ஜடாயுசொல்ல, ஐயா! உம்முடைய தமயனாள்ளங்களைரக்ஷிக்கிற சமயத்திலே தேவலோகப் பிராப்தியானார். இவ்விடத்திலே நீரும் எங்களைக்காட்டிக்கொடுத்துப்போய் விடலாமா! எங்களை ரக்ஷிக்கிறவர்கள் பின்னையார் இருக்கிறார்கள். பிரியமாயிருந்ததாயும் தகப்பனும் வீடும் பட்டணமும் விட்டு ஆரணியத்துக்குவந்த துயரமெல்லாம் உம்மைக்கண்டு பேசினபின்பு நீங்கினோம். நீரும் எங்களைவிட்டு நீங்கலாமா! ஓ[illegible]ருமகனுபோன் என்றுசொல்லி மிகவும் துயரத்துடனே நின்றஸ்ரீராமலக்ஷுமணனைப்பார்த்து நல்லதுபிள்ளைகளே! அப்படியானால் நீங்கள் அயோத்திக்குப்போய்ச் சேர்ந்தபிறகு நானும் தெய்வலோகம்போய்ச்சேருகிறேன். என்றுசொல்லிப் பின்னும்ஒருவார்த்தைசொல்லுகிறார், ராஜாதெய்வலோகப்பிராப்தியானால்நீங்களிருந்துராச்சியபரிபாலனஞ்செய்யவேணுமே அல்லாமல், அதைவிட்டு இப்படி ஆரணியத்துக்கு வரவேண்டியதென்ன! அது எனக்குமிகவும் சந்தேகமா யிருக்கின்றது சொல்லுங்களென்று, பின்னும் சொல்லுகிறார், தேவர்கள்-தானவர்கள்-நாகலோகத்தார்-பின்னும் யாராவது உங்களுக்கு இப்படி துயரத்தைக்கொடுத்திருப்பார்களாகில் அவர்களைச் சொல்லுங்கள், இந்தக்ஷணமே அவர்களை எல்லாம் சங்கரித்து ராச்சியத்தை உங்கள்வசம் செய்கிறேன் என்று தகப்பனார்சொல்ல, ஸ்ரீராமர் தம்பியைப்பார்த்தார். அது அறிந்து லட்சுமணர் சிறியதாயாராலேவந்த காரியங்களெல்லாம் நன்றாய் தெரியும்படித் தகப்பனாருக்குச்சொன்னார். அவ்வார்த்தைகேட்ட ஜடாயு மிகுந்தசந்தோஷமாய் தகப்பனைச் சத்தியவந்தனாக்கிச் சிறிய தாயார்சொன்ன வார்த்தையை பிரசாதமாக்கிக்கொண்டு, ராச்சியத்தைத் தம்பிக்குக்கொடுத்து வந்தமகனே, இந்தகாரியம் நீதவிர பின்னையார்செய்யப்போகிறார்களென்று கமலநேத்திரரான ஸ்ரீராமனை அன்புடனே தழுவிக்கொண்டு உச்சியைமுகந்து கண்களில்தண்ணீர்வர, மகனே, நீ நல்ல சத்தியவந்தன். அந்தராஜாவையும் என்னையும் மிகுந்தகீர்த்திவந்தராக்ச்செய்து வைத்தாயென்று பின்னையும் ஜடாயுசொல்லுகிறார். அப்பா! இந்தப்பெண்யார் சொல்லென்றுகேட்க, லக்ஷுமணர் தாடகை சங்காரமுதலாக வில்லிறுத்தது நடுவாக ஆரணியத்துக்குவந்தது முடிவாகநடந்த செய்திகளெல்லாம் தெரியச்சொன்னார். அதுகேட்டு அதிகசந்தோஷமாய், திரும்பி நீங்கள் ராச்சியத்துக்குப் போகிறமட்டுக்கும் இவ்விடத்திலே தானே இருங்கள் நான் உங்களைக் காக்கிறேனென்றுசொல்ல, ஐயா! அகஸ்தியமகாமுனி கோதாவேரிதீரத்திலே

பஞ்சவடியில் வாசம்செய்யச்சொல்லி ஆக்கியாபித்திருக்கிறார். அவடத்திலேபோய் வாசமா இருக்கிறோமென்று சகலருடைய மனதிலும் வாசமா இருக்கிற ஸ்ரீராமர்சொல்ல, அதுகேட்டு மிகவும் நல்லதாயிற்று. அந்தபஞ்சவடிதீரத்திலேதானே இருங்கள். அதுவும் உங்களுக்குக் காண்பிக்கிறேன். வாருங்களென்று எழுந்திருந்து இவர்களுக்கு நிழலுண்டாகும் படியாய் அந்த ஆகாயத்தில் வட்டமிட்டு பறந்துகொண்டு அழைத்துக்கொண்டுபோய் அந்த பஞ்சவடி தீரத்தை மக்களுக்குக்காட்டி, மக்களுக்கும் மருமகளுக்கும் ராக்ஷதாள் இவடத்திலே வேறே சுரூபங்களெடுத்துக்கொண்டு வருவார்கள், அதுகளெல்லாம் நன்றாயறிந்து, ஜாக்கிறதையாய் இருங்களென்று சொல்லி ஜடாயுதன் எதாஸ்தானமேபோய்ச் சேர்ந்து தன்குஞ்சுகளைப் பார்க்கிற பக்ஷிபோலவே பார்த்துக்கொண் டிருந்தார்.

## பஞ்சவடிதீர்த்தத்தைக்காணுதல்.

பூமிக்கு ஆபரணம்போல அழகாய் சகலருக்கும் ஞியானப்பொருளைக்கொடுத்து மகிமைபொருந்தி, தெளிந்து குளிர்ந்து மதுரமாய் ஒழுக்கத்தைத்தழுவி இருக்கிற மகாகவியான கம்பர்சொல்லிய பாடல்போலே அதிகசிங்காரமாய்வருகிற கோதாவரிநதியை, ஸ்ரீராமலக்ஷ்மணன் பிராட்டியாருடனேகூட எழுந்தருளிப்போய் கண்டார்கள். அந்தநதியின் தாமரைச்சமலங்கள்-முகம்போலவும், நீலோர்ப்பலங்கள்-கண்கள்போலவும், பிரகாசிக்கக்குளிர்ந்த அலைகளான கைகளினாலே, அனேகபுஷ்பங்களை வாரித்தூவி, இவர்களைக்கண்டு சேவிக்கிறதுபோலப் பிரகாசித்தது. பின்னையும் அந்த கோதாவரி மிகுந்த ஆசையுடனே வருகிறதுபோல இரைந்திரைந்து எங்கி எங்கி நீலோர்ப்பலபுஷ்பமான கண்களிலே தேனென்கிற ஜலங்கள் பரந்துசோர, ஸ்ரீராமலக்ஷ்மணன் பிராட்டியாருடனேகூட, ஆரணியத்தில் வாசம்செய்கிற வருத்தத்தைப்பார்த்துப் பிரலாபிக்கிறதுபோலவும் பிரகாசித்தது. அந்தகோதாவரி தீரத்தினுடைய சிங்காரங்களையும், சக்கிரவாள பட்சிகள் ஜோடுஜோடாய்ப் பிரகாசிக்கிறதையும்பார்த்து, ஸ்ரீராமர் சீதையினுடைய தனங்களைப்பார்த்தார். சீதை ரத்தினங்களைக் கொழித்துப் பிரகாசித்திருக்கிற, மணற்குன்றங்களைப்பார்த்து ஸ்ரீராமருடைய திருத்தோள்களைப் பார்த்தாள். ஸ்ரீராமர் அன்னங்கள் ஒதுங்கிப்போகிறதைக்கண்டு சீதையினுடைய நடையைப்பார்த்து குஞ்சிரிப்பாக நகைத்தார். சீதை அந்தநதியிலே தண்ணீர்சாப்பிட்டு திரும்பிநடக்கிற மதயானையைப்பார்த்து ஸ்ரீராமருடைய நடையைப்பார்த்து குஞ்சிரிப்பாக நகைத்தாள். அந்தநதி ஓரத்திலே அனேக புஷ்பக்கொடிகள் துவளுகிறதை ஸ்ரீராமர்பார்த்து சீதையினுடைய இடையைப்பார்த்தார் சீதை அனேக நீலோற்பலபுஷ்பங்கள் நெருங்கி புஷ்பித்திருக்கிறதற்கு இடையிலே, செந்தாமரைக்கமலங்கள் மலர்ந்திருக்கிறதைக்கண்டு ஸ்ரீராமருடைய நேத்திரங்களைப்பார்த்தாள் இப்படியாக அந்த நதியினுடைய சிங்காரங்களைப் பார்த்துக்கொண்டே அதற்கு சமீபத்திலிருக்கும் பஞ்சவடி என்கிற குளிர்ந்த சோலையிலேசேர்ந்து, தம்பியாலேசெய்யப்பட்ட பன்னசாலையிலே சீதையுடனேகூட ஸ்ரீராமர் எழுந்தருளி இருந்தார்.

## சூர்ப்பனகியின் சூட்சி.

ஸ்ரீராமலக்ஷ்மணன் மிகுந்த சந்தோஷத்துடனே பஞ்சவடிதீரத்தி லிருக்கிற நாளையிலே, ஒருநாள் ராக்ஷதர்களுக்கெல்லாம் அரசனான ராவணனை வேரோடேமுடித்துப் போகிறதற்கு, (உயிரோடேகூட வியாதி உற்பத்தியாய் காலம்பார்த்துக்கொண்டிருந்து, கொல்லுகிறதுபோல) ஒருதாய் வயிற்றிலே அவனுடன்பிறந்த தங்கையானவள் ஒருத்தி, அவள்பெயர் சூர்ப்பனகி. அவள் எப்பேர்க்கொத்தவளெனில், செம்பாகம்போலசெம்பட்ட மயிர்க்கூந்தலை உடையவள். தேவர்களுக்கும் ரிஷிகளுக்கும்-பூலோகத்தாருக்கும்-வியசனத்தைக்கொடுத்துக்கொண் டிருக்கிறவள். இடைவிடாமல் அந்த ஆரணியத்திலே வாசம்செய்துக்கொண்டு, ஒருகண்ப்பொழுதில் எந்தெந்த லோகங்களுக்குப் போகவேணுமோ, அவடங்களுக்கெல்லாம்போய் வந்துக்கொண்டிருக்கிறவள். (பூர்வத்திலே தேவர்கள், ராக்ஷதர்கள் எங்களை உபத்திரவம் பண்ணுகிறார்கள். அந்த உபத்திரவம் தீர்ந்து எங்களை ரட்சிக்கவேண்டுமென்று ஸ்தோத்திரஞ்செய்ய, அப்போது திருப்பாற்கடலின் யோக நித்திரையைவிட்டு, பூமியில்வந்து அவதாரம் செய்திருக்கிற புருஷோத்தமனைதன்குலத்துக்கெல்லாமுடிவுகாட்டுகிற) அந்தராக்ஷதியானவள் ஸ்ரீராமனைக் கண்களினாலேகண்டாள். கண்டு, மிகவும் அதிசயமாய் இவர்யார், மன்மதனோவென்றால், அவனுக்கு ரூபமில்லையே! தேவேந்திரனோவென்றால், ஆயிரங்கண்களைக்காணோமே! சிவனோவென்றால், மூன்றுகண்களில்லையே! விஷ்ணுவோவென்றால், சதுர்ப்புஜத்தைக்காணோமே! ஆ! இதென்ன ஆச்சரியம்! சிவன் கண்ணினால் எரிந்து அரூபமானமன்மதன், அன்றுமுதல் இன்றையவரைக்கும் தபம்செய்து, தபோபலத்தினாலே முன்னிருந்த ரூபத்திலேயும் அதிகசுந்தர மானனோ, நீலகிரி பர்வதம்போல புஜங்களும், திக்குகஜத்தினுடைய தும்பிக்கைபோல் கைகளும், கண்ணுக்கடங்காத அழகும், நிறைந்து-பரந்து அகண்டிருக்கிற மார்பும், பூரணச் சந்திரனைப்பழிக்கும் திருமுகமண்டலத்தை உடைய இந்தமாபுருஷன், அதிகசுந்தரமுண்டாயிருக்கச்சே இன்னம் என்னத்திற்குத் தவம் செய்கிறவரா இருக்கிறார் இவருடைய பாதாரவிந்தம் பூமி என்கிற ஸ்திரியின்பேரில் பட்டபடியால், அவளுக்கு அதிக சந்தோஷமுண்டாய் சரீரம் புளகாங்கிதமானதுதான், இந்தப்புல்லுகள் முளைத்திருக்கின்றதென்றும் இவருடைய சுந்தரப் பிரகாசத்தைச் சூரியன் பார்க்க இல்லையாக்கும். ஆகையினாலே, தன்னுடையகொஞ்ச ஜோதியைப்பிரகாசித்துக்கொண்டு மனதிலே வெட்கமில்லாமல், ஆகாயத்தில் நடக்கிறானென்றும், இவருடைய அதரத்துக்குச்சமானம் பவழமென்று, உலகத்



தார் சொல்லும்படியா அந்தப் பவழம்செய்த பாக்கியம் யார்செய் திருக்கிறார்களென்றும், இவர் தரித்திருக்கிற மரவுரிசெய்தநபசு அந்த பீதாம்பரமும் செய்ய இல்லையென்றும், கேசங்கள் சடையாய்ப்போடாமல் சும்மா விட்டிருந்தால், கண்ட ஸ்திரீகளுடைய வஸ்திரமும் உயிரும் அந்தக்ஷணமே போய்விடுமென்றும், ஆபரணங்கள், இவருடைய திருமேனி அழகுக்கு அதிகம் கொடுக்குமா, ஜோதியான ரத்தினத்துக்குப் பின்னை ஒருரத்தினத்தினால் அழகு உண்டாகுமா, கொஞ்சமாகிலும் குறைவில்லாமல் சகல லக்ஷணத்துடனேயும் இந்த மகா புருஷனை சிருஷ்டிக்க பிரம்மதேவன் தானும் அடைந்திருப்பா னல்லவா, இவருடைய பாதத்துளிக்குச் சமான மல்லாத தேவேந்திரன் உலக மெல்லாம் ஆளும்படியா இருக்கிற படியினாலே, பழி சம்பாதித்துக் கொண்டா னென்றும் இப்படியாக தன்மனதிலே நினைந்து நினைந்து (மிகுந்த ஆசையுடனே திரவியத்தைச் சம்பாதித்து ஒருவருக்கீயாமல் அந்த திரவியத்தைக் காத்துக்கொண் டிருக்கிறவனுடைய சித்தித் தெய்வம்போல) இவனுடைய கற்புதெய்ந்தவளாய் ஆகாயத்திலே ஒருசித்திரம் எழுதினதுபோலே திகைத்துநின்று மெத்தப்புருஷனி ஸ்ரீராமருடைய திருத்தோள்களின்பேரில்பதிந்த தன்பார்வையை அப்பாலே வாங்கமாட்டாதவளாய் பார்த்தபடியே நின்றுகொண்டு இவருடைய மார்பிலேசேர்ந்தால் பிராணனிருக்கும். இல்லாவிட்டால் தேவர் அமிர்தத்தைச் சாப்பிட்டாலும் பிராணனில்லாது போய்விடும் என்று அவர் எதிரேபோய்நிற்க அனேகருள் யோசனைசெய்து இந்த சுரூபத்துடனேபோய் நின்றால், கோரதந்தங்களையும், சகல உயிர்களையும் தின்று இருக்கிறவயிறும், உடையவள். இவளென்று மருந்துஞ்சுகி விடுவார். ஆகையால நல்லசுந்தரமானரூபம் எடுக்கவேணுமென்று தன்மனதில் ஸ்ரீமகாலக்ஷ்மியைநினைத்து பிரார்த்தித்து பூர்வத்திலே அனேக கைவல்லியமா இருக்கிற மந்திர[illegible]த்து அதிக சுந்தரமாய் பூரணசந்திரனைப்போல முகமும், மார்களிருக்குச் சமமான செவந்தபாதங்களும் உடைய ஓர் ஸ்திரீபோல வஞ்சகியான ராக்ஷசி [illegible]கொண்டு மயில்போலவும், அன்னம்போலவும், வஞ்சிக்கொடிபோலவும் வந்தாள். அனேக ஆபரணமும், புஷ்பங்களும், மிகவும் அழகுகொடுக்க ஜிரித்துக்கொண்டு ஆகாயத்திலிருக்கு மின்னல் பூமியில் இறங்கி நடக்கிறதுபோலவும், வஸ்திசாதக்கொடியிருந்தாம் எடுத்து தேனைப்போல வசனங்களும், மான்போல கண்களும், பொருந்தி வந்ததுபோல வருகிறபோது கால்சிலம்பும், மேகலாபரணமும், சத்திக்கிறதும், புஷ்பமாலையின்பேரில் வண்டுகள் மொய்த்துக் கொண்டு ரீங்காரம் செய்கிற ஓசையும், இவைமுதலிய சத்தத்தைக்கேட்டு ஸ்ரீராமர் யாரோ ஒருஸ்திரீ இங்கேவருகிறப்போலே காணுதென்றெண்ணித் திரும்பிப் பார்த்தார் (பாகவதாளுடைய பேதத்தனத்தைதக்கி மெய்ஞானக்கண்ணைக் கொடுக்கிற கண்ணனான ஸ்ரீராமர்) அவளை நன்றாய்ப்பார்த்து மூன்றுலோகத்திலும் இப்படிக்கொத்த சுந்தரமான ஸ்திரீ இல்லை என்கிறதாய் ஆச்சரியப்பட்டு அழகுக்கு ஒருவரம்பு உண்டா! இவள் அழகுக்குச்சமானம் யாரிருக்கிறார்கள் என்றுநினைத்தார் அப்போது அந்தரூபமாய்வந்த ராக்ஷசி ஆசைமனதிலேவர சமீபத்துக்குவந்து ஸ்ரீராமர் முகத்தைப்பார்த்து, கைகளைக்குவித்து நமஸ்காரம்செய்து கண்மொண்கிறவேலைவிசி மான்போலே ஒதுங்கி கொஞ்சம்நாணம் உடையவள்போல அப்புறம்நின்றாள். அப்படி நின்றவளைநோக்கி நீயார் நீ இவடத்துக்கு வரும்படி கிடைத்ததும் புண்ணியமல்லவா! உன்னுடைய ஊர் எது பேரென்ன! உனக்கார் உறவு, சொல்லென்று வேதத்துக்கு முதன்மையானவர் கேட்க, அவள்சொல்லுகிறாள். கமலாசனனுடைய பிரம்மதேவனுக்குப் பேரனுடைய குமாரத்தி திரிபுராந்தகனான சிவனுக்குத் தோழனான குபேரனுக்காக அஷ்டகெஜங்களை எல்லாம் ஜெயித்தும், கைலாசபர்வதத்தைஎடுத்தவனுகிய திரிலோககண்டகனான ராவணனென்னவனுக்குத் தங்கை என்பேர் காமவல்லி, அந்தவார்த்தையைக்கேட்டவுடனே ஸ்ரீராமர் மனதிலே ஐயமாய் இந்தரூபம் இவளுக்கு யதாரூபமல்ல, அதுவும் தெரிகின்றது. இவள்குணத்தை முடிய அறிவோமென்று ஒருவார்த்தைசொல்லுகிறார். அந்த ராவணன் தங்கை என்று நீ சொன்னதுமெய்யானால் இந்தரூபம் உனக்குவந்தகாரணமென்ன! சீக்கிரமாய்க்குச் சொல்லென்று சொன்னார். அவர்சொல்லி விடுகிறதற்கு முன்னமே நான் அந்த மாயமான ராக்ஷதாளோடேகூடி இருக்கிற வாழ்வை கொஞ்சமாகிலும்இச்சிக்கிறதில்லை, விவேகமுடையவளாய் சிலசாஸ்திரங்களைப்பார்த்து தருமவழியாய் நடத்துக்கொள்ளுகிறவள். மேலும் தேவர்க்கள் வரப்பிரசாதத்தினால் இந்தரூபம் நான்பெற்றேனென்று சொன்னாள். அதற்கு ஸ்ரீராமர் தேவேந்திரன்கூட எளியவன்போலிருந்து ஏவல்செய்ய, திரிலோககண்டகனான ராவணனுடைய தங்கை நீ ஆனால் பாக்கிய லக்ஷணங்களுடனே பிறப்படாமலும் ஒருதுணைகூட இல்லாமலும் தனியே வரவேண்டிய காரணம் என்னவென்றுகேட்க, ஒருநாளும் மெய் என்கிறதே அறியாத அந்தராக்ஷசி ஸ்வாமி! நான் நல்லவர்களிடத்திலே சேர்ந்திருக்கிறதே அல்லாமல் பாவிகளிடத்திலே சேருகிறதில்லை, தேவர்களிடத்திலேயும், ரிஷிகளிடத்திலேயும், வாசமா இருப்பேன், இவடத்தில் ஒருகாரியமாய் உம்மைக்காணவந்தேன் என்று சொன்னாள். அவ்வார்த்தையைக்கேட்டு ஸ்திரீகளுடைய மனதை எப்படி அறிகிறது ஆகிலும் இவள்நல்லவளல்ல! அதுவும் கொஞ்சபோதில் தெரியப்போகுதென்று இருதயத்தில் எண்ணி பெண்ணே! நீ எங்களிடத்தில் என்னகாரியத்தை இச்சித்து வந்தாய் அதைச்சொல்லு ஆகுமானால் சொல்லுகிறோமென்று சொன்னார். அதற்கு அவள் குலஸ்திரீகளுக்குத் தங்கள்மனதிலிருக்கிற அபிஷ்டத்தைச்சொல்லுகிறதும்பிரயாசமாமே காமத்தினாலே வெந்துபோகிற பிராணனுக்கும் ஆசைவைத்திருக்கிறவள் நானபடியினாலே என்னசெய்யப்போகிறேன். அனுபவிக்கிறதற்கும் வேறொருவருமில்லை, அ

ந்த காமன்செய்கிற கலாபனையை நீர் காத்துக்கொள்ள வேணுமென்றுசொல்லிக் கண்களாலும் சில இங்கிதக் குறிப்புகளும் செய்து நிற்கிற அந்த அதிக சுந்தரியை ஸ்ரீராமர்பார்த்து இவள் நல்லவளல்ல. இவளுக்கு வெட்கமும் இல்லை என்றெண்ணிப் பேசாமலிருந்தார். அப்போது இவள் நம்மிடத்தில் அவர் ஆசை உண்டாய்ப் பேசாமலிருக்கிறாரோ! வெறுப்பாய்ப் பேசாமலிருக்கிறாரோ! என்று மனதில் ஐயப்பட்டு ஆசை மிகுதியினாலே மனம் ஊசலாடப் பின்னையும் சொல்லுகிறாள். ஸ்வாமி! அதிசுந்தர மானவரே! நீர் இவ்விடத்தில் வந்திருக்கிறது அறியாமல் நான்ரிஷியினிடத்தில் ஏவல்செய்துகொண்டு என் அழகையும் - இளமையும் - வீணாய்க் கழித்துப் போட்டேனென்றுசொன்னாள். இவள் ராக்ஷஸி நீதியிலே இல்லாதவள் என்னமோ ஒருகாரியத்தை எண்ணி வந்திருக்கிறாளென்று ஸ்ரீராமர் தமதுசித்தத்தில் எண்ணி இவள் மனதை முழுதிலும் அறிவோமென்று வேடிக்கையாக ஒருவார்த்தை சொல்லுகிறார். சுந்தரமான பெண்ணே! நீ பிராமணஸ்திரீ நான் ராஜன் இப்படிக்கிருக்க நீ இவ்விதமாகச் சொல்லுகிறதுயுக்தமமா என்றார். அதற்கு அவள் எங்கள் தகப்பனார் வேதவித்தான பிராமணன் எங்கள் தாயார் அருந்ததிக்குச் சமானமானவள். அவள் ராக்ஷசராஜன் வயிற்றில்பிறந்தவள் இதை எண்ணி ராக்ஷஸி என்று நீர் பராமுகமாய் எனக்கு தயைசெய்யாமற்போனால் என்பிராணன் போய்விடுமென்றுசொன்னாள். அப்படி மிகுந்த ஆசையுடன்சொல்லுகிற வார்த்தையைக்கேட்டு இளம்சந்திரனைப்போல தந்தங்கள் பிரகாசிக்கநகைத்துக்கொண்டு நீ ராக்ஷசகணம், நான்மனுஷகணம், பொருத்தந்தான் நன்றாயிருக்கின்றதா! இல்லையே என்று ஸ்ரீராமர்சொன்னார் அதற்கு அவள் நான் ராவணன்தங்கை என்று சொல்லிக்கொண்டேனா அது என்னுடைய தப்பிதம், அந்தபாபமானபிறவிதோஷம் தேவர்கள் அனுக்கிரகத்தினாலே தீர்த்துக்கொண்டேன். ஸ்ரீமகாவிஷ்ணுவுக்குச் சமானமானவரே! நீர் என்னைசேர்ந்து ரக்ஷிக்கவேணுமென்றுசொல்ல, உனக்கு ஒரு தமையன் திரிலோகத்துக்கும் அதிபதி மற்றொரு தமையனே குபேரன், இப்பேர்க்கொத்தவர்களுடனே பிறந்திருக்கிற உன்னை அவர்கள் கொடுக்க வாங்கிக்கொள்ளவேணுமே. அல்லாமல் இப்படி தனியே பேசுகிறதற்கு நான் அஞ்சுகிறேன் என்று ஸ்ரீராமர் சொன்னார். ஸ்வாமி காந்தருவம் என்கிற கலியாணம் ஸ்திரீயும், புருஷனும் முன்னேசேர்ந்து அநுபவிக்கிறதென்று வேதமேசொல்லி இருக்கிறபடியினாலே நீரும் நானும் இஷ்டமாய்கூடிகலந்து இருப்போமாகில் அது என் சகோதரர்களுக்கும் சந்தோஷமாகவே இருக்கும். அதுவும் அல்லாமல் இன்னம் ஒருவார்த்தைசொல்லுகிறேன் கேளும் முன்னமே என்தமையன் ரிஷிகளுடனே பகையாய் இருக்கிறவன், நீரானால் தனியேவந்து இருக்கிறீர். ஆதலால் அவர்களுடன் உறவுசெய்கிறதற்கு உமக்கிதன்றி வேறேதருணமில்லை. தெய்வலோகாதிபத்தியம் உமக்குப் பட்டாபிஷேகம் செய்துவைக்கிறேன் அந்த தேவர்களும்வந்து உமக்கு ஏவல் செய்துகொண்டிருப்பார்கள். அதுவும் பாருமென்றுசொன்னாள் ஸ்ரீராமர் ராக்ஷசனுடைய கிருபையும் உண்டாயிற்று உன் அனுயோகமும் கிடைத்தது, உன்னுடனேகூட அநேககாலம் இருந்துவாழவும் உண்டாயிற்று. அதுமாத்திரமா பட்டணம்விட்டுவந்த தலமும் சித்தியாயிற்றென்று சொல்லி தந்தங்கள் பிரகாசிக்கநகைத்தார். இப்படி இருக்கிறசமயத்தில் சுவர்க்கம் மத்தியம் பாதாளம் என்கிற மூன்றிலேயும், பிரம்மாமுதலிய சகலருடைய கண்களிலேயும் நிறைந்திருக்கிற ஸ்ரீமகாலக்ஷ்மியான சீதை ஸ்திரீகளுக்கெல்லாம்ஒருநாயகம் தேவர்களும்பெற்றவரத்தினாலே பூமியில் ஓர் ரத்தினம்போலே பிறந்த ஜானகி ராக்ஷசாளென்கிற ஆரணியத்தை தகிக்கிற நெருப்பு போலே அவதாரம் செய்திருக்கிறபிராட்டி தானிருக்கும் பன்னசாலையைவிட்டு ஸ்ரீராமரிடத்திற்குப் புறப்பட்டுவந்தாள் அதிசுந்தர ரூபலாவணிய தேஜசோடு நிறைந்துவருகிற லோகமாதாவை இந்த ராக்ஷசிகண்டு நடுக்கிட்டு இடுக்கணுற்று இப்பிரமைகொண்டு நினைத்துப் பார்த்துக்குமைந்து அமைந்துப்பார்த்தகண்ணைப் பெயர்க்கமாட்டாமல் ஏங்கி-மயங்கி-தேங்கி-வீங்கி-அங்கி-நகைச்செரிந்து விழித்தவள்போல ஓங்கி ஈந்து - இப்பேர்க்கொத்த ரூபமும் உண்டோ! என்று எண்ணியெண்ணி தியக்கமுற்று மயக்கில் அழுந்திச்சொல்லுகிறாள். பெண்ணாய்ப்பிறந்த எனக்கு அச்சுரூபமிவ்வளவுவிகாரத்தைக்கொடுக்குமானால் மற்றவர்களுக்கு எப்படி இருக்கவேண்டுமென்று மனதைத் துறந்து - சோர்ந்து - விரைந்து ஸ்ரீராமனையும் வருகிற சீதையையும் பார்த்து, இது பிரமதேவன் மூன்று லோகத்துக்கும் அதிசுந்தரமாய் ஆணி ஒன்றும், பெண்ணி ஒன்றும், இருக்கட்டுமென்று சகலருக்கும் உயர்ந்தசுந்தரமாய்ச்செய்து தன்சாமர்த்தியத்தைக் காட்டினதே அல்லாமல் வேறல்ல! இதுதவிர வேறேயோசனை இல்லை என்றெண்ணிப் பின்பு ஓர் யோசனை செய்கிறாள்; இந்தபுருஷனுக்கு இப்படிக்கொத்த ஸ்திரீ கிடைத்திருக்கும்போது ஆனாலும் இவர்ஸ்திரீயை ஆரணியத்துக்கு கொண்டுவரார். இந்த ஸ்திரீ வேறே ஒருவருமல்ல, தாமரைக் கமலத்தை விட்டுவந்த மகாலக்ஷ்மிபோலவே காணுது, அவளே ஆனால் இந்த பூமியிலே நடந்து இங்குவரக் காரணம்யாது! தெரியவில்லையே! என-மனம் புகைந்து நீக்கமாய் ஓர் ஆலோசனைபண்ணினாள். அது யாதெனில் காசாம்பூவண்ணனான இந்த மகாபுருஷன் இந்த ஸ்திரீயைச்சேர்ந்தவனல்ல. இவளும் இவரிடத்தில் நம்மைப்போல ஆசைகொண்டு இவரைச் சேரவேண்டுமென்று அபேக்ஷித்து வருகிறாள். இவள்வந்து இவருடனேகண்டு பேசுகிறதற்கு முன்னமே, அவளிடத்தில் இவருக்கு இகழ்ச்சி வரும்படி செய்வோமென்று நினைத்து, ஸ்ரீராமனைப்பார்த்து ஒரு வார்த்தை சொல்லுகிறாள், ஸ்வாமி! இதோவருகிறாளே அவள் மாயம் செய்கிறதற்கு கெட்டிக்காரி, வஞ்சனையிலே மிகவுஞ்சமர்த்தி, ராக்ஷஸி, அவளுடைய மனதை அறியக்கூடாது, அவள்வார்த்தையைமெய்யென்று



தேறலாகாது, அவள்ரூபமும் மெய்யானரூபமல்ல, அநேகருடைய மாம்சங்களைத்தின்று வாழுகிறவள் என்னமோ யோசனையாய் வருகிறாள். அவளைப்பார்க்கச்சே தானே எனக்கு பயமா இருக்கின்றது. அவள்சமீபத்தில் வராமுன்னமே விலக்கிவிடுமென்று சொன்னாள். தன்னுடைய நடத்தையை அவளிடத்திலேவைத்துச்சொன்ன, சதிவார்த்தையைக்கேட்டு ஆச்சரியமாய், வருகிறவளும் ராக்ஷசிதானோ பார்ப்போமென்று முத்துகள் போலிருக்கிற தந்தங்கள் பிரகாசிக்க நகைத்தார். அந்த சமயத்தில் அமிர்தத்திலேவந்த ஜானகி ஸ்ரீராமர் சமீபத்தில் வருகிறபோது சூர்ப்பனகிகண்டு நீயார். இங்கேவருகிறவள், நீ ராக்ஷசியாச்சுதே கொஞ்சமாகிலும் பயமில்லாமல் வருகிறாயாவென்று நெருப்புச்சுவாலைபோலக்கோபித்து அதட்டினாள். அவ்வார்த்தையும் கேட்டு அவளையும் கண்களாலே பார்த்து, சீதை மிகவும்பயந்து வஞ்சிக் கொடிபோலிருக்கிறஇடைமிகவும் அலையத்துடிதுமாய் நடந்துமிருதுவான பாதங்கள்சோரப்பதைத்து, நிலமேகத்தைப்பவழக்கொடி சூழ்ந்துகொண்டதுபோல, ஸ்ரீராமருடைய தோளைதழுவிக் கொண்டாள், ஸ்ரீராமர் ராக்ஷசிகளுடன் இப்படி விளையாட்டாகப் பேசிக்கொண்டிருந்தாலும் தீமையேமிகவும் விளையுமென்றறிந்து, ராக்ஷசியைப்பார்த்து நீ - இப்படிக்கொத்தகாரியங்கள் செய்துக்கொண்டு இங்கே இராதே, தம்பி அறிந்தால் கோபம் செய்வான் நீ - சீக்கிரமாய்ப் போய்விடென்று சொன்னார் அதற்கு மாயா ரூபங்கொண்டுவந்திருக்கிற இந்த ராக்ஷசிசொல்லுகிறாள். பூலோகத்திலிருக்கிற ரிஷிகளில்யவராகிலும் மன்மதனும் தேவர்களும் என்னை இச்சித்து இன்னம்பசை செய்கிறார்கள். அப்படிக்கிருக்க நீர், யாரோ ஒருத்தியைக்கண்டு என்னை இழந்து ஆ! ஆ! நன்றாய் இருக்கின்றது. பளா! ஸ்ரீராமா, இவளுக்கென்னமாய்ச் சொன்னாலும் தன்குணத்தை விடாமல் காட்டிக்கொண்டு ஏதேதோ பிதற்றிக் கொண்டிருக்கிறாளென்று திருவுளத்தில் எண்ணி, (மின்னலோடு பூமியில் நடந்து போகிற மேகம்போல (மைதிலியுடனே ஸ்ரீராமர் தம்முடைய பன்ன சாலைக்குப் போய்ச் சேர்ந்தார் சூர்ப்பனகி தன்பிராணன் போனது போலே மூர்ச்சித்துச்சோர்ந்து, தானென்ன சொன்னாலும் கேளாமல் அந்தஸ்திரியிடத்தில் அன்பு வைத்து அழைத்துக்கொண்டு போகிறாரே யென்றெண்ணி, அவ்விடத்திலே நிற்காமல் அவரைச் சேருகிறதற்கு என்னவழியென்று யோசனைசெய்து இன்றைக்கு இவரைச் சேராமல் போனால் பிராணன் போய்விடுமென்றெண்ணி குளிர்ந்த குகையை உடைய பாறையிற் போய்ச் சேர்ந்தாள். சூரியனும் மேற்குச் சமுத்திரம் போய்ச்சேர்ந்தான். ஸ்ரீராமனைச் சேர்ந்து அநுபவிக்க வேணுமென்கிற ஆவலை உடைய சூர்ப்பனகி, அந்தமாலைப் பொழுதும் செம்மானமும் வரவே, மிகவும்உருகி மனதழிந்து அசைந்து சோர்ந்து காமாக்கினி மேலும் மேலும் மீண்டு நாகப்பாம்புக்குத் தன்பல்லிலுள்ள விஷம்தானே சரீரமெல்லா மேறினதுபோல மயங்கினாள். மூன்றிலே ஸ்ரீராமர்தாடகையென்கிற பாவிபேரில் எப்படி பாணப் பிரயோகஞ் செய்தாரோ அப்படி மன்மதன் இந்தபாபியான ராக்ஷசியின் மார்பிலே தன்புஷ்ப பாணங்களைப் பிரயோகிக்க, அதனால் உடல்உயிர்சோர்ந்தாள். சந்திரக்கிரணமும் சமுத்திர இரைச்சலும் மந்தமாருதம் முதலியவைகளாலும் மிகவும் நொந்து, புழுங்கிச் சரீரம்வெதும்பக் காய்கிற சந்திரனைக்கரியாக வைத்துக்கொண்டு, புஷ்பபாணம் பிரயோகிக்கிற மன்மதனை இதோ தின்றுப்போடுகிறேனென்றுநினைத்துஎழுந்திருக்க, அந்தத்தில் மலையமாருதம் என்கிற வேலாயுதம் மார்பிலே ஊன்றவே ஓய்ந்து சாய்ந்து-தேய்ந்து-பாய்ந்து மாய்ந்துபோனவள் போலானாள். காருக்குக்கிரமமாக இரைகிறசமுத்திரத்தை மலைகளைப்பிடுங்கித் தூர்த்துப்போடுவோமென்று நினைத்தாள், அப்போது சந்திரகிரணமென்கிறவலையைத்தாண்டமாட்டாமல் தாக்கித்தாள் புஷ்பங்களும் பூங்காவனங்களும் கரிந்துபோகும்படிக்குச்செய்துப் போடுகிறேனென்று கோபித்து எழுந்தாள், சேவலோடே கூடி இருக்கிற செவந்தகல்லைய உடைய அன்றில் பக்ஷியானது கூவவேபயந்து நடுங்கி ஒடுங்கினாள். ராகு கேதுவைப்பிடித்துவந்து சந்திரனை விழுங்கிப்போடச்சொல்லுவோமென்று நினைத்தாள். அப்போது அவள்தனங்களிலே மாருதம்வந்து மோதவே உயிர்வெந்துமனங் கலங்கிப் புழுங்கினாள். இந்த வெப்பத்தைசகிக்கமாட்டாமல்குளிர்ந்தபனி ஜலத்தைக்கைகளினாலேவாரி அந்தனமுகட்டின்பேரில் அப்பிக்கொண்டாள். அதுவெண்ணெயைப்போல உருகிக்கொதித்தது குளிர்ந்த சுனைஜலங்களிலே விழுந்தாள், அதுவும் கொதிப்புள்ளதாகவே இருந்தது. கர்ப்பமனதை உடைய மன்மதன் எய்கிறபாணத்துக்கு எங்கே பதுங்கி ஒளிக்கலாமென்று நினைத்து, மேகத்தைப்பார்த்தும் நீலகிரிகளைப்பார்த்தும் சரீரம்அனல்போலிருக்கிறதையும் நோக்கி கும்பிட்டுசந்திரகாந்தக்கல்லும் வெந்துபோக அதின்பேரில் விழுந்து புரண்டாள் சந்திரனும் மாருதமும்மன்மதனும் தன்னைக்கண்டறியாதபடிக்குக்குகைகளிலே மலைப்பாம்போடு இவளும் ஒருபாம்பாகப் புகுந்திருந்தாள். இந்தருணத்தில் இவள் கொண்டிருந்தகாமம் மிகுந்துதனக்கென் புழுங்கி இன்னது செய்வோமென்று தோன்றாமல் பிறைமதம்பி, இளந்தளிர்களைப் பறித்துப்படுக்கையாகக்கிறே போட்டு [illegible] அதிலே விழுந்து கிடந்து புரண்டாள். ஸ்ரீராமருடைய திருமேனியை உரு வெளியாகக் கண்டு சேர்ந்து வெட்கிப்பார்ப்பாள். மறையவே ஐயோ! காமவியாதி அதிகமாகத் துயரப்படுவாள், ஆகாயத்தில் மேகம் போகிறதைக்கண்டு அவருடைய திருமேனி சாயலென்று மார்பிலே தழுவிக்கொள்ளுவாள். அதுவும் சருகிப்போகக்கண்டு பிரலாபிப்பாள். அவளுடைய மோகத்துக்கு ஒருமுடிவில்லாமல், பிராண காலாக்கினியிலே விழுந்தவள்போல, வெந்து - பதைத்து நொந்தாள் ஸ்ரீராமரை என்ன உபாயமாவதுசெய்து சேரலாமென்கிற ஆசையினாலே பிராணன் போகாமல் இருந்தது. நீலகிரி பர்வதம் போலிருக்கிற புருஷோத்தமா!! என் ஆசை

யைத்திருமென்றும், கிருபை செய்யு மென்றும், விஷத்
தைச் சாப்பிட்டதுபோல சரீரம் நடுங்கி, நீலோற்பலம்
போலவும்கெண்டைபோலவும்கண்களை உடைத்தான ஓ
ருஸ்திரீவந்தாளே அவள் அவர்தேவிதானோ ! ஸ்ரீமகா
லட்சுமியைப் பார்க்கிலும் அதிசுந்தரமா யிருக்கிறாளே
அவளிருக்கப் பாவியான நம்மைப் பார்க்கப் போறாரா
வென்றும் பிராணன்போனவள் போலே பதைத்து ஆ
சைமிகுந்து இந்த காமாக்கினி தீர்ந்து நாமும் சுகப்படு
வோமாவென்றும் பலவாறுகச்சொல்லிப் பிரலாபித்து
க்கொண்டிருக்கிறபோது, மூன்றுலோகத்திலும் உள்ள
ராக்ஷத பூண்டை, களைகிறதற்கு ஸ்ரீராமன் அவதரித்த
துபோல இருள்களையெல்லாம் சங்கரித்துக்கொண்டு சூரி
யன் உதையமானான். பொழுது விடியவே பிராணன்நி
லைத்தவளாய் அந்தசூர்ப்பனகியானவள் யோசனைசெய்
து அந்தஸ்திரீ அவரிடத்திலிருக்கிறமட்டும் அவர்நம்மை
க் கண்ணாலும்பாரார் ஆகையால் சீக்கிரமாய் ஓடி அவ
ளை எடுத்துச் சாப்பிட்டுப் போட்டு அந்தசுந்தரமானபு
ருஷனுடனேகூடிவாழ்கிறதே நமக்குபுத்தியென்றெண்ணி
க்கொண்டு அதிசீக்கிரமாய் சீதைஇருக்கிற பன்னசாலை
யை நோக்கி ஓடிவந்தாள். அப்போது ஸ்ரீராமர் பிராத
காலையில் எழுந்திருந்து ஒருதடாகத்திலே ஸ்நானம்செ
ய்துக்கொண்டிருந்தார், அதைக்கண்டு இதுதான் சமய
மென்று பன்னசாலையே வந்தாள், இப்படி வந்துக்கொ
ண்டிருக்கிறவள், அப்பன்ன சாலைக்கு அடுத்த வாசனை
பொருந்திய இருண்டசோலையிலிருந்து சீதையைக்காத்
துப்பார்த்துக்கொண்டிருக்கிற இளையபெருமாளைப் பா
ர்க்காமல், நாமெண்ணிவந்ததற்குச்சரியாய் தனியேஅ
கப்பட்டாள், இனி தடங்கல் செய்யலாகாதென்று சீதை
யினுடைய சமீபத்திலே நெருங்கினாள். அதை லக்ஷ்ம
ணர்கண்டு, யார்-அடி - அங்குபோகிறது அடி நில்லடி
என்று சொல்லி அதட்டிக்கொண்டு சீக்கிரத்துக்கு நட
ந்துவந்து, அக்கினிக்கொழுந்துபோ லிருக்கிற அவள்
தலைமயிரை ஒருகையால் பிடித்துக்கொண்டு, அரையிலி
ருந்தவாளை உருவி, இவள் என்னபாவி யானாலும் பெ
ண்பிறவானபடியால், கொல்லலாகாதென்று நினைத்தார்
அப்போது அவள் இவரைத்தூக்கிக்கொண்டு ஆகாசமா
ர்க்கத்தி லெழும்பநினைத்தாள். அது இவர் அறிந்து தன்
வாளினாலே அவளுடைய மூக்கும்-காதும் - ஸ்தனக்காம்
புகளையும் அரிந்து கோபம்தீர்ந்து தலைமயிரைவிட்டா
ர். பின்பு அவள் வாயைத்திறந்து அழுத ஓசை அஷ்ட
திக்குகளிலும்அடைந்து தேவர்களுடைய செவிக்கும்
செவிடுபட்டது. மூக்கறுபட்ட மோறையிலிருந்து வரு
கிற ரத்தப்பிரவாகம் பூமி எல்லாம் பெருகிற்று. லக்ஷ்
மணர் அவளுடையமூக்குமஸ்தனமும் அறுத்தது, இனி
ராவணனுடைய தலைகளை அறுக்கிறதற்கு நாள்கொண்
டுவைத்ததுபோல இருந்தது. கதறலென்று ஓடிவருகி
ற அந்தரத்தப்பிரவாகத்தை உடைய ராக்ஷசி, இனிகர
ன்முதலியராக்ஷதர், அனேகர் மாண்டுபோவார்களெ
ன்கிற விபரீதத்திற்கு, ரத்தமழைபெய்கிற மேகம்போ
ல இருந்தாள். இப்படி அறுபட்ட சூர்ப்பனகி துள்ளி
த்துடித்து-உயர்ந்து-பூமியிலேவிழுந்து-புரண்டு உழை
த்துக்கொண்டு-அசைந்து-கைகளைவிரித்து அங்கித்துமூ
ர்ச்சையாய் எழுந்திருந்து, நான் பெண்ணாய்ப்பிறந்து
பட்டபாடு நன்று இருந்ததென்று சொல்லி மிகவும் துக்
கித்து அழுதாள். ஒருநாளும் துயரமும்பயமும் அறியா
தகுடியிலேபிறந்த அந்தசூர்ப்பனகி, ஏகத்துவாரமா இ
ருக்கிற தனதுமூக்கினாலே கருமான் உலையில் எழும்பிப்
புறப்படுகிற தீயும் புகைச்சலும்போலே பெருமூச்சு வி
ட்டு, கைகளாலே பூமியை அறைந்து மலைகளைப்பிடித்து
பார்த்துக்கொண்டு, வியசனமுற்று மயக்கத்தினாலே சு
த்தி சுத்தி-ஓடித்திரிந்து, ரத்தப்பிரவாகத்துடனே சோ
ர்ந்து பூமியிலே விழுந்து மலையிலிருந்து அருவிவருகிற
துபோல மூக்கிலிருந்து, ரத்தம் மேன்மேலும் ஓடிவர,
அந்தநிணத்தில் இவள்திரிந்துக்கொண்டு, யமனும்பயந்
து நடுங்கும்படியாய், தன்னுடைய உறைவின்முறையா
ர் பெயரைஎல்லாம் நினைத்து நினைத்து ஒப்பாரி இட்டு
அழத்தலைப்பட்டாள்.

ஐயோ ! ஐயாவே ! இந்தபூலோகத்திலே நீயுமிருக்க,
ரிஷிகள் கையில் வில்லெடுத்துக் கொண்டு திரிந்தால் உ
னக்குச் சின்னத்தனமல்லவா ! தேவர்களெல்லாம் உ
ன்னைத்தலை எடுத்துப்பார்க்கிறதற்கும் பயந்துகிடப்பார்
களே ! மழுவாயுதம் தரித்திருக்கிற சிவனுடைய மலை
யை எடுத்த பெரியமலையே ! அண்ணாவே !! அண்ணா
வே !! புலி அப்பால் இருந்தாலும் அதின் குட்டியை கு
ருத்தரும் உபத்திரவம் செய்யார்களென்று, உலகத்தார்
சொல்லுகிற வார்த்தையும் பொய்யாய்போயிற்றே ! ஊ
ழிகாலத்திலும் அசைவில்லாத மும்மூர்த்திகளுக்கும்-
தேவர்களுக்கும்-தானவர்களுக்கும்- உண்டாகிய பலத்
தைப்பார்க்கிலும் அதிகபலத்தை உடைய ராவணேஸ்
வரா ! நான் பட்டபாடு பார்க்கிறதற்கு வாராயோ ! தே
வேந்திரனைச் செயித்து அவனைத்தூக்கி அவனுடைய
முதுகைப்பார்த்த சௌரியவந்தனே ! நான்பட்ட பழி
யைப் பார்க்கவாராயோ ! காற்றையும் - நீலத்தையும்-
நெருப்பையும்-கூற்றுவனையும்-ஆகாயத்தையும்- நவக்கி
ரகங்களையும்இவைகளைஎல்லாமடக்கி அவரவர்கள்கையி
லே வேலைவாங்குகிற - நீ ! இந்த இரண்டுமனிதருக்குத்
தோர்த்துஉன்பலத்தை விட்டுவிட்டையோ ! சிவன்கை
யிலிருந்த வாளைவாங்கினவனே ! சுருபத்திலே மன்மத
னுக்குச் சமானமானவர்களானாலும், இந்த மனிதர்கள்
உன்னுத்தத்திற்குத் தூளிக்குச் சமானமாக மாட்டுவார்க
ளா ! கண்களெல்லாம் நெருப்புப்பொறிபறக்க அஷ்டக
ஜத்தினுடைய தந்தங்களை ஒடித்த புஜபலபராக்கிரமமா
னவனே ! தேவர்களையும் கடுங்கச் செய்துக்கொண்ட
ராவணேஸ்வரனுக்கும் தம்பிமாருக்கும் ஆகாரத்துக்கு
யோக்கியமான மனுஷாளிடத்திலே, அந்தபலங்களெல்
லாம் ஒடுங்கிப்போச்சுதோ ! காட்டிலே ஒளித்துக்கொ
ண்டு திரிகிற மானிடரென்ன பலமா ! அரன்-அரி-அய
ன்-மூவரையும் ஜெயிக்கத்தக்கின பலத்தையுடைய கர
னே ! என்காக்ஷியைப்பார்க்க வாராயோ ! இந்திரனும்-
பிர்மாவும்-தேவர்களும்-ஏவல்கேட்க,சுந்தரமானதே



வரம்பைகள் பல்லாண்டு இசைக்க, சகலலோகத்தாரு
ம்தொழுது வணங்கி தோத்திரம்செய்ய, பூரணசந்திர
ன்போலே குடைபிரகாசிக்க, நீ கொலுவீற்றிருக்கிற ச
பையிலே நான்வந்து நாணமல் எப்படி முகத்தைக்காட்
டுவேன், என் மார்பு நெரிய உதைத்து விழுந்தள்ளி உ
ருட்டி மூக்கை அறுத்து, ஒருமனிதனானவன் உச்சாக
மா இன்னம் ஜீவனுடனே இருந்து, தன் தோளைப்பார்
த்துக்கொண்டு மகிழ்ச்சியா இருக்க, நான் இப்படிகிடந்து
புலம்புகிறதா!இதுகானிருக்கிற ஆரணியமல்லவா!நான்
இப்படிபட்லாமா,இதுஉன்கீர்த்திக்கு இழுக்கல்லவா, உ
லகமெல்லாம் எழுதி இருக்கிற கீர்த்தியைஉடைய அண்
ணா! அண்ணா!ராவணேஸ்வரா! அனேக ஆயுதங்களைத்த
ரித்திருக்கிற கரதூஷணன் முதலான ராக்ஷதர்கள் எல்
லாரும் கும்பகர்ன்னனைப்போலவே தூங்குகிறார்களோ
நீயும் தூங்குகிறையோ ! ஐயோ ! பாவிக்கோ ! நான் அ
ழைக்கிறது கேட்கவில்லையா ! ஆரணியத்திலே இரண்டு
மனுஷாள் என்னைக்காதையும், மூக்கையும், அறுக்க மா
னமிழந்து, நானிப்படித் துயரப்பட மாட்டுவேனா ! அசு
ரரை எல்லாம் ஜெயித்து தேவேந்திரனுடையகாலிலே
தளைபூட்டி தேவர்களை எல்லாம் ஏவல்கொண்ட மரு
மகனே ! மருமகனே ! ஒருவில்லினாலே திசாதிசையில
இருக்கிறவர்களை ஜெயித்து இந்திரனை சிறையிலே போ
ட்ட மருமகனே ! இந்தமனிதர்களுடைய பலத்தைப்பா
ர்க்கவாராயோ ! என்று சொல்லிச்சொல்லி அழைத்து
இறங்கி பூமியிலே கிடந்துப் புரளுகிறபோது பச்சை
மாமலைபோலே திருமேனியை உடைய ஸ்ரீராமர் சந்தி
யாவந்தன முதலான துறைகளை முடித்துக்கொண்டு வந்தார்
வந்தவருடைய திருமுகத்தைப்பார்த்து வயிற்றிலே அ
றைந்துக்கொண்டு சன்னஜலத்தினாலேயும், மூக்கு ரத்தத்
தினாலேயும், பூமி எல்லாம் சேறாக்கி ஐயோ ! உன்திரு
மேனிக்கு அன்புவைத்த பிழையினாலே நான் பட்டபா
டுபாருமென்று திருவடிகளிலேவிழுந்தாள். இந்தராக்ஷ
சி ஏதோ பொல்லாதகாரியம்செய்தாளென்றும் இவளை
இப்படியாகத் தம்பிதான் செய்திருப்பானென்று தமது
திருவுளத்திலே தெரிந்துக்கொண்டு இவளைப்பார்த்து நீ
யாரென்றுகேட்டார், அவ்வார்த்தையைக்கேட்டு நீரதி
யீரா இந்த மூன்றுலோகமும் ஆளுகிற ராவணேஸ்வர
னுக்குத் தங்கையல்லவா ! என்று சொல்ல, நீ-இருக்கி
ற இடத்தி லிருக்கவேணுமே அல்லாமல் நாங்களிருந்து
தபம்செய்கிற இடத்துக்கு நீ வரவேண்டிய காரணமெ
ன்ன, என்று ஸ்ரீராமர்கேட்க, காமவியாதிக்கு ஒருமரு
ந்துபோல சுந்தரத்தை உடைய புருஷரத்தினமே! தே
டிய நான் வந்திருக்க இல்லையா என்றாள். செந்துயிக்கு
தருபமாய்த் தாமரைக் கமலவாசியாகிய லக்ஷ்மிக்குச்
சமானமான ரூபத்தோடுவந்தவளா ! நீ என்று ஸ்ரீராம
ர்கேட்க, ஆம் - ஐயா ! பாருக்கானது இம்ஸ்தனங்களையும்,
காதுகளையும், மூக்கையும், அறுத்துப்போட்டால் அழ
கு அழிந்து கெட்டுப்போச்சுதா என்று சொன்னாள் அ
துகேட்டு ஸ்ரீராமர் குஞ்சிரிப்பாகநகைத்து தம்பி முகத்
தைப்பார்த்து, அப்பா ! இவளை இவ்வாறு செய்கிறதற்
கு இவளென்ன அபராதம் செய்தாளென்று வினவ, ல
க்ஷ்மணர்தமையனாரைவணங்கிச்சொல்லுகிறார். ஸ்வா
மி ! இவள் தின்கிறதற்கோ அல்லது புறத்திலே எந்த
பாபிகளை பதிவுவைத்து வந்தெடுத்துக்கொண்டு போக
வந்தாளோ ! இவள் நினைத்துவந்தது அடியேன் அறி
யேன். ஆனால் கண்களில் நெருப்புப்பறக்க வெகுகோப
த்துடன், ஓடிவந்து பிராட்டியாரை எடுக்கவந்தாளென்
று சொல்லச்சே அதைக்கேட்ட சூர்ப்பனகி நாயகனுடை
சமீபத்திலிருக்க, எனக்கு முன்னேவந்து தன்வசம்செ
ய்துக்கொண்ட சக்களத்தியைக்கண்டால் எனக்குக்கோ
பம்வாராதா ! நான் எடுத்துப்போகாதே விட்டுவிடுவே
னா என்றாள். அடி ராக்ஷசி, உன்குலத்தை எல்லாம் ஒ
ருமுகூர்த்தத்திலே சங்காரம்செய்கிறதாய் வந்திருக்கி
றோம். நீ இப்படிக்கொத்த பிதற்றல்களை பிதற்றிக்கொ
ண்டு மாண்டுபோகாதே ! அடி இந்த ஆரணியத்தைவி
ட்டு ஓடிப்போவென்று ஸ்ரீராமர் சொன்னார். அதுகேட்
டு சூர்ப்பனகிபிரம்மாமுதலானசகலதேவர்களும் ராவ
ணனுடைய குடிகளாய்த் தீர்ந்திருக்கின்றது. அப்படிக
இருக்க நீங்கள் இப்படிசெய்து இப்படிசொல்லுகிறது ந
ல்லதா உங்களுக்கு உறுதியானவார்த்தை ஒன்றுசொல்
லுகிறேன், அதை நன்றாய்க்கேளுங்களென்று சொல்லு
கிறாள், பத்துமுகங்களை உடைய ராவணேஸ்வரன் உன்
தங்கை மூக்கறுப்புண்டாளென்று சொல்லுகிறவர்களை
முன்னே நாக்கை அறுத்துப்போடுவான். நீங்களோ எ
ன் மூக்கை அறுத்து உங்கள்குலத்தை வேரோடே அறு
த்துப்போட்டவர்களாவீர்கள். இனி உங்கள் பிராணன்
நிற்கமாட்டாது. அழகை எல்லாம் வீணாய்ப் புல்லிலே
கொட்டிப்போட்டீர்கள். தேவலோகம் - பூலோகம் - நா
கலோகம் - இவைகளை ஆளுகிற ராஜாக்கள் முதலான
அதிபதிகளும் தாங்கள்தங்கள் சிரசைகாப்பாற்றிக்கொண்
டிருக்கிறதே துல்லபம், உங்களையார் ரக்ஷிக்கப்போகிறா
ர்கள். நான்காத்தால் காப்பேன் என்னை நீங்கள் விரகத்தி
னாலே பிராணன்போகாமல் காக்கிறதானால் அந்த ராவ
ணன் முதலாக இருக்கிற ராக்ஷத கூட்டங்களுக்கு முன்
உங்களை நான் காத்துக்கொள்ளுவேன். நல்லகுடியிலேபி
றந்து பதிவிரதையா இருக்கிறவள் தன்பிரதிஷ்டையை
த் தானதானே சொல்லிக்கொள்ளலாகாது, உங்களிட
த்திலிருக்கிற எனது மிகுந்த அன்பினாலே சொல்லுகி
றேன், தேவர்களைப்பார்க்கிலும் மிகுந்த பலம்பொருந்தி
ய ராவணனுடைய தங்கை என்றால் உங்களுக்குப்பெரி
த்தமே, உத்தியங்களிலேகூட பின்பலனாக இருப்பேன்
வானமார்க்கம் சுமந்துக்கொண்டு ஆகாயமட்டிக்கும்போ
வேன், நினையாத பதார்த்தங்களும் கொண்டுவந்துகொ
டுப்பேன், எதை நினைத்தால் அதை அந்தக்ஷணமேசெ
ய்கத்தக்கினவள்.நான் இதல்லாம் உம்மிடத்திலே இரு
க்கிற பந்தபமபோலே சரீரத்தை உடைய அந்தஸ்திரீயா
ல் ஆகுமா, குலத்திலேயும், நலத்திலேயும், நினைத்தது
கொண்டுவாத்தக்க பலத்திலேயும், புத்தியிலேயும், அ
றிவிலேயும், எனக்குச் சமானமானவர்கள் எந்த உலகத்
திலிருக்கிறார்கள். நீங்கள்யாரையாவது அறிந்து உண்

ங்கம்-புலி-கழுதை-குதிரை-முதலானதுகளும் சத்தித்
தது, வாயுவேகமான குதிரைகள் அநேக சமுத்திரம்
போல வந்துநிறைந்தது. மழு-வேல்-வாள் - எழு-தோ
மரம்-ஈட்டி-முசண்டி-தண்டு-சூலம்-இருப்புலக்கை-கா
லபாசம்-குந்தம்-குலிசம்-பிண்டிபாலம்-அம்பு-வில்லு-
எறிசக்கரம்-கப்பணம்-இவைமுதலான ஆயுதங்கள் பூர்
வத்தில் சூரியனும் அக்கினிபகவானும் பயப்படும்படி
யாய், ரத்னங்கள் தோய்ந்து தேவதைகளுக்கு வேதனை
யைக் கொடுத்துப் பிரகாசித் திருக்கிற, இந்த ஆயுதங்க
ளைத் தரித்துக் கொண்டு ஆயிரமாயிரம் மதயானைபலமு
ண்டானவர்கள் பூமியைவிழுங்கத்தக்கவாய்களை உடைத்
தானவர்கள், அக்கினிசொலித்துக்கொண்டே இருக்கிற
கண்களை உடையவர்கள். இந்தராக்ஷத சேனைக்கு நாய
காதிபதிநான்குபேர் புறப்பட்டார்கள். அவர்கள்சேனைப
தி நாலாயிரங்கோடி.மிகுந்தபலமும் இடியைப் போலே
பேசுகிறபேச்சும் கையிலே ஆயுதமும் மேகமண்டல ம
ட்டுக்கும் அளாவி இருக்கிற தலைகளும் மனதிலே அதி
கதருக்கும், பராக்கிரமச்செருக்கும் கண்ணுக்கடங்காத அக
ண்டமானமார்பும், பூமிஎல்லாம் அசைக்கத்தக்க காலும்,
தேவர்கள் நடுங்கும்படியான சேவகமும் படைத்திரு
க்கிறவர்கள், பிரம்மாவி னுடைய வரம்பெற்றவர்கள். இ
ந்திரன் முதலான தேவதைகள் இவர்களுக்கு எதிர்நிற்க
மாட்டாமல் பயப்பிராந்தி கொண்டு ஆயுதங்களைப்போ
ட்டுவிட்டு ஓடிப்போக, அந்த ஆயுதங்களை எல்லாம் எ
டுத்துக் கட்டிக்கொண் டிருக்கிறவர்கள். வட்டமுகாக்
கினி தானேருபமெடுத்ததுபோல கோபமுள்ளவர்கள்
சூலமும் - பாசமும் - செம்மட்டமயிரும் - கடுரதிருஷ்
டியும்-கோரதந்தங்களும்-கறுத்தநிறமுமா யிருக்கிறபடி
யினாலே காலனும் தனக்குக்காலன் இவர்கள்தா னென்
று பயந்துபோகும்படியான ரூபத்தை உடையவர்களா
இருந்தார்கள். இந்தநான்குபேரும் ஒருவனைப் போ
ல வீரகண்டாமணியும்-கவசமும்-ஆபரணமும் - யுத்
தியத்தின் பேரில் ஆசையையும் உடைத்தாயிருக்கிறவர்
கள். தங்கள் ஒத்த அயிராவதத்தின் பேரில் இந்
திரனே எதிர்த்துக்கொண்டு யுத்தியத்துக்கு வந்து யு
த்தியம்செய்து, சரீரம் நொந்து கிலிகொண்டு இவர்க
ள் முகத்தைப் பார்க்கிற தற்குப் பயந்து, முதுகு காட்
டிக் கொண்டு ஓடிப்போன படியினாலே, வேறே யுத்
தியம் செய்கிறவர்கள் அன்றுமுதல் இன்றைய வரைக்
கும் அகப்படா தினாலே, தோள்க ளெல்லாம் தினவு
கொண் டிருக்கிறவர்கள், யானைமுகம் - குதிரை முகம்-
பேய்முகம்-[illegible]முகம்-சிங்கமுகம்-சரபமுகம்-நாய்மு
கம்-புலிமுகம்-யாளிமுகம்-இவைமுதலானமுகங்களை உ
டைத்தானவர்கள், ஆலகால விஷம்போலே கண்களும்
எட்டுகைகளும், ஏழுகைகளும், கண்களில் அனல் சொ
ரிகிற எழுமுகங்களும், எட்டுமுகங்களும், இப்படி பற்ப
ல முகங்களை உடைத்தா இருக்கிறவர்கள். பூமிஎல்லாம்
வசிவாயிலேபோட்டுக் கொள்ளுகிற கருப்புள்ளவர்க
ளும் - சூழ்ந்துவர, இயக்கர் கையிலே பறித்தஆயுதமு
ம், அசுரர் பயந்து ஆயுதத்தை போட்டு விட்டு ஓடிப்

போனதும், தேவர்கள் கையிலே பிடுங்கிக்கொண்டஆ
யுதமும், காந்தருவர்களைத் துரத்திவிட்டுவாரிக் கொண்
ட ஆயுதமும், செய்யக் கூடாத உபத்திரவங்களைச்செய்
து பறித்த குடை கொடி - மகர தோரணம் - யானை
சாய்மரம் - மயில்பிச்சம் - மேல்கட்டுகள் முதலானது
களினாலே, வெய்யல் மறைந்து இருளுண்டாக, பதினாலு
லோகத்தையும் ஜெயித்த இந்தபதினாலுபடைத்தலைவர்
கள் மழு - வாள்-சூலம்-வில்லுமுதலான ஆயுதங்களும்,
உதட்டுக்கு மேலே பிரகாசித்திருக்கிற பலலும், மகம்
மேருபர்வதத்தை வேரோடே பறிக்கத்தக்கபலமுமு
ண்டானவர்கள், துதாருடராய் சொன்னகாரியம் முடிக்க
த் தக்கின துணிவுண்டானவர்களாய் சூழ்ந்துவந்தார்க
ள். தூஷணன் திரிசிரன் என்று சொல்லப்பட்ட இரண்
டுதம்பிமாரும் மன்முதலான அநேகம் பந்துஜெனங்க
ளும்.மகம்மேருவைச் சூழ்ந்தசமுத்திரம்போலேசுத்தி
க்கொண்டு பிரகாசிக்க, நடுவே பெரிய தேரின்பேரிலே
றிக்கொண்டு சகலமான பேரும் பயப்பிராந்தியாக மகா
வீரனை கரன் புறப்பட்டான். இந்தச்சேனைசமுத்திரம் ந
டக்கிற போது கால் தூளிகள் பூமியெல்லாம் நிறைந்
து ஆகாசத்திலே சூரியனுடைய தேரின்பேரிலேயும் கு
திரைகள்பேரிலேயும் படிந்து வெள்ளைநிறமாகப் பிரகா
சித்தது. அந்த ஆரணியமெல்லாம் மெரிபட்டுப் பொடி
ப்பொடியாய் விழ, பர்வதங்கள் எல்லாம் இடிந்து சின்
னபின்னமாக, தூளிகள் சமுத்திரத்தி லெல்லாம்நிறைய,
இப்படியாக நடந்த சேனையின் பெருமையை நானென்
ன சொல்லப் போகிறேன். ராக்ஷதாளதிக நெருக்கத்தி
னாலே பூமியின்பேரிலே நடக்கிறதுக்கில்லாமல்யானைகளினு
டைய தலையின்மேலே கால்களை வைத்து அநேகம்பேர்
தாண்டித்தாண்டிநடந்தார்கள் இப்படியாகச்சேனைசமுத்தி
ரம் சரீரத்திலேகூடஇருந்து,உயிரையபன்னகையிலொடு
க்கிற வியாதியைப்போலே, சூர்ப்பனகி முன்னேவர,ஸ்ரீ
ராமருடைய சமீபத்துக்குவந்தது. ரணபேரிகை முழங்
குகிற சத்தம் கேட்டு மேகங்கள்திடுக்கிட, அபரிமிதமா
ன வில்லினுடைய குணத்தொனிகளின் சத்தம் கேட்டு
இடிகள் கழல, இன்னமபற்பல இரைச்சல்கள் பயமுறு
த்த, ராக்ஷதசேனை யுத்தியத்தை அபேக்ஷித் திருக்கிற
ஸ்ரீராம லக்ஷ்மணனிடத்துக்கு வந்து சேருகிற தற்கு
முன்னமே, அந்தஆரணியத்திலே இருக்கிறமிருகங்களு
ம் பக்ஷிகளும் - இந்தசேனை வருகிறதைக் கண்டு, பயந்
து வாயுலர்ந்து சரீரங்கள் நடுக்க மெடுத்து பெருமூச்சு
விட்டுக்கொண்டு, ராக்ஷதர் வருகிறசேதி சொல்லவரு
கிற தூதரைப் போல, அநேகமாய் வந்தது. அதுகளைக்க
ண்டு ஆகாயமட்டுக்கும் தூளிபடலமெழும்புகிறதையும்க
ண்டு அவர்கள் காலிலே அகப்பட்டு மரங்களெல்லாம்சடச
டவென்று ஒடிகிறசத்தங்களும் கேட்டுக்கொண்டிருக்க,
ஆரணியங் கொள்ளாமல் விஸ்தாரமாய் வருகிறது கர
னுடைய சேனைதான் நம்மிடபேரில் யுத்தியத்துக்குவரு
குகின்றதென்று அறிந்து ஸ்ரீராம மூர்த்தி அம்பறாத்தூ
ணி முதுகிலேகட்டிக்கொண்டு, கையிலே வில்லைஎடுத்து
க் கொண்டுகவசம்தரித்து, வாளை விசித்துக்கட்டிக்கொ



ண்டு, மிகுந்த கோபத்துடனே நின்று, ஸ்வாமி! இன்
றைக்கு இந்த ராக்ஷதரை நான்செய்கிற சித்திரவதையு
ம், யுத்தியமும், தாங்கள்பார்த்துக்கொண்டிருங்களெ
ன்று புறப்பட்டார், பின்னும் பெரிய பெருமான் இளைய
பெருமானைப் பார்த்து ஒருவார்த்தை சொல்லுகிறார்,த
ம்பி ? முன்னே ரிஷீசுவரர்களுடனே நான்சொல்லி.இ
ருக்கிறது ராக்ஷதரை நானே கொல்லுகிறே னென்று
சொல்லி இருந்தேனே, அந்த வார்த்தைக்குப் பழுது
வராமல் உன்னைநான் வேண்டிக்கொள்ளுகிறேன், நீ இ
ங்கே இருந்து சீதையை காத்துக்கொண்டிரு, இந்தசே
னைகளை எல்லாம் நானேகொன்று தீர்த்துப் போடுகிறே
ன். யுத்தியத்திலே பூலோகத்தார் - தேவலோகத்தார்
நாகலோகத்தார் - மற்றயாவர்வந்தாலும், எனக்
கெதிர் நிற்கமாட்டார்களென்கிறது ! உனக்கு நான்சொ
ல்ல வேணுமா ! தம்பி ! இந்த யுத்தியத்தை என
க்கு நீகொடுத்து, என்னுடையதோள் சோம்பையும்,இ
னவையும், இரென்று ஸ்ரீராமர் சொல்ல, அவருடைய ப
லத்தையும்,(சௌரியத்தையும், நன்றாய் நினைத்து அறி
ந்துக் கொண்டு, அவராக்கினைக்கு மீறி உத்தரம் சொல்
லாதவரானபடியினாலே, அப்படியேலக்ஷ்மணர் கைகூ
ப்பித் தொழுது கண்ணீர் பூமியிலேமுத்து முத்தா
ய் விழும்படி கிலேசித்து நிற்கிற சீதாபிராட்டியை விட்டு
திலே நின்றார். இப்படியாக சீதைச்சின்மனது குழைந்து
சோர, பன்னசாலையிலிருந்து புறப்பட்டு, ராக்ஷதாள்
பேரிலிருக்கிற கோபத்தினாலே; வில்லு தரித்திருக்கிற
மேருவுக்குச் சமானமான ஸ்ரீராமர், குகையிலிருந்துபு
றப்பட்ட சிங்கம் போலே வெளியிலே வந்து, வருகிற
ராக்ஷதாளுக்கு முன்னே தனியே நின்றார். அப்போது
மூங்கிலிலே பிறந்த நெருப்பு அந்த மூங்கில்காட்டை எ
ல்லாம் தகிக்கிறது போல ராக்ஷதாள் காட்டை எல்லா
ம் தகிக்கிறதற்காக, அந்த குலத்திலே பிறந்த சூர்ப்பன
கி, தன் தமையனான கரனுக்கு ஸ்ரீராமன் இவன்தானெ
ன்று காட்டினாள். அவர்வன்மையமானரதத்தின்பேரில்சூரி
யனும்பயந்து கலங்கும்படியாய், பிரகாசமும்கோபமும்
கொண்டிருக்கிறகரன்ஸ்ரீராமனைக்கண்டு இவன்தானோ! இவ
னைஇதோ ஜெயம்செய்கிறேனென்றுமனதிலேவையுங்களே
ன்றுதன்சமீபத்தில்வருகிற படைத்தலைவரைப்பார்த்து
ச்சொல்லிபின்னும் ஒருவார்த்தைசொல்லுகிறான்.ஒரும
னிதன்வந்தால்அதற்கு இந்த ஆரணியம் கொள்ளாதரா
க்ஷதாளெதிர்த்துயுத்தியஞ்செய்தார்களென்றால்,என்
னுடைய கீர்த்தி என்னமாயிற்று !! நீங்களெல்லாம் இ
டத்தில் நின்று பார்த்துக்கொண்டிருங்கள் நான் ஒரு
வனேபோய் அவனுயிரை குடித்து விடுகிறே னென்று
சொன்னான். அவ்வார்த்தை கேட்டு, அகம்பனென்கிற
அவன் மந்திரி கல்வி - கேள்வியில் - மிகுந்தவனானபடி
யினாலே, கரனைப் பார்த்து ஐயா! எப்போ இத்தனைசே
னைக்கெதிரே ஒருவில்லுடனே தனியேவந்துநிற்கிறானோ
அவனைச் சாமார்த்தியனென் றென்னவேணும். அதுவு
ம் அல்லாமல், அநேக துர்நிமித்தம் காணுகின்றது அ
தென்னவென்றால், மேகமானது ரத்தம்மழை பெய்கின்ற

து, சூரியனைப் பரிவேடம் சூழ்ந்திருக்கிறதைப்பாரும்,
உம்முடைய கொடியின்பேரில் காக்கைகள் ஒன்றுக்கொ
ன்று போர்செய்து மடிந்து பூமியில்விழுந்து புரளுகின்
றது, அம்புமுதலானஆயுதங்களின்வாய்களை ஈகள்மொ
ய்க்கின்றது, வீரான ராக்ஷதாளுடைய இடது தோ
ளும், இடது கண்ணும், துடிக்கின்றது, குதிரைகளெல்
லாம் தூங்கிவிழுகின்றது, அநேகம் - நாய் - நரி - ஊ
ளை இட்டழுகின்றது, பிடியானைகள் மதத்தைப்பொழிகி
ன்றது, மதயானைகளுக்குத் தந்தங்கள் ஒடிந்து போகின்
றது, வெள்ளை இடி குமிறி விழுகின்றது, ராக்ஷதாள் த
ரித்திருக்கிற மாலைகள் மாமிசநாற்றமாக நாறுகின்றன.
இப்படி பலவாறாக இருக்கிறபடியால் எதிரே நிற்கிறவ
ன் மானிடனென்றும் ஒருவனென்றும் நினைக்கலாகாது,
ஆகையால், யுத்தியத்துக்குச் செய்யவேண்டிய அங்க
ங்களெல்லாம் செய்தாலும் ஜெயிக்கிறது மிகவும் அரு
மையாகக் காணுகின்றது. நீர் தனித்துப்போகிறதுயுக்த
மல்லவென்று எனக்குத் தோணுகின்றது, நான்சொன்
னவார்த்தையும் பொறுத்துக்கொள்ளுமென்று வணங்கி
ச்சொன்னான். இப்படிக்குச்சொன்ன அகம்பன் வார்த்
தையைக்கேட்டு கரனானவன் உலகமெல்லாம் குலுங்க,
பெருக்க நகைத்து தேவர்களை எல்லாம் அறைந்தகுழ
வியான என்தோள் மனிதருக் கெளிதாய்ப் போயிற்றல
லவா ! என்று சொல்லிக் கொண்டிருக்கிற சமயத்திலே
சேனைகள் மேகங்கள்போலநெருங்கிக்கொண்டு அநே
கயானைக்கூட்டம் ஒருசிங்கத்தை வளைத்துக்கொண்டது
போல சக்கிரவர்த்தித்திருமகனை; அதிககோபத்துடன்
சூழ்ந்துக் கொண்டார்கள். அப்போது ஸ்ரீராமருடைய
வில்லும் வளைந்தது. அந்த யுத்தியமானது இந்தவித
மென்று ஒருவராலேயும் சொல்லக்கூடாது. நான் அ
தை எம்மாத்திரமறிந்து சொல்லப்போகிறேன். ஆகிலு
ம் அறிந்தமாத்திரம் சொல்லுகிறேன். ஸ்ரீராமருடைய
கோதண்டத்திலிருந்து புறப்பட்ட அஸ்திரங்களினாலே
அநேகம்குதிரைகள் கால்கள்தறிபட்டு பூமியிலேவிழுந்
து புரண்டது. அநேகம்யானைகள் இடிவிழுந்தபர்வதம்
இடிந்து விழுகிறதுபோல துண்டம்துண்டமாய்விழுந்த
து சூலங்கள் அற்றுப்போயிற்று.மழுவாயுதங்கள்அற்றது
வாளுகளுடைய பிடிகளற்றுவிழுந்தது. தெண்டாயுதங்
களொடிந்துவிழுந்தது. பிண்டிபாலங்கள் முறிந்துவிழு
ந்தது. அஸ்திரங்களற்று வில்லுகள்முறிந்தது. வேல்க
ளிற்றது. அநேகம் தோள்கள் பாகுவலயங்களுடன் து
ணிந்துவிழுந்தது. தோமரங்கள் - யானைக்கால்கள்-தே
ர் - அச்சுகளும் கொடிகள் - குதிரைகள் - ராக்ஷதருடை
ய தலைகள் - [illegible] - இதுகளெல்லாம் துணிந்துவி
ழுந்தது. ஸ்ரீராமபாணம் ஒன்று பத்தாய், பத்து நூறாய்
நூறு ஆயிரமாய், ஆயிரம் இலக்ஷமாய், இலக்ஷம் கோடி
யாய்ப் பிரவேசித்து, ரத கெஜ துரக பதாதிக ளென்கிற
நால்வகைச்சேனைகளையும், தலைகளை அறுத்தும், மார்புக
ளைப்பிளந்தும், கால்களைத்துணித்தும், மலைபோலே பி
ணக்குப்பல்களை அங்கங்கே குவித்தது. ராக்ஷதருண்ட
ங்கள் ரத்தங்களோடு எழும்பிப்பெருகநடனம்செய்யரா

மபாணம் அவர்கள் ஜீவனையும் தூக்கிக்கொண்டு போகிறதுபோல, ஆகாயமெல்லாம் ஓடி நிறைந்தது. கைகள் வாளுடனே அற்றுவிழ, கழுத்துகளற, கவசத்துடனே மார்புகளதிர்ந்துபோக, கால்கள் துணிந்துபோக, இப்படியாக ராக்ஷதர் சின்னபின்னமாய் மடிந்து போம்படி ராமபாணம் (ஸ்திரீகளுடைய கண்களைப்போல) கொடுமை செய்தது. உதிரங்கள் மழைகள்போலே பூமி எல்லாம் விழுந்து நிறைய, நடுவே பிணங்கள் கரைகள்போலே கிடக்க, அது ஒரு ஏரிபோல மிகுந்த விசையாய்ச் சொரிவெள்ளங்க ளோடுகிறபடியினாலே ஆறுகள்போலவும், கிணம் - மூளை - ஈரல் - குடலுடனே ரத்தங்கள் கலந்து எங்கும் பரந்துகிடக்கிற படியினாலே சேறுகள் போலவும் எங்கும் ஆரணியமென்கிறது தெரியாமல் மூடிப்போயிற்று. அந்த ரத்தவெள்ளத்திலே சமுத்திர அலைகள்போல அலைகளுண்டாயிற்று. ராக்ஷதர் தலைகள் அனேகம் மிதந்தது. யானைகள் மிதந்தது. குதிரைகள் மிதந்தது. தெண்டாயுதம் வில்லுமுதலானதும் கொடிகளுடனே ரதங்களும் அனேகம் மிதந்தது. அந்தவேளையிலே பின்னையும் ராக்ஷதர்கள் கண்களிலே நெருப்புப் பொறிப்பறக்க, அட்டகாசம் செய்துக்கொண்டு அனேகம் அம்பு வில்லு முதலான ஆயுதங்களோடு ஒருபர்வதத்தை அனேகமேகம் சூழ்ந்துக்கொண்டு மழைகள் பொழிகிறதுபோல சொரிந்தார்கள். அவர்கள்சொரிந்த பலவித ஆயுதமழைகளையும், ஸ்ரீராமர் தம்முடைய அஸ்திரத்தினாலே துண்டம் துண்டமாக்கிவிட்டு அவர்கள்தலைகளை எல்லாம் ஒருமுகூர்த்தத்திலே பூமியிலேவிழும்படி செய்து குவித்தார். கபந்தங்கள் களித்தாடிற்று. யானைப்பிணங்கள் ரத்தத்திலே ஊறிச் சிவந்தது. பேய்கள் கிணங்களை மிகவும் தின்று திகட்டி சந்தோஷித்து குதித்தாடிற்று. முன்னாலே கருடன்கூடபார்த்து பயப்படுகிற ராக்ஷதாளுடைய கண்களைக் காக்கைகள் குத்திப்பிடுங்கிற்று. ஆசையினாலல்லவா! தருமத்தினுடைய அருமை அறிந்து தெளிந்திருக்கிற பெரியவர்களெல்லாம் தருமத்துக்கு உயர்ந்த பலமுமில்லை, அதனை மறக்கிறதற்கு உயர்ந்தகேடுதியும் இல்லை என்று எந்தவேளையிலும் தருமச்சிந்தையா இருக்கச்சொல்லி செப்பி இருக்கிறார்கள். அது அப்படி இருக்கட்டும் ராக்ஷதர்களெல்லாரும் ஒருகூட்டமாய் பலபல ஆயிர மிருள்களைத்தகித்துப்பிரகாசிக்கிற சூரியனைப்போல, எதிரே நிற்கிற கோதண்டராமனைக்கண்டு மிகுந்த கோபமாய் அக்கினி திருஷ்டியாக கோரமாய்ப்பார்த்து, ஒரு பர்வதத்தின்பேரில்சத்தமேகமும் ஊழிகாலத்தில் மழைபெய்கிறதுபோல, அம்புகளைப்பொழிந்து பலபல ஆயுதங்களையும் விசிறி எறிந்தார்கள். அப்படி எறிந்தவர்களையும், எய்தவர்களையும், எய்ய நினைத்தவர்களையும், அறிந்தவர்போல அவர்கட்குத் தெரியாமல் அஸ்திரங்களினாலே அறுத்தார் பின்னும்கூட்டம் கூட்டமாய் வந்தவர்களையும் பிறிந்து வஞ்சனையாகப் பதுங்கி வந்தவர்களையும், ஆயுதங்களை மழையாய்ப் பொழிந்தவர்களையும் கோதண்டபாணியாகிய ஸ்ரீராமர் படுத்தார். இந்த ராமபாணமானது அறுத்துத்தாக்கிக்கொண்டுபோகிற ராக்ஷதத்தலைகள் ஆகாயத்திலேயும் கடலிலேயும், எட்டுத்திக்கிலேயும், ஆரணியங்களிலேயும், பர்வதங்களிலேயும், பின்னுமுள்ள அனேக இடங்களிலேயும், குண்டலங்களும், கோரதந்தங்களும், பிசகாசிக்கக் கிடந்தது. அனேகபாணங்கள் ராக்ஷதாளுடைய மார்புகளைப் பிளந்து ரத்தங்களைப் பூமி, ஆகாயம், மலை, காடு, முதலான இடங்களிலெல்லாம்நிறையச்செய்தன. பாரிஜாதமாலைதரித்திருக்கிறராக்ஷதரும்நெருப்புப்போல் ஜொலிக்கிற கண்களை உடைய ராக்ஷதரும் தேவர்களை ஜெயிக்கிற ஆயுதங்களைப் பிடித்திருக்கிற ராக்ஷதரும் ஸ்ரீராமபாணங்களினாலே பொடிப்பொடியாய்ப் பறந்து மடிந்து போனார்கள். ராக்ஷதாள்பூண்டு இன்றோடே ஒழிந்து போகின்றதென்று தேவர்கள் சந்தோஷித்து ஆர்ப்பரித்தார்கள். இவ்விதம் இம்சையில் மடிந்த ராக்ஷதாளுடைய சால்களெல்லாம் கலைம் போலவும் தேர்களெல்லாம் மனற்குன்றுகள்போலவும்இருந்தது. யானைகள் மிதக்கிறது முதலைகள்போலவும், குடல்கள் இலைக்கொடிகள்போலவும், இருந்தது. பிரகாசிக்கிற உதிரக்குளங்களிலே அனேகம் பேய்கள் மூழ்கி முழுகி எழுந்திருந்தது. ஸ்ரீராமருடைய சரமாரிகள் மேன்மேலும் வந்ததைக்கண்டு பயந்து சிலராக்ஷதாள் ஐயா ? அப்பா! என்று அழைத்தார்கள். சிலர் கெஞ்சித்தார்கள். சிலர் அழுதார்கள். சிலர் தாமும்முப் பிழிந்தார்கள். சிலர் இருந்த இடத்திலேயே உறைந்துபோய் விட்டார்கள். சிலர் பெருமூச்சிவிட்டார்கள். சிலர் உருண்டார்கள். சிலர் புரண்டார்கள். சிலர் ரத்த ஆற்றிலே முழுகி அழுந்தினார்கள். சிலர் மடிந்தார்கள், சிலர் பயப்பிராந்திகொண்டார்கள். இப்படிபலவாராக எதிர்த்த ராக்ஷதர்களெல்லாம் சின்னபின்னமாய் மாண்டுபோனதுகண்டு அவர்களைபரிகாசம்செய்து கனைத்து, படைத்தலைவரான விராதிவிரர் பதினான்குபேரும், ஏககாலத்திலே தேர்களை விட்டுக்கொண்டு கைகளில் வில்லுகளுடனே பூர்வத்திலே தேவர்கள் நடுங்கும்படியாய் சமுத்திரங் கடைந்தபோது பிறந்து ஆரத்தின ஆலகால விஷம்போல, மகா கோரத்துடனே நடந்துவந்து, மகாமேருவை வில்லாய்ப்பிடித்து வந்த சிவனைமுப்புராதிகள்வளைத்துக்கொண்டதுபோல ஸ்ரீராமனை மனதிலே கொஞ்சமாகிலு மதியாமல் காலாக்கினி ரூபமாய் கண்களில் நெருப்புப்பறக்க மிகுந்த கோபத்துடனே மேகம்போல சரமாரிபொழிந்துகொண்டிருக்கிற கோதண்டராமனை வளைத்துக்கொண்டு, உபத்திரவம்செய்தார்கள் அதில் அனேகம்பேர் அம்புகளெய்தார்கள். அனேகர் பற்பல ஆயுதங்க ளெறிந்தார்கள். அனேகர் மழுவாயுதத்தைவிட்டெறிந்தார்கள். அனேகர் பர்வதங்களைப்பிடுங்கி வீசினார்கள். அனேகர் மேகங்களை இழுத்துமழைகளைப்பொழிந்தார்கள். அனேகர் வைதார்கள். அனேகர் நகைத்தார்கள். இப்படி பர்வதங்கள் பர்வதங்கள்போல வளைத்துக்கொண்டு அந்த படைத்தலைவருடைய சேனைகள் உபத்திரவம் செய்கிறபோது ஸ்ரீராமபாணமானது குபீரென்று பாய்ந்து அநேகருடைய ரதங்களையும், அதுகளிலிருக்கிறவீரரையும், அநேகம்



யானைகளையும், அதுகளின்மே லேறிவந்த சூரரையும், அநேகம் குதிரைகளையும், அதுகளின்மேலேறிவந்த அதிசூரர்களையும், பதாதிகளாய்வந்து வளைத்த அதிகபலசாலிகளான ராக்ஷதர்களையும் கணப்போதில் சின்ன பின்னமாகச் சித்திரவதைசெய்ய, அனைவரும் ஏககாலத்தில் மடிந்தார்கள், பூமியெல்லாம் ரத்தப்பிரவாகமும் பிணராசிகளுமாய் நிறைந்தன. இந்தயுத்தம் பார்க்க அந்தரத்திலேவந்துநின்ற தேவர்களும் ஸ்ரீராமபாணம் கண்டிக்கிற வேகத்தைப்பார்த்துச் சகிக்கமாட்டாமல் பயந்து கண்களைமூடிக் கொண்டார்கள். நமனுடைய தூதுவரும் உயிர்களைப்பிடித்துக்கொண்டு போகிறபோது நடந்து நடந்து கால்கலோய்ந்தார்கள். பேய்மே லேறிவந்தவர்களும், யுத்தமுனையிலே பித்தேறினவர்கள்போலத் தங்கள்சரீரந் தங்களுக்குத் தெரியாமல் வந்தவர்களும், சிங்கத்தின்மே லேறிவந்தவர்களும், மேகத்தின்மே லேறிவந்தவர்களும், ஸ்ரீராமபாணத்தினாலே மடிந்துபோக அவர்கள் தலையின்மேல் நாய் நரி முதலானதுக ளேறிமூளைகளைப் பிடுங்கியதுகள். பின்னும் அநேகராக்ஷதருக்குத் தலைகள் சிந்திவிழுந்ததுகள், அநேகருக்குக் கண்கள் சிந்தி விழுந்ததுகள். அநேகம்யானைகள் விழுந்ததுகள். அநேகம் குதிரைகள் விழுந்ததுகள் அநேகம்வில்லுகள் அற்றுவிழுந்ததுகள், அநேக அஸ்திரங்கள் முதலான ஆயுதங்கள் சிந்திவிழுந்ததுகள். சரீரங்களெல்லாம் உயிர்சிந்திப்போக விழுந்ததுகள். அப்போது படைத்தலைவர்கள் தங்களுடைய சேனாசமுத்திரங்களெல்லாம் ஸ்ரீராமபாணத்தினாலே ரத்த ஆற்றிலே முழுகிப்போனது கண்டு, நாலுபக்கமும் சுற்றிப்பார்க்க தலையோடிருக்கிற சரீரமொன்றுகிலும் காணுதபடியினாலே, மிகுந்தகோபமாய் பற்களை நெறநெறவென்று கடித்துக்கொண்டு தங்கள் பதினான்கு தேரையும் ஸ்ரீராமருக்குச்சமீபத்தில்விட்டார்கள், அப்போது ஸ்ரீராமர் சில அஸ்திரங்களைமாத்திரம் பிரயோகம்செய்து அந்தப்பதினான்கு தேர்களின், வண்டில்களும், ஆணிகளும், சாரதிகளும், அற்றுவிழும்படிசெய்தார். பிரளயகால சண்டமாருதத்திலே அடிபட்ட பர்வதங்கள்போல ரதங்கள்முறிந்து தாறுமாறுக விழுந்ததுகள். தேர்கள் அழியவே பூமியில்குதித்து விற்களை எடுத்துக்கொண்டு இடிகளுக்குச்சமானமான பாணங்களை மேகம்போலப் பொழிந்தார்கள். இப்படியாகவந்த சரங்களையெல்லாம் பொடிகளாகச்செய்து அவர்களுடைய பதினாலுவில்லையும், பதினாலுபாணமும் பிரயோகம் செய்து, அறுத்துவிட்டார். மிகவும் கொதிப்புடனே யுத்தஞ்செய்யவந்த படைத்தலைவர்களுடையகைவில்லுகள்போகவே, கோபம் தலைமண்டைகொண்டு, பர்வதங்களைப் பிடுங்கிக்கொண்டு, ஆகாயமார்க்கத்தில் நின்று எறியத்தலைப்பட்டார்கள். அதுகளைச் சர்வசக்தியரான ஸ்ரீராமர், பதினாலு பாணங்களைப் பிரயோகம்செய்து அவர்கள் கையிலிருந்த மலைகளோடு, அவர்கள்தலைகளும் பூமியிலே அற்றுவிழச்செய்தார். இப்படியாகப் படைத்தலைவர்கள்படவே, அநேக ராக்ஷதக்கூட்டங்கள், அநேக ஆயுதபாணிகளாய்க் கொக்கரித்து ஆர்ப்பரித்துக்கொண்டு, கண்களில் கோபாக்கினி எழும்ப, ஸ்ரீராமரைச் சுற்றி எட்டுத்திசையிலும் ஆகாயத்திலும் நெருங்கி வளைந்துகொண்டு, ரணபேரி முழக்கினார்கள். மதயானைகள் பிளிறிட்டதுகள். குணத்தொனியெழுந்தது. சங்கநாதங்களுண்டாயின. குதிரைகள் கனைத்ததுகள். இப்படியாக மேககர்ஜிதம்போல அதிமுழக்கமுண்டாயிற்று. அப்போது ஸ்ரீராமருடைய பாணங்கள் புறப்பட்டவேடிக்கை, பார்க்கவந்ததேவர்கள், தங்கள் மேலே ஸ்ரீராமபாணம் அறுத்த, ராக்ஷதருடைய தலைகள் முதலானதுகள் விழுமென்று பயந்து ஓட்டமெடுத்தார்கள். உலகங்களெல்லாம் பயப்பிராந்திகொண்டன. அசையாமலிருக்கிற திக்கெஜங்களும் கண்களை இமைத்ததுகள். அத்தருணத்திலே அநேகம் சேனைகளுடனே, திரிசிரன் என்கிறவன் வந்தெதிர்த்தான்.

அவன் எப்படிப்பட்டவனெனில், திரிநேத்திரனுருத்திரமூர்த்தி கையிலே யிருக்கிற சூலத்துக்குச் சமானமான மூன்று தலைகளையுடையவன். பர்வதம்போல வில்லைக் கையிலெடுத்துக்கொண்டு, ஊழிகால சமுத்திரம்போலச் சேனைகள் சூழவந்து, ஸ்ரீராமனை வளைத்துக்கொண்டான். அப்போது ஒப்பில்லாத இந்தவீரரான ஸ்ரீராமர், தனியே கைவில்லுடனே அநேக இருட்டுக்கு நடுவே, அகண்டதீபம் பிரகாசிக்கிறதுபோலப் பிரகாசித்தார். அந்தத் திரிசிரன் கையிலே வாளை உருவிக்கொண்டு கோடை இடிபோலக் கெர்ஜித்து மிகுந்தவேகத்துடனே வருகிறவன் சேனைக்கெதிரே, ஸ்ரீராமரும் தம்முடைய சரங்களை சேனையாக எதிர்நோக்கிவந்தார். ஸ்ரீராமருடைய பாணங்களினாலே ராக்ஷதர்களில் தாள்கள் அற்றவர்களும், தலைகள் அற்றவர்களும், வாள்கள் அற்றவர்களும், மார்புகளற்றவர்களும், தோள்கள் அற்றவர்களும், தொடைகள் அற்றவர்களுமானார்கள். சந்திரனைப்போலப் பிரகாசிக்கிற குடைகளற்றதுகள். கொடிகளற்றதுகள். குதிரைக ளற்றதுகள். தேர்கள் முறிந்ததுகள். மதயானைகள் இடிவிழுந்த பர்வதம்போல அநேகம்பூமியிலே விழுந்துபுரண்டதுகள். ராக்ஷதர்களில் சிலர் தங்கள்தலைகள் அறுந்தது தெரியாமல், வில்லிலே பாணத்தைப்பூட்டி எய்துகொண்டே யிருந்தார்கள். சிலர் கால்களற்றுப்போகவே ஆகாயத்தில் எழும்பி அங்கிருந்தபடியே பாணங்களைப் பிரயோகித்துக்கொண்டிருந்தார்கள். சில கபந்தங்கள் கையிலே வாளும் கேடகமும் தரித்தபடியே பர்வதம்போல உயரமும், பொற்கவசமுமாய் அரம்பாஸ்திரீகள் கூடப்பார்த்து ஆச்சரியப்படப் பலபலவிதமாக நடனஞ்செய்தன. ரத்தப்பிரவாகமானது, வெண்சாமரைகள்-குடைகள்-முதலானதுகள் நுரைகளாகவும், யானைமுதலானதுகள் மச்சசாதிகளாகவும், மிகுந்த அலையோடுகூடிய புதிதான ஒரு சமுத்திரமுண்டானதுபோலப் பிரகாசித்தது. ஸ்ரீராமபாணம்படவே, சிலராக்ஷதர் தேவர்களாய்த் தேவலோகம்போய்த் தெய்வரம்பைகளுடனே, இஷ்டமாயிருந்து கொண்டு, தங்கள் சரீரத்தின் கபந்தம் ஆடுகிற நடனத்தைப்பார்த்தார்கள். தேவர்களான சிலராக்ஷதர்கள் தங்

கள் தோள்களைப்பெய் ஒருபக்கத்திலே இழுக்க, ஓர் ஒ
ருபக்கத்திலே யிழுக்கப் பார்த்துச் சிரித்தார்கள். சில
ராக்ஷதர்கள் ராமபாணம்வந்து மார்பைக் கிழித்தவுட
னே, இருவினைகளையும் கடந்து சுவர்க்கலோகம் சேர்ந்
து பலராக்ஷதர்களுடன் எதிர்த்துநிற்கிற ஸ்ரீராமரைப் ப
ரப்பிர்ம்ம வஸ்துவென் றறிந்தார்கள். அந்தக்கண்டகர்
களுடைய சரீரங்களை நிர்மூலமாக ஸ்ரீராமபாணமானது
எப்படியழித்ததென்றால், வஞ்சகன்-சொல்பகுணத்தை
யுடையவன்-நெஞ்சில் நிஜமில்லாதவன்-முதலானவர்க
ள் லஞ்சப்பிரதானங்களுக்குட்பட்டு, ராஜசபையில் அ
ஞ்சாமற்சொல்லுகிற பொய்ச்சாக்ஷிச் சொல்லானது அ
வர்கள் வம்சத்தை விர்த்திக்காமல் அழிப்பதுபோல, அ
ழித்தது. பின்னும் வள்ளலாகிய ஸ்ரீராமரானவர் வஞ்ச
கராகிய ராட்சதர்களை வதைத்துத் தம்முடைய அஸ்தி
ரதுல்லியத்தினாலே தேவர்களாக்கினது எப்படியிருந்த
தெனில், பெரியோர்கள் மூடர்களைப் பலாத்காரமாய்,
அழைத்து அவர்களுக்கு, சத்போதனைசெய்து காமக்கு
ரோதாதிகளைநீக்கி நீதிபரர்களாக்குவதுபோ லிருந்தது.
அப்படிப்பலவாறாக அநேக ராக்ஷதர்மடிய, ரக்தஆற்றி
ல், அந்த ராக்ஷதப்பிணங்கள் மிதந்து, பிரவாகத்துட
னே சமுத்திரத்திலே போய்வீழுந்து, ஒருமனுஷன்வந்
து ராக்ஷதர்களை இப்படிக் கொல்லுகிறானென்று ராவ
ணனுக்குச் சொல்லப்போகிறவர்கள்போல, இலங்கை
மட்டும்போய்ச்சேர்ந்தன. அப்போது திரிசிரன் தன்னை
ச்சூழ்ந்துவந்த படைகளெல்லாம் ஒருவன்பாணத்தினால்
மடிந்தது கண்டு, கோபம் பொங்கி, எழும்பி-தேரை-
முடுக்குகிறபோது, ரத்தமாம்சச்சேற்றிலே, சக்கரம் அ
ழுந்தி ஓடாதபடியினாலே, ஆகாயத்திலெழும்பி ஓட்டிக்
கெர்ஜித்துக்கொண்டு, ஸ்ரீராமனுக்குச் சமீபத்தில்வந்து
தேரைப் பூமியில் நிறுத்தி, இடிகளுக்குச்சமானமானபா
ணங்களைமேகம்போலத்தர்மஸ்வரூபரான ஸ்ரீராமருடை
ய திருமேனி மறையப் பொழிந்தான். பொழிந்தசரங்க
ளையெல்லாம், அஸ்திரங்களினாலே கண்டித்து, பதினாறு
பாணத்தினால் அவனுடைய ரதத்தைச்சின்னபின்னமா
க்கிச் சாரதியையும் கொன்றார். இதல்லாமல் தேவர்க
ளெல்லாம் சந்தோஷத்துடன் ஆர்ப்பரிக்க, அவனு
டையமூன்றுதலையில் ஒரு தலையைவிட்டு, இரண்டு தலை
களைஅறுத்து உருட்டினார். அப்போது அவன்தேரும் அ
ழிந்து, திரிசிரன் என்கிறபேரும் அழிந்து ஒருசிரனாகியு
ம்வீரம்கொஞ்சமாகிலும் குறையாமல். வில்லைவளைத்து
அஸ்திரங்களை மழைபோலப் பொழிந்தான் ஸ்ரீராமர்தம்
முடைய அஸ்திரத்தைப்பிரயோகம்செய்து,அவனுடை
ய வில்லை அறுத்துக் கீழேதள்ளினார். வில்லும்போயும்
அவன் முகம்வாடாமல் சொல்லுகிற கடூரவார்த்தைகளு
ம் விடாமல், ஆகாயமட்டுக்கும் எழும்பி யிருக்கிற அநே
கபர்வதங்களைப் பிடுங்கி எறிந்து காற்றுபோலத்திரிந்
தான். இப்படியாகமாயமாயிருந்து யுத்தம் செய்கிற இந்
தப்பாவியை, ஸ்ரீராமர் இரண்டுபாணத்தினாலே, இரண்
டு காலையும், இரண்டு பாணத்தினாலே இரண்டு தோள்க
ளையும், அறுத்துத் துணித்தார். அப்போது அவன் கு
கைபோலிருக்கிற வாயைத்திறந்துகொண்டு வாயினாலே
கவ்வித்தின்றுவிடுவேனென்று நகர்ந்துவந்தான். அப்ப
டிவருகிறவனைக்கண்டு, அவனுடைய ஒருதலையையும் அ
றுத்துக்கீழேதள்ளினார். திரிசிரன் என்கிறபர்வதம் பூமி
யிலேவிழவே, ராக்ஷதர்கள் அதைரியம் கொண்டு ஓடத்
தலைப்பட்டார்கள். பின்னாலே தூஷணனிருந்து நிறுத்தி
னாலும் நின்று, உத்தரம் சொல்லாமல், கையிலே கத்தி
கேடயத்துடனே, ரக்தஆறுகளில்விழுந்து குடல்களில்
கால்கள்மாட்டிக்கொள்ள, அதைப்பார்த்துத்தேவர்களு
ம்கைகொட்டிச்சிரிக்கப் பூமியிலேபாடுகிறபோது கால்கள
நடுக்கமெடுத்தவர்களும், பிணங்களில் விழுந்து அழுந்திக்
கிடக்கிறவர்களும், ரக்தச்சேற்றிலே வாள்வேல்முதலா
ன ஆயுதங்கள் புதையப்புதைத்துகிடக்கிறவர்களும் ஓடு
கிறபோது கால்கள் அறுந்து விழுகிறவர்களும், ரக்தஆ
ற்றைநீந்தி ஓடுகிறவர்களும், அதில் அழுந்தி மேலேகிள
ம்புகிறவர்களும், கோபத்துடன் ஓடினவர்களும் யானைவ
யிற்றில் ஆயுதங்களுடன் புகுந்துகொண்டவர்களும்,கப
ந்த மாடுகிறதைக்கண்டு நீ எனக்குச்சகோதரனையால்
என்னைக்கண்டதாகச்சொல்லாதேயென்று கும்பிடுகிறவ
ர்களும், அரையிற்கட்டினகச்சும்-வாளும்-தளர்ந்து-வீழ
ந்து-காலைச்சுற்றிக்கொண்டு இழுக்கப்பட்டு வருகிறதை
யும் பாராமல், பயமென்கிறதே ஒரு சுரூபம் எடுத்தது
போல மிகுந்தபயப்பிராந்தியாய் ஓடுகிறவர்கள் ஸ்ரீராம
பாணம்பட்டு விழுந்துகிடக்கிற ராக்ஷதர்களைக் கண்டு,
அஞ்சி-நடுங்கி-அந்தவழியை விட்டு மற்றொரு வழியா
ய் ஓட்டமெடுத்தார்கள்.

இப்படி ஓடுகிறராக்ஷதர்களை, குதிரைகள் கட்டியிருக்
கிற ரதத்தின்மேலேயிருந்த, தூஷணன்கண்டு பயப்பட
வேண்டாம் நானொன்று சொல்லுகிறேன். கேளுங்கள
டா வென்று சகலருக்கும்கேட்கும்படியாகச் சொல்லுகி
றான்: மனதிலேபயப்பிராந்தியுண்டானால் கொஞ்சமனுஷ
ருக்கு, ஸ்திரீகளும் அஞ்சார்களோ? தைரியமில்லவோ க
வசமாக இருக்கவேணும். அச்சமென்கிறதுவுயிருக்குத்
துணையாகுமா? தேவேந்திரனுடனேயும் ஒருநாளும் அ
ழியாமலிருக்கிற மும்மூர்த்திகளுடனேயும் எதிர்த்துயு
த்தம் செய்தபோது, ராக்ஷதர்களில் யார் ஓடினார்கள்.
உங்களுக்குத்தோற்று ஓடுகிறதேவர்களிடத்தில் இதைக்
கற்றுக்கொண்டீர்களோ ! இப்படியா மனம்திகைத்துப்
போனீர்கள். இங்கே ஒருமனுஷனுக்கு இத்தனை வீரரு
ம் தோற்று, உங்கள் கைவாளுடனே கீர்த்தியும்விழுந்து
போக, ஊரிலேபோய்ச்சேர ஓடுகிறீர்களோ ! ஸ்திரீகளு
டையஸ்தனங்கள் மார்பிலே அழுந்தும்படி அணைத்துக
கொண்டு அவர்கள் சுகத்தை அனுபவிக்கப்போகிறீர்க
ளோ ! யுத்தத்துக்கு வருகிறபோது அதிககோபத்தினா
லேசெம்புருக்கினது போல, சிவந்திருந்த கண்களெல்
லாம் பால்போலத் தெளியவந்தனவே இந்தஆரணியத்
தில் ஓடிநுழைகிறபோதெல்லாம்முதுகிலேமுள்ளுகள்-
கொம்புகள்-கிழித்த. அந்தக்குறிகளை அவர்களுக்குக்
காட்டுவீர்களோ ! மார்பிலே அழுந்தின அம்புகளைக்கா
ட்டுவீர்களோ? அல்லது உங்கள் ஸ்திரீகளுக்கு எதைக்கா



ட்டப்போகிறீர்கள், ராக்ஷதர்களுக்கு இதைக் காட்டிலு
மிஞ்சின ஏக்கம் வேறே யிருக்கின்றதா ! ஒருமனுஷன்
செய்கிற ஆண்மை அந்தத் தேவர்களாலேயு மாகாதே
அப்படியிருக்கஉங்கள் குலத்து ராஜாவினுடையதங்கை
மூக்கு இழந்த ஒருபழியுடனே போகாமல் ராக்ஷதர்கள்
முதுகுகாட்டி ஓடினார்களென்று மற்றும் ஒருபழிவருகி
றதே அதையும் எண்ணாமல் இருக்கிறீர்களே. தேவர்க
ளை யுத்தங்களில் ஜெயித்து, அவர்கள் கையிலிருந்த ஆ
யுதங்களைப் பறித்துக் கொண்டிருக்கிற அதிவீரரான நீ
ங்கள் இப்படி ஓடிப்போய், முத்து ரத்தினங்களைக் கொ
ண்டு வர்த்தகம் செய்யப்போகிறீர்களோ ! அல்லவென்
று - வில்லும் - வாளும் கொழுவாகக்கலப்பையில் பூட்
டி உழுதுபிழைக்க போகிறீர்களோ! எப்படி ஜீவிக்கப்
போகிறீர்கள், சொல்லுங்கள். இது என்ன விவேகமெ
ன்று இப்படி அநேகவிதமாகச் சொல்லி, நீங்கள் ஒரு
க்ஷணமாத்திரந் தாமதின்று, பார்த்துக்கொண்டிருங்கள்
நான் செய்யும் யுத்தத்தையென்று தன்சேனையுடனேஸ்ரீ
ராமனுக்கு நேராக, தேவர்களும் மயங்கி நடுங்கும்படி
யாய் எதிர்த்தான். அப்போது ஸ்ரீராமரும் அப்படியே
உன்சேனையைக் காத்துக்கொள்ளென்று, அஸ்திரப்பி
ரயோகஞ்செய்துகொண்டு எதிரேநடந்தார். அவன்பி
றகே வந்தசேனைகள் ஆயுதங்களுடனே கைகளறுப்பு
ண்டதுகள், ஆனைகளெல்லாம் தந்தங்கள் - தும்பிக்
கைகள் - அறுப் புண்டதுகள். ரதங்கள் கொடிகள்-
கொடிச்சீலைகள் - அறுப் புண்டதுகள். குதிரைகளெல்
லாம், கெல்லுக்கதிர் அறுப்புண்டதுபோலக் கழுத்து
க ளறுப்புண்டதுகள். ஒவ்வொரு பாணமு ராக்ஷதர்க
ளுடைய உயிர் நிலையைப் பேதித்து, அவர்கள் பாணங்
களையு மறுத்துக கச்சைகளையும் - கவசங்களையும் - கழ
ன்றுவிழத்தள்ளி, அருவிபோல ரக்தம் கண்களில் சொ
ரியக் கேடகத்தையும் அவர்கள் சரீரத்தையும் உருவிக்
கொண்டு போயிற்று. அநேகசரங்கள் ராக்ஷதர்கள்மார்
பிலேதைத்து அழுந்துகிற தற்குமுன்னே, அந்தசக்தி
ரபாணம் தலைகளைத்துணித்து விட்டது. ஸ்ரீராமர் தூஷ
ணன்விடுகிற சரங்களையும் துணித்து, மற்றராக்ஷதரு
டைய ஆயுதங்களையும் அறுத்து, அந்த ராக்ஷத சமுத்
திரத்தை வறண்டு போகச் செய்து விட்டார். அந்தக்
காலத்தில் தேவர்கள் சந்தோஷித்து அட்டகாசஞ்செய்
துகொண் டெழுந்தார்கள். ரக்த ஆறுகள், மலைகள் - வி
ருக்ஷங்கள் முதலானதுகளை யிழுத்துக்கொண்டு ஓடிய
துகள். ஸ்ரீராமபாணம் திசைதோறும் திசைதோறும்
ராக்ஷதர்களைப் பூமியிலே புரட்டிற்று. அந்தரணகளத்தி
லே, மலைக்கூட்டங்களைப்போல நிறைந்த பிணங்களைத்தி
ன்று தெவிட்டியபேய்களைக் குறித்துச்சொலவதென்ன
யுத்தத்தில் எதிர்ப்பட்டவர்களெல்லாம், அதிசீக்கிரத்தி
ல் இறந்தபடியினாலே இத்தனைபேர்களுடைய, உயிரை
எப்படிப் பிடித்துக்கொண்டு போகப்போகிறேனென்று
யமனும் கண்ணீர்சோர அழுது மெய்சோர்ந்தான். அ
ப்போது தூஷணன் மிகுந்த கோபத்துடனே யானை-
குதிரைகளின் தலைகளும்-தோச்சிகரங்களும-கபந்தமுத
லானதுகளும் குவிந்துகிடக்கிற மலைகள்மேலே ரதத்
தை ஓட்டி அது சக்கரம்போலச்சுழல்கிற ரதமானதும்
அந்த ரத்தஆறுகளிலேயும்-பிணச்சேறுகளிலேயும்-பிண
மலைகளிலேயும் எழும்பிநடக்கப் பட்டபாடு ஒருவராலே
சொல்லி முடியாது. அப்படிமகாபிரயாசையாக இருபத்
தைந்துகுதிரை கட்டியிருக்கின்ற, ரதத்தைமுடுக்கிக்கொ
ண்டு இருளைநீக்கிப் பொலிந்திருக்கின்ற சந்திரனைப்போ
லப்பிரகாசிக்கிற, ஸ்ரீராமசுவாமிக்கு எதிரே, கூற்றுவன்
முன்னே வழிநடந்து போகிறபிராணன் போலச்சமீப
த்திலேபோனான். அப்படிவந்ததேனையும் பெரியவில
லையுமுடையமலைபோலநிற்கிற தூஷணனை, ஸ்ரீராமச்சந்
திரன்பார்த்து நீ நல்லசாமர்த்தியன் ! நல்லசாமர்த்திய
ன் !என்றுசொன்னார். அப்போது அந்தப்பாவி மூன்று
பாணம் ஸ்ரீராமசந்திரன்மேல் எய்தான். அந்தப்பாண
ம் சுதர்சனமென்கின்ற திருச்சக்கர அவதாரமான பா
தாழ்வானைப் பூமியாள அனுப்பி விட்டுவந்த ஸ்ரீராமன்
நெற்றியில் வீரபட்டத்தின்மேலே, தேவர்கள் நடுங்கும்
படியாகப் பட்டது, அப்போது இவன் எய்தகாலபலமு
ம்இவன்பலமும்நன்றாயிருந்ததென்று சிறுநகைநகைத்து அ
ஸ்திரப்பிரயோகஞ்செய்து அவனுடையதேரையும்அறு
த்து,வில்லையும்அறுத்து, கவசத்தையும்அறுத்தார்.பின்
னும்தேவர்கள் ஆர்ப்பரிக்க, ரிஷிகள்வார்கள்வாழ்த்த இ
தோபாணம்வருகின்றதுஇதைக்காத்துக்கொள்ளடாவெ
ன்றுசொல்லிஒருபாணத்தைப்பிரயோகம்செய்தார்.அந்
தப்பாணத்தினாலே சோரதத்முடைய தூஷணன்தலை
அறுப்புண்டுவிழுந்தான்,

தூஷணன்வதைப்படலம் முற்றிற்று.

---

## கரன்வதைப் படலம்.

அப்போது மகாவீரனான கரன் தம்பி தலையற்றுப்
போனதும் தாசரதியாகிய ஸ்ரீராமன் சகலரையும் மடி
த்ததும் அறிந்து, கோபித்துக்கொண்டு கூற்றுவனும்ப
யப்பட அநேகராக்ஷதசமுத்திரத்துடனே, யானைகளும்,
ரதங்களும் குதிரைகளும், காலாட்களும்பரிவாரச் சந்
திரனை மேகம்வளைத்துக்கொண்டதுபோல, ஸ்ரீராமனெ
ன்கிற மதயானையை வளைத்தான். அந்த ராக்ஷதர் முத
லாகிய சதுரங்கபலமும், பூமியைச் சுமந்து கொண்டி
ருக்கிற அனந்தனுடைய படங்களும் கிழியும்படி, பல
பலவிதமாகயுத்தஞ்செய்யத்தலைப்பட்டனர்,வீரராகவனு
ம் அஸ்திரங்களைப் பிரயோகஞ் செய்தான், அப்போது
அநேகம்யானைகள்துடித்ததுகள், அநேகம்கொடிதேர்கள்
துடித்ததுகள், அநேகம் குதிரைகள் துடித்ததுகள், அ
நேகம் முடித்தலைகள் துடித்ததுகள், அநேகம் வாகுவ
லயத்தை அணிந்ததோள்கள்துடித்ததுகள்,அநேகம்மணி
க்குடல்கள் துடித்ததுகள், அநேகம் சதை- தோல்கள
துடித்ததுகள், அநேகம்கால்கள் துடித்ததுகள், ஜீவனுட
னிருக்கிற ராக்ஷதருக்கும் இடது தோள்கள் துடித்தது
கள், வாளின்காடு-வேலின்காடு-வில்லின்காடு-தோளின்
காடுகளையும் அதுகளையுடைய ராக்ஷதக்காடுகளையும் சு
வாமி யானவர் அம்பின் காடுகளினாலே யழித்தார். கரு

மஸ்வரூபரான ஸ்ரீராமருடைய பாணமானது நக்ஷத்தி
ரமண்டலத்தை உருவியமகம்மேருபர்வதத்தையும் ஆகா
யத்தையும்பூமியையுமே உருவுகின்றதாயிருக்க. இந்தரா
க்ஷதர்களுடையமார்பைஉருவினதை ஒருஅதிசயமாகநா
ன்சொல்லவேணுமோ! அன்றையத்தினம்வந்தவனைத்த
ராக்ஷதர்களெல்லாம்போய் மடியும்படி அஸ்திரங்களைவி
டுத்து, ஒருவன்பலவானயிருந்து எளியோர்களை வருத்
தப்படுத்திக் கிரகித்தபொருள் அவனைக் குலத்துடனே
யெப்படிநிர்மூலஞ்செய்யுமோ அப்படியே நிர்மூலம்செ
ய்தார். இப்படியாக அனைவரும்அழிந்துபோகவே அந்த
ரத்தசமுத்திரத்திலே மந்தர கிரிபோலத் தனித்தேரில்
நின்ற வீராதிவீரனுகிய கரனைவன், மிகுந்த கோபம்
கொண்டுகண்கள்நெருப்பைச்சிந்த, எண்ணிறந்த பாண
ங்களைப்பொழிந்துகொண்டு வடவா முகாக்கினி போல
எரிந்து, புகைகிற மனதுடனே, 'அநேகம்-கழுகு-கூளி-
பருந்து-காகமுதலானதுக விடைந்து போகக் கடலில்
ஓடுகிறகப்பல்போலத்தேரைவிட்டுக்கொண்டு எதிரேவ
ந்தான். அப்படிப் பிரளயகாலாக்கினிபோல்வருகிறகரன்
தம்முடையசமீபத்துக்குவருமுன்னமேகாளகண்டனை
சிவனுடைய வில்லைத் திருக்கையினுல் ஒடித்த ஸ்ரீராமரு
ம், பாணங்களைப் பிரயோகம் செய்து கொண்டு எதிர்த்
தார். அப்போது ராக்ஷதசாதியானுன கரன்-அக்கினிஸ்
வரூபமாய், வாயுவேக மானதுகளாய், செவ்வையாய்,
நீண்டுகூர்மையாயிருக்கிற ஆயிரம்பாணங்களை ஒருக்ஷண
நேரத்தில்எய்தான், ஸ்ரீராமரும் அப்படிக்கொத்தபாண
ம் ஆயிரம்எய்து அதுகளை அறுத்தார்மற்றும் சகலலோ
கநாயகரான ஸ்ரீராமர்பிரளயகாலாக்கினிக்குச்சமானமா
ன ஒன்பது கணைகளைப் பிரயோகஞ்செய்தார், அதுகளை
அவன் அறுத்துப் பின்னும் மாயத்தினுலே மிகவும்யுத்த
ஞ்செய்து ஸ்ரீராம ருடைய திருமேனியை அம்பினுலே
நோவமறைத்தான். அதைக்கண்ட தேவர்கள் மனது தி
டுக்கிட்டுப்பயந்து ஓடிஒளித்தார்கள். ஸ்ரீராமர் 'பவளம்
போலிருக்கிற அதரத்தைத் தந்தங்களினுலே அழுத்திக்
கோபித்தவராய், ஒருபாணத்தினுல்-இவன்தலையைஅறு
க்கவேணுமென்று, கோதண்டத்தில் ஒருஅஸ்திரத்தைப்
பூட்டித் தோள்பரியந்தம் வாங்கினர். அப்போது, அந்த
வில்யுகாந்தப்பேரிடியின் சப்தமும் அடங்கிப்போக அ
திகசப்தத்துடனேபடீரென்று ஒடிந்தது அத்தருணத்தி
ல் ஜெயங்கோரிக்கொண்டிருந்த தேவர்கள் பயந்துதிடுக்
கிட்டு, வெற்றியில் ஸ்ரீராமரிடத்தில் இல்லையே ஆகையா
ல், நம்முடைய பலம்போய் விட்டதென்று நடுங்கினர்க
ள், அதுகண்ட சக்கரவர்த்தித்திருமகனுனவர் நம்முடை
யவில் ஒடிந்தது. நாம் தனியேயிருக் கிறோமென்று மன
திலே சிந்தைசெய்யாமல், தம்முடைய திருக்கையைப்
பின்புறத்தில் நீட்டினர் சமீபத்தி லிருந்து மனதை அறி
ந்துகொடுக்கிறவன்போல, வருணனுனவன் அவர்முன்னு
ளிலேபரசுராமரிடத்தில்வாங்கிதன்னையிற்கொடுத்துவை
த்தவில்லைக்கொடுத்தான். அப்படி அந்தவருணன்கொடு
த்தவில்லைமேகஸ்வரூபரான ஸ்ரீராமர் வாங்கிவலங்கொ
ண்டு இடதுகையிலே பிடித்தார். அந்தச் சமயத்திலேத
ர்மம்தப்பிப் போகிறவர்களுக்கெல்லாம் இடதுகண்ணும்
இடதுதோளும்-துடித்ததுகள். ஸ்ரீராமர் அந்தவில்லைநா
ணிகாரியேற்றிட்டு, கூற்றுவனும் சந்தோஷத் துடனேநூ
றித்துக்கூத்தாட, நூறு அஸ்திரம் பிரயோகித்துக்கரனு
டைய தேரைப் பொடியாக்கி விட்டார். அந்தக்ஷணத்தி
ல்கரன்தேரைவிட்டிறங்கி ஆகாயத்தில் எழும்பி ஆர்ப்ப
ரித்து, அநேக அஸ்திரங்களை - திவ்விய சுந்தரத்தை யு
டைய ஸ்ரீராமருடைய தோள்களாகிய மரகதக்குன்று க
ளின்மேல் மழைபோலப்பொழிந்தான், அதுகண்டு தச
ரதராமர்அஸ்திரப்பிரயோகஞ்செய்துஅம்புறத்தூணியி
லிருந்து அம்பை வாங்குகிற வலது கையை அறுத்துப்
பூமியிலே விழத் தள்ளினர், வலது கைவிழவே இடது
கையினுல் இருப்புலக்கையை எடுத்து இடிபோலவீசிவி
ட்டான், லட்சுமணருக்குத் தமயனுரான ஸ்ரீராமர் ஒரு
பாணத்தினுலே அதைவிலக்கினர், அப்போது விஷதந்த
ங்கள் இற்றுப்போன சர்ப்பம்போலக்கோபித்து, ஒருமரா
மரத்தைப்பிடுங்கிக்கொண்டுசமீபத்திலேவந்தான். ஸ்ரீரா
மர் ஒரு அஸ்திரத்தைப்பிரயோகித்தார், அந்த அஸ்திர
த்தினுலே ராக்ஷதர்கள் வரப்பிரசாதம் பெற்றுக்கொர்வி
தராய்ச் சகலவுலகங்களையும் உபத்திரவப்படுத்தினபாவ
த்தினுலே, அவனுடைய வலதுகை அறுந்து விழுந்தது
போலச் சரீரமும் அற்றுவிழுந்தான். தேவர்கள்சந்தோ
ஷித்து ஆர்ப்பரித்தெழுந்திருந்து ஆனந்தநிர்த்தனம் செ
ய்து ஸ்துதிபண்ணிப்புஷ்பமாரி பொழிந்தார்கள். விஜய
ராகவரும்மூடுபனியைநீக்கிப்பிரகாசிக்கிறசூரியனையொ
த்துப்பிரகாசித்தார். அப்போது அநேகரிஷீஸ்வரர்கள்
வந்து சந்தோஷத்துடன் ஆசீர்வாதஞ்செய்து சூழ்ந்து
வர, யுத்தத் துக்குத் தன் பிராணன் போயிருக்கச் சரீர
மாத்திரம் இருக்கிறது போலத் தேவிராட்டி இருக்கிற
பர்ணசாலைக்கு வந்துசேர்ந்தார், தம்பியும் பிராட்டியாரு
ம் சாஷ்டாங்கமாகநமஸ்காரஞ்செய்து ஸ்ரீராமன் திருவ
டிகளில் அந்தராக்ஷதர்களுடையரத்தம் தெறித்திருந்த
தை யெல்லாம்தங்கள்கண்ணீரினுல் கழுவினர்கள். ஒரு
முகூர்த்தகாலத்தில் மடிந்துபோன ராக்ஷதர்களுடைய
ரத்தங்கள் திசைக ளெல்லாம் ஓடத்தேவர்க ளெல்லாம்
சமுத்திரம் போலக் கோஷ்டத் துடனே ஸ்தோத்திரஞ்
செய்ய, அதிவீரராகிய ஸ்ரீராம ரானவர் வீற்றிருந்தார்.
இவ்விடத்துச்சமாச்சாரம் இப்படி இருந்தது-ராவணன்
தங்கையான சூர்ப்பநகி, கைகளினுல் வயிற்றைப்பிசைந்து
கொண்டு மார்பிலே அறைந்து கொண்டு, அந்தகாரரூப
னைகரனைக்கட்டிக்கொண்டு பெருங்கூச்சலிட்டு ரத்தச்
சேற்றிலே புரண்டு என்மனதிலே கொண்ட ஆசையென்
மூக்குடனே போகதான் இறந்துபோகாமல், வாய்ப்பே
ச்சில் உங்கள்வாழ்வையும் ஆயுசையும் பாவியான நான்
போக்கினேனே என்று பலபல விதமாகச் சொல்லி அ
ழுது, இந்தச்சமாச்சாரம் ராவண னுக்குச் சொல்லவே
ணுமென்று மரக்கலங்களைக் கவிழ்க்கிறதற்குப் போகிற
சண்டமாருதக்காற்றைப்போல, ராக்ஷதர்களையெல்லா
ம் கொல்லுகிற காரியத்துக்குச் சூர்ப்பநகி அதிக சீக்கிர
மாய்கடந்து, லங்கையை நோக்கிப் போனுள்.

கரன்வதை முற்றிற்று.



## சூர்ப்பநகிசூட்சிப்படலம்.

அந்தச்சூர்ப்பநகியானவள் இப்படியாகராக்ஷதர் அ
நேகர் மடிந்து போனதை மறந்தவளாயும், ஸ்ரீராமனு
டைய திருவழகில் மயங்கிக்கிடந்த பேராசை மனதை
வாதிக்கச்சகிக்க மாட்டாதவளாயும், அடிக்கடி-எதிரே
ஸ்ரீராம னுடைய ஸ்வரூபம் தன்மனப் பிரமையினுலே
உருவெளியாகத் தோன்றப்பார்த்து மயங்கிக் கொண்
டேநடந்து, சமுத்திரமேஅகழியாகப்பெற்றிருக்கிறலங்
கையிலே சேர்ந்து, சீதையினுடைய அழகைச் சொல்
லுவோமென்றெண்ணி யோசனைசெய்துகொண்டு வரு
கிறபோது, அந்த ராவணேஸ்வரன் எப்படி இருந்தா
னென்றால் உலகங்களில் வியாபித்திருக்கிற சராசரங்க
ளை யெல்லாம் சிருஷ்டிக்க, தாமரைக் கமலவாசனுனச
துர்முகப் பிரமாவுக்கும் செய்கிற தற்கு அருமையான
விஸ்தீரண முண்டானதாய், மறவாமல் செய்துவந்த க
ர்மத்தைப்போல- நினைத்ததுகளையெல்லாம் தடையின்
றிக்கொடுக்கிற தேவத்தச்சனுன மயன், மனஸ்கரித்து
ப்புலன்களெல்லாம் சேரவைத்துப் பார்த்துமகாசிங்கா
சமாய், நவரத்தின கசிதமாகச் செய்திருக்கிற சொர்ண
மண்டபம்பிரகாசிக்க, அந்தமண்டபத்திலே சர்மதாரு
ளருத்திரனும் பீதாம்பரதாரனுன விஷ்ணுவும் கமலசம்ப
வனுன பிரமாவுமே தண்டனை செய்யத்தக்க பலமில்லா
தவர்களாயிருக்க, மற்றவர்களில் இவனுக்கு உயர்ந்தவ
ர்கள்[illegible]க்கிறார்கள் ஆகையால் - இளைத்த இடையும்
பருத்த ஸ்தனமும் பச்சைமூங்கில்போலத் தோள்களு
ம் செவ்வரிபரந்த கண்களும உண்டான ஸ்திரீகளுடை
யபுலவியப்பிணக்கு கவிலேயும், வணங்காத கிரீடங்கள்
பத்தும் தகத்தகாயமாய்நிறைந்து பிரகாசிக்க, பூர்வத்தி
லே நவக்கிரகங்களைப்பிடித்துவந்து லங்கையில் சிறை
யிட்டிருந்தபோது, எல்லாம் ஒன்றாய்க் கூடி இருந்தது
போல அநேக நவரத்தின ஆரங்கள் மார்பிலே பிரகாசி
க்க, அஷ்டதிக் கெஜங்களின் தந்தங்களை ஒடித்ததோள்
கள் இருபதும் ஆகாயமட்டும் அளாவிப் பூரித்து, ஒவ்
வொன்று ஒவ்வொரு உதய பர்வதம்போலப் பிரகாசித்
திருக்க, அதுகளின்மேல்குண்டலங்கள் மகமேருவை
ப் பிரதக்ஷணம் வருகிற, சூரியமண்டலங்கள் பன்னிர
ண்டும்இருபதாய்ப்பொலிந்திருக்கிறதுபோல, இருபது
காதினுடையகுண்டலங்களும் பிரகாசிக்க, அதிகபராக்
கிரமசாலிகளாகிய ராக்ஷதர்கள் முதலான அநேகரா
ஜாக்கள் சாஷ்டாங்க மாகச் சேவிக்கிற போதெல்லாம்
அவர்கள்கிரீடகோடிகள் படுகிறதினுலே, தேய்ந்துதே
ய்ந்து பின்னும் அதிகபிரகாசமாய், சப்தித்துக்கொண்
டு பாதத்திலே வீரகண்டாமணி பிரகாசிக்க, சொர்க்க
மத்திய-பாதாளமாகிய- மூன்றுலோகத்திலேயும் அதி
பதிகளா யிருக்கிறவர்கள், ஓயாமல்மேன்மேலும் கொ
ண்டுவந்து குவிக்கிற திரவிய மலைகள்போலத் தேவர்க
ள்-அசுரர்கள்-முதலானவர்கள், திக்குக ளெல்லாம் நி
றைய நின்றுதுவுகிற சுவர்ணபுஷ்பங்கள் கும்பல்கும்ப
லாய் அங்கங்கேபிரகாசிக்க, அநேகவிஞ்சைய குமாரர்
கள் பிரதாபலங்கேஸ்வரன் இன்னவேளையில் இன்னப
க்கத்தில் பார்ப்பானென்கிறதுதெரியாமையால், மகிழ்
பயத்துடனே கைகளைப் பிரகாசம்பொருந்திய கிரீடம்
தரித்திருக்கிறசிரசிலேவைத்துக்கும்பிட்டபடியே, அவ
ர்கள் இருக்கிற ஸ்தானங்களில் வரிசைபிசகாமல் சூழ்
ந்திருக்க, ஸ்திரீக்கூட்டங்களைக்குறித்து ஒருவார்த்தை
பேசினுலும் அது தங்களைக்குறித்துப் பேசுகிறதாக நி
னைத்துப்பயந்து, வாயும்மனதும்குவியவணங்கின தலை
யுடனே சித்திரம்போலச் சித்தர்கள் ஒருபக்கத்திலே
சேர்ந்திருக்க, மந்திரிகளைப்பார்த்து அவன் ஒருநன்மை
யானவார்த்தை யாடினுலும்தாங்கள்கதிபெற்றி என்னகாரி
யமோவென்று எண்ணி நமஸ்காரம்பண்ணிக்கொண்டு
பயப்பிராந்தியுடனே அநேகமந்திரிகள்ஒருபக்கத்தி
லேசூழ்ந்திருக்கதிக்கெஜங்களைஜெயித்துக் கைலாசபர்வ
தத்தை எடுத்துத் தேவர்களெல்லாம் 'அபஜெயப் பட
த்தேவேந்திரனை ஜெயித்த வெற்றிகளை; வீணைகளில் ஏற்
றித்தும்புரு ஒருபக்கத்திலே பாடிக்கொண்டிருக்க அவ
ன் வித்தியா சாமர்த்தியத்தினுலே வேதங்களைத்திருத்தி
அங்கஞ்சேஜடைகள் ஏற்படுத்தி, பிரபலப்படுத்தினபடி
யே அந்தவேதத்தைப்பண்ணுடனேமகரயாழில் நாரத
மகாமுனி ஒருபக்கத்திலேபாட, மேகமென்கிற அருக
தியினுலே தேவலோகத்துப் பாரிஜாத புஷ்பத்தேனும்
விஞ்சையலோகத்துப்புன்னைப்புஷ்பத்தினுடையதேனு
ம்பரிமளத்துடனே குளிர்ந்த புதியநீரிலே கலந்துகொ
ண்டு, அவ்விடத்தில் நிறைந்திருக்கிற ஸ்திரீக்கூட்டங்க
ள் தரித்திருக்கிற வஸ்திரங் களிலே விழுந்து நனைந்து
தோயப்போகிறதென்று, பயப்பிராந்தியுடனே வருண
தேவன் அந்தப்பரிமள ஜலத்தை, குறுந் துளிகளாகத்
தெளித்துக்கொண்டிருக்க, வாசனைபொருந்திய புஷ்ப
த்தினுடையதாதுக்களும்-தேனும்-அநேகருடையநெரு
க்கத்திலே கிரீடங்கள் ஒன்றோடு ஒன்று தாக்குதலால்
உடைபட்டு, சிந்துகிற ரத்தினங்களும் - முத்துகளும்-
சொர்ணப்பொடிகளும்- தரையிலே விழுவதற்கு முன்
னேதாங்கிக்கொண்டு தூரத்திற் கொண்டுபோய் எறிந்
துவிட்டு அந்தச் சபையை எந்நேரமும் துடைத்துச்
சுத்திசெய்து கொண்டு வாயுதேவன் நிற்க, பிரகாசம்
பொருந்திய பிரம்புகள் கையிலே வைத்துக்கொண்டுச
ரீரத்திலேகஞ்சுகந்தரித்துக்கொண்டு அனேகர் ஓயா
மல், பொன்னினுலும்வெள்ளியினுலும்செய்திருக்கிறஆ
சனங்களை அங்கங்கேவருகிற இந்திரன்முதலான, அவ
ரவர்களுக்குத் தக்கபடியே முறை வழாது கொடுத்துக்
கொண்டிருக்க, சூல முதலான ஆயுதங்களை வாங்கி அ
ப்பால் வைத்துவிட்டுக் கட்டியிருக்கிற வஸ்திரத்தினு
லே பயபத்தியுடனே வாயைமூடிக்கொண்டு, பேரிகை
அடிக்கிறபோதெல்லாம்காலன்வந்துநாளும்-நாழிகையு
ம் சொல்லிக்கொண்டிருக்க, வாசனைபொருந்திய நெய்
கள்விட்டுக்கற்பூரம்நிறைத்துப்பஞ்சுமுதலானதிரிகளினு
லே, செந்தாமரைத்தடாகம் புஷ்பித்திருக்கிறதுபோல
அக்கினிதேவன் விளக்குகளேற்றி அசையாமல் பார்த்
துக்கொண்டிருக்க, கற்பகவிருக்ஷம்- காமதேனு - கவி

ண்டு நம்முடைய பந்துக்களானவர்களும் போய்விட்டார்கள். ஐயா, அதை என்னவென்று சொல்லுகிறது! நான்போய்ச் சொன்ன க்ஷணமே சேனை சமுத்திரத்துடனே, அந்த மனுஷர்மேல் யுத்தத்திற்குப் போன, கரன் முதலான வீரர்களெல்லாம் புண்டரீகாக்ஷனை அந்த ராமனென்கிறவனுடைய ஒருவில்லினாலே, மூன்று நாழிகையிலே தேவலோகம்போய்ச் சேர்ந்தார்களென்று சொன்னாள். அநேகம் சேனைகளுடனே தம்பிமார், ஒரு மனுஷன்செய்த யுத்தத்திலே மடிந்துபோனார்களென்ற வார்த்தை, காதிலே விழுந்தது விழாததற்கு முன்னே, மேகமானது இடியும்-மின்னலும்-மழையும்-நெருப்பும் கலந்து பொழிகிறதுபோலக் கண்கள், நெருப்புடனே நீரைக்கக்கத் தலைப்பட்டதுகள். அப்போது எழும்பின கோபத்திலே அடங்கிய தூயமானது அக்கினியிலே சொரிந்தநெய், அந்த அக்கினியை மிகவும் சுவாலிக்கச் செய்வதுபோல, பின்னையும் கோபத்தை அதிகரிக்கச் செய்ய மனது கொதித்து நீஎன்னகுற்றம்செய்தாய்! உன்னை அவர்கள், காதையும்-மூக்கையும்-அறுக்க வேண்டியநிமித்தம் என்னவென்று ராவணன் கேட்க, அதற்கு என்னிடத்திலே வந்தகுற்றம் என்னவென்றால், ஒருவராலும் எழுதுகிறதற்குக் கூடாத, அதிரூப சவுந்தரியத்தையுடையவளாய், அந்த ராமனுடனேகூடத் தாமரைப் புஷ்பாசனத்தைவிட்டு, லக்ஷுமி வந்திருக்கிறாள். அவள் மின்னலினிடத்திலே இடையையும், பச்சை மூங்கிலினிடத்திலே தோள்களையும், சுவர்ணத்தினிடத்திலே திருமேனியையும் பெற்றுக்கொண் டிருக்கின்றாள். அந்த ஸ்திரீயினாலேவந்ததென்றுசொன்னாள். அப்போது அவள் ஆரென்று தமயன்கேட்க, ஐயா, தேர்போல அல்குலும் வச்சிரக்கிண்ணம்போல ஸ்தனங்களும் உண்டானவள், அவள்பாதந் தீண்டும்படிப் பூமிக்குப் பாக்கியங்கிடைத்தது. அவள்பேர் சீதையென்றுசொல்லி, அவளுடைய சுந்தரமெல்லாஞ் சொல்லத் தொடங்கினாள். தேவலோகத்துக் கற்பகவிருக்ஷத்தின் கனியினுடைய ருசியும் தமிழ்ப்பாடலினுடையருசியும்-தேனினுடைய ருசியும் பழுத்ததுபோல, அதிக மதுரமான வசனத்தைக்கொண்டு பாஷிக்கிற, அந்த ஸ்திரீரத்னமான பெண்ணைத் தேவகன்னிகையாக வைத்துக் கமலாசனியான ஸ்ரீமகாலக்ஷுமியை அவளுக்குத் தாதியாகவைத்துப் பார்த்தாலும், அதற்கே அந்தலக்ஷுமி யோக்கியப் படமாட்டாள். என்றுசொல்லும்போது, அவளழகை நான்சொல்ல ஏற்படுகிறது புத்தியில்லாமையே, ஆனாலும்என்புத்திகொண்டமட்டும் என்னாலானது சொல்லுகிறேன். மேகத்துக்குச்சமானமான அளகமும்-மழைக்காலுக்குச்சமானமாக வடிந்திருக்கிற அந்தக்கூந்தலும் – செம்பஞ்சுவட்டிச்சிவந்து, அந்தப்பஞ்சைப்போல மிருதுவானபாதமும்-பவளக்கரனைகள்போலத் திரண்ட விரல்களும் அமிர்தத்திலே நடுவே அள்ளிக்கொண்டதுபோல ஆதாரமானசொற்களுமுடையவள் திருமுகம்- கமலத்தினைவாயிருந்தாலும், கண்கள் கடலிலேயும் பெரியதுகளென்று சொல்லத்தக்கதுகள். மன்மதன் சிவனுடைய நெற்றிக்கண்ணினாலே வெந்துபோனானென்கிறது லோகருடமேயல்லாமல் நிச்சயமல்ல. வாசனை பொருந்திய அளகபாரத்தையுடைய அந்தச்சீதையைக்கண்டு, அவளைக் கிரகிக்கும்படித் தனக்குச் சாமர்த்தியமில்லாதபடியினாலே. அதிகஆசையென்கிற வியாதிபிடித்துக்கொண்டு, மனதழிந்து-சரீரமும் அழிந்து போனான் தேவலோகத்திலேயும்-பூலோகத்திலேயும்-நாகலோகத்திலேயும்-இருக்கிற, ஸ்திரீகளை நீயும் பார்த்திருக்கிறாய். கருமான் உலைக்களத்திலே காய்ந்தவேலையும், வாளையும், வெற்றிகொண்டிருக்கிற, கண்களை யுடையவளான அந்த ஸ்திரீ எந்தலோகத்தாளோ! அவளுடைய சுந்தரமான திருமேனியைப் படத்திலே எழுதவேணுமென்றாலும் யாவராலும் கூடாது. தோளினுடைய அழகைச் சொல்லுவேனோ! பிரகாசம் பொருந்திய திருமுகத்திலே உலாவுகிற கண்களென்கிற வாளையே சொல்லுவேனோ! அல்குலைத்தான்சொல்லுவேனோ! சொல்லத் தொடங்கினால் மனது பின்னும் திகைத்துப்போகிறதேயல்லாமல், அவயவங்களினுடைய அழகுகளைத் தனித்தனியேசொல்லுகிறதற்கு, என்னாலாகவில்லை. நான் உனக்குச் சொல்லவேண்டியது என்ன! நாளைக்கு நீயே பார்க்கப்போகிறாய். வில்லுக்குச்சமானம் புருவமென்றாலும், வேலுக்குச் சமானம் கண்களென்றாலும், முத்துக்குச்சமானம் பல்லென்றாலும், பவளத்துக்குச்சமானம் இதழென்றாலும் சொல்லுக்குச் சரியாயிருக்குமேயல்லாமல் பொருளுக்குச்சரியாகமாட்டாது. நெல்லுக்குப் புல் சமானமென்றுசொல்லுகிற தாரதம்மியத்துக்கும் ஒன்றும் சரிப்படமாட்டாது. இந்திரனுக்கு இந்திராணிகிடைத்தாள். சண்முகனுக்குத்தந்தையாகிய சிவனுக்கு உமை கிடைத்தாள். கமலநேத்திரனான விஷ்ணுவுக்கு லக்ஷுமிகிடைத்தாள். பிரம்மாவுக்குச் சரஸ்வதிகிடைத்தாள். அத்தன்மைபோலச் சீதையென்கிறவள் உனக்குக்கிடைத்தால், அப்போது நன்மையெல்லாம் உன்னுடையதே யாரும். அவர்களுக்குஒன்றுமில்லை, பெண்சாதியைப்பாகத்திலே ஒருத்தன்வைத்துக்கொண்டான். மார்பிலே ஒருத்தன் வைத்துக் கொண்டான், நாவிலே ஒருத்தன் வைத்துக்கொண்டான். மின்னலை வெற்றிகொண்டு பிரகாசிக்கிற சிற்றிடையையுடைய சீதை உனக்குக்கிடைத்தால் அவளை நீ எங்கேவைத்துக்கொண்டு வாழ்வாய். பஞ்சவர்ணக்கிளிபோலப் பாஷிக்கிற சீதை எதிர்ப்பட்டால் அவளைக்கண்டும் நீ பிராணனுடனிருப்பையா! உன்திருமகாசெல்வத்தையெல்லாம் அவளுக்கே கொடுத்துவிடுவாய். உனக்குமாத்திரம் நான்நல்லவளானாலும், உன்வீட்டிலிருக்கிற உன்னுடைய ஸ்திரீகளுக்கெல்லாம், கேடுகொண்டுவந்து விட்டவளாகின்றேன். அந்தச் சீதைதேவலோகத்தார் பூலோகத்தார்களில், ஒரு ஸ்திரீ வயிற்றிலும்பிறந்தவளல்லள். சமுத்திரம் லக்ஷுமியைப் பெற்றது. அந்தச்சமுத்திரத்தை வெல்லுகிற நிமித்தம், பூமியிலேயாட்பி[illegible]ற்றது. உலகங்களெல்லாம் மன்மதனுக்கு உ[illegible] செய்துபூசிக்க, நீ சீதையைக் கொண்டுவந்து சேர்த்துக்கொண்டு உன்பலத்தையும், கீர்த்தியையும், லோகத்தா



ரெல்லாம் கொண்டாடும்படி அந்தராமனை நான் சேர்ந்திருக்க அவனை யெனக்குக் கொடுத்துவிடென்று சொல்லி, அப்பாலும் சொல்லுகிறாள். ஐயா! சகலத்தையும் கொடுக்கிறது விதியாகையால் அதிக தபசு பெற்றவர்களுக்கும் வருகிறநாளில் வருகிறது வருமே யல்லாமல் நடுவேவருமா! பத்துமுகமும், இருபதுதோளும், அதிசுந்தரமான ஸ்வரூபமும், மார்பும், தோள்கள் இருபதும் படைத்திருக்கிறதற்கு லட்சமான பாக்கியம் இனிமேல்தான் நீ அடையப்போகிறது. அப்படிப்பட்ட சீதையை உன்னிடத்தில் கொண்டுவந்து விடவேணுமென்று அவளை யெடுக்கப்போனேன். அந்தச் சமயத்தில் ராமன்தம்பி நடுவேவந்து புகுந்து வாளினாலே மூக்கை யறுத்துவிட்டான். அப்போதுதானே என்வாழ்வு முடிந்துபோயிற்று. உடனே பிராணனை விட்டுக் கொள்ளுவேன். அந்தப்பெண் சமாச்சாரத்தை உனக்குச்சொல்லிப் பிறகு பிராணனை விட்டுக்கொள்ளுகிறதாய் துணிந்து வந்தேனென்று சொன்னாள். அந்தவார்த்தை கேட்கவே ராவணனுக்கு கோபமும், கடூரமும், மானக் கொதிப்பு மென்கின்ற இவைமுதலானதுகளெல்லாம் பாவியினுடைய பாக்கியம்போலப் பறந்துவிட்டு ஒருநிமிஷம், மற்றொருநிமிஷத்திலே கலந்தார்போலக் காமமும், அதினாலேவந்தமோகவியாதியுங்கூடி அவனுடைய ஜீவனுடன் ஒன்றாய்க் கலந்துகொண்டன. அப்போது கரனையும்மறந்தான் தங்கையின்மூக்கை அறுத்தவர்களுடைய பலத்தையும்மறந்தான். தன் குலத்துக்குவந்த பழியையும் மறந்தான். ஈஸ்வரனையும் ஜெயங்கொண்ட காமனுடைய அம்பினாலே முன்னாள் தான்பெற்ற வரத்தையும் மறந்தான். காதிலேகேட்ட சீதையைமாத்திரம் மறவாமல் தியானித்தான். அந்தச் சீதையென்கிற பேரும், மனமும், ஆகிய இரண்டும்ஒன்றாய்நின்றதனால் ஒன்றைவிட்டு ஒன்றை நினைக்கிறதற்கு வேறேயொரு மனமிருக்கிறதா அல்லது மறக்கிறதற்கு வேறேவழிதானிருக்கிறதா! கற்றறிந்த ஞானமில்லாமற்போனால் காமத்தைத் தடுக்கக்கூடுமா! மயிலைப்போலச் சாயலுண்டான சீதாலக்ஷுமியை ராவணன் வஞ்சனைசெய்து கொண்டு வருகிறதற்கு முன்னேதானே தன் இதயமென்கிற சிறையிலேவைத்தான். அதனாலே வீரவேலாயுதத்தையுடைய அதிக சாமர்த்தியமுள்ளராக்ஷதாதிபதியினுடைய மனது கோடை வெயிலிலேவைத்த வெண்ணெய்போல மெள்ள மெள்ள வெம்பிக்கரைந்து உருகியது. விதியினுடைய பலத்தினாலேயும், மேல்நடக்கவேண்டிய காரியத்தினாலேயும், கேடுவந்து குறுகியிருக்கிறபடியினாலேயும், இவனுடைய காமவியாதி புத்தியில்லாதவன் மறைவாகச் செய்த தீமைபோல மேன்மேலும் வளர்ந்தது. ஸ்வர்ணமயமான அந்தக் சீதைமனதிலே புகுந்து கொள்ளும்படி [illegible]கொண்ட மௌட்டியத்தினாலேயோ! அல்லவென்று அந்தராக்ஷதன் தன்னைத்தான் மறந்திருக்கிற படியினாலேயோ! தெரியாது, பயமில்லாமல் மன்மதன் எதிரேநின்று புஷ்பபாணங்களைப் பிரயோகித்து வருத்தத்தக்க சாமர்த்தியனானான். உலகத்திலே எவர்களையும்பலத்தை அழிக்கிறதற்குக் காமமேயல்லாமல், வேறே என்னயிருக்கின்றது, அப்போது ராவணேஸ்வரன் சிங்காசனத்தைவிட்டு எழுந்திருந்தான். எழுந்திருக்கவே சகலலோகத்தாரும் ஆசீர்வாதஞ்சொன்னார்கள். தவளச்சங்கம் முழங்கின. புஷ்பமாரி எங்கும்பொழிந்தது. சபையிலேயிருந்தவர்களெல்லாம் எழுந்து போனார்கள். சீதையினுடைய ஆசையினாலே மனதழிந்து துக்காக்கிராந்தனாய் ஸ்வர்ணகஜிதமான தன்மாளிகையே போய்ச் சேர்ந்து, அவ்விடத்திலே நவரத்தினத்தினால்செய்து புஷ்பத்தினால் அலங்கரித்திருக்கிற சப்ரகோள மஞ்சத்திலே புஷ்பமெத்தையிலே தன்னுடைய ஸ்திரீகூட்டங்களில் ஒருவருமில்லாமல் தனியனாக இருந்தான். பாவியான சூர்ப்பநகி வசனப்படிக்குச் சீதையினுடைய ஸ்வரூபமானது, மனதிலே பிரவேசிக்கக் காமாக்கினி மெள்ள மெள்ளச் சரீரமெல்லாம் பரந்து நிறைந்தது. இவனுக்குத்தள்ளக்கூடாத அந்த ஆசை நூறுநூறு கோடியாய் வளர்ந்து, புஷ்பங்களைப்பரப்பி அதன்மேலே வாசனையான குளிர்ந்த பனிநீரைத் தெளித்திருக்கிற சயனமும் கரிந்துபோக அஷ்டதிக்கஜங்களை ஜெயம்பண்ணின தோள்கள்காமவியாதியினாலே மெலிந்து மனதுளைந்து ஆவிவேகிறவனானான். குளிர்ந்த சந்தனம் துளிர்கள் புஷ்பங்கள் முதலான சீதளவுபசாரங்கள் செய்கிறதெல்லாம் அக்கினிஸ்வரூபமான மருந்தினாலே வேதுபிடிக்கிறது போலாகச் சரீரமெல்லாம் மிகுந்த உஷ்ணமாய் வெந்து நெருப்பூதுகிற துருத்திபோல பெருமூச்சுவிட்டு மயங்கினான். மனது ஸ்திரமில்லாமல் ஆசையென்கிறவியாதிதலைக்கொண்டு அந்த ஸ்திரீயைக் கண்ணினாலே பார்க்கவேணுமென்கிற இச்சை மென்மேலும் மூள மிகவும்நொந்துநிலேசித்தான். திக்கெஜங்களுடைய தந்தங்கள் ஒடியும்படி வென்ற அவனுடைய காடின்னியமான மார்பிலே மரத்தைக் குடைகிற வண்டுபோல, மன்மதபாணங்கள் குடைந்து துளைக்க நொந்து மெலிந்தான். சரக்கொன்றைக்காய்க்கு நிகராகிய அளகபாரத்துடனே அலங்காரமான ஒரு புஷ்பக்கொம்பு என்மனதிலே புகுந்துகொண்டு அங்கேதானே யிருக்கக்கண்டது உண்டென்று சொல்லிக்கொண்டு துயரத்திலே அழுந்தி மிகவும் வருந்தி மன்மதபாணம்போல மல்லிகைப்புஷ்ப வாசனையுடனே தென்றல்வர அதைக்கோபித்துச்சீறி அது சகிக்காமல் அங்கேயிருந்து எழுந்திருந்து மிகவும்சிந்தாக்கிராந்தனாய் இன்னபடி செய்வோமென்கிறதும் தோன்றாமல் இரங்கிக்கொண்டு கோடி ஸ்திரீகள் இருபக்கத்திலும் தீபங்கள் வரிசையாய் ஏந்திவர, ஒரு சிங்காரவனத்திற்போய் அதன் நடுவே நவரத்தினத்தினால் செய்யப்பட்டு ஆகாசமட்டும் உயரமும, விஸ்தீரணமு முள்ளதாகிய சித்திரமண்டபத்திலே பால்போல வெளுத்திருக்கிற சயனத்திலே சேர்ந்தான். அந்தச்சோலையி லிருக்கிற புஷ்பாதிவிருக்ஷங்களில் பலா – மாணிக்கம் போலவும், வாழை–மரகதம்போலவும், தேமா–வச்சிரம்போலவும், வேங்கை–பொன்போலவும், கொங்கு–பத்மராகம்போலவும், காஞ்சு–நீலம்போலவும், ஜாலம்–குருவிந்தம்போலவும், தே

பட்டான். அவனைப்போல எத்தனைபேர் என்னென்ன கேடுகெட்டார்கள். மகாலக்ஷுமிக்குச் சமானமாகிய எத்தனை ஸ்திரிகள் உன்பாக்கியத்துக்கு ஹானியாய் உன் வீட்டிலிருக்கிறார்கள். அப்படியிருக்க இந்த அகிர்த்தியத்தையுஞ்செய்தாயேயாகில் பாவமும் பழியுமல்லாமல் வேறொன்றும் வாராது வாராது அந்த ராமனென்கிறவனை யாரென்று நீ நினைத்திருக்கிறாய் இந்த லோகங்களையெல்லாம்பெற்ற ஸ்ரீமகாவிஷ்ணுவே ! அவன் அவனுடைய கையிலிருக்கிற பாணங்கள் மகாரிஷிகள் சாபத்துக்குச் சமானமாயிருக்கின்றதுகள். அதுகளினால் உன் தம்பிமார்களையும், உங்கள் குலத்தையும், முடித்துவிடுவான் உன்தம்பி கரன் உன்னிலும் அதிகபலமுஞ் சேனையுமுள்ளவனாயிருந்தான். அவனையே ஒருவில்லினாலே கொன்றானென்றால் மற்றவர்களைக் கொல்லுகிறதைக் குறித்து ஒருத்தர் சொல்லவேணுமா ! மகாவீரனை விராதன்முதலானவர்களெல்லாம் அவன் அம்பினாலேமடிந்துபோனார்களே, இனி நம்முடையவர்களிலே யார் பிழைத்திருக்கப்போகிறார்களென்று அதை யென்மனதிலே நினைக்குந்தோறும் வருத்தப்பட்டுக்கொண்டே யிருக்கிறேன். அப்படியிருக்க நீ யிந்தவார்த்தையைச் சொல்லிப் பின்னும் அதிகதுக்கமுண்டாக்கினாய், மிகுந்த பலசாலிகளெல்லாம் அந்தராமன் கையினாலே மாண்டுபோனார்கள் நீயும் அப்படி மாண்டுபோகிற காரியஞ்செய்யவேண்டாம் நான் நூறுதரஞ் சொன்னதாகவெண்ணி அதுசெய்யவேண்டாம். செய்தால் பிழைக்க விதியுண்டாக மாட்டாது. தாமந்தப்பி அரசாண்டவர்களெல்லாம் அதோகதியாய்ப்போனார்கள். என் தம்பிக்கும், என் தாயாருக்கும், ஒரு அம்புவிட்டகோதண்டராமனுக்கும், அவன்தம்பிக்கும், என்னுடைய ஆண்மையடங்கி யென்மனது இன்னம் நடுங்குகின்றதே ! சராசரங்களெல்லாம்நிலையற்று அழிந்துபோமென்கிற மெய்ம்மையை அறிந்த நீ இப்படிப்பட்ட பொல்லாங்கு ஒன்றும்நினையாமல் என்வார்த்தையைக்கேட்டு என்றைக்குஞ் சாம்பிராச்சியத்துடனே சுகமாயிரென்று சொன்னான். அப்போது ராவணன் கங்காதரனை சிவனை கைலாச பர்வதத்துடனே ஒருகையினால் தூக்கியெடுத்த என்னுடையதோளாண்மை ஒரு அல்பமனிதனுக்கு இளைக்கிறதாகச் சொன்னாயல்லவாவென்று கண்களில் நெருப்புப்பொறிபறக்க புருவம் நெற்றிமேலேற விழித்துப்பார்த்து நீ நடந்த காரியத்தையும் நினைத்துப் பார்க்கவில்லை. என்னுடைய புஜபலத்தையும் பயமில்லாமல் இகழ்ச்சிசெய்தாய். என் தங்கை மூக்கை யறுத்தவர்களையும் ஸ்துதிசெய்தாய். இதற்கு உன்னை ஆக்கினை செய்யவேணும், ஆகிலும் இந்த ஒருபிழை பொறுத்தேனென்று ராவணன் சொன்னான். தன்னைக் கோபித்துக்கொண்ட கரோனை மாரீசன்பார்த்து பின்னுங் கோபஞ்செய்வானென்று அஞ்சாமல் நீ யிந்தக்கோபம் என்மேலே செய்தல்ல, உன்மேலும் உன்குலத்தின் மேலுங் கோபஞ்செய்தாயப்பாவென்று சொல்லி, மற்றொரு வார்த்தைசொல்லுகிறான். நீ யொருமலையெடுத்ததையல்லவோ அதிசயமாகச்சொல்லுகிறாய் அதை யொருபொருளாகநினைக்கவேண்டாம், சிவன்கையிலேயிருந்தவில் அந்த மகாமேரு பர்வதமாமல்லவோ ! அந்தப் பர்வதத்தை ஒடித்த சப்தம் அண்டங்களெல்லாம் கேட்டு நடுங்கிற்று. அதுமாத்திரமா ! அதிலும் அதிகபலமா யுயர்ந்திருக்கிற வில்லென்கிற மலையை நீ இதைவளையென்று மகாபராக்கிரமசாலியான பரசுராமன் கொண்டுவந்துகொடுக்க, அந்தமலையையும்வாங்கித்துவளும்படி அவன்வளைக்கவில்லையா ! நீ யாதொன்றும் அறியாய். சொல்வதுங்கேளாய். ராமன் யுத்தத்தைக்குறித்துத் தும்பைமாலை தரியாததற்குமுன்னே உன்னுயிர் கொள்ளையாய்ப்போகும். அந்தராமனுடைய பெண்சாதியான சீதையை ஸ்திரீ ஸ்வரூபமென்று எண்ணாதே ! அவள்தான் ராக்ஷதர்கள்செய்த தீவினையென்று அறிந்துப்பிழை உன்குலத்தோடே சுகமாயிருப்பாய். மனதில் அந்த ஆசையை வைத்திருந்தாலும் இனி நினையாமல் விட்டுவிடு. என்னுடையவுயிர் அஞ்சிநடுங்குகின்றது. எப்படிப்பட்டவனானாலும்கூட இருக்கிறவன். விஷத்தைக்குடிக்கிறேனென்றால் அது நல்லதுதா னென்று சொல்லுவானா ! அப்படிச் சொல்லுகிறதுதான் அவனுக்குக்கமலாசன்முதலான சகலதேவர்களுடைய லோகங்களையும் ஒரு இமைப்பொழுதிலே ஜெயிக்கத்தக்கதுகளாய் விஸ்வாமித்திரர் கொடுத்த திவ்விய ஆயுதங்கள் பிரதிபில்லாமல் அந்தராமனிடத்திலே அவன்சொற்படிகேட்டுக்கொண்டிருக்கின்றதுகள். ஆயிரங்கைகளையுடைய அதிகபராக்கிரமமுண்டான கார்த்தவீரியனை மழுவாயுதத்தினாலே ஒருகொடிப் பொழுதிலே பிராணனை வாங்கின பரசுராமனுடைய பலத்தையெல்லாம் வில்லுடனே கிரகித்துக்கொண்ட அந்த ராமனுக்கெதிரே நாமா ? நிற்கமாட்டுவோம், காமவிஷந் தலைக்கேறி அந்த வேதனையினாலே சரீரமும், புத்தியும், இளைத்து இந்தக் கெட்ட வார்த்தைசொன்னாய். இது மிகுந்த பொல்லாங்குவருகிற காரியம், உனக்கு நான் அம்மானும், வயதில் மூத்தவனுமானபடியினாலே இதைச்சொன்னேன். இந்தக் காரியத்தை விட்டுவிடு அப்பாவென்று மாரீசன் சொன்னான். இவ்வளவு வார்த்தைகளையும் எவ்வளவோ யோசனைசெய்து யுக்தமாகச்சொன்ன மாரீசனைப்பார்த்து ராக்ஷசாதிபதி அதிக கோபத்துடனே ஒருவார்த்தை சொல்லுகிறான். உங்கள்தாயைக் கொன்றவனுக்கு நீ பயந்து கிலிபிடித்துப் பேசுகிறாய், இப்படிப்பட்ட பயல்தனை நீ யாருக்குத்தான் என்ன கதைக்காகப் போகிறாய். திக்கஜங்களைத் தந்தங்கள் முறித்து ஓடியொளிக்கும்படி ஜெயஞ்செய்து தேவர்களெல்லாம் தங்கள் தங்கள் நிலைகெட்டுப்போய் எளியவர்களாகச்செய்து, யமலோகத்திலேயும் புகை யெழும்பும்படி செய்து ஏகசக்கிர மாகத் திரிலோகங்களையும் ஆள்கின்ற என்னை தசரதன் பிள்ளைகள் ஜெயஞ் செய்வார்களென்று சொல்லுகிற உன் புத்தி நல்ல புத்தி. மூன்று லோகத் துக்கும் நாயக மான ஆதிபத்தியம் சம்பாதித்தேன். எனக்குச் சத்துருக்கள் அகப்பட்டால் அதற்கு மிஞ்சினநன்மை வேறே யிருக்கிறதா ! நீதான் சொன்னபடி நடந்துகொள்ள வேணுமே



யல்லாமல் எனக்கு மந்திராலோசனைகள் சொல்லத்தக்கயோக்கியம் உனக்குண்டோ ! என்சொல்லை மறுத்து உத்தரஞ்சொன்னால் உன்னை யிந்த வாளினாலே வெட்டியெறிந்து, என்மனக்குறையை முடித்துக்கொள்வேனேயல்லாமல் விடத்தக்கதில்லை. நீ யின்னஞ் சிலநாள் இந்தப்பூமியிலே சீவனுடனே யிருக்கிறவனானால் எனக்குவெறுப்புண்டாக்குகிற இந்த வார்த்தையைவிட்டு, என்மனதின்படி நடந்துகொள்ளென்று ராவணனென்பவன் சொல்ல, மாரீசன் அடங்கி ஆராகிலும் உலகத்திலே செருக்கியநெஞ்சுண்டானவர்கள் உடனே கெட்டுப் போவார்களென்கிறது தத்துவமல்லவோ ! ஆகையால் மனச் செருக்கினாலே பிராணனை போக்கடித்துக்கொள்ளுகிறவர்களையாராலே திருத்தக்கூடுமென்று மனதிலெண்ணிக்கொண்டு, உருக்கிய செம்புநீர் போலக் கொதிப்பாய்ச்சொல்லுகிறான். ஐயா உனக்கு உறுதி யுண்டாக வேணுமென்று இத்தனையுஞ் சொன்னேனேயல்லாமல், என்பிராணன்போய்விடுமென்று பயத்தினாலே சொல்லவில்லை. ஒருவனுக்கு நாசகாலம்வந்து நேரிட்டால் அப்போது நல்லதும் பொல்லாததாய்த்தான் போம். அல்ப குணத்தையுடையவனே நான்செய்யவேண்டியதுதான் என்ன அதைச்சொல்லென்றான். அப்படி மாரீசன்சொல்லவே ராவணன் எழுந்திருந்து அவனை மார்புடனே யிறுகக் கட்டிக்கொண்டு கோபத்தைவிட்டு, சந்தோஷமாய்ப் பர்வதம்போலக் குவித்ததோள்களையுடைய என்மாமா, மன்மதனுடைய அக்கினிசொரூபமாய் உஷ்ணிக்கின்ற அஸ்திரத்தினாலே சாகிறதைப்பார்க்கிலும், அந்த ராமனுடைய அம்பினாலே சாகிறது புகழல்லவா ! குளிர்ந்த தென்றற்காற்றையும் எனக்குப் பகையாக்கின அந்தச்சீதையை எனக்குக் கொடுவென்றுசொன்னான். அப்படிராவணன்சொல்ல, பூர்வத்தில் இரண்டு ராக்ஷசர்களுடனே கூடத் தண்டகாரணியத்திலே நான் பிரவேசித்தபோது அவனுடைய சரங்கள் வந்துபாயக் கூடவந்த தம்பிமுதலான துணைவர்கள் உருண்டுபோக, அதைக்கண்டு பயந்து என்மானம் அழியஓடிவந்த நான்செய்கிற காரியமென்ன இருக்கின்றது ! நீசொல்லென்று மாரீசன் கேட்க, ஐயா உன்தாயைப் பிராணனை வாங்கினவனைக் கொல்லுகிறதற்கு நானிருக்கிறேன். நீ வஞ்சனையாக மாயை செய்தால் அந்தச்சமயத்தில் சீதையையெடுத்து வரலாமென்று ராக்ஷசாதிபதியாகிய ராவணன் சொல்ல, அதற்கு அந்தராமனுடைய தேவியை வஞ்சனைசெய்து கொண்டுவருகிறது நமக்குக் கௌரவக்குறைவாகும். ஆகையால் சேனைசமுத்திரத்துடனே போய் அவனைச்செயித்து அப்பால் எடுத்துவந்தால் உனக்குப் பிரதிஷ்டையுண்டாகுமென்று மாரீசன் சொன்னான். அவ்வார்த்தையைக் கேட்டு ராவணன் நகைத்து அதிசயித்து மனிதனைக் கொல்லுகிறதற்குச் சேனையும் வேணுமா ! என்கையிலிருக்கிற இந்தவாளேபோதாதா ! அந்தமனிதனைக்கொன்றால் சீதை தனியாயிருக்கிறவளல்ல. அவர்களுடனே கூட இறந்துபோவாளே ஆசையினாலே உபாயமாய் மாயஞ்செய்து கொண்டுவரவேணுமென்று சொன்னான். அந்தச் சீதாதேவியைத் தீண்டாததற்கு முன்னமே ராமனுடைய பாணம்வந்து, இவன்தலையை அறுத்துவிடுமென்று இவனுக்குத் தெரியப்படும்படி புத்திசொன்னனைக்கும் இந்தக்கேடுவந்ததல்லவா! விதியைவென்றவர்கள் யாரிருக்கிறார்கள் இவன்சொன்னபடியே கேட்டுத் தீர்வோமென்று, மனந்துணிந்து எண்ணிக்கொண்டு, நான் என்னமாயஞ் செய்யவேண்டியது ! சொன்னால் அப்படியே செய்கிறேனென்று மாரீசன்சொல்ல, பொன்மானாக ரூபமெடுத்துப்போய் அந்தச்சீதைக்கு ஆசையையுண்டாக்கென்று ராவணன்சொல்ல, அவ்வண்ணமேசெய்கிறேனென்று சம்மதித்து மாரீசன்போனான். மின்னலைப்போலப் பிரகாசிக்கின்ற வாளாயுதந்தரித்திருக்கிற ராவணனும் வேறொருவழியாய்ப்போனான். முன்னாளிலே அவர்கள் வில்லினுடைய பலத்தை அறிந்திருக்கிறபடியினாலே தானாய் ஒருமாயஞ்செய்யாமல், பொன்மானாகரூபமெடுத்துப்போவென்று சொன்ன ராவணன் பலத்தினாலேபோன மாரீசன், தன்சுற்றத்தானாகிய ராவணனுடைய கொடுமையை நினைத்துத்துக்கித்தும் ராமலக்ஷுமணர்களாகிய வீரர்களுடைய பலத்தைக்குறித்து அஞ்சியும், நஞ்சுகலந்த குளங்களிலே யிருக்கிற மீனைப்போல நெருக்குண்டு மாறி, அந்தராமனிடத்திலே பூர்வத்திலொருதரமும் நடுவே விஸ்வாமித்திரர் யாகத்தில் ஒருதரமும் யுத்தஞ்செய்து சாகாமலிருந்தவன், மூன்றாந்தரத்திலே முடிந்துபோகிறவனாய் எத்தனித்து ரகுகுலோத்தமன் எழுந்தருளியிருக்கிற வனத்திலேபோய் தன் சரீரகாந்தியானது பூமியையும் ஆகாசத்தையும் மிகவும் பிரகாசிக்கச்செய்வதாகிய பொன்மானுருபமெடுத்து, சீதாலக்ஷுமியைத் தேடிக்கொண்டு நடந்தான் அப்போது இத்தகுதமான மாயமானைக்கண்டு ஆரணியத்திலிருக்கிற, கலைமான்முதலானதுகளெல்லாம் அதிக ஆசையுடனே வஞ்சனையாய் மனதிலே நேசமில்லாமலிருக்கின்ற விலைமாதர்களாகிய தாசிகளிடத்திலே, ஆசைவைத்துச் சேருகிறவர்கள்போல, மாயமென்கிறதை யறியாமல் இனமென்றெண்ணிக் கூடித் தொடர்ந்து வந்ததுகள். இப்படி அதிக அழகுடனேவருகிற பொன்மானைப் புஷ்பங்கள்பறிக்கிற நிமித்தியமாய் வெளியேவந்து, வனசிங்காரங்களைப் பார்த்துக்கொண்டிருக்கிற வைதேகியான சீதாபிராட்டி, மிகுந்த ஆயாசப்படுவதற்கு ஏதுவாயிருக்கிறவர்கள் சொப்பனத்திலே ஒருவருமறியாத விபரீதத்தைக் கண்டதுபோல, முன்பு ஒருவரும் படாதபாடு இனிமேற்படப்போகிறவ ளாகையால் தன் கண்ணினாலே கண்டாள். காணவே இது வஞ்சனையென்றறியாதவளாய் அதனிடத்திலே மிகுந்த அபேக்ஷைகொண்டாள். இனிமேல் அதுமுகமாக ராவணன்சாகவும் அதினாலே பூமியெல்லாம் பரிபாலனமாகவும் இருப்பதனால், பாலசந்திரனைப்போல நெற்றியையுடைய ஜானகிக்கு, அந்தப் பொன்மானின்மேல் ஆசையானது முற்றிப்பெருக எனக்கு இதைப்பிடித்துக் கொடுக்கவேணுமென்று நாயகரிடத்தில் சொல்லுவேனென்று எண்ணிக்கொண்டு, துரிதமாய் நடந்து தன்பிராணநாதனாகிய விஜயராக

வனுக்குச் சங்கீதத்திலேவந்து, சுவாமி ! சொர்ணமயமான சரீரமுடையதாய் ஆகாசமெல்லாம் பிரகாசிக்க, காதுங் கால்களும் மாணிக்கமயமாக ஒருமான் வந்திருக்கின்றது. தாங்கள் வந்து அதைப்பாருங்களென்று கைகளினாலே தொழுது, அதிக பிரியத்துடனே சொன்னாள். அப்போது இப்படிப்பட்டமான் பூமியிலே உண்டாவென்று கொஞ்சமாகிலுஞ் சித்தத்திலே எண்ணாமல், ஜானகியினுடைய வார்த்தையைக்கொண்டு பிரமதேவனுக்குப்பிதாவாகிய ஸ்ரீராமர் அந்தமானினிடத்தில் ஆசையானார் அதையறிந்து லக்ஷுமணர் சுவாமி ! காயம் ஸ்வர்ணமயமாயும், மற்றக் கால்-செவி-வால் முதலாகிய அவயவங்களெல்லாம் ரத்னமயமாயும், உயிருடனே பாய்கிற மான் எங்கேயாகிலும் உண்டா ! அல்லவென்று உண்டாகிவந்தால் அதை ராக்ஷதருடைய மாயமென்றுஎண்ணவேணுமேயல்லாமல். மெய்யாகிய மானென்று எண்ணலாமா ! என்மனதுக்கு ஐயமாயிருக்கிறதென்று சொன்னார். அதற்கு ஸ்ரீராமர் தம்பி பூலோகத்திலிருக்கிற ஜீவஜெந்துக்களை யெல்லாம் அறிந்திருக்கிறார்கள், பல்லாயிரகோடி பாக்கியிருக்கிறபடியினாலே இல்லாததில்லை. நீ யேன்னென்று யோசனைசெய்கிறாய் ! சரீரமெல்லாம் பொற்பிரகாசமாகிய அன்னங்கள் உற்பத்தியாயிருந்ததையறியாயா ! ஸ்வரூபங்களுக்கு ஒரு பிரமாணமுண்டா ! இப்படியுமிருக்குமென்று லட்சுமணருடனேசொல்ல, அப்போது சீதை சுவாமி நீர்பேசிக்கொண்டிருக்கிறதற்குள்ளே அது எங்கேயாகிலும் ஓடி மறைந்துபோய்விடுமென்று மனது வருந்திச்சொன்னாள். சீதையின் மனதை அறிந்து ரகுராமர் அதுஎங்கே காண்பியென்று நடந்தார். லட்சுமணர் தம்முடைய மனதிற்குச் சமாதானமில்லாமையால் அவர்பின்னே தொடர்ந்தார். அச்சமயத்தில் தள்ளப்படாத வினை இதுதானென்று எண்ணும்படி ! ஆகஸ்மீகமாய்ப் பொன்மான் எதிரேவந்தது. அதுவந்துநின்று இவர்களைப்பார்த்து, மருள மருளவிழித்தது. அப்படிப்பார்த்த மானைப்பார்த்து ஸ்ரீராமர் தம்முடைய அதிகோசரமான அறிவினாலே ஒன்றும் யோசனைசெய்து பாராமல், இது மாயமானல்ல சுபாவ மானல்ல மான்தானென்றுகொண்டார். அவர் திருப்பாற்கடலிலே சேஷசயனந்தைவிட்டு நீங்கி அவதாரஞ்செய்தது, தேவர்கள்செய்த பாக்கியமல்லவா ! அது பழுதாய்ப்போகுமா ! ஆசையினாலே அந்த மானைநோக்கி மிகவுஞ் சந்தோஷமாய்த் தம்பி ! இதற்குச் சமானம் எதைச்சொல்லலாம் பார் ! இது தனக்குத்தானே சமானமல்லாமல் இதற்கு வேறே உபமான முண்டாயிருக்கிறதாகச்சொல்லக்கூடாது. நெருங்கியிருக்கிற பச்சைப் புல்லின்மேல் ஆணிமுத்துக்கள் இறைந்திருக்கிறதுபோல, பிரகாசமான பசும்பொன்மேனியின்மேலே வெள்ளைப்புள்ளி பரவியிருக்கின்றது. இதனுடைய நேர்த்தியானவடிவத்தைக்கண்டு மனமுருகிப் பறக்கிற பக்ஷிகளும், ஊர்கிற ஜெந்துக்கள் முதலானதுகளும், விளக்கைக் கண்ட விட்டில்போல மயங்கி ஓடிவருகின்றதுகளே. இதைக் கண்டால் ஸ்திரீகளிலாவது, புருஷர்களிலாவது, ஆர்தான் இச்சைப்படாமலிருப்பார்களென்று ஸ்ரீராமன்சொல்ல, இதுவரைந்தானேயென்று சித்தமாய் மனதிலறிந்துகொண்டிலட்சுமணர் ஸ்வாமி ! எப்படியானாலும் ஆகின்றது. நாம் வந்தோம் அதிசயமான பொன்மானைக்கண்டோம். இனி இவ்விடத்தில் நமக்கு என்னகாரியம் ! நம்முடைய ஸ்தானம்போய்ச் சேர்கிறதே உத்தமமென்று சொன்னார். அப்படிச் சொல்லும்போதுதானே சீதை ராமனைப் பார்த்து, சுவாமி இந்தமானை எனக்குப்பிடித்துக்கொடுத்தால் அடியேன் பட்டணத்திலே விட்டுவந்த, கிளி முதலானதுகளைமறந்து சந்தோஷமாய் விளையாடிக்கொண்டிருப்பேனென்று, மிகுந்த அன்புடனே சொன்னாள். அவ்விதமாகச்சொல்லவே ஸ்ரீராமர் அதைப்பிடிக்கிறதற்குப்பிரயத்தனப்பட்டார். அப்போது தெளிவுண்டான தம்பி ரக்ஷகர்த்தாவான தன்னுடைய தமையனைப் பார்த்து, சுவாமி ! இதுராக்ஷதர்களுடைய வஞ்சனையே மானல்ல, அதுவும் தங்களுக்குப் பின்பு தெரியுமென்றுசொன்னான். அதற்கு ஜெகந்நாதனான ஸ்ரீராமர் தம்பி ! இந்தப் பொன்மான் நீசொல்லுகிறபடியே மாயமானானால், நம்முடைய பாணத்தினாலே மடிந்துபோகிறது. மடிந்தால் ராக்ஷதர்களைக் கொல்லுகிறோமென்றுதான் நாம் ஒரு சங்கல்பம் செய்துகொண்டிருக்கிறோமே அந்தக்கடன் கழித்தவர்களுமாகின்றோம். மெய்யாகிய மானானால் பிடித்துக்கொள்ளுகிறோம். இப்படி இரண்டுவிதமும் நல்லதாயிருக்கப் பொல்லாதென்று ஏன்சொல்லுகிறாயென்று தேவர்களுடைய துன்பங்களை யெல்லாம் நிவர்த்திசெய்கிற நிமித்தம் அவதரித்திருக்கிற தேவராஜன்சொல்ல, அதற்கு ராமாநுஜராகிய லக்ஷுமணர் சொல்லுகிறார் இந்தமானை முன்னேகாட்டிப் பின்னே யாரிருக்கிறார்களோ ! அதுவும் அறியோம் இப்படி மாயம் செய்துகொண்டு ராக்ஷதர்கள்வரவேண்டிய காரியம் என்னவென்றும் தெரிய இல்லை, அபிபாதகாரியத்திலே பிரவேசிக்கலாகாதே அதினும் பெரியவர்களெல்லாம், சாஸ்திரத்திலே தள்ளியிருக்கிற இத்தவேட்டைத்தொழிலைச்செய்கிறது கீர்த்தியுடையதல்லவே, ஆதலால் இதை விடுத்துகிறதேயுக்தம் கீர்த்தியும் அதுவேயென்று சொல்ல. ராக்ஷதர்கள் நம்மிடத்தில் பகையாயிருக்கிறார்களென்றும் அன்றியும் அநேகரென்றும், மாயத்தில் மிகுந்தவர்களென்றும், என்னைப் பூண்டவிரதத்தை விட்டு விட்டால், அன்னவருக்கும் தகைப்பாயிராதா ! ஆகையால் இந்தக்காரியம் செய்கிறதே மகாஉத்தமமென்று, சதுர்முகப் பிரமாவினுடைய தந்தையான மாயக்கூத்தன் சொன்ன், அந்தச் சுவாமி சுபாமானகாரியமானாலும் எண்ணிப்பார்த்துச் செய்கிறது யுக்தமல்லவா ! அடியேன் இந்தமானின்பிறகே தொடர்ந்துபோய் இந்த மானை நமக்கு எதிரேவிட்டு, பின்னேயிருக்கிறவர்கள் அநேகரானாலும் என்வில்லில் அஸ்திரங்கள்தொடுத்து, எல்லாரையும் சங்கரித்து இந்தமானையும் கொன்றுவிட்டு வருகிறேன். அதல்லாமல் மெய்யாகியமானேயானால் பிடித்துவருகிறேனென்று லட்சுமணர் சொல்ல, அப்போது அன்னத்துக்குச் சமானமாகிய சீதாபிராட்டியானவள்



அமிர்தம் பொழிகிறதுபோல, சிவந்த வாயினால் மழலைச் சொல்லாகக் கிளியைப் பார்க்கிலும் மதுர முண்டாகக் குழறிப் பேசி அங்கலாய்த்து சுவாமி ! தேவரீர்தானே தொடர்ந்து போய்ப் பிடித்துக் கொடுக்கவேணும், அப்படிச்செய்ய இல்லையேயென்று நீலோற்பல புஷ்பத்துக்குச் சமானமான கண்களிலிருந்து முத்துகள்போல நீரைச்சிந்தி, சீறினவளாய்ப் பர்ணசாலையை நோக்கி நடந்தாள். அப்படிக் கோபத்துடனே நடந்துபோகிற சீதையைக்கண்டு பரமபுருஷன் லக்ஷுமணனைப்பார்த்து, அப்பா ! இந்தமானை நானே பிடித்துக்கொண்டு சீக்கிரத்திலேவருகிறேன். சீதையைக் காத்துக்கொண்டிருவென்று அம்பும் வில்லுங் கையில் வாங்கிக்கொண்டு நடக்கத்தொடங்கினார். லக்ஷுமணரானவர் முன்னுள் விஸ்வாமித்திரர் யாகத்திலே தாடகை ஒருத்தி அவள் பிள்ளைகள் இருவர் ஆகிய மூவரில் ஒருவனான மாரீசன் என்பவன் மடிந்துபோகாமல் ஓடிப்போனானே அவன்தான் இவனென்று எனக்குத் தோன்றுகின்றது. நல்லது இன்னமும் பார்க்கப்போகிறீர்கள் போய்வாருங்கள் என்று இரண்டுகையும் கூப்பி நமஸ்காரம்செய்து திரும்பிவந்து சீதாதேவியிருக்கின்ற பர்ணசாலையைக் காத்துக்கொண்டு ஒருபுறத்திலே நின்றார். அப்போது பர்வதசிகரத்துக்கு ஒப்பாகிய சுந்திரத்தோளினையுடையபெரிய பெருமாள், இளையபெருமாள், சொன்ன யோசனையை மனதிலே எண்ணாமல் பூர்ணசந்திர முகியான சீதையினுடைய கோபத்தையே பெரிதாக எண்ணினவராய்த் திருப்பவளவாயிலே நகைப்புத்தோன்ற மானைத்தொடர்ந்தார். அந்தமானானது மென்மையுள்ளப் பூமியையிடித்து வெறித்துப்பார்த்துப் பயந்ததுபோல உயரக்குதித்து, காதுகளைநெறித்து, நீட்டி குளம்புகளுண்டான கால்களைச்சேரவைத்து எழும்பி, வாயுகதி, மனோகதி, முதலான கதிகளுக்கெல்லாம் வேறுகதி காட்டுகிறது போல, துள்ளித்துள்ளி, தாண்டித்தாண்டி, பாய்ந்து பாய்ந்து, ஓடிற்று. அக்கருணத்தில் மூன்றுலோகத்தையும் நின்றபடியே அளந்த திருவடிகளையுடைய திருவிக்கிரம ஸ்வரூபனானவன் அந்த மானின் பிறகே தொடர்ந்துபோன வேகத்தை நாம்சொல்லுகிறது எப்படி. அவன் பிரவேசியாத அண்டமும் வேறேயிருக்கின்றதா ! சகல அண்ட சராசரங்களிலேயும் நிறைந்திருக்கின்ற தன் சர்வாந்தரியாமித்துவத்தை அன்றையத்தினம் [illegible]யக் காட்டினானென்று சொல்லலாமே யல்லாமல் [illegible]ம் இந்த திரிச்சலேக்குறித்து எளிதாகச்சொல்லக்கூடாது. அந்தமாயமான் பர்வதத்தின்மேல் தாம் [illegible] அங்கேயிருந்து மேகக்கூட்டத்தின்மேல் குதிக்கும். [illegible]க்கும் கூடத் தொடர்ந்துபோனால் அப்பால் போய்விடும். சற்றே தாமதமாயிருந்தால் கையினாலே தீண்டிப் பிடிக்கலாம் என்னும்படி நிற்கிறதுபோல இருந்து ஓடிப்போம். இப்படியாக அது திரவியங் கொடுக்கிறதற்குத்தந்த்ராக் கேளிக்கிற வேசிகள் மனதுபோல ஜாலம்செய்தது. அப்போது ஸ்ரீராமர் இதனுடையவடிவமும் வேறு, இச் செய்கையும், வேறாயிருக்கின்றது. ஆகையால் தம்பி இந்தகருத்தை முன்னமே அறிந்து நமக்குச் சொன்னான். நாம் ஆராயுமிடத்திலும் ராக்ஷதர்செய்த மாயந்தான் மானாய்வந்ததென்று வருத்தத்துடனே திருவுளத்திலே நினைத்தார். அந்தநினைவை ராக்ஷதனாகிய மாரீசன் அறிந்து இனி பிலர்பிடிக்கிறோமென்கிற யோசனைசெய்கிறதில்லை. எப்படியுங் கொல்லுவாரென்று நினைத்துக்கொண்டு அதிவேகமாக ஆகாசத்திலே எழும்பினான். அந்தக்ஷணத்திலே தம்முடைய சக்கரத்துக்குச்சமானமாகத் தடைசெய்யப்படாத பிரகாசமுண்டாகிய ஒருபாணத்தை வில்லிலே அநுசந்தானம்செய்து இவனெந்தலோகம்போனாலும் இவனுடையபிராணனை வாங்கென்று ஆக்கியாபித்து விட்டுவிட்டார். நீண்ட அலகுண்டானதான பாணம் அந்த மாரீசனுடைய வஞ்சம் நிறைந்திருந்த நெஞ்சிலேபட்டு உருவியது. அந்தச்சமயத்தில் கோரதந்தங்களையுடைய வாயினாலே அண்டகிக்கிலும் அப்பாலுங் கேட்கும்படிக் கூப்பிட்டழைத்து ஒரு பர்வதம்போல விழுந்தான். பொல்லாத தன் சுயரூபத்துடனே அந்த ராக்ஷதன்விழவே ரகுநாயகர்பார்த்து இது மெய்ம்மானல்ல பொய்மானென்று சொன்ன தம்பியைக் குறித்து என் ஐயன் கெட்டிக்காரன். என்பிராணனுக்கு ஒப்பானவன் கெட்டிக்காரன். நான்பிழைக்கும்படி வந்தவன், மிகவும் கெட்டிக்காரனென்று திருவுளத்தில் எண்ணிக்கொண்டாடினார். திசைகள்மட்டும் நீண்ட ஸ்தூலகாயத்துடனே அலறிக்கொண்டேவிழுந்த சண்டாளனுடைய சரீரத்தைப்பார்த்து விஸ்வாமித்திரர் வேள்வியிலே வந்த மாரீசன் இவனென்றும் அறிந்தார். இந்தப் பாவியானவன் பாணம்பட்டவேளையினால் நம்முடைய குரல்போலக் கூப்பிட்டழைத்தானே, அந்தச் சத்தம் கேட்டுச் சீதை திகைப்பாளே என்பதாய்த் திருவுளம் வருந்தினார். உடனே இப்போது மாயையென்று நாம்கண்டறிந்த மாரீசனை முன்னமேதானே நம்முடைய தம்பி அறிந்து சொன்னவனானபடியினாலே, சீதைக்கு நலந்தேறச்சொல்லித் தேற்றுவானென் றெண்ணித் தம்முடைய மனதைத்தேற்றிக்கொண்டு இந்தமாரீசன் சாகிறதற்கு ஏதுவாகி வந்தான். இப்படிவரவேண்டிய காரியமும், யோசனையும், வேறேயிருக்கும்; அதற்கு ஏதுவாயிருக்கிறதே இந்தப் பாவிவஞ்சனையாக அழைத்துக்கொண்டுவிழுந்ததும்ஒன்றுபட்டாயிருக்கின்றதே, ஆகையால்நாம் இங்கேதாமசமாயிருக்கிறது யுக்தமல்லவென்று சீக்கிரமாகத்தேவநாயகரானவர் திரும்பினார்களுங்கூடத்துக்குப்பாகியசாமனசொருபரான ஸ்ரீராமருடையசமாச்சாரம் இப்படியிருந்தது.

மாரீசன்வதைப்படலம் - முற்றிற்று.

## ஜடாயுவதைப் படலம்.

பரிமளமுண்டாகிய புஷ்பத்தை முடித்த அளகத்தையுடைய பாரிஜாதப் பூங்கொம்பை ஒத்த சீதாபிராட்டி அந்தமாரீசன் குரல்கேட்கவே, குயிலானது பூமியிலே விழுந்ததுபோல ஆலந்துளிர்போலிருக்கிற வயிற்றைப் பிசைந்துகொண்டு விழுந்து, அழுது, மயங்கி, இந்தமானைப் பிடித்துக்கொடுமென்று சொல்லிப் புத்தியில்லாத

நான் என்வாழ்வை முடித்துக்கொண்டேனென்று இடி
யோசையைக்கேட்டநாகம்போலப்புரண்டுஏங்கித் தூரத்
தில் எதிரே நிற்கிற லக்ஷ்மணனைப்பார்த்து கலியாண
குணபிராமனுன என் நாயகர் ராக்ஷதன்செய்த மாயையி
னுலே பூமியிலே விழுந்தாரென்று தெரிந்தும், அவரு
டைய தம்பியாகிய நீர் இவ்விடத்திலே யிருக்கலாமாவெ
ன்று சொன்னுள். அதற்கு லக்ஷ்மணர் அம்மா ! இந்த
லோகத்திலே ஸ்ரீராமருக்கு மிஞ்சின பராக்கிரமசாலிக
ளும் இருக்கிறார்களென்றுசொல்லலாமா ! தேவரீர்பெ
ண் பிறப்பானபடியினுலே இப்படிச் சொன்னீரென்று
சொல்லி, பின்னும் உண்மையானவார்த்தை சொல்லுகி
றார். சப்தசமுத்திரம், சப்தலோகம், சப்தகுலபர்வதமு
தலான இடங்களில் உள்ளவர்களுடைய சொல்பமாகிய
ஆண்மைக்கு ஸ்ரீராமருடைய ஆண்மை குறைவுபடுமோ !
மேலும் அவர் கோபித்துக்கொண்டால் பிருதிவி - அப்
பு - தேயு - வாயு - ஆகாசமாகிய பஞ்சபூதமும் நிலைகல
ங்கிப்போகுமே, மேகஸ்வரூபமும், கமலநேத்திரமு மு
டையஎன்தமையனுரை ஆரென்று எண்ணி இவ்விதமா
கக் கிலேசத்திலே மூழ்குகிறீர். ராக்ஷதர்களுக்கு இடை
ந்துதோற்று வருத்தமுற்று ஸ்ரீராமர் இப்படி யழைப்பா
ரா ! அப்படியாகிற காலத்திலே இந்தப் பிர்மாண்டங்க
ள் மேல்கீழாகப் புரண்டு உடைந்து பிர்மாமுதலான ச
கலருடைய உயிரும் வெந்து நீயுமே! நான் சொல்லவே
ண்டியதென்ன ! பூலோக சொர்க்கலோகங்களை உபத்தி
ரவஞ்செய்த திரிபுராதிகளை எரித்த சிவனுடைய கைவி
ல் எம்பெருமானுகிய ஸ்ரீராமனுடைய பலத்தைச் சகிக்
கமாட்டாமல் தானே முறிந்தது. அது நீர் அறியீரா !
ரக்ஷககர்த்தாவான என்தமையனுர் நீர் நினைத்தபடியே
யானுல் இந்த மூன்றுலோகமும் முடிந்துபோகும். தே
வர் முனிவர் முதலான சாதுக்களெல்லாம் மாண்டுபோ
வார்கள். தர்மமும் ஜீரணித்துப்போய்விடுமே. விசேஷி
த்து என்னசொல்லுகிறது. மாயமாய்வந்த மானின்மே
ல் ராமபாணம்பட அதுவிழுந்து பிராணன்போகிற சம
யத்திலே அந்தமானுன ராக்ஷதன் இப்படி வஞ்சனை யா
க அழைத்தான். அதற்காக அங்கலாய்க்கவேண்டாம். நீ
ர்சும்மாயிரும் அம்மாவென்று அனந்தனுகியலக்ஷ்மண
ப்பெருமாள் சொல்ல, பிராட்டிக்கு அந்தத் துக்காவே
சத்தினுலே கோபமெழும்பித் தன்னைக்கொன்றதுபோ
ல வருத்தப்பட்டுக் கொதிக்கின்ற மனமுடையவளாய்ப்
பார்த்து இப்படி நின்றுகொண்டிருக்கிற உம்முடைய
யோசனை நல்லதல்லவென்று, சற்றுகிலுந் தாக்ஷிண்யம்
பாராமல், பின்னும் சொல்லுகின்றுள். ஒருவருடனே
ஒருவர் ஒருநாள் பழகினுலும் அவர்களுக்கு ஒரு ஆபத்
துவந்தால், தங்கள் பிராணனையுங் கொடுக்கிறார்கள், த
மையன் விழுந்தவார்த்தை கேட்டும் நீர்கொஞ்சமாகிலு
ம் மனதிலே துக்கமில்லாமல் நின்றபடியே யிருக்கிறீர்,
இனி வேறென்ன இருக்கின்றது அக்கினியில்விழுந்து பி
ராணனை விட்டுவிடுகிறேனென்று சொல்லி, தாமரைப்பு
ஷ்பவனத்திலே தாவிப்போகிற அன்னம்போல புகைந்
து எரிகிற காட்டுத்தீயைநோக்கி நடந்தாள். அப்போது

லக்ஷ்மணர் சாஷ்டாங்கமாகச்சேவித்து அம்மா ! பிரா
ணனை விட்டுக்கொள்ள வேண்டிய காரியமென்ன ? நீர்
சொன்னவார்த்தையைக்குறித்து அடியேன் பயப்படுகி
றேன் இனி மறுத்துச் சொல்லுகிறதில்லை, நீர் கிலேசப்
படாமல் இவ்விடத்திலிரும். அடியேன் போகிறேன் வி
தியை வெல்லுகிறதற்கு நம்மாலாகுமா ! ஏதோ விபத்
து வருகிறதாயிருக்கின்றது ராஜாவினுடைய ஆக்கினை
யை மறுத்து என்னைப்போகச் சொல்லுகிறீர். நீர் இவ்வி
டத்திலே வேறு துணையில்லாமல் தனியாக இருக்கிறீ
ரென்று துயரத்தினுலே மனதுவேக விடை கொண்டவ
ராய் நெஞ்சங்கிலைத்து நான் இவ்விடத்திலிருந்தால் இ
வர் அக்கினியில் விழுந்து இறந்துபோவார். தமையனுரி
டத்திற் போனேனேயாகில் இவருக்கு மகத்தான ஆபத்
துவரும். பிராணனுக்கு ஆசைவைத்திருக்கிற எனக்கு
என்னசெயலிருக்கின்றதென்று விம்மியழுது, பின்னும்
இவ்விடத்தில் நானிருந்தால் என்ன விபத்துவந்தாலுஞ்
சாதிக்கலாம், அதைக்குறித்து இருப்போமென்றாலோ
இவரிறந்துபோகிறதாயிருக்கிறதே ! ஆகிலும் இறவாம
லிருக்கும்படியல்லவோ செய்யவேணும். ஆகையால் வி
ட்டுப் பிரிந்துபோகிறதற்கே துணியவேண்டி வந்தது.
சரீரமெடுத்து இப்படித் துயரப்படுகிறதிவினையையுடை
ய பேதையான நான் போகிறேனென்று மனதி லெண்
ணித் துக்கித்து ஏதாகிலும் கிலேசம்வந்தால் எங்கள் த
ந்தையாகிய ஜடாயுவுக்குத்தெரியும். அவர்காத்துக்கொ
ள்ளுவாரென்று சீதைக்குத்தெரியச்சொல்லி தேவர்கள்
செய்த தபோபலத்தினுலே லக்ஷ்மணர்நடந்தார். இப்
படி இளையபெருமாள் போகவே சமயம் பார்த்துக்கொ
ண்டிருந்த ராவணன், தான் நினைத்துவந்த வஞ்சனையை
முடிக்கும்படி. ஈஷணத்திரயங்களை அறுத்துத்திரிதண்டத்
தைக் கையிலேதாங்கிய சந்நியாசிகள்போல ஆகாரமில்
லாமல் உலர்ந்து இளைத்திருக்கிற சரீரமும் வெகுதூரத்
திலிருந்து நடந்துவந்ததுபோல இளைப்பும், வருத்தமு
ம், தள்ளாடிய நடையும், கைகால்நடுக்கமுமுண்டாக, கி
ழப்பருவமும், அசங்கியப்பட்டு வெறுக்கும்படி மிகவும்
முதிர்ந்த ஒருவிர்த்தனுகி தாமரைமணிமாலை, துளசி ம
ணிமாலைகள் தரித்ததோளும், வீணையின்கானத்துடனே
இசையவேதத்தைப்பாடிக்கொண்டிருக்கிறவாயும் - ஆ
மையைப்போல அடங்கினபுலன்களும் வளைந்து கூனு
ற்றிருக்கிறமுதுகும் - முப்புரிநூல் பிரகாசிக்கிறமார்புமு
ண்டாகி இப்படிப்பட்ட ஸ்வரூபத்துடனே, துல்லியமா
கிய மனதினுடைய அருந்ததிக்குச் சமானமான ஜான
கியிருந்த பர்ணசாலையின் வாசலில் வந்தான். அப்படிவ
ந்து வஞ்சமுற நடுங்கினவார்த்தையாக ஆரிந்தவிட்டில்
இருக்கிறவர்களென்று, தேவர்களாலும் அறியப்படாத
கபடரூபந்தரித்தராவணன்கேட்டான். அப்போதுசீதா
பிராட்டி குற்றமில்லாத இதயத்தை யுடைய மகா தபசி
யென்று நினைத்து, பவளக்கொம்புபோல எதிரே வந்து
பாகுபோல மதுரமாகிய வார்த்தையினுலே வாருமென்
று உபசாரஞ்சொன்னுள். அந்தச் சமயத்தில் ராவணன்
சரீரமெல்லாம் வேர்க்க - ஆசையென்கிற சமுத்திரங்க



ரைபுரண்டு பொங்க - அழகுக்கெல்லாமொரு அழகாய்
கீர்த்திக்கு இருப்பிடமாய் கற்புக்கு அரசியாய்ப் பிர
காசிக்கிற சீதையைக் கண்டான். காணவே ஏங்கினுன்,
அவன்மனதை என்னவென்றறியலாம். அவனுடையபு
ஜங்கள்பூரித்து உடனே இளைத்தது.கள். ஜானகியென்கி
ற திவ்வியபுஷ்பத்திலே நிறைந்திருக்கிற அழகென்கிற
தேனை, வண்டுக்கூட்டங்கள்வந்து உண்ணுகிறதுபோல
அவன் இருபதுகண்களும் உருவப்பார்த்து, மூன்பு சூர்
ப்பனகி சொல்லக் கேட்டுக்களித்த மனதைப்போலக்க
ளித்ததுகள். செந்தாமரைப் புஷ்பாசனத்தைவிட்டு இங்
கேவந்திருக்கிற ஸ்ரீமகாலட்சுமியினுடைய, ரத்தினகாந்
தியானதிருமேனியைப் பார்க்கிறதற்கு இமைத்துக்கொ
ண்டிருக்கிற என் இருபதுகண்கள்போதுமா ! இமையா
த ஆயிரங்கண்களில்லையேயென்று கிலேசித்தான் ! இந்
தப்பெண்ணரசியின் இன்பசமுத்திரத்துக்கு நான் தப
சுசெய்துசம்பாதித்த, மூன்றரைக்கோடி ஆயுஷியமும்
போதுமாவென்றும் நினைத்தான். தேவர்களும் அசுரர்
களும் தங்கள் தங்கள் ஸ்திரீகளுடனேகூட ஏவல் செய்
யும்படி, இந்தமூன்றுலோகமும் இந்தப்பெண் அரசா
ட்சிசெய்ய இனிமேல் நானிவளுக்குஏவல்செய்துபிழை
ப்பேனென்று மெண்ணினுன். துயரம் வந்திருக்கின்ற
வேளையிலேதானே திருமுகத்தினுடைய தேஜஸானது,
இப்படி அதிகசுந்தரத்துடன் பிரகாசித்துக்கொண் டிரு
க்குமானுல், அணிமுத்துக்கள்போலத் தாவள்ளியமாகி
ய தந்தங்கள் பிரகாசிக்க நகைத்துக்கொண்டிருக்கிறபோ
து எப்படியிருக்கவேணும். இப்படிப்பட்ட கன்னிகை
யை யெனக்குக்கொடுத்த என்செலவத்தங்கைக்கு, என்
னுடைய மகாசாம்பிராச்சிய ராஜரீகத்தைக் கொடுக்கி
றேனென்று மெண்ணினுன். இவ்விதமாக எண்ணி ஆ
சைமேன்மேலும் மூண்டெழுகின்ற சிந்தையையுடைய
முறைகேடனுகிய ராவணசந்நியாசியைச் சீதாபிராட்டி
யார் தம்மை வஞ்சிக்கவந்தவனென்று அறியாமல், கண்
ணீரைத்துடைத்துக்கொண்டு, இவ்விடத்தில் எழுந்தரு
ளுமையாவென்றுசொல்லிப் பிரம்பினுற் பின்னிய பிர
மாசனங் கொடுக்க, ஊன்றிக் கொண்டு வந்த திரிதண்
டத்தைக் கீழே வைத்து மாய சந்நியாசியானவன் அ
ந்தச் சாலையிலே யிருந்தான். அப்போது மலைகள்,
மரங்க ளெல்லாம் நடுங்கி யதுகள். பக்ஷிகள் மிருக
ங்க ளெல்லாம் பயந்து சப்திக்காமல் அடங்கியிருந்தன
ள். பாம்புக ளெல்லாம் பயப் பிராந்தியினுலே பட
ங்குறைந்து ஒடுங்கியதுகள். சகல ஜீவராசியுந் தடுமா
ன ராவணனைக்கண்டு பயந்ததுகள். அப்படி வந்த பெரு
ந்தபாவியானவன் பார்த்து இந்தப்பர்ணசாலை யாருடை
யது ! இங்கே யிருக்கிறவர் எங்கிருக்கிறீர் ! நீரார் சொல்லு
மென்று கேட்க ! நமக்கு விருந்துவருகிறவர்கள் இவ்வி
டத்தி லில்லையே இவரோ அபூர்வமாக வந்தாரென்று
எண்ணி, விசாலநேத்திரமுடைய சீதைபேசத் தொடங்
கினுள். தசரதமகாராஜாவினுடைய சற்புத்திரர், தம்பி
யுடனே கூடத் தாயார்வார்த்தையைச் சிரசாகவகித்துக்
கொண்டு இவ்விடத்தில் வந்து வாசஞ்செய்கிருர். அவ

ர்பேர் நீருங்கேட்டிருப்பீரென்று சொன்னுள். அப்போ
து ராவணசந்நியாசி நான் கேட்டதுண்டு கண்டதில்லை.
கங்காநதிசூழ்ந்த அந்தராஜ்ஜியத்திற்கு நானும் ஒருதர
ம்வந்திருக்கிறேன். நீர் ஆர்குமாரத்தி இந்தக் காட்டிலே
பொழுதுபோக்குகிறீரோ. தெரியச்சொல்லுமென்றுகே
ட்க, அதற்குச் சீதைசொல்லுகிருள். காமமுதலாகியபா
பமார்க்கமில்லாத மகாதபசிகளான உங்களைத்தவிர,தெ
ய்வம்வேறேயில்லையென்று நினைத்திருக்கிற ஜனகமகா
ராஜாவின்குமாரத்தி. என்பேர்ஜானகி. காகுஸ்தனுடை
ய மனைவிநானென்று அந்த வார்த்தைசொல்லி, பின்னை
யும் மிகுந்த வார்த்திகத்தையுடைய நீர் எங்கே யிருந்து
புறப்பட்டு அதிகவருத்தத்துடனே வழிநடந்து இந்தத்
தண்டகாரண்யத்துக்கு வந்தீரென்று கேட்டாள். அதற்
குச் சந்நியாசிசொல்லுகிருன், தேவேந்திரனுக்குந்தே
வேந்திர னுனவன் எவர்களாலும் எழுதுகிறதற்கு அ
ருமையான சுந்தரமுண்டானவன். பிர்மகுலத்திலேபிற
ந்தவன் தெய்வலோகமுதலான சகலலோகமும் ஆள்கி
ன்றவன். அரியவேதங்களெல்லாம் பொருந்தியநாவினை
யுடையவன். திரிநேத்திரனுன சிவனுடைய கைலாசபர்
வதத்தை உச்சிவேரோடும் பறித்து உருட்டியபலவந்த
ன். அஷ்டதிக்கெஜங்களை யுத்தத்திலே தோற்கடித்து அ
துகளினுடைய தந்தங்களைப் பொடிப்பொடியாகச்செய்
த புஜபராக்கிரமமுடையவன். தேவர்களெல்லாரும் க
டைவாசலிலிருந்து ஏவல்செய்யத்தக்க பிரதாபத்தையு
டையவன். தேவலோகத்துக் கற்பகம் நவநிதி முதலான
சகலபாக்கியமும், புஷ்பகவிமானமு முண்டானவன். அ
வன்வாசமாயிருக்கின்றது சொர்ணமயமான லங்காபுரி
யென்னும் பட்டணம். அது அந்தரசொற்கபாதாளமாகி
ய மூன்றுலோகத்திலேயும் ஒன்றும், தனக்குச் சமான
மில்லாமல் அதிக சிங்காரமுண்டாயிருக்கின்றது,மேலு
ம் அந்தப் பிரதாபலங்கேஸ்வரன் பிர்மாகொடுத்த முடி
வில்லாத தீர்க்காயுசையுடையவன். யார்வதிசமேதனுந்த
ரித்திருந்த வாளைத் தன்கையிலே தரித்திருக்கிறவன். ந
வக்கிரகங்களையுங் கொண்டுவந்து சிறையிட்டவன். குற்
றமற்ற நல்லொழுக்கத்தை யுடையவன். விஸ்தாரமான
சாஸ்திரக்கேள்வியுண்டானவன். அதிக சற்குணங்களை
யுடையவன். மன்மதனும் பார்த்து ஆச்சரியமாய் மனந்
திகைக்கும்படியான யௌவனமுண்டானவன். எங்களை
ப்போலொத்த வர்களெல்லாம் இறையவர்களென்றுஎ
ண்ணியிருக்கின்ற, அந்த மும்மூர்த்திகளுடைய பெரு
மையைப்பார்க்கிலும் விசேஷமாகிய பெருமையை யு
டையவன். சகலலோகங்களிலுமிருக்கிற அதிகசுந்தரமா
ன ஸ்திரீகள் அநேகர், அவனுடையகிருபையை இச்சித்
திருக்கிறார்கள். அப்படி யவர்கள் இச்சித்து நினைத்துரு
கியும் அவர்களிடத்தில் கிருபை செய்யாமல், தன்மன
துக்கு ரம்மியமான ஒருஸ்திரீயைநாடிக்கொண் டிருக்கி
ருன். அந்தராவணேஸ்வரனுடைய, லங்காபுரியிலே சில
நாள்போயிருந்தேன் முன்னுள் இவ்விடத்தில் நான்இரு
ந்தவனுனபடியினுலே இங்கேயிருக்கிற ரிஷிகளைப்பிரிந்தி
ருக்கமாட்டாமல், திரும்பிவந்தேனென்று சொன்னுன்.

அதற்குச் சீதாபிராட்டியார் சொல்லுகிறாள். வேதத்தையும் வேதியருடைய கிருபையையும் விரும்பி அங்கீகரியாமல், சகலபிராணிகளையுங் கொன்றுதின்று எந்நாளும்பாபமேசெய்கிற, அந்தப்பாதகராகிய ராக்ஷதருடைய பட்டணத்திலேயா வாசஞ்செய்தீர், அப்படி அங்கே வாசம்செய்கிறதற்கு ஏதுவென்ன, முற்றத்துறந்துசரீரமும் அநிகமென்று எண்ணுகிறநீர் ஆரணியத்திலே ரிஷியீஸ்வரர்களிடத்திலேயும் இராமல், நாட்டிலே நல்லவர்களிருக்கிற கிராமங்களிலேயும் போயிராமல், தர்மநெறியை நினையாத ராக்ஷதர்களுடைய பட்டணத்திலிருந்து என்னகாரியஞ் செய்தீரென்று சீதை சொன்னாள். அதற்கு ராக்ஷதர்கள் தேவர்களுக்குப் பொல்லாதவர்களேயல்லாமல் எங்களைப்போலொத்தவர்களுக்கு அவர்களே நல்லவர்களென்றுசொன்னான். அப்படிச் சொல்லவே இவன் ஆரோபொல்லாதவனா யிருக்கிறானென்று மனதிலெண்ணினாள். அதை ராவணசந்நியாசி யறிந்து, இந்த மூன்றுலோகமும் ராக்ஷதர்வசமாயிருக்கிறபடியினாலே, அவர்கள் வழியாயிருந்து காலத்தை ஓட்டவேணுமேயல்லாமல், வேறுவழி எங்கேயிருக்கின்றதென்று சொன்னான். மனதறியும்படிக்கு வஞ்சனையாகச் சொன்ன அந்தவார்த்தையைக்கேட்டு, ஐயா! என் பிராணநாயகர் எப்போது இந்த ஆரணியத்துக்கு வந்தாரோ அப்போதே ராக்ஷதர்களெல்லாம் மடிந்து முடிந்துபோனார்களென்று எண்ணிக்கொள்ளும். பின்பு உலகத்திற்குயாதொருதுயரமுமில்லையென்று சொன்னாள். அந்தவசனத்தைக்கேட்டு, ராக்ஷதர்களை மனுஷர்கொல்லுவார்களா அப்படியானால் யானைக்கூட்டத்தையெல்லாம் சிறுமுசல் கொல்லவேணுமே. சிங்கங்களையெல்லாம் மான்கள் வெல்லவேணுமேயென்றான். அதற்குச் சீதாபிராட்டியானவள் அதிகபலவந்தனாகிய ராக்ஷதசிரேஷ்டனென்னப்பட்ட விராதனும், மிகுந்த கோபத்துடனேவந்த கரன் - தூஷணன் - திரிசிரன் - முதலான அநேககோடிராக்ஷதரும் மடிந்துபோன யுத்தசங்கதி நீரொன்றுங்கேட்டதில்லைபோலிருக்கின்றதென்றுசொல்லி, மாய மானினால் தற்காலம் நடந்த காரியத்தை நினைத்துக்கொண்டு கண்களிலே நீர்சோர, பின்னையும் ராக்ஷதர்களெல்லாம் பந்துஜனங்களுடனேகூடமடிந்துபோகிறதும்தேவர்கள் பரிபாலனமாகிறதும் நாளைக்கேஅறியப்போகிறீர் தர்மத்தைப்பாபம்வெல்லுமா அதுஉமக்குத்தெரியாதாவென்றும்சொன்னாள். தேனுடனேகூட அமிர்தத்தைக்கலந்ததுபோலமதுரமாகச்சீதாபிராட்டிசொன்னசொற்கள், செவியிலே நுழைந்தமாத்திரத்தில்கபடசந்நியாசியாகிய ராவணனுக்குச்சரீரம்புளகித்துபின்புமனிதர் பலவந்தரென்றவார்த்தையினாலேசுவாபிமானம்மேலிட்டுக்கோபமுண்டாயிற்று. அந்தக்கோபத்தினாலேசீறி அற்பபலமுண்டான ஒருமனிதன்! தேவர்களுக்குஞ்சக்தியில்லாத ராவணேஸ்வரனைஜெயஞ்செய்வானென்று சொன்னாய். நானே அவனுடைய இருபதுதோளென்கிற சண்டமாருதக்காற்றுவருகிறபோது, இந்தமனிதர்கள் பூளைப்புஷ்பம்போல மடியப்போகிறார்களே அது நீயும்பார்க்கப்போகிறாய். மகமேருவை வேரோடே பறிக்கவேண்டினாலும் அண்டத்தைப் பிளக்கவேண்டினாலும், சமுத்திர ஜலத்தைக் கலக்கவேண்டினாலும், வடவாக்கினியை அவிக்கவேண்டினாலும், பூமியை யெடுக்கவேண்டினாலும், சுலுயாசமாகச்செய்யத்தக்க பலமுண்டான அந்தராவணேஸ்வரனை ஆரென்று நினைத்திருக்கிறாய்! அவனுக்கு அரிதானகாரியம் ஒன்றிருக்கின்றதா வென்று ராவணசந்நியாசியானவன்சொல்ல, அதற்குத் தோள்கள் அனேகமாயிருப்பதினாலே, சாமர்த்தியமுண்டாயிருக்குமா! அந்தராவணனைச் சிறையிலேவைத்த கார்த்தவீரியார்ச்சுனனுடைய வலிமைபொருந்திய ஆயிரந்தோள்களையும் சிறுவயதிலே தானே இரண்டு தோளுண்டான பரசுராமர் அறுத்துவிடவில்லையா! வென்று ஜானகிசொன்னாள் அப்படிச் சொன்னதக்ஷணமே கண்கள்காலாக்கினிபோல எரிய, புஜங்கள் திக்குகளெல்லாம் நிறைய, தலைகள் ஆகாசமட்டும் அளாவ, கைகளோடு கைகளறைந்து இடியைப்போல, சப்தமுண்டாகப் பற்களை நெறநெறவென்று கடித்து நகைத்துக் கோபம்பொங்கப் பார்த்தான், அப்போது அந்தமாயவேஷம் நீங்கிப் போகக் கோபத்தினாலே சீறிப்படம்விரித்த பாம்புபோல உக்கிரத்துடனே தன்னுடைய நிஜஸ்வரூபமானான். முன்னமே துயரத்துடன் பிரலாபித்துக்கொண்டிருந்த! சீதாபிராட்டியாருக்கு எதிரே இவனிப்படிக் கோரபீகரமான ரூபத்துடனிற்கவே! இவர் நல்வினை தீவினைகளைத்துறந்த மகாதபசியல்ல! ஆரோவென்று சந்தேகப்பட்டு, ஒன்றும் நினைக்கவுங்கூடாமல், சொல்லவுங்கூடாமல், செய்யவுங்கூடாமல், மனோவாக்குக்காயமான திரிகரணங்களுந்திகைத்து நடுங்கி! கூற்றுவன்வந்தபோது உயிர் எப்படிப்பதைக்குமோ! அப்படிப்பதைத்தாள், அந்தருணத்திலே ராவணன் தேவர்களெல்லாம் ஏவல்செய்ய ஜெயித்த என் வீரத்தைப்பார், மண்ணிலிருக்கிற புழுவுக்குச் சமானமான மனுஷனைப் பலவந்தனென்று சொன்னையே நீபெண்பிள்ளையானபடியினாலே யல்லவோ சொல்லிப்பிழைத்தாய். உன்னைப்பிசைந்து தின்றுவிடலாமென்று நினைத்தேன். அப்படிச்செய்தால் அப்போதேஎன்னுயிர் இறந்து போய்விடும். அதனாலே தின்னாமல் விட்டேன். இனியொன்றுக்கும்பயப்படவேண்டாம், எப்படிப் பட்டவர்களையும் வணங்காத என்தலையின்மேல் இருக்கின்ற மகுடம்போல மஹாபூஜிதமாக உன்னைத்தாங்கிக்கொண்டு, சர்வாபரணபூஷிதர்களான தேவரம்பையர் உன்னுடைய பாதாரவிந்தத்துக்கு ஏவல்செய்யும்படி, சப்தலோகங்களையும் ஆள்கின்றஎன்னுடையசாம்பிராஜ்ஜியத்தில் இருந்தருளென்று சொன்னான். அந்தவார்த்தை கேட்டு மந்துளிர்போலச்சிவந்துமிருதுவாயிருக்கின்ற கைகளினாலே, செவிகளை மூடிக்கொண்டு சர்வக்கியஸ்வரூபனாகிய காகுஸ்தனுடைய மனைவியாய், கற்புடைய வளான என்னை உலகத்தின் ஒழுக்கமும்பாராமல்! ஓமாக்கினியிலேபுனிதர்களான ரிஷியீஸ்வரர்கள்கொடுக்கின்ற ஆகுதியை, நாயிச்சித்ததுபோல என்னசொன்னாய்! ராக்ஷதா புல்லின் நுனியிலே நிற்கிற பனித்துளிபோல, சி



றிதுநேரத்திலே போய்விடுகிற என்பிராணனை இழந்து போகிறதற்குப் பயந்து குடிப்பிறப்பை யழிக்கிற அன்டா! மின்னலுடனேகூடி இடிவருகிறதுபோல ராமபாணம் வாராததற்குமுன்னே பிராணனையயில்லாமல்சீக்கிரத்தில் ஓடி ஒளித்துப்போவென்று சொன்னாள். இப்படி ஜானகிசொல்லவே இரக்கமில்லாத ராக்ஷதாதிபதி யான ராவணன்சொல்லுகிறான், உன் கணவனுடைய அம்புவந்து அஷ்டதிக்கெஜங்களின் தந்தங்களை ஒடித்த என்னுடைய மார்பில் உருவுமா! அப்படியே வந்தாலும் மலையின்மேலிட்ட புஷ்பபாணம்போல நசுங்கித்தெறித்துப்போய்விடும். அந்தக்கச்சீராமுண்டான ஸ்திரீரத்தினமே! எனக்கு ஆசையாகிய வியாதி மனதிலே அதிகரிக்க அதனாலே சரீரம் உலர்ந்தேன். எனக்குப் பிராணனைக்கொடுத்துத் தேவரம்பைகளுக்குங் கிடையாத அதிசயமான பாக்கியத்தை நீ கைக்கொள்ளென்று சொல்லிச் சாஷ்டாங்கமாகச் சேவித்தான். தரையில்விழுந்து அவன்வணங்கவே வாளினாலே வெட்டுப்பட்டுப் பிராணன்கலங்கினதுபோல, பயப்பிராந்தியுண்டாய் ராகவா! என் பிராண நாயகனேயென்றும், இளையவரே யென்றுஞ் சொல்லியழைத்துத் துயரத்துடனே யேங்கினாள். பொன்மைதானே ஒரு ரூபமெடுத்ததுபோலத் திருவழகுண்டான சீதாபிராட்டியார் அவ்வண்ணமாகப்பயந்து பிரலாபிக்கவே ராவணன்பார்த்து, பூர்வத்திலே பிரமாவினுடைய சாபந்தனக்கு உண்டாயிருக்கிறதை நினைத்துக்கொண்டு ஜானகியினுடைய திருமேனியைத் தீண்டுதற்கு அச்சப்பட்டவனாய் தன்னுடைய புஜபராக்கிரமத்தினாலே பூமியைக்கீழே யோசனைதூரமட்டும் கைகளாற் பேர்த்தெடுத்துத்தேரின்மேல்வைத்துக்கொண்டான். அதைச் சீதைகண்டு தன்பிராணனைக் காணாதவளாய் பூமியிலேவிழுந்த மின்னல்போலத் துவண்டுமயங்கினாள். அந்தச்சமயத்திலே தேரை ஆகாச மார்க்கத்தில் விடச் சொல்லிச் சாரதிக்கு ஆக்கியாபித்தான். அதுகண்டுநெருப்பிலேவிழுந்த புஷ்பக்கொடிபோல வெந்து இரங்கி புரண்டு - குலைந்து - அயர்ந்து - துடித்து - விழுந்து மிகுந்த துயரத்தினாலே அழுது தர்மமே இந்தவிபத்தை நீ காத்துக்கொள்ளென்று சொல்லிப் பின்னையும் பிராட்டி பிரலாபிக்கின்றாள்.

## கவி.

மலையே மானே மயிலே குயிலே..............................*
கலையே பிணையே களிறே பிடியே..............................*
நிலையா வுயிரே நிலைகே டினிர்போய்..............................*
உலையா வலியா ருழைநீ ருரைநீர்..............................(௧)
செஞ்சே வகனார் நிலைநீர் தெரிவீர்..............................*
மஞ்சே பொழிலே வனமே வதைகாள்..............................*
அஞ்சே லெனநல் குதிரோ லையேன்..............................*
உஞ்சா லதுதா னிழயோ வுரையீர்..............................(௨)
நிருதா தியர்வே ரறநீர் முகில்போல..............................*
சரதா ரைகள்வீ சினிர்சா ரகிரோ..............................*
வரதா வினையோய் மறுவே துயிலாய்..............................*
பரதா வினையோய் பழிபூ ணுதிரோ..............................(௩)
கோதா விரியே குளிர்வாய் குழைவாய்..............................*
மாதா வனையாய் மனனே தெளிவாய்..............................*
ஓதா துணர்வா ருழையோ டினைபோய்..............................*
நீதான் வினையே னிலைசொல் லலையே..............................(௪)
மூதாஞ் சுனைகாள் முழைவா ளரிகாள்..............................*
இந்தக் நிலைநே டுமெடுத் தகைநால்..............................*
ஐந்துந் தலைபத் துமலைத் தலையாச்..............................*
சிந்தும் படிகண் டெரிக் கிலிரோ..............................(௫)

என்பன — மலைகளே! மரங்களே! மயில்களே! குயில்களே! கலைமான்களே! பிணைமான்களே! ஆண்யானைகளே! பெண்யானைகளே! நிலையாமற் போகின்ற என்னுயிரே! நீங்களாகிலும் என்னாயக னிருக்கும் இடத்தைத் தேடிப்போய்ச் சொல்லுங்களென்றும், மேகமே! சோலையே! வனமே! வனதேவதைகளே! என் பிராண நாயகருடைய சேவகத்திராணியை நீங்க ளறிவீர்களே! ஆகையால், என்னைப் பயப்படாதேயென்றுநீங்கள் ஒருவார்த்தை சொல்லுவீர்களாகில் நான்பிழைப்பேன். நான்பிழைத்தால் உங்களுக்குவருகிறகுறையென்ன அதுதான் சொல்லுங்களென்றும், என் பிராண நாதரான வரதரே! இளையவரே! பரதரே! சத்துருக்கரே! ராட்சதர்கள் நிர்மூலமாக, நீருண்ட மேகம்போலச் சரமாரி பொழிந்துகொண்டு நீங்கள் வரலாகாதா! இந்தப் பழி பூண்டு சொன்னுகிறீர்களோ வென்றும், கோதாவிரிநதியே! குளிர்ச்சியுங் குழைவுமா யிருக்கின்ற தாயைப்போல என்மனதையறிந்த நீயாகிலும்போய்ச் சொல்லாமலே அறியத்தக்க ராமலக்ஷ்மணர்களுடனே சொல்ல வில்லையாவென்றும், சுனைகளே! குகையிலே யிருக்கின்ற சிங்கங்களே! என்னைப் பூமியுடனேகூடப் பேர்த்தெடுத்த இருபதுகைகளும், பத்துத்தலைகளுந் துண்டந் துண்டமாக அறுக்கப்பட்டுச் சிந்திவிழக்கண்டு நகையீர்களாவென்றும், இப்படிப் பலபலவிதமாகப் பன்னியிரங்கி அழுகிற ஜானகியைப்பார்த்து, மனுஷரா போரிலே என்னை ஜெயித்து உன்னை மீட்டுக்கொள்ளுகிறவர்களென்று, கைபுடைவையைறைந்து நகைத்தான். தன்னுயசைப் போக்கடித்துக்கொள்ளுகிற ராவணன் அப்படிச்சொல்ல, அதற்குச் சீதைசொல்லுகிறாள். மாயையினாலே வஞ்சகமான ஒருமானையுண்டாக்கினாய் அதனாலே உன் பிராணனையுண்ணுகின்ற என்னாயகனாகிய கூற்றுவனை அப்பாலே யனுப்பினாய். அந்தச்சமயத்திலே வந்து என்னையெடுத்துக்கொண்டுபோகின்றாய். யுத்தஞ்செய்து உன்னுயிரைக் காத்துக்கொள்ளத்தக்கவனானால் தேரைவிடாமல் நிறுத்தென்றும் மேலும் நீ வீரனேயானால் அதிசீக்கிரத்தில் உன் கூட்டங்களையெல்லாங் கொண்டு, உன் தங்கையின் மூக்கும், ஸ்தனமும், அறுத்துவாட்டின மனுஷர் இந்த ஆரணியத்தி லிருக்கிறார்களென்றுகேட்டும் இப்படி மாயஞ்செய்வையா! பயத்தினாலல்லவா செய்தாயென்றுஞ்சொன்னாள். அந்த வார்த்தை கேட்டுப் பலமில்லாத அற்பமான மனுஷருடனே யுத்தஞ்செய்கிறதற்கு நான் எதிர்த்தால் திரிநேத்திரத்தையுடைய சிவனது கைலாசபர்வதத்தையெடுத்த என்தோள்களின்

ஓர்த்திக்குப்பழியுண்டாகும். அதிலும் இந்தவஞ்சனைநல்லதென்றுதான்நினைத்துச்செய்ததென்றான். அதற்குத்தங்கள்குலப்பகையாயிருக்கிறவர்களுடனே வாலைக்கொண்டுயுத்தஞ்செய்கிறது நாணம்போலவும், பதிவிரதையாயிருக்கிறஸ்திரீயைவஞ்சனைசெய்துஎடுத்துப்போகிறது மகாசாமர்த்தியம்போலவும்இருக்குமானால் இரக்கமில்லாத ராக்ஷதருக்குப் பழிதான் எதுவென்றுஜானகி சொன்னாள். அந்தச்சமயத்திலே ஆகஸ்மீகமாய் எங்கேயடாபோகிறாய் நில்லுநில்லென்று அதட்டினவார்த்தையுடனே கண்களில் நெருப்புப்பறக்க மின்னலைப்போலப் பிரகாசிக்கிற வைரமாகிய மூக்கினையுடையதாய் ஒருமகமேரு பர்வதம் ஆகாசத்தில் பறக்கிறதுபோல ஸ்தூலசரீரமுண்டான ஜடாயுபறந்து பிரளயகால சண்டமாருதம்போலச் சிறகின் காற்று மோதியடிக்க, விருக்ஷங்களெல்லாம் வேர்பறிந்துவிழ, வானத்தில் சஞ்சரிக்கின்ற மேகங்கள் அப்புறத்தில் சிதறிப்போக கருடபகவான் வருகிறானென்று நாகங்களெல்லாம் பயந்துபடமொடுங்கி ஒளிக்க யானையாளிமுதலானதுகளும் மரங்களும் தூறுகளும் கற்களுஞ் சிறகினுடைய விசையினாலே யெழும்பி ஆகாசவெளியெல்லாம் நிறைய வானமென்றும், கானமென்றும், வேற்றுமை தெரியாமல் மாறிப்போக புருஷோத்தமனுடைய தேவியை நிலத்துடனேபேர்த்துத் தேரின்மேல் வைத்துக்கொண்டு எவ்விடம்போவாயென்றும், ஆகாசத்துடனே பலதிசைகளையும் நான்மறைத்து, உன்னுடைய ரதத்தைப் போகவொட்டாமல் தடுக்கிறேன் பாரென்றும், தன்சிறகுகளை விரித்துக் கொண்டு கழுகின் கூட்டங்களுக்கெல்லாம் ராஜாவாகிய அந்த ஜடாயு வானவர் கைலாசபர்வதத்திற்குச் சிவந்த தலையும், கால்களும், செவ்வானம்போலக் கழுத்துமுண்டாகிப் பிரகாசிக்கிறதுபோலப் பிரகாசித்துக் கொண்டு அதிசீக்கிரமாக முடுகிவந்து, மருமகளைக்கண்டு அம்மா பயப்படாதேயென்று சொல்லி, அந்தப்பாவி தீண்டவில்லையென்கிறதுந் தெரிந்துகொண்டு மூண்டெழும்பின கோபத்தை அதிகரிக்காமல் அடக்கிக்கொண்டு சிலவார்த்தைசொன்னார். அடா ராவணா ? நீ கெட்டாய். உன் பந்துஜனத்தோடே உன்வாழ்வையெல்லாஞ் சுட்டாய். என்னகாரியந் தொடங்கினாய் நீ பட்டாயென்றேயெண்ணிக்கொள். இப்போதும் இந்தப்பத்தினியைவிட்டால் உன்னைநான் கொல்லுகிறதில்லை. புத்தியில்லாதவனே பிழைசெய்தாய் இந்த லோக மாதாவை ஆராகசினைத்து எடுத்தாய் உனக்கு ஆர் ஆதரவிருக்கிறார்கள். இங்கே உன் சுற்றத்தார்களையெல்லாம் ராமச்சந்திரன் அம்பினாலே சங்கரித்து, அவர்கள் உயிரை விருந்துசெய்யக் கூற்றுவன் கேற்று உண்ட சமாச்சாரம் அறியாயா ! கொல்லுகிறதற்குவந்த மதயானையை உன்னுடையவில்லினால் தெரிக்கவிரும்பினாய். பிராணனைக் கொல்லுமென்பதை யறியாமல் விஷத்தையுண்டு பிழைக்கப்பார்க்கிறாய், எல்லாவுலகங்களும் இந்திரனும் அந்த மும்மூர்த்திகளும்யமனும் காலனும் புலியைகண்ட மான்போல நடுங்கிப் போய் விடுகிறதேயல்லாமல் கோதண்டபாணியான ஸ்ரீராமனை ஜெயிக்கிறவர்கள் ஆரிருக்கிறார்கள். இந்தப்பிறப்பில் உறைவின்முறையாருடனேஇறந்து, அழிந்துபோகத்தக்க ஸ்திரீத்தியம் இதைவிட வேறேயில்லை. மறுபிறப்பிலும் நரகத்திற்கு ஏதுவாகும். இப்படியிருக்க, எந்தப்பிறப்பிற்கு இதுநன்மையைத் தருமென்று நீ நினைத்தாய் திரிமூர்த்திகளுக்கும் முதன்மையான அந்த மூலகாரணவஸ்துவே இந்த மனுஷனென்று அறி. இவர்களிடத்திலேயா இப்படிப்பட்ட பிழைசெய்வார்கள். யோசனையில்லாத புத்தியக்காரனானபடியினாலே நீ யிது செய்தாய். நெற்றிக்கண்ணினையுடைய நக்கிவனானவன் கிருபையினாலே பெற்றவரங்களும், மற்றுமுள்ள கல்வியும், மந்திரதந்திரங்களும், உனக்குண்டாகிய சகலபலங்களும், ஸ்ரீராமன் அஸ்திரப் பிரயோகஞ்செய்கிற மட்டுமேயிருக்கும். அந்த ராமபாணத்தைக்கண்டால் ஒன்றிலும் நில்லாது. பஞ்சாய்ப் பறந்துபோம். மானைப்பிடிக்கப்போகிய ராமபத்திரன் கேள்வத்துவிட்டால் உன்னைத் தடுக்கமுடியாது. சீதையை விட்டுவிடு நான்கொண்டுபோய் அவ்விடத்தில் சேர்க்கிறேன். நீ சீக்கிரமாய்ப் போவென்றுசொல்ல அந்தவார்த்தையை ராவணன் கேட்டுக் கோபாக்கினிமூள வடவாக்கு ஒப்பாகிய தன் கண்களிலே நெருப்புப்பொறிசிதற, வாயைமடித்துக்கொண்டு அடா ! நீ சொன்னவர்களைக் காட்டடா ! என்னுடைய பாணம்பட்டு உன்னுடைய மார்பு திறந்துபோய் விடுகிறதற்கு முன்னே ஓடிப்போய் விடு. காய்ந்துத் தோய்த்த இரும்பு உண்டநீர் மீண்டுவந்தாலும் என்னிடத்தில்வந்த இந்த ஸ்திரீ ரத்தினம் மீளுகிறதில்லை, அதுவும்பாரென்றுசொன்னான். அப்படிச்சொன்ன வார்த்தையைச் சீதைகேட்டு முன்னிலும் இரண்டுபங்கு அதிகபயமுண்டானவளாய் நடுங்கி அழுகிறதை ஜடாயுவானவன்கண்டு அம்மா ! பயப்படாதே ! இந்த ராக்ஷதனுடைய சரீரம் இக்ஷணத்திலே சின்னபின்னமாய்ப் போகும். சக்கரவர்த்தி திருமகன் இன்னம்வாயில்லையேயென்று, முத்துக்கள் சிந்துகிறதுபோலக் கண்ணிலிருந்து சிதறுகின்ற நீர்த்துளிகள் ஸ்தனத்தின்மேல் விழுந்து தத்திப்பாய வருந்தித் தளரவேண்டாம். இவனுடைய பத்துத்தலைகளையும் பனங்காய்க்கொத்துப்போல அறுத்து இந்தப் பத்துத்திசைக்கும் பலிகொடுக்கிறதற்கு நானிருக்கிறேன். அதுபாரென்றுசொல்லி, இடிகளும் பயந்து ஓடி ஒளிக்கும்படி அதிகசப்த முண்டாகச் சிறகுகளைவீசி, அவன் தேரின்மேலேபாய்ந்து அவனுடைய பத்துக்கிரீடங்களையுங் கீழேயுருட்டித்தள்ளி, அந்தரதத்திலே கட்டியிருக்கிற வீணைக்கொடியை மூக்கினால்பற்றி ஒடித்தான். தேவர்கள் புஷ்பமாரிபொழிந்து வாழ்த்தினார்கள். அந்தவேளையில் ராவணன் செவ்வரக்கு உருக்கினதுபோலக் கண்களெல்லாஞ்சிவக்க, எந்தக்காலத்திலும் இவ்வளவு அபஜயப்பட்டறியாதவனானபடியினாலே சப்தலோகமும் நடுங்க நகைத்துப் புருவங்கள் நெரிந்துவளைய, கையிலே வில்லையெடுத்து வளைத்து ஜடாயு சரீரத்தின்மேல் சரமாரிபொழிந்தான். இளஞ்சந்திரன்போலவளைந்ததந்தங்களையுடைய ராவணன்பொழிந்தசரமாரிகளைச்சிறகினாலடித்தும்நகங்களினால்ஒடித்தும்எமனுங் கண்டுபயப்படுகிறமூக்கினால்கடித்தும், கண்டதுண்டங்களாக்கினான். பின்னையும்அநேக ரிரகஸண்டான ஒருசர்ப்பத்தின்மேலேபாய்கிறகருடனைப்போலவட்டமிட்டுப்பாய்ந்து அவன்பத்துத்தலையினும்மூக்கினாலேகொத்திராவணன் வில்லை வளைக்கிறதற்குமுன்னே ! அவன்காதிலேபிரகாசித்துக் கொண்டிருந்த குண்டலங்களைப் பறித்துக்கொண்டு எழும்பினான்.

ஸ்ரீகம்பராமாயணவசனம் - ஆரணியகாண்டம். 75 ௱௨௭

அப்படியெழும்பினஜடாயுவினுடைய மார்பிலே பதினாலுபாணம்உருவும்படிப் பிரயோகஞ்செய்து ஆர்ப்பரித்து ! பின்னும் அநேக அஸ்திரங்களைப்பொழிந்தான். அச்சமயத்திலே ஜடாயு விழுந்தானென்று அஞ்சித் தேவர்கள் பெருமூச்சு விட்டார்கள். அந்தப்பாணங்கள் வந்துதைக்கச் சரீரத்திலே ரத்தந்தாரைதாரையாகவோடிய, ஆகாசத்திலேபிரகாசிக்கிறபக்ஷிராஜனாகிய ஜடாயு, முன்புமடிந்த கரன்முதலானராக்ஷதர்களுடைய ரத்தப்பிரவாகத்தை ! சமுத்திரமென்றுஎண்ணியுண்டமேகம் பின்பு அந்தரத்தங்களைக்கக்கி வெள்ளைமேகமாய் நிற்கிறதுபோலப் பிரகாசித்தான். அப்படிப் பிரகாசித்த ஜடாயுவானவன் பெருமூச்சுவிட்டுமறுபடியும் அவனுடைய இருபதுதோள்களிலும், போய்ப்பாய்ந்து மூக்கினாலேகொத்தி நகங்களினாலேயுடைத்து சிறகினாலேஅடித்து, முத்தாரத்தைஅணிந்த அவன் மார்பிலே தரித்திருக்கிற கவசத்தின் பூட்டுகளைச் சின்னபின்னமாக அறுத்தான். அந்த ஜடாயுவின்மேல் ராபாணம் பிரயோகஞ்செய்து சரீரமெல்லாம் அழுத்தினான். அத்தருணத்திலே தேவர்கள் அஞ்சிக் கொண்டு வெதுக்குத் திகைத்தார்கள். அவ்வக்கமாகத்தைநிலையாததற்குமுன்னே அதிசீக்கிரமாய்ப் பாய்ந்து ராவணனுடையவில்லை மூக்கினாலே பறித்துக்கொண்டான். அதுகண்டு தேவர்கள் சந்தோஷித்தார்கள், சிவனுடனேகூடக் கைலாசகிரியை எடுத்தவனுடைய வில்லைப் பறித்துக் கொண்டு, பச்சைவில்லுடனே பிரகாசிக்கிறமேகம்போல ஜடாயு ஆகாசமண்டலத்தில் பிரகாசித்தான். அவனுடைய புஜபலத்தைச் சொல்லத்தக்கவர்கள் ஆரிருக்கிறார்கள். பின்பு சகஸ்திரநேத்திரனாகிய இந்திரனைத்தேவலோகத்திலே ஓடும்படி வாளினாலேஜெயித்தவனுடைய வில்லை வாரியிருக்குவளாக்கிச் சிவனுடைய வில்லைக் கையாலொடித்த ஸ்ரீராமனுடைய தந்தைக்கு, பிராணஸ்நேகனாகிய ஜடாயுவானவன் காலால் ஒடித்தான். தன்னெதிரே தன்னுடையவில் ஒடிப்புண்டதுகண்டு ராவணன் மிகுந்தகோபாவேசனாய்த்திரிபுரங்களைத்தகனஞ்செய்த சிவனுடைய அம்புக்குச்சமானமான ! ஒருசூலாயுதத்தை யெடுத்து அட்டகாசஞ்செய்து, ஜடாயுவின்மேல் எறிந்தான். ஜடாயு அடா ராவணா இதையிவன்சகிக்கமாட்டானென்று நீ யெண்ணவேண்டியதில்லை என்னுடைய பலத்தைப்பாரென்று அதிக விசையாய் வருகிற சூலத்தை மார்பிலே ஏற்றுக் கொண்டான். அதுகண்டு அதற்குமுன் இப்படிப்பட்டகொடுமைசெய்தவர்கள் எவரென்று ! ஒன்றுந்தோற்றாமல் திகைகொண்டிருந்த தேவர்கள், தங்கள் தோள்களைக் கொட்டிக்கொண்டு ஆர்ப்பரித்தார்கள், அந்தச்சூலம் வேசியரிடத்திலேஆசைவைத்த தரித்திரர்போலவும், ஸ்திரீகளில்லாத வீட்டுக்குவந்த விருந்துபோலவும் தத்துவஞானிகளாகிய யோகீஸ்வரர்கள்மேல் பாய்ந்தஸ்திரீகளுடைய கண்கள்போலவும் பிரயோசனப்படாமற் போய்விட்டது. ராவணன் வேறே ஆயுதமெடாததற்குமுன்னே அவனுடையரதத்திலே பாய்ந்து ! தேர்ப்பாகன் தலையைக்கிள்ளி ராவணனுடைய முகத்திலெறிந்தான். அதுகண்டு அந்த ராவணனானவன் இவன் பலவந்தனென்று அறிந்து, அதிககோபத்துடன் ஒருசொன்னச்சாயையாகிய பெரிய தண்டாயுதமெடுத்து ! அக்கினிச்சிகை பொங்கியெழும்ப ஜடாயுவை ஓங்கியடித்தான். அந்தஅடிபடவே பர்வதம்போலப் பூமியிலேவிழுந்தான். ஜடாயு விழவே தேரை நேத்திராகோசரமாகச் சீக்கிரமாய் ஆகாசத்தில் எழும்ப முடுக்கினான், அதுகண்டு சீதை புண்ணிலிடத்தில் அக்கினிநுழைந்ததுபோல மனதுநொந்து சரீரம்பதைத்துத் துடித்துப்புரண்டழுதாள். அப்படியழுகிறதை ஜடாயுகண்டு அம்மா ! பயப்படாதே அங்கலாய்க்காதேயென்று சொல்லிக்கொண்டெழுந்து, எங்கேயடா போகிறாயென்று ராவணனைஅதட்டி அவனுடையதேரின்மேல்போய்விழுந்தான். அதுகண்டு தேவர்களெல்லாருஞ்சந்தோஷித்து அட்டகாசஞ்செய்து கர்ஜித்தார்கள். அவ்விதமாகப்பாய்ந்து அவன்கையிலிருந்த தண்டாயுதத்தைப் பறித்துஎறிந்துவிட்டு, அந்தத்தேரிலேகட்டியிருந்த பதினாறுகுதிரைகளையும் மூக்கென்கிறவாளினாலே கொத்திக்கொன்றான். அதுகண்டு யமனும்பயந்து கைவிதிர்த்தான். அவ்வண்ணமாகத் தேரையுமழித்து ! வில்போய்விட்டபடியினாலே தானஞ்செய்யாதலோபிகளுடையபொக்கிஷம்போல, செலவழியாமலிருக்கின்றஅம்புகளையுடைய தூணியையும் பறித்துச் சிதற எறிந்தான். பின்னும் ராவணனுடையமார்பையும் தோளையும்பலகைகளானும் மூக்கினாலும் கொத்திக்கிழித்துச் சிறகினாலேபுடைத்தான், அப்போது ராவணன்மூர்ச்சித்து முடிசாய்ந்திருந்தான். அதுகண்டு ஜடாயு அடாராவணா இவ்வளவுக்குள் உன்னுண்மைபோய்விட்டதென்றான். அந்தச்சமயத்தில் ராவணன்அதிககோபமாகி என்னுடைய சாமர்த்தியம் ஒருபக்ஷிக்கென்று மனதிலே நினைத்து ! பிரயோகஞ் செய்கிறதற்கு வேறே ஆயுதங்காணாதவனாய் இவனையிந்தக்ஷணம் உயிரையுண்கிறேனென்று எண்ணி, கையிலிருந்த வாளையுருவிச் சிறகைவெட்டினான். அதுதெய்வீகமான வாளானபடியினாலே தப்பாமல்பட்டது. அப்போதும் பலந்தோற்கவில்லை. ஒருவராலுந் தடுக்கப்படாத அந்தத்தெய்வவாளினாலே ஜடாயு ஆயுசு முடிந்திருந்தபடியால் தன்சிறகு முறிந்து ! இந்திரனுடையவச்சிராயுதம் பட்டுச்சிறகற்றமலைபோலப் பூமியிலே விழுந்தான். அப்போது தேவர்கள்பயந்து ஓட்டமெடுத்தார்கள். ரிஷியில்லவர்களும் சீதை அனைவிழுந்தாளென்று வருத்தப்பட்டார்கள். ஜடாயுவின்மேல் சந்தோஷமாய் விண்ணுலோகத்து நித்தியசூரியர்கள் சொர்ண புஷ்பமாரிபொழிந்தார்கள். ஜடாயுவிழுந்ததுகண்டு சீதை அதி

கதுக்கமாய்! வலையில் அகப்பட்டமான்போலப் பதைத்து சோர்ந்து நொந்து உட்கி மயங்கி பெருமூச்சுவிட்டு ஒருதுணையுங் காணுதவளாய்க்கொழுகொம்பொடிந்துபோன புஷ்பக் கொடிபோல! விழுந்து பிரலாபிக்கின்றாள்.

கவி.

வன்றுணையுளனெனவந்தமன்னனும்......*
பொன்றினனெனக்கினிப்புகலென்னென்கின்றாள்......*
இன்றுணைபிரிந்திருந்தின்னலெய்திய......*
அன்றிலம்பெடையெனவரற்றினளரோ......(௧)
அல்லலுற்றேனைவந்தஞ்சலென்றவிந்......*
நல்லவன்றேற்பதேகரகன்வெல்வதே......*
வெல்வதும்பாவமோவேதம்பொய்க்குமோ......*
இல்லையோவறமெனவிரங்கியேங்கினாள்......(௨)
காணிலேனுரைகொடுநடந்தநம்பிமீர்......*
நீணிலையறநெறிநின்றுளார்க்கெலாம்......*
ஆணியையுந்தையர்க்கமைந்தநண்பனைக்......*
காணியவம்மெனக்கலங்கிவிம்மினாள்......(௩)
எல்லியல்விசும்பிடையிருந்தநேமியான்......*
சொல்லியவறநெறிதொடர்ந்ததோழமை......*
நல்லியலருங்கடன்கழித்துநம்பியைப்......*
புல்லுதியோவெனப்பொருமியேங்கினாள்......(௪)
கற்பழியாமையென்கடமையுச்சியும்......*
பொற்பழியாவலம்பொருந்தும்போர்வலான்......*
விற்பழியுண்டதுவினையினேன்வந்த......*
இற்பழியுண்டதென்றிரங்கியேங்கினாள்......(௫)

என்பன—இவர்களுக்குத் துணையும் உண்டென்றுஎண்ணும்படியாக வந்துஎதிர்த்த ஜடாயுராஜனுமாமறுகும் விழுந்துபோனார். இனியென்னகதியுண்டென்று என்னைச் சேவலாகிய துணைபிரிந்த பெட்டை அன்றில்போலக் கிலேசித்தாள்! ஆபத்துஉண்டாகித் துயரத்தினால் அழுகின்ற என்னைவந்து பயப்படாதேயென்று ஆதரித்த இந்த உத்தமன்தோற்கிறதும், நரகத்துக்கு ஏதுவானபாவி வெல்கிறதுமாயிற்றல்லவா! பாபம் எங்கேயாகிலும் வெல்லுமா! வேதம்பொய்க்குமா! தர்மமில்லையோவென்று சொல்லிஇரங்கினாள். பின்னையும் காணவில்லாத என்வார்த்தையைக்கேட்டு நடந்த ராஜகுமாரர்களே! தர்மவழியிலே நிற்கிறவர்களுக்கெல்லாம் ஒருநிலைபெற்றிருந்த, உங்கள்தகப்பனருக்கு உரிய பிராணசிநேகரைப் பார்க்கிறதற்காகிலும் வாருங்களென்று சொல்லிக்கலங்கியழுதாள். பின்னும் ஜடாயுவைப் பார்த்துத் தேவலோகத்திலே போயிருக்கின்ற சக்கரவர்த்தியானவர், முன்னாளிலே சொல்லியிருந்த தோழமைக்கடனை இவ்விடத்திலே கழித்துவிட்டு, அவ்விடத்தில் அவருடன்கூட இருக்கப்போனீரோ வென்றுஞ்சொல்லித்துக்கித்தாள். கற்பழியாமலிருக்கிறது என்கடனும் அதிபராக்கிரமத்தைப் பொருந்திய, என் பிராணநாயகருடைய வில்லுக்குப் பழியுண்டாயிற்று! அது வல்லாமல் தீவினையையுடைய நான்பிறந்த குடிக்குப் பழியுண்டாயிற்றென்றுஞ் சொல்லிஏங்கினாள், இப்படிச் சீதை ஏங்கியழுகிறதையும், சிறகிழந்துவிழுந்த ஜடாயுவினுடைய நிர்வாகத்தையும் ராவணான் அறிந்து, இனிநிற்கலாகாதென்று தேரிலேவைத்திருந்த மண்ணுடனேகூடச் சீதையை எடுத்துத் தோளின்மேல் வைத்துக்கொண்டு ஆகாசமார்க்கமேபோனான். அப்படி அந்தப் பாவிபோகிறதை அறிந்து கண்ணும் மனமுங்கழல, மகாபதிவிரதையான சீதை பிரக்ஞையும் ஒன்றுந் தெரியாமல், அந்தமண்ணிலே தன்னையுமறந்துசோர்ந்தாள். முன்விழுந்த ஜடாயுவானவன் கொஞ்சம் மூர்ச்சைதெளிந்து ஆகாசத்தைப்பார்த்தான். அதிசீக்கிரமாய் ராக்ஷதன்போகிறதைக்கண்டு மனதுபுலர்ந்து மிகுந்ததுயரத்துடனே பிரலாபிக்கின்றான்.

கவி.

வந்திலர்மைந்தர்தாமருகிக்கெய்திய......*
வெந்துயர்துடைத்தனனென்னுமெய்ப்புகழ்......*
தந்திலர்விதியினார்தருமவேலியைச்......*
சிந்தினர்மேவினிச்செயலெனுங்கொலோ......(௧)
வெற்றியருனொளின்மின்னினுண்ணிடைப்......*
பொற்கொடிக்கிங்கிவைபுகுதற்பாலதோ......*
உற்றதையின்னதென்றுணராநின்றிலேன்......*
சிற்றவைவஞ்சனைமுடியச்செய்ததோ......(௨)
பஞ்சணைபாம்பணையாகப்பள்ளிகொள்......*
அஞ்சனவண்ணனேயிராமனாதலால்......*
வெஞ்சினவரக்கனால்வெல்லலாகுமோ......*
வஞ்சனையிழைத்தனன்கன்னமாயையால்......(௩)
வேறவரக்கனைவென்றுவெம்பழி......*
தீருமென்றுவனைநீண்டவஞ்சமால்......*
ஆரியன்றேவியையரக்கனம்மலாப்......*
பேருலகளித்தவன்பிழைப்பில்சாபத்தால்......(௪)

என்பன—என் சற்புத்திரர்களாகிய ராம லட்சுமணர்களோ! இன்னம் வரவில்லையே. மருமகளுக்கு வந்த கிலேசத்தை நான்தீர்த்தேனென்கிற கீர்த்தியையெனக்குக்கொடாமற்போன விதியானது தர்மவேலியைமுறித்துவிட்டதே! இனிமேல் என்னடக்குமோ! வீரர்களான அந்த ராமலட்சுமணர்கள் சமீபத்தி லிருந்தால் சீதைக்கு இவ்விதமாகிய ஆபத்துவருமா! அவர்கள் போனஇடத்தில் நடந்தசமாச்சாரமும் இன்னதென்று தெரியவில்லையே! சிறியதாயார் செய்த வஞ்சனைப்படிதான் முடியவந்ததோ! சேஷசாயியான நாராயணனே, ஸ்ரீராமனாகையால் இந்தராக்ஷதனாலே அவன்ஜெயிக்கப்படுவானு! ராவணன் ஏதோ கபடமாகியமாயையினாலே வஞ்சனை செய்தான், எப்படியும் ராக்ஷதர்களை என்மகன் வேறாகக் கொன்று ஜெயித்து, இப்பழியைத் தீர்த்துக்கொள்வான் இந்தப்பாவி பிரமாவினுடைய சாபத்தினாலே ஸ்ரீராமனுடைய தேவியைத் தீண்டமாட்டானென்று இவ்வண்ணம் நினைத்து நினைத்துச் சொல்லிச் சொல்லி மருமகள் சிறைபட்டாளென்று மனம் பொதிந்து, எனக்குஞ்சிறகு அற்றதாவென்று கிலேசித்து, உடனே ஏன்சிறகு அற்றாலும் சீதையினுடைய கற்பென்னுங் காவல் அருமையென்று எண்ணி, அந்தத்துக்கம்நீங்கினவனுகித் தன்சிறகி லிருந்து ரத்தம் ஆறுபோற்பெருகிவழிய, பின்னும்சீதையை மீட்கக்கொள்ளாமற்போனேனே யென்கிறமானமும் மக்களிடத்தில்போயிருக்கின்ற ஆசையும் மனதிலே நிறைந்திருக்க நித்திரை போனதுபோலப் பிரக்ஞை தப்பியிருந்தான். ராவணனுஞ் சீதையையெடுத்துக்கொண்டு சீக்கிரமாய் இலங்கை போய்ச்சேர்ந்து திருமேனியைத் தீண்டுகிறதற்குப்பயந்து விஷத்துக்குச்சமானமான பொல்லாத ராக்ஷத ஸ்திரீகள் அநேகரைக் காவலாகப்பொருத்தி, அசோகவனத்திலே அந்த ராக்ஷத ஸ்திரீகளுக்குநடுவே சீதாபிராட்டியைச் சிறைவைத்தான்.



இவ்விடத்துச் சமாச்சாரம் இப்படியிருக்கப் பொன்மானின் பிறகேபோன தன்பிரானை நாயகருடைய செய்கையை அறிந்துவாருமென்று ஜானகியனுப்பிய லக்ஷ்மணர் சமாச்சாரம் இனிமேல் சொல்லுகிறேன். இளையபெருமாளானவர் சீதாபிராட்டியார் தனியேயிருக்கிறதைநினைந்து அதிகதுயரத்துடனே மனதுபதைக்க முன்னாளிலே சித்திரகூட பர்வதத்திலிருந்து ஸ்ரீராமனைப் பிரிந்துபோகமாட்டாமல் அயோத்தியாபுரிக்குத் தாயாருடன்போன பரதனைப்போல, கிலேசத்துடனே நடந்து ஆதி சீக்கிரமாய்ப்போய்த் திரும்புவோமென்று கடலிலே கப்பலோடுகிறதுபோல வேகமாய்ப்போனார் அப்படிப்போன லக்ஷ்மணர் ஆகோது செந்தாமரைப் புஷ்பம் பூத்துக்கொண்டு நீலமேகமானது வந்திருந்ததற்குச் சமானமான திருவழகுடைய ஸ்ரீராமபிரானைக்கண்டார். கண்டு கண்ணும் மனமுங்களித்தார். மாரீசனுடைய குரலைக்கேட்டுச் சீதை பெண்பிறப்பிற்கு உரித்தாகிய பேதைமையானதுமயக்க, மிகவுந் துயரப்படுகிறாளென்று அதிக சஞ்சலங்கொண்டு திரும்பி வருகின்ற கன்றுகிய ஸ்ரீராகவன் தம்பியைக் கண்ணினாலேகண்டான். கானலே வஞ்சனையாக அழைத்து விழுந்த ராக்ஷதனுடைய குரலைக்கேட்டு பொய்யென்று எண்ணமல் மிகுந்த துயரமாய்ச் சீதையானவள் கடுரமானவார்த்தைகளைச்சொல்லி அனுப்ப, என்னுடைய க்ஷேமத்தை விசாரிக்கிற நிமித்தமாக தன்சொல்லைத் தள்ளிவந்து இப்போது மனத்தளர்கின்ற என்னிடத்துக்கு என்சொல்லைத் தள்ளித் தனியே தன்மனமுங்கரைந்து இளையவீரன் வருகின்றது என்னதெரியாமை இது கன்று விருந்தென்று நினைத்து விதிசெய்கிறது என்ன [illegible]யமென்றும் எண்ணிக்கொண்டு நின்ற லோகநாயகனை லட்சுமணர்சமீபத்தில்வந்துபொற்பிரகாசமாகிய பாதாரவிந்தத்தில் சாஷ்டாங்கமாகச்சேவித்தார். அப்படிச்சேவித்த லக்ஷ்மணரைச் சீக்கிரமாக மின்னல்போலப் பூணூல் பிரகாசிக்கின்ற திருமார்பில் அழுந்தத் தழுவிக்கொண்டு, அப்பா என்ன நினைத்து என்னநிமித்தம் வந்தாயென்று தமையனார்கேட்க, தம்பியானவர் சொல்லுகிறார். உலகத்தி லில்லாதகொடிய சப்தம், ஆகஸ்மிகமாய்வந்து காதில்விழவே பிராட்டியார் மிகவுந்துயரமானார். அது ராக்ஷதனுடைய குரல் அம்மா! நீர் கிலேசிக்க வேண்டாமென்று அடியேன் எத்தனையாகச் சொன்னாலும் மெய்யென்று கொள்ளாமல் மனதுமருகி இவ்விடத்திலேநில்லாதே நீ யறிந்துவாபோவென்று சொல்லியிருந்தகோபத்துடனேயும் பிரலாபித்து, போகாமல் இங்கேயிருந்தையேயானால் நான் நெருப்பிலேவிழுந்து சாகிறேனென்றும், அரிதமாக அக்கினியைநோக்கி நடந்தபடியினாலே நான்பயந்து போகாமலிருந்தால் இவர் இறவாமலிருக்கிறதில்லை. ஆகையால், அப்படி நெருப்பில் விழுகிறதைப் பார்த்துக்கொண்டிருக்கிறது தர்மமல்லவேயென்று அடியேன் வந்தேனென்றுசொன்னார். அதற்கு ஸ்ரீராமன் அந்தமாயமானின் குரலைக்கேட்ட சீதையானவள் இறவாமல் இருக்கிறதில்லை. அதைக்குறித்து அவள்செய்கிற பிரயத்தனத்தையோ இவனாலே தடுக்க முடியாது. அவளோ இவன் சொன்னசொல்லை மெய்யென்று மனதிலேவையாள். உலகத்திலே பதனமாகக் காக்காமலிருக்கிற பொருளுக்கு நஷ்டம்வருகிறது சகஜமே ஆகையால் புனைவராமல் பிரயத்தனஞ்செய்து அபகரித்துக்கொண்டு [illegible]போகிறவர்கள், எப்படியும் இவனைப்பிரிக்கவேணுமென்றேசெய்த வஞ்சனை இதுவென்று திருவுளத்தில் நினைத்தவராய்த் தம்பியைப்பார்த்து அப்பா? நீ வந்துவிட்டது உன்னிடத்தில் குற்றமல்ல. அந்த சீதை கிலேசத்தினாலே சொன்னசொல்லால் கூடிவருகிறது இல்லையென்று தெரிந்திருந்தும் நீ யானாலும் அவள்மனமறுகிவிதனத்துடனேசொன்ன நிஷ்டூரமானது நீங்குமென்றல்லவா எண்ணித்தெளிந்துவந்தாய், அவள்மாத்திரமென்ன நான்முன்பு நீ சொல்லித் தடுத்தும் அது கேளாமல் அந்தமானைப் பிடிக்கிறேனென்றுதானே வந்தேன். அப்படிவந்த என்னுடைய லல்லவா காரியக்கேடானது ஐயோவென்றுசொல்லி அதையே நினைத்து நினைத்து மனங்கரைந்து பின்னும் நெடுநேரம் விருதாவாக இவ்விடத்தில் நின்று யோசனைசெய்கிறதிலே காரியமென்ன அந்தக் குயிலுக்கு இணையாகிய சீதையைக்கண்டாலல்லது துயரந்தீருமேயல்லாமல் வேறில்லையென்று தம்பியும் தாமும் கடுகநடந்து தங்களுடைய பாணத்தின் வேகத்தைப்போல அநேகயோசனை தூரத்தை அதி சீக்கிரத்திலே கடந்து, பொற்பிரதிமைபோலப் பிரகாசிக்கின்ற சீதையிருந்த சோலையில்வந்து சேர்ந்தார்கள். அப்படி ஓடிவந்த ஸ்ரீராம லக்ஷ்மணர்கள் பர்ணசாலையிலும், சோலையிலும்பார்த்துச் சீதையைக் காணாமல் சரீரத்தை விட்டுப் பிரிந்த [illegible] திரும்பி வந்து தன்சரீரத்தைக் காணாமல் திகைத்து நின்றது போல நின்றார்கள். ஸ்ரீராமர் மிகுந்த கிலேசத் துடனே ரத்தினகசிதமாகிய சர்வாபரணபூஷிதையான தம்முடையதேவியைக்காணாமல் ஒருவன் தான் தேடிவைத்த மகாநிதியை மண்ணுடனேகூடத் திருடர் திருடிக்கொண்டுபோக, அதைவந்துபார்த்து அவன் திகைத்ததுபோல மனம்திகைத்து நின்றார். அப்படிச் சர்வாந்தரியாமியான அந்தப் பகவானுடைய திருவுளங்கலங்கித் திகைத்துச்சுழலவே, பூமிசுழன்றது அஷ்டகுலகிரிசுழன்றது. திவ்யஞான முன்னவர்களுடைய எண்ணமுஞ்சுழன்றது. சப்தசமுத்திரமுஞ்சுழன்றது. ஆகாசமுஞ்சுழன்றது. வேதமுஞ்சுழன்றது. பிர்மதேவனுடைய கண்ணுஞ் சுழன்றது. சந்திரனும் சூரியனும், சுழன்றார்கள். அந்தருணத்திலே இந்தப்ப

ரமபுருஷன் தர்மத்தையே சீறுவானே! கிருபையையேசீறுவானே! தேவர்களையே சீறுவானே! முனீஸ்வரர்களையே சீறுவானே! வஞ்சகர்களுடைய பலத்தையே சீறுவானே! வேதத்தையே சீறுவானே! இனியே தாய்முடிமோவென்று உலகத்திலேயுள்ள சகல சராசரங்களும் அந்து நடுங்கி, மயங்கி, தியங்கிப் பின்னும் நீலமேகஸ்வரூபனான அந்த ஸ்ரீராமசந்திரனுடைய மனது கலங்குதலால் மூலகாரணனானவனுடனேகூடக்கணக்கில்லாத பலபல ரூபவஸ்துக்கள் அரூபவஸ்துக்களெல்லாம் முடிந்துபோகின்ற பிரளயகாலம்போலே மேலதுகீழதாய்க் கீழதுமேலதாய்க் கலங்கியதுகள். அவ்விடத்திலே பூமியிலே தேர்வண்டியோடின குறியையுங்கண்டார்கள் சீதையை எடுத்துப்போகவந்தவன் அவளைத் தீண்டுகிறதற்குப் பயப்பட்டு பூமியுடனே பேர்த்தெடுத்துக்கொண்டுபோனதும் அறிந்தார்கள். அந்தச்சமயத்தில் இவ்விடத்திலேநின்று பலமில்லாதவர்கள்போல பலபலயோசனைசெய்கிறதில் பிரயோசனமென்ன! அந்தப் பாவிகள் தூரத்திலேபோய் விடாததற்கு முன்னமே போய்த் தொடருவோமென்று இளையபெருமாள் சொன்னார். ஆம் அதுவேயுக்தமென்று ஸ்ரீராமரும் தம்பியுடன் அம்பறுத்தூணிமுதலானதுகள் தாங்கிக்கொண்டு மலைகள், மரங்களெல்லாம் மடிந்து போகப் பெரியபர்வதம் உருண்டுபோனதுபோலநிலத்தில் அழுந்திப்போன ராவணனுடைய தேர்வண்டிக் காற்சுவட்டுவழியே துரிதமாய்ப்போனார். அவன் பூமியில் தேர்விட்டுக்கொண்டு போனதூரமெல்லாம்போய் அப்பால் ஆகாசமார்க்கமாய் எழும்பத் தேர்விட்டிருந்தபடியினாலே தேர்ச்சுவடு தெரியாமல் வெந்தபுண்ணிலே வேல்நுழைந்ததுபோல மனதுமிகவும்புழுங்கி இனியோசனைசெய்துநாமென்ன செய்கிறது தம்பியென்று ஸ்ரீராமர் கேட்கஸ்வாமி! தெற்கு நோக்கிப்போயிருக்கின்றது. நன்றாகத் தெரிந்தது ஆயினும் அந்தத்தேர் ஆகாசமார்க்கத்திலே போயிருக்கின்றது ஆகாசம் நம்முடைய பாணத்துக்கு நெடுந்தூரமானதல்ல, வீணாகவிம்மி இவ்விடத்திலே நிற்கிறதில்பிரயோசனமென்ன தென்திசையே போவோமென்று லக்ஷுமணர்சொல்ல, மெய்தான் அதுவே காரியமென்று சுவாமியும், இளையவரும், தெற்குத்திசைநோக்கி இரண்டுயோசனைதூரம்போனார்கள். அவ்விடத்திலேசண்டமாருதக்காற்றடிக்க அதினால் முறிந்துவிழுந்து கிடக்கிற பர்வதம்போல வீணையெழுதியிருக்கின்ற துஜமொன்று பூமியிலேகிடந்ததைப் பார்த்தார்கள், பார்த்தவுடனே சிவசிமித்தந் தேவர்கள் ஆசோவந்து அந்தப்பாவிகளுடனே யுத்தஞ்செய்திருக்கிறார்களென்று சந்தோஷமாக நினைத்து அந்தத்துஜத்தை உற்றுப்பார்க்க அதுபக்ஷியினுடைய மூக்கினால் ஒடிபட்டதாகக் குறிப்பிருக்கின்றதென்று அறிந்து கமலநேத்திரங்களில் ஜலந்துளிக்க ஸ்ரீராமர்சொன்னார் அதுகண்டு லக்ஷுமணர் சுவாமி! உங்கள் தகப்பனாராகிய ஜடாயுவேகண்டு அதிசீக்கிரமாகவந்து யுத்தஞ்செய்தார் அவர் மூக்கினால்தான் இது ஒடிந்திருக்கின்றது அப்பால் என்னடந்ததோதெரியவில்லை, அவர் தனிமையானபடியினாலும் அநேககாலங்கண்ட விர்த்தரானபடியினாலும் நாம் சீக்கிரமாகப் போய்ச்சேரவேணும். நாம்வந்துகூடுகிறமட்டுந் தடுத்துக்கொண்டிருப்பாரேயல்லாமல் கொஞ்சத்தில் விடுகிறவரல்ல, ஒருவேளைஜெயித்து மீட்டிருந்தாலும் மீட்டிருக்கலாம். வேறேயோசனைசெய்து காலநாமசஞ்செய்கிறதிலே பிரயோசனமில்லையென்று லக்ஷுமணர்சொல்ல, மஹாநுபாவரான ஸ்ரீராமருந்தொடர்ந்துபோகிறதே நல்லதென்றுசொல்ல, அதிவேகமாய்ச் சுழல்காற்றுப்போலவும் காற்றாடிபோலவும், போகிறவர்கள் ஆகாசத்திலே பிரகாசிக்கிற பச்சைவில் முறிந்துகிடக்கிறதுபோலவும், சமுத்திரத்தின் கரைபோலவும், ஒருபெரியவில் முறிந்துகிடக்கக் கண்டார்கள் சுவாமியானவர் லக்ஷுமணா! இதோவிழுந்துகிடக்கிறது இதுபூர்வத்திலே சமுத்திரங்கடைந்த மந்தரகிரிபோல இருக்கின்றது, இந்தவில்லை ஒடித்த மகாபுருஷனுடைய பலத்தைப் பாரென்றுசொல்ல, இளையபெருமாள் அவ்விடத்திலின்று அதைப்பார்த்தார். பின்னும் வெகுதூரம் நடந்து அப்பால் ஒருபெரியசூலமுமே அம்பறுத்தூணியும் ஆகிய இரண்டும் இரண்டுபர்வதம்போல, கிடக்கிறதைக்கண்டு அதிசயங்கொண்டார்கள், பின்னும் அப்புறம் நடக்கிறபோது வானத்திலே பிரகாசிக்கின்ற நவக்கிரகங்கள்நட்சத்திரங்கள் முதலாகியசோதிஸ்வரூபங்களெல்லாம் ஒருமிக்கக்கூடி யிருக்கிறதுபோல ஆரணியமெல்லாம் நிறைந்து சொலித்துக்கொண்டிருக்கிற கவசத்தைக்கண்டார்கள். அப்பால் வாயுவேகமான குதிரைகளும், சாரதியும், மாண்டுவிழுந்துகிடந்தவிடம் போய்ச்சேர்ந்தார்கள். அப்பால் ரதமுஞ்செவ்வானம்போலப் பாரிக்கிடக்கிறதுங் கண்டார்கள். கண்டு ஆச்சரியப்பட்டுத் தகப்பனார் சாமர்த்தியத்தை என்ன சொல்லலாமென்று கைகளைவிரித்து அப்பால் நடக்கிறபோது, பிரளயகாலத்திலே ஆகாசத்தைவிட்டு அநேகசூரியமண்டலம் பூமியில்விழுந்து கிடக்கிறதுபோலப் பலகுண்டலங்களும் ரத்தினகசிதமான பலவித ஆபரணங்களும் கிடக்கிறதைக்கண்டு தம்பி! அநேகவாகுவலயங்களும் அநேககிரீடங்களும் விழுந்துகிடக்கின்றதுகளாலைகயாலநம்முடைய தகப்பனாருடனே வெகுபேர் ராக்ஷதர்கள் யுத்தஞ்செய்திருக்கிறார்களென்று ஸ்ரீராமர்சொல்ல, சுமித்திரைகுமாரராகிய லக்ஷுமணர் அப்படியானால் பலதலையும் பலதோளுமுடைய ராவணனொருவனே யுத்தஞ்செய்து, நம்முடைய தகப்பனாரை இவ்வளவுதூரங் கொண்டுபோனவனாகவேணுமென்று சொன்னார். அதைக்கேட்டுக் கண்களிலேநெருப்புப்பொறி பறக்கப்பார்த்து அப்பால் அதிசீக்கிரமாக நடக்கிறபோது, ரத்தசமுத்திரத்திலே மந்தரகிரிபோல் விழுந்துகிடக்கின்ற தகப்பனாரைக்கண்டார். கண்டவுடனே செந்தாமரைக் கண்களிலிருந்து துளித் துளியாய் நீர்சொரிய, பிராணபதமாகிய அன்புண்டான தகப்பனார் திருமேனியின்மேல்மேகஸ்வரூபரான ஸ்ரீராமர் வராசிகரியின்மேல் நீலகிரிவிழுகிறதுபோலவிழுந்து ஒருநாழிகைமட்டுந் சுவாசமில்லாமல் ஸ்தம்பித்துப் பிரக்ஞை தப்பியிருக்க, லக்ஷுமணர் பயந்து கைதாங்கலெடுத்துக் குளிர்ந்த அருவி நீரைத் தெளித்து உபசாரஞ்செய்தார். அப்போது கமலநேத்திரங்களை விழித்துப்பார்த்துத் துக்கிக்கத் தலைப்பட்டார்.



கவி.

தந்தாதையாதத்தனையர்கொலைசூழ்ந்தார்.......*
முந்தாரோயுள்ளார்முடிந்தானேமுன்னொருவன்.......*
எந்தாயேயெற்காகநீயுமிறந்தனையால்..........*
அந்தோவினையேனருங்கூற்றமானேனே.........(க)
பின்னுறுவதோராதேபேதுறுவேன்பெண்பாலாள்....*
தன்னுறுவதீர்ப்பான்றனியுருவதோராதே........*
உன்னுறவுதீர்ந்தாயோவோருறவுமில்லாதேன்........*
என்னுறுவான்வேண்டியிடருறுவேனெந்தாயே....(உ)
மாண்டேனேயன்றேமறையோர்குறைமுடிப்பான்....*
பூண்டேன்விரதமதனுலுயிர்பொறுப்பேன்.........*
நீண்டேன்மரம்போலநின்றொழிந்தேன்புன்மொழியேன்
வேண்டேனிம்மாமாயப்புன்பிறவிவேண்டேனல்...(௩)
என்றாரம்பற்றுண்ணவேன்றுமையைச்சான்றுமையக்.......*
கொன்றானுநின்றான்கொலையுண்டுநீகிடந்தாய்.........*
வன்றாட்சிலையேந்திவாளிக்கடல்சுமந்து..............*
நின்றேனுநின்றேனெடுமரம்போனின்றேனே.......(௪)
சொல்லுடையாரென்போவினியாரோதொல்வினையே
இல்லுடையாள்காணவிறகுடையாயென்னெனிலாய்...[ன்
பல்லுடையானின்னைப்படையுடையான்கொன்றேக...*
வில்லுடையேனென்றேனிறலுடையேனல்லேனே(௫)

என்பன—தங்கள் பிதாக்களைக்கொன்ற பிள்ளைகள் பூர்வத்தில் ஆரிருந்தார்கள் முன்னொருவர் மடிந்துபோனார். ஐயா! இப்போது எனக்காக நீரும் இறந்துபோனீர். ஐயோ! பாபகர்மத்தையுடைய நான் உங்களுக்குளமனவந்து வாய்த்தேனே! பின்வருங்காரியம் அறியாமல், பெண்சாதிவார்த்தையைக்கேட்டு இப்படித் துயரத்தை அநுபவிக்கின்றநான் தனியேயிருப்பதைநினையாமல், நீரும் உம்முடைய உறவு நீந்துபோனீரோ? ஒருறவும் இல்லாதவனாகி வேறே யென்னபயனைப்பெறஇச்சித்து இனிக்கிலேசப்படப்போகிறேன். ஐயா! நான் முன்னமேமாண்டுபோவேன்; ஏன் அப்படியாகவில்லையென்றால், ரிஷிஸ்வரர்களுடைய குறைகளைத் தீர்க்கும்படியாக ஒருவிரதம்பூண்டுகொண்டேன். அதனால் உயிரைச்சுமந்துகொண்டு ஒருமரம்போல நிற்கின்றேன். அப்பமாகிய செய்கையையுடைய நான் இந்தமஹாமாயாசம்பந்தமாகிய புன்பிறவியை இனிவேண்டேன். என் மனையாட்டி ஒருவர்கையிலே பிடியுண்ண, அதுநியத்தம் எதிர்த்து யுத்தஞ்செய்த தர்மஸ்வரூபரான உம்மைக்கொன்றவனும் ஜீவனுடன் இருக்கின்றான். அவன்கையினாலே கொல்லப்பட்டு நீரும் விழுந்துகிடக்கிறீர். பெரியவில்லையுமேந்திக்கொண்டு சமுத்திரம்போல அநேகம்பாணங்களையும் சுமந்துகொண்டிருக்கின்ற நானும் ஒரு பெரியமரம் போலிருக்கிறேன். கீர்த்தி சம்பாதித்தவர்களில் என்னைப்போல ஆரிருக்கிறார்கள். என்னுடைய பெண்சாதி பார்த்துக்கொண்டிருக்க, 'நீண்டசிறகினையுடைய என்பிதாவே! உம்மை என்னத்தொலையாத பக்களையும் ஆயுதங்களையுமுடைய ராக்ஷதன் சிறகைவெட்டிக்கொன்றுவிட்டுப்போக! நானுங் கையிலே வில்லைவைத்துக்கொண்டு ஜீவனுடனேயும் இருக்கிறேன். நான்பலசாலியல்லவோவென்று இப்படிப் பலபலவிதமாகச் சொல்லி அழுதுமயங்க, தம்பியும் அப்படியேபிரலாபிக்க, அந்தச்சமயத்திலே ஜடாயுவானவர் கொஞ்சம் மூர்ச்சைதெளிந்து கண்ணைவிழித்து இருவரையும்பார்த்தார். நடந்தசமாசாரந்தெரியாமல் உயிர்கூஏங்கப் பெருமூச்சுவிட்டுபிள்ளைகளைக்கண்டதனால் மனதுகுளிர்ந்து அறம்கிறரும் பிராணனும் சப்தலோகாதிபத்தியமும் பெற்றதுபோலச் சந்தோஷித்து இனி என்பழி தீர்ந்துக்கொண்டேன் நான்செய்தபாக்கியத்தினாலே என்னுடைய பயனில்லாததிக்கையுடைய சரீரத்தை இன்றையதினம்போக்கிவிடுகின்றேன் இந்தத்தருணத்திலே எனக்கு உங்கள்தெரிசனங்கிடைத்தது புண்ணியபுருஷர்களே வாருங்களென்று, ராவணனுடையமகுடங்களைக் கீழேதள்ளி அவன் தலைகளைக் கொத்தியமூக்கினாலே குமாரர்களிருவரையும் உச்சிமோந்து, அப்பா! இந்தக்காரியம் வஞ்சனையினாலே வந்ததென்று முன்னமேதானே என்மனதிலே நினைக்கப்பட்டது. ஆனாலும், அருந்ததிக்கொப்பாகிய சீதாபிராட்டியைவிட்டு இருவரும் நீங்கிப் போனீர்களாவென்றும் சொன்னார். சொல்லவே ராமாநுஜரான லட்சுமணர் மாயமான் வந்ததுமுதலாக நடந்த சமாச்சாரமெல்லாம் ஒன்றுவிடாமல்சொன்னார். அதுகளை யெல்லாங் கேட்டு இவர்களுக்குக் கிலேசம்வராமல் தேறச் சொல்லுகிறது நல்லதென்று எண்ணி, ஜடாயுவானவர் சொல்லுகிறார். என்னுடைய பிராணபதமானகுமாரர்களே கேளுங்கள். இன்பதுன்பங்கள் விதிப்படிக்கு நடக்குமே யல்லாமல் அதற்கு அதிசயமாக எவ்வளவாகிலும் ஒருவரால் அமைக்கக்கூடுமா! ஆகிலும் நாம் மதியின் வலுமையைக்கொண்டு அந்தவிதியைவெல்லமாட்டுவோமா ஐயரம்வந்து பிரவேசித்தமனதுக்கு மேலுங்கோபமும் கேடுமுண்டாக்கிக்கொள்ளுகிறது தெரியாமையே இந்தலோகமெல்லாஞ் சிருஷ்டித்த பிரமாவினுடைய தலையை அறுப்பித்தவிதிக்கு அருமையானது ஒன்றிருக்கின்றதா சுகமும் துக்கமும் வருங்காலத்தில் அதுகளைவாராமல்தடுப்போமென்பது உண்மையாகுமா! முப்புரங்களை யெரித்த சிவன் தன்கையிலே தலையோட்டை யேந்திக்கொண்டு இரந்ததுகேட்டறியீர்களா! சூரியனைச்சர்ப்பம் விழுங்கிவிடுகிறதும், சந்திரன்வளர்ந்து தேய்கிறதும், திருஷ்டாந்தமாக இருக்கின்றதுகளே! தேவேந்திரன் தேவகுருவின் வார்த்தையினாலே பட்டதுசொல்லி முடியுமா! அந்தத்தேவேந்திரன் சம்பராசுரனாலேபட்ட பிரயாசமோ மிதமில்லை. அந்தஅசுரனை உங்கள் தகப்பனார் கொன்றல்லவோ அந்தப்பிரயாசத்தைத் தீர்த்தார். பஞ்சவர்ணக்கிளிபோலப் பாஷிக்கின்றசீதையைநீங்கள் பிரிந்ததானென்னவென்றால்தர்மமும்தேவர்களும்படுகின்ற துயரமுஞ்செய்தசெய்கையேகளைப்போர்செய்கின்றராக்ஷதர்களென்கின்றகளைகளைக்களைந்து அநேகஆயிரவருஷங்கள் மாவடுவைப்போலக்கண்களையும் நீண்டகூந்தலையுமுடை

அப்பா! லட்சுமணா! நீயும் ஒளித்துப்போயினையா! நல்லவிவேகியாயிருந்தையே நீபிழைசெய்யலாமா! இப்படிச்செய்தால் உலகம் அங்கீகரிக்குமா! மகத்தான கிலேசம்வந்தாலும் தீர்க்கின்ற நீயே தீராத கிலேசத்தைக்கொடுத்து, என்னை இவ்விடத்திலே எப்படிவெறுத்துப்போய்விட்டையோ! என்னருகேவாராமல் இத்தனை நாழிகையென்றாலும் பிரிந்திருந்தையா! என்னைப் பெற்றதகப்பனைத் தாய்மாரைப் பெண்சாதியைப் பிரிந்தும் உயிர்போகாமலிருக்கின்றது எதினாலென்றால், உன்னைப் பிரியாமலிருக்கிற தைரியத்தினாலேயல்லவா! சீதையைப்பிரிந்தநான் அவளைக்காணாவிட்டாலுந் துறந்து தவஞ்செய்வேன். நீபிரிந்தால் நானென்னசெய்வேன்! இன்றைக்கே இறந்துபோகின்றேன்! இதைக்கேட்டால்நம்முடைய சுற்றத்தார்களெல்லாஞ் சாகாமலிரார்கள் உன் பந்துஜனத்தையெல்லாம் ஒருமிக்கக்கொல்லனத்தனித்தையே. இதுதானென்னுடையசற்குணம். மாந்தாதா முதலாகவந்த ராஜரீகத்தின் ஆசைதுறந்து என்னுடனே கூட வந்தையே! இப்போது கைவிட்டுப் போயினையாவென்று இப்படியாகச்சொல்லி, விழுந்து பூமியிலே விழுந்து சிறிதுநாழிகைபேசாமலிருந்து யோசனைசெய்து உணர்வழிந்து இது என்னவினையென்று பெருமூச்சு விட்டு பலவிடங்களிலுந்தேடி பேர்சொல்லி அழைத்து மனதுவாடி மயங்கிசோர்ந்து சீதையுடனேகூட என்னை ஒருக்ஷணமாகிலும் பிரியாமல்காத்துக்கொண்டிருந்த தம்பி இத்தனைநாழிகைவாராம லிருப்பானா! பூமிக்குச் சுமையாய் உழல்கின்ற பழவினையையுடைய எனக்கு இந்தவாழ்வுதகாது. ஏதாவது சிறிது தர்மமுண்டாயிருந்ததேயாமாகில் அவன்எனக்குத் தமையனாய் வந்து பிறந்தாலும் பிறக்கட்டும். நான்வாளினாலே பிராணனை விட்டுக்கொள்ளுகிறேனென்று நினைக்கிற சமையத்தில், அயோமுகிகையில் அகப்பட்டுக்கொண்ட லட்சுமணர் அவள்மாயையைஅறிந்து வாளினாலே அவளுடைய மூக்கையறுத்தார். அறுக்கவே மூக்குநொந்ததனால், அவள் கூச்சலிட்டாள். அந்தக்கூச்சல் காதிலேகேட்டது. இந்த ஆரணியத்திலே ராக்ஷதர்யுத்தஞ் செய்கிறார்கள், ராக்ஷஸியின் அழுகுரலாய்க் காண்கின்றதென்று தெரிந்து அக்கினியஸ்திரத்தைக் கையிலெடுத்துக்கொண்டு அல்கின் இருபுறமும் பிரகாசிக்கச் சுழற்றினார். அப்போது இருளெல்லாம் இந்தலோகம்விட்டு அப்பாலேபோகராத்திரிகாலமானது பகற்காலம் போலப் பிரகாசித்தது. அந்த அக்கினியஸ்திரத்தின் வெளிச்சத்திலே ஸ்ரீராமர் மலைகள்பொடிபட மரங்கள் ஒடிபட பூமிநெளிபட சடசடவென்று சப்தமுண்டாக, வாயுவேகத்திலும்மூன்றுபங்கு அதிவேகமாய்நடந்தார். ஊழிக்காலத்திலே கருங்கடல்பொங்கி பூமியிலேபிரளயமாய் வருகிறதுபோல, வருகிறதமையனைத் தம்பியானவர்கண்டு, சுவாமி வருந்தவேண்டாம் அடியேன்வந்தேன்வந்தேன் திருவுளத்திலே கிலேசிக்கவேண்டாமென்று சொல்லிக்கொண்டே சமீபத்திலேவந்து சுவாமிதிருவடியைச்சேவித்தார் அப்போது ஸ்ரீராமச்சந்திரன் கண்களிலே ஊற்றுப்போல ஜலமொழுகநின்று, இளங்கன்றைப் பிரிந்த பசுவானது எங்குந்தேடி மகாபிரயாசத்தினால் கண்டதுபோல, பலதரந்தழுவிக்கொண்டு கண்ணீரினாலே அவருடைய பொன்மேனியைச் சர்வாங்கமுங்கழுவி, அப்பா! தப்பிப்போயினையென்றிருந்தேனென்று சொல்லி ஆங்கே நடந்தசெய்தியென்ன சொல்லென்றுகேட்க! லட்சுமணர் நடந்ததையெல்லாஞ்சொன்னார். அதுகேட்கவே துக்கமும், சந்தோஷமும் அடைந்தார். தனக்குச் சமானந் தாமேயல்லாமல் வேறொருவரில்லாத பகவானானவர் சமுத்திரத்தில் கப்பலோட்டிக்கொண்டுபோகின்றவன் அலைவருகிறபோதெல்லாங் கிலேசிக்கின்றதுபோல, பிறவிச்சிறையில் அகப்பட்ட நான் அதற்குச் சுபாவமான துயரத்தால் கிலேசிக்கிறேனென்றுசொல்லி, பின்னுஞ் சொல்லுகிறார். திரிமூர்த்திகளும் இந்த மூன்றுலோகத்திலுமிருக்கின்ற சகலமானவர்களும் எனக்குப் பகையானாலும், நீயொருவன்இருக்கும்போது என்னை ஜெயிக்கிறவர்கள் ஆரிருக்கிறார்கள், பிரிகின்றவர்களெல்லாம் பிரியட்டும், வருகின்றதுக்கமெல்லாம் வரட்டும். மேலும் துக்கமென்பது உன்னைப்பிரிந்தால் என்னிடத்தில் வருமேயல்லாமல் நீயிருக்குமளவில் வருமா! தம்பிஅங்கே வந்த ராக்ஷஸியை ஜெயித்தேனென்றுசொன்னையே, அவள்கூவின கூசலிலே அவளைக் கொல்லவில்லையென்று நீ காண்கின்றதே அது என்னசமாசாரஞ்சொல்லென்று கேட்டார். சுவாமி! மூக்கையுங் காதையும் அறுத்துவிட்டேன். அவள் கூசலிட்டுக் கொண்டு ஓடினாளென்று, இளையபெருமாள்சொல்லி இரண்டுகையையுங் கூப்பித் தொழுதார்மதுமாந்தாதாமுதலானவம்சசிரோமணியாகிய நம்முடைய தம்பி காடாந்தகாரமான இருளிலே கொல்லவந்தவளையுங் கொல்லாமல் மூக்கையறுத்துத் துரத்திவிட்டான், ஆகையால் இவன் நல்ல சமர்த்தனென்று தழுவிக்கொண்டு, அப்பா முன்னாளிலே விஸ்வாமித்திரர் பின்னே போயிருந்தபோது தாடகைவந்தாள். அவளைக் கொல்லென்று அவர்சொல்ல அந்தக்ஷணமே பாணப்பிரயோகஞ்செய்து நான்கொன்றேன். நீநேற்று வந்த சூர்ப்பநகியையுங் கொல்லாமல், இந்த அயோமுகியையுங்கொல்லாமல் மூக்குங்காதும் அறுத்துத்துரத்திவிட்டாய், பெண்ணைக் கொல்லலாகாதென்கிற தர்மம் நான் பாராமற்போனேன். உன்னுடைய விவேகத்துக்கு நானென்னசொல்லப் போகிறேனென்று சந்தோஷமாய்ச்சொன்னார். பின்பு தீராதுயரம் சிறிதுதீர்ந்ததுபோல நினைத்துச் சந்தோஷித்து ஸ்ரீராமனுந்தம்பியும், பொழுதுவிடிந்ததல்லவோ அப்பாலே போகவேணுமென்று, கொண்டுவந்த தீர்த்தத்தைச் சாப்பிட்டு அந்தமலையிலே தங்கினார்கள். அவ்விடத்திலே லக்ஷுமணர் புஷ்பமுந்தளிருங்கொண்டுவந்து படுக்கைசெய்ய, அதின்மேலே சக்ரவர்த்திதிருமகன் பள்ளிகொண்டிருந்தான். லட்சுமணர் திருவடிகளைவருடிக்கொண்டிருந்தார் சீதை பிரிந்த பின்பு அபிமானமாகிய வியாதிகொண்டு சுவாமியானவர் கந்தமூலபலாதிகளில் ஒன்றும் பக்ஷியாமல் துக்கமேமிடுதலால் நித்திரையுமில்லாமல் உயிர் ஊசலாடும்படிச்



சோர்ந்து சோர்ந்து பெருமூச்செறிவார். அவளுடைய ஸ்வரூபத்தை மறவாமல் நினைத் திருக்கிறதினாலேயோ! ராக்ஷதர்களுடைய மாயையினாலேயோ! அவர் பார்க்கின்ற வனத்தி னிடமெல்லாம் சீதையினை உருவமாகக் காணத்தலைப் பட்டது. அந்தருணத்திலே ஸ்ரீராமர் [illegible]றபுடையவர்களுக்குப் பூஷணமாகிய ஜானகியானவள் இதோ என்பக்கத்தில் வந்திருக்கின்றாள். இவளை [illegible] தழுவிக்கொள்ளுகிறேனென்று எழுந்திருந்து உருவெளியைத் தழுவ ஸ்பரிசப்படாமையால் என்ன? என்னன்னையே யிருந்த சீதையைத்தழுவியும் உருவு கையில் அகப்படவில்லையே! அது அவளிடையைப்போலத் தேய்ந்ததோவென்றும், மற்றும் அவள் என்பக்கத்தில் வந்திருந்தது மெய்யானால் எனக்கு அவளுடைய அதராமிர்தம் கிடையாமற்போனதென்ன! இது கனவாயிருக்குமென்று நினைத்தாலும் நித்திரையில்லாமல் கனவுண்டாமோவென்றும், சீதையினுடைய கண்ணைப்பார்க்கிலும் இந்தராத்திரி பெரிதோவென்றும், இந்தச்சந்திரன் பிரளயகாலாக்கினியே யாகவேணும், அதல்லால் இவன் சமுத்திரத்தில்வர்வே சமுத்திரங்கொதித்து ஆகாசத்திலேதெறிக்க அந்தத்துளிகள்பட்டுக் கொப்புளித்ததல்லவா! இந்நக்ஷத்திரங்களென்றுஞ்சொல்லி, வெகுவாகக்கிலேசித்தார். இப்படித் துயரப்படுகிற சக்கரவர்த்தி திருமகனைக்கண்டு பயந்து அதிசீக்கிரமாய் வந்ததுபோலச் சூரியன் உதையமானான்.

அயோமுகிப்படலம் - முற்றிற்று.

## கபந்தப்படலம்.

பூமியைப்போலப் பொறுமையும் அதுசூழ்வரையைப்போலக் கற்பும் உண்டாயிருக்கின்ற சீதையைத் தேடிக் காணாமல் அழுகிறதுபோல் ஆரணியத்திலிருக்கிற பக்ஷிகளெல்லாம் புலம்பி இரைய விடியும் நேரத்திலே ஸ்ரீராமலக்ஷுமணர்கள்புறப்பட்டு நடந்து ஐம்பதுயோசனைதூரந்தேடினார்கள். அப்போது சூரியன் ஆகாசத்தின்நடுவே வந்துசேர்ந்தான். அந்தமத்தியான வேளையிலே வில்வீரரான இருவரும் அப்படி நடந்து போகையில் சகல ஜீவராசிகளையும் வாரி வயிற்றில் அடக்கிக்கொள்கின்ற கபந்தனுடைய வனத்தைக்கண்டார்கள். எறும்பு கடையானை முதலான ஜீவகோடிகளெல்லாம் சேர்ந்து வெளிக்கப்பார்த்து நடுநின்ற வலையில் அகப்பட்டதுகள்போலவும் பறிக்க அஞ்சாமலும் ராஜரீகஞ் செய்யத்தக்க சாமர்த்தியமும் புஜபலமும் இல்லாமலுமிருக்கின்ற அரசனுடைய நாட்டில்வாழும் ஜீவர்களைப்போலவும் அதிக பயப்பிராந்தியாய் விழுந்தும், சிதறியும், விம்மியும், ஓடியும், மயங்கியும், வருந்துகின்றதைப் பார்த்தார்கள். மலைகள் உருண்டு வருகிறதும், பெரியவிருக்ஷங்களெல்லாம் வேரோடேபறிந்து சேர்ந்துவருகிறதும், சாலுமுகள் ஆகாசபரியந்தம் எழும்பிப்பாயப் புரள்கிறதும், சூல்கொண்ட மேகங்கள் சுருண்டு கீழேவிழுகிறதுமாக பிரளயகாலத்தில் பிரசண்டமாருதத்தினால் நான்குசமுத்திரமும் ஒருமிக்கப்பொங்கிச் சராசரங்களையெல்லாம் வாரிக்கொண்டு வருகிறதுபோல காற்றிலும் நெருக்கிவளைத்து நடு.

வாரிக்கொண்டுவருகிற அந்தக்கபந்தன் கைக்குள்ளே சகலஜெந்துக்களும் நெருங்கிவரக்கண்டு சீதை நிமித்தமாய், அந்த ராக்ஷதனுடைய சேனைகள்வந்து வளைந்ததென்று ராமலக்ஷுமணர்கள் சந்தோஷமானார்கள். உடனே சக்கரவாளகிரி நெருக்கிக்கொண்டு வருகிறதுபோலவருகிற அவனுடைய கையாகிய மதிலுக்குள்ளே தாங்களும் அகப்பட்டுக்கொண்டார்கள். அப்போது பெரியபெருமாள் இளையபெருமாளைப்பார்த்து அப்பா ராக்ஷதசேனைவந்து வளைந்ததாய்க் காண்கிறதே, நமக்கு இந்தனை கிலேசம்வரும்படி வஞ்சனைசெய்து ஜானகியை எடுத்துப்போன ராவணனுடைய பட்டணமுஞ் சமீபத்திலேதானே யிருக்குமதல்லால், நம்முடைய துயரந் தீருமென்றுசொன்னார். அதற்கு லக்ஷுமணர் சுவாமி! ராக்ஷதசேனையானால் முரசு அறைகின்ற சப்தமும், சங்கநாதமுதலானதுகளும் உண்டாயிருக்குமே! அவை இல்லையே ஆகையால், பின்னை யேதாகிலும் ஒன்றாகவேணுமென்று சொல்லித் தொழுது, பின்னே யிருந்தவர் முன்னே வந்து நின்று பார்த்து ஐயா! அமிர்தங்கடைந்த வாசுகியோ! அல்லவென்று அதற்குச் சமானமான வேறொருநாகமோ! தெரியவில்லை. வாலோடுந் தலையை வைத்துச் சகல ஜீவராசிகளையும் உள்ளே இழுத்துக்கொள்ளுகிறதுபோலவே யிருக்கின்றதென்றுசொல்ல, ஸ்ரீராமர் அப்படித்தானிருக்குமென்று சொல்லிக்கொண்டு தம்பியுடனேநடந்து மூன்றுயோசனைதூரம் உள்ளேபுகுந்தார். அங்கேயொரு மகாபர்வதத்தில் இரண்டு சூரியர்களைப் பதித்துவைத்தாற்போல எரிந்து-புகைந்து-சிவந்து-கொதிக்கிற கண்களும், பல்லுக்குப் பல்நடுவே இரண்டு யோசனை அகன்ற வெளியும், வயிற்றிலே ஒருசமுத்திரமிருப்பதுபோல வாயும், தேவர்களும், அசுரர்களும், கடலைக்கடைகிற நிமித்தமாக மந்தரகிரியிலேசுற்றித்தொங்கவிட்ட வாசுகியைப்போல இரண்டுபக்கத்திலும்நீண்டிருக்கின்ற இரண்டுகைகளும், கருமான் உலைக்களத்திலே யெழும்பும் புகைபோலப் புகையெழும்புகின்ற மூக்கும், சமுத்திரத்தைக்கலக்கி இழுத்துக்கொண்டிருக்கிற வடவாமுகாக்கினிக் கொழுந்துபோல வெளியிலே தொங்குகின்ற நாக்கும், ராகுவென்கின்ற கரும்பாம்பின் எயிறைவசப்படுத்து அரண்தொடுக்கொண்டுபோய் ஒருமலைக் குகையிலேநுழைகிற சந்திரனை இரண்டுகூறாக்கிவைத்ததுபோலப் பிரகாசிக்கின்ற இரண்டு [illegible] சூரியனுக்கு [illegible] துவாரிய சா[illegible] பங்களும் வேலையிலாததுபோது உறங்கிக் கிடக்கின்ற பிசாசுகள்போல இரண்டுகாதும், பொய்சொல்லியும்பாவங்களைச்செய்தும், பூமியிலேதிரிகிறவர்கள் சேர்கிற நரகத்தைப்போல வாயும், பஞ்சபூதமும், பஞ்சபாதகமும் திரண்டு ஒருரூபமெடுத்ததுபோலச் சரீரமும், சகல பிராணிகளும் பயந்தபடித்து நடுக்கத்துடனே நுழைகின்ற நமனுடைய வாசலைப்போல, கைகளினாலே அநேககோடி உயிர்களைப்பிடித்து நெருக்கி நுழைத்து ஒருமிக்க விழுங்குகின்ற பெரியவாயும், சமுத்திரகோஷத்திலும் அதிக சப்தமுண்டாகிய கம்பேசமும், ஆலகால விஷம்

ம் வில்வேணுமோவென்றுஞ் சொல்லிக்கொண்டு வில்லைப்பார்த்து நகைத்தும் தோளைப் பார்த்து நகைத்தும் முடிவிலே வருகிற சொல்லைப்பார்த்து மனம்திடுக்கிட்டும் வேதமுடிவை யறிந்தவர்களாலே அறியப்பட்ட ஸ்ரீராமன் மற்றுந் தென்றற்காற்றுக் கூற்றுவனைப்போல வருகிறதைப்பார்த்து சீதையென்னைவிட்டுப்பிரிந்தாளோவென்று மதயானையைப்போலப் பெருமூச் செறிந்தும் ராஜ்ஜியபாரஞ்செய்து அநேகஜீவனை ரக்ஷிக்கிறதற்குச் சம்மதித்த நான் வீட்டுப்பெண்சாதியை ரக்ஷிக்கிறதற்கு நிர்வாகமில்லாமற்போனேனே. என்பலம் நன்றாயிருந்தது நன்றாயிருந்ததென்றும் இப்படியாகச் சொல்லிச்சொல்லி நாணிப்புலம்ப, அத்தருணத்திலே லக்ஷ்மணர் மிகுந்த துயரத்துடனே குளிர்ந்த துளிர்களினாலேபடுக்கைதிருத்த அதிலேசயனிப்பார். அது சரீர உஷ்ணத்தினாலே தீந்துபோகவும், பிராணன் புழுங்கவும், வாயும், மனமும், புலரவும், மயக்கமுற்றவராய் சீதைபிரிந்ததினாலேயோ! அபிமானத்தினாலேயோ! சிறிதுநேரமாகிலும்கண்கிளிமையாமல் ஆயிரங்கற்பகாலத்தைக் கடக்கிறதுபோல அந்தராத்திரிக்குக் கரைகாணுமல் தம்பியைப்பார்த்து அப்பா! இதுவரைக்கும் ஒருதன்மையாயிருந்த ராத்திரி இன்றைக்கு மிகவும் நீண்டு தொலையாமலிருக்கிறதற்கு ஏதுவென்னவென்றும் சந்திரனைப்பார்த்து நாளுக்கு நாள் தேய்ந்துதேய்ந்து வெட்கிக்கிடக்கின்ற நீ சீதையின்முகம் அப்பாலே போய்விட்ட படியினாலே மிகவும் பிரகாசிக்கிறாயென்றும் அந்த ராக்ஷதன் அருணனுடனேகூடச் சூரியனையுஞ் சிறை யிட்டானோவென்றும் அல்லது தன்குலத்துக்கு இவ்விதமாகியபழிவந்ததேயென்று நாணி இந்த உலகத்தைவிட்டுச் சூரியன் ஓடிப்போனானோவென்றும், சீதைவந்தால்தான் இந்த இராத்திரியென்கின்ற கற்பகாலம்முடிந்துபோய் ராஜ்ஜியஞ்சுகப்படுமோவென்றும், தர்மந்தப்பநடந்து ரிஷீஸ்வரர்களை உபத்திரவப்படுத்தி உலகத்து உயிர்களைக்கொன்று பாவமேசெய்கிறவர்கள் இப்படிவாழ்ந்தால்இவித்தர்மத்தினால்ஆகவேண்டியது என்னவென்றும்சொல்லித் துயரப்படுகிறசமையத்திலே மன்மதன்புஷ்பபாணங்களைப்பிரயோகஞ்செய்ய எத்தனித்துவந்தான். வந்தவன் ஸ்ரீராமச்சந்திரனுடைய தபஸ்வரூபத்தைப் பார்த்து அறிவுகலங்கித்தடுமாறி எதிரேநின்று புஷ்பபாணம் விடுகிறதற்குப்பயந்து முன்னாளிலே யோகத்திலிருந்த திரிமூர்த்திகளில் ஒருமூர்த்தியாகிய சிவன்மேல் பாணந்தொடுத்துச் சரீரமிழந்துபோனோமே! இவர்மேல் பாணந்தொடுத்தால் இவரென்னசெய்வாரோவென்றுநடுக்கிமுன்னேபட்டபழம்புண்ணெரியானபடியினாலே அந்த மன்மதன் மிகவும்வருத்தமுற்றான். அப்போது ஸ்ரீராமன் இந்த இரவு எப்படிவிடியப் போகின்றதென்று தன்மனதிலே நினைத்துக் கொண்டே யிருக்க, அந்நினைவே சூலாயுதமாய்ப் பொத்துளைக்க அந்த ராத்திரியானது மூலதாமரையில் உற்பவித்த பிர்மாவினுடைய கற்பகாலம் முடிந்துபோனதுபோல நீங்கிப்போய்விட்டது திருப்பாற்கடலிலே யோகநித்திரை செய்கிறதை விட்டு, சீதையினுடைய கற்புக்கடலிலே துயிலநிற்கிறவருக்குத் துயரந்திரும்படிப் பக்ஷிகளும், பூஞ்சோலைகளும், தண்ணீரும், சகலஜீவராசிகளும் சப்தித்தனகள். அப்படி சப்தியாமற்போனால் அவருடைய பிராணன் நிலைத்திருக்கிறதற்கு வேறேவகையுண்டா! பொழுதுவிடியவே மயிலும், பேடும், மானும், கலையும், பிடியும், களிறுஞ் சோடு சோடாகப் பிரியாமல் புறப்பட்டுத் திரிகிறதைப்பார்த்தும், குயிலும், கரும்பும், தேனும், வேணுக்குழலும், யாழும், பாகும், அமுதுமாகிய இதுகளினுடைய ருசியையெல்லாம் கீழ்ப்படுத்தி மிகுந்த மதுரங்கொடுக்கின்ற வார்த்தையையுடைய சீதையைப்பிரிந்த ஸ்ரீராமர்மிகுந்தான துயரத்தினாலே மனது அழிந்து மிகவும் இளைத்தார் அத்தருணத்தில் சீதை பூர்வத்திலே தாமரையில் வாசமா யிருந்தவளானபடியினாலே ராத்திரியிலே தன்னாலேகுவிந்த கமலங்களைத் தன்கிரணமாகிய கையினால் இதழ்முன்கின்ற கதவைத்திறந்து அந்தச்சீதை இதிலில்லை யாருமையாவென்று காட்டுகிறதுபோல தாமரைகளைமலர்த்திச் சூரியனானவன் உதயமானான். அப்போது ஸ்ரீராமர் சோலைகளைப் பார்த்தும் அந்தச் சோலையிலே வாசஞ்செய்கிற குயில்களைப்பார்த்தும் புஷ்பித்திருக்கிற புஷ்பக்கொம்பினுடைய அழகைப்பார்த்தும் இளமயில்களின் சாயலைப்பார்த்தும் சீதையினுடைய அளகபாரத்தைநினைத்தும் ஸ்தனங்களை நினைத்தும் அந்தஸ்தனத்தில் எழுதிய சித்திரத்தைநினைத்தும் தம்முடைய தோளைப்பார்த்தும் துக்கித்துப் பொழுது போக்கினார். அந்தச்சமையத்தில் இளையபெருமான் தமையனாரை சேவித்து சுவாமி! ஸ்ரீமகாலக்ஷ்மியைத் தேடாமல் இவ்விடத்தில் விருக இருக்கிறது நன்மையாவென்றுசொல்ல, அந்த ராக்ஷதன் இருக்கின்ற இடத்தைத்தேடி யறிந்துதொடருவோமென்று மலைநெருங்கி யிருக்கின்ற ஆரணியத்திலே நடந்தார்கள். திக்கெஜங்களின் நடைக்குச் சமானமாகிய நடையுண்டான ஸ்ரீராமலக்ஷ்மணர்கள் அநேகபர்வதங்களும், ஆரணியங்களும், நதிகளுந்தாண்டிப் பதினெட்டுயோசனைதூரம் கடந்துபோனார்கள். அதுவரையிலுஞ் சீதையைக் காணாதபடியினாலே மனதிலே அதிகசோபமும், துயரமும், சுவாசமும், பொங்கியெழும்பும்படிபோய்அவ்விடத்தில்ஒருகுளிர்ந்தபூஞ்சோலையில் சேர்ந்தார்கள். இவர்களுடைய மனக்கிலேசத்தைச் சூரியன் அறிந்து லோகமாதாவைத்தானுந்தேடித்தேடிஉலகமெல்லாம் உழன்று பார்த்துக் காணுதவனாய் மேருபர்வதத்தில்லையதுபார்ப்பேமென்று சீக்கிரமாய் ஓடினவன்போல ஓடிமறைந்தான். அப்போது தெளிந்த அறிவில்லாத மூடருடைய சிந்தைபோல இருள்வந்து எங்கும் மூடிக்கொண்டது. வீணையின் இசையைப்போலப்பாஷிக்கின்ற நாகணவாய்ப் பறவையின் மூக்கைப்போலவும். கிளியினுடைய மூக்கைப்போலவும்புஷ்பித்திருக்கின்ற பலாசமாகிய முருக்கமரங்கள்சூழ, நடுவே கனங்களுடனேகூடிப் பிரகாசிக்கின்ற சந்திரனைப்போல ஒருபளிங்குக்கல்பாறையும் அறையுமா யிருக்கக்கண்டு அதிலே ராத்திரித்தங்கி யிருக்கவேண்டுமென்று இருந்தார்



கள். அந்தவேளையிலே ஸ்ரீராமர் தம்பியை அழைத்து அப்பா! தாகத்துக்குத் தீர்த்தங்கொண்டு வரவேணுமென்று சொல்ல, அந்த க்ஷணமேராமானுஜர் கையில்லுடனே தனியேநடந்துபோனார். அவ்விடத்திலே எங்குந்தேடித்தண்ணீர் அகப்படாமல் ஒருசிங்கம்போல அந்த ராத்திரியிலே திரிந்துதேடிக்கொண்டிருக்கிற லட்சுமணரை, அயோமுகியென்கின்ற ராக்ஷதி அதிக ஆசையுடனேகண்டாள். மந்திரத்திலே தடைபடாதசர்ப்பம்போல ஓடிவந்து அவருடைய திருவழகைக்கண்டு, அவருடைய கடூரகுணங்களெல்லாம் நீங்கிப்போய் இவன்மன்மதன்தானென்று நினைத்து, மனதிலேமிகுந்தஆசையெழும்பக் காமவியாதிதலைக்கொண்டு இவனை என்னுடைய திரும்படி தழுவியனையவேணுமேயல்லாமல், கொல்லலாகாதென்றுயோசனைசெய்து, எல்லாவற்றிற்கும்போய் நல்லவார்த்தையாகக் கேட்டுப்பார்ப்போம் சம்மதித்தாலாகின்றது. இல்லாவிட்டால் பலாத்காரமாய் எடுத்துவந்து மனதின்இஷ்டப்படி இவனைச்சேருவோமென்று துணிந்து, அதிசீக்கிரத்திலே சமீபத்தில்வந்தாள். அந்த அயோமுகி நெருப்புப்போலச் சுவாசமும் மலைகள்போலப்பற்களும், மலைப்பாம்பாகிய ஆபரணமும், குழிந்தகண்ணும், சிங்கங்கள் யாளிகளாலே காற்சிலம்பும், பிரளயகாலசூரியனைப்போலக்கோரமானமுகமும், சமுத்திரம் வறண்டுபோகும்படி முகந்துகொள்ளுகின்ற முகவைபோலப் பெரியவாயும், யுகாந்த காலாக்கினிபோலச் சிவந்தகொண்டையும் இடிகளைப் பிடித்து வாயிலேபோட்டுக்கொண்டு கடிக்கின்ற உரமுடையபல்லும், இரண்டுபிறைபோலக் கோரதந்தங்களும் சமுத்திரத்திலும் அதிக இரைச்சலானசொல்லும் பூமி நடுநடுங்குகின்ற நடையுமுடையவளாய் சர்ப்பங்களினாலே கைகளுக்குவளையலும், புலியாளிமுதலானதுகளினாலே ஸ்தனங்களின்மேல் புரள்கின்றஆரமும், குடல்மாலைகளும், ஆண்சிங்கத்தினாலேதாலியும், பெண்சிங்கங்களாலேகாதுக்குஓலையும்கிணமாம்சாதிசந்தனமுந்தரித்துக் கொண்டிருக்கின்றராக்ஷதி, எதிரேநின்று ஆசையினாலே அக்கினிபோல எரிந்த பெரியகண்கள் குன்றிமணிபோலக் குறுகவும், குளிரவும், பார்த்தாள். மின்னலைப்போ லிருக்கின்ற அவளுடைய பல்லின்பிரகாசத்தினாலே, அவளை லட்சுமணர்கண்டார். முன்பு மூக்கிழந்தசூர்ப்பனகி, தாடகியாகிய அவர்களைப்போல இவளும் ஒருராக்ஷதியென்றறிந்தார். இந்தப்பாபிஷ்டைகளாலே வந்தஆபத்துக்கொஞ்சமாவென்று நினைத்து, அவளைப்பார்த்து இந்த இருட்டிலேவந்தையே நீ ஆரடி! சீக்கிரமாய்ச்சொல்லென்றுகேட்டார். அவர் இப்படிப்பேசவே வெட்கி யச்சப்பட்டவளாய், உமக்கு என்னிடத்திலே அன்பில்லாமற்போனாலும், உம்மிடத்தில் வலுவில் ஆசைகூர்ந்து வந்தேன் அயோமுகி நானென்றுசொல்லி, பின்னும் அதிரூபசுந்தரத்தையுடைய வீராதிவீரரே! இதுவரைக்கும் ஒருவருந்தொடாத ஸ்தனத்துடனே உம்முடையமார்பையிச்சித்து, வந்தேன். என்னிடத்திலேதயவுசெய்து சேர்ந்து என்னுடையபிராணனை எனக்குக் கொடுமென்று அடங்கினவார்த்தையாகச்சொன்னாள். அப்படி யவள்சொல்லவே லட்சுமணர் கோபித்துச்சீறிக் கண்கள் சிவந்து. அபசரிதையானபாவி? இனியிந்தப்பேச்சுப் பேசினால், உன்சரீரத்தைப் பாணத்தினாலே பிளந்துபோடுவேனென்றுசொன்னார். அவ்விதமாக அவர் சொல்லியுங்கோபமில்லாதவளாய் இரண்டுகையும் தலையின்மேல் வைத்துக் கும்பிட்டு. என்னாயகரே! நீர்வந்து என்பிராணனைக் கைக்கொண்டால் அதுநான்செய்தபுண்ணியமாகுமென்று, பின்னும் நீர் தண்ணீர் தேடுகிறீரோ என்னைமாத்திரம் பயப்படாதேயென்று அபயஸ்தங்கொடுத்தால். கங்காஜலம் இந்தக்ஷணங் கொண்டுவருகிறேனென்றாள். அப்படிச்சொல்லவே சுமித்திரைபுத்திரரான லட்சுமணர் மனதுபொறுமல், உன்காதும் மூக்கும் அற்றுப்போகிறதற்குமுன்னே அப்பாலே ஓடிப்போவென்று கோபத்துடனேசொன்னார். அந்த வார்த்தைகேட்கவே மிகவுந்துயரமாய்யோசனைசெய்து இவனைஎடுத்துக்கொண்டுபோய் நம்முடைய குகையிலே அடைத்துவைத்துக்கொண்டால் இவனுடைய பிஷ்மம் அடங்கி நாம்சொன்னபடிகேட்பான். இப்படிச்செய்கிறதே உத்தமமென்றுநினைத்து, மறைந்து மேகஸ்வரூபமெடுத்து லட்சுமணரை வாரிக்கொண்டு ஆகாசமார்க்கத்தில் எழும்பிச்சந்திரனுடனேபோகின்ற மேகம்போல வெகுசீக்கிரமாய்ப்போனாள், போகும்போது அயோமுகி யென்கின்ற ராக்ஷதி மந்தரகிரியைத்தாங்கின சமுத்திரம் போலவும், இந்திரனையேந்திக்கொண்டுபோகின்ற மேகம்போலவும், சுப்பிரமணியரைத் தாங்கிக்கொண்டுபோகின்ற மயிலைப்போலவும் பிரகாசித்தாள். அந்தக்கறுத்த நிறத்தையுடைய அயோமுகியின் மார்பிலும் கையிலும் அடங்கியிருக்கின்றலட்சுமணர், யானைத்தோல்போர்த்திருக்கின்ற ருத்திரமூர்த்தியைப்போலப் பிரகாசித்தார். இப்படி இவ்விடத்திலே நடக்கிறபோது தண்ணீர்கொண்டுவரப்போன தம்பி இன்னம்வரவில்லையென்று வீராதிவீரனை ஸ்ரீராமச்சந்திரன் மிகுந்தகிலேசத்துடனே பிரலாபிக்கத்தொடங்கினான்.

தம்பிக்குக் காட்டிலே இன்னந் தண்ணீர் அகப்படவில்லையோ! வேறே ஏதாகிலும் நடந்ததுஉண்டோ! இந்நேரமட்டும் வாராததினாலே என்னஇடர்வந்ததோ! ஜலம் சம்பாதித்துக்கொண்டுவந்து எனக்குக் கொடாததினால், அவன் சீதையை எடுத்துப்போனவர்கள் யாராகிலும் அகப்பட்டு அவர்களுடனே போர்செய்கிறானோ! அல்லவென்று அந்தராவணன்வந்து இவனையும் எடுத்துக்கொண்டுபோய்விட்டானோ! விஷத்தைப்பார்க்கிலும் கொடியவர்களாகிய ராக்ஷதர்களுடைய மாயையினாலே இறந்துதான்போனானோ! என்பிராணபதமாகிய தம்பி இன்னம்வரவில்லையே! என்ன நம்முடையதமையன் நாம்சொன்னபடிக்கேளாமல் மானின்பின்னேபோய்ச் சீதையைப்பிரிந்து இத்தனைகிலேசம்வரப் பண்ணினானென்று, என்மேலே சலிப்பாய்ப் பிராணத்தியாகம் பண்ணிக்கொண்டானோ! இந்த இருட்டிலே நானொருவனாகப்போய் எங்கேயென்று தேடிக் கண்டு பிடிப்பேன்.

போல மிகவுங் கறுத்திருக்கின்ற முகமும், பூர்வத்திலே ஸ்ரீமகாவிஷ்ணு சக்கரப்பிரயோகஞ்செய்ய, அதினாலே தலையிழந்த காலநேமியைப்போலக் கபந்தரூபமும், ஆதிசேஷனுடனே வாக்குவாதஞ்செய்து வாயு மோதியடிக்க, சிகரம் ஒடிபட்ட மகாமேரு பர்வதத்தைப்போலப் பருமனும், உயர்ச்சியுமாய் அங்கேயிருந்த கபந்தனைக் கண்டார்கள். ஏழு சமுத்திரமும் ஒன்றாய்ப்புகுந்து ஓடுகிறதாகச் சக்கரவாளகிரியிலே ஒரு ஜலதாரையிருக்கிறது போல இருக்கின்ற அவன் வாயைக்கண்டு, தேவர்களும் போகமாட்டாமல் நடுங்குகின்ற ராக்ஷதருடைய கோட்டைவாசற்படியே இதுவென்று நினைத்தார்கள். அப்போது லக்ஷுமணர் நன்றாய் அலர்ந்து பார்த்துச் சுவாமி! ஒரு பெரியபூதம் எல்லாரையுங் கையினாலே வளைத்துத் தன்வாயிலிட்டுக் கொள்கின்றது. நாமும் அதற்குள்ளேதான் அகப்பட்டுக்கொண்டிருக்கிறோம். இதற்கு என்னசெய்வோமென்று பின்னுஞ் சொல்லுகின்றார். அதினுடைய சரீரம் உலகமெல்லாம் நிறைந்திருக்கின்றது. இரண்டுகையுஞ் சமுத்திரஞ்சூழ்ந்த பூலோகத்தையெல்லாம் பிரதக்ஷணம்வருகின்றது. அதைப் பார்க்குமிடத்தில் இந்தப் பூமியையெல்லாம் ஒருகொம்பினாலே பேர்த்தெடுத்த ஆதிவராகமான அந்தப் பன்றியென்றேசொல்லவேணுமென்று லக்ஷுமணர்சொன்னார். அதுகேட்டு ஸ்ரீராமர் தம்பி! அப்படியானால் நானொரு வார்த்தை சொல்லுகிறேன்கேள். என்னுடைய ஸ்திரீயும் பிரிந்துபோனாள். அவள் நிமித்தம் ஜடாயுவாகிய தந்தையும் இறந்தார். மனதுவேகப் பழிசுமந்து உழன்று திரிகிறதற்கு எனக்குச் சம்மதமாயிருக்கவில்லை. ஆகையால் இந்தப் பூதத்தினுடைய வாயிலேபுகுந்து வயிற்றிலே போய்விடுகிறேன். நீ திரும்பி நம்முடைய பட்டணம்போய்ச் சேரென்றுசொன்னார். பின்னும்பெற்றவர்கள் துயரப்பட என்தம்பி துக்கப்பட நல்லவர்களெல்லாம் இடரிலேமூழ்கப் பழியுந் தாங்கிக்கொண்டு பூமியிலே திரிகிறதைப் பார்க்கிலும், இறந்துபோகிறதே உத்தமம். அப்படி இறந்தாலல்லாமல் என்பழிதீருமா! ஜனகராஜனிடத்திலே கையிலேவில்லும், அம்பறாத்தூணியும் தாங்கிக்கொண்டு எனக்கு நீ கொடுத்த கன்னிகை ராக்ஷதர் வீட்டிலே போயிருக்கிறாளென்று சொல்லிக் கொண்டு எப்படிப் போவேன்? ஒருபெண்சாதியை ரக்ஷித்து வைத்திருக்கமாட்டாமல் பறி[illegible] தம்பி போவிக்கச் சாப்பிட்டுத் தன்னுடைய ஜீவனைக் காப்பாற்றிக்கொண்டிருக்கிறானென்று சொல்லுகிறதிலேயும், தேவலோகம்போய்ச் சேர்ந்தானென்று சொல்லும்படி மாண்டுபோகிறதே நன்மையல்லவாவென்று தமையனார்சொல்ல, அதிகமாகிய இரக்கத்துடனே தம்பியானவர் சுவாமி! உம்மிடத்தில் அன்புற்றவன் போலக் கூடவந்து ஆபத்து வந்தவேளையிலே பிராணனைக்கொடாமல் திரும்பிப்போய் விட்டேனேயானால் என்செய்கையும், குணமும், நன்றாயிருக்குமென்றுசொல்லிப் பின்னுஞ்சொல்லுகின்றார். இடர்வந்தவேளையில் அதுதானோ ஜெயித்துச் சகித்தவனல்லவோ சௌரியவந்தன். தன்தாய் தகப்பன் தமையனென்று சொல்லப்பட்டவர்களுக்கு ஆபத்துவந்த காலத்திலே அவர்களுக்குமுன்னே தான்சாகாமலிருந்தால் அப்போதே கீர்த்திபோய்விட்டதல்லவா! தமையனாரையும் அவருடைய ஸ்திரீயையும் வெகு பக்தியுள்ளவன்போல நித்திரையுமில்லாமல் இதுவரையில் காத்துக்கொண்டிருந்த தம்பியானவன் இப்போது அவர்களை விட்டுவிட்டுத் தன்பிராணனைத் தப்புவித்துக்கொண்டு வந்துவிட்டானென்று உலகத்தார் சொல்லக்கேட்கிறதைப்பார்க்கிலும் வேறே மரணமான தவறு என்ன இருக்கின்றது? அடியேனுடையதாய் தேவரீருக்குமுன்னே எனக்கு ஆக்கியாபித்த பணிவிடையெல்லாம் வீணாய்ப்போம்படி இவ்விதமாகத்தாங்கள் ஆக்கியாபித்தால் நான் என்னசொல்லப்போகிறேன். மேலும் தமையனாருக்கு ஒரு ஆபத்துவந்தால் நீ முன்னே பிராணனை விட்டுக்கொள்ளென்றுஞ் சொன்னாளே! அந்தவார்த்தையைத் தள்ளிநடந்துகொண்டால் நான் சத்தியசந்தனாவேனோ! என்னைப்பெற்றவளும்நானும்யாதொருவகையினாலாகிலும் உம்மைப்பெற்றவளுக்கும் உமக்கும் பெரியவர்களெல்லாம் சந்தோஷிக்க நன்மைசெய்துகொண்டு வருகிறோமென்கிற நல்வார்த்தையைப் பெற்றால் எங்களுக்கு அதுவே பெருந்தவமாகும். அப்படிப்பட்ட தவத்தை உயிரைப் பெரிதாகவிரும்பி இழந்துவிடுவோமா? அதுகளெல்லாம் இருக்கட்டும், சராசரங்களெல்லாம் இறந்தும் இறவாமலிருக்கிற தேவர்களும் இறந்தபோதும் இறவாதிருக்கின்ற நீர் யானைகளைத்தின்றுகொண்டு இந்த ஆரணியத்திலே உழல்கின்ற ஒருபூதங்கொல்ல இறந்துபோகிறேனென்று சொல்லுகின்ற சொல்லைப் போலப் புகழுடைய சொல்வேறொன்றுண்டா! இதை ஆராகிலுங்கேட்டவர்கள் சம்மதிக்கமாட்டார்கள். பார்த்தவர்களும் அலட்சியமாகநினைப்பார்கள். "சிறையில் அகப்பட்ட பெண்சாதியை மீட்டானென்கின்ற கீர்த்தியைக் கொள்ளாமல் ராக்ஷதரை ஜெயிக்கமாட்டாமல் இறந்துபோனானென்கிறதைப்பார்க்கிலும் அதிகமான அபகீர்த்தியுண்டா! ஆகையால் இந்தபூதத்தினுடைய பிலத்துவாரத்துக்கு ஒப்பாகிய பெரியவாயையும் எல்லா உயிர்களையும் வளைத்துக்கொண்டுவருகிற கைகளையும் அடியேன் அறுத்துத்தணிக்கிறதைப் பார்த்துக்கொண்டிரும். துயரப்படவேண்டாமென்று சொல்லி லக்ஷுமணர் முன்னே நடக்க, அவருக்குமுன்னே ஸ்ரீராமர்நடக்க, இப்படியாக ஒருவருக்கொருவர் நான்முன்னேபோகிறேன். நான் முன்னேபோகிறேனென்றுசொல்லிக்கொண்டு வேறொருவருமில்லாமல் தாங்கள் இருவருமேவருத்தப்படுகிறதைக் கண்டு தேவர்களுந்துயரப்பட்டழுதார்கள். இத்தன்மையையுடையவர்களாயிருவரும் இரண்டுகண்கள்போலச் சமீபத்தில்வருகிறதைக் கபந்தன்கண்டுமகாசௌரியமாய்வருகிற நீங்கள் ஆரென்று அதிகோபத்துடனேகேட்டான். அதற்குக்கொஞ்சமாகிலும் மனதிலேபயமில்லாமலும் கண்களை இமையாமலும், பதையாமலும், அதிகஜாக்கிரதையாய்ப் பார்த்துக்கொண்டு சும்மா நின்றார்கள். அதுகண்டு நம்மைத்துர்ப்பலமுடையவனாக எண்ணி



இகழ்ந்தார்களென்று கோபித்து, கோபாக்கினிப் பொறிகள் ரோமத்துவாரங்கள்தோறும் ஜொலிக்க, இவர்களை விழுங்கிவிடுவோமென்று எழும்பினான். அப்போது ராமலக்ஷுமணர்கள் இருவரும் வாளைஉருவிக்கொண்டு அவனைப்பார்க்கிலும் அதிகஉயரமாக ஆகாசத்தில் எழும்பி, பர்வதங்கள்போல இருக்கின்ற அவனுடைய இரண்டுதோள்களையும் வெட்டித்தள்ளினார்கள். அந்தத் தோள்களிரண்டிலுமிருந்து ரத்தம் பிரவாகமாய்ப்பெருகிப் பூமியெல்லாம்நிறைய அதனடுவே சமுத்திரத்தின் மத்தியில் மந்தரகிரியைப்போலப் பிரகாசித்தான். அடியேனை ஆட்கொண்ட நாயகனுடைய திருக்கைகளினாலே துண்டிவெட்டவே, அவனுடைய பூர்வசாபந்தீர்ந்து பாபவிமோசனமாகி அந்தச்சரீரத்தைவிட்டு, மரமானதுவெட்டுண்டுபோக அதிலே இருக்கிறபக்ஷி ஆகாசத்தில் எழும்பிப்பறந்ததுபோல, ஆகாசத்திலே போய்யதாஸ்வரூபத்துடனே விளங்கிநின்று, புண்ணியபலனை கிடைத்தபடியினாலே பிரமாமுதலான சகல உயிர்களுக்கும் கண்மணிபோலப் பிரகாசித்துக்கொண்டிருக்கின்ற அந்தப் பரமபுருஷனாகிய நாராயணன்தான் இந்த ஸ்ரீராமனென்று அறிந்து, அவனுடைய அநந்த கல்யாணகுணங்களை வாயினாலே ஸ்தோத்திரஞ்செய்யத்தொடங்கினான்.

## கவி.

என்றவனேவெப்பொருளுமெல்லைநீர்நல்லறத்தின்.....*
சான்றவனேதேவர்தவத்தின்றனிப்பயனே..........*
மூன்றுகவடாமுளைத்தெழுந்தமூலமே..........*
தோன்றியருவினையேன்சாபத்துயர்துடைத்தாய்...(௧)
மூலமோவில்லாமுதல்வனேநீமுயலும்.........*
கோலமோயார்க்குந்தெரிவரியகொள்கையால்........*
ஆலமோவாலினடையோவடைகிடந்த..........*
பாலனோவேலைப்பரப்போபகராயே..........(௨)
நின்செய்கைகண்டுநினைந்தனவோநீண்மறைகள்.......*
உன்செய்கையன்னவைதான்சொன்னவொழுக்கினவோ
என்செய்தனமுன்னமிச்செய்கையெய்தினாய்.........*
பின்செய்வதில்லாப்பெருஞ்செல்வநீபெற்றாய்.....(௩)
காண்டார்க்குங்காணப்படுபொருட்குங்கண்ணாகிப்.....*
பூண்பாய்போனிற்றியால்யாதொன்றும்பூணாதாய்.....*
மாண்பாலுலகைவயிற்றொளித்துவாங்குதியால்........*
ஆண்பாலோபெண்பாலோவப்பாலோவெப்பாலோ(௪)
எண்டிசையுநின்சுவராவேழுநிலைவகுத்த........*
அண்டப்பெருங்கோயிற்கெல்லாமழகுடைத்தாய்.....*
மண்டலங்கண்மூன்றின்மேனின்றுமலராத.........*
புண்டரிகமொட்டின்பொகுட்டோபுரையம்மா......(௫)
ஆதிப்பிரமனுநீயாதிப்பரமனுநீ...........*
ஆதியெனும்பொருளுக்கப்பாலுண்டாயினுநீ.........*
சோதிச்சுடர்ப்பிழம்புநீயென்றுசொற்றுகின்ற.........*
வேதமுறைசெய்தால்வெள்காரோவேறுள்ளார்.....(௬)
நிற்குநெடுநீத்தநீரின்முளைத்தெழுந்த..........*
மொக்குளெனலாமுதளித்தவண்டங்கள்.........*
ஒக்கவுயர்ந்துன்னுள்ளேதோன்றியொளிக்கின்ற.......*
பக்கமிதற்கெளிதோபாமேட்டி.........(௭)
மாயப்பிறவிமயக்கிமாசில்லாக்.........*
காயத்தைநல்கித்துயரின்கரையேற்றிப்.........*
பேயொத்தபேதைப்பிணக்கறுத்தவெம்பெருமான்......*
நாயொத்தேனென்னநலனிழைத்தேனுமென்றான்...(௮)
மண்பாலமரர்வரம்பாருங்காணாத.........*
எண்பாலுயர்ந்தவெறியோங்குநல்வேள்வி.........*
உண்பாய்நீயூட்டுவாயென்பிரண்டுமொக்கின்ற.........*
பண்பாரறிவார்பகராய்பரம்பரனே.........(௯)

என்பன—சுவாமி! நீ சகல வஸ்துவையும் பெற்றவனே! அளவில்லாததர்மத்துக்குத் தற்சாக்ஷிசொரூபமாயிருக்கின்றவனே! தேவர்களுடைய ஒப்பற்றதாகிய தபோபலமோ! மும்மூர்த்திகளென்கின்ற மூன்றுகிளையுடனே முளைத்தெழுந்த மூலவஸ்துத்தானே! ஸ்ரீராமனாக அவதாரஞ்செய்து எவர்களாலும் நீக்குதற்கு அருமையாகிய தீவினையையுடைய அடியேனைநீவந்து, என்னுடைய சாபத்துயரைத் தீர்த்தையே! மூலமென்கின்ற தோன்றில்லாத முதல்வனாயிருக்கின்றவனே, நீ செய்கிறகாரியம் ஆராலும் அறியக்கூடாமையால், நீ ஆலோ! ஆலிலையோ! அதிலே யிருந்த பாலகனோ! சமுத்திரமோ! எனக்குச்சொல்லவேண்டுமையா வேதங்கள் உன்னுடைய நடத்தையைக்கண்டு அந்த வொழுக்கத்தையேசொல்லியதுகளோ! அதுகள்சொன்னபடியே நடந்துகொள்கின்றையோ? நானொன்றும் அறியமாட்டேன். பூர்வத்தில் என்னதான்செய்தாய் இந்தத் தவவடிவுகொண்டிருக்கின்றையே! இன்னமுஞ் செய்யவேணுமென்கிறதில்லாத பரிபூரணமானசெல்வம்பெற்றிருக்கின்ற பகவானே! காண்கின்றவர்களுக்கும் காணப்படுகின்ற பொருள்களுக்குங் கண்ணாகி, சகலத்திலேயும் வியாபித்திருக்கிறவனைப்போல நிற்கின்றாய். ஒன்றிலும் வியாபித்திருக்கின்றவனேயல்லை. உலகத்தைத் திருவயிற்றில் ஒளித்துப் பின்பு வெளிப்படுத்துகின்றாய். நீ ஆணோ! பெண்ணோ! அலியோ! எந்தவடிவமோ தெரியவில்லை. எட்டுத்திக்குஞ் சுவராகப் பதினாலுநிலையுடனே கட்டியிருக்கின்ற அண்டமென்கின்ற கோயில்களுக்கெல்லாம் அழகினையுடையதாய் மூன்று மண்டலத்தின் மேலும் நின்று, ஒருநாளும்மலராத மூலதாமரை மொக்கினுள்ளேயிருக்கின்ற கர்ணிகையோ! உன்னுடைய இருப்பிடம் ஆதிப்பிரமாவும் நீ, ஆதிப்பரமனும் நீ, ஆதியென்கின்ற வஸ்துவுக்கு அப்பாலே ஒன்றுஉண்டாயிருந்தாலும் அதுவும்நீயே. சோதிச்சுடரும் நீயேயென்று வேதந்தானே சொன்னால், மற்றவர்களெல்லாம் வெட்கிப் போகார்களா! மஹாப்பிரளயத்திலே உற்பத்தியாகிய நீர்க்குமிழிபோல முளைத்திருக்கின்ற பல்லாயிரகோடி அண்டங்களும் உன்னிடத்திலேதோன்றி யொளிக்கின்றவிதம் ஒருவராலே அறிகிறதற்கு எளிதாயிருக்கின்றதா! பரமேஷ்டியான அகண்டாகாரஸ்வரூபனே! மாயமாகிய பிறவிமயக்கத்தை நீக்கிக் களங்கமில்லாத திவ்வியதேகத்தைக்கொடுத்து, துயரக்கடலின்கரையேற்றி, பேயையொத்தபேதைமையாகிய பிணக்கையறுத்து, இவ்விதமாகத் துல்லியனாகும்படிசெய்வித்த எம்பெருமானே! நா

ந்துசேர்கிறபடியினாலே, பலபலரத்னாபரணம் பூண்டிருக்கின்ற ஸ்திரீகள்போலவுமிருந்தது, மதயானைகள்வந்து விழுந்து துளைந்தாடுவதினால் அலைந்து ஜலம் கலங்கியிருக்கிறது. சையோகத்தில் சரீரம்நொந்து அயர்ந்திருக்கின்ற வேசியினுடைய ரூபம்போல இருந்தது. மலைத்தேனும் யானைமதங்களும் மேன்மேலும்வந்து விழுகிறபடியினாலே அந்தத்தண்ணீர் உண்டவர்களுக்கு அதிகமாகியக்ளிப்புண்டாகும்படிஸ்திரீகளுடைய அதரம்போலமகிமைபெற்றிருந்தது ! சமஸ்கிரதமுதலாகியபதினெட்டுப்பாஷையார்களிலுமுள்ளகிழ்மக்களெல்லாமொருஸ்தானத்தில்சேர்ந்திருந்து பாஷிக்கிறதுபோல, அநேகவகைப்பட்ட பக்ஷிகளெல்லாம் குரல்வேறுபாடு தெரியாததுகளும், அக்குரலோசை ஒன்றோடொன்று சம்பந்தப்படாததுகளுமாக ஓய்வில்லாமல் சப்திக்கத்தலைப்பட்டதுகள். உடல் உயிரைப்பிரிந்ததுபோலப் பெட்டையன்னத்தைப்பிரிந்த ஆணன்னம், ஸ்நானஞ்செய்துபோகின்ற தேவகன்னியர்களின் காற்சிலம்பு சப்திக்கிறதை, தன்பிராணபதமான பெட்டைக் குரலென்று காதிலே கேட்டுக்கொண்டு களிப்புற்றிருந்தது, மலைகளிலிருந்து அகிற்கட்டை சந்தனக்கட்டை முதலானதுகளை வெள்ளம் இழுத்துவந்து இடுதலால் அந்தஜலம் மிகுந்தவாசனையைத் தரும்படியிருக்கிறது. சந்தனம் வைத்திருக்கிற பரணிபோலுமிருந்தது. ஸ்திரீகளுடைய இதழுக்குச் சமானமான செவ்வல்லிப்புஷ்பத்திலே யிருக்கிற தேனையுண்டு முதலைகளெல்லாம் மயங்கிக் கிடந்ததுகள், நீர்க்காக்கைகள் வாயிலே மீன்களைக்கவ்விக்கொண்டு, உலகத்தில் உற்பவிக்கின்ற உயிர்களுக்கெல்லாம் பிறப்பும் - இறப்பும் இப்படிதானென்று காட்டுகிறதுபோல முழுகிமுழுகியெழத் தலைப்பட்டதுகள். ஸ்ரீராமருக்கு அந்தச் சீதையைக்கொண்டுவந்து கொடுக்கிறதற்குத்தான் நம்மாலே யாகாமற்போனாலும், ஆனதையாவதுசெய்வோமென்று அன்னங்கள் அவளுடைய நடையைக்காட்டியதுகள். நீலோற்பலபுஷ்பங்கள் கண்களைக்காட்டியதுகள் செவ்வல்லிப்புஷ்பங்கள் வாயைக் காட்டியதுகள். அதிலேவந்து ஸ்நானஞ்செய்கின்ற தேவரம்பையர்களுக்கு அவர்களுடைய தாதிமார்கள் அன்னங்கள் கொண்டுவந்து வைத்திருக்கின்றதுபோல புஷ்பக்கொம்புகளிலெல்லாம் அன்னபக்ஷிகளேறியிருந்ததுகள். கொக்குகள்விருக்ஷங்களின்மேல் ஏறியிருந்து சிறகை உலர்த்துஞ்சாயைஸ்படிகம்போலிருக்கின்ற தண்ணீருக்குள்ளேதோற்றக்கண்டு, அதுகள் உள்ளேவந்து புகுந்ததுகளென்று, மீன்களெல்லாம் பயந்து கழன்று பதுங்கியதுகள். ஒருபக்கத்திலே நீலரத்தினத்தின் சாயையும், ஒருபக்கத்திலே புஷ்பராகத்தின் சாயையும் உண்டாயிருப்பதனால், அந்தநதிக்கரை ராத்திரியும் பகலும்போலப்பிரகாசித்துக்கொண்டிருந்தது. அதுக்குள்ளே சக்கரவாள பக்ஷிகளெல்லாம் ஸ்திரீகளுடைய ஸ்தனங்கள்போலப் பிரகாசித்துக்கொண்டிருந்ததுகள். வானைப்போல வானமீன்களை வரிசைகட்டிக்கொண்டு அலைகளில்துள்ளுகிற நீர்நாய்கள். கிரைக்குள்ளேயிருந்து பிரதிமையாகிறதுபோலப் பிரகாசிக்க, அதுகளைக்கண்டு சந்தோஷித்துப் புகழ்கிறவர்கள்போலப் பச்சைத்தேரைகள் சப்திக்கத் தலைப்பட்டதுகள். இப்படி அநேகவிதசிங்காரமுடையசகலமாகிய பொருளும் நிறைந்திருக்கின்ற அந்தப்பம்பையென்கின்ற நதிக்கரையிலே ஸ்ரீராமர்வந்து, அன்னப் பக்ஷிகளையும் தாமரை முதலானதுகளையுங் கண்டு, தம்மைப் பிரிந்துபோயிருக்கின்ற சீதையை நினைத்துக் கொண்டு, மனதுருகித் தளர்ந்து, நல்லறிவு ஒடுங்கினவர்போல மயங்கிப் புலம்பத் தொடங்கினார். வரிகளையுடைய வரால்மீன்களே ! அன்னப்பக்ஷிகளே ! உங்களைப்போலக் காலும் நடையுமுள்ளவளைப் பிரிந்து, மனது எரிந்து கொண்டிருக்கின்ற என்னிடத்தில் இரக்கங்கூர்ந்தால் அது உங்களுக்குக் கீர்த்தியல்லவா ! இணைபிரியாமலிருக்கின்ற நீங்கள் ஒருவார்த்தைபேசினால் அதனாலே உங்களுக்குச் சேதம் வரு[illegible]மென்றும், தாமரைப்புஷ்பமும் நீலோற்பலபுஷ்பமும் மலர்ந்து என்மனதைப்புண்ணாகச் செய்கிறபொய்கையே ! அவளுடைய கண்ணையும் முகத்தையுங் காட்டுகின்ற நீ சர்வாங்கமும் ஒருதரங் காட்டலாகாதா ! உண்ணுகிறவர்களுக்குக் கொஞ்சம் உணவுகொடுத்துச்சம்பூரணமாகக் கொடாமலிருக்கிற லோபிகள்போலச் செய்கின்றையே. இப்படிச்செய்வது நல்லதா ? என்றும் நீலோற்பலம்-செவ்வல்லி-தாமரை-வள்ளிக்கொடி- வரால்மீன்-ஆமை-இதுகளையெல்லாம் பார்த்து, அபிர்கத்துக்குச்சமானமான சீதையினுடைய அவயவங்களையுன்னிடத்திலே கண்டேன். இதுகள் அந்த ராக்ஷதன் அவளைத்தின்றுகொண்டு போகும்போது சிந்தினதுகளோ ! வாவியே நீசொல்லென்றும், ஆடுகின்றமயிலே ! அவளுடைய சாயலுக்குத்தோற்று மனதுநொந்து ஒதுங்கியிருந்த நீயும் மனதுகுளிர்ந்தையோ ! அவளைத் தேடிக்கொண்டு திரிகின்ற என்னையும் நன்றாகக் கண்டாய். மனமகிழ்வுடனே ஆடுகின்றாய் ! ஆயிரங் கண்ணுண்டானவர்களுக்கு எதுதான் தெரியாது எப்படி ஒளிக்கலாமென்றும், அவையத்திலேயிருக்கிற அன்னப்பேடுகளே ! நீங்களாகிலும் ஒருவார்த்தை அறிந்ததைச் சொல்லுங்கள் நீங்களொன்றும்பேசுகிறதில்லையோ ! உங்களிடத்திலேபிழைசெய்யாமலிருக்கின்ற எனக்கும்பிழைசெய்கின்றீர்களோ ! அவள்தான் உங்கள் நடையை அழியச்செய்து ஜெயங்கொண்டிருந்தாள். அவளிடத்திலே பகைஉங்களுக்கிருக்கின்றது. உங்களைப்பார்த்து நான்சந்தோஷப்படுகின்றேனே என்னிடத்திலுங் கோபஞ்செய்யலாமாவென்றும், பொன்போலும் அந்தவிதழ்களைப்பொருந்தின வண்டுகள் தமிழ்ப்பாட்டினை இசையுடனே பாடும்படி மலர்ந்திருக்கின்றதாமரையே ! அந்தப்பெண் என்னிடத்திலுமில்லை மற்றொருவிடத்திலிருக்கிறவளுமல்லள். உன்னிடத்திலுமில்லையென்றால் நானென்ன சொல்லப்போகிறேன் ? இப்படிஒளிக்கிறவர்களுடனேயும் உறவுசெய்யலாமாவென்றும், இந்தப் பொய்கைக்குள் ளிருக்கின்ற செங்கழுநீர்ப்புஷ்பமே ! ஒருவார்த்தையாகிலும் வாய்திறந்துசொல்லாய். பயப்படாமல் எதிரேநின்று தேனைத்துளித்துக்கொண்டு, நீ அவள்வாய்க்குச்சமானமென்று



சாதிக்கின்றையே ! அந்தவாயிலுண்டான சிறுநகையையும், குளிர்ந்த மதுரமாயிருக்கிற வார்த்தையையுங் கொடுக்கலாகாதாவென்றும், நீலோற்பலமே ! அவள்கண்ணைப்போலவேயிருந்துகொண்டு என்னை இகழ்ச்சிசெய்து உபத்திரவப் படுத்துகிறையாவென்றும், வள்ளிக்கொடியே ! நீ சீதையினுடைய காதேயல்லாமல் வேறொன்றல்ல, குண்டலமும் குழையும் தோடும் விலக்கிவிட்டுவந்தாய் அவள்சமாச்சாரத்தை எனக்குச்சொல்லாமல் இன்னமும் என் துயரத்தைப்பார்க்க ஆசைப்படுகிறாயாவென்றும்சொல்லி, பின்னும் நான் இப்படியெல்லாஞ்சொல்லியும், யாதொன்றும்சொல்லாமலிருக்கின்றையே ஆகையால, மகாகடினப்பிரகிருதி நீயென்றும் அந்தப்பொய்கையினிடத்திலிருந்து வருந்தினார். அந்தப் பொய்கையிலே மதயானைகள் வந்திறங்கித் தும்பிக்கையினாலே தண்ணீரை மொண்டு பெண்யானைகளின் வாயில் ஊட்டுகிறதைப் பார்த்துப் பின்னும் அதிகமாகக்கிலேசித்தார். இவ்விதமாகத் துயரப்படுகிற ஸ்ரீராமரை அன்பையே ஆபரணமாகப்பூண்டிருக்கின்ற தம்பியானவர்பார்த்து, ஸ்வாமி ! வெகு நாழிகையாயிற்று ஸ்நானஞ்செய்து சந்தியாவந்தன முடித்துக் கொள்ளுமென்றுசொன்னார். அப்படியே யெழுந்திருந்து அந்தப்பம்பாநதிதீர்த்தம் பூர்வபுண்ணியம்செய்திருந்தபடியினாலே மதயானையும்பார்த்து நாணும்படி ஸ்நானஞ் செய்தார். அந்தத்தண்ணீரில் ஸ்ரீராமர் ஸ்நானஞ்செய்யவே அவருடைய திருமேனி கொண்டிருந்த காமாக்கினியினாலே அந்தஜலம் கருமான்காய்ச்சிய இரும்பைத்தோய்த்த தண்ணீர்போலக்கொதித்தது. பூர்வத்திலே அன்னமாய் வேதங்களைப் பிரமாவுக்கு உபதேசஞ்செய்த பரப்பிரமவஸ்துவான ராமச்சந்திரன் ஸ்நானஞ்செய்தெழுந்திருந்து சாஸ்திரமுறைப்படி ஸ்ரீமகாவிஷ்ணுவைத் தியானஞ்செய்து தம்பியுடனே அவ்விடத்தில் முனிவர்கள் வாசஞ்செய்கின்ற ஒருசோலையிலிருந்தான். அப்போது சூரியன் அஸ்தமித்து அந்திப்பொழுது வந்தது அத்தருணத்தில் உதயமான சந்திரனும் சூரியனைப்போல அதிகவெப்பத்தைக்கொடுத்தான். புஷ்பங்கள் வண்டுகள் - பக்ஷிகள் - மிருகங்கள் - மரத்தினுடைய இலைகள் இதுகளெல்லாம் ஒடுங்கியதுகள். கிளிகளும் ஒடுங்கியதுகள். மயில்கள் நடனஞ்செய்யாது ஒடுங்கியதுகள். குயில்கள் கூவாதுஒடுங்கியதுகள். மதயானைகள் பிளிறாமல் ஒடுங்கியதுகள். பூமியும், மலைகளும், சர்ப்பங்களும், ஆகாசமும் பேய்கள் முதலான சகலமும் உறங்கியதுகள். அந்த ராத்திரியில் யோகநித்திரைசெய்கின்ற ஸ்ரீராமருடைய திருக்கண்களுக்கு நித்திரைவரவில்லை, அப்படியிருந்து வருந்துகிற சமயத்திலே ஒருவனுக்கு மெய்யுணர்வு தோன்ற அவனைச்சூழ்ந்த வினைகளெல்லாம் பற்றற்று விட்டதுபோல ராத்திரியழிந்துபோய்விட்டது. தாமரைகளெல்லாம் முகமெடுத்துமலர்ந்ததுகள். சூரியன் சமுத்திரத்திலிருந்து எழுந்து உதயமானான். ஸ்ரீராமர் துக்கசமுத்திரத்திலிருந்து எழுந்து காலையில்தானே தாமும், தம்பியும், புறப்பட்டுச்சீக்கிரமாய்அப்பால்நடந்துஅநேகசோலைகளும் மலைகளுங் கடந்துபோனார்கள்.

பம்பாநதிப்படலம் - முற்றிற்று.

---

## அநுமப்படலம்.

அவ்வண்ணம்நடந்து சபரிசொன்ன ரிசியமுக பர்வதம்பேர்ய்ச்சேர்ந்து அதின்மேலேறினார்கள். அதில வாசஞ்செய்துகொண்டிருக்கிற வானரங்களுக்கு ராஜாவான சுக்கிரீபன் இவர்களைக்கண்டு இவர்களாரோ சத்துருக்களென்று பயந்து, ஓடி ஒளித்துப் பிழைப்போமென்றுதெண்ணினான் - நீலன் - அநுமான் - முதலான சிலவீரர்களுடனேகூட பெருமையையுடைய மேருகிரிக்கு ஒப்பாகி உயர்ந்து பிரித்திருக்கின்ற அந்தப்பர்வதத்தின் ஒருபக்கத்தில் ஓடி மறைவாயிருந்துகொண்டு வாயுபுத்திரன அநுமானுக்கு அவர்களைக்காட்டி இவர்கள் வாலியனுப்பவந்தவர்களோ ! என்னவோதெரியவில்லை கையிலே வில்தரித்திருக்கிறார்கள், செவ்வையாக யோசனைசெய்து பாருமென்றுசொல்லி மூலந்தெரியாதவர்களானபடியினாலே அஞ்சிப்போய் மலைக்குகையில் புகுந்துகொண்டார்கள். அவர்கள் அப்படிபயந்து நடுங்குகிற சமயத்தில் பூர்வம் ஆலகாலவிஷத்தைக்கண்டுபயந்த பிரமாமுதலான தேவர்களையும், அசுரர்களையும், பயப்படாமலிருங்களென்று அபயஸ்தங்கொடுத்த சந்திரசேகரனான சிவனைப்போல அஞ்சனாதேவி குமாரராகிய அநுமானானவர் சுக்கிரீபன் முதலானவர்களுக்கு அபயஸ்தங் கொடுத்து இவ்விடத்திலே நீங்களிருங்கள் நான்போய் அறிந்துவருகிறேனென்று ஒருபிராமணப்பிள்ளையாக உருவமெடுத்துக்கொண்டு ஸ்ரீராமலக்ஷ்மணர்களிடத்துக்குவருகிறவராய் தூரத்திலே வரும்போதுதானே அவர்களைப்பார்த்து கையிலேயோ வில்லிருக்கின்றது. ஸ்வரூபமோ தபஸ்வரூபமாகக் காண்கின்றது. இவர்களை எப்படியறிகிறதென்று மறைவாக நின்றுகொண்டு யோசனைசெய்கிறார். தேவர்களுக்கெல்லாந் தலைவர்களான அந்த மும்மூர்த்திகளுமே இந்த இரண்டு உருவமெடுத்தவர்களாகவேணும், இவர்களுக்குச் சமான, மானவர்கள் இந்த உலகத்தில் யாரிருக்கிறார்கள். இவர்களுக்கு அருமையானபொருள் என்ன இருக்கின்றது. இவர்கள் சமாச்சாரத்தைச் சொற்பவிவேகத்தைக்கொண்டு அறியலாமாவென்றுயோசித்து பின்பு நிச்சயமாக எண்ணினார். இவர்கள்மனதிலே சோகசந்தாபஞ்சேர்ந்ததினாலே கிலேசித்து கொண்டிருக்கிறார்கள். அப்படி மிகவும் மெலியத்தக்க சாமானியமானவர்களுமல்ல. கேவலம்மானிடர்களுமல்ல, எதார்த்தமாகப் பார்க்குமிடத்தில் தேவர்களை இந்தவடிவங்கொண்டு வந்தார்கள். தர்மமும் தருதியுமாகிய இவைகளை நமக்குத் தனமென்று எண்ணியிருக்கிறவர்கள். இவர்கள் இங்குவந்தகாரியமும் வேறொருபொருளைக் குறித்தல்ல, தேவாமிர்தத்துக்குச் சமானமானபொருள் இவர்களிடத்திலிருக்கிறது. அது இடையிலே கைதப்பிப் போனபடியினாலே அந்தப்பொருளையே பூமி ஆகாசமிருண்டுபக்கத்திலுந் தேடுகிறார்கள். இவர்

களுக்குக் கோபமென்கிறதேயில்லை. கிருபையானது கடல்போலிருக்கின்றது: சகல ஜீவகோடிகளுக்கும் இதஞ்செய்கிறவர்களேயல்லாமல் பின்னையொரு காரியமுமறியார்கள். பாக்கியத்திலே தேவேந்திரனும்பார்த்து அஞ்சத்தக்க பாக்கியவந்தர்கள். நடக்கையிலே தர்மமும் பார்த்து அஞ்சும்படியான ஒழுக்கமுடையவர்கள். ரூபத்திலே மன்மதனும்பார்த்து அஞ்சுகின்ற ரூபமுள்ளவர்கள். சாமர்த்தியத்தில் எமனும் அஞ்சாநின்ற சாமர்த்தியமுடையவர்கள். இவர்களென்று இப்படிப் பலபலவிதமாகநினைத்துத் தமக்குத்தாமே ஒப்பல்லாமல் வேறொருவரும் ஒப்பில்லாத அந்த அநுமானனவர் முன்பு சிநேகித்திருந்து பிரிந்த இஷ்டர்களைக் கண்டதுபோல அன்புடனே உள்ளமுருகுகின்றார். அப்படி நின்று மற்றும் அவர்கள் ஸ்வரூபத்தைநன்றாகப்பார்த்து வேங்கைப்புலி முதலான மிருகங்களெல்லாந் தங்களுடைய கன்றைக்கண்டதுபோல, ஆசையுடனே இவர்களைப் பின்றொடர்ந்துவந்து வணங்குகின்றதுகள். மயில் முதலாகிய பக்ஷிகளெல்லாம் இரக்கமுற்று இவர்கள் திருமேனியில் வெயிலுறையாமல் ஆகாசத்தில்பந்தலிட்டதுபோலச் சிறகைவிரித்துக்கொண்டிருக்கின்றதுகள். மேகங்கள் குறுந்துளிகளை சிந்திக்கொண்டிருக்கின்றதுகள். நெருப்புப்போலச் சுடுகின்ற மணியாம்பருக்கைக் கற்கள்முதலானதுகளும் இவர்களுடைய பாதங்களுக்குப்புஷ்பங்கள்போலக் குளிர்ச்சியைக்கொடுக்கின்றதுகள். இவர்கள் நடக்கிறவழிகளிலே மரம் புல் முதலானதுகளெல்லாஞ் சாய்ந்து இவர்களைத் தொழுகின்றதுபோ லிருக்கின்றதுகள். இவர்கள் தர்மதேவதைகள்தானோவென்றும், எனக்கு எலும்புகள் உருகுகின்றதுகள். ஆசை அதிகரிக்கின்றது. கரையில்லாத அன்பும் உதிக்கின்றது. ஆகையால், பிறவித்துன்பங்களைத்தீர்த்து வினைகளைத்துடைத்து நரகத்துக்குப்போகவிடாமல் மீளாதமோக்ஷத்தில் சேர்க்கின்ற மேலாகியதேவர்களோ இவர்களென்றும் எண்ணி, நேராக அவர்கள் தன்னைக் காணும்படிச் சமீபத்தில் வருகிறபோது அவர்களுஞ் சமீபத்தில் வந்தார்கள். அப்படிவந்த ஸ்ரீராம லக்ஷ்மணர்களைக்கண்டு நீங்கள் நினைத்து வந்தகாரியம் சித்தியாகக்கடவது. ஆயினும், இவ்விடத்தில் என்னகாரியமாக வந்தீர்களென்றுகேட்க, கருணாநிதியான ஸ்ரீராமர்பார்த்து நல்லவனாயிருக்கிறாய் நீ யார் சொல்லென்றுகேட்க, அடியேன் வாயுதேவனுக்கு அஞ்சனாதேவியின் வயிற்றிலேபிறந்த புத்திரன். என் பெயர் அநுமான் இந்தமலையில் வாசஞ்செய்கிற சூரியபுத்திரனான சுக்கிரீவனென்கிறராஜாவுக்கு ஏவல்செய்துக்கொண்டிருப்பேன். நீங்கள் வந்ததைக்கண்டு யோசனைசெய்து அவர்கள் ஆர் அறிந்துவாவென்று அவரனுப்பநான்வந்தேனென்றுசொன்னார். அந்தவார்த்தையைச்சக்கரவர்த்தி திருமகன்கேட்கவே அநுமானைப்பார்க்கிலும் மிகவும் வல்லவர்கள் உலகத்தில் வேறேயில்லையென்பது மிகவுந்தெரிந்தவராய் பராக்கிரமமும், நிலையும், கல்வியும், அறிவும், இவனிடத்திலேதானே யிருக்கின்றதுகளென்றுநினைத்து லக்ஷ்மணனைப்பார்த்து அப்பா! தம்பி! இவன் கல்லாத வித்தையும், வேதசாஸ்திரங்களும் இனிமற்றொன்றில்லை யென்கிறது இவனுடைய வார்த்தையினாலேதானே தெரிந்தது. இந்த மகாபுருஷன் பிரமதேவனோ! ரிஷபவாகனனான சிவனோ! இப்பொழுது இவன்கொண்டிருக்கின்ற மனுஷரூபம் இவனுடைய ஸ்வரூபமல்ல, இந்த உலகுக்கெல்லாம் ஒரு ஆச்சாணிபோல மஹாபராக்கிரமத்துடனே ஓங்கியுயர்வதாகிய ஸ்வரூபம்இவனுக்குவேறேயிருக்கும், அதைநன்றாகத் தெரிந்துகொண்டேன். அதை நீயும் பின்பு பார்க்கப்போகின்றாயென்றுசொல்லி எதிரே நிற்கின்ற அநுமானைப்பார்த்து நீர்சொன்ன அந்தராஜாவானவர் எங்கேயிருக்கிறார். அவரைப்பார்க்கவேணுமென்கின்ற அபேக்ஷையினாலேதான்வந்தோம். உம்மைக்கண்ட எங்களுக்கு உம்முடைய வார்த்தையைப்போல நல்ல மனதுண்டான உங்கள் ராஜாவைக் காட்டுமென்றுசொன்னார். அப்போது அநுமான் அதிகசந்தோஷமாய் உலகத்தில் உங்களுக்குச் சமானமான துல்லியர்கள் ஆரிருக்கிறார்கள். மிகவும்வருத்தப்பட்டுக்கொண்டிருக்கிறவனைக் காணவந்தோமென்று சொல்லுவீர்களாகில், அவன்செய்த பாக்கியமே மேன்மையையுடையதாகும். அந்தச் சூரிய குமாரனை இந்திரகுமாரனை வாலியென்பவன் கொஞ்சமாவது கிருபையில்லாமல் கோபித்துச்சீற, அவனாலே நிலைகெட்டிருந்தவனாய் இந்தப்பர்வதத்தில்வந்து என்னுடனேகூட இருக்கின்றான். அவனுக்கு மகாபாக்கியம்வந்து நேரிட்டிருக்கிறபடியினாலே தாங்கள்வந்தீர்கள் உலகத்திலே பெரியவர்களுக்கு யாகாதிகிருதுக்கள் செய்கிறதிலும், கோடசதானஞ் செய்கிறதிலும், குலப்பகையாய்க்கொல்லவந்த சத்துருவுக்குப்பயந்து ஒடுங்கினவனுக்கு அபயந்தக்கொடுத்து ரக்ஷிக்கிறது விசேஷமாமல்லவோ! தங்களைப்பாதுகாக்கிறது உங்களுக்கு எளிதானகாரியமே தாங்கள் தேவர்கள்முதலான சராசரங்கள்நிறைந்திருக்கின்ற இந்தமூன்றுலோகத்தையும் ரக்ஷிக்கத்தக்க, மகாத்துமாக்களாயிருக்கின்றவர்களானபடியினால் உங்களிடத்தில் அடைக்கலம்புகுந்த எங்களுக்கு இனிப்பார்க்கிலும் உறுதிவேறுண்டோ? எங்கள் ராஜாவுக்குத் தங்களை யாரென்று நான்சொல்லுகிறது சொல்லுங்களென்று கேட்க, இளையபெருமாள் சொல்லுகிறார் சூரியவம்சத்திற்பிறந்து சக்கரவர்த்தியாய்த் தேவர்கள் நிமித்தம் அசுரர்களைச்சங்கரித்த வீராதிவீரன் யாகாதிகிருதுக்களெல்லாஞ்செய்து முடித்தவன். இந்தப் பூலோகமும், தெய்வலோகமும், அரசாண்ட கருணாநிதியானவன். மதயானையேறிநடத்தி அசுரர்களெல்லாம் மடிந்துபோம்படி வில்வளைத்து ஜெயித்த மநுமாந்தாதா முதலானவர்களும் தனக்குச்சமானமல்லவென்று சொல்லும்படிகீர்த்திப்பிரதாபம்படைத்த தசரதமகாராஜா வென்கின்ற அயோத்தியாபுரிக்கு அதிபதியினுடைய திருக்குமாரர் இந்தமகாபுருஷர் இவர் தம்முடைய ராச்சியத்தைத் தகப்பனார் ஆக்கினையின்படித் தம்பிக்குக்கொடுத்து ஆரணியவாசம் செய்யவந்தார். ஸ்ரீராமரென்கின்ற நாமமுடையவர். அடியேன் இவருடைய அடிமைத்தொழில்செய்கிறவனென்று, ஸ்ரீராமர் திருவவதார முதலாக ராவணன்செய்த மாயைத்தொழில்வரைக்கும் நடந்தசெய்திகளெல்லாம் ஒன்றாகிலும் விடாமல் விசிதமாகச்சொன்னார். அதுகேட்டு எதிரேநின்ற அநுமானனவர் ஓடிவந்து ஸ்ரீராமருடைய பாதாரவிந்தத்தில் சாஷ்டாங்கமாகவிழுந்து சேவித்தார். அப்படிச்சேவிக்கவே ஏன் தாதகாரியஞ்செய்கிறீர். நீர் பிராமணனாயிருக்கின்றீரோவென்று ஸ்ரீராமர்சொல்ல, சுவாமி! அடியேனும் அந்தக்குரங்கின் கூட்டத்தில் ஒருவன்தானென்றுமாருதியானவர்சொல்லி, உடனேராமலக்ஷ்மணர்கள் அதிசயிக்கும்படி வேதசாஸ்திரங்களாலே சொல்லப்பட்ட மகத்தாகிய ரூபப்பதார்த்தங்களெல்லாம் தாழும்படிபொன்மயமான மகமேருவும் தோளுக்குக்கேகாரமாகுமென்று சொல்லத்தக்க, தம்முடைய ஏகாஸ்வரூபமாகிய ஆகாசமளாவுகின்ற விஸ்வரூபங்கொண்டுநின்றார். பூமி ஆகாசமெல்லாந் திருவடியினாலே அளந்துகொண்ட கமலநேத்திரராகிய அந்த ஸ்ரீராமருக்கு, அநுமானுடையகுண்டலம்பிரகாசிக்கின்ற முகத்தைக்காண்கிறதே அருமையாயிருந்ததென்றால் சூரியனிடத்திலே சாஸ்திரங் கற்றுணர்ந்த அநுமானுடைய ஸ்வரூபத்தை நானெவ்வாறென்று அறிந்துசொல்லப்போகிறேன். அந்தஸ்வரூபத்தை ஸ்ரீராமர்கண்டுமிகவும் ஆச்சரியப்பட்டு இளையபெருமாளைப்பார்த்து அப்பா! வேதங்களாலும் ஞானத்தினாலும் காணப்படாத அந்தப்பரமபதமே இந்த வானரஉருவெடுத்தது. நல்லவிதித்தங்கண்டோம். இப்படிப்பட்ட மகாபுருஷன்நமக்கு அகப்பட்டதனால், இனித்துன்பமென்கிறது நமக்கில்லை இன்பமும்வரும். இந்தச்சாமர்த்தியபரன் அந்தச்சுக்கிரீவனுக்கு ஏவல்செய்கிறவனானால் அவனுடைய பலமும்பெருமையுஞ் சொல்லவேணுமோ வென்றுசொல்லி மனதுஉகந்து முகமலர்ந்திருந்தார். அப்படியிருக்குமளவில் அநுமானனவர் விஸ்வஸ்வரூபத்தை அடக்கிக்கொண்டு ஸ்ரீராமரையும் லக்ஷ்மணரையும்பார்த்து, இந்தக்ஷணம் நான்போய் அவனை அழைத்துக்கொண்டுவருகிறேன். இவ்விடத்திலே சிறிதுநேரமிருக்கவென்று சொல்லி விடைபெற்றுக் கொண்டு அதி சீக்கிரமாகப் போனார்.

அநுமப்படலம்-முற்றிற்று.

## நட்புப்படலம்.

அவ்விதமாகப்போன அநுமானனவர் சுக்கிரீவனிடத்திற்போய்ச்சேர்ந்து நாமும் நம்குலமும் இந்தலோகமும் பிழைத்தோமென்று நினைத்து அவனைப் பார்த்து, வாலியென்கின்ற மகாபலசாலியினுடைய உயிரை வாங்குகிறதற்குக் காலன்வந்துவிட்டான். நாமும் துயரக்கடலைக் கடந்தோமென்றுசொல்லிக்கொண்டு, ஆலகால விஷத்தையுண்ட சாம்பவமூர்த்தியைப்போல நடனஞ்செய்தார். இந்தப்பூமி — ஆகாசம் மற்று முண்டாகிய சகலலோகங்களிலும் இருக்கிறவர்களுடைய நடத்தையிலும் வார்த்தையிலும் கண்ணிலும் இருக்கின்றவர்கள், கரன் முதலாகிய நிஷிகண்டகரான ராக்ஷதரையெல்லாஞ் சேனாசமுத்திரத்துடனே சின்னபின்னமாய்த் தலைகளுருளவில்வளைத்து யுத்தஞ்செய்து, நிர்மூலப்படுத்திப்பூலோகத்தில் இருக்கிறவர்களுடைய உபத்திரவங்களைத்தீர்த்தவர்கள் மேலானவர்களாகிய சிவன்முதலான தலைவருக்கும் அதிசயமாகிய பலமுண்டானவர்கள். உலகமெல்லாம் ஏகாதிபத்தியமாக ஆக்கியா சக்கரம்நடத்தி ராஜ்யபாரஞ்செய்கிற தசரதசக்கரவர்த்திகுமாரரானவர்கள் இவ்வியசுந்தரமுண்டானவர்கள் மநுநீதி யுடையவர்கள். கிருபாமூர்த்திகளாயிருக்கின்றவர்கள். ஒழுக்கந்தவறாதவர்கள், சகலமானவர்களிலும் உயர்ந்தவர்கள். ஒருவராலும் போதிக்கப்படாமல் சுபாவத்திலேதானே விளங்கிய முடிவில்லாத பேரறிவையுடையவர்கள். ஓங்கிய கீர்த்தியுண்டானவர்கள். விசுவாமித்திர ரிஷிகொடுத்த திவ்வியாஸ்திரங்களையுடையவர்கள். அந்த ஸ்ரீராமலக்ஷ்மணர்கள் இருவரில் ஜேஷ்டராகிய ஸ்ரீராமரானவர், காலாக்கினிக்குச் சமானமாகிய தாடகைவிழுந்த [illegible]த்து அவள் பிள்ளைகளையுங் கொன்று தம்முடைய பாதரேணுவினாலே அகலிகை சாபமுந் தீர்த்தருளினார். பூர்வம் மிதிலைக்குப்போயிருந்தபோது சூரியனுடைய பல்லை உதிர்த்த வீரபத்திரனாகிய சிவனுடைய திரியம்பகமென்கின்ற வில்லை ஒடித்தார். பெற்றபிதாவானவர் சொல்லைச் சிறியதாயார் ஆக்யாபிக்க, ராஜ்யாதிபத்தியமெல்லாந் தம்பிக்குக்கொடுத்து இவ்விடத்திற்கு எழுந்தருளினார். கையிலேமழுவாயுதந் தரித்திருக்கின்றபரசுராமனையும் பலவீனப்படுத்தித் தோற்றுப்போம்படிசெய்தார். அதிககோரனான விராதனையுங்கொன்று அவனுடைய சாபத்தையும் விமோசனமாகும்படிசெய்தார். அவர் சகலதேவர்களும் தொழுகின்ற திருப்பாற்கடலிலே கண்வளர்ந்தருளும் ஸ்ரீமந்நாராயணனே இப்படி மானிட வடிவங்கொண்டாராகவேணும். அல்லது பார்வதிதேவியை வாமபாகத்திலேவைத்த கைலாசபதி யாகவேணும். சுக்கிரீவமகாராஜாவே! நீர் அந்தமகானுபாவனைப் பிரத்தியக்ஷத்தில் போய்ப்பார்த்தால் தெரியலாம். ராக்ஷதர்களுக்குள்ளே மாரீசனென்பவன் மாயமானாய்வந்தான். அவனை ஒருக்ஷணத்தில் மாய்ந்து போம்படிசெய்தார். திக்குகளையெல்லாங் கைகளாலேதுழாவிச் சகல ஜீவராசிகளையும் பற்றிவாயிலிட்டு விழுங்கிக்கொண்டிருந்த கபந்தனையுங்கொன்று, தங்களுக்கு விருந்துசெய்து உபசரித்த சபரியைப்போல அவனுக்கு நல்லபதவி கிடைக்கும்படிசெய்தார். ரிஷீஸ்வரர்கள் முதலாகிய பெரியவர்களெல்லாம் இவர் வருவாரென்றெண்ணி வெகுகாலமாகத் தபசுசெய்து வழிபார்த்துக்கொண்டிருக்கின்றார்கள். மேலும் இவருடைய தரிசனமாகவே வினையாகிய சிறைநீங்கி, எத்தனைபேர்களோ பரமபதஞ்சேர்ந்தார்கள், நான் என்ன சொல்லுவேன்! புத்தியீனனான ராவணன் மாயையினாலே அவருடைய ஸ்திரீயை யெடுத்துக்கொண்டுபோனான். அவளைத்தேடிக் காண்கிறநிமித்தமாக நீ யிருந்ததவஞ்செய்திருந்தவனானபடியினாலும், நல்வினையுண்டாயிருக்கிறவனானபடியினாலும் அந்தராமலக்ஷ்மணர்கள் உன்னுறவுதேடிக்கொண்டு வந்தார்கள். நம்மிடத்திற்பரிபூர

ணமாகக்கிருபைசெய்திருக்கிறார்கள். வாலிக்கு இன்றை
க்கே மரணம்வந்துசம்பவிக்கும். அவர்களைக் காண்கிறத
ற்குநீரெழுந்திருந்துவாருமென்றுமந்திரியான அநுமான்
சொல்ல, அந்தச்சமாச்சாரங்களையெல்லாம் சுக்கிரீபன்
கேட்டறிந்து, அதிகசந்தோஷமாகி உம்மைப்போலொ
த்த மகானுபாவனையுடைய எனக்கு அருமையானது
என்னஇருக்கின்றது. பிரகஸ்பதிக்குச்சமானமான அநு
மானே வாருமென்று எழுந்திருந்து அதிசீக்கிரமாகநட
ந்து, தனக்குத்தானே சமானமாகிய ஸ்ரீராமச்சந்திரனு
டைய திருவடியைச் சுக்கிரீபன்வந்தடைந்தான். அந்த
ச்சூரியபுத்திரனான சுக்கிரீபன், சுவாமியினுடைய குண்
டலந் துறந்துபிரகாசிக்கின்ற திருமுகமண்டலமும் செ
ந்தாமரைப்புஷ்பங்கள்போலக் கிசாணுதிகளும், திரு
வையே ஒழுகிக்கொண்டிருக்கின்ற குளிர்ச்சி பொருந்தி
ய நேத்திரங்களும், மேகத்துக்குச்சமானமாகிய சடை
யும், மரகதமலைபோலும் திருமேனியினழகுங்கண்டு, இ
ளையாழ்வானையும் நோக்கி, நெடுநேரம்நின்று கண்கள
ளித்து, பிர்மாசிருஷ்டித்த உலகங்க ளெல்லாம் அன்று
முதல் இன்றையவரைக்குஞ்செய்த தபோபலங்க ளெல்
லாம்குவிந்து, இரண்டுவுருவமாகிப் புஜபராக்கிரமத்தை
யுடைய வீரர்களாய்த்தோன்றியதுகளென்று மனந்தே
றினவனாய், பின்பு தேவர்களுக்கெல்லாம்தேவர்களாய்
விளங்குகின்ற பரமமூர்த்திகளே ! தங்களுடைய ஸ்வரூ
பமாறி இந்தமானிடவுருவமெடுத்துவந்தார்களாகையா
ல் கங்காதரனாகிய சிவன் பிர்மா முதலானசகலதெய்வப்
பிறப்பையும். இந்தமனுஷப்பிறப்பே வெற்றி கொண்ட
தென்றுநினைத்து ஆசையாகின்றசமுத்திரத்தின் கரைகா
ணுதவனாய்ப் பாபரகிதராகிய ஸ்ரீராமருக்குச் சமீபத்தி
லேவந்தான். ஸ்ரீராமரும் அன்புடனே திருக்கையை நீ
ட்டி இப்படிவாருமென்று ஆக்கியாபித்தார். அப்படி
யே சுக்கிரீபன் ஸ்ரீராமருக்கு அருகிலிருந்தான். அவ்வ
ண்ணமாகச் சுக்கிரீபனும் அநுமானும் ஸ்ரீராமலக்ஷ்ம
ணரும் கூடியிருந்தது எப்படியிருந்ததென்றால், ராக்ஷ
தர்களென்கின்ற பகையைத்தள்ளித் தர்மத்தை நிலைநிறு
த்துகின்ற காலங்கள் ஒன்றாகக் கூடியிருந்ததுபோலிருந்
தது. அந்தநால்வரில் தன்மனோபீஷ்டத்தை நிறைவேற்
றிக்கொள்ளும்படி வந்த சுக்கிரீபனும் ஸ்ரீராமச்சந்திரனு
ம் அமாவாசையிலே குறைவுநீங்கச் சூரியனிடத்தில் சந்
திரன்வந்து சேர்ந்ததுபோலவும். தாங்கள் நினைத்திருக்
கிற காரியங்களுக்கு முன்புசெய்ததவமும் பின்பு செய்
யும் முயற்சியுங் கூடினது போலவும், கல்வியும், ஞா
னமுங் கூடினது போலவும் கூடியிருந்தார்கள். அப்
படியிருக்கிற சமயத்திலே சூரிய புத்திரனான சுக்கிரீப
ன். ஸ்ரீராமருடைய திருமுகமண்டலத்தைப்பார்த்து ஐ
யா ! லோகநாயகரான உம்மைச்சேர்கிறதற்கு எனக்கு
க்கிடைத்தபடியினாலே மகத்தான தபசுசெய்தவர்கள் எ
ன்னைப்பார்க்கிலும் ஆரிருக்கிறார்கள் ! விதியேகொண்டு
வந்து கூட்டுவித்தால் எதுதான் சித்தியாமலிருக்குமெ
ன்றுசொன்னான். அந்தவார்த்தைகேட்டு ஸ்ரீராமரானவ
ர் மகாதபசியான சபரியென்பவள் இந்தமலையிலே நீவந்
திருக்கிற சமாச்சாரஞ்சொன்னாள். அதினால் எங்களுக்
குவந்திருக்கிற துயரத்தை உன்னால் தீர்த்துக்கொள்ளுகி
றதற்கு எண்ணிவந்தோம். அது உன்னாலேதீரும், சந்
தேகமில்லையென்றுசொல்ல, அதற்குச் சுக்கிரீபனானவ
ன் மகாபலவந்தனான என்தமையன் என்னிடத்தில் அதி
கோபங்கொண்டவனாய், நான் அந்தகாரபூமிபரியந்தம்
ஓடிப்போகியுந் துரத்திக்கொண்டுவந்து என்னை உபத்தி
ரவப்படுத்தினான். பிராணனைப் போக்கடித்துக் கொள்
ளுகிறதற்குப்பயந்து, இந்தமலையில் அவன் வரக்கூடா
தாகையினாலே, இதுவேயொரு அரணாகப் பாவித்துக்
கொண்டு இதிலே பிராணனைக் காப்பாற்றிக் கொண்டி
ருந்தேன். இப்போது உம்மிடத்தில் அடைக்கலம்புகுந்
தேன். என்னை ரக்ஷிக்கிறது மகாதர்மமென்று சொன்னா
ன். ஸ்ரீராமர் அப்படிச்சொன்ன சுக்கிரீபனைக் கிருபையு
டனேபார்த்து இதுவரையிலும் உனக்குவந்த இன்பதுன்
பங்களெல்லாம்போகட்டும். இனிமேல் சொர்க்கமத்திய
பாதாளங்களில் உன்னை உபத்திரவப்படுத்தினவர்கள் எ
ன்னையும் உபத்திரவப்படுத்தினவர்களே. பொல்லாதவர்
களானாலும் நல்லவர்களானாலும் உனக்குச் சிநேகிதர்க
ளானால் அவர்கள் எனக்கும்சிநேகிதர்களே. உன்பந்து
ஜனம் என்பந்துஜனமே. நீ யென்பிராணபதமானத
ம்பியேயென்று அன்புடனேசொன்னார். அப்படிச்சுவா
மிசொல்லக்கேட்டவுடனே தேவர்களைப் பார்க்கிலும்
விசேஷமாகிய ஸ்ரீராமவாக்குப்பிறந்தபடியினாலே இனி
நமக்கு என்னகுறை யிருக்கின்றதென்றுநினைத்து அங்கி
ருந்தகுரங்கின்சேனைகள் மிகுந்தசந்தோஷமாய் அட்ட
ஹாசஞ்செய்ததுகள். அஞ்சனாதேவி புத்திரனான அநு
மானுடைய சரீரம்புளகித்தது. தேவர்கள் புஷ்பமாரி
பொழிந்தார்கள், மேகம் ஸ்வர்ணவருஷம் வருஷித்தது.
அப்போது அநுமானெழுந்திருந்து ஸ்ரீராமரைச் சேவி
த்துத் தேவரீரும் தேவரீருடைய தோழனும் பல்லூழி
காலஞ்சுகமாயிருக்கவேண்டும். இனித்தங்களுடையதிரு
மாளிகைக்குவந்து தாங்கள் எழுந்தருளியிருக்கும் திரு
க்கோலத்தை நாங்கள் கண்டு சேவிக்கும்படி அபேக்ஷி
த்தோம். ஆகையால் கிருபை செய்யவேணுமென்று வி
ண்ணப்பஞ்செய்ய, அப்படியே செய்கிறேனென்று தம்
பியுடனேகூட எழுந்தருளினார். சுக்கிரீபனும் அநுமான்
முதலான சிலவானரங்கள் சூழ்ந்துவரச் சந்தனவிருட்
சம் – அகில்விருக்ஷம் – புன்னைக் விருக்ஷமுதலாகிய அ
நேகவிருக்ஷங்களும் தாமரைத்தடாகமுஞ்சேர்ந்து, போ
கபூமிக்குச்சமானமாயிருக்கின்ற பூஞ்சோலையிற் போய்,
பளிக்கறைகளும் நவரத்தினகசிதமான மண்டபங்களும்,
நிறைந்து அதிகசிங்காரத்துட னிருக்கின்ற அரண்மனை
யிற்புகுந்து; ஒருபுஷ்பமெத்தையிலே ஸ்ரீராமருஞ் சுக்கி
ரீபனுஞ்சேர்ந்து ஒருவருக்கொருவர் யோக க்ஷேமங்க
ளை விசாரித்துச் சந்தோஷமாயிருந்தார்கள். அந்தரு
ணத்திலே வானரர்கள்போய் நல்லருசியான கனிகளுங்க
ந்தமூலங்களுங் கொண்டுவந்தார்கள். ஸ்ரீராமர் திருமஞ்
சனமாடி நியமமுடித்துக்கொண்டு விருந்துண்டார். உ
ண்டபின்பு ஸ்ரீராமர்யோசனைசெய்து சுக்கிரீபனைப் பார்
த்து, அப்பாநீயும் ஸ்திரீயைப்பிரிந்திருக்கிறதாகக்காண



கின்றதென்றுசொன்னார். அப்போது அநுமான் எழுந்தி
ருந்துநமஸ்காரஞ்செய்து சுவாமி! அடியேன்சொல்லுகி
ன்ற விண்ணப்பத்தைக் கேட்டருளவேணுமென்றுசொ
ல்லுகின்றான். நான்குவேதத்திற்கும்வேலிபோலக்கைலாச
பர்வதத்தில்வாசமாயிருக்கின்றசிவனுடையகிருபையை
ப்பரிபூரணமாகப் பெற்றிருக்கின்ற வாலியென்பவன் ஒ
ருவனிருக்கின்றான். அவனுடைய புஜபலத்துக்குக் க
ரையில்லை. பூர்வத்தில் தேவர்கள்–அசுரர்கள் முதலானவ
ர்களுக்கும், மகாபிரயாசமாய் அசைக்கக்கூடாதிருந்த மந்
தரகிரியை அசைத்துப்பாற்சமுத்திரத்தைக்கடைந்தவன்
நிலம்–நீர்–நெருப்பு – காற்று – என்கின்ற இந்த நான்கு
பூதத்தின் பலத்தையும் தனதாகவுடையவன் சப்த சமு
த்திரத்துக்கும் அப்பா லிருக்கின்ற சக்கரவாளகிரியி லி
ருந்தபடி இந்த மலையினிடத்தில்தாண்டுவான். அவனோ
டே யாராகிலும் யுத்தஞ்செய்கிறதற்குக் கிடைத்தால்
அவர்களுடைய பலம் பாதி அவனுக்குவந்துசேரும். அ
ஷ்டதிக்கிலும் பிரதி தினமும்போய் அஷ்டமூர்த்திகளை
யுஞ் சேவித்துவருவான். அவன் வேகத்திற்குமுந்தி வா
யுவும் போகமாட்டாது. அவனுடைய மார்பிலே அப்பி
ரமணியருடைய வேலும் நுழையமாட்டாது. அவன்
வாலினுடைய பலமற்றுப் போகாததற்கு முன்னே ரா
வணனுடைய செங்கோலுங் குடையுஞ்செல்லாது. அ
வன்நடந்தால் மேருமுதலாகிய பர்வதங்களும் வேரோ
டே பேர்ந்துபோம், ஆகாசமும், திக்குகளும், மேகங்க
ளும், சந்திரசூரியர்களும், பர்வதங்களும், அவனுடைய
தோள்களில்மறைந்துபோம். பூர்வம் பூமியைத் தோண்
டிய ஆதிவராகத்திற்கும் மந்தரகிரியை முதுகிலேசுமந்த
ஆதிகூர்மத்திற்கும் சமானமானவன் இரணியன் மார்
பைப்பிளந்த அந்த உக்கிரநரசிங்கமானாலும் இவன்தோ
ளைப் பிளக்கமாட்டாது. ஆயிரம் பணாமுடிகளைப் பரப்பி
க்கொண்டு இந்தப் பூமியையெல்லாம் ஆதிசேஷன் படி
ந்துகிடந்து தாங்குகிறான். வாலி உலகத்தை யெல்லாம்
நடந்தபடியே தாங்குவான். கடல் சப்திக்கிறதும், வாயு
சஞ்சரிக்கிறதும், சூரியன்தேர் ஆகாசத்தில் நடக்கிறது
ம், இவன் கோபத்துக்கு பயந்தேயல்லாமல் மற்றொன்றி
னால் அப்படி யாகின்றதல்ல, அவனிடத்தில் எழுபது
வெள்ளம் வானரசேனை யிருக்கின்றது. அந்தச் சேனை
யில் ஒவ்வொரு வானரம் மகமேருவையுந்தோளினாலே
முட்டித் தள்ளிவிடும் அவனுடைய ஆக்கினைக்கு அஞ்சி
மேகங்களும் இடிக்கிறதில்லை. சிங்கங்கள் முழங்குகிற தி
ல்லை. சர்ப்பங்களும், சீறுகிறதில்லை. அவன் ராவணனை
வாலினாலே கட்டிக்கொண்டு பூலோகமெல்லாந் திரிகிற
போது அந்தக்கட்டின் வாயிலேயிருந்து பொழிந்த ரத்த
ம் எந்தவுலகத்திலும் தோயாமலிருந்தது. மேலும் அவன்
தேவேந்திரன்பெற்ற புத்திரன் பூரணச்சந்திரனைப்போ
லத் தழைத்த வெள்ளைகிற முண்டானவன் எமனும்பய
ப்படுகின்ற ஆக்கினையையுடையவன். ஒரு தாய்வயிற்றி
லிருந்து இந்தச் சுக்கிரீபமகாராஜாவுக்கு முன்னேபிறந்
தவன் அப்படிப்பட்ட வாலி எங்களுக்கு ராஜாவாகியும்
இவரிளவரசாகியு மிருக்கிறநாளில் ஒரு அசுரன் வம்ச
சத்துருவாய் அவனுடன் யுத்தத்துக்குவந்தான். வாலி
அவனுடன் யுத்தஞ்செய்து அவனை யடிக்கிறபோது அ
வன் நிற்கமாட்டாமல் ஓடினான். அப்படியோடியும் வி
டாமல் வாலி பின்தொடர்ந்தான். அசுரன்ஒரு பூமியைவி
ட்டு பாதாளமாகிய பிலத்துவாரத்திலே புகுந்தான். அ
ப்போது வாலி தம்பியை அழைத்துநான் அவனைத்தொ
டர்ந்துபோய்க் கொன்றுவிட்டு க்ஷணப்பொழுதில் வரு
கிறேன். அதுவரையிலும் நீ இந்தப் பிலத்தின் வாசலை
க்காத்துக்கொண்டிருவென்று சொல்லிவிட்டு அதிகோ
பத்துடன் அந்தப் பிலத்துவாரத்தில் நுழைந்து இருப
த்தெட்டு மாதவரைக்கும் அவனைத்தேடியுத்தஞ்செய்து
கொண்டிருந்தான். அப்போது தம்பியாகிய இவர் மிக
வுங் கிலேசித்து அழுதுதுயரப்பட்டார். நாங்களெல்லா
ங்கூடி இவரையிரந்து உம்முடைய தொழில் இதுவான
படியினாலே நீர் ராச்சியபாரஞ் செய்யுமென்று சொன்
னோம். அப்படி செய்கிறது பழுதென்று மிகுந்த வருத்
தமுற்றவராய் அந்தப் பிலத்துவாரத்திலே; நான்போய்
என்தமையனைத் தேடிப்பார்க்கிறேன். அவர் இறந்து
போயிருந்தால் அவரைக் கொன்றவனைக் கொல்லுகிறே
ன். கொல்லமாட்டாமற்போனால் சாகிறேனென்று அந்
தப்பிலத்தில் நுழையப்போனார். அத்தருணத்தில் பக்க
த்திலிருந்த பெரியோர்களும் அடியேனுந் தடுத்துச் சி
லநீதிகளைச்சொல்லி மனதைத்தேற்றி வானரசேனியங்
களைச் சம்ரக்ஷணைசெய்யும்படி இவருக்கு ராஜரீகங்கொ
டுத்ததுண்டு, இவர் முழுச்சம்மதமாகப் பெற்றுக்கொ
ண்டதில்லை. அப்படியிருக்கையில் வாலியைக் கொன்ற
அந்தமாயாவியாகிய அசுரன்திரும்பி இந்தவழியாய்வரு
வானென்றுபயந்து, நாங்களெல்லாம் பர்வதங்களைப் பி
டுங்கிப்போட்டு அந்தப் பிலத்துவாரத்தைஅடைத்தோ
ம். அப்பால் இவரை அரசாகவைத்துக்கொண்டு கிஷ்கி
ந்தாபர்வதத்தில் இருந்தோம் அப்போது அந்த அசுர
னைத் தொடர்ந்துபோன வாலி அவனைக்கொன்று அவ
னுடைய உயிரொன்றிற கள்ளைக்குடித்து மதோன்மத்தனா
ய்த்திரும்பி பிலத்துவாரத்தின் வழியாய்வந்து அடைத்
திருந்ததைப்பார்த்துத் தம்பியைக் கூப்பிட்டுப் பிரதியு
த்தரஞ் சொல்லாதிருக்கக்கண்டு நம்முடைய தம்பி நல்
ல உபகாரஞ்செய்தானென்று அதிக ஆக்ரோசமாயும்
வாயுவைப்போல வேகமாயும் காலினாலுதைக்கவே நா
ங்கள் அடைத்திருந்த பெரியபர்வதங்களெல்லாம் சிதறி
ஆகாசத்தில் எழும்பிச் சமுத்திரத்தில்விழுந்ததுகள். அ
ங்கேயிருந்து சகலரும் பயப்பிராந்தி கொள்ள எதிர்த்திரு
த்துக்கொண்டுவந்து இவ்விடத்திற் சேர்ந்தான். மனதிலே
வேற்றுமையில்லாத இவரும் எதிரேபோய்ச் சேவித்து
க்கொண்டு சுவாமி ! நீர் வெகுநாளாகவாராதிருந்தால் நான்
உம்மிடத்தில் வரும்படிப்புறப்பட்டேன். அதற்கு இங்
கிருந்த பெரியவர்களில் ஒருவருஞ் சம்மதிக்கவில்லை அ
வர்கள் ஆக்கினைக்கு அஞ்சி வராமல் அரசு செய்துகொ
ண்டிருந்த நாணையில்லாத என்னுடையகுற்றத்தைப்பொ
றுத்தருளி உம்முடைய ராஜரீகத்தை நீரே கைக்கொள்
ளுமென்றுசொன்னார். வாலி என் ஆக்கினைதப்பி இந்

ராஜரீகத்தின் ஆசையினாலே இப்படிக்கொடுமைகள்செய்தாரென்று சீறி எங்கள்குலத்தாரெல்லாம் அஞ்சி ஒடுங்கும்படி சமுத்திரங்கடைந்த தன் கையினாலே இவருடைய சரீரத்தைக் குத்திக்குமைத்துவிட்டான். இவர் மிகவுந்தளர்ந்து ஓட்டமெடுத்து சப்த சமுத்திரங்களையும் அப்புறத்துள்ள பூமியையுந்தாண்டி அண்டச்சுவர் மட்டும்போனார். அவனும் அதுபரியந்தந்தொடர்ந்து ஓடிப்பிடித்துப் பழிக்கு அஞ்சாமலிருந்தகோபத்துடனே தரையில் மோதும்படித் தூக்கியெறிந்தான். அப்போது கைதப்பி ஓடி இந்தமலையில் வந்துசேர்ந்தார். இதிலே அவன் வரப்போகாதென்கின்ற சாபத்தினாலே இதுவரைக்கும் பிராணனுடன் தப்பியிருந்தது இவருடைய பெண்சாதியாகிய உருமையென்கின்ற பெயரினையுடைய அமிர்தத்திற்குச் சமானமான ஸ்திரீயையும் அவன் விரும்பியெடுத்துக்கொண்டான். இவர் ஸ்திரீயையும் இழந்து செல்வத்தையுங்கைவிட்டு இவ்விடத்தில் இவ்வண்ணமாயிருக்கின்றார். இதுதான் நடந்த சமாச்சாரமென்று சிறிய திருவடியாகிய அநுமார்சொல்ல, அந்த வார்த்தைகேட்கவே தேவாதிதேவராகிய ஆயிரந்திருநாமங்களையுடைய ஸ்ரீராமருக்கு அண்டகோடிகளை உண்டு உமிழ்ந்த அதரந்துடித்தது. கண்கள்சிவந்தன. தம்மிடத்தில் அன்பில்லாத சிறியதாயானவள் சொன்னாளென்று அந்க்ஷணம்தம்பியாகிய பரதாழ்வானுக்குச்சகலராச்சியமுங்கொடுத்தருளின பகவானுக்கு ஒருவன் தன் தம்பியினுடைய தாரத்தைக் கைக்கொண்டானென்கிற வார்த்தைகேட்டால் மனது தரிக்குமா! தரியாதாகையால், ஸ்ரீராமர் சுக்கிரீபனைப்பார்த்து அந்த வாலி நிமித்தம் பதினாலுலோகத்தாரும்வந்து எதிர்த்துத்தடுத்தாலும் அஸ்திரத்தினாலே அவனைக்கொன்று அந்த ராஜரீகத்தையும் உன்தாரத்தையும் உனக்குக்கொடுக்கிறோம். அவனிருக்கிற இடத்தைக் காட்டென்று திருவாய்மலர்ந்தருளினார். அந்தவார்த்தைகேட்கவே நெஞ்சிலிருந்து சந்தோஷமாகிய சமுத்திரமானது பொங்கியெழும்படி துக்கக்கரையைக்கடந்து இனி வாலியின் ஆண்மை அடங்கியதென்று எண்ணிக்கொண்டு பின்பு இப்படிச்சொன்ன ஸ்ரீராமனாகத் [illegible] ஆலோசிக்கவேண்டியிருக்கின்றதென்று யோசனையும், கல்வியும், நீதியும், தந்திரமும் அமைந்திருக்கின்ற அநுமான்முதலான [illegible] அழைத்துக்கொண்டு சுக்கிரீபன் ஒருபக்கத்தில் போயிருந்து யோசிக்கத்தலைப்பட்டான். அப்பொழுது அநுமான்சுக்கிரீபனைப்பார்த்துஒருவார்த்தைசொல்லுகின்றான். உம்முடைய உள்ளக்கருத்து எனக்குத் தெரியவந்தது. வாலியைக் கொல்லுகின்ற பலம் இவரிடத்திலே உண்டோ! இல்லையோவென்று சமுசயப்பட்டீர். நான் சொல்லுகிறதைக்கேளும், ஸ்ரீராமருடைய திருக்கைகளிலும் திருத்தாள்களிலுஞ் சங்குசக்கரக்குறிகள் இருக்கின்றதுகள். இப்படிப்பட்ட லக்ஷணம் எல்லா வுலகங்களிலும் இருக்கின்றவர்களில் எவர்களுக்கு மில்லை. ஆகையால் இவர் தர்மத்தை நிலைநிறுத்துகிற நிமித்தம் இவ்வுலகத்தில் அவதாரஞ்செய்தநாராயணன்தான். திரிபுராதிகளைத் தகனஞ்செய்து காலனைக் காலாலுதைத்த சாம்பவமூர்த்தியினுடைய வில் அந்த ஸ்ரீமகாவிஷ்ணுவினாலல்லாமல் மற்றொருவரால் ஒடிக்கக்கூடுமா? என்தந்தையாகிய வாயு பகவானானவர் பூர்வத்தில் இந்த லோகங்களையெல்லாம் சிருஷ்டித்த பிரமாவினுடைய பிதாவாகிய ஸ்ரீமந்நாராயணனுக்கு நீ அடிமையாகி அவனுடைய கைங்கரியத்தையேசெய். அதுவே உனக்குத்தவம் உன்னைப்பெற்ற எனக்கும் மேலான சற்கதி கிடைக்குமென்று எனக்குச்சொல்லியிருந்தார். அந்தநாராயணனேஇந்த ஸ்ரீராமர் இதற்குச்சில ஏதுக்களும் உண்டு அது என்னவென்றால் நான் என்பிதாவைநோக்கி ஐயா! நீர் சொன்னபகவானை அறிகிறதற்கு உபாயம் என்னவென்று கேட்டேன். அவர் அவன் பக்தர்கள் எவர்களுக்கானாலும் ஆபத்துவந்தகாலத்திலே உடனே அதை நிவர்த்திசெய்வதற்குச ஸுப்பிரசன்னமாவான், மேலும் அவனைக்கண்டமாத்திரத்திலே உனக்குள்ளே அளவிறந்த அன்பு உதிக்கும் அதுவே சாட்சியென்றார். அதற்குச்சரியாக இப்பொழுது எனக்கானால் எலும்புகளும், கரைந்துகரைந்து நீராளமாகின்றதுகள். எனக்குச்சந்தேகம் எம்மாத்திரமுமில்லை. உம்முடைய மனதுக்குச் சந்தேகமுண்டாய் அந்த ஸ்ரீராமருடைய பராக்கிரமத்தை அறியவேண்டுமானால் அதற்கும் ஒரு உபாய மிருக்கின்றது. (மராமரமென்றுசொல்லும்) ஏழுமராமரங்களிருக்கின்றதுகளே அதுகளில் ஒருமரத்தை அம்பினால் எய்யச்சொல்லி அது உருவிப்போகிறதைப்பாருமென்றுசொன்னான். அவ்விதமாக அநுமான்சொல்லக்கேட்டு நல்லஉபாயஞ்சொன்னீர் நல்ல உபாயஞ்சொன்னீரென்று மாருதியைத் தழுவிக்கொண்டு எல்லாரும் ஸ்ரீராமருக்குச் சமீபத்தில்வந்து சுவாமி! நாங்கள்ஒருவிண்ணப்பம்பண்ணிக்கொள்ளவேண்டியிருக்கின்றதென்றுசொல்ல, அதென்னசொல்லுமென்று ஸ்ரீராமச்சந்திரசுவாமியார் கேட்டருளினார்.

நட்புப்படலம் - முற்றிற்று.

---

## மராமரப் படலம்.

இவ்விடத்திலிருந்து இந்தவழியாகப்போய்வரவேணுமென்றுசொல்லி அழைத்துக்கொண்டுபோய் அதோ ஆகாசமெல்லாம் அளாவும்படி வளர்ந்து நீண்ட ஏழுமராமரமாயிருக்கின்றது. அதுகளில் ஒருமரம் உருவும்படி தாங்கள் அஸ்திரப்பிரயோகஞ் செய்தால், அடியேன்மனக்கிலேசம்போமென்றுசுக்கிரீபன்சொன்னான். அப்படிச்சொல்லவே தேவராஜனாகிய கலியாணகுணராமர் சிறுநகையாகநகைத்து, அவன் எண்ணிச்சொன்ன தாற்பரியத்தை யறிந்து வில்லிலே நாணேற்றி அந்தமராமரங்களுக்குச் சமீபத்தில் எழுந்தருளினார். அம்மராமரங்கள் யுகம்பெயருங் காலங்களிலும் பெயர்கிறதில்லை. உலகங்கள் தாழுங்காலங்களிலும் தாழ்கிறதில்லை. பூமியைத் தாங்குகின்ற சப்தகுலபர்வதங்களும் ஓரிடத்தில் வந்திருப்பதுபோல இருக்கின்றதுகள். சூரிய சந்திரர்களாலும் முடிவுகாணப்படாத சாயையையுடையதுகள் மலைகளைக்கண்டோமென்று சொல்லலாமேயல்லாமல் பிரமாவினாலும் இலைகளைக்கண்டாலல்லாமல் விருக்ஷமென்று அறிந்துசொல்லக்கூடாது. சூரியனுடைய தேரிலே கட்டியிருக்கின்ற பச்சைக்குதிரைகள் அந்தமரத்தின் நிழலிலேபுகுந்துபோவதனால்தான் இளைப்பில்லாமல உலாவுகின்றது. நக்ஷத்திரங்களும், நவக்கிரகங்களும், அதுகளினுடைய புஷ்பங்கள்போலப் பிரகாசிக்கும். சந்திரன் அந்த விருக்ஷத்தினுடையகிளைச்சந்துகளிலே நாள்தோறும் நுழைந்துபோகிறதினாலே அவன் சரீரந் தேய்ந்து காய்ப்பேறி அந்தவடுவே களங்கமென்று சொல்லப்பட்டிருக்கின்றது. அநேகசாகைகள் தழைத்திருக்கிறபடியினாலே வேதமென்றுஞ் சொல்லப்படும். சத்தியலோகத்தில் பிரமாவினுடைய வாகனமாகிய அன்னமானது தன்பெட்டையன்னத்துடனே கூடிக்கொண்டு இந்தமரத்தின்மேலேறி வாசஞ்செய்யும், துளிர் - இலை - புஷ்பம் - காய் - பழம் - முதலானதுகளில் ஒன்றும் பூமியில் விழாமல் அங்குள்ள ஆகாசகங்கையில் விழுந்து அப்படியே சமுத்திரத்தில் போய்ச்சேரும். அந்தமரங்கள் அண்டகடாகமட்டும் உயர்ந்து மகமேருவிலும் புராதனமாய் அநேககாலங் கண்டிருக்கின்றதுகள். வாலிக்கும் சுக்கிரீபனுக்கும மனதில் எவ்வளவு வைர மிருக்கின்றதோ அவ்வளவு வைரமுண்டானதுகள். இந்தப்பூமியைச் சுமந்து கொண்டிருக்கின்ற ஆதிசேஷனுடைய படங்களையுங்கிழித்து உருவியிருக்கின்ற வேர்களை யுடையதுகள். அஷ்டதிக்குகளையும் கிளைகள்போய் அளாவுகின்றதனால் சூரியன்தடைபட்டு போகாமல் நின்று விடுவானென்று தேவர்கள் சொல்லத்தக்கதுகளாயிருக்கின்றதுகள். உதயகிரி அஸ்தமனகிரிகளைப்பார்க்கிலும்பெருமையுண்டாயிருக்கின்றதுகள். ஒன்றுக்கொன்று நடுவே அநேகயோசனை தூரம் வெளியுண்டாயிருக்கின்றது. இப்படி அதிகமாகிய பெருமைகொண்டிருக்கின்ற மராமரங்களினிடத்திலேவந்து அமலமூர்த்தியானஸ்ரீராமர் அதுகளைச்செவ்வையாகப்பார்த்துப் பாணப்பிரயோகஞ்செய்யும்படி உத்தேசித்து ஆகாசமும் திக்குகளுஞ் செவிடுபடவும், தேவர்களுக்கும் மயக்கமாகிய பயம்ஜெனிக்கவும், கோதண்டத்தைக் குணத்தொனி எழும்படிசெய்தார். அந்தக்குணத்தொனியாகிய சப்தமானது எல்லாவுலகங்களுக்கும் சமானமாய் அங்கங்கேபிறந்த ஓசைபோலிருந்தது. பக்கத்தில் இருந்தவர்களுக்குச்சம்பவித்ததைச்சொல்லுகிறது எப்படி. திக்கஜங்களும்மயங்கியதுகள். பிரமலோகமுஞ்சலித்தது. கற்பகத்தின் முடிவுபிறந்ததென்று சகல தேவர்களும் நடுங்கினார்கள். தம்பியாகிய லக்ஷ்மணர் ஒருவருமே சமீபத்திலநின்றார். சுக்கிரீபன் முதலாகிய மற்றவர்களுடைய செய்கையைச் சொன்னால், அது அவர்களுக்குப்பழியாய்முடியும், நாலுதிக்கிலும் சிதறியோடிய அநுமான் முதலானவர்கள் இன்னம் எவ்வளவையும் பார்ப்போமென்று மகாபிரயாசத்துடனே வந்துசேர்ந்து சுவாமியினுடைய பிரதாபத்தைக்குறித்துக் கொண்டாடிக்கொண்டிருக்கும்பொழுது ஸ்ரீராமரானவர் வில்லிலே அஸ்திரத்தைத் தொடுத்துத் தீர்க்கமாக வாங்கிவிட்டார். அந்த அஸ்திரமானது ஏழுமராமரத்தையும் உருவி, கீழேழுலோகத்தையும்உருவி, அப்புறம் ஏழென்கின்ற தொகைசேர்ந்த பொருளில்லாமையால் அங்கிருந்து திரும்பியது. அது இன்னமும் ஏழாயிருக்கின்றபொருள்களைக்கண்டால்துளையாமற் போகிறதில்லை அத்தருணத்திலே ஏழுசமுத்திரமும், மேலேழுலோகமும். ஏழுகுலகிரிகளும், சப்தரிஷிகளும், சூரியனுடைய சப்தபுரவிகளும், சப்தமாதர்களும், இந்தப்பாணம் ஏழென்னுந் தொகைசேர்ந்த பொருள்களையே லக்ஷியமாகவுடையதோவென்று எண்ணி நடுங்கினார்கள். அப்படிப்பட்டதானாலும் அந்த ராமபாணமானது தர்மத்திற்கு உயிர்த்துணையாயிருக்கின்றதென்பதைச் சகலரும் நினைத்து உடனே பயமொழிந்தார்கள். அச்சமயத்திலே சுக்கிரீபன் தேகஸ்மரணை யில்லாமல் அதிக ஆனந்தமாய், ஸ்ரீராமருடைய பாதாரவிந்தத்தைச் சாஷ்டாங்கமாகச் சேவித்து.

கவி.

வையநீ வானுநீ மற்றுநீ மலரின்மேல்..................*
ஐயநீ யாழியா ழாழிமா மாலுநீ......................*
செய்யநீ வினைதெறுந் தேவுநீ நாயினேன்...............*
உய்யவந் துதவினை யுலகமுந் துதவினாய்...............*

என்பன—பூமியும்நீயே? ஆகாசமும்நீயே! மற்றப் பூதங்களும்நீயே! தாமரைப்பூவின்மேல் எழுந்தருளியிருக்கின்ற பிரமதேவனும்நீயே! திருப்பாற்கடலிலே கண்வளர்ந்தருளுகின்ற சக்கரதரனாகிய மகாவிஷ்ணுவும்நீயே! தீவினையை நாசஞ்செய்கின்ற தர்மதேவதையும் நீயே! லோகங்களையெல்லாம் உற்பத்தி யாம்படி செய்த லோகாபிராமனே நீ! நாயேன்பிழைக்கின்ற நிமித்தம் வந்து கிருபைசெய்தாய். ஆகலால் இனி யெனக்கு அரிதான பொருளென்ன இருக்கின்றதென்று தெளிந்து கொண்டேன். விதிதானே உன்னைக்கொண்டுவந்து என்னிடத்தில்விட்டது. சாட்சாது தாய்க்குச்சமானமாகிய உன்னுடைய தாசாநுதாசன் நானென்றுசொல்லி ஸ்தோத்திரஞ்செய்தான். மற்ற வானரர்களெல்லாம் ஆடியும், பாடியும், அங்கும், இங்கும், ஓடியும், சந்தோஷ மென்கின்ற மதுவைக்குடித்தவர்களாய் அதிமோகக்களித்து வாலிக்குக் காலனை வெகுகாலமாகத்தேடினோம் இப்பொழுது கிடைத்தானென்று வாடியிருந்த தோள்கள் வளர்ந்து பூரித்திருந்தார்கள். அப்பால் மலையின்மேல் ஒருமலை கிடக்கிறதுபோல ஆகாசமட்டும் உயர்ந்துகிடக்கின்ற துந்துபியினுடைய சரீரத்தை ராகவர்கண்டு எமனுடைய வாகனமான மகிஷமோ! திக்கஜங்களொன்றுமடிந்து கிடக்கின்றதோ! அல்லவென்று ஜலம்வற்றிய சமுத்திரமோவென்று பார்த்து, இதென்னவென்றுகேட்கச் சுக்கிரீபன் சொல்லுகிறான்.

மராமரப்படலம் - முற்றிற்று.

---

## துந்துபிப் படலம்.

ஸ்வாமி! துந்துபியென்னும் பெயரினையுடைய ஒரு அசுரன் மகாபலவந்தன் சந்திரமண்டலமட்டும் அளாவிய தலையிலே இரண்டு கொம்புடையவன், மந்தரமலை

யைப்போலக்காத்திரமான சரீரமுடையவன். அவனுடன் யுத்தஞ்செய்கிறவர்கள் ஒருவருங்கிடையாமல் ஸ்ரீமகாவிஷ்ணுவைத் தேடிக்கொண்டு திருப்பாற்கடலுக்குப் போனான். அந்த மகாவிஷ்ணுவானவர்கண்டு என்னநிமித்தம் வந்தாயென்றுகேட்க, என்னுடன் யுத்தஞ்செய்ய வாருமென்றான். அந்தவார்த்தைகேட்டு உன்னுடனேயுத்தஞ்செய்யத்தக்க சமர்த்தன் கங்காதரனாகிய காளகண்டனே அவனிடத்துக்குப் போவென்றுசொன்னார். அப்படியே திரும்பிக் கைலாசத்துக்குவந்து தன்கொம்பினாலே அந்தப்பர்வதத்தை முட்டிப்பேர்த்தான். அப்போது சிவனானவர்கண்டு உனக்குஎன்னவேணுமென்று கேட்டார். என்னுடனே யுத்தத்துக்குவாரும் அதுதான் எனக்குவேண்டியதென்றுசொன்னான். அந்தவார்த்தை கேட்டு நீ மிகுந்த பராக்கிரமமுடையவனாகையால் உன்னுடனே போர்செய்ய எனக்குக்கூடுமா! தேவர்களிடத்திற்போவென்றுசொல்லியனுப்பினார். தேவர்களில் ஒருவன் நீ நெடுங்காலம் போர்செய்வாராகையால், பூலோகத்தில் வாலியென்று ஒருவனிருக்கிறான், அவனிடத்திலேபோனால், அவன் அநேககாலம் உன்மனேப்படியுத்தஞ்செய்வானென்றுசொன்னான். அப்படியே அவன் ஓடிவந்து வாலியிருக்கின்ற பர்வதத்தைத் தன்கொம்பினாலே குத்திச் சின்னபின்னஞ்செய்தான். அப்போது என்தமையனான வாலி அதிககோபத்துடனேவந்து எதிர்த்தான். இருவருங் கைகலந்து எற்றிப்பற்றிக் கத்திக் குத்தி இவன் அவனென்று கொஞ்சமாகிலும் ஒருவருக்குந்தெரியாமல் இடசாரி வலசாரியாகச் சுழன்று திரிந்து சகலலோகங்களும் நடுங்க, தேவர்கள் அசுரர்கள்முதலானவர்களும் பார்த்துப் பிரமிக்க, ஆகாசமட்டுந் தாவி அக்கினியெழும்ப, அட்டகாசஞ்செய்கிற சப்தங்கள் திக்குகளிலெல்லாம்போய்ப் பிரவேசிக்க, சமுத்திரங்கள் பர்வதங்கள் சகலமும் நிலைபெயர்ந்துபோக காலடிகளைப்பெயர்த்துவைத்து மடங்கி விழுந்து எழுந்து இப்படி அநேகநாள் போர்செய்கிறபோது வாலி ஒரு விருக்ஷத்தைப்பிடுங்கி அவன்தலையின்மேல் அடித்தான். அந்த அடிபடவே இடிபேறுபோலச் சுகலிட்டுவிழுந்து வாயினால் ரத்தங்கக்கினான். அப்படியான அந்த அசுரனை மலயபடியும் மலையின்மேல் கோடையிடி இடித்து விழுந்தாற்போல வானமும், பூமியும், நிலைகுலைய, திசைகள் செவிடுபடக்குத்தினான். பின்னும் இது எருமைக்கடாவென்று தன்கையிற்கொண்டு சுழற்றினான். அப்போது அவனுடைய ரத்தம் திக்குகள்தோறும் நிறைந்து திக்கெஜங்களினுடைய சரீரங்களுஞ்சிவந்தன. அந்தத் துந்துபியை மறுபடியும் உயரத்தூக்கிவிட்டெறிந்தான். எறியவே மேகமண்டலந்தாண்டி, சூரியமண்டலங்கடந்து, அப்புறத்துள்ள தேவர்களுடைய உலகங்களுந்தாண்டி அண்டமுகடுமேல்முட்டி பிராணன் நீங்கிப்போக உடல்மாத்திரந் திரும்பி விருக்ஷங்கள் முதலானதுகளும் முறியும்படி இந்த மலையின்மேல் வந்துவிழுந்தது. அப்படிவந்து விழுந்தபோது தான் வாலிக்கு இவ்விடத்திலே மதங்கரிஷி சாபமுண்டாய் எனக்கு உதவியாயிற்று. அந்தத் துந்துபியினுடையசரீரந்தான் இதுவென்று சுக்கிரீவன்சொல்ல அதுகேட்டுப்பெரியபெருமாள்இளையபெருமாளைப்பார்த்து இதை அப்பாலே தள்ளென்று சொன்னார். அந்த க்ஷணம் ராமாநுஜர் தம்முடையதிருவடியின்பெருவிரலினாலே உந்தித்தள்ளினார். அந்த உடலானது எழும்பிப் பிரமலோகம்போய்த் திரும்பிவந்து விழுந்தது. அதுகண்டு லக்ஷ்மணருடைய மகாபராக்கிரமமுடையவரென்று வானரங்கள் இடியும் பயப்படும்படிவாயைத்திறந்துகொக்கரித்து அட்டகாசஞ்செய்து சந்தோஷப்பட்டதுகள். பின்பு அவ்விடம் விட்டுத் திரும்பி முன்னிருந்த சோலையில்வந்து சேர்ந்தார்கள். சேர்ந்திருக்கும்போது சுக்கிரீவனெழுந்திருந்து ஸ்வாமி! அடியேன் ஒரு வார்த்தை சொல்லுகிறேன், திருச்செவி சாத்தியருளவேணுமென்று பயபக்தியுடனே சொல்லத்தொடங்கினான்.

துந்துபிப்படலம் - முற்றிற்று.

## கலன்காணபடலம்.

ஸ்வாமி ! நாங்கள் இவ்விடத்திலிருக்கிறபொழுது சிலநாளுக்குமுன்னே ராவணன் இந்தவழியாய் ஆகாசமார்க்கத்தில் எடுத்துக்கொண்டுபோகிறதருணத்தில் தேவரீருடைய திருத்தேவியார்தானோ ! அல்லது ஆரோ ! மிகவும் பிரலாபித்துக்கொண்டே போகிறவர் எங்களைக்கண்டுஇவர்களாகிலுஞ்சமாச்சாரஞ்சொல்லுவார்களென்றோ ! என்னவோ ! மனதிலே எண்ணிய எண்ணந் தெரியாத மிகுந்த துயரத்துடனே ஆபரணங்களை கழற்றி வஸ்திரத்திலேமுடிந்து அங்கிருந்தபடியே விட்டுவிட்டார். அதுகண்டு நாங்கள் கீழேவிழாததற்கு முன்னே கையிலே எற்றுக்கொண்டோம், அதையந்தப்படி வைத்திருக்கிறோம். இப்பொழுதுகொண்டுவருகிறோம் பார்த்தறியுங்களென்றுசொல்லி, எழுந்திருந்து ஓடி எடுத்து, இரண்டுகையினாலுந் தாங்கிக் கொண்டுவந்து ஸ்ரீராமருடைய சந்நிதியிலே பாலுடனே நெய்கலந்ததற்குச்சமானமான கிஷ்கிந்தைநாதனாகிய சுக்கிரீவன்வைத்தான். அதை ஸ்ரீராமர்பார்க்கவே தம்முடையதேவியார் திருவாபரணந்தானென்று தெரிந்துகொண்டு, நெருப்பிலேவைத்தமெழுகுபோலத் திருவுளங்கரைந்துருகினார். அப்படி உருகினதென்றுஞ் சொல்லமாட்டேன். நிலைதளர்ந்து அலைந்துகிடக்கின்ற தம்முடைய உயிருக்கு உறுதியுண்டாகும்படி அதை உட்கொண்டு விட்டாரென்றுஞ் சொல்லமாட்டேன். அப்போது ஸ்ரீராகவர் இருந்த இருப்பை யென்னவென்று சொல்லப்போகிறேன். பிராட்டியின் ஸ்தனங்கள்மேல் தரிக்கப்பட்ட ஆரமுதலான ஆபரணங்கள் அவருடைய ஸ்தனம்போலவே தோன்றின. நிதம்ப ஸ்தானத்திலே அணியப்பட்ட மேகலைமுதலானதுகள் அவருடைய நிதம்பம்போலவே தோன்றின. மற்ற அவயவங்களிலே தரிக்கப்பட்ட ஆபரணங்களும் அப்படியே அந்த அந்த அவயவங்களாகவே காணப்பட்டன. ஆகையால், அந்தப்பூஷணங்கள் ஸ்ரீராமனைவிட்டு நீங்கியபோதிலவை அழைத்துக் கொடுத்ததுகளென்றுதான் சொல்வேனே ! அல்லது அவருயிரை



இமிசைப் படுத்திய தீயென்றுதான் சொல்வேனே ! அல்லது அப்பிய சந்தனம்போலக் குளிர்ந்திருந்ததென்று சொல்வேனே ! அல்லது அவர் திருமேனியை வெதுப்பியதென்று சொல்வேனே ! அந்தத் திருவாபரணம் மோந்துகொள்வதற்குப்பரிமளபுஷ்பமாகியும்திருத்தோளிலணிந்ததற்குஉத்தரீயமாகியும், பூசுதற்குக்கெந்தமாகியும், ரத்நப்பிரகாசம் அவருடைய சரீரத்தைக்கவிந்துமூடுதலால்உடுப்பதற்குவஸ்திரமாகியுமிருந்தது,மேலும்சுவாமியினுடைய கமலநேத்திரங்களிலிருந்து ஜலந்தாரை தாரையாய்ப்பெருகியதுசரீரம்மயிர்க்குச்செறிந்ததுபுஜங்கள்வெயர்த்துவெதும்பியதுகள் இப்படியெல்லாமிருந்தபடியினாலே அந்தஸ்ரீராமச்சந்திரனுடையதன்மையை அடியேன் என்னவென்று அறிந்துசொல்லுவேன். விஷமேறினதுபோல வெப்பம் அதிகரிக்கமயங்கிவெருகாமுகைமட்டும் சுவாசமுமசைவுமில்லாமல் சோர்ந்த ஸ்ரீராமபத்திரனைச் சுக்கிரீவன் உரோமங்கள் சுறுக்கிட்டெரியும்படி தன்சரீரத்தினால்தாங்கினான். தாங்கிக்கொண்டு கண்ணிலேஜலம்பிரவாகமாய்வர அந்தத்துயரஞ்சகிக்காமல் ஏக்கமுற்று மனமிரங்கி அழுகின்றவனாய் ஸ்வாமி ! இந்த ஆபரணத்தைக்கொண்டுவந்துகாட்டிஉமக்கு இத்தனை துக்கத்தைக் கொடுத்தேனென்றுசொல்லிப்பின்னுஞ் சொல்லுகிறான். ஐயனே ! பிரமாண்டமும் அதற்கு அப்பாலும் சோர்வில்லாமல்தேடிப்பார்த்து எம்பலத்தைக்காட்டி, உம்முடையபிராணபதமான திருத்தேவியாரைக்கொண்டுவந்து கொடுக்கத் தக்கவனாய் நானிருக்க, நாங்கள் இப்படித் துயரப்படலாமா ! ஸ்ரீமகாலக்ஷ்மியென்கின்ற தெய்விகமாகிய கற்பினையுடைய பிராட்டியைப் பயப்படச்செய்து எடுத்துக் கொண்டுபோகிற, அரக்கனுடைய பத்துத் தலையும் இருபது தோளும் உம்முடையஒருபாணத்துக்கு நிர்வாகஞ்செய்யுமா ! அல்லது அதைஉலகந்தான்தாங்குமா ? சும்மாநீங்கேயிருக்கநாம். பதினலு லோகத்திலும் புகுந்து தேடி அந்தராக்ஷதனைச்செயித்து, லோகமாதாவை மீட்டுக்கொண்டுவருகிறேன் என்சாமர்த்தியத்தைப் பாரும். ஏவல்செய்கிறதற்குத் தோழர்களாகிய நாங்கள்தானிருக்கிறோம். அதிபராக்கிரமசாலியாகிய உம்முடையதம்பியுமிருக்கிறார். உமதுவீரமோ ஒருவராலுஞ்சொல்லி முடியாதது. இப்படியெல்லாம் இருக்கிறபடியினாலே திரிலோகத்தாரும் உம்முடைய சொல்லைக் கடப்பார்களோ உயர்ந்தவர்களாயிருக்கின்றவர்கள் எப்போதும் உயர்ந்தபொருளைக்குறித்தே பேசுவார்கள். அதற்குச் சாட்சி அவர்கள்பேசியபடியே முடிக்கின்றகாரியமேயல்லாமல் வேறென்ன ! தர்மதேவதையென்பது தேவரீரே வேறில்லை, ஆகையால் உமக்குஅருமையானது என்ன இருக்கின்றது. இதுகளையெல்லாம் யோசியாமல் ஒன்றுமில்லாதவர்போலத் துயரப்படுகிறது நல்லதா ! பிரமா-சிவன்-விஷ்ணு-வென்கின்ற இந்தமும்மூர்த்திகளும் ஒன்றாகக்கூடினால் உமக்குச் சமானமாவார்களே யல்லாமல் வெவ்வேறாயிருந்தால் ஆவார்களா ! என்னுடைய கொஞ்சந்துணையிருக்கின்றதே அதுபின்பாகிலும் ஆகட்டும். லோகமாதவான ஜானகியை மீட்டுக்கொண்டு வருவோம் எழுந்திருந்துவாருங்களென்று இப்படிச்சுக்கிரீவன் மிகுந்த அன்பும் ஆராமையுமாய்ச் சொல்ல. ஸ்ரீமகாலக்ஷ்மி வாசஞ்செய்கின்ற மார்பினையுடைய பரந்தாமனாகிய ஸ்ரீராமர் அருவிபோல ஜலம்பெருகிக்கொண்டிருக்கின்ற திருக்கண்களைத் திறந்து அன்புடனே பார்த்தருளி ஒருவிதத்தில் உணர்ச்சிபிறந்து தெளிவுண்டாய்ச்சொல்லுகிறார். தம்பி ! சுக்கிரீபாகேள்? நான் பூமியில்பிராணனுடனேயிருக்க, என்கையில்வில்லுமிருக்கும்போதுதானே அவள்ஆபரணத்தைக் கழற்றி யெறிந்துவிட்டாளே ! இதை என்னவென்றுசொல்லுகிறது. பதிவிரதைகளாயிருக்கின்ற ஸ்திரீகளிலே யாரிப்படிசெய்தவர்கள். அந்தஜானகி என்வரவை எதிர்பார்த்துக் கொண்டிருக்க, நான் மலைகள்-காடுகள்-மரங்களுடனேயும், அவளுடைய பூஷணத்துடனேயும், புலம்பிப் பொழுது போக்கிக்கொண்டு வெட்கமில்லாமல் வில்லைச் சுமந்து திரிகிறேன். வழிநடக்கின்றவர்கள் ஆராகிலும் ஒரு ஸ்திரீயைச் சத்துருக்கள் துன்பப்படுத்தினால், அவர்களுடனே யுத்தஞ்செய்து தங்கள்பிராணனைக் கொடுத்தாகிலும் அந்தத்துயரத்தைத்தீர்ப்பார்கள். நான் என் சொந்த ஸ்திரீயினுடைய துயரத்தையே தீர்க்கமாட்டாமல் இப்படியிருக்கிறேன் எங்கள்பெரியவர்கள் முன்னாளிலே சமுத்திரத்தைத்தோண்டியும், ஆகாசகங்கையைக்கொண்டுவந்தும் பூமியும் மானும் ஒருதுறையிலே தண்ணீர் குடிக்கும்படிசெய்தும் மிகவுங்கீர்த்தி சம்பாதித்தார்கள். இப்பொழுது நான் ஒருஸ்திரீயினுடையவிதனத்தைத்தீர்க்கத்தவஞ்செய்யவில்லை. எங்கள்தகப்பனார் இந்திரனுடையதுயரத்தைத்தீர்த்து எமனாலும்வெல்லப்படாத சம்பராசுரனைச்சங்கரித்தார். அவருடைய புத்திரனாய்ப்பிறந்த நான அபகீர்த்தியைச் சம்பாதித்தேன். எங்கள்தகப்பனாருடைய சத்தியந் தப்பிப்போகுமானால், பழிவருமென்று மகுடஞ்சூடாமல் ஆரணியத்துக்கு வந்துவிட்டேன், இப்போது சத்துருவானவன் என் பெண்சாதியைக்கொண்டு போகப்பெரும்பழியைத் தேடிக்கொண்டேன். நான்செய்தபிழைதான் என்னவென்று இப்படிப்பலபலவிதமாய்ச்சொல்லி மனதுநொந்து கிலேசமென்கின்ற சமுத்திரத்திலே மூழ்கினவராய்த் துயரப்பட்டார். சுக்கிரீவன் அந்தவிதனத்தைப்பார்த்து அநேகவிதமான தைரியவார்த்தைகளைச்சொல்லித் துயரக்கடலினின்றுங் கரையேற்றினான். ஸ்ரீராமர் சுக்கிரீவனைப்பார்த்து ஐயா ! நீ யாற்றினபடியினாலே துக்கமாறினேன் இல்லாவிட்டால் எனக்குத் துக்கம்நீங்கி ஜீவனுண்டாயிருப்பேனா ! இதைப்பார்க்கிலும் நீவேறுதவிசெய்யவேணுமா ? இப்படிப் பூமியில் எனக்கு அதிகவிதனமும் அபகீர்த்தியும் உண்டாயிருந்தாலும், உன்குறையை முடித்தபின்பு என்குறையை முடித்துக்கொள்வேனே யல்லாமல் முன்னே என்விஷயத்தைக்குறித்து ஒன்றுஞ் செய்கிறதில்லையென்று சொல்ல, அத்தருணத்தில் அநுமானானவர் வணங்கிச் சுவாமியைப்பார்த்து அடியேனொருவிண்ணப்பஞ் செய்துகொள்ளுகிறேன். அதனைத் தேவரீர்

திருவுளமகிழ்ந்து கேட்டருளவேணுமென்று சொல்லுகிறார். துஷ்கிர்த்தியத்தைச் செய்யும் வாலியை முன்னே கொன்று சுக்கிரீப மகாராஜாவுக்குப் பட்டாபிஷேகஞ்செய்வித்து, அப்புறம் படைகளைக் கூட்டினாலல்லாமல் அந்தராக்ஷதனிருக்கும் இடந்தேடிப் பிடிக்கக்கூடாது. மேலும் நாம் மானிடப் பிறப்பினை யுடையவர்கள். ஆகாசமோ ! பூமியோ ? பர்வதமோ ! பாதாளமோ ! அது இன்னவிடமென்று நம்மாலே தெரியப்படுவதல்ல, ராக்ஷதர்கள் ஒரு இமைப்பொழுதுக்குள்ளே சகல உலகங்களிலும்பிரவேசிப்பார்கள். அந்த அந்த இடங்களில் தாங்கள் இச்சித்த பொருள்களை யெல்லாம் கொள்ளைகொள்வார்கள். ஒருவனிடத்தில் தீவினையானது வருவதும்போவதும்போல, மாயையினாலே வருவார்கள்போவார்கள், அவர்கள் வாசஞ்செய்யுமிடம் ஆராலே அறியத்தக்கது. ஆகையால் ஏககாலத்திலே எல்லாரும் வெவ்வேறாக உலகமுழுமையும் பரவிப்போய்ச் சீதாபிராட்டியார் இருக்குமிடத்தைத் தேடவேண்டும். அப்படியல்லாமல் ஒவ்வொருதிசையாகத் தேடவேணு மென்றால், உலகம் விஸ்தாரமானதாகையால் மிகவும் அருமையாகும். மேலும், அநேகவருஷஞ் சென்றுபோம். இப்படிச் சங்கடமாயிருக்கிறபடியினாலே இதற்கு உபாயம் என்னவென்றால், எழுபதுவெள்ளம் வானரசேனையிருக்கின்றது. அதுயுகாந்தகால பிரளயம்போல உலக மெல்லாம் மூடிக்கொள்ளும். சமுத்திரத்தைக் குடிக்கவேணுமென்றாலும் பிர்மாண்டத்தையும் மகமேருவையும் பேர்த்தெடுக்கவேணுமென்றாலும் அப்படியேசெய்யும். ஆதலால் அந்தவானரங்களைக்கொண்டு மேற்சொல்லியபடியேசெய்யவேணுமென்று அடியேனுக்குத்தோன்றுகின்றதென்றுசொல்ல, சுவாமியும் ! மெய்தான் அவ்வண்ணமே செய்வோம். இப்பொழுது அந்த வாலியிருக்கிற இடத்துக்குப்போவோம் வாருங்களென்று சொல்ல, நல்லதென்று நடந்தார்கள்.

கலன்காண்படலம்-முற்றிற்று.

## வாலிவதைப் படலம்.

அப்படி நடக்கிறவழிகளிலே சிங்காரமாகிய தேவகன்னிகைகளின் ஊசல்களும்-சந்தனச்சாரல்களும்-செய்குன்றங்களும்-சண்பகச்சோலைகளும்-அந்தச் சோலைகளின்மேல் மேகங்கள்வந்து உறங்குகிறதும். மதயானைகளும் மலைப்பாம்புகளும் சஞ்சரிக்கிறதும். புலிகள்முழங்குகிறதும். மலைத்தேன்ஒழுகி யோடுகிறதும். அந்தத்தேன்வாழைக்கனிமேலே ஆகாசத்திலேசஞ்சரிக்கின்ற நக்ஷத்திரங்களும் பச்சைவில்லும் சந்திரன் முதலானதுகளும் சஞ்சரிக்கிறதும், பொற்சன்னங்களும் பலவிதரத்னங்களுங் குப்பல்குப்பலாயிருக்கிறதும், அநேகபக்ஷிகள்முதலானதுகளும்பாவி அங்கங்கே இரைகிறதுமாகிய இப்படிப்பட்ட சிங்காரங்களை யெல்லாம் பார்த்துக் கொண்டு யாளிகளும்-சிங்கங்களும்-புலிகளும்-மதயானைகளும்-எதிர்ப்போகிறதுபோல, எறிபத்துயோசனைதூரம் உயரப்போய், தேவலோகமே இறங்கி வந்திருக்கிறதுபோல, அதிகசிறப்புடனே பிரகாசிக்கின்ற வாலியிருக்கும் பர்வதம்போய்ச்சேர்ந்தார்கள். அப்புறம்இனியென்னசெய்யலாமென்றுயோசனைசெய்துஸ்ரீராமர்சுக்கிரீபனைப்பார்த்துநீபோய்அந்தவாலியை அழைத்துயுத்தஞ்செய்தால் அப்போது பாணப்பிரயோகஞ்செய்து அவனைச்சங்கரிக்கிறேனென்றுசொல்ல, எப்படியும்பகையைநிவாரணஞ்செய்துகொள்ளவேணுமென் றிருக்கின்ற சுக்கிரீபனும் அப்படியேசெய்யலாமென்று சம்மதித்து சமுத்திரம்அஞ்சவும், கார்மேகங்கள் நாணவும், பூமியிலுள்ளவர்கள் பயந்து உடல் வெயர்த்துஓடவும், சொர்க்கத்தவர்கள் வருந்தவும், கொக்கரித்துக்கெர்ஜித்தான். அந்தஓசையானது சர்வேஸ்வரனாகிய ஸ்ரீமகாவிஷ்ணுஉண்டருளிய அண்டங்களை யெல்லாம் விழுங்கியது, உடனே வாலியை அறைகூவிட்டு என்னுடனேவந்து எதிர்த்தாயானால், உன்னை ஜெயஞ்செய்கிறேனென்று கையோடு கையறைந்து வாய்மடித்து தோள்தட்டி ஆர்ப்பாட்டஞ்செய்தான். அந்தச்சத்தம் சம்பிரமத்துடனேபடுத்துக்கொண்டு இடதுதோள்துடிக்கப் புஷ்பசயனத்தின்மேல் ஒருபாற்சமுத்திரங்கிடைக்கின்றதுபோல, நித்திரை செய்கின்ற வாலியினுடைய காதிலேவிழுந்தது. அதைக்கேட்டமாத்திரத்திலேநித்திரைதெளிந்து, யானையினுடையசப்தத்தைக்காதிலேகேட்ட ஒருசிங்கம்போலச்சந்தோஷித்து, தம்பியானவன் யுத்தத்துக்குவந்திருக்கிறானென்பதையறிந்து கோபத்துடனேநகைத்தான். நகைத்த சப்தமானது பதினாலுலோகத்தாரையும் திசைகளுக்கு அப்புறத்தில் ஓடச்செய்தது. அப்படியாகப் பிரளயகாலத்தில் பொங்கிவருகிற கடல்போலச் சீறப்புறப்படுனே அதிசீக்கிரமாக எழுந்திருந்தான். எழுந்திருக்கவே அந்தமலை பாதாளத்தில் அழுந்தியது. புஜங்களைத் திருப்புகிறபோது அந்தப்புஜங்களிலிருந்தெழும்பிய காற்றினாலே சமீபத்திலிருந்தமலைகளெல்லாம் பெயர்ந்து விழுந்ததுகள். சரீரத்தில் மயிர்சிலிர்த்துக்கொண்டது. வடவாமுகாக்கினியுங் குளிரத்தக்கதாகக் கண்களிலிருந்து கோபாக்கினிஜொலித்தது. பெருமூச்சானது அதிகரித்தலால், மூக்கிலும் வாயிலுமிருந்து புகையெழும்பித் தேவலோகத்திற்கும் அப்புறத்தேபிரவேசித்தது. கையைக் கொண்டு கையுடனே அறைந்தான். அறைந்தசப்தத்தினாலே பூமிக்குக் காவலாயிருக்கின்ற அஷ்டதிக்கெஜங்களும் நடுநடுங்கி மதச்செருக்கு அடங்கியதுகள். அன்றியும் இடிக்கூட்டங்களும் பொடிப்பொடியாயுதிர்ந்ததுகள். தேவலோகமுங்கிழிந்தது. சக்கரவாளபர்வதமும் நெரிந்தது, இதோவந்தேனென்று ஒருவார்த்தைமுழக்கினான். அந்தஓசையினாலே இந்திரன்முதலாகிய எட்டுத்திசைகளும் கடகடாய்த்ததுகள். பர்வதாகாரமானதேகத்தையுடைய வாலியானவன். நவரத்ன மகுடத்தையணிந்த சிரசு ஆகாசத்தைத்தீண்டும்படி நின்றான். அப்போது சந்திரனும் நக்ஷத்திரக்கூட்டங்களும் சிந்தியதுகள். மறுங் கைகளைவீசினான். கைவீச்சிலேபர்வதங்கள் வேர்பறிந்துதிகாந்தங்களில்போய்விழுந்ததுகள். ரோமத்துவாரங்களிலிருந்துகோபாக்கினிப்பொறி-ள் எழும்பி அண்



டச்சுவரை மறைக்கள, அதைப்பார்த்து எமனுங்கண்கூசினான். தேவர்களெல்லாம் நிலைகுலைந்தார்கள். பற்களை நெறநெறவென்றுகடித்தான். அப்போது அதுகளிலிருந்து பிறந்தநெருப்புக் கார்மேகத்திலிருந்து உதிர்ந்த இடிகளைப்போலிறைந்தது. தோள்களைக்கொட்டினான். அந்தத்தோளில் அணிந்த வாகுவலயங்கள் ஒடிந்து அதுகளில் பதித்த ரத்நங்கள் சுக்கல் சுக்கலாகி மின்னல்கள் விழுகிறதுபோலத் தகத்தகாயமாக ஜொலித்துக்கொண்டு சிந்திவிழுந்ததுகள். பின்னும் வாலியானவன் பூமியும், நாலுதிக்கிலுமுள்ள சமுத்திரமும், தேவர்களும், சகலதிற்கும் மூலமாகிய அண்டமும் முடிந்துபோம்படி சர்வசங்காரகாலத்திலே தகிக்கின்ற யுகாந்த காலாக்கினிபோலவும், தான்கடைந்த கடலிற்பிறந்த ஆலகாலவிஷம்போலவும், கோபாவேசங்கொண்டு கொதிப்புடனே சகலரும் பயப்பிராந்திகொள்ள யுத்தத்திற்கு நடந்தான் அப்போது அவனுடையநாயகியாகிய அமிர்தத்தில்ஜெனித்த தாரையென்பவள் வெகுசீக்கிரமாய்வந்து, அவன்வாயிலே புகைதோன்றக் கண்களிலுண்டாகிய அக்கினியினாலே தன்தலைமயிருந் தீயும்படிக் காலைப்பிடித்துக்கொண்டாள். அதுகண்டு வாலி மலைகளில் வாசஞ்செய்கின்ற மயில்போலுஞ் சாயலையுடையபெண்ணே ! என்னைத்தடுக்காதேவிட்டுவிடு. விட்டுவிடு. கடலைக்கலக்கி, அமிர்தத்தை எடுத்து உண்டதுபோல, சண்டைக்கு அழைத்தவனுடைய மார்பைக்கலக்கி அவனுயிரைக் குடித்துவிட்டு ஒருக்ஷணத்தில் திரும்பி வருகிறேனென்று சொல்ல, தாரைசொல்லுகிறாள். கேளும் ராஜாவே ! இதுவரையிலும் பலவினைப்பட்டு உமக்குத்தோற்றுப்பயந்து, ஓடி ஒளித்துக்கொண்டிருந்த உம்முடைய தம்பிராக்கு, இப்பொழுது புதுமையாக ஏதோ சிறிது சாமர்த்தியம் உண்டாயிற்றென்று நினைக்கவேண்டாம். அப்படியிருக்கப் பலாக்காரமாய்வந்து யுத்தத்திற்கு அழைப்பதற்கு ஏதுவென்னவென்றால், அவனுக்கு நல்ல உபபலம் கிடைத்திருக்கின்றது. அதனாலேதான் இத்தனை ஆர்ப்பாட்டஞ்செய்கின்றது. மேலும் உம்முடைய புஜபலத்துக்குத்தக்க ஜெயத்தைக்கொடுக்கின்ற நாள் இன்றையநாளல்ல. நீர் இன்றைக்கு யுத்தத்திற்குப்போவது யுக்தமல்லவென்று சொன்னாள். அந்தவார்த்தைகேட்டு வாலி சொல்லுகிறான். அந்தரசொர்க்கபாதாளமாகிய மூன்றுலோகத்திலுள்ளவர்களும்வந்து என்னுடனே எதிர்த்தாலும், அவர்கள் தோற்றுப்போவார்கள். அதற்கு சாக்ஷியும் உண்டு அது நீ அறியாயா ! மந்தரகிரியே மத்தாகவும் வாசுகியே கயிறாகவும், ஸ்ரீமகாவிஷ்ணுவே தாங்குகல்லாகவும், சந்திரனே தாம்பாகவுங்கொண்டு இந்திரன் முதலாகிய தேவர்களும், அசுரர்களும், பாற்கடலைக் கடையத் தலைப்பட்டபோது அத்தமலையைப்பெயர்த்து இழுக்கச் சக்தியில்லாதவர்களாய்ச்சோர்ந்து வருத்தப்பட்டார்கள். அதுகண்டு நான்கடைந்து அமிர்த முண்டாக்கிக்கொடுத்தேன். அல்லாமலும், தேவதானவர்களே என்னுடனே யுத்தஞ்செய்யத்தக்க பராக்கிரம மில்லாதவர்களாய்த் தோற்றுப்போயிருக்க, மற்றவர்களைக்குறித்துச் சொல்லக்கூடுமோ ! என்பெயரைச் சொல்லும்போதே எமனுங் கெர்ப்பங்கலங்குவானென்றால் இனியார் எனக்குச் சத்துருக்களாய்வந்து என்னுடனே எதிர்த்து நிற்கும் பலமுள்ளவர்கள். அல்லவென்று ஆராகிலும் அறிவில்லாதவர்களாய்வந்து எதிர்த்தாலும், அவர்கள் பெற்ற வரத்திலும் பலத்திலும் பாதி எனக்குவந்துவிடும், அப்புறம் அவர்கள் எப்படி என்னை ஜெயங் கொள்கிறது இப்படியெல்லாம் இருக்கின்றதனால் இப்பொழுது நான்யுத்தத்தில் ஆண்மையழிந்து தோற்கிறதேது ! நீ கிலேசப்பட வேண்டாமென்றுசொல்ல, பின்னும் தாரையானவள் கேளும் என் பிராணேசரே ! உம்முடைய தம்பிக்கு ஸ்ரீராமனென்பவர் பிராணசிநேகராயேற்பட்டு உமது உயிரை வாங்குகிறதற்குக்கூட வந்திருக்கிறாரென்று நமக்கு அநேகம்பேர்கள் வந்துசொல்லக்கேட்டிருக்கிறேன். அதைச் செவ்வையாக விசாரித்துப்பார்த்துக்கொண்டுதானேபோகவேணுமென்றாள். அப்படிசொல்லக்கேட்டபோது என்னடிபாவி ! இருவகைவினைகளையும் கெடுக்கத்தக்க உபாயத்தைக்காணாமல், துக்கித்துச் சோரப்படுகின்ற உலகத்துக்கு, தர்மமார்க்கத்தை யெல்லாம் உண்டாக்கிய ஸ்ரீராமரைக்குறித்துசொல்லப்படாதவார்த்தையைச்சொல்லி உன்னுடைய பெண்தன்மையினால் அவர் விஷயத்தில் அபசாரப்பட்டாய். இகபரங்களாகிய இரண்டையும்பார்த்து நடக்கின்ற அவருக்கு இது ஒருபெருமையா ! இதனால் அவர் பெறப்பட்ட பிரயோசனமென்ன ! ஆத்துமகோடிகளையெல்லாம் ரக்ஷிக்கின்ற தர்மந்தானே தன்னைத் தடுமாறிப்போம்படி செய்யுமா ! மாற்றாந்தாய்சொல்ல உலகத்தையெல்லாம் அவன்பிள்ளைக்கு மிகவும் சந்தோஷமாய்க்கொடுத்துவந்த மகாநுபாவரை ஸ்துதிக்காமல் அவர்மேல் இப்படி அபவாதமான வார்த்தைசொல்லலாமா ! இந்தமூன்றுலோகத்தாருவந்து எதிர்த்தாலுந் தம்முடைய வில்லே தவிர வேறுதுணைவேண்டாத அந்தப்புருஷோத்தமர் ஒரு அற்பமாகிய செய்கையையுடைய குரங்கைச் சிநேகஞ்செய்வாரா ! தம்பிமார்களல்லாமல் தமக்கு வேறே உயிரில்லையென்று எண்ணியிருக்கின்ற கிருபா சமுத்திரமான அந்த ஸ்ரீராமர் நானும் என்தம்பியும் போர்செய்யும்போது நடுவேவந்து அம்பெய்வாரா ! அப்படியெல்லாம் நடவாது. நீ யிவ்விடத்தில் ஒரு இமைப்பொழுதுமாத்திரம் சும்மாவிரு. அக்குரோசத்துடனேவந்த சுக்கிரீபனையும், அவனுக்குத்துணையாய்வந்தவர்களையும் பிராணனை வாங்கிக்கொண்டு இதோவருகிறேன் பயப்படாதேயென்றுசொல்ல, அந்தவார்த்தைகேட்டுப் பின்னையொன்றுஞ்சொல்லாமல் தாரையானவள் அஞ்சியிருந்தாள். பின்பு வாலி போனென்றுசொல்லவேதோள்களாகிய இரண்டுமலைகளும்பூரித்து ஓங்கி ஆகாசத்திற்கு அப்புறத்திலும் உயரும்படி கீழ்த்திசையில் உதயபர்வதத்தின்மேல் தோன்றிய சூரியனைப்போலவும், சகலரும்பார்த்துப் பயப்பிராந்திகொள்ளும்படி தூணிலிருந்து வெளிப்பட்ட உக்கிரநரசிங்க மூர்த்திபோலவும், புறப்பட்டு அந்தக் கிஷ்கிந்தா பர்வதத்தின்மேல் ஒருபுறத்தின்மேல் நின்று

ன். அப்படி யுலகத்தையளந்த ஸ்ரீமகாவிஷ்ணுவின் பாதம்போல ஆகாசமட்டும் நிறைந்திருக்கின்ற ஸ்வரூபத்துடனே நிற்கின்றவாலி ஆர்ப்பரிக்கின்ற தம்பியைக் கண்டு தானும் ஆர்ப்பரித்தான். அப்போது ஆகாசத்திலிருக்கின்ற இடிகள் வெறித்துப்போய் உதிர்ந்ததுகள். லோகங்களெல்லாஞ் செவிடு பட்டதுகள். அந்தருணத்திலே ஸ்ரீராமர் வாலியைப்பார்த்துப் பின்பு சமீபத்தில் நிற்கின்ற தம்பியைநோக்கி அப்பா! லக்ஷ்மணா! அசுரர்களும், தேவர்களுமிருக்கட்டும் எந்தசமுத்திரம்—எந்தமேரு—எந்தச்சண்டமாருதம்—எந்தக்காலாக்கினி—இவனுடைய சரீரத்துக்குச் சமானமாகச் சொல்லப்படும். நன்முகப்பாவென்று சொன்னார் அதற்கு லக்ஷ்மணர் ஸ்வாமி! சுக்கிரீவன் இப்படிப்பட்ட தமயனைக்கொல்லுகிறதற்குக் கூற்றுவனைக்கொண்டுவந்து ஏவத்துக் கொண்டு, குரூரகின்சண்டை செய்கிறதற்குத் தத்தாய்த்தமாயிருக்கிறானே. இன்னமும் கொஞ்சமாகிலும் மனதிலேவருத்தமுண்டாக எண்ணிப்பார்க்கவில்லையே யென்றுசொல்லிப் பின்னுஞ்சகிக்காமல் தர்மநெறி தவறும்படிதேருது நடக்கிறவர்களை நம்பித் தேறுகிறது நன்மையல்ல சத்துருவைப்போலச் சாக்ஷாது தமயனையே கொல்லுகிறதற்குவந்து நிற்கின்ற இவன் நம்மையொத்த அந்நியருக்குச் சகாயப்படுகிறது எப்படியாக வேணுமென்று சொன்னார். அந்தவார்த்தைகேட்டு அப்பா! ஒன்றுகேளென்று ஸ்ரீராமர்சொல்லுகிறார். இந்தப்பித்தாகிய குணத்தினையுடைய மிருகத்தின் நடத்தையைச் சொல்லலாமா, எந்தத் தாய் வயிற்றிலும் பின் பிறந்த தம்பி மார்களெல்லாம் முன் பிறந்த தமையன் மார்களுடன் ஒத்திருந்தார்களேயானால், நம்முடைய பரதன் மகா வுத்தமனாகிறதுண்டோ! லோகத்திலே நல்லவர்கள் சிலரும், தீயவர்கள் பலருமாயிருக்கின்றது உண்மையே காரியங்கொண்டு போகிறவர்கள் ஒருவரிடத்திலிருக்கிற நல்லகுணங்களைமாத்திரங் கிரகித்துக்கொண்டு போகவேணுமேயல்லாமல் அவருடைய குற்றங்களையெல்லாம்பார்க்கமுடியுமா? அப்படிப்பார்க்கப்போனால் குற்றமில்லாதவர் ஒருவருமில்லையென்றே சொல்லவேணுமென்று ரகுநந்தனர்சொன்னார். இவ்விதமாக ஸ்ரீராமலக்ஷ்மணர்கள் வசனித்துக்கொண்டிருக்கும்போது வாலியும், சுக்கிரீவனும், பூமியிலே சஞ்சரிக்கின்ற இரண்டு பர்வதத்திற்குச்சமானமாகிய இரண்டு திக்கெஜங்கள் ஒன்றோடொன்று முட்டினதுபோல முட்டினார்கள். மலையும், மலையும், எதிர்த்ததுபோலவும், சிங்கத்தோடுசிங்கம் எதிர்த்ததுபோலவும், எதிர்த்து, மின்றும், திரிந்தும், அநேகவிசையாய் இடசாரி வலசாரியாயுஞ்சுழன்றார்கள் அப்போது பூமி குலாலனுடையசக்கரம்போலச்சுழன்றது. தோளோடுதோள்களை ஒற்றியும், காலோடுகால்களை எற்றியும், கோபாக்கினி மண்டியெழக்கொதித்தும், சரீரந்தெரியாத மகாவீராவேசத்துடனே யுத்தஞ் செய்தார்கள். ஒருதாய்வயிற்றிற்பிறந்து ஒருஸ்திரீநிமித்தமாகப்போர்செய்கிற மகாபலவந்தரான வாலி சுக்கிரீவர்களும் முன்னாளிலே திலோத்தமைநிமித்தம்போர்செய்த சுந்தோபசுந்தர்கள்போலவும் பிரகாசித்தார்கள். கடலும்கடலும் மகமேருவும் மகமேருவும் போலவும் கோபந்தானே இரண்டுரூபமெடுத்து யுத்தஞ்செய்கிறதுபோலவும் யுத்தஞ்செய்கிறபோது வானரங்களுக்கு அதிபதிகளான இருவர்கண்களும் கக்குகின்ற கோபாக்கினிச் சுவாலையினாலே மேகங்கள்கரிந்து, பர்வதங்கள் எரிந்து, திக்கெஜங்கள்நடுங்கி, உலகமெல்லாம்குலைந்து, வேடிக்கை பார்க்கவந்த தேவர்களும்பயந்து மறைந்துபோய் விட்டார்கள். இப்படிப் போர்செய்கின்றவாலியுஞ் சுக்கிரீவனும், இருந்தார்போலிருந்து ஆகாசத்தில் போவார்கள். பர்வதங்களின்சிகரத்தில் குதிப்பார்கள். பூமியிலேவருவார்கள். திக்குகளிலோடித்தொடர்வார்கள். சகலஜீவனுடைய கண்களிலு மிருக்கின்றவர்கள்போல அங்கங்கேநிற்பார்கள். ஒருவரையொருவர் ரத்தங் கொப்புளிக்கும்படி கடிப்பார்கள். தசதிசையிலும் பொங்கிப்போய்முட்டுகின்ற சப்தசாகரத்தின் ஓசையைப்பார்க்கிலும் ஐந்துபங்கு அதிக ஓசையுண்டாகும்படிகெர்ஜிப்பார்கள். யுகாந்தகாலமேகம் இடிக்கிறதுபோலத்தோளிலும்மார்பிலுங் கைகளைக்கொண்டிருத்துவார்கள். வாயிலிருக்கின்ற பற்களினாலகடிக்கக் கடித்தவாயிலிருந்து பீரிட்டொழுகுகின்ற ரத்தம் திக்குகள்தோறும்பாய, வானத்தில் உதயமாகிய நக்ஷத்திரங்களெல்லாம்செவ்வாய்போலவும்மேகங்களெல்லாஞ் செவ்வானம்போலவும். பிரகாசித்ததுகள். ஒருவரையொருவர் அறையும்போது கருமான் உலைக்களத்திலே வெந்த இரும்பைப்பட்டையின்மேல்வைத்துச் சம்மட்டியினால் அடிக்க அந்த இரும்பு சிதறுகிறதுபோல அக்கினிப்பொறிகிளம்ப, இந்திரகுமாரனாகிய வாலியினுடையதோளும், சூரியகுமாரனாகிய சுக்கிரீவனுடைய மார்புஞ் சக்கைசக்கையாகப்போர்த்தன. பின்னும் ஒருவரையொருவர் மார்பினால் உந்தியும், பாதத்தினால் உதைத்தும், கையினால் எதிர்த்தெறிந்தும், கடித்தும், இடித்தும், விருக்ஷங்களைவேருடன்பிடுங்கி அடித்தும், அமட்டியும்; மலைகளைப்பேர்த்துத்தலைமேல்வீசியெறிந்தும், அதட்டியும், சீறித்தும், கண்களில்நெருப்புஜொலிக்கப்பார்த்தும், மற்றும் ஒருவரையொருவர் நெருக்கிப்பிடித்துத்தூக்கியும், வீட்டெறிந்தும், மார்புகொடுத்தும், குத்தியும், காற்றாடிபோலச்சுழன்றுகுதித்தும், கால்களோடுகால்களைப்பின்னியும், தழுவியும், விழுந்தும், மார்பெலும்புகள்நெரிந்துஉதிரும்படி வாலினாலேசுட்டியிழுத்தும், வேலைக்கொண்டு துளைத்தாற்போல நகங்களினாலேகிள்ளி மலைத்துளைகள்போலச்சரீரங்கள்திறக்கத்துளைத்தும்போர்செய்தார்கள். பூமியிலிருக்கின்ற மலைகளையும், மரங்களையும், கண்ணில் அகப்பட்டதுகளெல்லாவற்றையும் எடுத்து எடுத்து எறிகிறதினாலும்மோதுகிறதினாலும் அதுகளெல்லாம் இற்றுப்பொடிப்பொடியாய் ஆகாசமெல்லாம்நிறைந்து சமுத்திரத்தில் மேன்மேலும்போய்விழுந்ததுகள். தேவர்களும்பயந்து அப்பால்போய்விட்டார்களென்றால் அவர்கள்யுத்தத்தை நான்வேறென்னசொல்லப்போகிறேன். இந்தப்படி இருவரும்தோற்காமல் நெடுநேரம் சண்டைசெய்யுமளவில் வாலி அதிககோபங்கொண்டவனாகி மதயானையைச் சிங்கம் பாய்ந்ததுபோலப் பாய்ந்து நகங்க



ளினாலும், கைகளினாலுஞ் சுக்கிரீவனை மிகவும் மெலிந்து, குறைந்து, கோலஞ் செய்தான். அந்தருணத்தில் சுக்கிரீவன் மனது தளர்ந்து இளைத்தவனாய் ஸ்ரீராமரிடத்துக்கு வந்து வணங்கிச் சொல்லிக் கொள்ள, ஸ்வாமி யானவர் பயப்படாதே. உங்க ளிருவரில் இன்னாரின்னாரென்று வேற்றுமைதெரியாததினாலே இதுவரையிலும் அம்பெய்யாமலிருந்தேன். அடையாளந் தெரியும்படி இப்பொழுது இதைத்தரித்துக்கொண்டு போவென்று, அவனுக்குக் கொடிப்பூவைத்தரித்து, அனுப்பினார். அவனும் அந்தமாலையானது நக்ஷத்திரங்களை வரிசையாகக் கோத்தணிந்தாற்போலச் சிரசிலேபிரகாசிக்க, புலிபோலக்கர்ஜித்து இடிபோல ஆர்ப்பரித்துக்கொண்டு சீக்கிரமாய்ப்போய், வாலியை யவன்பயப்பிராந்திகொள்ளும்படி அநேக ஆவர்த்தி அடித்து. மோதிக் கபிர் கபீரென்னும்படிக் குத்தினான். அதனாலே இப்பொழுது தோற்று ஓடிப்போனவன் மறுபடிவந்தகாரணமென்னவென்று! மனதிலே சந்தேகத்தை யுடையவனாய், எமனுங் காப்பங்கலங்கிப் பீதியடையும்படி கோபித்துக் கண்களை யுருட்டிவிழித்துக் குறுநகைசெய்து, சுக்கிரீவன்சோகப்பட அவனுடைய உயிரிலேதோறுந் தன்னுடைய வைரமாகிய கைகளினாலறைந்து, கால்களினாலுதைத்தமாத்திரத்தில் அவன் பெருமூச்சுவிட்டு அப்பெருமூச்சுடனேஉயிர்நீங்கினவனைப்போல மூர்ச்சையடைந்திருந்தான். அவனுடைய செவியின்வழியாகவும் கண்ணின்வழியாகவும் அனற்பொறிபறக்க, உதிரவெள்ளம் பெருகிவழிந்தது. பின்பு சூரியகுமாரன் வருத்தஞ்சகிக்கமாட்டாமல் எழுந்து ஸ்ரீராமரிருக்கின்ற திக்கைநோக்கிஓடினான். அவன்மேல இந்திரகுமாரன் செருக்குற்று ஓடிவந்து விழுந்து, தோள்மடல் நெரியும்படி நெருக்கி, அரையில் ஒருகையும் கழுத்தில் ஒருகையும் [illegible]த்துத் தூக்கி மேலேஎடுத்துப் பூமியிலேமோதும்படி எத்தனித்தான். அதுகண்டு ஸ்வாமியானவர், இனி நாம் சும்மாவிருந்தால் இவனைத் தப்பாமல் தரையுடனே மோதிக் கொல்லுவானென்று நினைத்து, ஒருபாணத்தை யெடுத்துக் கோதண்டத்திலே பூட்டித் தோள்மட்டும் வாங்கி, வாலியின் மார்புக்குநேராக லக்ஷ்யபார்த்துப் பிரயோகஞ்செய்தார். அந்த ராமபாணமானது பஞ்சபூதங்களின் பலம் முழுமையும் நிறைந்த திடகாத்திரத்தை யுடைய வாலியின்மார்பிலே, வாழைப்பழத்தில் ஊசிநுழைந்தது போலத் தடைபடாமல் நுழைந்தது. அப்போது தனக்குத்தோற்று ஓடிய தம்பியைத் தரையில்லாமலெடுத்து நிலத்திலே எற்றும்படி பிரயத்தனப்பட்ட வாலியானவன், சித்தங்கலங்கிப் பிரளயகால சண்டமாருதம் அடிக்க வேர்பறிந்து விழுந்த மகமேருவைப்போலப் பூமியிலே விழுந்தான். அவ்விதமாக இடிவிழுந்தமலைபோல விழுந்தவாலியானவன்; சுக்கிரீவனைப்பிடித்த கையைநழுவவிட்டு மார்பிலேபட்டு உருவிப் போகின்ற பாணத்தைப் போகவொட்டாமல் உறுதியாகப்பிடித்துக்கொண்டு, ஆகாசமட்டும் எழும்பி அண்டகடாகத்தை உடைக்கிறேனென்று எழுந்திருப்பான். ஒரு உருண்டு உருள்கின்ற பொழுதுக்குள்ளே திக்குகளையெல்லாம் நிர்த்தூளியாகச்செய்கிறேனென்று கொதிப்பான். மறுபடிவிழுந்து பூமியை வேருடனேபறிக்கிறேனென்று உறுக்குவான். இந்தப்பாணத்தையெய்தவன் ஆரென்று சந்தேகித்து ஆச்சரியமாய்ப் பூமியைக்கையினாலே அறைவான். கண்களில் நெருப்புப்பொறிபறக்க நான்குதிக்கையும் சுற்றிப்பார்ப்பான். அந்தப்பாணத்தைக் கையினாலும் காலினாலும் வாலினாலும் பற்றிப்பறிப்பான், பறிக்கக்கூடாததினாலே நிலத்திலே ஒருபர்வதம் உருள்கிறதுபோல உருள்வான் இது செய்தவர்கள் தேவர்கள்தானோவென்றும் ஐயப்படுவான். மற்றும் அந்தத்தேவர்கள் இந்தச் செய்கைக்குத்தக்கவர்களோவென்றும், அவர்களுக்கு இவ்வளவு மிடுக்குண்டோவென்றும் அல்லது பிறர்ஆர்தான்செய்தார்களோவென்றும் நினைப்பான். உடனேநகைப்பான். பின்னும்திரிமூர்த்திகளுக்குஞ்சமானமானவனல்லவோ இப்படிசெய்பவனென்றுஞ்சொல்லுவான். என்மார்பிலேபட்ட ஆயு[illegible]சக்கரமோ! சிவசூலமோ! குமரனுடையவேலோ! இந்திரனுடையவச்சிரமோ! எப்படிப்பட்டதானாலும் என்மார்பில்நுழைந்துசெல்லுமோ! ஆகிலும் இது எதுவோவென்றும் நினைப்பான். இதுவில்லிலே பூட்டி யெய்யப்படுவதல்லவென்றும் அதிசயிப்பான். இதை முனிவர்கள்தான் தங்கள்வாக்கின் மகிமையால் பிரயோகித்தார்களோ வென்றும் எண்ணுவான். பல்லினாற்பலதரமும் கடித்துஇழுத்தும் தன்மார்பைக்கல்லியும் பறிக்கப்படாமலிருக்கிறது அம்பேயென்று அறிந்தான். அப்படி ஸ்திரமாக அஸ்திரமென்று அறிந்து பலவிதத்திலும் சலிப்புற்றான். என்மார்பை உயிருடனே உருவிய இப்படிப்பட்ட பாணத்தை எய்தவன், இன்னானென்று அவன்பெயரை அறிகிறேனென்று, அதைமறுபடியும் இரண்டுகையையும் காலையும் வாலையுங்கொண்டு மஹாவுக்கிரமாக இழுத்துப் பறித்தான். அதுகண்டு தேவர்கள் அசுரர்கள் முதலானவர்களும் வாலியைக்கொண்டாடிச் சந்தோஷப் பட்டார்கள். உலகத்திலே சுத்தவீரர்களைக்குறித்து ஆர்தான் அதிசயிக்கமாட்டார்கள். அவன்மார்பாகிய மலையிலிருந்து அருவிஒழுகுகிறதுபோல, ரக்தஜலம்பெருகி மலைகள்காடுகளெல்லாம் நிறைந்தது. சுக்கிரீவனும் அந்த ரக்தப்பிரவாகத்தைப்பார்த்துத்திகைத்து, உடன்பிறப்பென்கின்ற ஆசாபாசத்தினாலே கண்களில்நின்று நீர் தாரைதாரையாய் ஒழுகப் பூமியிலே விழுந்தான். வாலியானவன் மார்பிலிருந்து பறித்தபாணத்தை முறித்தெறிகிறேனென்று எத்தனித்துக்கூடாமையால், நான் மேருவையும் முறிக்கத்தக்க பராக்கிரமசாலியாயிருந்தும், இந்த அம்பை முறிக்கிறதற்கு என்னாலே ஆகவில்லையே யென்று, நினைத்து இதில் ஆர்பெயர் எழுதியிருக்கின்றதென்றுபார்க்க, சொர்க்கமத்திய பாதாளமாகிய திரிலோகங்களுக்கும் மூலமந்திரமாகியும் தியானஞ்செய்கின்றவர்களுக்குத் தற்சொரூபத்தைக்கொடுக்கின்ற தாரகப்பிரம்மமாகியும் இம்மை-மறுமையென்கின்ற வியாதியை நிவர்த்தி செய்கின்ற பரமஔஷதமாகியும் விளங்குகின்ற, ஸ்ரீராமனென்று எழு

யிருந்த காமத்தை நன்றாகத் தெரியக்கண்டான். தானை
வே! ஓ! ஓ! ஒருநாளும் வேதசாஸ்திரங்களாற் சொ
ல்லப்பட்ட தர்மந்தவறாத சூரியகுலமானது. இராஜதர்ம
த்தைக்கைவிட்டு வானப்பிரஸ்தனாகி, எங்கள் விஷயத்தி
ல் வில்லின்தர்மத்தைமறந்த இந்த ராமன், உற்பவித்தபி
ன்பு தர்மந்தவறியதென்று வெட்கப்படுவான். கிரீடந்த
ரித்த தன்தலையை அசைப்பான், அதிக ஆர்ப்பாட்டமாகக்
கலகலவென்னும்படி சிரிப்பான். மறுபடியும் சிறிதுநே
ரம் ஆலோசிப்பான். இதுவும் ஒருதர்மமோ வென்றும்
நினைப்பான். காலிலேபூட்டிய தளையுடனே குழியில்விழு
ந்த மதயானையைப்போல உழைத்துக்கொள்ளுவான். பி
ன்னும் சரீரஸ்மரணையில்லாதவனாய்ச்சோர்ந்துகிடப்பா
ன். லோகத்துக்கெல்லாம் இறைவனாகிய அந்தராமந்தா
னே தர்மத்துக்குவிரோதமாகிய காரியஞ்செய்வானாகில்
மற்றவர்கள் எப்படியாகவேணுமென்று சொல்லுவான்.
இவ்விதமாக மனந்தழிந்து துயரப்படுகின்ற வாலிக்குமு
ன்னே, மநுவிக்கியானத்திற்சொல்லப்பட்ட ராஜதர்மத்
தைத் தவறாமற்காக்கின்ற நிமித்தம், வேதமார்க்கந் தப்
பாமல் ராஜ்யபாரஞ்செய்த தசரதமகாராஜாவுக்குப் புத்
திரனாகத் திருவவதாரஞ்செய்தருளிய, புருஷோத்தமரா
கிய ஸ்ரீராமர்பிரசன்னமானார். வாலியானவன் நீலமேக
மானது தாமரைகளைபுஷ்பிக்கும்படி ஒருபர்வதாகாரமா
கிய வில்லைத்தாங்கிக்கொண்டு பூமியிலேவந்து நிற்பது
போல, எதிரேநின்ற ஸ்ரீமந்நாராயணனாகிய ராமமூர்த்
தியைக்கண்டான். கண்கள் புண்போலச்சிவந்து நெருப்
பும் பொழியப்பார்த்து, அப்பா! என்ன நினைத்து என்
னகாரியத்தைச் செய்தாயென்றுசொல்லிப் பின்னும் ஏ
சத்தொடங்கினான். சத்தியமும் மரபுந்தவறாமல்காத்து,
அதனிமித்தமாகப் பிராணனைவிட்டுவிட்ட புனிதனாகிய
தசரதசக்கரவர்த்திகுமாரனே! பரதனுக்குமுன்னே பி
றந்தாய். அயலாரைத் தீமைசெய்யவேண்டாமென்று ஆ
க்கியாபித்த அந்தஆக்கினைதப்பி நடந்தவர்களைத் தெண்
டித்து நீதானே இப்பொழுதுதீமைகளைச்செய்தால் நன்
மையாமா! பெற்றதாயைப்போல அன்பையும் தயா
வையும் சிநேகத்தையும் தர்மத்தையுங்கைவிடாமல் தழு
விக்கொண்டிருக்கின்ற நீ, குலதர்மம் இப்படிப்பட்டது
கல்வி யிப்படிப்பட்டது, நன்மை யிப்படிப்பட்டது, இரி
லோகாதிபத்தியமிப்படிப்பட்டது. புஜபல மிப்படிப்பட்
டது. உலகத்தைரக்ஷிக்குந்தன்மை யிப்படிப்பட்டதென்
று தர்மசாஸ்திரஞ்சொல்ல அறிந்திருந்தும், மறந்தவர்
களைப்போல அந்தச் சாஸ்திரநிச்சயத்தை அழிக்கலாமா
சித்திரத்திலும் எழுதப்படாத திவ்ய சுந்தரத்தை யுடை
யஸ்ரீராமா! ராஜதர்மமென்பது உங்கள்வம்சத்திலே பி
றந்தவர்களுக்கெல்லாம் இயற்கையா யிருக்கின்ற தல்ல
வோ! அப்படியிருக்க உனக்கு-பூமியும்-ஜனக புத்திரியும்
கிடைப்பதற்கு அருமையானஅமிர்தத்தை ஒத்தஉன்தே
வியுமாகிய சீதையைப்பிரிந்தபிற்பாடுமனந்திகைத்தை
யோ! ராக்ஷதர்கள் ஒருபிழைசெய்துபோனால் அதற்கு ஈ
டாகக்காட்டிலிருக்கின்ற ஒருகுரங்குராஜனைக்கொல்லும்
படி உங்கள் மநுநீதியிற்சொல்லியிருக்கின்றதோ! உனக்கு
ரிய பச்சாத்தாபத்தை எங்கேதான் கொட்டிவிட்டாய்!
என்னிடத்தில் என்ன குற்றத்தைக்கண்டாய்! ஐயா இ
ந்த அபகீர்த்தியை நீ பூண்டுகொண்டால், இனிக்கீர்த்தி
யைத் தாங்கத்தக்கவர்கள் யார்! உலகத்திலேசஞ்சரிக்கி
ன்ற குரங்கின்கூட்டத்திற்குமாத்திரம் கலிகாலம் வந்து
நேரிட்டதோ! ஒழுக்கமும் நன்மையும் வேண்டியது எ
ளியவர்களுக்குமாத்திரமோ! பலவந்தர்களுக்குவேண்டி
யதில்லையோ! அவர்கள் பழியே செய்தாலும் புகழாய்
முடியுமோ! ஒருவருந் துணைவேண்டாத விஜயப்பிரதா
பனே! பெற்றபிதாவானவர் உனக்குக்கொடுத்த ராஜ்ய
சாம்ராஜ்யத்தை உன்தம்பிக்குக் கொடுத்து நாட்டில்
அவனைக்கொன்றாய். இப்போது இந்த ராஜரீகத்தை எ
ன்தம்பிக்குக் கொடுத்து காட்டில் என்னைக்கொன்றாய்!
இதைப்பார்க்கிலும் வேறென்னகாரியஞ்செய்யவேணும்
ஆண்மைசெலுத்துகிறது க்ஷத்திரியர்களுக்கு உரியஒழுக்
கமே ஆயினும், என்னையிப்படி அநியாயமாகக் கொன்ற
நீ நாளை அந்தராவணனை முறைதவறியகாரியஞ் செய்தா
னென்றுகோபிப்பையோ! ஒருநாளுங்கோபமில்லாதவ
னே! இருவர் எதிர்த்து யுத்தஞ் செய்துகொண்டிருக்கு
ம்போது, அவ்விருவரையும் சுற்றத்தாராகப் பாவிக்க
வேண்டியதைவிட்டு, ஒருவர்மேல் கிருபையைச் செலு
த்தி, ஒருவர்மேல்கோபங்கொண்டு ஒளிந்திருந்து வில்
வளைத்துப் பாணப்பிரயோகஞ் செய்வது தர்மமோ! அ
ல்லது பாவமோ! இதுபக்ஷபாதமே. மேலும் வீரமுமல்
ல. விதியுமல்ல. சத்தியமுமல்ல. உன்னுடையபுயபல எ
ன்சரீரம் பாரமுமல்ல, நான் உனக்குப்பகையாளியுமல்
ல. நெஞ்சமாகிலும் அன்பும் அருளுமில்லாமல் நீ இவ்
விதமாகச்செய்தது என்னநியாயம்! இகபரங்களில் வரு
ம் நன்மைதீமைகளைக் குறித்துப்பார்த்துச் சத்துருக்கள்
சிநேகர் உதாசீனர்களாகிய சகலரும் ஒப்பச்செய்கிறதல்ல
வோ! தர்மத்தைநாட்டுகிறதென்பது. குற்றம்வந்து சம்
பவிக்குமென்றுபாராமல், ஒருபக்ஷத்திற்சார்ந்து உதவி
செய்யலாமா! சிங்கத்தைக்கைவிட்டுச் சிறுமுயலைத் து
ணையாகச்சேர்த்துக்கொள்வதுபோல, பகையாளியைச்
சாதிக்கவேணுமென்று ஆலோசித்தநீ, கொடிப் பொழு
திலேஜெயிக்கத்தக்க சமர்த்தனாகிய என்னை ஒழித்து, ப
லவீனனாகிய சுக்கிரீபனைக் கைப்பற்றிக்கொண்டையே!
இது என்னமுயற்சி! சந்திரனுக்குக் களங்கமுண்டான
துபோலக் களங்கமில்லாத சூரியகுலத்துக்கும் நீ பிறந்
து களங்கமுண்டாகும்படி செய்தாய். ஒருவன்வந்து எ
ன்னைப்போருக்கு அழைக்க, நான் அவனுடனே எதிர்த்
துச் சண்டைசெய்கிறசமயத்திலே, ஒளிந்திருந்து அம்
பெய்து என்பிராணனைவதைத்தும் பின்னும் வெட்கமி
ல்லாமல், நான்விழுந்துகிடக்கின்ற இடத்தில் எனக்கு
முன்பாகவந்துநிற்கின்றாய். சாஸ்திரதர்மத்தையும் உங்
கள்பிதுராசாரத்தையும் கைப்பற்றாமல், வாலியென்கி
ன்றஎன்னைக்கொன்று ராஜதர்மத்தின்வேலியை முறித்
தெறிந்தாய். உன்தாரத்தை ஒருவனெடுத்துக்கொண்டு
போக, அபவாதமாகஎப்படி! கையிலே வில்லை வைத்
துக்கொண்டு சும்மாவிருக்கிறதென்று நிராயுதன்மேல்



மறைந்து அஸ்திரம் பிரயோகித்ததல்லவோ! வில்வீர
மென்று, வாலியானவன் பொறிபறக்கப் பல்லைக்கடித்து
மனங்கொதித்து, அதிககோபமாய்க் கண்ணின்வழியே
நெருப்புச்சிந்தும்படி பேசினான். அதற்கு ஸ்ரீராமர் உத்
தரவுசொல்லுகின்றார். நீ முன்னாளிலே பிலத்துவாரத்
திற் புகுந்துபோய் வெகுநாள் வாராமலிருந்தாய், அப்
போது உன்தம்பி மிகவுந்துயரப்பட்டுத் தானும் அந்தப்
பிலத்துவாரத்திற்குள் உன்னிடத்தில் வரும்படி புறப்ப
ட்டான். இவனை உங்கள் குலத்திலுள்ள பெரியவர்களு
ம் படைத்தலைவர்களும் பிடித்துக்கொண்டு நீயும் போய்
விட்டால் எங்களுக்குக்கதியார். இனி நீயாவது இருந்து
அரசாட்சிசெய்யென்று வெகுவாய்ச்சொல்லி நிறுத்தி
னார்கள். அவர்கள் அப்படிசொல்லியும் இவன் என்தம
யன் இறந்துபோய் நான்மாத்திரம் உயிருடனே யிருக்கி
றதோ! இப்பொழுதே இறந்துபோகிறேன். ராஜரீகமு
ஞ்செய்கிறதில்லை. நீங்கள் என்னசொற் சொன்னீர்களெ
ன்று மறுத்துவிட்டான். மறுபடியும் அவர்கள் பலவித
த்திலும் இணங்கும்படி சொன்னதைக்கொண்டு அரசா
ட்சிசெய்யச் சம்மதித்தான். நீ வந்தவுடனே உன்னை வ
ணங்கி உன் ராஜரீகத்தை உன்வசஞ்செய்து நடந்த சமா
ச்சாரமுஞ்சொன்னான். அப்போது இவன்மேல்கோபித்
துக்கொண்டு இவனிடத்தில் குற்றமில்லாமலிருந்தும்,
இவனைக்கொல்லுகிறதற்கு நினைத்து நீ மிகவும் உபத்தி
ரவஞ்செய்தாய். அத்தருணத்திலேஇவன் என்பிழையெ
ல்லாம் பொறுத்துக்கொள். உனக்கு அபயம் அபயமெ
ன்றுஞ்சொன்னான். அல்லாமலும் மகாபலவந்தனாகிய இ
ந்தச் சுக்கிரீபன் உனக்கு யுத்தத்தில் நான்தோற்றேனெ
ன்று கைகளை உயர எடுத்துக் கும்பிட்டும் இவன் பிரா
ணனை எமனுக்கு உணவாகக் கொடுக்கிறேனென்று சீறி
னாய். இவன் நடுங்கி நாலுதிக்குக்கும் அப்புறத்தே ஓடினா
ன். அது அறிந்தும் மனதிரங்காமல் தம்பியென்றும் பா
ராமல் துரத்தினாய். நீ வந்தால் உன்தலை வெடித்துப்
போம்படி ரிஷிசாபம உண்டாயிருக்கின்ற மலையின்மேல்
இவன்போயிருந்தான். நீ அவ்விடத்திற்போகவில்லை. அ
தனால் இவன்உயிர்தப்பிப்பிழைத்தான். எப்போதும்தெ
ளிவினை யுடையவர்களுக் கெல்லாம் பரதாரத்தை இச்சி
யாமலிருக்கின்றதே! அன்பும், நல்லகுடிப்பிறப்பும், வீ
ரமும், வித்தையும், மெய்மையும், நீதியுமாம், மேலும்
நாம் பலவந்தராயிருக்கிறோமென்று எளியவனைத் துன்
பப்படுத்துகிறதே வீரங்குன்றுவதும், ஒருவர்விவாகஞ்
செய்துகொண்ட ஸ்திரீகளைக் கற்பழிக்கிறதே தர்மந்த
வறுவதுமாம், இப்படி இருக்க நீ தர்மம் இன்னதென்
பதையும் இம்மை மறுமையையும் யோசித்துப் பாராம
ல் உனக்குள்ள பெருமையையும் விட்டு உன் அருமைத்
தம்பியின் பிராணபதமாகிய பெண்சாதியையும் பலாத்
காரமாய் அபகரித்துக்கொண்டா யாகையினாலும் இவ
ன் எனக்குப் பிராணசிநேகனானபடியினாலும் இவனுடை
ய துயரத்தை நிவர்த்திசெய்கிறது என்கடனாகையினாலு
ம், அந்நியர்களாகிலும் எளியவர்களாயிருக்கின்றவர்களு
க்குவந்த ஆபத்தைத் தீர்க்கிறதே என்னுடைய மனோபி
ஷ்டமாகையினாலும் இப்படிச்செய்தேனென்றும் ஸ்ரீரா
மர்சொல்ல, வாலிசொல்லுகிறான். ஐயா! நீ தகாதெ
ன்று சொல்லிய இவ்வளவு செய்கையும் எங்களுக்கு இ
யற்கையாயிருக்கின்றது. கற்புடைய உங்கள்குலத்து ஸ்
திரீகளின் புணர்ச்சிபோல பிரமதேவன் எங்களுக்கு உ
ண்டுபண்ணவில்லை. தாயென்றும், தங்கையென்றும், ம
களென்றும், மனைவியென்றும், தமயன்பெண்சாதி தம்
பிபெண்சாதியென்றும், கிரமமில்லாமல்நேர்ந்தபடிபுண
ரும்படி செய்தான். மேலும் கல்யாணஞ்செய்கிறதுமில்
லை. எங்கள்மிருகசாதிக்குத் தக்கபடி மனம்போனவாறு
நடந்துகொள்ளுகிறதேயல்லாமல் வேத மார்க்கத்துக்கு
ஒத்தகுணமுமில்லை. ஆகையால் சிறிதுங் குற்றமேயில்
லை. இதை நீ அறியென்று வாலிசொன்னசொல்லுக்குத்
தகுதியாகிய நியாயத்தை ஸ்ரீராமர் சொல்லுகிறார். நீங்க
ள் சிரேஷ்டர்களாகிய தேவர்களுக்குப் புத்திரர்களாய்
ப்பிறந்து தர்மமார்க்கத்தை அறிகிறபடியால் உங்களுக்
கு மிருகத்துவமே யில்லை யென்பது தெரியவந்தது. ஆ
கையால் அதைஞ்செய்வது அடாது. தர்மத்துக்கிருப்
பிடமாயிருக்கின்றது பொறியுணர்வில்லாத ஜடமாகிய
சரீரமா! ஐம்புலன்களையும் பகுத்தறிகின்ற அறிவல்லவா!
சாஸ்திரதர்மங்களைச் செவ்வையாக அறிந்தநீ பிழைசெ
ய்து பாவத்தையடையலாமா! முதலையானது பிடித்தி
ழுக்கச் சங்குசக்கரங்களையேந்திய ஆதிமூலமாகிய ஸ்ரீ
மந்நாராயணனைக் கூவியழைத்துப் பேறினாலே மோ
க்ஷானந்தத்தைப்பெற்ற, அந்தகஜேந்திரனும் மிருகஜா
திதானே தர்மநிஷ்டையினாலே சீதையின் துக்கத்தை ஆ
ற்றும்படி ராவணனுடனே யுத்தஞ்செய்துமோக்ஷமடை
ந்த எங்கள்பிதாவாகிய ஜடாயுவும் கழுகுகளுக்கு ராஜா
வாகிய ஒருபக்ஷிதானே ஆகையால் அறிவே பிரதானம்,
நல்லது தீயது அறியுந்தன்மையில்லாதல்லவோமிருகம்
நீதிசாஸ்திரத்தின் கருத்து நீ யறியாதது மற்றொன்றுமி
ல்லையென்கிறதை, உன்வார்த்தைதானே தெரிவிக்கின்ற
தே. இன்னது தக்கது இன்னது தகாதென்று சரியாக
அறியாதிருக்கின்றவர்கள் உயர்ந்த மனிதர்களானாலும்
மிருகமே. மிருகமானாலும் மநுநீதி தவறாமல்நடக்குமா
கில் அதுதேவர்களுக்குச் சமானமே நீ காலனுடையப்
ராக்கிரமத்தை அழித்த சிவனைப் பக்தியுடனே பூசைசெ
ய்து அந்தப் பூஜாபலத்தால் ஆகாசமல்லாத மற்றநான்
கு பூதத்தின் வலுமையையும் பெற்றிருக்கின்றையே. அ
நேகம்பேர் தர்மமார்க்கத்தை அடைந்திருக்கிறார்கள். அ
நேகம்பேர் அதை யிழந்திருக்கிறார்கள். தேவர்களிலும்
தீமைசெய்து திருத்தப்பட்டிருக்கிறார்கள். இப்படியிரு
க்கிறபடியினாலே எந்தக்குலத்திலும்பிறந்த எப்படிப்பட்
டவர்களுக்கும் மேன்மையும், கீழ்மையும், அவரவர்செ
ய்யும் வினையினாலேயேயுண்டாகுகின்றதுகள். அந்தத்த
ன்மையை அறிந்திருந்தும் நீ இல்லறத்தைக்கெடுத்து ந
டந்தாயென்று ஸ்ரீராகவர்சொல்ல, அதுகேட்டு வாலி
யானவன் நல்லது அப்படியானாலும் என்னெதிரே வந்
து யுத்தஞ் செய்யாமல் வேடர் மிருகங்களை எய்கிறது
போல மறைந்திருந்து அம்புவிட்டது என்ன வென்று

கேட்டான். அதற்கு லக்ஷ்மணர் பிரதியுத்தரஞ்சொல்
லுகின்றார். முன்பு உன்தம்பியாகிய இந்தச் சுக்கிரீபன்வ
ந்து சரணாகதம்பண்ணினான். அப்போது எங்கள் தமைய
னார் முறைதவறிய உன்னைக்கொன்று இவனைரக்ஷிக்கிறே
மென்று அபயஸ்தங்கொடுத்தார். ஆகையால் உன்னெதி
ரேவந்தால் நீயும் பிராணன்மேல் இச்சையையுடையவ
னாய்ச் சரணாகதியடைந்தால் அவனுக்குக்கொடுத்த வாக்
குத்தவறிப் போகுமென்று மறைந்திருந்து பாணப்பிர
யோகஞ்செய்ததென்றுசொல்ல, அந்தவார்த்தையைவா
னரகுலத்திற்கு ராஜாவாகிய வாலிகேட்கவே, மெய்தா
னென்று எண்ணிக் கோபமடங்கித் தர்மஸ்வரூபனான
ஸ்ரீராமன்குற்றஞ்செய்யமாட்டானென்று மனஞ்சம்மதி
த்து, கேள்விச்செல்வமுண்டாகிய வாலி மெய்யறிவுபிற
ந்து நமஸ்காரஞ்செய்து சொல்லுகிறான்.

கவி.

தாயெனவுயிர்க்குநல்கித் தருமமுந்தகவுஞ்சால்பும்......*
நீயெனநின்றநம்ப நெடிதுநீநோக்குநோன்மை........*
நாயெனநின்றவெம்பா னவையறவுணரலாமோ........*
தீயன்பொறுத்தியென்றான் சிறியனசிந்தியாதான்...(க)
இரந்தனன்பின்னுமெந்தை யாவருமெண்ணேற்றாக்...*
குரங்கெனக்கருதிநாயேன்கூறியமனத்துக்கொள்ளேல்*
அரந்தைவெம்பிறவிவெந்நோய்க்கருமருந்தனையாயைபா
வரந்தரும்வள்ளலொன்றுகேளெனமறுத்துஞ்சொன்
[ன்

வேறு.

ஏவுகூர் வாளியா லெய்துகா யடியனேன்................*
ஆவிபோம் வேலைவா யறிவுதந் தருளினாய்..............*
மூவர்நீ முதல்வநீ முற்றுநீ மற்றுநீ.........................*
பாவநீ தருமநீ பகையுநீ யுறவுநீ..........................(உ)
புரமெலாமெரிசெய்தோன் முதலினோர்பொருவிலா...*
வரமெலாமுருவியென் வசையிலாவலிமைசால்........*
உரமெலாமுருவிவந் துயிரொலாதுகருநின்..............*
சரமலாற்பிறிதுவே றுளதரோதருமமே..............(ஈ)
யாவருமெவையுமா யிருதுவும்பயனுமென்............*
பூவுநல்வெறியுமொத் தொருவரும்பொதுமையாய்.....*
யாவனியாவதென் றறிவினாருவினார்...................*
தாவரும்பதமெனக் கருமையோதனிமையோய். ...(௫)
உண்டெனுந்தருமமே யுருவமாய்நின்றநிற்............*
கண்டனன்மற்றினிக் காணவென்கடவனே..............*
பண்டொடின்றளவுமே யென்பெரும்பழவினைத்.......*
தண்டமேயடியனேற் குறுபதந்தருமதே...............(௬)

என்பன—தாய்போலச் சகலஜீவராசிகளுக்கும் கிரு
பைசெய்து, தர்மமும் - தகுதியும் - மேன்மையும் - நீயே
யென்று சொல்லும்படி நிற்கின்ற பரமாத்துமனே? நீ
விசேஷமாகக்குறித்துப் பார்க்குந் தர்மத்தை நாய்க்குச்
சமானமாகிய எங்களிடத்திலேயும் பார்க்கிறது. நான்செ
ய்த தீமைகளைப் பொறுத்தருளவேணும், யாதொன்றுந்
தெரியாத குரங்கென்றுநினைத்துநாயேன்சொன்னசொ
ற்களைப்பற்றி உன்திருவுள்ளத்திலேசீற்றங்கொள்ளாதே!
துக்கத்தைத்தருகின்ற என்னுடைய ஜெனனமரணவியா
திகளுக்கு அருமையாகிய ஒரு சஞ்சீவிமருந்துபோலத்
தோன்றிய ஐயனே! கேட்ட வரங்களையெல்லாங் கொடு
க்கின்றவள்ளலே! அடியேன் ஒருவிண்ணப்பம் பண்ணி
க்கொள்ளுகிறேன். அதைக்கேட்டருளவேண்டும், கூர்
மையாகிய அஸ்திரத்தினால் எய்து நாயடியேனுடையபி
ராணன் பிரிந்துபோகின்ற சமயத்திலே மெய்யறிவைக்
கொடுத்து ரக்ஷித்தாய். பிர்மா, விஷ்ணு, ருத்திரனென்
கின்ற மும்மூர்த்திகளும்நீயே! அம்மூவர்களுக்குள்ளும்
முதல்வனாயிருக்கின்றவனும்நீயே! பாவமும்நீயே! தர்
மமும்நீயே! பகையும்நீயே! உறவும்நீயே! மற்றுஞ்சக
லமும்நீயே! முப்புரங்களையும் எரித்த சிவன்முதலான
வர்களால் தான்பெற்ற வரங்களையெல்லாம் உருவி, என்
வலிமைமிகுந்த மார்பையும் உருவிவந்து உயிரையும் உ
ண்ட உன்னுடைய அஸ்திரமேயல்லாமல் தர்மமென்பு
து வேறுண்டோ! மனிதர்கள் தேவர்கள்முதலாகிய எ
வர்களுமாயிருக்கும் பறவை முதலாகிய எதுகளுமாய்
கார்காலமுதலாகிய அறுவகைப்பருவங்களும் அந்தந்தப்
பருவத்திற்கு உரியபயனுமாய் பூவும்மணமும்போலச்ச
ர்வபதார்த்தத்தையும்விட்டு நீங்காமற்கலந்துபொதுமை
யாயிருக்கின்றவனே! உன் கடாக்ஷத்தினாலே நீ இன்ன
னென்றும், உனதுதன்மை யிதுவென்றும், அறியும்படி
எனக்குத் திவ்யஞானம் உதயமானபடியினாலே இனிப்
பரமபதங்கிடைப்பது அருமையோ! தர்மஸ்வரூபனாகிய
உன்னைப்பிரத்தியக்ஷமாகக்கண்டநான் இன்னந்காணவே
ண்டியது வேறென்ன இருக்கின்றது. ஜென்மஜென்மாந்
தரங்கள் தொடங்கிவந்த மகத்தாகிய என் கர்மத்திற்குப்
பிராயச்சித்தம் என்னவென்றால் அடியேனுக்கு நீ முக்
திகொடுத்து ரக்ஷிக்கிறதுதான் ஐயாவென்று ஸ்தோத்தி
ரஞ்செய்து பின்னுஞ்சொல்லுகிறான். உயர்ந்த பெருமை
பொருந்திய ஸ்ரீராமா! என்னைக்கொல்லும்படி என்தம்பி
உன்னைக்கொண்டுவந்துவிடுத்து சிறியனாகிய குரங்கு
களுடனே கூடியிருந்து ஆலோசித்தும் சம்பாஷித்தும்,
அரசாண்டுவந்த இந்தவுருமையாகிய ராஜ்யத்தைத்தா
ன் பெற்றுக்கொண்டு எனக்கு மோக்ஷராஜ்யத்தைக்கொ
டுத்தான். இதைப்பார்க்கிலும் அதிகமாகிய உதவி மற்
றொன்றுண்டோ! ஸ்வாமி! உம்மிடத்தில் நானொரு வ
ரங்கேட்கிறேன். அது என்னவென்றால் என்தம்பி குர
ங்கின் சேஷ்டையாய்க் கள்ளைக்குடித்த மயக்கத்தினால்
அறிவுதடுமாறி உன்விஷயத்தில் ஏதாகிலும் அபசாரப்ப
ட்டால், என்மேல் ஏவிய அம்பென்கின்ற கூற்றுவனை அ
வன்மேலேவவேண்டாம். இதுவுமல்லாமலின்னமொ
ன்றுநான்சொல்வதுண்டு உம்முடைய தம்பிமார்கள் என்
தம்பியைப்பார்த்துத் தமயனைக்கொல்லுவித்தானென்று
இகழ்ச்சிசெய்யாமல் காத்துக்கொள்ளவேணும், நீர்தா
னேமுன்னமே உன்குறையை முடிக்கிறேனென்று அவ
னுக்கு அபயஸ்தங்கொடுத்திருந்தீர். மேலும் இது கர்மா
நுசாரமாகையால் அதைக்கடக்கக்கூடுமோ! மாயையை
யுடைய அந்தராக்ஷதனைப் பிடித்துவந்து தேவரீர் முன்
னேவிட்டு என்குரங்கின் தொழிலைக் காண்பிக்கிறதற்குப்
பாக்கியஞ் செய்யாமற்போனேன். இனியதைச் சொல்வ
தனால் பிரயோசனமில்லை. ஆயினும் இப்பொழுது நீர் நி



னைத்ததைச் செய்ய வேண்டுமென்றாலும் இந்த அநு
மானே செய்கிறதற்கு உரியவன். இவனை உம்முடை
ய கையிலிருக்கிற வில்லைப் போலவே திருவுள்ளத்தி
லே வைத்தெண்ணும். என்தம்பியை உம்முடைய தம்
பியாகவே நினையும். இவர்களுக்குச் சமானமாகிய து
ணைவர்கள் உமக்குவேறில்லை. இவர்களைக்கொண்டு லோ
கமாதாவாகிய பிராட்டியாரைத் தேடிக்கொள்ளுமென்
று ஸ்ரீராமருடனேசொல்லி, சமீபத்திலே பிரலாபித்துக்
கொண்டுநிற்கின்ற தன்தம்பியைப்பார்த்து அப்பா! அ
ங்கலாய்க்காதேயாவென்று கையைநீட்டிச் சேர்த்துத்த
ழுவிக்கொண்டு வேதமும் ரிஷீஸ்வரர்களும் பிர்மாவு
ம் மற்ற ஆகமசாஸ்திரத் துறைகளின்முடிவும் சொல்லு
கின்ற அநாதியாகியவஸ்துவே! இப்படி வில்லையேந்திக்
கொண்டு ஸ்ரீராமனென்ற நாமந்தரித்துத் தர்மத்தை நி
லைநிறுத்துகிறதற்கு வந்து அவதரித்திருக்கின்றது. இ
தை எவ்வளவாகிலுஞ் சந்தேகமாகநினைக்கப்போகிறாய்.
நிலைபெற்றிருக்கின்ற மோக்ஷ ஐசுவரியத்தைவிரும்பி அ
தற்குத் தகுதியாகியமார்க்கத்தில் நிற்கின்ற ஜீவாத்மாக்
களெல்லாம், இவருடைய நாமத்தையே கற்கின்றது. இ
வரையே தியானிக்கின்றது. இதற்குச் சாக்ஷிவேண்டுமா
னால் என்னைக்கொன்ற மகத்துவமே போதும். வேறொ
ருவருதவும் வேண்டுவதில்லை. நான்தோறும் இவருக்குஅ
வவில்லாத பொல்லாங்குகளைச் செய்தவர்களும் சத்கதி
அடைவார்களாகில், இவருடைய பாதாம்புஜத்தைச் சா
ர்ந்திருந்து ஏவல் செய்கிறவர்கள் பெறுந் தகுதியான து
சொல்லுந்தரமாமோ! உனக்கு விதியே உதவிசெய்ததா
னால் அருமையென்ன! இகபரமிரண்டும் பெற்றுக்கொ
ண்டாய். இனிச் செய்யத்தக்கது என்னவென்றால், ம
காலட்சுமியையும் மறுவையும் மார்பிலுடைய ஸ்ரீமஹா
விஷ்ணுவாகிய இந்த ராமச்சந்திரனது ஏவலைச்சிரசாக
வகித்துக்கொண்டு, மனதை ஒருவழியிலேநிறுத்தி மூன்
றுலோகத்தாரிலும் மிகவும் உயர்ந்திருக்கக் கடவாய். ம
தத்தகுரங்கின் புத்தியைக்காட்டாமல் அதை நிவர்த்தி
செய்து செய்தநன்றியைநினைத்து, இவருக்கு ஆபத்து
வந்தபோது உன்னுயிரையாவதுகொடுத்து. சகலருக்கு
ம் மோக்ஷபதத்தைத் தருகின்ற இந்தராகவர் சொன்ன
துகளை யெல்லாம் தடுக்காமற்செய்து, நெடுங்கால மன
வும் ஒழியாத ஜெனனத்தை ஒழித்துவிடு. ராஜ்யத்தின்
பெருக்கத்தினால் களிப்படைந்து மறந்து இகழ்ச்சிசெய்
யாமல், இவருடைய திருவடித்தாமரையை நீங்காதுவா
ழக்கடவாய். ராஜாக்களும் எரிகின்றநெருப்புஞ் சரியெ
ன்றுநினை. அடிமைகள் செய்தகுற்றம் அற்பமானாலும்
பொறுப்பார்களென்று நினைக்க வேண்டாம். அரசா
லும் அணுகாமலுமிருந்து நிற்காய்கின்றவர்களைப்போல
ப் பக்குவமாக நடந்துகொள்ளென்று, இவ்விதமாயுப
தேசங்களையெல்லாங்கொண்டு தம்பிக்குப் புத்திசொல்லி,
ஸ்ரீராமரைப்பார்த்து ஐயா தாசரதி! இந்தச்சுக்கிரீபனு
ம் இவன் சுற்றத்தாரும் இன்றுமுதல் உம்முடைய அ
டைக்கலமென்று, அவனைச் சுவாமிகையில் ஒப்புவித்
துத் தன்கையைச் சிரசின்மேற்கூப்பி அஞ்சலிசெய்து,
உடனே தன்தம்பி முகத்தைப்பார்த்து உன் புத்திரனாகி
ய அங்கதனைச் சீக்கிரத்தில் அழைப்பியென்று சொல்ல,
அவனிருக்குமிடத்தில் சுக்கிரீபன் ஒருவானரப்படைத்
தலைவனை அனுப்பினான். அந்தக்ஷணமே வாலிகுமாரனா
னவன் பாலசந்திரனைப்போல வந்தான். துக்கப்படுகிற
வர்களைக் கருத்திலும் நினைத்தறியாத அந்த அங்கதன்வ
ந்து, பர்வதத்தின்மேல் புஷ்பசயனத்தில் சயனிக்காம
ல் ரத்தசமுத்திரத்திலே ஆபத்துடனே சாய்ந்துகிடக்கி
ன்ற தகப்பனைக்கண்டான். கானவே கண்கள் கானுறு
போல உதிரத்தையும் ஜலத்தையுங்கக்க, தன்மண்டலத்
துடனே பூமியில்விழுந்து கிடக்கின்றசந்திரன்மேல், ஆ
காசத்திலிருந்து ஒருநக்ஷத்திரம்விழுந்ததுபோல, மண்
ணின்மேற்புரள்கின்ற தந்தையின்மேல் விழுந்து பிரலா
பிக்கத்தொடங்கினான்.

கவி.

எந்தையேயெந்தையேயிவ் வெழுநிலைவாகத்தியார்
க்கும், சிந்தையாற்செய்கையாலோர் தீவினைசெய்திலா
தாய், நொந்தனையதுதானிற்கநின்முகநோக்கிக்கூற்றம்,
வந்ததேயன்றோவஞ்சாதாரதன்வலியைத்திரப்பார். (க)
தறையடித்துப்போற்றிராத்தகையவித்திசைசூடாங்கும்*
கறையடிக்கிழிவுகண்டசண்டகனெஞ்சமுன்றன்........*
கிறையடிக்கோலவாலிதிலைமையினைபுந்தோறும்...*
பறையடிக்கின்றவந்தப்பயமறப்பறந்தன்றே.......(உ)
குலவரைகேமிக்குன்றென்றுவானுயர்ந்தகோட்டின்..*
தலைகளுநின்பொறுத்தித் தழும்பிளித்தவிர்ந்தவன்றே..*
மலைகளுமாவுமற்றுமுகியமுமபலவுந்தாங்கி............*
அலைகடற்கடையதேய்ந்திரிகிகடைவரையா...(ஈ)
பந்தின்மெல்லடியாள்பங்கன்பதயுகமலதியாதும்.......*
அஞ்சலித்தறியாச்செங்கையானையாயமரியாரும்.....*
எஞ்சலிருந்தாருள்முன்னமிர்திந்தீயோ ...........*
துஞ்சினைவன்றிபோர்களின்வில்யார்சொலற்பாலார்.

என்பன—ஐயனே! என்னையனே! நீர் இந்தஏழுகட
லுஞ்சூழ்ந்த உலகத்தில் ஒருவருக்குமொருதீங்காகிலுஞ்செ
ய்ததுமில்லை. அதை மனதில் நினைத்ததுமில்லை. அப்படி
யிருக்க என்னகாரணத்தினால் இந்தஆபத்தை அடைந்தீ
ர். அதுஇருக்கட்டும். கூற்றுவன் உம்முடைய முகத்தை
ப்பார்த்துப் பயப்படாமல் வந்தானல்லவா! அவனுடை
ய ஆண்மையை [illegible] ஆர்தான் அடக்குவார்கள். திக்குக
களைத் தாங்குகின்ற அஷ்டதிக்கஜங்களை ஜெயித்து அதுக
ளின்தந்தங்களை முறித்த ராவணனுடைய மனமானது,
உம்முடைய வாலினிடத்தும்போதெல்லாந் திடுக்கிடச்
செய்துகொண்டிருந்த அந்தப்பயமும்பறந்ததே! மந்த
ரகிரியையும் வாசுகியென்னும்பாம்பையும் சந்திரனையும்
மற்றதுகளையுந்தாங்கி இன்னம் ஒருதரஞ்சமுத்திரத்தை
க்கடைந்து, அமிர்தங்கொடுக்கவேண்டுமென்று தேவர்
கள்கேட்டால் ஆர்கடைந்துகொடுப்பார்கள்? பார்வதிச
மேதனாகிய சிவனுடைய உபயபாதத்தை யல்லாமல், ம
ற்றொன்றையும் அஞ்சலிசெய்தறியாத கையில் அக்ஷயாச
க்கரத்தையுடைய உம்மால் தேவர்களெல்லாம் இறவாம
லிருக்க. அவர்களுக்கு அமிர்தங்கடைந்துகொடுத்த! நீ

ரோ இறந்துபோனீர். உமக்குச் சமானமாகச் சொல்லத்தக்கவர்கள் ஆரிருக்கிறார்களென்று பலபல்விதமாகச் சொல்லித் துக்கப்படுகின்ற புத்திரனைப்பார்த்து, வாலி! சரீரம்வெதும்பி அக்கினியைச்சேர்ந்த மெழுகுபோலமனமுருகி, அட அப்பனே என்கண்மணியாகிய அங்கதா இனி நீ துயரப்படாதேயென்று சொல்லி அவனைத் தன்மார்பு இறுகத்தழுவிக்கொண்டு லோகநாயகராகிய ஸ்ரீராமர்செய்த நல்வினைப்பயன் இது. பிறப்பும் இறப்பும் நன்றாக நிச்சயித்துப்பார்த்தால், திரிலோகத்திலுமிருக்கின்ற சகலஜீவகோடிகளுக்கும் ஆதியிலேதானே ஏற்பாடாயிருக்கின்றதுகள். பூர்வம் நான்செய்த தபோபலத்தினால் எனக்கு இப்படிப்பட்ட நன்மரணங்கிடைத்தது. சர்வசாக்ஷியான இந்தஸ்ரீராகவர் எதிரேவந்து எனக்குமோக்ஷங்கொடுத்தார். நீ பால்யகுணத்தைவிட்டுப் பாரமார்த்திகத்தைவகித்து என்வார்த்தையை உறுதியாகப் பற்று. தனக்குமேலாகியவஸ்து வேறொன்றுமில்லாத உண்மைப்பொருளாயிருக்கின்றவரே வில்லேந்துகையிலே தாங்கிக்கொண்டு திருவடி நிலத்திலேதோயும்படி மானிடவடிவங்கொண்டுவந்து அனைவர்கண்ணுக்கும் எளிதாகப் பிரசன்னமானார். மயக்கத்தைத்தருகின்ற பிறவிப்பிணிக்குமருந்தும் இவரே யாகையால், என்புத்திர சிகாமணியான அங்கதா! நீ இவரையே சேவிக்கக்கடவாய். என்பிராணனைவதைசெய்தாரென்று கொஞ்சமாகிலும் மனதிலெண்ணாமல், உன்னுயிருக்கு உறுதியாகிய தர்மநெறியிலேநடந்துகொள். இவருக்குயுத்தம்நேரிட்டதேயாமாகில் நீயும் உபபலமாகப்போ. இவர் பெரும்பாலும் தர்மாத்துமாக்களுக்கேஉதவிசெய்வார். இவருடையபாதாரவிந்தத்தைச் சிரசிலேதாங்கிக்கொண்டு வாழ்ந்திருவென்று இவ்விதமாகிய உறுதிகளெல்லாஞ்சொல்லி, தன்னுடைய இரண்டுகைகளாலுங் குமாரனை அணைத்துக்கொண்டு, பர்வதத்தைப்பார்க்கிலும் மிகவும் உயர்ந்த பராக்கிரமமுண்டாகிய தோள்களையுடைய வானராதிபதியானவாலி, ஜகத்ரக்ஷகராகிய ஸ்ரீராமரைப் பார்த்து, பொய்மையானது குடிகொண்டிருக்கின்ற மனமுடையவர்களால் அறியப்படாதபரிசுத்தனே! இந்த அங்கதகுமாரன் கறுத்தநிறத்தையுடைய ராக்ஷதர்களென்னும் பஞ்சைத்தகிக்கின்ற நெருப்புசமானமாகிய புஜபலத்தையுடையவன். குற்றமற்ற நல்லசெய்கையுமுள்ளவன். இவன்உம்முடைய அடைக்கலமென்று காட்டிக் கொடுத்தான். அப்போது அங்கதன் சுவாமிதிருவடியைச் சேவித்துக்கொண்டான். உடனே புண்டரீகாக்ஷராகிய ஸ்ரீராகவர் அவனைச் சமீபத்தில்வாவென்று அழைத்துத் தம்முடைய உடைவாளை அவன்கையிலேகொடுத்து. நீ இதைத்தாங்கிக்கொண் டிருவென்று மிகுந்த அன்புடனே அருளிச்செய்தார். அப்படியவர்சொல்லவே, சப்த லோகத்தாரும் இந்த அங்கதகுமாரன்லோகாராத்தியனுடையகிருபைக்குப் பாத்திரமானது; என்ன ஆச்சரியமென்று, ஸ்துதிசெய்தார்கள். பின்பு வாலிஅமுக்கிப் பிடித்திருந்த ராமபாணத்தைக் கைநெகிழவிட, அந்தப்பாணமானது அவனுடையமார்பைத் துளைத்துக்கொண்டு உயர எழுந்துபோய், சுத்தோதகசமுத்திரத்தில் ஸ்நானஞ்செய்து தேவர்கள் புஷ்பமாரிபொழிய, ஸ்ரீராமருடைய பின்பக்கத்தில் நீங்காதிருக்கின்ற அம்புறாத்தூணியில்வந்து சேர்ந்தது. இந்திரகுமாரனாகிய வாலி யிறந்து தேவர்களுடைய லோகங்களையெல்லாந்தாண்டி அப்புறத்துள்ள பரமபதம்போய்ச்சேர்ந்தான். அந்தவாலிக்கு எவர்களுக்குங்கிடையாத பரமபதங்கொடுத்தருளின ஸ்ரீராமசந்திரன், சுக்கிரீபன்கையைப் பிடித்துக்கொண்டு அங்கதனுஞ் சமீபத்திலிருக்க அவ்விடத்தில் ஒருபக்கத்திலிருந்தான். அப்போது தாரை இந்தச்செய்தி கேட்டுப் பிரலாபித்துக்கொண்டுவந்து வாலியின்மேல்விழுந்து. அவனுடையரத்தமானது ஸ்தனங்களின்மேல் குங்குமம்பூசினதுபோலப் படிய, தலைமயிருஞ்சிவக்கக் கணவன்மார்பிலே புரண்டாள். அது எப்படியிருந்ததென்றால், செவ்வானத்திலே மின்னற்கொடிபிரகாசிக்கிறதுபோ லிருந்தது. பின்னும் வேனுக் குழலும் யாழும் வீணையுமென்கின்ற இதுகளெல்லாம் நாணிப்போக, ஏங்கி - இரங்கி - விம்மி - இரண்டுகைகளையுங் குவித்துத் தலைமயிர் அவிழ்ந்து-விழுந்து-சோர்ந்துசரியத் துக்கிக்கின்றாள்.

கலி.

வரைசேர்தோளிடைநாளும்வைகுவேன்.........*
கரைசேராவிடரெல்லைகண்டிலேன்.........*
உரைசேராருயிரோவென்னுள்ளமே.........*
அரைசேநானிதுகாணவஞ்சினேன்.........(௧)
துயராலேநொலையாதவென்னையும்.........*
அயராவெப்பகையோடுமன்பினேயும்.........*
செயிர்தீராய்விதியானதெய்வமே.........*
உயிர்போனாலுடலாருமுய்வரோ.........(௨)
நறுதாரல்லமிர் துன்னல்லவில்.........*
பிறியானின்னுயிர்பெற்றபெற்றிதான்.........*
அறியாரோவமரர்களன்றெனில்.........*
சிறியாரோவுபகாரஞ்சிந்தியார்.........(௩)
அணங்கார்பாகனையாசைதோறமுற.........*
துணங்காரான்மலர்தூயுள்ளினுல்.........*
இணங்காக்காலமிரண்டொடொன்றினும்.........*
வணங்காதித்துணைவைகவல்லையோ.........(௪)
அரைசேபூவணையாடைவைகுவாய்.........*
தரைமேலாவதுதன்மையேதெனக்.........*
கரையாதேனிடுபூசல்கண்டிமோன்.........*
துரையாவென்வயினாமயாவதே.........(௫)
கையாரின்றனனுளிருக்கிங்கன்.........*
மெய்யான்மங்கையர்கொங்கைமேவினாய்.........*
ஐயாநீயெனதாவியென்பதும்.........*
பொய்யோபொய்புரையாததுன்னியார்.........(௬)
செருவார்தோளநின்சிந்தையுள்ளனென்.........*
மருவார்வெஞ்சரமென்னையும்வவ்வுமால்.........*
ஒருவேனுள்ளனையாயிலுய்தியால்.........
இருவேமுள்ளிருவேமிருந்திலேம்.........(௭)
எந்தாய்நீயமிர்தியாமேலாம்.........*
உய்ந்தேமென்றபசாரமுன்னுவார்.........*



நந்தாநன்மலரோங்கிநன்பொடும்.........*
வந்தாரோவெதிர்வானுளோரெலாம்.........(௮)
ஓயாவாளியொளித்துநின்றெய்வான்.........*
ஏயாவந்தவிராமனென்றுளான்.........*
வாயாலேவினனென்னில்வாழ்வெலாம்.........*
ஈயாயோவமுதியுமினியாய்.........(௯)
சொற்றேன்முந்துறவன்னசொற்கொளாய்.........*
அற்றானன்னதுசெய்கலாவென.........*
உற்றாயும்பியையூழிகாணுநீ.........*
இற்றாயானுனையென்றுகாண்கெனே.........(௰)
நீருமேருவுநெருக்கினுல்.........*
மாறேர்வாளியுன்மார்பையீர்வதோ.........*
தேறேன்யானிதுதேவர்மாயையோ.........*
வேறோர்வாலிகொலாம்விழுந்தநீ.........(௰௧)
தகைநேர்வன்புகழ்நின்றுதம்பியார்.........*
பகைநேர்வாருளராரெனபண்பினுல்.........*
உகநேர்சிந்தியுலந்தழிந்ததால்.........*
மகனைக்கண்டனைபோகம்வாழ்வெலாம்.........(௰௨)
அருமந்தற்றமதற்றுமெல்லியார்.........*
ஒருமைக்குக்குமடாததன்னினேர்.........*
தருமம்பற்றியுதக்கவர்க்கெலாம்.........*
கருமங்கட்டளையென்னைவிட்டதோ.........(௰௩)

என்பதனால்—என்னுயிரே! என்னுள்ளமே! என்னரசே! மலைக்குச் சமானமாகிய உம்முடைய தோளினிடத்தில் எந்நாளும் வாழ்ந்திருந்தநான் இப்பொழுது துயரக்கடலில் விழுந்து கரைகாணாம லிருக்கிறதுமல்லாமல் உமக்குச்சம்பவித்த அபாயத்தைப்பார்க்கவும் பயப்படுகிறேன். பகையில்லாத அன்பானவரே! துக்கத்திலேயிறவாமலிருக்கின்ற என்னையும் மறக்கமாட்டீரோ! ஆ! விதியே! உயிர்போனால் உடல்மாத்திரம் பிழைத்திருக்குமோ! என்னையுங்கொன்று இந்தக் குற்றத்தையுந் தீர்த்துவிடு. என்நாயகரானவர் திவ்வியபரிமளத்தையுடையதாகிய நல்ல அமிர்தத்தைத் தேவர்களுண்ணும்படி கொடுத்தபடியினாலே அவர்கள் இறவாமல் சாசுவதமாயிருக்கின்ற உம்மை அடைக்கலந்தன்மையை அந்தத்தேவர்களில் ஒருவராகிய நமனுர்தாமறியாரோ! அறிந்தாராகில் உபகாரத்தை நினையாதிருப்பாரோ! அல்லது அவரொன்ன சிறியவரோ! ராஜாவே! பார்வதிபாகனைத் திக்குகள்தோறும்போய்ப் புதிதாகிய மலரைக்கொண்டு உள்ளன்புடனே திரிகாலமும் பூஜித்துவணங்குகின்ற நீர் இந்நேரவரையில் தம்மாவிருப்பீரோ! புஷ்பசயனத்தில் சயனிக்கின்ற நீர் மண்ணின்மேற் கிடக்கிறதைக் கண்டு மனங்கரையாத நான் அழுகுரலைக்கேட்டும் வாய்திறந்து ஒரு உத்தரமும் சொல்லாமலிருக்கின்றீரோ! என்னிடத்தில் என்னகுற்றந்தான் நேரிட்டதோ! நானிப்படியிருந்து வருத்தப்பட நீர் சொர்க்கத்திற்போய் ரம்பாஸ்திரீகளுடைய ஸ்தனத்தைத்தழுவுகின்றீரோ! தேவரீர் என்பிராணனென்பதும் பொய்யோ! பொய்பேசாத புண்ணியபுருஷரே! மற்போர்செய்கின்ற புஜபராக்கிரமத்தையுடையவரே! உம்முடைய மனதில் அடியேனிருந்தாலும் சத்துருவிட்ட பாணமானது உம்மைக் கொன்றதுபோல என்னையுங்கொல்லும். அல்லது என்மனதில் நீரிருந்தாலும் அந்தப்பாணத்திற்குத்தப்பி என்னைப்போலப் பிழைத்திருப்பீர். நாமிருவரும் இருவர் மனதிலும் இராமற்போனோமே! சொர்க்கத்தில் தேவர்களெல்லாம் உம்மைக்கண்டு எங்களையனே! நீர் அமிர்தம் கடைந்து கொடுக்க அதை உண்டு நாங்களெல்லாம் பிழைத்திருக்கிறோமென்று நன்றிமறவாதவர்களாய்ப் புஷ்பகந்தமுதலானதுகளை ஏந்திவந்து இஷ்டத்துடனே உம்மை எதிர்கொண்டழைத்துப் போனார்களோ! வேகமுண்டாகிய பாணத்தை ஒளித்திருந்து எய்யும்படி உடன்பட்டுவந்த ஸ்ரீராமரென்பவர் வாயினால் ஒருசொற்சொல்வாராகில் தம்பியாருக்கு உம்முடைய வாழ்வெல்லாங்கொடுக்கமாட்டீரோ! அந்நியர்களாகிய தேவர்களுக்கும் அமிர்தத்தைக் கொடுத்தீரே! நீர் புறப்படும்பொழுதே அப்படியும் நான் சொன்னேனே. அந்தச்சொல்லைக்கேளாமல் ஸ்ரீராமர் நல்லவராகையால் அதர்மஞ் செய்யமாட்டாரென்றுசொல்லி, ஊழிகாலபரியந்தம் இறவாதிருந்தநக்க நீர் தம்பியைக்கொல்லவந்து இறந்துபோனீரே! இனியும்முடைய திருமுகத்தை நான் எந்நாளுங்காண்பேன். நீர் நெருக்கினால் மகமேருவும் தேயப்போமே! அப்படிப்பட்ட உம்முடைய மார்பைச் சத்துருவின்பாணந் துளைக்குமா! நானிதை அறியமாட்டேன். தேவர்கள்செய்த மாயந்தானே! இப்பொழுது இறந்த நீர் வேறொருவாலிதானே! அப்பா மகனே! அங்கதா! நாள்தோறும் உங்கள்பிதாவின் தம்பியார் பெருமைபொருந்திய கீர்த்தியை வகித்திருந்து இன்று பகையாயெதிர்த்ததனால் உங்கள்பிதா மாண்டுபோக நம்முடைய வாழ்வெல்லாம் சிந்தி உலர்ந்து அழிந்து போய்விட்டது பார்த்தையா! அருமருந்துபோல அனைவருடைய ஆபத்தையும் நீக்குகின்ற ஸ்ரீராமர் என்னுடைய ஒருபுத்திரனுக்குமாத்திரம் தகாதநினைவு நினைத்தார். தர்மத்தைக் கைப்பற்றிய பெரியோர்களுக்கெல்லாம் நல்லொழுக்கம் பிரமாணமென்பதும் போய்விட்டதோவென்று இதுகளைச்சொல்லி அழுது துன்பம் அதிகரிக்கப்பட்டவளாய் ஸ்மரணையில்லாமல் மூர்ச்சித்திருந்தாள். அவ்வண்ணமிருந்ததை அநுமான்பார்த்துச் சுக்கிரீபனுடைய ஆக்ஞையினாலே அங்குவந்திருந்து தாரைக்குத் தேறுதலைச்சொல்லித்தேற்றி வானரஸ்திரீகளை கூட்டி அவள்முன்புவாழ்ந்திருந்தமாளிகையிற்போய்ச்சேரும்படி அனுப்பிவிட்டு வாலிக்கு நடக்கவேண்டிய கர்மாதிகளையெல்லாம் அங்கதகுமாரனைக்கொண்டு நடப்பித்து ஸ்ரீராமருடனே வந்துசொன்னார். அத்தருணத்தில் இருளானது வேரற்றுப்போம்படி கிரணங்களை வீசுகின்ற சூரியன் மேற்குத்திசையில் உள்ள அஸ்தமனகிரிக்குப்போய்ச்சேர்ந்தான் அந்தச் சூரியபிம்பமானது வாலிமுகத்தைப்போலச் சிவந்தது, அப்படி சூரியன்மறைந்து ராத்திரிகாலமாகவே ரகுநந்தனர் சீதையை நினைத்துமனது இளைத்துத் துயரப்பட்டு அந்த ராத்திரியென்கின்ற சமுத்திரத்தைக்கடந்தார். சூரியன் தன்னுடையகுமா

ரனாகிய சுக்கிரீபன் மகுடந்தாங்கும்படி யிருப்பதனால் சந்தோஷத்துடனே அதிசீக்கிரமாய்வந்து லக்ஷுமி வாசஞ்செய்கின்ற தாமரையென்னும் வீடுகளின் இதழ்களென்னுங் கதவுகளை கிரண மென்னும் கைகளால் திறந்துவிட்டான்.

வாலிவதைப்படலம் - முற்றிற்று.

---

## அரசியற்படலம்.

அந்தச்சமயத்திலே ஸ்ரீராமர்நல்லவிவேகத்தையுடைய தம்பியைநோக்கி அப்பா! நீபோய்ச் சுக்கிரீபனுக்குப் பட்டாபிஷேகத்துக்கேற்ற பிரயத்தினங்களைச் செய்து, உன்கையினாலே மகுடஞ்சூட்டிவாவென்று ஆக்கியாபித்தார். அப்படியே செய்கிறேனென்று லக்ஷுமணர் அநுமானை அழைத்துப் பட்டாபிஷேகத்துக்கு வேண்டிய சாமக்கிரியைகளையெல்லாம் சேகரிக்கச்சொல்லிக்கட்டளையிட்டார். அந்த அநுமானானவர் தீர்த்தமுதலானதுகளும், கிரீடம், குண்டலம், புஜகிருதி, வாகுவலயம், மதாரணிமுதலான ஆபரணாதிகளும், மற்றும் வேண்டிய சகலபதார்த்தங்களுங் கொண்டுவந்தார். லக்ஷுமணர்போயிருந்து சாஸ்திரவிதிப்படி முன்பு நடக்கவேண்டியதுகளெல்லாம் நடப்பித்து பின்பு பிராமணர்கள் ஆசீர்வாதஞ்செய்யத் தேவர்கள் புஷ்பமாரிபொழியப் பெரியோர்களெல்லாருங் கண்களிக்கச் சுக்கிரீபனுக்குத் திருமுடிசூட்டினார். அந்தப்படி மகாசம்பிரமத்துடனே பட்டாபிஷேகமானாய்ச் சுக்கிரீபன்வந்து ஸ்ரீராமரைச்சேவித்துக்கொண்டான். அவர் அன்புடனே மார்பில் தழுவிக்கொண்டு இருக்கும்படி ஆக்யாபித்து, ஒருவார்த்தை சொல்லுகிறார். அப்பா! சுக்கிரீபா! நீ இவ்விடத்திலிருந்து உன்பட்டணத்துக்குப்போய் ராஜரீகத்தைக்குறித்த காரியங்கள் ஏதேது விசாரிக்கவேணுமோ அதுகளையெல்லாம் பரிஷ்காரமாக ஆலோசித்து விசாரித்து விதிப்படிசெய்து இறந்துபோன உன்தமையன் குமாரனுடனே கூடச் சுகமாய்வாழ்ந்திரு. அப்படிவாழுமிடத்தில் சத்தியசந்தரும் விவேகிகளுமாகிய மந்திரிமார்களுடனும்சேனைபதிகளுடனும்சேர்ந்து மனங்கலந்து பேசிக் குற்றமற்ற செய்கையையுடையவனாய் சகலரையும் நீங்காமலும் நெருங்காமலும் தேவர்களைப்போலத் துல்லியமாக நடந்துகொள். உலகமானது புகையுள்ள இடத்தில் நெருப்புண்டென்று நினைக்கத்தக்கதாகையால் இந்த அநுமானப்பிரமாணத்திற்கு ஒத்தபடி உன்னிடத்தில் கிருபை யுண்டென்பது தெரியப்பகையாளிகளுடனும் கடூரமானவார்த்தைசொல்லாமல் நகைமுகத்துடனே இனிய வசனங்களைச்சொல்லு பெரியோர்கள் அநுசரிக்கின்ற நற்செய்கைகளையுந்தழுவிக்கொள். தேவர்களும்மதிமயக்கங்கொள்ளத்தக்க அரசாட்சியாகிய சம்பத்தை நீ பெற்றிருக்கின்றாய். அதுமகாபிரயாசமானது. எளிதாக நினைக்கக்கூடாது. செவ்வையாய் ஆலோசித்துப்பார். முனியீஸ்வரர்களுக்கும், திரிலோகத்திலுமுள்ள எவர்களும், சிநேகர்-பகையாளர்-அந்நியரென்னும் மூன்று வகைப்பட்டிருப்பார்கள். அவர்களில் ஒருவரிடத்திலும் நீங்கு நினையானால் செய்யவேண்டியதுகளைச் செய்வதையும் நிந்திக்கும்படி அடாதகாரணங்கள் வந்தபோதும் நல்வசனங்களையே சொல்வதையும் உண்மைபேசுதலையும் தவறாமல் பாதுகாக்கவேண்டும். உருவத்தால் சிறியவர்களென்று எண்ணி எவர்களுக்குந் துன்பத்தைச்செய்யாதே நான் பால்யத்திலே ஒருதுஷ்கிர்த்தியத்தைச்செய்து அறிவுகுறுத்து வடிவுசிறுத்த கூனியினாலே அதிசீக்கிரத்தில் சகல சாம்பிராஜ்யத்தையும் இழந்து துக்கத்துக்கு ஆளானேன். ஸ்திரீகளாலே புருஷர்களுக்கு மரணமுண்டாமென்பதை உங்கள் தமயனாகிய வாலியினிடத்திற்பார்த்துக்கொள். அல்லாமலும் நாங்களும் ஸ்திரீகளாலே தானே இத்தனை அல்லலநுபவிக்கின்றோம் இதைப்பார்க்கிலும் சாக்ஷிவேறென்னவேண்டியது நம்முடைய ராஜா பெற்றதாயிலும் அதிக அன்புள்ளவனென்று பிரஜைகளெல்லாஞ் சொல்லும்படி காருண்யத்துடனே சம்ரக்ஷணைசெய். குற்றஞ்செய்தவர்களைத் தர்மந் தவறாமல் தெண்டனைசெய். இறக்கிறதும், பிறக்கிறதும் ஆலோசிக்குமிடத்தில் சகல பிராணிகளுக்கும் செய்தவினையினாலே வருகின்றதுகளல்லவோ! பிர்மாவுக்கும் அவன்செய்த நல்வினையின்முடிவே அவனுடைய ஆயுசின்முடிவாகும். சாஸ்திரக்யர்கள் செல்வமும் கேடும் அவரவர்செய்த புண்ணிய பாவங்களினாலேயே உண்டாகுகின்றதுகளென்று சொல்வார்கள். ஆகையால் பாக்கியத்தைக்கொடுக்கின்ற புண்ணியத்தையல்லாமல் நிர்ப்பாக்கியத்தைத் தருகின்றபாவத்தைக்கைப்பற்றலாமா! இப்படி இருப்பதனால் இதுகளையெல்லாம்கிரமமாகத்தேர்ந்துயுக்தாயுக்தம்பார்த்துராஜரீகஞ்செய்துகொண்டிருந்துவருகின்றமழைக்காலங்கழித்தவுடனே உன்சேனாசமுத்திரத்தைக் கூட்டிக்கொண்டு நம்மிடத்தில்வந்துசேரென்று மநுகுலத்தில் அவதரித்த ஸ்ரீராமர்சொன்னார். அந்தநீதி வார்த்தைகளையெல்லாங்கேட்டு மிகுந்த அன்புடனே சுக்கிரீபன் சொல்லுகிறான். ஸ்வாமி! நாங்களிருக்கின்ற இடம் குரங்குகளிருக்கின்ற இடமென்கின்ற சொற்குற்றம் ஒன்றேயல்லாமல் அது ஸ்வர்க்கலோகத்திற்கும் ராஜதானியைப்போல அதிக சிறப்பும், மனோகரமும் உண்டாக்கத்தக்கது. அதிலே தாங்கள் சிலநாளெழுந்தருளியிருக்கவும், நாங்கள் தங்கள் கைங்கரியத்தைச் செய்யவும் வேணும். தங்களைப்பிரிந்திருந்து என்னபாக்கியம் அநுபவித்தாலும், அவ்வறுமையை அநுபவிக்கிறதற்குச் சமானமேயல்லாமல் வேறொன்றல்ல, தங்கள் திருத்தேவியாராகிய சீதாபிராட்டியைத் தேடுகிறதற்குச் சகியமான காலபரியந்தம் தேவரீர் அவ்விடத்திலேதானே எழுந்தருளி யிருக்கவேணுமையாவென்று சாஷ்டாங்கமாகச்சேவித்தான். அந்த வசனத்தைக்கேட்டு ஸ்ரீராமர் புன்சிரிப்பாக நகைத்து தம்பி! ராஜாக்களிருக்கின்ற அரமனையில் என்னைப்போலொத்த விரதிகளிருக்கக்கூடாது அப்படியல்லவென்று வந்திருந்தாலும் உனக்கு எங்களை உபசரிக்கிறதற்கே பொழுதுசரியாய்ப்போம். அப்புறம் ராஜரீகஞ் செய்கிறதற்குச் சாவகாசப்படாது. அதுவுமல்லாமல் பதினாலுவருஷம் ஆரணியவாசஞ்செய்யவந்த



நான் வனத்தி லிருக்கலாமேயல்லாமல் ராஜாக்களிருக்கின்ற நகரத்திலிருக்கக்கூடாது. ஆகிலும் சீதையைப்பிரிந்தும் நான்வாசயோக்கியமும் சௌக்கியமுந் தேடுவேனாமா! அது நீ யறியாயோ! தேவியை ராக்ஷதன்சிறையிலேகொண்டுபோய் வைத்திருக்க, சிநேகர் வீட்டிலிருந்து ராமன் சௌக்கியம் அநுபவித்தானென்கிற வார்த்தையுண்டானால் அந்த அபவாதம் மூன்றுலோகமும் அழிகின்ற ஊழிகாலத்திலுந் தீருமா நானிப்போது இல்லறச்செய்கைக்கு அபாத்திரனானாலும் வில்லைக்கொண்டு யுத்தஞ்செய்கின்ற வீரதர்மத்தைக் கைவிட்டிருப்பதற்கு வெட்கப்படுகிறேன். சத்தியத்தைப் பாதுகாக்கிறதுமல்லாமல், அதற்கு ஒப்பாகிய மற்றுஞ் சிலதர்மத்தைச்செய்து என்னைச்சூழ்ந்த தீமைகளெல்லாம் நிவாரணமாகும்படி துறவறத்திற்குப் பழுதுவாராமல் தவஞ்செய்துகொண்டிருக்கிறேன். நீ ராஜரீகத்திற்குத் தகுதியானதுகளையெல்லாஞ் செய்து நடப்பித்திருந்து உன்னுடைய வானரசைந்யத்தையெல்லாம் சேர்த்துக்கொண்டு இந்த மாரிக்காலம் நாலுமாதமும் போனவுடனே வந்துசேர். இதைக்குறித்து உன்னைவேண்டிக் கொள்ளுகிறேனென்றுசொன்னார். சொல்லுதற்கு எளிமையாயும் அருமையாயிருக்கின்ற ஸ்ரீராமர்சொல்லவே மறுத்து ஒன்றும் பேசாமல்குறிப்பறிந்து கொண்டவனாய்க் கண்களில் கலகலவென்று நீர்பெருக சகிக்கமாட்டாத துயரத்துடனே வானராதிபதியான சுக்கிரீபன் சுவாமியைச் சேவித்துக்கொண்டுபோனான். பின்பு தம்மைச் சேவித்துக் கொண்ட அங்கதனை, ஸ்ரீராமர் கிருபையுடனே பார்த்து ஐயா! அங்கதா! நீ புத்திசாலி உனக்குச் சொல்லவேண்டியதில்லை. சுக்கிரீபனைச் சிறியதகப்பனென்று எண்ணாமல உன்னுடைய சாக்ஷாத்பிதாவாகிய வாலியாகவே எண்ணி அன்புடனே அவனிடத்தில் அநுகூலமாகவேயிரு. போய்வாவென்று அருளிச்செய்தார். அந்தவார்த்தையைச் சிரசாகவகித்துக்கொண்டு அவனும்போனான். அப்பால் அஞ்சலியஸ்தராய்நிற்கின்ற அநுமானென்பவரைப் பார்த்து அநுமானே! நீயுங்கூடப்போய்ச் சுக்கிரீபமகாராஜன்செய்யும் அரசாட்சிக்கு ஏற்றகாரியங்களென்னென்ன உண்டோ! அதுகளையெல்லாம் சாக்கிரதையாகப்பாரென்று ஆக்கியாபித்தார். அந்தவார்த்தைகேட்டு அநுமானானவர் கண்களில்ஜலம்ததும்பஸ்வாமி! நாயேன் இவ்விடத்திலிருந்து தேவரீர் ஆக்கியாபித்த அடிமைத்தொழில்களை அடியேனாலியன்ற மாத்திரம் செய்து கொண்டிருக்கிறேனென்று சொல்லி, மகத்தாகிய பக்தியுடனேசாஷ்டாங்கமாகச் சேவித்தார். அப்போது ஸ்ரீராமர் ஒருவார்த்தை சொல்லுகிறார். கேளாய் அநுமானே! ஒருவன் அரசாண்டுகொண்டிருந்த ராச்சியத்தை அபேக்ஷித்து அவனைசெயித்து மற்றொருவன் அதற்கு அதிபதியானான். ஆகையால் எத்தனையோபேர் நல்லவரு மிருப்பார்கள். எத்தனையோபேர் கெட்டவரு மிருப்பார்கள். அதுகாரியங்களெல்லாம் உன்னைப்போலொத்த சாந்தமும்- தத்துவக்கியானமுமுடையவர்க ளிருந்து செம்மைப்படுத்தினாலல்லவோ செம்மைப்படும். மந்திரிகளில்லாத ராஜரீகம்நிலைநிற்குமா! அந்தக்காரியத்தை நிர்வாகிக்கிறதற்கும், அப்பால் மாரிக்காலம் போனவுடனே நம்முடைய காரியத்தை அநுகூலஞ் செய்விக்கிறதற்கும் உன்னையொத்த பேரறிவாளர் வேறொருவரு மில்லை. ஆகையால்நீயவ்விடத்திலே போயிருந்து காரியம் பாரென்று உன்னைநானே ஆக்கியாபிக்கிறேனென்று ஸ்ரீராமர்சொல்ல, தேவரீர் ஆக்கியாபித்தபடி நடந்து கொள்ளுகிறேனென்றுசாஷ்டாங்கமாகச் சேவித்துக்கொண்டு அநுமா னென்பவரும் போனார். பின்புபரப்பிர்மவஸ்துவான ஸ்ரீராமருந்தம்பியும் கிஷ்கிந்தாபர்வதத்தைவிட்டுநீங்கி, நிசியமுக பர்வதத்தை நாடிப்போனார்கள். ஸ்ரீராமர் நியமித்தபடிபோனசுக்கிரீபன், கிஷ்கிந்தாபட்டணம்போய்த் தமயன் பெண்சாதியாகிய தாரையைச்சேவித்துக் கொண்டு, அவளைத்தாயாராகப்பாவித்து அவள்வார்த்தையைக்கைக்கொண்டு மந்திரிகள்சூழ அங்கதன்இளவரசாயிருந்து சகலகாரியமும்பார்த்துவர, ராஜரீகமாகிய சாம்பிராச்ய சுகமநுபவித்துக் கொண்டிருந்தான். ஸ்ரீராமரும் மதங்காசிரமமாகிய மேற்சொன்னபர்வதத்தில ஒருபக்கத்திலே வாசயோக்கியமான இடம்பார்த்து, லக்ஷுமணர் கட்டின பர்ணசாலையிலேதேவர்கள் ஸ்துதிக்க எழுந்தருளியிருந்தார்.

அரசியற்படலம் முற்றிற்று.

---

## சரற்கால படலம்.

மாரிக்காலத்திலேசூரியனுத்தராயனத்திலிருந்துதெக்ஷணாயனமாகத் தென்திசையில் பிரவேசித்தான். அது எப்படியிருந்ததென்றால், பிராட்டியாரைத் தேடுகிறதற்கு ஸ்ரீராமர் வடதிசையிலிருந்து, முன்னே அனுப்பப் போன தூதன்போ லிருந்தது. பூமியே அகண்டமாகவும்-சமுத்திரஜலமே நெய்யாகவும் மகமேருவே திரியாகவும்-சூரியனே விளக்காகவும்-அந்தவிளக்கிலிருந்து மையெறினதுபோல ஆகாசத்திலே மேகம்பரவியது. அப்படிப்பரவியமேகத்தினால் கடலிற்பிறந்த விஷத்தையுண்டு கறுத்த சிவனுடைய கண்டத்தைப்போல ஆகாசங்கறுத்தது. அம்மேகத்தின் குளிர்ச்சியினால் சூரியகிரணமும் உஷ்ண மடங்கிக்குளிர்ந்தது. அல்லாமலும் ஆலகாலவிஷத்தைப் போலவும் - கருங்கடலைப் போலவும் ஸ்திரீகளுடைய மையணிந்தகண்ணைப்போலவும்-அவர்கள் கூந்தலைப்போலவும்- ராக்ஷதர்களுடைய உருவத்தைப்போலவும் - அவர்கள் செய்யும் பாவத்தைப் போலவும் - நன்மைதின்மையைப்பகுத்தறியாத அவர்களுடைய நெஞ்சைப்போலவும் அம்மேகங்கறுத்தது. அந்தக் கறுத்தமேகத்தின் மத்தியில் மத்தியில் மின்னல்கள் பளபளப் பாயத்தோன்றுகின்றது. யுத்தத்திலேவாள்முதலாகிய ஆயுதங்களினாலேயானைகளின் சரீரங்கிழிந்து புண்பட்டதுபோலிருந்தது. நீலமலைகளை நிறைத்ததுபோலச் சூல்கொண்ட மேகங்கள் நெருங்கிக் குமுறு கின்றது, சமுத்திரம் ஆகாசத்தில் எதிர்முழங்குகின்றதுபோலிருந்தது கொடிமின்னல்கள் தோன்றுவது, இந்திரன் முதலான தேவர்கள் தங்களுடைய ரத்னாபரணங்களைவிரித்து உதறுகிறது போலவும் - மலையின்மேல் உலைக்களம் வைத்து எரிக்கி

றதுபோலவும் திக்குகள் சிரிக்கிறது போலவு மிருந்தது மற்றும் அம்மின்னல்கள் திசையாகிய கருமான்மேகமாகிய கரிகளேயிட்டு, கூதிர்காற்றாகிய துருத்தியைக்கொண்டு ஊதுகின்ற உலைக்களத்தின் அக்கினி ஜொலிக்கிறதை ஒத்திருந்தது. புருஷர்களைப் பிரிந்திருக்கின்ற ஸ்திரீகளும்-புற்றுக்களி லிருக்கின்றபாம்புகளும் உடலெரிந்து உயிர்நடுங்கும்படி. அஷ்டதிக்குகளிலும் மின்னல்கள் பிரகாசிக்கின்றது, சூரியகிரணங்கள் துண்டித்து விழுகிறது போலவும்-இடிகளின் நாவைப்போலவுமிருந்தது. மேலும் விஞ்சையர்கள் உறையிலிருந்து கழற்றிய உருக்கோய்ந்த வாள்கள் ஜொலிக்கிறதுபோலவும்-திக்குப்பாலகர்கள் ஏறிநடத்துந்தோறும் திக்கஜங்களின் நெற்றியிலணிந்த வீரபட்டங்கள் விளங்குகிறதுபோலவுமிருந்தது. அஷ்டமாநாகங்கள் நாவைவளைக்கிறதுபோல எங்கெங்கும் மின்னல்கள் பிரகாசிக்க, மேகம் சுவாசம் விடுகிறதுபோல, வடைக்காற்றானது விசத்தலைப்பட்டது. ஓரிடத்தில் நிலைபெற்றிராமல் பொருளுள்ள பலஇடங்களிலும் காடிப்போகின்ற வேசிகளுடைய மனதுபோல, ஆகாசமுதல் பூமிவரையிலும் நீங்காமல் மலைகளிலும்-மரங்களிலும்-மற்றுமுண்டாகிய சகலசராசரங்களிலும்மேற்சொல்லிய காற்றானது உலாவியது. நாயகர்களை நீங்கி வருந்துகின்ற நாயகிமார்களுடைய ஸ்தனங்கள்கொதிக்கும்படி அதுகளினிடத்தில் புருந்து உலாவி, அந்தஸ்தனங்களை மாம்சத்துண்ட மென்று அறிந்து விழுங்கவந்தபேய்கள்போலவாடைக்காற்று அதிகரித்தது. பூமியாகியதாயின், மலையாகிய மூலையிற் பால்சுரந்து ஒழுகுவதுபோல, அவ்வாடைக்காற்றினால் தூசுகளெழும்புகிறதினாலும், மின்னல்கள் வாள்போலப் பிரகாசிக்கிறதினாலும், மேகங்கள் பேரிகைபோல முழங்குகிறதினாலும், ஆகாசம் ரணகளம்போல விளங்கியிருந்தது. ஜானகியைப் பிரிந்திருக்கின்ற ஸ்ரீராமர்மேல்மன்மதன் புஷ்பபாணங்களை பிரயோகித்தது போல, இமய பர்வதத்தின்மேல்மேகங்கள் தாரைதாரையாக மழையைப்பொழிந்ததுகள். மேகத்தில் காண்கின்றபச்சைவில்லிலே பூட்டியெய்த அஸ்திரங்கள்போல, மழைத்துளிகள் விழுந்ததுகள். மற்றும் யானைகளின்மேல் வெள்ளி வேலையெறிகிறது போல, மலைகளின்மேல் அம்மழைத்துளிகள் விழுந்ததுகள். அந்த வேல்பட்டு மதயானைகள் புரள்கிறதுபோல, அமிதமாகிய மழையினால்மலைகளும் பிளந்து சரிந்ததுகள். இனி ஸ்ரீராமரும்வானரங்களும் கூடிவந்து ராக்ஷதர்களைச் சங்காரஞ் செய்து, நம்முடைய அயாத்தைத்தீர்ப்பார்களென்று தேவர்கள் பேசிக்கொண்டு ஆர்ப்பரித்ததுபோல மேகங்கள் மேன்மேலும் முழங்கியதுகள். அந்தத்தேவர்கள் புஷ்பமாரி பொழிந்தது போலவும் மழைபொழிந்தது பின்னும் ராவணன் பூமியுடனே பேர்த்துக் கொண்டு ஆகாசமார்க்கமாய்ப்போகிறபோது, சீதையினுடைய கண்கள் நீரைப்பொழிந்தது போலவும் மழை பொழிந்தது பொழிந்த மேகங்கள் திரும்பிப்போகிறதும். பொழியும் மேகங்கள் எதிரேவருகிறதும் வெள்ளையானையும்-கறுத்த யானையும் எதிர்த்துப் போர்செய்கிறது போலிருந்தது.

காற்றினாலேமழைத்துளிகள் பலதிசையிலுஞ் சிதறுகிறதுதிசையோடு திசை போர்செய்கிறதுபோ லிருந்தது. மேலும் வனமெல்லாம் கானாறுகள்பெருகிப்பாய்ந்ததுகள். பொருள்தேடப்போனபுருஷன்வந்து கூடியஸ்திரீகள்போல உலர்ந்துபோனவிருக்ஷங்களெல்லாம் தளிர்த்ததுகள். பாதிரிமரங்களுக்குத்தரித்திரமும்-சூரியனுக்குக்குறைச்சியும் வெண்காந்தளுக்குப் பெருமையும் பூமிக்குச்சிறுமையும்மயில்களுக்குச்சந்தோஷமும்-குயில்களுக்குத்துயரமுமுண்டாயின ஸ்திரீகளின் இடையைப்போலப்புஷ்பக்கொடிகள் துவண்டதுகள். அவர்கள்கையைப் போலக்காந்தள்க ளெங்கும் மலர்ந்ததுகள். அவர்களுடைய செம்பஞ்சூட்டிய பாதம்போலத்தாமரைகள் பிரகாசித்ததுகள் கணவர்களைப்பிரிந்துபுணர்ந்தஸ்திரீகள் புணர்ச்சிக்காலத்தில் பலதரந்தின்று உமிழ்ந்த தம்பலம்போல, சிவந்த இந்திரகோபப்பூச்சிகள் எள்ளிடுதற்கு இடமில்லாமல் பூமியில்பரவியதுகள். நித்திரைசெய்கின்றஸ்திரீகளுடைய கண்களைப்போலக் குவளைகள் குவித்ததுகள். நாயகன்வரக்கண்டு சந்தோஷிக்கின்ற நாயகியின் பற்களைப்போல முல்லைகள் அரும்புவிட்டதுகள். கூத்தாடிகள்போல மயில்கள் நடனஞ்செய்ய, பரிசுகொடுக்கின்றவள்ளல்களைப்போல மலையருவிகள் ஸ்வர்ணங்களைக்கொழித்ததுகள். விருந்தாளிகள் வரக்கண்டு மனங்குளிர்கின்ற உத்தமஸ்திரீகளின் முகம்போல விருக்ஷக்கிளைகள் தழைத்ததுகள். நீங்கள் பெண்களின் குதலைச்சொல்லையுடையவர்களாகையால் என்னை விட்டுப்போகிய சீதையாகியபெண்ணைத் தேடிக்கொண்டுவந்து கொடுங்களென்று ஸ்ரீராமர்சொல்ல தேசமெங்குந் திரிந்து தேடிக்கூவிக்குரல் அடைபட்டார்போலக் குயில்கள் கூவாதிருந்ததுகள். பார்வையினால் நமக்குத்துன்பத்தையுண்டாக்கிய சீதைக்கு மாரீசனெடுத்த நம்முடையஉருவத்தினால், சகிக்கக்கூடாத துன்பத்தை யுண்டாக்கினோமென்று மனம்களித்ததுபோல மான்கள் களித்ததுகள். மின்னுகின்ற மேகத்தின்சமீபத்தில் கொக்குகள் நெருங்கி ஒழுங்காகப் பறக்கின்றது, தெய்விகமாகிய வேதஞ்சொல்லுகின்ற லட்சுமிநாயகனாகிய ஸ்ரீமகாவிஷ்ணுவின் மார்பிலணிந்தவெண்மையாகிய உத்தரீயத்தைஒத்திருந்தது. இப்படிஅநேக அதிசயமுண்டாகிய சரற்காலத்திலே சீதையின்திருமுகத்தைக காணாதஸ்ரீராமர், ஆர்முகத்தைக்கண்டு உயிர்தரித்திருப்பார். மன்மதனாலே அறிவழிந்து அவன்பிரயோகிக்கின்ற புஷ்ப பாணமாகிய மழையைக்கண்டு அதிகவருத்த மடைந்தார். கார்காலம்வந்ததாகில் தபசிகளும் வருத்தப்படுவார்களென்றால்,தேவனைப்பார்க்கிலும், அமிர்தத்தைப்பார்க்கிலும் மிகவும்மதுரமாகிய வசனத்தையுடைய சீதையின்தோளைத் தழுவி இன்பம்அனுபவித்த ஸ்ரீராமர்வருந்துகின்றது சொல்லவேணுமோ ! பின்னும் ஸ்வாமியானவர் புலம்பித் தளர்ந்து பிராணனுஞ்சிறிதுஉண்டென்று சொல்லும்படி சோர்ந்து பிரலாபிக்கத்தலைப்பட்டார். ஓ மேகமே ! சீதையை ஒளித்துவைத்திருக்கின்ற ராக்ஷதர்கள் வாழும் ஊரையே நானறியாமல் உயிருடனே உழல்கின்றேன். நீ



தன்மையைக் கொண்டிருந்தும் என்னுயிரைக்கலக்குகின்றாயே! இது உன்தயாளகுணமாமா! மின்னலாகிய கோரப்பல்லைக்காட்டிக் கோபித்து ஆகாசமுழுமையும் கறுத்துத்தோன்றிப் பாதகர்களாகிய ராக்ஷதர்களை ஒத்திருக்கின்ற மேகமே! என்னுயிரை வாங்காமற் போகமாட்டாயோ! கொடுமையையுடைய மயிலே! நீ சீதையைக் கொண்டுவரமாட்டாய் நித்திரையில்லாத என்னுடைய பிராணசோகத்தை அறியாய். வீணாக என்னுடனே யேன் போராடுகின்றாய். மான்களே! நான் ஆசையினாலே அறிவில்லாமையாய்க் குற்றத்தைச் செய்யாதவனாயிருக்க ஜானகியானவள் என்னுயிருடனே பிரிந்துபோனதனால் இனிப்பிழைக்கமாட்டேன். அவள் எந்த இடத்தில்தா னிருக்கின்றாள் சொல்லுங்கள். என்னுயிரே! சீதையுடனே உறவு ஒழிந்தாயோ! அவள்போனவுடனே மறவாமல் நீ போகவுமில்லையே! ஐயோ! கெடுவாய் நெடுநாள் பழகியநட்பையாவது நினையாயோ! என்பிராண நாயகியை என்னைவிட்டு நீக்கத்தக்க உபாயத்தை நினைத்து முன்பு மாரீசனென்பவன் ஒருபொன்மானானான். இப்பொழுது என்னுயிரைக் கிரகிக்கும் உபாயத்தைநினைத்து எமனும் வாடைக்காற்றாக உருக்கொண்டுவந்தான். ஒருவருக்குக்கேடு நினைக்கின்ற வஞ்சர்களுக்குத் தாங்கள்வேண்டிய வடிவத்தைக் கொள்ளக் கிடைத்திருக்கின்றதல்லவா! ஆ! ஆ! மன்மதா! என்னுயிர் எரியவும், நெஞ்சு புண்ணாகவும், பாணப்பிரயோகஞ்செய்வதனால் உனக்குமகத்தாகிய கேடுவரும். என் தம்பியானவன் உன்னைக்கண்டானானால் அவனுக்கு உண்டாகுங்கோபத்தை யார்தணிக்கத்தக்கவர்களென்று இவ்விதமாகச்சொல்லி இரக்கப்படுகின்ற ரகுபதியைப்பார்த்து இளையபெருமாளானவர் கிலேசப்பட்டு ஸ்வாமி! நீர் உம்மை எத்தன்மையாக மதித்தீரென்று இரண்டு கைகளையுஞ் சிரசின்மேற் கூப்பிக்கொண்டு சேவித்துத் தேறும்படிசொல்லுகின்றார். ஐயா! காலதாமசப்படும்படி மாரிக்காலம் வந்ததென்கின்றகிலேசமோ! ராக்ஷதர்களுடைய சௌரியத்தைநினைத்து இளைத்ததன்மையோ? பிராட்டியாரைத் தேடுகிறதற்கு வானரசேனை இன்னம் வந்து சேரவில்லையென்கின்ற கவலையோ! சர்வக்கியரான தேவரீர் இப்படி தளர வேண்டிய நிமித்தமென்ன! வேதஞ்சலித்தாலும், சந்திரன்சலித்தாலும், கடல்சலித்தாலும், ஆகாசம் பூமிமுதலானதுகளுஞ் சலித்தாலும், தங்கள் திருவுளஞ் சலிக்கின்ற தல்லவே! அறிவில்லாத ராக்ஷதர்களுடைய பெருமையெல்லாம் உமக்குக்கோபமுண்டாகி உம்முடைய புருவமாகிய வில் வளைந்தால்அதோகதியாய்ப்போமே! அநுமானென்பவனுடையஅறிவும், பலமும்,அறிந்திருக்கின்றோம். இனி அங்கதகுமாரன் முதலானவர்களுடைய புஜபலம் எவ்வளவோ நாமறியவில்லை. எழுபதுவெள்ளம்வானரசேனைகளும் சாமானியமானதுகளாயிருக்குமா! மழைக்காலமுங் கழிந்துபோயிற்று இனியென்ன தடையிருக்கின்றது. உம்முடைய தேவியார் இதோவந்தார் வந்தாரென்றே உமது திருவுளத்தில் எண்ணித் துயரத்தை

விட்டுவிடும். ரிஷியீஸ்வரர்களுக்கு ராக்ஷதர்களைச் சங்கரித்து உங்களுடைய குறையைத் தீர்க்கிறோமென்று அபயஸ்தங் கொடுத்திருந்தீரே. அதுவும் விதியின் உபேக்ஷையினாலேமுடிந்தது. இனி நீர் அந்த ராக்ஷதவம்சத்தை இம்சித்துக் கீர்த்திவகித்துத் தேவர்களுக்கு உரிய பதவிகளை அவர்களுக்குக் கொடுத்தருளும். இதைவிட்டுத் தேவரீர் இவ்வண்ணமாகக் கிலேசிக்கிறது தர்மமோ! ஜெயமானது உமக்கே உண்டாகுமல்லாமல் அந்தராக்ஷதர்களுக்கு ஒருபோதும் கிடைக்கமாட்டாது சும்மாவேதனைக்கு இடங்கொடுக்கிறது வீரமல்ல வருத்தப்பட்டுக் கொண்டிருக்கிறதினால் நாள்கழிந்துபோகிறதேயல்லாமல் ஒருபிரயோசனமுமில்லை. இப்பொழுது நீர் பிரயத்தினஞ்செய்வீரோயாமாகில் ஏது உமக்குக்கிட்டாதது. ஆகையால் வருத்தப்படவேண்டாமென்று சொன்னார். அந்தவார்த்தைகேட்டுச் சிறிது சோகந்தீர்ந்து ஸ்ரீராமரிருக்க மேன்மேலும் பிணிகள் வருகிறதுபோல மறுபடியும் மழைபெய்யத் தலைப்பட்டது. குளங்களெல்லாம் நிறைந்ததுகள். சமுத்திரங்குறைந்தது. குயில்களொடுங்கியதுகள். மலைகள்குளிர்ந்ததுகள். வழிகளுந் திசைகளும் மறைந்ததுகள். பிரிந்த ஸ்திரீபுருஷர்கள் வருந்தினார்கள். அன்றிற்பேடும் சேவலும் பிரியாமற் சேர்ந்திருந்ததுகள். பெண்குரங்குகளெல்லாம் மலைமுழைகளில் உறங்கியிருந்ததுகள். ஆண்குரங்குகள் பஞ்சேந்திரியங்களை அடக்கிய யோகிகள்போலக் குளிரினால் ஒடுங்கியிருந்ததுகள். யானைகளெல்லாம் ரிஷிகள்போல நித்திரைநீங்கியிருந்ததுகள். அன்னங்கள் தாமரைப் புஷ்பங்களாகிய ஆசனங்களைவிட்டு மரப்பொந்துகளிற்போய்ப் பதுங்கியிருந்ததுகள். குறத்திகளும் குறவர்களும் சந்தனமரங்களாற் கட்டப்பட்ட பரண்மேலிருக்கும் குடிசைகளில் நித்திரைசெய்துகொண் டிருந்தார்கள். வள்ளிக்கொடிகள் சுற்றிக்கொண்டிருக்கின்ற சிறிய இலைகளையுடைய மரத்தின்கீழே கோபாலர்கள் ஆட்டுக்குட்டிகளை யணைத்து வைத்துக்கொண் டிருந்தார்கள். பேய்கள் திருடர்களைப் போல ஒளித்துக்கொண்டு பல்லைக்கடித்துப் பசியினால் வருந்தியிருந்ததுகள். சூரிய உதயாஸ்தமன மானதுதெரியவேயில்லை. இப்படிப்பட்ட தன்மையையுடையமழைநாளில் இருள்வந்தது. ஸ்ரீராமர் ஜானகியை நினைத்துக் கொண்டு லக்ஷுமணரைப்பார்த்துச் சொல்லுகிறார். ராக்ஷதர்கள் எடுத்துக்கொண்டுபோன ஜானகியும் இந்தச் சரற்காலத்தைப்பார்த்துப் பயத்துடனேவருந்துவாளே நான் ஒன்றினாலும் பிழைக்கிறதாகக்காணவில்லையே! தூணியில் அஸ்திரங்கள் நிறைந்திருக்க வச்சிரஸ்தம்பத்துக்குச்சமானமாகிய தோளுடனே நாணமில்லாமல் உயிரைவைத்துக்கொண் டிருக்கத்தகுமோ! தூக்கணாங்குருவியும் தன்கூட்டுக்குள்ளே மினமினிப்பூச்சியை விளக்காகவைத்துக்கொண்டு பெண்சாதியைப் பிரியாமலிருக்கின்றது. நான் அவ்வளவுமில்லாமல் பெண்சாதியைப்பிரிந்து மன்மதபாணத்தினால் உபத்திரவப் பட்டுக்கொண் டிருக்கிறேன். மேகம் மின்னினாலும் குமுறினாலும் பாம்பைப்போல மனது வருந்துகிறேன். ஆரணியத்திலே

வந்து நான்முடித்த காரியத்தைப்பார்த்தால் தேவர்களும் மனிதர்களும் சிறிப்பார்கள். இனி இதைப்பார்க்கிலும் வேறே அவமானம்வேணுமா! இப்படி மழைவிடாமல் பெய்துகொண்டிருக்கிறதினால் இறந்துபோகிறதே யுக்தமாகக்காண்கின்றது. இன்னமொரு ஜென்மத்திலாவது இந்தப்பழி தீர்த்துக்கொள்வேனா? அல்லது சந்நியாசம் வாங்கிக்கொண்டாவது கிலேசமொழிவேனா! இங்கிருந்து அந்த ராக்ஷதர்கள் இருக்குமிடம் அறிகிறதற்கு இன்னம் எத்தனைகாலஞ்செல்லுமோ! அதைப்பார்த்துக்கொண்டிருக்கிறதிலும் மாண்டுபோவதே நல்லது. அந்தச்சீதையின் அதராமிர்தத்தைப் பானஞ்செய்து இஷ்டமாயிருந்த நான் செம்பையுருக்கி வீசுகிறதுபோல இந்தமழைத்துளிகள் என்சரீரத்தை வெதுப்பும்படிவேகிறதா! ஜனகராஜன் அக்கினி சாக்ஷியாக இவளுன்னடைக்கலமென்று சொல்லிக்கொடுத்திருக்க, அந்தவார்த்தையை நிர்வாகஞ்செய்யமாட்டாத நான் இனிப்பூமியிலிருந்து தான் என்னசெய்கிறது. நீயொருவன் பக்கத்தில்வந்து தேற்றிக்கொண்டிருக்க அந்தவார்த்தையைக் கேட்டு நான் தேறியிருந்ததனாலே சீதைவருவாளா! இந்தத் துன்பத்தை இனிவேறே யார்தான் தீர்க்கத் தக்கவர்கள் ஒருபாணத்தைவிட்டுத் தேவலோகத்தையுஞ் சுட்டுத் தேவர்களையுங்கொன்று பூலோகத்தையும் சகலாத்துமாக்களையும் அதம்பண்ணினாலல்லாமல் சீதையைக் காணக் கூடாது தர்மமென்கின்ற ஒரு பொருளுக் கல்லவோபயந்து அப்படிசெய்யாமல் இத்தனை துயரத்துக்கு ஆளாயிருக்கிறேன். சத்துருக்களும் தேவர்களும் ஒன்றுக்கூடி எதிர்த்துவந்தாலும் பிழைத்துப் போவார்களாவென்று இவ்விதமாகஸ்ரீராமர்சொன்னதுகளையெல்லாம் கேட்டு லக்ஷ்மணர்சொல்லுகிறார்: ஸ்வாமி! மாரிக்காலமும் முடிந்துபோயிற்று. அந்தத் திருடர்களான ராக்ஷதர்களைக்காண்கின்ற காலமுஞ் சமீபித்திருக்கின்றது. நீரேன்கிலேசிக்கிறீர். எந்தக்காரியத்தையும் தகுந்த பிரயத்தினஞ்செய்தே முடிக்கவேண்டும். ஸ்ரீமகாவிஷ்ணுவும் தேவர்கள் அமிர்தந்தரவேணுமென்று கேட்டமாத்திரத்தில் கொடுக்கிறதாயிருந்தாலும் மத்தும் கயிறும், தூண்முதலானதுகளுந் தேடிவைத்துக்கொண் டல்லவோ கடலைக்கடைந்தார். பின்னும்அவர்உலகங்களையெல்லாம் நினைத்தமாத்திரத்தில் உண்டாக்கி உட்கொண்டாலும் சக்ரமுதலான ஆயுதங்களைக்கொண்டு உபாயத்துடனே போர்செய்தல்லவோ பகையாளிகளையெல்லாம் ஜெயஞ்செய்கிறார். சிவனானவர் திரிபுரதகனஞ் செய்யும்போது எண்ணிய தந்திரமும், ஏறியதேரும், எடுத்தவில்லும், தொடுத்த அம்பும் ஒருவரால் சொல்லத்தக்கதுகளோ! நமக்குத்துணைசேரத் தக்கவர்களையெல்லாஞ் சேர்த்துக்கொண்டு யுத்தத்திற்குப்போகத்தக்க காலத்திற்போய், யோசிக்க வேண்டியதுகளைப் பலமுறை செவ்வையாக யோசித்துச்செய்தால் ஜெயங்கிடைக்காமற்போமா? பாபகர்மிகளான ராக்ஷதர்கள் எப்பேர்தும்தங்களுக்கேவெற்றியுண்டாகுமென்று நிச்சயிக்கின்றவர்கள், நீதிதவறாமதில் அந்தவெற்றியுங் கீர்த்தியும் யார்பக்ஷத்தி லுண்டாகும் அது தேவரீரேசாதித்தருளுமென்றுதம்பிசொல்ல மெய்தானென்று ஸ்ரீராமர்நினைத்து இந்தமழைக்காலமும் போமாவென்று கிலேசப்படும்போது அந்தமாரிக்காலமும்போயிற்று. இல்லையென்று சொல்லாத தாதாருத்துவத்தைப் பெற்றுக்கேட்ட பொருள்களையெல்லாங்கொடுத்துவறுமையடைந்தபோது யாசகர்களுக்குக்கொடுக்கிறதற்கில்லாமையால் லச்சையடைகின்றவள்ளல்களைப்போல மேகங்கள் வெளுத்தனுகள். நல்வினையிதுவென்றும் தீவினையிதுவென்றும் ஒருவன் அறிந்துபரமாத்மாவைக் காணப்பெற்ற தத்துவஞானம்வர அவனைவிட்டுப் பிரபஞ்சமாயை நீங்குவதுபோல மாரிக்காலத்திலுண்டாகிய இருளானது நீங்கியது யுத்தம்முடிந்தவுடனே பேரிகையோசை யடங்கியதுபோல மேககர்ஜனை யடங்கியது. அப்பொழுது அஸ்திரங்கள் பிரயோகிக்கப்படாததுபோல மழைத்துளிகள் சிந்தப்பட வில்லை. வாள்கள்உறையிற்செருகப்பட்டுமறைந்ததுபோலமின்னல்களும்மறைந்ததுகள். சக்கரவர்த்தி திருமகன் வருத்தந்தீரும்படி நல்லகாலமும்பிறந்தது. மருதநிலத்தில் தாமரையிலே மறைவிலேயிருந்த நண்டுகள் லோபிகள்போல உள்ளேபுகுந்து வளையையடைத்துக்கொண்டு பதுங்கினதுகள். சங்குகளெல்லாந் தாம்பெற்ற முத்துக்களைத் தோற்கும்படி செய்கின்ற தந்தங்களையுடைய ஸ்திரீகள் முகத்தைப்பார்க்க வெட்கப்பட்டதுகள்போலத்தண்ணீரில் முழுகி ஒளித்துக் கொண்டதுகள்.

சரற்காலபடலம்-முற்றிற்று.

---

## கிஷ்கிந்தைப்படலம்.

அப்படி மழைக்காலம்போகவே ஸ்ரீராமர் தம்பியைப் பார்த்து அப்பா! லக்ஷ்மணா! அந்தச் சுக்கிரீபன் இன்னம் வரவில்லையே என்னநினைத்திருக்கிறானோ தெரியவில்லை. தனக்குப்பாக்கியம்வரவே நன்றி நினையாமல் ஒழுக்கமும் நீங்கித் தர்மமுந்தவறி அன்பையுங்கைவிட்டானும்விட்டும். நம்முடைய சாமர்த்தியமும் அறியாதவனாய்இந்தச்சொற்பவாழ்விலேமயங்கி யிருக்கிறான். இப்படிசெய்த உதவியைமறந்து அருமையாகிய சிநேகத்தை வேரறக்களைந்து சத்தியத்தையழித்துச் சொன்னசொல்தவறினவனைக் கொன்றாலுங்குற்றமில்லை. நீபோயவன் அபிப்பிராயத்தையறி. அவனுடனே நீ சொல்லத்தக்கவார்த்தையை நான்சொல்லுகிறேன்கேள் கண்டகர்களைச்சங்கரித்துத் தர்மத்தை ஸ்தாபிக்கிறதற்காகக்கையிலெடுத்தவில்லுமுண்டு உங்களுயிரை வாங்குகின்ற அம்புமுண்டு அவ்வுயிரையபகரித்துக்கொண்டுபோகின்ற எமனுமுண்டென்று என்னுடைய ஆக்கினையின்படிசொல் நன்குக்குச்சமானமானவர்களைத் துன்பப்படுத்துவது பாவமல்ல மநுநீதியாகையால் அது அவர்கள் நெஞ்சில்நன்றாயுறைத்தும்படிசெய். மேலும் நீங்கள்சொல்லிவந்த நாளுங்கழிந்துபோய்விட்டது. இப்போதாவது வாருங்கள் வராதிருந்தால் உங்கள்நகரமும் நீங்கள் ஆளும் அரசும் உங்கள்சுற்றத்தாரும் அழிய நீங்களும் இறந்துபோவீர்கள் அல்லாமலும் குரங்குக ளென்கிறபெயரும் இன்றையத்



தினத்துடனேஒழிந்துபோமென்றுஞ்சொல் அவர்கள்இந்தராமலக்ஷ்மணர்களைப்பார்க்கிலும் அதிகபலமுடையவர்களைநாம்தேடிக்கொள்வோமென்று நினைத்து வராவிட்டால், உன்னைஜெயிப்பதற்குத் திரிலோகத்திலும் வேறொருவரில்லை யென்பதாக உன் பராக்கிரமத்தை யவர்களுக்கு நன்றாகத் தெரியக்காட்டு. நீதிமுதலானதுகளையும் அவர்களுக்குச் சொல். அதற்கும் அவர்கள் பேதியாதிருந்த காலத்தில் நீகோபித்து யுத்தஞ்செய்து அவர்களை இம்சிக்காமல், அவர்கள்சொன்ன சொற்களை என்னிடத்திலே கொண்டுவந்து சொல், சீக்கிரமாய்ப்போய்வரக்கடவாயென்று புகழைப்பூஷணமாகப்பூண்ட ஸ்ரீராமர் ஆக்கியாபித்தார். அந்த ஏவலைச் சிரசாகவகித்துக்கொண்டு சாஷ்டாங்கமாகச் சேவித்து அவ்விடத்தில் சிறிதுநேரமாகிலும் தாமசமாயிராமல், முதுகில் அட்சயதூணியைக் கட்டி வில்லைக் கையிலே தாங்கிக்கொண்டு ஸ்ரீராகவருடைய இருதயத்தைச் சார்வகாலமும் நீங்காதிருக்கின்ற இளையபெருமாளானவர் புறப்பட்டு வழியிலிருக்கின்றமரங்களும் மலைகளும் பொடிகளாகச் சாதாரணமாகியவழியைவிட்டுக் குறுக்குவழியை மிதித்துப்போனார். அப்படி ஆரணியத்திலே போகின்ற லக்ஷ்மணர் மராமரங்களைத் துளைத்துக்கொண்டுபோன ஸ்ரீராமபாணம்போலவும், ஒரு திக்கெஜமானது மற்றொரு திக்கெஜத்தை அதன் காலடியை நாடித் தேடி போகிறது போலவும், அதிவேகமாகநடந்து சூரியன் உதயகிரியிலிருந்து அஸ்தமனகிரியில் தாவிப்போகிறதுபோல ஒரு பர்வதத்திலிருந்து மற்றொருபர்வதத்தைத் தாண்டிக்கொண்டு ஒருமலையிலிருந்து மற்றொருமலையிலேகுதிக்கின்ற சிங்கம்போல அதிககோபத்துடனே கிஷ்கிந்தா பர்வதத்தில்போய்ச்சேர்ந்தார். அங்கேயிருக்கின்ற வானரவீரர்கள் இவர்வருகிறவேகத்தையும் கோபாவேசத்தையுங் கண்டு பயந்து ஓடி, அங்கதகுமாரனிடத்திற்போய்ச் சுவாமி! இளையபெருமாளானவர் அதிககோபமாய் வருகிறார். ஏதாய்முடியுமோவென்றுசொன்னார்கள். அந்தவார்த்தையை வாலிபுத்திரன்கேட்டு, அவர் வந்த சமாச்சாரத்தை இன்னதென்று அறியும்படி லக்ஷ்மணரிடத்திற்போய் அவரைக்கண்டுகொள்ளாமல் தூரத்திலிருந்து அவருடைய திருவுள்ளக் கருத்தைக் குறிப்பினால் அறிந்துகொண்டு தன்பிதாவாகியசுக்கிரீபமகாராஜனுடைய அரமனைக்குப்போனான். அப்போது சுக்கிரீபமகாராஜன் எப்படியிருந்தானென்றால், ஸனைலேசெய்யப்பட்ட ரத்னகசிதமான மாளிகையில் பஞ்சசயனமெத்தையின்மேல் அநேகம் ஸ்திரீக்கூட்டங்கள் கால்களைவருட, ஸ்ரீராமலட்சுமணர்கள் உதவியசெல்வமாகிய மதுவினாலே மிகவுஞ் செருக்குற்றவனாய், ஒருபொன்மலையின்மேல் ஒருவெள்ளிமலை படுத்திருப்பதுபோல அகிற்காட்டிலும் சந்தனக்கட்டிலும் ஸ்திரீகளுடைய கூந்தற் காட்டிலும் தாவித்தவழ்கின்ற தென்றற்காற்றுவந்து முகத்தில் வீச, ஸ்திரீகளின் முத்துப்போலவும், முல்லையரும்புபோலவும் பிரகாசிக்கின்ற தந்தங்களினிடத்தில் ஊறுகின்ற தேனையுண்டு, அந்தத்தேனானது தனக்குப்பைத்தியத்தையும் மயக்கத்தையும் அதிகரிக்கச்செய்ய மதம்பிடித்த யானைபோலமயங்கி, சிரசிலே மகுடமும் காதிலே மகரகுண்டலமும்பிரகாசிக்கத் தன்முகம் சூரிய மண்டலம்போல ஜொலிக்கச் சயனித்துக்கொண்டிருந்தான் அந்தச் சிறியதகப்பனை அங்கதன்கண்டு வந்தனஞ்செய்து நித்திரையில் நின்றும்எழுப்பி, ஐயா! ஸ்ரீராமருக்கு இளையவர் மனதுக்குள்ளிருக்கின்றகோபத்தை அவர்திருமுகமானது வெளிப்படுத்தும்படி அதிவேகமாய் வருகிறார். உம்முடைய மனக்கருத் தென்னவென்றுகேட்க. இன்ன சொல்சொன்னானென்றுந்தெரியாமல, பாக்கியத்தின்மயக்கமும் கள்ளின்மயக்கமும்நிறைந்த சுக்கிரீபன் தன்னையும் அறியாமல், அங்கதன் முகத்தைப்பார்த்தும் பிரதியுத்தரம் ஒன்றுஞ்சொல்லாமல், மறுபடியும் அந்தப்புஷ்பமெத்தையிலேதானே படுத்துக் கொண்டான். அதுகண்டு அங்கதன் இனியென்னசெய்வோமென்று யோசனைசெய்து வெளியிலேவந்து மந்திரியாகிய அநுமானை அழைத்துக்கொண்டு சிலவானரப்படைவீரர்களுடனேயும் இந்திரனுக்குப்பேரனான அங்கதன், தாயாராகிய தாரையிடத்திற்குவந்து அவளைச்சேவித்து, லக்ஷ்மணர் அதிககோபமாய் வருகிறசெய்தியையும், சிறியதகப்பனார் மயக்கத்துடனே நித்திரையாயிருக்கிறதையுஞ்சொல்லி, மேலென்னசெய்யலாமென்றுகேட்க, அந்தத்தாரையானவள் அநுமானையுந் தன்குமாரனாகிய அங்கதனையும் பார்த்துச் செய்யப்படாத பொல்லாங்குகளைச் செய்தீர்கள். அதுகளை எளிதிலேநீக்கவும் பார்க்கிறீர்கள், நன்றிமறந்தீர்கள் சுகப்படுவீர்களா! படையைக்கூட்டிக்கொண்டு வரச்சொன்னநாளிலே அந்தவார்த்தை தவறாமற்போய்ச் சேர்ந்தாலல்லவோ! உங்களுக்குக்ஷேமமுண்டாகும்வாலியென்பவனைப்போலொத்த வீரருடைய பிராணனை எமனுங் கொள்ளைகொள்ளும்படிப்பாணப்பிரயோகஞ்செய்து சகலபாக்கியத்தையுங் கொடுத்தவரை எவ்வளவுசிரேஷ்டமாக எண்ணவேணும்! அவரிடத்திலும் அபசாரப்படலாமா! தேவர்களைப்பார்க்கிலும் சிறந்த அந்தமகாபுருஷர் தேவியைப்பிரிந்து உயிர்நீங்கினவனைப்போலத் துயரப்பட்டுக்கொண்டிருக்கின்றார். அதை நினையாமல் நீங்கள் ஸ்திரீயுடனே கூடிக்கொண்டு மதோன்மத்தமாயச் சத்தியந்தவறிப்போனீர்கள். அவர்செய்த நன்றியையும் மறந்தீர்கள். கேடுகெட்ட குரங்கின்குலத்தாரே உங்கள் தீவினை வந்து உங்களுக்குநேர்ந்தது. ஆகையால் சண்டைசெய்தீர்களானால், மாண்டு போவீர்கள். வேறேயின்னப்பிரயத்தினஞ்செய்துதான் ஆகத்தக்கதென்ன! உங்களை ஒருபொருளாகஎண்ணி, அவர்கள்சிநேகித்ததற்கு நல்ல உபகாரஞ்செய்தீர்களென்று இவ்விதமாகச்சொல்லிக்கொண்டிருக்கின்ற சமயத்திலே, லக்ஷ்மணர்வருகிறதைக்கண்ட குரங்குகள் கோட்டைவாசலைச் சாத்தித் தாள்பூட்டிப் பின்னும் மலைகளையும்-கற்களையுங்கொண்டு அடுக்கியதுகள். அதைக்கண்டு நம்மை வராமற்றாக்கிறதற்காகவா! இந்த யோசனைசெய்ததென்று நினைத்து, இளையபெருமாள்நகைத்து, தாமரைப்புஷ்பத்திற்குச்சமானமாகிய தம்முடைய பாதத்தினாலே, அந்தக் கிஷ்கிந்

தாபட்டணத்தின் கோட்டைவாசற்கதவை எட்டிஉதை
த்தார். பகவானுடைய திருவடி ஸ்பரிசமான மாத்திரத்
தில் பக்தர்களுடைய பாபங்களெல்லாம் பற்றற்றுப்போ
னதுபோல ஸ்ரீராமாநுஜருடைய பாதந்தாக்கவே கோட்
டைமதிலும்-கதவும்-வானரங்கள் அடுக்கிய மலைகளும்
இடிந்து உடைந்து நொந்து தூள்தூளாகப் பத்துயோச
னைதூரம் வெற்றவெளியாய்ப்போயிற்று. அப்படியந்தம
திலும்மலைகளும் தகர்ந்து சரிந்து விழுந்ததனால், வானர
க்கூட்டங்களெல்லாம் பயப்ராந்திகொண்டு தலையுடை
ந்து-மார்புகிழிந்து-உடல்நெரிந்து திசைகள்தோறும் ஓ
டத்தலைப்பட்டதுகள். அநேகம் உயிர்மாண்டதுகள், அ
ந்தக்குரங்குகள்பயந்து கூசல்போட்டுக்கொண்டு பலதி
சைகளிலும் ஓடிப்போனது சொல்லுகிறதற்கேஅருமை
யாயிருந்தது. மந்தரகிரியை நாட்டிக்கடைந்தபோது பா
ற்சமுத்திரம்பட்டபாடு அந்தக்கிஷ்கிந்தை அலைவுபடத்
திரம்பட்டது. அவ்விதமாக வானரங்கள் கிஷ்கிந்தாபா
லதத்தைவிட்டுக் காடுகளில்ஓடிப்போய்விடவே அந்தப்
பட்டணம் நக்ஷத்திரங்களில்லாத ஆகாசம்போ லிருந்த
து. அத்தருணத்தில் அந்நகரத்திற்குள்ளே லக்ஷ்மணர்
பிரவேசித்து வீதியில்வருகிறபோது, தாரையுடனேபே
சிக்கொண்டிருந்த அநுமானும் அங்கதனும் பார்த்து அ
திகபயம் ஜெனித்தவர்களாய் அம்மா! இதோஇளையபெ
ருமாளானவர் வந்துவிட்டாரே என்ன செய்யலாமென்
று தாரையைக்கேட்க, அந்தச்சமயத்தில் தாரை அவர்க
ளைப்பார்த்து நீங்களெல்லாரும் அப்பாலேவிலகிப்போ
ங்கள். நான்போய்க்கண்டு அவருடைய மனோபாவத்தை
அறிகிறேனென்று அநேகம்ஸ்திரீகளுடனேபுறப்பட்டா
ள். அப்படித்தான்செய்யவேண்டும் அம்மாவென்று அநு
மானென்பவருஞ்சொன்னார். அவ்வண்ணமேதாரை நட
ந்து வானரவீரர்கள் வாசஞ்செய்கின்ற ராஜவீதிகளெல்
லாந்தாண்டி சுக்கிரீபமகாராஜன் அரமனைக்குநேராகநட
க்கின்ற லக்ஷ்மணப்பெருமானுக்கு எதிரேவந்து நின்றா
ள். சிலம்புகளே பேரிசையாகமுழங்கவும், நிதம்பமாகிய
தேர்கள் சூழவும், கண்ணாகிய வேல்கூர்ம், புருவமாகிய
விற்களும்நெருங்கவும், ஸ்திரீஜெனங்கள் அநேகமாய் அ
டர்ந்துவந்தபொழுது, லக்ஷ்மணப்பெருமானுக்கு மா
றுதகோபம் முகமாறிப் போய்விட்டது. செவ்வையாய்
அவர்களைப்பார்க்கவும் அஞ்சினவராய், அலர்ந்தசெந்தா
மரைப் புஷ்பத்தைப்போலிருக்கின்ற முகத்தைச்சாய்த்
துக்கொண்டு, மாமிமார்கூட்டத்தின் நடுவேவந்தபுதும
ருமகனைப்போலச் சங்கோசமாய் நின்றார். அவ்வண்ண
ம் நின்ற வீராதிவீரரான லக்ஷ்மணரைக்கண்டு ஸ்திரீக்
கூட்டத்தின் நடுவேவந்த தாரையானவள், அஞ்சி நடுங்
கி ஒருவார்த்தைசொல்லுகிறாள். ஸ்வாமி! தேவேந்திர
ன்முதலானதேவர்களும் அநேககாலந் தவஞ் செய்தாலு
ம், அவர்களுக்கு முன்புதான் தாங்கள்வரக் கிடைக்கின்
றவர்களா! அப்படியிருக்கத் தங்களுடைய பாதாம்புஜ
ம்வருந்த எங்கள்மனைக்கு வரக்கிடைத்தது. நாங்கள் கி
ருதார்த்தர்களானோம். வாழ்ந்தோம். இருவினைகளுந்தீர்
ந்தோம். இதைப்பார்க்கிலும் எங்களுக்கு வேறென்னஉ
றுதியிருக்கின்றது! தாங்கள் அதிவேகமாய் வந்ததைப்
பார்த்துத் தங்கள் திருவுளக்கருத்துத் தெரியாததினா
லே தங்கள்சேனைகள் பயப்படுகின்றதுகள். பெரிய பெ
ருமாளுடைய பாதாரவிந்தத்தைவிட்டுப் பிரியாமலிருக்
கின்ற தேவரீர் இப்பொழுதுவந்தசமாசாரம் அருளிச்
செய்யவேணுமென்று வீணையின் இசையைப்பார்க்கிலு
ம்இனிமையான வார்த்தையையுடைய தாரை சொல்ல,
அந்தவசனத்தை லக்ஷ்மணர்கேட்டருளி அரிப்படிசொ
ன்னவர்களென்று கோபம்நீங்கிக் கிருபை பெருகத் திரு
முகத்தை ஏறெடுத்துப்பார்த்தவராய் பசுங் காலத்திலே
உதயமாகிய பூரணச்சந்திரனைப்போல அழகுஒழுகுகின்
ற வாலிபெண்சாதியின் முகத்தைநோக்கித் தம்முடைய
தாய்மாரைநினைத்து மிகவும் மனதுநைந்து கழுத்திலே
மாங்கல்யமில்லாமல் பலவித ரத்னாபரணங்களையுந் துற
ந்து ஸ்தனங்களில் குங்குமம் மஞ்சள்முதலானதுகளும்
அணியாமல், வஸ்திரத்தினால கழுத்தையும் மறைத்துப்
போர்த்துக்கொண்டிருக்கின்ற கோலத்தையுங்கண்டு, க
ண்களிலே நீர்ததும்பக்கிலேசித்து இப்படித்தானே என்
னைப்பெற்ற தாய்மாரிருவரும் இருப்பார்களென்று, ஆ
யாசத்துடனே நெஞ்சுநொந்து நெடுநேரஞ் சும்மாவிருந்
து பின்பு கேட்டவார்த்தைக்கு உத்தரஞ் சொல்லவே
ண்டுமென்று திருவுளத்திலெண்ணித் தாம்வந்தகாரியத்
தைத் தாரைக்குச்சொல்லுகிறார். கேளும்அம்மா சூரிய
[illegible] சுக்கிரீபன் ஸ்வாமியினிடத்தில் இந்தமழை
[illegible]போனவுடனே சேனையைக்கூட்டிக்கொண்டு கா
[illegible]வந்து, தேவியாரைத்தேடிப்பார்த்துக்கொண்டுவந்
து கொடுக்கிறேனென்றுசொல்லியிருந்தசொல் மறந்து
போனான். ஆகையால் ஸ்ரீராகவர் அந்தச் செய்தியை நீ
போய்ச் சீக்கிரத்தில் அறிந்து வாவென்று ஆக்யாபிக்க,
அதுநிமித்தம் நான்வந்தேன். அப்பால் அவருடையதிரு
வுள்ளம் நினைத்தபடியெல்லாம் முடிந்து விடுமென்று இ
ளைய பெருமான் சொன்னார். அந்த வார்த்தையைத் தா
ரைகேட்டு ஸ்வாமிகோபஞ்செய்யவேண்டாம். சிறியவர்
கள் தீமைகளைச்செய்தாலும் பொறுத்துக்கொள்வதற்கு
த் தாங்களே யல்லாமல் வேறேயாரிருக்கின்றார்கள் தங்க
ள் காரியத்தை மறந்துபோகவில்லை. தாங்கள் செய்தஉப
காரத்திற்குப் பிரதியுபகாரமு முண்டோ! வானரசேனை
களை அழைத்து வரும்படி உலகமெல்லாம் வெவ்வேறா
ஆயிரங்கோடி தூதர்களை அனுப்புவிக்கத் தங்கள்ஆக்கினை
யினாலே அவர்கள்போயிருக்கிறார்கள். அந்தச் சேனைகள்
வந்துசேரத்தக்ககாலஞ்சமீபித்தது அதைக்குறித்துத்தா
ன் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறான். சரணமடைந்த
வர்களுக்குச் சாக்ஷாது தாயைப் பார்க்கிலும் விசேஷ அ
ன்புடைய வர்களாயிருக்கின்ற தாங்கள் கோபத்தைத் த
ணித்துக்கொள்ளவேணும் தர்மமென்பதும் அதுதான்.
பொல்லாங்கு செய்யாமலிருந்தால் ஆர்தான் கெட்டவர்
களாவார்கள். அடைக்கலமென்று வந்தவர்களுக்கு நீங்க
ள் அபயஸ்தங் கொடுத்தமாத்திரத்திலே சம்பத்துண்டா
யிற்றேயென்று, அந்தநன்றியை நினையாமல் உங்கள்காரி
யத்தைமறந்தால் அதுவும் உங்களால்உண்டானதல்லவா



பிராட்டியார் நிமித்தம் ரணகளத்திலே மாண்டுகிடந்
தாலல்லவோ உங்களைச்சிநேகித்தசிநேகத்திற்குலப்தமா
கும். நன்மையே குடிகொண்டிருக்கின்ற நெஞ்சையுடை
ய தாங்கள் ஒழியாத கொடியபகைவனையும் ஒழித்து அர
சாண்டுகொண்டிருக்கும்படிக்குக் கடாக்ஷித்துப் பேருத
வி செய்தீர்களே. அப்படிப்பட்ட தங்களையே இகழ்கிற
தாயிருந்தால் அதுஎளிதாய்ப்போகின்றதல்ல,மறுபிறப்
பில்அடையத்தக்கநரகவாதனையை இப்பிறப்பிலேதானே
யடைந்து எழுபிறப்பின் பயனையும் இழந்துபோவார்கள்
வாலியினுடைய ஆயுசையும் ஆண்மையையும் அழித்தபா
ணம்உங்களிடத்திலிருக்கும்போது உங்களுக்குப்படைத்
துணையும் வேறேவேணுமா! உங்கள்கையிலேந்திய வில்
லைப்பார்க்கிலும் மேலாகிய துணையுமுண்டோ! தேவி
யாரைத்தேடுகிறதற்கு இவர்களைத் தேடுகிறீர்களேயல்
லாமல் வேறென்ன இருக்கின்றது! அவ்வளவு இவர்க
ளுக்குக் கிடைத்தது இவர்கள்செய்த தவமென்று எண்
ணவேண்டுமே! இப்போதும் அந்தக்காரியத்தைச் செ
வ்வையாகச்செய்து உச்சிவிக்கத்தக்கவர்கள் தங்களைச்ச
ரணடைந்த சுக்கிரீபமகாராஜா முதலானவர்களே
யென்று தாரையானவள் சொன்ன சொற்களையெல்லா
ம் சந்தோஷமாகக்கேட்டுத் தயையுண்டாக இந்தப் புண்
ணியவதி யலதர்மங்களையுங்கேட்டறிந்திருக்கின்ற நல்ல
விவேகியென்று நினைந்து இளையபெருமானானவர் மன
திலே நாணங்கொண்டுநின்றார். அதுகண்டு அநுமானெ
வர் இவருக்குக் கோபந்தணிந்தது இதுதான் [illegible]
மென்று லக்ஷ்மணருக்குச் சமீபத்திலவந்து அவருடை
ய திருவடியைவணங்குகின்றார். அந்தமாருதியின் முகத்
தைப்பார்த்து அநுமானே! சகலசாஸ்திரங்களையும்அறி
ந்தவராயிருந்து நீரும் ஸ்வாமியினுடைய ஆக்கினையைம
றந்து விட்டீரோவென்று கோபத்திலும் அன்பு வினைகி
ன்ற இராமாநுஜர்கேட்க, ஸ்வாமி கேட்டருளு மென்று
நவவியாகரணபண்டிதராகிய அநுமானென்பவர்சொல்லு
கின்றார். பெற்றதாயையும், தந்தையையும், குருவையும்,
தெய்வத்தன்மையையுடையபிராமணர்களையும்பசுக்களை
யும், சிசுக்களையும், ஸ்திரீகளையும், வதைசெய்தவர்களு
க்கும் அந்தப்பாவத்தைப் பரிகரிக்கத்தக்கஉபாயமுண்டு
அழியாத உதவியை அழித்தவர்களுக்குமாத்திரம் எந்த
க்காலத்திலானாலும் அந்தக் குற்றத்தை ஒழிக்கத்தக்க உ
பாயமுமுண்டோ! ஐயனே! உங்களுக்கும் எங்களுடை
ய வானராதிபதியான சுக்கிரீபமகாராஜாவுக்கும் சிநேக
முண்டானபோது பேசின வார்த்தைகளெல்லாம் அடி
யேன் முகாந்தரமாகவல்லவா! அதற்குப்பழுதுவருமா
னால் அப்பால் பிழைக்கத்தக்கமார்க்கம் எவர்களுக்காவ
து உண்டோ? பின்னும் அறிவுகெட்டுப்போய் விட்ட
தாகுமல்லவா! தங்கள் கிருபைக்குப் பாத்திரமான அ
டியேன் எனனவேறு? தெய்வமும், தவமும், தர்மமும் ச
கலமும் தாங்களேயென்கிறது சத்தியமாக என்மனதிலி
ருக்கின்றது அது இருக்கட்டும் மூன்றுவகைப்பட்ட உ
லகங்களையும் ரக்ஷிக்கின்ற உங்களுக்குக்கோபம் ஜெனித்
தால் நாங்கள் ஓடி ஒளிக்கத்தக்க அரணுமுண்டோ! பி
ராணனுடனேயுமிருப்போமா! சுக்கிரீபமகாராஜாவும்ம
றந்துபோகவில்லை. சேனைகளை அழைத்துவருகின்ற தூ
தர்களை வகைவகையாக எங்கெங்கும் அனுப்பி அவர்கள்
வந்து சேர்வதையே எதிர்பார்த்துக்கொண்டு தாமசப்ப
ட்டிருக்கிறார். தர்மத்தைத் துணையாகக்கொண்டிருக்கி
ன்ற உங்களிடத்தில் தாம்சொன்னசொல்லை அழித்து ந
டந்தால் அவர் உலகத்திலே பிறந்தவரேயல்ல அதுவன்
றுமாத்திரமா நரகப்பிராப்தியாவதுந்தான் தப்பிப்போ
மா! ஒருவன்செய்யாமற்செய்த உதவிக்குப் பதிலுதவி
யொன்றுமில்லையாயினும் அவனுக்கு முன்னே ரணகள
த்திலேபோய்ச்சத்துருவை மார்பிலுதைத்துக் கொல்ல
வேணும் அதுமுடியாவிட்டால் சத்துருவினாலாவதுதா
ன் உதைப்புண்டு உயிர்மாயவேணும் அப்படியுமில்லாவி
ட்டால் வேறென்ன இருக்கின்றது இனித்தேவரீர் இவ்வி
தத்தில் நிற்கின்றது காரியமல்ல சத்துருக்கள் அறிந்தா
லும் இது சிநேகமற்ற செய்கையாகக்காணும் ஆண்சிங்க
த்துக்குச் சமானமாகிய பராக்கிரமத்தையுடைய தாங்க
ள்கொடுத்த பாக்கியத்தையும் அதைய நுபவிக்கின்றதங்
கள் தமயனாராகிய சுக்கிரீபமகாராஜாவையும்வந்து பார்
க்கலாமென்று அநுமானென்பவர்சொல்ல அந்தச்சொ
ல்லைக்கேட்டு ராமாநுஜர் கோபமாறித் திருவுளமகிழ்ந்
து இவர்கள் ஸ்வாமியின் ஆக்கினையை அகங்காரத்தால்
கடக்கவேண்டுமென்று கடந்தவர்களல்ல தாங்கள் அ
டைந்த போகபாக்கியத்தில் தோய்ந்தும் தோயாதவர்க
ளாயிராமல் கேவலம் மூழ்கிவிட்டவர்களாயிருந்ததினா
லேயே கடந்தார்களென்று சிந்தித்தவராய் அநுமானைப்
பார்த்து அநுமானே! என்னெஞ்சிலிருக்கின்றதுகளை
அவ்விதம் உம்மிடத்திற் சொல்லவேண்டும் ஆகையால்
சொல்லுகிறேன். அதுகளைச்செவ்வையாய் ஆலோசித்
துப்பாருமென்று சொல்லத்தொடங்கினார். ஸ்வாமியா
னவர் பிராட்டியாரைக் குறித்துக்கொண்ட கோபமும்,
அபிமானமாகிய நெருப்பும் அவருடைய பிராணனை வ
ட்ட அதைக்கண்ட நான் சகிக்கிராமல் ராஜதர்மம் அழி
யக்கொடுமையுடனே சம்பந்தப்பட்டுப் பாவிகள்செய்கி
ன்ற துஷ்கிர்த்தியங்களைச் செய்வதற்கும் மனஞ் சம்ம
தித்தேன். பழிக்கும் அஞ்சமாட்டேன் ஆயினும் என்
கோபத்தை நானே தணித்துக்கொண்டு உயிர்தரித்திருந்
தது ஸ்வாமியினுடைய கோபத்தையுந் தணித்து அவரு
டைய துக்கத்தையும் ஆற்றித்தேற்றுகிறதிலே பலநாள்க
ழிந்துபோய் விட்டன. அல்லவென்று [illegible]
மூன்றுலோகமும் எரிந்து நீறுபோம் தேவர்களும்மா
ண்டுபோவார்கள். தர்மமும் இறந்துபோம் விதிக்கும்வி
தியாய் ஒருவராலும் விலக்ககூடாததாய்முடியும் உம்
மைக்கண்டு உம்முடைய ராஜாவைச் சிநேகித்து ஏற்
றுவந்தபோது உதவிசெய்வானென்று அவனை எ[illegible]
ப்போல எண்ணி வழியாய்வரட்டுமென்று பொறுத்துக்
கொண்டிருந்தார். இல்லாவிட்டால் தம்முடைய கயி
லிருக்கின்ற வில்லிலே ஒரு அஸ்திரத்தை அநுசந்தான
ஞ்செய்து பிராட்டியாரிருக்குமிடத்தை அறிந்துவாவெ
ன்று அபிமந்திரித்துவிட்டால் அந்தக்ஷணம் இந்த அ

ண்டமெல்லாக் தேடித்தெரிந்துவருமே அதை ஒருவரா
லேதடுக்கக்கூடுமோ ! அன்று நீங்கள்சொன்னவார்த்தை
யின்படிசெய்யாமல்காலதாமசப்படுத்திவிட்டதுஉங்களு
க்குத்தர்மமல்ல ஆயினும் நீங்கள் காலதாமசப்படுத்தின
வர்களுமல்ல அநேககாலமர்ம்மதத்து அகங்கரித்திருந்த
ராக்ஷதர்களைப் பின்னும் வாழச்செய்தீர்கள். தேவர்களு
க்கும், ரிஷியீஸ்வரர்களுக்கும், மகத்தாகியபிரயாசத்தை
க்கொடுத்துப் பாவத்தை மேன்மேலும் வளரச்செய்தீர்
கள். அல்லாமலும் கோபம்வராத சாந்தமூர்த்திக்கும்
கோபம்வரும்படிசெய்தீர்களென்று இவ்விதமாக லக்ஷ்
மணப்பெருமாள்சொல்ல அநுமானவர் நமஸ்காரஞ்
செய்து சொல்லுகிறார். வேதசாஸ்திரங்களில் பூரணபா
ண்டித்தியமுள்ள சாதுரியரோகேளுமையா! நடந்துபோ
ன காரியங்களைக்குறித்து இனித் திருவுளத்தில் எண்ண
வேண்டாம் இந்தக்காரியத்தை நாங்கள் ஏன்றுகொண்டு
அவசியம் முடிக்கிறோம் முடியாவிட்டால் இது நிமித்த
ம்இறந்தாகிலுந்தீர்வோம். இதுகளுக்கெல்லாம் அடியே
னே சாக்ஷியாயிருக்கின்றேன் தங்கள் தமயனாகிய சுக்
கிரீபமகாராஜாவினிடத்திற்கு எழுந்தருளுங்களென்று
அநுமானவர்சொல்ல அதற்கு லக்ஷ்மணப்பெருமா
ளானவர் முன்னும் நீர் சொன்னபடிதானே நடந்துவந்
தது இன்னமும் நீர் எப்படிச்சொல்லுகிறீரோ அப்படி
யே செய்யச்சம்மதித்திருக்கிறோமென்று சொல்லி அநு
மானுடனேகூடச் சுக்கிரீபனுடைய மனதையும் அறி
வோமென்று அப்பால்நடந்தார். அதுகண்டு தாரையா
னவள் வேலையொத்த கண்களையும் அல்லிமலரையொ[த்]
த சிவந்தவாயையும் வில்லையொத்த புருவத்தையும் [அ]
ன்னத்தையொத்த நடையையும், மயிலையொத்த சா[ய]லை
யும், தேர்த்தட்டையொத்த நிதம்பத்தையும், முத்தை
யொத்த தந்தங்களையும், பச்சைமூங்கிலையொத்த தோள்
களையும், குயிலையொத்த சொல்லையும், ஸ்வர்ண கலசத்
தையொத்த ஸ்தனங்களையும், மின்னலையொத்த இடை
யையும், குமிழம்பூவையொத்த மூக்கையும், மேகத்தை
யொத்த அளகத்தையு முடைய பெண்கள் கூட்டத்துட
னே தன்மாளிகையே போய்ச்சேர்ந்தாள். அப்போது
நீதிசாஸ்திரத்திலே வல்லவர்களாயிருக்கின்ற சிலமந்தி
ரிமார்களுடனேவாலிபுத்திரனாகிய அங்கதன்வந்துராமா
நுஜருடைய பாதகமலங்களைச் சேவித்துக்கொண்டு பய
ந்திருந்தான். அத்தருணத்தில் லக்ஷ்மணர் அவனைப்பா
ர்த்துஅங்கதா!சீக்கிரத்தில் உன்பிதாவினிடத்திற்போய்
நாம்வந்தசெய்தி சொல்லென்றுசொல்ல ஸ்வாமி நல்ல
து அப்படியே செய்கிறேனென்று பின்னும் அவரைத்
தொழுதுகொண்டு அங்கதகுமாரன் சுக்கிரீபமகாராஜனு
டைய கிரகத்திற்குப்போய் அவனுடைய பாதத்தைத்த
டவிப்பிடித்து அவனை நித்திரையினின்றும் எழுப்பி ஐ
யா இளையபெருமாள்வந்து இதோ நம்முடைய வாசலி
லே நிற்கிறார். அவருக்குக்கோபம் சமுத்திரத்தைப்பா
ர்க்கிலும் அதிகமாய் மூண்டிருக்கின்றது. அது சொல்லி
முடியாது இவ்விதமாகவந்து விளைந்ததென்றுசொன்னா
ன். அந்தவார்த்தை கேட்டுச் சுக்கிரீபன் பயந்து நித்தி
ரைநீங்கி அங்கேயிருக்கின்ற ஸ்திரீக்கூட்டங்களை யெல்
லாம் அப்பாலேபோகச்சொல்லி தான் எழுந்திருந்து த
ன்னிடத்தில் முன்பு அந்த அங்கதன்வந்து சொன்ன ச
மாச்சாரம் மதுமயக்கத்தினாலே தெரியாதிருந்தவனாகை
யால் நாம்செய்தகுற்றம் ஒன்றுங்காணோமே! அப்படியி
ருக்க இளையபெருமாள் கோபஞ்செய்யவேண்டிய கார
ணமென்ன ! அப்பா ! அங்கதாவென்று சுக்கிரீபமகாரா
ஜன்கேட்க அங்கதகுமாரன்சொல்லுகிறான். இன்னதின
த்தில் வருகிறோமென்று உடன்பட்டுச் சொல்லிவந்து
அந்தநாளில் நீர்போய்ச் சேரவில்லை. போகபாக்கியத்
தை அடைந்து அதையே ஒரு ஆச்சரியமாக நினைத்துச்
செய்தநன்றி மறந்ததாகவும் அபத்தஞ்சொன்னதாகவும்
எண்ணி அவருக்குக்கோபமுண்டாயிற்று. அத்தருணத்
திலே அந்தச்செய்கையின் நயத்தை அறிந்த அநும
ன்போய்வேண்டிக்கொண்டபடியால் இன்னம் நம்முடை
யபிராணன் நிலைத்திருக்கின்றது. அவர் வந்தவேகத்தை
க்கண்டு வானரவீரர்கள் கோட்டைவாசற்கதவைச்சாத்தி
மலைகளைமேன்மேலுங்கொண்டுவந்து அடுக்கிகோபா
க்கினியானதுபொங்கியெழ அவருடனே யுத்தஞ்செய்யு
ம்படி எத்தனித்திருந்தார்கள். அதை ராமாநுஜர்கண்டு
தம்முடைய திருவடியினால் கோட்டைவாசற் கதவையு
தைத்தார். உதையாததற்கு முன்னமே அந்தவாசலுங்க
தவும் தெற்குவடக்காகிய இருபுறத்துமதிலும் இடிந்து
சிதைந்து தூள்தூளாய்ப்போயின. அதைக்கண்டவான
[illegible]ர் எத்தன்மை யானதுகளென்று நான்சொல்
[illegible]ன். பயந்துபறந்து ஓடியதுகள். அதுகள் எந்தவ
[illegible]த்திலேதான் ஓடியதுகளோ ? எந்தமலைகளிலேதான்
ஒளித்ததுகளோ! இன்னம்தெரியவில்லை இதைக்கண்டு
எங்கள்தாயார் ஸ்திரீக்கூட்டத்துடனே லக்ஷ்மணப்பெ
ருமானுக்கு எதிரேபோய்நிற்க, அவர் ஸ்திரீகளின் வடி
வத்தைப் பாராதவரானபடியினாலே மனதிலே பொங்கி
யெழுந்த கோபத்துடனே அப்புறம் அடிபெயர்த்துவை
யாமல் வருத்தமுற்று அந்த இடத்தில்தானேநின்றார் அ
ச்சமயத்தில் எங்கள் தாயானவள் அவருக்கு இனியவா
ர்த்தைகளைச்சொல்லிப் பின்பு ஸ்வாமி! எங்களிடத்திற்
குத்தாங்கள் இப்பொழுது தயவுசெய்து வந்தகாரியமெ
ன்ன அருளிச்செய்யவேண்டுமென்றாள். அவர் வந்தகா
ரியத்தைச்சொன்னார். அந்தவார்த்தைகேட்டு எங்கள்தா
யானவள் அவருடைய கோபத்தையாற்றி ஸ்வாமி இவ
ர்கள் தங்கள் ஆக்கினையைமறந்து சும்மா இருக்கவில்லை.
வானரசேனைகளைச் சீக்கிரத்தில்கொண்டுவரும்படி தூத
ர்களைப் போகவிடுத்து அதுகள்வந்து சேருகிறதைக்குறி
த்துத்தான் வழிபார்த்துக்கொண் டிருக்கிறார்களென்று
சொன்னாள். இதுகள் இவ்விடத்தில் நடந்தசெய்தியென்
று அங்கதகுமாரன் சொன்னான். அப்படி யவன்சொல்ல
க்கேட்ட சூரியகுமாரனாகிய சுக்கிரீபன் சொல்லுகிறான்.
அப்பா ! அந்தமகானுபாவர்கள் கோபித்து எதிர்த்தால்
அவர்களுக்கு எதிரே நிற்கத்தக்கவர்களியார் ! அப்படிப்
பட்ட வில்வீரர்கள் உக்கிரங் கொண்டுவந்தால் எனக்கு
வந்து சொல்லாமல் நீங்கள்தானே இப்படி யெல்லாம்



ஏன் செய்தீர்கள். நீ தெரிந்தவனா யிருக்கின்றாயே
யென்று சுக்கிரீப மகாராஜன் சொல்ல, அங்கத குமா
ரன் பின்னுஞ் சொல்லுகிறான். ஐயா ! முன்னே ஒரு
தரம்வந்து எழுப்பிச்சொன்னேன். உமக்கு மயக்கந்தெ
ளியாமையால் நீர் அதைஅறியவில்லை. அப்பால்வேறொ
ரு உபாயமில்லாததுகண்டு அநுமானுடன் சொல்லுகிற
நிமித்தமாய்ப்போனேன். இனிநீரும் க்ஷணப்பொழுதுக்
குள்ளே சீக்கிரமாய்ப்போய்க் காண்கிறதேஉத்தமமென்
றுசொன்னான், அந்தவார்த்தைகேட்டுச் சுக்கிரீபன் மன
து மிகவுந்தெளிந்து அவர்களால் நான்பெற்ற சாம்பிரா
ஜ்யத்தைப்போல மற்றொருவர் பெற் றிருப்பார்களா !
அப்படிப்பட்ட அபரிமிதமாகிய சம்பத்தை எனக்குக்
கொடுத்து ரக்ஷித்தமஹானுபாவர் படுகின்ற வருத்தத்
தையெல்லாம் கள்ளுண்டமயக்கத்தினாலே மறந்துபோ
னேன். ஆகையால், மகனே நான் அவர்களைக்காணவெட்
கப்படுகிறேன். இப்பொழுது எனக்குச்சம்பவித்ததிதை
விடப்பேதைமையான காரியம் வேறென்ன இருக்கின்ற
து ! இவள் தாயென்றும் இவள் பெண்சாதியென்றும்,
தெரியாமலிருக்குமானால் மதுவுண்பது எப்படி தர்மமா
கும் ! கொலைசெய்தல் களவுசெய்தல் பொய் பேசுதல்
கள்ளுண்டல் குருவைநிந்தித்தலாகிய இந்தப்பஞ்சபாத
கத்தில் ஒருபாதகமா மல்லவா ! அல்லாமலும் ஜெனித்
ததுமுதலாய் நாம் பிரபஞ்சமாயைக்கு உட்பட்டு மயங்
குகின்றோம். அந்தமயக்கத்தையே ஒழிக்க[illegible]த்திரா
ணியில்லாமலிருக்க, அதற்குமேல் இந்தமயக்கத்தை[யு]ம்
அடைந்தோம். விவேகத்தைப்பெற்றுத்தீவினைகளை[ஒ]
ழித்தவர்கள் ஜெனனமரணத்தைநீங்கி, முக்தி யடைவா
ர்களென்று சாபல்யமில்லாத பரமஞானிகளும் வேதமு
ஞ்சொல்லவும் அதையோசியாமல், மதுவை அறிவைக்கெ
டுக்கின்ற புழுவையெடுத்து எறிந்துவிட்டு மனங் கூசாம
ல் குடித்துஉழல்கின்றது எப்படியிருக்கின்ற தென்றால்,
வீடுபற்றிக்கொண்டு எரியும்போது அந்தநெருப்பைநெ
ய்யினால் அவிக்கிறதுபோலிருக்கின்றது. ஜீவாத்மநிலை இ
ப்படிப்பட்டதென்றும் பரமாத்மநிலை இப்படிப்பட்டதெ
ன்றும் ஒருவன் அறிந்தால்தான் அவனுடையபிறவித்த
டுமாற்றம்போமென்று, வேதங்களும் மற்ற சாஸ்திரங்க
ளும் சொல்லுகின்றதுகளே அப்படியிருக்க, முதல்தன்
னிலையே அறியாதவனாய் ஜெனனவியாதியில் அழுந்தி
யிருக்கிறவன் அதன்மேலுங்கள்ளுண்டு மயங்குகின்றம
யக்கத்தையா பெருகின்றது. அஞ்சி அபயமென்று அ
டைந்தவர்களை ரக்ஷித்தவர்களும் பிரமக்கியானிகளும் சு
கதுக்கங்களை ஒழித்த ரிஷீஸ்வரர்களும் மோக்ஷமடைந்
தார்களல்லாமல், ஒளித்திருந்து மதுவையுண்டு உலகத்
தாரெல்லாம் அறிந்து நகைக்க அங்கும் இங்கும் ஒடிக்க
ளித்தவர்களில், ஒருவராவது மோக்ஷமடைந்ததைக் க
ண்டதுண்டா ! சத்துருக்களை ஜெயித்ததையும் நேகர்
கள்செய்த உதவியையும் தாங்கள் கற்றகல்வியையும் பி
ரத்தியக்ஷமாகக்கண்ட அநுபவங்களையும் சாஸ்திரக்கிய
ர்கள் சொல்லியிருக்கின்றதையும் செல்வம்வந்து சம்ப
வித்ததையும் தரித்திரத்தினால் துன்பம்வந்ததையும் தெ
ளிவாக அறிவார்களாகில் அதைவிடஉறுதிவேறொன்று
ண்டோ ! வஞ்சனையும் களவும் பொய்யும் தெரியாமை
யும் துராசாரமும் தஞ்சமென்றவர்களை ரக்ஷியாமல் நீக்
கிவிடுகின்றதும் இதுமாப்பும், கள்ளுண்டு மயங்குகின்ற
வர்களுக்குஉண்டாகும் லக்ஷ்மிகடாக்ஷமும்மாறிப்போ
ம். விஷமானாலும் கொல்லுமேயல்லாமல்மதுவைப்போ
ல நரகத்தைத்தரமாட்டாது. மதுவினாலே கேடுவருமெ
ன்று நான் கேள்விப்பட்டேன். குடித்தபின்பு அந்தச்
சொல்லின்பிரயோசனத்தையும் அநுபவமாகக் கண்டே
ன். அந்தமட்டில் அநுமானனவன் நீதியையுடைய கல்
வியினாலல்லவா மதுவைக்குடியாமல் விலக்கியது. இனி
ச்சொல்லுகின்றது என்ன ! அதிசீக்கிரமாய் வந்தவீரா
திவீராகிய லக்ஷ்மணர் மிகவும் கோபிப்பாராகில் நா
னும் என்படைத்தலைவர்களும் மற்றும் என்குலத்தாரெ
ல்லாரும் இன்றே இறப்பதற்குச் சந்தேகமெவ்வளவுமி
ல்லை. அப்பா அங்கதா நான் இந்தக் கள்ளினாலாகிய பெ
ருங்கேட்டைக்குறித்து நெஞ்சம்திடுக்குற்றுப் பயப்படு
கிறேன், ஆகையால், அதைக் கையினாலே தொடவுங் கூ
டாது மனதில்நினைக்கிறதும் யுக்தமல்லவென்று பலவா
றாக எடுத்துச்சொல்லி மற்றும் இனியந்தக்கொடிதாகிய
மதுவையிச்சித்தேனேயாகில், லோகாராட்டியனாகிய ஸ்ரீ
ராமச்சந்திரனுடைய திருவடிக்கு அபசாரப் பட்டவனா
வேனென்று பிரதிக்கினைசெய்து, இளையபெருமாளைஎதி
ர்கொண்டுபோய்க் காண்பதற்குரிய சத்திரம் சாமரமுத
லாகிய பரிட்டமனைகளையுங்கொண்டு, இன்னமும் நீயே
போய்க்காணென்று அங்கதனை அனுப்பிவிட்டு, தன்னு
டைய பட்டமகிஷிகளும் மற்றப்பரிசனங்களும் தன்னை
ச்சூழும்படி தான்வந்து ராஜஅரமனையின் தலைவாசலில்
நின்றுகொண்டு லக்ஷ்மணர்வரவை எதிர்பார்த்திருந்தா
ன். இவனிப்படியிருக்க இளையபெருமாள் வருவதைக்கு
றித்து முன்னதாக வீதியினிடமெல்லாம், சந்தனமும்பு
ஷ்பமும் வாசனைப்பொடிகளும் அகிற்புகையும் பூரணக
லசங்களும் தீபார்த்திகளும் முத்துவிதானங்களும் மகர
தோரணங்களும் மயிற்பிச்சங்களும் துஜங்களும் சங்கு
முதலாகிய பலவாத்தியங்களும் மங்கலபேரியும் நிறைந்
ததுகள். துல்யமாகிய பளிங்குக்கற்களாற்செய்யப்பட்ட
சுவர்த்தலங்களிலும் சிரேஷ்டமாகிய வச்சிரத்தூண்களி
லும் இளையபெருமானுடைய திருமேனியின்சாயைபோ
ய்ப் பிரதிபலித்ததனால் பார்த்தவர்களெல்லாம் சந்தேகிக்
கும்படி கையில்தாங்கிய வில்லுடனே அவரைப்போல
ஆயிரம்புருஷசிரேஷ்டர்கள் அந்தநகரத்தில்வந்ததுபோ
ல அவர் வருகின்றசமயத்தில் அங்கதகுமாரன் வந்து ல
க்ஷ்மணருடைய உபயசரணங்களையும் வணங்கிக் கைகு
ப்பிக்கொண்டிருந்தான். அவனைப்பார்த்து உங்கள்ராஜா
வாகிய சுக்கிரீபன் எங்கிருக்கிறானென்று கேட்க, அவர்
தேவரீரை எதிர்கொள்ளும்படி அரமனை யாசாரவாசலி
ல் இருக்கிறாரென்று சொல்லிக்கொண் டிருக்குமளவில்
ஸ்திரிஜனங்கள் கதம்பப்பொடிகளை இறைத்து வஸ்திர
ங்களைவீசிச் சாமரைகள்போட, பூரணசந்திரனைப்போ
ல முத்துக்குடைகள்பிரகாசிக்க, ராமாநுஜருக்குமுன்பா

டி கரடிசேனைகளுடனே இடும்பனென்பவன் வந்தான். கொடிதாகிய சௌத்திரத்தையுடைய பன்னீராயிரகோடி வானரசேனைகளுடனே மலைபோலப் பருத்தகாத்திரத்தையுடையவனும்கோபத்தால் ஆலகாலவிஷம்போலவும் பிரளயகால இடிபோலவும் யாவரும் நடுங்கத் தக்கவனுமாகிய பனசனென்பவன்வந்தான். இடியோசையும் கடலோசையும் அஞ்சும்படி கெர்ஜிக்கின்ற நுகனும் அதிகவேகத்தையுடையநுகனும் பொல்லாத எமனுக்கு ஒப்பானநுகனுமாகிய பதினைந்துகோடி வானரசேனைகளுடனே நீலனென்பவன்வந்தான். முப்பதுகோடி வானரசேனைகளுடனே ததிமுகனென்பவன்வந்தான். முப்பதினாயிரங்கோடி வானரசேனைகளுடனே கவயனென்பவன்வந்தான். ஆயிரத்தறுநூறுகோடி வானர சேனைகளுடனே சாம்பனென்பவன்வந்தான். இருநூறுலக்ஷங்கோடி வானரசேனைகளுடனே துன்முகனென்பவன் வந்தான். கோடாகோடி நூறுயிரம்வானரசேனைகளுடனே துமிந்தனென்பவன்வந்தான். நூறுலக்ஷங்கோடி வானரசேனைகளுடனே மயிந்தனும், கெஜகோமுகனும் வந்தார்கள். ஒன்பதுகோடி வானரசேனைகளுடனே ரிஷபனென்பவன்வந்தான். எண்ணிறந்தகோடிக் கருமுக வானரசேனைகளுடனே தீர்க்கபாதனும், வினதனும், ரம்பனும் வந்தார்கள். பஞ்சாயுதங்களைக் கையிலேந்திய மகாவிஷ்ணுவாகிய ஸ்ரீராமனைத் தரிசிப்பதற்கு பூமிதாழவும் திக்கிடருகிறதென்றுசொல்லவும் சஞ்சரிக்கின்ற இருபத்தையாயிரகோடி வானரசேனைகளுடனே அநுமானுவர்வந்தார். தேவர்களும் எப்படிமுடியுமோவென்று பிரமிக்கவும் காலனும்மனமயக்கங் கொள்ளவும் நாறாயிரகோடி வானரசேனைகளுடனே தெய்வத்தச்சனென்கின்ற மயனுடையகுமாரனுகிய நளனென்பவன்வந்தான் ஸ்ரீராமருடைய அம்புக்கூட்டிலிருக்கின்ற பாணங்கள்போல அநேகாநேகமாகிய சங்கைகளையுடைய வானரக்கூட்டங்களுடனே குமுதனும், சங்கனும், வன்னியுமாகிய படைத்தலைவர்கள் வந்துசேர்ந்தார்கள். இப்படிப் பர்வதத்துக்கு ஒப்பாகிய ஸ்வரூபத்தையும் இடிமுழக்கமும் கடல்முழக்கமும் அஞ்சுகின்ற குரலோசையையும் கண்ணில் நெருப்பு ஜொலிக்கின்ற கோபக்குறியையும் தேவர்களும் நடுங்குகின்ற சௌரியத்தையும் சக்கரம்போலவும் காற்றைப்போலவும் திரிகின்ற அதிவேகத்தையும் கூற்றுவனிலும் அதிகமான கொடுமையையும் மிதமற்ற பராக்கிரமத்தையுமுடையதுகளாயிருக்கின்ற வானரங்களும், கருமுகவானரங்களும், செம்முக வானரங்களும், கரடிகளும்வந்து ஏகக்கூட்டமாய்க்கூடியதுகள் இந்தச்சேனைகள் விழுந்துகுளித்தால் எழுசமுத்திரமுமுருமிச்சுவறி உலர்ந்து தூளாய்ப்பறந்துபோம், இதுகள் ஒருபக்கத்தில் சாய்ந்தால் அண்டகடாகமும் மேருவும் ஒருமிக்கச்சாய்ந்துபோம். சஞ்சரித்தால் பூமியில் ஒரு எள்விழுதற்கும் இடமில்லாமற்போம், ஒவ்வொருகுரங்கு கோபித்தகாலில் சூரியனும் அக்கினியும் எரிந்துகரிந்துபோம் உன்ன-எற்பட்டால் அநேக அண்டங்களும் ஒவ்வொருவானரம் ஒவ்வொருபிடி அள்ளிக் கொள்ளுகிறதற்கேபோதாது. கண்ணினுலேபார்த்தால் அந்தத்திரிநேத்திரனுகிய ருத்திரமூர்த்தியையும்ஜெயிக்கும், ஒடிக்கவேணுமென்றால் மகாமேருபர்வதத்தையும் வேரோடே ஒடித்துவிடும் இடிக்கவேணுமென்றால் அண்டத்தின்முகட்டையும் எட்டியிடிக்கும். பிடிக்கவேணுமென்றால் காற்றினையும்கூற்றினையும் ஓடிப்பிடிக்கும் குடிக்கவேணுமென்றால் சப்தசமுத்திர ஜலத்தையும் வறளும்படி குடிக்கும் இவ்விதமாகிய சேனைகளுக்குச் சேனாநாயகர்கள் இந்தத்திசைகளைத்தாண்டி அப்பாலுங்குதிக்கத்தக்கவர்களும் தங்கள்ராஜா எதைச்சொன்னாலும் அதை அந்தக்ஷணம் முடிக்கத்தக்கவர்களுமாகிய அறுபத்தேழுகோடி வானரர்கள் அவர்கள் இந்தச்சேனைகளைக் கூட்டிக்கொண்டுவந்தார்கள், அப்படி வந்த படைத்தலைவர்கள் சப்தசமுத்திரத்திலும் அதிகமென்று சொல்லப்பட்ட வானரசேனைகளை வெளியிலேநிறுத்திவிட்டு அழைக்கவந்த தூதர்களுடனே கூடச்சுக்கிரீபமகாராஜாவினுடைய சமுகத்துக்குப்போய் ஸ்வாமிப்பிரார்த்தனைசொல்லி வணங்கினர்கள் அந்தச்சேனைகள்வந்து சேர்ந்தது கண்டு சந்தோஷமாய் அந்தக்ஷணமே சுக்கிரீபன்சக்கரவர்த்தி திருமகன் சந்நிதிக்குப்போய் ஸ்வாமி தங்களுடைய சேனைகள்வந்துசேர்ந்ததுகளென்று மிகுந்த அன்புடனேவிண்ணப்பஞ்செய்தான். அதுகண்டு ஸ்ரீராமர் ஜானகி வந்துசேர்ந்ததுபோல முகமலர்ந்து திருவுள மகிழ்ந்து அச்சேனைகளைப்பார்க்கிறநிமித்தம் அங்கேயொரு உயர்ந்தமலையின்மேலேறி அவ்விடத்திலே ... ந்தருளியிருந்தார், சூரியபுத்திரனுகிய சுக்கிரீபன்திரு... ந்தச் சேனாசமுத்திரத்தினிடத்தில் வந்து. சேனை... ... ளிலொக்கு யோசனை அகலமுடையதாய் அடங்கிவைட... இருந்து தெற்கேநடக்கும்படி திட்டஞ்செய்து, படைத்தலைவர்களைமாத்திரம் அழைத்துக்கொண்டு மறுபடியும் ஸ்ரீராமரிடத்திற்குவந்து; ஸ்வாமி சேனையைப்பார்த்தருளுமென்றுசொல்லி, வானரங்களைக் கிரமமாகத் தெரியக்காட்டிக்கொண்டிருந்தான். ஸ்ரீராமரானவர் சுக்கிரீபன்சொற்படி தம்முடைய திருக்கண்களால் நோக்கிப்பார்க்க; அந்தச்சேனைபாற்சமுத்திரமானது வழிகொண்டு நடக்கிறதுபோல நடக்கிறபோது. எட்டுத்திக்குகளையும் பூமிமுழுவதையும் தேவலோகத்தையும் சப்தசமுத்திரத்தையும் மறைத்து மேலெழுந்துபரந்த தூசுகளினலே, இந்த அண்டமானது புழுதியைவிட்டு நிறைத்துவைத்தகுடத்தை ஒத்திருந்தது சமுத்திரத்தை ஒப்பிட்டுச் சொன்னல் அதன் அளவைக்கண்டவர்களுண்டு இந்தச்சேனையினுடைய கணக்கையாருமறியமாட்டார்களாகையால் இனி அறிவுடையவர்களால்சொல்லத்தக்க உபமானம்வேறெதுதானிருக்கின்றது, இருபதுபகலும் இரவும் ஒழிவில்லாமல் பார்த்தும் ஒருவிதத்திலும் அதன்முடிவையே காணவில்லையாகையால் முடிவுமென்னவர்யும். ஸ்வர்க்கம்-மத்தியம்-பாதாளமென்கின்றமூன்றுலோகத்திலும் தமக்குத்தாமே ஒப்பல்லது வேறொருவரும் ஒப்பில்லாத ஸ்ரீராமர் அந்தச்சேனு சமுத்திரத்தைக் கண்ணினுலும், மனதினுலும், தமதுகல்வியினுலும், ஞானத்தினுலும் பார்த்துத் தம்பியைநோக்கி ஒருவார்த்தைசொல்லுகிறார். அப்பா! லக்ஷ்மணு! இந்தச்சேனையை நாமும் நம்முடைய அறிவைக்கொண்டு பார்த்தும் நடுவே சிறிது மட்டுங் கண்டோமேயல்லாமல் முடிவைக்காணுகிறதற்கு நம்மாலேயாகுமா! பூமியிலிருக்கின்ற மனுஷியர்கள் கடலைக்கண்டோமென்று சொல்லுகிறார்களேயல்லாமல் அந்தக்கடலை முழுதுங் கண்டவர்கள் ஆர்தானிருக்கிறார்கள். அதுபோல, ஜெகதீஸ்வரனுன சர்வசாக்ஷியினுடைய ஸ்வரூபத்தையும் பத்துத்திசைகளையும் இந்தவானரசேனையையும் பஞ்சபூதங்களையும் அறிவையும்பேசுகின்ற வார்த்தையையும் சர்வ... கிகளுடையவழக்கையும் ஆர்தான் முற்றும் எண்ணியறிகின்றவர்களிருக்கின்றார்கள். இந்தச்சேனையை முழுதும்பார்த்துப் பின்பு இதைக்காரியத்தைச் செய்வோமென்றால் அநேககாலங் கழிந்துபோய்விடும் ஆகையால அக்காரியத்தின்மேல்பிரவேசிக்கின்றதே உறுதியென்று ஸ்ரீராமர்சொல்ல, அவனுஞ்சேவித்து இளையபெருமாள் ஒருவார்த்தைசொல்லுகிறார். ஸ்வாமி! இந்தச்சேனுவீரர்கள் எந்த லோகங்களுக்குப்போகவேணுமென்றாலும்போவார்கள். எந்தகாரியத்தைக்குறித்துச்சொன்னாலும் அதுகளில் இவர்களுக்கு அருமையானகாரியம் ஒன்றுண்டென்று சொல்லலாமோ! தேவரீருடைய தேவியாரைத்தேடுகிறது இவர்களுக்கு மிகவும் எளிதாயிருக்கும். இந்தச்சேனையினுலே பாவமேதோற்றது. தர்மமே ஜெயித்தது. இந்த வானரசேனையை எண்ணிப்பார்க்கிறதற்கு அடிக்கடி உரையிட்டு எண்ணவேணுமே அதுஇருக்கத்தக்கான் பிரமதேவன்மற்ற ஜீவராசிகளைப் படைத்தானே! எட்டுத் திக்குகளிலும் பிராட்டியாரைச் சீக்கிரமாய்த் தேடுகிறவர்களை விடாமல் இவ்விடத்திற்சும்மாவிருந்து காலதாமசஞ்செய்யவேண்டியதென்னவென்று லக்ஷ்மணர்சொல்ல, அந்தவார்த்தைகேட்டு ஸ்ரீராமர் சுக்கிரீபனுடன் ஒருவார்த்தைசொல்லுகிறார்.

வானரத்தலைகாண் படலம்-முற்றிற்று.

## நாடவிட்ட படலம்.

ஒன்றுக்கொன்றுபேதமும் தேகாபிமானமும் - தமக்குள்மாறுபட்டு எதிர்த்துச் சண்டைசெய்கின்றசத்துருத்துவமுமில்லாமல் கிரமமாய்ப் பரவியெழுந்த இந்தச்சேனைக்கு இவ்வளவென்கின்ற ஒருதொகையு முண்டாயிருக்குமோவென்று ஸ்ரீராமர்கேட்க, சுக்கிரீபன்சொல்லுகிறான். ஸ்வாமி! ஆதிகாலத்திலே பிரமதேவன்எழுபதுவெள்ளமென்று ஒருதொகை சொல்லியிருந்ததுண்டு. அதன்பின்பு அநேகம் வானரங்கள் உற்பத்தியாயிருக்கின்றதுகள். அதுகளுக்கும் முன்னுளிலே தொகையேறமாட்டாதே. இந்தவானரசேனைக்கு அறுபத் தேழுகோடிபடைத்தலைவர்களுண்டு, அவர்களுக்கெல்லாம்நீலனென்பவன் அதிபதியாயிருக்கிறுனென்று சுக்கிரீபன் சொன்னுன். அந்தவார்த்தையை ஸ்ரீராமர்கேட்டுச் சுக்கிரீப மகாராஜனை அதிகசந்தோஷத்துடன் பார்த்தருளி அப்பா நம்மாலிருந்து பலபேச்சுகளைப்பேசுகிறதினுல் ஆக வேண்டியதென்ன இனிக்காரியத்தைப் பாரென்று ஆக்யாபித்தார். அவனும் அநுமானைப்பார்த்து அநுமனே! உம்முடைய பிதாவைப்போல திரிலோகத்திலும் புகுந்து சஞ்சரிக்கின்ற உம்முடைய அதிவேகத்தையோசியாமனும், பிராட்டியாரைத்தேடவேண்டுமென்கின்ற நினைவில்லாமலும், நீரும் இப்படிக் காலதாமசமாயிருக்கலாமா! உம்முடைய செய்கையைக்குரங்கின்செய்கையாகவா எண்ணிக்கொண்டிருக்கிறீர்! அதிசீக்கிரத்தில்புறப்பட்டு வாயுவேகமனோவேகமாய்ப்போய் லோகமாதாவிருக்குமிடத்தைப் பாதாளத்திலானுலும் பூலோகத்திலானுலும் தேடி ஆராய்ந்துபார்த்து போகபூமியாகியஸ்வர்க்கத்திலும் பிரவேசிக்கத்தக்க உம்முடைய மகா வேகத்தை இந்தசசமயத்தில் பிரத்தியக்ஷமாகக் காண்பிக்கவேண்டும் ஸ்ரீராமருடைய தேவியாரை எடுத்துக் கொண்டு போம்போது ராவணன் தென்றிசையைநோக்கிப் போனபடியினுலே, அந்தத்திசையிலேதான் அவனுடையநகரமிருக்கலாமென்று என்புத்திக்குள் தோன்றுகின்றது. அதுபற்றி அவ்விடத்திற்குப் போய்வரத்தக்கவர்கள் உமமையல்லாமல் வேறேயாரிருக்கிறார்கள். ஆகையால் அங்கதகுமாரனும் சாம்பன்முதலாகிய சிலபடைத்தலைவர்களும் இரண்டுவெள்ளம் வானர சேனைகளும் உம்முடனேகூடவரும்படி, நீரந்தத்தென்றிசைக்கு நடந்துபோம். மேற்குத்திசைக்கு விருஷபனும் வடக்குத் திசைக்குச்சதவலியும், கிழக்குத்திசைக்குவினதனும், தங்களுக்கு வேண்டிய வானரசேனைகளைக் கூட்டிக்கொண்டு நடக்கக்கடவர்கள் நீர் நான்சொன்னபடி இரண்டுவெள்ளம்வானரசேனைகளுடனே பிலயானைப் பட்டுப்போய், சுற்றித் தேடி ஒருமாதத்திற்குள்ளே வந்துசேரும். இங்கேயிருந்து புறப்பட்டால் ஆயிரம்யோசனைதூரத்திலே விந்தியகிரியிருக்கின்றது. அங்கேபோய்ச்சேர்ந்து அந்தமலையினிடத்தில்தேடிப்பார்த்து, அதைவிட்டுத் தேவர்களும் வந்து ஸ்நானஞ்செய்யத்தக்க மகத்துவத்தையுடைய, நருமதைநதியினிடத்தில் போய்ச்சேர்ந்து அங்கேதேடிப்பார்த்து, அவ்விடம்விட்டு புறப்பட்டு அப்பால் தேவரம்பைகள் ஊசலாடும்பொழுது பாடுகின்ற இசையாகிய மதுவைச்செவியாகியவாயினுலுண்டு அசுணப்பக்ஷிகள்திருத்திசெய்கின்ற ஏமகூடபர்வதம்போய்ச் சேர்ந்து அங்குந்தேடிப்பார்த்து அவ்விடத்தில் அங்கெங்கராவென்கின்றபொய்கையிருக்கின்றது. அந்தப்பொய்கையையுந்தாண்டி அப்பால பெண்ணைப்பொய்கையிலும் அதற்குள்ளபனந்தோப்பிலும் சிலநாள்தேடி, அப்புறந் சீக்கிரமாய்நடந்து விதற்பதேசம்போய்ச்சேர்ந்து அங்கிருந்துபுறப்பட்டு மத்தியிலுள்ள நாடுகளையெல்லாந் கடந்து அதிகமகிமையான தமிழையுண்டாக்கிய அகஸ்தியர் பூர்வம் வாசமாயிருந்த தண்டகாரணியம்போய்ச்சேர்ந்து அங்கேமுண்டகத்துறையென்று ஒருசோலையிருக்கின்றது அது உலகத்தாரெல்லாம் உண்டுகளிக்கும்படி பிரயோசனப்படுகின்ற தர்மாத்துமாக்களுடைய பொருளைப்போல அநேகமாகிய சகலவஸ்துக்களையும் கொடுக்கத்தக்கது. அந்தச்சோலையிலே சுந்தரமானஸ்திரீகளுடைய

மதுரமாகிய அதரம்போல இனிமையாகிய கனிகள் எக்
காலத்திலும் உண்டாயிருக்கும் அவ்வனத்திலிருக்கிறவ
ர்கள் கண்ணிமைக்கிறதுமில்லை, நித்திரை செய்கிறது
மில்லை. அந்தப்பூமியிலே சூரியனுக்கு உத்தராயணமுந்
தெக்ஷணாயனமுமில்லை, அவ்விடத்தில் ஸ்திரீபோகமே
முக்கியமாயிருக்கும், அங்கேயெல்லாந் தேடிப்பார்த்து
அவ்விடம்விட்டு அப்பால் மகா உயரமாயிருக்கின்ற பா
ண்டுவென்னும் பர்வதம்போய்ச்சேர்ந்து அதன் சமீபத்
திலே முத்துக்களையும்-ஸ்வர்னங்களையும்- ரத்னங்களையு
ம்-ஆயர்கள் தயிர்கடைகின்ற மத்துக்களையும் - மரங்களை
யும்-மலைகளையும்மிருகங்களையும்புஷ்பங்களையும்இழுத்து
க்கொண்டுதேனுடனேகூடப்பெருகிவருகின்றதும்,சகல
மானவர்களுக்கும்ஸ்வர்க்கபதவியைக்கொடுக்கின்றதுமா
கியகோதாவிரிநதியிருக்கின்றது அங்கேபோய்ச்சேர்ந்து
அதைக்கடந்து தர்மமும் தயையும் போலக் குளிர்ந்து,
சூரியரஸ்மிதோன்றாமல் சோலைகள் தழைத்திருக்கின்ற
சுவணநதிக்குப்போய், அதைத்தாண்டி அப்புறம் சூரிய
காந்தம் சந்திரகாந்தமென்கின்ற மலைகளையுந் தேடிப்பா
ர்த்து அதுகளைக்கடந்து அப்பால் அநேககாடுகளையுந்தா
ண்டிப்போனால், அனந்தனெனிய நாகராஜன் கருடனுக்கு
ப்பயந்து ஒளித்துக்கொண்டிருக்கின்ற கொங்கணம்குலி
ந்தமென்கின்ற ஸ்தானங்களிருக்கின்றதுகள். அவ்விட
ங்களில்போய்ச்சேர்ந்து அங்கேதேடிப்பார்த்து, அப்பு
றம்கடந்து அரணதிகம் அரியதிகமென்றுசொல்லிக்கொ
ண்டுதிரிகின்ற மூடாத்துமாக்கள் பரகதியை அறிகின்ற
து அருமையாயிருக்கின்றதுபோல, யாவராலும் அறிகி
றதற்கு அருமையாயிருக்கின்ற மகாஉன்னதத்தையுடை
ய அருந்ததியென்னும் பர்வதத்தைக்கண்டுவணங்கி அ
ப்பால் நடந்து அஞ்சத்தக்கவெப்பத்தையுடைய பாலைநி
லங்களையும் அநேகநதிகளையும் கனைகளையும்மலைகளையும்
காடுகளையுங்கடந்துபோனால் வாசுகிமுதலாகிய சர்ப்பங்
களுக்குக் கருடன் அமிர்தங்கொடுத்த மரகதபர்வதமி
ருக்கின்றது. அதைக்கண்டுவணங்கி அப்புறம்போனால்,
சமஸ்கிருதபாஷைக்கும் தமிழாகிய திராவிடபாஷைக்கு
ம் எல்லையாகியும், சதுர்வேதங்களும் மற்றச்சாஸ்திரங்
களும்சொல்லப்பட்ட பொருள்களுக்கெல்லாம் முடிவா
கியும், நல்லதர்மத்திற்கு வாசம்பாகியும், வேறொன்றுந்
தனக்கு ஒப்பில்லாமல் பெருமைபொருந்திய மெய்ப்பொ
ருளைப்பிரகாசிக்கின்ற, ஜெயசாரதையுடையதாகியும், ஸ்வ
ர்ணமயமாகியும் ஓங்கிய திருவேங்கடமலையிருக்கின்றது.
அதிலே நல்வினை தீவினைகளாகிய இருவகைவினைகளுட
னே சம்பந்தப்பட்டிருக்கின்ற ஆசாமியகர்மங்களைச் செ
ய்யாமல், தேவர்களநுபவிக்கின்ற ஸ்வர்க்கசுகபோகபா
க்கியங்களையும் ஒருவரிடுகின்ற பிச்சைச்சோற்றை எதிர்
பார்த்துக்கொண்டிருக்கும்படிசெய்யும் தரித்திரத்தையு
ம் சமத்துவமாகப்பார்த்து, இந்தப்பிறப்பு இறப்புகளுக்
குமூலமாவது சஞ்சிதவினையேயென்று தெளிந்து, அ
தை வேரறக் களைகின்ற முடிவில்லாத மெய்ஞ்ஞானத்
தையுடைய மகாத்துமாக்கள் அங்கேயிருக்கின்றார்கள்.
அவர்கள் நாமிவ்விடத்திலிருந்தும் சேவிக்கத்தக்கமே
ன்மையை யுடையவர்கள். மற்றும் அவ்விடத்தில் அரு
சங்களெல்லாம் நீங்கும்படி பிராமணர்கள் வந்து ஸ்நா
னஞ்செய்கின்ற பொன்முகலியென்னும் நதியிருக்கின்ற
து. ரிஷியாசிரமங்களும் அநேகமாயிருக்கின்றதுகள் மே
லும் தேவகன்னியர்கள் கின்னரங்களையும் வீணைகளையும்
வாசிக்குந்தோறும். அதுகளிற் பிறக்கின்ற நாதத்தைக்
கேட்டு யானைக்கன்றுகளும் புலிக்குட்டிகளும் நித்திரை
செய்யும். அந்தத்திருமலைக்கு அஞ்சனாத்திரி-தர்மாத்தி
ரி-சேஷாத்திரி-சிங்காத்திரி-நாராயணாத்திரி-திர்க்காத்தி
ரி-வராகாத்திரி-ஸ்ரீநிவாசாத்திரி-புஷ்கலாத்திரி - ரிஷபா
த்திரி-ஸ்ரீசைலம்-சிந்தாமணிகிரி-மேருசிகரம் - கனகாச
லம்-கருடாசலம்-வேங்கடாசலம், இவைமுதலாகிய இ
ருபதுநாமங்களுண்டு. அப்படிப்பட்ட பர்வதத்திற்குப்
போனீர்களேயாகில், நீங்கள் பாபவிமோசனமாய் அ
தக்ஷணமே பரமபதமடைவீர்கள். அப்பால் ஸ்வாமிகா
ரியம் விக்கினப்பட்டுப்போம். ஆகையால் அதன் சமீபத்
தில்போகாமல் தூரத்திலிருந்துசேவித்து அதன்பக்கங்
களில் தேடிப்பாருங்கள். பின்பு அதைக்கடந்து அந்தச்
சேஷாசலத்திற்கு அப்புறமாயிருக்கின்ற தொண்டை
நாடுசேர்ந்து, அங்கே தேடிப்பார்த்துக்கொண்டுபோய்த்
திவ்வியமாகிய காவேரிநதி இருகரையிலுந் தேடிப்பாரு
ங்கள். மோக்ஷாத்மாக்களுடைய மனம்போல மகாநல்
லமாகிய அந்தச் சோழநாட்டைக்கடந்து, மலைநாட்டிற்
போய்த்தேடி அப்பால் தமிழ்நாட்டிற்குப் போங்கள். அ
ங்கே அகஸ்தியருடைய பொதியமலையும் தமிழ்ச்சங்க
முமிருக்கின்றன. அவ்விடத்திற்குப்போனீர்களேயாமா
கில் எப்போதும் அதைவிட்டு வருகிறதற்கு மனம்வரா
து ஆகையால், அந்தமலையபர்வதம் வலத்திலிருக்கும்ப
டிநடந்து ஸ்வர்ணங்களைக் கொழிக்கின்ற பொருனைநதி
யையும் திருச்சங்கணித்துறையையுங் கண்டு தரிசித்துக்
கொண்டு போனால், அப்புறம்மகேந்திரபர்வதத்தையுஞ்
சமுத்திரத்தையுங் காண்பீர்கள். அவ்விடத்தைநீங்கடந்து
போகிறதும் அதன்பின் இப்பால் நடந்துவருகிறதும் ஒ
ருமாதத் தவணையாக அதற்குள்ளே இவ்விடத்தில்வந்து
சேருங்கள். இதுவே யுங்களுக்கு உத்தரவாகப் பெற்று
க்கொண்டு சீக்கிரத்தில்நடவுங்களென்று சுக்கிரீபன் சொ
ல்ல, அப்போது ஸ்ரீராமர் அநுமானென்பவனைச் சமீப
த்திலேவரச்சொல்லிச் சடாக்ஷித்து, மிக அடையாளம்
சொல்லுகிறேன் கேளென்று அவனைத்தனியே அழை
த்துப்போய் வைத்துக்கொண்டுசொல்லுகின்றார். அந்த
ஜானகியினுடைய ஸ்வரூபம் எப்படியிருக்குமென்றால்,
பாற்சமுத்திரத்திலேபிறந்த செம்பவளத்திற்குச்செம்ப
ஞ்சூட்டி அதன்மேல் சந்திரனைச் சேர்த்துவைத்தது
போலவிரல்களும்நகங்களும்பிரகாசிக்கின்ற அவளுடை
யபாதத்திற்கு, தாமரைப்புஷ்பமுதலானதுகளும்உபமா
னமாகாதுகளென்றால் வேறென்ன இருக்கின்றது. அ
நுமானே நன்றாய்க்கேளும், உலகத்திலிருக்கின்ற உத்த
மமந்திரிகளின் புறவடிக்கு மகாகவிகளாகிய வித்துவஜன
ர்கள் உவமையாக லக்ஷண சாஸ்திரங்களிலே சொல்லி
வைத்திருக்கின்ற ஆமையையும் மற்றதுகளையும் சமானெ



மாகுமென்று சொன்னாலும், அதுகள் அந்தச் சீதையி
னுடைய புறவடிக்குத் தோற்றுப்போகும். கணைக்காலி
ன் அழகுக்கு உபமானம் வித்துவாமிசர்கள் சூல்கொண்
டவராலென்றும் அம்புத்தூணியென்றும் சினையாயிருக்
கின்ற நெற்கதிரென்றும்சொல்லுவார்கள். அதுகளையே
ராஜனுஞ் சொன்னதினால் இன்பமென்ன இருக்கின்றது.
தொடைகளுக்கு உபமானம் வாழையைச்சொல்லியிரு
க்கின்றதே அதினுடையபெருமையைச் சிறுமையாக்கி
அதிலும் அதிக அழகாயிருக்கின்ற அவளுடைய தொ
டையழகை வேறென்ன சொல்லலாம். பூச்சக்கரத்தை
யெல்லாம் பிடரிலேதாங்குகின்ற ஆதிசேஷனையும் ஒரு
சக்கரத்தினால் நடக்கின்ற சூரியனுடைய தேரையுங்க
ண்டிருக்கின்ற உமக்குச் சீதையின் மேகலாபரணத்தை
அணிகின்ற சமுத்திரத்தைப்போலும் விசாலமாகிய நி
தம்பத்திற்கு உபமானம்நான்சொல்வதென்ன! பிரமதே
வன் இனியொரு ஸ்திரீயைச் சிருஷ்டிக்க வேண்டுமெ
ன்றால் அடையாளமாகப் பார்த்துக்கொண்டு செய்யத்த
க்க சுந்தரமுண்டாகிய ஜானகியினுடைய இடை எப்படி
யிருக்கின்றதென்று அறியவேண்டிக் கேட்பீராகில் அது
கண்ணுக்குத்தெரியும்படி யிருந்தாலல்லவோ உவமை
சொல்லலாம். கையினாலேதொட்ட எனக்கே அறியக்கூ
டாது மேலும் அவளுக்கு இடையுண்டென்று ஆராகி
லுஞ் சொல்லுவார்களோவென்றால் அந்த வார்த்தையு
மில்லையே! ஆகையால் நானென்னசொல்லப்போகிறே
ன் அவள் வயிற்றழகுக்கு ஆலிலையும், உருவெழுதுகின்ற
பலகையும், வெள்ளித்தட்டும், கண்ணாடியும், உபமான
மாகுமென்று சொன்னாலும் ஸ்துதிசெய்யத்தக்க காணு
மேயல்லாமல் எதார்த்தமாகமாட்டாது. அவளுடைய உ
ந்திசுழிக்கு நந்தியாவர்த்தமென்னும் புஷ்பத்தின் புரை
யை உவமையாகச் சொன்னால் அப்பமாக்கனாலும்நான்
கங்கையின் நீர்ச்சுழியைக்கண்டபோது அதுதான் சமா
னமாகுமென்று நினைத்துச் சந்தோஷப்பட்டேன் நீரு
ம் வழியிலே அதைப்பார்த்துக்கொண்டுபோகலாம் அவ
ள் வயிற்றினிடத்தில் மயிரொழுக்கென்று ஒன்றுண்டு
அதற்கு ஒப்புச்சொல்ல வேண்டுமாகில், என்னுயிரொ
ழுக்கென்றேசொல்லவேண்டும் அல்லவென்றால் அவளு
டைய சிற்றிடையென்னும் வல்லிசாதக்கொடிக்கு அது
துவண்டு சாயாமலிருக்கும்படிப் பொருத்திவைத்தகொ
ழுகொம்பாகுமென்று அறிந்துகொள்ளும் தாமரைப்பு
ஷ்பத்திலிருந்தால் அதன் அகவிதழ்கள் உறுத்துமென்
று அஞ்சி அதைத்துறந்துவந்தமகாலக்ஷுமியாகிய அந்
த ஜானகியின்வயிற்றிலே கொடிபோல மூன்றுவரையி
ருக்கின்றன. அதுகள் என்னவென்றால் மன்மதனவ
ன் மூன்றுலோகத்திலு மிருக்கின்ற பத்மினி ஸ்திரீகளை
யெல்லாம் இவள் அழகிலே தோற்கச்செய்த ஜெயத்தை
மூன்றுரேகையாகப் பதித்துவைத்திருக்கின்றதென்றறி
யும் அவளுடைய ஸ்தனங்களை ரத்னச் செப்பென்பேன்.
ஸ்வர்ணகலசமென்பேன். செவ்விளநீரென்பேன். பவள
த்தாற்கடைந்த சொக்கட்டாமென்பேன். யானைத்தந்த
மென்பேன், சக்கரவாகமென்பேன். சும்மா இப்படிச்
சொல்லிக்கொண்டிருக்கிறதேயல்லாமல் உலகத்தில் அ
துகளுக்கு உள்ளபடி சரியான உபமானம், ஒன்றுங்கா
ணவேயில்லை இன்னமும் பலவிதமாக நினைக்க
ப்படுகிறேன். நானெங்கேயாகிலுங் கரும்பைக்கண்டாலு
ம் பச்சைமூங்கிலைக்கண்டாலும் எனக்குக்கண்களில் நீர்
தாரைதாரையாய்ப் பெருகுகிறதேயல்லாமல் அவளுடை
யபிருதுவாகிய தோள்களுக்கு அந்தக்கடினமாகிய கரும்
பையும் மூங்கிலையும் ஒப்புச்சொல்லுகிறதற்கு என்னெ
ஞ்சு இருமபல்லவே ஆகையால் என்னசொல்லுகிறது!
அவளுடைய முன்கைகளுக்கு உவமை ஒன்றுண்டென்
பதற்கு மூன்றுலோகத்திலுமில்லை ஆயினும்சொல்லவே
ண்டுமென்று வேறொன்றை உபமானமாகச் சொல்லாம
ல் காந்தளாகுமென்றும் மகரயாழாகுமென்றுஞ் சொ
ன்னாலும் அதுகள்தான் அந்தக்கைகளுக்கு ஒப்பாகுமா
அல்லாமலும் அழகின்மேல் அழகுமுண்டா! மேலும்
அசோகத்தளிரைச் சொலவதென்ன அதிருக்கட்டும் க
ற்பகத்தளிரும் தாமரைப்புஷ்பமும் சீதையினுடைய கா
லுக்கே ஒப்பாகாமல்தோற்றுமானால்கைக்குஒப்பாகவை
த்துச்சொல்லலாமா! அவளுடைய கூர்மையாகிய கை
நகத்திற்கு அம்மாலே தெளிவாயுவமை சொல்லக் கூடு
மா! அதற்குத்தோற்ற மூக்கினையுடைய கிளிப்பிள்ளைக
ள் எங்கள் மூக்கைப் பழிக்கின்றவர்கள் நீங்களாவென்
று முருக்கம்பூவை அந்த மூக்கினால்மாச்சரியத்துடனே
கொத்திக்கிழிக்கின்றதுகளே அதையெப்படிச்சொல்லு
கிறது. அநுமானே நீர்போய்ச் சீதையின் உள்ளங் கை
களையும் உள்ளங்கால்களையுங்கண்டீரேயாமாகில் செந்தாம
ரைப் புஷ்பங்களைத்தீண்டக்கொள்ளும் கழுத்தைக்கண்டு
இளங்கமுகும் சங்கமும் கிளைவிலேவந்தால் அதுகள்தா
னென்று நினைத்துக்கொள்ளும் அவளுடைய சிவந்த
வாயைக்குறித்து என்னதான்சொல்லுவேன். பவளமு
ம், செங்கிடையும், கொவ்வைப்பழமும், செவ்வல்லிப் பு
ஷ்பமும், இலவம்பூவும், இந்திரகோபமும், முருக்கமல
ருமாகிய இதுகளெல்லாம் அதற்குமுன்னே வெள்ளைநி
றமுடையதுகளென்றே சொல்லவேண்டும் அதுகளினு
ம் அதிக செம்மையாய்த் தேஜஸுடன்கொண்டிருக்கும் அது
வே அதற்கு அடையாளம் அதுதவிர உபமானம் ஒன்
று சொல்லுவேனென்றால் சிவந்த அமிர்தமுமில்லை
சிவந்ததேனுமில்லை அல்லது இருக்கின்றதுகளென்றாலு
ம் அதுகள் உண்டபோது தித்திக்குமேயல்லாமல் மன
திலே நினைத்தபோது தித்தித்துக் களிப்பைக் கொடுக்க
மாட்டாதுகளே! ஆகையால் அவளுடைய செவ்வாய்
க்கு எப்போது எப்போது எப்படியெப்படி மனோகரப்ப
ட்டு எந்த எந்த விதமாகப் பாவனைசெய்துசொல்லுகின்
றேனோ அந்த அந்த விதமெல்லாம் ஒக்கிருக்கும் அவ
ளுடைய தந்தபங்க்திக்கு உபமானமாகாத முல்லையரும்பு
ம், மயிலின் அடியிறகும், முத்துக்களும் ஆகுமென்று
சொன்னால், அவ்வார்த்தைக்கு அமிர்தமும் பாலுக்கு தே
னும் உபமானமாகுமென்று சொல்லப்படும், ஆகையா
ல் அதுகளைச் சொல்லக்கூடாது. எப்படியென்றால் தே
வதா அமிர்தத்திற்கு உபமானஞ் சொல்லச்சொன்னால்

எதைச்சொல்லலாம்? நீலல்ல அறிவையுடையவரானபடியினலே அந்தத் தாரதம்மியத்தைக் கொண்டு அடை... த்துத்திகளும் மூக்கினுடைய அழகுக்குப்பச்சோந்தியும், எள்ளுப்பூவும், குமிழமலருமாகிய இதுகளை உபமானமாகச் சொல்லுவோமென்றால் அந்த மூக்குக்கு உண்டாகிய பொன்னிறமும் ரத்னப்பிரகாசமும் இதுகளுக்கு இல்லைமேலும் அவள் மூக்கு ஒருவராலும் எழுதப்படுவதல்ல இதுகள் யாவராலும் சித்திரத்தில் எழுதப்படும் ஆகையால் அந்த நீதியைப் பார்த்து நீரே அறிந்துகொள்ளும் அவளுடைய காதுகளுக்கு உபமானமாக அறியாதவர்கள் சொல்லுகின்ற வள்ளைக்கொடியையும், கத்திரிகையையும், மயிர்வினைக்கருவியையும், பெரியவர்கள் சொன்னால் அவர்களைப் பைத்தியக்காரர்களென்றல்லவோ சொல்லுவார்கள். ஆகையால் அதுகளிலே வாசமாயிருக்கின்ற குழைகள்செய்த தவமே காதாய்வந்திருக்கின்றதென்று நினைக்கவேணுமேயல்லாமல் உலகத்திற்கெல்லாம் உபமானமா யிருக்கின்ற அதுகளுக்கும் உபமானமுண்டா யிருக்குமா! அவளுடைய கண்களின் விசாலத்திற்குச் சமுத்திரமும் சமானமாகமாட்டாது வேறொன்றைச்சொல்லுகிறதற்குத்தான் ஒருவர்மனதுக்குள் அடங்குகின்றதுகளல்ல, ஆயிரந் தரம்பார்த்தாலும் பாறகடலில் பள்ளிகொண்டிருக்கின்ற தேவதேவனாகிய ஸ்ரீமகாவிஷ்ணுவைப்போலவே கறுத்தநிறமும் வெளுத்தநிறமுமாய் அகன்றிருக்கும் அதுபார்த்துக்கொள்ளும் அவளுடையபுருவந்தமக்குள்ளே ஒன்றுக்கொன்று உபமானமாகுமேயல்லாது வேறொன்றை உவமையாகச்சொன்னால் இழிவாகும் அல்லவென்று மன்மதன் கையிலிருக்கின்ற கரும்புவில்லைச் சொல்லலாமென்றால் அதுவும் இரண்டில்லை சந்திரன் அந்தச்சீதையின் நெற்றியழகைக்கண்டு பலநாளும் அதையே நினைத்து நினைத்து மதியென்னும் பெயரையுடையதாகி நாளுக்குநாள் முறைமுறையாகக் குறைந்து எந்நாளும்வளர்ந்துகொண் டிருக்குமானால் அது சிறிதாவது அந்தநெற்றிக்குச் சமானமாகுமா! அவளுடைய கூந்தலை ஆரணியத்திற்குவந்ததுமுதல் வாரிச்சீவுகிறவர்களில்லையே. அப்படியானாலும் அதனழகுக்கு ஓரழிவில்லை. ஒருவரால் சோதிக்கைசெய்யப்படுவதனால் மிருதுவும்வாசனையு முண்டாயிருக்கின்றதல்ல மேலும் கறுத்தநிறமும் பிரம சிருஷ்டியிலேயே சுபாவமாய்த் தோன்றியதாகையால் அந்தக்கூந்தல் உபமானஞ்சொல்லப்படுவதல்ல கரியநிறத்தையுடைய மேகக்கொழுந்தும் செவ்வல்லிப் புஷ்பமும் வளைவாகிய வில்லும் வள்ளையும் சேற்கெண்டையும் முத்துக்களும் சேர்ந்திருக்கின்ற ஒருபூரணசந்திரனையே பிரமதேவன் முகமாகக்குறித்து வைத்திருக்கின்றானென்றே அவளுடைய திருமுகமண்டலத்தை அறிந்து கொள்ளும் அந்தப்பின்னிய ஜடையினழகைச் சொல்லுகிறேன் கேளும் கெலிப்புற்று மெல்லியதாகிய மயிரைப் பருமனாக்க வேணுமென்று நினைத்து மேகத்தைக் கழித்துக்கட்டி அதற்குத் தேனைத்தடவி அகிற்புகையூட்டி இருட்குழம்பிலேதோய்த்து அதனுடனே ஒன்றாகச்சேர்த்து வைத்திருக்கின்றதென்றே சொல்லவேண்டும் அநுமானே! பலபலவார்த்தை யென்சொல்லவேணும் தெய்வத்தன்மையையுடைய தாமரைப்புஷ்பத்திற்கும் அற்பமாகிய புல்லிதழுண்டு பிரகாசமாகிய சந்திரனுக்கும் களங்கமுண்டு மற்றும் உலகத்திலுள்ள நல்லவஸ்துக்களுக்கெல்லாம் ஒவ்வொருகுற்றஞ் சிறிதுசிறிதுண்டு சீதைக்கு முழுமையும் நன்மையே உற்பத்தியாயிருக்கின்றதல்லாமல் குற்றமென்பது எவ்வளவுமில்லை ஸ்திரீகளுக்குச்சொல்லியிருக்கின்ற லக்ஷணம் அந்த ஸ்ரீமகாலக்ஷுமிக்கும் சம்பூரணமாயிராது என்பிராணநாயகியாகிய ஜானகிக்கு அதுகளில் ஒன்றாகிலும் குறைவில்லாமல் பரிபூரணமாயிருக்கின்றது அதுவே உமக்குக்குறியாகப்பார்த்துக்கொள்ளும்வேணுகானத்தையும், யாழோசையையும், குயிலின்குரலையும், கிளியின்வார்த்தையையும், நாகணவாய்ப் பறவை முதலானவைகளின் மதுரமாகிய மழலைச்சொற்களையும் பிரமதேவன் தேடிப்பொறுக்கி அதுகளையெல்லாம் ஒன்றாகக்கூட்டி வடித்தெடுத்து அந்தச்சீதைக்கு வார்த்தையாகப் படைத்திருக்கிறான் அவன்மேற் பிழையில்லை ஆகிலும் அந்தவார்த்தைக்கு உபமானமாகத்திரங் காண்பிப்பதற்கு அவனுக்கு ஒருபொருளுங்கிடைக்கவில்லை, இனிமேல்கிடைக்குமோ என்னவோதெரியாது நாமாவது அதற்கு உவமை சொல்லுவோமென்றால் அமிர்தம் ஒன்றிருக்கின்றது. தேன் ஒன்றிருக்கின்றது அந்த இரண்டையும் சொல்லலாம் சொல்லுகிறதற்கும் அதுகள் நாவிற்கு இன்பங்கொடுக்குமேயல்லாமல் காதுக்கு இன்பங்கொடுக்கமாட்டாதுகள். நடையில் அன்னத்தையும் பெண்ணானையையும் அதிசயமானதுகளென்றல்லவோ சொல்லுகிறது. அதுகளைச் சொல்லவும் எனக்குச் சம்மதிப்படவில்லை பின்னை எதைத்தான் சொல்லலாமென்றால் மகாபுருஷர்களாகிய வித்துவஜனசிரேஷ்டர்கள் தங்கள் நாவினலே எழுத்து சொல்பொருள் யாப்பு அலங்காரமென்னும் பஞ்சலக்ஷணக் கிரமத்துடனே பாடுகின்ற பாடலின் நடையையே அந்தச்சீதையின் நடையென்று சொல்லலாம் அவளுடைய திருமேனிநிறத்தைக்குறித்து இளமையாகிய மாந்தளிரி னிறமென்றால் அது முதிர்ந்த நிறமாயிருக்கும், பொன்னிறமென்றால் அந்தக்காந்தி அதற்கிருக்க மாட்டாது அவளநிறத்திற்குமுன்னே அதைக்கருப்பென்றே சொல்லவேண்டும் ரத்னநிறமும் ஒளிபோதாது. மின்னலின்நிறமோ அவள்நிறத்தைக்கண்டு வெட்கி ஒளித்துக்கொள்கின்றது. புஷ்பத்தின் நிறமும் மழுங்கி வெளுத்துக்காண்கின்றது. ஆகையால் எந்த நிறத்தைச் சொல்லுவேன் அது தனக்குத்தானே சமானமல்லாமல் அதற்கு வேறென்ன இருக்கின்றது. ஸ்திரீகளில் அவளுக்கு நேரானவர் மற்றொருவரில்லை அதுவேசாக்ஷியாகப் பார்த்துச் சமீபத்திலேபோய் அவளுக்கு உம்மிடத்திலே நம்பிக்கையுண்டாகத்தக்க சில அடையாளவார்த்தைகளையுஞ் சொல்லுமென்று அநுமானைப்பார்த்து ஸ்ரீராமர் பின்னுஞ்சொல்லுகிறார். முன்னொருநாள் மிதிலைக்கு விஸ்வாமித்திரர்பின்னே போனபோது அன்னங்கள் விளை



யாடுகின்ற அகழ்சூழ்ந்த கன்னிகாமாடத்தினருகில் சிங்காரத்தோட்டத்தில் சீதையானவள் நின்றுகொண்டிருந்தாள் அவளை நானுங்கண்டேன் அவளும் என்னைக்கண்டாள். அந்த அடையாளத்தைச்சொல்லும் பின்பு ஜனகமகாராஜன் ராஜசபைக்கு அழைப்பிக்க மின்னற்கொடிபோல அங்குவந்தபோதும் நான்பார்த்தேன் அவளும்தன்கைவளையைத் திருத்துகிறதுபோலக் கடைக்கண்ணினுலென்னைப்பார்த்திருந்தாள் அதையுஞ்சொல்லும் அல்லாமலும்பர்வதத்தைப்போல அபாரமாகியவில்லைநான் ஒடித்தசமாச்சாரத்தை அவள்கேள்விப்பட்டவுடனே இந்தவில்லையொடித்தவன்கன்னிகாமாடத்திலிருந்துகண்டுமோகிக்கும்படி அந்தவிஸ்வாமித்திர மகாரிஷியுடனே கூடவந்த மகாபுருஷனேயாகவேணும்! அவனல்லாவிட்டால் என்கற்புக்குப்பின்னம் வரும்ஆகையால்என்னுயிரைவிட்டுவிடுவேனென்று, கடலினும்பெரிய கற்பினையுடைய சீதையானவள் தெரிந்து சொல்லியிருந்தாள் இதையுஞ் சொல்லும். வனத்திற்குவர எத்தனித்தபோது அவளும் என்னுடனேகூட வருகிறேனென்றாள். அது கேட்டுப் பெண்ணே முன்பு நான்போயறியாத காட்டில் என்பின்னேவரும்படி நினைத்தையே. எனக்குஇன்பமாகியும் என்பிராணனுக்கு இனிமையாகியுமிருக்கின்ற நீ! காட்டில் இளைத்துத்துன்பப்படுவையோவென்று நான்சொன்னேன். அதையுஞ்சொல்லும் மற்றும் அரசாளுதலைவிட்டு ஆரணியவாசஞ் செய்யப்போகின்ற உமக்கு நான்மாத்திரந்தானு துன்பமா யிருக்கின்றது. 'என்னையல்லாததுகளெல்லாம் இன்பமாயிருக்குமாவென்று கண்களில்நின்றும் நீரைச்சொரிந்து துயரப்பட்டாள். அதையுஞ்சொல்லும். நகரத்தைவிட்டு வனவாசத்துக்குப் புறப்பட்டபோது, அரமனை யாசாரவாசலைக் கடக்குமாத்திரத்தில் ஆரணியம் எங்கேயென்று அவளென்னைக்கேட்டாள் அதையுஞ்சொல்லும். நமக்கு ஆப்தமாகிய அநுமானேயென்று இவ்விதமாகச்சொல்லிரத்னக்கிரீடமாய்க் கோடிசூரியர்களைப்போலத் தகத்தகாயமானதிருவாழியைக்கொடுத்து உம்முடையகாரியமெல்லாம்ஜெயமாகக்கடவது போய்வாருமென்று விடைகொடுத்த... மஸ்காரஞ்செய்துஸ்வாமி கடாக்ஷத்தைப்... ண்டு அநுமானானவர் நடந்தார். அங்கதன்... கியமற்றப்படைத்தலைவரும் இரண்டுவெள்ளம் வானரசேனையும் ஸ்ரீராமலக்ஷுமணர்களைச் சேவித்துக்கொண்டு தங்கள் ராஜாவான சுக்கிரீவனையும்வணங்கி அநுமா னென்பவருடனேகூட நடந்தார்கள்.

நாடவிட்டபடலம்-முற்றிற்று.

---

## பிலம்நீங்கு படலம்.

அப்பால் சுக்கிரீவன் மற்றமூன்றுதிசைகளுக்கும்... பு திட்டஞ்செய்திருந்த படைத்தலைவர்களையும் வானரசேனைகளையுங் கூட்டியனுப்பினான். அவர்களும் அதிவேகமாய்த் தங்கள் தங்களுக்குக் குறித்திருந்த திசைகளுக்குப்போய் அதிக அன்புடனே பிராட்டியாரைத் தேடினார்கள். தெற்குத்திசையில் தேடப் போன அநுமானங்கதன் சாம்பன் முதலானவர்களுடைய செய்தியைவிஸ்தாரமாகச்சொல்லுகிறேன். அப்படிஅநுமான்அங்கதன்முதலானவர்கள் அந்தக்கிஷ்கிந்தாபுரியைவிட்டுப்பிரயாணப்பட்டு அதிவேகமாய்நடந்து,பத்மராகமுதலாகிய பலவகை ரத்னகாந்தி அந்திப் பொழுதுபோலச்சிவந்து பிரகாசிக்கிறதினாலும். சர்ப்பங்களும் சந்திரனும் அருவியாறும் ஓடிக்கொண்டிருக்கிறதினாலும் சிவனுடைய ஜடாமகுடம்போலப் பிரகாசிக்கின்ற, விந்தியகிரியினிடத்திற்போய்ச்சேர்ந்தார்கள். அந்த மலையையும் மலைச்சிகரங்களையும் கொடுமுடிகளையும் குகைகளையும் பக்கங்களையும் அடிவாரங்களையும் ஒருபகலிலே அநேகநாள்தேடிப்பார்க்கிறதுபோலத் தேடிப்பார்த்து, மற்றும் அவ்விடத்திலிருக்கின்றதேவர் - மானிடர் - மிருகம் - பறவை ஊர்வன-ஜலஸ்தாவரமாகிய எழுவகைத் தோற்றங்களாகப் பிரமாவினாலே சிருஷ்டிக்கப் பட்டதுகளையெல்லாம் ஒன்றுவிடாமல் ஆராய்ந்துபார்த்துவிட்டார்கள். ஜானகியைத்தேடிக்கொண்டுபோகின்ற வானரசேனைவீரர்கள் சமுத்திரம் பரவிப் போகிறதுபோலப் பாவிச் சிறிதிடமாகிலும்விடாமல், அதிசீக்கிரமாகப் பார்த்துக்கொண்டு, அங்கிருந்து பதினாறுயோசனைதூரம்அப்பால்போய் நருமதையாற்றினிடத்தில் சேர்ந்தார்கள் அங்கே அன்னங்கள் விளையாடுகின்ற இடங்களையும் தேவரம்பைகள்வந்து ஸ்நானஞ்செய்கின்ற இடங்களையும் ஸ்வர்க்கலோகத்தார்வந்து வாசம்செய்கின்ற இடங்களையும் வண்டுகள் சிதம்பாடப் புஷ்பங்கள்நிறைந்திருக்கின்ற சோலையினிடங்களையும் சுற்றிப்பார்த்தார்கள். அந்த அதிசங்காரமாகிய நதியைவிட்டு அப்பால் நடந்து ஏமகூடபர்வதம்போய்ச்சேர்ந்து, அதன்பக்கத்திலிருக்கின்றபர்வதங்கள்முதலாகிய இடங்களையும்தேடி, மகமேருவோவென்று சொல்லத்தக்க உயரமாயிருக்கின்ற அந்த ஏமகூடத்தைக்கண்டு இதுதான் ராவணனிருக்கின்ற மலையென்று சந்தோஷித்து எதிர்பார்த்துஇவ்விடத்திலே சீதையைக்காணலாமென்று அதிலிருக்கின்ற யானை-யாளி-சிங்கம்-புலி-காடி-மான்-மரை முதலானதுகள் பயப்பிராந்திகொண்டு ஓட, நாறுயோசனைதூரம் அகன்று ...த்தைத் தொடும்படி உயர்ந்த அந்தப்பர்வதத்தை ஒரு ...பொழுதிலே தேடிப்பார்த்து, சீதையைக் காணுததினாலே அங்கிருந்து குதித்து அப்பால் நடந்தார்கள். அவ்விடத்திலே அங்கதன் முதலானவீரர்கள் அந்த இரண்டுவெள்ளஞ்சேனையை நீக்கவெல்லாரும் ஒருபுறமாய்ப்பிரிந்து உலகமெல்லாந்தேடிக்கொண்டு, சமுத்திரத்தின் ஓரத்திலிருக்கின்ற மகேந்திரகிரியினிடத்தில் வந்துஎல்லாருங்கூடுங்களென்று திட்டஞ்செய்து பிரிந்து அனுப்பிவிட்டு; அநுமான்-அங்கதன்-சாம்பன் முதலானவீரர்கள் ஒருகூட்டமாய்க் கூடி அதிவேகமாய் நடந்தார்கள். அப்படி நடந்தவீரர்கள் ஒருபாலைநிலம் மகாகோரமாய்க் காலாக்கினிபோல எரிந்துகொண்டு ஜலமென்னும் பொருளும் அங்குவழங்காமையால் சூரியனும் பயப்படத் தக்கதா யிருந்தது. அந்தச்சுரத்திலே போய்விட்டார்கள். அதிலே பக்ஷிகளும் - மிருகங்களும் -

சேரமாட்டாதுகள். மரங்கள் செடிகளுமில்லை. கற்களு
ந்தீந்து எங்கும் வெளியா யிருக்கின்றதே யல்லாமல்,
வேறொன்றுமில்லை. அந்தப்பூமியிலே இவர்கள்அகப்பட்
டுக்கொண்டவர்களாய்ஐம்புலன்களுங்கடுங்க, அறிவுகெ
ட்டுப்போக மனதுகலங்கித்தங்கள்சரீரம்புழுங்கி நர
கத்திலேபதைக்கின்றஎறும்பில்லாதபுழுமுதலாகியஜீவ
ஜெந்துக்களைப்போலஅதிபுஷ்ணத்தையடைந்துநாவைநீ
ட்டிக்கொண்டுபூமியிலேஅடியெடுத்துவைக்குந்தோறும்
பாதங்கள்கொப்புளித்துக்காய்ந்தசட்டியிலிருந்துமேலெ
ழுந்துசிதறுகின்ற பொரிகள்போல, துள்ளித்துள்ளிப்ப
தைபதைத்துக்கொஞ்சமாவதுஒதுங்கநிழல் கிடையாம
ல்பிராணன்பிரிந்துபோகத்தக்கஅளவில்லாத அவஸ்தை
யுடன் ஓடுகிறபோது அங்கிலத்தின்மத்தியில் ஒருபிலமி
ருந்தது. அதிலேகுதித்து அங்கிருந்து இனி இந்தப்பி
லத்தின்வழியாய் நடந்துபோகிறது மிகவும்அருமை
யாகும் அல்லவென்று நடந்தால் நாமெல்லோரும் இற
ந்துபோவோமாகையால், இந்தப்பிலத்தின் வழியேபோ
கிறதே மகா உத்தமமென்று நிச்சயித்துக்கொண்டு இந்
தப்பிலத்துவாரம் எந்தமட்டும் போகிறதோ அதையும்
அறிவோமென்று அதற்குள்ளேபுகுந்து, ஒரு க்ஷணப்
பொழுதுக்குள்ளே அந்தப்பிலத்தின்வழி முழுதும்போ
னார்கள். அங்கே உலகத்தில் நிறைந்திருக்கின்ற இருளெ
ல்லாம் சூரியனுக்குப்பயந்துவந்து புகுந்துகொண்டிருக்
கின்றதுபோல இருண்டிருக்கின்ற, ஓரிடத்திலே போய்
அகப்பட்டுக்கொண்டார்கள். அப்போது அநுமானல்லா
த மற்றயாவரும் அசைவற்றவர்களாய்அடியெடுத்துவை
த்து அதைவிட்டு அப்பால் நடக்கவேண்டுமென்னும் எ
ண்ணமுமில்லாமல், அதற்கு அப்புறம் ஏதாவது வழியி
ருக்கின்றதாவென்று அறியத்தக்க அறிவுமில்லாமல் மி
குந்த இருளாகிய வெள்ளத்தில் மூழ்கிக்கண்கள். பரிச்சி
தந்தெரியாமல், பெருமூச்செறிந்துகொண்டுநின்று செ
ய்யத்தக்ககாரியத்தையும் ஆலோசியாமல், திகைப்புற்
று இனி நாம்பிழைக்கிறதேயில்லை இதென்னஅவஸ்தை
வந்ததென்று மனங்கலங்கினவர்களாய், ஆஞ்சனேயரே
இந்தச்சமயத்தில் நீ எங்களைரக்ஷிக்கமாட்டுவீராவென்
று அவரைக்கூப்பிட்டுக் கையெடுத்து இரந்து ஸ்துதி
செய்தார்கள், அந்தவசனத்தைக்கேட்ட அநுமானவ
ர் அவர்களை பயப்படவேண்டாம் ஸ்ரீராமருடைய கிரு
பையினாலே நமக்குப் பிராணபாயம் வராது. நீங்களெ
ல்லாரும் என்வாலைவிடாமல் பிடித்துக்கொள்ளுங்களெ
ன்றுசொல்லி, தம்முடைய சரீரத்தைவளர்த்து வாலைநீ
ளும்படிசெய்தார். அப்படியே அனைவரும் அவருடைய
வாலைப்பிடித்துக்கொண்டார்கள். பின்பு அநுமானவ
ர் கையைநீட்டித் தடவிப்பார்த்துக்கொண்டு காலினாலே
மெள்ள மெள்ளநடந்து, பன்னிரண்டுயோசனைதூரம்ப
ரந்திருக்கின்ற ஸ்தூலகாத்திரத்தை யுடையவராய்த் தம்
முடைய காதிலிருக்கின்ற குண்டலங்கள்பிரகாசிக்க, அ
ந்தப்பிரகாசத்தினாலே இருள்நீங்க நடந்து போகிறபோ
து, ஒருபட்டணத்தைக் கண்டார்கள் சூரிய மண்டலமா
னதுவந்து ஒளித்துக்கொண் டிருக்கிறதுபோலவும் ஸ்ரீ
மகாலட்சுமியின் திருமுகம் போலவும் தேவலோகமும்
நாணும்படியான அதிக சிங்காரமுடையதாய், கற்பகச்
சோலைகளும் தாமரைத் தடாகங்களும் கோபுரங்களும்
மதில்களுமுடையதாய், தேவர்களும் வந்துகண்டு அதி
சயிக்கத்தக்கதாய்த் தெய்வத் தச்சனாகிய மயனென்பவ
ன் மனம்வருந்திச்செய்ததாய், இந்திரநகரத்தைப் பார்க்
கிலும் அதிகசிலாக்கியமாய் ஒப்பற்றதாய் ரத்னகசிதமா
ய் ஸ்வர்ணமயமாய்ப் பூமியில் தீபமுதலானதுகளின் பிர
காசமும், ஆகாசத்தில் சூரியன் சந்திரன் முதலானதுக
ளின்பிரகாசமும் இல்லாவிட்டாலும், இருளையெல்லாம்
நீக்கிப் பிரகாசிக்கின்றதாய், சோழராஜாவினுடையகீர்த்
தியைப்பாடிப் புகழ்கின்ற வித்துவாமிசர்களுடையவீடு
களைப்போல, ஸ்வர்ணக்குப்பல்களும் ரத்னக் குப்பல்க
ளும் நல்ல வஸ்திரங்களும் சீதள சந்தனமும் கதம்பப்
பொடிகளும் அளவில்லாமல் நிறைந்திருக்கின்றதாய்,ஸ்
திரீகளும் புருஷர்களும் இல்லாமையால் நிர்மாநுஷிய
மாய், உயிரில்லாதசித்திரம்போல இருக்கின்ற அந்த ந
கரத்தைஎதிரேகண்டு, இந்தப்பட்டணம் ராவணனுடை
யபட்டணமாமென்று நினைத்து ஒருவரோடொருவர்
சொல்லிச்சந்தோஷித்து அதிசயித்து, ஸ்வர்ணசாலை
யாகிய அதன்வாசலுக்குள்ளே புகுந்துபோய் அதைப்
பார்த்தார்கள். அதற்குள்ளே வானத்திலும் பூமியிலும்
வாழ்கின்ற தேவர்கள்முதல் மனுஷர்கள் வரையிலுள்ள
சகலாத்துமாக்களின் உருவங்களும், சித்திரரூபமாக எ
ழுதியிருக்கின்றதுகளேயல்லாமல் நிஜஸ்வரூபமா யொ
ன்றுமில்லை. வாவிகளுண்டு பொய்கைகளுண்டு இவ்வி
யமாகிய பரிமளம்வீசுகின்ற மனோகரமான நானாவித பு
ஷ்பச்சோலைகளுமுண்டு. அதுகளில் மயில்கள் குயில்க
ள் கிளிகள் பூவைகள் அன்னங்கள் சகலமுமுண்டு. அது
களுக்கெல்லாம் உயிர்மாத்திரமில்லை. அப்படிப்பட்டநக
ரத்தினுடைய சிங்காரத்தையெல்லாம்பார்த்து, இதுவெ
ன்னமாயைதானோவென்று எண்ணி முன்பு அந்தப்பில
த்துவாரத்தில் நாம்விழுந்தபோது அப்பிறப்பு நீங்கிப்
போய் ஸ்வர்க்கத்தில் வந்திருக்கிறோமென்று மனதிலே
நிச்சயித்துக்கொண்டவர்களாய் மற்றும் யோசிக்கின்றா
ர்கள். என்ன நாமிறக்கவுமில்லையே. நமக்கு முன்னிரு
ந்த சரீரந்தானேயிருக்கின்றது. அல்லாமலும் இப்படி
யாகவேணுமென்று ஏதாகிலும் நினைத்திருக்கோமா மு
ன்னிருந்தநினைவு எவ்வளவும்மறக்கவுமில்லையே. இலே
சமுமுண்டாயிருக்கின்றதே. கண்களையும் இமைக்கின்
றோமே. இதுகளெல்லாம் ஸ்வர்க்கத்தைச் சேர்ந்தவர்க
ளுக்கு இருக்கமாட்டாதுகளே. மயக்கமென்று நினைத்தா
ல மயக்கங்கொண்டவர்கள் செய்தற்குரிய பிழையும் நம்
மிடத்திலில்லையே. இதையென்னவென் றறியலா மென்
று சொல்லித்திகைத்தார்கள். அந்தச்சமயத்தில் ஜாம்ப
வந்தர்பயந்து கைகால்நடுங்கும்படிக்கு ஐயன்மாரே கே
ளுங்கள் இதுவென்ன வென்றால் பிராட்டியாரைத் திரு
டிக்கொண்டுபோன கள்ளனாகிய ராவணன் நம்மெல்லா
ம்விழும்படி ஒருபடுகுழி செய்துவைத்ததுபோலவே யி
ருக்கின்றது. இதற்கு ஒருமுடிவோ இல்லை இதிலே அக



ப்பட்டுக்கொண்டோம் இனி நம்முடையவிதிப்படிதான்
முடியுமென்றுசொன்னார். அப்படிசொன்ன ஜாம்ப வந்
தரைப்பார்த்து அநுமானவர் ஒருவார்த்தைசொல்லு
கிறார். இப்பொழுது இந்தப் பிலத்துவாரத்தில் நின்றும்
மேலேறுகிறதற்கு வழிகிடையாமற் போகுமானால் பூர்
வகாலத்திலே சகரர்கள் செய்தபடியே இந்தப்பூமியைப்
பேர்த்துத் தின்றுகொண்டே வெளியேபோவோம் அப்
படியல்லவென்றால் அந்தவஞ்சனையை யுடைய ராக்ஷத
ர்களையெல்லாங் கொன்று தீர்த்துவிட்டுப் போவோம்.
பயப்படவேண்டாமென்று கோபாவேசத்துடனே சொ
ன்னார். அங்கதன் முதலான மற்றவீரர்களும் அவ்வாறே
செய்வோமென்று தங்கள்மனதிலே நிச்சயம் பண்ணிக்
கொண்டு பட்டணத்தைச் சுற்றிப்பார்க்கிறபோது அத
ன்நடுவே நல்ல தவங்களெல்லாம் திரண்டு ஒருருவமா
னதுபோலப் பிரகாசிக்கின்ற ஒருபெண்ணைக்கண்டார்க
ள். அவள் கதலிகம்பங்கள்போல விளங்குகின்ற ஜடையு
ம், இடையில் மரவுரியும் தரித்தவளாயும், சக்கரவாகப்
பக்ஷிக்குச் சமானமாகிய ஸ்தனமும், மாசடைந்த சரீர
மும், பூரணசந்திரன்போலமுகமுமுடையவளாயும், மூ
க்கினுனியில் பார்வையைவைத்துப் பார்த்த வண்ணமா
ய் சுவாசபந்தனஞ் செய்திருக்கிற படியினாலே இளைத்த
இடையானது பருத்த ஸ்தனத்தைச் சுமந்துவளையாமல்
நிற்க இரண்டுகைகளையும் தொடையினிடத்திலே பொ
ருந்தவைத்துக்கொண்டு காமாதிகளாகிய உட்பகைகளெ
ல்லாம் கால்தளர்ந்துபோக ஆசையானது நாமமற்றோ
ட நல்லறிவு உதயமாக இருவினைகளும் பற்றறச் சங்கற்
பவிகற்பங்களில்லாமல் கண்களின்வழியே கிருபைசொ
ரிக்கும்படி வீற்றிருந்தாள். அப்படியிருந்த ஸ்வயம்பிர
பையென்கின்ற நாமத்தையுடைய தெய்வப் பெண்ணை
வானரவீரர்கள்கண்டு நமஸ்காரஞ்செய்து அவளை அருந்
ததிக்குச் சமானமாகிய ஞானதிகாரோவென்று நினைத்
துச் சந்தோஷித்து மனம்பதைத்து அநுமானை நோக்கி
அந்த ஞானியாகிய லோகமாதா இவள்தானோ பாரு
மென்றுசொன்னார்கள் அதற்கு அநுமானவர் நன்று
யிருந்தது பிராட்டியாருக்குரிய குறிகுணங்களில் எந்த
க்குறிதான் எந்தக்குணந்தான். இவளிடத்திலிருக்கின்ற
தென்று சொல்லுவேன் புருஷோத்தமராகிய ஸ்ரீராமரு
க்கு இப்படிப்பட்ட குறிகுணங்களையுடையவளா தேவி
யாயிருப்பாள். முத்துமணிக்கு அக்குமணிபொப்பாமோ
ல் அஞ்ஞானிக்கு இவள் ஒப்பாவாளென்றுசொன்னார்
அந்தருணத்திலே மகாதபோநிஷ்டபரையாயிருந்த சு
யம்பிரபை அந்தக் கதேசத்தியானம் நீங்கி சித்தவிர்த்
தியையுடையவளாய் அவர்களைப்பார்த்து இவர்கள் மு
னிவர்களல்ல ஆரோபாட்டசாரிகளாயிருக்கின்
றார்களென்று எண்ணி நீங்கள் ஆரப்பா இந்த நகரத்தி
னிடத்தில் முன்பு ஒருநாளும் வந்தவர்களல்லவே வந்த
காரணமென்ன சொல்லுங்களென்று கேட்டாள். பாதக
ர்களாகிய ராக்ஷதர்கள் ஏதோ ஒருமாயைசெய்து சீதா
பிராட்டியாரை அபகரித்துக் கொண்டுபோய் ஒளித்து
வைத்தார்கள். அவர்கள் ஒளித்துவைத்த இடத்தைத்
தேடிக்கொண்டு திரிகின்றோம் நாங்கள் ராமதூதர்களெ
ன்றுசொன்னார்கள். அந்தவார்த்தைகேட்டவே இருந்த
வள் எழுந்திருந்து கண்களை ஆனந்தபாஷ்பம்பொழிய ம
னதா ஆனந்தபரவசியாய் உங்கள்வரவு நல்லவரவாருக
வென்று சொல்லிக்கொண்டாடி ஸ்ரீராமர் எங்கே எழுந்
தருளி யிருக்கிறாரென்றுகேட்க. ஆதியந்தமாக நடந்த
செய்திகளையெல்லாம் அநுமானவர் அவளுக்குத் தெ
ரியும்படிசொன்னார். அதுகேட்டு என்தவம் இன்றைக்
கு முடிந்தது நான் மோக்ஷமடைந்தேனென்று அனைவ
ரையும் கனிமூலஸ்நானஞ்செய்யும்படிசொல்லி இந்த
டான்னம்பரிமாறிப் போசனஞ்செய்யுங்களென்று மிக
வும் உபசாரஞ்செய்தாள். அப்படியே எல்லாரும் போ
சனஞ்செய்து எழுந்த பின்பு அநுமானவர் அந்தஸ்வ
யம் பிரபையென்பவளுக்கு நமஸ்காரஞ்செய்து நீரார் உ
ம்முடையபெயரென்ன ! இந்த நகரத்தின் வரலாறென்
ன ! இதற்குத் தலைவரார் ! நீ இவ்விடத்தில் வாசஞ்செ
ய்கிறவிதமென்ன ? தெரியச் சொல்லவேண்டுமென்று
கேட்க, அந்தத்தவஸ்வரூபியானவள் சொல்லுகின்றாள்
இந்த நகரமானது மயனுடைய தபோபலத்தினாலே நி
மாணிக்கப்பட்டது. நான் தெய்வலோகத்தி லிருக்கிறவள்
என்பெயர் ஸ்வயம்பிரபையென்பது தெய்வலோகத்தி
லுள்ள ரம்பையென்பவள் எனக்கு மிகவும் பிரியமா
ன உயிர்த்தோழியா யிருக்கின்றாள். அவளை ஒரு அசுர
ன்சேர்ந்து சுகமநுபவிக்க வேண்டுமென்று இச்சித்தா
ன். அவனுக்கும் அவளிடத்திலே இஷ்டமானபடியினா
லே அவர்களுக்கு நான் இந்த நகரத்தைத் தெரியப்படு
த்தி அதிலேபோய் உங்கள் மனோபீஷ்டப்படி யிருங்க
ளென்று சொன்னேன். அப்படியே இவ்விடத்தில்வந்து
அநேககாலங்கூடிப்போகித்துக்கொண்டிருந்தார்கள் அந்
தரம்பையினிடத்தில் இஷ்டமுடையவளாகையால் அவ
ளைவிட்டுப் பிரிந்திருக்கமாட்டாமல் நானும் இவ்விடத்
தில்வந்திருந்தேன். அப்படியிருக்கின்ற காலத்திலே தே
வேந்திரனானவன் அவளைத் தேடிக்கொண்டு இவ்விடத்
திற்குவந்து அவ்வசுரனைக்கொன்றுவிட்டு அவளைக்கண்
டு அவள்மேல் மிகவுங் கோபித்துக்கொண்டு நடந்தசெ
ய்தியை உள்ளபடி சொல்லென்றுகேட்டான். அந்தரம்
பையயந்து நடுங்கி என்னைக்கடைக்கண்ணினாற்காட்டிச்
சகலமும் இவளாலேவந்ததென்றுசொன்னாள். அப்போ
து சகஸ்திரநேத்திரனாகிய தேவேந்திரன் என்னைப் பார்
த்து நீ தெய்வலோகத்திற்குவராமல் இந்நகரத்திற்குக்
காவலா யிவ்விடத்திலேதானே யிருக்கக்கடவாயென்று
ம் இந்தப்பிலத்தின்வழி இருள் சூழ்ந்திருக்கக் கடவதெ
ன்றும் ஆக்கியாபித்தான். அப்போதுநான்வணங்கி இதை
ற்கு என்றைக்கு முடிவென்று கேட்பதற்குமுன்னே ஸ்ரீ
ராம தூதராகிய அநுமானவர் வானரவீரருடனே உ
ன்னிடத்திற்குவருவார் அப்போது உனக்கு இதுவிமோ
சனமாகி நீ தெய்வலோகத்திற்கு வரக்கடவா யென்று
தேவேந்திரன்சொல்லிப்போனான். எனக்கு உண்ணுகிற
தற்குப் பாயான்னமும் உடுக்கிறதற்குப் பீதாம்பரமும்
பூசுகிறதற்குப் பரிமளகந்தமும், சூடுகிறதற்குப் புஷ்ப

மாலைகளும், அணிகிறதற்கு ரத்னபரணமும், மற்றும் வேண்டிய சகலவஸ்துக்களும் இவ்விடத்தி லுண்டாயிருக்கின்றதுகள் அதுகளிலெல்லாம் நான் இச்சைவையாமல் தேவேந்திரன்கொடுத்த சாபத்தை வெல்லுகிறதற்காக உங்களைக் காணவேண்டி என்னுகிறதற்கு அருமையாகிய இத்தனைநாள் தவஞ்செய்துகொண் டிருந்தேன். இந்தப்பிலமோ நூறுயோசனை விஸ்தீரணமுள்ளது இங்கிருந்துதெய்வலோகத்திற்குப்போகவேண்டுமென்றல் இருள் சூழப்பட்டிருப்பதனல் வழியகப்படவில்லை, என்னை எவ்விதத்திலாவது ஸ்வர்க்கம்போய் சேரும்படி உபாயஞ்செய்யத்தக்க வகையுண்டானல் நீங்கள் திருவுளம் பற்றுங்களென்றுசொன்னள். அதைக்கேட்ட வானரவீரர்கள் அநுமானைநோக்கி அந்தப்பிலத்துவாரத்தின் இருளிலே மூழ்கிக் கண்தெரியாமல் வருத்தப்பட்டு இறந்துபோகத் தக்கவர்களாயிருந்த எங்களை அதிலிருந்தும் நீக்கிக்காப்பாற்றிய மகாநுபாவராகிய ஆஞ்சனேயரே! அதுபோலவே இவளையும் உம்முடைய செய்கையினலே ரட்சியுமென்றுசொன்னர்கள். அத்தருணத்திலே அநுமானனவர் நீங்கள் நடுங்கவேண்டாமென்று சொல்லிக் குறுநகைசெய்து சிங்கத்தைப்போல வீராவேசத்துடனே எழுந்திருந்து ஜீவதங்களும் காணுத பரமபதத்திற்கும் அந்தப்பிலத்துக்கும் வழியாய்விடுமென்று சொல்லும்படிப் பிலமும், பூமியும், ஒன்றாக அதனைப்பிறிக்கொண்டு முன்னுளிலே இரணியாக்ஷனைச் சங்கரித்துவிட்டுப் பூமியைக்கொம்பினல் எடுத்துக்கொண்டுபாதாளத்திலிருந்து மேலெழுந்த ஆதிவராகத்தைப்போல சிரசானது ஆகாசத்தை அளாவும்படி இரண்டு தோள்களும் இரண்டு கோரதந்தம்போல விளங்க பூமியைப் பிளந்துகொண்டுவந்தார். மகாபலிச்சக்கரவர்த்தியினிடத்தில் மூன்றடிமண் தானம்வாங்கி இரண்டடியினு லளந்தபோது பிர்மாண்டத்தைத் துளைத்துக்கொண்டு ஓங்கிய ஸ்ரீமகாவிஷ்ணுவினுடைய திருவடியைப்போல அந்த அநுமானனவர் நூற்றுநாற்பதுயோசனைதூரம் பிலத்தைப் பிடித்துப் பேர்த்துத் தூக்கிக்கொண்டு நிமிர்ந்து அதை மேற்சமுத்திரத்தில் விட்டெறிந்து கொக்கரித்தார் அது இன்றைக்கும் அந்தமேற்சமுத்திரத்திலே பிலத்தீபமென்று சொல்லப்பட்டிருக்கின்றது. அப்போது பூமிக்கும் அவ்விடத்திற்கும் வெளிச்சமாய் வழியுண்டாயிற்று. அவ்வழியால் எல்லாரும் ஸ்வயம்பிரபையை அழைத்துக்கொண்டு பூமியில்வந்து சேர்ந்தார்கள். வந்தவுடனே அந்தஸ்வயம்பிரபை அநுமான்செய்த உதவியைக் குறித்துப் பலவிதத்திலும் சந்தோஷப்பட்டு கற்பகச்சோலைசூழ்ந்த ஸ்வர்ணமயமாகிய தெய்வலோகத்திற்குப்போனள். வானரவீரர்களும் அநுமானுடைய புஜபலத்தைக்கொண்டாடிப் பேசிக்கொண்டு வழிநடந்துபோனர்கள் அங்கேயொரு பொய்கையைக்கண்டு அவ்விடத்திற்போய்ச் சேர்ந்தார்கள். அத்தருணத்தில் சூரியனும் மேற்சமுத்திரம்போய்ச் சேர்ந்தான்.

பிலநீங்குபடலம் - முற்றிற்று.

## ஆறுசெல் படலம்.

அந்தப்பொய்கையிலே மதுரமாகிய ஜலத்தை எல்லாருங்குடித்துத் தாகந்தணிந்து திர்ப்தியாய் அங்குள்ள காய்கனிகளையும் தேனையும்புசித்து அந்தப்பொய்கைக்கரையில் ஓரிடத்தில் படுத்துக்கொண்டு நித்திரைசெய்தார்கள். அப்போது ஒரு அசுரன்வந்தான் அவன்மலைபோல உயரமும், கடல்போலச் சரீரவிரிவும், கூற்றுவனைப்போலக் கொலைக்கொடுமையும் அக்கினிஜொலிக்கின்றகண்களும், பாலசந்திரனைப்போல இரண்டு கோரதந்தமுமுடையவன் மேகங்கள் உன்னதமாகிய அவன்தோளின்மேலதவழ்ந்து மழைபொழிகிறபடியினலே அருவியோடுகிற மலைக்குச் சமானமானவன் தேவர்கள் அசுரர்களொருவருக்கும் அடங்காதபலவந்தனெப்படிப்பட்டவர்களுக்கும் அவனுடனே யுத்தஞ் செய்யலாமென்று ஒருவிதத்திலாவது எண்ணக்கூடுமா! அப்படிப்பட்ட அசுரனனவன் செம்பட்டமயிர்கள் பிரகாசிக்கக் கைகளைப் பிசைந்துகொண்டு காற்றுடிபோல வேகமாய்வந்துபார்த்து இது நம்முடைய பொய்கையென்றறிந்தும் பயமில்லாமல் இவர்கள் வந்திறங்கி உறங்குகிறது நன்றாயிருக்கின்றதென்று அதிககோபமாய்வழிநடந்த வருத்தத்தினலே அயர்ந்து நித்திரைசெய்கின்ற வானரவீரர்களிருக்குமிடத்தில்வந்து அங்கதகுமாரனுடைய மார்பில் ஒரு அறை அறைந்தான். அறையவே அதிசீக்கிரமாய் அங்கதன் நித்திரைதெளிந்து எழுந்திருந்து இவன்தான் ராவணனென்றுநினைத்து அவன்மார்பில் தானும் ஒரு அறைகொடுத்தான், அந்த அறைபடவே அவ்வளவு பலசாலியான அவ்வசுரன் இடிவிழுந்து ஒருபர்வதம் ஒடிந்துவிழுந்ததுபோல அலறிக்கொண்டுபூமியில்விழுந்தான். அப்போது வானரவீரர்களெல்லாம் விழித்துக்கொண்டு எழுந்துவந்து சுற்றிக்கொண்டார்கள். மாண்டுவிழுந்துகிடக்கின்ற அந்த அசுரனைக்கண்டு அநுமானனவர் இவனர் என்னசெய்தானென்றுகேட்க, நானென்றும் அறியேனென்று அங்கதகுமாரன்சொல்ல ஜாம்பவந்தர் சொல்லுகிறர். இவனைநானறிவேன் இந்தப்பொய்கைக்கு நாயகனனவன் மகாபலவானகிய துமிரனென்னும் புட்கலனென்றுஞ்சொல்லுகின்ற பெயரினையுடைய அசுரனிவனென்று சொன்னர். அதுகேட்டு வானரவீரர்கள் அப்படிதானிருக்கலாம் அல்லவென்றல் மற்றொருவர் இங்கேவருவாராவென்று பேசிக்கொண்டு உறக்கந் தெளிந்தபடியினலே அங்கிருந்து புறப்பட்டு அப்போதேநடந்து சூரியன் உதயமாகிற வேளைக்குப் பெண்ணைநதியினிடத்தில்வந்து சேர்ந்தார்கள். மணம்குன்றிய ஸ்தனபாரங்களையும் ஆம்பற்புஷ்பமாகிய வாயினையும், முத்துக்களாகிய வெண்பற்களையும், தாமரைப்புஷ்பமாகிய முகத்தையுமுடையதாய் ஒரு பெண்ணுக்கு ஒப்பாகிய அந்தப் பெண்ணைநதியினிடத்தில் சீதையென்கிற பெண்ணைத்தேடவந்தவர்கள் அந்நதித்துறைகளையும், மயில்கள் கூத்தாடுகின்ற இடங்களையும், நதிமத்தியிலுள்ள திட்டுகளையும், பூஞ்சோலைகளையும், குளிர்ந்தசாரலையும், கயங்களையும், தடாகங்களையும், பளிக்கறைகளையும் தேடிப்பார்த்து மூழ்கினவர்களுடைய பிறவிப்பிணியின்வேரை அறுத்துத்துணிக்கின்றதும், நீர்ச்சுழிகள்தோறும் ரத்னங்கள் கொழிக்கின்றதுமாகிய அந்தப்பெண்ணைநதியின் கரையிலேதானே அன்றையதினந் தங்கியிருந்தார்கள். மற்றைநாள ஆற்றைத்தாண்டிக் காடுகள்மலைகளெல்லாங்கடந்து நாடுவந்துசேர்ந்தார்கள். அங்கேயிருக்கின்ற சிங்காரங்களெல்லாம்பார்த்து அந்நாடுகடந்து உசனவனென்கின்றபெயரினையுடையநக்கிரன்பிறந்த விதர்ப்பதேசம்போய்ச் சேர்ந்து மார்பிலே பூணூல்பிரகாசிக்கக் கையிலேதர்ப்பையேந்தி ரிஷிகள்போலவேடந்தரித்துக்கொண்டு எங்குந்தேடிப்பார்த்து அங்கிருந்துசிந்துதேசம்வந்து அதைவிட்டுப் புறப்பட்டுத் தந்துவங்களை யறிந்தமஹாரிஷிகள்வாசமாயிருக்கின்ற தண்டகாரண்யம்வந்துசேர்ந்தார்கள். அந்தத்தண்டகாரண்யமெல்லாம்தேடிப்பார்த்து முண்டகத்துறைக்குவந்து, அங்கேயிருக்கின்றதடாகங்களிலேசார்வதரதேவரம்பைகள்வந்துஸ்நானஞ்செய்கிறபடியினலே, அந்தத்தடாகஜலமெல்லாம்அவர்களுடையஸ்தனங்களில்தரித்திருக்கின்றசந்தனகும்பங்களும் கூந்தலில்தடவியமயிர்ச்சாந்தும்பரிமளிக்கிறதினுல்அதுகளிலுள்ளமீன்களின்புலால்நாற்றம்மாறிப்போய்விடுகிறது. அதனல்அங்கேவாசமாயிருக்கின்ற பக்ஷிகள் அந்தமச்சங்களைப் பக்ஷிக்கிறதில்லை மதயானைகள் அநேகமாய்வந்து அதுகளில் மூழ்கியாடுகிறதும் கிஞ்சையஸ்திரீகளும் புருடர்களும் கோலாகலமாயாடுகிறதும் கமுகமரத்தில் ஊசல்போட்டு ஸ்திரீகள் ஏறியாடுகிறதுமாகிய இப்படிப்பட்ட பலபலசிங்காரங்களுண்டான அம்முண்டகத்துறையெல்லாம் தேடிப்பிராட்டியாரைக் காணுமல் மனநோம்படி. அதைவிட்டுப்புறப்பட்டு திரிவிக்கிரமவ்வருமாய் உலகத்தையளந்தநாராயணனுடைய திருவடியில் நின்றும் கங்கை யிழிவதுபோல, தாவள்யமாகிய பாண்டு பர்வதத்தின் ஆகாசத்துயவாவிய சிகரத்திற்போயேறினர்கள். இருளைநீக்கி வானத்தி லெழுந்த சந்திரனுக்கு மருட்சியையுண்டாக்கும்படி தவளநிறமாய் பிரகாசிக்கலால் இருமையில்லா ராவணனை முன்னளில் அழுத்திக்கொண்டிருந்த கைலாசபர்வதம்போலிருக்கின்ற அந்த மலையினிடத்திலும் தேடிப்பார்த்து ஜானகியைக்காணுமல் புலிக்குச் சமானமாகிய வானரர்கள் விசனப்பட்டு அதைவிட்டுநீங்கிராக்ஷதனல் வஞ்சிக்கப்பட்டுப் போகும்பொழுது பிராட்டியாருடைய கூந்தலில்நின்றுஞ்சோர்ந்து வந்துபூமியிற்சேர்ந்த மலர்மாலைபோலிருக்கின்ற கோதாவிரிநதியினிடத்திற் வந்துசேர்ந்தார்கள். அலையெழுந்து இரைந்து விழுந்து முத்துக்களையொத்த நீர்த்துளிகளைச்சிந்தும்படி யோடுகின்ற அந்த நதியானது, பூமியாகியதாயானவள் தன்மகளாகிய சீதையின் துயரத்தை நினைத்துக்கொண்டு அழுகிறதுபோலிருந்தது. பின்னும் அநேகரத்னங்களையும் சொர்ணங்களையும் வீசிப் பிரகாசிக்கின்ற, அந்நதியானது, ஜடாயு ராவணன்மேற் போய்விழுந்து, அவனுடையமார்பிலிருந்து பறித்தெறிந்த ரத்னஹாரங் கிடக்கிறதுபோலவுமிருந்தது. அப்படிப்பட்ட கோதாவிரிநதித்துறைகளிலெல்லாந் தேடிப்பார்த்து லோகமாதாவைக்காணுதவர்களாய் அதைவிட்டுத் தீவினைகளை நிவர்த்திசெய்கின்ற சுவணைத்துறைவந்துசேர்ந்தார்கள். அங்குந்தேடிப்பார்த்துக் குலிந்ததேசத்துக்கு வந்து அவ்விடத்திலெங்குந்தேடிப் பார்த்து அதைவிட்டு, எழுவகைப்பட்ட கொங்கணங்களையுந்தேடிப்பார்த்து, அதுகளைக்கடந்து தெய்வதிலங்களெல்லாந் தாண்டிச் சந்திரமண்டலமட்டும் உயர்ந்து, தேவர்களும் நமஸ்காரஞ்செய்யும்படி பிரகாசித்துக்கொண்டிருக்கின்ற அருந்ததிபர்வதத்தின் சமீபத்தில் வந்தார்கள். அவ்விடத்திலுஞ்சீதையைத்தேடிப்பார்த்துக் காணுமல் அப்பால்போய், இடைப்பெண்கள் மலைமேலிருக்கின்ற வேடப்பெண்களிடத்தில் தயிரைக்கொடுத்து மலைத்தேனை வாங்கிக் கொள்கின்ற சிறப்பினையுடைய மாககபர்வதமெல்லாந்தேடிப்பார்த்து அங்கும் ஜானகியைக்காணுமல் அதைவிட்டுப்புறப்பட்டு அப்பால் நடந்து பூமிக்குத் திலகமாகிய திருவேங்கடபர்வதம்வந்து சேர்ந்தார்கள். அவ்விடத்திலுள்ள கோனேரிதீர்த்தத்தில் முனிஸ்வரர்களும் வைதிகர்களும் வினைகளையொழித்த மெய்ஞ்ஞானிகளும் சகலதேவர்களும் அவர்களுடைய நாயகிமார்களும் சித்தர்களனைவரும் அனவரதமுழு[illegible] செய்கின்றதும் ஐவகைப்பட்ட இந்திரிய[illegible]டைகளும் காமமும்மன்மதபாணமும் ஒழியும்படி அநேகதேவர்கள் தபசுசெய்கின்றதும் சக்ராயுதத்தை வலக்கரத்திலே ஏந்திய கார்மேகத்தைப்போலும் கரியதிரு[illegible]ஸ்ரீநிவாசன் திருவடியைத்தாங்கியதுமாகிய அந்தத் திருவேங்கடபர்வதத்திலிருக்கின்ற மிருகங்களும் பரமபதமடையுமாகில் திருவேங்கடத்தானை மனதினல் தியானித்து வாக்கினல்துதித்து தலையினல்வணங்குகின்ற நன்னெறியையுடையபெரியோர்களுக்கு அந்தமோக்ஷம்சித்திக்காமற் போகுமா! அப்படிப்பட்ட திருமலையி னிடத்தில்போய் அவ்விடத்திலிருந்து அருமையாகிய தபசுசெய்கின்றவர்களைத் தரிசித்து, திருவேங்கடநாதனைச் சதாகாலமுஞ்சேவித்துக்கொண்டிருக்கின்ற பாகவதர்களுடைய திருவடிகளுக்குத் தாளுந்தடக்கையுங் கூப்பித் தெண்டன் சமர்ப்பித்து, அநுமான் அங்கதன் ஜாம்பவந்தர்முதலானவர்கள் அங்கே பிராட்டியாரைத் தேடிப்பார்த்து அதைக்கடந்து, வேதப்பிராமணர்களைப் போல எக்யோபவீதம் தர்ப்பை மௌஞ்சி மான்தோல் தண்டமாலை முதலானதுகளுந் தரித்து, துவாதச ஊர்த்வபுண்டரமிட்டுக்கொண்டு தண்டகாட்டிற்குவந்தார்கள். அந்தகாட்டிலிருக்கின்ற தென்னமரத்தின் இளம்பாளையைப்பார்த்து காரையென்று நினைத்துச் சேற்கண்டைகள் நடுங்கியோடுகிறதும். செவ்வல்லியரும்பைச் சாரைப் பாம்பென்று நினைத்துத் தேரைகள்வாய்விட்டுக் கதறுகிறதும் பள்ளஸ்திரீகள் சங்குகளீன்ற முத்துக்களை எடுத்துப்பார்த்து, நாரையின் பொரியாத முட்டையென்று நினைத்து அதை மறுபடியும் உடைக்கிறதும், கடுவன் குரங்குகள்புன்னையைக்கொண்டு வேர்ப்பலாக்கனியைப் பிறியெடுத்து

அங்குள்ள தேனிருலில் தோய்த்து விழுங்குகிறதும் அநேகமலைகள் காடுகள் கிராமங்களும் பலவகைவிருக்ஷங்கள் நெருங்கியசோலைகளும் செந்நெல் கமுகு வாழை கரும்புமுதலானதுகளும் நிறைந்திருக்கின்றதும், அன்னங்கள் குயில்கள் மயில்கள் கொக்குக ளிருக்கிறதும் அவ்விடத்திலுள்ளவர்கள் வடகலை தென்கலைகளுக்கு உரியவர்களாய்த் தர்மம் தானம் தியாகமுதலானதுகளையும்மறவாமல் துஷ்டநிக்கிரகஞ்செய்து இல்வாழ்க்கை தவறுமலிருக்கிறதுமாகிய பலவகைவளப்பங்களையும்பார்த்து அந்தத் தண்டகாருகடந்து காவேரிசூழ்ந்த சோழநாட்டிற்குவந்தார்கள். அந்தநாட்டிற் செந்நெற்பயிரும் கரும்புகளும் கமுகமரங்களும் எங்கும்நெருங்கி, போகிறதற்குத்தடையாயிருக்கின்ற மார்க்கத்தை அருமையாய்க்கடந்து, சோலைகளிலிருக்கின்ற புஷ்பங்கள் தேனைமிகவும்சொரிகிறபடியினாலே அதனையறியாமல் ஜலப் பிரவாகம்வந்ததென்றுபயந்து குரங்குக ளெல்லாம் மரங்களின்மேலேறிப் பூமியில் இறங்காதிருக்கின்றதும், ஆலையாடியகருப்பஞ்சாறுநிறைந்த கூன்களை மச்ச மிருக்கின்ற குட்டைகளென்றெண்ணி, நீர்க்காக்கைகள் அதுகளிலே மூழ்கிமூழ்கி எழுகின்றதும், தாழம்பூவின்வாசனை மாங்கனிக்கு உண்டா யிருக்கின்றதும், செங்கழுநீர் வாசனை சேற்றுக்கு உண்டாயிருக்கின்றதும் மற்றும் இப்படிப் பட்ட அநேகசிங்காரங்களையும்பார்த்து அதிசயித்து, தேங்காய்களிடறவும், தேன்களில் கால்வழுக்கவும் நடந்து அந்தச்சோழதேசத்தைத் தாண்டி அப்பால் சேரநாட்டிற்குப்போய் [illegible] சீதையைக்காணமல் அதைக்கடந்து தமிழ்நாடாகிய பாண்டிநாட்டில்வந்து சேர்ந்தார்கள். அந்தப்பாண்டிநாடானது முத்தையும் இயல் இசைநாடகமென்னும் முத்தமிழாகிய மூவகை அமிர்தங்களையுங் கொடுக்கிறபடியினாலே ஒருவகை அமிர்தத்தை மாத்திரங்கொடுக்கின்ற தேவலோகத்தை அதற்குச்சமானமாகுமென்று சொல்லலாமா ! சொன்னாலுஞ்சரியாமா ? அப்படிப்பட்ட நாட்டுவளப்பங்களையெல்லாம் பார்த்துக்கொண்டு, அந்தநாடெங்கும் பிராட்டியாரைத்தேடிக்காணமல் சோர்ந்து நிர்ஜீவர்களாய் நடந்து திக்கஜம்போலிருக்கின்ற மகேந்திரபர்வதத்தி னிடத்தில் வந்து சேர்ந்தார்கள்.

ஆறுசெல்படலம்-முற்றிற்று.

---

## சம்பாதிப் படலம்.

நீருண்டமேகத்தைப்போல முழங்கி அலையாகிய கையைமேலேதூக்கி ஜானகியானவள் இலங்கையி லிருக்கின்றாளென்று சொல்லி எதிரேவந்து வாருங்களென்று அழைக்கிறதற்கு ஒப்பாயிருக்கின்றதென்சமுத்திரத்தைக்கண்டார்கள் முன்பு நீங்கள்பிரிந்து எட்டுத்திக்கிலும்பரவிப் பார்த்துக்கொண்டுபோய் மகேந்திர பர்வதத்தினிடத்தில்வந்து எங்களுடனே கூடுங்களென்று அங்கதன் முதலானவர்களால் அனுப்புவிக்கப்பட்ட வானரசேனையும் ஒருபெரிய சமுத்திரம்வந்ததுபோல அங்கே வந்து கூடியது. எல்லாரும் அவ்விடத்தில் வருத்த மில்லாமல் வந்து பிராட்டியாரைக்காணுகபடியினாலே, அப்பால்செய்யத்தக்கது ஒன்றும் அறியாதவர்களாய்க் கிலேசித்து நாக்குழறப்பேசுகின்றார்கள். நம்முடைய ராஜா நமக்குச் சொன்னநாளும் கழிந்துபோய்விட்டது. நாம் நாடிவந்தகாரியத்தை இன்னம்முடிக்கவில்லை. பிராட்டியாரைக்காணமற்போனால் ஸ்ரீராமருக்குப் பிராண னிராது. நம்முடைய ராஜாவின் ஆக்கினையினாலே அவர்சொன்ன இடமெல்லாம் தேடினோம். இனி நம்மால் செய்யவேண்டியது ஒன்றுமில்லை. ஆதலால் அருமையாகிய தபசுசெய்வோமா ! விஷமாகிலுந் தின்று இறந்து போவோமா ! எப்படியாவது இந்த இரண்டுவிதத்தில் ஒருவிதம் அவசியஞ்செய்து தீர்வோமென்றும் அல்லவென்று இருந்தும் ஸ்வாசத்தைக் காணோமாகையால் பிராணத்தியாகம்பண்ணிக்கொள்ளுகிறதே நன்மையென்றும், இவ்வண்ணமாகச்சொல்லிக்கொண்டு கடலின்பக்கத்திலே அநேகம் மகமேருகிரிகூடியிருக்கிறதுபோலக்கூடியிருந்து விசாரப்படுகின்ற வானரவீரர்களுக்கு இளவரசாகிய அங்கதகுமாரன் துயரத்துடனே ஒருவார்த்தை சொல்லுகிறான். அந்தப் புருஷோத்தமனுடனே உலகமெல்லாந் தேடிப்பார்த்து உம்முடையதேவியாரைக் கொண்டுவந்து விடுகிறோமென்று வாய்ப்பெருமையாகச் சொன்னோம், சொன்னதை அந்தப்படிசெய்யாமற் போனோம். சீக்கிரமாய்ப்போய் நடந்த சமாச்சாரத்தையுஞ் சொல்லவில்லை. இனிமேலாகிலும் நாம் எண்ணிவந்தகாரியங் கைகூடிவருமென் றெண்ணுகிற தற்குத் தைரியமு மில்லை. இப்படியெல்லாம்வந்து நேர்ந்த படியினாலே இனி ஜீவனைவிட்டுக்கொள்ளாமலிருந்தால், ஸ்வாமிக்கு நாம் அடிமையென்பது என்ன இருக்கின்றது. எங்கள் பிதாவானவரும் கோபித்துக்கொள்ளுவார். ஸ்ரீராமரும் திருவுளம்வருந்துவார் அதை என்கண்ணினாலே பார்க்கமாட்டேன். நான் பிராணனைவிட்டுக்கொள்ளுகிறேன். நீங்கள் போய் இந்தச்செய்தியைச் சொல்லுங்களென்று சொன்னான். இவ்விதமாக அங்கதகுமாரன்சொல்லவே ஜாம்பவந்தரானவர் அவனைநோக்கி விஜயலக்ஷுமி வாசஞ்செய்கின்ற தோளினையுடைய அங்கதகுமாரனே நன்றாகச் சொன்னீர். நீரிறந்துபோனால் நாங்களெல்லாம்இவ்விடத்திலிருந்து அழுவோமா எங்களுடைய அன்பெல்லாம் பாழாய்ப்போக ஸ்வாமியினிடத்திலும் உங்கள் பிதாவினிடத்திலும்போய்த் தொழுவோமா ! மீண்டுபோய்ச் சொல்லுகிறதற்குத்தான் விசேஷமான சமாச்சாரம் என்னஇருக்கின்றது. ஆகையால் நாங்கள் மாண்டுபோகிறதே யுக்தமென்று உறுதிப்படுத்திக்கொண்டோம். எங்கள் ராஜாவின்புத்திரசிகாமணியாயும் எங்களுக்கெல்லாம் இளவரசாயுமிருக்கிறவராகையால், நீரப்படிச் செய்கிறது தர்மமல்ல. உயிருடனே சுகமாய்ப்போய்ச் செய்தி சொல்லலாமென்றுசொல்ல வாலி புத்திரனாகிய அங்கதன் நீங்களெல்லாம் இறந்துபோக நான்மாத்திரம் உயிருடனேபோய்ச் சேர்வேனேயாகில் அது எனக்குத்தான் நன்மையா யிருக்குமா ! இதற்கு நான்சம்மதித்தாலும் உலகம் சம்மதிக்குமா ! பெரியவர்கள்சொல்லும்பழி



ச்சொல்லுக்கு அஞ்சிக் கூடப்போன தன்னுயிர்க்கு ஒப்பானவர்களெல்லாம் பிராணனை மாய்த்துக்கொள்ள தான்மாத்திரம் பிராணனுடனே வந்து சேர்ந்தா னென்று உலகத்திலுள்ளவர்கள் சொல்லுகிறதற்குமுன்னே நான் பிராணத்தியாகம் பண்ணிக்கொண்டு ஸ்வர்க்க லோகம் போய்ச் சேர்வேனென்று சொல்லிப் பின்னும் அந்த அங்கதன் சொல்லுகிறான். நாமிவ்விடத்திலே மாண்டுபோனசெய்தி என்தாய்க்கும், தந்தைக்கும், எப்படியும் தெரியப்படும்படி ஆராவது சொல்லவுங்கூடும். இதைக் கேட்டால் அவர்கள் உடனே மாண்டுபோகவுங் கூடும், அதைக்கண்டு ஸ்ரீராம லக்ஷுமணர்களாகிய இருவரும் இறந்துபோவதும் சித்தம் அந்தச்செய்தி அயோதிக்குப் போனால் பரதாழ்வாரும், சத்துருக்காழ்வாரும், பெற்ற தாய்மார்களும், அந்நகரத்தார் சகலரும் பின்பு பிராணனுடனுமிருப்பார்களா ! சத்தியமாக ஒருமிக்க மாண்டுபோவார்கள். ஜானகியென்று உலகத்தாராலேசொல்லப்பட்ட மகத்தாகிய தவத்தினையுடைய ரத்ன தீபத்தையொத்த ஒரு பாக்கியவதியினாலே உலகத்திலுள்ள எல்லாருக்கும் கரைதெரியாததுயரம்வந்து விளைந்ததே யென்றுசொல்லி அங்கதன் கோ கோ வென்று அழுதான். அப்படி அதைரியத்துடனே துக்கித்துத் தைரியபுருஷனாகிய இளஞ்சிங்கத்தை ஒத்த புஜபலத்தையுடைய அங்கதன் சகிக்காமல் சொன்னசொல்லானது தடுக்கப்படாத பெருநெருப்பை மூட்டினதுபோல மனமறுகக்கேட்டு அவன்முகத்தைப்பார்த்து ஜாம்பவந்தர் சொல்லுகிறார். ஐயா ! நீரும் உம்முடைய பிதாவுமாகிய இருவர் தவிர உங்கள் வமிசத்திற்கு வேறே புத்திரனில்லையே ! அதையோசித்து நான்சொன்னேன். அல்லவென்று உங்களுக்கு அபாயமானால் அப்பால் என்னகாரியங் கைகூடிவரப்போகின்றது, ஆதலால் நீர் துயரத்தைவிட்டு அவ்விடத்திற்குப்போய் பிராட்டியாரைக் காணாததையும் சொல்லி எங்கள்மானத்தையும் தெரியப்படுத்தும். இந்தச்சோகத்தை அடையவேண்டா மென்றுசொல்ல அவ்வார்த்தைகேட்டு அநுமானானவர் அவர்களைப் பார்த்து என் இத்தனை அதைரியப்படுகிறீர்கள் இந்தத்திரிபுவனங்களிலும் நாம் ஒருபக்கத்திலாவது செவ்வையாகத் தேடிப்பார்க்கவில்லையே மிகுந்த வேகத்தையுடைய நீங்கள் வஞ்சகர்களைப் போலவும், வீரமில்லாதவர்களைப் போலவும், இப்படிப்பேசுகின்றதென்னவென்று பின்னுஞ்சொல்லுகின்றார். பாதாளத்திலும், தேவலோகத்திலும், மகமேருபர்வதத்திலும், மற்றுமுண்டாகிய அண்டங்களிலும் தேடிப்பார்த்து அந்தமகாலக்ஷுமியைக்கண்டோமேயானால் நம்முடைய ராஜாவானவர் சொன்னதவணையில் ஏன்வரவில்லையென்று கேட்பாரா ! அவருக்குக்காரியாநுகூல மாகிறதொன்றே பிரதானமாகையால் நாம் இன்னமுந் தேடத்தக்க இடமெல்லாம் தேடிப்பார்க்கிறதேநல்லது. அப்படித்தேடியும் அகப்படாவிட்டால் முடிவிலே அந்தஜனகிப்பிராட்டியினிமித்தமாய்ப்போய் யுத்தத்தில் பிராணனைவிட்டஜடாயுவைப்போல நாமும் இறந்துபோவதே பெருமை அப்படிச் செய்யாமல் முந்தி யுயிர்விடுவதே பழியாகுமென்றுசொன்னார். அந்தப்பிரகாரம் அநுமானானவர் சொன்னசொல்லை அங்கே உயர்ந்த மலையின்மேலிருந்த ஜடாயுவின் தமயனாகிய சம்பாதியென்னும் பெயரினையுடைய கழுகின் கூட்டத்திற்கு ராஜாவானவன் சத்தியசந்தனாகிய தன்தம்பி ஜடாயு மாண்டுபோன செய்தியாய்க் காதில்விழக்கேட்டு முறைதவறுத என்தம்பி இறந்துபோனானென்று தன்னெஞ்சம் பறையடிக்க, சரீரம்பதைக்கத் தேவேந்திரனானவன் தனது வச்சிராயுதத்தைக்கொண்டு சேதிக்காததற்குமுன்னே சிறகு அறுபடாதிருந்த மலைவருகிறதுபோல இவர்களுக்குச் சமீபத்தில் வரத் தொடங்கினான். பராக்கிரமசாலியாகிய என்தம்பியைச் சத்துருக்கள் அஸ்திரத்தால் கொன்றதைக்குறித்து உலகத்தார் துக்கப் படுகிறதுபோலக் காண்கின்றதென்று நினைத்து கண்ணீரானது மழையருவிபோலப் பெருகிவழிந்துபோய்ச் சமுத்திரத்திலே விழும்படி அழுகின்ற கண்ணையுடையவனாகியும் மரங்கள் மலைகளெல்லாம் பொடியாகப் பிரசண்ட மாருதமானதுமோதப் பூமியில்நின்றும் பெயர்ந்தெழுந்த வெள்ளிமலைக்குச் சமானமாகிய மேனியையுடையவனாகியும் வந்த சம்பாதியைக்கண்டு அங்கிருந்த வானரவீரர்களெல்லாம் பயந்து [illegible]கள் அந்தக்ஷணத்தில் எங்களையனாகிய அநுமானனவர் அவ்விடத்தில்தானே நின்றுகொண்டு அட வஞ்சகனே ! நீ யிந்தக் கள்ளமாகிய ராக்ஷதரூபத்தை யெடுத்துக்கொண்டு வந்தையே பிழைப்பையாவென்றுசொல்லிக் கண்கள் நெருப்பைச்சொரிய உற்றுப்பார்க்கும்போது மனதிலே கோபமில்லாமல் அதிக துக்கத்தையும் சோகத்தையுமுடையவனாகியும் விழிகளிலிருந்து நீர் பெருகும்படி சங்கைப்படுதற்குரிய குற்றமாகிய குறியொன்று மில்லாதவனாகியுமிருக்கின்ற அந்தச்சம்பாதியின் தன்மையானது சமீபத்தில் அவன் வந்தவிடத்தில் செவ்வையாய்விளங்கியது. அதைக்கண்டுகொண்டு அதிநுட்பமாகிய சாஸ்திரக்கேள்வியையுடைய அநுமானானவர் தம்முடைய வாயைத்திறந்து யாதொரு சொல்லுஞ்சொல்லாததற்குமுன்னே கொல்லப்படாத ஜடாயுவைக் கொன்றவர்கள் ஆரையா ! சொல்லுங்களென்று சம்பாதிகேட்டான். நீயார் உண்மையாக உன்னைத்தெரியும்படி எனக்குமுன்னே சொன்னால் பின்பு நீ கேட்டதைக்குறித்து நான்சொல்லுகிறேனென்று அநுமானானவர்சொன்னார். அதுகேட்டுச் சம்பாதியானவன் ஜடாயுவென்பவன் எனக்குத்தம்பி அந்தத் துணைவனை இழந்த பேதையாகிய நான் அவனுக்குத் தமயன் என் பெயர் சம்பாதியென்று சொன்னான். அவன் சொன்ன சொல்லைக்கேட்ட அநுமானானவர் துக்கசமுத்திரத்திலே மூழ்கி அந்தக்கரை யேறினவராய் உம்முடைய தம்பியாகிய ஜடாயுவை ராவணன் வாளினாற் கொன்றானென்று சொன்னார். அந்த வார்த்தையைக்கேட்ட மாத்திரத்தில் இடிவிழுந்து முறிந்த பர்வதம் போலப் பூமியிலேவிழுந்து மூர்ச்சித்துப் பெருமூச்செறிந்து விம்மி உயிர்பதைக்க அழத்தொடங்கினான்.

கவி.

இளையாநீள்சிற கின்றிவெந்துகத் ........*
தளையானே னுயிர்போதறக்கதால்........*
வளையாநேமியன் வண்மைசால்வலிக்.........*
கிளையானேயிது வென்னமாயமோ...........(க)

மலரோனின் னுளன் மண்ணும்விண்ணுமுண்........*
டுலையாநீடற மின்னுமுண்டரோ............*
நிலையார்கற்பமு நின்றதின்றுநீ..............*
இலையானுயிது வென்னதன்மையோ..........(உ)

உடனேயண்ட மிரண்டுமுந்துயிர்த்...........*
திடநாள்வந்திரு வோமுமெய்தியான்..........*
விடநீயேதனி சென்றவீரமும்.................*
கடனேவெங்க லுழற்குமேன்மையாய்..........(ங)

ஒன்றுமூன்றுல கத்துளோரையும்................*
வென்றுளென்னினும்வீரகிற்குநேர்..............*
நின்றுனேய வரக்கனின்னையும்................*
கொன்றுனேயிது வென்னகொள்கையோ.........(ச)

என்பன—என் தம்பி! நீயும், நானும், பால்யத்திலே வேகத்துடனே வானத்தில் உயர்வாய்ப் பறந்தபோது, சூரியனுடைய கிரணத்தின் உஷ்ணத்தினால் சிறகுவெந்து உதிர்ந்துபோகப் பூமியில் விழுந்து எழுந்திருக்கமாட்டாமல் ஒளித்துக்கொண்டு கிடக்கின்ற நானல்லவோ இறக்கவேணும்! அந்தச் சூரியனுடைய வெப்பத்திற்கு இளையாமல் சகித்திருந்த நீ முன்னே இறந்து போனது என்னமாயமோ! பிர்மதேவனிருக்கின்றான். பூமியும், ஆகாசமுமிருக்கின்றதுகள். தர்மமுமிருக்கின்றது. கற்பமுமிருக்கின்றதே! நீமாத்திரம் இராமற்போனாய் இது எத்தன்மையோ! பூர்வம் நீயும் நானும் உடனே இரண்டு முட்டையில்நின்று உதிக்கின்ற பருவம்வந்துபிறந்து ஒன்றாய் வளர்ந்திருந்தோம். இப்போது நான் பிரிந்திருக்க நீயொருவனும் தனியேபோனது சகோதர உரிமையாகுமா! கருடனுக்கும் மேன்மையாகிய பராக்கிரமமுடையவனே! அந்த ராக்ஷதனாகிய ராவணன் மூன்றுலோகங்களையும் ஜெயித்தவனானாலும் உன் முன்னும் எதிர்த்து நின்றானோ! உன்னையுங் கொன்றானோ! இதென்ன ஆச்சரியமடா ஐயா! என்று இந்தப்பிரகாரம் சொல்லிச் சொல்லி, ஏங்கி! இறங்கி! அதிக துக்காக்கிராந்தனாய்த்தானும் இறந்துபோகும்படி வருந்தினித்தபோது அந்தச் சம்பாதியைப்பார்த்து அநுமானானவர் ஸ்ரீராமருடைய காரிய நிமித்தமாய் இறந்த அந்த மகாநுபாவனுடைய பாக்கியமே பாக்கியமென்று சொல்லித் தேற்றத்தேறி அநுமானைநோக்கி எமனுக்குச் சமானமாய்க் கொலைசெய்கின்ற வாளையுடைய அரக்கனுடனே எதிர்த்து என்தம்பி சண்டைசெய்ததற்கு ஏதுவென்ன சொல்லுமையாவென்றுகேட்க, வாயுகுமாரனாகிய அநுமானானவர் சொல்லுகின்றார்: எங்கள் நாயகராகிய ஸ்ரீராமருடைய தேவியும் செங்கோலைச் செலுத்துகின்ற ஜனகமகாராஜனுடைய குமாரியுமாகிய சீதாபிராட்டி தன் பிராணநாயகனைவிட்டுப் பிரியும்படி கொடுங்கோலையுடைய வஞ்சகனாகிய ராவணன் மாயையினால் எடுத்துக்கொண்டு போகும்போது கண்டு உம்முடைய தம்பியானவர் தர்மந்தவறாதவராகி அதிககோபத்துடன் எதிரே ஓடிவந்துநின்று லோகமாதாவை வைத்துவிட்டு அப்பாலே போவென்று தகைந்து அவன் ஏறியதேரைச்சிதைத்து அவனுடைய தோள்களையும் சின்னபின்னமாக்கிற அழித்து மூர்ச்சிக்கும்படி அவனை அபஜெயப்படுத்தினார். அவன்பயந்து பின்பு நிட்சித்தனைப் மகாதேவருடைய வாளினால்வெட்ட சத்தியசந்தராகிய உம்முடைய தம்பியானவர் விழுந்தாரென்றுசொல்ல. அதைக்கேட்டுச் சம்பாதியானவன்தெளிந்து ஸ்ரீராமபிரானுடைய விஷயத்தில் உயிரைக்கொடுத்தானே அது நல்லகாரியம் நல்லகாரியமென்று கண்களில் ஆனந்தபாஷ்பம் பெருகும்படி சந்தோஷப்பட்டவனாகி என்தம்பி அந்தப் பகவானுடைய தேவியார் நிமித்தம் இறந்து பூமியில் எந்நாளும் புகழுடம்புடனேகூடி உஜ்ஜீவித்திருக்கிறானே யல்லாமல் அவனை மெய்யாயிறந்தவனென்று சொல்லக்கூடாதென்றும் தர்மஸ்வரூபனாகிய தசரதியுடனே என்தம்பி அன்பாயுறவுகொண்டாடி பிராணனையிழந்து ஒருவருக்கும் பெறக்கூடாத பேறுபெற்றானே! இதைப்பார்க்கிலும் இன்பம் என்ன இருக்கின்றதென்றுஞ்சொல்லி மனமுருகித் தம்பியைக்குறித்து ஸ்நானமுதலான துகநாஞ்செய்து தீர்ந்தபின்பு புஜபராக்கிரமமுடைய சம்பாதி யொருவார்த்தைசொல்லுகிறான், ஐயன்மாரே! கேளுங்கள் நீங்கள்வந்து என்னை ரக்ஷித்தீர்களேயல்லாமல் எனக்குத் துன்பத்தைக்கொடுக்கவில்லை, மேலும் என்னுடைய பாபகர்மத்தைக்கெடுத்து அஞ்ஞானமாகிய இருளைப்போக்கிக் கிர்தார்த்தனாச்செய்தீர்கள். நீங்களெல்லாரும் ஸ்ரீராமநாமசங்கீர்த்தனஞ் செய்யுங்கள் அதனால் எனக்குக்குறைந்து குறையாயிருக்கின்ற சிறகுவளரும் இவ்வளவு என்னிடத்தில் தயைகூருங்களென்று சம்பாதிசொல்ல அந்த அதிசயமும் பார்ப்போமென்று அநுமான் அங்கதன் ஜாம்பவந்தர் முதலானவர்களும் இரண்டுவெள்ள வானரவீரர்களும் அதிக அன்புடனே ஸ்ரீராம ராமாவென்று அந்த நீலமேகசாமளஸ்வரூபியின் திருநாமத்தைச் சொன்னார்கள். அப்படிச்சொல்லும்போதுதானே முன்னினிலேநீக்கு அநேகநாளாய்க் கட்டையாயிருந்த சம்பாதியின்சிறகு தளிர்த்து வளர்ந்து ஓங்கி ஆகாசமட்டும் அளாவச் சரீரமுங்குளிர்ந்து மகாபராக்கிரமசௌரியவந்தனாய் வானுக்கு உறையுண்டானதுபோலக் குறைவற்ற உறப்புண்டாய்ப் பிரகாசித்தான். அப்போது வானரர்களெல்லாம் அந்தச்சம்பாதிவந்ததும், சிறகில்லாமல் உருண்டதும், பார்த்திருந்தவர்களாகையால் உண்மைப்பொருளாகிய ரகுநாயகருடைய திருநாமத்தை உச்சரித்தமாத்திரத்தில் அவனுக்குச்சிறகுண்டாய் விளங்கியமகிமையைக்கண்டு ஆச்சரியமடைந்துபயந்து விம்மிதத்தோடே தேவனாகிய ஸ்ரீராமனைவாழ்த்திக்கொண்டாடி அந்தச்சம்பாதியை நமஸ்கரித்து ஐயா! பூர்வத்திலே நடந்த உம்முடைய விர்த்தாந்தஞ் சொல்லுமென்றுகேட்க, அவன்சொல்லுகின்றான். சம்பாதி ஜடாயுவென்கின்ற நாங்களிருவரும் ஆதிகாலத்திலே உலகத்தைச் சூழ்ந்த



இருளைநீக்குகின்ற சூரியனுடைய ரதத்தை நடத்துகின்ற சாரதியாகிய அருணனுக்குப் பிள்ளைகளாய்ப் பிறந்தவர்கள். கழுகின்கூட்டங்களுக்கெல்லாம் ராஜாவாகிராஜரீகஞ்செய்துகொண்டிருக்கையில் ஒருநாள் தெய்வலோகத்தைப்பார்க்கவேண்டுமென்றுஎங்களுக்கு நினைவுபிறந்து இருவரும்வானத்திலே உயரப்பறந்தோம். அவ்வண்ணமாகப்பறக்கிறபோது சூரியமண்டலத்திற்குப்போய் அவனுடையதேரைக்கண்டுங்காணுததற்குமுன்னே அக்கினியையுந்தகிக்கின்றகிரணங்களையுடைய அந்தச்சூரியன் சிறுதலால்முன்னேபறந்துபோனஎன்தம்பியின்மேனியைச் சூரியனுடையகிரணக்கினியானதுவெதுப்ப, என்னைப்பார்த்து அண்ணா! அண்ணா! என்னை ரக்ஷியென்றுசொன்னான். அப்படிச்சொல்லவே நான்முன்னேபறந்துஎன்னுடைய இரண்டுசிறகையும்விரித்துநீட்டி, அவனுக்கு அந்த உஷ்ணந்தாக்காமல் மூடிக்கொண்டு வந்தேன். அதனால் அவன்தன் இறகுவேகாமல்என்சிறகின்மறைவிலே தானே வந்துவிட்டான். என்னுடைய இறகும்சரீரமும் வெந்து நீந்து நான் இறவாமல் பூமியில்விழுந்தேன். அவ்விதமாய்ப் பூமியில்விழுந்த என்னை ஆகாசத்தில்பிரகாசிக்கின்ற சூரியபகவான்கண்டு இருவையுடையவனாய் இனிமேலொருகாலத்திலே ஜனகபுத்திரியாகிய சீதாபிராட்டியாரைக்காணுமல் தேடிக்கொண்டு வானர வீரர்கள் வருவார்கள். அவர்கள் உன்னைக்கண்டுராமநாமத்தைசெய்தால் அப்போது உனக்கு இறகுவளர்ந்து காமமாயெழுந்திருப்பாயென்று அநுக்கிரகஞ்செய்தான். நான் சிறகுபோய்ப்படிவிழுந்தபோது லோகசாரங்க னென்னும் நிசிபரனவர வாசஞ்செய்கின்ற மலைச்சாரலில்வந்து விழுந்தேபெருமூச்சுவிட்டு மனம்பேதித்துச் சரீரமுஞ் சிதைந்து அதிகவருத்தமுண்டானதால் உயிரோடிருப்பதற்குச்சம்மதியில்லாமல்பிராணத்தியாகம்பண்ணிக்கொள்ள எத்தனித்த என்னை அந்நாரிஷியானவர் கண்டு கல்மாஷகவர்களைப்போல மனக்களிப்பினால் நீ தெய்வலோகத்திற்குப்போக நினைத்து, வானத்திற்பறந்துபோய்ச்சூரியனுடைய கிரணங்களைத்தினால் உன்சரீரம்வெந்துபூமியில்வந்துவிழுந்தாய், இனிச் சிலகாலமாத்திரம் இந்த வருத்தத்துடனே உயிரைக் காப்பாற்றமாட்டாமல் விட்டுவிடத் துணிந்ததென்ன ஒழுக்கமோ! எப்போதுஞ் செருக்குற்றவர் அழிவதுநிச்சயம். கபடனாகிய ராவணன் ஜானகியை யெடுத்துப்போய் ஒளித்துவைத்த இடத்தைத்தேடிவருகின்ற வானரர்கள், ராமஸ்மரணை செய்யச்சிறகுவளர்ந்தோங்கும். இப்படி வீணைச் சோகப்படாதிருவென்று சொன்னார். அதனால் பிராணனைவைத்துக் கொண்டிருந்தேன். என்னுடைய துயரத்தைப்பார்த்து, என்தம்பியுந் துக்கப்பட்டு இறக்கத் துணிந்தான், அப்போது நான் நீயுமிறந்தால் கழுகுகள் ராஜாவில்லாமல், அலைந்துபோமென்றுசொல்ல, என் ஆக்கினையை மறுக்கப்பயந்து அப்படியே அவன் கழுகுகளுக்கு அரசனுன தேவர்களுஞ் சந்தோஷிக்கத்தக்க உத்தமர்களே என் பூர்வோத்தரம் இதுவாகும் நீங்கள் வந்தவரலாறென்னவென்று தெரியச்சொல்லுங்களென்று சம்பாதிகேட்க, அநுமான்முதலானவர்கள் ராமா! ராமபத்திரா! ராமசந்திரா! ரகுநந்தனா! தாசரதி! சீதாபதி! கருணாநிதி! ஹரசாபகண்டனா! கோதண்டதீக்ஷாகுரு! தீனரக்ஷகா! மதுகுலோத்தமா! சாமளஸ்வரூபி! சத்தியசந்தனா! தைத்திய குலாந்தகா! குகபாந்தவா! சுக்கிரீபசுமித்திரா! என்று ஸ்ரீராகவனைஸ்தோத்திரஞ்செய்து, அவனெழுந்தருளியிருக்கின்ற திக்குநோக்கித் தெண்டன் சமர்ப்பித்து, சம்பாதியைப் பார்த்துக் கேளுமையா அற்பச்செய்கையினையுடைய பாவியாகிய அந்தராவணன் சீதாலக்ஷ்மியை எடுத்துக்கொண்டு தெற்குத்திசையில் வந்தானென்று என்னைத் தேடிவந்தோமென்றுசொன்னார்கள். அதுகேட்டு நல்லகாரியம் நீங்கள் பயப்படாதிருங்கள் நானதைக் குறித்துச் சொல்லுகிறேன்கேளுங்களென்று சம்பாதிசொல்லுகிறான். அந்தலோகமாதாவை ராவணன் புஷ்பகவிமானத்தோடு எடுத்துக்கொண்டுபோகிறபோது நான் கண்டேன். லங்கையிலேதான் கொண்டுபோய்ச்சிறைவைத்திருக்கிறான். அவ்விடத்திற்குப் போனால் ஜானகியைக் காண்பீர்கள் இன்னமு மிருக்கின்றான் லங்கையோ எழுநூறுயோசனை விஸ்தீரணமுள்ளது அந்தப்பட்டணத்தை எமன்கூடக் கண்ணைவிழித்துப் பார்க்கப் பயப்படுவான். அந்த நீசனாகிய ராக்ஷதனுடைய கோபாக்கினியானது வடவா முகாக்கினியையும் தகித்துவிடும். ஆதலால், குற்றமற்றகுணத்தையுடையவர்களே! நீங்கள் எவ்விதத்தில் அந்தலங்கைக்குப்போவீர்கள். சதுர்முகப்பிரமாவினாலும், பார்வதிசமேதனாகிய சிவனாலும், திருப்பாற்கடலிலே சேஷசயனத்தில் யோகநித்திரை செய்கின்ற ஸ்ரீமகாவிஷ்ணுவினாலும் இந்தக் கடலைக்கடத்தறதோ அருமை. அதனால் உங்களுக்கு வருவதைக்குறித்துத் தீர்க்காலோசனைசெய்து பார்த்துக்கொண்டு போங்கள். சிரஞ்சீவியாகிய அநுமான்முதலான வானர வீரர்களே! எல்லாரும்போவோமென்ற யோசனையைவிட்டுவிடுங்கள். அந்தலங்கை அப்படிக்கு எளிதானதல்ல, சமர்த்தனானால் ஒருவர்மாத்திரம் மறைந்துபோயவ்விடத்திற்சேர்ந்து, பிராட்டியாரைக்கண்டு ஸ்வாமிசொன்ன செய்தியைச்சொல்லித் தைரியப்படுத்தித்துன்பத்தை நீக்கித்திரும்புங்கள். அல்லவென்றால் என்சொல்லை நீங்கள் உண்மையாகத்தெளிந்து இங்கிருந்து மீண்டு ஸ்வாமியினிடத்திற்போய்ச் சொல்லுங்கள் என்னுடைய தம்பி இறந்துபோனதினாலும், இனியந்தக் கழுகின் கூட்டங்களுக்கெல்லாம் தலைவனாயிருந்து காக்கின்றவர்களில்லாததினாலும் அதுகளிருப்பிடத்தைவிட்டு அலைந்து போய்விடும் ஆதலால், அதுகளைப்பாதுகாப்பதற்குத் துரிதமாய்ப்போகவேண்டியிருக்கின்றது. நீங்கள் மிகவுந் தெளிந்தவர்களானபடியினாலே நான்சொல்லிய இரண்டுகாரியத்தையும் செவ்வையாக எண்ணிப்பார்த்து, யுக்தமானதைச்செய்யுங்களென்றுசொல்லி மேலெழும்பி, ஆகாசத்தையெல்லாந் தன்சிறகு மறைக்கும்படி சம்பாதிபறந்துபோனான்.

சம்பாதிப்படலம்-முற்றிற்று.

ஸ்ரீராமஜெயம்.
ஹரிஹரஹிரண்யகர்ப்பேப்யோநம.

ஸ்ரீ சீதாலட்சுமண பரதசத்துருக்ந அநுமத்சமேத
ஸ்ரீராமசந்த்ர பரப்பிரம்ஹணே நம:

# ஸ்ரீமத்கம்பராமாயணவசனம்.

## சுந்தரகாண்டம்.

### கடல்தாவுபடலம்.

விருத்தம்.

அலங்கலிற்றோன்றும்பொய்ம்மைபரவெனப்பூதமைந்தும்.........................*
விலங்கியவிகாரப்பாட்டின்வேறுபாடுற்றவீக்கம்.........................*
கலங்குவதெவரைக்கண்டாலவரென்பகைவில்லேந்தி.........................*
இலங்கையிற்பொருதாரன்றேமறைகளுக்கிறுதியாவார்.........................*

அப்படி மஹேந்திரகிரியின்மேல்நின்ற அநுமானனவர் தம்முடைய கண்ணுக்கு நேராய்ச்சமீபத்தில் தெய்வலோகம் பிரகாசிக்கக்கண்டு, இதுதானிலங்கையென்று நினைத்து ஐயப்பட்டு உடனே இது உயரத்திலிருக்கிற படியினாலேலங்கையல்லதெய்வலோகமென்றும். இதில் ஸீதாபிராட்டியாரில்லை யென்றும் தெரிந்துகொண்டு பார்வையைத் தாழ்த்திப் பார்க்க, அந்தத்தெய்வ லோகத்தினும் மிகவும் அதிசயமாகிய பரிமளம் வீசுகின்ற சிங்காரவனங்களும் - வட்டமாகிய ஸ்வர்ண மதில்களும் வெற்றிக்கொடிகட்டிய வாசல்களும்-ரத்னகசிதமாயும் கனகமயமாயும் விளங்குகின்றமாடமாளிகை கூடகோபுரங்களும்-வீதிகளுமுண்டாய்த் தகத்தகாயமா யிருக்கின்றலங்கையைக்கண்டு, அதிகசந்தோஷமாய் அண்டசடாகமும் அஷ்டதிக்குகளும் குலுங்கும்படி புஜங்களைக்கொட்டி அட்டஹாசம் செய்து, முடிவில்லாத உன்னதமாகியவிஸ்வரூபத்தையுடைய ஆஞ்சனேயர்நின்றபடி இரண்டுகாலையுமூன்றி-மஹாபராக்கிரமத்துடனே அப்பால்தாண்டுகிறதற்கு யத்தனப்பட்டார். அப்போது அந்தப்பர்வதம் தெறிக்கிறவென்று நெரிந்து கீழேயழுந்தி வயிறுகிழிந்து அதன்குடல்கள் பிதுங்கியதுபோல. அதிலே அநேககாலமாக வாசஞ்செய்துகொண்டிருந்த மலைப்பாம்புகள் வெளிப்பட்டுப் புரண்டுபோகத்தலைப் பட்டதுகள். குகைகளிலே நித்திரைசெய்துகொண்டிருந்தசிங்கங்கள் நெரிப்பட்டு வாயினால் ரத்தங் கக்கிக்கொண்டு மடிந்ததுகள். பக்ஷிக்கூட்டங்களெல்லாம் எழும்பிச்சமுத்திரம் வெட்டிப்போம்படி இரைச்சலிட்டுக் கொண்டெழுந்து அப்பக்ஷிலங்கூட தெரியாமல் ஆகாசத்தை மறைத்ததுகள். ஆண்யானைகள் இரண்டு செவிகளுந்தாவிழுந்திலே மோதும்படி கடுங்காற்றுவீச, ஆகாசத்திலிடத்திலிருக்கின்ற சந்திரனும் அஞ்சப் பெண்யானைகள் நடுங்கி உடலைத்தழுவிக்கொள்ள, தமமுடைய தும்பிக்கைகளால் விருக்ஷங்களைப்பேர்த்துச் சுழற்றிக்கொண்டு விரட்டோடியதுகள். பொன்மயமாகிய சிகரங்கள்பொடியாக அனற்பொறிகள் சிதற அந்தமலையின் மூலாகு விரித்தபோது, அங்கேமகிர் முனியாமதும் - கன்றிநவாமதுமிருக்கின்ற இளங்குட்டிகளைவாயிலே கௌவிக்கொண்டுபுலிகளெல்லாம் பயந்தோடியதுகள். இருந்தாற்போலிருந்து அந்தப்பர்வதம் நெரிகின்ற முழக்கத்தாலேவே, அதில்வாசமா யிருந்த வித்தையாதரர்களெல்லாம் பயந்துவைகயிலே வாளும் கேடயமும் பிடித்துக்கொண்டு அந்தரமார்க்கத்தில் எழும்பி, யுத்தகளத்திலே சத்துருக்கள் காணத்துணிக்கும்படி கத்தியைக்கொண்டு ஓங்கியபோது அ



னைத் தப்பித்துக்கொண்டு அதிகவிசையாய்மேலெழும்பி, வீரர்களைப்போலப்-போனார்கள். நக்ஷத்திரங்களும் சூரியர்களும் மேகங்களும் மேலேதவழ்ந்துகொண்டிருந்த அந்தப்பர்வதமானது, அதுவெல்லாம்ஆசனத்தில் நிற்க அநுமானுடைய சரீரபாரத்தினாலே பூமியிலழுந்துகிறது, கொடிமரமானது மேலேகாணக்குயிழிக்கண்டாச் சமுத்திரத்தில் பெரியகப்பல் அமிழ்கின்றதுபோ லிருந்தது. சந்தனவிருக்ஷம் குங்கும விருக்ஷமுதலானதுகளா, கற்கள் நெரிகின்ற சந்துகளிலே அரைபட்டு அவைகளிலேகசைபட்டு இங்குலிகப்பொடி புஷ்பத்தின் மகரந்தப் பொடிகளுடனே கலந்துசிவந்து வெளியிலே அருவியாயோடிவருகிறது, அந்தப்பர்வதம்கிழிந்து அதனுடையரத்தம் புறப்படுகிறது போலிருந்தது. அதில்வாசம் பண்ணிக்கொண்டிருந்த தபசிகளெல்லாம்அந்தப்பர்வதமானது பூர்வத்தில் திருப்பாற்கடலில் கடைந்த மந்தரமாகிய மந்தரகிரியைப் போலச் சுழலவே, தாங்கள் செய்கின்ற தபசுமுடிந்தும் முடியாமலும்தேகபாசத்தை ஒழியாமலும் மோக்ஷப்பிரதேசத்திற்குப்போகின்றவர்களைப்போல ஆகாசமார்க்கத்திலெழும்பிப்போனார்கள். அந்தப் பர்வதமானது நெக்கு விட்டுப் பிளந்தபோது உண்டாகிய ஓசையைக்கேட்டு, தேவஸ்திரீகள்பயந்து நடுங்கித் தங்கள் தங்கள் நாயகன் மார்களைக்கட்டிக்கொண்டார்கள், அப்படி அவர்களால் தழுவப்பட்ட அந்தத்தேவர்கள், பூர்வம் கைலாசபர்வதத்தை ராவணனெடுத்தமாத்திரத்தில்பார்வதியயந்துகட்டிக்கொள்ளும்படி அதிலிருந்தசிவப்பிரபுவைநிகர்த்திருந்தார்கள். பின்னும் அந்தமலையில்பிணங்கி அதிகோபமாயிருந்த அநேகந்தெய்வப்பெண்கள், இந்தப்பயத்தினாலேமனநெகிழ்ந்து அந்தக்கோபம்நீங்கிப்புருஷர்களைத்தழுவிக்கொண்டவர்களாய் அந்தரமார்க்கத்திலெழும்பிப்பயந்தீர்ந்துதாங்கள்விட்டுவந்த ஸகிகளைக்குறித்து இரங்கிக்கிலேசித்தார்கள் இப்படிப்பட்டசமயத்திலேதேவர்களும் ரிஷீஸ்வரர்களும்ஸர்வமும் மூன்றுலோகத்திலுமிருக்கின்ற உத்தமபுருஷர்களும் வரிசைவரிசையாய் அந்தரத்தில் வந்துநின்று புஷ்பங்களும் சந்தனமும் வாசனைப்பொடிகளும், ரத்னங்களு மாகிய இதுகளையெல்லாம் சொரிந்து மகாநுபாவராகிய, ஆஞ்சனேயரே கடவுமையாவென்றுசொல்லி வாழ்த்தினார்கள். வீராதிவீரரான ஆஞ்சநேயரும் அதிசீக்கிரமாகத்தாவிப்போகத் தலைப்பட்டார். அப்போது கூடவந்திருக்கின்ற ஜாம்பவந்தர் அங்கதன் முதலானவர்களெல்லாம்பார்த்து, ஐயா! அநுமானே! இந்தக்கடல் குறுமுனியாகிய அகஸ்தியராலே உண்ணும்படி அடங்கியதாகையால் இந்த அற்பமான சமுத்திரத்தையா? நாம் தாண்டுகிறதென்று இகழ்ச்சியாக மனதிலெண்ணமல் போகின்றகாரியம் பெரிதானபடியினாலே அதைப்பிரதானமாக நினைத்துக்கொண்டு போய்வாருமென்று சொன்னார்கள். தேவர்களெல்லாம் அநுமானவர் இப்பொழுது இந்த ஸ்வரூபமெடுத்தது அந்தலங்கைமட்டுமே போகிறதற்கல்ல, அதற்கப்புறம் போகிறதற்காகவும்காண்கின்றதென்று அதிசயித்துப்பார்க்க அந்த ஆஞ்சனேயர்முன்னே தாழ்ந்து தம்முடைய காலினலமுத்தவே பர்வதத்தின் சிகரமும் அதன்மேலிருந்த அவருடையபாதமும் பூமிமட்டும் அழுந்தியதுகள். வாலைவீசி நீட்டிக்கொண்டு கால்களைமடக்கி மார்பையொடுக்கித் தோள்கள் பூரித்துவளரக் கழுத்தைச்சுருக்கிக் கைகளை நீட்டித் தலையை உயர எடுத்து வாயினால் ராமஸ்மரணை செய்து கொண்டு பார்க்கின்றவர்களுடைய பார்வைக்கெட்டாமல் அதிகவிசையாக மேலெழும்பினார். உச்சியானது பிரமலோகத்தை அளாவும்படி அவரெழும்பினவுடனே அந்த விசையிலே அநேகமரங்களும், குன்றுகளும், யானை முதலாகிய பலவகை மிருகங்களும், இது ஸ்ரீராம காரியமென்று அறிந்து தாங்களும் கூடப்போக எழும்பினதுபோல எழும்பியதுகள். அவ்விதமாக எழும்பின குன்றுகள் கற்கள் - விருக்ஷங்கள் - மிருகங்கள் - முதலுள்ள சகல ஜீவ ராசிகளும், தென்திசையிற்போய அநுமானுடனேகூட லங்கைக்குப்போகிறதற்கு விசைபோதாமல் திரும்பினதுபோல அங்கங்கே விழுந்து விட்டதுகள். அப்படி அந்தச்சமுத்திரத்திலே மேலுங் கீழுமாக விழுந்த மிருகங்கள் - மரங்கள் - கொடிகள் - செடிகள் - குன்றுகள் - முதலானதுகளும், அவ்விடத்தில் ஸ்ரீராமபிரான்வந்து சேதுபந்தனஞ்செய்வாரென்று முன்னமே அணைகட்டினதுபோலப் பிரகாசித்ததுகள். அநுமான் பாய்ந்த விசையினாலே அந்தக்கடலானது கிழிபட்டுப் பாதாளமட்டும் வெளியாக நாகலோகத்தின் மாணிக்க பிரகாசமுள்ள இடங்களையுங்கண்டு ஆஞ்சனேயர் நமக்குநாகலோகமுங்காணும்படி கிடைத்தது. என்ன பாக்கியமென்று சந்தோஷித்தார். அப்போது, அந்த நாகலோகத்தார் பூர்வத்திலே கருடனானவன் சமுத்திரத்தின் நீர் கிழியச் சிறகை வீசிக்கொண்டுவந்து அமிர்தத்தை எடுத்துப் போயினனே அவன் இப்போதும் வருகிறதுபோலக்காண்கின்றதே! இனி எப்படி நாம் பிழைக்கப் போகிறோமென்று பயந்து நடுங்கி அப்பால் ஓடிப்போனார்கள். மேலும் சமுத்திரங்கிழிந்து மகாமீன்கள்துடிக்க, சுறாமீன்கள் மிதக்க, பனைமீன்கள் இறக்க, யுகாந்தகால மாருதத்தைப்போல அநுமான்போகின்ற வேகத்தைச் சகிக்காமல் அலைகளெழும்பி இரைந்துகொண்டு அநுமானுக்குமுன்னே லங்கையின்மேல்போய் வீசியதுகள். திக்கஜங்கள் நடுநடுங்க வடக்கேயிருந்து தெற்கேபோகின்ற அநுமானவர் எப்படி யிருந்தாரென்றால் பூர்வத்தில் சர்ப்பராஜனுடன் பிரதிக்கினைசெய்து வாயுவானவன் பிரபலமாகமோதியடித்து ஒடித்துக்கொண்டுபோன திரிகூடபர்வதத்திற்குச் சமானமாயிருந்தார். பின்னும் அந்த அநுமானவர் உச்சை சிரவமென்னும் வெள்ளைப்புரவியும், தெய்வசம்பத்தின் அதிபத்தியமும், உண்டான இந்திரனுடைய அபிராங்கனைகளுக்கும் எட்டக்கூடாதவிசையுடனேபோகின்றது. இந்த அண்டங்களையெல்லாம்கொள்கின்ற ஒருபுஷ்பவிமானம்லங்கைக்குப்போகிறதுபோலவுமிருந்தது. தேவர்கள்ஸ்துதிசெய்யவும், முனிஸ்வரர்கள் வேதவாக்கியங்களைச்சொல்லி ஆசீர்வதிக்கவும், பூலோகத்தார்வணங்கவும், போகின்ற ஆஞ்சனேயரானவ

ர் ராவணனை முன்பு அமுக்கியதுபோல இன்னமும் அமுக்குவோமென்று நினைந்து, நெற்றிக்கண்ணையுடைய சிவனை நீங்கிப்போகின்ற கைலாசபர்வதம்போலவும்விளங்கினார். பிரமசாரி வேடந்தாங்கி விவேகத்தில் பிரமாவைப்பார்க்கிலும் விசேஷப்பட்டு உலகத்திற்கெல்லாம் ஓர்சாணிபோல நிலைபெற்றிருந்து தர்மார்த்தங்களைப் பூர்த்திசெய்கின்ற அநுமானானவர், பொன்மயமாகிய மகமேருவானது தன்னை நீங்கித் தென்திசையிற்போயிருக்கின்ற திரிகூடமாகிய பிள்ளையைக்கண்டு வெகுநாளாயிற்றென்று பார்க்கப் புறப்பட்டு வருகிறது போலவுந் தோன்றினார். மற்றும் யுகாந்தகாலத்திலே மேகபடலங்களைக்கிழித்து நக்ஷத்திரங்கள் உதிரச்சமுத்திரம் பொங்கிப்பாயத் திக்குகளெல்லாங்குழைய மேருகிரியுங்குலுங்க மற்றமலைகளெல்லாம் வேர்பறிந்துவிழுந்து அழிய, பிரசண்டவேகமாய் வருகின்ற தம்முடைய பிதாவாகிய வாயுபகவானைப்போலவும் காணப்பட்டார். பத்துத்தலைகளும் இருபதுகைகளுமுண்டான ராவணன் பஞ்சேந்திரியங்களையும் ஜெயித்துச் செய்த தபோபலங்களெல்லாம் மாண்டுபோய் விட்டதுகளென்று அறிந்து கிழக்கிலிருந்து உதயமாகின்ற வழக்கந்தவிர்ந்து விபரீதமாய் வடக்கேயெழுந்து லங்கையின்மேல்போகின்ற சூரியன் போலவும் பிரகாசித்தார். மநுகுலத்தில் அவதரித்த ஸ்ரீராமனென்கின்ற வீராதிவீரனைத் துணைபற்றிக் கொண்டு பாபகீர்த்தியுடைய ராக்ஷதர்கள் வாசஞ்செய்யும் லங்கையின்மேல்போகின்ற ராஜாவின் ஆக்கியாசக்கரம் போலவும் விளங்கினார். தம்முடைய தாவன்யமாகியதேசகாந்தியானது இருளை நீக்கவும், மகமேருகிரிகாணவும். கேசரமார்க்கத்தில் எழும்பிப்போன ஆஞ்சநேயரானவர் உலகங்களையெல்லாம் வடவாமுகாக்கினியானது தகிக்கின்ற ஊழிக்காலத்தில் வடதிசையில் உதயமாகிய பூரணசந்திரனைப்போலவும்மேலும்சக்கரதாரணாகியஸ்ரீமந்நாராயணனுக்குத்தான் வாகனமாயிருக்கின்ற தன்னுடைய பராக்கிரமத்தைக்காட்டவும்ராக்ஷதர்களுடைய குடலுகளெல்லாம்சிந்தவும், பர்வதங்களெல்லாம் பின்தொடர்ந்துவரவும், மேகங்கள் ஆகாசத்தில் ஒதுங்கவும், கடல்களெல்லாங் கலங்கவும், தாவிப் பறக்கின்ற கருடனைப்போலவும் காணப்பட்டார். பூர்வத்தில் அண்டகடாகத்தையெல்லாம் ஸ்ரீமகாவிஷ்ணுவானவர் காலினால் அளந்தார். இவர்வாலினால் அளக்கின்றாரென்று சொல்லித் தேவர்களெல்லாம் பிரமிக்கும்படி பாய்ந்துபோகின்ற வாயுபுத்திரனுடைய வாலானது திருவையையுடைய வேதத்தை ஒத்த அந்த ஆஞ்சனேயராகிய தர்மதேவதையைத் துணைபெற்றுக்கொண்டு அற்பச்செய்கையையுடைய ராக்ஷதர்கள் பார்ப்பார்களென்று அவருக்குப் பின்புறத்திலே ஒளித்துப்போகின்றயமபாசத்தைப்போலிருந்தது. பின்னும் அந்தவால் மகமேரு பர்வதத்தை முழுதும் சுத்திக்கொண்டிருந்த ஆதிசேஷன் ஸ்ரீமகாவிஷ்ணு அனுப்பவந்த கருடனைக்கண்டு மனஞ் சோர்ந்து சுற்றியிருந்த சுற்றுக்களைவிட்டுப் பெயர்கின்றது போலவும் பிரகாசித்தது. அப்படி அநுமானானவர் போகின்ற வேகத்திற் பிறந்த காற்றானது மோத தேவர்களேறுகின்ற விமானங்களொன்றோடொன்று அடிபட்டு உடைந்து சமுத்திரத்திலே விழுந்ததுகள். வச்சிரபாணியாகிய இந்திரனுடைய லோகமும் நடுங்குகின்றதே இப்பெருது ஆஞ்சனேயருடைய கருத்துத்தா னென்னவோ! இவர்வேகம் லங்கைமட்டும் போகிறதற்காகவல்லவென்று பூலோகமெல்லாம் அஞ்சியது. அளவிறந்த யோசனைப் பிரமாணமாகிய ஸ்தூலசரீரத்தையுடையதுகளென்று சாஸ்திரங்களும், பெரியோர்களும் சொல்லுகின்ற திங்கிலம் திமிங்கில மென்கின்ற மீன்களுடனே சமுத்திரமானதுகலங்க, அநுமானுடைய காசரனுதி அவயவங்களிலிருந்து தோன்றிய காற்றினாலே மற்றுள்ள மச்சங்களெல்லாம் இறந்துமிதந்ததுகள். அநுமானுடைய இரண்டுகைகளும், நீண்டு வேகத்துடனே முன்னேபோயிப் பிரகாசிக்கின்றது. ஸ்ரீராமலக்ஷ்மணர்கள் இருவரும் அந்த ஆஞ்சநேயருக்குமுன்னே லங்கைக்குப்போகிறது போலவுமிருந்தது. அப்படி யவர் வாயுவைப்போல விசையாய் ஆகாசத்தில்தாவிப் போகும்போது கீழ்த்திசைக்குக் காவலாகிய ஐராவதமென்னும் யானையானது சமுத்திரத்தில்வந்து நின்றதுபோல அந்தக்கடலில் அநேக காலமாய் ஒளித்திருந்த மைநாகபர்வதம்மேலெழுந்து வந்தது. அவ்விதமாயெழுந்த அம்மலையானது தன்னுடைய ஆயிரஞ்சிகரங்களும், பொன்முடிகளைப் போலவும், ஓயாமல் ஓடுகின்ற அருவிக் கூட்டங்கள் தோளிலணிந்த உத்தரீயத்தைப்போலவும், பிரகாசிக்க, ஸ்ரீமகாவிஷ்ணுவானவர் அர்ச்சனர்களாக்கவந்த உபத்திரவத்தை நீக்கும்படிக்குச் சமுத்திரத்திலிருந்து எழுந்ததுபோலவுமிருந்தது. மேலும் அந்தப்பர்வதம் பூர்வத்தில் அமிர்தங்கடைந்த மந்தரகிரி பூமியிலழுந்தியது கண்டு ஸ்ரீமகாவிஷ்ணு ஆமையுருவமெடுத்துத் தாங்கினதினாலே அது உயர எழும்பியதுபோலவும் எழும்பியது பின்னும் இரண்டுபக்கத்திலும் அதன்சிறகுகள் தழைத்தோங்க வெண்ணிறமானது பிரகாசிக்க மேலெழும்பியது எவ்விதமாயிருந்ததென்றால், பாதாள லோகத்திலேபோய் அமிர்தமெடுத்துக்கொண்டு கடலைக்கிழித்துப் புறப்பட்ட பக்ஷிராஜனாகிய கருடனுக்கு சமானமாயுமிருந்தது. அன்றியும் உலகங்களையெல்லாம் சிருஷ்டிக்கும் பொருட்டுப் பிரமனைப்புண்டாக்குகிறநிமித்தம் மஹாப்பிரளயத்தில் உற்பத்தியாகிய ஸ்வர்ணச்சாயையான அண்டம் போலவுமிருந்தது. மற்றும் அந்த மஹாப்பிரளயத்தில் உற்பத்தியான பிரமதேவன் இந்தப் பிரளயத்திலிருந்து என்னையுண்டாக்கின என்பிதாவாகிய அந்த நாராயணனைக் கண்டாலல்லாமல் நான்செய்யுங்காரியமொன்றுஞ்செய்கிற தில்லையென்று அவனைத் தியானஞ் செய்துகொண்டு ஆதிகாலத்திலே! சமுத்திரஜலத்திலே! மூழ்கியிருந்து தபசுசெய்து அந்தத்தவமுடிந்து அவன் அதிலிருந்து எழுந்ததுபோலவுமிருந்தது. அல்லாமலும் முற்காலத்தில் புஷ்பமாலையை வெள்ளையானை தன்காலில் கிழித்திட்டு மிதித்ததைக்குறித்து துர்வாசரிஷி கோபித்துச் சபித்ததினாலே கடலிற்போயொளித்த இந்திரனுடைய



சம்பத்துகளெல்லாம் மீண்டுவரும்படி அழிவில்லாத ஆதிநாயகனாகிய ஸ்ரீமந்நாராயணன் தேவதானவர்களுடனே அந்தச் சமுத்திரத்தை மத்தித்தபோது அதிலிருந்து தோன்றிய சந்திரனைப்போலவுமிருந்தது. அந்தப்பர்வதத்தின் சிகரத்தில் பிணைமீனுடனே உறங்கியிருந்த மகரமீன்கள் அந்தமலைமேலெழும்பியபோது சுவாசம் விட்டு உலாவியோடியதுகள். முத்துக்களையீன்ற சிப்பிகள் நக்ஷத்திரங்கள்சூழச் சந்திரோதய மானதுபோலப் பிரகாசிக்கவும், உப்பரிகையின்மேல் கொடிகளாடுகிறது போல அருவிகள் ஒழுகவும், சுனைகளிலேயிருந்த பனைமீன்கள் திமில் மீன்களுடனே தொடர்ந்து துள்ளியதுகள். ஆறுபகையும், மூன்றுகுற்றமும், வென்றுபோகும்பர ஞானோதயமாகி நிஷ்டைநீங்கிய பெரியவர்களைப்போல அநேககாலம் ஜலத்திற்குள்ளேகிடந்து வருந்தின நாகங்கள் ஜலத்தைவிட்டுவெளியிலேவந்தபடியினாலே வெகுகாலமாக அடக்கிக்கொண்டிருந்த சுவாசம்விட்டுச் சந்தோஷித்ததுகள். இப்படி மிகமற்ற சிங்காரங்களுண்டாகிய அந்த மைநாகபர்வதமானது ஆகாசமட்டும்வளர்ந்து எதிரே நின்றதை அநுமானானவர்பார்த்து ஆச்சரியப்பட்டுக் கொஞ்சமாகிலும் அஞ்சாமல் இது என்னவென்று சந்தேகித்துப் பின்பு பர்வதமென்றறிந்து அந்தப்பர்வதத்தை அதிசீக்கிரத்தில் அலக்ஷியமாய்த் தலைகீழாகத்தள்ளிவிட்டு ஆகாசமார்க்கத்தில் பாய்ந்தார். அந்தச்சமயத்தில் அம்மைநாகபர்வதம் நடுநடுங்கிப்பயந்து உடனே அதிக அன்புண்டாய் ஒருமனுஷனைப்போல உருவமெடுத்து அநுமானைநோக்கி ஐயா! இதைக்கேளுமென்று சொல்லத்தலைப்பட்டது. என்னைப் பகையாளியென்று நினைக்கவேண்டாம், பூர்வகாலத்தில் தேவேந்திரன் வச்சிராயுதத்தினாலே உலகத்திலுள்ள மலைகளின்சிறகையறுத்தான். அப்போது என்னை வாயுபகவானானவர் இவ்விடத்தில் கொண்டுவந்து சேர்த்து ரக்ஷித்தார். நீர் அவருடைய குமாரரானபடியினாலே உமக்கு ஏதாகிலும் உபகாரஞ்செய்யவேண்டுமென்று மிகவும் ஆசையுண்டாயிருக்கின்றது. ஆகையால் என் சிகரத்தின் மேலாவது சிறிதுநேரம்நின்று விருந்துண்டு இளைப்பாற்றிக்கொண்டுபோம், சமுத்திரராஜன் ஸ்ரீராமருடைய ஏவலைமேற்கொண்டு வாயுபுத்திரராகிய அஞ்சனேயர் தேவர்கள் உஜ்ஜீவிக்கும்படி சீதாபிராட்டியைத் தேடிக்கொண்டு வருகிறார். நீ போய் அவரைக்காண் இதைப் பார்க்கிலும் பெறத்தக்கபேறு வேறொன்றுமில்லையென்று சொன்னான். அதைக்கேட்டு எனக்கிவன் பெற்றதாயிலும்மிகவும் நல்லவனென்று எண்ணிவந்தேன் என்றுவியன்றதைநீர் பெற்றுக்கொள்ளுமென்றுசொல்ல அந்தச்சொல்லை அநுமானானவர்கேட்டு இவன்குற்றமில்லாதவனென்று நினைத்துத் தாமரைப் புஷ்பத்திற்குச் சமானமாகிய முகம் பிரகாசிக்கச்சிரித்தார். சிரித்துஉடனேதாம்போகின்ற திசையைநோக்கி அந்தப்பர்வதத்தின்சிகரத்தைக்கண்டு, சர்வலோகசரணியனாகிய ஸ்ரீராமசந்திரனிடத்தில்கொண்ட பக்தியினாலே நானெவ்வளவும் வருத்தப்படமாட்டேன். என்னுடைய இஷ்டத்தை நிறைவேற்றாமல் யாதொன்றும் பக்ஷிக்கவுமாட்டேன். மிகுந்த தேனைப்பொழிகின்ற சாரலையுடைய மைநாகபர்வதமே நீ இவ்வளவு அன்பைச்செலுத்தியபோதே நானிருந்தேன், விருந்துண்டேன். இதற்குமேலும் நீயெனக்குச் செய்யத்தக்க உபசாரமுமுண்டோ! அன்பைப்பார்க்கிலும் விசேஷமாகிய பூசையாரிடத்திலிருக்கின்றது. இப்பொழுது நான் சீக்கிரமாய்ப்போய் லங்காபுரியைச்சேர்ந்து எங்களாண்டவனாகிய ஸ்ரீராமனுடையஅடிமைத்தொழிலைச்செய்வதைப்பார்க்கிலும் சிறந்தகாரியம் என்ன இருக்கின்றது அங்கிருந்து திரும்பிவரும்பொழுது விருந்துண்டுபோகின்றேனென்று உபசாரமாகச்சொல்லிவிட்டு அநுமானானவர் அதிசீக்கிரமாய் அப்புறம்போனார். அவ்வண்ணமாக அவர்சமுத்திரத்தின்மேல் உயர்ந்துபோகின்றதைப்பார்த்துப் பூமியில்பாதத்தை ஊன்றி நடவாத இளமைப்பருவத்திலேதானே என்னுடைய தேரின்மேற்பாய்ந்த இந்தமகாநுபாவன் இவ்வளவுவேகமாய்க் கடலைத்தாண்ட நினைத்தது யாரிடத்திற்போகவோவென்று சூரியனுஞ்சந்தேகப்பட்டான். அப்படிஅதிகவிசையாய்ப்போகின்ற ஆஞ்சனேயரைத் தேவர்கள்பார்த்து அதிசயித்து களங்கமற்றமனதினையுடைய சுரசையென்பவளை அழைத்துத் திரிலோகத்தாருக்கும்வந்து துன்பத்தைநீக்கும்படி வாயுபுத்திரனானவர்வருகின்றார். நீபோய் அவருடைய பராக்கிரமத்தைப் பரிசோதித்து எங்களுக்குத் தெரிவிக்கவேண்டுமென்றுசொல்லி அனுப்புவிக்க. அவ்வண்ணமே செய்கிறேனென்று சம்மதித்தவளாய் அவள்பெரியவாயினையுடையஒருராக்ஷதஸ்திரீவடிவங்கொண்டுவந்து அவர்போகின்றமார்க்கத்தில்தன்சிரசு அண்டத்தை முட்டும்படி நின்று கொக்கரித்து நான் வாசஞ்செய்யுமிடத்தில் ஒரு அற்பக்குரங்காகிய நீ எப்படிவருவாய்! இப்பொழுது பிரளயகாலாக்கினிபோல எரிகின்ற என்பசிப்பிணியைத்தீர்க்கும் பொருட்டாகவே வந்ததுபோலக் காண்கின்றது. இந்த ஆகாசத்தில் உனக்குப்போகிறதற்கு வேறேவழியில்லை என்வாய்க்குள்ளே புகுந்துபோவென்று சொன்னாள். அதை அநுமானானவர் கேட்டுப் பெண்பிள்ளையாகிய நீ பசியானது வருத்தும்படி நொந்தாயாதலால் உன்னிஷ்டப்படியே பக்ஷிக்கக்கடவாய் என்சரீரத்தை உனக்கு உணவாக நான் கொடுக்கின்றேன், இத்தருணத்தில்தெய்வநாயகனாகியஸ்ரீராமசந்திரனுடைய காரியநிமித்தமாய்ப் போகின்றேன். அதைச் செய்து நான் திரும்பிவரும்போது அப்படியே உண்ணென்று சொல்லி நகைத்தார். அதற்கு அந்தராக்ஷதியுருவங்கொண்ட சுரசை கோபித்து சப்தலோகத்தாருங் காணும்படி நானுன் சரீரத்தைத்தின்று பசிதணிகின்றேன் பாரென்றுசொன்னாள். அந்தவார்த்தைகேட்டு நல்லது அப்படியே உன்வாய்க்குள்ளேதானேபுகுந்துபோகின்றேன் உன்னிடத்தில் வல்லமையுண்டானால் தின்றுவிடென்று சொன்னார். அப்போது அந்தராக்ஷதியானவள் அநேக அண்டங்கள் ஒருமிக்கப்புகுந்தாலும் நிறையாமலிருக்கின்ற தன்பெருவாயைத்திறந்து ஆஞ்சனேயரைத்தட்டாமல்விழுங்குகிறவளாயிருந்தாள் அதுகண்டுஅவள்வாய்

சிறியதும் தமதுசரீரம் பெரியதுமாகவளர்ந்தார். அவ்விதமாக வளர்ந்தவர் சுருங்கி ஒருதரம் சுவாசம் விடுகிறதற்குள்ளே அவள்வாயிலேபுகுந்துவெளிப்பட்டார். அதுகண்டு தேவர்கள் எங்களை யாண்டுகொண்டவ ராகிய இந்த ஆஞ்சனேயர் மகாசமர்த்தரென்று சந்தோஷித்து புஷ்பமாரிபொழிந்து வாழ்த்தினார்கள். தோன்றிமறைகின்ற மின்னலைப்போல அதிசீக்கிரத்தில் சரீரம்பருத்துச் சுருங்கும்படி அநுமானானவர் வாய்க்குள்ளே புகுந்து வெளிப்பட்டதைக் கண்டு அந்தச் சுரசை எதாஸ்வரூபமாய்நின்று இவரால் எந்தக்காரியந்தான் ஆகாதென்று சந்தோஷித்து ஸ்துதிசெய்தாள். அநுமானானவரும் அவளை யாசீர்வதித்து அப்பாலபோனார். அந்தக்ஷணத்திலே ! கின்னரர்கள் – கீதம்பாடினார்கள். தேவரம்பையர்கள் – நடனமாடினார்கள். ரிஷீஸ்வரர்கள் – வேதகோஷஞ்செய்தார்கள். சகலசிவராசிகளும் ஸ்தோத்திரஞ்செய்தருகள். லங்கையிலிருந்துமந்தாரபுஷ்பத்தின் மகரந்தப்பொடிகள் மணக்கின்ற தென்றற்காற்றுனதுவந்து அநுமானுடைய செந்தாமரைப்புஷ்பத்துக்குச் சமானமாகிய முகத்தில்வீசி வேர்வைபுலர்த்தி ஆயாசந்தீர்த்தது கின்னரையர்கள் தங்கள்கையினால் இசைக்கின்ற வீணையோசையானது செவியில்வந்துநுழைய அதைக்கேட்டு ஆனந்தப்பட்டுக்கொண்டு அவர்போகும்போது போகக்கூடாமல் தடைபட்டுத் தாம்போகின்ற தென்றிசையைவிட்டு வடதிசையில் விலக யத்தினப்பட்டார். அதுவுங்கூடாமையால் கிழக்கிசை மேற்றிசையிலாவது ஒதுங்கிப்போகலாமென்று பார்த்தார். அதுவும் முடியாமையால் ஊர்த்த முகத்திலாவது எழும்பிச் செல்லலாமென்று நினைத்தார். அதுவும் இசையாமையாய் அதோமுகத்தில் வலிப்பதுகண்டு இதென்ன ஆச்சரியமென்று ஆஞ்சனேயர் பிரமித்தார். அப்பொழுது கடலிலே படுத்துக்கொண்டிருந்து ஆகாசத்தில்எவ்வளவுஉயரத்திலானாலும்தனக்குநேராகச் சஞ்சரிக்கின்ற பலஜெந்துக்களையுங்கண்டால் அதுகளின்சாயையைக் கையினாற்பற்றித் தன்வாய்க்குநேராக இழுத்தமாத்திரத்தில் அந்த ஜெந்துக்களெல்லாம் வாயில் வந்துவிழ நாள்தோறும் விழுங்குகின்ற அங்கார தாரையென்னும் ராக்ஷசியானவள் அந்தச்சமுத்திரத்தினால் வேறொரு சமுத்திரம் உண்டாக்கப்பட்டு எழும்பினதுபோலவும், ஆலகாலவிஷம் எழுந்தது போலவும், இங்கேயாரடா போகிறவனென்று மகாகோரஸ்வரூபத்துடனே எ[illegible]னாள். அவ்வண்ணமாக எழும்பினவள் [illegible]புகள் கடலோசைபோலச் சப்திக்க, வேதமுடிவிலே நடனஞ்செய்கின்ற பரஞ்சுடராகிய ஸ்ரீமகாவிஷ்ணுவுக்குமுன்னே பூர்வகாலத்தில் சமுத்திரத்திலிருந்து யுத்தத்திற்குப்போயெதிர்த்த மதுகைடவர்களைப்போல அநுமானை எதிர்த்து நின்றாள். இரண்டு பிறைபோலப் பிரகாசிக்கின்ற வக்கிரதந்தங்களையும்யானைத்தோலாகிய போர்வையையு முடையவளாய் பிரமாவினால் இந்த அண்டத்திற்கு ஒரு உறைபோலச் சிருஷ்டிக்கப்பட்ட பெரியவாயைத்திறந்துகொண்டு தன்கால்சமுத்திரத்தைக்கலக்கவும், தலையானது அண்டமுகட்டையளாவவும், பூமிக்கும், ஆகாசத்திற்கும், ஏகரூபமாப்படி நின்றவளை அநுமானானவர்கண்டு இவள்தர்மமும், கருணையையும் அழித்த ராக்ஷசியென்றும், இவள்தான் நம்மைத்தடுத்துப் பிரமிக்கச்செய்தவளென்றும் நிச்சயித்து அறிந்து அவளுடைய பெரியவாய்க்குள்ளே [illegible]ல்லாமல் ஆகாசத்திலே தாம்போகிறதற்கு வழியில்லாமையால் அவள்வாயிற்புகுந்து வயிற்றைக் கிழித்துக் கொண்டு போகும்படி நினைத்துச் சொல்லுகின்றார். நான் ஓயாமல்வந்த வேகத்தைக் கண்டறியாமல் வானிலே ஆகாசமார்க்கத்தை அடைத்துக்கொண்டு இப்படியிருக்கின்றாயே ! நீ யாரடியென்றுகேட்டார். அதற்கு அங்காரதாரையானவள் என்னைப்பெண்ணென்று நினையாமல் எதிர்த்தால் தேவர்களானாலும் எதார்த்தமாய்மாண்டுபோவார்கள். என்கின்றானே யமன் அதனாலும் கொன்று தின்றுவிடுவேனென்றுசொல்லி இன்னும்பெரிதாகத் தன்வாயைத்திறந்தாள். ஆஞ்சனேயரானவர் அந்க்ஷணமே அவள்வாயிலேநுழைந்துவயிற்றிலேபுகுந்தார். அப்போது, தர்மமானதுமுறையோ! முறையோவென்று அழுது தூக்கித்தது. தேவர்களும் கிலேசித்தார்கள். இறந்துபோனவர்போல அவள்வயிற்றுக்குள்ளேபுகுந்த அநுமானானவர் ஒரிமைப்பொழுதிலே மறுபடிபிறந்தாரென்று சொல்லும்படி சிங்கம்போல வெளிப்பட்டார். அந்த ராக்ஷசியானவளை கோவென்று கதறும்படி அவள்வயிற்றைப்பீறிக் குடல்களைப் பிடுங்கிக்கொண்டு, ஆகாசத்தி லெழும்பின அந்த அநுமானானவர் மலைக்குகையிற்புகுந்து அதற்குள்ளிருக்கின்ற சர்ப்பங்களை வாரிக்கொண்டு மேலெழும்பிய கருடனைப் போலப் பிரகாசித்தார்.

கவி.

சாகாவரத்தலை கிற்றிலதமன்றன்........................*
ஏகாவரக்கிருடர் கொண்டிட னெழுந்தான்..............*
மாகாலசைப்படைமன்னிலுற வாலே.....................*
டாகாயமுற்றதக லிக்குவமை யானன்....................*

என்பன.— அசுவத்தாமா – மகாபலி – வியாசர் – அநுமான் – விபிஷணர் – கிருபாசாரியர் – பரசுராமர் – என்கின்ற ஸப்த சிரஞ்சீவிகளுக்குள்ளே சிரேஷ்டராகிய இந்த அநுமானானவர் அந்த அங்காரதாரையினுடைய குடலைப்பிடுங்கிக்கொண்டு உயர எழும்பியது மற்றும் எப்படியிருந்தென்றால், பெருங்காற்றுவீசக் கிளறு பூமியிலிருக்க வாலுடனே ஆகாசத்திலெழுந்து பறக்கின்ற காற்றாடியைப்போ லிருந்தது. அதுகண்டு தேவர்கள் சந்தோஷத்தினால் சப்தித்தார்கள். அசுரர்கள் வருத்தத்தினால் உடல்வெயர்த்தார்கள். பிரமதேவரும், ஆச்சரியப்பட்டுப் பூமழைபொழிந்தார். கைலாசகிரியில் எழுந்தருளிய சாம்பமூர்த்தியும்பார்த்துக் களிகூர்ந்தார். முனிசிரேஷ்டராயிருக்கின்றவர்கள் ஆசீர்வசனம்பண்ணினார்கள். அந்த அரக்கி இறக்கும்படி வாய்முதல் வயிறுவரையில்கிழித்த அநுமானானவர், பின்பு மகமேருவுக்குமும்படி உயர்ந்து மனோவேகத்திலும் அதிவேகமாய் அப்பால்போகத்தொடங்கி, இந்தக்கடல் முன்பு சம்பாதி முத



லானவர்கள் நம்முடனேசொன்ன அளவையுடைய தல்ல அதிலும் அதிக விஸ்தீர்ணமுடையது அது வல்லாமலும் மத்தியில் மத்தியில் பலபல இடையூறுகளும் சம்பவிக்கின்றன. எவ்விதத்திலாவது இலங்கையில்போய்ச்சேர்ந்தால்தான் இதுகளெல்லாம் நீங்குமென்றும் இதுமைகளையெல்லாம் கொடியிற் பொடிசெய்வதுதர்மமே ! அப்படிப்பட்ட தர்மத்தைநினையாத அரக்கர்கள்செய்கின்ற துன்பங்க ளெல்லாம் நிவாரண மாகிறதற்குத் தக்கதாகிய ஏது எங்கிருக்கின்ற தென்றும், ராமஸ் மரணை செய்தால் எல்லா இடை யூறுகளும், நிவர்த்தியாகும். அதற்குச் சமான மானது வேறொன்றில்லை யென்[illegible]ம் நினைத்து, ஸ்ரீராம நாமசங் கீர்த்தனஞ் செய்து கொண்டு பூர்ண கலசங்கள் வைத்திருக் கின்ற ஸ்வர்ண மயமாகிய லங்கை மதிலின்மேல் போய்த் தங்காமல், ஸ்வர்க்கத்தின்மார்க்கமாய் விலகிச்சென்று அந்த லங்காபுரிக்கு அருகில் பசுமையாகிய சோலைசூழ்ந்திருக்கின்ற உன்னதமாகிய பவள மலையின்மேல் பாய்ந்தார். அநுமான்பாய்ந்தமாத்திரத்தில் கடல்சூழ்ந்த லங்காபுரியாகிய பர்வதமானது தன்னிலைபெயர்ந்து குலுங்கத் தலைப்பட்டது. அது எப்படியிருந்ததென்றால் பெருங்காற்றானதுமோதக் கடலிற் நின்றிருக்கின்ற கப்பலானது அலைகின்றதுபோலிருந்தது. பூமியில் வேர்விழுந்து ஆகாசபரியந்தம் உயர்ந்த அந்தப்பவளமலையின் சிகரத்தில் நின்று நான்குபுறத்திலும்நோக்கி, ஸ்வர்க்கமாகிய ஸ்திரீயானவள் அழகுபார்க்கும்படி நிலைக்கண்ணாடி வைத்ததுபோல, தேஜோமயமாய்ப் பிரகாசிக்கின்ற லங்கையைச் செவ்வையாகப் பார்த்தார். அவ்வண்ணமாகப் பார்த்து ஆச்சரியப்பட்டுக் கைகொட்டித் தேவர்களுடைய பொன்னகரமானது இதற்கு ஒப்பாகுமென்று சொல்லுகிறது புத்தியீனமாம். அந்நகரமென்ன இந்த லங்கையைப்பார்க்கிலும் சிறந்ததா ! சகலலோகங்களையும் ஆள்கின்றவன் எவனோ அவனே இந்நகரத்திலிருந்து வாழ்கின்றவனாகவேணும், ஒருவகை இன்பத்தைமாத்திரமுடையது. இந்நகரமென்று சொல்லக்கூடாது. வேண்டியதுகளை வேண்டியபடியே அடைந்து வெறுப்பில்லாமல் அநுபவிக்கின்ற போகசுகங்கள் முடிவில்லாததுகளாயிருக்கும்படி எவ்விடத்தில் காண்கின்றோமோ அதுவே மோக்ஷமாகும். இந்தப்படியேயிருக்கின்றது வேதத்தின்நிச்சயமும். இதன் உள்ளிடமானது எழுநூறுயோசனையென்றுசொல்லுவார்கள். திரிவிதலோகங்களிலுமிருக்கின்ற பதார்த்தங்களெல்லாம் இந்த லங்கைக்குள்ளே அடங்கியிருக்கின்றதுகளென்றால்,சாஸ்திரக்கேள்வியையுடைய பேரறிவாளர்கள் பார்த்தாலும் அவர்களுடைய பார்வைக்குத்தான் அடங்குமா ! இதுவென்ன ஆச்சரியமென்றுநினைத்து மறுபடியும் உற்றுப்பார்க்கின்றார்.

கடல்தாவுபடலம் – முற்றிற்று.

---

## ஊர்தேடுபடலம்.

மேருமண்டலத்தைத் தாண்டிச் சந்திர மண்டலத்தை முட்டுகின்ற உப்பரிகைகளெல்லாம் பொன்னினாற்செய்து ரத்னங்கள் பதித்திருக்கின்றதுகளும், மின்னலைக்கொண்டுசமைத்ததுகளும், வெயிலைக்கொண்டு அமைத்ததுகளும் பின்னும் இதுகள்எதைக்கொண்டுசெய்ததுகளென்று அறியப்படாததுகளும், தேவலோகமும் நாகலோகமும் தமக்குள்ளே அடங்கும்படி மேலுங்கீழும் உயர்ந்தும் தாழ்ந்தும். இளந்தென்றற்காற்று வருகின்ற சாளரங்களையுடையதுகளுமா யிருக்கின்றதுகள். இதுகளிலுள்ள ஸ்திரீகள் மின்னற்கொடிகளை மடக்கி அடுக்கித் துடைப்பக்கற்றைகளாகப் பிடித்துக் கொண்டு மேல்தளங்களிலிருக்கின்ற புஷ்பத்தின் மகரந்தப் பொடிகளாகிய குப்பையைவிளக்கி ஆகாசகங்காசலத்தைக் கையினால் அள்ளிச் சாணநீராகத் தெளிக்கின்றார்கள். வேலுக் குழலும் மகரவீணையும் குழையும்படி மிருதுவாகிய தங்கள்மழலைச்சொற்களைக் கிளிகளுக்குக்கற்பிக்கின்ற ஸ்திரீஜனங்கள் இந்த உப்பரிகைகளின் பளிங்கினாற்கட்டப்பட்ட சுவர்களில்பிரதிபலித்துக்காண்கின்றசாயையையும்தமதுஉருவத்தையும் வேறுபாடறியாமல மயங்குகின்றார்கள் இப்படிப்பட்ட உப்பரிகைகளைத் தேவேந்திரனுடைய மாளிகைக்குச்சமானமாகச் சொல்வதெப்படி ! சொன்னால் அந்தச்சொல்லுக்குங் குற்றமுண்டாம். இதுகள்ஸ்ரீமகாவிஷ்ணுமார்பிலே தரித்திருக்கின்ற கவுஸ்துவ மணியைப்பார்க்கிலும் அதிக காந்தியையுடைய, நவரத்னங்கள் அழுத்தித் தெய்வத்தச்சனாலேசெய்யப்பட்டிருக்கின்றதுகள். சகலஜீவகோடிகளும் ஒருபக்கத்தில்அடங்கியிருக்கத்தக்க விசாலமுண்டானதினால் இந்நகரம் ஸ்ரீமந்நாராயணனுடைய திருவயிற்றுக்கே ஒப்பாகும். இதற்குள்ளிருக்கின்ற விருக்ஷங்களெல்லாம் கற்பகங்கள். வீடுகளெல்லாம் ஸ்வர்ணங்கள். ராக்ஷதஸ்திரீகளுக்குத் தாதிமார்களெல்லாம் தேவரம்பைகள். ராக்ஷதர்களுக்குஏவலாளிகளெல்லாம் தேவர்கள். சூரியனுடைய ஸப்த புரவிகள்தவிர மற்றப்பிரபஞ்சத்திலுள்ள புரவிக ளெல்லாம் இங்கிருக்கின்றதுகள். ராவணனுடையபோரிலேதோற்றுப்போன திக்கஜங்களைக்குறித்துச் சொல்வதென்ன! ஐந்து கைகளையுடைய விக்நேஸ்வரனாகிய யானையும் சூரியனுடையதேருமே இந்நகரத்திலில்லை. மற்றத்தேவர்களுடைய விமானமுதலாகிய வாகனங்க ளெல்லாம், வீதிகளிலே சஞ்சரிக்கின்றதுகள். இந்தப் பட்டணத்தையாள்கின்ற ராஜாவுக்கு ஏவல்செய்யாத தேவர்கள் ஆரிருக்கின்றார்கள். ஆ! ஆ! இவன் திரிமூர்த்திகளிலும் விசேஷப்பட்டவனென்றால் இவன்செய்த தவமல்லாமல வேறொன்று இவனுக்கு இப்படிப்பட்ட சாம்பிராஜ்யத்தைக்கொடுக்குமா ! பேரிகையின் சப்தமும் யானைகளின்முழக்கமும் கடலோசையும் ஸ்திரீகளுடையபாதச்சிலம்பொலியால் மறைந்துபோகின்றதுகள். மரகதத்தினாலும் மற்றுமுள்ள பலவகை ரத்னங்களாலும் அழகாகச் செய்திருக்கின்ற குதிரைக்கொட்டாரங்களும், ரதசாலைகளுமே சூரியனும்வெட்கும்படி பிரகாசிக்குமானால், இந்நகரத்திற்குமுன் ஸ்வர்க்கம் நரகத்திற்குச் சமானமாகுமென்றல்லவோ சொல்லவேண்டும். அழகு நிலைபெற்றிருக்கின்ற இந்தப்பட்டணத்தின் பிரகாசம் பாய்வதினால்

இதிலிருக்கின்ற ராக்ஷதர்களுடைய நிறம் கறுத்துக் காணவில்லை. உயரப்போகின்ற சந்திரனுங்களங்கமற்றுப்பிரகாசிக்கின்றான். சமுத்திரமும்பொன்னுருகுகின்றதை ஒத்திருக்கின்றது. அண்டமுழுமையும் நிறைந்த இருளை யோட்டுகின்ற சூரியன், இந்தநகரத்திலிருக்கின்ற மாளிகைகளின்காக்கிக்குமுன், தன் ஒளிக்கெதிரோ ஒளிமழுங்கிய மின்மினியவ்வளவும் பிரகாசிக்கமாட்டான். தேனும் சந்தனமும் கஸ்தூரியும் கற்பகப் புஷ்பங்களும் யானை மதங்களும், இந்தப்பட்டணத்து ஸ்திரீகள் ஸ்நானஞ்செய்கின்றதிருட்டனேகலந்து பெருக்கெடுத் தோடிவந்து சமுத்திரத்தில் பாய்கின்றதனால், அதிலிருகின்றமீன்களும் திவ்வியவாசப்பரிமளிக்கின்றதுகள்.

**க வி.**

செல்வத்தச்சனைப்புகழ்ந்துமோசெங்கண்வாளரக்கன்..*
மெய்யோத்தாற்றியதவத்தையேவியத்துமோவிரிஞ்சன்.
ஐய்யபாடிலாவரத்தையேமதித்துமோவறியாத.........*
செய்யற்கிசையாம்யாவனையாதென்றுதுதிப்பாம்....*

என்பன.—இந்த நகரத்தைச்சிருஷ்டித்த விஸ்வகர்மனையே புகழ்வோமா! அல்லது ராவணேஸ்வரன் யதார்த்தமாய்ச்செய்த தவத்தையே அதிசயிப்போமா! அல்லது அவனுக்குப் பிரமதேவன் கொடுத்த சந்தேகமில்லாதவரத்தையே மதிப்போமா! அறியாத சபலசித்தத்தையுடைய நாம் எவ்விதத்தில் யாரைத்தான் ஸ்துதிசெய்வோம்! காடுகளும் சோலைகளும் ஸ்வர்ணத்தினாலும் ரத்தங்களினாலும் செய்யப்பட்டதுகளென்றாலும், தேனையும் புஷ்பங்களையும் கனிகளையுங்கொடுக்கின்றதனால், இதைப்பார்க்கிலும் ஸ்வர்க்கத்தாரும் பூலோகத்தாரும் பெறத்தக்கவரம் வேறென்னஇருக்கின்றது. இந்தநகரத்திலுள்ள கோபுரத்தின் உயரத்தை மகமேருவானது கண்டால் வெட்கிப்போமென்பதற்குச் சந்தேகமில்லை. ராவணனுடைய ஆக்கினைக்கு அஞ்சிச் சூரியன் லங்கையின்மேல் போகிறதில்லையென்று சொல்லுவார்கள், அது உண்மையல்ல. இந்தமதிலைத்தாண்டி யப்புறம்போகமாட்டாமையால்லவோ [illegible]தங்கிப்போகின்றான். மற்றும் [illegible] தேவர்கள் ச[illegible]அருக்க ளாகையால் அவர்கள் [illegible] வழியில்லாமல் ஒரு எல்லையை யேற்படுத்து [illegible]. அண்டமுட்டையுங்கடந்து செல்லும்ப[illegible] [illegible] உண்டாகியதுபோலிருக்கின்றது. இப்ப[illegible] [illegible]திருப்பதனால் இந்தப் பட்டணத்தி[illegible] [illegible] நுழையமாட்டாது. சூரியாஸ்மியும் [illegible] யமனுடைய ஆக்கினையுஞ்செல்லாது. சர்வ ச[illegible]த்திலே சகலரும் அழிந்துபோனாலும்அழியா[illegible] [illegible] தர்மரும் பிரவேசிக்காது. ஆகையாலிதே [illegible] போகமாட்டார்களென்பது ஒரு [illegible] தேவர்களில் அநேகர்பாடுவர்கள். அநே[illegible] அநேகர் வாத்தியமுழக்குவார்கள். அது [illegible] அநேகர் சபைகூடிக் காண்பார்கள். [illegible] தேவரம்பையர்களாடுகிறதையும் பாடு[illegible] [illegible] விஞ்சையஸ்திரீகளாடுவார்கள். பாடு[illegible] [illegible]டலையும் பாட்டையும்பழித்து யக்ஷஸ்திரீகளாடுவார்கள். பாடுவார்கள். அவர்களாடல்பாடல்களைப்பழித்து ராக்ஷதஸ்திரீகளாடுவார்கள். பாடுவார்கள். அவர்களாடவும் பாடவுந் தொடங்கும்பொழுது நாககன்னியர்கள் லயை தாள சுதிமுதலாகிய நடனக்கிரியைகளைச்செய்வார்கள். ராக்ஷதஸ்திரீகளுக்குத்தெய்வப்பெண்கள் பணிப்பெண்களாய், ஆபரணங்களும் வஸ்திரங்களும் பூமாலைகளும் சந்தனமும் எடுத்துக் கொடுத்துக் கொண்டிருப்பார்கள். பிரமதேவர்சொல்லத் தெய்வத்தச்சனாகிய விஸ்வகர்மா அநேககாலமாக வருத்தப் பட்டுக்கைதேர்ந்து. பொன்மலையின்மேல் ரத்னமழைபொழிந்ததுபோல ஸ்வர்ணத்தினாற் செய்து ரத்னங்களிழைத்து, அருமையாகச் சிருஷ்டித்தான். வீணையோசையில் [illegible]வதகோஷ மறைகின்றது. வேதகோஷத்தில் கடலொ[illegible]லி மறைகின்றது. உப்பரிகையி னிடங்கள்தோறும் ஸ்திரீகள் பரிமளமுண்டாகும்படி ஊட்டுகின்ற அகிற்புகையில்மேகமறைகின்றது. பளிங்கினாற் செய்யப்பட்ட மாளிகைகள்தோறும் தேன்துளிக்கின்ற கற்பகச்சோலைகள்தோறும் எல்லாரும் கள்ளுண்டு ஆடுகின்றவர்களும் பாடுகின்றவர்களுமாய்ச் சந்தோஷிக்கின்றார்களே யல்லாமல் துக்கிக்கின்றவர்களைக்காணோம். ராக்ஷதஸ்திரீகளுக்குப் பிராணபதமா யிருக்கின்ற ராக்ஷதர்கள். அந்த ஸ்திரீகளுடைய அத[illegible]ாமிர்தத்தை யுண்டு அவர்களுடைய இனிமையாகிய [illegible]வார்த்தைகளைக்கேட்டு அவர்களுடைகைக்கண்டு அவர்க[illegible]வணங்கி அதனைத்தீர்ப்பார்கள் இந்தலங்கையானது இ[illegible]ல் வாசஞ்செய்கின்ற ஸ்திரீகளுடைய சிவந்தவாயிமுல்சமுத்திரத்தில் பவ[illegible]க்கொடிபடர்ந்ததுபோலவும் அவர்களுடைய நேத்தி[illegible]த்தால் குவளைகள் புஷ்பித்த தடாகம்போலவும் முகங்[illegible]ளினால்தாமரைக்காடுபோலவும் பிரகாசிக்கின்றது. ராக்ஷதர்கள் எழுந்துதிரிகிறதினாலே இந்நாள்வரையில் அண்டமான் நகிழ்ந்துபோகாமலிருக்கிறது அதிசயமென்றேசொல்லவேணும். பிரமாதிபிபீலிகாந்தமாகிய ஜீவகோடிகளெல்லாம் இந்தராக்ஷதராசிக்கு நூற்றுக்கு ஒன்றாக உறையிடுகிறதற்கும்போதாது. மற்றும் ஸ்தூலதேகத்தையுடையவர்களும் மிதமற்றவீரத்தையுடையவர்களும் அளவில்லாதவரங்களை யுடையவர்களும் எவர்களாலும் அறியப்படாத மாயையையுடையவர்களும் உலகத்தையெல்லாங்கெல்லுகின்ற பலமுண்டாகிய ஸ்திரீக்கூட்டத்தை யுடையவர்களுமாயிருக்கின்றார்கள். இந்த நகரத்தின்தெருக்களில் ஒருதெருவிலிருந்து மற்றொருதெருவுக்குப் போகிறது ஒருதேசத்திலிருந்து மற்றொருதேசத்திற்குப் போகிறதாயிருக்கின்றது வீரகண்டை யில்லாத காலும், ஆயுத மில்லாத கையும், அக்கினிப்பொறிபறவாத கண்ணுமுடைய புருஷர்களேயில்லை. அவர்களுடைய உச்சியிலுதைத்துச்செம்பஞ்சழியாத பாதமுடைய ஸ்திரீகளுமில்லை. இந்தப் பட்டணத்தை யழிக்கிறதைக்குறித்துப் பின்பு பார்த்துக்கொள்வோம். முதல் நம்முடைய வானரசேனைகள் இதில்வந்து பிரவேசிக்கிறதோ அருமை. ஆகிலும் அதுவும் பெரிதல்ல. வந்தாலும் ராக்ஷத ஸ்திரீகளும் புருஷர்களும் பிணக்கினால் வெறுத்துக் கழற்றியெறிந்த ஆபரணங்



களினாலே வீதியிடமெல்லாந் தூர்ந்துபோகின்றதனால் அந்தவானரங்கள் அடிபெயர்த்துச் சஞ்சரிக்க முடியாது. ஆரங்களும், குண்டலங்களும், மற்றுமுள்ள பலவித பூஷணங்களும், பூமாலைகளும், சந்தனமும், யானைமதங்களும், குதிரைநுரையுமாகிய இதுகளெல்லாம் ஆற்றுநீரோடு வந்துவிழுந்து தனக்குள்ளே அடங்கும்படி. கொள்ளுகின்ற இந்தச்சமுத்திரத்தைப்போல ஆழமுடையது வேறொன்றுண்டோ! ஸ்ரீராமரிடத்திற்போய்ச்சொல்லுகின்ற காலத்தில் வில்வீரர்கள்தான் மிகுதியாயிருக்கின்றார்களென்பேனா! வேல்வீரர்கள்தான் அதிகமாயிருக்கின்றார்களென்பேனா! வாள்வீரர்கள்தான் விஸ்தாரமாயிருக்கின்றார்களென்பேனா! தண்டி பிண்டிபால முதலாகிய பலவித ஆயுதங்களைக்கொண்டு போர்செய்கின்றவர்கள்தான் பிரபலமாயிருக்கின்றார்களென்பேனா! மற்சண்டைசெய்கின்றவர்கள்தான் அநேகராயிருக்கின்றார்களென்பேனாவென்று இப்படியாக அநுமானானவர் அந்தலங்கையைப்பார்த்து யோசித்து இங்கேராக்ஷதர்கள்வந்து நம்முடனே யுத்தஞ்செய்தாலுஞ் செய்வார்களென்றுகுறித்து தம்முடைய ஸ்தூலரூபத்தைச்சுருக்கிக்கொண்டு சிறிய உருவமாய் அந்த மலையினிடத்திலிருந்தார். அப்பொழுது சூரியன் மேற்குச் சமுத்திரத்திற் போய் மறைந்தான்.

**க வி.**

எய்வினை யிறுதியிற் செல்வ மெய்தினன்...............*
ஆய்வினை மனத்திலா னறிஞர் சொற்கொளான்.........*
வீவினை நினைக்கலா னொருவன் மெய்யிலான்...........*
தீவினை யெனவிருள் செறிந்த தெங்குமே.................*

என்பன.—பூர்வ ஜென்ம புண்ணியத்தினாலே! அந்தியத்திலே! பாக்கியத்தை அடைபெற்று ஸ்வயபுத்தியுமில்லாமல் தெரிந்தவர்கள் சொல்லுஞ் சொல்லையுங்கேளாமல் தனக்கு எப்படியும் மரணம் வருமென்கிறதை நினையாமல் சத்தியமாகிய நிலையிலும் நில்லாமலிருக்கின்ற ஒருவனுடையபாவங்கள் அவனைச்சூழ்ந்துகொள்கிறதுபோல இருள்வந்து எங்குஞ்சூழ்ந்துகொண்டது. பின்னுமவனுடைய போர்வையாகிய யானைத்தோலைவாங்கிப் பிரமதேவன் அண்டத்திற்கு ஒருகௌசனையாகப்போர்த்ததுபோலவும், ஆதிசேஷன் தன்னுடைய ஆயிரம்வாய்ப்பற்களிலும் அநேககாலமாக ஊறிக்கொண்டிருந்த விஷத்தையெல்லாங்கக்க அது உலகமெல்லாம் நிறைந்ததுபோலவும் மேலாகிய பிரமவம்சத்திலேதோன்றிய ராவணேஸ்வரன் கற்பினையுடைய பிராட்டியாரை யெடுத்து அந்த சிறைவைத்த பின்பு அவனுடைய கீர்த்தியானது அல்லியமாகியவெள்ளைநிறம்போய்க்கறுத்து அநுபுவனமுழுதும் பரவியதுபோலவும், அண்டமுழுதும் அந்தஇருள்பரந்து மூடிக்கொண்டது. அப்படி இருள்பரந்தவேளையில் ராவணேஸ்வரனுடைய ஏவலினாலே அநேகராக்ஷதர்கள் அந்த இருளின்மார்க்கமாக இந்திரலோகத்திற்குப்போவார்கள். அநேகர்கள் சந்திரமண்டலத்திற்கு ஓடுவார்கள். அநேகர்கள் யமலோகத்திற்குப்போவார்கள். தேவர்கள் முன்னே போய்விட்டார்களே! இந்நேரவரையில் நாம்போகாமலிருந்தோமே! இதைக்குறித்து நீங்கள் தாமசமாயிருந்த தென்னவென்று நம்முடைய ராஜா கோபஞ்செய்வாரோவென்று நினைத்துச் சித்தர்கள்- முத்தாரங்களும், தலையிற்சூடியமாலைகளும், உத்தரீயமும் சரிந்துவிழும்படி ஓடிவருவார்கள். தேவஸ்திரீகளும், விஞ்சையஸ்திரீகளும், நாகஸ்திரீகளும், யக்ஷஸ்திரீகளும், கிரமம் கிரமமாகப் பணிவிடைசெய்யும்படி மின்னற் கூட்டங்கள் நெருங்கிவருவதுபோல ஆகாசத்திலிருந்து வருவார்கள். தேவர்களும், அசுரர்களும், நாகலோகத்தாரும், யக்ஷர்களும், வித்தியாதரர்களும், மற்றுமுள்ள யாவரும் பிரதாபலங்கேஸ்வரனுடைய குற்றேவல்களைச் செய்ய வானத்திலிருந்து தங்கள்தேககாந்தியினால் இருள் நீங்கும்படி கூடிவருவார்கள் இதுகளையெல்லாம் ஆஞ்சனேயர் பார்த்துக்கொண்டிருந்தார்.

**க வி.**

நீண்டருந் தீவினை நீக்க நீந்துபோய்.....................*
மாண்டற வுலர்ந்தது மாருதிப் பெயர்......................*
ஆண்டகை மாரிவந் தளிப்ப வாயிடை.......................*
ஈண்டற முளைத்தென முளைத்த திங்குவே..................*

என்பன—அச்சமையத்திலே! சந்திரோதயமாயிற்று அது எப்படியிருந்ததென்றால்! அரிதாகிய தீவினையென்னுங் கோடையானது தகிக்கும்படி உலர்ந்து நீந்துபோகிய தர்மமாகிய முளையானது அநுமானென்கின்ற மழைவந்து உதவிசெய்ய முளைத்தெழுந்ததுபோ லிருந்தது. மற்றும் ராமதூதராகிய ஆஞ்சனேயர் வந்த படியினாலே என்னையாளுகிய தேவேந்திரன் இனிச் சுகப்படுவானென்று சந்தோஷித்து எப்படிப்பார்த்த கிழக்திசையாகிய பெண்ணின் முகம்போலவும், எங்கள்பகை இன்றைத்தினத்துடனே தொலைந்ததென்று நினைத்தெழுந்த இந்திரனுடைய தவளக்குடைபோலவுமிருந்தது உதயமாகிப் பிரகாசிக்கின்ற சந்திரனாகியவெள்ளிக்குடத்தினால் பாற்சமுத்திரத்தை மொண்டு வானமானது சொரிந்ததுபோல நக்ஷத்திரமாகிய மீன்களுடனே நிலவின்பிரகாசம் ஆகாசம் பூமியெங்கும் [illegible]ந்து நிறைந்தது. வானமே! காமதேனுவாகியும், சந்திரோதயமே! அதன் மடியாகியும், சந்திரனே! முலையாகியும், சந்திரகிரணமே! அம்முலையிலிருந்து வருந் தாரையாகியும், சந்திரபிரகாசமே! தாரையாய்ச்சொரிந்தபாலாகியும்பிரகாசித்தன. அந்தத்தருணத்தில் ஆஞ்சனேயர்மேல் தேவர்கள் - புஷ்பவருஷம் வருஷித்தார்கள். அந்தப்புஷ்பங்கள் ராவணனுக்குப்பயந்து பூமியில் விழாமலும், அப்புறம் போகாமலும், அந்தரத்திலேதானே தங்கிநிற்கிறதுபோல நக்ஷத்திரங்கள் பிரகாசித்தனகள். நிலவினாலே அழிந்த இருளானது உருவமெடுத்து அந்தநிலவின் குஞ்சுகளைக் கடித்து விழுங்குகிறதுபோல மல்லிகைப் புஷ்பங்கள் தோறும் வண்டுகள் மொய்த்துச் சூழ்ந்ததுகள். சந்திரகிரணத்தின் பிரகாசம் லங்காபட்டண மெங்கும் நிறைந்தது எப்படியிருந்ததென்றால் வெள்ளை வஸ்திரத்தினாலே உறைசெய்து அந்தப்பட்டண முழுமையும் மூடினதுபோலிருந்தது. பின்னும் அந்தச் சந்திரபிரகாசம் ஸ்ரீராமபா

ணத்தின் வேகத்தைப்போல அநுமான்வந்து சேர்ந்தத
னால் அந்த ஸ்ரீராகவனுடைய கீர்த்தி லங்கையின் அகழ்
அரண் முதலாகிய எவ்விடங்களிலும்போய் நிறைந்தது
போலவுமிருந்தது. அப்போது ஆஞ்சனேயரும் லங்கை
க்குள்ளே எந்தவழியினாற் போகலாமென்று யோசனை
செய்து பின்பு ஒருவழியாற்போகும்படி பவளமலையை
விட்டெழுந்து அப்பால்நடந்தார். அதுகண்டு தேவர்க
ள் வாழ்த்தினார்கள். பின்பு சமுத்திரமே அகழாக மே
லேழுலோகத்திற்கு அப்புறத்திலும் உயர்ந்து மஹாப்பிர
ளயம் வருங்காலத்திலும் அழியாதிருக்கின்ற சொர்ண ம
திலின் சமீபத்தில் போய்ச் சேர்ந்தார் சேர்ந்து அந்த ம
திலின் உன்னதத்தைப்பார்த்துச் சந்திரசூரியர்கள் வஞ்
சகனாகிய தசக்ரீபனுடைய ஆக்கினைக்குப்பயந்து இந்
த லங்கையின்மேல் வருகிறதில்லையென்று சொல்லு கி
ன்றார்களே அதுதாமேயல்ல, இந்தமதில் உயர்ந்திருப்
பதனால் ஏறி அப்பால்போகக்கூடாமையால்தான் வில
கிப்போகின்றார்களென்றும் அன்றியும் இந்த லங்கை ம
தில் சத்துருக்களுடைய அளவில்லாத சைநியங்களெல்
லாம் நடுவே பிரவேசிக்கத்தக்க விசாலமுடைய தென்
போமாகில் அவ்வளவுமாத்திரமேயல்ல பிரமாண்டத்தி
ன் மத்தியில் எவ்வளவுவிசாலமுண்டோ அவ்வளவு வி
சாலத்தையும் அதன் உன்னதம் எவ்வளவோ அவ்வள
வு உன்னதத்தையு முடையதென்று மெண்ணி அதற்கு
ராஜாவாகிய ராவணனைக்குறித்து மிகவும் அதிசயப்பட்
டு சிங்கமும், மதயானையும், நாணும்படிநடந்து தனியே
அந்தப்பட்டணத்திலே புகுந்து பிராட்டியாரைத் தேடு
ம்படிபிரயத்தினப்பட்டுப்போகிய அநுமானானவர்எமனு
டையவாய்க்குச் சமானமாகிய அந்தக்கோட்டைவாசலை
எதிரேபார்த்து இந்தவாசல் மகாமேருவை நிறுத்தி நடு
வே வெளிசெய்ததுவோ! தேவலோகத்திற்குப் போகு
ம்படி சமைத்தபடிக்கட்டோ! மேலேழுலோகமும், நி
லைநிற்கிறதற்கு நடுவேநாட்டிவைத்ததூணோ! கடல்நீரெ
ல்லாம் புகுந்துபோகிறதற்குவிட்ட வழிதானோ! ஸப்த
லோகங்களிலும் வாழ்கின்ற சகல உயிர்களும் ராவண
னுடனேவந்து எதிர்த்தால் இதற்குள் ஒன்றின்பின்னே
யொன்றாய்ப்புகவேணுமென்கின்றகிரமம்வேண்டிய தில்
லை. ஏககாலத்திலேயே எல்லாம் ஒருமிக்க நுழைந்து
போகத்தக்கதாயிருக்கின்ற நம்முடையவானரவீரர்கள்
வந்து புகத்தக்கவழி இதுதானென்று நிச்சயிப்போமா
னால் இங்கே பகைவர்கள் ஏழுசமுத்திரத்திலும் அதிக
மாயிருக்கின்றார்கள். இதற்கப்புறத்திலும் கள்ளச் செய்
கையும் மிகுந்த பராக்கிரமத்தையுமுடைய இருநா
லுவெள்ளம் ராக்ஷதர்கள் இரண்டுகையிலும் வாளையுரு
வப்பிடித்துக்கொண்டு அந்தவாள்கள் பளபள வென்று
ம் மின்னைப்போலுங் கூர்மையாகிய கோரதந்தங்கள் த
கதகவென்றும்பிரகாசிக்க. ஒவ்வொருவர் ஒவ்வொரு க
ரியமலைபோல நின்ற வண்ணமாயும் பின்னும் அநேகர்
சூலம் - மழு - வேல் - தோமரம் - இருப்புலக்கை - வில்
அம்பு - கற்பணம் - முசுண்டி - கணையம் - சக்கரம் - வ
சிரம் - கலிகை - குந்தம் - பிண்டிபாலம் - அங்குசம்

கவண் - பாச முதலாகிய பலவகை ஆயுதங்களையும் ஏந்
திக்கொண்டு பங்குனிமாதத்திலே மலர்ந்திருக்கின்ற மு
ருக்கங்காடுபோலச் சிவந்தமயிரும், மிகுந்த கோபமுமு
டையவர்களாயு மிருக்கின்றார்கள். அன்றியும் அநேகரா
க்ஷதர்கள் வாசலுக்கெதிரே ஆயுதபாணிகளாய் எமனும்
கண்டு நடுங்கும்படி கூட்டமாயிருந்து காவல்காக்கின்று
ர்கள். ஆகையால் எந்தத்தேவர்கள் எந்த அசுரர்கள் எப்
படிப்பட்ட சாமர்த்தியர்களானாலும் இந்தக் கோட்டை
வாசலைக்கடக்க மாட்டுவார்களா! சத்துருக்களாகிய இ
வர்களுடைய காவல் இப்படிப்பட்டதானால் இனி ஸ்ரீரா
மரும நாமும்வந்து யுத்தந்தொடங்கினால் ஏதாய்முடியு
மோ! மேலும் அந்தக்கடலைக்கடந்தது பிரயாச மல்ல,
இந்தவாசலைக்கடக்கிறதுதான் மிகவும் பிரயாசமாயிருக்
கின்றது. மனதுசிறிது சலனப்பட்டால் நாம் எண்ணி
வந்த காரியத்தைமுடிக்கக்கூடாது யுத்தஞ்செய்யத்தொ
டங்குவோமானால் இந்த ராக்ஷதர்கள் வெகுநாள்யுத்த
ஞ்செய்வார்கள். ஆகையால் இந்தவாசலின் வழியாலே
போகிறது மகாகடினமாகும் நம்மைப்போலும் பராக்கி
ரமசாலிகளா யிருக்கின்றவர்கள் பகையாளிகள் உண்டா
க்கிய வழியால்போவது அழகல்ல. சூரியசந்திரர்களுஞ்
சஞ்சரியாத மதிலைத்தாண்டித்தான் உள்ளே போகவே
ணுமென்று எண்ணி ஒருபக்கத்திற்போனார். அப்போது
அந்த லங்காபுரியைத் தன்பிராணனைப்போலக் காத்துக்
கொண்டிருக்கின்ற லங்காதேவியென்றும், லங்கிணியெ
ன்றும் சொல்லப்படும் பெயரினையுடையவள் இந்த அ
நுமானைக்கண்டு சர்ப்பம்போலச்சீறிக் கண்களில் நெரு
ப்புப்பறக்க ஓடிவந்தாள். அவளெப்படிப்பட்டவளென்
றால் எட்டுத்தோளும், நாலுமுகமும், ஸப்தலோகத்தை
யுஞ்சூழ்ந்து கவிகின்ற சரீரப்பிரகாசமும், சுழல்கின்ற க
ண்களும், திரிலோகத்தாரையும், உள்ளேவராமல் தடுத்
துக்காக்கின்ற அதிகபலமும் பொறுமை யில்லாமையுமு
ண்டானவள் ஆராகிலும் இந்தப்பட்டணத்திற்குள் வரு
கின்றார்களோ வென்று நான்கு திசைகளையும் பார்த்து
மேககர்ஜிதம்போலக் கொக்கரித்துக்கொண் டிருக்கின்ற
வள் கால்சிலம்புகள் சப்திக்க மின்னலைப்போல ஆபர
ணங்கள்ஜொலிக்க வேலாயுதம், வாளாயுதம், சூலாயுத
ம், பாசம், சங்கு, அம்பு, வில் முதலானவைகளும்கை
யிலேதரித்துக்கொண்டு உலாவுகின்றவள் மகமேருபர்
வதம்போலப்பருத்து உயர்ந்தசரீரமும்அர்த்தசந்திரனை
ப்போலவளைந்த பற்களுமுடையவள் வாய்களிலேபுகை
யெழும்ப எமனுங்கண்டு பயப்படும்படி கோபம் அதிகரி
த்திருக்கின்றவள். பஞ்சவர்ணப் பட்டுவஸ்திரமுடுத்துஸ்
வர்ண உத்தரீயம்போர்த்து முத்தாரந் தரித்திருக் கின்
றவள் கருடனைப் போல அதி வேக முண்டானவள்.
மந்தார மாலை பிரகாசிக்கக் கிரீடங்க ளணிந்து, லங்
கா பட்டணத்தைத் தன் கண்ணுக் குள்ளே வைத்துக்
காத்துக்கொண் டிருக்கின்றவள் அப்படிப்பட்ட லங்கா
தேவியானவள், ஆரடா! கில்கில்லென்று அதட்டினாள்.
அதுகண்டு அநுமானானவர்வாவாவென்றுசொல்லிக்கொ
ண்டு அவளுக்குச்சமீபத்திலேபோனார், அப்படி வந்தவ



னைப்பார்த்துப் புத்தியில்லாதவனே அச்சமில்லாமல் த
கரதகாரியஞ்செய்தாய், நீ இலையும் காயும் கனியும் தின்
று திரிகின்ற குரங்கானபடியினாலே உன்னுடன் எனக்கு
என்னபேச்சு. மதிலின்மேலேறி உன்னுடையபிராணனை
ப்போக்கடித்துக்கொள்ளாதே சும்மா ஓடிப்போய்விடு
மென்றுசொன்னாள். அந்தவார்த்தையைக் கேட்டு ஆஞ்
சனேயர் மனதிற்குள்ளே களித்துப்பின்பு அதிககோபங்
கொண்டு தாமும் அவளை அதட்டி அழைத்து நான் இந்
தப்பட்டணத்தைப் பார்க்கவந்தேன். எளியவனாகிய நா
ன்வந்தால் உனக்கென்ன நஷ்டமென்று சொன்னார். அ
தற்கு லங்காதேவிகோபித்து அடா குரங்கே நான் போ
கச் சொன்னாலும் போகாமல் எதிருத்தரஞ் சொல்லிக்
கொண்டு பயப்படாமல் நிற்கிறையே நீயார் சொல் திரி
புராந்தகனை சிவன்முதலானவர்களும் இந்த ஊர்க்குள்
வரப்பயப்படுவார்கள். அப்படியிருக்க உன்னாலே பார்க்
கின்றவனா! இந்த ஊரென்று நகைத்தாள். அவள்நகை
த்ததுகண்டு அநுமானானவரும் மனதுக்குள்ளே நகைத்
தார். அதுதெரிந்து கொண்டு அடா! குரங்கே நீ யாரா
லனுப்பவந்தாய் உன்பிராணன்போனா லல்லாமல நீயோ
டிப்போகிறதில்லையென்றுசொன்னாள். அதற்கு அநுமா
னானவர் நானிந்த ஊருக்குள்ளே போய்ப் பார்த்தாலல்
லாமற் போகிறதில்லையென்று சொன்னார். அவ்வசனத்
தைக்கேட்டவள் இவன் வானரனல்லன். வஞ்சகத்தைக்
கொண்டுவந்தவனாகவேணும். என்னைக்கண்டால் யமனு
ம்நடுக்கிட்டு மூர்ச்சைபோவான். இவனோ வென்றால்
அதிகதைரியத்துடனே பிரளயகால ருத்திரனைப்போல
நகைக்கிறான். ஆகையால் ஆரோவென்று மனங்கலங்
கிக் கோபம் அதிகரிக்க இவனை அவசியம்நான்கொல்லவே
ன். கொல்லாமற்போனால் இவ்வூருக்கே மோசம் வரு
மென்றுஎண்ணி, எட்டுக்கண்களிலும் நான்குவாயிலும்
திக் திக்கென்று அக்கினியானது பொங்கியெழும்ப அடா
நீ மதிலின்மேல போவாய் போவாயென்று உருக்கித் த
ன்கையிலிருந்த சூலா யுதத்தை உக்கிரத்துடனே அநு
மான்மேலெறிந்தாள். அந்தச் சூலமானது மின்னலைப்
போலத் தகத்தகாயமாய்ப் பிரகாசித்துக்கொண்டு தமக்
கெதிரேவரக்கண்டு ஆஞ்சனேயரானவர் அதைக் கையி
னாற்பிடித்து ஆகாசத்திலே கருடன் சர்ப்பத்தைத்துணி
க்கிறதுபோலத் தேவர்கள் சந்தோஷிக்கவும் அவள் பய
ந்துநடுங்கிடவும் நொடிக்குள்ளே ஒடித்தெறிந்தார். சூ
லாயுதம் ஒடிபட்டு நீறாய்போனதுகண்டு லங்காதேவி யு
காந்தகாலாக்கினிபோல அதிககோபங்கொண்டு பின்னு
ம் தெய்வீகமாகிய பலவித ஆயுதங்களையும் பிரயோகஞ்
செய்யும்படி யத்தினப்பட்டாள், அதையறிந்து அநுமா
னானவர். அவள்கையிலிருந்த ஆயுதங்களை யெல்லாம் ஒ
ன்றொழியாமல் சீக்கிரத்தில் பறித்து ஆகாசத்தில் விட்
டெறிந்தார். அதுகண்டு அநுமான்மேல் பிரயோகஞ்செ
ய்வதற்கு வேறே ஆயுத மில்லாதபடியினாலே லங்காதேவி
யானவள், பிரளயகாலமேகம்போலக் கர்ஜித்துப்பர்வத
ங்களை யெடுத்தெறிந்து பந்தும் அம்மனையும் ஆடுகின்றக
ன்கைகளினாலே, நெருப்புப்பொறிசிதறும்படி ஆஞ்சனே

யரை ஓங்கிஅடித்தாள். அப்படி அடித்தும் அடியாததற்
குமுன்னே அவளுடைய கைகளையெல்லாம் ஒருமிக்கத்
தாம் ஒருகையினாலே சேர்த்துப்பிடித்துக்கொண்டு இவ
ள் பெண்பிறப்பையுடையவள் இவளைக்கொன்றால் தோ
ஷம்வந்து லபிக்குமாகையால் கொல்லலாகாதென் றெண்
ணித்து, ஒருகையினால் அவள்மார்பில் ஒருஅறைகொடு
த்தார். அந்த அறைபடவே இடிவிழுந்த பர்வதம்போல
த்திடுமென்று பூமியில்விழுந்தாள். விழுந்துகொந்து வா
யினால் ரத்தங்கக்கிக்கொண்டு அந்த ரத்த வெள்ளத்தில்
அழுந்தி மூர்ச்சித்து, மனஞ்சலித்துப் பூர்வத்தில் பிரம
தேவர் தனக்குக்கட்டளையிட்டிருந்ததை நினைத்துக் கொ
ண்டு எழுந்திருந்து சகலலோகங்களிலுமுள்ள யாவரும்
யாவையும் சிரத்தாபக்தி விசுவாசத்துடனே நமஸ்கார
ஞ்செய்கின்ற திருவடித்தாமரையையுடைய ஸ்ரீராமபிரா
னுக்கு இணங்கிய தூதராகிய ஆஞ்சனேயருக்கு முன்
னே வந்துநின்று அவரைநோக்கித்து, ஐயா? மஹாநுபா
வரே! முற்காலத்திலே பிரபஞ்சத்தையெல்லாம்சிருஷ்
டிசெய்த பிரமதேவரானவர் என்னை இந்த லங்கையைக்
காத்துக்கொண் டிருக்கசொல்லி ஆக்கியாபித்தார் என்
பெயர் லங்காதேவி. நான்கிர்த்தியம்தப்பி மனத்திமைத்
து உம்முடையவிஷயத்தில் இந்தஅற்பகாரியத்தைச்செ
ய்தேன். நீர் என்னைக்கொல்லாமல் பிழைத்துப் போம்ப
டி கிருபைசெய்தீரேயாகில் உமக்கு உண்மையைச்சொ
ல்லுகிறேனென்று சொல்லத் தலைப்பட்டாள். அந்நாளி
லே அந்தப்பிரமதேவரைநோக்கி ஸ்வாமி! நானெத்த
னைகாலம் இந்தலங்கையைக் காத்துக்கொண்டிருப்பே
னென்றுகேட்க, அவர் நீ வெகுகாலங்காத்துக்கொண்டி
ருந்தால் ஒருகுரங்குவந்து உன்னைக் கையினாலேயின்டி
யடிக்கும். அப்பொழுது அந்தக் காவலைவிட்டு நம்மிட
த்திற்கு வந்துவிடுவாய். பின்பு அந்தப் பட்டணம் அழி
ந்துபோமென்றுசொன்னார். அவ்வண்ணமே வந்துமுடி
ந்தது. தர்மம்வெல்லும் பாவந்தோற்கும் என்பதைக் கு
றித்துச் சொல்லவேணுமோ இனிமேல் நீர்நினைத்தகாரி
யமெல்லாம் யாதொருதடையில்லாமல் முடியும் மே
லும் உம்மாலாகாதகாரியம் ஒன்றுண்டோ! நீர்சுகமாய்
ப்பட்டணத்திற் குள்ளேபோய் உம்முடையகாரியத்தை
ப்பார்த்துக்கொள்ளுமென்று சொல்லி, ஆஞ்சனேயருக்
குத் தெண்டன்சமர்ப்பித்து அந்தலங்காதேவிபிரமலோ
கம்போய்ச்சேர்ந்தாள். அப்போது வீராதிவீராகிய ஆ
ஞ்சனேயர் சந்தோஷமாகப் பார்த்து அப்படித்தான் மு
டியுமென்றெண்ணி, தாரக பிரமமந்திரமாகிய ஸ்ரீராமரு
டையநாமத்தை மனதிலே தியானஞ்செய்து ஸ்துதித்து
அவரைவணங்கி, அந்த ராக்ஷதர்களுடைய லங்கை மதி
லைத்தாண்டிப் பட்டணத்திற்குள்ளேபோய், பெரியபாற்
கடல்முழுதுஞ் சிறியமோர்த்துளியாகிய பிரைகலந்தது
போல எங்கும்வியாபித்தவராய், ரத்னங்களினாற்செய்ய
ப்பட்ட உன்னதமாகிய உப்பரிகைகளெல்லாம் ஜாஜ்வல்
யமாய்ப் பிரகாசித்து, இருளைத்தலைகாட்டாமல் ஓட்டிவி
ட்டுப் பகலைஉண்டாக்குகிறபடியினாலே அதைக்கண்டுசூ
ரியோதயமாயிற்றோவென்று அச்சங் கொண்டார். உட

ளே செவ்வையாய்ப்பார்த்துச் சூரியோதய மானதல்ல.
இந்நகரத்திலுள்ள மாடமாளிகைகளின் பிரகாசமென்
று தெளிந்து. ஆ! ஆ! இந்த ரத்னகாந்திக்குமுன்னே சூ
ரியன்வந்தால் மின்மினிபோலல்லவோ தோற்றுவானெ
ன்று அதிசயப்பட்டார். பின்னும் மகமேருவுக்கு ஒப்பா
கியசொர்ணமதிலின்மத்தியில, தோஷரகிதமாகிய ரத்ன
ங்களழுத்திய உப்பரிகைகளின் பிரகாசத்தினால் இருள்
நீங்குதலால், இந்தலங்கையிலிருக்கின்ற ராக்ஷதர்கள்பக
ற்காலத்தில் சஞ்சரிக்கிறதுபோல நிசியாகிய அர்த்தரா
த்திரிகாலத்திலும் சாதாரணமாய்ச் சஞ்சாரஞ்செய்கிறப
டியினாலே இவர்களுக்கு அந்தக்காரணத்தைப்பற்றி நிசி
சரரென்று பெயருண்டாயிற்றென்று நினைத்து, இப்படி
ப்பட்ட பிரகாசத்திலே வீதியில்நாம் பகிரங்கமாய்நடக்
கிறதினால் குற்றம்வருமென்று தமதுசரீரத்தைக் குறுக
ச்செய்துகொண்டு மாளிகைகளின்பக்கத்தில் மந்தரகிரி
யைப்போலவும் ஸ்ரீராமருடைய கீர்த்தியைப்போலவும்
உயர்ந்ததோளினையுடைய ஆஞ்சனேயர் ஒதுங்கிநடக்க
த்தொடங்கினர். பசுக்கள்நெருங்கிய தொழுவங்கள்தோ
றும் யானைகட்டிய கூடங்கள்தோறும் பந்திபந்தியாகிய
குதிரைக்கொட்டாரங்கள்தோறும் லக்ஷ்மி வாசஞ்செ
ய்கின்றவீடுகள்தோறும் பரிமளம்வீசுகின்ற பூஞ்சோலை
கள்தோறும் கட்டைக்கடந்த பாதத்தினால்தாவி, புஷ்பங்
கள்தோறும் தாவிச்செல்கின்ற வண்டுபோலப்போனார்
சூரியன் சந்திரன் முதலாகியநவக்கிரகங்களுக்கும் நக்ஷ
த்திரங்களுக்கும் [illegible]ஆகிய அநேகவிதரத்னங்களால் ப
த்திபத்தியாக உண்டாக்கப்பட் டிருக்கின்ற சுவர்த்தலங்
கள் சொரிகின்ற ஜோதிச்சாயைகள் தமது திருமேனியி
ற்பாய்கின்றதனால், வாயுகுமாரராகிய ஆஞ்சனேயர்கறு
த்தநிறத்தையுடையவராகியும் வெளுத்தநிறத்தையுடை
யவராகியும் சிவப்புநிறத்தை யுடையவராகியும் காணத்
தலைப்பட்டார். அந்தக்காட்சி எப்படியிருந்ததென்றால்,
காண்பதற்கு அரியவனுகியும் எளியவனுகியும் தமது இ
ருதயகமலத்தில் வாசஞ்செய்கின்ற, நானாவிதரூபத்தை
யுடைய அந்தரியாமியாகிய ஸ்ரீராமச்சந்திரனைப் போல
வேயிருந்தது. எங்கும் தேவகன்னியர்கள் சொர்னக்குட
ங்களில் ஆகாசகங்காஜலத்தைக் கொண்டுவந்து ஸ்நான
ஞ்செய்விக்க, ராக்ஷசஸ்திரீகள் மயில்களும் அன்னங்க
ளும் நீர்விளையாடுகிறதுபோல ஸ்நானஞ் செய்கின்றதை
யும் இளந்தளிரையொத்த கைகள்நோவ வீணைமீட்டி ல
யைகான சுதிதாளப் பிரமாணத்துடனே பாடும்பாடல்க
ள் மேகங்கர்ஜ்ஜிக்கின்றதனால் அந்தப்பிரமாணத்தப்பிப்
போகின்றதென்று விஞ்சைய ஸ்திரீகள் உப்பரிகைகளி
ன்மேல் தவழ்கின்றமேகத்தின் வாயைத்தங்கள் கைகளி
னால் மூடுகின்றதையும் பூப்பந்த லிடப்பட்டு ரத்னதீபங்
கள் ஜொலிக்கின்ற பொன்மயமாகிய நடன சாலைகளில்
புஷ்பசயனத்தில் வந்திருந்து கந்தர்வஸ்திரீகள் ஆடுகின்
ற நாட்டியத்தைப் பார்க்கின்றவர்களையும் பளிங்கினாற் க
ட்டிய மேடைகளின்மேலிருந்து பயிருக்கு நீர்பாய்ச்சுகி
றதுபோல தங்களுக்கு நாயகன்மார்களிடத்தில் காமம்அ
திகரிக்கும்படி கள்ளுண்கின்றவர்களையும் செம்பவளத்தி
ற்குச்சமானமாகிய பாதத்தில் செம்பஞ்சின் குழம்பால்
சித்திரமெழுதிச் சரீரத்தில் மிகுந்த வாசனையையுடைய
சலவைச்சாந்துபூசி கண்களில்மையிட்டுப் பலவித ஆபர
ணங்களும் கற்பகவிருக்ஷங் கொடுக்க வாங்கி அணிந்து
கொள்கின்றவர்களையும் நாயகன்மார்கள்செய்த குற்றமா
னது தங்கள் உயிரைவருத்த ஊடியஸ்திரீகள் பெருமூச்
செறிந்து இடைதுவளக் காற்சிலம்பு சப்திக்கும்படி உ
தைக்க, சந்தோஷித்து மயிர்க்குச்செறிகின்றவர்களையும்
உள்ளேகொண்ட மயக்கத்தினால் கண்சிவந்து வாயிதழ்
வெளுத்துப்புருவம்வளைந்துதுடிக்க, வெயர்வுண்டாகமு
கமானதுவேறுபட்டுக் கள்ளினிடத்திலே காணக்கண்டு,
சக்களத்தியென்று நினைத்துப் புருஷர்களைக் கோபிக்கின்
றவர்களையும் நாயகன்மார்களைப் பிரிந்து ஸ்தனத்தின்மே
ல் அணிந்த சந்தனந்தீயும்படி தாமரைமலரின்மேல்வே
ருெருதாமரைமலர்பூத்ததுபோல முகத்தினிடத்தில்கை
யைவைத்துக்கொண்டு அசைவற்றிருந்து பெருமூச்செ
றிகின்றவர்களையும் நாயகன்மார்களின்மேற்கோபத்தால்
சயனத்தில் பிரக்கிரையைப்பிக்கிடந்து காமம் அதிகரித்த
லால் அவர்கள்வருமவழியைப்பார்த்துத் தாங்கள் அனு
ப்பினதாதிகள் நகைத்துக்கொண்டுவரக்கண்டு உயிர்வந்
து துடித்து அழுகின்றவர்களையும்சகலவாத்தியமுழக்கத்து
டனேதங்கள் தங்கள்வீட்டுத்தெய்வங்களைக் கொண்டாடி
ப்புஷ்பத்தால் அர்ச்சித்துப் பூஜைசெய்கின்றவர்களையும்,
காமப்பிணியினால்புருஷர்களின்பக்கத்தில்படுத்துப்பொ
ய்யுறக்கங்கொண்டிருந்து பின்பு அப்பிணைக்குத்தப்பிச் சை
யோகஞ்செய்யநினைத்துக்கொண்டுமெள்ளக்கண்ணைத்தி
றந்துபார்க்கின்றவர்களையும் அறிவுடனே அந்தக்கரண
முதலானதுகளும்நாயகன்மார்களிடத்திலேசார்ந்திருக்க,
அவர்கள்மேற் பிணங்கிப்பேசியக்கதைவச் சாத்துகின்ற
வர்களையும் மேகத்தைப்போலப்பேரிகைமுழங்கத் தேவ
ர்கள் வந்து ஆசீர்வதிக்க முனிஸ்வரர்கள்சோபனங்கள்கூ
றரம்பாஸ்திரீகள் பல்லாண்டுபாடக் கல்யாணஞ்செய்து
மகிழ்கின்றவர்களையும் மற்றும்பலவிதச் செய்கைகளைச்
செய்துகொண்டிருக்கின்றயக்ஷஸ்திரீகள் கந்தர்வஸ்திரீக
ள்விஞ்சையஸ்திரீகள்முதலாகிய அனைவரையும், அநுமா
னவர்தெளிவாகப்பார்த்துக்கொண்டேநடந்துஅப்பா
ல்கும்பகர்ணனுடைய மாளிகைக்குப்போனார், அவ்விடத்
தில் எழுயோசனைவிஸ்திர்ணம். அகன்று உயர்ந்துநவரத்
னகசிதமாய்த்தேவேந்திரனுடையபட்டாபிஷேகமண்ட
பம்போல அதிசிங்காரமாகியஒருமண்டபமிருக்கின்றது
அதுஎட்டுத்திக்கிலும் இருளைநிலைபெறுமல் ஓட்டுகின்ற
து. அதன்நடுவே ஒருபஞ்சமெத்தையின்மேல் சர்ப்பரா
ஜன்சயனித்துக்கொண்டிருக்கிறதுபோலவும்சமுத்திரம்
கிடக்கிறதுபோலவும்இருளெல்லாம் ஓரிடத்தில் கூடியி
ருக்கிறதுபோலவும்பாவங்களெல்லாம்திரண்டு ஒருருவ
மெடுத்ததுபோலவும் கும்பகர்ணன் படுத்துக்கொண்டு சு
ழுத்திரத்திலேமூழ்கியெழுந்து மூவகைப்பட்ட கதிகளு
டனே கற்பகக்காட்டிலேசஞ்சரிக்கின்றஇளந்தென்றற்கா
ற்றுனதுவந்து முகத்திலேயிருதுவாய்த்தவழவும் தேவக
ன்னிகைகள் பாதம்வருடவும் அவர்களுடைய முகமாகிய



சந்திரனைக்கண்டு சந்திரகாந்தம் கக்குகின்ற ஜலமானது
மேலே துளிக்கவும் நித்திரைபண்ணிக்கொண் டிருந்தா
ன். அவனுடைய சுவாசமென்கிற வேகத்தையுடையபெ
ருங்காற்றுனது ஆஞ்சனேயரை வாசலின்புறத்திலே த
ள்ளிக்கொண்டுவந்துநிறுத்தி மறுபடி பராக்கிரம மூண்
டான அந்தகும்பகர்ணனுடையமூக்குக்குள்ளேயிழுத்து
க்கொண்டுபோயிற்று. அதைக்கண்டு அவர்பயந்து நடு
ங்கி சீக்கிரமாய் அங்கிருந்து வெளியிலேகுதித்து ஆச்ச
ரியப்பட்டுக் கைவிரலைத் தெறித்தார். புழுதிக்கூட்டங்க
ளெழும்பி ஆகாசத்தைஅளாவும்படி அவன்மூக்கிலிருந்
தும் வெளிப்பட்டுப்பின்னும் அதற்குள்ளேபோய்நுழை
கின்ற அந்த உசுவாச நிசுவாசம் எப்படியிருந்ததென்று
ல், உலகங்களையெல்லாம்நாசஞ்செய்கின்றபிரசண்டமா
ருதமானது யுகாந்த காலத்தின் வரவை எதிர்பார்த்துக்
கொண்டு சஞ்சரிப்பதை ஒத்திருந்தது. அவன்சந்திரனை
த் தன்பகைவர்களிற்சேர்ந்தவனென்றுபிடித்து இருபினா
வைக்கிறதின் னும்படி தனதுபெரியவாயினிடத்தில்வைத்
ததுபோல அவனுடையமுகத்தில்கோரதந்தங்கள்பிரகா
சிக்க மந்திரத்தினாலேதடைபட்ட நாகம்போலவும், யுக
முடிவைப்பார்த்துக்கொண்டு பொங்கிவராமல் அடங்கி
யிருக்கின்ற கடல்போலவும், உறங்குகின்ற அந்தக்கும்
பகர்ணனைப்பார்த்து இவன்ராவணனேவென்று எண்ணி
த்திரிமூர்த்திகளில் ஒருமூர்த்தியாகிய அநுமானவர் அ
திககோபமாய்ச் சமீபத்திலேபோய்ப்பார்த்து இவனுக்கு
ப்பத்துத்தலையும், இருபதுதோளும் இல்லாததினாலேரா
வணன் அல்லவென்றுகுறித்துக் கோபமாகியவடவாக்கி
னியை அறிவாகிய கடல்நீரால் தணியச்செய்துகொண்
டு பின்பு இவன் அரோதெரியவில்லை நல்லது எவனுயிரு
ந்தாலுமிருக்கட்டும் இன்னஞ்சிலநாள்வரைக்குந்தானே
உயிர்கொண்டிருக்கப்போகின்றதென்றுமனதிலெண்ணி
அந்தமாளிகையைவிட்டு அப்பாலிருக்கின்றமாடங்கள்,
கூடங்கள், மாளிகைகள், அடரங்குகள், சபாமண்டபங்
கள், தேவாலயங்கள், வேதிகைகள், வித்தியாசாலைகள்,
முதலாகியபலவகையிடங்களையும் ஸ்ரீராமருடையகீர்த்தி
யே ஒருவடிவெடுத்ததுபோலிருக்கின்ற அநுமானவர்
தேடிக்கொண்டேபோனார். மேருமுதல் அனுவளவுமிரு
ள்ளசகலசராசரங்களிலும்நிறைந்திருக்கின்றஸ்ரீமகாவிஷ்
ணுவைப்போல, மாணிக்கமயமாகியவாசல்களுக்குள்ளு
ம், சிறியசாளரங்களுக்குள்ளும், புஷ்பங்களுக்குள்ளும்,
புஷ்பத்தின் தண்டுகளுக்குள்ளும், காற்றுக்குள்ளும், பு
கைக்குள்ளும், அதற்குத்தக்கபடி ஸ்தூலமும் சூக்ஷ்ம
முமாகிய உருவமெடுத்து நுழைந்து லோகமாதாவைத்
தேடிக்கொண்டுபோகிய அந்த அநுமானுடையநிலைமை
யார்தான்தெரிந்துசொல்லக்கூடும், இந்தப்பிரகாரமெந்
த இடங்களிலும்போய் எவ்வகைப்பட்ட ஸ்திரீகளையும்
காணும்பொருட்டு சொர்க்கமத்தியபாதாளங்களிலுள்ள
வர்களெல்லாம்விரும்பும்படி அவதரித்தபுண்ணியசீலனு
கிய விபீஷணனுடைய திருமாளிகைக்குள்ளேபுகு
ந்தார். பவளத்தினால்அழகாகக்கட்டியிருக்கின்றஅந்தமா
ளிகையில் பளிக்குமேடையின்மேல் தேன்துளிக்கின்ற
பாரிஜாதபுஷ்பப்பந்தலிலே அந்தவிபீஷணன் படுத்துக்
கொண்டிருந்தான். அவன் படுத்திருந்தது எப்படியிருந்
ததென்றால் தர்மமானது தனக்குரியவெளுத்தநிறத்துட
னே அந்தவூரிலுள்ள ராக்ஷதர்களுக்குமுன்னேயிருக்கமு
டியாதென்று அவர்களைப்போலக்கறுத்தரூபமெடுத்து ஒ
ளித்துக்கொண்டிருக்கிறதுபோலிருந்தது. அப்படிப்பட்
ட விபீஷணனைக்கண்டு அவ்விடத்திலின்று அவனுடைய
விவேகத்தைத் தம்முடைய விவேகத்தினால் அளவிட்டு,
இவன்குற்றமற்றசற்குணத்தையுடையபரமோத்தமனெ
ன்று அவனைக்குறித்துச் சந்தோஷப்பட்டு அப்பால்நட
ந்துபோய் சொர்ணச்சாயையாய்ப் பிரகாசிக்கின்ற ஒவ்
வொருகோடி மாடங்களை நவ்வொரு இமைப் பொழுதி
லேதேடினர். அவ்விடங்களில் இந்திரசித்துதன்பலத்தால்
சிறைவைக்கப்பட்டிருக்கின்றதேவஸ்திரீகள்-யக்ஷஸ்திரீ
கள்-கந்தர்வஸ்திரீகள்-கின்னரஸ்திரீகள்-பன்னகஸ்திரீக
ள்-வித்தியாதரஸ்திரீகள்-கிம்புருஷஸ்திரீகள்-முதலாகி
ய அநேககோடி ஸ்திரீகூட்டங்களிலுந்தேடிக்கொண்டு
போய் அவர்களுடைய பலவிதமாகிய கிரகங்களையுங்கட
ந்து முன்னுளிலே தேவேந்திரன்சிறையிருந்த அந்த இ
ந்திரசித்தினுடைய ஆசாரவாசலைக்கண்டார் அவ்விடத்தி
லேகைகளில் ஆயுதங்கள்பிரகாசிக்க மிதமற்ற ராக்ஷதர்
கள்நின்றபடியே பூர்வகங்களையும், விடுகதைகளையும், சொ
ல்லிக்கொண்டு கண்களை இமையாமல் ஜாக்கிரதையாய்க்
காவலிருந்தார்கள். அவர்களுடைய கடினமாகியகாவலை
க்கடந்து உள்ளேபோய் அ[illegible]த்தின்மத்தி
யில் மகா உல்லாசமாய்ப்படுத்துக்கொண்டிருக்கின்றஇந்
திரசித்தைக்கண்டு திரிநேத்திரனுகிய சிவனுடைய புத்தி
ரனென்கின்றசுப்பிரமணியர் தம்முடைய ஆறுமுகங்களி
ல் ஐந்துமுகங்களையும் பன்னிரண்டுகைகளில்பத்துக்கை
களையும்மறைத்து ஒருமுகத்துடனும் இரண்டுகையுடனு
ம்வந்திருக்கிறதுபோலிருக்கின்ற இவன்ராக்ஷதனே! அ
ல்லது அந்தச்சுப்பிரமணியந்தானே! சிங்கத்திற்குச் ச
மானமாகிய மகாபலவந்தருக்கும்காண்கின்றுன். ஆகை
யால் ஆரோதெரியவில்லை தம்பியும் ஸ்ரீராமரும்வந்து யு
த்தஞ்செய்கின்றகாலத்திலேஇவன் அநேகநாள் இளையா
மல் யுத்தஞ்செய்வான். இப்படிப்பட்டவனைத் தனக்குத்
துணையாகப்பெற்றிருக்கின்ற ராவணன் திரிபுவனத்தை
யும்ஜெயித்ததை ஒருபொருளாகச்சொல்லக்கூடாது, இ
வனுக்குச் சிவனும் பிரமாவும் மகாவிஷ்ணுவுமாகிய மு
ம்மூர்த்திகளும் ஒப்பாவார்களென்றுசொல்வதுவிவேக
மாமென்று தம்முடையகையை அசைத்து இவ்விடத்தி
ல்நாம் தாமசமாக இருந்து காலத்தைவீணகப்போக்குகி
றது நன்மையல்லவென்று அவ்விடத்திலுள்ள அநேக
மாயிரம்மாளிகைகளையும் அதிசீக்கிரத்தில்தேடி அந்த இ
ந்திரசித்தின் அரமனையைவிட்டுநீங்கிப் புகைநுழையாத
இடத்திலும்சாமருபங்கொண்டுநுழையத்தக்கஆஞ்சனே
யரானவர் அதிகாயன்மாளிகையையும் பின்னும் அவர்க
ள்தம்பிமார்களின் மாளிகையையும் மற்றுமுன்னபடைத்
தலைவர்கள், அணித்தலைவர்கள், யூகத்தலைவர்களின்மாளி
கையையும் தேடிப்பார்த்து அப்பால்மந்திரிபிரதானிமா

ர்களுடையஆயிரகோடிசொர்ணமாளிகைகளையும்ஸ்ரீராம
பாணத்தைப்போல அதிவேகமாய்த்திரிந்துதேடி பின்பு
அந்தமூன்றுசுற்றுக் கோட்டைக்கும் நடுவேயிருக்கின்ற
அகழிக்குநேராகவந்தார். குழந்தைப்பருவத்தில் சூரிய
னை மாங்கனியென்றுபிடிக்கும்படிதாவியஅநுமானனவ
ர் அந்த அகழியைக்கண்டு ஏழுசமுத்திரங்களும் ஒன்று
கச்சேர்ந்திருக்கின்றதுபோலிருக்கின்றதே இந்த அகழி
இதைக்கடக்கக்கூடாது இனி ராமகாரியத்திற்குவிக்கின
ம்வந்ததென்று விலேசித்துப்பின்னும் அதைப்பார்த்து,
இதை அகழியென்றுசொல்வார்களாகில் அநேகர்கள் கூ
டி ஊழிகாலபரியந்தம்தோண்டினாலும்தோண்டமுடியா
து. ராவணனுக்குப்பயந்துஸப்தசமுத்திரங்களும் இந்த
நகரத்திற்குள்ளேவந்து இப்படிச்சூழ்ந்திருக்கின்றதென்
றுநினைத்து அந்த அகழிக்குச்சமீபமாய்ப்போய் நாம் மு
ன்பு சமுத்திரத்தைக்கடந்துவந்தவேகத்தைப்பார்க்கிலு
ம் இருமடங்கு அதிகவிசையுண்டுதாண்டினபோதும்
இதைக்கடக்கக் கூடாதென்றும் மேலிருந்து நால்வகை
யானமேகங்களும்கீழ்விழுந்துசாயும்படிதாக்கிறபேரி
ல் பொங்கியெழுகின்ற நீர்ப்பெருக்கையுடையதாய்பிர
தாபலங்கேஸ்வரனுடைய சேதுசமுத்திரத்தையொத்தி
ருக்கின்றதே இந்த அகழியையாயினுற்சொல்லவுங்கூடு
மாவென்றும் இதில் யானைகள்பொழிகின்ற கர்ணமத மு
தலாகிய மூன்றுவகைப்பட்ட மதங்களும்குதிரைகளின்
வாயிலிருந்து ஒழுகுகின்ற நுரைகளும் தேவரம்பையர்க
ள்ஸ்நானஞ்செய்கின்றதினால்குங்குமங்கலந்தஜலமும்லங்கையி
லிருக்கின்ற ஸ்திரீகளுடைய கூந்தலுக்கு ஊட்டியமயிர்
ச்சாந்தும், அகிற்புகையும், தேனும், திவ்வியமாகிய கந்
தமும் பரிமளிக்கின்றதுகளென்றும், நாரைகள் கொய்ய
டிநாரைகள் அன்றில்கள் புதாக்கள் உள்ளான் அன்னம்
நீர்க்கோழி நீர்க்காக்கை சக்கரவாகம் கின்னரம் கொக்கு
குருலமுதலாகிய பக்ஷிகள் நிறைந்திருக்கின்றதுக ளெ
ன்றும் ஸ்திரீகள் அணிகின்ற அகில் சந்தனம் கஸ்தூரி
செம்பஞ்சின்குழம்பு முதலானதுகளும் சேர்ந்திருக்கின்
ற இந்த அகழியில் மூழ்கிப்போகின்ற ஆண்யானைகளைப்
பெண்யானைகள்கண்டு நம்முடையநாயகன் வேறொருநா
யகியைப்புணர்ந்து வருகின்றானென்று நினைத்துப் பிண
ங்குகின்றதுகளென்றும், நீர்த்துறைகள்தோறும் குவிந்
திருக்கின்ற தாமரைமலர்கள் ஜானகியின்கரசரணாதி அ
வயவங்களுக்குச் சிநேகமாகையால் அந்தப்பிராட்டியார்
சிறையிருப்பதைக்குறித்து முகம்வாடியதுபோ லிருக்கி
ன்றதுகளென்றும் அன்றியும் நீலமுதலாகியரத்னங்களு
ம் முத்துக்களும் கரையின்மேலும் ஜலத்திற்குள்ளும்ர
ஞ்சிதமாகப்பிரகாசிப்பது பாற்சமுத்திரமுதலாகியபல
சமுத்திரங்களும் ஒன்றாகக்கலந்திருப்பதுபோலிருக்கின்
றதென்றுங்குறித்து அப்படிப்பட்ட அகழியைச்சமுத்தி
ரத்தைக் கடக்கிறதுபோலக்கடந்துமதிலையுந்தாண்டி உ
ட்பிரவேசிக்கக்கூடாத காவலையுடைய அந்தநகரத்திற்கு
ள்ளேபோனார். அப்போது அர்த்தராத்திரி யாயிற்று அ
ந்தருணத்தில் யமனும்பயந்து ஓடத்தக்க ராக்ஷதர்களு
டையபட்டணத்தில் அநுமானனவர் தாம் ஒருவராய் ஒ

வ்வொன்று பனிரண்டுயோசனைப் பிரமாணமா யிருக்கி
ன்ற மூன்றுலக்ஷந்தெருக்கள்தேடினார். ஆடல் பாடல்க
ள் அடங்கியதுகள். வீணை மத்தள முதலாகிய சகலவா
த்தியமுழக்கங்களும் அடங்கியதுகள். காவற்பறைமாத்தி
ரமுழுங்கத்தலைப்பட்டது. கூடின ஸ்திரீபுருஷர்க ளெல்
லாம் உறங்கினார்கள். கதவுகளெல்லாஞ் சாத்தப்பட்ட
துகள், பூரணஞானத்தையுடைய உத்தமர்களெல்லாம்
நித்தியமாகிய கர்மங்களைமுடித்துக்கொண்டு நித்திரை
செய்தார்கள். யோகீஸ்வரர்களும் உறங்கினார்கள். மதயா
னைகளும் உறங்கியதுகள். மயங்கித்திரிகின்ற பித்தர்களு
ம் உறங்கினார்களென்றால் மற்றவர்களைக்குறித்து என்
னசொல்லுகிறது, அந்தச்சமையத்திலே அம்மதிலுக்கு
ள்ளே இரண்டுகோடிராஜவீதிகள் தேடிப்பார்த்து அப்
பால் ஆகாமியசஞ்சித பிராரப்தகர்மங்களை ஒழிக்க அஞ்
சனேயர் ராவணனுடைய இருப்பிடத்தைச்சுற்றியிருக்கி
ன்றஅகழையும் மதிலையுங்கடந்துஉள்ளேபோய்ப்பிரவே
சித்தார், அங்கே ராவணனை சந்திரனைச் சூ
ழ்ந்திருக்கின்ற நக்ஷத்திரங்களைப்போல அந்தராவணனை
ச்சேர்ந்திருக்கின்ற ஸ்திரீகளுடையரத்னகசிதமாகியமா
ளிகைகளையெல்லாம் தேடத்தலைப்பட்டவராய் களங்கநீ
ங்கிய சந்திரனும் தோற்கும்படி பிரகாசிக்கின்ற முகத்தி
னையுடைய யக்ஷஸ்திரீகள் வாசஞ்செய்யும் மாளிகைகள்
நெருங்கிய வீதிக்குப்போனார். ஸ்ரீராமதூதராகிய அநு
மானனவர் வச்சிரத்திறவுகோல்நுழைகின்ற துவாரங்க
ள்தோறும் நாவிறைபோலவும் சிறுதென்றல்போலவும்
அதிசூக்ஷ்மமாகிய உருவங்கொண்டு நுழைந்து மனது
தெளியும்படிபார்த்தார். அவ்விடத்தில் சிலஸ்திரீகள் த
ங்கள்நாயகனாகிய ராவணேசுவரன்மேல் அதிமோகமா
ய்மனது அவனிடத்தில் பேசியிருக்க கண்ணிமையாமல்
சித்திரம்போலிருந்தார்கள். சிலர் மன்மதபாணத்திற்கு
ப்பயந்தோ ! களவிலாகிலும் அந்தராவணனைச்சேரலா
மென்று எண்ணியோ ! என்னவோ ! ஒன்றுந்தெரியவி
ல்லை. அவர்கள் கண்ணைமூடிப்பொய்யுறக்கங்கொண்டிரு
ந்தார்கள். சிலர் கிளிப்பிள்ளைகளையும் நாகணவாய்ப் பற
வைகளையும் சிநேகமாய்ப்பார்த்து நீங்கள் ஆகின்றகாரியம்
ஒன்றுஞ்செய்யவில்லை என் பிராணசிநேகனை அழைத்து
வரவுமில்லை என்னுடைய சமாசாரத்தையும் அவனி
டத்தில்போய்ச் சொல்லவில்லையென்று கண்ணீர்பெரு
க்குகின்றார்கள். சிலர் ஸ்தனங்களில்மன்மதபாண
ம்தைக்கப் பெருமூச்செறிந்து அழுது இனிச்செய்வதெ
ன்ன இருக்கின்றது. ராவணனுடைய உருவத்தைச்சித்
திரத்திலாகிலும் எழுதலாமென்று நினைக்கின்றார்கள்
சிலர் மகாமேருவை வில்லாகவளைத்து மகாவிஷ்ணுவை
அம்பாகத்தொடுத்து எய்த சிவசூரனுடைய கைலாசப
ர்வதத்தை எடுத்த அதிசூரனாகிய ராவணேஸ்வரனுடை
யதோள்களில் அணிந்த சந்தனக் குழம்புதோய்ந்த தங்
கள் ஸ்தனத்தைப்பார்த்துச் சந்தோஷிக்கின்றார்கள். சி
லர் லங்கேஸ்வரனுடைய பிரதாபத்தை வீணையிற் பாடு
கின்றார்கள். இந்தப்பிரகாரம் அந்த யக்ஷஸ்திரீகளிருக்கி
ன்ற ஆயிரமனைகளையுந்தேடி அதுகளைத்தாண்டி அப்பால்



ராக்ஷதஸ்திரீகளிருக்கின்ற ஆயிரகோடி மாளிகைகளையு
ம் போய்த்தேடத்தலைப்பட்டார். அநேகர் நெய்விளக்கில்
லாமல ரத்னஜோதியே இருளைநீக்கும்படி பிரகாசிக்கின்
ற மாடமாளிகைகளில், தோழிமார் தாதிமார் முதலாகி
ய பெண்கள்கூட்டமெல்லாம், நீங்கிப்போகத் தாங்கள்
கொண்ட ஆசையும் காமுமாய் ஒருபக்கத்திலிருந்து,ரா
வணனிடத்தில் போயிருக்கின்ற தங்கள் மனதுடனே பி
ணங்குகின்றவர்களும், அநேகர். தங்கள்மேனியே ஆகா
சமாகவும், முத்தாரமே நக்ஷத்திரங்களாகவும், இடை
யே மின்னலாகவும், சிவந்த கூந்தலே செவ்வானமாகவு
ம், கண்ணே மேகமாகவும்; நெற்றியே சந்திரனாகவும்,பி
ரகாசிக்க, அந்திவானத்திற்குச் சமானமாயிருக்கின்றவ
ர்களும், அநேகர் உயர்வாகிய உப்பரிகைகளின்மேலிருந்
து கண்களின் நிறமாறவும், அளகபாரஞ்சோரவும், வா
னத்திலிருக்கின்ற நக்ஷத்திரங்களை வாரியெடுத்து அம்
மனையாகவும், ஏழாங்காயாகவும் ஆடுகின்றவர்களும்,
தேவஸ்திரீகளின் கூட்டங்கள் சத்தியலோகத்திலிருந்து
மொண்டுகொண்டுவந்து ஸ்நானஞ்செய்விக்கின்ற ஆகா
சகங்காசலம். குளிர்ச்சியா யிருக்கவில்லையென்று அவர்
கள்மேல் கோபித்து மேல்மாடங்களின்மேல் ஏறிப்போ
ய் மேகத்தின்வயிற்றைத்துளைத்து அதிலிருந்து ஒழுகுகி
ன்ற ஜலத்தினால் ஸ்நானஞ்செய்கின்றவர்களும் அநேகர்
நாகராஜர்களைப் பலாத்காரமாகப்பிடித்து அவர்களுடை
ய சிரோரத்னங்களையும் விஞ்சையராஜர்களுடைய கிரீட
ங்களையும் ரத்தினத்தாழ்வடங்களையும் மற்றுமுள்ள ஆப
ரணங்களையும் பறித்துப் பந்தயமாகவைத்து நித்திரையி
ல்லாமல் சூதாடுகின்றவர்களும் அநேகர் புதுமையாகி
ய புஷ்பமெத்தையில் படுக்கச் சகிக்காமல் அதைவிட்டு
க்குளிர்ச்சியாகிய பளிக்குமேடையிலே போய்ப்படுத்து
க் காமாக்கினியினாலே வெதும்பிப் புழுங்குகின்றவர்களு
ம். அநேகர் சித்தஸ்திரீகள் வீணைமீட்டிப்பாட - நாககன்
னியர்கள் மத்தளந்தட்ட - தேவரம்பையர்கள் ஆட - அந்த
நடனம் பார்த்துக்கொண் டிருக்கின்றவர்களும், அநேக
ர். விரகாக்கினியானது மனதைச்சுடக் - கண்ணிலேஜல
ம்பெருக - நித்திரையில்லாமலும் இன்னதைச் செய்யலா
மென்று அறியாமலும், மகரவீணையும் வேணுக்குழலும்
தங்கள்கண்டமும் வேற்றுமைதோன்றாமல் அபிநயமொ
முகும்படி யாடுகின்றவர்களும், அநேகர். வஸ்திரமும்
மேகலாபரணமும் சோரும்படி குரவைக்கூத்தாடுகின்
றவர்களும், அநேகர். கள்ளும் உதிரமுமுண்டு பித்தேறி
க்கொண்டாடுகின்றவர்களும், அநேகர், கள்ளுண்ட
மயக்கத்தால் அறிவுதடுமாறக் கண்சுழல என்மேல்தெய்
வம் வந்ததுபாருங்களென்று பெருமூச்சுவிட்டு, இரண்
கையையும் உச்சிமேல் கூப்பிக்கொண்டு குழறிப்பேசு
கின்றவர்களுமா யிருக்கின்ற, அந்த ராக்ஷதஸ்திரீகளு
டைய நாலுகோடி வீதிகளையுந் தேடிப்பார்த்துக்கொண்
டு, அப்புறம் சித்தஸ்திரீகளிருக்கின்ற வீதிக்குப்போய்
அங்குந்தேடிப்பார்த்துக்கொண்டு பின்பு, அநுமானனவ
ர். விஞ்சைய ஸ்திரீகளுடைய வீதிக்குப்போனார். ரா
வணனைவரக்காணாமல் தங்களிடையைப்பார்க்கிலும்மன

துகளர்ந்து நடுங்க, உயிரும் நிலைதடுமாற, பாணர்கள்பா
டுகின்ற பாடலானது பாம்பைப்போலச் செவியிலேவ
ந்து நுழைய வருத்தப்படுகின்றவர்களும், இவர்கள் ரா
வணனிடத்தில் பரிவுகூர்ந்திருக்கின்றவர்க ளென்கின்ற
விரோதத்தைக்கொண்டு சந்திரன்சொரிகின்ற கிரணங்க
ள ஸ்தனங்களைவெதுப்ப நெருப்பில்வீழ்ந்த இளங்கொ
டிபோலத் துடிக்கின்றவர்களும், ஒருக்ஷணப்பொழுது
அநேக ஊழிகாலங்களாய்த் தோன்ற மனம்வேறுபட்டு
க் காமநோயில் வருந்துகின்றவர்களும் ஸ்தனத்தில் எழு
திய சந்தனக்குழிகள் உயிரைவருத்தக் கண்கள் சிவக்கப்
பார்த்துக் கோபித்துப் பெருமூச்சு விடுகின்றவர்களுமா
ய் அந்த விஞ்சையஸ்திரீகளிருக்கின்ற பன்னிரண்டுகோ
டி மாளிகைகளையுந் தேடிப்பார்த்துக்கொண்டுபோய், தி
ரிலோகத்திற்கும் நாயகனாகிய பிரதாப லங்கேஸ்வரனு
டைய பெரிய அரமனையை நாடிப்போகிய அநுமானன
வர் பூரணசந்திரனும் ஒளிகுன்றும்படி அதிகதேஜசுட
னேவிளங்குகின்ற முகத்தினையுடைய, மயன்மகளாகிய
மண்டோதரி வாசஞ்செய்கின்ற அந்தப்புரத்தைக் கண்
டார். கண்டு தம்முடையகண்கள் பிரமிக்கச் சித்தந்திடு
க்கிட எங்கள்கர்த்தாவாகிய ஸ்ரீராகவருடைய பிராணப
தமாயிருக்கின்ற ஜகதீஸ்வரியான ஜானகியை ராவணன்
எடுத்துக்கொண்டுவந்து வைத்திருக்கின்ற இடமிதுதா
னோ ! இங்குள்ள மாணிக்கமயமாகிய சகலமாளிகைகளி
லும் இது, ஸ்ரீமகாவிஷ்ணுவின் மார்பிலணிந்த கவுஸ்து
பமணிபோலப் பிரகாசிக்கின்றதென்று ஆச்சரியப்பட்
டார். ரம்பை - மேனகை - திலோத்தமை - ஊர்வசி - முத
லாகிய தெய்வப்பெண்கள் இளந்தளிர்போன்ற பாதத்
தைவருட, வெண்சாமரைவீசக் கரும்பைப்பார்க்கிலு
ம் அதிகமதுரமாகிய வசனத்தையுடைய ஸ்திரீகள் யா
ழ்மீட்டிப்பாடுகின்ற பாடலானது காதுக்குள்ளேவந்து
நுழைய, மூக்கினிடத்தில் கற்பகப்புஷ்ப வாடையான
து சேர்ந்துமணக்க இப்படிப்பட்ட அநேக சம்பிரமத்
துடனே புஷ்பமெத்தையின்மேல், மாணிக்கதீபப் பிரகா
சமும் மழுங்கும்படி ஜொலிக்கின்ற மேனியையுடைய,
திரிலோக பயங்கரன் பெண்சாதியாகிய மண்டோதரியா
னவள் நித்திரைசெய்யக்கண்டு, இவள் அந்தஜானகிதா
னென்றுநினைத்துச் சந்தேகித்து, மனதிலிருந்தெழுந்த
கோபாக்கினியானது தமது உடலையும் உயிரையுஞ் சுடு
ம்படி மிகவுந் துயரப்பட்டுச் சொல்லுகின்றார். நான்எ
டுத்த சரீரத்தினால் அடையத்தக்க பிரயோசனத்தை இ
ழந்துவிட்டேன். அதிருக்கட்டும் இவள் அன்பையும் கு
டிப்பிறப்பையும் தெய்வீகமாகிய தன்கற்பையும் இழந்
துவிட்டாளேயாகில், ஸ்ரீராமருடைய கீர்த்தியும் தேஜசு
ம் நானும் இந்தலங்கையும் ராக்ஷதர்களும் இன்றைத்தி
னமே மாண்டுபோகின்றது நிச்சயமென்று எண்ணி, ம
றுபடியும் செவ்வையாகப் பார்த்து அந்த லோகமாதா
வோ ! மகத்தாகிய சிறந்த உருவத்தையுடையவள். இ
வளோ ! அவளுடைய திருவுருவத்தின் சதாம்சத்தில்
ஓராம்சமும் ஒவ்வாததும் விகாரமுமாகிய உருவத்தையு
டையவளா யிருக்கின்றாள். ஆகையால் இவள் யக்ஷஸ்தி

ரீயோ! அசுரஸ்திரீயோ! ஐயமாயிருக்கின்றது. சகலாத்மாக்களையும் மோகிப்பிக்கின்ற மன்மதனனவன் ஸ்ரீராமச்சந்திரன்மேல் அன்பினையுடைய பிராட்டியாரிடத்தில் அணுகுவானு! நாம் இப்பொழுது இவளை அந்தஜானகியென்று நினைத்தது மகாபாதகம். உத்தமஸ்திரீகளுக்குரிய லக்ஷணங்களும் இவளுக்குச் சிலவுண்டா யிருக்கின்றதுகளானாலும், இவள்தேகத்தில தோற்றுகின்ற அவலக்ஷணங்கள் இவள் சிலநாளைக்குள்ளே மகத்தாகிய துன்பத்தை யடைவாளென்று சொல்லுகின்றதுகள். தலைமயிர் அவிழ்ந்து சோர்ந்து விழவாய்வெருண்டு ஏதேதோ துர்வசனங்களைப் பிதற்றுகின்றதனால் இவள்நாயகனுக்கும், அவனுள்ளின்ற இந்நகரத்திற்கும் கேடுசமீபித்திருக்கிறதாகக் காண்கின்றதென்று அறிந்துகொண்டு, அந்த இடத்தைவிட்டு நீங்கி மகாமேரு பர்வதமானது வந்திருப்பதுபோல அதிக உன்னதமாயிருக்கின்ற ஒரு விசித்திரமாகிய கிரகத்தில், ராவணனாலும் எடுக்கப்படாத வெள்ளிமலையையொத்த திரண்ட தோளினையுடைய ராமதூதரானவர்போய்ப்பிரவேசித்தார் அவர்பிரவேசித்தமாத்திரத்தில் பூமியதிர்ந்தது. பர்வதங்கள் அசைந்ததுகள். ராக்ஷத ஸ்திரீகளுக்கெல்லாம் அவர்களிடையைப்போல வலதுபாரிசத்துப் புருவமும் கண்ணும்தோளும் துடித்ததுகள். திக்குகள் கம்பிதப்பட்டதுகள். மின்னலும்மேகமுமில்லாமல் ஆகாசத்தில் இடியோசையுண்டாயிற்று. மங்களகரமாக வைத்திருக்கின்ற பூரணகும்பங்களெல்லாம் வெடித்ததுகள். இப்படிப்பட்ட துர்நிமித்தங்கள் உண்டாகவே, ஆஞ்சனேயர் தம்முடைய அறிவைக்கொண்டு யோசித்துப்பார்த்துச் சீக்கிரத்தில் இந்தலங்காபட்டணத்தின் சம்பத்துகளெல்லாம் நாசமாய்ப் போய்விடுமென்று நினைத்துச் சற்றே மனதுகிலேசித்து, உடனே எந்தக்குலத்திலே தோன்றினவர்களாயிருந்தாலும் எப்படிப்பட்ட தபோநிஷ்டர்களானாலும் சகலமானவர்களுக்கும், நல்வினையும் தீவினையும் சமமாகவே முடிந்திருக்கின்றதுகளல்லவா! ஆகையால் ஊழ்வினையைப்பார்க்கிலும் வலிமையையுடையது வேறென்ன இருக்கின்றதென்று, அவர் நவவியாகரண பண்டிதராகையால் தமக்குள்ளே நிச்சயித்துக்கொண்டு, சேனாசமுத்திரம் புடைசூழ்ந்திருக்கின்ற அந்த மாளிகைக்குள் பெரிய பாற்கடலில் அநேக அலைகளை வீசிக்கொண்டு ஒருகருங்கடல் கிடக்கிறதுபோலவும், இளஞ்சூரியர்கள் மலையின்மேல் உதயமானதுபோல ரத்னமிழைத்த கிரீடங்களும் மற்றுமுள்ள பலவிதபூஷணங்களும் இருளை நீக்கிப் பிரகாசிக்கும்படி, இரணியனைச் சங்கரித்த உக்கிரநரசிங்க மூர்த்தியானவர், அநேகமாகிய தலைகளையும் தோள்களையும் பரப்பிக்கொண்டு படுத்திருக்கிறதுபோலவும், சயனித்துக்கொண் டிருக்கிறவனும், ஆயிரந்தேவரம்பைகள் வரிசையாய்நின்று சாமரங்கள்போட, அதுகளில் உண்டாகிய காற்றினுடனேகலந்து கற்பகப்புஷ்பத்தேன் துளிக்குந்தோறும் தன்மேனியானதுவெதும்ப-சீதாபிராட்டியை அடிக்கடி நினைத்து நினைத்துப்பெருமூச்செறிந்து தேய்கின்றவனும், கைலாசத்தைக்குலுக்கச்செய்த தோள்களின் பராக்கிரமத்திற்கும் அஞ்சாமல், மன்மதபாணங்கள் மார்பிலே உருவி பாய்ந்ததனாலுண்டாகிய பச்சைப்புண்கள், அஷ்டதிக்கஜங்களின் கொம்புகள்தைத்த பழந்தழும்புகளின் மத்தியில் மத்தியில் உதிரங்கசிந்துகொண்டிருக்க, காமாக்கினியை மூட்டுகின்ற துருத்தியைப்போல மந்தமாருதமானது தேகத்திற்பூசிய கலவைச்சந்தனத்தின்மேல்தவழ, ஜானகியின்மேல்மனதில் அந்தக்கரணங்கள் செல்லப் பாம்புகள் குடிபோன புற்றுப்போல பாழாயிருக்கின்ற இருதய ஸ்தானத்தையுடையவனும் நினைத்தபோதெல்லாம் திக்குகள்தோறுஞ்சென்று தேவர்களுடனே யுத்தஞ்செய்து, அவர்களுடைய புகழாகிய அமிர்தத்தைக் கைகளினால் வாரிவாரி உண்டபோது அது தனக்குத்தெவுட்டி, தன்கடைவாய்களின் வழியே ஒழுகியதுபோலத் தாவள்யமாய்ப் பிரகாசிக்கின்ற கோரதந்தங்களையுடையவனும் வெண்மையாகியமல்லிகைப்புஷ்பசயனம் வெந்து பொடியாகப் புழுங்குகின்ற தன்தேகத்தில், சமுத்திரத்தி லுண்டாகிய நீர்க்குமிழிபோல வெயர்வுதோன்ற பூமாலைகளில் மொய்த்திருக்கின்ற வண்டுகள் கரிய, அந்தமாலைகளும் தீயும்படி பெருமூச்சுவிடுகின்றவனும், ஸ்ரீராமருக்குச் சீதையினிடத்தில் எப்படிமனஞ்செல்லுகின்றதோ! அப்படியே அவளிடத்தில் தன்னெஞ்சுசெல்லும்படி பொய்யுறக்கங்கொண்டிருக்கின்றவனும், அந்த ஜானகியின்மேலுண்டான ஆசையாகிய கிளைவார்த்து தன்னுயிராகிய பதார்த்தத்தைப் பெருமூச்சாகிய அம்மியிலிட்டு அரைக்கின்றவனும் இடைவிடாமல் சீதையைநினைத்துக்கொண்டிருப்பதனால் அவளெதிர்ப்பட்டதுபோல உருவெளிகாணும்போதெல்லாம் கலகலவென்று சிரிக்கின்றவனும், விரகத்தினால் சரீரம் நடுங்குகின்றவனும், ஜானகியானவள் பள்ளியறைக்குள்ளேவந்து புகுந்தாளென்று மயிர்க்குச்செறிகின்றவனும், சூரியனைப்போல ஜொலிக்கின்ற நவரத்ன ஆரங்கள் புரளுகின்ற தக்கதாய், திரிபுவனங்களையும் சிருஷ்டித்து ரக்ஷித்துச் சங்கரிக்கின்ற, பிரம்மா-விஷ்ணு-ருத்திரனாகிய மும்மூர்த்திகளின் ஆயுதங்களும், இந்திரனுடையவச்சிராயுதமும்பட்டு மழுங்கிப்போம்படி, அதிபராக்கிரமத்தைப் பொருந்திய மார்பினையுடையவனும், சத்துருக்களாகிய ராஜர்கள் தன்கையிலேந்திய வீரவேலாயுதத்திற்குப்பயந்து நடுங்கி ஓடிவந்து வணங்கும்பொழுதெல்லாம், அவர்களுடைய கிரீடங்கள் பட்டுத்தேய்ந்து தழும்பேறிய பாதத்தையுடையவனுமாகிய பிரதாபலங்கேஸ்வரனைக் கண்டார். ஸ்ரீமகாவிஷ்ணுவானவர் பூர்வங்கொண்ட வாமனரூபத்தைப்பார்க்கிலும் மிகவும் சிறிதாகிய ரூபத்தையுடைய அநுமானானவர் அந்தராவணனுடைய பத்துத்தலைகளையும் இருபதுதோள்களையும் தெரியக்கண்டமாத்திரத்தில், அவருடைய நெஞ்செரிந்தது. கண்கள் காலாக்கினியைப்போலக்கோபாக்கினியைச் சொரிந்தன. அண்டமானதுமேலுங் கீழும் வெடித்தது. அப்பொழுது அவர் லோகமாதாவை வஞ்சனைசெய்துகொண்டுவந்த இவன்மேல் இக்ஷணமே எழும்பிக்குதித்து, இவனுடைய மணிமுடிக



ளைக் காலினால் எற்றியுடைத்தெறிந்து என்னுடையபராக்கிரமத்தைக்காட்டாமற்போவேனேயானால் நான் ஸ்ரீராமருக்கு அடிமையாகமாட்டேன். அந்தராக்ஷசருக்கு ஆட்பட்டிருக்கின்றதென்னவிளையாட்டுக்கா! என்கண்ணினுற்கண்டும் இந்தராக்ஷதனனவன் உயிர்தரித்திருப்பானு! இவனுடைய இருபதுதோள்களையும்மடக்கி அடக்கிப்பிடித்து ஒடித்துப்பத்துத்தலைகளையும் வெட்டி உதைத்து நிலத்தில் உருட்டிக்கொன்று இந்தலங்கையையும் ஒருமிக்க நிர்மூலமாகச்செய்கிறேன். அப்படிச்செய்தால் அப்பால் ஆகிறது ஆகட்டுமென்றுநினைத்துப்பற்களை நெறுநெறுவென்றுகடித்து இரண்டுகைகளையும் நெருப்புப்பொறிபறக்கப்பிசைந்துகொண்டே அதியுக்கிரமாய் எழும்பினார் அவ்விதமாகச் சொல்லும்படி கோபித்து எழும்பிய அநுமானானவர் சற்றுநின்றுயோசித்து இவ்வண்ணமாகச்செய்யும்படி சுவாமியானவர்நமக்கு ஆக்கியாபிக்கவில்லையே ஆகையாலொன்றைச்செய்ய எத்தனப்பட்டுவந்துவேறொன்றைச்செய்கிறது அறிவுடைமைக்கு யுக்தமானதல்ல, ஆலோசிக்குமிடத்தில் இதுமிகவுங் குற்றமுடையதாகுமென்றுகோபந்தணிந்துநின்றார். ராவணனைக்கொல்லத் துணிந்த அநுமானானவர்கொல்லாமல்விட்டுவிட்டதற்குக்காரணமென்னவென்றுபார்க்கும்பொழுது ஆலவிஷத்தையுண்ட சிவனுக்கு ஒப்பாகிய மகாபலிஷ்டர்களானாலும் உலகத்தையெல்லாம்முடிக்கத்தக்க உபாயந்தெரிந்திருந்தாலும்யோக்கியர்கள் இப்படிசெய்தால் இப்படிமுடியுமென்று முன்னேயோசியாமல்யாதொன்றையாவது செய்வார்களா? ஆகையால் காலம்பார்த்துக்கரைகடவாமலிருக்கின்றசமுத்திரத்தைப்போல அந்த அநுமனேயரும் அதிக்கிரமிக்காமல் அடங்கியிருந்ததாகக்காண்கின்றது. பின்னும் அவர் நான் இன்றைத்தினத்தில் கொடியபாபிஷ்டனாகிய அரக்கனைப்போர்செய்துகொல்லுவேனேயாகில் கோதண்டதீக்ஷா குருவாகிய ஸ்ரீராமச்சந்திரருடையதேவியாரைச்சிறைவைத்த லோககண்டகனாகிய ராவணனை ஒருகுரங்குவந்துகொன்றுபோய் விட்டதென்று உலகத்தார் எளிதாகச்சொல்லுவார்கள், அதனால் எம்பெருமானுடையவில்வீரத்திற்கும் இகழ்ச்சியுண்டாகுமென்று எண்ணி உக்கிரந்தணிந்து என்தாயாகிய சீதாபிராட்டியார் இவனுடனேகூடச்சயனிக்கின்றஸ்திரீகளுக்குள்ளேசம்பந்தப்பட்டிருக்கவில்லை. இவனுடைய நிலைமையோ அற்பமாகியகாமத்தினால்மெலிந்திருக்கின்றதாகக்காண்கின்றது. இதனால் அந்தக்கருணாநிதியாகிய ஜானகியார்கற்பழியாதிருக்கின்றாளென்பது எனக்குநிச்சயமாகத்தோன்றுகின்றதென்று குறித்துக்கொண்டு இனியிவ்விடத்திலிருந்துசும்மா ஆலோசித்துக்காலதாமசஞ்செய்வதனால் யாதொருபிரயோசனமுமில்லையென்றுநினைத்து அந்தராவணனுடைய அரமனையைவிட்டு அப்புறம்போய்த்தேடுகிறதற்கு வேறிடமில்லாமையால் அநுமான் ஐயோ! இந்நகரமுழுமையுந்தேடிப்பார்த்தும் சீதையைக்காணேனேயென்று மிகுந்த கிலேசத்துடனேபிரலாபிக்கத்தொடங்கினார்.

கவி.

கொன்றானே கற்பழியாக் குலமகளைக் கொடுந்தொழிலால், தின்றானே யப்புறத்தே சேர்த்தானோ சிறைசிறியேன், ஒன்றானு முணர்கிலேன் மீண்டினிப்போ யென்னுரைக்கேன், பொன்றாத பொழுதெனக்குக் கொடுந்துயரம் போகாதால்........(௧)

கண்டுவரு மென்றிருக்குங் காகுத்தன் கவிகுலத்தோன், கொண்டுவரு மென்றிருக்கும் யானிழைத்த கோளிதுவால், புண்டரீக நயனத்தான் பாலினியான் போவேனோ, விண்டவரோ டென்னியா தியான்வாளா வெளிவேனோ........(௨)

கண்ணியநாள் கழிந்துளவாங் கண்டிலமாற் கனங்குழையை, விண்ணடைந்து மென்றனையா னொருத்தி வினைத்தயான், எண்ணியது முடித்திலேன் யான்முடியா திருப்பேனோ, புண்ணியமென் னொருபொருளென் னுழைநின்றும் போயதால்........(௩)

எழுநாளே சனநாட்டிற் கழிந்திடத்தில் விலங்கை, வாழுமாமன் னுயிர்யான் கண்டுமதில்லை, ஊழியான் பெருந்தேவி பொருந்தியையும் யான்காணேன், ஆழிதாயி டாழியிடைபேவிழந் தழிவேனோ........(௪)

வல்லரக்கன் றன்பதி வாயாறு குறுகிவரக், கல்லரக்குங் கரதலத்தாற் காட்டுடென்று காண்கேனோ, எல்லரக்கு மயிலுறிவே விராவணனு மிவ்வூரும், மெல்லரக்கி னுருகிவிழ வெந்தழலாற் றேய்க்கேனோ........(௫)

வானவரோ மகலோனோ வினவுவேனேல் வல்லரக்கன், தானொருவ னுளனுருவைச் செய்யுந் தருக்கினால், எனையர்க ளெங்குரைப்ப ரெவ்வண்ணந் தெரிக்கேனோ, ஊனுயிர நீங்காத வுயிர்சுமந்த வுணர்வில்லேன்........(௬)

எருவைக்கு மகலாய சம்பாதி யிலங்கையிலத், திருவைக்கண் டனனென்றா னவனுமாயுந் திதைக்கதால், கருவைக்கு நெடுங்கடலைக் கடவிடையே கையாதேன், உருவைக்கொண் டினனுயா னுளைநதி புழல்வேனோ..( )

வடித்தாய் பூங்குழலாளை வானரிய மன்னைவியப், பிடித்தானில் வடலரக்க னெனுமாற்றம் பிழையாதால், எடுத்தாழி யிலங்கைதனை யிருங்கடலின் விட்டிடினா, முடிந்தாலே யான்முடிதா லென்றென்று மொழிகின்றான்.....(௮)

என்பன.—கற்பழியாத மகாபதிவிரதையாகிய லோகமாதாவை இந்தப்பாவி கொன்றுவிட்டானோ! அல்லது கொடியசெய்கையையுடையவனையால் தின்றுவிட்டானோ! மற்றெந்த லோகத்திலாகிலும் வைத்திருக்கின்றானோ! அவன்சிறைவைத்த இடத்தை நானொருவிதத்திலானாலும் அறியேன். இவ்விடத்திலிருந்து இனித்திரும்பிப்போய் என்னசொல்லப்போகிறேன். இந்தத்துயரமானது இறந்தாலல்லது என்னைவிட்டுநீங்காது. ஸ்ரீராமரானவர் அநுமான் சீதையைக்கண்டு வருவானென்று எண்ணியிருப்பார். சுக்கிரீவமகாராஜாவானவர் அவசியம்கொண்டுவருவானென்றுநினைத்திருப்பார். நான்வந்துசாதித்தகாரியம் இதுதான் இவ்வளவு செய்யமாட்டாத நான் வெட்கமில்லாமல் புண்டரீகாக்ஷனாகிய ஸ்ரீராமச்சந்திரனிடத்திற்கு இனிபிராணனுடனேபோவேனோ! இந்தச்

சத்துருக்களையுந்தஞ்செய்துஎப்படியுங்கொன்று இவர்க
ளுடனேகூட இறப்பேனேயல்லாமல் நான்மாத்திரம் த
னியேயிறப்பேனு! நம்முடையமகாராஜாகுறித்ததவணை
நாள்கழிந்துபோய்விட்டது இன்னமும் எம்பெருமாட்டி
யாகிய சீதையைக்காணவில்லை யாகையால் நாமெல்லா
மாண்டுபோவோமென்றுசொல்லித்துக்கித்த அங்கதன்
சாம்பவந்தர்முதலாகிய வானரவீரர்களை தைரியஞ்சொ
ல்லி இறக்கவேண்டியதில்லையென்று மகேந்திரபர்வதத்
திலிருத்திவிட்டு நான் சம்பாதிசொன்னபிரகாரம் லங்
கையிற்போய்ச் சீக்கிரத்தில் தேடிப்பார்த்து வருகிறே
னென்றுவந்தேனே அப்படிவந்த நான் எண்ணியகாரிய
த்தைமுடிக்கவில்லையே ஆகையால் இறவாமலிருப்பேனு
புண்ணியமென்றுசொல்லப்பட்ட ஒருபொருளானது எ
ன்னிடத்தைவிட்டு நீங்கிப்போனதுபோலக் காண்கின்ற
து. எழுநூறுயோசனைவிஸ்திரணமாகிய இந்த லங்காபுரி
யிலிருக்கின்ற ஜீவகோடிகளுக்குள்ளே நான் காணுதது
வேறொன்றில்லை. சகலபுவனகர்த்தாவாகிய ராமபிரானு
டைய தேவியாரொருவர்மாத்திரமே பார்க்கக்கிடைக்க
வில்லை, மகாசமுத்திரத்தைக்கடந்தும் இப்போது அக்க
சமுத்திரத்திலேவிழுந்தழிவேனு! இந்தத்தோஷியாகிய
ராக்ஷதனைப்பிடித்திழுத்து வாயின்வழியே குபீர்குபீரெ
ன்றுரத்தங்கொப்பளிக்க பர்வதத்தைத்தும்சஞ்செய்கின்
ற என்கையினற்குத்திச் சீதையைக் காட்டடாவென்று
சொல்லி அவன்காண்பிக்கநான்கண்டுகொள்வேனு! அ
ல்லது அந்தராவணனும் இந்தவூரும் அரக்கைப் போல
உருகிக்கருகிப்போம்படி நெருப்பையிட்டுக்கொளுத்து
வேனு! அப்படிசெய்யாமல்தேவர்கள்முதலானவர்களை
அவன் ஜானகியை எவ்விடத்தில் சிறைவைத்திருக்கிறு
னென்றுகேட்பேனேயாகில் அவர்கள் அவனுக்குப்பயந்
து வாய்விட்டுச்சொல்லமாட்டார்கள். அப்படியானல்ம
ற்றவர்களெப்படி சொல்லுவார்கள். நானெவ்விதத்தில்
அறிந்துகொள்ளுவேன். இன்னமும் பிராணனைவிடத்து
ணியாமல்பூமிக்குச்சுமையாக இந்தச்சரீரத்தைச்சுமந்து
கொண்டிருக்கின்ற அறிவில்லாதநான்முன்புகழுகளுக்
கு ராஜாவாகிய சம்பாதியானவர் அந்தராமபத்தினியை
ராவணன்கொண்டுபோய் லங்கையிலே சிறைவைக்கக்க
ண்டேனென்றுசொன்னரே அவருடையசொல்லும்பொ
ய்த்துப்போய்விட்டதல்லவா! இந்த லங்காதீபத்தை எ
டுத்துச் சமுத்திரத்திலிட்டுக் கரைத்துவிடாமல் தேகத்
தைவைத்துக்கொண்டு அனுமானின்னமும் உயிரோடி
ருக்கிறனென்றுசொல்லும்படி உழல்வேனு! சுவர்க்கத்
தாரும், பூலோகத்தாரும், அறியும்படி ராக்ஷதப்படுபா
வியானவன் ஜானகியை எடுத்துக்கொண்டுவந்துவிட்டா
னென்கின்றநிந்தையானதுதப்பாது. ஆகையால் இந்தப்
பட்டணத்தை எடுத்துக்கடலிலேவிட்டெறிந்து அவனை
யுங்கொன்று அதன்பின்புநானிறக்கிறதேஉத்தமமாகுமெ
ன்றுநினைத்துமறுபடியும் எள்ளிலும் அதிலும்சிறிதாகி
ய அணுவிலும் அணுவுக்கணுவிலும் நீங்காமல் எங்கும்
வியாபகமாயிருப்பதுமன்றி தம்முடைய இருதயத்திலு
மிருக்கின்ற பரப்பிரமமாகிய ஸ்ரீராமனைப்போல எங்கு
ம்போய்ப்பார்த்து அப்பால் ஒருபக்கத்திலே இனிப்பா
கியதேனையுண்டு வண்டுகள் ரீங்காரஞ்செய்கின்ற ஒருதி
வ்வியமாகிய பூஞ்சோலையைக்கண்டார்.

ஊர்தேடுபடலம்-முற்றிற்று.

---

## காட்சிப்படலம்.

கண்டு இந்தச்சோலையினிடத்திற்போய்த் தேடிப்பார்
ப்பேனேயாகில் என்னுடைய துக்கம் நிவாரணமாகும்
இதற்குள்ளும் காணுமற்போனல் அப்புறம் நினைக்கவே
ண்டியது ஒன்றுமில்லை. உடனே இந்த லங்கையையும்
நாசமாக்கி நானும் நித்தமாய் மாண்டுபோவேனென்று
நிச்சயித்துக்கொண்டு ராமதூதரானவர் அந்தச்சோலை
க்குள்ளேபோனர்.

அப்பொழுது அவர்மேல் தேவர்கள்கூடிப் புஷ்பவரு
ஷம் வருஷித்தவர்களாய் ஸ்தோத்திரஞ்செய்து ஆனந்த
ப்பட்டார்கள். அவர்சரித்திரம் அப்படியிருக்க முன்புரா
வணன் எடுத்துவந்து அசோகவனத்திலேசிறைவைத்த
சீதாபிராட்டியானவர் எப்படியிருந்தாரென்றால் கரமா
கிய ராக்ஷதிகள் அநேகர் தன்னைநெருக்க அந்தச்சோலை
யில் ஒருசஞ்சீவி மருந்து மலையினிடத்திலே முளைத்து
ஒருநாளும் மழையென்பதைக்காணுமல் உலந்திருக்கிற
துபோலச் சரீரமெலிந்து நித்திரைவந்ததென்று கண்க
ளைமூடுதலும் இமைத்தலுமில்லாமல் வெயிலில் எற்றி
யவிளக்கைப்போலத் தேகத்தின் ஒளிமழுங்கி ஒருபெண்
மான் புலிக்கூட்டத்தின்நடுவில் அகப்பட்டுக்கொண்டது
போல விம்மி வெதும்பிப்பயந்து ஏங்கி! இரங்கி! ஸ்ரீ
ராமனைநினைத்துத்தொழுதுசோர்ந்து நடுங்கித்துக்கித்து
ப் பெருமூச்சுவிட்டு அழுதுகொண்டிருக்கிறதேயல்லா
மல் வேறொன்றுமறியாள். தன்கண் மழைக்கண்ணென்
கின்றகாரணத்திற்கு ஒத்தவாறு சதாகாலமும் இரண்டு
நேத்திரங்களிலுமிருந்து மேகதாரையைப்போல ஒழுகா
நின்ற ஜலமானது பொன்நிறத்தையுடைய மலைகளில்
ஒழுகுகின்ற அருவியைப்போல முலையின்வழியே ஆரா
ய்ப்பெருகி ஓடும்படி நீருண்ட மேகத்தைக் கண்டாலும்
கருமையாகிய வஸ்துக்களில் யாதொன்றைக்கண்டாலு
ம் வேதநாயகனுகிய ஸ்ரீராமனுடையதிருவுருவத்தை நி
னைத்துக்கொண்டு புலம்பி உலகத்தில் அன்பினையுடைய
நாயகன் நாயகிமார்களுக்குள் ஒருவரையொருவர்பிரிவ
தனுலுண்டாகிய துன்பமே உருவு கொண்டதுபோல மி
குந்தவியாகுலத்தையடைவாள், செம்பவளத்தைப்போ
லச் சிவந்திருக்கரத்தையும், திருவடிகளையும், நீலமே
கத்திற்கு ஒப்பாகிய திருமேனியையுமுடைய ஸ்ரீராமச்ச
ந்திரனைநினைக்குந்தோறும் கண்கள்பொழிகின்ற நீரினல்
சற்றுநனைகின்றதும், சரீரத்தின்வெப்பத்தினுல் சற்றுஉ
லர்கின்றதுமாகிய வஸ்திரத்தையுடையவளாய் பிரமதே
வன் விதித்தவிதியைக்கடந்துபோவதோ பிரயாசமென்
றுநினைப்பாள். சூரியவம்சத்திற்கு உரிய பெருமையையு
ம் அதற்குத்தன்னுல் சம்பவித்தப்பழியையும் பகுத்தறிந்
து நம்முடைய நாயகராகிய ஸ்வாமியானவர் வருவாரவ
ருவாரென்கின்ற நிச்சயத்தினுல் திசைகளையெல்லாம்



ஊடுருவப்பார்ப்பாள். பூமியினிடத்திலிருக்கின்ற ஒரு பூ
ரணசந்திரனை முழுமையும்விழுங்கிக் கக்குகின்றகரும்பா
ம்புபோல, தன்முகத்தின் இருபக்கத்தையுந் தழுவி ஒன்
றுகத்திரண்டு ஜடைபற்றிய கூந்தலோடிருந்து, தான்
முன்புஉடுத்த புகைபோல மெல்லிதாகியஒருவஸ்திரமே
யல்லாமல வேறொருவஸ்திரத்தைக் கண்ணினுலும்பார்
க்கமாட்டாள். திருப்பாற்கடலிலே தோன்றிய தேவாமி
ர்தத்தினுல், மன்மதனுனவன்செய்த சித்திரப் பிரதிமை
யானது புகைசூழப்பட்டிருப்பதுபோல நீராடாமல் மா
சுபடிந்திருக்கின்ற திருமேனியை யுடையவளாய், இளை
யபெருமாளானவர் மானின்பின்னேபோகிய ஸ்வாமியை
க்காணப்போனரோ அவரைகண்டாரோ! காணவில்லையோ
வென்றும் கண்டாலும் இந்தலங்கைசமுத்திரத்தின் மத்
தியிலிருக்கின்றதையும் ராவணன் என்னை யெடுத்துக்
கொண்டுவந்துவிட்டதையும் ஸ்ரீராமலக்ஷ்மணர்கள் அ
றியார்களோ விருக்கின்றதென்றும், மனங் குழைந்து
புண்ணுகி அப்புண்ணினிடத்தில் அனல்நுழைந்ததுபோ
லப் புகைபெரும்படி பெருமூச்செறிவாள். என்னைஇந்
தராக்ஷதன் எடுத்துவரும்போது பார்த்த ஜடாயுவும் இ
றந்துபோனர். மற்றவர்கள் என்பிராணநாயகருக்கு எப்
படி என்னிலைமையை அறியப்படுத்துவார்கள். இந்தஜெ
ன்மத்திலே ஸ்ரீரகுநாயகனுடைய திருமுகத்தை நான்கா
ணக்கிடைக்கிறதோ! அருமையாயிருக்கின்றதே! யென்
றுஎண்ணிப் பிரலாபிப்பாள். உடனே சித்தங்கலங்குவா
ள். மேன்மேலும் திகைப்பாள், தம்முடைய தம்பியாகி
ய இளையாழ்வாரை மதியாமல், மகாபாவியாகியநான்சொ
ன்னவார்த்தையைக்கேள்விப்பட்டு, இவள் சிறிதாவது பு
த்தியில்லாதவளா யிருக்கின்றுளென்று மனம்வெறுத்து
என் நாயகர் என்னைநீக்கிவிட்டாரோ! அல்லதுபூர்வஜெ
ன்மத்தில்செய்த கர்மத்தினுலேதான் இப்படிவந்து நேர்
ந்ததோவென்று ஓயாமல் அடிக்கடிசொல்வதனுல் வாய்
புலர்ந்து அறிவுசோர்ந்து உயிர்பதைப்பாள். சுவாமியா
னவர் ஸ்நானநைஷ்டானங்களை முடித்துக்கொண்டு அமு
துசெய்யும்போது, அவருக்குக்காய்கனிகிழங்குமுதலா
னதுகளை ஆர் பரிமாறுவார்களோ வென்றும் அவரிருக்
கும்இடத்தில் யாராவதுவிருந்து வந்தபோது தம தடியா
ளாகிய என்னை நினைப்பாரோவென்றும் அங்ஙனே சோ
கிப்பாள். தானிருக்கஇடத்தில்தன்னைச்செல்லரித்தபோ
தும் அந்தஇடத்தைவிட்டு எழுந்திராதவளாய், நான் அ
டைந்த மனேவியாதிக்கு ஒருமருந்தும் உண்டோவென்
றுசொல்லித் திகைப்பாள். கொடிய வஞ்சனையையுடை
ய ராக்ஷதர்கள் இத்தனைநாள்வரைக்கும் சீதையைச் சும்
மாவைக்கமாட்டார்கள் தின்றுவிடுவார்களாகையால் நா
ம்செய்யத்தக்கது இனியொன்றுமில்லையென்றுதேடாம
ல்விட்டுவிட்டாரோ? தம்முடைய வம்சத்தாருக்குச் சு
பாவமாயிருக்கின்ற சாதுகுணத்தை யெல்லாம் தம்மு
டையதாகவைத்துக்கொண்டு இந்தராவணனுடனே எதி
ர்த்துயுத்தஞ் செய்கிறது என்னகாரிய மென்று கோபத்
தைத்தணித்துக்கொண்டிருக்கின்றுரோ! நான் ஏதென்
றுநினைப்பேனென்று, இராத்திரியென்பதும் பகலென்ப
துமில்லாமல் நிரந்தரம் இவ்வண்ணமாகக் கவலைப் படு
வாள். பெற்றதாய்மார்களும் தம்பிமார்களும்மறுபடியும்
வந்து சுவாமியை அயோத்திக்கு அழைத்துக்கொண்டு
போய்விட்டார்களோ! அவர்கள் அழைத்தபோதும் சி
றியதாயார்குறித்துச்சொன்ன பதினுன்குவருஷகாலமு
ம், ஆரணியவாசஞ்செய்து போவாரேயல்லாமல் அதற்
குமுன்போகமாட்டாரேபின்னையென்னசம்பவித்ததோ
வென்று ஒருவரும் படாதநோய் படுவாள். பஞ்சவடியி
ல் யுத்தஞ்செய்த கரன் முதலானவர்களைப் போல, இப்
போதும் ராக்ஷதர்கள் யுத்தஞ் செய்யும்படி நேர்ந்ததோ
வென்றுவிம்மி, அந்தக் கரன்முதலானவர்கள் சக்கரவர்
த்தி திருமகனுடனே எதிர்த்து இறந்ததைக்குறித்து மு
னபுதிதனப்பட்டதுபோல,இப்பொழுதுஸ்வாமியுடனே
எதிர்த்த ராக்ஷதர்களும் அப்படியே இறப்பார்களே யெ
ன்று லோகமாதாவாகிய தாய்மிகவுந் துயரப்படுவாள்.
கைகேயியார் ராமபத்திரனைநோக்கி ராஜ்யமோ பரதனு
க்கு உரியதாய்விட்டது. இனியுனக்கு யாதொரு சம்பந்
தமுமில்லையென்று சொன்னபொழுது, எள்ளளவாவது
வாடாமல் முன்னிலும் மூன்றுபங்கு விசேஷமாய்ப்பிர
காசித்த முகாரவிந்தத்தையுடைய சுவாமியின் சாந்தகு
ணத்தையே தியானஞ்செய்வாள். ராஜ்ய சாம்பிராஜ்யத்
தை நீபெற்றுக்கொள்ளென்று அந்தமகாராஜாசொன்ன
பொழுதும் இந்தசம்பத்தையெல்லாம் விட்டு நீவனத்தி
ற்குப்போவென்று சிறியதாயார்சொன்னபொழுதும், சி
த்திரத்திலெழுதிய மலர்ந்த செந்தாமரைப்புஷ்பத்திற்கு
ச்சமானமாயிருந்தலோகநாயகனுடைய திருமுகதே
ஜஸை மனதிலேநினைப்பாள். கங்கையை அணிந்த ஜடா
மகுடத்தையுடைய சிவனுடையவில்லை மிதிலையில் ஒரு
க்ஷணமாத்திரத்தில் இரண்டுதுண்டாய் இற்று விழும்ப
டிசெய்த புஜபராக்கிரமத்தை எண்ணி மெலிவாள். கர
தூஷணதிரிசிரர்களுடனே பதினுலாயிரம் ராக்ஷதப்படை
யைமூன்றுநாழிகைக்குள்ளே இறக்கும்படி செய்த வீர
கோதண்டத்தின் பிரதாபத்தைக்குறித்து ஸ்துதிசெய்து
சரீரம்வெதும்புவாள், கங்காநதியிலே ஓடம்விட்டஎளி
யவனுகிய குகனென்னும்வேடனைப் பார்த்து, என்தம்பி
உன்தம்பி எனக்கு நீ தோழன் உனக்குஇந்தச்சீதைமை
த்துனியென்று சுவாமிசொல்லிய அங்கியோக்கிய மாகிய
பிரேசைச்செய்கையை நினைத்து மதிமயங்குவாள். கல்யா
ணம்நடந்தசமயத்தில் தன்பிதாவாகிய ஜனகமஹாராஜா
கைகளைநீட்டிப் பாதபூஜைசெய்யஎத்தினப்பட்டபோது
அதைநீக்கித் தர்ப்பையை மேடைமேல்வைத்துப் பூஜிக்
கச்செய்த வைதிகவிமத்தை உன்னுவாள். பரதனுக்கு
ன் மணிமுடிதரியாமல் ஜடைமுடி தரித்துக்கொண்டுவ
ந்ததைக்குறித்துச் சித்திரகூடபர்வதத்தில் ரகுநாயகர்
அங்கலாய்த்ததை நினைத்து இரக்கப் படுவாள். சகலசம்
பத்தையுந்துறந்து வனத்திற்குவருகின்றகாலத்தில் ஒரு
வைதிகப்பிராமணன்வந்து கோதானம்கேட்க அவனுக்கு
அநேகமபசுக்களைத் தானஞ்செய்துந் திருப்தியடையாத
அவனுடைய பேராசையைக்கண்டு சுவாமிசிரித்ததை நி
னைத்தழுவாள். ராஜாக்களை இருபத்தொரு தலைமுறைவ

ளைக்கும் கருவறுத்து அவர்களுடைய ரக்தஜலத்திலே மூழ்கி ஸ்நானஞ்செய்து, அதைக்கையினால் அள்ளிப் பிதுர்தர்ப்பணஞ்செய்த மழுவாயுதத்தையுடைய பரசுராமர் கொடுத்தவில்லை வாங்கிவளைத்து, அதன்வழியாக அவருடையதவத்தையும் பலத்தையும் கிரகித்துக்கொண்ட அதிவீரத்தைஎண்ணி உயிர்வாடுவாள். இந்திரகுமாரனைவன் காக்கைவடிவுங்கொண்டுவந்து அபசாரப்பட அந்தக்காகாசுரன்மேல் ஓர்பாணத்தைப் பிரயோகித்து, அதுஅவனுடைய ஒருகண்ணைப் போக்கடித்த நாள்முதல் உலகத்திலுள்ள மற்றக் காக்கைக்கூட்டங்களுக்கெல்லாம் ஒருகண்ணில்லாமற் போம்படிசெய்த பிரதாபத்தை விசேஷமாய்நினைப்பாள். விராதனென்னும் ராக்ஷதன் தன்னையெடுத்துக்கொண்டுபோனபோது அவனைச்சங்கரித்து அவனுடைய ஒழிக்கப்படாதசாபத்தையும் ஒழித்த அந்தத்தசரதாத்மஜனை நினைத்து நினைத்துத் தன்னுயிர்சோர்ந்து அறிவழிந்து சரீரங்குன்றுவாள். இந்தப்பிரகாரந் துயரப்பட்டுக்கொண்டிருக்கின்ற அந்தப் பிராட்டியாருடையபக்கத்தில் சமீபமாயிருக்கின்ற விபீஷணருடையகுமாரத்தியும் திரிசடையென்னும் பெயரினையுடையவளும் பிராட்டியார்விஷயத்தில் மிகுந்த அன்புண்டானவளும் மேலுந் திருந்திய இனியவார்த்தையையுடையவளுமாகிய அவள் அந்நேரம் நித்திரைசெய்தாள். மற்றக்கொடியசெய்கையையுடைய ராக்ஷதிகளுங்கள்ளுண்டமயக்கத்தினாலே அந்த அர்த்தராத்திரியில் உறங்கினார்கள். அப்பொழுது ஜானகியானவள் சாக்ஷாத்தாயைப்பார்க்கிலும் அதிகவாச்சல்யத்தையுடைய அந்தத்திரிசடையென்பவளை எழுப்பி அவளைப்பார்த்து அம்மா! எனக்கு மாசில்லாத குணத்தினையுடைய சகோதரியைப்போலுமிருக்கின்ற, திரிசடையே! ஒன்று கேளென்றுசொல்லத்தொடங்கினாள், இன்றைத்தினமெனக்கு நன்மையேவிளையுமோ! அல்லது நான்செய்த பாவத்தினாலே இன்னமுந் தீமையே விளையுமோ? என்னவோ! ஒன்றுந்தெரியவில்லை: புருவமுங் கண்ணும் வலதுபக்கந் துடித்துக்கொண்டிருந்ததுபோய் இப்போது இடதுபக்கந்துடிக்கின்றது, விஸ்வாமித்திரர்பின்னே சுவாமி மிதிலைக்குவந்தபோது இப்படிதான் இடது கண்ணும்புருவமுந் துடித்தது. இன்னமொன்றுசொல்ல மறந்தேன், கேளம்மா என்பிராணநாயகர், ராஜ்யத்தைத்தம்பிக்குக்கொடுத்துவிட்டு ஆரணியத்திற்குப் புறப்படுகிறபொழுது வலதுபக்கந்துடித்தது இந்தப்பாவி என்னையெடுக்கவந்தநாளிலும் அப்படியே வலந் துடித்தது. இப்பொழுது உண்டாகியதைப்பார்த்தால் நன்மைபோலவேகாண்கின்றது. இதுவரைக்கும் என்னைப் பயப்படாதேயென்று சொல்லிக்கொண்டுவந்ததையே இந்தச்சகுனம் ஏதாய்முடியுமோ சொல்லென்று சீதாபிராட்டியார்கேட்க திரிசடையானவள், அம்மா! இந்த மங்களக்குறிகன்றுயிருக்கின்றது நன்றாயிருக்கின்றதென்று அப்புடனேசொல்லிப் பின்னுஞ் சொல்லுகின்றாள். என்தாயாகிய ஜானகியாரே! நீர் எப்படியும் உம்முடையநாயகனைச்சேருவீர்? இதற்குச்சந்தேகமேயில்லை. அல்லாமலும் உமதுதிருமேனி பசந்துபுளகிக்கவும் திருவுள்ளங்குளிரவும் திருச்செவியில் இப்பொழுது தேனுண்டுகளித்து ஒருபொன்வண்டு வந்து மிருதுவாய் ரீங்காரஞ்செய்துபோயிற்று. அதை யாசரித்துபார்த்தால் உம்முடையபிராணபதமாயிருக்கின்ற நாயகராகிய ஸ்ரீராமர், அனுப்பிவித்த ஒருதூதனை உமக்கெதிரேவரக்காண்பீர், மேலும் பாதகர்களாகிய இந்தராக்ஷதர்களுக்கு ஆபத்துவருவதுசத்தியம். இன்னமும் என்வாய்மொழியைக்கேளுமென்று திரிசடைசொல்லுகின்றாள். நீர்நித்திரைசெய்யாததினால் கனவுகாணவில்லை. நான்கண்ட கனவைச்சொல்லுகிறேன்கேளும் என்கனா அவசியந் தவறுமற்பவிதமாகும். எங்கள் பெரியதகப்பனாகிய ராவணன்பத்துத்தலைகளிலேயும் எண்ணெயிட்டுக் கொண்டு, கழுதைகளையும் பேய்களையுங்கட்டிய தேரின்மேலேறிச் சிவந்தவஸ்திரந்தரித்துக்கொண்டு தென்முகமாய்ப்போனான். கூட அவன்பிள்ளைகளும் பந்துஜனங்களும் மற்றுஞ் சகலமானவர்களும் அந்தத் தெற்குத்திசையைநோக்கிப்போனார்கள் அவர்களெல்லாம் திரும்பிவரவில்லை. அதுவுமல்லாமல், ராவணனுடைய ஓமாக்கினியும் அணைந்துபோய்விட்டது. வானத்திலிருந்து வெள்ளிடியிடித்துவிழுந்தது. மாளிகைகள் அங்கங்கேவெடித்ததுகள். மதயானைகளுக்கு மதம்வற்றிப்போய்ப் பெண்யானைகளுக்கு மதமுண்டாயிற்று. பேரிகைகளெல்லாம் முழக்குகிறவர்களில்லாமலே இடிபோலத் தாமேமுழங்கினதுகள். நக்ஷத்திரங்களுதிர்ந்ததுகள், பகலென்பதில்லாமல்ராத்திரியேநிலைபெற்றிருந்தது. ராக்ஷதர்கள் மார்பில்தரித்திருக்கின்ற கற்பகப்பூமாலைகளெல்லாம் தீந்து புலால்நாற்றம்வீசிக்கொண்டிருந்ததுகள். இந்த இலங்கையும் இதைச்சூழ்ந்த மதிலும் சுழன்றதுகள். திக்குகளெல்லாம் நெருப்புப்பற்றிக்கொண் டெரிந்ததுகள். சிங்காரத் தோட்டங்களும் பூஞ்சோலைகளும் கரிந்ததுகள். பட்டண முழுமையும், வெறுவெளியாய்விட்டது. மங்களகலசங்களெல்லாம்விரிந்துசிதறியதுகள். விளக்குகளெல்லாம் இருள் விழுங்கியது, தோரணகம்பங்கள் இரண்டுதுண்டாய்முறிந்ததுகள். பட்டத்துயானையின் கொம்புமுறிந்தது. வேதமந்திரங்களைச்சொல்லி ரிஷிகள்வேதியர்களால் ஸ்தாபிக்கப்பட்ட பூரணகும்பங்களிலிருக்கின்ற தீர்த்தமானது கள்ளுப்பொங்குகிறதுபோலப் பொங்கியது. சந்திரனைப்பிளந்துகொண்டு நக்ஷத்திரம் புறப்பட்டது. மேகம் ரக்தவருஷம்வருஷித்தது. தண்டு சூலம் வாள் வில்முதலாகிய ஆயுதங்களெல்லாம் வீரர்கள் கையிலெடுத்துயுத்தஞ்செய்யாமல் தமக்குத்தாமே ஒன்றுக்கொன்று யுத்தஞ்செய்ததுகள். இந்தப்பட்டணத்து ஸ்திரிகளுடையதாலிகள் ஒருவரால் வாங்கப்படாமல் தாமே அற்று, அவரவர்கள் முலைகளின்மேல்விழுந்ததுகள். இன்னமொரு அதிசயத்தைச்சொல்லுகிறேன் கேளும் இந்தப்பட்டணத்துராஜாவின் பெண்சாதியும் மயன்மகளுமாகிய மண்டோதரியின்கூந்தல் பின்புறத்தில் அவிழ்ந்துவிழுந்தது. அதன்மேல் அக்கினிபட்டு வெந்தது. இது அவனுக்குத்துயரம்வந்துசம்பவிக்குமென்பதற்கு ஏதுவல்லவா! மற்றும்நான்கண்



டவிபரீதமான கனுக்களை என்னசொல்வேன்! அதிகபலமுள்ள இரண்டுசிங்கம் அநேகம்புலிக்கூட்டங்களைக் கண்டு அதுகளுடனே கூடிக்கொண்டுவந்து அளவிறந்தயானைகளிருக்கின்ற ஆரணியத்திற்புகுந்து முழுதும் வளைந்துகொண்டு நெருக்கிப்போர்செய்து சின்னபின்னங்களாகக்கொன்று அந்தயானைப்பிணங்களை மலைமலையாகக்குவித்துத்திரும்பிப்போம்பொழுது ஒருமயிலையுங்கூட்டிக்கொண்டுபோனதுகள். உன்னைப்போலவே ஒருஸ்திரீ சொர்னத்தாம்பாளத்திலே ஆயிரந்திருவிளக்கினையுடைய ஒருதேர்விளக்கையேற்றிவைத்து அதையேந்திக்கொண்டு ராவணன் வீட்டிலிருந்துபுறப்பட்டு என்பிதாவாகிய விபீஷணன்வீட்டிலேவந்துபுகுந்தாள். இவ்விதமாக நான்சொப்பனங்கண்டுகொண்டேயிருக்கும்போது தான் என்னைநீரெழுப்பினீர். மேலும் என்னென்ன காணுமோ! முடியக்காணவில்லையென்றுசொன்னாள். அது கேட்டு அம்மையானவள் திரிசடைக்குக்கைகூப்பி வந்தனஞ்செய்து அம்மா! அந்தச்சொப்பனத்தின்குறையை இன்னமும் அறியவேணும், நீ சீக்கிரமாய்நித்திரைசெய்யென்றுசொன்னாள். அப்படியிருக்கின்ற சமயத்தில் ஸ்ரீராமதூதராகிய அநுமானானவர் அந்தச்சோலையில் பிராட்டியார் எழுந்தருளியிருக்கிறதைக்கண்டார். அந்தத்தருணத்தில் முன்பு உறங்கிக்கிடந்த ராக்ஷதிகளெல்லாம் விழித்துக்கொண்டு கெட்டித்திரைவந்து தம்மைக்கெடுத்ததென்று எவ்விடங்களிலுமிருந்து எழுந்திருந்துகூட்டி, வேல், மழு, எழு, சூலம், முதலாகிய ஆயுதங்களைக் கையிலெடுத்துக்கொண்டுபுறப்பட்டார்கள். அவர்கள் எப்படிப்பட்டவர்களென்றால் வயிற்றிலேவாயிருக்கின்றவர்களும், நெற்றியிற்கண்ணிருக்கின்றவர்களும், ஒருதிருஷ்டியுடையவர்களும், பல்லுகளுக்குப்பல்நடுவே யாளிகள், யானைகள், பேய்கள், நாகங்களனதுகளும் உறங்கும்படி மலைக்குகைக்கு ஒப்பாகிய வாயுண்டானவர்களும், பத்துக்கையும், ஒருதலையுமுடையவர்களும், இருபதுதலையும், இரண்டுகையுமுடையவர்களும், அதிபயங்கரமாகியரூபத்தையுடையவர்களும், விகடமாகியவேஷத்தையுடையவர்களும், உடம்பெல்லாம் பர்வதங்கள்போலப்பருத்த பலமுலைகள் தொங்குகின்றவர்களும், ஒற்றைமுலையையுடையவர்களும், சூலம், வாள், சக்கரம், அங்குசம், தோமரம், கப்பணம், வேல், முதலாகிய ஆயுதங்களைக்கையில்தரித்துக்கொண்டிருக்கின்றவர்களும், காளகூடவிஷமேவடிவுகொண்டதுபோலக் கறுத்திருக்கின்றவர்களும், எமனும்பிரமிக்கத்தக்க பராக்கிரமமுள்ளவர்களும், யானைமுகம், குதிரைமுகம், புலிமுகம், கரடிமுகம், யாளிமுகம், பேய்முகம், சிங்கமுகம், நரிமுகம், நாய்முகங்களுண்டானவர்களும், முதுகிலே முகமிருக்கின்றவர்களும், மூன்றுகண்ணுள்ளவர்களும், வாயிலேபுகையெழும்புகின்றவர்களும், எண்ணுக்கடங்காத கூட்டத்தையுடையவர்களும், கண்ணுக்கடங்காததோற்றத்தையுடையவர்களும், காலனானவன் பலவுருவங்கொண்டு பெண்ணென்னும் பெயர்வைத்துக்கொண்டு திரிகிறதுபோலிருக்கின்றவர்களுமாகிய அந்தராக்ஷஸஸ்திரீகளெல்லாம் எழுந்துவந்து ஸ்ரீராமருடையதிருத்தேவியாரைச் சுற்றிக்கொண்டார்கள். அப்போது அந்தஜானகியானவள் ஒன்றும்பேசாமல் அவர்கள் முகத்தைப்பார்த்துப் பயந்தவளாயிருக்க, ஸ்ரீராமதூதராகிய ஆஞ்சனேயர் ஒருவிருக்ஷத்தின்மேலேறி அதன்கிளையில்மறைவாயிருந்து பார்க்கத்தலைப்பட்டார். ராக்ஷதஸ்திரீகள்கையிலே ஆயுதம் பிடித்தவர்களாய் சித்திராகீன்கிப்பலபேர்கூடியிருக்கின்றார்கள். இவர்களிப்படிகூடியிருப்பதற்கு ஏதுவென்னவென்று உற்றுப்பார்த்து கறுத்தமேகக்கூட்டத்தின்மத்தியில் பிரகாசிக்கின்றமின்னற்கொடிபோல காரியநிறத்தையுடைய அந்த ராக்ஷதிகளின் நடுவில் ஊழிமுதல்வனாகிய ரகுநாயகனுடையதேவியாரைக்கண்டு அரக்கிமார்கள் சுற்றிலுங்காவலாயிருக்க அவர்களுக்குமத்தியில் இருக்கின்றவர்தான் சீதாபிராட்டியார்போலக்காணுகின்றது. இவரோதடாகத்தின்நடுவில் இருக்கின்ற அன்னப்பேடுபோலத்தமது கண்ணினின்றும் ஒழுகுகின்ற ஜலப்பிரவாகத்தின் மத்தியிலிருக்கின்றார், இந்தத்தேவியாரைத்தேடிவந்தநான் இப்பொழுதுதான்கண்டேன் ஆகையால்முன்புதாமம்பொய்த்துப்போய்விட்டதென்று நினைத்தேனே அது அப்படியாகவில்லை. நானும்இனிஇறக்கமாட்டேனென்றுசொல்லி ஆனந்தமாகியதேனையுண்டு சரீரஸ்மரணை தெரியாமல் ஸ்ரீராமநாமசங்கீர்த்தனம்பாடிக்கொண்டு கூத்தாடினார். அங்கும் இங்குமாய் ஓடினார். எங்கும் உலாவினார். இகழப்படாத இவருடைய திவ்வியரூபசவுந்தரிய லக்ஷணத்தை எங்கள் ஐயனாகிய ஸ்ரீராமச்சந்திரன்சொன்ன அடையாளத்திற்குச்சிறிதாவது வித்தியாசப்பட்டிருக்கவில்லை. கள்ளச்செய்கையையுடைய ராவணனானவன் ஸ்ரீராகவனுடையபிராணனாகிய இவளையொளித்துவைத்தது எதற்காகவென்றால் திரிலோகத்தாருக்கும்மகத்தாகிய அக்கிரமத்தைச்செய்கின்றபாபிஷ்டனானவன் அவன் தன்னுயிரையிழப்பதற்கே இதற்குசந்தேகமில்லை. அந்தஸ்ரீராமர் ஸ்ரீமகாவிஷ்ணுவே இந்தச்சீதாபிராட்டியார் தாமரைப்புஷ்பாசனத்தில் எழுந்தருளியிருக்கின்ற ஸ்ரீமகாலக்ஷ்மியே அழுக்கடைந்திருக்கின்ற கண்ணாடியைப்போலவும் சூரியனுக்கு எதிரே உதயமாகிய சந்திரனைப்போலவும் தேஜஸ்மாறியிருக்கின்றஇவருடைய ரூபத்துக்கும்மனைவாதுகிக்கும்பின்னமுண்டாகவில்லை. எங்கேயாவது தர்மத்திற்கு அழிவுண்டா! ஸ்ரீராமருடைய திருத்தேவியைத்தான் சொல்வேனோ! பதிவிரதாஸ்திரீகளுக்கு முதலிலகமாகிய இந்த உத்தமியினுடைய குணநிசயத்தையே சொல்வேனோ! அந்த ஜனகமகாராஜாவினுடைய வம்சத்தின்பெருமையைத்தான்சொல்வேனோ! நான் எதைத்தான்சொல்வேனென்று மிகவும்புகழ்ந்துசந்தோஷித்துத்தேவர்களும்பிழைசெய்யவில்லை. ரிஷிகளும் பிழைசெய்யவில்லை தர்மத்திற்குங்குறையில்லை. இனி நான் செய்கிறதற்கு அருமையாகியகாரியம் என்ன இருக்கின்றது. எம்பிரானாகிய ஸ்ரீராமருக்குச்செய்யும் என்னடிமைத்தொழிலும் ஒன்றும்பிழைபடவில்லை. இந்த லோகநாயகியின் கற்பானது இந்திரித்துச்சிதையுமானால் சுவாமிக்குக்கோபம்ஜெனிக்கும். அதனால் சதுர்த்தச புவனங்களுக்கும்

நாசம்வருமென்றுநினைத்தேன். அப்படிக்கற்புச்சிதையாமையால் இனி ஒரு சஞ்சலமுமில்லாமல் உலகங்களெல்லாம் பல்லூழிகாலம்வாழ்ந்திருக்கும் நல்லகுடியிற் பிறந்து இல்லறத்திற்கு உரியநற்குணநற்செய்கைகளையுடைய பதிவிரதாஸ்திரீகள் தங்கள்மனதைப்பலவிடங்களிலும்செல்லவொட்டாமல் நிறுத்துகின்ற தபோமகிமைக்குமுன் பஞ்சாக்கினிமத்தியிலிருந்து பஞ்சேந்திரியநிக்கிரகஞ்செய்து அன்னபானாதிகளைநீக்கி அகோரதபசுசெய்கின்றவர்களுடைய த[illegible]மகிமைதான் எவ்வளவு! இந்தப்பாக்கியவதிபூமியிலதோன்றினதால் குடிப்பிறப்பும் அதனையுடையபெண்பிறப்பும் அதற்குரியநாணமுதலான குணங்களும்தவஞ்செய்துசிறப்பினை அடைந்தன. இவ்விடத்தில் இவள் இப்படிப்பட்டமகத்தாகிய அருந்தவசுசெய்துகொண்டிருக்கின்ற அதிசயங்களையெல்லாம் ஸ்ரீராமர் தம்முடையதிருக்கண்களால் காண்கிறதற்குத் தவஞ்செய்யாமற்போனார். இந்துள்ள ராக்ஷதஸ்திரீகளெல்லாம் நிரமந்தப்பிக்கோபிக்கின்றவர்களாயிருக்கின்றார்கள். நல்லவரிந்தப்பிராட்டியாரொருவரேயல்லாமல் வேறொருவரில்லை. லோககாரணியாகிய ஜானகியாரைத் தர்மமோ காத்ததோ! அல்லது ராவணனுடைய தீவினையேகாத்ததோ அல்லது இந்தச் சீதாபிராட்டியாருடையமேன்மையாகிய கற்பேகாத்ததோ! அம்மம்மா! இது அருமை அருமை எவர்தான் இதைச்சகிப்பார்கள். ஒருவிதத்திலாவது என்னைப்போலொத்தவர்களாற்சொல்லத்தக்கதாவென்று இப்படியெல்லாம் நினைத்துநினைத்து அதிகசந்தோஷசித்தராகி ஆஞ்சனேயர் அந்த மரக்கிளையிலேதானே தங்கிப்பார்த்துக்கொண்டிருந்தார். அச்சமயத்திலேராவணேஸ்வரன் அந்தச்சோலைக்குவரும்படிப்புறப்பட்டான்.

காட்சிப்படலம்-முற்றிற்று.

## நிந்தனைப்படலம்.

சிகரங்களையுடைய பர்வதங்களெல்லாம் ஓரிடத்திற்சேர்ந்திருப்பதுபோல வச்சிரத்தாற்செய்யப்பட்டமகரகுண்டலங்களைத்தரித்துக்கொண்டிருக்கின்ற இருபதுதோள்களும், இருபக்கத்திலும் பிரகாசிக்கவும், மாணிக்கமயமாகிய மகுடகாந்தியானது அந்தராத்திரியைப்பகலாகச்செய்யவும். ஊர்வசியானவள்-உடைவாளேந்திக்கொண்டுவரவும், மேனகை - தாம்பூல் மடித்துக் கொடுத்துக்கொண்டுவரவும், திலோத்தமை - பாதரட்சை தாங்கிக்கொண்டுவரவும், ரம்பை - காளாஞ்சியேந்திவரவும், மற்றும்எட்டுக்கோடிஸ்திரீகள்கைகளில்தீபவிளக்கு எடுத்துவரவும், யக்ஷஸ்திரீகள் - தேவஸ்திரீகள் - வி[illegible]யஸ்திரீகள் - பன்னகஸ்திரீகள் - சித்தஸ்திரீகள் - ராக்ஷதஸ்திரீகள் முதலாகிய பலஸ்திரீக்கூட்டங்கள் பெரியமலையைச் சூழ்ந்துவருகின்ற மயிற்கூட்டங்கள்போலப் புடைசூழ்ந்துவரவும், பச்சைக்கர்ப்பூரம், கஸ்தூரிமுதலாகிய வாசனாதிரவியங்கள்சேர்க்கப்பட்ட கலவைச்சந்தனமானது மேகமவென்றுபரிமளிக்கவும், தேகத்திலணிந்திருக்கின்ற பலவிதாத்தாபரணங்களின் ஜோதியானது இருளைவிழுங்கிப்பிரகாசிக்கவும், கால்களிலதரித்த சிலம்புகள்முழங்கக் கிண்கிணிகள் ஒலிக்க மேகலாபரணம்சப்திக்க அநேகஸ்திரீகள் அம்சக்கூட்டங்கள் நடக்கிறதுபோலநடந்து மிருதுவாகிய பலவிதவசனங்களைவசனித்துக்கொண்டுவரவும், நீலமலையில் ஒழுகாகின்ற வெள்ளைமயாகிய அருவியாறுபோலத் தனது மார்பினிருபுறத்திலும் வெள்ளைப்பட்டு உத்தரீயமானதுதொங்கவும், சர்வேஸ்வரனாகிய ஸ்ரீமகாவிஷ்ணுவின் திருமார்பைப்போல அம்மார்பினிடத்தில் பொன்னாரம்பிரகாசிக்கவும், மேகத்தின்மத்தியில் தோன்றிய மின்னலைப்போல முப்புரிநூல்விளங்கவும் இருபதுபுஜங்களிலும் அணி[illegible]ருவலயங்களும், கேயூரங்களும், இராக்காலத்தில் ஆகாசத்தில் உதயமாகிய நக்ஷத்திரங்கள் நவக்கிரகங்களைப்போல மின்னவும் கால்களில் அணிந்திருக்கின்ற வீரகண்டாமணிகளின் ஓசையானது பூமிமுழுதும்பரவவும், வக்கிரதந்தங்கள் அர்த்தசந்திரனைப்போல இளவெயிலெறிக்கின்ற முகங்கள் இருளைப்பார்க்கிலும் கருமையாய்ப்பிரகாசிக்கவும், ரத்னகசிதமாகிய வீரசங்கிலியும், முத்தாரமும் யுகாந்தகாலத்திலே மகாமேருவில் தொத்திக்கொண்டிருக்கின்ற பலநக்ஷத்திரங்களும், கிரகங்களும்போலமார்பில் அணிந்த செர்ணவைச்சத்தின்மேல்பிரகாசிக்கவும் சிரசில்தாங்கியபத்துக்கிரீடங்களும், உதயகிரியின் சிகரங்களில் [illegible]ன்னிரண்டு சூரியர்களில் இருவரைநீக்கிப் பத்துச்சூரியர்[illegible] உதயமானதுபோல ஜொலிக்கவும், ஸ்திரீகள்பாடுகின்ற [illegible]பாட்டுக்கு ஒத்திருக்க வேணுக்குழல் கில்லரி தாள[illegible]த்து மிருதங்கம்முதலாகிய நானாவித வாத்தியங்களு[illegible], [illegible]ஷத்தைக்கக்குகின்ற நாகங்களும், அமிர்தத்தைக்க[illegible]ம்படி ஆகாசம்பூமியெங்கும் அளாவிமுழங்கவும், தே[illegible]மடைகள் மேகம்வரக்கண்டுநடனம்செய்கின்ற மயில்களைப்போல எதிரே நாட்டியஞ்செய்துகொண்டுவரவும், புஷ்பத்தால் அலங்கரிக்கப்பட்ட விதானமும் சாமரைகளும், தவளக்குடைகளும், ஆலவட்டங்களும், [illegible]களும், மகரதோரணங்களும், மயிற்றோம்பைகளும், ஸ்திரீகள் தாங்கிக்கொண்டு கூடநடந்துவரவும், அந்தக்காலத்தில் மன்மதன்பிரயோகித்த அக்கினிஜொலிக்கின்ற பாணங்கள் துளைத்த வெள்வித்தாகிய புண்ணில் வேலானது நுழைந்ததுபோலச் சந்திரகிரணங்கள் பாயவும், இளந்தென்றற் காற்றானது புஷ்பங்கள் தோறும்போய் வாரிக்கொண்டுவந்து சிந்துகின்ற தேன்துளிகள் உருக்கிய செம்புபோலத் தெறிக்கவும், ஸ்திரீகளுடைய கடைக்கண்பார்வைகள் மார்பினிடத்திலும் தோளினிடத்திலும், வந்துபதியவும், பூமாலைகளையும், கந்தத்தையும், கூட்டுவர்க்கத்தையும், பூஷணங்களையும், விலையுயர்ந்த மிருதுவாகிய வஸ்திரங்களையும், ரத்னங்களையும் மற்றும் வேண்டிய சகலவஸ்துக்களையும் கற்பகவிருக்ஷமும் சங்கநிதி பத்மநிதிகளும் பின் தொடர்ந்து கொடுத்துக்கொண்டுவரவும், பாற் சமுத்திரத்தின் வெண்மையாகிய அலைகள் கதுக்க பர்வதத்தின்மேல் தாவிப் புரள்வதுபோல வெண்சாமரம் - இரட்டவும், கருங் கடலில் இருந்து உதித்து, உயர எழுந்த களங்க மில்லாத பூரண சந்திரனைப் போலத் தவளச்சக்கரக்குடை



யானது முடியின் மேல் பிரகாசிக்கவும், நடக்க அடிபெயர்த்து வைக்குந்தோறும் அந்த லங்கையாகிய பர்வதமானது கீழழுந்திச் சமுத்திரத்தின் அலைகள் அதன்மேலாகநான்குதிக்கிலும் எழும்பித்தவழவும் பூமியைத்தாங்குகின்ற ஆதிசேஷனும் தலைமாறித்தாங்கவும் பூமாதேவிமுதுகுநெளிக்கவும் கேடகம்-மழு-எழு-சூலம்-அங்குசம்-கப்பணம்-வாள்-வேல்-வில்-வச்சிர முதலாகிய சகலாயுதத்தையும் நாடகையைப் பார்க்கிலும் இரண்டுபங்கு அதிகபலத்தையும் கோரத்தையுமுடைய ராக்ஷதஸ்திரீகள் தாங்கிக்கொண்டுவரவும் தளிர்-இலை-அரும்பு மலர்-காய்-பழம்-கிளை-கொம்பு-வேர் முதலானதுகளும் ரத்னங்களினாலும் பொன்னினாலும் சமைந்திருக்கின்ற, விருக்ஷங்களையுடைய அந்தச் சோலையானது, திக்குகள்தோறும் கரிந்துதிரும்படி தன் சுவாசமானது அக்கினியைக்கக்கிக்கொண்டு எழுந்து முன்னே பாயவும் சீதாபிராட்டியார் எழுந்தருளியிருக்கின்ற திசையைத் தான் அறிந்திருந்தும் மனதுதிகைத்துத் திசை தெரியாமல் பலதலைகளையுடைய பாம்பைப்போலப் பலவிடங்களிலும்உழன்று திரிந்துகொண்டுவருகின்ற ராவணனை, சிற்றுருவங்கொண்டு அசோகமரத்தின்கிளையில் தொத்திக்கொண்டிருக்கின்ற அஞ்சனாதேவி குமாரனாகிய அநுமானவர் செவ்வையாகப்பார்த்து, குணமுஞ்செயலும் இனிமேல் வினையும் விளைவும் இவ்விடத்தில் தெரியவருமென்று எண்ணி, ஸ்ரீராமச்சந்திரனுடைய [illegible]மந்திரத்தைத் தியானித்துக்கொண்டு மறைவாயிருந்தார். பின்பு அவ்வாறு வந்த ராவணன் அந்தச்சோலையில் வந்துசேர்ந்து தன்னுடனேகூடவந்த ரம்பாஸ்திரீகளையும் மற்றுமுள்ள பலவிதஸ்திரீகளையும், வெளியிலேபோய் இருக்கச்சொல்லி அக்கியாபித்துத் தானொருவனுமாய்த் தனியேயிருக்கின்றபெண்விளக்காகிய அந்தசோகமாதாவின் சமீபத்தில்வந்தான். அப்போது பிராட்டியாரானவள் அவனைக்கண்டு உயிர்நீங்கினவன்போல நடுநடுங்கி விழுங்கும்படி வந்தபுகைகின்ற கண்களையுடைய பெரும்புலியைக் கண்ட, இளமையாகிய பெண்மான்போலப் பயந்து திடுக்கிட்டுக் கரைந்தாள் இவ்வண்ணமாகமனங்கூடி உயிர்நிலைகலங்கி யஜ்ஞானியானாயும் அவர்மேற்கொண்ட ஆசையினால் பிராணசங்கடப்படுகின்ற மஹாபாதகனாகிய ராவணனையும், அந்த ஆஞ்சனேயர் தம்முடைய இரண்டுநேத்திரமும்சாக்ஷியாகப்பார்த்து, மனதுசஞ்சலம்டையும்படி அதிகதிகிலேசத்துடனே மங்களாலாபனம் செய்யத்தொடங்கினார்.

கவி.

வாழி சானகி வாழிபி ராகவன்.......................*
வாழி நான்மறை வாழிய ரந்தணர்.......................*
வாழி நல்லற மென்றுற வாழ்த்தினன்.......................*
ஊழி தோறும் புதிதுறு சீர்த்தியான்.......................*

என்பன.—ஜனகமஹாராஜாவின் புத்திரியாகிய இந்தச்சீதாபிராட்டியார் வாழக்கடவர். இவருடையநாயகனாகியும் ரகுகுலதிலகனுமாகியும் விளங்காநின்ற அந்த ஸ்ரீராமச்சந்திரனும் வாழக்கடவன். அவனுடைய நாமரூப குணங்களைச்சொல்லுகின்ற சதுர்வேதமும்வாழக்கடவது அவ்வேதத்தை அத்தியயனஞ்செய்கின்ற பிராமணோத்தமர்களும்வாழக்கடவர்கள். அவர்களிடத்தில் நிலைபெற்றிருக்கின்ற தர்மமும் வாழக்கடவதென்றுசொல்லிக் கல்பங்கள்தோறும் அழியாத கீர்த்தியையுடைய அநுமானானவர் வாழ்த்தினவரா யிருக்க, ராவணன் பிராட்டியாரைப்பார்த்து ஒருவார்த்தைசொல்லுகிறான். குயிலுக்குச்சமானமாகிய இனியகுரலினை யுடைய பெண்கள்சிகாமணி! பெண்கள்பூஷணம்! பெண்கட்கரசி! பெண்கள்பாக்கியம்! எங்களகுலதெய்வமே! என்பிராணநாயகியாகிய சீதா! என்று அழைத்துக் கொல்லுகின்றவிஷத்தை அமிர்தமென்று நினைத்து உண்கின்றவனைப்போல நீ எப்பொழுது என்னிடத்தில் கிருபைசெய்வதென்றான்! சிவன்முதலானவர்களுக்கும் அஞ்சாத திடச்சித்தத்தையுடைய ராவணனானவன் ஆசையும்நாணமும் தன்னைப்பிடிக்கும்படி, கூசிக்கூசிக்கொண்டு பின்னுஞ் சொல்லுகின்றான். இன்றென்றும் நாளையென்றும் வீணாகநாள்போய்விடுகின்றதே! நீ என்னைக்கொன்றபின்புதான் கூடவிருக்கின்றையோ! என்னுடைய அளவில்லாத பாக்கியமாகிய ராஜ்யசாம்பிராச்சியத்திற்குத் திலகமாயிருக்கின்றவளே! உன்பொருட்டு மன்மதனானவன்என்னிடத்திற்செய்கின்ற கலகத்தை நீபார்ப்பது மல்லாமல், அவனுக்கு நான்தோற்கின்ற என்னுடைய எளிமையையும் பார்க்கின்றையோ! நீண்ட கூந்தலையுடைய ஆயிரத்தெட்டுமாற்றுத்தங்கமே! கீர்த்திபொருந்திய என்னுடைய மகைஸ்வரியத்தை இழந்து விடுகின்றையே! உன்றுபகனாகிய ராமன்றிறந்து போகாமல் பிழைப்பானோ! அல்லவென்று இறவாதிருந்தாலும் காட்டைக்கடந்து அயோத்தியிற்போய்ச்சேர்ந்து வாழ்வதோ பிரயாசம். அப்படிவாழ்ந்தபோதும் அதுசொற்பமாகிய மானிடர்வாழ்வேயல்லாமல் வேறல்லவே. அந்தவாழ்வுதானேநிலையாயினைக்கின்றது. தபசுசெய்கின்றவர்களும் அதி நுட்பமாகிய சாஸ்திரார்த்தங்களைத்தெளிந்தவர்களும் பெறும்பிரயோசனம் என்னவென்றால் எனுடைய வார்த்தையைச்சிரசாவகிக்கின்ற பிரமாதிதேவர்களுடனேகூடியிருக்கின்ற இன்பந்தானே. உனக்குப் பாதாதிகேசபரியந்தமாகிய அவயவங்களெல்லாம் அழகாகத்தெரிந்துபடைத்த பிரமாவானவன், இடையுந்திருடையும் இல்லாமற்போம்படி செய்துவிட்டான். இளமைப் பருவமானதுநாளுக்குநாளென்ன விர்த்தியாகின்றதா! கொஞ்சங்கொஞ்சமாய் மாண்டுபோய்விடுகின்றதே. அப்படிப்பட்ட அருமையாகிய இளமையானது வேண்டிய சுகமநுபவிக்கத்தக்க காலத்தில் வீணாய்ப்போகுமானால், அப்புறம் மனோரிஷ்டத்தை எப்பொழுதுதான் முடிக்க இருக்கின்றையோ! இலக்ஷ்மிக்குச்சமானமாகிய ஜனகராஜபுத்திரியே! சிறந்தபெண்தன்மையும், உயர்ந்த ரூபலக்ஷணமும், மாறுபடாத திடச்சித்தமும் உண்டாயிருக்கின்ற உனக்குத்தாக்ஷிண்யமாத்திரம் இல்லாமற் போனதென்ன! என்பிராணன் போனாலும் போகட்டும் உன்முகமாத்திரம் கோணாமலிருக்கவேணும். அப்படியல்லாமல் நீமுகங்கோணினால் குணம் அழகு காமமுதலானதுகளு

ம் தங்கி நிற்பதற்கு இனியார் இருப்பிட மாவார்கள் ! உன்கணவனை நான்கொல்லும்பொழுது அவன் அலறிக்கூவுங்குரலைக் கேட்கவும் அவன் இறந்துகிடப்பதைப் பார்க்கவுமிருக்கின்றையோ ! ஊழ்வினையானது எளிதாக ஆட்டுகின்ற தாம்பப்பயனாகிய நன்மையை இப்படி இகழ்ந்துதள்ளிவிடுகின்றவர்களை நானெங்கும் பார்க்கவில்லை. நீ ஒருத்தி என்னிடத்தில் வந்ததனால் எனக்கு மகத்தாகிய சாம்ப்ராஜ்யமானது மேன்மேலும் உண்டாயிற்றென்கின்ற கீர்த்தியைவிட்டு இன்னவளாலே, இன்னான் மாண்டுபோய்ப் பாக்கியமும்இழந்துபோனனென்கின்ற அபகீர்த்தியைச் சம்பாதித்துக்கொள்கின்றையோ ! தேவர்களும் அவர்களுடையதேவிமார்களும் கைகூப்பி அடிவணங்குகின்ற திரிலோகாதிபத்திய மானது உன்னிடத்தில் வலியவருகின்றது. அதை நீவிலக்கிவிடுகின்றாயாகையால் உன்னைப்போலும் பேதைமையானபெண்கள்யாரிருக்கின்றார்கள். மூன்றுலோகத்தாரும் ஏவல்செய்யும்படியிருக்கின்ற திரிலோகாதிபதியான என்னை நீ அடிமைகொண்டருளக் கடவாயென்று, ராவணேஸ்வரனானவன் கைகளைக்கூப்பித் தலைமேல்வைத்துக்கொண்டு சாஷ்டாங்கமாகப் பூமியில்விழுந்து தெண்டன் சமர்ப்பித்தான். சிவக்கக்காய்ச்சிய இருப்புச்சலாகைகளைக் காதில் ஏற்றியதுபோல இந்தவார்த்தைகள் வந்து நுழையாததற்குமுன்னே, ஜானகியின் செவிகள்தீந்துகள மன்று சுழன்றது கோபமுண்டது கண்சிவந்தது அதுகளில உதிரம்பாயத்தலைப்பட்டது. அப்போது பிராணன் போனாலும்போகின்றதென்று கொஞ்சமாவது அஞ்சாமலும் பெண்தன்மைக்கு ஒவ்வாத சொற்களானாலும், இந்தவேளையிற்சொல்லுகிறதே சரியென்று துணிந்து வஞ்சகனாகிய ராவணனுடைய மனநுவேதுபடும்படி, கற்பினால்தன்மனதைக் கல்லைப்பார்க்கிலும் மிகவும் உறுதிப் படுத்திக்கொண்டு அவன்முகத்தைப்பாராமல் கீழேகிடக்கின்ற ஒருதுரும்பைப்பார்த்து, அவனை அந்தத்துரும்பாகமதித்து அடா ! அற்பமாகிய திரணமே ! இப்பொழுது நான்சொல்லுகின்ற சொல்லானது என்னைப்போலும் நல்லகுடிப்பிறப்பினையுடைய பெண்கள் சொல்லத்தக்கதல்ல. ஆகிலும் உன்னைக்குறித்துச் சொல்லுகிறேன் கேட்கக் கடவாயென்று கொடுமையாகிய பலசொற்களும் தோபிராட்டியார் சொல்லுகின்றார், மஹாமேருவை உருவவேண்டுமென்றாலும் ஆகாசத்தைப் பிளந்துகொண்டு அதற்கப்புறம் போகவேண்டுமென்றாலும் பதினான்குலோகத்தையும் முடிக்கவேண்டுமென்றாலும் ஸ்ரீராமபாணம் அப்படியேசெய்யத்தக்க பலமுடைத்தாயிருக்கின்றது. அதை அறிந்திருந்தும் புத்தியில்லாமல் அநுசிதமாகிய வார்த்தைகளை உனக்குச் சரிப்போனபடி யெல்லாம்பிதற்றி உன்பத்துத்தலைகளும் அற்றுவிழுவாயா ! என் நாயகருக்கு நீ பயந்துதானே சமயம்பார்த்து ஒரு வஞ்சனையான மானையேவி அவரை என்னைவிட்டு நீங்கும்படிசெய்து, உன்னுருவத்தை மறைத்து மாயாசந்நியாசிவடிவங்கொண்டுவந்தாய். பிழைக்கிறவனானால் விட்டுவிடுவாய் உன்குலத்துக்கெல்லாம் விஷமாகிய என்னை உன்கண்களும் பார்க்கமாட்டுமா ! இந்தப்பத்துத்தலைகளும் இருபதுதோள்களும் கோதண்டதீக்ஷாகுருவாகிய என் நாயகரானவர், பலபல பாணங்களைப் பிரயோகித்து விளையாடத்தகுந்த விசித்திரமாகிய லக்ஷியமாயிருக்குமல்லாமல் வேறென்னசெய்யும். யுத்தத்தில் எதிர்க்கத்தக்க சக்தியை யுடையவனைப்போலப் போய் அன்றைத் தினம் ஜடாயுபலத்துக்கு நிற்கமாட்டாமல் தரையிலேவிழுந்தையே. அந்த ஒருபக்ஷிக்குத் தோற்றும் சிவனுடைய கைவாளினாலே பலவோ வென்றாய். அல்லவென்றால் அங்காளே இறந்துபோவாய் நீசெய்ததவமும் அதனாற்பெற்றவரமும் தீர்க்காயசுமாகிய இதுகளெல்லாம், உனக்குக் கூற்றுவனாலே அபாயம் வந்து சம்பவிக்காமலிருப்பதைக்குறித்தேயல்லாமல், என்நாயகனுடைய பாணத்தினாலே இறவாமலிருப்பதைக்குறித்து ஏதாவதுதவஞ்செய்தது வரம்பெற்றதுமுண்டா ! நீ பெற்றிருக்கின்ற அந்தவாளையும் நாளையும் பராக்கிரமத்தையுமற்றுமுள்ளசகலத்தையும் உனக்குக்கொடுத்த பிரமாதிதேவர்களுடைய வரங்களெல்லாம், ரகுநாயகரானவர் தமது கோதண்டத்தைவளைத்து நாணேற்றி ஒரு அஸ்திரத்தைமந்திரம் அநுசந்தானஞ்செய்து பிரயோகித்தவுடனே உன்னைவிட்டுவிலகி யதார்த்தமாக அழிந்து போகும் ஜ்வலியப்பிரகாசிக்கின்ற தீபச்சுடருக்குமுன் இருள் விலகிப்போகாமல் நிற்பதுண்டா ! நீகைலாசகிரியை எடுத்தநாளில் ...ற்பெருவிரல் நுனியால் உன்னை அழுத்தி ஜெயித்த திரிபுராந்தகனை சிவனுடைய கைவில்லை என்பிராணநாயகராகிய ராகவர்வளைத்தபோது அது அவர்பலத்திற்குச் சகிக்காமல் ஒடிந்துவிழுந்த சப்தங்கேட்கவில்லையா ! மலையை எடுத்தேன் அஷ்டதிக்கஜங்களை ஜெயித்தேனென்று சொல்லுகின்ற நீ, எங்கள் இளையபெருமாளானவர் கையிலேவில்லெடுத்துக்கொண்டு நிற்க அங்கேபோய், அவரைஜெயிக்கத்தக்க நிர்வாகமில்லாமல் நானுமொருவீரனென்றுஇன்னமுந்தலைபெயர்த்துக்கொண்டு பெண்டுகள்காலில்விழுந்து கெஞ்சிக்கொண்டு திரிகின்றையோ ! அறிவில்லாதவனே ! நீ ஒளித்துக்கொண்டிருக்கின்ற இடமாத்திரம் இன்னதென்று எங்கள் ராமபிரானுக்குத்தெரிந்தால் அப்போதே இந்தச் சமுத்திரமும் லங்கையும்அழியும். உன்பிராணனும் நாசமாம். அந்தமட்டிலேதானே போமா ஊழியுந் தீந்துபோகும். நீயொருவன் இப்படிப்பட்ட வஞ்சனைசெய்ததனால் ஸ்ரீராமச்சந்திரருடைய கோபத்தால், ராக்ஷசருடனேமாத்திரம்முடிந்துபோகாமல் இந்த லோகாலோகங்களுக்கெல்லாம் என்ன அழிவுவருகின்றதோ வென்று தர்மதேவதைசாக்ஷியாக நான் அஞ்சிப்பார்க்கின்றேன். இந்தராமலட்சுமணர்கள் மனிதர்தானேயென்று உன்மனதிலே நினைத்தையேயானால், முன்னாளில் உன்னைச்சிறைவைத்த கார்த்தவீரியனும் மனிதன் தானே. இவர்கள் இருவர்தானே இவர்களுக்கு வேறொரு உபபலமுமில்லையென்று அலக்ஷியஞ்செய்வாயானால், சகல புவனங்களையும் சகலாத்துமாக்களையும் சங்கரிக்கின்ற ஊழிநாதன் ஒருவனல்லவோ. ஆதலால் அவர்களுக்கும் உனக்கும் யுத்தம்



நடக்கும்போது என்சொல்மெய்யோ ! பொய்யோ ! பார்த்துக்கொள் இரணியன் இரணியாக்ஷனென்னும்அசுரேந்திரர்கள் அதிகபராக்கிரமசாலிகளாயும் உன்னிலும்மேலாகிய சம்பத்தையுடையவர்களாயும், வெகுகாலம்வாழ்ந்திருந்தார்கள். அவர்களும் தர்மந்தப்பிநடந்தார்கள். ஆகிலும் இப்படிப் பரதாரத்தை இச்சிக்கவில்லை. அதற்காகத்தாலேயே மாண்டுபோனார்கள். பூலோகத்தாரும், சொர்க்கலோகத்தாரும், நடுங்கும்படி வாழ்கின்ற கொடும்பாவி ! உன்னுடைய அற்பமாகிய துஷ்கீர்த்தியைத் தவிலக்காமல் உனக்குப்பயந்திருக்கின்ற பிரமா, விஷ்ணு, ருத்திரர்களைப்போல எங்கள்ரகுநாயகரையும் நீ நினைத்தையோ ! ஐம்புலன்களும் செல்கின்றவழியில் செல்லாமல் தர்மத்தின்நிலையிலேநின்று வினையைக்கடந்தவர்கள் பிரமாமுதலாகிய தேவர்களா ! அல்லது அசுரர்களா ! சகலலோகத்தாரும் ஏவல்செய்யும்படி இந்த மகாசம்பத்து உனக்குக் கிடைத்திருக்கின்றது புண்ணியத்தினாலேயா ! அல்லது பாவத்தினாலேயா ! அறிந்துபார், இப்படிப்பட்ட பெரிதாகிய செல்வத்தை உனக்குக்கொடுத்த அந்தமகேஸ்வரனும், தர்மமார்க்கத்திலின்றல்லவோ ! அப்படிப்பட்ட இஷ்டகாமியத்தை அநுபவிக்கின்றான். நீமாத்திரம் தர்மந்தப்பநடந்து ஒப்பற்றசெல்வத்தையும் இழந்து பந்துஜனங்களுடனே நிர்மூலமாய் அழிந்துபோம்படி ஏன் எத்தினப்படுகின்றாய். அடா ! அறிவில்லாதவனே ! போர்க்களத்தில் புறங்கொடுத் தோடாத மகாபலிஷ்டர்களானாலும் தர்மந்தவறினவர்களும் ஜீவகாருண்யமில்லாதவர்களுமல்லவோபிறந்துஇறந்து உழல்கின்றவர்கள் ! அவ்வாறாகிய ஜனனமரணத்தை நீக்கினவர்கள் அகங்கார மமகாரத்தைக் கெடுத்துக் காமவெகுளிமயக்கத்தைக் கடந்தவர்களேயல்லாமல் வேறேயார் ! அகஸ்தியர்முதலாகிய மகாரிஷிகளெல்லாங்கூடிப் புருஷோத்தமராகிய ஸ்ரீராமரிடத்தில்வந்து ராக்ஷதர்கள்செய்யும் உபத்திரவத்தைச்சகிக்காமல் தவமுதலாகிய வைதிககர்மங்களையெல்லாமிழந்தோம் தேவரீர் அவர்களைச் சங்காரஞ்செய்தருளும் உம்முடைய பாணத்தினால் அவர்கள்சத்தியமாய் மாண்டுபோவார்கள் ஐயா ! தசரதகுமாரரே ! எங்களைரக்ஷியுமென்று முறையிட்டுக்கொண்டார்கள். அந்தச்சமயத்தில் நான் அவர்பக்கத்திலிருந்துகேட்டேன். நீயோ அதற்கேற்றபடி நடந்துவருகிறாய். உன்னையும் உன்னுடைய பராக்கிரமத்தையும் நீபெற்றிருக்கின்ற தீர்க்காயுசையும், சேனாபலத்தையும் முனிஸ்வரர்கள்சொல்லக்கேட்டும் எங்கள் ராமபத்திரர் எவ்வளவும் லக்ஷியஞ்செய்யாமல் உன்தங்கையின் மூக்கையும் உன் தம்பிமார்களாகிய கரன் முதலானவர்களுடைய ரசநாதி அவயவங்களையும் சின்னபின்னப்படுத்திய சமாசாரத்தை நீ கேள்விப்படவில்லையோ ! உன்னுடைய இருபதுகைகளையும் சேர்த்துப்பிடித்து உன்பத்துவாயின் வழியாகக் குபீர் குபீரென்று உதிரங்கக்கும்படிக்குத்தி உன்னை அருஞ்சிறையில் வைத்த ஆயிரங்கைகளையுடைய கார்த்தவீரார்ச்சுனனுடைய வைரமாகிய தோள்களையும் மழுவாயுதத்தால் தறித்தெறிந்த பர

குச

சுராமரானவர் என்நாயகருக்குத்தோற்றுப்போன சமாச்சாரம் நீ யறியாயோ ! மேல்வருங்கதியை யறியாத நீசனே ! கடிக்கின்ற சர்ப்பமும் மந்திர உச்சாடனம்பண்ணக்கேட்டுத் தடைபடுகின்றது. யுக்தாயுக்தந் தெரியாமல் ததித்துத்துள்ளுகின்ற உன்னை இதுதகும் இதுதகாதென்று அதற்கேற்ற ஏதுக்களுடனும் திருஷ்டாந்தங்களுடனும் புத்திசொல்லி இடிக்கின்றவர்களில்லை. நீ நினைத்ததையே சரிசரியென்றுசொல்லி உன்னைமுடித்துவிடத் தக்கவர்கள்மாத்திரமிருக்கின்றார்கள். இப்படியானால் இனி உனக்கு நாசம்வருமேயல்லது வேறென்ன சம்பவிக்குமாவென்று இவ்வகைப்பட்ட தர்மமார்க்கமாயிருக்கின்ற பலபலவார்த்தைகளையும் கர்ணக்ரோமாக அந்தத்துரும்பைப் பார்த்தவண்ணமாய்ப்பிராட்டியார் சொல்லவே மேகத்தின் வயிற்றைக்கிழித்துக்கொண்டெழுந்த மின்னலைப்போலவே இருபதுகண்களிலும் நெருப்புப்பொறிகள் எழும்ப வாய்களெல்லாம் புகைய அதட்டி ஆர்ப்பரித்துக் காமத்திலும் கோபமிகுந்தவனாய் அதிகக்ரோதத்தைக்கொண்டு இவளைப்பிளந்து தின்றுவிடுகிறேனென்று எழுந்துவந்தான். ஆசையுங்கோபமும் முன்னும்பின்னுந்தள்ள ஜானகிக்குச்சமீபத்தில்வந்தவனை அநுமானானவர்பார்த்து என்னை அடிமைகொண்ட நாயகருடைய தேவியாரை என்னெனிரே இப்படியெல்லாம் பேசிய நீசனாகிய ராவணன் தீண்டுகிறதற்குமுன்னே இவனுடைய பத்துத்தலைகளையும் உதைத்து உருட்டி விட்டுப்பின்பு எந்தக்காரியமும்பார்த்துக்கொள்ளலாமென்று நினைத்து பின்னும் இந்த ராவணனே தனியே யிருக்கின்றானாகையால் எளிதாக இவன்தலைகளையுடைத்துத் தள்ளி லங்கையையும் எடுத்துக்கடலிலே தலைகீழாகஎறிந்துவிட்டு பிராட்டியாரை எடுத்துக்கொண்டு ஸ்ரீராமபிரானிடத்திற்குப்போகிறதே காரியமென்று துணிந்து அதிககோபாவேசத்துடனே கையைப்பிசைந்துகொண்டிருந்தார். அண்டங்களை எல்லாம் அழிக்கும்படி மூண்டெழுந்த யுகாந்தகாலாக்கினியைப்போல முதிர்ந்தகோபத்துடனே கிட்டிவந்த ராவணனானவன் அந்தக் கோபாக்கினியைக்காமமென்கின்ற வெள்ளமானது அவிக்கலோகமாதாவாகிய சீதைக்கு எதிரே சும்மாநின்று சில வார்த்தைசொல்லுகிறான். நானுன்னைக் கொல்லுகிறேனென்றுசொன்னேனே ! அது இருக்கவே யிருக்கின்றது. உலகத்திலே எனக்கு ஒருவிஷயம் சாத்தியப்படுவதென்றும் சாத்தியப்படாததென்றுமுண்டா ! தோற்கிறதும், ஜெயிக்கிறதும், எனக்கு விளையாட்டுச் செய்கையாயிருக்கின்றது. உன்னுடைய உயிருக்கு ஒப்பாகிய நாயகனை நான்கொன்றால் நீ இறந்துபோவாய் அதுகண்டால் நானுமிறந்துபோவேன். அந்தச்சங்கடத்தைஎண்ணித்தான் அன்றுநானுன்னை வஞ்சனைசெய்துயெடுத்துவந்தது அல்லவென்று யுத்தஞ்செய்யத் தலைப்பட்டால் யார்தான் எனக்கு எதிர் நிற்கின்றவர்கள் மானானதுவந்ததென்று அறிந்து அதைப்பிடிக்கத் தொடர்ந்துபோன மானிடர் என்னுடைய அதிகாரத்தை அறிந்தால் இந்த வழிவருவார்களா ! முன்னாளில் ஆரோ என்னை ஜெயி

அன்பழிசிந்தையராயவாடவர்.......................*
வன்பழிசுமக்கினுஞ்சுமக்கவாளுயர்....................*
துன்பழிபெரும்புகழ்க்குலத்துட்டோன்றினேன்.......*
என்பழிதுடைப்பவரென்னின்யாவரே...............(௬)
வஞ்சனைமரனின்பின்மன்னைப்போக்கியென்...............*
மஞ்சனைவைதபின்வழிக்கொள்வாயென்று...............*
நஞ்சனையானகம்புகுந்தநங்கையாள்.......................*
உய்ஞ்சனளிருந்தனளுலகங்கொள்ளுமோ...........(எ)
வல்லியன்மறவர்தம்வடிவிற்றிப்பவர்.......................*
[illegible]வினும்வெல்கபோர்விளிக்துவீடுக.......................*
இல்லவ[illegible]றத்தையாளிறக்துவாழ்ந்தபின்.......................*
சொல்லியவென்பழியவரைச்சுற்றுமோ...............(அ)
வருந்தலின்மானமாவனையமாட்சியர்.......................*
பெருந்தவமடந்தையர்முன்புபேதையேன்.......................*
கருந்தனிமுகிலினைப்பிரிந்துகள்வனூர்.......................*
இருந்தவளிவளெனவேசுநிற்பனோ...............(கூ)
அறப்புனரக்கர்தம்வருக்கமாசற.......................*
திறப்பலிகொண்டருஞ்சிறையின்மீட்டநாள்.......................*
இறப்புகத்தக்கிலையென்னில்யாளுடைக்.......................*
கற்பினையப்பரிசிழைத்துக்காட்டுகேன்...............(ய)

என்பன.—வீரகண்டையை அணிந்த ரகுநாயகனைக் காணவேண்டுமென்கின்ற ஆசையினாலே பலவிதவருத்தத்தையும் சகித்துக்கொண்டு என்னுயிரையும் விட்டுவிடாதிருந்தேன் இப்படி நெடுநாளாக இந்தராக்ஷதருடைய நகரத்திலே சிறையிருந்த என்னை, அந்தமனுகுலோத்தமராகிய நல்லியரானவர் தொடுவாரா! என்னைப்பரபுருஷர் இச்சித்தாரென்றறிந்தும் பலபேருஞ்சொல்லும்பழிச்சொற்களெல்லாம் காதிலேவிழக்கேட்டும் இந்தயிரைவைத்துக்கொண்டு எத்தனைக்காலமாயிருக்கிறேன் என்னைப்பார்க்கிலும் கடினசித்தத்தையுடைய ராக்ஷதிகள் வேறேயார்! நீங்காதபழியைச்சுமந்துகொண்டு இருக்கின்றவென்னுடைய குடிப்பிறப்பும் நாணமும்நன்றாயிருக்கின்றது கதைகளிலேசொல்லப்பட்டிருக்கின்ற கற்புடையஸ்திரீகளுக்குள், மனைவாழ்க்கையை நீங்கிப்பிராணனோடிருக்கின்றவர்கள் நானல்லாமல்ஆரிருக்கின்றார்கள்! அந்நியருடையகிரகத்தை அடைந்தபெண்ணை விரும்புகிறது யோக்கியமல்லவென்று என் பிராணநாயகர், என்னைக்கைவிட்டவராகி வேறொருஸ்திரீயைச்சேர்ந்துசுகித்திருக்க, நான் வீண்பொழுதுபோக்கி அதர்மத்தைச்செய்துவேறெந்த உபாயத்தைக்கொண்டு அதைச் சகிப்பேன். எப்பொழுதுநான் இந்தப்பெரும்பழிக்கு ஆளானேனோ! அப்பொழுதே பிராணத்தியாகம்பண்ணிக்கொள்ளவேணும். அப்படிச்செய்யாமல் உலகத்தார் அளவிடப்படாத நிந்தைகூற நான் துப்பழிந்து உயிர் கொண்டிருப்பதுமோக்ஷசாம்பிராஜ்ஜியத்தை அடைகிறதற்கா! என்னுயரும் என்கொழுநனும் மனதிலே அன்பில்லாதவர்களாய்ப்பொல்லாதபழியைச் சுமந்தாலுஞ்சுமக்கட்டும் சனகரிக்கிபெற்ற நல்லகுடியிற் பிறந்தேனே என்பழியைத்துடைக்கின்றவர்கள் என்னைவிடயாரிருக்கிறார்கள் வஞ்சனையாய்வந்த மானின்பின்னே என் பர்த்தாவைப்

போக்கிப்பின்பு எனக்குக்காவலாயிருந்த என் மைத்துனப்பிள்ளையையும் அவர்பின் போவென்று அனுப்பிவிட்டு, காளகூடவிஷத்திற்கு ஒப்பாகிய ராக்ஷதன் வீட்டில்வந்திருக்கின்ற நான்பிராணனுடனிருந்தாலும் உலகம் அங்கீகரிக்குமா! சுந்தவீரர்களாகிய ரகுநாயகரும்இளையபெருமாளும் தங்களுக்குவந்த குற்றத்தை நீக்கிக்கொள்ளும்பொருட்டு யுத்தஞ்செய்து சத்துருக்களை ஜெயித்தாலும்ஜெயிக்கட்டும், அல்லவென்று இறந்து போனாலும்போகட்டும். நான் கிரகதர்மம் தப்பிநடந்த பின்பு சொல்லுகின்ற என்பழி அவர்களைச் சுற்றுமோ! கவரிமானுக்குச் சமானமாகிய மானமுடைய பதிவிரதைகளுக்கு எதிரே பேதைமையையுடைய நான் புருஷோத்தமராகிய தன் நாயகனை பிரிந்துகள்ளர் நகரத்தில்வர்சமாயிருந்தவளிவளென்று அவர்கள் ஏசும்படிக்கேட்டுக்கொண்டிருப்பேனோ? என் [illegible] நாயகர்வந்து ராக்ஷதர்க்கூட்டத்தை யெல்லாம் பற்றறக்கொன்று என்சிறைமீட்டநாளன்றிலும். நீவீட்டிற்கு [illegible]ளே நுழைகிறதற்கு யோக்கியனானவளல்ல வென்று [illegible] ன்னால் அப்போது என்கற்பை அவ்விதத்தில் பரீக்ஷை [illegible] கொடுத்து நிலைநிறுத்துவேன். ஆகையால் இறந்துபோ[illegible]றதே தர்மநெறியென்றறிந்தும் பின்னும் என்னைச்ச[illegible]வாமல் காத்துக்கொண்டிருக்கின்ற ராக்ஷதிகளும் என[illegible] அ[illegible]ர்கள். இதுதான்சமயம் இதைவிட வேறுசமயங்கிடைக்கமாட்டாதென் [illegible] ஜானகிஎழுந்து ஒருகுருக்கத்திப்புதரினிடத்திற்போய்ச்சேர்ந்தாள். அதுகண்டு அநுமாரனவர்பிராட்டியினுடைய கருத்தையுங் குறித்துதறிந்துகொண்டுநடுநடுங்கி, இப்படிச்செய்யவேண்டாமென்று இந்தக்ஷணம்போய்க் கையைப்பிடித்துக்கொண்டு தடைசெய்யலாமென்றுபார்த்தால், பதிவிரதாசிரோமணியாயிருக்கின்றவளைத் தீண்டக்கூடாதே யென்று மனங்கூசினவராய் ராமா ராமாவென்று எதிரே ஓடிவந்து அம்மா! லோககாரணி! லோகபரிபூரணி! லோககாயத்ரி! லோகமாதா! லோகோத்தமி! அடியேன் தேவர் தேவனாகிய உமதுபிராணநாயகருடைய தூதனென்று திருவடியில்விழுந்து சேவித்துச் சொல்லுகிறார்.—தாயே! ஸ்ரீராமருடைய ஆக்கினையைச் சிரமேற்கொண்டு வந்தவன் நான். என்னைப்போல அநேகவானரவீரர்கள் தேவரீரைக்குறித்து உலகமெல்லாம்போய்த்தேடுகின்றார்கள். அடியேன்செய்ததபோபலத்தினாலே உம்முடையதரிசனத்தைவந்துதரிசித்தேன் தேவரீர் இங்கிருக்கின்றதைச் சர்வலோகநாயகராகிய ஸ்ரீராகவர் அறியார். இதற்குச்சாக்ஷி என்னவென்றால் இன்னம் ராக்ஷதக்கூட்டங்கள்மாளாமல் ஜீவனுடனிருக்கின்றதுகளே இதுதான் இதுதவிர வேறுசாக்ஷியும்வேண்டுமா! திருவுளத்தில்ஐயப்படவேண்டாம். அடையாளங் கொண்டுவந்திருக்கிறேன் அதுவும்பார்த்துக்கொள்ளும். அதுதவிரச் சுவாமியானவர் திருப்பவளத்திறந்து சாதித்தருளியதிருவாய்மொழியுமிருக்கின்றது. அதைக் காதலா மலகமாகச் சொல்லுகிறேன். அதையுங்கேட்டறிந்து கொள்ளும் மனதில்வேறே யோசனைசெய்யவேண்டாமென்றுஇத்தப்



பிரகாரம்சொல்லித் தாழ்ந்துவணங்கி மெலிந்து குழைந்து நிற்கின்ற அநுமானைப்பார்த்தருளி முன்பு ராக்ஷதனென்று கோபங்கொண்டு பின்பு இரக்கமுற்று இவன் ராக்ஷதனல்ல நல்லொழுக்கத்தில்நின்று ஐம்பொறிகளையும்வென்ற சர்வோத்தமனாகவேண்டும், அல்லவென்றால் தேவனாகவேண்டும், மேலும் அறிவினும், வார்த்தையிலும் பார்த்தால் பரிசுத்தனாகவும், குற்றமற்றவனாகவுங்காணுகின்றான். ஆயினும்மாயாக்ஷதன்தானாகட்டும், தேவன்தானாகட்டும், அல்லவென்று இப்பொழுதுகொண்டிருக்கின்ற உருவத்தின்படியே வானரசிரேஷ்டன்தானாகட்டும், இத்தருணத்தில் சொல்லிக்கொண்டுவந்த வார்த்தையானது கொடுமையாகச் சொன்னதாயிருந்தாலும் இருக்கட்டும். அல்லவென்று உண்மையாக இரக்கமாய்ச்சொன்னதாயிருந்தாலும் இருக்கட்டும். எம்பெருமானுடைய திருநாமத்தைச்சொல்லி என்மனதை யுருக்கி இத்தருணமாத்திலே நல்ல தெளிவைக்கொடுத்தானே இதைப்பார்க்கிலும் உயிருக்கு வேறுதவி என்னசெய்யவேணும், அல்லவென்றால் மற்[illegible]ன்னதானிருக்கின்றதென்றுநினைத்துப் பிராட்டியார் [illegible]றையுடனே பார்த்துப்பின்னும் என்னுள்ளமிரங்குகிறது. இவன்மனதிலே [illegible] யில்லை வஞ்சகமாக்க[illegible]யுடையவனல்லன் அ[illegible]மான வார்த்தையுட[illegible]ண்களில் நீர்பெருக [illegible] இவனைக் கேட்கலாமென்று எண்ணி நீ ஆரப்பாவென் [illegible] கேட்க, அந்தத் திருமொழியைச் சிரமேலே தாங்கிக்கொண்[illegible] கைகூப்பித்தெண்டன்சமர்ப்பித்துத் தாயே! தேவரீரை ஸ்ரீராமர்பிரிந்தபின்பு சம்பாதித்த சிநேகமும் சூரியனுடையகுமாரனும் வானரகுலத்திற்கெல்லாந்தலைவனும், மிகவும்நல்லவனுமாகிய சுக்கிரீவனென்கின்ற நாமத்தையுடையவனிருக்கின்றான். அவனுக்குத்தமையன் வாலி யென்பவன் அவன்முன்னாளிலே இந்திரனை வால் முனையிலேகட்டிக்கொண்டு எட்டுத்திக்குகளிலும் எழும்பிப்பாய்ந்து ஜெயங்கொண்டவன், தேவர்கள் வேண்டிக்கொள்ள மந்தரபர்வதமாகிய மத்தில் வாசுகியைக் கயிறாகச்சுற்றி அமிர்தமுண்டாகும்படிக் கடலைக்கடந்த புஜபராக்கிரமமுடையவன். அப்படிப்பட்டவாலியை உம்முடையநாயகர் ஒரு அம்பினாலேபிராணனைவாங்கி அவனுடைய ராஜ்ஜியத்தை அவன் தம்பியாகிய சுக்கிரீவனுக்குக்கொடுத்து அவனைத் தோழனாக்கிக்கொண்டார். அந்தச் சுக்கிரீவன் எங்களுக்கு ராஜாவாயிருக்கின்றவன், அவனிடத்திலிருக்கின்ற மந்திரிமார்களில் நானொரு மந்திரி காற்றாயுகுமாரன் என்பேர் அநுமானென்பது எங்கள் ராஜாவினிடத்தில் எழுபதுவெள்ளஞ் சேனைவீரர்களிருக்கின்றார்கள். அவர்களில் ஒவ்வொருத்தரே இந்தலோகத்தையெல்லாம் பேர்த்தெடுக்க வேண்டுமென்றாலும் எடுப்பார்கள். சமுத்திரத்தையுந் தாண்டுவார்கள். அப்படிப்பட்டவர்களெல்லாங்கூட்டமாகக்கூடியிருக்கின்றார்கள். உம்முடையபிராணநாயகர்எதைக்குறித்து ஆக்கியாபித்தாலும் அதைக்குறிப்பினால் தெரிந்துகொண்டு அத்தக்ஷணமே தவறாமல்செய்வார்கள். அநேகவானரர்கள்

எழுசமுத்திரமும் அந்தச்சமுத்திரங்களுக்கு எழுவகைப்பட்ட தீவாயிருக்கின்ற பூமியும், நாகலோகமும், தேவலோகமு மாகிய இந்த அண்டமெல்லாந்தேடி உம்மைக்காணவிட்டால் இந்த அண்டத்துக்கு அப்பாலும் போய்த் தேடும்படிப் புறப்பட்டுப் போயிருக்கின்றார்கள். ராவணன் உம்மை யெடுத்துக்கொண்டு வருகிறபோது நீர் வஸ்திரத்திலகட்டிப் பூமியில் எறிந்த ஆபரணக்குறிப்பினாலே ஸ்ரீராமர் என்னை அழைத்துத்தனியேவைத்துக்கொண்டு சொல்ல வேண்டியதுகளெல்லாஞ்சொல்லித் தென்றிசைக்குப்போய்வாவென்று ஆக்கியாபித்தார். அவருடையதிருமேனிக்கு விக்கினமுண்டா! அன்று நீர் கழற்றி எறிந்த ஆபரணங்களை எங்களாராஜாவானவர்கவா பிசந்திதியில கொண்டு வந்துவைத்தபோது அவருக்கு உண்டாகிய துக்கம் என்றால் அறிந்துசொல்லக்கூடுமா! தேவரீரே யல்லாமல் ராமசந்திரருக்கு உயிரில்லைவேறுண்டா! அந்தத் திருவாபரணந்தான் இந்நாள் வரைக்கும் உம்முடைய மாங்கல்ய சூத்திரத்தைக்காத்தது. அது அப்படியிருக்கட்டும் வாலியினுடையகுமாரரும், எங்களுக்கெல்லாம் இளவரசுமாகிய அங்கதனென்பவர் இரண்டுவெள்ளஞ்சேனையுடனே தெற்குத்திசையில் தேடுகிறதற்குப்புறப்பட்டுவந்திருக்கிறார். அவர் லங்கைக்குப்போய் வாவென்றுசொல்லி என்னை அனுப்பினாரென்று நிந்தையை நீங்கிய அநுமானனவர் விண்ணப்பஞ்செய்து அன்புடனே மனமுருகுகின்றார். இப்படி அவர்சொன்னவார்த்தைகளைக்கேட்டமாத்திரத்திலே மகத்தாகிய பிரமாணத்தமானது பொங்கியெழும்படி பிராட்டியார் பெருமூச்செறிகிறதவிர்ந்து இளைத்திருந்த சரீரம் மிகவும்பூரித்து நான் உஜ்ஜீவிக்கிறதற்குக்காரணமுந்தோவென்று கண்களில் அருவிபோல ஆனந்தபாஷ்பம் சொரிய அப்பா? அந்த ரகுகுலோத்தமருடைய திருமேனி எந்தப்படியிருக்கும் சொல்லென்று அருளிச்செய்தார். அந்தவார்த்தைகேட்டு அநுமானனவர் அதிகம்கிழ்ச்சியுடனே அம்மா! ஸ்ரீராமருடைய திவ்வியசுந்தரம் இப்படியிருக்குமென்று உபமானமெடுத்துக்காட்ட ஒருவராலுமாகாது. ஆயினும்நானடியேன் அறிந்தமாத்திரம்சொல்லிக்கொண்டுவருகிறேன். அதுகளில் ஏதாவது தவறுவந்தாலும் உமது திருவுள்ளத்தில் ஆயாசப்படாமல் அவருடைய திருமேனியைத் தேவரீர் அறிந்திருக்கிறவாறானபடியினாலே மனதினால் சரியாகப்பாவனை செய்து அங்கீகரித்துக்கொள்ளுமென்று சுவாமியினுடைய திருவடிகளைப் பாதாதிகேசபரியந்தம் சொல்லத்தொடங்கினார். ஸ்ரீராமருடைய திருவடிகளிரண்டிற்கும் செந்தாமரைப்புஷ்பங்களென்று தேவர்கள் ஸ்துதிசெய்கிறபடியினாலே அந்தக்கமலத்தைவிடத்தான் வேறே உபமானஞ்சொல்லுகிறதற்கு என்னவஸ்துவிருக்கின்றது. அப்படிப்பட்ட திருவடியின் காந்திக்குமுன் பவளத்தைக்கருங்கல்லைப்போலக் கறுப்பென்றே சொல்ல வேண்டும், அந்தத்திருவடிகளின்விரல்களுக்கு உபமானஞ்சொல்லுகிறதற்குக் கற்பகத்தின் அரும்பும் செம்பவளமும் என்னவாவது அதுகளிருக்கட்டும் இனஞ்சூரியகிரணங்களை ஒ

ருவேளை ஒக்குமென்றுசொன்னாலுஞ் சொல்லலாம் அங்கிரல்நகங்களுக்குச் சிறிய தூகளும் பெரிய தூகளுமாய்க் களங்கமில்லாமல் பத்துசசந்திரன் உண்டாயிருக்குமானால் அதுகளை ஒப்பிடலாம் அப்படித்தானில்லையே இனிப் பிரகாசமுண்டாகிய வச்சிரத்தைச் சொல்லுவோமென்றால் அதில் திரட்சியுண்டா யிருக்கவில்லை ஆகையால்நகத்தின் திருவழகுக்கு உபமானமறிந்து சொல்லமாட்டேன். அந்தத்திருவடி பூமியிலே பொருந்தாமல் ஆரணியத்தில் நடந்தவருந்தியதானாலும் சாமுத்திரிகா சாஸ்திரத்திற் சொல்லப்பட்ட லக்ஷணத்திற்குள் அடங்காமல் அதிலும் அதிகலக்ஷணத்துடனே பிரகாசிக்கின்றதும் புவனமெல்லாம் கவிந்துகொண் டிருக்கின்றது மாகையால் அதினுடையமகிமை ஒருவராலுஞ்சொல்லிமுடியாது கணைக்காலுக்கு உபமானம். அம்புத் தூணியென்று சொல்லலாம் சொன்னால் அதுதான்சரியாமா ! திருத்தொடைகளுக்கு மதயானையின் தும்பிக்கையை ஒப்பாகச்சொல்லுவோமென்றால் அதை அதின் வெட்கிப் போம்படி செய்து அதிலும் அதிக அழகாய் பக்ஷிராஜனுடையகழுத்தைப்போல ஜொலித்துக்கொண்டு இந்த உலகத்தில் வேறே உபமானமில்லையென்றுசொல்லும்படியிருக்கின்றதுகள் அவருடையதிருவுந்திக்கமலத்திற்குவலமாகச்சுழித்தோடுகின்றகங்காநதியின் நீர்ச்சுழியை உபமானமாகச் சொன்னாலும்சரியாகமாட்டாது. ஆகையால் மகிழமலர் போல்விளங்குகின்றதென்றுசொன்னால்சொல்லலாம் அதைவிடவேறென்ன உவமைதானிருக்கின்றது. மரகத பர்வதமானது அஞ்சும்படிவிசாலித்து உயர்ந்துபிரகாசிக்கின்ற திருமார்பை ஸ்ரீமகாலக்ஷ்மிவிட்டுப் பிரியாதிருக்கும்படித் தவஞ்செய்யாளாகில் அவளைவிடத் தரித்திரமுடையவர்கள் யாரிருக்கிறார்கள். கமலமென்று வண்டுகள்சுற்றும்படி முழங்கால்பரியந்தம் நீண்ட திருக்கைகளுக்குஐராவதத்தினுடைய தும்பிக்கையானது சிறிது உவமையாகுமென்றுசொல்லலாம் அதுதவிர வேறொன்று உவமையாகுமா ! புதுக்காலத்திலே தாமரைமலர்களைக்கண்டதுபோலத்தோன்றுகின்ற அந்தக்கைகளின்நகங்கள் முற்காலத்திலே இரணியனுடைய வச்சிரசரீரத்தைப் பிளந்தபடியினாலே இப்பொழுது அதுகள் கூர்மழுங்கி யிருக்கின்றதுகள். அந்த அழகிய மணவாளருடைய திருத்தோள்களுக்கு உபமானமாகப் பர்வதத்தைச் சொல்லுவோமென்றால் அதுதிரண்டிருக்கவேண்டும் பிரகாசமுண்டாயிருக்கவேண்டும் விஜயலக்ஷ்மி வாசமா யிருக்கவேண்டும். வில்காரிபுரண்டுகொண்டிருக்கவேண்டும். இரத்திபொருந்தி யிருக்கவேண்டும். ஒன்றைப்போல இரண்டுசேர்ந்திருக்கவேண்டும், இப்படியெல்லா மில்லாதினாலே அந்தப்புஜங்களுக்குப்பர்வதம் உபமானமாகமாட்டாது. திருக்கழுத்திற்குச் சமுத்திரத்திலுண்டாகியசங்கத்தையும்கன்னிக்கமுகையும்தெரியாதவர்கள் உபமானமாகச்சொல்லுவார்கள். சேஷசாயியாகிய ஸ்ரீமகா விஷ்ணு இடதுகரத்தில் ஏந்துகின்ற பாஞ்சசன்னியமிருக்க அதுகளையெல்லாம் உபமானிக்க எனக்குச் சம்மதமாயிருக்கவில்லை. எம்பெருமானுடைய திருமுகத்திற்குச்செங்கமலத்தை உபமானஞ் சொல்லலாமென்றால் திருக்கண்களுக்கு உபமானவஸ்துவேறென்னசொலலுவேன் ? பூரணசந்திரனைச்சொல்லலாகாதாவென்று தேவரீர் அருளிச்செய்வீராகில் அந்தச்சந்திரன் தன் பிரகாசத்துடனே உருவமும் நாளுக்குநாள்மெலிந்து தேய்ந்துபோகின்றதனால் திவ்வியமாகியதேஜசுடனேகூடிய அந்தத்திருமுக மண்டலத்திற்குச் சமானமாகத்தக்கதா ! திருவாயின் அழகுக்குச்சிவந்த பிறந்தையுடைய தாமரையை ஒப்பாகுமென்றால் அதுலஜ்ஜைப்படும். அப்படிச்சிருக்கக்குளிர்ச்சி பொருந்தி அமிர்தமூறுகின்ற திருவாகிய இன்சொல்லுக்குநிகரையுமில்லாமலிருக்கின்றபவளமா ! அதற்கு உவமைசொல்லத் தக்கது தகாததாயினும் பெரியோர்களாலே அந்தச்செவ்வாய் திருப்பவளமென்று சொல்லப்பட்டிருக்கின்றது. கேளுமம்மா ஜானகியாரே ! சுவாமியின்வரிசையாகிய தந்தங்கள் முத்துக்களோ ! நிலவின்துளிர்களோ ! அமிர்தத்தின்துளிகளோ ? தர்மத்தின்முளைகளோ ! மெய்ம்மையின் அரும்புகளோ ! நல்லதுமற்றேதுகளோ ! அதுகளின் திருவழகுக்கு உபமானம் என்னவென்று சொல்லுவேன். கிருபாநிதியாகிய ஸ்ரீராமபிரானுடைய செவ்வாய் அதரத்தைச் சேர்ந்திருக்கின்ற திருமூக்கு இந்திரநீலக்கொழுந்தும் மரகதரத்ன காந்தியும்போலப்பச்சென்ற[illegible]ஒளியையுடையதாய் இந்திர[illegible]பத்தைக் கவ்விய பசுஞ்சோதியைப்[illegible]றதென்று சொல்லுவோமென்றால் அதுவும் உவமையாகமாட்டாது. அந்தக் கரதூஷணை திரிசிரர்களுடைய யுத்தத்திலே அநேகராக்ஷத கவந்தங்களும், பலவகைப்பட்டபேய்களும், தேவர்களும், ரிஷிகளும், தர்மமும், வேதமும், இனிராக்ஷதகுலம் கட்டழிந்து போமென்று சந்தோஷித்துக் குதித்துக்கூத்தாடவும், சுவாமியினுடைய பிரசண்ட உத்தண்ட கோதண்டமானது வளையவும், அன்றுவளைந்த அவருடைய திருப்புருவத்திற்கு உபமானம் நீரே பார்த்துக்கொள்ளும், நெற்றியின் திருவழகுக்கு உபமானஞ்சொல்லவேண்டுமென்றால் பிறையைத்தான் சொல்லவேண்டும் அதுவும் நடுவேமறுவும், வளர்வதும் தேய்வதும், பாம்பின்வாயில் அகப்படுவதும், உதயமாவதும், அஸ்தமிப்பதும், இல்லாமல் பகற்காலத்திலும்பிரகாசிக்கின்றதாய் இருளின்றி எக்காலும் சேர்ந்திருக்குமானால் அவருடைய திருநெற்றிக்கு உவமையாகும். கேசமானது நீண்டு சுழன்று நெய்தோய்ந்து இருண்டு நெளித்து நெருங்கி நீலவர்ணமாய் முறுக்குற்றுச் சரிந்து சடைகருண்டு அகிற்புகையுடனே மற்றுமுள்ள வாசனைகளையூட்டவும், புஷ்பமாலைகளைச்சூட்டவும், வேண்டுவதில்லையென்னும்படி இயற்கையாய்த் தெய்வமணம் வீசிக்கொண்டு இப்போது ஜடையாயு மிருக்கின்றதென்றால், அதைமேகத்திற்குச்சமானமாகு மென்றுசொல்வது இழிவல்லவோ ! பிதாவானவர் பட்டாபிஷேகம் பண்ணிக்கொண்டு பாக்கியத்தையும் ராஜ்ஜியத்தையும்பெற்றிருந்து ராஜரீகஞ்செய்யென்று சொன்னபோதும் சிறியதாயார் ராஜ்ஜியத்தைவிட்டு ஆரணியத்திற்குப் போவென்று சொல்லப் புறப்பட்டு வந்தபோதும் ஒரு தன்மையாய்



நடக்க, அந்த ஸ்ரீராமருடைய நடையை இழிவாகிய ரிஷபத்தின் நடைக்குச் சமானமா யிருக்கின்றதென்று சொன்னால், அப்படி எக்காலும் ஒரு தன்மையாகிய நடை யில்லாத ரிஷபத்தை உபமான மாகச் சொல்லுகிறவர்கள் என்னுடைய நடையைத்தானே சொல்லலாகாதாவென்று, மதயானைமனம்வருந்துமே ஆகையால் இரண்டையுஞ் சொல்லக்கூடாதம்மா வென்று இவ்வண்ணமாக அநுமானானவர்சொல்ல, அதுகளையெல்லாம்காருண்யமாகக் கேட்டுக்கொண்டுவந்த பிராட்டியார், அக்கினியிலிட்ட மெழுகுபோல உருகித் தம்மை அறியாமல்பரவசப்பட்டு மனங்கரைந்தார். அப்படிஉருகுகின்ற சீதாலக்ஷ்மியை மாருதியானவர் பூமியில்விழுந்து சாஷ்டாங்கமாகச் சேவித்துக்கொண்டு என்தாயே ! சர்வலோகசரணியனாகிய நம்முடைய பிராணநாயகர்சொல்லிய சிலகுறிகளும் [illegible]யாளச்சொற்களு மிருக்கின்றதுகள். அதுகளையுஞ் சொல்லுகிறேன் கேளுமம்மா ! லோகமாதாவே என்றுசொல்லுகின்றார்.

கவி.

[illegible]லிறிதாகுநெறிநாள்கள்சிலதீர்ப்பக்.............*
க[illegible]தமணிசெய்திவணிருத்திடு[illegible]வச்சொற்............*
கு[illegible]லோடுமுயிருக்கவுட[illegible]ம்..................*
எ[illegible]தமுனிவோடுமயனின்[illegible]விசைப்பாய்........(௧)
[illegible]முடிவேந்தனொருமொக்கிதிறைசெல்வம்..............*
பூண்டதனைநீங்கநெறிபோதலுறுநாள்[illegible]..................*
ஆண்டதகராரையொடுவாயிலகலாமுன்..................*
யாண்டையதுகாவெனவிசைத்ததுமிசைப்பாய்....(௨)
என்னரியதேர்தருசுமந்திரனிசைப்பாய்...........*
வள்ளன்மொழிவாசகமனத்துயர்மறந்தாள்..........*
கிள்ளையொடுபூவைகள்வளர்த்தல்களவென்னும்.......*
பிள்ளையொடுதன்றிறமுணர்த்துதிபெயர்த்தும்......(௩)
நீட்டுமுறைவேண்டுவனவில்லையெனமெய்ப்பேர்.......*
தீட்டியதுதிட்டரியசெய்கையதுசெவ்வே..............*
நீட்டினெனநேர்ந்தனனெனுநெடியகையால்..............*
காட்டினனெழாழியதுவானுதலிகண்டாள்.........(௪)
இறந்தனர்பிறந்தபயனெய்தினர்கொலென்கோ..........*
மறந்தனர்திருந்துணர்வுவந்தனர்கொலென்கோ..........*
துறந்தவுயிர்வந்திடைதொடர்ந்ததுகொலென்கோ.....*
இறந்தெரிவதென்னைகொலிநன்னுதலிசெய்கை......(௫)
இழந்தமணிபுற்றரவெதிர்ந்ததெனலானாள்..............*
பழந்தனமிழந்தனபடைத்தவரையொத்தாள்...........*
குழந்தையையுயிர்த்தமலடிக்குவமைகொண்டாள்......*
உழந்துவிழிபெற்றதொருயிர்ப்பொறையுமொத்தாள்..*
வாங்கினன்முலைக்குவையில்வைத்தனள்சிரத்தில்.......*
தாங்கினள்மலர்க்கண்மிசையொற்றினள்தடந்தோள்...*
வீங்கினள்மெலிந்தனள்குளிர்ந்தனள்வெதுப்போ.....*
டேங்கினளுயிர்த்தனளிதின்னதெனலாமோ..........(௬)
மோக்குமுலைவைத்துறமுயங்குமொளிர்நன்னீர்.........*
நீக்கிநிறைகண்ணினைததும்பநெடுநீளம்..................*
நோக்குறுவலக்கருதுமொன்றுநுவல்கில்லாள்...........*
மேக்குயிர்விம்மலள்விழுங்கலுறுகின்றாள்.........(௭)
நீண்டவிழிநேரிழைதன்மின்னிறமெல்லாம்.........*
பூண்டதொளிர்பொன்னனையபொம்மனிறமெய்யே....*
ஆண்டதைதன்மோதிரமடுத்தபொருளெல்லாம்.........*
தீண்டளவில்வேதிகைசெய்தெய்வமணிகொல்லோ..(௮)
இருந்துபசியாவிடருழந்தவர்களெய்தும்..................*
அருந்துமமுதாகியநறுந்தவளையன்மும்..................*
விருந்துமெனலாகியதுவியுமுயிர்மீளும்....................*
மருந்துமெனலாகிய தூவாழிமணியாழி...................(௯)

என்பன.—சுவாமியானவர் தேவரீரை நோக்கி வழிநடக்கிறதோ உனக்குப் பிரயாசம். சிலகாலமாத்திரம் எனக்குத்தாய்மார்களாகிய உங்கள் மாமிமார்களுக்கு உரியபணிவிடைகளைச்செய்துகொண்டு நீ இவ்விடத்திலிருவென்றுசொன்னவுடனே நீர் உடுத்தவஸ்திரத்தோடும், உயிர் பதைக்கின்ற தேகத்தோடும், மிகுந்த கோபத்தோடும், திருமாளிகையைவிட்டுப் பிரயாணசந்நாகமாய் அப்பால் வந்தீரென்றீராம். அதையும் சொல்லென்றும்.—அதுவுமல்லாமல் மகுடாதிபதியாகிய தசரதசக்கரவர்த்தியினுடைய ஆக்கினையைச் சிரசாகவகித்துத் தாம்பெற்ற பரிபூரணமாகிய சம்பத்துகளை யெல்லாம்விட்டுநீங்கி, வனத்திற்குவரும்போது பட்டணத்து மதிலையும் கோட்டைவாசலையும் தாண்டி வெளிப்படாததற்குமுன்னேதானே, காடு எங்கேயென்றுகேட்டீராம் ! அதையுஞ்சொல்லென்றும். உங்களைத் தேரின்மேலேற்றிக்கொண்டுவந்து வழிவிட்ட சுமந்திரருடனே செய்திசொல்லி அனுப்பும்போது நீர் அவரைப்பார்த்து என்தங்கைமார்களுடனே உங்கள் தமக்கையாகிய சீதையானவள் ஸ்ரீரகுநாயகர் திருவாய்மலர்ந்தருள்கின்ற வசனசாதுரியத்தால, மனதுக்கமெல்லாந் தணியப் பட்டாளென்றும், தான் வளர்த்த கிளிப்பிள்ளைக்கும். நாகணவாய்ப்பறவைக்கும், சொற்கள் கற்பித்து, அதுகள் இளைத்துப்போகாமல் ஜாக்கிரதையாகக் காப்பாற்றச் சொன்னாளென்றும் சொல்லச்சொன்னீராம் ! அதையுஞ் சொல்லென்றும். மற்றுஞ்சொல்லவேண்டியது என்னஇருக்கின்றதென்றும், சொல்லித் தமது திருநாமத்தைப் பதித்திருக்கின்றதும், எழுதப்படாத சித்திரவேலையையுடையதும், அழகும் பிரகாசமுமுள்ளதுமாகிய, ஒரு திருவாழியை எடுத்து இதை நீ ஜானகிகையிற் கொடுவென்று கொடுத்தாரென்று இரண்டுகைகளாலும் ஏந்திக்கொண்டு காண்பித்தார்.—அந்தக் கணையாழியைப் பிராட்டியார் கண்டார்.—கண்டபொழுது ஸ்திரீரத்னமா யிருக்கின்ற ஜானகியாருக்கு உண்டாகியசந்தோஷத்தை என்னசொல்லுவேன் ! மானிடராய்ப்பிறந்தும் மோக்ஷம்பெறவேண்டிய முயற்சியில்லாமல் இறந்தவர்கள் அதைத்தற்செயலாய் அடைந்தார்களென்பதாகச்சொல்லுவேனோ ! ஒருபொருளைவைத்து மறந்துபோய்க்காணாமல் துக்கித்தவர்கள் மறுபடி அந்தப்பொருளைநினைத்தெடுத்தார்களென்பதாகச்சொல்லுவேனோ ! தேகத்தைவிட்டு நீங்கிப்போன உயிரானதுமீளவும் அந்தத்தேகத்தில்தானே வந்துபிரவேசித்ததென்பதாகச்சொல்லுவேனோ ! இந்தப் பிராட்டியாருடைய செய்கையைஅறிவதெப்படி ! நாகமானது

கால அதிசயங்களையும் அறியத்தக்க திவ்வியஞானியாகிய ஆஞ்சனேயர் மகத்தாகிய அன்புடனே இரண்டுகால்களையுஞ் சேரவைத்துக்கைகட்டி வாய்புதைத்துக் கொண்டுநின்று நைச்சியமாக விண்ணப்பஞ்செய்தார். அதுகளைக்கேட்டுச் சீதாபிராட்டியார் சாத்விகபிரமமாகிய ஸ்ரீராமர்படும் உபத்திரவங்களையெல்லாம் நினைத்து நினைத்து ள்ளும்பும் உருகிக்கரைய இரங்கி! வந்தித் துக்கமும்சந்தோஷமும் மாறிமாறித் தோன்றுகின்ற உள்ளத்தையுடையவராய்க் கண்ணீர் தாரைதாரையாகப்பெருகப் பூரண கிருபையுடனேபார்த்து அப்பாகுழந்தாய் அநுமானே! நீவந்தமார்க்கத்தின் மத்தியிலே சமுத்திரமிருக்கின்றதே அதை எப்படிகடந்துவந்தாய் சொல்லென்று கேட்டருள, தாயே! தேவரீருக்கு நாயகராகிய ஸ்ரீராமச்சந்திரருடைய பொன்னடியைத் தியானிக்கின்றவர்கள் ஒழியாதமூலப்பிரகிருதியாகிய பெரியமாயாசமுத்திரத்தைக்கடந்து பரமபதக்ஷேத்திரத்தைச் சேர்கின்றதுபோல தாசனாகிய நானும் அவர்திருவடியை ஸ்மரணை செய்துகொண்டுவந்தகாலினாலேதான் இந்தக்கடலைக்கடந்துவந்து உம்முடைய சரணாரவிந்தத்தை அடைந்தேனென்று அநுமானானவர்சொன்னார். அதுகேட்டுச்சீதாபிராட்டியார் ஆச்சரியப்பட்டுக்கேட்பாள் இவ்வளவுசொற்பமாகிய சரீரத்தையுடைய நீ அவ்வளவு பெரிதாகிய சாகரத்தைக்கடந்து வந்தது தபோபலத்தினாலேயோ! அல்லது அணிமா! மகிமா! கரிமா! லகிமா! பிராப்தி பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவமென்கின்ற அஷ்டமாசித்திகளாலேயோ! சொல்லக்கடவாயென்று புன்சிரிப்புடனேகேட்க, ஜெகதீஸ்வரியே! என்னுடையசொற்பமாகிய உருவத்தைப் பார்த்தருளுமென்று இரண்டு கைகளையுங்குவித்து அஞ்சலிபண்ணி நின்றபடியே அண்டமுகட்டை முட்டுகின்றசிரசும், திசைகளெல்லாம் நிறைந்த தோள்களும், பஞ்சமகா பூதங்களுஞ்சேர்ந்து ஒருவடிவெடுத்ததுபோலச்சரீரகாத்திரமுமாய் மகாமேருவில் வளர்ந்தோங்கியவிருக்ஷசாலங்கள்தோறும்மொய்த்துக்கொண்டிருக்கின்ற மின்மினிக்கூட்டங்கள்போல தமதுதிருமேனியின் ரோமங்கள்தோறும் நக்ஷத்திரங்கள் தொத்திக்கொண்டிருக்கவும், கண்ணுக்கும், அறிவுக்கும் எட்டப்படாத காட்சியுடனே சந்திரமண்டலஞ்சூரியமண்டலங்களுக்குப் பிரதியாய் இரண்டுகாதிலும்மகாகுண்டலங்கள் பிரகாசிக்கவும், அதியுன்னதமாக வளர்ந்தார். அதற்குமுன் இதுமிகவும் அற்பமாகிய ஒருகுரங்கென்று அலக்ஷியமாகநினைத்த பிராட்டியாரும் அப்படி விஸ்வரூபங்கொண்ட அந்த ஆஞ்சநேயரை உற்றுப்பார்த்து இந்த அநுமானுடைய உயர்வுக்குத் தனது திருவிக்கிரமசொரூபத்தின் உயர்வும் ஒருலக்ஷியமாகத் தக்கதல்லவென்றுஉலகந்தனையெல்லாம் அளந்த மகாவிஷ்ணுவும் வெட்கப்படுவாரென்று எண்ணினார். அப்பொழுது அஷ்டதிக்குகளிலும் எல்லா உலகங்களிலும் உள்ளசகல ஆத்மாக்களும் ஆஞ்சநேயரது திருமேனியைப்பார்த்தார்கள். அவரும் தம்முடைய நேத்திரத்தினால் சொர்க்கலோகங்களில் உண்டாகிய சகலதேவர்களையும்பார்த்தார். இவ்வண்ணமாக எழுந்து உயர்ந்த பராமோத்தமனாகிய அநுமானுடைய இரண்டுபாதங்களும் அழுந்துவதால் நிலம்புதைந்து லங்கைக்குள்ளே சமுத்திரஜலமெல்லாம்வந்துவிழுந்தது. அலைவீசத்தலைப்பட்டதனால் கடலிலிருந்த மீன்களெல்லாம் அந்தலங்கா பட்டணத்திலே நெளிந்துபுரண்டதுகள், மறுவில்லாத கற்புடைய ஸ்திரீரத்னமாகிய ஜானகியார் அக்குமாருதியினுடைய காம சைப்புஷ்பத்திற்கு ஒப்பாகியபாதத்தின் உயரத்தையுங் காணாதவராய் அதிசயித்து இனி ராக்ஷதவர்க்கம் நிர்மூலமாய்ப் போய்விடுமென்று திருவுள்ளத்திற் குதித்துக் கொண்டு அநுமானைநோக்கி அப்பா! என்கண்மணியாகிய ஆஞ்சநேயனே! எனக்குப்பார்க்கப்பயமாயிருக்கிறது உலகத்திலும் உன்னுடைய விஸ்வரூபத்தைமுழுதும் பார்க்கத்தக்கவர்கள் யாருமில்லை. ஆகையாலிதைச் சுருக்கிக்கொண்டு முன்பு உனக்குள்ளவடிவமே கொண்டிருவென்றுசொல்லி ரகுநாயகருடைய திருத்தோள்களைத் தழுவியதுபோல ஆனந்தபரவசப்பட்டார். அப்படிப் பிராட்டியார் கேவித்தமாத்திரத்தில் என்தாயே! புத்திபுத்தியென்றுசொல்லி அண்டத்திற்குமேலும் உயர்ந்த அநுமானானவர் அந்த விஸ்வரூபத்தையடக்கிக் கண்ணுக்கு அடக்கத்தக்க முன்னைய உருவத்துடனே எதிரேநின்று நமஸ்காரஞ்செய்தார். அவரைப்பார்த்தருளிப் பின்னும்பிராட்டியார் சொல்லுகின்றார்.

கவி.

இடந்தாயுலகை மலையோடு மெடுத்தாய்விசும்பை யிவைசுமக்கும், படந்தாமரவை யொருகரத்தாற் பறித்தாயெனினும் பயனின்றால், நடந்தாயிடையே யென்றுனது நாமநவிலுங் கடலைக், கடந்தாயென்றா லென்னுரைக்கு சான்றோர்மன்ன கரிமையாய்.......................(க)

ஆழியெதிர்கை யாண்டகைதன் னருளும்புகழு மழிவின்றி, ஊழிபலவு நிலைநிறுத்தற் கொருத்தனியே யுளையானாய், பாழிநெடுந்தோள் வீரநின் பெருமைக்கேற்பப் பகையிலங்கை, ஏழுகடற்கு மப்புறத்த தாகாதிருந்த திழிவன்றோ.......................(உ)

அறிவுமிதே புகழுமிதே யாற்றலிதேயருங்குலத்தின், செறிவுமிதே செயலிதே தேற்றமிதே தேற்றத்தின், நெறியுமிதே நினைவிதே நீதியிதே நினக்கென்றால், வெறியரன்றே குணங்களால் விரிஞ்சன்முதலாமேலானோர்.....(௩)

பின்னேயொழிற்று வல்லரக்கர் வீக்கநோக்கி வீரற்குப், பின்னேபிறந்தா னெல்லதோர் துணையிலாத பிழைநோக்கி, உன்னுகின்றே னுடைகின்றே னுழுங்கேனைய மூவிருவிர்த்தேன், என்னோதிருவோனுவர நிவனேயெய்கோன் அனையென்றால்.......................(௪)

மாண்டேனெனினும் பழுதன்றே யின்றேமாயச் சிறைநின்று, மீண்டேனென்னை யொறுத்தாரைக் குலங்களோடும் வேரறுத்தேன், பூண்டேனெங்கோன் பொலன்கழலும் புகழேயன்றிப் புன்பழியும், நீண்டேனென்று மனமகிழ்ந்நாடிருவின்முகத்துத் திருவன்னாள்.......(௫)

என்பன.—பிரசண்ட மாருதத்திற்கு ஒப்பான வேகத்தையுடைய அதிவீரனாகிய அநுமானே! உன்சாமர்த்தியத்தைப்பார்த்தால் நீ இந்தப் பூமியைப்பேர்த்தாலும் சப்தகுலபர்வதங்களுடனே ஆகாசத்தை எடுத்தாலும். இதுகளைச்சுமந்துகொண்டிருக்கின்ற ஆதிசேஷனை ஒருகையினாற்பறித்தாலும்ஒருபிரயோசனமுமில்லை. அல்லாமலும் கடலின்மத்தியிலே நடந்தாயானாலும் அது வுனக்கு நாணுதலாகவே யிருக்கும். அப்படியிருக்கநீ இந்தக்கடலைக் கடந்தா யென்று சொல்லுகின்றது சிறுமையேயல்லாமல் எவ்வளவுபெருமையாகும்? சக்கரத்தைக் கையிலேதாங்கிய அந்தப்பரமபுருஷருடையகிருபையையுங்கீர்த்தியையும் அழிவில்லாமல்பல்லூழிகாலம் நிலைநிற்கும்படிச்செய்கிறதற்கு நீஒருவனே யுண்டாயிருக்கின்றாயாகையால் உன்பெருமைக்குத் தக்கபடி இந்தப் பகையாளியினுடைய லங்கையானது எழுசமுத்திரத்திற்கும்அப்புறத்திலிராமல் இவ்வளவுசமீபத்தி லிருக்கின்றது இழிவல்லவோ! உனக்கு அறிவும் சொரூபமும் பராக்கிரமமும்ஐம்புலன்களை அடக்குந்தன்மையுஞ்செய்யுங் காரியமும் தெளிவும் தெளிந்தஒழுக்கமும் நினைவும்நீதியுமாகிய இதுகளெல்லாம் ஒன்றுக்கொன்று குறைவில்லாமலிருக்கின்றதுகள் ஆதலால், இனிப் பிரமா முதலாகிய மேலானவர்களெல்லாம் இப்படிப்பட்டகுணங்களில் ஒன்றுமில்லாதவர்களென்றல்லவோசொல்லப்படுவார்களென்றும் மின்னலுக்கு ஒப்பாகிய கோரப் பற்களையும் பலத்தையுமுடைய ராக்ஷதக்கூட்டம் மிகுதியாயிருக்கின்றதைப்பார்த்தும், என்பிராண நாயகருக்குத் தம்பியாகிய லக்ஷ்மணர் ஒருவரேயல்லாமல் வேறு துணையில்லாதபிழையைப்பார்த்தும் என்னவியென்னவி மனம்தளர்ந்தநான், இந்தமகாபுருஷன் என் நாயகருக்கு உபபலமாயிருக்கின்றதனால் பயமென்ன! ராக்ஷதர்கள் என்னத்திற்காவார்களென்று தைரியங்கொண்டு இப்பொழுது தான் அந்தச்சந்தேகமொழிந்து உயிர்பெற்றேனென்றும் இனிநான் மாண்டாலும்பழுதில்லை. இன்றே இந்த மாயச்சிறையில் நின்றும்நீங்கினேன் எனக்கு இப்படிப் பட்ட துக்கத்தைக்கொடுத்த சத்துருக்களுடைய குலத்தையும் வேரறுத்தேன். என்பிராணநாதருடைய திருவடியையுஞ்சேவித்தேன். இனிஎனக்குக் கீர்த்தியேயல்லாமல்பழியுண்டாகா தென்றுஞ் சொல்லி, ஸ்ரீமகாலக்ஷ்மியின்திருக்கமுகத்திலே தரிக்கின்ற மாங்கல்யத்திற்குச் சமானமாகிய சீதாபிராட்டியார் சந்தோஷித்தார். அத்தருணத்திலே பிராட்டிதிருவடியைவணங்கிக் கேளுமம்மா அருந்ததிக்குஒப்பாகிய கற்புக்கரசே! அடியேன் ஒருஅதிசயமானவனு! நானெவ்வளவு! ஸ்ரீராமருக்கு இந்தக் கடலிலே கிடக்கின்றமணலைப்போல அநேக வானரசேனைவீரர்களிருக்கின்றார்கள்சுவாமியின் திருவடித்தொண்டுசெய்கின்றபடைத்தலைவர்கள் எண்ணிறந்தவர்களிருக்கின்றார்கள். அப்படைத்தலைவர்களுக்குள்ளேநான் ஒருபடைத்தலைவனுய்வந்தேன். அழைத்தகுரலுக்கு ஏவென்பேன் ஏவியபணிவிடைகளைச் செய்வேன். முன்சொன்ன வானரசைனியமோஒருவிதத்திலளவுபடுவதல்லவாகும் அதுகளுக்குள்ளே ஒவ்வொரு குரங்கு ஒவ்வொரு கை அள்ளிக் குடிக்கிறதற்குத்தான் இந்தச் சமுத்திர ஜலம் போதுமா? கள்ளச்செய்கையை யுடைய ராக்ஷதர்களின்லங்கையை அவர்கள் காணாத படியினாலே இது இதுவரைக்கும் அழியாமலிருக்கின்றது. இப்பொழுது அறிந்தபடியால் இனி நிற்குமா! நிற்கமாட்டாது. வாலியினுடைய தம்பி சுக்கிரீபமஹாராஜனும், அவன்புத்திரனாகிய அங்கதகுமாரனும், மயிந்தன், துமிந்தன், குமுதன், நீலன், ரிஷபன், குமுதாக்ஷன், பனசன், சரபன், ஜாம்பன், துர்மருஷணன், காம்பன், கவையன், கவையாக்ஷன், சங்கன், வினதன், துயிந்தன், நளன், ஸ்தம்பன், தூமன் ததிமுகன், சதவலியென்றுசொல்லப்பட்ட வானரப்படைத்தலைவர்களும், இந்தவுலகத்துடனே எவ்வகைப்பட்ட உலகங்களையும் எடுக்கத்தக்க மகாபலவந்தர்களாயிருக்கின்றவர்கள், மேலும் ஸ்ரீராம பாணத்தைப்போல உதவிசெய்கின்றவர்கள். அந்தவானரவீரர்களையெல்லாம்பார்த்தால், இந்தராக்ஷதக்கூட்டம் அவர்கள் தொகைக்கு உறையிடுகிறதற்கும் போதாது. அப்படி எண்ணத்தொலையாத வானரசேனையிருக்கின்றதம்மாவென்று இப்படி விசிதமாக ஆஞ்சநேயர்சொன்னார்.

உருக்காட்டுபடலம்-முற்றிற்று.

---

## சூடாமணிப் படலம்.

மறுபடியும் அந்த அநுமானானவர் ஸ்ரீமகாலக்ஷ்மிக்குச்சமானமாகிய இந்தப்பிராட்டியார் வெகுவாகத் துன்பப்படுகின்றார் இவருக்குத் துணையுமில்லை. சகலாண்டங்களுக்கும் தனிநாயகமாகிய எங்கள் ராமபிரானுடைய உயிருக்கு ஒப்பாயிருக்கின்ற இவரை நான்பார்த்தும் இங்கே தனியேவிட்டுப் போகிறது நன்மையல்ல. சுவாமியினிடத்திற்குக் கொண்டுபோகிறதே யுக்தமென்று தமக்குள்ளேயோசித்து லோகோத்தமியாகிய ஜானகியாரைநோக்கி, அம்மா! நாயேன் ஒருவிண்ணப்பஞ்செய்துகொள்ளுகிறேன் அதைத் தேவரீர் கோபமில்லாமல் கேட்டருளவேண்டும். இந்தராக்ஷதன் உம்மைக் கொன்றுவிடுவானேயானால் அப்புறம் இவனைக் கொல்லுகிறது காரியமல்ல. இவ்வளவு பிராணனுடனே வைத்திருக்கின்ற இந்தச்சமயத்தில்தானே உம்மைக் கொண்டுபோய்ச்சுவாமிசந்நிதியிலேகாட்டி, அவர்திருவடிக்குத் தெண்டன்சமர்ப்பிக்கலாமென்று என்மனதிலே தோன்றுகின்றது. ஆகையால் அதிகமிருதுவாகிய ரோமங்கள்நெருங்கி அம்சதூளிகாமஞ்சம்போ லிருக்கின்ற அடியேனுடைய தோளின்மேல் எழுந்தருள்வீராகில், தேவரீரை ஏந்திக்கொண்டு மத்தியிலெங்குந்தங்காமல் ஒரு இமைப்பொழுதுக்குள்ளே ஸ்ரீராகவர் எழுந்தருளி யிருக்கின்ற மலையின்மேல் தாவிக்குதிக்கின்றேன் அதையறிந்து ராக்ஷதர்கள் இடையிலேவந்து தடுத்தாலும் அவர்களெல்லாம் மாழிந்து அதமாய்ப்போம்படி எதிர்த்து யுத்தஞ்செய்து சங்கரித்து என்கோபத்தை முடித்துக்கொள்ளுகிறேன் நான் ஒருநாளும் ஒருவர்கையிலுஞ் சாகாதவன் கேளுமம்மாதாயே! நாயேன் இவ்விடத்திற்குவந்து நீரிருக்கின்றஇருப்பைக்கண்டும் சுவாமியினிடத்தில் வெறுங்கையுடனேபோகமாட்டேன். லங்கையுடனே உம்மைக் கொ

ண்டுபோகவேண்டுமென்று நீர் சொன்னாலும் அப்படி
யே அடியோடே பறித்தெடுத்து, என்னுடைய உள்ளங்
கையில் வைத்துக்கொண்டு எதிரேவந்து தடுத்தவர்களை
க்கொன்று குவித்துவிட்டுப்போய் ஸ்ரீராமசந்திரனுக்கு
ப்பாதகாணிக்கையாக வைக்கின்றேன். இதுஎனக்குஒரு
பொருளல்ல நீரோ சொல்லும் சுந்தரத்திருத்தோளனாகி
ய எம்பெருமான் பக்கலிற்போய் என்தாயும் உம்முடை
யதேவியுமாகிய தேவாமிர்தத்தை ஒத்த சீதையானவள்
சதிகாரராகிய ராக்ஷதர்களுடைய பட்டணத்தில் சிறை
வைக்கப்பட்டு மிருந்ததுயரத்துடனே அந்த அருஞ் சி
றைநீங்காதிருக்கின்றாளென்று சொல்வேனேயாகில் அ
ப்பால் என்னடிமைத்திறம் என்னாகும். பிரபலமாகிய யு
த்தஞ்செய்து என்தோளிலே புண்படாமற்போய்ச்சுவா
மிசந்நிதியில் சத்துருக்களுடைய பராக்கிரமத்தையேவி
ஸ்தரித்துச்சொல்வேனா! அல்லதுபிராட்டியைக்கொண்
டுவரவில்லைஎன்பிராணனுக்குமாத்திரம் அபாயமில்லாம
ல்வந்தேனென்பேனா! அல்லதுஜானகியைநான்காணவே
யில்லையென்பேனா! அப்படிவேண்டியதில்லைஒருக்ஷணப்
பொழுதில்ராக்ஷதக்காவலையுடையஇந்தலங்கையைமுழு
மையும்எரித்துநீருக்கிராக்ஷதகுலத்தையெல்லாங்கொன்
றுசீருவறுத்துஜெயம்பெற்றுக்கொண்டுசீக்கிரத்திலேபோ
வென்றுநீர் ஆக்கியாபித்தாலும் அந்தப்படிசெய்கின்றே
ன்அல்லவென்றுஉம்மைநான்கொண்டுபோய்ரகுநாயகரி
டத்திற்சேர்த்தேனேயாகில், அவருடைய சித்தசாஞ்சல்
யம்நீங்கித்தெளிவுண்டாய்,தேவரீருடன்அவரிவ்விடத்தி
ற்குவந்து அளவற்றராக்ஷதவம்சங்களைநாசமாகச்சங்கார
ஞ்செய்து பின்புஉலகத்திற்குச்சம்பவித்திருக்கின்றதுன்
பத்தைநிவாரணஞ்செய்கிறதுநன்மையாகக்காண்கின்றது
ஆகையால் இனிவேறேசொல்லுந்தக்கதில்லை. நானிந்தப்
பேறுபெறும்படிக் கிருபைசெய்து கிலேசப்படாமல் அ
டியேனுடைய தோளின்மேல் ஆரோகணித்தருளுமெ
ன்று சொல்லித் திருவடியில் சாஷ்டாங்கமாக விழுந்து
சேவித்தார். இவ்வாறுகத்தகுதியான நல்வசனங்களை அ
ன்புடனே வசனித்து தாய்ப் பசுவைக்கண்ட இளங்கன்
றைப்போலக்களிக்கின்ற அநுமானைப் பார்த்து இவனா
லே ஆகாதகாரியம் ஒன்றுமில்லை. தான்சொன்னபடியே
செய்யத்தக்கவனென்று திருவுளத்திலெண்ணிப் பிராட்
டியார்சொல்லுகின்றார். கேளப்பா ஆஞ்சனேயனே நீயு
ன்னுடைய சாமர்த்தியத்திற்குத்தக்க யோசனையேசெய்
தாய் அது உனக்கு அரியதல்ல. அப்படிச் செய்யவேசெ
ய்வாய் அதற்குச்சந்தேகமேயில்லை. ஆயினும் இது உரி
யசெய்கையல்லவென்று மிகுந்த பேதைமையான என்
பெண்புத்திக்குத்தக்கதாக ஒருயோசனை எனக்குத் தோ
ன்றுகின்றது. அது என்னவென்றால், நீ என்னையெடுத்து
க்கொண்டுபோகிறபோது சமுத்திரத்தின்நடுவிலே இந்
தக்கொடியராக்ஷதர்கள்வந்து சுற்றிக் கொண்டு, வில்வ
ளைத்துப் பாணப்பிரயோகஞ்செய்துபோராடினால் அத்
தருணத்தில் என்னையே பாதுகாப்பையா! அவர்களுட
ன்யுத்தமேசெய்வையா! ஒருவருந்துணையில்லாமல் த
னிமையாயிருக்கின்ற நீ மிகவும் பிரமிக்கும்படிவருமே

அதுவுமல்லாமல் வேறொன்றிருக்கின்றது. ஸ்ரீராகவரு
டைய விஜயகோதண்டத்தின் பிரதாபத்திற்கும் மாசுண்
டாகும். ஆதலால் அதனால்வருகின்ற நன்மையென்ன!
அவர்கள்தான் நாய்போல வஞ்சித்து ஒருவருமறியாமல்
என்னைக்கொண்டுவந்துவிட்டார்கள். நீங்களும் அப்படி
நினைக்கலாமா! யுத்தத்திலே சுவாமியின் வில்வீரத்தை
த் தேவர்களெல்லாம் காண எள்வடிவத்தைக்கண்ட பா
வியாகிய ராவணனுடையகண்களைக் காகங்கள் கொத்திக்
கொத்தித் தின்னும்படி, என்கண்ணினாலே கண்டபோத
ல்லாமல் நானுயிருள்ளவளாவேனா! நாணமில்லாத ரா
க்ஷதிகளுடைய தாலிகளெல்லாம் சூர்ப்பநகியின்மூக்கறு
பட்டதுபோல அறுபட்டபோதல்லது எனக்குரியநாண
மும் பெருமையையுடையதாகுமா! லங்கை யென்கின்
ற பொன்மலையானது பகைவர்களுடைய அஸ்திமலையா
காமற்போனால், என்னுடைய குடிப்பிறப்பையும் ஒழுக்
கத்தையும் கற்பையும் நான்பிறருக்கு எப்படிநிலைக்காட்
டுவேன்! அல்லாமலும் இந்த ஒருலங்கையைமாத்திரம
ல்ல அளவிறந்த அண்டங்களை யெல்லாம் என்னுடைய
வாய்ச்சொல் ஒன்றினாலேயே பஸ்மமாய்ப் போம்படி எ
ரிப்பேன். அவ்வண்ணமாகச் செய்வது ரகுநாயகருடை
ய வில்லாண்மைக்குப் பழுதென்று பொறுத்துக்கொண்
டிருக்கின்றேன். அப்பா என்புத்திரனாகிய ஆஞ்சனேய
னே! இன்னமொருவார்த்தையுண்டு அதுவுங்கேள்! வீ
ர சிகாமணியாகிய ஸ்ரீராமபத்திரர் ஒருவர்மாத்திரம் த
மது திருக்கரத்தால் தீண்டலாமேயல்லாமல், நீ பஞ்சே
ந்திரியநிக்கிரகஞ்செய்திருந்தும் ஆண்வடிவங்கொண் டி
ருக்கின்றதனால் என்னைத்தொடக்கூடுமா! புத்தியீனனா
கிய ராவணன் என்னைத்தீண்டுவானே யானால் இத்தனை
நாள் உயிரோடுங்கூடிவாழ்வானா! அவன் இவளைத்தீண்
டினால் ஒரு நொடிப்பொழுதிற்குமுன் நாம் மாண்டுபோ
ய்விடுவோமென்றல்லவா பூமியோடும்பேர்த்து எடுத்து
க்கொண்டுவந்தான். இதுவுமல்லாமல் ஜெகத் ரக்ஷகனு
டைய திருவுந்திக்கமலத்தில் உற்பவித்த பிரமதேவன் பூ
ர்வகாலத்தில் இந்தமகாபாதகனைக்குறித்து, நீ உன்னிட
த்தில் மனோரம்மியப்படாத ஸ்திரீகளைத் தொட்டால் உ
ன்சிரசு சகஸ்திரபத்தலாக வெடிக்கக்கடவதென்றுசாப
மிட்டிருக்கின்றான். அதுவல்லவோ நானிறந்து போகாம
லிருக்கும்படி என்பிராணனைக்காத்தது. அவன் என்னை
யெடுத்து வந்ததைக் குறித்து நான் துக்கப் படுகிற ச
மயத்தில் அவ்விதமாகிய பிரமசாபம் அவனுக்கு உ
ண்டென்று, சத்தியசந்தனாகிய விபீஷணனென்பவன் புத்
திரி திரிசடை யென்பவள் என்னிடத்தில் அன்பினா
ல் எனக்கு ரகசியமாகச் சொல்லி, அம்மா! நீ யா
தொன்றுக்கும் அஞ்சாதேயென்று எனக்குத்தயிரியத்தை
யுண்டாக்கி விசனத்தை நீக்கினாள். ராவணன் அப்படிச்
சாபசம்பந்தனா யிருக்கின்றவனாகையால் அதிக்கிரமிப்
பானேயானால் மரணமடைவானென்றும் தர்மந்தவறமா
ட்டானென்றும் என் நாயகருடைய புஜபராக்கிரமசக்தி
யைத்திடமாகஎண்ணியும் இதுக எல்லாமதனும் என்கற்
பின்பரிசுத்தத்தைக் காட்டவுமே இவ்வளவுகால வரைக்



கும் ரகுகுலோத்தமனைப்பிரிந்து தனியேயிருந்தும் இந்
தச்சரீரத்தைவைத்துக்கொண்டிருக்கின்றேன். மேலும்,
இருந்தவிடத்தைவிட்டு நான் அப்புறம்பெயரவேயில்லை
அதற்குத்திருஷ்டாந்தம் என்னவென்றால் முன்னாளில்
எனக்கு இருப்பிடமாக இளையபெருமாளால் சமைக்கப்
பட்ட பர்ணசாலை வஞ்சகனாகிய ராவணனால் தண்டகார
ணியத்திலிருந்து நிலத்துடனே பேர்த்தெடுத்துக் கொ
ண்டுவந்து இவ்விடத்தில் வைக்கப்பட்டிருக்கின்றது. இ
னி உன்னுடைய கருணைசுரந்த கண்களினால் செவ்வை
யாகப்பார். இந்தஜலம் நிறைந்த தாமரைப்பொய்கையா
னது கோதண்டதீக்ஷாகுருவாய் விளங்காநின்ற சுவாமி
யினுடைய மரகதத் திருமேனியைப்போலிருக்கின்றதா
கையால் இவ்விடத்திற்கு சோர்ந்துபோகின்ற என்பிரா
ணனை ரக்ஷித்துக்கொள்கின்ற நிமித்தமாகவருவேன். இ
துதவிர இருப்பிடத்தை ஒருபொழுதும் நீங்குகிறதேயி
ல்லை. ஆகையினாலே நீ யென்னைக்கொண்டுபோகிறதுகா
ரியமல்ல, ஐயா! வேதநாயகனாகிய ஸ்ரீராமசந்திரனிட
த்திற்கு நீ திரும்பிப்போய்ச் சேர்வதே காரியமென்று
லோகமாதாவான பிராட்டியார்சொல்ல, அந்தமகாதுல்
லியராகிய ஆஞ்சநேயர் இந்த ஜெகத் காரணனாகிய ஸ்ரீ
ராகவனுடைய தேவியார்கொண்டவிரதம்நன்றாயிருக்கி
ன்றதென்று நினைத்துச் சந்தேகமும் வருத்தமும் நீங்கி
னவராய் மனமகிழ்ச்சிகூர்ந்து ஆனந்தபரவசமாய் ஸ்து
திசெய்துஎன்தாயேதேவரீர்திருவுள்ளம்அப்படியானால்
ராவணனால்இந்தஉலகம்அந்தகாரப்பட்டிருக்கின்றதேஅ
துநிவாரணமாகும்இனிச்சிலநாள்மாத்திரம்நீர்வியாகுல
ப் படாமல் இவ்விடத்திலேதானேயெழுந்தருளியிரும்.

அவ்விடத்தில் பிரமைகொண் டிருக்கின்ற சுவாமிக்
கு அடியேன்போய்ச் சொல்லத்தக்க வார்த்தைகளென்
ன! அதையும் அருளிச்செய்யுமென்று, சாஷ்டாங்கமா
கச்சேவித்தார். அத்தருணத்தில் பிராட்டியார்சொல்லு
கின்றார். நீதிமானாகிய அநுமானே! தமியேனாகியநான்
உன்னைப்பார்த்ததனால் இன்னம் ஒருமாதபரியந்தம் உயி
ரோடிருப்பேன். அதற்குமேல் அந்தராமசந்திரருடை
ய திருவடிசாக்ஷியாகப் பிராணனைவைத்துக்கொண்டிரு
க்கிறதில்லை. இதை நீ உறுதியாக மனதிலேகொள். ஆர
ங்கள் பிரகாசிக்கின்ற திருமார்பையுடைய ரகுகுலோத்
தமருக்கு நான்பத்தினியல்லவென்றிருந்தாலு மிருக்கட்
டும், அவருடைய இதயத்தில்இரக்கமும், அன்புமில்லா
மற்போனாலும்போகட்டும், தமது வீரத்திற்கு மாத்திர
ம் பின்னமில்லாமலிருக்கும்படிக் காத்துக்கொள்ள நீ ய
வரைவேண்டிக்கொள். யாவரும் ஸ்துதிசெய்யத்தக்க ப
ராக்கிரமசாலியாகிய இளையபெருமாளுக்கு உம்முடை
ய தமயனார் ஆக்கினைப்படி என்னை நீர் காத்திருந்தவ ரா
கையால்மந்திரியிலே எனக்குச்சம்பவித்தஇந்தக்கொடிய
சிறையை மீட்கின்றகடன் உம்முடையதுதானென்று நா
ன்சொன்னதாக ஒருவார்த்தைசொல்லு. மேலும் நான்
கொண்டவிரதம் ஒருமாதத்தில் முடிந்துபோம், அதற்
குள்ளே சுவாமியானவர் இங்கே எழுந்தருளாவிட்டால்
அவர்கையினாலே கங்கையில் எனக்குச் செய்யவேண்டி

யகடனைச் செய்துவிடச்சொல்லு. சிரேஷ்டமாகிய எங்
கள்மாமிமார் மூவருக்கும் உங்கள்மருமகளாகிய சீதை
யானவள் அவ்விடத்திலேதானே இறந்துபோகின்றாள்.
உங்களுக்கு நமஸ்காரஞ்செய்தாளென்று இந்தச்சொல
லை ஒருவேளை தர்மஸ்வரூபியாகிய என்நாயகர் என்னிட
த்தில் கிருபையில்லாமல் சொல்லுகிறதற்குமறந்துபோ
னாலும் நீ மறவாமற் சொல்லு. கல்யாணகுணராமரா
னவர் என்னைவந்து பாணிக் கிரகணம்செய்த அன்றை
த்தினம் இந்தஜென்மத்தில் நான் உன்னைவிட்டு மற்றொ
ரு ஸ்திரீயைத்தொடும்படி மனதினாலும் நினைக்கிறதேயி
ல்லையென்றுஎனக்குவரங்கொடுத்திருந்தார். அதையும்
அவர் திருச்செவியிற்கேட்கும்படிச்சொல்லு. நான் இ
வ்விடத்திலிருந்து இந்தத்துயரத்தினால் மாண்டுபோனா
லும் புநர்ஜென்மமெடுத்துவந்தாவது உம்முடைய திரு
மேனியைத் தழுவத்தக்க மகத்தாகிய ஒருவரம்வேண்டி
த்தொழுது நிற்கின்றாளென்று சொல்லு, அவர்பட்டா
பிஷேகஞ்செய்துகொண்டு நவரத்ன சிங்காசனத்தில் எ
ழுந்தருளியிருந்து ராஜரீகஞ்செய்கின்ற திருவழகையும்
சத்திரசாமரங்களுடனே பட்டத்து யானையின் மேலாக
வீதியிலபவனிவருகின்ற திருக்கோலத்தையும் கண்களி
க்கும்படித் தரிசிக்கப் பிராப்தியில்லாத நான் பலபலவா
ர்த்தைகளைச்சொல்லியும் என்னபயன் என்விதிச்செய
லிப்படியு மிருந்ததல்லவாவென்று நினைக்கின்றேன். இ
ன்னமொன்றுகேளப்பா ஆஞ்சனேயா! தம்மைப் பிரிந்
ததைக்குறித்து உலகத்தார் பிரலாபிப்பதற்காகவும்தாய்
மார்கள் படுகின்ற துக்கத்திற்காகவும், பரதாழ்வான் மு
தலாகிய தம்பிமார்கள் அடைந்த வருத்தத்திற்காகவும்,
அவ்விடத்திற்குப் போவாரோயல்லாமல் என்னைக்குறித்
து இவ்விடத்திற்கு எப்படிவரப்போகிறார். மிதிலையிலிரு
க்கின்ற எங்கள் மாதாபிதாமுதலாகிய பந்துஜனங்களுக்
கெல்லாம்என்வந்தனைசொல்லு. வானரசேனாதிபதியா
கிய சுக்கிரீபனை உன்னுடையதோழராகிய ரகுநாயகரை
க்கைவிடாமல் பாதுகாத்து அயோத்திக்கு அழைத்துக்
கொண்டுபோய்ப் பட்டாபிஷேகஞ் செய்விக்கச் சொல்
லென்று இவ்வண்ணமாகக் கண்களிலே நீர்பெருகிப்பா
யும்படித் துக்கத்துடனே சொல்லிக்கொண்டுவந்த பிரா
ட்டியாரைப்பார்த்து அம்மா! இன்னமும் தேவரீருடை
யவிசனம் நீங்கவில்லையே யென்று ஆஞ்சனேய ரான
வர் பின்னும் பலபல ஏதுக்களை யுடைய இனிமை யு
ண்டாகிய நல்லவசனங்களைத் தெளியும்படிச் சொல்ல
த்தொடங்கினார். என்தாயே! தேவரீரும் இவ்விடத்தில்
இறந்துபோவீர். அப்பால் மெய்தளர்ந்திருக்கின்ற ஸ்ரீ
ராமசந்திரரும் இறவாமல் பிராணனுடன் அயோத்திக்
குப்போய் மகுடாபிஷேகம் பண்ணிக்கொள்வார். கற்பு
க்கு உற்பத்தி ஸ்தானமாகிய உம்மைச்சிறைவைத்த பா
வியும் ஜீவனுடனிருப்பான். வில்வீரர்களாகிய ஸ்ரீராமல
க்ஷ்மணர்களும் தங்கள் புஜபராக்கிரமம் பொய்த்துப்
போவார்கள். இதுமிகவும் ஆச்சரியமாயிருக்கின்றது இ
தற்குச்சமானமுமாவதேது! உம்முடையவிஷயத்தில் அப
சாரப்பட்டபாபாத்மாக்களைக்கொல்லாமல் நானும் என்

னுடனேகூடவந்த எல்லாவானரவீரர்களும் பிராணனுடனே மதங்காசிரமத்திற்குப்போகவும் அப்பால்அங்கெழுந்தருளியிருக்கின்றசுவாமியும்தமக்கு உயிர்த்துணையாகிய உம்மைவிட்டு அவ்விடத்தை நீங்கிக்கையிலேபிடித்த வில்லுடனே நகரத்தைநாடிப்போகவும்வேண்டாமா! அதிருக்கட்டும் துக்கசாகரத்தில்மூழ்கி அவதிப்பட்டுக்கொண்டிருந்த எங்களுக்குப்பரிபூரணமாகியசம்பத்தைக்கொடுத்த அந்த ஸ்ரீராகவருக்கு தேவரீரை மீட்டுக்கொண்டுபோய்க் கொடாமற்போனால் எங்களைப்பார்க்கிலும் யோக்யராவார்ஆரிருக்கின்றார்கள்சன்மார்க்கத்தையுடைய ரிஷியீஸ்வரர்களையெல்லாம் கொன்றுதின்ற மகாபாதகர்களாகிய ராக்ஷதர்களுடைய குடல்களை ரணகளத்தில் பேய்கள்தின்னும்படிச் சங்கரித்தாலல்லாமல் ராஜ்யத்திற்குப்போகிறதில்லையென்றுவாக்குப்பிரதானம்பண்ணியிருக்கின்ற மகாநுபாவருக்கு இந்தவார்த்தையென்ன ஒவ்வாதா! பலவீனர்களாகிய சத்துருக்களால்சிறைவைக்கப்பட்ட தேவரீரை நாங்கள்மீட்டுக் கொள்ளாமற்போவோமேயானால் உலகத்தில் சகல சாஸ்திரங்களையும்தேர்ந்த பண்டிதர்களேயல்லாமல் பாமரர்கள்தானுவது இந்தவார்த்தையைச்செவிகொடுத்துக்கேட்பார்களா கற்புடையவளும் சத்தியந்தவறுதவளுமாகிய மனையாளானவள் வஞ்சகர்களாகியராக்ஷதர்களால் தீண்டப்படாததற்குமுன்னே மாண்டுபோய்விட்டாளென்றுகொண்டபுருஷன் தனக்குத்தானே மனதிலே. சித்தப்படுத்திக்கொண்டு அவளைவந்து பாராமல் திரும்பிப்போய் விடுவானானால் அப்புறம் அவனுடையவீரம் நன்றாய்ப்பிரசித்திப்படமாட்டாதா! லோகோத்தமியாகியநீர் துக்கத்தினால்உம்முடையபிராணனைமாய்த்துக்கொள்வீரோயாகில் அதற்காகஎங்கள் ஐயனாகிய ரகுநாயகர் ராக்ஷதவமிசத்துடனே சகலாண்டசராசரங்களையும்சுட்டு நீறாக்கினாலும் அந்த அபவாதம் தீராதல்லவா! நம்முடைய கோதண்டராமரை எதீஸ்வரர் முதலானவர்களும் லோககர்த்தாவாகியநீரோஇப்படிச்செய்வதுசற்காரியமல்லவென்று சொன்னாலும் தேவரீர்பிராணனைவிட்டபின் அவர்சத்தியத்தைப்பார்ப்பாரா திரிலோகங்களையும் முன்னேமாய்ந்துபோம்படிசெய்யாரா! சுவாமிக்குப்பிறக்கும் உக்கிரகோபமானது கொடியவனாகிய ராவணனுடைய உயிரைமாத்திரம்நாசஞ்செய்வதினாலேயா தணியும். பூலோகத்தையும்சுவர்க்கலோகத்தையும்நாசஞ்செய்யாமலவிடுமா கேளும்மம்மாலோகபரமேஸ்வரீ! ராமபத்திரருடையஅஸ்திரமானது சப்தசமுத்திரங்களையும் பதினாலுலோகங்களையும் யுகாந்தகாலாக்கினியைப்போல நொடிப்பொழுதிலே கவளீகரிக்கமாட்டாதா! ரகுபதியானவர் இப்பொழுதே தேவர்களுடையசத்துருக்களை நிர்மூலஞ்செய்தார். பெரியோர்களுடைய ஆபத்துக்களைநீக்கினார். எப்போதும் தர்மத்தைதலையெடுக்கும்படிசெய்தார். பிரபலமாகிய கீர்த்தியைச் சம்பாதித்தாரென்றே நினைத்துக்கொள்ளும் யாவரும் வெறுக்கத்தக்க இந்தக் கண்டகர்களுடைய ரக்தப்பிரவாகத்தில் பேய்க்குலங்கள்மூழ்கிக்குளிக்கும்போதும் ராக்ஷதர்களுக்குப்பயந்து ஒளிக்கின்ற தேவர்கள்கண்டு மனங்களிக்கின்றதை நீர்பார்ப்பீர்பிரளயகால இடியைப்போலச் சக்கரவர்த்தி திருமகனுடைய பாணமானது புறப்பட்டு ராக்ஷதர்களுடைய சரீரத்தைப்பிளக்க அந்தப்புண்ணிலிருந்து ஒழுகாநின்ற உதிரசமுத்திரமானது பெருகிவந்து விழுவதனால் எழுசமுத்திரங்களும் ஒன்றாய்த்திரண்டு இரைகின்றதையும் ராக்ஷதஸ்திரீகள்கர்ப்பம் நிறைந்தவயிற்றைப் பிசைந்துகொண்டு அழுது துக்கித்துக் கண்களிலிருந்துதாரைதாரையாக நீரொழுகும்படி வாலியினாலும் தாண்டப்படாத மலைபோல அறுத்தெறிகின்ற தாலிக்குப்பைகளையும் ஆகாசத்தைத் தீண்டுகின்ற ஸ்தூலதேகத்தையுடைய பேய்க்கூட்டங்களும் நீண்டசிறகுகளையுடைய பறவைச்சாதிகளும் ராக்ஷதர்களுடைய உதிரக்கடலில்மூழ்கி, அவர்கள் பெண்சாதிமார்களுடைய கண்ணீராகிய ஆற்றில்குளிப்பதையும். மிருதங்கம் வீணை முதலாகிய வாத்தியங்கள்முழங்க, ரம்பாஸ்திரீகள் நாட்டியஞ்செய்கின்ற இந்த நாடகசாலைகளில் ஸ்ரீராகவனுடைய பிரதாபத்தைப் பாடிக்கொண்டு வானரங்கள் வரிசைவரிசையாகஆடுகின்றதையும், ராவணன்முதலானவர்களுடைய சரீரத்திலிருந்து ஒழுகுகின்ற ரக்த ஆறானது பிணமலைகளைப்புரட்டி விழுத்துக்கொண்டுபோய்ச் சமுத்திரத்தைத் தூர்ப்பதையும், தேவரீருடைய மாசற்ற திருமேனியைப்பார்த்த தசக்கிரீபனுடைய கண்களை அவன் தலைகளின்மேல் தாவிக் காக்கைகள்கூரிய மூக்கினால் கொத்திக்கொத்தித் தின்பதையும் நீரே பார்க்கப்போகிறீர். ஆகையால் இன்னமும்பலபலவார்த்தைகள் சொல்லவேண்டியதென்ன? ஒருமாதவரைக்குங்கூட நீர் துயரப்பட்டுக்கொண்டு இவ்விடத்திலிருக்கவேண்டுவதில்லை அடியேன்போய்ச் சுவாமி திருவடியைத் தெரிசிக்கிறதுதான் தாமசம் அப்பால் அவர் ஒருபொழுதாவது பொறுத்திருப்பாரா? அவருக்கு உயிருண்டென்கின்ற சொல்மாத்திரந்தான் உண்டு ஆரணியத்திலே அவருடையதிருமேனிதீண்டித் தீயாதபுஷ்பங்களும்தளிர்களுமில்லை. அவர்சரீரஉஷ்ணத்தினாலேபொரியெழுந்துவேகாதசோலைகளுமில்லை. மேகம் கர்ஜித்தாலும் இடி யிடித்துவிழுந்தாலும் பாம்பு கடித்தாலும் அவருக்குத்தெரியாது. நீர் பிரிந்ததனால் மத்துக்கொண்டு கடையப்பட்ட தயிர்போல உயிர்தளர்ந்து கரைந்து ஐம்புலன்களும் வேறுபட்டுப் பித்துப்பிடித்து மயங்கி, நாள்தோறும் அடிக்கடி எவ்வளவோ வேதனைப்படுகின்றார். இப்படிப்பட்டநிலைமையையுடைய அந்தப்புருஷோத்தமன் வாராமலுமிருப்பானென்று நினைப்பீராகில் நான் சொன்னதுகளையெல்லாம் இப்போதுதானே உம்முடைய உள்ளங்கை நெல்லிக்கனியைப்போலக் காண்பிக்கின்றேன்பாரும். அதற்குமாறுபட்டிருந்தால் அப்பொழுது பொய்யென்று நினைத்துக்கொள்ளும், ஸ்ரீராமரும் வானராதிபதியாகிய சுக்கிரீபனும் உம்முடைய செய்தியைக்கேட்டுச் சந்தோஷிப்பதற்குமுன்னமே வானரங்கள்வந்து, சமுத்திரத்தைத்தூர்த்து லங்கையைச் சுற்றிக்கொண்டு ஆர்ப்பரிக்கின்றதைத்தேவரீர்கேட்டுச்சந்தோஷிக்கப்போகிறீர். எண்ணப்படாத வானரசேனைகள் நா



ளைத்தினம் இந்தநகரத்திற்குவந்தபோது அதற்குநடுவே கருடன்மேல் ஆரோகணித்துவருகின்றஸ்ரீமந்நாராயணனைப்போல அடியேனுடையதோள்களின்மேல் ரகுநாயகர் எழுந்தருளிவரும்படிக்காண்பீர். உதயகிரியில்தோன்றுகின்றஇளஞ்சூரியனைப்போல அங்கதகுமாரனுடையதோளின்மேல்இளையபெருமாளும்எழுந்தருளிவரக்காண்பீர். இனிமேல் துயரத்தையும்சங்கையையும்விட்டுவிடும். இப்போது குறித்துச் சொல்லிய சிலதினத்திற்குள்ளே வந்து உம்முடைய சிறைமீட்காவிட்டால் பழியும் பாவமும்சம்பாதித்துக் கொள்ளுகிறதற்கு, அந்தஸ்ரீராமரோ ராவணனும் ராவணனே ஸ்ரீராமருமென்று உமதுதிருவுளத்தில் எண்ணிக்கொள்ளுமென்று இவ்வண்ணம்சாகோபசாகையாக ஆஞ்சனேயர் எடுத்துச் சொல்லியபோது, அந்தவார்த்தைகளெல்லாம் குற்றமற்றதுகளாயிருக்கக் கேட்டுப் பிராட்டியார் மனதிலே அபரிமிதமாகிய மகிழ்ச்சிகூர்ந்து உஜ்ஜீவித்தவராய், மெய்தான் இவன் சீக்கிரத்திற்போய்ச் சேர்கிறதே உத்தமமென்றுகருதி அநுமானைப்பார்த்துச் சிலவார்த்தைசொல்லுகின்றார். ஐயா மாருதியே! நீதுரிதமாகப்போய்வா. யாதொரு தீங்கும் உன்னையணுகமாட்டாது. இனி நான்வேறொன்றுஞ்சொல்லுகிறதேயில்லை. உனக்குத் தெரியாததைக் குறித்து நானேசிறிது சொல்லப்போகிறேன். என் பிராணநாயகருக்கு முன்பு நடந்ததுகளாகிய சில அடையாளங்களைச் சொல்லுகிறேன். பூர்வத்தில் ஒரு மாயமாகிய காகமானதுவந்து என்சரீரத்தைத் தனது கூர்மையாகியநகத்தினாலே கிழித்ததுகண்டு சுவாமியானவர், ஒரு சொற்பமாகியபுல்லைப்பிரயோகிக்க, அதுவே அஸ்திரமாகித் தொத்த அதற்கு அஞ்சி அந்தக்காக்கைவடிவாய்வந்த இந்திர குமாரனாகிய சயந்தனானவன் பிர்மாவினிடத்திலும் சிவனிடத்திலும் மற்ற திக்குப்பாலகர்களிடத்திலும்போய் சரணமடைய, அவர்களெல்லாம் ராமபாணத்திற்குப் பயந்து அபயஸ்தங்கொடாமல் அவனைப்பார்த்து ஐயையோ இனிஉனக்கு எங்க ளாண்டவனாகிய ஸ்ரீராமபிரானுடைய திருவடியல்லது வேறு கதியில்லை. மேலும் அவரோ சரணாகதவாச்சல்யர். ஆகையால், நீபோய்அவரிடத்தில்தானே சரணாகதஞ் செய்யென்று சொல்ல, அவன் அங்கிருந்து நடுநடுங்கி ராகவா! அபயம். ராமசந்திரா! அபயம். தாசரதி! அபயம். சீதாசமேதா! அபயம். கோதண்டபாணீ! அபயம். அபயமென்று பூமியில்வந்துவிழுந்து தெண்டன்சமர்ப்பித்தவுடனே சுவாமி திருவுளமகிழ்ந்து அவன்பிராணனைவாங்கும்படி விட்ட பாணம், அவனுடைய இரண்டுகண்களில் ஒருகண்ணைக் கிரகித்துக்கொண்டு போம்படி கிருபைசெய்ய அது அப்படியேகிரகித்துக்கொண்டு தம்முடைய அம்புப்புட்டியில் வந்துசேர்ந்தது. அப்பொழுது ராமபத்திரர் நீ சரணாகதஞ்செய்ததனால் உன்குற்றத்தைப்பொறுத்தருளினோம். இன்றுமுதல் உன்னைப்போலிருக்கின்ற காக்கைக் கூட்டங்களின் இருகண்ணுக்கு ஒருமணியுலாவக் கடவதென்றுசொன்னார். பின்பு காகாசுரன் வருத்தம்நீங்கி ரகுநாயகரை வணங்கி விடைபெற்றுக்கொண்டு சொர்க்கலோகத்திற்குப்போனான். தேவர்கள் சுவாமியின்காருண்யத்தைக்குறித்துப் புஷ்பவருஷம்வருஷித்தார்கள். அந்தச்செய்தியைச்சொல்லு. அயோத்தியி லிருந்தபொழுது சுவாமியை நோக்கி நான்வளர்த்த என்னுயிர்க் கொப்பாகிய இளங்கிளிக்கு என்னபெயரிடுகின்றதென்றுகேட்க, அவர்கைகேயியாகிய என்தாய்பெயரைவைத்திடென்றுசொன்னார், அதையும் அவரிடத்தில் சொல்லென்று சொல்லி, பிராட்டியார் இனி இவ்வளவு விசேஷமாகிய அடையாளம்வேறொன்றுமில்லையென்று யோசித்து நிச்சயம் பண்ணிக்கொண்டு, காந்தியினால மேலேழுலோகங்களையும் கீழேழுலோகங்களையும் ஜெயித்த சூடாமணியென்னும்ரத்னத்தைத் தமதுதிருவாடையில் வைத்திருந்து, தாமரைபுஷ்பத்திற்குச்சமானமாகிய திருக்கரங்களா லெடுத்தார். எடுத்தமாத்திரத்தில் நவவியாகரணபண்டிதராகிய ஆஞ்சனேயர், இது என்னவென்று பிரமித்துத் தேகம் பூரித்து அதிசயித்தார். அப்பொழுது சப்ததீவிலும் நிறைந்த இருளெல்லாம் சிதைந்துஓடியது. ராக்ஷதர்கள்இப்பொழுது சூரியனானவன் கொஞ்சமாவது மனங்கூசாமல் லங்கைக்குவந்தது ஏதென்றுசந்தேகித்தார்கள். அந்நகரத்தில் சூரியன்வருகிறதில்லாமையால் எப்பொழுதுசூரியனைவரக்காண்போமென்று துக்கமுற்றிருந்த சக்கரவாகப்பக்ஷிகளெல்லாம் களிகூர்ந்ததுகள். தாமரைகள் மலர்ந்ததுகள். சூரியகாந்தக்கற்கள் தீயைச்சொரிந்ததுகள் அந்தரத்னகிரணம் பிராட்டியாருடைய திருமேனிமுழுதுஞ்சிவக்கும்படிசெய்து ஸ்ரீராமச்சந்திரனுடைய திருவடிகளைப்போலும் ஜொலிக்கத்தலைப்பட்டது. அப்படிப்பட்ட திவ்வியமாகிய சூடாமணியைக் காட்ட ஆஞ்சனேயர் கண்டார். பின்பு அவரைநோக்கி, அப்பா அநுமானே! என்கண்மணிக்கு ஒப்பாகிய இந்தச்சூடாமணியை இதுவரையில் என்வஸ்திரத்தில் வைத்துக்கொண்டிருந்தேன். இதுவே தசரதர்ந்மஜனுக்குப் பெரிய அடையாளம். தேடிவந்த என்பிராணனைரக்ஷித்தமஹாநுபாவா! நீஇதை வாங்கிக்கொள்ளென்றுகொடுக்க, வாயுகுமாரர் தொழுது அதை இரண்டுகையினாலும் வாங்கி அந்தக்ஷணமேவஸ்திரத்தில்சுற்றிப் பதனம்பண்ணி வைத்துக்கொண்டு, கண்களில் நீர்பாயும்படி ஜானகியாரை மூன்று தரம் பிரதக்ஷணம்வந்து சாஷ்டாங்கமாகச் சேவித்து அடியேன் போய்வருகிறேனென்று சொல்லி, அந்தப் பிராட்டியாரும் தம்மைப் புகழ்ந்துவாழ்த்த அப்பால்நடந்தார்.

சூடாமணிப்படலம் - முற்றிற்று.

---

## வனபங்கப்படலம்.

அப்படி ஜானகியாரிடத்தில் நியமனம் பெற்றுக்கொண்டு வடதிசையைநோக்கிச் செல்லும்படி உத்தேசித்து அதிசீக்கிரமாக நடந்து, எதிரேதோன்றிய அசோகவனத்திற்பாய்ந்துபோகின்ற அநுமானானவர் நாலிலங்கைக்குவந்து பிராட்டியாரைக் கண்டு. அவரிடத்தில் மாத்திரம் சிலசமாச்சாரங்களைக்குறித்துப் பேசிவிட்டுப்போகிறதுபிரதாபமல்ல மிகவும் சொற்பமாகும். என்னுடைய வீரத்திற்குத்தக்க ஒரு பிரபலமான காரியத்தைச் செய்

து போகவேண்டுமென்று தமக்குள்ளே ஆலோசிக்கத்
தொடங்கினார். கொடிய பாபிஷ்டர்களாகிய ராக்ஷதர்க
ளையெல்லாங்கொலைசெய்து, இந்த லங்காபட்டணத்தை
யும் வேருடனே களைந்தெடுத்துச்சமுத்திரத்தில் அழுந்
தும்படி எறிந்து விட்டு, லோகநாயகி யாகிய வைதே
கியை என்னையனுகிய சக்கரவர்த்திதிருமகன் திருவடியி
ல்கொண்டுபோய்ச்சேர்க்காவிட்டால், நான் எவ்விதத்தி
ல் அந்தவிஜயராகவருக்கு அடிமையாவேன். ஸ்வாமித்து
ரோகியாகிய ராவணனை இறுக்கிப்பிடித்து என்னுடைய
நீண்டவாலினால், அவன் பத்துத் தலைகளையும் இருபது
தோள்களையுஞ் சேர்த்துக்கட்டி இம்சித்துச் சிறைவைக்
கவுமில்லை, அப்படியல்லவென்றாலும் அவனை நேரோயா
வதுஜெயித்தேனா ! அதுவும் செய்யவில்லையே இப்படி
யானால் ஒருவர்மற்றொருவருக்கு அடிமையென்பதுதகு
மா என்கண்ணிற்கண்ட ராக்ஷதக்கூட்டங்களைச்சின்னபி
ன்னப்பட அடித்து, லங்காதிபதியி னுடைய கண்களுக்
குமுன்னே அவன்பெண்சாதியாகிய மண்டோதரியை,
தலைமயிரைப்பிடித்து இழுத்துவந்து சிறைவைத்தாலுந்
தான் என்புஜபலத்திற்குப் பழுதுண்டாகுமா ! பாதகர்
களாகிய அரக்கர்களுக்கு என்னுண்மையை யெல்லாம்
காட்டி, அவர்களைத்திசைகள்தோறும் ஓட்டித் துரத்தி
த்தும்சஞ்செய்வதே பிரதானகாரியம். இனியென்னைத்
தக்கதுமற்றொன்றுமில்லையாதலால்அவர்களைச்சண்டை
க்குஇழுக்கவேண்டுமே அதற்குத்தக்கஉபாயமென்னவென்
றெண்ணுகின்றார். நான் இந்தச்சோலையை ஒருநொடிப்
பொழுதில் அதஞ்செய்கிறேன். அப்படிச்செய்தால் அந்
தஆர்ப்பாட்டத்தைக் கேட்டமாத்திரத்தில், மிகுந்தகோப
த்தோடும் ராக்ஷதர்கள் என்னுடன் வந்து எதிர்ப்பார்க
ள். எதிர்த்தபொழுது அவர்களைச்சங்கரிக்கொன்று உ
யிர்குடிப்பேன். என்னோடுபோர்செய்யவருகின்றவர்களை
யெல்லாம் மறுபடி உயிரோடே போகவொட்டாமல்,
கொன்றால், அந்தராவணனும் எனக்குமுன்னேவந்துஎ
திர்ப்பான். எதிர்த்தால் அவனுடைய பத்துத்தலைகளையு
ம் குழிந்துபோம்படிக்குட்டி உதைத்து, என்மனதிலே
பொங்குகின்ற கோபமுஞ் சிறிதாறிச் சந்தோஷமாய்ப்
போவேன் ஆகையால், இவ்விதமாகச்செய்வதே நல்லத
ந்திரமென்று தீர்க்காலோசனைசெய்து சூரியசந்திரர் உ
தயமாகின்ற உதயகிரிக்கும் அஸ்தகிரிக்குஞ்சமானமாக
நீண்டதோள்களையுடையவராய்த் தமதுவிஸ்வரூபத்தை
க்கொண்டு, உலகமுழுமையும் ஒருகொம்பிலே தாங்கிய
ஆதிவராகத்தைப்போல ஓங்கியுயர்ந்து அந்த வனத்தை
யெல்லாம் தம்முடைய பாதத்தைக்கொண்டு துகைத்தா
ர், துகைத்தபொழுது அதிலிருந்த விருக்ஷங்கள் முடிந்
தும் பிளந்தும் முறிந்தும் நெறிந்தும் மடிந்தும் பொடி
ந்தும் மறிந்தும் பொரிந்தும் இடிந்தும் சிதைந்தும் எரி
ந்தும் கரிந்தும் ஒடிந்தும் ஒசிந்தும் உதிர்ந்தும்பிதிர்ந்து
ம்போயின. சிலவிருக்ஷங்கள் வேரோடேசாய்ந்ததுகள்.
சிலவிருக்ஷங்கள் சமூலமும் வெந்து விழுந்ததுகள். சில
விருக்ஷங்கள் மேகமண்டலத்தை மோதி விழுந்ததுகள்,
சிலவிருக்ஷங்கள் காற்றில் அடிபட்டுக் கடலிலேபோய் வி

ழுந்ததுகள். சிலவிருக்ஷங்கள் சொர்க்கத்திற்போய்விழு
ந்ததுகள். சிலவிருக்ஷங்கள் அஷ்டகஜங்களுக் கெதிரோ அ
துகள் உண்கின்ற உணவாகப்போய் விழுந்ததுகள். சில
விருக்ஷங்கள் கேசரமார்க்கமாகப்போய்த்தேவர்களுடை
யகற்பகச்சோலையைமடித்ததுகள். அனேகமரங்கள்போ
ய்விழுகின்றதினால், சமுத்திரத்தில் அலைகள்மிகவும்பொ
ங்கிப்புரண்டதுகள். அநேகமரங்கள் லங்கையில் விழுகி
ன்றதினால் அங்குள்ள உப்பரிகைகள் இடிந்துஉதிர்ந்ததுகள்
அநேகமரங்கள் சப்தகுலபர்வதங்களில் போய்விழுந்து
சிறுபொடியானதுகள், அநேகமரங்கள் தங்களுக்குச் ச
மீபத்தில்வந்துவிழுகிறதினால், வித்யாதரலோகத்திலும்,
யக்ஷலோகத்திலும், தேவலோகத்திலுமுள்ள ஸ்திரீகள்
அதுகளில் பூப்பறிக்கத்தலைப்பட்டார்கள். அநேகஞ்சொ
ர்ணவிருக்ஷங்களும் ரத்னவிருக்ஷங்களும் மின்னல்கள் ச
ஞ்சரிக்கிறதுபோலவும் சூரியகிரணம்பாய்கிறதுபோல
வும் நாலுதிசைகளிலும் விசையாயெழும்பியதுகள். அ
நேகவிருக்ஷங்கள் ஊழிகாலத்து நக்ஷத்திரங்கள் உதிர்வ
துபோல ஒன்றோடொன்றுமோதி உதிர்ந்ததுகள். ஆஞ்
சனேயர்மரக்கிளைகளை முறித்துச் சமுத்திரத்தில் எறிய,
அக்கிளைகளிலிருந்த பக்ஷிகளையும் வண்டுகளையும் மலர்க
ளையும் அரும்புகளையும் தேனையும் தளிர்களையும் காய்க
ளையும் மீன்கள் விழுங்கிக்களித்துத் துள்ளிக்கொண்டிரு
க்கின்றதருணத்தில் பலமரங்கள்வந்துமேலேவிழ, அது
கள்நெரிந்துமடிந்ததுகள். நானாவிதபுஷ்பங்களாலும் நி
றையப்பட்டுப் புலால்நாற்றமில்லாமல் எட்டுத்திக்கிலும்
நல்லவாசனையை வீசுதலால் கடலானது தேவர்கள்தங்க
ள்தேவிமார்களுடனே ஸ்நானஞ்செய்கின்றதிவ்வியதடா
கத்தைப்போல விளங்கியது. அவ்வனத்திலிருக்கின்ற ர
த்னமேடைகளை இடித்தும், மரங்களை ஒடித்தும், ஒன்றி
ன்பின்னொன்றாகஎறிவதனால் முழுதுமுலர்ந்து, முன்பு
உள்ளேபிறங்கக்கூடாத ஆழத்தை யுடையதாய் அநுமா
ன் அருமையாகத் தாண்டிப்போகும்படியிருந்த அந்தச்ச
முத்திரம் இரண்டுகாலினாலும் எளிதாகநடந்துபோகலா
மென்று சொல்லத்தக்கதாயிற்று. ஆகாசத்தில் எறிந்தம
ரங்கள்வந்து மேலேவிழுந்து ராக்ஷதர்கள் வாசஞ்செய்
கின்றரத்னகசிதமாகியமாடமாளிகைகூடகோபுரங்களெ
ல்லாம், இடியினால் சின்னபின்னமாகிய பர்வதங்களைப்
போலச்சிதைந்து பொடிப்பொடி யானதுகள். நீருண்ட
மேகங்கள் நெருங்கியிருக்கிறதுபோல, ராவணனுக்கு ஆ
காசத்திலும் ஒருசோலையுண்டென்றுசொல்லும்படி அ
நுமானானவர் அளவிறந்த மரங்களைப்பிடுங்கிமேலேயெ
றிந்தார். தேன் துளிக்க பலவிதப்பறவைகளும் மணிகள்
போலஒலிக்க, புஷ்பங்கள் நிறையப் பூத்த விருக்ஷங்கள்
ஆகாசமார்க்கமா யெழும்பிப்போய், அவ்விடத்தில் சஞ்
சரிக்கின்ற புஷ்ப விமானம்போலப் பிரகாசித்ததுகள்.
பலகிளைகள் நிறைந்திருக்கின்ற மரங்கள் அந்தரத்திலி
ருந்து சமுத்திரத்தில்விழுகின்றது. நீருண்ண இறங்குகி
ன்றமேகங்களைப்போலிருந்தது. மத்தியில் புண்ணியவா
ன்களாய்ப்பூமியில்வந்துபிறந்த தேவர்கள் ஞானத்தைய
டைந்து தங்கள்சுதேசமாகிய சொர்க்கத்தைச்சேர்ந்தது



போல பூர்வத்தில் ராவணனால்கொண்டுவந்து லங்கையி
ல்நாட்டப்பட்ட பஞ்சதருக்கள் அநுமான்பிடுங்கி யெறி
தலால் முன்னிருந்த தேவலோகத்தில்தானே போய்ச்
சேர்ந்ததுகள். மற்றும் வாயுகுமாரரானவர் மாணிக்கக்
கற்பதித்த இடங்களைக் குழிசெய்து மண்டபங்களை இடி
த்தெறிந்து வாவிகளைத்தூர்த்து சுவர்த்தலங்களை அழித்
து கட்டுமலைகளைப்பேர்த்து, வேங்கைமரங்களைச் சிதை
த்து, மாமரங்களைவேருடனேபறித்து, கற்பகமரங்களை
ப் பூவுடனே ஒடித்து நிலத்தில்தேய்த்து சண்பகமரச்
சாலைகளை அதஞ்செய்துபழுத்தமாமரங்களைமுறித்துத்த
ள்ளினார். ஆஞ்சநேயருடைய பாதம்படுதலால் சந்தனம
ரங்களும், பூமரங்களும் பிளந்து, துணிந்து, எரிந்து, க
ரிந்ததுகள். மல்லிகைமுல்லை முதலாகிய கொடிவகைக
ள், செடிவகைகள், சகலமும் தூள்தூளானதுகள். மயி
ல்கள், குயில்கள், கிளிகள், வண்டுகள் முதலானதுகளு
ம் நெருங்கி நசுங்கிமடிந்ததுகள், பக்ஷிகள் இரைகின்ற ஓ
சையும், மரங்கள் ஒடிகின்ற ஓசையும், அநுமான் அடிக்
கடிகொர்ஜிக்கின்ற ஓசையுங்கூடி ஏககோஷமாய் இந்த அ
ண்டகடாகத்தைத்தாண்டி அப்பாலும்வியாபித்தது. கா
டுபோல அடர்ந்து நெருங்கியமரங்களை அசைத்தெடுத்
து அநுமான்வீசுதலால் யானைச்சாலைகள்-புரவிச்சாலைக
ள்-ரதசாலைகளும், அதுகளிலுள்ள யானைகள், புரவிகள்
தேர்களும், ஆடரங்குகளும், அன்னசத்திரங்களும், தண்
ணீர்ப்பந்தல்களும், சிதைந்துநொறுங்கியதுகள். வலது
கையில் சில சில பெரியமரங்களையும், இடதுகையில், சி
லசில கட்டுமலைகளையும் பேர்த்தெடுத்து எறிந்தார். மர
ம்போய் விழுந்ததனால் லங்கையைச்சூழ்ந்த பொன்மதி
ல்கள் இடிந்துநெருப்பெழுந்ததுகள் மலைபோய் விழுந்த
தனால் மேல்மாடங்கள்நெரிந்து நீறெழுந்ததுகள். அத
னால் லங்கையிலிருந்தவர்களெல்லாம் பயந்தோடினார்க
ள். இந்தப்படிவாயுகுமாரர்சின்னபின்னஞ்செய்யும்போ
து லங்கேஸ்வரனானவன் நான் சீதையினால் விரகதாபப்
பட்டதருணத்தில்நீயென்சரீரத்தைத்தகித்தாய் இப்பொ
ழுது தேவர்களுக்குமுன்னே ஒருகுரங்குவந்து சோலை
யை அழிக்கும்படிப் பார்த்துக்கொண்டிருந்தா யென்று
கோபிப்பானே இதற்கென்ன செய்வதென்று பயந்து ஒ
ளித்ததுபோலச்சந்திரன் அஸ்தமித்தானன். அந்தவன
த்திலே குற்றமற்ற நவரத்னங்களாலும் அபரஞ்சியினா
லும் சூரியகாந்தஞ் சந்திரகாந்தத்தினாலும்நிர்மிக்கப்பட்
டிருக்கின்றபலபலமரங்களையும் என்னையனுகிய அநுமா
ன் தன்கைகளால் அள்ளி அள்ளித் திக்குகள்தோறும்வீ
ச, அதுகள் சாஜ்வல்யமாகிப் சுடரொறிப்பதனால் உலக
முழுதும் இருள்நீங்கிப் பிரகாசித்தது. நானாவிதமானமி
ருகங்களும்கதறி மனம்நடுங்கிக் கண்கலக்கங் கொண்ட
துகள். பலபேதமான பறவைகளில் சிலகுதறிக்கொண்
டுபோய்க் கடலில்விழுந்ததுகள். சில பதறிப்பதைத்தது
கள். சிலமேலேபறந்ததுகள். சிலகீழேவிழுந்து சிறகுக
ளை உதறியதுகள். சிலசிறகுகளை ஒடுக்கிக்கொண்டு இறந்
ததுகள். காக்கைகள் தெய்வீகமாகிய மரங்கள் தோறும்
கட்டியிருக்கின்ற கூட்டுடனே ஆஞ்சனேயர் கிருபையி

னாலே சொர்க்கம்போய்ச்சேர்ந்ததுகள். ராக்ஷதர்களா
லே காவல்செய்யப்பட்ட சோலையிலிருந்த சகலவிருக்ஷ
ங்களும் அழிந்துபோகியும் சீதாபிராட்டியார் எழுந்தரு
ளியிருக்கின்ற ஒருவிருக்ஷமாத்திரம் அழியாமல்பாலோ
கபூலோகபாதாளலோகங்களெல்லாம்நாசமாய்விடுகின்
ற மகாப்பிரளயகாலத்திலே ஸ்ரீமந்நாராயணன் திருக்க
ண்வளர்ந்தருளாநின்ற ஆல்போலவிளங்கியிருந்தது. மி
குந்த பிரகாசத்தையுடைய சூடாமணியாகிய ஜீவரத்தத்
தைத் தன் பிராணனுக்குச் சமானமாகிய சக்கரவர்த்தி
திருமகனுக்கு அடையாளமாகக் கொடுக்கச்சொல்லி அ
நுமான்கையில் கொடுத்துவிட்டதனால் ஐயோ ! சீதை
யானவள் வறுமையை அடைந்தாளென்று அவளுக்கு
த்தாய்வீடாகிய சமுத்திரம் ஒரு சிகாமணியை அனுப்பு
வித்ததுபோலச் சூரியன் உதயமானான். அந்தச்சோலை
யை முழுமையும்பற்றறத்தொலைத்துவிட்டுத் தனியே நி
ற்கின்ற ஆஞ்சனேயர் சதுர்த்தசபுவனங்களையும் அளந்
த திரிவிக்கிரமனைப்போலவும் கடலின்நடுவிலிருக்கின்ற
மந்தரகிரியைப்போலவும் யுகாந்தகாலருத்திரனைப்போ
லவும் பிரகாசித்தார். இவ்விதமாயிருக்கின்றசமையத்தி
ல் அநுமான் முன்புசெய்த மந்திரோச்சாடனத்தால் பி
ரக்கியையில்லாமல் சவம்போல உறங்கிக்கிடந்த ராக்ஷ
திகளெல்லாம் நித்திரைமாறி விழித்தெழுந்து வடமேரு
பர்வதம்போல விஸ்வரூபத்துடனே நிற்கின்ற சுத்தாத்
மாவாகிய வாயுகுமாரனைப்பார்த்து அம்மம்மா ! இது
எப்படிப்பட்ட சொரூபமென்றும் இந்தமகாபுருஷன் ஆ
ரென்றும் மகத்தாகியபீதியடைந்து ஜானகியாரைநோக்
கி நீ இவனுடைய பூர்வோத்தரம் அறிவையாசொல்லெ
ன்றார்கள். அதுகேட்டுப்பிராட்டியார் துர்ச்சனர்கள்செ
ய்த துஷ்கிர்த்தியங்களையெல்லாம் அப்படிப்பட்ட துர்ச்
சனர்கள் அறிவார்களேயல்லாமல் சற்சனர்களறிவார்க
ளா ! தண்டகாரணியத்தில் இருக்கும்போது மாயமானா
னதுவர அந்தமானைப்பார்த்து எங்கள் இளையபெருமா
ளானவர் இதுராக்ஷதர்கள்செய்தமாயமாகும் உள்ளபடி
மானல்லவென்று சொல்லியும்கேளாமல் மெய்யென்று
மயங்கிய நான் இதை எப்படியறிவேனென்று சொல்ல
அந்த ராக்ஷதஸ்திரீகள் வயிற்றி லடித்துக்கொண்டு மிக
வும் அச்சமுற்றவர்களாய்ப் பூமியும் வானமும் மலையுங்
கடலும் நிலைகுலையும்படி ஓடத்தலைப்பட்டார்கள் அவ்வி
டத்தில் ராவணனுடைய ஆக்கினையைக்கொண்டு பிரம
தேவர் சொன்னத்தினால்சிருஷ்டிசெய்ததும்கண்ணுக்கட
ங்காததும், காற்றுமோதப்படாததும், ஆகாசபரியந்தம்
நீண்ட அநேகந்தூண்களையுடையதும், நவரத்னங்கள் ப
திக்கப்பட்டதும், இராக்காலத்திலும் இருள்விலகும்படி
ஜொலிக்கத்தக்கதும், மகாமேருபர்வதமும்வெட்கி வெ
தும்பி மனம்புண்படும்படி உயர்ந்ததும், இந்தப்பூமியுந்
தாங்கக்கூடாத பாரத்தையுடையதும் வித்வ ஜனர்களா
லும் புகழ்தற்கு அருமையாயிருக்கின்றதுமாகிய ஒருஓ
மமண்டபமிருந்தது. அதைத்தம்முடைய தந்தையாகிய
வாயுவையொத்த பராக்கிரமமிருந்த ஆஞ்சனேயர்கண்
டு அவர்பூர்வத்தில் தசக்கிரீபனானவன் வெள்ளிமயமாகி

ய கைலாசகிரியைப் பேர்த்தெடுத்த சமாச்சாரங் கேள்
விப்பட்டவராகையால் அவனுடைய புஜபலத்திற்குப்பி
ன்னமுண்டாகும்படி அதற்குப்பிரதியாகத் தாம் பொன்
மயமாகிய மேருகிரியையெடுத்ததுபோல அந்த யாகம
ண்டபத்தை அடியோடே பறித்தெடுத்துலங்கையின்மே
லவிட்டெறிந்தார், அதுபோய்விழுந்து அநேகமாடகூட
ங்கள் இடிந்து நசுங்கு பொடிப்பொடியாய் அந்துகளி லி
ருந்து அன்றுபொறியெழுந்து பக்கங்களிலிருந்த சகலவ
ஸ்துக்களையுஞ்சுட்டெரித்ததுகள். அதனாலெத்தனையோ
ராக்ஷதர்க ளிறந்தார்கள். வெகுபேர் வீரமழிந்தார்கள்.
ஆர்தானுலும் பிறருக்குக்கேடுநினைத்தால் பிழைப்பார்
களா! அச்சமயத்தில் அந்தப்பூங்காவனத்தைக் காக்கி
ன்ற காவலாளர்களாகிய தேவர்கள் பிரமித்துத் திடுக்
குற்றெழுந்துபார்த்து பதறி உடுத்தவஸ்திரத்துடனே சி
றுநீர்விட்டுக்கொண்டு நெஞ்சிலேபயமாகிய நெருப்பிட
ப்பட்டவர்களாய் நிறம்வேறுபட்டு நடுநடுங்கிக் காலிட
றும்படி ஓடி உக்கிரசிங்கத்திற்குச் சமானமாகியராவண
ன் சமீபத்தில்போய் அவனுடையபாதத்தில் சாஷ்டாங்
கமாகவிழுந்துவணங்கிக்கேளுமையா எங்களாண்டவனா
கிய பிரதாபலங்கேஸ்வரா! இனி நாங்கள்காவல்செய்கி
றதற்குமுடியாது. ஏனென்றால்பர்வதத்திற்கு ஒப்பாகிய
தோள்களையுடைய ஒருகுரங்குவந்து உம்முடையசிங்கா
ரச்சோலையை அழித்தது. அதுசொல்லுகிறதற்கு எளி
தாயிருக்கின்றதல்ல. காலினாலும் கையினாலும் வாலினா
லும் தோளினாலும் உதைத்தும், பறித்தும், சுற்றியும்மு
ட்டியும், ஒருபுல் புதர் தூசுமுதலானதுகளும் இல்லாம
ற்போம்படிப் பொடிப்பொடியாக்கி அந்தச்சோலையி லி
ருந்த யாகமண்டபத்தையும் பேர்த்தெறிந்து சிறிதிடமா
த்திரம்தவிர லங்காபட்டணமுழுமையும்நாசமாக்கிவிட்
டதென்றுசொன்னார்கள். அதுகேட்டமாத்திரத்தில் ரா
வணனனவன் அற்பஜெந்துவாகிய ஒருகுரங்கானது ந
ம்முடைய சொர்ணகிருதமாகிய கற்பகவிருக்ஷமுதலிய ப
லஜாதிவிருக்ஷங்களை நெருங்கிய பூங்காவனத்தைப் பொ
டிபடும்படி நிர்மூலமாக்கி ராக்ஷதர்களால் காவல்செய்ய
ப்பட்ட கல்யாண உப்பரிகையென்கின்ற யாகமண்டபத்
தையும் பேர்த்தெறிந்து அதனால் லங்காபுரியையும் அ
ழித்ததாம் ஆ! ஆ! ராக்ஷதர்களுடைய வீரப்பிரதாபம்
நன்றாயிருக்கின்றது. இந்தச்சொல் மூடர்களுஞ்சொல்
லமாட்டார்களே யென்று குலுங்கக்குலுங்கநகைத்தான்
மறுபடியும் அந்தச்சோலையைக் காக்கின்ற தேவர்கள்
ராவணேஸ்வரனைப்பார்த்துச் சுவாமி! ஆகாசம் பூமியெ
ங்கும்நிறைந்த அதனுடைய ஸ்தூலவடிவத்தைச் சுமக்கி
ன்ற சக்தியையுடைய இந்தப்பூமியல்லவோ. புலவர்
களெல்லாம்ஸ்துதிசெய்யவேண்டியது. அந்தக்குரங்கை
ப் பிரமா விஷ்ணு ருத்திரனென்கின்ற மும்மூர்த்திகளில்
ஒருவனென்று சொன்னாலும் நிகராகமாட்டாது. அதை
ப்பின்பு தேவரீரேபார்க்கப்போகிறீரென்றார்கள். அந்த
க்ஷணத்தில் பூமண்டலங்கிழியவும், கடல்பலதிசைகளிலு
ம் மோதிப்போகவும், அஷ்டகஜங்களும், திக்குப்பாலக
ர்களும்பயந்து ஓட்டமெடுக்கவும், ராக்ஷதஸ்திரிகளுடை

ய கர்ப்பங்கள் கலங்கிவிழவும், அண்டகட்டாகமும் வெடிப
ட்டதென்று சொல்லும்படி அநுமானனவர் அட்டகாச
ஞ்செய்து ஆர்ப்பரித்தார்.

வனபங்கப்படலம் - முற்றிற்று.

## கிங்கரர்வதைப்படலம்.

அவ்விதமாக ஆஞ்சனேயர் கர்ஜித்த முழக்கமானது
எழுந்து மலைக்குகையில்விழுந்த இடியோசைபோலவும்
முன்னாளில் மிதிலையிலே சிவனுடையவில்லொடிந்து பி
றந்த சப்தம்போலவும் தசக்கிரீபனுடைய மாணிக்ககிரீ
டத்தையணிந்த பத்துத்தலைகளும் குலுங்கும்படி இரு
பதுகாதிலும்வந்து நுழைந்தது. அப்போது ராவணனு
க்குக் கொஞ்சம் நகைப்புத்தோன்றச் சகிக்கக்கூடாமல்
மகாபராக்கிரமசாலிகளாகிய அநேகராக்ஷகிங்கரர்களை
க்கூவி அந்தக்குரங்கு ஓடிப்போகிறதற்குமுன் சீக்கிர
த்தில் ஆகாசமார்க்கத்தையும்போய்க்கட்டிவளைத்து அ
தைக்கொல்லாமல் லகுவாய்ப்பிடித்துக்கொண்டு வாரு
ங்களடாவென்று ஆக்கியாபித்தான். அந்தக்ஷணமே சூ
லாயுதம், வாளாயுதம், வேலாயுதம், தண்டாயுதம், தோ
மராயுதம், முசலம், பிண்டி, பாலம், சக்கரம், முசண்டி,
குலிசம், பாசம், மழு, கழு, குந்தம், வில், அம்பு, இது
கள்முதலாகிய ஆயுத வர்க்கங்களைக் கையிலே தாங்கிக்
கொண்டு காளகூடவிஷத்தைப்போலச் சரீரங்கறுத்துத்
தோன்ற உலகத்தை அழிக்கும்படி ஊழிகாலத்தில்விசை
யாய்ப்பொங்கியெழுந்துவருகின்றசமுத்திரத்தைப்போ
ல அதிவேகமாக நடக்கின்றவர்களும் யுத்தங்கிடைத்த
தென்று சொல்லக் கேட்டமாத்திரத்தில் அந்தச்சொ
ல் கன்னுண்டதைப்பார்க்கிலும் அதிகமாகிய களிப்பினை
யுண்டாக்கச் சந்தோஷிக்கின்ற சிந்தையையுடையவர்க
ளும், காடுபோல நெருங்கிச்சூழ்ந்து சமுத்திரத்தைப்
போலக் கோஷிக்கின்றவர்களும், ஆகாசத்தைப் பார்க்கி
லும் பரக்கீர்த்தியையும், மலைபோலப்பருத்து உயர்ந்
த தோள்களையு முடையவர்களும், தேவதானவர்களாகி
ய இருவகைப்பட்ட பகைவர்களையும், சுகாயாசமாக ஜெ
யித்த வீரவிக்கிரமத்தையுடைய நாம் இப்பொழுது ஒரு
சிறிய குரங்கினுடனேயா போர்செய்து ஜெயம்பெறுகி
றதென்றுநினைத்து, அந்த நிந்தைக்காக மிகுந்த நாணங்
கொண்டு அதுதங்களை யுபாதிக்கப்படுகின்றவர்களும் அ
ரையில் - உடைவாளும், மார்பில் - வச்சிர கவசமும்,
காலில் - வீரகண்டாமணியும் தரித்தவர்களும், எட்டுத்
திக்கிலும்போய் முட்டுகின்ற தோள்களையுடையவர்களு
ம், மேகத்தைத் தாவிப்பிடிக்கின்ற கைகளையுடையவர்களு
ம், அண்டத்தையளாவுகின்ற தலைகளையுடையவர்களும்
காலடிகளால் மலைகளை யிடறுகின்றவர்களும், மேகம் -
குமிறுகிறது போலவும், பேரிகை - முழங்குகிறது
போலவும், வசனிக் கின்றவர்களும், தேவர்கள் - பிர
யோகித்த தெய்வீகமாகிய ஆயுதங்கள்பட்ட புண்ணும்,
அசுரர்கள்பிரயோகித்த ஆயுதங்கள்பட்டவடுவும், புஜங்
களில் பிரகாசிக்கவருகின்றவர்களும், ஆண் யானைகளையு
ம் பெண்யானைகளையும் வாரித்தின்கின்ற பிலத்தையொத்



த வாயில் பிறைபோலவிளங்குகின்ற வக்கிரதந்தங்களு
ம், கொதிக்கின்ற கண்களு முடையவர்களும், ஒருவரை
யொருவர் இப்பொழுது படையெடுத்துப் போகின்றது
என்னவென்றுகேட்க, அவர்சொன்னசொல் இன்னதெ
ன்றுதங்களுக்குத் தெரியாமல் கேட்டவர்க்கு எதிருத்த
ரமாக என்னவென்றேசொல்கின்றவர்களும், நமக்குமு
ன்னேபோகின்றவர்களுடைய முதுகைத்தமதுகோபாக்
கினிநீக்கும்படி முனைகின்றவர்களும், ஒருகுரங்கல்லவா
அசோகவனத்தையும் யாகமண்டபத்தையும் அழித்தது.
நம்முடையபராக்கிரமம் நன்றாயிருக் கின்றது. இனி இ
தைவிட்ட வேறுபழியுமுண்டோவென்று சொல்லிக்கொ
ண்டு கோபாவேசத்துடனே மனோவேகத்தைப் பார்க்கி
லும்மூண்டுவருகின்றவர்களும் ரணபேரியின்ஓசையும் வி
ல்நாரியின்ஓசையும், வீரகண்டையின்ஓசையும், சங்கோ
சையும், அதட்டிக்கூக்கின்ற ஓசையும், ஒன்றாகச் சேர்
ந்து, ஊழிகாலத்துக்கடலோசையையும், சப்த மேகங்க
ளின்ஓசையையும் அடக்கும்படி, தாங்கள் போவதற்
குத்தெருவின் இடம்போதாதென்று ஆகாச மார்க்கமா
யெழும்பிப்போகின்றவர்களும், புருவமும் கையிலுள்ள
வளையும்படிப் புகையெழத்தக்கதாகப் பெருமூச்சுவிடுகி
ன்றவர்களும் ஒருவர்க்கொருவர் முந்திக் கிரம மில்லாம
ற்கோபிக்கின்றவர்களும் நடக்கவழிகிடையாமையால்இ
ந்தலங்கை விசாலமா யிருக்கவில்லை யென்று முன்னே
போகின்றவர்களை, இதோ நாங்களும் வருகின்றோம் நில்
லுங்களென்று அழைக்கின்றவர்களும் உறையிலிருக்கின்
றவாளையுருவிக் கையிலேபிடித்து அது பளபளவென்று
பிரகாசிக்கத்தக்கதாக அசைக் கின்றவர்களும் வாயுதட்
டைமடித்து மீசைமுறுக்கித் தோள்கொட்டித்தொடை
தட்டிக்கொண்டு கற்கள்நொறுங்கும்படித் துகைத்துவா
யிலுள்ளபற்களை நெறநெறவென்னும்படிக்கடிக்கின்றவர்
களும், மலைநிற்கிறதுபோல நிற்கின்ற வர்களும், அநேக
வித ஆயுதபரீக்ஷை பண்ணியிருக்கின்றவர்களும் யுத்தத்
திலே சிறந்தபெயர்பெற்றிருக்கின்றவர்களும், பூமிவெளி
யச்சஞ்சரிக்கின்றவர்களும், வரத்தில்மிகுந்தவர்களும்இ
துகளை ஆபரணமாக அணிந்திருக்கின்றவர்களும், தேவ
ர்களைத்தோற்கும்படிவென்றவர்களும், அசுரர்களைக்கொ
ன்றுகின்றவர்களும், பன்னகர்கள்யுத்தத்திலே முதுகிட்
டுப்போகப்பார்த்துச் சிரித்துப் பரிகாசஞ்செய்தவர்களு
ம், அளகாபுரியைக்கொள்ளையிட்டுக் குபேரனுடைய கீர்
த்தியை அழித்தவர்களும், தோள்கள் தினவெடுத்தால்
போர்செய்து அதைத்தீர்த்துக்கொள்ளவேண்டுமென்று
நாடோறும் தேவலோகமுதலாகிய சகலலோகங்களி
லும்போய்த்திரிந்தவர்களும், அஷ்டகிரிகளைக்காலினாலே
இடறுங்களென்றாலும், கடல்நீரைக்குடியுங்களென்றாலு
ம், சூரியனைக்கிழேதள்ளுங்களென்றாலும், மேகங்களைப்
பிழியுங்களென்றாலும், ஆதிசேஷனை யிழுத்து நிலத்தில்
மோதுங்களென்றாலும், பூமியை யெடுங்களென்றாலும்,
அந்தவார்த்தை வாயிலிருக்கும்போதுதானே முடிக்கத்
தக்கவர்களுமாகிய அந்தக்கிங்கரர்கள், கால்களிலிருந்து
எழும்புகின்ற தூளிகள்போய்த் தேவர்களுடைய கண்க

ளைமறைக்கப் புலிக்கூட்டங்கள்போலவும். சிங்கக் குறா
ங்கள்போலவும், ஆலாலவிஷம்போலவும் அதிகவுக்கிர
மாய்ச் சரவேகத்தைக்கொண்டு கரியமலைகள் உருப்பெ
ற்றுவருகிறதுபோல வந்தார்கள். கண்கள் அக்கினிப்
பொறியைக்கக்க, சுவாசம்புகைய, வேல்கள் மின்ன, இ
டிபோலக்கர்ஜித்து நாலுதிக்கிலும்ஓடி, பிரசண்ட மாரு
தமானதுமோதுதலால் நக்ஷத்திரங்கள் உதிர்வதுபோல
ச் செடிகொடி மரங்களெல்லாம் சிறு துகளாயுதிர்ந்து,
மேகசஞ்சாரமில்லாத ஆகாசம்போல உருவழிந்திருக்கி
ன்ற அந்தச் சோலையைச்சுற்றிவளைத்தார்கள். இவ்விதமா
கவந்து வளைத்தவர்களுடைய ஊதுகொம்புகளின் சப்த
த்தையும், தவளச்சங்குகளின் ஓசையையும், பேரிகைமு
ழக்கத்தையும், வீரகர்ஜனையையும்கேட்டு, சூரியனும்பய
ந்துபோம்படி அண்டமுகடுபரியந்தம் வளர்ந்து கைலா
சபர்வதம்போல நிற்கின்ற அநுமானனவர் அவர்கள் வ
ருகிறதுகண்டு, போர்செய்ய வருகிறார்களென்பதைக்
குறித்துத் தமதுமனோபீஷ்டஞ் சித்தித்ததென்று மிகவு
ஞ்சந்தோஷப்பட்டார். அந்த ராக்ஷதர்கள் அநுமானைப்
பார்த்து, இவன் தான் இவன்தானென்றும், இதுதான்
இதுதானென்றும் சொல்லிக்கொண்டே வாயுவைப்பார்
க்கிலும் விசையாக எதிரேநடந்து, பகலானதுஇருண்டு,
இரவாகமாறும்படி அனைவரும்நெருங்கி, சொர்க்கமத்தி
யபாதாளமென்னும் திரிலோகங்களும் நடுநடுங்க ஆ
யுதவர்க்கங்களைப் பிரயோகித்தார்கள். சம்வர்த்தம்-ஆவ
ர்த்தம்-புஷ்கலாவர்த்தம்-சங்காரிதம்-துரோணம் - காள
முகி-நீலவருணமென்கின்ற எழுவகைப்பட்ட மேகங்க
ளும், லவணம்-இக்ஷு-சுரா-சர்ப்பி-ததி-க்ஷீரம்-சுத்தோ
தகமென்கின்ற ஏழுசமுத்திரங்களும் அஞ்சும்படிப் பே
ரிகையைமுழக்கினார்கள். மலைமுழையைப்போலத் தங்
கள்வாயைத்திறந்து அதிலிருந்து புகைதவழும்படிக்கோ
பித்தார்கள். ஆதிசேஷனுடைய பிடரொடியும்படி அடி
பெயர்த்துவைத்து மூங்கிற்காட்டில் அக்கினி கலந்தது
போல ஒன்றாகக்கலந்தார்கள். தர்மமூர்த்தி யாகிய மாரு
தியானவர், யுத்தசன்னத்தராய்வந்த ராக்ஷதர்களை அறிந்
து, தமக்கு அருகில்முறிந்துகிடக்கின்ற ஒரு பெரியமர
த்தையெடுத்து, இது இந்தச்சமயத்தில் நமக்குக் கிடை
க்கப்படாத துணையாகக்கிடைத்ததென்று அதிகமனங்க
ளிப்போடும்கையில்தாங்கிக்கொண்டு, முற்காலத்தில்பா
ற்சமுத்திரத்தைக்கடைந்த மந்தரகிரியைப்போல அந்
தராக்ஷதசேனாசமுத்திரத்தின் மத்தியில் குபீரென்று எ
ழும்பிக்குதித்து, கையிற்கொண்டமரத்தால் மலைகள் பி
ளக்கும்படி இடியிடித்துவிழுகிறதுபோல மோதிமோதி
யடித்தார். அந்தக்ஷணத்தில் எதிர்த்த ராக்ஷதக்கூட்டங்க
ளில் அநேகர் பருத்தபர்வதத்திலிருந்து அருவியாறுகள்
ஒழுகுகிறதுபோலத் தோள்களில்நின்று உதிரவெள்ள
மொழுக, ஒருவரையொருவர் சேர்த்துக் கட்டிக்கொண்
டவர்களும், தலைகள்பிளந்துஉருள்கின்றவர்களும், பறை
க்குச்சமானமாகிய கண்கள் பறியுண்டவர்களும், பிழுந்
து கையுடனே தரையாய்ப் படிந்தவர்களும், கோரதந்
தங்களிழந்தவர்களும், பிடரும் தலையும்பிளந்தவர்களும்

உயிர்நீங்க உடல்சிதைந்தவர்களும், குடர்சரிந்தவர்களும், ஆயுதங்களையெறிந்து சரீரமுழிந்து மறிந்தவர்களும் ஆயுதத்துடனே ஆயுதந்தாக்குதலால் அக்கினிப்பொறியெழுந்து மயிர்கள்தீந்தவர்களும் தொடைகளும் முழங்குந்துணிந்தவர்களும், அஸ்திர சஸ்திரங்கள் ஒடிந்தும். தோள்கள் அறுந்தும்விழுந்தவர்களும். வயிறுபிறண்டவர்களும், மலைகள்சாய்கிறதுபோலக் கால் சாய்ந்தவர்களுமானார்கள். பின்னும்போர்செய்ய இருட்கூட்டத்தைப்போல நெருங்கிவந்தவர்கள் உடனே புழுதியில்விழுந்துபுரண்டு பிராணனையிழந்தார்கள். வில்லையும்-அம்பையும்-தண்டாயுதத்தையும் ஏந்திவந்தவர்கள் அநுமான் உதைத்த உதையினால் மார்புநெரிந்துரத்தங்கக்கினார்கள் பக்கங்கள்தோறுமிருக்கின்ற மலைகளை வேரோடேபறித்துமோதுதலால் அநேகர் குபேரனுடைய அளகாபுரியில்போய்விழுந்தார்கள். அநுமான் வாரியிறைக்க அநேகர் உலகமுழுதுமறையும்படி இறைபட்டார்கள். காகரவென்றுசுழற்றியெறிய அநேகர் சுழன்றுகொண்டேஆகாசத்தில்போய் அங்கிருந்து சமுத்திரத்தில் விழுந்தார்கள், சரீரம் சின்னபின்னப்பட்டு அநேகர் மூலைக்குமூலைஓடினார்கள். கைகொண்டமட்டும் அள்ளியள்ளிஎட்டுத்திக்கிலும் எறியப்பட்டு அநேகர்தேகத்துடனே இவ்வுலகத்தைத்துறந்தார்கள். சிலபேரைப்பிடித்துக் கைகளையும் கால்களையும்பிட்டு எறிந்ததனால் அவர்கள் சிறகறுபட்டுக்கிடக்கின்ற பர்வதங்களைப்போல நிலத்தில் கிடந்தார்கள். சிலபேரை வாலினாற்சுற்றி யெடுத்துவீசுதலால் அவர்கள்பம்பரத்தைப்போல அந்தரத்திற் சுழன்றார்கள். பலராக்ஷதர்களுக்கு-வாள்களும்-விற்களும் - மழுக்களும்-சூலங்களும் இற்று அதுகளைப்பிடித்தகைகளும் தோள்களும்இற்றதுகள். பலராக்ஷதர்களுக்குநக்ஷத்திரங்கள்உதிர்வதுபோலப் பற்கள்பலபலவென்றுதெறித்ததுகள் பலராக்ஷதர்களுக்குத்தலைகளுடைந்துமூளைகள் தெறித்ததுகள். பலராக்ஷதர்களுக்குக்கவசங்களும்வீரகண்டாமணிகளும்சிலம்புகளும் பொன்னரிமாலைகளும் - அநேகவிதமாகிய ரத்னஆரங்களும்குண்டலங்களும்தெறித்ததுகள் பல ராக்ஷதர்களுடைய ஐம்பொறிகளும் கலங்கும்படி தோல்களும் எலும்புகளும் உதிர்ந்ததுகள். பல ராக்ஷதர்களுடைய முற்கரம்-முசுண்டி-சக்கரம்-கப்பணம் மென்னும் ஆயுதவர்க்கங்கள் உதிர்ந்ததுகள். ராக்ஷதர்களுடையஉயிர்பிரிந்துபோம்படி உடல்பிளந்துஉதிர்ந்ததுகள், அவர்கள் தலையில்அணிந்தரத்னமகுடங்களும்உடைந்துஉதிர்ந்ததுகள். ஆஞ்சநேயருடையகால்களினாற்பலபேர்மடிந்தார்கள்கைகளினாற்பலபேர்மடிந்தார்கள், தோள்களினாற் பலபேர்மடிந்தார்கள். தொடைகளினாற் பலபேர்மடிந்தார்கள். கண்களின் கோபாக்கினியினாற் பலபேர்மடிந்தார்கள். கைக்குத்துகளாற் பலபேர் மடிந்தார்கள். தங்கள்தங்கள்வாள்களினாலேயே பலபேர் மடிந்தார்கள். மரங்களினாலேபலபேர்மடிந்தார்கள். சிலபேரைஓடி மேல்விழுந்துஅமுக்கிக்கொன்றார், சிலபேரைஅவர்கள்தேகத்தில் சூக்ஷுமரூபங்கொண்டுநுழைந்து பருத்துக்கொன்றார். சிலபேரை அவர்கள் தேர்க்கொடிக் கம்பத்தினால் ஜாடிக்கொன்றார். சிலபேரைப் பிணமலைகள் தோறும்போய்த் தேடிக்கொன்றார். மற்றும்அந்தராக்ஷதசைநியத்தின்நடுவேபுகுந்து காற்றாடியைப்போல நான்குமூலைகளிலும் சுழன்றுதிரிந்தார். சிலரந்த ஆஞ்சநேயரால் இழுக்கப்பட்டிறந்தார்கள். சிலர் இடிக்கப்பட்டிறந்தார்கள்: சிலர் எடுத்தெறியப்பட்டிறந்தார்கள். சிலர் கைகளால்இறுக்கிப்பிடிக்கப்பட்டிறந்தார்கள். சிலர் அவர் கொக்கரித்ததனால் இறந்தார்கள், சிலர் அவர்அடித்ததனால்மாண்டார்கள். சிலர் அவர் உக்கிரதிருஷ்டியாகக் கண்ணைவிழித்ததனால்மாண்டார்கள். சிலர் அவர்கொல்லுவாரென்கின்ற பயத்தினால்மாண்டார்கள். பின்னும் மாருதியானவர் தம்மை முட்டினவர்களை முட்டியும், கிட்டினவர்களைக்கிட்டியும், கட்டினவர்களைக் கட்டியும், தட்டினவர்களைத் தட்டியும் சமயுத்தஞ்செய்துகொன்றார். அவர் ராக்ஷதர்கள்தம்மைநினையாமல் மறந்தாலுங்கொல்லுவார். மறவாமல்நினைத்தாலுங்கொல்லுவார். பூமியிலிராமல் ஆகாசத்தில்பறந்துபோனாலும் கொல்லுவார். எதிரேநில்லாமல் அப்புறத்தில் ஓடினாலுங்கொல்லுவார். ராக்ஷதர்களுடைய ஆயுதங்களை அதுகள்வருகின்ற வழிகள்தோறும் கையினாற்பிடித்துப்பிசைந்து பிசைந்தெறிவார். நிணமும் மூளையும், சேறும்வண்டலும்போல ரக்தத்துடனே கலந்து லங்கைத்தெருவெல்லாம்நிறைந்துபிரவாகமாகி, கோட்டைவாசல்களினாலே ஓடத்தலைப்பட்டது எப்படியிருந்ததென்றால், அந்தலங்கையானது அநுமானுடையபுஜபராக்கிரமத்தால் அலைச்சற்பட்டுத் தன்வாய்களால்ரத்தங்கக்குகிறதுபோலிருந்தது. வேதத்தையொத்தஅநுமானானவர் காலைக்கொண்டும் கையைக்கொண்டும் வாலைக்கொண்டும் அநேகராக்ஷதர்களைச் சேர்த்துக்கட்டி, மரத்துடனே மோதுதலால் அவர்கள் ஆலையிலிட்ட கரும்புபோல நசுங்குவார்கள். அவர்களுடையரத்தம் அந்தக்கருப்பஞ்சாறுபோலவழிந்து சமுத்திரமென்கின்ற கூனிலேபோய்ப்பாயும். ராக்ஷதர்களை எடுத்தெறிவதனால் அநேகமாளிகைகளும் மண்டபங்களும் கோபுரங்களும்இடிந்துநகர்ந்ததுகள். மதயானைகளும் பிடியானைகளும் குதிரைகளும் அங்கங்கேதானே உதைத்துக்கொண்டு இறந்ததுகள். ஆஞ்சநேயர் தூக்கியெறிந்தவிசையில் அநேகர்தங்கள்வீட்டிலேதானே போய்விழுந்து தங்கள்வீடுகளைத்தாங்களே இடித்து நகர்த்தினார்கள். அநேகர்தங்கள் கால்களால் தங்கள்மனையாட்டிமார்களைத்தாங்களேகொன்றார்கள். அநேகர் தங்களாயுதங்களால் தங்கள்மக்களைத்தாங்களேமடித்தார்கள். அஞ்சனாதேவிபுத்திரரானவர் ராக்ஷதஸ்திரீகள்படுந் துயரத்திற்காக இரக்கப்பட்டு உங்கள்வீட்டை நோக்கிப் போங்களென்று சில ராக்ஷதரை அனுப்பி விட்டார். நவமாகக்கூடிய நாயகிமார்கள் கையில் அவர்கள் உயிரைக் கொடுத்ததுபோலச் சிலராக்ஷதரைக்கொடுத்தார். தங்களைப்பிரிந்து யுத்தத்திற்குவந்ததைக்குறித்து வாடினஸ்திரீகளுக்காக அவர்கள்மாளிகையிற்போய்ச்சேரும்படி சிலராக்ஷதரை போக்கினார். விருக்ஷங்கள்தோறும் தெற்றிகள்தோறும் நாற்சந்திகள்தோறும் கடல்கள்தோறும் கோட்டையிடங்கள்தோறு



ம், தோப்புகள்தோறும், தெருக்கள்தோறும், மடுக்கள் வாவிகள்தோறும், ஏரிகள் ஓடைகள்தோறும், அந்தத் தேசமுழுமையும் ராக்ஷதப்பிணமய மாம்படி செய்தார். அவர்களுடைய உயிர்களையெல்லாம் பிடித்துப் பிடித்து யமனும் கையுஞ்சலித்துக் காலுமோய்ந்தான். மாருதியும் ஜாடுகிறதோ தவிர்கிறதில்லை. நக்ஷத்திர மண்டலத்திலும், மேகமண்டலத்திலும், சொர்க்கத்திலும், மற்றுமுள்ள பலவிதமாகிய பதவிகளிலும் ராக்ஷதர்களுடைய உயிர்கள்போய் நிறைந்ததுகள். இவ்விதமாகிய யுத்தம்நடக்கின்ற சமயத்தில் மதபடியும் ராக்ஷதர்கள் மோகங்கொண்டவர்களைப்போலக் கோபாவேசமாய்வந்து ஆகாசமுழுமையும் எட்டுத் திக்குகளும் மேகங்கள் கவிந்துகொண்டதுபோலக் கவிந்துகொண்டார்கள். அவர்களுக்குமத்தியில் வாயுகுமாரர் மேகத்தின் நடுவிலிருக்கின்ற சூரியனைப்போலப் பிரகாசித்தார். இரைகின்றதனாலும், அலைகின்றதனாலும், பெருத்திருப்பதனாலும், கறுத்துக்காண்பதனாலும் வேல் - வாள்-முதலாகிய ஆயுதங்களும் மச்சங்கள்போல மினங்குதலாலும் ராக்ஷதர்கள் கலங்கியகடல்போலிருந்தார்கள். அநுமானானவர் அந்தக் கடலைக்கடைந்த மந்தரகிரிபோலிருந்தார். ஆஞ்சநேயருடைய வாலினாலும், மெய்யினாலும், காலினாலும், வாயினாலும், மணிமுடிகள் நெரிந்துசிதைந்து மடிந்தராக்ஷதர்களோ! தேவர்கள் நடுங்கும்படி கருடன் அமிர்தகடத்தைக் கொண்டுபோன காலத்தில் அவனால் கொல்லப்பட்டசர்ப்பராஜர்களைப்போலானார்கள். ஆஞ்சநேயரோ! அக்கருடனைப்போலானார். தசைமுதலானதுகளும் அற்றுச் சிதறும்படி துகைத்துக் கொன்றும் குறைவுபடாமலிருக்கின்ற அரக்கர்கள் யானைக்கூட்டத்தையொத்தார்கள். அநுமானானவர் அந்த யானைகளுக்குச் சத்துருவாகிய சிங்கத்தையொத்தார். அம்புகொண்டு எய்ததும், கதைகொண்டு அடித்ததும், சூலங்கொண்டு எறிந்ததும் வாள்கொண்டு அறுத்ததும், கோல்கொண்டு குத்தியதும், சரிகைகொண்டு தோண்டியதும், வேல்கொண்டு துளைத்ததும், கோடாரிகொண்டு பிளந்ததும், சக்கரங்கொண்டு கொய்ததும், பாசங்கொண்டு சுற்றியதும், குறடுகொண்டு பற்றியதும், கலாவைகொண்டு குடைந்ததுமாகிய பலவிதகாயங்களும் அநுமானுடைய புஜத்திலுண்டாயின. விசாலமாகிய சமுத்திரங்களும் மழைபெய்யும் பருவத்தையுடைய மேகக்கூட்டங்களும், அஞ்சும்படி பிரபலமான யுத்தஞ்செய்கின்ற ராக்ஷதர்களுடைய சண்டையின் ஆரவாரத்தைப்பார்க்கிலும் மேலாகிய அநுமானைப் புகழ்கின்ற தேவர்களுடைய ஸ்துதிமுழக்கமே அன்றைப்போரில் அதிகரித்தது தொடுத்த போர்க்கையுடைய ராக்ஷதர்கள் முறை முறையாகவிசையுடனே பிரயோகித்த எத்தனையோகோடி ஆயுதங்கள்பட்ட புண்களும், தேவர்களும், அவர்கள்பத்தினிமார்களும், முனிவர்களும், மழைபோலச் சொரிந்தபுஷ்பங்களும், வாயுபுத்திரருடையதோளில் வேற்றுமைதெரியாமல் விளங்கியிருந்ததுகள். கிழக்கு-தென்கிழக்கு, தெற்கு - தென்மேற்கு, மேற்கு - வடமேற்கு, வடக்கு - வடகிழக்காகிய அஷ்டதிக்குகளிலும்சக்கரம்போலச் சுழல்வதினாலும், ஆகாசத்தில் உயரத் தெழும்புவதினாலும், அங்கிருந்து மலைவருவதுபோலப் பூமியிற்பாய்வதினாலும், கால் ஒடிந்து, கையறுந்து, தோள்முறிந்து, தொடைநெரிந்து, வயிறுகிழிந்து, குடர்கள் சரிந்து, தலைபிளந்து, உடல்நசுங்கி, ராக்ஷதர்களெல்லாம் இறந்தார்களேயல்லாமல் அநுமானுடையசரீரம் சிறிதாவதுவெயர்க்கவுமில்லை, அவர்பெருமூச்செறியவுமில்லை. மனஞ்சலிக்கவுமில்லை. ராவணன் அனுப்புவிக்கும்படி விஷமுண்டவர்களைப்போலமயங்கி அநுமான்மேல் யுத்தஞ்செய்யவந்த ராக்ஷதர்களெல்லாம் இவ்வாறு போராடிமடிந்தார்களேயல்லது அவர்களில் ஒருவராகிலும்பயந்து ஓடவேயில்லை யாகையால் அரக்கரைப்பார்க்கிலும் சுத்தவீரர்கள் ஆரிருக்கின்றார்கள் அந்தக்கிங்கரர்களெல்லாம் ஒருக்ஷணப்பொழுதில் மடிந்துபோகவே, அதுகண்டு கிங்கரவனத்தின் காவலாளர்கள் நடுக்கத்துடனேபுறப்பட்டுக் கைகால்வெறாயில் பயமானது கழுத்தைப் பிடித்துத்தள்ள பிணமலைகளின்மேல் விழுந்துதமோதி எழுந்துசீக்கிரமாக ஓடி ராவணனிடத்திலேபோய்ப் பயத்தினாலே சொல்லுதற்கு நாவெழாமல் விம்மிவிம்மி அநுமானாலே ராக்ஷதர்கள்மடிந்ததைக் கையினாலே காட்டிக்காட்டித் திக்குகளைவெறிக்கவெறிக்கப் பார்த்துச் சஞ்சலப்பட்டார்கள். அவர்கள்படுகின்றவருத்தமே தனக்குத்தெரிவிக்கும்படி ராவணன் அறிந்துகொண்டு என்னடா பேய்ப்பயல்களே! நான் அனுப்பின ராக்ஷதர்களெல்லாம் இறந்துபோனார்களா! அல்லவென்று என்னுடைய ஆக்கினையைக்கடந்து ஓடிப்போனார்களா! அல்லவென்றால் யுத்தஞ்செய்து வெகுதூரமானபடியினாலே அதைமறந்துபோய்த் திரும்பிவந்து விட்டார்களா! நீங்களென் ஓடிவந்தீர்களென்று தன்பத்துவாய்களும் நெருப்பைக்கக்கும்படிக்கேட்க, சுவாமி! அப்படிக்கெல்லாம் வந்தது ஒன்றுமில்லை, தாங்கள் அனுப்பிய கிங்கரர்களெல்லாம் அந்தக்குரங்கினாலே யுத்தகளத்தில் பராக்கிரமமழிந்து அஞ்சாமல்பொய்ச்சாக்ஷிசொன்னவர்களுடையகுலம்போல நிர்மூலமாக மடிந்துபோனார்களென்றுசொன்னார்கள் அதுகேட்டுத் தன்பக்கத்திலிருந்து ஏவல்செய்கின்ற அஷ்டதிக்குப்பாலகர்களாகிய தேவர்களைப்பார்த்து மனதிலே நாணங்கொண்டு இதுவென்ன நீங்கள் அறியவில்லையாவென்று மூன்றுலோகங்களையும் விழுங்கத்தக்கதாகக் கோபாக்கினியானது மூண்டெழச்சொன்னான். அதற்கு அவர்களொன்றும் பேசாமல் பயந்திருந்தார்கள், மறுபடியும்வந்து சொன்னவர்களைப்பார்த்து அந்தக்குரங்கு நம்முடைய ராக்ஷதர்களைக் கொன்றதென்கின்ற வார்த்தை நீங்கள்காதினாலேகேட்டதா! அல்லதுகண்ணினாலே கண்டதா! சொல்லுங்களென்றுகேட்க, ஐயா! நாங்கள் ஒருபக்கத்திலிருந்து பார்த்தோம். சமுத்திரம்போலச் சூழ்ந்துவந்துகொண்ட நம்முடை சேனைகளையெல்லாம் அந்தவானரம் மண்டலாகாரமாகச் சுழன்றுசுழன்று ஒருமரத்தாலே அடித்துமடித்தது இன்னமும் அது ஒழிந்ததல்லவென்று சொன்னார்கள்.

கிங்கரர்வதைப்படலம்-முற்றிற்று.

## ஜம்புமாலிவதைப் படலம்.

அப்போது கைகூப்பிக்கொண்டு எதிரேநிற்கின்ற மலைக்கு ஒப்பாகிய தோள்களையுடைய அதிவீரனாகிய ஜம்புமாலி யென்பவனைப்பார்த்து நீ யிந்தக்ஷணமே யானை குதிரைமுதலாகிய சேனைகளுடனேபோய்வளைத்து அந்தக்குரங்கின் மதத்தையடக்கி அதைப்பிடித்துக் கயிற்றினாலே கட்டிக்கொண்டுவந்து என்முன்பாகவிட்டு என்னுடைய கோபத்தையாற்றென்றுசொன்னான். அந்தவார்த்தைகேட்டுமிகவும் மகிழ்ச்சியாய்ச் சேவித்துக்கொண்டு கணக்கிடப்படாமல் திரண்ட இவ்வளவு ராக்ஷதவீரர்களுக்குமுன் என்னையொரு பொருளாகமதித்து நீ யிந்தக்காரியத்தை முடிக்கவேண்டுமென்று ஏவுதற்க்க பாக்கியம்நான் பெற்றேனே இனி என்னைப்பார்க்கிலும் உயர்ந்தவர்கள் ஆரிருக்கின்றார்களென்றுசொல்லி அந்தலங்காதிபதியாகிய ராவணனுடைய கோபந்தானே நடந்துபோகிறதுபோலத் தன்னுடைய சேனைகளுடனேயும் தனக்கு ராஜாவாகிய ராவணன்கூட்டிய சேனைகளுடனேயும்தன்பிதாவும்ராவணனுடைய முதல்மந்திரியுமாகிய பிரகஸ்தனென்பவன் அனுப்பியசேனைகளுடனேயும்மற்றராக்ஷதசிரேஷ்டர்கள்விட்ட சேனைகளுடனேயும்நமக்கு யுத்தம்வாய்த்ததென்கின்ற சந்தோஷத்தைக் கொண்டு ஜம்புமாலிபுறப்பட்டான். இடிபோலுங் குரலினையும்சிவந்தகண்களையும், தாவள்யமாகிய தந்தங்களையும், வீரபட்டங்கட்டிய நெற்றியையுமுடைய மலைபோல பருத்த யானைக்கூட்டங்களும், மேகமண்டலமட்டும் உயர்ந்தசக்கரங்களையும், தட்டுமொட்டுகளையும், முத்துச சரங்கள் தூக்கிய கொடிச்சீலைகளையுமுடைய ரதக்கூட்டங்களும், காற்றைப்பிடித்துக்கட்டிக் கால்கள்முதலாகிய பலவுறுப்புகளும் ஏற்படுத்தி உயிருங்கொடுத்து எமனை மேலே யேற்றியதற்கு ஒப்பாயிருக்கின்ற புரவிக்கூட்டங்களும், சுழல்கின்றவிழிகளையுடைய புலிகளுக்குச்சமானமாகிய பதாதிக்கூட்டங்களும் நெருங்கவும்,தோமரம்-உலக்கை கட்கம்-கோடாரி-வச்சிரம்-அங்குசம்-சக்தி-சக்கரம்-வில்-அஸ்திரம்-கதை-எறிபீட்டி-இரும்பிற்செய்த நெருஞ்சில்முள்-காலபாசம்-வளைதடி-கவண்கல்-வேல்-பெருஞ்சவளம்-எழு-கழு-முதலாகிய அநேகவித ஆயுதங்கள் பிரகாசிக்கவும், பலபேதமாகிய சித்திரக்கொடிகள் ஆகாசத்தையளாவிக் காடுபோல் அடர்ந்துவரவும், முரசங்கள்-சங்கங்கள்-எக்காளங்கள்-முதலாகிய வாத்தியங்கள் சப்திக்கின்றசப்தமும், தேர்வண்டில்கள் கடகடவென்று ஒலிக்கின்ற ஒலியும், குதிரைகள்கனைக்கின்ற ஓசையும், யானைகள்முழக்குகின்றமுழக்கமும், வில்லின்நாணத்தொனியும், சகலஜீவராசிகளின்செவிகளும், செவிடுபடும்படி அண்டமுகடுமட்டும்போய்த்தேவர்கள் ஒருவர்க்கொருவர் பேசுகின்ற வார்த்தையை விபரந்தெரியாமல் மயக்கவும், அந்தச்சேனை நடக்கும்போது சொர்ணமயமாகிய லங்கையிலிருந்து தூசுகளெழுந்துபோய்ப் படிந்தபடியினாலே மலைகளெல்லாம்மகாமேருபோலவும், நகரங்களெல்லாம்சொர்க்கலோகம்போலவும், ஜொலிக்கவுந் தலைப்பட்டதுகள். பாவியாகிய ஜம்புமாலியினுடைய ரதத்தின்புறத்தில்வந்த தேர்கள் ஒருபதினாயிரம், யானைகள் இருபதினாயிரம், குதிரைகள் நாற்பதினாயிரம், பதாதிகள் எண்பதினாயிரம், அந்தத்தேர்களில் வருகின்றவீரர்கள் பிர்மவம்சத்தில் பிறந்தவர்கள். சதுர்வேதத்தைக்கரைகண்டவர்கள்சமஸ்தமந்திரதந்திரங்களுமறிந்தவர்கள் அபரிமிதமாகியவரம்பெற்றவர்கள்மிகவும்சூரமானவர்கள். மகாபராக்கிரமசாலிகள். வச்சிரஸ்தம்பத்திற்கு ஒப்பாகியதோளினிடத்தில் வில்லைத்தாங்கினவர்கள். முதுகின்புறத்தில் அம்புத்தூணி தூக்கினவர்கள். மார்பில் வெற்றிமாலையும் கவசமுந்தரித்தவர்கள்; யானைமேல்வருகின்றவீரர்கள். திருதியின் வம்சத்திற்பிறந்தவர்கள். ஐராவதமென்னும் வெள்ளையானையை ஏறி நடத்துகின்ற தேவேந்திரனுக்குச் சமானமாகிய அழகினையுடையவர்கள். பலவகை ஆயுதபரீக்ஷையும்அங்குசபரீக்ஷையுந்தேர்ந்திருக்கின்றவர்கள். நெருப்பு ஜொலிக்கின்றகண்களும் சூரியனைப்போலப்பிரகாசிக்கின்றசரீரமுமுடையவர்கள் அஸ்வத்தின்மேல் வருகின்றவீரர்கள் பதினெண்வகைப்பட்டசாரிகையுந் தெரிந்தவர்கள். ஆயுதபரீக்ஷைகளெல்லாம் அறிந்தவர்கள். யுத்தத்தில்முனைந்து ரதவீரர்கள் கஜவீரர்களுடைய சிரசின்மேலும் தாவிச்செல்லும்படிப் புரவியைநடத்தத்தக்கவர்கள். இப்படிப்பட்ட சேனைகளெல்லாம்சூழும்படி அந்தஜம்புமாலியென்பவன் தேவர்களும்பயந்து நடுங்க, அளவில்லாத ஆயுதங்களையேந்திக்கொண்டு கண்களில் நெருப்புப்பறக்க, மார்பிலணிந்த கவசமும் கோத்தங்களும் பிரகாசிக்கவந்தான். அப்போது நந்தனவனத்திலிருந்த அநுமானானவர் ஏனோஇன்னம் ராக்ஷதர்கள் வரவில்லையென்று அவர்கள் வரும்வழியைப்பார்த்து சோலையின்வாசலில் சந்திரன்முதலாகிய கிரகங்களும் நக்ஷத்திரங்களும் மேலேதவழும்படி இந்திரதநுசுபோலத் தோன்றுகின்ற தோரணஸ்தம்பத்தின்மேலேறி அந்தஸ்தம்பத்தில் பதித்திருக்கின்ற நவரத்னங்களும் பொன்னும் ஆகாசத்தில்நிறைந்த இருளைநீக்கிப்பிரகாசிக்கச் சமுத்திரத்தின் நடுவிலே உதயமாகிய சூரியனுக்குச் சமானமாய்விளங்கியிருந்தார். அப்படியிருந்தவர் இடியுடனே மேகங்கள்சிந்தவும், கடலோசையடங்கவும், அஷ்டநாகங்கள் உயிரையும் விஷத்தையுங்கக்கவும், ராக்ஷதர்களுடைய நெஞ்சில் பயம்ஜெனிக்கவும், தேவர்கள் நடுங்கவும், ஸ்ரீராமச்சந்திரனுடைய வில்லின்நாணத்தொனியைப்போலக் கர்ஜிக்க அஷ்டதிக்கிலுமுள்ள ஐராவதம் - புண்டரீகம் - வாமனம் - குமுதம் - அஞ்சனம் - புஷ்பதந்தம் - சார்வபௌமம் - சுப்ரதீப மென்கின்ற யானைகள் மதமடங்கி அசைவற்றிருக்கவும், தென்திசையிலிருக்கின்ற யமனும் மனந்திடுக்கிடவும், ஆகாசத்திலின்னும் நக்ஷத்திரங்கள் பூவுதிர்வதுபோல உதிரவும், பூமியும், அஷ்டகுல பர்வதங்களும் பிளக்கவும், சமுத்திரங்கலங்கவும் தோள்களைக் கொட்டினார். அத்தருணத்தில் ராக்ஷதர்களெல்லாம் சமுத்திரத்தைப்போல ஆர்ப்பரித்து நான்கு திசையிலும், ரத்தப் பிரவாகம் ஓட, மத்தியில் மத்தியில் பிணமலைகள்தங்களைத் தடுப்பதனால



வருவதற்குச் செவ்வையாகிய வழியைக்காணாமல், எந்தவழியால் போவோமென்று சொல்லிக்கொண்டு தங்களினத்தாருடைய சரீரத்தின்மேல் காலிடறிவிழுந்தலைப்பட்டார்கள். ஜம்புமாலியானவன் அவ்விடத்தில் அந்தச்சேனையை வெவ்வேறாக அணிவகுத்து இருபக்கங்களிலும், முன்னும்பின்னும் கிரமம் கிரமமாக முடுகிப்போம்படி ஏவித் தானுந்தன்தேரை நடத்தினான். அதுகண்டு தோரணஸ்தம்பத்தின்மேலிருந்த ஆஞ்சநேயர் தம்முடைய அபீஷ்டம் சித்தித்ததென்றறிந்து தோள்கள் பூரித்து, திருவாழி திருச்சங்கத்தை ஏந்திய ஸ்ரீமந்நாராயணனுடைய திருமண்குறியானது தீபச்சுடர்போலப் பிரகாசிக்கின்ற தமதுநெற்றியே முன்னணியாகவும், தேகத்தில் மெய்ப்பத்திருக்கின்ற ரோமங்களே நடுவணியாகவும், வாலே பின்னணியாகவும், கைகளிலும் கால்களிலுமுள்ள நகங்களே வேல்கள் வாள்களாகவும் தாமும் அவர்களுக்கு எதிரே யுத்தசன்னத்தராய் நின்றார். அதுகண்டு ராக்ஷதர்கள் கோபச்செருக்குற்றவர்களாய் அவர்மேல் சூரியனைப்போல ஒளிவீசுகின்ற அநேகவித ஆயுதங்களைமழைபொழிவதுபோலப் பிரயோகஞ் செய்தார்கள். கறுத்த சமுத்திரத்திற்குச் சமானமாகிய அந்த ராக்ஷதவீரர்கள் பிரயோகித்த ஆயுதங்களையெல்லாம் தமதுசரீரத்தில் ஒன்றாவதுபடவொட்டாமல், கைகளால்பிடித்து ஒடித்துத் தூள்தூளாகும்படிப் பிசைந்து கடலிலெறிந்து அவிட்டு ரோமத்துவாரங்கள்தோறும் அனற்பொறிசிதறும்படி, வடவாமுகாக்கினியைப் போலக் கோபித்துத் தோரணஸ்தம்பத்தைவிட்டு பூமியிலே குதித்துப்பார்க்கும்போது ஒரு எழுவாயுதம் கிடந்தது. அதை யெடுத்துக் கொண்டு ராக்ஷதக்கூட்டத்தில் பிரவேசித்து அவர்தோரணஸ்தம்பத்தின்மே லிருக்கின்றாரென்றும், அதிலிருந்து எழுந்தாரென்றும், நிலத்தில்நிற்கிறாரென்றும், மறுபடி எதிரேவந்தாரென்றும், நான்குபக்கங்களிலும் நிற்கின்றாரென்றும். சண்டை செய்கின்றாரென்றும், அறியாதவர்களாய் எங்கும் திரிந்துகொண்டு விலக்கிக்கொண்டு பொருந்தி நெருங்கிய ராக்ஷதர்களெல்லாம், யுத்தகளத்தில் சின்னபின்னப்படும்படி தாடித்து, அவர்களெறிகின்ற சக்கரமுதலானதுகளையும், எய்கின்ற அஸ்திர முதலானதுகளையும், வல்லடிபோல மேல்வருகின்ற தண்டமுதலானதுகளையும் இடதுகையினாற் பற்றிச் சிதைத்தார், யானைகள் மாயவும் தேர்களழியவும் குதிரைகள்கெடியவும் வலதுகையினால்முத்திக்குமைத்தார். மற்றும் வாயுபுத்திரன் அந்தஎழுவாயுதத்தைக்கொண்டு மோதுதலால் அநேகம் யானைகள், கொம்புகள்ஒடிந்து தும்பிக்கைதுணிந்து காலுமுறிந்து வாலரிந்து செவியறுந்து தொளையடங்கி மதம்வறழ்ந்து மண்டலம்பிளந்து கோபந்தணிந்து மடிந்ததுகள், அநேகமாதங்கள், அச்சொடிந்து மச்சுரிந்தும் கடிபிளந்து முகடுடைந்து மேற்பார் தகர்ந்து பீடுபார் கிழிந்து ஏர்க்கால்முறிந்து குத்துக்கால் துணிந்து, தட்டுச்சிதைந்து கற்றுப்பெயர்ந்து குடைசாய்ந்துகொடிவீழ்ந்து புரவிகள்மடிந்து வலவர்களிறந்து சின்னபின்னமானதுகள். அநேகம் குதிரைகள், இடிப்பொடிந்தும் மண்மேனுருண்டும் நெஞ்சுலர்ந்தும் வாய்புலர்ந்தும் வாலொடிந்தும் கண்குழிந்தும், அஸ்திகள்நெரிந்தும் கால்மடங்கியும் கழுத்துத்துவண்டும் வயிறுபீறுண்டும் மாண்டதுகள். அநேகங்காலாள்கள் பயந்து பிரமித்துத் திட்டென்றுவிழுந்து பொட்டென்றெழுந்து அடியுண்டுமிடியுண்டு ஐம்பொறிகலங்கி அறிவுதடுமாறி உருண்டு சுருண்டு பிராணனோடு தரையிலேதானே உழைத்துக் கொண்டு புழுதியிற்புரண்டார்கள். மற்றும் யானைகளைவாரி யானைகளின்மேல்மோதினார். தேர்களைத் தூக்கித் தேர்களின்மேற்புடைத்தார். குதிரைகளை யெடுத்துக் குதிரைகளின்மேலெறிந்தார். பதாதிகளையள்ளிப் பதாதிகளின்மேலெறிந்தார். ஊனையும் உதிரமும் ஒன்றாகக்கலந்து குழம்பிச்சேறாக அந்தச்சேற்றில் யானைகள்விழுந்து அழுந்தவும் ராக்ஷதவீரர்களுடைய தலைகளும் தோள்களும் அறுபட்டுவிழவும் மிதித்தார். மல்வீரர்களையும் மற்றவீரர்களையும் பிடித்து அவர்களுடைய கோத்தங்களும், கைகளும் விற்களும் வேல்களும் போருக்கு அழைக்கின்ற சொற்களும் உயிரும் தீர்த்துவியாம்படி நிலத்திலிட்டுத் துகைத்தார். நான்குதிக்கிலும் நெருங்கியிருக்கின்றதேர்கள்தோறும் யானைகள்தோறும்புரவிகள்தோறும்பதாதிகள்தோறும் நடந்து நடந்து அநேகசையங்களை மடித்தார். யுகாந்தகால இடியிடித்துவிழுந்தாற்போல அநுமானனவர் உயரவெழும்பிக் குதிரைகளின்முதுகிலேறுதிப்பார். குதிரைகளின்முதுகிலிருந்து ராக்ஷதர்களுடைய மார்பிலேகுதிப்பார். ராக்ஷதர்களுடைய மார்பிலிருந்து ரதங்களின்மேற்குதிப்பார். ரதங்களின்மேலிருந்து மதயானைகளின்மேற்குதிப்பார். இருவினைகளையுங்கடந்தமுத்தாத்மாக்களுடைய அறிவைப்போல ஒருதன்மைப்பட்டிருப்பார். ஸ்தனமுதலாகிய அவயவங்களைச் சகலருக்கும் பொருளுக்கு ஏங்குகின்றவேசையர்களுடைய மனதைப்போலப் பலதன்மையாகக் காணப்படுவார். காற்றாடியைப்போலச் சுழன்று சுழன்று திரிவார். ஸ்ரீமந்நாராயணனுடைய தாசபூதர்கள் அவனுடைய குணநிசயத்தைப்பெறுவாரக வென்கின்ற வேதப் பிரமாணத்தைப் பிரத்தியக்ஷப்படுத்துகின்றவனைப்போல, ரகுநாயகருக்கு அடிமையாகிய ஆஞ்சநேயர், பூமியிலும் ஆகாசத்திலும் எட்டுத்திக்கிலும் பார்த்தவர்களுடைய கண்ணிலும் நினைத்தவர்களுடைய மனதிலும் எங்கெங்கும் தாமாய்க்கலந்திருந்தார். தேர்களை அதுகளிற்கட்டிய கொடி குடைமுதலாகிய பலவகை யுறுப்புகளுடனும், பூட்டியபுரவிகளுடனும், மேவியிருக்கின்ற ரதிகர்களுடனும் நடத்துகின்ற சாரதிகளுடனும், ஒருகையினாலெடுத்து அடித்து நிலத்திலிட்டு அரைத்தார். மதயானைகளை அதுகளின்மேல்வைத்த அம்பாரிகளுடனும், அதுகளின்மேலிருக்கின்ற வீரர்களுடனும், அதுகளைச் செலுத்துகின்ற பாகர்களுடனும், ஒருகையினாற் பிடித்துப்பிசைந்து உயிர்சோரும்படிப் பிழிந்தார். கறுத்த நிறத்தையும், வக்கிரதந்தங்களையும், எரியெழும்படி விழிக்கின்றகண்களையும், கைகளிற்சூலத்தையும், பாசத்தையுமுடையவர்களாய்க் கோரமாகத்துடனேயமனைப்போலவந்தராக்ஷதர்களை எ

ல்லாம் ருத்திரமூர்த்தியைப்போலத்தனித்தனிஉதைத்து உதைத்துக்கொன்றார்சக்கரங்கள்தோமரங்கள்-உலக்கைகள்தண்டுகள்வேல்கள்வாள்களும்-குடைகள்-கொடிகள் ஆலவட்டங்கள்-சாமரங்களும்-தேர்கள்-யானைகள்-குதிரைகள்-பதாதிகளும் சின்னபின்னப்பட்டு ரத்த ஆற்றின் அலைகள்புரட்டி யுருட்டும்படிப் போய்ச் சமுத்திரத்தில் விழுந்ததுகள். அநுமான்கையி லிருக்கின்ற இருப்புலக்கையின் அடிபட்டு ராக்ஷதர்களுடைய தலைகளெழும்பி, அண்டத்தை யெட்டி மலைகளைமுட்டித் திசைகளைக் கிட்டி ஒன்றோடொன்று ஒட்டிக் கட்டு முட்டாடி யதுகள். இப்படியாகக் கூடவந்தயானைக்கூட்டங்களெல்லாம் ஒரு உக்கிரசிங்கத்தினாற் கொல்லப்பட்டு இறக்கும்படித் தனித்துநிற்கின்ற மதயானையைப்போல, ஜம்புமாலி யென்பவன் தன்னைச்சூழ்ந்துவந்த சேனைகளெல்லாம் அநுமானாலே இம்சிக்கப்பட்டுமாண்டுபோகத்தான்மாத்திரம் தனியேநின்று எமனைப்போலக்கண்கள் அக்கினியைச்சொரிய அதிககோபங்கொண்டு அந்த ரணகளத்தில் மடிந்த யானைகள் குதிரைகள் ராக்ஷதர்களுடைய ரக்தநதியில்மூழ்கி வினைச்சேற்றில் தன்தேர் வண்டில் அழுந்தி அப்புறம்பெயராமல் நின்றநிலைமையைஅறிந்து அதைவிட்டு விலகிப்போவதற்கும் வேறொருவெளியிடங்கிடையாமல் எங்கும் அலைந்துதடுமாறி மஹா பிரயாசத் துடனே ரதத்தைநடத்திக்கொண்டுவந்தான். அப்படிவந்த ஜம்புமாலியைப்பார்த்து, ஸ்ரீராமதூதரானவர் ஒருவார்த்தை சொல்லுகின்றார். அடாராட்சதா? உன்கையிலேந்திய ஆயுதமும் ஒன்றே நீ ஏறியதேரும் ஒன்றேயாகையால் நீயேகவும் இளைத்தவனாயிருக்கின்றாய். இவ்விதமாக இளைத்த எளியவருடன் சண்டைசெய்து பிராணனைவாங்குகிறது நீதியல்ல. கூடவந்தவர்களையும் ரக்ஷிக்கத்தக்கசக்தி யுனக்கில்லாமல் பின்னிட்டுநின்றாய், எதிர்த்தால், எப்படியும் இக்ஷணமே யிறந்துபோவையே யல்லாமல் வேறென்னசெய்வாய்! ஆதலால் வேண்டாம் சும்மாத்தப்பிப் போய்விடென்றுசொன்னார். அதுகேட்ட ஜம்புமாலியானவன் அப்படியா! உன்னுடையவீரம் நல்லதுதான் நல்லதுதானென்று நெருப்பெழும்படிநகைத்து இப்பொழுது உன்னை ஜெயிக்கமாட்டாமல் உன்னாலே இறந்துபோன இந்தச்சோம்பேறிகளைப்போலவா என்னையும் நினைத்துக்கொண்டாயென்றுசொல்லி, தன்னுடைய பலம்பொருந்தியவில்லிலே சரணைபற்றி ஒளிவீசுகின்ற பாணங்களை ஒன்று பத்து நூறு ஆயிரம் பதினாயிரம் லட்சம்கோடியாகப் பூட்டிப்பிரயோகஞ்செய்தான். அப்படிப் பிரயோகித்த ஜம்புமாலியை ஆஞ்சநேயர் பார்த்து அடாதுஷ்டா! நீ சும்மாவிராதே. இன்னமும் பாணங்களைப் பிரயோகஞ் செய். செய். கையிலேவில்லம்புமுதலாகிய ஆயுதங்களையுடையவனாயிருக்கிறவன் நிராயுதனை ஜெயிப்பது அருமையா! அருமையல்லவென்றுசொல்லி நகைத்துக் காற்றினால் பலதிசைகளிலும் சிதறிப்போகின்ற மேகத்தைப்போலச் சிதறிப்போம்படி, அவனெய்யப்பட்ட பாணங்களையெல்லாம் தமதுகையிற்கொண்ட இருப்புலக்கையினால் சின்ன பின்னப்படுத்தினார். ஜம்புமாலி தன்னால்பிரயோகிக்கப்பட்டு முன்னும் பின்னுமாய்ப் போகிய அஸ்திரங்கள் அநுமானுடைய தேகத்திற் படாமல் முறிந்துவிழுந்ததுகண்டு, அதிககோபதாபங் கொண்டு தன்னுடையரதத்தை அநுமான்மேல் செலுத்தும்படி எத்தனப்பட்டு, போகிறதற்கு வழிதுறை காணுதவனாய்த் திகைத்து முன்னிருந்த இடத்திலேதானே இருந்து அக்கினியைக்கக்குகின்ற ஒரு அர்த்தசந்திரபாணத்தைவிட்டு ஸ்ரீராமதூதருடைய கையிலிருந்த அந்த இருப்புலக்கையைக் கண்டதுண்டமாக்கினான். இருப்புலக்கையானது பொடிபட்டதுகண்டுஎங்களாண்டவனாகியஆஞ்சனேயர் சற்றேமனஞ்சலித்து மற்றும் அவனெய்கின்ற பாணங்களையெல்லாம் ஒருமிக்கக் கையினால்பிடித்து மடக்கிமுடித்து கொளுத்தி எறிந்துவிட்டுத் தேவர்கள்பார்த்துச்சந்தோஷித்து ஆர்ப்பரிக்கும்படி அவனுடைய தேரின்மேல்பாய்ந்து கரவடத்தை யுடைய அந்த ஜம்புமாலியின் கைவில்லை எட்டிப்பறித்து அவனெழுத்திலே மாட்டி விசையாகத்திருப்பி முறுக்கி இழுத்தார். இழுத்தமாத்திரத்தில் பெரியமலையற்று மறிந்து விழுகிறதுபோல அவன்தலையற்று மண்மேல்விழுந்தது. உடனே அவனுடையதேரும் சாரதியும் புரவியும் முறிந்து நெரிந்து சிதைந்து குழம்பாகும்படி சீச்சீயென்று எழும்பிக்குதித்து மிதித்துத் துவைத்துவிட்டு மறுபடியும் அந்த உன்னதமாகிய தோரணஸ்தம்பத்தின்மேல்வந்து ஏறிக்கொண்டார். அவரைப்பழித்துக்கொண்டுவந்து போர்செய்துமாய்ந்த ராக்ஷதர்களைக்கண்டு தேவர்களெல்லாம் பயந்து ஓடிப்போனார்கள். தங்களைப் பிரிந்ததனால் துக்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற மனையாட்டிமார்களாகிய ராட்சதிகள் காணும்படி, அவர்கள் நாயகன்மார்களுடைய பிணமாகிய உடல்களை உதிர ஆறானது இழுத்துக்கொண்டுபோய் விடுகின்றதுமன்றிய லங்கையிலுள்ளவர்களெல்லாம் அஞ்சியோடினார்கள். இறந்த ராட்சதர்களுக்காக ராட்சதஸ்திரீகள் அங்கங்கே அழத் தொடங்கினார்கள். இப்போது இந்தஅநுமானாலே ராட்சதர்களுடையபலமழிந்ததென்று தர்மதேவதை சந்தோஷித்தது. அச்சமயத்தில் அந்தப்பூங்காவனத்தைக்காக்கின்றராக்ஷதர்கள்,ராவணனைச்சமுகத்திற்குச் சீக்கிரமாகப்போய்ப் பயத்தினால் வாய்விட்டு ஒன்றுஞ்சொல்லமாட்டாமல் விக்கிவிக்கித்தேம்பி அழுதுகொண்டுநின்றார்கள், அதுகண்டு லங்கேஸ்வரன்நகைத்துப்பயப்படாதேசொல்லுங்களென்றுசொல்லச்சுவாமீ! நம்முடையகுலத்தாரெல்லாம் மாண்டுபோனார்கள் அவர்களுடனேகூட ஜம்புமாலியும் இறந்துபோனான்.அந்த ஒருகுரங்குதான் அத்தனைபேர்களையும் மாய்த்துவிட்டதென்று சொன்னார்கள். இந்தச்சொல சொல்லும்பொழுதே கோபாக்கினியானது திக் - திக்கென்று எரிந்து ஓங்கியெழும்படி இந்தச்செய்தியைக்கேட்க நீளக்கண்களிலிருந்து ரக்தம்குபிரிட்டுப்பாய, அப்படிப்பட்டகுரங்கைச்சீக்கிரத்தில்நானேபோய்ப் பிடித்துவருகிறேனென்றுசொன்னான். அதுகேட்டு விரூபாட்சன் யூபாட்சன் துர்த்தரஷன் பிரகஸ்தன் பாசகர்ணனென்கின்ற பஞ்சசேனாபதிகள் திடுக்கென் றெழுந்து கைகட்டி வாய்புதைத்துக்கொண்டு சொல்லுகின்றார்கள்.

ஜம்புமாலிவதைப்படலம்-முற்றிற்று.



## பஞ்சசேனாபதிகள்வதைப்படலம்.

கேளுமையா! திரிலோகபயங்கரனாயிருக்கின்ற பிரதாபலங்கேஸ்வரா! சிலந்திப் பூச்சியைப்பிடித்துத்தின்கின்ற சொற்பமாகிய ஒருகுரங்கின்மேல் தேவரீர் படையெடுத்துப்போவீரோயாமாகில் பூர்வம் நீர்செய்த யுத்தத்தில் உம்முடைய நேத்திரத்திலிருந்து மூண்டெழுந்த கோபாக்கினியினாலே மதம்வற்றிக்கிடக்கின்ற திக்கஜங்களுக்கு மதமுண்டாகும், மேலும் மகத்தாகிய பராக்கிரமத்தையுடைய கருடனானவன் ஒருசிறிய மசகத்தை லக்ஷியம் பண்ணிக்கொண்டு அதன்மேல் யுத்தத்திற்குப் போகிறதுபோல நீ ரிந்தக்குரங்கை ஒருபொருளாகமதித்துக்கொண்டு யுத்தத்திற்குப்போனால் இரவும் பகலும், உம்முடையபுஜபலத்தைநினைத்துத் துக்கப்பட்டுக்கொண்டிருக்கின்ற கைலாசபர்வதத்திற்கும் துக்க நிவாரணமாகும். அதனால் உமக்கு மோக்ஷசாம்பிராஜ்யம் வருகின்றதென்ன! ஒன்றுவது இழிவாகிய செய்கையையுடையவர்களா யிருந்தவர்களெல்லாம் பெறுகின்றபேறுயாதொன்றையுங் கண்ணிலும்காணமல் காதிலும் கேளாமலேபோய்விட்டார்கள். மேலும் இதற்குச் சமானமாகிய இழிவுவேறென்ன இருக்கின்றது! ஆகையால் நீரந்தக்குரங்கின்மேல் போர்செய்யப் போவதனால் உம்முடைய பெருமை யிவ்வளவென்று தெரியாமல் நடுங்குகின்ற திரிமூர்த்திகளுடைய முகங்களிலும் சிரிப்புண்டாகும் அதுவுமல்லாமல் பார்க்கிறவர்கள் கேட்கிறவர்களுக்கு வேறே யும்மிடத்தில் பலசாலிகளில்லையென்பதாகவுந்தோன்றும். முன்பு வீரமில்லாத பலவீனர்களை யனுப்பினீர் போனதுபோகட்டும், இனியாவது நன்மையைப் பெற வேண்டுமென்று குறித்தீரோயாகில் எங்களுக்குச்செலவு கொடுத்தனுப்பும்அப்பொழுது எங்கள்சாமர்த்தியம்தெரியவருமென்று சொல்லிக் கைகளையெடுத்து அஞ்சலி செய்தார்கள். அதற்கு ராவணன் சம்மதித்தான். அத்தருணத்தில் திரிலோகாதிபத்தியமுந்தங்கள்வசமாகப்பெற்றவர்கள்போலப் பஞ்சசேனைபதிகள் சந்தோஷித்தவர்களாய் நெற்றியிலணிந்த திலகமானது நிலத்திற்பொருந்தும்படித் தாழக்குனிந்து பின்னும் பின்னும் பலதரஞ் சேவித்துக்கொண்டு ராவணனுடைய சபாமண்டபத்தை விட்டு வெளியிலேவந்து எண்ணிக்கையில்லாத ரதகெஜ துரகபதாதிகள் சீக்கிரத்தில்வந்து சேரவேண்டுமென்றுசொல்லி யானையின்மேல் பேரிகை யறைவித்தார்கள். அந்தக்ஷணமே நால்வகைச்சேனைகளும் சமுத்திரம்போலவந்து எங்கும் பரந்து நிறைந்ததுகள். மேக கர்ஜிதம் போல ரணமுரசு முதலாகிய சகலவித வாத்தியங்களும் முழங்கின நானாவிதமான ஆயுதங்களும் மின்னல்போல நெருங்கிவர வெள்ளைக்கொடிகள் மேகத்தின் வயிற்றைத் துளைத்துக்கொண்டுபோய் அநுமானாலே கோபிக்கப்பட்டு இறந்துபோன சத்துருக்களுடைய கீர்த்தியானது பரந்ததுபோலவும் சண்டமாருத மென்கின்ற காற்றானது மோதும்படி ஆகாசகங்கையின் அலைகளெழுந்து புரண்டதுபோலவும் வானமுழுது மறையப்பரந்து அசைய, ராக்ஷதர்களெல்லாம் வீரகண்டாமணிகட்டி மார்க்கவசம்பூண்டு அரைக்கச்சை யிறுக்கி பலவிதமாகிய அஸ்திரங்களைநிறைத்த அம்புப்புட்டிலை முதுகின்புறத்திற்சாத்தி வில்லேந்திப் போர்க்கோலங்கொண்டு தேர்கள் யானைகள் புரவிகள்முதலாகிய வாகனங்களை அலங்காரஞ்செய்து அதுகளின்மேலேறிப் பிரயாணப் பட்டார்கள். அந்தச்சேனையிலிருக்கின்ற யானைகளின் மதங்கள்பெருகிப் பூமியிற்பாய்தலால் அநேக ஆறுகளுண்டாகிய துகள் அதுகளில் சககரங்கள் அமிழத் தேர்களோடுதலால் அந்த ஆறுகள்வற்றிச் சேறாகியதுகள் அதில் குளம்புகள்புதியக் குதிரைகளோடுதலால் அந்தச்சேறு புலர்ந்து நீறாகியது. அதில் குதிரைகளின் வாய்நுரை வழிந்து விழுதலால் அந்த நீறுநனைந்து வேறாகியது. தேர்களின் முழக்கமும், குதிரைகளின் முழக்கமும், யானைகளின்முழக்கமும், வீரகண்டாமணிகளின் முழக்கமும், புரவிகளுடைய கிண்கிணிமாலைகளின் முழக்கமும், பிரளயகால சமுத்திரமுழக்கத்திலும் மூன்றுமடங்கு அதிகமாய் முழங்கியதுகள். தேர்கள் ஐம்பதினாயிரம், யானைகள் ஐம்பதினாயிரமும், குதிரைகள் நூறாயிரமும், பதாதிகள் இருநூறாயிரமும், சூழத்தலைப்பட்டதுகள். ராவணனானவன்மேன்மேலும் அழைத்தனுப்புந்தோறும் அழைத்தனுப்புந்தோறும் திரண்டசேனைப்பிரவாகம்வந்து சஞ்சரிப்பதற்கு இடமில்லாமல் நெருங்குதலால் அந்தச்சேனைவீரர்களுடையஆயுதங்களோடேயாயுதங்கள் பட்டிழைந்துமேகக்கூட்டங்களுந் தீந்துபோம்படி நெருப்புப்பொறிகளெழுந்ததுகள். யானைகளின் பக்கங்களில் தொங்கவிட்டிருக்கின்ற மணிகள் மேகங்களினிடத்திலிருந்து இடியிடிக்கிறதுபோல மிகவும் ஒலிக்கத்தலைப்பட்டதுகள். இவ்வாறாகப் பிரயாணப்பட்ட சேனைகளிலுள்ள ராக்ஷதர்களை அவர்கள்கொண்ட பெண்சாதிமார்களும், அவர்கள்வயிற்றிற்பிறந்த புத்திரிமார்களும், அவர்களைப்பெற்றெடுத்த தாய்மார்களும், அவர்களுக்கு மற்றுமுண்டாகிய உறவின்முறையார் சகலமானவர்களும் ஓடிவந்துதடுத்து முன்பு அக்குரங்கின்முன்னே போனவர்களில் ஒருவராவது உயிர்தப்பி மீண்டுவரவேயில்லை அப்படியிருக்க இப்போது நீங்களும்போகிறபடியினாலே நாங்களும் உங்களுடனேகூட வருகிறோமென்று இரங்கிப்புலம்பியழுதார்கள். அந்தச்சேனைசமுத்திரத்தின் நடுவே பஞ்சமகாபூதங்களைப்போலவும் ஐந்துதேரின்மேல் ஐந்துசூரியர்கள் வருகிறதுபோலவும், பஞ்சசேனாபதிகள்பேரிகைபூரிகை எக்காளம் பேப்க்கதளம் சல்லரி எல்லரி கடாரி தம்பட்டம் தாளம் மத்தளமுதலாகிய பலவாத்தியங்களும்முழங்க கோபாக்கினிபொழிகின்ற இடிமுழக்கம்போல வில்லின்குணத்தொனி யெழுப்பிக்கொண்டுவந்தார்கள் அவர்கள் எப்படிப்பட்டவர்களென்றால் முனிவர்களுக்கும் தேவர்களுக்கும் சார்வகாலமும் பஞ்சேந்திரியங்களைப் போலச் சத்துருத்வத்தைக்கொண்டு உபத்திரவஞ்செய்கின்றவர்கள். யுத்தஞ்செய்கின்ற சமயத்தில் இந்திரனுடைய வச்சிராயுதமும், வருணனுடையபாசமும் எமனுடையதண்டமும், சிவனுடையசூலமு மென்னப்பட்ட

தெய்விகமாகிய ஆயுதங்களெல்லாம் ஒரு ஊசி நுனைமுத்தக்க சொற்பமாகிய வடிவுஞ்செய்யமாட்டாத புஜபலத்தையுடையவர்கள். சூரபத்மனைச் சங்கரித்த சுப்பிரமணியரானவர் ஏறுகின்றவாகனமாகிய மயிலின் கலாபத்திலுள்ள இறகையும் சகலலோகங்களையுஞ் சிருஷ்டித்த பிர்மதேவர் ஏறுகின்றவாகனமாகிய அன்னத்தின் சிறகிலுள்ள இறகையும்பறித்து மத்தியில்மத்தியில்வைத்துமுறுக்கித்தொடுத்துத் தலையிலும் நெற்றியிலும் விருதுகளாகக் கட்டிக்கொண்டிருக்கின்றவர்கள். பூர்வத்தில் குபேரனுடனேசண்டைசெய்து அவன் புறங்கொடுத்துப்போக அவனுடையபட்டணத்திலிருந்துகொள்ளையிட்டுக்கொண்டுவந்தநானாவித பூஷணங்களையும் பூண்டிருக்கின்றவர்கள். போரிலேதோற்ற இந்திரனானவன் பயத்தினால் ஐராவதத்தை விசையாகநடத்திக்கொண்டு போனதுகண்டு அதன்வால்முனையைப் பின்புறத்திலிருந்து பிடித்துக்கொண்டு அடா! இந்திரா! நீ நடத்தத்தக்க சாமர்த்தியமுடையவனானால் எதோ நடத்தடா பார்ப்போமென்றுசொல்லி யிழுத்துவந்த பராக்கிரம முடையவர்கள். பிர்மாவினுடையசொல்லினால் எமனானவன் உம்முடைய ஆக்கினையைக்கடந்து நடக்கின்றானென்றுசொல்லக்கேட்டு ராவணனுக்குக் கோபமுண்டெழுந்ததுகண்டு அந்தயமனை அதிவேகமாகப்போய் இறுகக்கட்டிக்கொண்டுவந்து ராவணன்முன்னேவிட்டு அவன் கோபத்தைத் தணித்தவர்கள். கைலை-இமயம்-மந்தரம்-விந்தியம்-நிஷதம்-ஏமகூடம்-நீலகிரி-கந்தமாதனமாகிய அஷ்டகிரிகளையும் நகைக்கின்ற விசாலமானமார்பினையும் உயர்ந்தெழுகின்ற கடலலைகளை நகைக்கின்றபெரியதோள்களையும் எமனுடைய கொலைத்தொழிலை நகைக்கின்ற கொடூரமாகிய கொலைத்தொழிலையும், கொல்லனானவன் துருத்திகொண்டு ஊதுகின்ற உலைக்களத்தைநகைக்கின்ற அக்கினியைக்கக்குங்கண்களையுமுடையவர்கள். யுகாந்தகாலாக்கினியானது ஜுவாலாமாலையாயெரிந்துகொண்டுவந்தாலும் யுகாந்தகாலமாருதமானது மோதியடித்தாலும் யுகாந்தகாலசமுத்திரம்பொங்கிப் புரண்டெழுந்தாலும் எவ்வளவும் உபத்திரவமென்பதே யில்லாமல் திரப்பமாய்த் திக்குகள்தோறுஞ் சஞ்சரிக்கின்றவர்கள். இப்படிப்பட்ட தன்மையையுடைய அந்தப் பஞ்சசேனாபதிகள் தங்களைச்சூழ்ந்துவந்த சேனைகளுடனே அநுமான் ஏறியிருக்கின்ற தோரணஸ்தம்பத்தின் சமீபத்தில்போய்ச் சுற்றி மொய்த்துக்கொண்டு சேனைகளை அணிவகுத்துயுத்தங்கட்டினார்கள். ஸ்ரீராமதூதராகிய ஆஞ்சநேயரும் அவர்களுடைய நிலைமையைத் தமது ஞானத்தாற் கண்டார். அப்படிப்பார்த்த சிறிய திருவடிகளாகிய அநுமானை அந்த ராக்ஷதர்கள் தலையை எடுத்துப்பார்த்து ஆ! ஆ! இதைப்பார்த்தால் மிகவும் அற்பமாகிய குரங்காகக் காண்கின்றது. இது தேவர்களுடைய கீர்த்தியை வேருடனே நாசமாம்படிசெய்த மகாபலிஷ்டர்களாகிய ராக்ஷதேந்திரர்களை யுத்தத்திலேவென்று நிர்மூலமாகக்கொன்று அவர்களுடைய கீர்த்தியையுங்கெடுத்ததேயென்றுசொல்லி, அதிசயமுற்றுச் சந்தேகப்பட்டார்கள். அந்தச்சமயத்திலே அஞ்சனாதேவிபுத்திரரானவர் தேவேந்திரனுடைய பட்டணமாகிய அமராவதியின்வாசலில் இருந்துகொண்டுவந்து ராவணனுடைய சிங்காரத்தோட்டத்தினிடத்தில் நாட்டியிருக்கின்ற தோரணஸ்தம்பத்திலிருந்தபடியே யிருந்து, அண்டமுகட்டையுந்தாண்டி யப்புறத்திலும் ஊடுருவும்படிப்பெருத்து உயர்ந்த விஸ்வரூபங் கொண்டார். அவ்வண்ணமாகவிஸ்வரூபங்கொண்ட ஆஞ்சநேயரைக்கண்டு ராக்ஷதர்கள் ஆச்சரியப்பட்டு மகத்தாகிய உக்கிரகோபங்கொண்டு விற்களை வளைத்து அபரிமிதமாகிய அஸ்திரசஸ்திரங்களைப் பிரயோகஞ்செய்தார்கள். இடம்புரிச்சங்கம், வலம்புரிச்சங்கம், தவளச்சங்கம், கொட்டைச்சங்கம், வெற்றிச்சங்கங்கள் ஒலித்ததுகள். ரணபேரி-ஜெயபேரி-மங்களபேரி-வெண்கலபேரிகள் முழங்கியதுகள். மற்றும் அந்த ராக்ஷதவீரர்கள் அனற்பொறிகளைச் சிதறிப் புகைந்தெழுகின்ற எண்ணிறந்த ஆயுதங்களைக்கொண்டு எய்தார்கள்-எறிந்தார்கள்-கொய்தார்கள்-குத்தினார்கள்-வெட்டினார்கள்-கட்டினார்கள்-எற்றினார்கள்-சுற்றினார்கள்-அதுகளெல்லாம் என்னையாகிய அநுமானுடைய ரோமங்கள் நெருங்கிய சரீரத்தினுண்டாகிய தினவுதிரும்படி சொறிந்ததுபோல இதமாயிருந்ததனால் அவருக்கு நித்திரைவந்தது. அதுகண்டு ராக்ஷதர்கள் அம்மம்மா! இந்தக்குரங்கு நம்முடைய ஆயுதங்களையெல்லாம் கொஞ்சமாவதால் ஹிம்சைசெய்யவில்லையென்று மனஞ்சொருக்கி நெருக்கிப்பின்னும் தோமரம் எறி சக்கரம்-பிண்டிபாலம்-மழு-எழு-முதலாகிய கோடா கோடி ஆயுதங்களை ஓயாமல் மழைபோலப்பொழிந்தது கண்டு அநுமானானவர் மற்றுமுள்ள ராக்ஷதர்களெல்லாம் வந்துமாயும்படி இவர்களையெல்லாம் அதிசீக்கிரத்தில் எற்றிக்கொல்லுவோமென்று சித்தப்படுத்திக்கொண்டு ஒரு ஆயுதமும் இந்தச்சமயத்தில் கிடைக்கவில்லையேயென்று நினைக்கும்போது ராக்ஷதவீரனொருவன் தம்மேல் எறிந்த எழுத்தடியை எழும்பிப்பிடித்துக்கொண்டு அதனால் அநேகயானைகளையும், குதிரைகளையும் தேர்களையும், ராக்ஷதவீரர்களையும், அடித்தடித்துத் தும்சஞ்செய்துகொன்றார். அப்பால் மதயானைகளினுடைய கொம்புகளைமுறித்து அதுகளையே கையில் ஆயுதமாக ஏந்திக்கொண்டு மோதிமோதிப் பலதேர்களை உடைத்தெறிந்தார். அந்தத்தேர்வண்டிலைக் கழற்றியெடுத்து உருட்டியுருட்டி வெகுவீரர்களைக்கொன்றார். அந்தவீரர்களுடைய கைவாளை எட்டிப்பறித்து ஓங்கிவெட்டிவெட்டி மிகமற்ற குதிரைகளைக்கொன்றார். இரண்டுகையிலும் இரண்டு ரதங்களை வாரியெடுத்து எதிரேவருகின்ற இரண்டுமதயானைகளை மோதிக்கொன்றார். இரண்டுயானைகளைத் தூக்கியெடுத்து இரண்டுபக்கத்திலும் வருகின்ற குதிரைகளை யெற்றிக்கொன்றார். ஒருமலையைப்பிடுங்கி யெறிந்து ஆயிரந்தேர்களை மைபோல அரைத்துவிட்டார். ஒருமரத்தினால் ஆயிரம் யானைகளை ஒருக்ஷணப்பொழுதிலே மடித்துவிட்டார்பின்னும்யானைப்படைகளை விசையாயோடி உதைப்பார் தேர்ப்படைகளை உருவழியும்படி கலக்குவார். புரவிப்படைகளை இடிப்பொடியும்படி மிதிப்பார் பதாதி



ப்படைகளைப்பூமியிலிட்டுத்தேய்ப்பார் அநேகராக்ஷதர்களை இருப்புலக்கையால் அடித்துமண்ணிலே உருட்டித்தள்ளுவார். அநேகருடையதலைகளின்மேற்போய்க்குதித்துப்பல்லினாற்கடித்துக் கையினாற்குத்துவார். தேர்களையும் யானைகளையும் எடுத்துப்பந்துபோல அஷ்டதிக்குகளிலும் ஆகாசத்திலும் விட்டெறிவார். குதிரைகளையும் ராக்ஷதர்களையும் அவர்களுடைய ஆயுதங்களுடனே கையினாற்பிடித்து மாப்பிசைகிறதுபோலப் பிசைந்தெறிவார். நீண்ட தும்பிக்கையையுடைய மதயானைகளைக் கையிலெடுத்து எறிய, அதுகள் கடலிலே அமிழ்கின்ற கப்பலைப்போல ரத்தப்பிரவாகத்தில்விழுந்து அழுந்தியதுகள். அநுமான் தேர்களைவாரிச் சமுத்திரத்திலெறிய அதுகள் அக்கடலிலிருந்து உதயமாகின்ற சூரியனுடைய ரதம்போல விழுந்து அழுந்தி மேலேகிளம்பியதுகள். அளவிறந்த குதிரைகளை எடுத்தெறிய அதுகள் ஆகாசத்தில் போய்முட்டி வாயினால் ரத்தங் கக்கிக்கொண்டு சமுத்திரத்தில்வந்துவிழுந்து, அங்குள்ள வடவாமுகாக்கினியைப்போல மேலேமிதக்கத் தலைப்பட்டதுகள். ராக்ஷதர்களைவாலினாலே சுற்றி வரிந்துகட்டிவீசுதலால் அவர்கள்வந்து சமுத்திரத்திலேவிழுந்து, மந்தரகிரியைவாசுகியென்னும் பாம்பினாற்கட்டி அதிலிட்டுக் கடையும்போது அதுசுழன்றதுபோலச் சுழன்றார்கள். சுத்தவீரராகிய ஆஞ்சநேயர் எடுத்துவீசும்படிச் சமுத்திரத்திற்போய்விழுந்த யானைகள் தேர்கள் குதிரைகளை ரத்தநதியானது இழுத்துக்கொண்டோட, அதுகள் லங்கையிலேபோய்ப்புகுந்ததுகள். அர்த்தசந்திரனுக்குச்சமானமாகிய வக்கிரதந்தங்களையும், பிலத்துவாரத்திற்கு ஒப்பாகிய ஆழ்ந்தவாயினையும், அக்கினிப்பொறியையும் உதிரத்தையும் கக்குகின்ற நேத்திரங்களையும், கைகளில் ஆயுதங்களையுமுடைய ராக்ஷதப்பிணங்கள், அநுமானேறியிருக்கின்ற மகரதோரணஸ்தம்பத்தையும் மறைக்கும்படி ஆகாசபரியந்தம் மலைபோலக்குவிந்ததுகள். ஆஞ்சநேயருக்கு மலைகளும் மரங்களும் இருப்புலக்கையுமே ஆயுதங்களாயிருக்கின்றதுகள். மேலும் அவருடையகைகளுங்கால்களும் வாலுமிருக்கின்றதுகள். அவர் கொல்லுகிறதற்குப் பலவகை ஏதுக்களுமிருக்கின்றதுகள். அவராலேகொல்லப்படுகிறதற்கு அநேகர் சத்துருக்களாயு மிருக்கின்றார்கள். ஆகையால் இப்போது யுத்தத்திற்குவந்த ராக்ஷதர்களெல்லாம் இறந்துபோவார்களேயல்லாமல் ஒருவராவது தப்பி உயிரோடுபோவார்களா! சிவன்கையிலேதாங்குகின்ற மழுவாயுதத்தைப்போல உதிரந்தோய்ந்து விளங்காநின்ற எழுஸ்தம்பத்தால், அங்குவந்த ராக்ஷதக்கடம் சமூலமும் ரணகளத்தில் அதமாகும்படி ஆஞ்சநேயர்கொன்று தொலைத்தார். அப்படி யந்தராக்ஷதவர்க்கங்கள் நாசமானதைக்கண்டு தேவர்கள் சந்தோஷித்தார்கள். லங்காபட்டணமானது அல்லோலகல்லோலப்பட்டது. இறந்தவர்களைக்குறித்து அழுகின்றகுரலோசையானது சமுத்திரகோஷமும் தாழும்படியாக அதிகரித்தெழுந்தது. அந்தச்சமயத்தில் பஞ்சசேனாபதிகள் ரத்தநதியானது இழுக்குதலால் கால்வழுக்கித்தேர்ச்சக்கரங்கள் அதில் அழுந்த, மிகவும் வருத்தத்துடனே தேரைவிட்டுக்கொண்டுவந்து ஏக ஆர்ப்பாட்டமாகக்கொக்கரித்து ஒவ்வொருத்தர் ஆயிரமாயிரம் பாணங்களைப் பிரயோகித்து அஞ்சனாதேவியின் புத்திரசிகாமணி யாகிய அநுமானுடையசரீரத்தை மறைத்தார்கள். அவர்கள் பிரயோகித்தபாணங்களெல்லாம் தமது திருமேனியில்வந்து தாக்காமல் சீக்கிரத்தில் நும்சப்பட்டுப்போம்படி கையினால் பிடித்து ஒடித்துப் பொடியாக்கிவிட்டு, உடனே அந்தப் பஞ்சசேனாதிபதிகளில் ஒருவனுடைய தேரைப்போய் உதைத்து அழித்துச் சின்னாபின்னப் படுத்தினார். தானேறிய தேரழிகிறதற்கு முன்னமே அதிலிருந்த வீரனானவன் ஆகாசத்தில் எழும்பிப்போய் அங்கிருந்தபடிப்பாணங்களைப்பொழிந்து போர்செய்தான். அதுகண்ட அநுமானானவர் எழுவாயுதத்தையெடுத்து அவன்மேல் மோதினார். அந்த அடியை அவன்வில்லிலே தாங்கினான். அது பொறுமல் வில்முறிந்தது. ராக்ஷதன்ஒடிந்தவில்லை அநுமான்மேல் விட்டெறிந்துபோய் ஒருமலையைப்பேர்த்தெடுத்துவீசினான். அதுகண்டு ஆஞ்சநேயர் அந்தஎழுவாயுதத்தினாலேதானே யடித்து மலையையுந்தூளாக்கி அவனையுங்கொன்றார், அவன்மாளவே மற்ற நாலுபேரும் பிரளயகாலாக்கினிபோலக் கோபங் கொண்டு விற்களை நெறநெறவென்று ஒலிக்கும்படி வளைத்துப் பாணங்களை அபரிமிதமாகப் பொழிந்தார்கள். அவர்களுடைய கண்கள் புகைந்ததுகள். அநுமானுடையதோள்களில் உதிரம் பெருகிப்பாய்ந்தது. அப்போது அவர் மனங்கொதித்து அந்தராக்ஷதர்களுடைய வல்லமையை அறிந்து ஒரு மலையைப்பிடுங்கியெடுத்து அவர்கள்மேல் எறிந்தார். அவர்கள் அம்புகளினால் அந்தமலையையும் பொடிப்பொடியாகச்செய்துவிட்டு மறுபடியும் அவர்மேல் அநேகபாணங்களை மாலைபோல ஒன்றின்பின்னே யொன்றாகத் தொடுத்தெய்தார்கள். அதுகள்வந்து மார்பிலேதைத்து உருவ அதிசீக்கிரமாகச் சமீபத்திலோடி அந்நால்வரிலொருவனை அவனுடைய தேரோடெடுத்து ஆகாசத்தில்சுழற்றியெறிந்தார். அந்தரதமானது எழும்பி வாயுமண்டலம்-வருணமண்டலம்-சூரியமண்டலம்-சந்திர மண்டலம்-நக்ஷத்திரமண்டலங்களெல்லாந் தாண்டி ஆகாச முழுமையும்போய் அங்கிருந்து வேகமாய்த்து விழுகிறதற்குமுன் அதிலிருந்த வீரன் பூமியிற்பாய்ந்தான். அவன்பாய்ந்ததுகண்டு அவன்மேல் வீரர்களுக்கெல்லாம் அதிவீரராகிய அநுமானானவர், மதயானையின் மேல் ஆண்சிங்கமானது பாய்கிறதுபோலவிசைகொண்டு பாய்ந்து குதித்து, அவனுடைய பர்வதத்திற்குச்சமானமாகிய சரீரத்தின் அஸ்திமாம்ச ரூபமானதுகளுங் குழம்பிப் போம்படி மிதித்துத் துவைத்துவிட்டார். அதுகண்டு மற்றமூவரும் கோபமுண்டெரியும்படி தேர்களை மனோவேகமாக நடத்திக்கொண்டுவந்து, அடா இனி நீ யெங்கேபோவாயென்று எதிர்த்துநின்று அஸ்திரங்களைப்புங்கானுபுங்கமாகப்பிரயோகம்பண்ணித் திரிமூர்த்திகள் போர்செய்வதுபோல வேண்டியபடிக்கெல்லாம் யுத்தஞ்செய்யத் தலைப்பட்டார்கள். அப்படியுத்தம்பண்ணத்தொடங்கிய மூவரி

ல் இருவருடையதேர்களைத் திரண்டுயர்ந்த தோள்களையுடைய அஞ்சனாதேவிகுமாரரானவர் தேவர்களும் பார்த்துப் பயப்படும்படி இரண்டுகைகளினாலும் கழுகுபோல அலக்ஷியமாக எடுத்துக் கொண்டு மேலெழும்பினார். எழும்பியவேகத்தில் அந்தந்தேர்களில் கட்டியிருந்த புரவிகள்மடிந்ததுகள் சாரதிகளும் விழுந்து இறந்தார்கள். அதுகண்டு அந்த ரதிகர்களிருவரும் தேரைவிட்டுக்கிளம்பி ஆகாசமார்க்கத்திற் போனார்கள். போவதற்குமுன் அவர்களை யப்பாலே போகவொட்டாமல் அநுமானனவர் வெகுசீக்கிரமாக ஓடித் தொடர்ந்து எதிர்த்தார். அந்தச்சமயத்தில் அவர்கள் அஸ்திரங்களைப் பிரயோகிக்க எத்தனப்பட்டார்கள். அதற்குள்ளே அவர்களுடையவிற்களைப் பிடித்து மனுக்கென்று முறியச்செய்தார். பின்பு அவர்கள்பாணங்களைப்பூட்டி யெய்கிறதற்கு வில்லில்லாமையால், அந்தரத்திலநின்றபடி அநுமானுடனே மல்லுயுத்தஞ்செய்யத்தலைப்பட்டார்கள். வெண்மையாகியகோரப்பற்களையும் கறுத்து நீண்ட சரீரத்தையும் ஆவென்று திறக்கின்ற பிளவாகிய பெருவாயையு முடைய தன்மையால் அந்த அரக்கர்களிருவரும் ராகுகேதுக்களுக்கு ஒப்பாயும் அநுமானனவர் ராகுகேதுக்களால் மறைக்கப்பட்ட சூரியனுக்கு ஒப்பாயுமிருந்து போர் செய்யும்போது வாலைக்கொண்டு அவர்களிருவரையும் வரிந்து கட்டி இறுக்கி அவர்களுடைய கால்களையும் தோள்களையும் மளமளவென்றொடியும்படி ஒடித்தார். உடனே சூரியனை நீங்கிய அந்தராகுவும் கேதுவும்போல இருவருமாண்டு விழுந்தார்கள். ஆஞ்சனேயர் கிரகணம்விட்ட சூரியனைப் போலப் பிரகாசித்தார். அவ்விதமாக விளங்கியிருந்தவாயுகுமாரர் மற்றொருசேனாபதிமாத்திரம் தனித்து நின்றதுகண்டு, மலையின்மேல் தாவிக்குதிக்கின்ற சிங்கத்தைப்போல அவன்தலையின்மேல் தாவிக்குதித்தார். அந்தக்ஷணமே அவன்தன்தேருடனே பூமியில் ஆழ்ந்து புதைந்து உருத்தெரியாமல் மடிந்துபோனான்.

கவி.

வஞ்சமுங்களவும்வெஃகிவழியல்லாவழிமேலோடி.......*
நஞ்சினுங்கொடியராகிநவைசெயற்குரியநீரார்..........
வெஞ்சினவரக்கரைவரொருவனேவெல்லப்பட்ட.....[ன்.
அஞ்சினும்புலன்களொத்தா ரவனுநல்லறிவு போன்றா

என்பன.—வஞ்சனையையும் களவையும்விரும்பித் துன்மார்க்கத்தில் பிரவேசித்துக் காலகூடவிஷத்தைப் பார்க்கிலும் மிகவுங்கொடியவர்களும், குற்றத்தைச் செய்கிறதற்கு மனங்கூசாதவர்களுமாகிய அந்த ராக்ஷதர்களைந்துபேர்களும் அநுமானொருவராலே கொல்லப்பட்டு ஒரு அறிவினாலே வெல்லப்பட்ட ஐம்புலன்களைப்போலானார்கள். அநுமானனவரோவென்றால், பஞ்சசேனாபதிகளையுங்கொன்றதனால் ஐம்புலன்களையும்வென்ற அறிவையொத்திருந்தார். அந்தப்போரில் எதிர்த்த ராக்ஷதர்களில் உயிர்கொண்டுமீண்டவரொருவருமில்லையென்பதையும், எமனும் நடுங்கத்தக்க பஞ்ச சேனாபதிகளும் கைகொட்டிக் கொக்கரித்துக்கொண்டு முடிந்துபோயிறந்ததையும் லங்கையிலுள்ளவர்கள் எல்லாருங் கண்டார்கள்.

அத்தருணத்திலே நம்மையெப்போதுங்குரங்கானதுகொல்லுமென்று மனமறுகி ஏங்கி நடுங்குகின்ற ராக்ஷதரிகளைப்பார்த்து, கோபித்துங் கடுஞ்சொற்சொல்லினைவிட்டுச் சிலராக்ஷதர்கள் ஓடிவந்து ஊழித்தீயைப் போல ஏழுவகைப்பட்ட உலகங்களும் எரியும்படி உக்கிரதிருஷ்டியாகப்பார்த்துக்கொண்டு, கோபமே ஒருவடிவெடுத்ததுபோ லிருந்த ராவணேஸ்வரனுடைய செவித்துளைகள் வெந்துதிரும்படிச் சொல்லத் தலைப்பட்டார்கள். கேளுமையா ! விச்ரவப்பிரமபுத்திரனாகிய ராவணேஸ்வரா ! இங்கிருந்துபோகிய சேனாசமுத்திரம் அடங்கலும்மடிந்துபோய்விட்டது. அதுகண்டு சண்டை செய்யப்போயப் பஞ்ச சேனாபதிகளும் மாண்டு போனார்கள், நாங்கள்மாத்திரம் யுத்தஞ்செய்யாம லிருந்ததனால் இறவாமல் மீண்டுவந்தோம். தேவர்கள் முதலானவர்களையும்ஜெயித்த வீராதிவீரர்களையும் அதிசீக்கிரத்தில் மாயும்படிப்பொடிசெய்துவிட்டு, மற்றுஞ் சண்டைசெய்கிறவர்களில்லாமையால் அந்தக்குரங்கு சோம்பியிருக்கின்றதென்று சொன்னார்கள்.

பஞ்சசேனாபதிகள்வதைப்படலம்-முற்றிற்று.

---

## அட்சயகுமாரன் வதைப்படலம்.

அவ்வார்த்தைகேட்கவே ராவணனானவன்கோபமாகிப் பகடுநெருப்பானது மூண்டெழும்படிப் பெருமூச்சுவிட்டுமார்பிலணிந்தபுஷ்பமாலைகளும், அதுகளில் மரிமளிக்கின்றதேனையுண்ணும்படி வந்து மொய்க்கின்ற வண்டுகளுந்தீந்து கருகும்படிச் செவ்வரக்கு ஊட்டியதுபோலக் கண்கள் சிவக்க, தானே பிரயாணப்பட்டுப்போய்ப் பிடித்துவரும்படித் தத்தாயத்தமானான். அப்படி எத்தனப்பட்ட பிதாவைப்பார்த்து, கனிஷ்ட புத்திரனாகிய அட்சயனென்பவன் எழுந்து அவனுடைய உபயபாதங்களையும்வணங்கிச் சுவாமி ! இந்தப்பணிவிடையை அடியேனுக்குக்கடாக்ஷித்தருளுமென்று சொல்லிப் பின்னுஞ்சொல்லுகின்றான், சோம சூரியாக்கினியாகிய முச்சுடர்களையும் மூன்றுநேத்திரமாகவுடைய கைலாசபதி யேறுகின்றவாகனமாகிய ரிஷபமுமல்ல. பரலோக-பூலோக-பாதாளலோகமாகிய திரிலோகங்களையும் திருவடியினால் அளவிட்ட திரிவிக்கிரமசொரூபனான ஸ்ரீமந்நாராயணனுடைய வாகனமாகியகருடனுமல்ல. அந்தப்பரமபுருஷன் திருக்கண்வளர்ந்தருளாநின்ற சயனமாகிய ஆதிசேஷனுமல்ல. அஷ்டதிக்கஜங்களுமல்ல. ஒரு சிறிய குரங்கின்மேலேயா ? மகாபிரதாபசாலியாகிய தேவரீர் படையெடுத்துப்போகிறது. இந்த ஊழியத்தை அடியேனுக்கு ஆக்கியாபித்து நீரிவ்விடத்தில்தானே சுகமாயிருந்தருளும். முன்னாளில் அமரர்-சித்தர்-அசுரர்-தைத்தியர்-கருடர்-கின்னரர்-கிருதர்-கிம்புருஷர்-கந்தர்வர்-யட்சர்-விஞ்சையர்-பூதர்-பைசாசர்-முனிவர் - உரகர் - ஆகாசவாசிகள்-போகபூமியர்களாகிய பதினெண் தேவகணங்களுக்கும் அதிபதியாகிய இந்திரன்மேல் கோபங்கொண்டு அவனைப்பிடித்துக்கொண்டுவந்து கொடுவென்று சொல்லி, அடியேன்பக்கத்தி லிருக்கும்போதுதானே என்னை யனுப்



பாமல் எங்கள் தமயனை யனுப்புவித்திரோ அது என்மனத்திலே குறையாயிருக்கின்றது. அந்தக்குறை தீரும்படி ஒரு குரங்கையாவது பிடித்துவர உத்தரவு கொடுத்தருளும். இதிசேத்திரகாரியாகிய சிவனே வஞ்சனையை மனதிலெண்ணி இவ்விடத்தில் ஒரு சொற்பமாகிய பழியை விளைக்கும்படிக் கற்பிதம்பண்ணிக்கொண்டு குரங்குருவமெடுத்து வந்தானாலும் நொடிப்பொழுதுக்குள்ளே ஜெயித்து எளிதிலேபிடித்துக்கொண்டுவந்து உம்மிடத்தில் கொடுக்கிறேன். பூர்வகாலத்தில் வச்சிரஸ்தம்பத்தில் உற்பத்தியாகி இரணியேஸ்வரனைச் சங்கரித்த உக்கிர நரசிங்கமானாலும் ஒருகொம்பினாலே பூமியைப்பேர்த்தெடுத்த ஆதிவராகமானாலும் நான்போய்யுத்தஞ்செய்யுங்கால் இந்த அண்டத்தைக்கடந்து அப்பால் போனபோதிலும் தொடர்ந்துபோய்ப் பிடித்துவந்து உமக்கெதிரேவிடுகிறேன் அப்படிச் செய்யாமற் போனேனாகில் அப்பொழுது என்னைச்சிரசாக்கினை செய்யுமையாவென்று இவ்வாறுசொல்லி கிருபைசெய்து உத்தரவுகொடுத்தருளுமென்று நிற்கின்ற இளையகுமாரனாகிய அக்ஷயனைப்பார்த்து மகிழ்ச்சிகூர்ந்து தந்தையாகிய ராவணன் அப்பா ! அப்படியே தேரேறிச் சேனைகளையுங் கூட்டிக்கொண்டுபோவென்றுசொன்னான். அவன்சொற்படியே யுத்தத்திற்கு ஏற்ற அலங்காரஞ் செய்துகொண்டு புறப்பட்டு முற்காலத்தில் யுத்தத்திலே தேவேந்திரனானவன் பயந்துவிட்டுவிட்டோடியரதமொன்று இருந்தது அப்புரவிகட்டப்பட்டது. அதையலங்கரித்து அதன்மேலேறினான். அப்போது ராக்ஷதர்கள் ஆசீர்வாதஞ்செய்தார்கள். பேரிகைமுழங்கியது. பிரளயகால சமுத்திரம்போலச் சேனைகள் வந்துகூடியதுகள். சமுத்திரத்திலுள்ள மகரங்களையெண்ணக்கூடுமாகில் அங்குவந்துகூடிய யானைகளையெண்ணலாம் அந்தச்சமுத்திரத்திலை மற்றுஞ் சஞ்சரிக்கின்ற பலமச்சங்களையும் எண்ணக்கூடுமாகில் தேர்களையெண்ணலாம் கடற்கரை மணல்களையெண்ணக்கூடுமாகில் காலாள்களையெண்ணலாம் கடலின் அலைகளையெண்ணக்கூடுமாகில் குதிரைகளையெண்ணலாம் அப்படி எண்ணி முடியாத சதுரங்கசேனைகளும் நெருங்க ராக்ஷதேந்திரர்களுடைய குமாரர்களும் அக்ஷயகுமாரனுடைய உயிர்வேறும் அவர்கள் வேறுமாகாமல் அதிக அந்நியோந்நியமாயிருக்கின்ற தோழன்மார்களுமாகிய பன்னிராயிரம் பேர்கள் ரதாரூடர்களாய் யுகமுடிவுகாலத்தில் சகலத்தையுந்தகிக்கின்ற காலாக்கினியின் சிகைகளைப்போலவந்து சூழவும், மந்திரிகளுடைய குமாரர்கள் லக்ஷம்பேர்கள், பிரதானிகளுடைய குமாரர்கள் லக்ஷம்பேர்கள், படைத்தலைவர்களுடைய குமாரர்கள் லக்ஷம்பேர்கள், தம்பிதாவாகிய ராவணனுக்குத் தேவரம்பையர்கள் வயிற்றிற்பிறந்த குமாரர்கள லக்ஷம்பேர்கள் ஆகிய இந்தநாலுலக்ஷம்பேர்களும் தேரேறிக்கொண்டுவரவும், பெருஞ்சவளம் - வல்லுலக்கை - திரிசூலம் - எரி - மழு - வச்சிரவாள் - வச்சிரதண்டம் - வெற்றிவில் - உக்கிரவேல் - அங்குசம் - எறிபாசம் - ஈட்டி - கட்கம் - எழுத்தடி - எழுமுனை - வளைதடி - குந்தம் - கப்பணம் - காலசக்கரம் - முதலாகிய அநேகவித ஆயுதங்களும் ஜோதிமின்னல்களெல்லாம் ஓரிடத்திற்கூடியதுபோலத் தகதகவென்று ஒளிவீசவும், புழுதிகளெழும்பி எங்கும்பரவுதலால் பொன்மயமாகியசுவர்க்கமுதலான சகலலோகங்களும்மண்மயமாகிய பூலோகம்போலாகவும் காகங்களும், கழுகுகளும், பேய்களும், எமனும், நெடுங்காலஞ்செய்த பாவமேலாற் தொடர்ந்துவரவும், பார்க்கின்ற ஸ்திரீகளுடைய பார்வையும், மனமும் வண்டும் மொய்த்துச் சுற்றவும், மாண்டுபோன ராக்ஷதர்களை நினைத்துக்கொண்டு அவர்களுக்குரிய நாயகிமார்கள் அழுகின்ற குழலோசையும் கடலோசையும், நால்வகைச்சேனைகளினோசையும், இடக்கை - உடுக்கை - உடுமி - தம்பட்டம் - பம்பை - பேரிகை - மத்தளம் - முரசு - முருடு - முழவு - முதலாகிய பலவிதவாத்தியங்களின் ஓசையும், இடியோசையைப்போல எழுந்து ஒருவரோடொருவர் வசனிக்கின்ற வசனத்தை அவர்களுக்குக்கேட்கவொட்டாமல் அடக்கவும், ராக்ஷதர்கள் கையில் பிடிக்கின்ற ஆயுதங்களின் பிரகாசத்தை அவர்களுடைய கறுத்த தேகத்தின் ஒளியானது விழுங்குதலாலும் அவர்கள் கைகளில் தரித்திருக்கின்ற நீலமணிக் கடகத்தின் ஒளியை அவர்களுடைய கோரதந்தத்தின் வெண்மையாகிய ஒளியானது அடக்குதலாலும், அங்குள்ள சகல உயிர்களுக்கும் இரவென்றும் பகலென்றும் தோன்றாமல், அறிவுகெடுமாறவும், ரதங்களிற் கட்டிய குதிரைகள் உறங்குகின்றதும், அந்த ராக்ஷதர்களுடைய இடதுதோளும், இடதுகண்ணும் அடிக்கின்றதும், மேகங்கள் எவ்விடத்திலும் ரக்தமழையைப் பொழிகின்றதும், வெள்ளைமேகத்திலிருந்து இடியிடிக்கின்றதும், காக்கைக்கூட்டங்கள் சப்திக்கின்றதுமாகிய துர்ச்சகுனங்கள் காணவும், தனக்குச் சொந்தமாகிய ஒருவெள்ளைச்சேனைகள் சூழவும், அதுகண்டு சப்தமருத்துக்கள் - அஷ்டதிக்குப்பாலகர்கள் - அஷ்டவசுக்கள்முதலாகிய தேவர்களெல்லாம் பயமடையவும், காலனும் இனியென்ன அனர்த்தம் விளையுமோவென்று எண்ணி மனம்மெலியவும், பேய்கள், பூதங்கள், டாகினி, மோகினிகளெல்லாம் கண்களை உருட்டிவிழித்துக்கொக்கரித்துப் புஜங்கொட்டவும் அதிகவுக்கிரகாடினியமாகவருகின்ற அந்த அக்ஷயகுமாரனை வாயுபுத்திரராகிய அநுமானனவர் கண்டு இதோ மகாபிரபல பிரதாப சம்பிரமத்துடனே நமக்கெதிரேவருகின்ற ராக்ஷதவிறன் ராவணனுடைய புதல்வனாகிய இந்திரஜித்தென்பவன்தானோ ! அல்லது அந்த ராவணனேயோவென்று மனதிலே மிகுந்த சந்தோஷங்கொண்டு வானரசிங்கமாகிய அஞ்சனேயர் இவன்வந்ததனால் நம்முடைய எண்ணம் நிறைவேறியதென்று நினைத்துத் தமது உன்னதமாகிய தோளைப்பார்த்துப் பரமபுருஷா ! பக்தவத்சலா ! ஜகத்ரக்ஷகா! சர்வந்தரியாமி! ஜானகிமனோகரா! தாரகப்பிரமமேயென்று ஸ்ரீரகுநாயகனை ஸ்தோத்திரஞ்செய்து அவரெழுந்தருளியிருக்கின்ற திக்குநோக்கி நிகண்டன் சமர்ப்பித்து யோசிக்கின்றார். இவன் இப்போ

ல்மொய்த்திருக்கின்ற வண்டுகளொழுந்து அலேயும்படி அவிழ்ந்து விழுந்து குதிகாலேவருடவும், மேலுதடு ஆகாயத்தைப்பொருந்தும்படி வாயைத்திறந்து துக்கித்தலால் அவர்கள் அழுதவோசையானது அண்டத்தையளாவியது. நாயகன்மார்களுடைய கால்மாட்டில் விழுந்து அழுது சோர்ந்துகிடக்கின்ற ராக்ஷசிகளுடையசிவந்த கூந்தலுடனே அந்தராக்ஷதர்களுடைய சரீரத்தில் நின்றும்பெருகிய உதிரமானது இடங்கள்தோறும் வேற்றுமைதெரியாமற்பாவியிருந்தது. போர்க்களத்தில் இறந்த ராக்ஷதர்கள்மேல் அவர்கள் பெண்சாதிமார்கள் விழுந்து உயிரொன்றும் உடலிரண்டுமா யிருக்கின்றதனைலோ! உசுவாச நிசுவாச மில்லாமலும் கண்களை யிமையாமலும் அசைவற்றுக்கிடந்தார்கள், சிலராக்ஷதஸ்திரீகள் உயிரைத்தேடிக்கொண்டுபோகின்ற உடலேப்போல எங்கும் ஓடித்தேடி, இறந்தவர்களுடைய சரீரக்குப்பைகளின் நடுவிலே குற்றுயிரோடுகிடக்கின்ற தங்கள்நாயகன்மார்களைக்கண்டு சொர்க்கத்திலிருக்கின்ற ரம்பாஸ்திரீகள் பிணங்கும்படி தழுவிக் கொண்டார்கள். வாளுக்கொப்பாகிய கண்களையுடைய ஒரு ராட்சதஸ்திரீயானவள் ரணகளத்தில் எழுந்துநின்று ஆடுகின்ற கபந்தத்தைக்கண்டு, என்னுடையபிராணநாயகனே நீ காட்டவேணுமென்று கைகூப்பிக்கொண்டு பிரலாபித்தாள். பூங்கொம்புக்குச்சமானமாகிய சரீரத்தையுடைய ஒருபெண்ணானவள். யுத்தகளத்தில் கூத்தாடுகின்ற தன்புருஷனுடைய உடற்குறையுடனே அவன் தலையையெடுத்துச்சேர்த்துப்பார்த்து எங்கள் கோமானே! நீ கடனைச்செய்து மிகவும் இளைப்படைந்தாயாகையால் இனியாவது சும்மா இருவென்று கைகளால் உடலிறுகும்படி அணைத்துக் கொண்டாள். அப்படிப்பட்ட தருணத்தில் அவ்விடத்திலிருந்து காவலாளர்களாகிய தேவர்கள்பயந்து ஓடி ராவணனுடனே நடந்தசமாச்சாரத்தைச்சொன்னார்கள். அந்தச்சமயத்தில் மயன்குமாரத்தியாகிய மண்டோதரியென்பவள் தன்பிள்ளையிறந்துபோன செய்திகேட்டு, சேற்கெண்டைகள் விரும்புகின்ற கண்களிரண்டும் மலையருவிபோல ஜலத்தைக்கக்கவும், கார்மேகமானது விரும்புகின்ற அளகபாரமானது அவிழ்ந்து விழுந்து புழுதியிலேபுரளவும், வயிற்றில் அறைந்துகொண்டு அதிகவருத்தத்துடனே தன் நாயகனுகிய ராவணனுடைய பாதத்தில் வந்து விழுந்து கோவென்று கதறி அழுதாள். அந்தப் பட்டணத்திலிருந்த ஸ்திரீகள் முதலாகிய சகலமானவர்களும் தங்கள்ராஜாவாகிய ராவணனுடையபாதத்தில் விழுந்து அழுதார்கள். அவ்வனத்தைக்காக்கின்ற தேவர்களுக்கு இதுகளெல்லாம் உள்ளுக்குள்ளே சந்தோஷமா யிருக்கின்றதாகிலும், வெளிக்குப் பயந்தவர்களானபடியினுலே தாங்களும் ஓடிப்புக்கு விழுந்தழுதார்கள்.

அக்ஷயகுமாரன்வதைப்படலம் - முற்றிற்று.

## பாசப்படலம்.

அவ்விடத்தில் அந்த வார்த்தைகேட்ட பிரதாப லங்கேசுவரன் தன்னுடைய கண்களிலெல்லாம் நெருப்புச்சிதற, எவ்வகைப்பட்டவுலகங்களும் நிலைகுலையும்படி அதிக கோபங்கொண்டான். அப்போது தன்தம்பி மாண்டானென்கின்ற சொல்வந்து நெஞ்சைச்சுடும்படிக்கேட்டு, இந்திரனைஜெயித்துக் கீர்த்திபெற்றதனுலே இந்திரஜித்துவென்று பேர்படைத்த மேகநாதனென்பவன் அதிக வெப்பமுண்டாகப் பெருமூச்செறிந்து திரிபுரதகனஞ்செய்யும்படி மகமேருவை வில்லாகவளைத்த ருத்திரமூர்த்தியைப்போல மகத்தாகிய உக்கிரங்கொண்டு, அந்தக்ஷணமே அண்டகடாகத்தின் முடியைக்காட்டுகின்ற அதியுன்னதமாகிய ஆயிரத்திருநூறுபேய்கள்பூண்ட தேரின்மேலேறினன், எட்டுத்திக்குகளுக்கிறிய அண்டமும் பிளக்க விருதுகூறி வீரவேசத்துடனே தும்பைமாலையும் அணிந்தான். வீரகண்டைகள் ஒலிக்கத்தலைப்பட்டதுகள். இடியும் பயந்தோடும்படி ரணபேரிமுழங்கியது தேவேந்திரனுனவன் உயிர்நடுங்கி உடல்புழுங்கி வெயர்க்கும்படி இந்திரஜித்து வருகின்றதனால் யுத்தம் பிரபலப்பட்டது. இனி மோசம்வந்துவிட்டதென்று பிரமருத்திராதியர்களாகிய திரிமூர்த்திகளும் ஊக்கமழிந்தார்கள். தம்பியை நினைக்கும்போதெல்லாம் அவனுக்குக் கண்களில் ஜலந் தாரைதாரையாகத் ததும்பத் தலைப்பட்டது. அவன் தன்கைவில்லைப் பார்த்து வாயைமடித்து சூத்திரமிகுந்து கலகலவென்று நகைத்தான். மரக்கிளைகளிலே சஞ்சரிக்கின்ற எளிதாகிய குரங்கிலுலே தேய்ந்துபோனது என்தம்பியா! என்தந்தையாகிய பிரதாபலங்கேசுவரனுடைய கீர்த்தியல்லவா! வென்றுஞ் சொன்னான். அந்தச்சொற் சொல்லும்பொழுதே நெடியவேற்படைகளும்-கொடியவிற்படைகளும்-மலையையும் இருகூறுசெய்கின்ற வாட்படைகளும் வந்து நெருங்கியதுகள். அதுகளின்தொகை எவ்வளவென்றால், என்றுசொல்லக்கூடாது. இரண்டு பக்கத்திலும் மதத்தைப்பொழிந்து நிலத்தைச்சேறுசெய்கின்ற யானைப்படைகள் பன்னீராயிரமும்-தேர்ப்படைகள் பன்னீராயிரமும்-மிதியில்லாத புரவிப்படைகளும் சேர்ந்ததுகள். மற்றும்பலவகையாயுதங்களையுடைய ராக்ஷசேந்திரர்கள் எத்தனையோபேர்கள் கூடவர, தன்பிதா விருக்கின்ற ஆஸ்தான மண்டபத்திற்கு வந்து ராவணனுடைய இரண்டு பாதத்திலும் விழுந்து சேவித்து, மாண்டுபோன தம்பியைக்குறித்து அலறியழுதான். அழுகின்றஜேஷ்டபுத்திரனைத் தசக்கிரீபனுனவன் அவனிரண்டுகையையும் பற்றியெடுத்துத் தன்மார்புடனே தழுவிக்கொண்டு தானும்பிரலாபித்துச் சோகப்பட்டான். அப்போது ஸ்திரீகளெல்லாம் வாயிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டு வந்து கோவென்றுகூச்சலிட்டழுதார்கள். அதுகண்டு இந்திரஜித்து அவர்களையெல்லாம் அதட்டி விலக்கிவிட்டுத் தன் பிதாவின்முகத்தைப் பார்த்துச் சொல்லுகின்றான். கேளுமையா! நீர் உறுதியொன்றும் பாராமல் சும்மாவிருந்து துயரப்படுகின்றீர். குரங்கினுடைய பலத்தைச் செவ்வையாக யோசித் தறிந்திருந்தும் நீங்கள் போய் அதனுடனே யுத்தஞ்செய்யுங்களென்று சொல்



லி, அணியணியாகச் சேனைகளை அதன்மேலேவிடுந்தாலே ராக்ஷதக்கூட்டத்தையெல்லாம் அநியாயமாகக்கொன்றீர். கிங்கரர்களும் ஜம்புமாலியும் பஞ்சசேனாபதிகளுமென்கின்ற இந்தராக்ஷதவீரர்களையும் இவர்களுடனே கூடப்போகிய சேனைகளையும் ஒருவராவது மீண்டுவராவொட்டாமல் கொன்றதனால் அந்தக்குரங்கை யென்னவென்று நினைக்கவேண்டியது. சிவன்-பிரமா-விஷ்ணுவென்றுதான் சொன்னாலும் சரியாமா? அஷ்டதிக்குகளையும் வென்றீர். திரிபுராந்தகனுகிய திரியம்பகனுடைய கைலாசத்தையும் திரிலோகங்களையும் ஜெயித்தீர் இப்படிப்பட்ட மகாபிரதாபசாலியாகிய நீர் அக்ஷயகுமாரனையுங் கொல்லும்படி ஒரு குரங்கை லங்கையம்பலத்தைக்கொளுத்தி ஆடவிட்டு நாடகம் பார்க்கிறதுபோல அதற்கு இவ்வளவுதூரம் இடங்கொடுத்துவிட்டீர். அது இருக்கட்டும், அக்ஷயகுமாரனைக் கொன்றதென்கின்ற அபகீர்த்தியானது இனியந்தக்குரங்கைக்கொன்றாலுந்தான் நீங்குமா! ஆயினும் சீக்கிரத்திலே நானேபோயந்தக்குரங்கைப் பிடித்துக்கொண்டுவந்து கொடுக்கிறேன். நீரொன்றுக்கும் அஞ்சவேண்டாம். துக்கப்படாமலிருமென்று சொல்லிவிட்டு மேகநாதனென்பவன் யுத்தத்திற்குப் பிரயாணப்பட்டு, அதிரதம் - மகாரதம் - சமரதம் அர்த்தரதமாகிய நால்வகை ரதங்களும், ராஜமதங்கம், பத்திரமதங்கம், மிருகமதங்கமாகிய மூவகையானைகளும், மல்லகதி - மயூரகதி - வியாக்கிரகதி - விருஷபகதி - வானரகதியாகிய பஞ்சகதிகளையுடைய புரவிகளும், வாள்வீரர் - வேல்வீரர் - வில்வீரர் முதலான பதாதிகளுமாகிய சதுரங்கபலமுடனேகூடிய ராக்ஷசசேனைகள் யுகாந்தகால சமுத்திரம்போலச் சூழும்படி அதுகளின் நடுவே நிற்கின்ற மகாமேருவுக்குச் சமானமாகிய தேரின்மேலாக வீராக்கிரனுகிய இந்திரஜித்துப் போனான். போய் அநுமான்போர்செய்தபோர்க்களத்தைப்பார்த்துத் தான் திக்குகளையும், சகலலோகங்களையும், வென்றவனுமிருக்கும் அநுமானுடைய போர்ப்பிரதாபத்தை நினைத்து கன்றுகிறுக்கின்றதென்று சந்தோஷப்பட்டான். அதுகண்டு இவன் சந்தோஷப்படுகிறானே இது என்ன பிரமாதத்தை விளைக்குமோவென்று சகலமானவர்களும் நடுங்கினர்கள். இந்திரஜித்தோ அம்மம்மா! எங்கேபார்த்தாலும் பிணங்களின் அநேகமலைகளும், ரத்தமேகடல்களும், நிணமே நதிகளும், ஆயுதங்களே காடுகளும்போலச் சூழும்படி இந்த ரணகளமானது வேறொரு உலகம்போலத் தோன்றுகின்றதேயென்று நினைத்து ஆச்சரியப்பட்டு அவன் எக்காலத்திலும் துக்கமென்பது அறியாதிருக்கின்ற தன்மனதில் கொஞ்சவிசனமடைந்து சமுத்திரத்தைப்போல அளவிடப்படாதவர்களும், மகாபராக்கிரமத்தையுடையவர்களும், சமானமில்லாதவர்களுமாகிய ராக்ஷதர்களெல்லாம் இறந்தார்களே! இத்தனைபேர்களையுங்கொன்றது ஒரு குரங்குதானே! இனியிந்தச் சீதைக்கு நாயகனுகிய ராமன்வந்து எதிர்த்து யுத்தஞ்செய்தால் நாம் எந்தச்சேனையைக்கொண்டு வெல்லுகின்றதென்றுஞ்சொன்னான் அப்படிச்சொல்லிக்கொண்டே யவன்போகின்ற வழிமுழுதும் கண்ணுக்குச்சமானமானவர்களும், பிராணனுக்கு ஒப்பானவர்களும், யுத்தகளத்திலே உள்ளங்கைப் பொருளைப்போலக் காக்கின்றவர்களுமாகிய எண்ணிறந்த ராக்ஷதர்கள் இறந்து கிடக்கின்றதைக்கண்டு அங்கங்கே நின்று வாயுதட்டைமடித்து ரௌத்திராகாரமாய் ஆறுதபுண்ணினிடத்திலே கோலிட்டாற்போல அவமானத்தினுலே மனம் நொந்து புழுங்க, பின்னும் ஆரணியத்திலே எங்கள் அத்தைக்குவந்த அவமானமும் கரன் முதலானவர்கள் பட்டபாடும், என்னைத்தமையனுகப்படைத்த என்தம்பி அக்ஷயன் இறந்துபோனதும் இரண்டு மனிதர்களாலும் ஒரு குரங்கிலுலுமல்லவா நடந்தகாரியம், ஆ! ஆ! என்னுடைய வீரப்பிரதாபம் அழகாயிருக்கின்றதென்று நினைத்து அநேகம் பிணக்குன்றுகளையிடறி ரதக்கிரியை நீக்கி நிணச்சேற்றைக்கடந்து அதிகபிரயாசமாக ரதத்தை நடத்திக்கொண்டு போகின்றவன் நிலத்திலேதேய்ப்புண்டு அனாபட்டுக் கிடக்கின்ற தன் தம்பியின் சரீரத்தைப்பார்த்தான். உடனே நெருப்பிலே காய்ச்சப்பட்ட செம்பைப்போலத் தன் கண்கள் சிவந்து மன்னங்களுக்கும்படி சுப்பிரமணியராலே கொல்லப்பட்ட தாருகாசுரனுடைய சரீரத்திலிருந்து பெருகிய உதிரத்தைப்போல எங்குந்தோய்ந்திருக்கின்ற உதிரப்பிரவாகத்தில் நரசிங்கமூர்த்தியின் கைந்நகங்களினால் அலைப்பட்ட இரணியாசுரனுடைய உடற் குழம்பைப்போல அந்த உடலானது கோரமாய்க் கிடக்கக்கண்டு ஏறிய தேரில்நின்றும் மெய்சோர்ந்து கையிலே தாங்கிய வில்லையும் நழுவவிட்டு விழிகளிலிருந்து உதிரமும் நீரும் நெருப்பும் குபீர்குபீரென்று சிதறப் பெருமூச்செறிந்து அடா தம்பி! உன் பிதாவினுடைய உக்கிரமாகிய அக்கினியைக்குறித்துப் பார்த்தானேயானால் உன்னை யமனுங்கொண்டு போகமாட்டான். மற்றலோகத்தாரும் உன்னை ஒளித்துவைக்கிறதற்குப் பயப்படுவார்களே ஐயா! எங்களை நீங்கி நீ யெந்தலோகத்திற்போய்ச் சேர்ந்தாயோவென்று சொல்லிச்சொல்லி மனது சகிக்காமல் அறிவழிந்து பிரலாபிக்கும்போது கோபமானதுஜொலித்து மேலிட்டு ஆவிக்கு ஆக்கிராணிகடாவின்றுபோல அந்தத்துக்கத்தை வெளிப்பட வொட்டாமல் அடக்கியது. இப்படிப்பிரகாரமாய்த் தீர்கின்றசமயத்தில் சூரியனுடைய ரதத்திற்கு ஒப்பாகிய ரதத்தின்மேலிருக்கின்ற இந்திரஜித்தை முப்புரங்களை எரிக்கும்படி முடுகிச்சென்ற கைலாசநாதனைக்கண்டதுபோல அநுமானுனவன் கண்டான். கண்டு இவன்தான் இந்திரஜித்தென்பவன் முன்பு சிலவீரர்களை நாம் ஜெயித்தோமே அதுதானே ஒரு அதிசயமல்ல. இவனை யிவன்செய்த தீவினையே நமக்கெதிரே வரும்படிச் சீக்கிரத்தில் அழைத்துக்கொண்டு வந்துவிட்டது. இனி வெல்வது தோற்பதாகிய இந்த இரண்டில் ஏதாவதொன்று உண்டாகுமானுலுங் கீர்த்தியே. துஷ்டனாகிய இவன்மாத்திரம் நம்முடையகையிற் பட்டானுனல் அது அந்த ராவணன் மருண்டதற்குச்சரியாகும். பின்பாவது நாமறியாமற்கெட்டோ

மென்று அழியாத கற்பினையுடைய லோகமாதாவாகிய பிராட்டியாரையும் விட்டுவிடுவார்கள். ராக்ஷதர்களுடைய மதமும் அடங்கும். இதனால்வரும் பிரயோசனமொன்றுதானா! இந்திரனும் தன்வருத்தம் நீங்கிச் சுகப்படுவான் இப்பொழுதே லங்காபட்டணமுங் கட்டுக்காவலழிந்துபோம். நானே ராவணனையும் வேரோடே வென்றவனாவேனென்று இவ்விதமாக எண்ணுகின்றதருணத்தில் ராக்ஷதர்களும், யானைகளும், தேர்களும், குதிரைகளும், மூன்றுதரம் மூன்றுலோகத்தையும் ஜெயித்துவந்த மேகநாதனுக்கு முன்னேவந்து கற்கண்டை எறும்புமொய்த்ததுபோல தோரணகம்பத்தின்மேலிருந்த ஆஞ்சனேயரை நாற்புறத்திலுஞ் சுற்றிவளைத்துக்கொண்டு உடைவாள்போலவும், எறிவேல்போலவும், சக்கரம்போலவும், தோமரம்போலவும், மழுப்போலவும், கொழுப்போலவும், கத்திபோலவும், கட்டாரிபோலவும், ஈட்டிபோலவும், எழுத்தாணிபோலவும், ஊசிபோலவும், உலக்கைபோலவும், கட்டைப்பரைபோலவும், கதிர்க்கம்பிபோலவும், சலாகைபோலவும், சங்கிலிபோலவும், நானாவித ரூபத்தையுடைய பாணங்களையும் வாளாயுதம் - வேலாயுதம் - சூலாயுதம் - காலாயுதம் - சக்கராயுதம் - வச்சிராயுதம் - தண்டாயுதம் - தோமராயுதம் - எறிதடி - வளைதடி - குறுந்தடி - பருந்தடி - இருப்புலக்கை-வல்லுலக்கை - குந்தம் - கோடாரி - பாசம் - அங்குசம் - கவண் - கப்பணை - முதலாகிய அநேகவித ஆயுதங்களையுங்கொண்டு பிரளயகால மேகங்கள் சப்தசமுத்திர ஜலத்தையும் உண்டு சூல்கொண்டு கறுத்து மின்னிக் குமிறி இடித்து யானைத்துதிக்கைபோலப் பருத்த தாரைகளாக மழைபொழிவதுபோல அமோகமாகப் பிரயோகஞ்செய்தார்கள். அதுகண்டு ஆஞ்சனேயரும் வந்தீர்களா வாருங்களென்று அழைத்துத் தோரணஸ்தம்பத்தைவிட்டுக் கீழே குதித்து பிரமாண்டபரியந்தம்வளர்ந்து உயர்ந்து கிளைத்துத் தழைத்திருக்கின்ற ஒரு மராமரத்தை வேருடனே பிடுங்கியெடுத்துக் கரவென்று சுழற்றிக்கொண்டு உக்கிரமாகிய கோபத்துடன் அந்தச் சேனைக்குள் பிரவேசித்தார். அவருடைய காலினால் சிலயானைகள் உதையுண்டதுகள். சிலயானைகள் உருண்டதுகள். சிலயானைகள் மிதியுண்டதுகள் சிலயானைகள் விழுந்ததுகள். சிலயானைகள் மண்ணிற்புதையுண்டதுகள். சிலயானைகள் புரண்டதுகள். சிலயானைகள் வதையுண்டதுகள். சிலயானைகள் மறிந்ததுகள். பலதேர்கள் முடிந்ததுகள். பலதேர்கள் முறிந்ததுகள். பலதேர்களிடிந்ததுகள். பலதேர்களிற்றதுகள். பலதேர்கள் அச்சொடிந்ததுகள். பலதேர்கள் மச்சழிந்ததுகள். பலதேர்கள் பொடிப்பொடியாயுதிர்ந்ததுகள். பலதேர்கள் பூமியிற்படிந்ததுகள். பலதேர்கள் கொடி குடை முதலானதுகளும் பறிந்ததுகள். அநேகங் குதிரைகள் தலைநெரிந்ததுகள். அநேகங்குதிரைகள் கண்மணி சிதைந்ததுகள். அநேகங்குதிரைகள் கால்முறிந்ததுகள் அநேகங்குதிரைகள் முதுகுகோணியதுகள். அநேகங்குதிரைகள் மார்பொடிந்ததுகள். அநேகங்குதிரைகளுதிரங்கக்கியதுகள். அநேகங்குதிரைகள் குளம்புகள்பிளந்ததுகள். அநேகங்குதிரைகள் கழுத்தற்றதுகள். எத்தனையோ ராக்ஷதர்கள் அநுமான்கையிற் பிடியுண்டார்கள். எத்தனையோ ராக்ஷதர்கள் சரீரம் பிளப்புண்டார்கள். எத்தனையோ ராக்ஷதர்கள் தோளொடியுண்டார்கள். எத்தனையோ ராக்ஷதர்கள் தலையுடைபட்டார்கள். எத்தனையோ ராக்ஷதர்கள் தேகமுழுதுங்கடியுண்டார்கள். எத்தனையோ ராக்ஷதர்கள் கழுத்தறுபட்டார்கள். எத்தனையோ ராக்ஷதர்கள் அடியுண்டார்கள். எத்தனையோ ராக்ஷதர்கள் பயப்பிராந்திகொண்டார்கள். ராக்ஷதவீரர்கள் விற்களை வட்டமாகவளைத்துத் தூணியிலிருந்து ஆராய்ந்தெடுத்து அநுசந்தானம்பண்ணித் தைலதாராவிச்சின்னமாகப் பிரயோகஞ்செய்த அஸ்திரங்களும் மற்றும் பலவிதமாகிய ஆயுதங்களும் வாயுகுமாரர்மேல் வந்துபட்டும் அவருக்கு ஒரு உபத்திரவமுஞ்செய்யாமல் பொடிப்பொடியாய்ப் பொறியெழுந்து திக்குகள்தோறுந் தெறித்துச் சிதறியதுகள். அது எப்படியிருந்ததென்றால் கொல்லனானவன் காய்ந்த இரும்பைப் பணையின்மேல்வைத்துச் சம்மட்டிகொண்டு அடிக்க அது அந்தப்பணையைச்சுடாமல் சிதையுபட்டு அதன்றுகள் எங்குந்தெறித்துப் பறக்கிறதுபோலிருந்தது. அதுகண்டு இந்திரஜித்தானவன் நெருப்பைக்கக்குகின்ற அநேகபாணங்களை அவர்மேல் சுந்தத்தாரையாகப் பிரயோகஞ்செய்தான். அதுகள்வந்து ஆஞ்சனேயர் திருமேனியிற் பட்டமாத்திரத்தில் அவருடைய கோபாக்கினியினாலே சில வெந்தும், சிலபுகைந்தும், சில எரிந்தும், சிலகரிந்தும் சிலநீறுமாயும்போனதுகள். அதைப்பார்த்துத் தேவர்களுடைய முகத்தேஜஸ் அழிந்து கண்ணொளிமழுங்கியது. அநுமானாலே தன்னுடனேகூடவந்த தேர்களும், யானைகளும், புரவிகளும், காலாள்களுமாகிய சகலசேனைகளும் இறந்துபோகவே வேறுதுணையில்லாமல் தனித்துநின்ற பருத்ததோள்களையுடைய வீராதிவீரனாகிய இந்திரஜித்து நகைப்புங் கோபமும் அதிகரிக்கும்படி வாயுவேகமனோவேகமாகத் தேரைச்செலுத்திக்கொண்டு அடா எங்கேரமாகவுன்னைக்குறித்து நான் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறது இவர்களையெல்லாங்கொன்றும் என்றேறின் நினைவு தீரவில்லையே யாகையால் மகாராஜன்வந்து நீ சீக்கிரமாய்வரப்போகாதா? இனியாவது வாவாவென்று தன்னை யழைக்கின்ற அநுமானுக்குச் சமீபத்தில் வந்தான்.

கவி.

புரந்தரன்றலைபொதிவொதிந்திடப்புயலவானில்........*
பரந்தபல்லுருமேறினம்வெறித்துயிர்பதைப்ப......*
நிரந்தரந்தலைகெடுமிலங்கைமக்கபேருரகன்.........(ன்
றிறந்துளங்கிடவரக்கன்வெஞ்சிலையைநாண்டெறித்தா
அண்டநாயகன்றூதனுமயனுடையண்டம்.........*
கீண்டதாமெனத்திரிபுகநெடுநிலங்கிழிய.........*
நீண்டமாதிரம்வெடிபடவவனெடுந்தெர்லேயில்.........*
பூண்டநாணறத்தன்னெழுந்தேறுகணைப்புடைத்தான் ( )
நல்லைநல்லைநின்றனாலைத்துணிந்தெற்க்கநல்லர்.........*
இல்லையில்லையாலெநற்வலிக்கியாரொடுமிகல.........*



வல்லைவல்லையின்றுகுநீபடைத்துள்வாழ்நாட்.........*
கெல்லையெல்லையென்றிந்திரஜித்துவுமிசைத்தான்..(க-)
நாளுக்கெல்லையுநிருதராயுலகத்தைநலியும், கோளுக்
கெல்லையுங்கொடுந்தொழிற்கெல்லையுங்கொடியிர், வாளுக்
கெல்லையும்வந்தனவகைகொண்டுவந்தேன், தோளுக்
கெல்லையொன்றில்லையென்றநுமனுஞ்சொன்னான்..(௪)

என்பன.— அப்படிவந்துசேர்ந்து சொர்க்காதிபதியாகிய தேவேந்திரனுடைய சிரசு அதிர்ந்துநடுங்கவும், மேகத்தினிடத்திலுண்டாகிய இடிகளும் திகைத்து உயிர்பதைக்கவும், சார்வகாலமும் பூமியைத்தாங்குகின்ற ஆதிசேஷனுடைய சகஸ்திரபணமுடிகளும் அசையவும் அந்த இந்திரஜித்தானவன் தன்னுடைய வில்லைக் குணத்தொனிசெய்தான். அதுகண்டு என்னைத்தன்தாசாநுதாசனாக ஆண்டுகொண்ட ஸ்ரீராமபிரானுடைய தூதராகிய ஆஞ்சனேயரும் பிரமாண்டம்பிளக்கவும் அதுபோல அஷ்டகுலகிரிகளும் பொடிப்பொடியாயுதிரவும் பூமிகிழியவும் திக்குகள்வெடிக்கவும் இந்திரஜித்துவின் வில்லிலேபூட்டிய நாரியறுபடவும் தம்முடைய தோள்களைக்கொட்டி அட்டகாசஞ்செய்தார். அதுகண்டு சித்தம்பிரமித்து நீயே நல்லவன்! நல்லவன்! இந்த வுலகத்திலே உனக்குச் சமானமாகச் சொல்லுகிறதற்கு நல்லவர்கள் யாவருமில்லை! இல்லை! பராக்கிரமத்தைக்கொண்டு சகலமானவர்களுடனேயும் யுத்தஞ் செய்கிறதற்கு நீயே சமர்த்தன்! சமர்த்தன்! நீ பெற்றிருக்கின்ற பூரணாயுஷியத்திற்கு இப்பொழுதே முடிவுவந்தது வந்ததென்று இந்திரஜித்துச்சொன்னான். அப்படியவன்சொன்ன உல்லங்கனமாகிய வார்த்தையைக்கேட்டு அடா! நான் உங்களுடைய முடிவில்லாத ஆயுஷியத்திற்கு முடிவும் மகாபாவிகளாகிய ராக்ஷதர்களாய் ஜெனித்துப் பெரியோர்களையெல்லாம் உபத்திரவப்படுத்துகின்ற உங்களுடைய அடங்காத ஆண்மைக்குமுடிவும், உங்களுடைய கொடுமையாகிய அஷ்டைசுவரியத்திற்கு முடிவும், பொல்லாதவர்களாகிய நீங்கள் பிரமாதிதேவர்களைநோக்கித் தவஞ்செய்து பெற்றவரான் முதலாகிய ஆயுதங்களுக்கு முடிவும்வந்து சம்பவிக்கத்தக்க வுபாயத்தைத் தேடிவந்திருக்கின்றேன். என்னுடையபுஜபராக்கிரமத்திற்கு ஒருபோதும் முடிவேயில்லையென்று வாயுபுத்திரருஞ்சொன்னார் அப்பொழுது மேகநாதன் இந்த எண்ணத்தைக்கெடுக்கிறேனென்றுசொல்லி அநுமானுடையதிருமேனியில் உதிரமொழுகவும், அதைப்பார்த்துத் தேவர்கள் உடல்பதைக்கவும்வச்சிராயுதத்திலும் அதிகவலுமையையுடையபாணங்களை வில்லிலேபூட்டிப் பிரயோகித்து அவர் சிரசிலும் மார்பிலும் அழுத்தினான். அழுத்தவே ஆஞ்சனேயர் கோபமூண்டு ஆகாசம் குறுகியிருக்கின்றதேயென்று நினைத்துத் தாமுங்குறுகிய வுருவத்துடனிராமல் அதிலும் பெரியவுருவமெடுக்கவேணுமென்று சிறியதாயினுடைய வாய்மொழியைச் சிரசின்மேற்கொண்டு ராஜ்யத்தைத் தம்பிக்குக் கொடுத்துத் தபோமார்க்கத்தில் நிற்கின்ற, தம்முடைய நாயகனாகிய ஸ்ரீராமச் சந்திரனுடைய கீர்த்தியைப்போல நீண்டு உயர்ந்த விஸ்வருபங் கொண்டார். அப்படி விஸ்வருபங் கொண்டுநின்ற அநுமானை இந்திரஜித்துப்பார்த்து அவருடைய பாதிச்சரீரமாத்திரந்தெரியக் கண்டானேயல்லாமல் முழுதுந் தன் கண்ணுக்குத் தெரியும்படிக்காணாமையால் மனந்திகைத்தவன்போல ஆச்சரியப்பட்டான். சுத்தவீரராகிய ஆஞ்சனேயர் தம்முடைய நீண்ட கைகளை எதிரேநீட்டி அவன் எய்த அஸ்திரங்களெல்லாம் தம்மேல்வந்துபடாமல் திரும்பிப்போய் விழும்படி தட்டிவீசிவிட்டு, அவனுடைய ரதத்திற்கட்டியிருந்த பேய்களாகிய புரவிகளும் சாரதிகளும் மண்ணிலேவிழுந்து மாயும்படி அறைந்தார். அறைந்த அறையினால் தேரழிந்தது. உடனே யுகாந்தகாலமாருதத்திற்குச் சமானமாகிய வேகத்தையுடைய குதிரைகள்கட்டிய ஒருதேர்வந்து உதவியது. இந்திரஜித்து அதன்மேற்பாய்ந்தேறி மென்மேலும் பாணங்களைப் பிரயோகஞ்செய்து அந்தப் பாணங்களினாலேயே ஆஞ்சனேயருடைய திருமேனியை மறைத்தான் அவனெய்த பாணங்களெல்லாம் அவர் மார்பில்வந்துபுதைந்ததுகள் புதைந்தமாத்திரத்தில் ரோமங்கள் உதிர்வதுபோல அந்தப்பாணங்கள் அத்தனையும் பலபலவென்று உதிரும்படி உதறிவிட்டு அவன்தேரின்மேலெழும்பிக்குதித்து உலகமுழுமையுஞ்ஜெயங்கொண்ட அவனுடையஅபாரமாகியவில்லைத் தமதுகையா லெட்டிப்பறித்து மடமடவென்றுமுறியும்படி ஒடித்தெறிந்தார். அந்தவில்முறிந்த ஓசைபோயடங்குகிறதற்குமுன் பூர்வகாலத்தில் வச்சிராயுதத்தினால் மலைகளின் சிறகுகளைக் கண்டித்த இந்திரனன்வன் போரிலே தனக்குப்பயந்து எறிந்துவிட்டுப்போன பிரசண்டதநுசு ஒன்றிருந்தது. அதைமகாவுக்கிரத்துடனே எடுத்து நிறுத்தி இழுத்து வளைத்து நாரிபூட்டி விரலால முறுக்கித்தெறித்து, வடித்துக்கூரிட்டுக்கடைந்து தைலநூபம்பண்ணி ஆசிவிஷம் பூசியிருக்கின்றதுகளாகிய நாறுநூறுபாணங்களை ஒவ்வொருகோலையாகிக்கோத்துச் சாசரவென்று மழைபொழிகிறதுபோல இந்திரஜித்துபொழிந்தான். அதுகள்வந்து சுறில்சுறிலென்று அநுமானுடைய சரீரத்தில் தைத்துப் பலவிதகாயங்களைச்செய்ய ஸ்ரீராம தூதரானவர் சற்றுநேரம் ஆயாசங்கொண்டிருந்தார். அதுகண்டு தேவர்கள்அறிவழிந்து துக்கப்பட்டார்கள். பின்பு மாருதியானவர் சோகம்நீங்கி ஒருபெரிய மராமரத்தை யெடுத்துச் சுற்றிக்கொண்டே அவனுக்கெதிரேநடந்து அவன் விடுகிறபாணங்களையெல்லாம் வீசியடித்துத் தூள்தூளாக்கித் தள்ளிவிட்டுப்போய் அந்தமரத்தினாலே அவனுடைய தலையின்மேல் ஓங்கி அடித்தார். அந்த அடிபடவே தேவர்களையெல்லாந் துரத்தியடித்த இந்திரஜித்துந் தன்கிரீடம் உடைந்து[illegible]படித் தலைபிளந்து மலையருவிபோலரத்தம்பெரு[illegible]ய, மெய்தளர்ந்து மனங்கலங்கிப்பிரமைகொண்டிருந்தான். அவ்வண்ணமாயிருந்து தெளிவடைந்தமாத்திரத்தில் பற்கடித்து மீசைபடபடவென்றுதுடிக்க அதிக கோபாவேசங்கொண்டு தேவர்களும் அசுரர்களும் முனிவர்களும் திகைக்கப் பர்வதம்போல எதிரேநிற்கின்ற அநுமானுடைய மார்புங் கலங்கத் தோளுங்கு

ணுங்க, ஒன்றைப்போல மகாகடூரமாகிய ஆயிரம் பாணங்களை யேககாலத்திலே வில்லிலேபூட்டி திவ்றிவ்வென்றுபோய்த் தைக்கும்படி யெய்தான். அவனெய்தபாணங்களவந்து மார்பிலும் தோளிலும்பதியவே மாருதியானவர் மனங்கசந்து மிகவுங்கோதித்து சரவேகத்தைப் பார்க்கிலும் அதிவேகத்தைக் கொண்டு பாய்ந்து அவனைத் தேருடனே யொரு சுண்டற்காயைப்போல எளிதாக எடுத்து ஆகாசத்திற்போம்படி எறிந்து கொஜித்துக்கொக்கரித்தார். அப்படி அநுமானெறிந்த விசையினால் அளவிறந்த புஜபலத்தையுடைய சத்துருவாகிய இந்திரஜித்துக் கண்ணின் மேலிமையானது கீழிமையுடனேவந்து கட்டுதற்கு முன்பாக, தேருடனே ஆகாசம் எவ்வளவுயரமோ அவ்வளவும் அதற்குமேலும்போய் அங்கிருந்து பூமியில்வந்து விழுந்தான். அவன் விழுந்துவிழாததற்குமுன்னே தேரைவிட்டு ஆகாசத்திலெழும்பினான். அப்போது அவனுடைய சேனையிலிருந்தவரத்ன மயமாகிய சேமத்தேர்களையெல்லாம் ஒரு உழுந்து உருள்கின்றபொழுதுக்குள்ளே ஆஞ்சனேயர் உதைத்து அச்சுவேறு ஆணிவேறும்படி சிதைத்துவிட்டார். பின்பு ஏறுகிறதற்குத்தேரில்லாமலும் எதிரேநின்று போராடுகிறதற்குப் பலமில்லாமலும் சங்கடப்பட்டு அவன் வேறொன்றுஞ்செய்யக் கூடாமையினாலே தனக்கு அவமானம் வந்து சம்பவித்ததே யென்று நினைத்து விஷசர்ப்பம்போலச்சீறி அதிககோபங்கொண்டு அங்குமிங்கும் உழன்று இனி யேதுசெய்கிறது நம்மிடத்தில் பிரமபாசமொன்றுதானே யிருக்கின்றது அதுவும் இப்படிப்பட்ட ஆபத்துக்காலத்தில் உதவாமல் மற்றென்னதான் செய்யவிருக்கின்றது? அதையாவது பிரயோகஞ் செய்வோமென்று உத்தேசித்து அதற்குப் புஷ்பம் சந்தனம் தீபம் தூபமுதலானதுகளுங் கொடுத்துக் ஷோடசவுபசாரத்துடனே மானஸ்யமாகப் பூஜித்து, தேவர்-மானிடர்-நரகர்-மிருகம்-பறவை-ஊர்வன-நீர்வாழ்வன - ஸ்தாவரமென்கின்ற எழுவகைத் தோற்றங்களையும் உண்டாக்கிய சதுர்முகப் பிரமாவினுடைய வரப்பிரசாதத்தினாற்பெற்ற அந்தப் பிரமபாசத்தைக் கையிலெடுத்து, வெற்றிவில்லிலேதொடுத்து அநுமானுடைய தோளுக்குச்சரியாகலக்குப்பார்த்து மண்ணும் நடுங்க-விண்ணும்நடுங்க-திக்குகளும்நடுங்க-மேருவும்நடுங்க அதைக் கர்ணபரியந்தம் இழுத்து அபிமந்திரித்து விட்டுவிட்டான். விட்டவுடனே தடுக்கப்படாத அந்தப் பிரமபாசமானது அக்கினியைக் கக்குகின்ற கோபக்கண்களையுடைய நாகக்கூட்டங்களுக்கு ராஜாவாகிய ஆதிசேஷனுடைய உருவத்தைக் கொண்டு, பன்னகவைரியாகிய கருடனும் திடுக்கிட்டு நடுங்கும்படி விஷஜ்வாலையுடனே பிரசண்டவேகமாய்வந்து ஆஞ்சனேயருடைய தோள்களை இறுக்கி நெருக்கிக்கொண்டு வளைந்து சுற்றிக்கட்டியது. அந்தப்பாசமானது காலம்பொருந்திய தமது சரீரத்தைக்கட்டி யுபத்திரவப்படுத்தவே வாயுகுமாரர் தம்பின்னே தொடர்ந்துவந்த ஜயதேவதை கண்ணீர்விடும்படி, தேகஸ்மரணையில்லாமல் சொர்ணமயமாகிய தோரணஸ்தம்பத்துடனே கற்பாந்தகாலத்தில் ஆதித்தியாதி கிரகங்களுடனே சந்திரன் சாய்ந்ததுபோலச் சாய்ந்தார். இவ்விதமாகச்சோர்வுற்றுச் சாய்ந்தவர் கொஞ்சம் பிரக்கினையுண்டாய் இதுநம்மை வருத்தவேண்டிய காரணமென்னவென்று யோசித்து, பிரமாவினுடைய வரப்பிரசாதமாய் இவனுக்குவந்த பிரமபாசமாகவேண்டுமென்று நிச்சயித்தறிந்து மற்ற அஸ்திரசஸ்திரங்களைப்போல இதை அவமதித்து நடக்கிறது நமக்கு யுக்தமல்லவென்று நினைத்து, ஸ்ரீராமபத்திரனை மனதிலே தியானித்துக்கொண்டு கண்களை மூடினபடியே அசைவற்றிருந்தார். அப்போது மேகநாதனென்பவன் இந்தக்கட்டிலே குரங்கினுடைய வலிகுன்றி ஓட்டம் ஆட்டமெல்லாம் அடங்கிவிட்டதென்று சமீபத்தில்வந்தான். வந்தபோது அதற்குமுன் பயந்தோடிப்போய் அங்கங்கே பதுங்கிச் சமயம்பார்த்திருந்த ராக்ஷதர்களெல்லாம் கொக்கரித்து ஓடிவந்து சுற்றிக்கொண்டு அநுமானுடைய சரீரத்தைச் சுற்றி யிறுக்கிக்கொண்டிருக்கின்ற சர்ப்பரூபமாகிய பிரமபாசத்தின் வாலையுந் தலையையும்பிடித்திழுத்தார்கள்: அந்தச் செய்திகேட்டுக் குரங்கினுடைய பலமழிந்ததென்று லங்காபட்டணத்திலுள்ளவர்களெல்லாம் ஒருகூட்டமாகக்கூடிவந்து கைகொட்டிக் கூத்தாடியிரைச்சலிட்டார்கள் அதனால் அந்தலங்கையானது சமுத்திரத்தை யொத்திருந்தது அநுமானைக்கட்டியபாசமே மந்தரகிரியிற்சுற்றிய வாசுகியென்னும்பாம்பையொத்திருந்தது. ராக்ஷதர்களே அமிர்தங்கடைந்த தேவர்களையொத்திருந்தார்கள். ஆஞ்சனேயரே மகத்தாகிய மந்தரபர்வதத்தையொத்திருந்தார். கறுத்த பாம்புருவமாகிய பாசமானது, தமதுபொன்னிறத்தமேனியைக்கட்ட தர்மதேவதைக் கொருதுணையாயிருக்கின்ற அநுமானானவர் பூர்வத்தில் வாயுமோதியடித்ததுகண்டு வாசுகி தன்னுடலைக் கொண்டு சுற்றும்படிச் சலனமில்லாமலிருந்த மகாமேருவைப்போலவுமிருந்தார். அந்தரத்திலும் மேகமண்டலத்திலும் அஷ்டதிக்குகளிலும் ராக்ஷதர்களும் ராக்ஷசிகளும் பின்னும்வந்துமொய்த்துக்கொண்டு மழைபோல ஆரவாரித்தார்கள், அவர்களுக்கு அப்பொழுது உண்டாகிய சந்தோஷத்திற்கு ஒருமுடிவேயில்லை. அதைக்குறித்துச் சொல்லுமிடத்தில் இந்த மேகநாதனென்பவன் தேவேந்திரனைப் பிடித்துக் கட்டிக்கொண்டு வந்தபோது லங்காபுரியானது எப்படிச்சந்தோஷித்ததோ அப்படியே அன்றுஞ்சந்தோஷித்ததென்று சொல்லலாம்.

பாசப்படலம்-முற்றிற்று.

## பிணிவீட்டுப்படலம்.

சகலமானவர்களும் இந்தக் குரங்கு கெட்டது இதை எய்யுங்கள்-பிளவுங்கள்-வெட்டுங்கள்-பீறுங்கள் - அரியுங்கள்-குடலைக்கூறுகூறுக்குங்கள்-மண்ணிலிட்டுத்தேயுங்கள்-தின்னுங்கள்-இது பிழைத்ததே யாமாகில் நம்முடைய பிராணனை மாய்த்துவிடுமென்று சொல்லிக்கொண்டு ஓடிவருகின்றார்கள். சிலபேர்கள் இது இந்த ஆயுதங்களினாலெல்லாஞ் சாகத்தக்கதா! இதைக் கடலிலே



கொண்டுபோய் அமிழ்த்தி வச்சிராயுதத்தை யெடுத்து உச்சியில்வைத்து அழுத்துங்கள் அப்படியல்லவென்றால் நெருப்பைமூட்டி அதிலேதள்ளிவிடுங்களென்று கோபிக்கின்றார்கள். அநேகம் ராக்ஷதஸ்திரீகளும் புருஷர்களும் ஓடிவந்துபார்த்துப் பாம்பைப்போல மனங்கொதித்து இந்தத் துஷ்டப்பையலை இவ்வளவுகால தாமசமாக உயிருடனே வைத்துக்கொண்டிருக்கிறதாவென்று சொல்லிக் கொலைசெய்யப் பிரயத்தனப்படுகின்றார்கள் அநேகம்பேர்கள் பாவிக்குரங்கே நீ எங்கள் தகப்பனையும், எங்கள் தம்பியையும், எங்கள் தமயனையும், எங்கள் பிள்ளைகளையுங் கொன்று உன்வாயிலேபோட்டுத் தண்ணீர்வார்த்துக்கொண்டையே! அவர்களை எங்களுக்குக் கொடுத்துவிட்டு அப்புறம்போ அதற்குமுன் உன்னைப் பாலைப் போகக்கூடாதென்று குறுக்கேநின்று தடைசெய்கின்றார்கள். அநேகம்பேர்கள் இவன் சொர்க்கத்திலிருக்கின்ற இந்திராதி தேவர்கள் ஆக்கியாபிக்க வந்தவனாகவேண்டுமென்று சொல்லுகிறதற்கு அஞ்சுகின்றார்கள். அநேகம் ராக்ஷதஸ்திரீகள் வயிற்றில் அறைந்துகொண்டுவந்து மலைபோலச் சலியாத பலத்தினையுடைய எங்கள் பிராணநாயகர்களை இதுவரையில் நாங்கள்பிரியாமலிருந்தோம், இந்தக்கொலைபாதகனால் இன்றுடனே பிரிந்தோம் ஆகையால் அதைக்குறித்து இனித்துக்கிக்கிறதேயில்லை. இவன்சிரசு அற்றுப் பூமியில்விழ அதன்மேல் நாங்களேறியிருந்து அதை எங்கள் காலினால் மிதித்தாலல்லது தாலிவாங்குகிறதேயில்லையென்று சொல்லுகின்றார்கள். அநுமானையிழுத்துக்கொண்டு எதிரேவரும்போது லங்கையிலுள்ளவர்கள்கண்டு சந்தோஷத்தினால் அண்டகடாகமட்டும் அளாவும்படி ஆர்ப்பரிக்கின்ற சப்தத்தைக்கேட்டு, கண்டதுண்டமாகி மாண்டுபோன தங்கள் நாயகன்மார்களுக்காக அழுதுகொண்டிருந்த ஸ்திரீகளுந் துக்கம் நீங்கிச் சந்தோஷித்தார்கள். அநுமானானவர் ராக்ஷதவீரர்களையும் யானைகளையும் தேர்களையும் குதிரைகளையும் தாம் எடுத்தெறிந்ததனால் இடிவிழுந்து அழிந்து கிடக்கிறமலைகளைப்போல, உப்பரிகைகளெல்லாம் இடிந்து பொடிபொடியாய்க் கிடக்கின்றதை லங்கையின் வீதியிலே கண்டுகொண்டேபோனார். ராக்ஷதஸ்திரீகள் அநுமானுடைய தோளிற் கட்டிய கயிற்றைக் காணாமல் ஐயோ! அந்தக்குரங்கு இங்கும்வந்துவிட்டதே என்னசெய்வோமென்று வயிற்றிலடித்துக்கொண்டு ஓடுகிறதைக்கண்டு அநேகர் மயங்கினார்கள். அநுமான் கோபிப்பதனால் அநேகர் பேசப்பயந்து வாயைத்திறவாமல் அடங்கியிருந்தார்கள். சிலர் ஆஞ்சனேயர்செய்த யுத்தசமாச்சாரத்தைக் குறித்துப் பேசத்தலைப்பட்டார்கள். சிலர் அவருடைய ஸ்தூலகாத்திரத்தைப் பார்க்கப்பார்க்கப் பயப்பிராந்தியதிகரித்தலால் பதைபதைத்து வெளிப்புறத்தில் வலசைவாங்கிப்போனார்கள். சிலர் அக்கினிச்சுவாலை வீசுகின்ற விஷப்பல்லையுடைய நாகபாசங்கட்டிய கட்டை ஒரு புஷ்பமாலையைக்கொண்டு கட்டியதுபோல லேசாக எண்ணி இந்தக்குரங்கினுடைய முகமானது வாடாமல் அதிகதேஜசுடனேயிருக்கின்றது ஆகையால் நீங்கள்செய்வதைப்பயன்படும்படிச்செவ்வையா யாலோசித்துச் செய்யுங்கள். இதையொன்றும் நம்முடைய ராஜாவினிடத்திலே கொண்டுபோய் விடுவது நன்மையல்லவென்றார்கள், சிலர் இது இத்தனை பெரிதாய்வருகிறது இந்த நாகபாசத்திற்குப் பயந்தல்ல என்னநிமித்தமோ வேணுமென்றே அகப்பட்டுக்கொண்டது ஆயினும், இதனெண்ணம் வேறாயிருக்கலாமென்று நினைந்து அநுமானைப் பார்த்து ஓய் மகாபுருஷனே! எங்களைச் சந்தோஷித்தமாய்ப்பாரும் கோபிக்கவேண்டாமென்று தெண்டனிட்டார்கள். பலர் மகாபலிஷ்டர்களாகிய அரக்கர்களுடைய செருக்கையழிக்கும்படி ஏமனானவன் தன்னுடைய உருவத்தைமறைத்து வானரத்தின் உருவத்தைக்கொண்டு போர்செய்ய வந்தானென்றார்கள், பலர் கைலாசமலையிலெழுந்தருளியிருக்கின்ற மழுவாளியானவர் சீதாபிராட்டியினுடைய கற்பின்மகிமையால் ஒரு குரங்குவடிவெடுத்து இந்த லங்கையை அழிக்கவந்தாரேயல்லாமல் இது சுபாவமாகிய குரங்கல்லவென்றார்கள். பலர் க்ஷீரசாகரத்தில் திருக்கண்வளர்ந்தருளாநின்ற ஸ்ரீமகாவிஷ்ணுவும் மூலதாமரையில் உற்பத்தியாகி உலகங்களைச் சிருஷ்டித்த பிரமாவும் நம்மைப்பகைத்து தங்களுக்குரிய சுயரூபத்தைமாற்றி இந்த ஒருகுரங்கின்வடிவத்தைக்கொண்டு பூமியில் வந்தார்களென்றார்கள். கும்புகும்பாய் ஸ்திரீகளும், புருஷர்களும், நிலாமுற்றந்தோறும் சொர்ணமயமாகிய மாளிகைகள்தோறும், சாளரங்கள்தோறும், வாசல்கள்தோறும்கூடிநின்று பார்க்கத்தலைப்பட்டார்கள். ரம்பாஸ்திரீகளும், விஞ்சையஸ்திரீகளும், நாகஸ்திரீகளும், சித்தஸ்திரீகளும், யக்ஷஸ்திரீகளுமாகிய அளவிறந்தபேர்கள் அணியணியாக எங்கும்நெருங்கிச் சூழ்ந்தார்கள். ராக்ஷதர்களும் ராக்ஷதிகளும்தவிர மற்றவர்களெல்லாம் சீதாபிராட்டியாருடைய துக்கத்தைப்பார்த்தோ! அல்லது இரக்கத்தினாலேயோ? அல்லது தர்மம் இளைத்துப்போய் விட்டதென்றோ! பகிரங்கமாகக் கண்ணீர்விட்டழுதார்கள். கருடனைப்பார்க்கிலும் மூன்றுபங்கு விசேஷமாகிய பலத்தினையுடைய கிங்கரர்கள் ஐம்பதினாயிரம்பேர்கள் அநுமானைக்கட்டிய பாசத்தை இறுகப் பிடித்து இழுத்துக்கொண்டுபோனார்கள். அவர்கள் இழுத்துக்கொண்டுபோம்பொழுது பராக்கிரமச்செய்கையையுடைய ஆஞ்சனேயர் அவர்களைப் பேதித்துக்கொண்டு அப்புறம்மீண்டுபோகாமலும் இது செய்யவேண்டுமென்னும் விருப்பு வெறுப்பில்லாமலும் இதுவேமுகாந்தரமாகப்போய் லங்காதிபதியாகிய ராவணனைக்காண்கிறதே யுக்தமென்று மனதிலேநினைத்து அவர்களுடனே கூடப்போனார். என் பிதாவாகிய வாயுபகவானுடைய கிருபையினாலும், ஸ்ரீராமனுடைய திருவடித்தியான பலத்தினாலும், தேவர்கள் பூர்வம் எனக்குக்கொடுத்திருக்கின்ற வரத்தினாலும் இந்தப்பிரமபாசத்தைக் கண்டதுண்டமாகச் செய்வேனாயினும், அப்படிச்செய்யாமலிருக்கிறதே சர்வோத்தமமென்றும் வக்கிரதந்தங்களையுடைய ராக்ஷதாதிபதியினிடத்திற்போய் அவனும் அவன் சமுகத்திலிருக்கின்ற ம

ந்திரிமார் பிரதானிமார்களும் மற்றுமுள்ள பெரியோர்களும் அறியும்படி எதார்த்தமாக இனிவிவேயும்விளவைச்சொன்னால் ஒருவேளை மனந்தளர்ந்து பிராட்டியாரை எவ்வசமாகக்கொடுத்துவிடவுங்கூடுமென்றும், அல்லாமலும் அவனுக்கு உபபலமாயிருக்கின்றவர்களின்னாரொன்பதும் இத்தனைபேரென்பதுந் தெரியலாமென்றும் அவர்களுடைய அபிப்பிராயத்தையு மறியலா மென்றும் ராவணனுடைய ஸ்திதியையும், மனக்கருத்தையும், அவன்முகக்குறிப்பே தூதாகச்சொல்லவுந் தெளியலாமென்றும் மேலும் வாலிமாண்டதும், மராமரம்பட்டபாடும், சுவாமிக்கு அநுகூலமாயிருக்கின்ற வானர சைநியத்தின்பலமும், பிருதியும், சுக்கிரீபனுடைய ஆண்மையும் பெருமையும், அவன்புத்திரனாகிய அங்கதனுடையபராக்கிரமமும் நம்மாலேசொல்லக் கேள்விப்பட்டால் ராவணனுடையமனதில் உறுத்துமாகையால் அந்தராக்ஷதேந்திரனுக்குச்சமீபத்திற்போய் ஆண்மையையும், நீதியையும், அவன் மனதிலே கொள்ளும்படிநிறுத்தி அதற்குச் சம்மதியாமற்போனால் அப்புறம் அவனிடத்தில் இன்னம் இறவாமலிருக்கின்ற சேனைகளில் பாதிக்குமேற்படக்கொன்று குவித்துவிட்டு மீளுதுவாய்ப்போய் விடுகிறதே காரியமென்றும் தீர்க்கமாயாலோசித்துச் சித்தப்படுத்திக்கொண்டதுமல்லாமல் தம்முடையபுஜபலத்தின் சத்துவ மொன்றையுங்காட்டாம லடக்கிக் கொண்டும் போனார். இந்திரஜித்துவும் சேனைசமுத்திரமானது நாற்புறத்திலும் மொய்த்துச் சுற்றிக்கொண்டுவர ஒருரிஷபமானது கட்டுப்பட்டுவருகிறதுபோலக் கட்டுப்பட்டுவருகின்ற அதிவீரனாகிய அநுமானை ஏகச்சக்கிராதிபத்தையுடைய ராவணேசுவரன் இருக்கின்ற அரண்மனைக்குக் கொண்டுபோனான்.—அப்போது தூதர்களோடி ராவணனைச்சேவித்துச்சுவாமி! தேவரீருடையஜேஷ்டபுத்திரர்யுத்தஞ்செய்துபிரமபாசத்தைவிட அதில் அந்தக்குரங்குஅகப்பட்டுக்கட்டுப்பட்டதென்றுசொன்னார்கள். அந்தவார்த்தைகேட்கவேமனதிலதிகசந்தோஷமாகிச்சூரியனைக்கிய ஆகாசம்போலத் தன்மார்பின்பிரகாசமாறிஇருளும்படி அதிலணிந்திருந்த கோடிசூரிய பிரகாசமாகிய ரத்னாரத்தைக்கழற்றி அந்தச்செய்தி சொன்னவர்களுக்குக்கொடுத்தான். பின்னும் அளவில்லாத மகிழ்ச்சியினால் தன்தோள்கள் பூரித்து அவர்களைத் தன்கண்ணேமலரப்பார்த்து சீக்கிரத்தில் நீங்கள் குரங்கைக் கொல்லாமற்கொண்டுவர நான்சொன்னதாகச் சொல்லுங்களென்று சொல்லியனுப்பினான். அந்தச்சொல்லைத் தூதர்கள் ஓடிவந்து இந்திரஜித்து அறியும்படிசொன்னார்கள். அச்செய்தி இப்படி நடந்துகொண்டிருக்கும்போது ஆஞ்சநேயர் அசோகவனத்தை யழித்ததும், மிகமற்ற ராக்ஷதர்களைமாயும்படி கொன்றதும் அப்போதைக்கப்போது கேள்விப்பட்டுச்சகித்துக்கொண்டிருந்த பிராட்டியார் அநுமான் இந்திரஜித்தின்கைப்பிடிக்கப் பாசத்தாற்கட்டுண்டு இழுக்கப்பட்டுப் போகப்பட்ட சமாசாரங்கேட்டு உயிர்சோரும்படி நிலத்திலவிழுந்து மாணிக்கப்பிரதிமையானது புகைசூழப்பட்டதுபோல மிருதுவாகி விளங்குகின்ற திருமேனியிற் புழுதிபடியப் பாபாத்துமனாகிய வேடன்கையில் தன்குஞ்சு பிடிபட்டுப்போகக்கண்டு தாயாகிய அன்னப்பேடு துக்கிப்பதுபோல மகத்தாகிய வருத்தத்துடனே பிரலாபிக்கத்தொடங்கினார். அப்பனே! என் கண்மணியாகிய ஆஞ்சனேயா! அநுமானே! அடுக்கடுக்காயிராகின்ற அண்டங்களையெல்லாம் ஒருருவ வளர்ந்து அவ்வண்டங்கள்முழுமையும் உன்னுடைய உருவத்தில மறையும்படி ஓங்கினின்றாய். வேதம், வேதாங்கம், சாஸ்திரம், புராணம், ஆகமமுதலானதுகளையுஞ்சங்கோபாங்கமாகக் கற்றுணர்ந்தாய். இப்படிப்பட்ட மகிமையையுடைய நீ ஒருகள்ளனாகிய ராக்ஷதனாற்பிடியுண்டு பாசத்தாற்கட்டுண்டையே இதுதானோ கர்மகதியென்பது. புஜபலபராக்கிரமத்தையுடைய நீ என்னைத்துக்கத்தில் நின்றும் ஈடேற்றும்படி சமுத்திரத்தைக் கடந்து இந்தலங்கைக்குவந்து இங்குள்ள ராக்ஷதர்களுடைய சரீரங்களை சின்னபின்னப்படுத்தியும் உனக்கு ஒருதுன்பமுமில்லாமல் உஜ்ஜீவித்திருந்தாய். இப்போது முன்னிருந்த வருத்தத்திலும் அதிகவருத்தத்தை எனக்கு உண்டாக்கினாய். ஸ்ரீரகுநாயகருடைய திருவாழியைக் கொண்டுவந்துகாட்டி நீ என்பிராணனை ரட்சித்தபடியினாலே கற்பாந்தகாலபரியந்தம் இறவாமல் சிரஞ்சீவியாயிருக்கும்படி உனக்குநான்வரங்கொடுத்தேன். அதுவோ என்றைக்குமழியாது அதிருக்கட்டும்இன்னமொன்றுண்டு என்னவென்றால், பர்வதத்திற்கொப்பாகியஉன்புஜபலத்தைக் காட்டப்போய் உடனே பெரிதாகிய அபகீர்த்தியைவிளைத்தாய். மேலும் நீ என்னைக்கண்டுகொண்டுபோய் என்பிராணநாயகராகிய அந்தப் புருஷோத்தம ரிடத்திற்சொல்லி நானிருக்குமிடத்தை யவருக்குக்காட்டி அவரையழைத்துவர அவர்வந்து இந்தக்கொடிய பாபிஷ்டர்களாகிய ராவணாதி ராக்ஷதர்களை யுத்தத்தில் சங்காரஞ்செய்து என்னைச் சிறைமீட்டுக்கொண்டுபோவாரென்று நினைத்திருந்தேன். அக்காரியத்திற்குத் தடைசெய்தாயென்று இவ்விதமாகச் சொல்லிச் சொல்லித் தன்னுயிர்கேடும்படி இளங்கன்றைப்பறிகொடுத்த தாய்ப்பசுவைப்போல, தியையுந்தகுகின்ற கற்பினையுடைய ஜானகியார் உடல்தளர்ந்து மதிமயங்கினார். அந்தச்சமயத்திலே மகாத்மாவாகிய அநுமானைக்கட்டிக்கொண்டுபோகிய இந்திரஜித்து அருமையாகிய தபோபலத்தினால் திரிலோகங்களையும் தன்வசமாக்கிக்கொண்டு தானே ஏகசக்கராதிபத்தியமாக அரசாட்சிசெய்கின்ற பிரதாபலங்கேசுவரன் வீற்றிருக்கின்ற சபாமண்டபம்போய்ச்சேர்ந்தான். அந்தநேரத்தில் அந்தராவணேசுவரன் எப்படி யிருந்தானென்றால் பரலோகம், பூலோகம், பாதாளலோகமாகிய மூன்று லோகத்திற்கும் வெளிச்சுரூபனாசந்திரன்குறைவில்லாமல்தழைத்து உதயமாகியதுபோலவும், முன்னாளில் ஈசன் பூமியில்நின்றும் ஆகாசத்தி லுயரத்தூக்கிய வெள்ளிமலையைப்போலவும், முத்துச்சரங்கள் தொங்கவிட்டிருக்கின்ற வெற்றிக்குடையானது சிரசின்மேல் குளிர்ந்த நிழலைப்பரப்பித் தாவள்யமாய்ப் பிரகாசிக்கவும், கருட



த்துஜத்தையுடைய ஸ்ரீமகாவிஷ்ணுவின் சக்கரமும் சிவனுடைய மழுவும், இந்திரனுடையவச்சிராயுதமும்வந்து தாக்கியவடுக்களும், மதனவிலாசசம்பிரமத்தில் ஸ்திரீகள் தங்களுடைய வாள்போலுங் கூர்மையாகிய விரல்நகங்களினாற்செய்யும்வடுக்களும் தோள்களிற் பிரகாசிக்கவும், தலைகளிலுள்ள சிவந்த மயிர்க் கற்றைகளே அக்கினிக்கொழுந்தாய், கோபத்தினால் பெருமூச்சுவிடுந்தோறும் வாய்களிலும் மூக்குகளிலும் இருந்து கொண்டல் கொண்டலாய்ப் புகையெழும்ப தென்றிசையிலும் ஒரு வடவாமுகாக்கினியைவைத்ததுபோலப் பிரகாசிக்கவும், பத்துக்கிரீடங்களிலும் பதித்திருக்கின்ற மரகத ரத்னகிரணகாந்தியும் மாணிக்கத்தின் ஜோதியும் கரகங்களிலுள்ள இருளையும் ஓட்டும்படிப் பிரகாசித்தலால், ஆதிசேஷனானவன் தன்பணமுடிகளைத் திசைகள்தோறும் திசைகள்தோறும் பரப்பிக்கொண்டு அரசிருக்கிறதுபோலவும், பலவிதரத்னாபரணங்களும் பீதாம்பரமும் இருபதுதோள்களிலும் அணிந்தபுஜகிரிகளும் பிரகாசிக்க மகாமேருவையே சொர்ணமகுடமாகத் தரித்துக்கொண்டு கருங்கடலானது திரண்டு எழுந்து உருக்காந்திருப்பதுபோலவும், இருளானது காசானுதி அவயவங்களோடு உருப்பட்டுச் சந்திரனாகிய வெண்பட்டுக்குடை நிழலில் நக்ஷத்திரங்களாகிய முத்தாரத்தைப் பூண்டு அந்திவானமாகிய செம்பட்டாடையை உடுத்துவீற்றிருப்பதுபோலவும், ஔதாரியத்திற்கும் வேதமுதலாகிய சகலகலைகளுக்கும் சௌரியத்திற்கும் வாசஸ்தானமாகிய தன்முகங்களில் விளங்குகின்ற கண்களால் பத்துத்திசைகளையும் பார்க்குந்தோறும் அந்தந்தத் திசைகளிலேருக்கின்ற திக்கஜங்களுக்கும் இந்திரன்முதல் ஈசானன்வரையிலுள்ள திக்பாலர்களுக்கும் பிரமாவிஷ்ணுக்களுக்கும் மகத்தாகியபயம்ஜனிக்கவும், சர்வேசுவரனாகிய ஸ்ரீராமச்சந்திரனுடைய தேவியாரைத் தான்கண்டபின் பூநாகலோகமுதல் சத்தியலோகபரியந்தமாகிய சகலவிடங்களிலுமுள்ள ஸ்திரீகளின்மேல் இச்சையில்லாதிருக்கிறபடியினாலே அவர்களெல்லாம் புருஷபாவகமாய்த் தன்னை நீங்காமற்சூழ்ந்திருக்கவும் வானரங்களும் ஸ்ரீராமனும் இளையபெருமாளும் தன்னால் மிகவும் அற்பமாகஎண்ணப்பட்ட மனிதர்களும் முனிவர்களுமாகிய சிலர் தவிர மற்றத்தேவர்கள் முதலாகிய யாவரும் ராக்ஷதக்கூட்டங்களோடு தன்னைமொய்த்துச் சுற்றிப் பயபக்தியுடனே பணிவிடைசெய்யவும், ஒருபக்கத்தில் யாழும் கைத்தாளமும் கில்லரியென்னும் வாத்தியமும் குறைவென்றும் வாத்தியமும் முழுந்த தேவரம்பையர்கள் தன்னுடையசெவிகள்தோறும் கேட்கும்படி அமிர்தஞ்சொரிவதுபோலப் பாடல்களைப்பாடவும், மற்றொருபக்கத்தில் தாளவோசை மிருதங்க வோசையுடனே தொந்தப்படும்படி காலடிகளை மெல்லமெல்ல வைத்துமிதித்து அபிநயங்காட்டுகின்ற கையுடனே பார்வையும் மனமுந் தொடர்ந்துசெல்ல அருமையாகிய தவத்தையுடையமுனிவர்களுக்கும் பார்த்தால், பூரணமாகிய மோக்ஷானந்தத்திலும் விரக்திதோன்றும்படி நடனஞ்செய்கின்றமேனகையென்கின்ற தேவதாசியின்மேல் தனக்குக் குறுக்கையுண்டாகவும், தன்னிடத்தில் பிணங்கியிருக்கின்றஸ்திரீகளின் முகத்தழகாகிய தேனைத் தன்பத்துமுகத்தில் ஒருமுகமானது உண்ணவும், தன்னைப்புணர்ந்தபெண்களின் முகத்திலுண்டாகிய சந்தோஷமென்னும்மதுவை ஒருமுகமானது பானம்பண்ணவும், பாடுகின்றமகளிர்கள் முகத்தில்தோன்றிய பலவிதராகமாகிய அமிர்தத்தை ஒருமுகமானது குடிக்கவும், பரதநாட்டியஞ்செய்கின்ற கூத்தியர்களுடைய முகத்தில் காணுகின்ற அபிநயமாகிய சர்க்கராப்பாகை ஒருமுகமானது பருகவும், தேவர்களுடனே கூடியிருந்து ஒருமுகமானது அரசியல் செலுத்தவும், மந்திரிமார் பந்துக்கள் சினேகிதர்களாகிய முக்கிறத்தார்களுடன் ஒருமுகமானது ஆலோசனை செய்யவும், பாபகீர்த்தியத்தையுடைய தனது காதிக்குறியகுணத்தை ஒருமுகமானதுவிடாது அநுசரிக்கவும் ஜானகியாருடைய வருவெளியை ஒருமுகமானதுகண்டுகொண்டிருக்கவும், சீதையினுடைய கற்பாகிய கடலை வென்றைத்தினத்திற் கடந்தேறலாமென்று ஒரு முகமானது நினைக்கவும், கனபகஸ்தூரிகளை அணிந்த ஸ்தனங்களையுடைய மங்கையர்கள் தனக்கெதிரே யேந்துகின்றகண்ணாடியில் ஒருமுகமானது அழகுபார்க்கவும், தன்றலனாகப்படாத புதருக்குளிருக்கின்ற தேனைப்போயுண்ணுகிறதற்குப் பசிகொண்டலைகின்ற வண்டைப்போல, ஜனகராஜபுத்திரியின்மேல் தன்மனமானதுசுழன்றுசெலுதலால் தங்களிடத்தில் சரசவிளையாட்டுகளைச் செய்யவில்லையென்று சகிக்காமல், மனம் வெதும்பி உடல் புழுங்கிக் கண்களில் ஜலம்பெருகத் துக்கிக்கின்ற ஸ்திரீகளுடைய கண்ணீராகிய கூரியவேல்கள்வந்து தோள்கள்தோறும் தைத்துருவவும், பரிமளபுஷ்பத்தின் மகரந்தப்பொடிகளைத் திமிர்ந்துகொண்டு தேனையுண்டு, ஸ்திரீகளுடைய ஸ்தனங்களில் அப்பிய சீதள சந்தனக்குழம்பிலே மூழ்கித்தோய்ந்த இளந்தென்றலானது விஷத்தைப்போல அடிக்கடிவந்து தன்சரீரத்தில் மன்மதபாணம்பட்ட புண்ணில் நுழையவும், ஸ்திரீகளுடைய செவ்வரிபரந்தகண்கள் சூரியனைக்கண்ட தாமரையைப்போலத் தன்னைக்கண்டு மலர்ந்தபடியிருக்கவும், தேவதானவர்களுடைய கைகள் சந்திரனைக் கண்ட தாமரையைப்போலத் தன்முன் குவிந்தபடியிருக்கவும், இப்படிப்பட்ட அநேகவிநோத சம்பிரமத்துடனேயிருந்த பிரதாபலங்கேஸ்வரனை ஆஞ்சநேயர்கண்டார். காணவே பக்ஷத்தில் நாகத்தைக்கண்ட கருடனைப்போல மனங் கொதித்து தமது தோளினிடத்தில் இறுகக்கட்டியபாசத்தை அறுத்துவிட்டு, ஆலாலவிஷத்தைப்போல இவன்மேற்பாய்ந்துகொல்லுவேனென்று ஆக்குரோசமாய்ப் பெருமூச்செறிந்து ராத்திரி இவன்கிட்டினாசெய்துகொண்டிருக்கக்கண்டபொழுதே, கொல்லுகிறது தர்மமல்லவென்று விட்டுவிட்டேன் இப்போது சபையிலே ரத்னசிங்காதனத்தில் இருக்கக்கண்டேன், ஆகையால் இனிப் பலவித யோசனை செய்யவேண்டியதென்ன! இவன்மேல் சிக்கிரத்தி லெழும்பிப்பாய்ந்து இவனுடைய பத்துத்தலை

கல்லையும் உதைத்துச் சிதைத்துத் தள்ளிவிட்டு, ஜெகன்மாதாவாகிய பிராட்டியாரை மீட்டுக்கொண்டு போகிறதே காரியமென்று தத்தாயத்தமானார். அதிவிர தீரசூர பிரதாபசாலியாகிய ரகுநாயகனுடைய பிராணப்ரியமாயிருக்கின்ற தேவியாரை எடுத்துவந்து சிறைவைக்கும்படிப்பார்த்துக்கொண்டிருந்த தேவர்கள் அசுரர்கள் முதலாகிய சகலருடையகண்களுக்கும் முன்பாக இந்தப்பாபகாரியாகிய ராவணனுடைய மாணிக்கக்கிரீடத்தையணிந்த தலைகளை, சின்னபின்னமாகும்படிப் பறித்தெறியாமற்போவேனேயானால் இனிமேல் நான் செய்யத்தக்க சேவகத்தான் என்னவிருக்கின்றது! இப்படி மடித்தால் உலகத்தாரென்னசொல்வார்களென்றால் சீதையைத்தேடிக்காணவந்த ஒருகுரங்கானது ராவணேசுவரனுடைய பக்கத்திலிருந்து போகிறதற்குரிய நாய்களாகவெல்லாம் பிரமித்து உள்ளே ஓடியொளிக்க, அவன் சிரசுகளைத் திருகித் திக்குகள்தோறும் உருட்டி ஜெயம்பெற்று ஆர்ப்பரிக்கின்றது அம்மம்மா இதுதெய்வத்துக்கொடுத்தென்று சொல்லுவார்கள் அப்படிச் சொல்லுஞ்சொல்லென்ன எளிதாகக்கிடைக்கின்றதா! இந்த ராக்ஷசேந்திரனைப் பிரத்தியக்ஷமாகக்கண்டுசிலசொற்களைச்சொல்லிவிட்டு இந்த உயிரைச் சுமந்துகொண்டு திரும்பிப்போனால் அவசியம் அபகீர்த்தி கிடைக்கும் அப்படிச்செய்யாமல் மேல்நினைத்தபடிச்செய்தால் நான் ஜெயிக்காமற்போனாலும் இறந்தாலும் கீர்த்தியுண்டாகுமென்று நிச்சயப்படுத்திக்கொண்டு, தோளினிடத்திற்கட்டிய பிரமபாசமானது இற்றுப் பொடிப்பொடியாய்ப்போகப் பர்வதத்தின்மேல்தாவிப் பாய்கின்ற ஆண்சிங்கத்தைப்போல, இவன்மேலெழும்பிக் குதிக்கலாமென்று யோசித்தார். அப்படியோசித்த ஆஞ்சனேயர் பொறுத்துநின்று உடனே வேறொருயோசனைசெய்தார் எப்படியென்றால் சர்வசங்காரகாலத்தின் இருளெல்லாந் திரண்டதற்கு ஒப்பாயிருக்கின்ற கறுத்த நிறத்தையுடைய இந்த ராவணனோ மகாபலவான். ஒருவராலே கொல்லுந் தரமுடையவனுமல்ல வெல்லுந்தரமுடையவனுமல்ல இவனுடைய புஜபலமோ ஸ்ரீராமசந்திரனால் வெல்லப்படுமேயல்லாமல் பிறரால் வெல்லத்தக்கதா! இவனுக்குள்ளே ஜெயிக்கிறதும் அருமை எனக்கு இவனை ஜெயிக்கிறதும் அருமையாகும். அல்லவென்று யுத்தஞ்செய்யவம்பட்டால் தோற்றுக்கெடுப்பில்லாமலே வெகுகாலமிவனைக்கழிந்துபோம் அதனால் போர்செய்யத் தொடங்குவது யுக்தமல்ல. அல்லாமலும் சூரிமுதல்வனாகிய ஸ்ரீராமசந்திரன் சபதலோகத்தாரும் துன்பம்நீங்கி யின்புறத்தையுடைய அந்தத் திரிலோகபயங்கரனாகிய ராவணனுடைய இருபதுதோள்களையும் பத்துத் தலைகளையும் அம்பினாலறுத்துத்தள்ளிப் புழுதியிற் புரளும்படி செய்கின்றது என்னுடையகடமையென்று முன்புரிந்தசொல்லிய ஒருவார்த்தையுமிருக்கின்றது, மேலும் சமசந்தைக்கு ஆரம்பித்துக்கொண்டு அதிலே என்பொழுதுபோகக்கொண்டு பிராட்டியார் நம்முடனேயிவ்விடத்தில் இன்னம் ஒருமாதமிருக்கத்தக்கதாள், நான் பிராணனுடனிருப்பேனென்று ஸ்ரீராமபத்திரருடைய திருவடிச்சாக்ஷியாகச் சொல்லியிருக்கின்றதனால் அவர் யதார்த்தமாக இறந்துபோவார் ஆகையால், யுத்தஞ்செய்கிறது நன்மையேயல்ல நாம் தூதனையே பேசுகிறது யோக்கியமென்று நினைத்து, வேதநாயகனாகிய சக்கரவர்த்திதிருமகனுக்குத்தூதரான ஆஞ்சனேயர் அந்த ராவணனுக்குச் சமீபத்திற்போனார், ஸ்திரீகள் கூட்டத்தின் நடுவிலிருந்த தன்பிதாவாகிய தசக்ரீவனுக்கு அனுமானைக்காட்டி இந்திரஜித்துச் சொல்லுகின்றான்; ஐயா! உலகங்களெத்தனையுண்டோ அத்தனையும் ஜெயித்த இணையிலே சூரனைச் சங்கரித்த நரசிங்கமூர்த்தியைப்போலவும், சங்கரசத்துருவாகிய சிவனைப்போலவும் மகாசேவகனாயிருக்கின்றவன் இந்தக்குரங்குருவத்தையுடையவனென்று சொல்லி இரண்டுகைகளையுங்கூப்பிநமஸ்காரஞ்செய்தான். அப்பொழுது கண்களிலும் வாய்களிலும் நெருப்புப்பொறிகள்-குப்குப்-பகபக்-என்றென்று எழுந்துபறந்து பக்கத்திலிருக்கின்றவர்கள்மேல்விழுந்து அவர்கள் சரீரத்திலிருக்கின்ற மயிர்கள் சுறுசுறுவென்றுதீயும்படிப்பார்த்து புகையெழும்பும்படிப்பெருமூச்செறிந்து மகத்தாகிய கோபத்துடனே தேவாசுரர்கள் முதலாகிய சத்துருக்களெல்லாம் பயப்பிராந்திகொண்டு மனம்நடுக்கிடும்படி அதட்டி, எமனைப்போல உக்கிரமாக வுறுக்கி நீயென்னநிமித்தமாக இங்கேவந்தாய் அந்த மகாவிஷ்ணுவோ! தேவேந்திரனோ! கைலாசநாதனோ! பிரமதேவனோ! பூமியைத்தாங்குகின்ற சகஸ்திரபணாமகுடங்களையுடைய ஆதிசேஷனோ! காலனோ! வேலனோ! யமனோ! திக்குப்பாலகர்களி லொருவனோ! அல்லது ரிஷியிசுரர்கள் யாகத்தில் உற்பத்தியாகும்படி செய்துதங்களாகநினைத்தபடி முடித்துவர அனுப்புவித்த பெரும்பூதமோ! பிரமாவானவன் லங்காபட்டணமுழுமையும் அழித்துவிடென்று புதிதாகச்சிருஷ்டித்துவிடுத்த யந்திரதேவதையோ? நாமரூபங்களை மறைத்துக்கொண்டுவந்தையே நீ யார்! இவ்விடத்திற்கு வந்தகாரணமென்ன? அருள்னை யனுப்பினவர்கள்! எங்களுக்குத்தெரியத்தக்கதாக உள்ளதைச்சொல்லென்று தேவர்களுடைய கீர்த்தியை வேரோடுவிழுங்கிய ராவணன்கேட்டான். அதற்கு ஆஞ்சனேயர் பிரதியுத்தரஞ்சொல்லுகின்றார், இப்பொழுது நீ குறித்துச்சொன்னவர்களெல்லாமல்லேன் அந்தச்சொற்படிமுன்னவர்கள் ஏவும்படி வந்தவனுமல்லேன்! புண்டரீகாக்ஷனாகிய ஒரு கோதண்டதாரிருவினுடைய தூதன்நான். அவாரென்று அறியக்கேட்பையேயானால் முனிவர்களும் தேவர்களும் மும்மூர்த்திகளும் மற்றுமுண்டாகிய யாவரும் எவைகளும் நினைப்பதற்கு அருமையாகிய பெரியகாரியங்களை முடிக்கின்றநிமித்தம் வந்திருக்கின்றவர். உங்களுடைய பலத்தையும் பூர்வத்தில் நீங்கள் செய்ததவத்தையும்சேனைகளையும் ஆயுதங்களையும் தேவர்கள்கொடுத்த வரங்களையும் எண்ணத்தையும் வாழ்வையும் பின்னுமுங்களுக்குரிய துர்க்குணம் துர்நடத்தை முதலாகிய சகலத்தையும் ஒரேபாணத்தினாலே வேருடனே களையும்படி உத்



தேசித்திருக்கின்றவர். தேவர்களுமல்ல, மற்றவர்களுமல்ல, திக்கஜங்களுமல்ல, திக்குப்பாலகர்களுமல்ல, கைலாசபர்வதமுமல்ல, திருமூர்த்திகளுமல்ல, முனிவர்களுமல்ல, பூலோகபுரந்தரனாகிய தசரதசக்கரவர்த்திகுமாரர். ஞானமும், சாஸ்திரக்கேள்வியும், உண்மையாகிய மஹாதபமும், அழியாதவரங்களும், மற்றுமுண்டாகியசகலமும் அவரெப்படிநினைக்கின்றாரோ அப்படியெல்லாம்சித்திக்கும். இதற்குசாக்ஷி என்னவென்றால் வேதங்களும் தர்மதேவதையுமே சொல்லும். அவரதுகாரணத்தைக்கேட்பையாகில் முடிவில்லாத வேதசாகைகளும்நிச்சயித்துச்சொல்லக்கூடாதஅறிவுக்கறிவாயுமிருக்கின்றவர். பூர்வத்தில் முதலைவாயில் அகப்பட்டுச் சகலாத்துமாக்களுக்கும் அடைக்கலஸ்தானமாகிய ஆதிமூலமேயென்றழைத்த கஜேந்திராழ்வானை ரக்ஷிக்கும்படி வந்தனரே. இப்பொழுது தேவர்களை ரக்ஷிக்கின்ற நிமித்தமாய் வந்திருக்கின்றார். ஆதிமத்தியாந்த ரகிதமாய்ப் பூதபௌஷிய வர்த்தமனமாகிய திரிவிதகாலங்களையும், கணிதங்களையும், கடந்துநிற்கின்ற அந்தச்சர்வகாரணரானவர் கையிலே வில்லையேந்திக்கொண்டு சூலமும், சங்கு, சக்கரமும், கமண்டலமுங் கைவிட்டு வடபத்திரத்தையும், மூலதாமரையையும், வெள்ளிமலையையுந் துறந்து அயோத்தியாபுரியில் வந்தவதரித்தார். மேலும் தர்மத்தை நிலைநிறுத்தி வேதஞ்சொல்லுகின்ற நீதிகளையெல்லாம் அறிந்து உலகத்தார் நடக்கும்படிச் சன்மார்க்கத்திலே அவர்களைச்செலுத்தி துர்ச்சனர்களைச் சங்கரித்துச் சற்சனர்களுடைய துக்கத்தைநீக்கி ரக்ஷிக்கின்ற நிமித்தமாகவந்தார், தம்முடைய பொன்னடியை ஸ்துதி செய்கின்றவர்களுடைய பிறவிப்பிணியை நீக்குகின்ற புரமௌஷதமா யிருக்கின்றவர் அவரேவேறில்லை. அப்படிப்பட்டவருக்குத் தொண்டுசெய்வேன் என்பேர் அநுமானென்பது நான்சீதாபிராட்டியாரைத் தேடிக்கொண்டு நான்குதிக்கிலும்போயிருக்கின்ற வானராதிபதிகளில் தென்திசைக்குவந்த வானரசேனைகளுக்கு ராஜாவாகிய வாலிகுமாரனென்கிற அங்கதனுடைய தூதனாய்த் தனியே இந்த லங்கைக்குவந்தேனென்றுசொன்னார். இவ்வண்ணமாக அநுமான் சொன்னசொல்லை லங்காதிபதியாகிய ராவணன்கேட்டு மேகத்தின்மத்தியில் மின்னல்பிரகாசிக்கிறதுபோல நகைத்து வாலிபுத்திரன் அனுப்பும்படிவந்த தூதனே! அந்தவாலி சுகமாயிருக்கிறானா? அவனுடையராஜ்ஜிகம் செவ்வையாக நடந்துவருகின்றதாவென்றுகேட்டான். அதைக்குறித்து ஸ்ரீராமதூதராகிய ஆஞ்சனேயர் சிரித்து ராக்ஷசா! நீ பயப்படாதே அந்தவாலியானவன் பூமியிலில்லை அன்றே சுவர்க்கம்போனான். அவன்திரும்பிவரமாட்டான். அவனுடையவாலும் போய்விட்டது என்நாயகனாகிய ஸ்ரீராமருடைய ஒருபாணத்தினாலேதான் அவனிறந்தது. இப்போது எங்களுக்குச் சூரியகுமாரனாகிய சுக்கிரீபன் ராஜாவாயிருக்கின்றானென்றுசொன்னார். அதுகேட்டு என்ன நிமித்தமாக வாலியை ராமனென்பவன்கொன்றான். அந்தராமன் எங்கேயிருக்கின்றான் அவன்பெண்சாதியை அங்கதனைவன் தேடவேண்டிய காரணமென்ன சொல்லென்று ராவணன்கேட்க வாயுகுமாரர்சொல்லுகின்றார் ரகுநாயகர் தம்முடைய திருத்தேவியாரைத்தேடிக்கொண்டுவந்தார். அந்தப்புருஷோத்தமனை எங்கள் சுக்கிரீபமகாராஜன் பிராணப்ரியமாகச் சிநேகித்து எனக்குச்சம்பவித்திருக்கின்ற துக்கத்தை நிவர்த்திசெய்ய வேண்டுமென்று முறையிட்டுக்கொண்டான். அப்பொழுது சித்திரக்காரரால்எழுதப்படாத திவ்வியமாகியரூபசௌந்தரியத்தையுடைய ஸ்ரீராமசந்திரர் வாலியைக்கொன்று அவனால் அபகரிக்கப்பட்டிருந்த சுக்கிரீபனுடைய பெண்சாதியாகிய உருமையென்பவளையும், ராஜ்ஜியமாகிய மகாசம்பத்தையும் அவனுக்கு மீட்டுக்கொடுத்து அவனுடனேகூட அவ்விடத்தில் ஆறுமாதமிருந்து வானரசைனியங்களை வரவழைத்துப் பின்பு அவர் ஜானகியைப்போய்த் தேடவேண்டுமென்று நியமித்துக்கொண்டு சுக்கிரீபமகாராஜன் எங்களுக்கு உத்தரவுசெய்ய நாங்கள் அந்த லோகமாதாவைத்தேடிக்கொண்டு புறப்பட்டோம் இதுதான் நடந்தசமாசாரமென்று மாருதியானவர்சொல்ல ராவணன் சொல்லுகின்றான். உங்கள் குலத்திற்கு அதிபதியும் தனக்கு ஒருவருஞ் சமானமில்லாதவனுமாகிய சிலாக்கியனாயிருந்த வாலியை ஒருபாணத்தினாலே கொன்ற மனிதர்களுக்கு அடிமைப்பட்டு அவர்கள் ஏவிய பணிவிடையைச்செய்துகொண்டிருக்கிறீர்களே இப்படியிருப்பீர்களாகில் உங்களுடையகீர்த்தி அழிந்துபோம் உலகமும்மாசடையும் தன் தமயனைக் கொல்லும்படி செய்து அவனைக்கொன்ற ராமன்விஷயத்தில் அதிக அன்புகொண்டிருக்கின்ற உங்கள் ராஜனாகியசுக்கிரீபன் அனுப்பும்படி எனக்கு என்னசமாச்சாரந் தெரிவிக்கவந்தது தூதுவந்த நீ யுத்தஞ்செய்ய வேண்டியதென்ன ஒருவேளை உன்னைநாங்கள் கொல்லுவோமென்று பயப்படுவாய் கொல்லவில்லை மனதிலே அச்சமில்லாமற்சொல்லென்று இவ்விதமாக ராவணன் சொன்னசொற்களை ஆலோசித்துப்பார்த்து பொறுமையிருக்கின்ற சிலநீதிகளை யிவனுக்கு நாம்போதித்தால் ஏற்றிருக்குமென்று சற்குணத்தையுடைய ஆஞ்சனேயர்சொல்லுகின்றார். உன்வாழ்வை வீணாகக்கெடுத்துவிட்டாய் சிறிதாவது ராஜதர்மமும்பார்க்கவில்லை பாவத்தையேசெய்ய ஏற்பட்டாய் ஆசையால் உனக்குமுடிவுவந்துவிட்டது ஆகிலும் இன்னமொரு உறுதிசொல்லுகிறேன்கேள் அதனால்நெடுங்காலம் உயிர்நிலைபெற்று வாழ்வாய். அழியாத மகத்தாகிய கற்பினால் அக்கினியைப்போலும் பரிசுத்தத்தையுடைய ஜானகியைத் துன்பப்படுத்தியதால் நீங்கள் ஐம்பொறிகளையும் அடக்கிச்செய்த உங்களுடைய முடிவில்லாத மகாதபங்களெல்லாம் மாண்டுபோகும்படி நேர்ந்தது. தீமையானது நன்மையையழிக்கமாட்டாதென்கிற உண்மையைக்கைவிட்டாய் லோகநாயகியாகிய வைதேகியின் திருவழகினிமித்தம் உனக்குண்டாகிய காமவியாதியினால் நீ அகோரதபசுசெய்துபெற்ற அகண்டைசுவரியத்தையும் முன்பின்பாராமல் இழந்து விடுகின்றாய் வகைகெட்ட காமச்செருக்கினால் தம்மைத்தாம்மறந்

தார்கள். பின்னும் இந்தச்செய்தியை அண்டத்திற்கு அப்புறத்திலுள்ளவர்களுக்கும் அறிவிக்கின்றவர்களைப்போலக் கோவென்று இரைந்து அநுமானை முன்னும்பின்னுமாக இழுத்து, வீதிகளிலே பேரிகைகளை வரிசையாகவைத்து அடித்து இடியிடித்தாற்போலப் பெருங்கூசலிட்டு எந்தப்பக்கத்திலும் ஓடியோடி ஜானகியாரிடத்திலும்போய்ச் சமாச்சாரஞ்சொன்னார்கள். அதுகேட்ட பிராட்டியாரும் உயிர்பதைத்து உடலவெயர்த்து வாயுலர்ந்து விம்மிவிம்மி மண்மேல்விழுந்து அழுதுபெருமூச்செறிந்து சொல்லுகின்றார். ஐயா! அக்கினிதேவனே தாய்க்குச் சமானமாகிய காருணியத்தையுடைய ஆஞ்சனேயன் உனக்குச் சிநேகனல்லனோ! அப்படிப்பட்டவனை பெருமையில்லாத நாய்க்குச் சமானமாகிய ராக்ஷதர்கள் இம்சிக்கும்படிக்கண்டால் உதவிசெய்யாமல் விருக்கலாமோ! நான் கற்பிலே பரிசுத்தையானால் நீஉலகத்திற்கெல்லாம் உண்மையாகிய சாக்ஷியாயிருக்கின்றவனாகையால் உனக்கே தெரியவரும். உன்னைக் குறித்து வந்தனஞ் செய்கின்றேன். அவனைச் சுடவேண்டாம். சுடவேண்டாமென்று இவ்விதமாக அருளிச்செய்தமாத்திரத்தில், அக்கினிதேவன் நடுக்கிட்டு மனங்கூசிப் பிராட்டியார் திருவுளக் கருத்தின்படியே அநுமானுக்குக் கொஞ்சமாகிலும் சுடுகையென்பதில்லாமல், குளிர்ச்சியாயிருக்கும்படிக்குத் தன்கடூரத்தை அடக்கிக் கொண்டான். அப்பொழுது புறத்திலுள்ள மயிர்கள் சிலிர்க்கும்படிக்கு வாயுகுமாரனுடைய வால் அஸ்திவரைக்குங் குளிர்ந்தது. ஜானகியாருடைய நேமனத்தால் அக்கினி உஷ்ணிக்காமல குளிர்ந்த அதிசயத்தைக் குறித்து மற்றும்நாம் விஸ்தரித்துச்சொல்வதென்ன! சமுத்திரத்திலுள்ள வடவாமுகாக்கினியுங் குளிர்ந்தது. பூமியில் கல்மரமுதலானதுகளிலுள்ள அக்கினியும் குளிர்ந்தது சுவர்க்கத்திலுள்ள அக்கினியுங்குளிர்ந்தது. ரிஷிகளால் பாதுகாக்கப்பட்ட காருகபத்தியம்-ஆகவனீயம்-தக்ஷிணாக்கினி-என்கின்ற மூன்றுவகையாகிய வேதாக்கினியுங் குளிர்ந்தது. முப்புரத்தையெரித்த பார்வதிபாகனுடைய நெற்றிக்கண்ணின் அக்கினியுங்குளிர்ந்தது. உலகத்தையளந்த வாமனனுடைய வலதுகையிலுள்ள அக்கினியுங்குளிர்ந்தது. எக்கியகுண்டங்களெல்லாங் குளிர்ந்ததுகள். மேகத்திலுண்டாகுகின்ற இடிகளுங் குளிர்ந்ததுகள். இருளையோட்டுகின்ற பிரகாசத்தையுடைய சூரியமண்டலமுங் குளிர்ந்தது. பாதாளத்திலுள்ள அக்கினிப்பிரபையாகிய நரகவட்டமுங் குளிர்ந்தது. அத்தருணத்திலே அன்புநீங்காத சிந்தையையுடைய ஆஞ்சனேயரும் நவமணிபோலப் பிரகாசிக்கின்ற அதியுன்னதமாகிய தமது திருமேனியின் நாற்புறத்திலும், இடைவிடாது சூழ்ந்து அக்கினியானது ஜ்வாலாமாலையாய்க் கொழுந்துவிட்டெரிந்தாலும் தம்மைச் சுடாமலும், தமக்கு ஒன்றும் உபத்திரவஞ்செய்யாமலு மிருந்த ஆச்சரியத்தைத் தெரிந்துபார்த்து இது கிருபாநிதியாகிய பிராட்டியாருடைய கற்பின்மகிமையாலும், அவர் திருவருளாலும் அவர்செய்த மங்களாசாசனத்தினாலுமே நம்மைவருத்தாமலிருக்கின்றதென்று தமது புத்திகோசரத்தால் தெளிந்து பரமானந்தசாகரத்தில் மூழ்கினர். அன்றையராத்திரி மைதிலியாகிய சீதையைத் தேடித்திரிந்த பொழுது அந்தப்பட்டணமுழுதையும் தமது அறிவினாற் குறித்தறியாவிட்டாலும், ஐம்பொறிகளும் முன்புசெல்ல அதுகளைத் தொடர்ந்து மறைந்துசென்று விஷயத்தை அறிகின்ற அறிவைப்போல, அநுமானனவர் கல்விப்பயிற்சி இல்லாத ராக்ஷதர்கள் தமக்குமுன்னே நடந்துகாட்டும்படி இந்தக்குரங்கு நாற்புறத்திலுஞ் சுட்டாகப் பார்த்துக்கொண்டு போகின்றதென்று தம்முடைய அபிப்பிராயம் அவர்களுக்குத்தோன்றுமலிருக்க உபாயமாக ஒன்றுவது நீவருமல் அவ்விடத்திலுள்ள சகல விசித்திரமும் தெரியும்படிப் பார்த்துக்கொண்டுபோனார். இவ்வண்ணமாக லங்கையின் ஆபாலகோபாலமுங்கண்டுகொண்டேபோய் முடிவிலே இவர்களைவிட்டு நழுவுதற்குச்சமயமிதுவேயென்று நிச்சயித்து, தம்மை யிரண்டுபக்கத்திலும் இரண்டுலக்ஷங் கைகளால் உறுதியாகப்பிடித்துக்கொண்டிருந்த நூறுயிரம்பேர்களும் கயிறுகளும் கூடஎழும்ப மாருதியானவர் ஆகாசமார்க்கத்தில் எழும்பினார். அந்தக்கயிறுகளும் அதுகளைப் பிடித்துக் கொண்டிருந்தவர்களுடைய கைகளும் எழுத் தடிகளைப்போலத் தொங்கும்படி அவரெழும்பியபோது தோள்கள் பிளந்துபோய் ராக்ஷதர்கள் கீழேவிழுந்து உயிர் மாய்ந்தார்கள். தமது திருமேனியிற்சுற்றிய கயிறுகளுடனே பூமியிலிருந்து மேலேகிளம்பிய வாயுகுமார ரானவர் சர்ப்பக்கூட்டங்களை வாரிக்கொண்டு வானத்தில் எழும்பிய கருடனைப்போல அந்தரத்திற்பிரகாசித்தார். கமலன்முதலாகிய சத்துருக்கள்மூவரும் அரசாண்டுகொண் டிருந்த மூன்றுபுரங்களையும் தகித்த காரணத்தால் திரிபுராந்தகனென்று பெயர்பெற்ற சங்கரனும் அவனுக்கு உபபலமாயிருந்த பலபொருள்களும் நாணிப்போகப்பாதகர்களாகிய ராக்ஷதராக்ஷதர்களுக்கு வாசஸ்தானமாயிருக்கின்ற இந்த லங்கையானது பற்றியெரியும்படி, ஸ்ரீராமபிரானை ஸ்மரணத்தியஞ்செய்து இதைக் கொளுத்திவிடுவோமென்று நினைத்து அந்தச்சொர்ணமயமான நகரத்தின்மேல் தமதுவாலைநீட்டினார். சுற்றிலும் சமுத்திரபரியந்தம் லங்காபுரியைஎந்தப்புறங்களிலும் ஒருக்ஷணப்பொழுதில் பற்றியெரிக்கத்தலைப்பட்டதனால் அந்தவாலானது, பவளமலையைப்போலச் சிவந்த மேனியையுடைய கைலாசபதியானவர் மகமேருவை வில்லாகவளைத்துத் திரிபுரதகனஞ்செய்யும்படிப் பிரயோகித்த பாணத்தைப்போலவிளங்கியது. தாவள்யமாகிய வெள்ளியைக்கொண்டும் பசுமையாகிய பொன்னைக்கொண்டும் பிரகாசமாகிய பலவிதரத்னங்களைக்கொண்டும் தெய்வத் தச்சனாகிய விசுவகர்மா அநேகநாள், கைபழகி அருமையாகச்செய்த உன்னதமாகிய வீடுகள்தோறும் மலைகளின்மேல் ஊழிக்காலத்து இடியானது அக்கினிமயமா யிடித்துவிழுவதைப்போல, கிரமங்கிரமமாகத் திகுதிகுவென்று தாவித்தாவிக்குதித்துத் தகித்தார் நீலநிறத்தையுடையராக்ஷதர்கள் உலகத்தில் பிராமணர்-க்ஷத்திரியர்



வைசியர் - சகலமானவர்களும், அக்கினிஷ்டோமம் அத்தியக்கினிஷ்டோமம், உக்தியம், சோடசி, வாசபேயம், அதிராத்திரம், அப்தோரியாமம், அக்கினியாதேயம் அக்கினிகோத்திரம், தரிசபூரணமாசம், சாதுர்மாசியம் நிரூடபசுபந்தம், ஆக்கிரயணம், சௌத்திராமணி, அஷ்டகை, பார்வணம், சிராத்தம், சிராவணி, ஆக்கிரகாயணி சைத்திரி, ஆசுவயுசியென்கின்ற யாகங்கள், எக்கியங்கள், கிருதுக்கள், ஓமங்கள், செய்யவொட்டாமல் தடுத்தபடியினாலே எங்கும் ஆகுதியில்லாமல் நெடுங்காலமாய்ப் பசியுடனேயிருந்த அக்கினிதேவனானவன் அநுமானுடைய வாலை ஆதாரமாகப்பற்றிக்கொண்டு விஷத்தையுண்ட பிரளயகாலருத்திரன் அக்காலத்திலே ஊட்டத்தான் சகலபுவனங்களையும் அழியும்படி உண்டதுபோலச் சீக்கிரத்தில் தகித்து உண்டான்.

பிணிவீட்டுப்படலம் முற்றிற்று.

---

## ஊர்சுடுப்படலம்.

கடுமையாகிய அக்கினியானது காவலையுடைய மாளிகைகள்தோறும் கட்டிய கொடிகளைப் பற்றிப்போய் மேற்கட்டிகளைக்கொளுத்தி நீண்டதூண்களைத் தாவியெரித்து உயர்ந்த சுவர்களைச் சுற்றுமுற்றுஞ்சுட்டு நீறாக்கியது அநுமான் அந்தக்கோட்டைவாசலில்விட்ட தீயானது அதற்குள்ளிருந்த வீடுகளெல்லாம் நாசமாம்படி அவ்விதமாகப்பற்றியெரிக்க எங்கேபார்த்தாலும் எரிகின்றபடியினாலே அப்பட்டணத்திலுள்ளவர்கள் சகலரும் பயப்பிராந்திகொண்டு ஊசலாடுகிறவர்கள்போல அங்குமிங்கும் ஓடியோடியலைந்து அழுகுரலுடனே ஒருவரையொருவர் கூப்பிடத்தலைப்பட்டார்கள். ரத்தத்தாற்கூடிய கிரகங்களெல்லாம் நெருப்பைப்போல ஜோதிமயமாகிய கிரணங்களை வீசுதலால் அதுகள் தீப்பட்டு எரிகிறதுகளென்றும் இல்லையென்றும் அறியாமல் வசைமிக்கையிலணிந்த ஸ்திரீகள் அறிவுகெடுமாறித்திரிந்தார்கள் ஆகாசவெளிமுழுதும் மறையும்படிப் புகை சூழ்ந்து எங்கும் பரவிச்சூழ்ந்துகொண்டதனால் காட்டில் சஞ்சரிக்கின்ற மயில்போலுஞ் சாயலையுடைய ஸ்திரீகள் தாங்கள்போனதிசை தெரியாமலும் தங்கள் நாயகன்மார்களைக் காணமலும் திகைத்துப்புலம்பினார்கள். ராக்ஷதஸ்திரீகளுடைய சிகையின்மேலும் அவர்கள் ஸ்திரீகளுடைய கூந்தலின்மேலும் கொழுமையாகிய நெருப்புவிழுந்துபற்றி எரிகின்றதை ஒருவர்க்கொருவர் காட்டக் கண்ணினாற்கண்டும் செம்பட்டமயிராகையால் தீப்பட்டதும் படாததும் தெரியாமல்மயங்கினார்கள். வாமனரூபமாய்ப்போய்ப் பலிச்சக்கரவர்த்தியானவன் உலகங்களைத்தானமாகக்கொடுக்க ஸ்ரீமகாவிஷ்ணுவானவர் தமது திருவடியினால் அளந்துகொள்ளும்படி அண்டமுகடுவரைக்கும்வளர்ந்தெழுந்து உயர்ந்த திரிவிக்கிரம சொரூபம்போல புகையானது எழுந்து மேலேபோய் எங்குங்கவிந்து நெருப்பானது மேல்விழுந்து சீரமுழுமையும் தகித்ததினால் வெந்துகருத்ததோலுரிந்த யானைகளெல்லாம் திக்கிலிசையிலிருக்கின்ற இந்திரனுடைய ஐராவதமென்றும் வெள்ளையானைக்கு ஒப்பாயிருந்தனுகள். பனிசூழ்ந்ததுபோலப் புகையுந்தீயும் வீடுகளெங்குஞ் சுற்றிக்கொண்டதினால் எருமைகள் மேகங்களைப்போலப்போய்த் தடாகங்களில்விழ அதுகளிலிருக்கின்ற அன்னங்கள் விலகிப்போவதுபோல ஸ்திரீகள் ஒதுங்கிச்சென்றார்கள். பெரியபெரிய அக்கினிப்பொறிகள் எழும்பிப்போய் இடிக்கூட்டங்களைப்போலவிழுகிறதினால் சமுத்திரம்வெதும்பி அதிலுள்ள திமிங்கலமுதலாகிய மீன்கூட்டங்கள் வெந்துபுலர்ந்து துடித்துஉயிர்சோர்ந்தனுகள். தணலானது உள்ளே புகுந்து பற்றியெரிப்பதனால் சொர்ணமதில்கள் உருகிப் போடிக் கடலுக்குள்ளேபாய்ந்து இறுகித் தண்டுதண்டாய்த்திரண்டதுகள். பர்வதங்களைப்போல வரிசையாயுயர்ந்திருக்கின்ற உப்பரிகைகளும்பூஞ்சோலைகளும் எவ்விதத்தில் ஏகமாயிருக்கும் அந்தலங்கை ஆதியந்தமும் பொன்னாயிருப்பதனால் தரையும்வெந்து உருகியது கல்லைப்பாக்கிலும் மீதியும் கட்டணமாய்த்தடித்த புகையான அம்பையும் தேவலோகத்தைச் சுற்றிக்கொள்ளுதலால் அந்தலோகமும் இருளாற்சூழப்பட்டது. ரதங்களெல்லாம் சக்கரமுதலாகிய பலபலவுறுப்புகளுடனே உருகிக்குழைந்து ஏகவுருவாகியதுகள். நல்லவர்களாயிருக்கின்றவர்கள் பொல்லாதவர்களிருக்குமிடத்திற்குப்போனால் அந்தப்பொல்லாதவர்கள் சுபாவமாகச்செய்யும் பொலலாங்கையும் சகவாசதோஷத்தினால் இந்த நல்லவர்களுஞ் செய்வார்களல்லவா! அதுபோலப் புனிதமாகிய அக்கினியும் சாம்பரிமாயையையுடைய ராக்ஷதர்கள் உண்ணும்படி ஜாடிகளில் நிறைத்திருக்கின்ற கள்ளையுண்ணத் தலைப்பட்டது. லங்கையிற்பற்றியெரிகின்ற நெருப்பானது தாவிப்பாய்ச் சமுத்திரம்வெந்து கொல்லன் உலைக்களத்திலிருந்து எழும்புவதுபோல அதிலிருந்து அனற்கொழுந்து குபீர்குபீரென்று எழும்புதலால் கடல்நீரை உண்கின்ற மேகங்களுங் கொதித்ததுகள். சில ராக்ஷதர்களுடைய சரீரத்தை நெருப்புச் சுடுதலினால் வருந்தமுற்று அந்த உஷ்ணத்தைப்பொறுக்கமாட்டாமல் தண்ணீரைத் தேடிக்கொண்டு ஓடியோடி காட்டிலேயோடுகின்ற ஆறுஆகுமென்று நினைத்துக் கானற்சலத்திலேபோய் விழுந்தார்கள். தேனைச்சொரிகின்ற சோலைகளெல்லாம் தீப்பட்டெரிய அங்குள்ளபுஷ்பங்களில் மொய்த்துக்கொண் டிருந்த வண்டுகள் எழும்பிப்பறந்து நாலுபக்கங்களிலும் தாவிப்படர்கின்ற அந்த அக்கினிஜ்வாலையைக்கண்டு சிவந்ததாமரைப் புஷ்பத்தோடென்று எண்ணி அதிலேபோய்விழுந்து கரிந்துமடிந்ததுகள். வில்லைவென்ற புருவத்தையுடைய கற்புள்ள சிலஸ்திரீகள் குரங்கு கொல்லும்படி நம்முடைய நாயகன்மார்களிறந்துபோனார்கள். நாம்வாசஞ்செய்கின்ற வீட்டுக்குள்ளும் அக்கினிபிரவேசித்தது. ஆதலால் நமக்கென்ன வாழ்விருக்கின்றது இனி வீட்டுவாசற்படிகடந்து அப்புறம்போவதும் தர்மமல்லவென்று தாம் தாமிருந்த விடங்களிலேதானே யிருந்து வெந்துநீந்து மாய்ந்துபோனார்கள். புஷ்பங்கள் பொரிந்து இலைகள்தீந்து கிளைகளசுருண்டு வேர்கள்கரிந்து மரங்கள் செடிகள் கொடிகளெல்லாம் சாம்பலாகச் சோலை

ததில் ஓடிவிழுந்தார்கள். அத்தருணத்தில் ஸப்தவீரர்கள் இந்தக்குரங்கு எத்தனையோ ராக்ஷதர்களைத் தன்வாலைநீட்டி வளைத்தது. அந்தவாலில் அகப்பட்டு அநேகர் மாண்டார்கள் சிலபேர் கடலுக்குள் ஓடிவிழுந்து முடிந்தார்கள் அம்மம்மா ! இதுவென்ன ஆச்சரியம் ! இப்படியானால் கண்டவர்கள் கேட்டவர்களுக்கெல்லாம் ஏச்சல்லவோ ! பேச்சல்லவோ ! வென்றெண்ணிக் கோபக்குரோதர்களாய்த் தேர்களை வேகமாய் நடத்திப்போய்ச் சுற்றிக்கொண்டு விற்களை வளைத்து, வாளுமகோசரமாகப் பாணங்களைப் பிரயோகித்துத் தங்கள் வீரதீரத்தைக்காட்டிப் பிரபலமாகிய யுத்தஞ்செய்தார்கள் மாருதியானவர் அவர்கள்விட்ட பாணங்களையெல்லாம் லக்ஷியம்பண்ணாமல் ஏழுபேர்களையும் ஏககாலத்திற் கொல்லவேணுமென்று உத்தேசித்துத் தமதுகையைக்கொண்டு ஓரே அறைகொடுத்தார் அந்த அறையுடனே தேர்கள் குதிரைகள் சாரதிகளும் சிதைந்து வில்லும்முறிந்து ஏழுவீரர்களும் ஒருமிக்க மாய்ந்துபோனார்கள். பின்பு ஊர்முழுதும் அழிந்துபோய் விட்டதோவென்று பார்த்து வந்த விஞ்சையர்கள் சகலத்தையுஞ் சுட்டெரித்த அக்கினியானது சீதாபிராட்டியாரிருக்கின்ற சோலையைமாத்திரம் தகிக்கவில்லை. அது அந்தக்குணநிதியாகிய ஜானகியாருடைய கற்பின் மகிமையினாலல்லவா வேகாதிருந்ததென்று சொன்னார்கள். அவர்கள் சொன்னசொல்லைக் கேட்டு ஆஞ்சனேயர் அதிசயித்துச் சந்தோஷித்து நான் பிழைத்தேனென்று ஆனந்தமாயவ்விடத்திற்குப்போய், லோகமாதாவின் திருவடிகளைச்சேவித்துநின்றார். பிராட்டியானவள் சிசுவைக்கண்ட தாயைப்போல அநுமானைப்பார்த்து அதற்குமுன்னே நம்முடையபுத்திரனை அக்கினி தகித்துவிடுமே என்னசெய்வதென்று, மனந்தளர்ந்து துக்கத்தினால் முகம்வெயர்த்து நெருப்பிலே விழுந்தபூப்போல் பதைத்துப் பற்றியெரிந்த திருமேனி குளிர்ந்து அதிகமகிழ்ச்சியானாள். அந்தச்சமயத்தில் அஞ்சனைகுமாரர் முன்னமேதானே சகலமும்பேசிமுடிந்தபடியால் இனியென்னவார்த்தை இருக்கின்றதென்று நினைத்துத் தாயே ! நாயேன் போய்வருகிறேனென்று, தெண்டம் சமர்ப்பித்துத்திரும்பினார். அவர் அப்புறம் போனவுடனே ஸ்ரீராமதூதர் போய்விட்டபடியினால் கள்ளர்களாகிய ராக்ஷதர்கள்கண்டால் நம்முடைய நகரத்தைச்சுட்டெரித்தது இந்த அக்கினிதானேயென்று நம்மைப்பிடித்துப்போய்த் தெண்டிப்பார்களென்று அக்கினிதேவன் அவர்கள்கண்ணுக்குத் தோற்றாமல் ஒளித்துப்போனான்.

ஊர்சுடுபடலம்-முற்றிற்று.

## திருவடிதொழுதபடலம்.

அதிசீக்கிரமாகப்போய்ச் சேரவேண்டுமென்கின்ற நினைவைக்கொண்டு எங்களையாளுகிய ஆஞ்சனேயர், அங்கே ஒருபக்கத்திலிருந்த பர்வதத்தின் சிகரத்திலே அஸ்தமனபர்வதத்தையடைந்த சூரியனைப்போலப்போயே அவ்விடத்திலிருந்து உலகங்களையெல்லாம் விழுங்குவதுபோல நீண்டுவளர்ந்து ஸ்ரீராமபிரானுடைய திருவடித்தாமரையை மனதிலே தியானித்து, திக்குநோக்கித்தெண்டம் சமர்ப்பித்து ஆகாசமார்க்கத்தில் எழும்பிப்பாய்ந்து போனார். போய்த்தம்முடையவரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்த மேனகைதேவியின் பிள்ளையாகிய மைநாகபர்வதத்தின்மேல் குதித்தார். அந்த மைநாகபர்வதம் அவருக்கு உபசாரஞ்செய்து என்ன சமாச்சாரமென்றுவிசாரிக்க, அதனுடனே நடந்த காரியத்தைச் சொல்லிவிட்டு அங்கிருந்து எழும்பித் திக்கஜத்துக்குச் சமானமாகிய ஆஞ்சனேயர், அங்கதன் ஜாம்பவந்தர் முதலாகிய வானரவீரர்களிருந்த மஹேந்திர பர்வதத்தின்மேல் ஒருகணப்பொழுதிலே வந்துகுதித்தார். தூரத்திலேபோயிருந்த தாய்ப்பறவையானது வருகிறவழியைப் பார்த்துக்கொண்டிருந்த அப்பறவைக்குஞ்சுகள் அதுவரக்கண்டதுபோல, லங்கைக்குப்போன அநுமானவர் எப்பொழுதுவருவார் வருவாரென்று வழிபார்த்துக்கொண்டிருந்த அந்தவானரவீரர்கள் இவரை நேரிலேகண்டவுடனே போனகாரியம்முடிந்ததென்று, சரீரம் புளகிக்க மயிர்க்குச்செறிய அதிகமகிழ்ச்சியை யடைந்து அவர்களில் சிலபேர் அழுதார்கள். சிலபேர் எதிரே நின்று ஆர்ப்பாடஞ்செய்தார்கள். சிலபேர் சமீபத்திற் போய் அன்புடனே தொழுதுகொண்டார்கள். சிலபேர்துள்ளிக்கூத்தாடினார்கள். சிலபேர் அவரை எடுத்துவிழுங்குகிறவர்களைப்போல ஆசையினால் மொய்த்துக் கொண்டார்கள். சிலபேர்தழுவி அணைத்துக்கொண்டார்கள். சிலபேர் தூக்கியெடுத்துக்கொண்டு எங்குந்திரிந்தார்கள் சிலபேர் ஐயா ! வாயுகுமாரரே நீர்போய்வந்த செய்தியை உமதுவாயைத்திறந்து சொல்லாமலே உம்முடையமுகாரவிந்தமே எங்களுக்குத் தெரியச் சொல்லியது, ஆகையால், மகத்தாகியசந்தோஷமுண்டாகியது வெகுதூரம்போய் இளைப்புடனேவந்தீரே உமக்கு அந்தஇளைப்புத்தீரும்படித் தேனும் கிழங்குகளும் கனிகளும். காய்களும் துளிர்களும் நாங்கள் நல்லருசியுடையதுகளாக அருமையாய்த் தேடிக்கொண்டுவந்து வைத்திருக்கிறோம் அதுகளைச்சாப்பிடுமென்று அவருக்குமுன்பாக வரிசையாய்க்கொண்டுவந்துவைத்து உபசரித்தார்கள். பின்பு அநுமானுடைய கால்களிலும் கைகளிலும் மார்பிலும் தோளிலும் தலையிலும் வாள்களும் வேல்களும் அம்புகளும்பட்ட புண்கள் சிருஷ்டிகாலந்தொடங்கி உலகத்தில் இதுவரையிலும் கழிந்துபோன நாள்களைப்போல அளவிறந்ததுகளாக நிறைந்திருக்கக் கண்ணினாற் பார்த்துப்பார்த்துத் தங்கள்பிராணன் சிந்திப்போம்படி மனதுகுழைந்து பெருமூச்சுவிட்டார்கள். அப்பொழுது மாருதியானவர் தங்கள் இளவரசாகிய அங்கதனை முன்பு வணங்கிப்பின்பு கரடிகளுக்கு ராஜாவாகிய ஜாம்பவந்தரைச் சேவித்துக்கொண்டு, மற்றுமுள்ளவர்களுக்கெல்லாம் அவரவர்களுக்கு ஏற்றபடிச் செய்யவேண்டிய மரியாதைகளைச்செய்து அவ்விடத்தில் உளுக்கார்ந்து, லோகநாயகராகிய ஸ்ரீராமச்சந்திரருடைய திருத்தேவியாகியஜானகி உங்களுக்கெல்லாம் ஆசீர்வாதம் சொன்னாளென்று



சொன்னார். இப்படிசொன்ன மாத்திரத்தில் அனைவரும் மெழுந்திருந்து சிரசின்மேற் கைகளை அஞ்சலி பண்ணிக்கொண்டு தரைமட்டுந்தாழ்ந்து திக்குநோக்கி வணங்கி நின்று கண்களில் ஆனந்தபாஷ்பம்பெருக மனதிலே மகாசந்தோஷத்தையடைந்தவர்களாய் அநுமானைநோக்கி இங்கிருந்து நீர் புறப்பட்டு லங்கையைநாடிப் போனது முதல் அங்கிருந்துவந்து சேர்ந்ததுவரைக்கும் என்ன என்ன அதிசயம்நடந்ததுகளோ ! அதுகளையெல்லாம் ஒன்றாவதுவிடாமல் நாங்கள் கேட்கும்படிச் சொல்லவேண்டுமென்றார்கள். அப்பொழுது அவர் பிராட்டியாருடைய திருவடிகளை நெஞ்சிலே ஸ்மரித்துத்தொழுது அந்த ஸ்ரீராமபத்தினியினுடைய மகிமைபொருந்திய திருவுளக்கருத்தைநன்றாய்த்தெரியச்சொல்லி பின்புதாம் அங்கிருந்து சுவாமிக்கு அடையாளமாகச் சூடாமணியை அவள்கொடுக்கும்படி வாங்கிவந்ததையுஞ் சொன்னாரேயல்லாமல்மகாபலிஷ்டர்களானபஞ்சசேனாதிபதிகளுடனேயும் அக்ஷயகுமாரன்முதலாகிய வெகுராக்ஷதர்களுடனேயும் போர்செய்து அவர்களையெல்லாம் கொன்றுவென்ற சமாச்சாரத்தையும் லங்காபட்டணத்தைத் தகித்து நீறாக்கிய சமாச்சாரத்தையுமாத்திரஞ் சொல்லவில்லை. ஏன்சொல்லவில்லையென்றால் இந்த இரண்டு காரியமும் தம்முடைய ஜெயப்பிரதாபத்தைத்தெரிவிப்பதுபோலத்தோற்றி அதைச்சொன்னால் தற்புகழ்ச்சியாய் முடியுமென்றுநினைத்துச் சொல்லவிட்டுவிட்டுக்கொண்டு அது நீங்கலாக மற்றதுகளையெல்லாம் ஒன்றாவது ஒழியாமற் சொன்னார். அந்தச்செய்தியைக்கேட்டு அதிகசந்தோஷமுற்று அங்கதன் ஜாம்பவந்தன் முதலானவர்கள் வாயுபுத்திரனை உற்றுப்பார்த்து இவர் லங்கையிலுள்ள ராக்ஷதர்களுடனே எதிர்த்துப் பின்னிடாமல் உக்கிரமாய்ப்போர்செய்ததை இவருடைய தேகமுழுதுமிருக்கின்ற காயங்களேசொல்லவும், அவர்களை ஜெயித்த சமாச்சாரத்தை இவர் அவர்களால் இறந்துபோகாமல் திரும்பிவந்ததேசொல்லவும் இவர் அந்த லங்கையைக் கொளுத்தியசெய்தியை அந்தத்திசையில் ஓங்கிக் கறுத்தெழுகின்ற புகையேசொல்லவும், ஜானகியானவள் இறக்கவுமில்லை மற்ற எந்த இடத்திலும் போகவுமில்லை, ராவணனுடையநகரத்தில்தானே இருக்கிறாளென்பதை இவர் தென்றிசையைநோக்கித் தெண்டம் சமர்ப்பித்துக்கொண்டு வருவதே சொல்லவும், ராக்ஷதர்கள் சாமானியர்களல்ல அவர்களெல்லாம் அதிவீர பராக்கிரமர்களென்பதை ஜெகன்மாதாவானவள் இன்னம் சிறை மீளாதிருப்பதே சொல்லவும், பிரகடமாக அறிந்துகொண்டு இனிச்செய்யவேண்டுமென்ன சொல்லுமையா அநுமானேயென்றுகேட்டார்கள். இனி எதுகளையும் சிந்திக்க எண்ணவேண்டுவதேயில்லை. சீக்கிரமாய் ஸ்ரீராமபத்திரருடைய சந்நிதானத்திற்குப்போய் அவருடைய திருத்தேவியாரைக்கண்ட சுபச்செய்தியைச் சொல்லி, அவர்மனக்கிலேசத்தை ஆற்றுவதே உத்தமமென்று ஆஞ்சனேயர்சொல்ல அப்படியே செய்வோமென்று சகலரும் சம்மதித்து அந்தக்ஷணமே பிரயாணப்பட்டு நடந்தார்கள். அவ்வாறு மகிழ்ச்சியுடனே ரகுநாயகன் தனதுகோதண்டத்திற் பூட்டியெய்த பாணத்தைப்போல அதிவேகமாய் ஆகாசத்திலே தாவிப்பாய்ந்துபோய் சூரியன் உச்சியில்வருகின்ற சமயத்தில் மதுவனத்தில் வந்துசேர்ந்து அதிலேதங்கினார்கள். அந்தவனத்தில் நெருங்கியமரக்கொம்புகளிலெல்லாம் அபரிமிதமாகத்தேன்கூடுகட்டியிருக்கக்கண்டு அந்தத்தேனை உண்ணவேணுமென்று ஆசைகொண்டு வானரவீரர்கள் வைதேகியைத்தேடிவந்து வெகுநாளாய்விட்டதென்று எங்கள் மனதுக்குச் சஞ்சலமுண்டானபடியினாலே நாங்களெல்லாம் உணவில்லாமல் இதுவரையிலும் வெகுவாய்வருந்தப்பட்டோம். இப்பொழுது எங்களுக்கு உணவைக்கொடுத்தருளுமென்று அங்கதமகாராஜனிடத்திற் சொல்லிக்கொள்ளுவோம் வாருங்களென்று உடனே எழுந்துபோனார்கள் அவர்களில் அநுமானானவர் அங்கதனுக்குச் சமீபத்திற்போய் அவனைக் கைகூப்பிப்பணிந்து தேன்பொருந்திய பூமாலையையணிந்த எங்கள் ராஜசேகரனே [illegible] உன்னுடையவானரசேனை உணவில்லாமல் மிகவும்பசியும் இளைப்புங்கொண்டு வேஷ்டையாய்வருந்துகின்றது ஆகலால் அதற்கு இப்பொழுது இந்தச்சோலையிற்கட்டிய கூடுகளிலிருந்து ஒழுகுகின்ற தேனை உண்ணும்படி உத்தரவுகொடுக்கவேணுமென்றார். அவன் அப்படியே செய்யலாமென்றுசொல்ல அதைக்கேட்டு ஆஞ்சனேயர் வானரங்களைக் கண்காட்டச் சமுத்திரமும் நடுங்கும்படி மிகவும் இரைச்சலிட்டுக்கொண்டுபோய் தேன்கூடுகள்தொங்குகின்ற அந்தச்செழுமையான வனத்திற்குள்ளே இந்தக் குரங்குகளெல்லாம் பிரவேசித்துத் தேனையுண்ணும்படி வண்டுகள்வந்துமொய்ப்பதுபோல எங்கும்மொய்த்துச் சுற்றித்தொடர்ந்து ஒன்றுக்குமுன்னே யொன்றுபாய்ந்து மரக்கிளைகளை ஒடித்துத் தேன்கூடுகளை அழித்து அதுகளிலுள்ள தேனைக்குடித்துக் களிகூர்ந்து [illegible]பட்டதுகள். அவ்வானரவீரர்களில் ஒருவர் வாய்திறந்து உண்ணப்போகின்ற தேனை அந்தச்சமயத்தில் மற்றொருவர்வந்து எளிதாக உண்டுவிட்டுப்போவார். ஒருவர்பிரயாசையில்லாமல்வந்து அபகரித்துக் கொண்டு ஓடிப்போவார். ஒருவருடனே யொருவர் உடனும்உடனும் நெருக்கும்படிக் கட்டித்தழுவித் தேனுண்டமயக்கத்தால் தரையில்விழுவார். ஒருவர்மேலொருவர் ஓடிப்போயேறிக்கொண்டு அதிகசந்தோஷத்தையடைவார். இந்தப்பிரகாரம் மட்டில்லாத மதுவைக்கொள்ளையிட்டுக் குடித்துக்களித்துச் சம்பிரமமாய்க் கூத்தாடும்போது அந்த வனத்திற்குக்காவலாயிருந்த வானரர்கள் கண்களைத் திறக்க விழித்துச்சீறியெழுந்து அவர்களை எதிரிட்டுச் சூரிய குமாரனாகிய சுக்கிரீவமகாராஜாவினுடைய ஆக்கினையைக்கடந்து நீங்களெல்லாம் என்னநினைத்து என்னசெய்தீர்கள். நீங்களிருக்கு முடிவுவந்துவிட்டது இந்தச் சமாச்சாரத்தை எங்கள் எஜமானனறிந்தால் எங்கள்மேற் கோபஞ்செய்வானே நாங்கள் என்னசெய்வோமென்று சொல்லிவிட்டுப்போய் தங்களுக்கு அதிபதியாகிய ததிமுகனை

ன்ற வானரனுடனே நம்முடையவனத்தைக் குரங்கின் சேனைகள்வந்து இப்பொழுது அழித்துவிட்டதுகள் அந்தச்சத்துருக்களுடைய செய்கைக்குப் பிரதியாகச்செய்யத்தக்கது இனி எங்களாலில்லையென்று முறையிட்டுக்கொண்டார்கள். அதுகேட்டு அந்தத்ததிமுகன் மதுவனத்தை அழித்தவர்கள் ஆர் அவர்களைக்காட்டுங்கள் பார்ப்போமென்று புறப்பட்டான். அவர்கள் ஐயா! வாலிகுமாரன்முதலான வானரர்கூட்டம்வந்துசிறுதுக்குத்தகியது. பின்பு அங்கதனுடைய ஏவலினாலே அந்தக்குரங்கின்சேனை மரக்கிளைகளிற் பாய்ந்து தேன்கூடுகளையெல்லாம் நிர்மூலமாக்கியதுகண்டு நாங்கள்போய் அதுகளைத்தடுத்தோம் எங்களைப்பேசப்படாத வம்புவார்த்தைபேசி இடக்குப்பண்ணி கைகளைக்கொண்டு ஓங்கியடித்ததனால் மிகவும் எங்களுடம்புநொந்தோம் ஆண்டவனேயென்றுசொல்லலே அடடா! தன்தந்தையாகிய வாலி நாசமாய்ப்போனதை அவன்பிள்ளையாகிய இந்த அங்கதனென்ன அறியாதவன்போ லிருக்கிறானென்று சொல்லி நெருப்பைப்போலப் பொங்கி [illegible] விட்டு எழுந்து இரண்டுகோடிவானரங்கள் [illegible] ஆர்ப்பரித்து நெருங்கிச்சூழ்ந்துவரும்படி மது[illegible] குள்ளேவந்துநுழைந்தான். அங்கேமதுவையுண்டுகொண்டிருக்கின்ற வானரசேனையானது பயந்து எழுந்து கோதண்டதீக்ஷாகுருவை வாழ்த்திக்கொண்டே ஓடிப்போய் வாலிபுத்திரனுடைய பாதத்தில்விழுந்தது. அப்பொழுது ததிமுகன் அங்கதனைப்பார்த்துச் சொல்லுகின்றான் கேளாய் அங்கதனே! தேவேந்திரனானவன் வாலிக்குக்கொடுத்த உசிதமாகிய இந்த மதுவனமானது தேவர்களுங் கண்களைவிழித்துப் பார்க்கிறதற்கு அரிதாக என்னாலே காவல்செய்யப்பட்டிருக்கின்றது. இப்படிப்பட்ட என்னுடைய ஆக்கினையை நீ அசட்டைபண்ணும்படி இருந்து உடையவனாகிய சுக்கிரீபமகாராஜனே லேசானதல்ல அவனுடைய பராக்கிரமத்தைச் செவ்வையாய்யோசித்துப்பார். ஓகோ! உன்னுடையவாழ்வு இன்றைத்தினத்துடனே முதலற்றுப்போய்விட்டது இப்படிப்பட்ட திவ்வியமானவனத்தை நீ வானரங்களைவிட்டு அழித்துவிட்டாயல்லவா என்று கொதித்துக்கொக்கரித்து அந்தக்ஷணமே ஒருபெரிய கருங்கற் பாறையை அடிவேரோடே பேர்த்தெடுத்து அங்கதன்மேல் வீசியாகவிட்டெறிந்தான். அதைப்புறங்கையினாலேதட்டிவிட்டு வாலிகுமாரன்கோபித்தெழுந்து ததிமுகனைக்கெட்டியாய்ப்பிடித்துத்தன்கைவிரலைமுனை[?]சிக்கொண்டுகொம்மென்பதாக்குத்தி வாயிலே அழியோரத்தஞ்சோரும்படிப் பிரமிக்கப் பின்னும் அந்தது இந்தச்செய்தியைப்போய்ச் சுக்கிரீபனுக்குச்சொல்லென்று அவனைத்துரத்திவிட்டுகோபாக்கினிஜொலிக்கும்படி அவனுடைய சேனைகளைப்பற்றிக்கட்டி அனைவரையும் பொறிபறக்க நன்றாய்க்குத்திக் குமையுங்களென்று தன் சேனைவீரர்களுக்கு உத்தரவு கொடுத்தான். அந்த உத்தரவுவாயிலிருந்துவெளிப்படுகிறதற்குள்ளே வானரவீரர்கள் அவர்களை ஓடிப்போய்ப் பிடித்துவந்துகட்டிவேப்பட்டாக்கிருக்கின்றகொடிகளை அறுத்துத்தோளழுந்தக்கட்டி முன்பக்கத்திலும் பின்பக்கத்திலும் இருப்புலக்கையினால் இடிப்பதுபோல இடியும் அஞ்சியோடும்படிப் பலம்பொருந்திய கைகளால் இடித்தார்கள். அதுபொறுக்கமாட்டாமல் சோலைக்காவலாளர்கள்முதலாகிய வானரர்கள் சரீரம்துடித்துக் களைத்துவிழுந்ததுகண்டு நீங்களும்போய்ச் சொல்லுங்களென்று அங்கதன்சொல்ல அதிகபயத்துடனே அவர்களும் எழுந்து அலறிக்கொண்டே ஓடினார்கள். பின்னும் ஜலத்திலேமூழ்கி விளையாடுகிறவர்களைப்போலக் கூடுகளிலுள்ள தேனையன்றிக் கனிகளிலுள்ளதேனையும், புஷ்பங்களிலுள்ளதேனையும், நிறையக்குடித்து அதிலேதானே மூழ்கிவிளையாடித் தங்கள் தங்கள் தலைவர்களுக்கும் அந்தத்தேனையும், கனிகளையும், கிழங்குகள், சாகங்களையும், கொண்டுபோய்க்கொடுத்து அவர்களையும் உண்ணும்படிசெய்ய யாவரும் உண்டுதேக்கி வருத்தமாறிச் சூரியனுடைய வெயிலின் உஷ்ணந் தணிந்தவுடனே போகலாமென்று பொழுதைப்பார்த்துக்கொண்டு மதுவனத்திற்கு அடுத்த உபவனத்தில் இருந்தார்கள். அவர்கள் அப்படியிருக்க சூலாயுதத்தை ஏந்திய சங்கரனாலும் முடிப்பதற்கு அரிதாகிய பெருங்காரியத்தைமுடித்து ஸ்ரீராமதூதனாகிய சாதுரியத்தையுடைய ஆஞ்சனேயன் மீண்டுவந்ததுவரையில் அந்தத்தென்திசையில் நடந்த சரித்திரங்களையெல்லாம் நாம் அறிந்த மாத்திரத்திற்சொன்னோம், சுவாமிவிஷயமா யிவ்விடத்தில் நடந்ததுகளையெல்லாம் இனிச்சொல்லத்தொடங்கினோம். சுக்கிரீபனானவன் அநுமான் முதலாகிய வானரசையங்களைச் சீதாபிராட்டியாரைத் தேடிவாருங்களென்று நான்குதிக்கினிடங்களிலும் அனுப்புவித்து ரிசியமுகபர்வதத்திலிருந்து, ஸ்ரீராமபிரானை இனிமையாகிய நல்லசொற்களினாலேதேற்ற அந்தக்கோதண்டபாணியானவர் அடிக்கடிச் சோர்ந்து சோர்ந்து அப்படிமூர்ச்சித்துத்தோறும் அநேகமாயிரம் உயிருடையவர்போலத் தெளிவடைந்து உயிர்த்தெழுந்திருப்பார். மறுபடியும் சீதாபிராட்டியாரை நான்குதிக்கிலும்தேடப்போன வானரவீரர்களில் வடக்குக் கிழக்கு மேற்காகிய மூன்றுதிக்கிலும் போனவர்கள் நாங்கள் காணவில்லையென்று வந்துசொன்னசொல்லால், உடலுக்குள்ளே உயிருண்டு இல்லையென்னும்படிச் சோகிப்பார். பின்னும் தெற்குத் திசைக்குப்போயிருக்கின்றவர் ஆஞ்சநேய ரல்லவாவென்று அவரைத் தமதுதிருவுள்ளத்திலே நினைத்துக்கொண்டு சூரியகுமாரனாகிய சுக்கிரீபனைப் பார்த்து அப்பா! சுக்கிரீபா! நாம்செய்த எத்தனங்களெல்லாம் அநுகூலமாகவில்லை அபகீர்த்திக்கிடமாயிற்று நாம்குறித்துச் சொல்லிய நாள்களெல்லாங்கழிந்துபோய்விட்டன, மூன்று திக்கிலுந் தேடப்போனவர்களோ வந்துசேர்ந்தார்கள் தென்திசையைநோக்கித் தேடப்போனவர்கள்மாத்திரம் இதுவரையிலும்மீண்டு இவ்விடத்திற்குவரவேயில்லை. ஆகையால் அவர்கள் இறந்துதான் போனார்களோ! அல்லது அவர்களுக்கு மற்றென்ன ஆபத்துதான் சம்பவித்ததோ! அல்லது ஒருவேளை சீதைமாண்டுபோய்இவள



மாண்டுபோன சமாச்சாரத்தை மீண்டுபோய் அவர்களுக்கு எப்படிச்சொல்லுகிறது இதைவிட நாமும் மடிந்துபோகிறதே நல்லதென்று துக்கத்தினாலே தாங்களும் பிராணத்தியாகம் பண்ணிக்கொண்டார்களோ அல்லது இன்னமுந்தேடிக்கொண்டே திரிகின்றார்களோ! அல்லது ராக்ஷதரைக்கண்டு கோபமதிகரிக்கச் சண்டைசெய்து அவர்கள்செய்த வஞ்சனையாகிய மாயையினால் மாய்ந்து வீரசொர்க்கமடைந்தார்களோ! அல்லது எக்காலமும் மீளாத அருஞ்சிறையில் அகப்பட்டுக்கொண்டார்களோ! அல்லது நமக்கு நியமித்துச்சொன்னதவணை நாளுக்குள்ளே சுக்கிரீபன்முதலானவர்க ளிருக்குமிடத்தில் நாம்போய்ச் செய்திசொல்லுகிறதற் கில்லையே ஆதலால் அங்கேபோக லஜ்ஜையாயிருக்கிறதென்று நினைந்து இல்லறதுன்பங்களைத்துறந்து தபசுதான்செய்கின்றார்களோ! அல்லது இதுகளெல்லாமல்லாமல் அந்த அநுமான்முதலானவர்களுக்கு வேறேயென்னசம்பவித்ததோ நீ சொல்லென்று இப்படி அநேகவிதத்திற் சொல்லிச் சுவாமியானவர் விசனப்படுவார் அப்படியிருக்கிற தருணத்தில் ததிமுகனென்பவன் தன்பின்னே அடிபட்டுத் துரத்தப்பட்ட இரண்டுகோடி வானரர்களும் அழுதுகூசவிட்டுக்கொண்டுவரச் சுக்கிரீபமகாராஜனுக்கு முன்பாக, தலையிலிருந்து ஒழுகிப்பாய்கின்றஉதிரத்துடனே வந்து இரண்டுகைகளையுங் கூப்பிவணங்கி எழுந்து நின்று ஐயா! இன்றைத்தினத்துடனே நம்முடைய மதுவனமழிந்ததென்று சொன்னமாத்திரத்தில் [illegible]தம் ஒழுகுகின்ற அவன் முகத்தைப்பார்த்து அப்படிச் செய்தவர்கள் ஆர் சொல்லென்று சூரியகுமாரன் கேட்க, நீலனென்பவனும்-குமுதனென்பவனும்-மலைபோலுயர்ந்த தேகத்தையுடைய ஜாம்பவனென்பவனும் சமுத்திரம் புரண்டுவந்து மூடிக்கொண்டதுபோல் வெகு வானரசேனைகளும் மேலிட்டுவந்து, நமது மதுவனத்தை அழித்தார்கள். இப்படிச் செய்யவேண்டாமென்று போய்த்தடுக்க சேனைகளை அடித்துத்துரத்தி வாலிகுமாரனாகிய அங்கதன் உம்மையும் இகழ்ந்துபேசினான். அவனுக்கு இஷ்டமானபடிக்கெல்லாஞ் சொன்னசொல் எங்களுக்குச்சகிக்காமல் செவியடைந்து முகம்புதைந்து மனம் வெதும்பி இமைப்பொழுதுக்குள்ளே, ஒரு கருங் கற்பாறையைப் பேர்த்தெடுத்து வாலிபுத்திரனுடைய சிரசுசிதையும்படி எறிந்தோம் அதைப்புறங்கையால் தடுத்துவிட்டுமூங்கிற்காடு பற்றியெரிந்தாற்போலக் கோபத்தாலெரிந்து என்னைப்பிடித்து உயிர்பதைக்கும்படிக்குத்திக்குமைத்து நீயெவ்விடத்திற்போய்ச் சொல்லிக் கொள்ள வேணுமோ! அவ்விடத்திற் சொல்லிக் கொள்ளென்று அனுப்பிவிட்டானென்று ததிமுகன் சொன்னான். கேட்டவுடனே சுக்கிரீபமகாராஜன் அதிக ஆனந்தத்தோடு எழுந்துநின்று சேஷசாயியாகிய சாக்ஷாது ஸ்ரீராமரைச்சேவித்துச் சுவாமி! அங்கதன் முதலானவர்களுக்கு இப்பொழுது உண்டாகியகோபமானது என்தாயாகியஜானகி, மகிமைபொருந்திய கற்பழியா திருக்கிறாளென்று நமக்குத்தெரியச்சொல்லியது. க்ஷேமமாயிருக்கும்படிப் பிராட்டியாரை அவர்கள் பிரத்தியக்ஷமாகக் கண்டார்கள். அந்தச்சந்தோஷத்தினாலே தான் மதுவனத்தையழித்து அதிலுள்ள தேனைக்குடித்து விளையாடினார்கள் ஆகையால் தேவர்பெருமானாகிய ரகுநாயகரே! இனித்தேவரீர் சந்தேகித்துத் துக்கப்பட வேண்டுவ தில்லையென் [illegible] விண்ணப்பஞ்செய்ய அதைத் திருச்செவிசாத்தியருளி எங்கள் தந்தையாகிய ஸ்ரீராமபத்திரர் தெற்குத்திசைக்குப் போனவர்கள் வந்தார்கள். இனி அவர்களென்ன செய்திசொல்லுவார்களோ எல்லாம் அறியலாமென்று தமது திருவுளத்திற்குறித்துக்கொண்டு இருந்தார் சுக்கிரீபன் அடிபட்டுச்சரீரம்நொந்துவந்த ததிமுகனுடைய முகத்தைப்பார்த்து இவ்விடத்தில்வந்திருக்கிறவர்கள் ஆரார்சொல்லென்றுகேட்க-அநுமான்-அங்கதன்-மயிந்தன்-ஜாம்பவந்தர் முதலாகப் பதினேழு வானரசிரேஷ்டர்கள் கடலும் காணும்படி, அதிலும் அதிகமாக ஒலிக்கின்றசேனைகளையுடையவர்களாய் வந்திருக்கின்றார்களென்றுசொல்ல அச்சமயத்தில் வானராதிபதி ஒருபோதும் ஆக்கினை [illegible]வனாயிருந்தும் அவனுக்குச் சுவாமி[illegible]ப்பட்டதுவே விசேஷமாகையால் அவர்கள் தன்பிராணனுக்கு ஒப்பாகிய மதுவனத்தை அழித்தார்களென்று கேள்விப்பட்டும், அதைக்குறித்துஎள்ளளவும் க்ஷாத்திரமில்லாமல் மறுபடியும் அவனை நோக்கிப் புஜபலத்தினாலுயர்ந்த ததிமுகனே! உனக்கு நான் சொல்லத்தக்கது ஒன்றிருக்கின்றது என்னவென்றால், அங்கதனானவன் அயோக்கியர்களுக்குரிய அற்பமாகிய செய்கையையுடையவனல்ல. சக்கரவர்த்தி திருமகனுடைய ஆக்கினையைச் சிரசின்மேற்கொண்டு அவனும்மற்றவானரர்களும் சமுத்திரஞ்சூழ்ந்த பூமி ஆதியந்தமும் போய்த்தேடிச் சீதாபிராட்டியாரைக் கொண்டுபோன சத்துருக்களுடனே சண்டைசெய்துஜெயித்து வீராவேசத்தோடே வந்திருக்கிறார்கள் ஆகையால் அவர்[illegible] குறித்து நாமிப்பொழுது என்னசொல்லுகிற[illegible] சமயமுமல்ல. அல்லாமலும் உனக்கென்னதெரியவில்லையா! வாலிகுமாரன் சாமானியனோ! இளவரசாயிருக்கிறவனாகையால் அவன் கேட்டகேள்விக்கு[illegible]த்துஉத்தரவுசொல்லுகிறது அருமை இப்படிக்கெல்லாம் தாமசங்கடமாயிருக்கிறபடியால், நீ யொன்றும் யோசிக்கவேண்டாம் உனக்கு உறுதியைச்சம்பாதித்துக்கொள்ளவேண்டுமென்று மனமிருந்தால் அவனிடத்திற்போய் இப்பொழுதே சரணமடையென்று சுக்கிரீபன்சொல்லவே அதற்குத் ததிமுகன் ஒன்றுஞ்சொல்லாமல் வாயைமூடிக்கொண்டு அவனுக்குத் தலைவணங்கித் தெண்டனிட்டு மனமெலிந்து சரீரமொடுங்கி அங்கிருந்துபுறப்பட்டு, தன்சேனைகளுடனே திரும்பி அந்த உபவனத்திற்கு வந்தான். அவனை வாலிகுமாரன்கண்டு அதிககோபமடையக்கும்படி ஓடிப்போய்விட்டவன் மறுபடியும் வந்தபடியினாலே இவனைச் சித்தமாய்க் கொன்றுவிடுவோமென்று நினைத்தான். அச்சமயத்தில் ததிமுகனானவன் ஐயா? நான் உம்முடைய அடிமையாகையால் என்னை ரக்ஷிப்பது உமதுகடனேயாகுமென்று கைகுவித்துப்பணிந்துவ

